Vol. XIII 1934—1935

செந்தமிழ்ச்செல்வி

திங்கள் வெளியீடு

பதின்மூன்றாம் சிலம்பு

இதழாசிரியர் கூட்டத்தலைவர்
மா. வே. நெல்லையப்ப பிள்ளை
அவர்கள், பி. ஏ.

திருநெல்வேலி, தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக்
கழகம் லிமிடெட்.

பவ-யுவ௵

The South India Saiva Siddhanta Works
Publishing Society, Tinnevelly, Ltd.
Tinnevelly and Madras.

 [*Price Rs.* 3 8

உள்ளுறை

[* இக் குறியிடப்பட்டவை இத் தொகுதியில் முடிவு பெறாது தொடர்வன.]

படங்கள்

அப்பர் திருமுன் யானை அடிபணிந்தது
இசைத்தமிழ்ச் செல்வர் உயர்திரு
தி. இலக்குமண பிள்ளை அவர்கள், B. A.
ஹாரியட் பீச்சர் ஸ்டோ
கியூரி அம்மையார்
சுவாமி விவேகாநந்தர்
டாக்டர் உ. வே. சாமிநாத ஐயரவர்கள்
டாக்டர் மில்லர்
J M. நல்லசாமிப் பிள்ளையவர்கள், B.A.,B.L.
திருவள்ளுவர் திருநாள்
திருவள்ளுவர் திருநாள் தலைவிழாக் கூட்டம்
திருவள்ளுவர்
திருவாதவூர் கோயில்
பண்டிதமணி. மு. கதிரேசச் செட்டியார்,
[அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர்.]
சோழவந்தான் வித்வான் அரசஞ் சண்முகனார்





திருவாதவூர்.

ஓம்
திருச்சிற்றம்பலம்

செந்தமிழ்ச் செல்வி

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினின்றுந்
திங்கள்தோறும் வெளிவருவது

சிலம்பு கஉ	மெய்கண்டான் யாண்டு-எகக ஆவணித்திங்கள் 1934ஹூ ஆகஸ்டுமூ—செப்டம்பர்மூ	பரல் க

நஞ்செல்வியின் பதின்மூன்ருவதாண்டு

நம் அருமைச் செல்வி தோன்றிப் பன்னீராண்டுகள் கழிந்து பதின்மூன்ருவது ஆண்டு தொடங்கலுற்றது. பேதைப்பருவமும் பெதும்பைப் பருவமுங் கடந்து மங்கைப் பருவ மெய்தலுற்ருள் நஞ் செல்வி. இறைவனின்னருளினுலும், தமிழ் மக்களின் அன்பு கனிந்த பேருதவியினுலும் இந்நல் லிளமங்கை சீருடனும் சிறப்புடனும் பொலிவுற்றுத் திகழ்வாள் என்பது உறுதி.

ஆ! இப் பன்னீரியாண்டுகளில் எத்துணை மாறுதல்கள்! காலம் கறங்குபோற் சுழல்வதென்று கூறுவர். அவ்வாறு அஃது சுழலும் விரைவிலும் மிக்கதோர் விரைவுடனன்ரே உலகத்திடை மாறுதல்கள் நிகழ்கின்றன!

உலகத்தின் ஒரு பகுதியாகிய நந்தமிழ் நாட்டிடை நேர்ந்துள்ள மாறுதல்களை மட்டும் மேற்போக்காக நோக்கினும் திகைப்பிணை விளையாவோ? பொன்னனைய காவிரியின் நன்னீர் நாடெங்கும் விளக்காக எரியத் தொடங்கியுள்ளது. உலகத்திலேயே பெரிய அணை என்று மதிக்கப்படும் மேட்டூர் அணை ஓங்கி உருப் பெற்றது. கைவிடப்பட்டிருந்த பல துறைமுகங்கள் திறக்கப் பட்டு வாணிபத்திற்கு வசதி யளிக்கின்றன. மலைநாட்டிற்கும் தமிழ்நாட்டிற்கும் நேரான இருப்புப் பாதைப் போக்குவரத்து ஏற்பட்டுள்ளது. உந்து வண்டிகள் உள்நாட்டுச் சிற்றூர்களை யெல்லாம் ஒன்றுடனென்று பிணைக்கின்றன. கடிதங்கள் காற்றில் (வான ஊர்திகளின் மூலம்) பறந்து குறித்த இடஞ் சேர்வவாயின. தொலைவாணி (டெலிபோன்) யின் முழக்கம் பெரு

முழக்கமாக இருக்கிறது. இன்னும் இவைபோன்ற எண்ணற்ற மாறுதல்கள் பருப்பொருள்கள்மாட்டு எத்துணையோ நிகழ்ந்துள்ளன.

இனி, தமிழ் நாட்டார்தம் நினைவுலகில், கருத்துப்போக்கில், எத்துணை மாறுதல்கள் நிகழ்ந்துள்ளன! ஐயத்தின் பாற்படாதிருந்த ஐயன் அதன் வாய்ப்பட்டு அலைவுற்று நிலை கொள்வானாயினன். புராணங்களெல்லாம் புனைகதைகளாக வெறுத்தொதுக்கப்பட்டு நாளடைவில் அவைகள்மாட்டும் பல உண்மைகள் காணக்கிடக்கின்றன என்ற உண்மை ஒப்புக் கொள்ளப் படுமாறுயிற்று. விந்தையும் விநோதமும் நிறைந்த நகைச் சுவைத்தாள்கள் பல மலிந்து தோற்றமுற்றன. கன்னித் தமிழின் தூய்மை நலனும் பெருவளனும் சிதைந்து படுமோ எனத் தமிழ் நாட்டார் பெருங் கவலுற்றுக் கலங்குமாறு பல தாக்குதல்கள் பற்பல சாரிருந்து மிக்கெழுந் தடங்கலாயின. வடமொழியும் ஆங்கிலமும் தமிழை உருச் சிதைத்தமை போதாதென்று இந்தியென்ற புது மொழியொன்றும் உடன் சேர்வதாயிற்று. "நான் சைவன்" "நான் வைணவன்" "நான் மகம்மதியன்" என்பன போன்று ஒருவன் துணிந்து கூறித் தன் மதநாட்டிப் பிறமதம் பழித்த காலம் மலையேறிவிட்டது. எம்மதமும் சம்மதமே எம்மதமும் அம் மதமே என்று கூறி ஒவ்வொருவனும் பொதுநலம் பாராட்டுங் காலமாயிற்று. உடம்பாரழியின் உயிராரழிவர் என்ற கொள்கை மிகப்பரந்து உடற்பயிற்சி திடமுறலாயிற்று. "பெண்ணேே பேயோ" என்று பழித் தொதுக்கும் இழிமுறை மறைந்து பெண்டிர்சமநிலை பெறுதற் குரியாராக மீண்டுங் கருதப்படுவாராயினர். ஆராய்ச்சியும் அறிவியலும் எத்துறையிலும் பரந்து நுருவி யாராய்வவாயின.

இத்தகைய மாறுதல்களா லெல்லாம் மோதுற்றுலும்பிற் போக்கென்ற பாறையின் மீது தாக்கிச் சிதைவுறாது முன்னேறுவதன்றோ உயரிய ஒவ்வொரு வெளியீட்டின் இலக்காகும்? அதற்கேற்ப கொண்ட இலக்கு பிழையாமல் தமிழ் மொழிக்கும், கலைக்கும் அரணளித்து நஞ் செல்வி இதுகாறும் உழைத்து வந்துள்ளது என்பதை யாவரும் ஒப்புக்கொள்வர். தமிழன்பர்களின் கண்ணோட்டமே பற்றுக் கோடாகக் கொண்டு இனியும் அவ்வாறே உழைத்துவரும் என்று உறுதி கூறுவோம்.

இனி, தான் மங்கைப்பருவம் எய்தியதற் கறிகுறியாக நஞ் செல்வி இவ்வாண்டு முதல் புதியதோர் மேலாடை புனைந்து வெளிவருவாள்; அறிவியற் பகுதி, ஆராய்ச்சிப் பகுதி, இலக்கியப் பகுதி, சமயப் பகுதி, மாணவர் பகுதி, மாதர் பகுதி, உடல்நலப் பகுதி, புதுக்கவிப் பகுதி என்பன போன்ற பல அணிகளை

யணிந்து விளங்குவாள்; தமிழ்நாட்டில் உரைநடை யெழுதுவதிற் சிறந்தோரெனக் கருதப்பட்டுவரும் பல அறிஞர்களின் கையுறை களையும் ஏற்றுப் போதருவாள். சுருங்கக் கூறின் தமிழ்மக்கள் முன்னேற்றத்திற்கும், தமிழ்க்கலையின் வளர்ச்சிக்கும், தமிழ் மொழியின் தனிப் பெருமைக்கும் ஏற்றவாறு உழைத்துப் பணி யாற்றுவதே கடனாகக் கொண்டு திகழ்வாள் நஞ் செல்வமங்கை. பொதுநலங் கருதித் தொண்டாற்றப்புகும் இம்மங்கையை எல் லோரும் ஏற்றுப் போற்றவேண்டு மென்ற கருத்துடனேயே ஆண்டுக் கட்டணத்தை மூன்று ரூபாவிலிருந்து இரண்டரை ரூபாவாகக் குறைத்துள்ளோம். ஏற்றுப் புரந்தருதல் எம்ம னோர்கடன்.

திருவாசகம்

திருக்கோத்தும்பி

நானாரென் னுள்ளமார் ஞானங்களாரென்னை யாரறிவார்
வானோர் பிரானென்னை யாண்டிலனேல் மதிமயங்கி
ஊனா ருடைதலையி லுண்பலிதே ரம்பலவன்
தேனார் கமலமே சென்றூதாய் கோத்தும்பீ.

பதவுரை:—

வானோர்பிரான்—தேவர்களுக்குத் தலைவனாகிய சிவபெருமான்

*மதிமயங்கி (யிருந்த) என்னை—(உலக நுகர்வுகளிற் பற்று வைத்துத் தன்னை மறந்து) மயக்க அறிவு அடைந்திருந்த என்னை

ஆண்டிலனேல்—(திருப்பெருந்துறையில் இப்பொழுது எனக்கு உண்மை உணர்த்தி) என்னைத் தனது மீளா அடிமையாகக் கொண்டு ஆண்டருள் செய்யாவிட்டால்

நான்ஆர்—நான் என்பது உலக இன்பம் நுகர்தற்குக் கருவியாக வேண்டப்படும் தத்துவக்கூட்டமும் அத்தத்துவக் கூட்டத்தா லாகிய உடலும் அல்லாது அவ்வுடலில் உள்ளும் புறமும் விளங்கி அதனை இயக்கித் தத்துவங்களை எல்லாம் அறிந்து வருகின்ற உயிர் என்று என்னால் எவ்வாறு உணரமுடியும்?

என்னை அறிவார்ஆர்—நான் அவ்வாறு இயங்கி அறிவதும் சிவ பெருமான் தத்துவங்களை இயக்கியும் என்னுள் நின்று இயங்கி யும் அறிவித்தும் அறிந்தும் வந்தால் அல்லாமல் எனக்கு நேரே

---

* "மதிமயங்கி என்பதைப் பெயர்ச்சொல்லாக்கொண்டு ஆறும் வேற் றுமையுருபு விரித்து மதிமயக்கமுற்ற பிரமனது தலையோட்டிற் பலிதேரும் அம்ப லவன் என முடிக்க". —பண்டிதமணி. மு. கதிரேசச் செட்டியார்.
(கலைபயில் கட்டுரைகள்—பக். 1

இயல்வதன்று என்ற எனது தன்வயமற்ற தன்மையை என்னால் எவ்வாறு உணரமுடியும்?

எனது உள்ளம்ஊர்—சிவபெருமான் அவ்வாறு தத்துவங்களை இயக்கியும் எனக்கு அறிவித்தும் அறிந்தும் செய்துவந்தது, காமம், வெகுளி, மயக்கங்களின் வயப்பட்டு ஐம்புலன்களைச் சேர்ந்து உலக இன்பம் நுகர்தற்கு ஒழிவின்றிச் சங்கற்ப விகற்பங்களைச் செய்துவந்த எனது உள்ளத்தில் வைத்து என்பது அல்லாது காமம், வெகுளி, மயக்கங்களி லிருந்து முற்றிலும் நீங்கி, பசுகரணம் நீங்கிய சிவகரண மடைந்து சுத்தமாயா சாந்தியாதீதகலையில் உன்மன கலைவரை விளங்கிச் சிவபெருமானையே நினைத்துக் கொண்டிருக்கும் எனது உள்ளத்தில் வைத்து என்பதை நான் எவ்வாறு உணரமுடியும்?

ஞானங்கள்ஊர்—அவ்வாறு எனது உள்ளம் பசுகரணம் நீங்கிய சிவகரணம் அடைந்து சிவமாந்தன்மை எய்தியதும், சிவமாந்தன்மை எய்திய அவ்வுள்ளத்தில் சிவபெருமான் தனது எண் குணங்களையும் பதிவித்து, தீவிர சத்திநிபாதம் அடைவித்து, பேரின்பம் நுகரச் செய்ததும் சரியை, கிரியை, ஞானம், யோகம் என்ற படிமுறையில் முறையே அவ்வுள்ளத்தில் உறைத்து விளங்கச் செய்த கேட்டல் ஞானம், சிந்தித்தல் ஞானம், தெளிதல் ஞானம், நிட்டை ஞானம் என்ற நால்வகை அநுபூதி ஞானங்களால் என்று என்னால் எவ்வாறு உணரமுடியும்?

கோத்தும்பீ—(இவ்வாறு இறைவன் உலக நுகர்வில் உழன்றுகொண்டிருந்த என்னை நிலையாயுள்ள தெவிட்டாத பேரின்பத்தை நுகரும்படி செய்ததனால்) ஏ, அரச வண்டே

ஊன்ஊர் உடைதலையில்—ஊன் நிறைந்துள்ள நான்முகனுடைய தலையிலிருந்து உடைபட்ட மண்டை யோட்டில்

உண்பலிதேர் அம்பலவன்—தான் உண்ணும் பிச்சைச் சோற்றை மனைகடோறும் சென்று கொள்கின்ற கூத்தப் பெருமானுடைய

தேன்ஊர் கமலமே—தேன் போன்று பேரின்பம் நிறைந்துள்ள தாமரை மலர் போன்ற இரண்டு திருவடிகளிடத்தில் மட்டும்

சென்று ஊதாய்—சென்று ஊதுவாயாக.

நீ அவ்வாறு ஊதினால் நிறைந்த தெவிட்டாத இன்பம் பெறுவாய் என்பது குறிப்பெச்சம்.

விளக்கவுரை:—

இந்தப் பாட்டில் கோத்தும்பி என்பது உருவகமாய் உள்ளத்தைக் குறிக்கிறது. பின் இரண்டு அடிகளும் உள்ளத்தைப் பார்த்துக் கூறும் அறிவுரை. முதல் இரண்டு அடிகளும் அவ்வறிவுரை கூறுதற்குக் காரணமாகிய அடிகளுடைய அனுபவ உறைப்பு ஞானம் (நேரே

கண்டுணர்ந்த மெய்யறிவு). இந்த அறிவு உரை உலகில் சிற்றின்பத்தில் உழன்று வருந்துகின்ற மாந்தரெல்லாருக்கும் பொருந்தும்.

மதிமயங்கி—மதி - அறிவு. பேரின்பம் இன்னதென அறியாது உலக இன்பத்தை மெய் என்று அறியும் அறிவு, இங்கே மயக்க அறிவு என்று கூறப்பட்டது. மதிமயங்கி என்ற சொற்றொடருக்குப் பின் அவாய்நிலையால் தொக்கி நின்ற 'இருந்த' என்ற சொல்லை வருவித்து விரித்துப் பொருள் கூறப்பட்டது.

வானோர்பிரான்—என்றதனால் "யாவர்க்கு மேலா மளவிலாச் சீருடையான்—யாவர்க்குங் கீழாம் அடியேனை," என்பது குறிப்பிடப் பட்டது.

என்னை ஆண்டிலனேல்—இறைவனுக்கும் உயிருக்கும் எப்பொழுதும் உளதாகிய ஆண்டான் அடிமைத் தொடர்பு கூறப்பட்டது. இத் தொடர்பு என்றும் உளதாயினும் அதனை உயிர் தனக்கு மெய் யுணர்வு பிறக்கும்பொழுது அறியத் தொடங்குகின்றது. உயிரினுடைய மெய்யுணர்வு அளவில் இறைவனும் அதனை ஆண்டருள் செய்து மெய்யுணர்வு முற்றியபொழுது அதற்கு மேலான பேரின்பத்தை அருள் செய்கின்றான்.

நான்ஆர்—மெய்யுணர்வு பிறக்குமுன் உடலினையே உயிர் என்று நினைந்த தமது நிலையையும் சிவபெருமான் தம்மை ஆண்டருளின பின் தம்மை உள்ளபடி அறிந்த நிலையையும் ஒப்பிட்டு வியப் படைந்து அடிகள் நான் யார் என்று கூறி அருளினர். நான் யார் அதாவது நான் யாராயிருப்பேன்? இப்பொழுது உணர்கிற நிலையிலுள்ள 'நான்' ஆயிருப்பேனா? சிவமாகிய தலைவனை ஒழிய வேறு 'நான்' என்றொரு தலைவனில்லை என்ற இந்த 'நான்' நிலையை சிவபெருமான் என்னை ஆண்டருளிய பின்புதான் அவனோடு இரண்டறக் கலந்து நின்று உணர்ந்தேன் என்பது கருத்து.

என்னை யார் அறிவார்—இதனால் அடிகள் உயிர் எப்பொழுதும் இறைவனைச் சார்ந்து ஒழுகும் தன்வயமில்லாத தன்மையைக் கூறுகின்றார். உயிர் தன்னை உடல் அல்ல என்று அறிந்தபின் அறியும் அடுத்த நிலை இது ஆதலால் இதனை நான் யார் என்பதற்குப் பின் வைத்துப் பொருள் உரைக்கப்பட்டது. உயிரானது தனது தன்வயமற்ற நிலையை அறிந்தபொழுது அக்குறையை நீக்க, குறைவிலா நிறைவுடைய இறைவனைச் சாரமுயன்று வீட்டு நெறியைச் சேர்கின்றது. இறைவனும் நற்பயன் விளைத்தற் பொருட்டு குறையுடைய உயிர்களுக்கு அருள் செய்கின்றான். "குறையுடையார் குறைதீர்ப்பார்", (203-7) என்றும், "குறை யுடையார்க் கல்லால் களைகிலார் குற்றமே', (284-4) என்றும், திருஞான சம்பந்த அடிகள் தேவாரத்திற் கூறி யருளினர். அடிகள் தம்மை ஆண்டு அறிவித்ததற்கு முன் அகங்காரத் தால் தாமாகவே எவற்றையும் அறிந்ததாக நினைந்ததைக் குறிப் பிட்டும் இப்பொழுது சிவபெருமானுக்குள் அடங்கி நிறைவான

தன்மை அடைந்து எல்லாம் உணர்வதைக் குறிப்பிட்டும் என்னை ஆர் அறியவல்லார் என்றார். உயிர் தனது தலைவனாகிய சிவபெருமானை அறிதற்குத் தன்னை அறிதல் இன்றியமையாதது.

எனது உள்ளம் ஆர்—யார் என்பது ஆர் என மருவி வந்தது. உயர் திணையி லன்றி அஃறிணை வினைப் பெயர்க் கண்ணும் ஆர் வருதல் புதியன புகுதல் என நன்னூல் விருத்தி யுரை ஆசிரியர், சங்கர நமச்சிவாயப் புலவர் கூறி யிருத்தல் காண்க. சிவபெருமான் உயிரினை ஆண்டு அறிவித்ததற்கு முன் உள்ளமானது உயிரினது அகக் கருவியாக அகங்காரத்தினால் உலக நுகர்வுப் பொருள்களைப் பற்றிச் சங்கற்ப விகற்பங்கள் செய்து ஐம்புலன்களுடன் சேர்ந்து உலக நுகர்வுகளில் ஈடுபட் டிருந்தது. சிவபெருமான் உயிரினை ஆண் டறிவித்த பின் உள்ளம் ஐம்புலன்களுடன் சேர்ந்து உலக நுகர்வுப் பொருள்களை நோக்குத லின்றி இறைவனையே நோக்குகின்றது. அப்பொழுது அது பஞ்சக் கிலேசங்களிலிருந்து முற்றிலும் விடுதலை யடைந்து வேட்கை அறிவு செயல்கள் திருந்தி அருளொளி விளங்கப் பெற்று சுத்த மாயா சாந்தி யாதீத கலையில் "அளப்பருங் கரணங்கள் நான்கும் சிந்தை (உள்ளம்) யேயாக" என்று சேக்கிழார் அடிகள் கூறியபடி இறைவனையே சிந்தித்திருக்கின்றது. இந் நிலையில் உள்ளம் (சிந்தை) சிவத்தினின்றும் வேறல்ல என்று தமிழ் மறை நூல்கள் கூறுகின்றன. இவ்வாறு உயிர் உலக இன்பம் நுகர்தற்கும் சிவபெருமான் அதனை ஆண் டறிவித்த பின் உலகில் சிவ போகமாகிய பேரின்பம் நுகர்தற்கும் உள்ளமே கருவியா யிருத்தலின் அடிகள் 'எனது உள்ளம் யார்' என்றார். இறைவன் ஆண் டருளவில்லையானால் உள்ளமானது பேரின்பம் நுகர்தற்குத் தக்க நிலையை அடையமாட்டாது என்பது கருத்து. உயிர் சிவபெருமானைக் கண்டு பேரின்பம் அடைதலுக்கு உள்ளமே கருவியாயிருக்கிறது என்பதைத் திருநாவுக்கரசு அடிகள் உள்ளத் திருக்குறுந்தொகைத் தேவாரப் பதிகப் பாட்டுக்களில் 'ஊறலைக் கண்டுகொண்ட தெனுள்ளமே' என்றும், 'எந்தையைக் கண்டுகொண்ட தெனுள்ளமே' என்றும், 'கள்ளத்தைக் கழிய மனமொன்றி நின்னுள்ளத்தி லொளியைக் கண்ட துள்ளமே' என்றும், 'என்னெஞ்சி லீசனைக் கண்ட துள்ளமே' என்றும், 'சிந்தையுட் சிவனாய் நின்ற உருவினைக் கண்டு கொண்ட தெனுள்ளமே' என்றும் கூறி யருளினமை காண்க. திருமந்திரம் 1201-வது பாட்டில் 'சிந்தையில் வைத்துச் சமாதி செய்வீரே' என்று கூறப் பட் டிருத்தல் காண்க.

ஞானங்கள் ஆர்—ஞானங்கள் என்று இங்கே கூறப்படுவன வீட்டு நெறியில் சரியை (சேர்தல்) கிரியை (செயல்) யோகம் (கூடுதல்) ஞானம் (அடைதல்) என்னும் நான்கு படிமுறை நிலைகளிலும் முறையே அடையத் தக்க கேட்டல் ஞானம், சிந்தித்தல் ஞானம், தெளிதல் ஞானம், நிட்டை ஞானம் என்ற நால் வகை அநுபூதி ஞானங்கள். உள்ளமானது சிவமாஞ் செம்மைத் தன்மை அடை

தற்கு இந்த நான்கு ஞானங்களும் எதுக்களா யிருத்தலின் அடிகள் எனது உள்ளம் யார் என்று கூறிய பின் ஞானங்க ளார் என்று கூறி யருளினார்.

கோத்தும்பீ—தும்பி என்ற விளிப்பெயர் ஈற்றில் இகரம் நீண்டு வந்தது (நன்னூல் 305-வது சூத்திரம்). உருவகப் பொருளாகிய உள்ளமானது (மனம்) சிவபெருமானுக்கு ஆட்பட்டு அடங்கியிருத்தலே ஆண்மை என்று குறிப்பிப்பார் தும்பி என்று கூருது கோத்தும்பி என்றார்.

உண்பலி தேர் அம்பலவன்—தேர்தல் - கொள்ளுதல். "விளங்குதலையோட்டில் உண்பலி தேரிய வந்தென துள்ளங் கவர்கள்வன்" என்ற ஞானசம்பந்த அடிகள் முதலாவது பதிகம் 4-வது பாட்டில் தேர்தல் இப் பொருள் குறித்தமை காண்க. பிச்சை ஏற்றல் ஆகிய சிவபெருமானது பொது இயல் வடிவமானது ஏனைய வடிவங்கள் போன்று அவனுடைய அடியார்களுடைய ஒழுக்கத்துக்கு எடுத்துக் காட்டாக விளங்குகின்றது. இக் கருத்தைத் திருமூலர் திருமந்திரம் 1888-வது பாட்டில் "பரந்துல கேழும் படைத்தபிரான்—இரந்துண்ணி யென்பர்க ளெற்றுக் கிரக்கும்—நிரந்தரமாக நினையு மடியார் இரந்துண்டு தன்கழ லெட்டச்செய்தானே' என்ற பாட்டிலும் திருஞான சம்பந்த அடிகள் திரு இலம்பையங் கோட்டூர்ப் பதிகம் 6-வது பாட்டில் 'மனமுலா மடியவர்க் கருள் புரி வகையலால் பலிதிரிந் துண்பிலான்' என்றும் கூறியருளினார். உண்பலி தேர் அம்பலவன் என்றதனால் யாதொரு பற்று மிலாது உயிர்கள் தன்னைப்போல இன்பம் அடையும் பொருட்டு புறத்திலே தில்லையிலும், அகத்திலே உயிர்களுடைய உள்ளத்திலும் ஒழிவின்றிநடனஞ் செய்கின்றவன் என்பது பின்னே கூறப்படும் "தேனார் கமலமே சென்று ஊதுதலுக்குக்" காரணமாகக் கூறப்பட்டது. தேனார் கமலமே சென்று ஊதாய்—கமலம்-தாமரைப் பூ. அது இங்கே சிவபெருமானுடைய இரண்டு திருவடிகளையும் குறிக்கின்றது. மலமே என்பதிலுள்ள 'ஏ' பிரிநிலை ஏகாரம். தினைத்தனை தேனுள்ள சிறு பூக்களிடம் போய் ஊதாது எப்பொழுதும் இன்பத்தேன் சொரிகின்ற திருவடித் தாமரைப் பூக்களில் மட்டுமே சென்று ஊதுவாயாக என்ற கருத்து பிரிநிலை ஏகாரத்தால் உணர்த்தப்பட்டது. கமலம் சென்று என்பது ஏழாம் வேற்றுமைத் தொகை. ஊதுதல் - பூவிலுள்ள தேனை உண்ணுதற்கு அதனிடத்து வண்டுகள் ரீங்காரம் செய்தல். உள்ளத்துக்கு ஏற்றிக் கூறுங்கால் நிலையில்லாத உலக சிற்றின்பத்தை நாடித்தேடிஉழலாது நிலையான பேரின்பத்தைத் தரும் திருவடிகளுக்கு மனதால் நினைத்தும் நாவாற் புகழ்ந்தும் உடலால் தொண்டு செய்தும் வழிபடுதலாகும்.

இந்தப் பாட்டில்மாணிக்கவாசக அடிகள் தம்மைத் திருப்பெருந்துறையில் சிவபெருமான் ஆண்டருளிய பின் அதாவது அவனோடு இரண்டற அத்துவிதமாய்க் கலந்து நிறைவு அறிவை அடைந்தபின்

நான்ஆர் என்பதும் தமது தன்வயமற்ற தன்மையும் சிவமாம் செம்மைத் தன்மை அடைந்த தமது உள்ளத்தினிலேயும் தாம் அடைந்த கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டை, என்ற நால்வகை அநுபூதி ஞானங்களின் நிலேயும் உணர்ந்து அறிந்ததாகத் தமது சுவாநுபவத்தை உலகமாந்தர் அறிந்து உய்யுமாறு கூறினர். நான்ஆர் என்றதனல் சரியை ஞானமும் என்னே அறிவார்ஆர் என்றதனல் சரியை ஞானம் அடங்கிய கிரியை ஞானமும் எனது உள்ளம்ஆர் என்றதனல் சரியை கிரியை ஞானங்களடங்கிய யோக ஞானமும் ஞானங்கள் ஆர் என்றதனல் சரியை, கிரியை, யோக ஞானங்களும் அவை அடங்கிய ஞானத்தில் ஞானமாகிய மெய்ஞ்ஞானமுங் கூறப்பட்டன. இன்னும் நான் யார் என்றதனல் அசத்துத் தன்மை நீங்கிச் சத்துத் தன்மை அடைதலும் (from the unreal to the real) 'என்னே அறிவார்ஆர்' என்றதனல் அசித்துத் தன்மை நீங்கிச் சித்துத் தன்மை அடைதலும் (from darkness to light) 'எனது உள்ளம் ஆர், ஞானங்கள் ஆர்' என்பன வற்ருல் பிறப்பு இறப்புக்களாகிய பிறவித் துன்பம் நீங்கி நிலேயான பேரின்பம் அடைதலும் (from death to immortality) கூறப்படுகின்றன. முப்பொருள்களுள் இறைவன் சத்துப் பொருள், உலகம் அசத்துப் பொருள் உயிர் சத்து அசத்துப் பொருள். சதசத்தாகிய உயிர் முதலாவது உலகத்தைச் சார்ந்து உலக மயமாய் அனுபவமடைந்து பின் சிவத்தைச் சார்ந்து சிவமயமாய்ப் பேரின்பம் அடைகின்றது, என்ற சித்தாந்த உண்மையை, ஆண்டிலனேல் என்ற எதிர்மறையில் வைத்து இப்பாட்டு கூறுகின்றது. இதே கருத்தை 'இன்றெனக் கருளி யிருள் கடிந்து' என்ற முதற் குறிப்புத் திருவாசகப் பாட்டு, உடன்பாட்டில் வைத்துக் கூறுகின்றது. அந்தப் பாட்டில் இன்று என்பது ஆண்டருளியபின் என்று பொருள்படும். இருள் கடிந்து, என்பது நான் ஆர், என்னே அறிவார் ஆர் என்பவற்ருேடும் உள்ளத்தில் எழுகின்ற ஞாயிறு போன்று நின்ற தன்மை என்பது உள்ளமார் என்பதனேடும் அருளி என்பது ஞானங்களார் என்பதனேடும், உன்னே அறியகிற்பார் யார் என்பது இந்தப் பாட்டில் வரும் மூன்று ஆர்களோடும் 'என்னே அறியவல்லார்' யார் என்பதனேடும் கருத்திற் பொருந்துதலேயும் 'ஒன்றும் நீ அல்லே அன்றி யொன்றில்லே, என்பன உயிர் வேருய் நின்று இறைவனே அறிய மாட்டாமைக்குக் காரணமாய்க் கூறப்படுதலேயும் உற்று நோக்குக. இவ்வாறு இவ்விருபாட்டுகளும் ஒன்றனே ஒன்று விளக்குவனவா யிருக்கின்றன என்பது கண்டுகொள்க.

—மா. வே நெல்லேயப்ப பிள்ளே.

ஆராய்ச்சிப் பகுதி - Research

திருச்செங்கோடு

[திரு. C. M. இராமச்சந்திரஞ் செட்டியார் அவர்கள் B.A.; B.L.]

இவ்வூர் சங்ககிரி ஸ்டேஷனிலிருந்து 5 மைல் தூரத்தில் இருக்கிறது. ஊரில் கைலாயநாத சுவாமி ஆலயம் என்ற ஒரு பெரிய ஆலயம் இருக்கிறது. அதைச் சுற்றிலும் நான்கு பெரிய வீதிகள் சதுரமாக இருக்கின்றன. முன்னொரு காலத்தில் இவ் வூரிலொரு கோட்டை இருந்ததாகச் சொல்லுவார்கள். ஆனால் அதற்குரிய அடையாளம் இப்போது ஒன்றும் கிடையாது.

இவ்வூருக்குத் தென்கிழக்கில் 1901 அடி உயரமுள்ள ஒரு செங்குத்தான மலை இருக்கிறது. இம்மலையின் பெயர்தான் இவ்வூருக்கும் ஏற்பட்டிருக்கிறது. இம்மலையின் உற்பத்திக்கு ஒரு புரான கதையுண்டு. ஆதிகாலத்தில் வாயு பகவானுக்கும் ஆதிசேஷனுக்கும் தங்களில் யார் வல்லவர் என்ற வாக்கு வாதம் உண்டாக அதனை நிரூபிப்பதற்காக ஆதிசேஷன் தன் படங்களை விரித்துக்கொண்டு இமயமலையின் சிகரங்களைத் தாங்கிப் பிடித்துக்கொண்டானும். வாயுபகவான் அதன் சிகரங்களை இடித்துத்தள்ள விரைவாய்க் காற்றை வீசி ஓங்கினனும். அச் சண்டையில் ஒரு சிகரம் ஆதிசேஷனின் இரத்தக் கறையோடு பறந்து இவ்விடத்தில் விழுந்ததாம். அதனால் இம் மலைக்கு நாககிரி என்ற பெயர் ஏற்பட்டதாம். மற்றொரு கதை என்னவெனில், காமதேனு சிவபிரானிடம் பிரார்த்தித்து 5 சிகரங்களைப் பெற்றதாம். அவ்வைந்து சிகரங்களாவன: கஞ்சமலை, சங்ககிரி, புஷ்பகிரி (மோரூர்மலை) ஊராய்ச்சிக்கோட்டை (பவானிக்கருகு) நாககிரி (திருச்செங்கோடு) என்பவைகள். இப் பெயர்கள் பவானிப்புராணத்தில் சில மாறுதல்களுடன் கூறப் பட்டுள்ளன. ஆகவே அர்த்தநாரீஸ்வர ஸ்வரூபம் இம்மலைமேல் ஏற்பட்டது இம்மலையின் இரண்டு சிகரங்கள் ஆணாகிய ஆதி சேஷனாலும் பெண்ணாகிய காமதேனுவாலும் ஆக்கப்பட்டதற்கு அறிகுறியாம்.

இம்மலை செங்குத்தாக உள்ளது. செங்கோடு என்ற பதமே அப்பொருளைத் தரும். மலைமேல் செடி, கொடிகள் கிடையா. பாறைகளின் நிறங்களும் மேலிருக்கும் கோயில்களும் சூரிய வெளிச்சத்தில் மிகவும் இரம்மியமான தோற்றத்தைக் காட்டு

விக்கும். மலையின் ஒரு புறத்து உச்சியில் அர்த்தநாரீஸ்வரர் ஆலயம் இருக்கிறது. அதற்குச் செல்லும் படிகள் 1200 உள்ளன. வழிநெடுக மண்டபங்கள் உண்டு. முதல் மண்டபத்திற்குத் தனிப் பெயரில்லை; மற்ற மண்டபங்கள் முறையே (2) சந்நியாசி, (3) திருமுடையான் (4) தைலி (5) கைக்கோளர் (6) சிங்க (7) அறுபதாம்படி (8) செட்டிய கவுண்டன் (9) தேவடியார் (10) இலைப்பத்து (11) கோபுர வாயில் என்பவைகள். இம்மண்டபங்களுக்குத் தனித்தனி வரலாறுகளும் உண்டு.

தைலிமண்டபத்திற்கு மேற்கே ஒரு நந்தி இருக்கிறது. பக்தர்கள் அதற்கு வெண்ணெய் பூசுவார்கள். இந்நந்தி மலையைப் பார்த்துக் கொண்டிருக்கிறது. இதனால் மலையே ஒரு இலிங்கமாக பாவிக்கப் படுகிறது. இதற்கு அருகே ஒரு பாறையில் 60 அடி நீளமுள்ள ஒரு பெரிய ஐந்துதலை நாகத்தைச் செதுக்கி இருக்கிறார்கள். இந்நாகத்திற்கு கொங்கு நாட்டு மலசர்கள் தங்களைப் பாம்பு கடிக்காதபடி பொங்கலும் கோழிப் பலியும் இடுவதுண்டு. இப்பாறையினை நாககுண்டு (நாககுன்று) என்பார்கள். இதனருகில் சோழபாண்டியக் கல்வெட்டுகள் இருக்கின்றன.

சிங்க மண்டபத்தை மோரூர் வேளாளர் நல்லதம்பிகாளியன் என்பவனுடைய வம்சத்தார் பரிபாலித்து வருகிறார்கள் இங்கே கல்வெட்டுகளில் காணும் சில வம்சத்தினர்கள் 1. திருமலை அத்தப்ப நல்லதம்பி காங்கேயன் (1599) 2. அத்தப்ப இம்முடி நல்லதம்பி காங்கேயன் (1619) 3. குமாரசாமி காங்கேயன் (1627) என்பவர்கள். இம்மண்டபத்துத் தூண்கள் சிங்கம், குதிரை முதலிய உருவங்களால் சித்திரிக்கப் பட்டிருக்கின்றன. மேல் சுவரிலுள்ள மனித உருவங்கள் இதனைக் கட்டினவர்களாம்.

இம்மண்டபத்திற்கும் அடுத்த மண்டபத்திற்கும் மத்தியில் 60 படிகள் இருக்கின்றன. அவைகளைச் சத்தியப்படி என்றும் அறுபதாம்படி என்றும் சொல்லுவதுண்டு. பணவிஷயமாக சச்சரவு நேரிட்டால் இங்கே கர்ப்பூரம் அவிழ்ப்பதாக சபதம் கோருவதுண்டு. இவ்வழக்கம் சென்னை ஐகோர்ட்டு வரை ஏறியிருக்கிறது. இப்படிகளுக்கு அருகில் ஒரு பாறையில் சோழர் கல்வெட்டுகள் இருக்கின்றன. மேலிருந்து 7-ம் படியில் அறுபதாம்படி மண்டபம் கட்டப்பட்டிருக்கிறது. இதனைக் கட்டினவன் குமாரசாமிக் காங்கேயன். இப்பொழுது இதனைச் சானார்கள் பரிபாலிக்கிறார்கள். இதற்கு அடுத்த பாறையைப் பாண்டவக்குண்டு (பாண்டவக்குன்று) என்றழைப்பார்கள். இப்பாறையின்மீது முன்காலத்தில் ஒரு கோட்டை இருந்ததாம். அக்கோட்டையின் வடக்கு வாயில் பைரவ தீர்த்தத்தண்டை

இருந்ததாம். இப்பொழுதும் இதனைக் கோட்டை வாயில் என்றழைப்பார்கள்.

கோபுர வாயில் மண்டபத்தை 1654-ல் சியாள கெட்டி முதலியார் கட்ட ஆரம்பித்தார். அதனை இராசிபுரத்து விஜய குலத்தார்கள் கட்டி முடித்தார்கள்.

இதற்குப் பிறகு அர்த்தநாரீஸ்வரர் ஆலயத்துக் கோபுர வாயில் இருக்கிறது. அதன் வேலையை 1512-ல் திரியம்பக உடையார் ஆரம்பித்தார். அதனை 19-ம் நூற்றாண்டில் பொது மக்கள் திருப்பிக் கட்டினார்கள். கோயில் மட்டமானது கோபுரத்திற்குக் கீழ் 20 அடி தாழ்ந்திருக்கிறது. வெளிப்பிரகாரம் கீழ் மேல் 220 அடியும் தெற்கு வடக்கில் 198-ம் கொண்டிருக்கிறது. உள் கோயிலானது கீழ்மேல் 170-ம் தெற்கு வடக்கில் 95 அடியும் கொண்டது. மகாமண்டபம் சங்ககிரி துர்க்கம் ஆண்ட சாம்போஜி கட்ட ஆரம்பித்து 1684-ல் தாரமங்கலத்து சியாள கெட்டி முதலியார் முடித்தார். கோயில் மேற்கு பார்த்த சந்நிதி. வேலூர் விருபாக்ஷராயன் காலத்தில் திருவாவடுதுறை பண்டாரமொருவர் ஒரு கவி பாட இவ்வாலயத்தின் நந்தி கொள்ளைத் தின்றதாம்.

நிருத்த மண்டபத்தை 1599-ல் மோரூர் அத்தப்ப நல்ல தம்பி காங்கேயன் கட்டினான். இதைப்பற்றி கல்வெட்டும் உண்டு. இதன் கல் வேலை தாரமங்கலத்தைப் போன்று உள்ளது. கல்லினால் செய்த சங்கிலிகள் மிகவும் நுண்ணிய வேலை. நந்தியின் வடக்கே யுள்ள ஒரு தூணில் அத்தப்ப நல்ல தம்பி காங்கேயனும் அவனுடைய மூன்று மனைவிகளும் உருவமைக்கப்பட்டிருக்கிறார்கள். ஜனங்கள் தங்கள் நோய்தீர்க்க இத்தூணைச் சுற்றுவதுண்டு. கோயிலுக்கு வடக்கே சுப்பிரமணியர் ஆலயம் இருக்கிறது. அதற்கு ஒரு அழகிய மகாமண்டபம் உண்டு. அதனை 1619-ல் இம்முடி நல்லதம்பி காங்கேயன் கட்டினான். அதன் விமானத்தை சியாள கெட்டி முதலியார் கட்டினார்.

விக்கிநேஸ்வரர் மண்டபம் அர்த்தநாரீஸ்வரர் ஆலயத்திற்குத் தெற்கே உள்ளது. அதனையும் தாண்டவபட்டிரை விலாசம் என்பதையும் 1627-ல் குமாரசாமி காங்கேயன் கட்டினான். சென்ற நூற்றாண்டில் அதில் பிளவு ஏற்பட்டது. அதனை 1823-ல் சேலம் கலெக்டர் டேவிஸ் என்பவர் திருப்பணி செய்வித்தார். ஒரு தூணில் அவர் உருவம் செதுக்கப்பட்டிருக்கிறது. அது 3 அடி உயரமும் தலையில் தொப்பியும் கையில் கைப்பிரம்பும் கொண்டிருக்கிறது. அந்தத் தூணுக்கு அருகில் மற்றொரு தூணில் குமாரசாமிக் காங்கேயனும் அவனுடைய

நான்கு மனைவிகளும் செதுக்கப்பட்டிருக்கின்றனர். இத்தூணும் சுரம் தீர்க்குமாம்.

சுப்பிரமணியர் ஆலயத்து நிருத்த மண்டபத்தைக் குமார சாமி காங்கேயன் மைத்துனனான இலுப்பிலி இளைய கவுண்டன் கட்டினான். நாகேஸ்வரர் ஆலயத்தை வேட்டுவர் தலைவன் ஆறை இம்முடி அல்லால இளையான் கட்டினான். அவன் பரமாத்தியில் காவிரியைத் திருப்பினவனாம். அவ்வாலயத்து விமானத்தை 1685-ல் வேட்டுவச் செங்கோடன் கட்டினான்.

மலையின் உயர்ந்த சிகரத்தில் பாண்டீஸ்வரர் ஆலயம் இருக் கிறது. 13-வது நூற்றாண்டில் பாண்டியர்கள் படை யெடுத்து இங்கே தங்கள் சின்னத்தை நிலைநிறுத்தினார்கள்.

பாண்டீஸ்வரர் ஆலயத்திற்கு அருகில் மலடிக்கல் என்ற ஒரு பாறை யிருக்கிறது. அதற்குக் கீழ் 800-அடி உயரமுள்ள ஓரே செங்குத்துப் பாறை இருக்கிறது. மலடிகள் இப்பாறை யை மூன்று தடவை தவழ்ந்து வந்தால் சந்ததி உண்டாகுமாம். பலதடவை இங்கே உயிர்ச்சேதம் உண்டானதால் இவ்வழியை அரசாங்கத்தார் அடைத்து விட்டனர்.

மலையின் உச்சிக்குக் கீழே பஞ்சபாண்டவர்கள் படுக்கை இருக்கிறது. அங்கே மூன்று படுக்கைகள் விரித்தாற்போல் காணப்படுகிறது. இது சமணர்களுடைய சின்னமாயிருக்கலாம்.

கீழே ஊரில் இருக்கும் ஆலயமான கைலாயநாதசுவாமி ஆலயம் 250 அடி கொண்ட ஒரு சதுரமாகும். முன் கோபுரம் 76-அடி உயரமுள்ளது; அதன் அஸ்திவாரத்தை 1064-ல் கொண்டப்பையன் கட்டினான். அதற்கு முன் ஒருகல் தீபஸ் தம்பம் 31-பட்டைகள் கொண்டதாய் இருக்கிறது. அம்மன் கோயில் இம்முடி நல்லதம்பி காங்கேயன் கட்டினது. ஆலயத் துள் ஒரு கிணறும் அதற்கு அடியில் செல்லும் ஒரு வழியும் உண்டு. ஊருக்கு அருகில் பரமாத்தி வழியில் மலைக்காவலர் கோயில் என்ற ஒரு ஆலயம் இருக்கிறது. இதில் சூலாயுதங்கள் நடப்பட்டிருக்கின்றன. இவற்றிற்கு உயிர்ப்பலி இடுவதுண்டு. இங்கே பேயோட்டுதலு முண்டு.

திருச்செங்கோட்டில் கல்வெட்டுகள் பல இருக்கின்றன. சோழர்கள் காலத்தில் பிராமணர்களுக்குத் தானமும் கோயி லுக்கு நந்தாவிளக்கும் வைக்க பூதானம் செய்திருக்கின்றார்கள், பராந்தகன் I (906) கங்கை கொண்ட ராஜேந்திரன் இவர்களு டைய கல்வெட்டுகள் பழையவை. பாண்டியர் காலத்திலும் பூ

தானம் விடப்பட்டன. 1522-ல் கிருஷ்ண தேவராயன் காலத்தில் சந்தைவரி கோயிலுக்குக் கொடுக்கப்பட்டது. மதுரை நாயகர் காலத்திலும் பூதானம் செய்யப்பட்டது. 1659-ல் திருமலைமகன் முத்துக்குமாரனுடைய நன்மைக்காக ஒரு கிராமம் தானம் செய்யப்பட்டது. 1663-ல் சொக்கநாதர் காலத்தில் கைலாச நாதர் ஆலயத்து மேல் கோபுரம் கட்டப்பட்டது. 1734-ல் மைசூர் கிருஷ்ண ராஜன் இக்கோயிலுக்கு ஒரு பூதானம் செய்தான். கல்வெட்டுகளால் நாம் காணும் ஒரு செய்தி என்னவெனில் இக்கோயிலுக்கு உதவி செய்தவர்கள் பெரும்பாலும் குடிகளே யன்றி மன்னர்கள் அல்லர் என்பதே.

சேது

[கா. சிவ. க.]

மதுரைக்குத் தென்கிழக்கில் 110 மைல்கள் தொலைவிலுள்ளது; கல்லாலும் மணலாலுமாகிய குறுகிய நிலவீச்சு; வடக்கிலும் வடகிழக்கிலும் மன்னார் வளைகுடாவை யொட்டிச் செல்கிறது. மேற்குக்கோடி இராமேச்சுரத்தை இணைக்கிறது, கிழக்குக்கோடி மன்னார்தீவின் கீழ்ப்பகுதியை இணைக்கிறது. இவ்விரு தீவுகளையும் சேர்த்துக்கொண்டால் இந்தியத் தென்பகுதியுடன் ஈழத்தை இஃது இணைத்து நிற்கிறதென்றே சொல்லலாம்; இராமர் அணையென்றும் சொல்லப்படும். இதன் வழியே அநுமானின் துணைகொண்டு இராமன் தன் சேனைகளுடன் இலங்கைக்குப் படையெடுத்துச் சென்றதாகக் கூறுவர். கி. பி. 1480-ம் ஆண்டு வரை இச்சேதுக்கரை இந்தியாவை ஈழத்துடன் இணைத்திருந்தது உண்மையே. அவ்வாண்டில் ஏற்பட்ட ஒரு கடும்புயலில் இவ்வணையில் ஒரு பிளவுண்டாயிற்று. அதன் பிற்காலத்தெழுந்த மற்றொரு பெரும்புயலில் பிளவுகள் அதிகப்பட்டுக் கால்நடைப் போக்குவரத்துத் தடைப்பட்டது. இதன் நீளம் ஏறக்குறைய 30 மைலும் அகலம் 1¼ மைலும் ஆகும். தென்கிழக்கிலிருந்து வடமேற்காக அமைந்தது. சில பகுதி நீர் மட்டத்திற்கு மேலும் சில பகுதி நீர்மட்டத்திற்கு மூன்று நான்கடி கீழும் இருக்கின்றன.

—சென்னை மாகாண அரசியன் முறைவிளக்கம்: தொகுதி III

இலக்கணமும் இலக்கியமும்:
LANGUAGE AND LITERATURE

இந்தியாவும் சாவகமும்

(திருவாளர் S. நடராஜ பிள்ளை B. A.)

(கஉ-ம் சிலம்பு ௫0௩-ம் பக்கத் தொடர்ச்சி.)

மேற்குச் சாவகம்—5 6-ம் நூற்றுண்டுகள்

சாவகத்தில் இந்திய நாகரிகம் கி. மு. 1-ம் நூற்றுண்டுக்கு முன்னர் பரவியிருந்த தெனினும் இதைப்பற்றிக் கிடைத்துள்ள அறிகுறிகள் கி. பி 4-ம் நூற்றுண்டிற்குப் பிற்பட்டதாகவே இருக்கின்றன. கி. பி 450-ம் ஆண்டுக் கல்வெட்டொன்று பூர்ணவர்மன் என்னும் அரசனைப்பற்றிக் கூறுகின்றது. இவ்வரசன் படேவியாவுக்கருகில் தருமபுரம் என்னும் பட்டினத்தைத் தலைநகராய்க் கொண்டு அரசாண்டதாயும், சந்திரபாகி, கோமுகி என இரு வாய்க்கால்கள் வெட்டியதாயும் இக் கல்வெட்டில் பொறிக்கப்பட்டிருக்கிறது. இம் மன்னனின் பிறிதொரு கல்வெட்டில் இவனுடைய இரு பாதங்களும் செதுக்கப்பட்டு அவைகளைத் திருமாலின் சுவடுகளுடன் ஒப்பிடப்பட்டிருக்கிறது. மற்ருெரு கல்வெட்டில் இவ்வேந்தனின் பட்டத்து யானையின் பாதங்கள் காணப்படுகின்றன.

இவனுடைய காலத்தில் சீனநாட்டு பௌத்தயாத்ரீகனை பாகியான் என்பார் (413-ல்) இலங்கையிலிருந்து சாவகமுற்றிருத்தல் வேண்டும். இவர் சாவகத்தில் பௌத்தம் பரவவில்லை எனவும் பிராமணரின் நிலை உயர்ந்திருந்த தென்றும் கூறியுள்வார். சாவகத்திலிருந்து இவர் இருநூறு இந்து வர்த்தகர்களுடன் கப்பலில் சீனம் அடைந்தார் எனத் தெரிகிறது.

கி. பி. 423-ம் ஆண்டில் காஷ்மீரத்து இளவரசரான குணவர்மன் சாவகத்தில் பௌத்தத்தைப் பரப்ப முயன்ருர். இவர் முயற்சி வெற்றியடையாது போகவே, நந்தி என்பாருக்கு உரிமையான ஓர் மரக்கலத்தில் இவர் சீனம் அடைந்ததாயும் கூறப்படுகிறது.

சாவகத்தரசனை ஸ்ரீபாததேவ வர்மன் (Sri-pa-da-do-a-la-pa-mo) என்பார் கி பி 435-ல் சீனத்திற்கு ஓர் தூதுக் கூட்டத்தைத் திருமுகம் ஒன்றுடன் அனுப்பியதாயும், சீன அரசர்

அதை அன்புடன் வரவேற்றதாயும் சீன வரலாறு (History of the first Sung dynasty of China) கூறுகிறது. 6-ம் நூற்றாண்டின் முதல் பகுதியைக் கூறும் மற்றொரு சீன வரலாறு மேற்குச் சாவகத்திலிருந்த லாகசு (La-ga-su) என்னும் நாட்டைப்பற்றித் தெரிவிக்கிறது. இந் நாடு 400-ஆண்டுகளாய்த் தனி நாடாய்த் திகழ்ந்ததாயும் இந் நாட்டு அரசர்களில் ஒருவன் கொடுங்கோல் புரிந்தமையால் குடிமக்கள் இவ்வரசனின் உறவினர் ஒருவரை அரசராக்கக் கருதியதாயும் இதை அறிந்த மன்னவன் அவ்வுறவினரை நாடு கடத்தியதாயும் அவ்வுறவினர் இந்தியா சென்று ஓர் இளவரசியை மணந்து மன்னன் இறந்த பின்னர், குடிகளின் வேண்டுகோட் கிணங்கி அரியணை யமர்ந்த தாயும் அந் நூலில் காணப்படுகிறது.

இவற்றால் மேற்குச் சாவக மன்னர்கள் 5,6-நூற்றாண்டுகளில் பலாட்டியராய் விளங்கின ரென்றும், சீனம், இந்தியா முதலிய பக்கத்து நாடுகளுடன் நேசப் பான்மை யுடன், நன்மதிப்புப் பெற்று திகழ்ந்தனர் என்றும் பெறப்படுகிறது. மரக்கலங்களின் உதவியால் "திரைகடலோடி" வாணிபஞ் செய்து பொருளீட்டிவந்தன ரென்பதும் விளங்குகிறது. இக் காலத்து இந்நாட்டுச் சமயம் சைவ மாயிருந்த தென்றும், பௌத்தத்தைப் பரப்ப, பெருமுயற்சிகள் நிகழ்ந்தன வென்றும் அறியக்கிடக்கிறது. இந்நாட்டில் அகத்தியர் வணக்கம் தலைசிறந்து மிளிர்ந்த தெனவும் அறிகிறோம்.

நடுச் சாவகம்—7, 8, 9 நூற்றாண்டுகள்

6-ம் நூற்றாண்டி னிறுதியில் மேற்குச் சாவக மன்னர் நிலை குலைய நடுச் சாவகத்தில் கலிங்கம் என்னும் நாடு முன்னேறியது.

கி. பி 637-649 ஆண்டுகளில் கலிங்கம் பிற சிறுநாடுகளைத் தன்னுள் ளடக்கி வல்லரசாயிற்று. வல்லரசாகிப் பெருகியதும் இந் நாட்டு மன்னர்கள் சீனதேசத்து டாங் வமிசத்து வேந்தர்களுக்குத் தூதுக் கூட்டங்களும், திருமுகங்களும், அனுப்பித் தம் செல்வாக்கைப் பெருக்கிக் கொண்டனர். சாவகத்தில் இன்றும் கலிங்கம் என்னும் பெயரைப் போற்றுகின்றனர். இந்திய நாட்டிலிருந்து போகும் மக்களைச் சாவகத்தார் "ஓரங்கலிங்" (Orang Keling) என்கின்றனர். பர்மியர் இன்றும் தமிழரைக் கள்ளர் (Kalla) என்பது ஈண்டு கவனித்தற் பாலதாம்.

கி. பி. 67-ல் பழந்தமிழ் வழக்கை யொட்டி கலிங்கத்திற்கு அரசியாக சீமா என்னும் மாதைத் தெரிந்தெடுத்தார்கள். இம் மங்கையின் ஆட்சி சிறப்புடன் திகழ்ந்தது. இவள் காலத்தில்

அமைதியும் ஒற்றுமையும் நிலவின. மக்கள் நல்வாழ்வு வாழ்ந்தனர். சுமித்திராவில் பண்டு தொட்டே வாழ்ந்துவந்த ஓர் அரேபியக் குழுவினர் இவ்வரசியின் ஆட்சியை மிகவும் வியந்து கூறியிருக்கின்றனர். இவள் காலத்தில் திருடர்பயம் அறவே ஒழிந்திருந்த தென்றும் மக்கள் பிறர் பொருட்கு ஆசைப்படாது திருப்தியுடன் வாழ்ந்தனர் என்றும் தங்கள் குறிப்புக்களில் எழுதியுள்ளனர். அரசி சீமாவுக்குப் பின்னர் கலிங்கத்தைப்பற்றிய வரலாற்றுக் குறிப்புகள் கிடைக்கப்பெறவில்லை.

இதற்குப் பின்னர் கிடைத்துள்ள ஆதரவு கி. பி. 732-ம் ஆண்டின் சனக்கல் கல்வெட்டாம். இதுதான் சாவகத்து மண்ணில் கிடைத்துள்ள கல்வெட்டுகளில் பழமையானது. இது நடுச் சாவக மன்னனுன சஞ்சையனுல் வெட்டுவிக்கப்பட்டது. இதில் சிவன் கோவில் ஒன்றைப் புதுப்பித்தமை கூறப்படுகிறது. துங்கபத்திரா நதிக்கரையிலுள்ள கோன நாட்டில் இருந்த அகத்தியர் ஆச்சிரமத்தைப்போல் இக் கோவில் புதுபிக்கப் பட்டதாயும், அகத்தியர் கொடிவழியைச் சார்ந்தார் இத்திருப்பணியில் கலந்து கொண்டதாயும் இக் கல்வெட்டு கூறுகிறது. தந்தையும் மகனுமான, சன்னகன், சஞ்சையன் என்னும் இரு நடுச் சாவக மன்னர்களும் நீதி கோடாது மனுவைப் போல் அரசாண்டதாகவும் இதில் பொறிக்கப்பட்டுளது. சஞ்சையன் தன் படைவலியால், சாவகத்திலுள்ள ஏனைய நாடுகள், சுமித்திர, பாலி, மலாக்கா முதலிய நாடுகளையும் வென்று ஓர் குடைக்கீழ் ஆண்டதாகப் பிற்காலக் கதைகள் வலியுறுத்து கின்றன.

கி. பி. 863-ம் ஆண்டுக் கல்வெட்டொன்று அகத்தியரைப் பற்றிக் கூறுகிறது. "பத்திரலோக" என்னும் பெயர் கொண்ட ஓர் கோவில் அகத்தியரால் கட்டப்பட்டதாக இதனுல் தெரிய வருகிறது. இக் காலத்தில் அநேக சிவாலயங்கள் கட்டப்பட்டன. சைவசமயம் சிறப்புடன் திகழ்ந்தது. தென்னிந்தியாவிலிருந்து திரளான மக்கள் வந்து குடியேறினர். தென்னுட்டுக் கலைகளும், நாகரிகமும் ஈண்டுப் பரப்பப்பட்டன. இந் நாட்டு இளவரசர்களும், இந்தியா சென்று, இந்தியக் கலைகளையும், பழக்க வழக்கங்களையும் பயின்றுவந்து தம் நாடுகளை வளமுறச் செய்தனர்.

8-ம் நூற்றுண்டி னிறுதியில் அரசியற் குழப்பங்கள் நிகழ, சுமித்திராவிலுள்ள ஸ்ரீ விசயநாட்டுச் சைலேந்திர மன்னர்கள் நடுச் சாவகத்தைக் கைப்பற்றினர். ஸ்ரீ விசய மன்னர்கள் பௌத்த தருமத்தை ஒம்பி வளர்க்க லானுர்கள். இவர்கள் நாகபட்டினத்தில் சோழ மன்னர்களின் அனுமதியின் பேரில் ஓர் பௌத்தக்

கோவில் கட்டினர்கள். பாலபுத்திரதேவன் என்னும் ஸ்ரீ விசய நாட்டு வேந்தன் (Nalanda) நலந்தாவில் ஓர் பௌத்த மடம் கட்டி அதற்குவேண்டிய பொருள் கொடுத்ததாகத் தேவபாலனின் நலந்தாப்பட்டயங்கள் கூறுகின்றன. ஸ்ரீவிசய மன்னர்கள் மலாக்கா, பாவி முதலிய அக்கம் பக்கத்து நாடுகளை வென்று ஓர் குடைக்கீழ் ஆண்டனர்.

கி. பி. 778-ம் ஆண்டுக் கல்வெட்டால் ஸ்ரீ விசயநாட்டுச் சைலேந்திர மன்னர்களின் ஆணைப்படி நடுச் சாவகத்தில் அழகிய பல பௌத்தக் கோவில்கள் கட்டப்பட்டதாகத் தெரிகிறது. இக் காலத்தில் பௌத்தம் சைவம் இரண்டும் ஒன்றாய்க் கலந்து விட்டது. 8-ம் நூற்றாண்டிற்குப் பின்னர் சாவகத்தின் கலையிலும் நாகரிகத்திலும் தென்னிந்தயாவின் ஆதிக்கம் குறையத் தலைப்பட்டது. இக்காலத்தில்தான் சிற்பத்திற்கே முடிமணியாய் விளங்கும் புரோபுதார் என்னும் பௌத்தக்கோவில் கட்டப்பட்டது. சைலேந்திரர்களின் செல்வாக்கு கி. பி. 863-க்கு முன்னர் ஒழிக்கப்பட்டுக் கீழைச் சாவகத்து இந்து மன்னர்கள் தலை தூக்கலாயினர். 863-ம் ஆண்டுக் கல்வெட்டில் மீண்டும் அகத்தியர் வணக்கம் வலியுறுத்தப் பட்டுளது.

ஸ்ரீ சைல மன்னர்களால் நடுச் சாவகத்தினின்றும் துரத்தப் பட்ட சைவ அரசர்கள் கி. பி. 863-ல் மீண்டும் ஆதிக்கம் பெற்றனர். இவர்கள் சைலேந்திரர்களைத் தோற்கடித்துத் தங்கள் ஆட்சியை நிலைநாட்டினர். இவர்கள் மாதரம் என்னும் நகரைத் தலைநகராக் கொண்டு 863-முதல் 915 வரை பலத்துடன் ஆண்டனர். மாதரத்தின் இறுதி மன்னன் சிற்பக் கலை வல்லோர் வியந்து போற்றத்தக்க முறையில் பரம்பாணம் என்ற கோயிலைக்கட்டினன். பின்னர் நடுச் சாவகத்தின் வலி குன்றிக் கீழைச் சாவகத்தின் ஆட்சிக் குட்பட்டது.

7, 8,9-ம் நூற்றாண்டுகளில் சாவகத்திற்கும் இந்தியாவுக்கும் போக்குவரவு அதிகமாய் இருந்ததாக அறியக் கிடக்கின்றது. சாவகத்து இளவரசர்கள் இந்தியா சென்று கல்வி பயின்று வந்திருந் திருக்கின்றனர். மனு நீதி கண்ட சோழனைப் போல் மனு நீதி கண்ட சஞ்சையன் என்னும் நடுச் சாவக மன்னனைக் காண்கின்றோம். தென்னிந்தியாவில் நாகபட்டினத்திலும் வட இந்தியாவில் நலந்தாவிலும் சாவகத்தரசர்கள் பௌத்த மடங்கள் கட்டியதையும் காண்கிறோம். நடுச் சாவகத்திலுள்ள டெயிங் (Dieng) பீடபூமியில் எஞ்சியுள்ள ஞாபகச் சின்னங்கள் சென்னைக்கடுத்த மாபலிபுரத்துள்ள எழுகோபுரங்களை ஒத்திருக்கின்றன. நடுச்சாவகத்திலுள்ள பரம்பாணம் என்னும் சிவன்

கோவிலில் இராமாயணக் கதையின் பல பாகங்கள் சித்திரிக்கப் பட்டிருக்கின்றன. ஏழுகன்னிகைகள் சிலைகள், காளி சிலை, முதலிய நம் நாட்டுச் சிலைகள் பல உள. சிற் சில சிலைகள் இந்திய நாட்டில் செய்யப்பட்டதாயும் கருதப்படுகின்றன. கோவில் என்பதற்குக் காவிமொழியில் சந்தி (Chandi) என்பார்கள். வீரர்களின் சமாதிக்கு சந்தியெனப் பெயர் வழக்கிலிருந்ததாம். எவ்வாறு பெரியாரின் சமாதிகள் தமிழ் நாட்டில் கோவிலாய்த் திகழ்கின்றனவோ அவ்வாறே சாவகத்திலும் சமாதியாய சந்திகள் பின்னர் கோவிலாய் மாறின. சாவகத்தில் தமிழ்க்கலை பரவியதற்குள்ள அத்தாட்சிகள் பலவற்றில் இதுவும் ஒன்றெனலாம். சாவகத்தின் சமயமும் சிற்பமும் ஓவியமும் நம் நாட்டினதாகவே இருந்திருக்கின்றன.

(தொடரும்.)

செந்தமிழொலி யிலக்கணம்

[திரு. பா. வே. மாணிக்கம் நாயக்கர் B. E., M. C. I. அவர்கள்]

பொருட் குறிப்புகள் (Subject Outline)

1. தமிழகமும் அகத்தியனார் பொதியமலையும் இவ்வுலகின் முதலூழியிலிருந்து இருக்கின்றன வென்பதும், நடு ஆசியாவும் சிவனார் கைலைமலையும் கடையூழிக்குச் சற்று முன்பே யுண்டாயின வென்பதும் இற்றைக்குமுள்ள கலைஞர்களால் மறுக்க வேலாதன.

2. இப்போதுள்ள தமிழ் நூல்களிலெல்லாம் மிகவுந் தொன்மையானது பழங்காப்புச் சோல் என்று பொருள்படும் "தொல்காப்பியம்" என்னும் இலக்கண நூலேயாம். இது பாணினியின் வடமொழி யிலக்கணத்திலும் பழையது.

3. தமிழ் மொழியின் அசையா நிலைமையானது உலக மொழிகளின் நிகழ்ச்சியில் ஒரு காணுக்காட்சி.

4. தமிழ்மொழி தன் பிரிவுட்பிரிவுகளிலும் மூலமுப்பொருள்களின் தத்துவங்களை யொட்டி நடப்பதும், அதன் இலக்கண நூல் அவ்வாறே மூலமுப்பொருள்களின் தத்துவங்களை இடைவிடாது பேசுவதும் உலக மொழிகளிலக்கணங்கள் யாவற்றிலுங் காணுதவோர் பெரிய காட்சி.

5. எழுத்துக்களின் மந்திரப்பொருளும், மொழிபடு பொருளும் தமிழில் ஒன்றாக இருப்பது எதனினும் காணுக்

காட்சி. "தனிநிலை", "உயிர்கள்", "உடல்கள்" என்பன தமிழெழுத்துக்களின் பகுப்புப் பெயர்களாம்.

6. இயற்கையில் மூலவடிவமாயுள்ள கருவின் உருவமே தமிழில் ஓகாரம், அதாவது மூலப்பிரணவம். இவ்வடிவமே கடவுளுடைய அபயாஸ்த வரதாஸ்த மூர்த்தமாகக் காட்டப் பட்டுள்ளது. இவ்வடிவினின்றே தமிழின் மற்றைய வரிவடிவங்கள் கிளம்பி யிருக்கின்றன. இவைகள் தந்தம் மந்திரப்பொருளைத் தந்தம் வடிவாலேயே நன்கு விளக்குகின்றன.

7. இயற்கைப் பொருளை யிற்றெனக்கிளத்துவதும் செயற்கைப்பொருளை ஆக்கமொடு கூறுவதும் தமிழிலக்கணத்தின் முறையாம்.

8. முற்பட்ட விலக்கியங்கள் முற்றுமழிந்தனவாயினும் இயற்கை விளக்கமாகிய தொல்காப்பியமெனும் தமிழிலக்கணம் ஒன்றிருப்பதுவே, தமிழ்மொழியை மற்றெவற்றிற்கும் உயர்ந்ததாகக் கொள்ளற்குப்போதிய ஆதாரம்.

9. தமிழின் ஒலியிலக்கணம் முற்றத்திருத்தமும் பொருண்மை வரையறையும் எம்மொழிக்கும் பொதுமையும் வாய்ந்த ஓர் இயற்கை விளக்கநூல் (natural science).

10. கூட்டொலிகளைத் தனி யெழுத்துக்களாக மற்றைய மொழிகள் எண்ணுவதுபோல தமிழ் தாடலை தெரியாது எண்ணுவதில்லை.

11. மற்றையமொழிகள் போலாது கூட்டல் குறைத்தல் இயலாதவர்க்கு முயற்சியாலாகும் எழுத்தொலிகளிவை யென்றும், முயற்சி வேற்றுமையாலாக்கக்கூடிய எண்ணிறந்த எழுத்தொலிகளிவையென்றும் தமிழ் பாகுபடுத்தி யுணர்த்துகின்றது.

12. வாக்குறுப்புக்களின் கூட்டல் குறைத்தல் ஏலாத குறிப்பான முயற்சிகளால் ஒலிக்கக்கூடிய எல்லா வெழுத்துக்களும் தமிழ் மொழியில் "உயிர்கள்" என வழங்கும் பன்னிரண்டும், "உடல்கள்" என வழங்கும் பதினெட்டுமே.

13. தமிழெழுத்துக்களி னமைப்பைவிட எளியது நினைத்தற் கெட்டாததாயினும், அதுவே எல்லா மொழிகளுக்கும் பொதுவான அமைப்பாம்.

14. தமிழொலி யிலக்கணப்படி, எழுத்துக்களின்முன், பின் அல்லது உடன்சார உயிர்த்தலென்னும் ஆய்தமும், இதழ்குவியாது எழுத்துக்களில் உகர ஒலிப்புண்டாக்குதலாகிய குற்றியலுகரமும், நாவின் விளிம்புகளை யுயர்த்தாது எழுத்துக்களில்

இகர ஒலிப்புண்டாக்குதலாகிய குற்றியலிகரமும் முடிவில்லாத ஒலியுருவங்களை யாக்குகின்றன.

15. தமிழொலி யிலக்கண வமைதியில் கூட்டொலிகள் அவைகளுக்குரிய வரிவடிவ மிற்றெனப் புலப்படுத்துகின்றன. அப்படியே இணைக்கப்பெற்ற வரிவடிவங்கள் தமக்குரிய கூட்டொலி யிற்றெனப் புலப்படுத்துகின்றன.

16. தமிழொலி யிலக்கணத்தின் விரிந்த பொதுப்பான்மையை விளக்கிக் காட்டுவனவும், பல பிறமொழிகளையும், உளறற் பேச்சுகளையும் தமிழெழுத்தால் எழுதியனவுமாகிய மாதிரிகள் (examples).

17. ஒலிகளின் நிகழ்த்தற் குறிப்புண்மையை, அதாவது, எவ்வெவ்வொலி எவ்வெவ்வியற்கை நிகழ்ச்சியைக் காட்டுகிறதென்பதை, தமிழர்கள் முற்றுமுணர்ந்ததினின்றே கிழைநாட்டு மந்திரவிலக்கணம் உண்டாயிருக்க வேண்டும். (மந்திர விலக்கணத்தால் பலனுளதிலதென்பது தற்போதைய கேள்வியன்று.)

18. ஒலிகளுக்கிட்டிருக்கும் பெயர்களே ஒலிகளின் நிகழ்த்தலிலக்கணம் தமிழில் வியக்கத்தக்க திருத்தமுடைய தென்பதை உணர்த்துகின்றன. "ஆய்தம்" (தனிநிலை) என்னும் உயிர்ப்பொலியை அண்டமுழுதும் வழங்குகின்றது "உயிர்" என்னும் ஒலியை உயிருள்ளன யாவும் வழங்குகின்றன. "மெய்" என்னும் ஒலியை உயிரில்லன யாவும் வழங்குகின்றன. இம்மூன்றையும் மக்கட்பிறப்பினர் வழங்குகின்றனர்.

19. எந்த இயற்கைநிகழ்ச்சிகளை ஓர் ஒலி நிகழ்க்துகின்றதோ அது அவ்வொலியின் மந்திரப் பொருளோடு இணங்கி இருக்கின்றது.

20. உயிருள்ளன, இல்லன, மக்கள் என்னு மவற்றுள் எதனினின்று பிறக்கினும் ஒருவித ஒலி ஒருவித நிகழ்ச்சியையே நிகழ்த்துகின்றது. இது ஓர் பெரிய இயற்கை உண்மை (natural law.)

21. ஓர் விலங்கினத்தினது ஒலிப்பின் பொதுவிலக்கணமானது அவ்விலங்கினத்தின் தன்மையைப் பொதுப்பட நிகழ்த்துகின்றது.

22. மற்ற உயிருள்ளவற்றினைப் போலவே மக்கட் பிறப்பிற்கும் பொதுவான நிகழ்த்தற் குறிப்பொலிகள் (pathio-phones) இயற்கையில் இருக்கின்றன. அன்றியும் அவ்வொலிகள் மற்றவைகளின் நிகழ்த்தற் குறிப்பொலிகளைவிட மிகவும் விரிவானவை.

இம்மக்கட் பிறப்பினர் வழங்கும் பலவேறு மொழி (பாஷை) களுங்கூட இப்போதுவான நிகழ்த்தற் குறிப்பொலிகளைச் சேர்த்து வழங்காவாயின் அவைகளுக்கு உயிர் (ஜீவன்) இல்லை.

23. எதனையேனும் வெகு திருத்தமாக உணர்த்த வேண்டியஅக்கரை யேற்படுகின்றபோது செயற்கை மொழிகள் (பாஷைகள்) தங்கள் செயற்கை விதிகளைப் பெரும்பாலும் உதறிவிட்டு இயற்கை நிகழ்ச்சிக் குறிப்பொலிகளை எடுத்தாளுகின்றன. அப்போது பேச்சாலுணர்த்தும் பொருள் (விஷயம்) பேசும்மொழி (பாஷை) யறியாதார்க்கும் புலப்படலாகின்றது.

24. ஒரு நாட்டவருடைய பொதுப்பான்மையை அவர்கள் வழங்கும் ஒலிகளின் தன்மை வெகுவாக வெளிப்படுத்துகின்றது.

25. ஓர் நாட்டவருடைய பொதுப்பான்மையில் குறிப்பிடத்தக்க மாறுதல்கள் ஏற்படின் அவைகட்கேற்ற ஒலி மாறுதல்களும் அவர்கள் மொழியில் (பாஷையில்) ஏற்படுகின்றன.

26. ஒரே மொழியே (பாஷையே) யாயினும் அதனை வழங்குபவர்களில் ஒருவனுடைய ஒலிப்போக்கானது அன்னவன் தன்மையை வெளியாக்குகின்றது.

27. மக்களின் ஒலிக்குறிகள் அவர்கள் வருந்தும் நோய்களைக்கூட இன்னவெனக் காட்டிக்கொடுத்து விடுகின்றன.

28. இயற்கை நிலைமையை வடிவுகள் உணர்த்து மிலக்கண வுண்மைகளோ நிகழ்ச்சியை ஒலிகள் உணர்த்து மிலக்கண வுண்மைகளை யொத்தவையே. இவ்விரண் டிலக்கணங்களுக்கும் தமிழெழுத்துக்கள் கட்டுப்பட்டிருக்கின்றன.

29. நிகழ்ச்சிக் குறிப்பொலிபாட்சியும் (pathio-phony) நிகழ்ச்சிக் குறிப்புருவியக்கமும் (pathio-farma) இன்றேல் அவைச்சொற்றிற (oratory) மென்பதென்னும்?

30. "எழுதிப்படிக்கும் சொற்றிறம் ஆவியற்றது" ("manuscript eloquence is lifeless") என்ற கடுஞ்சொல் ஆங்கில மொழிவரையில் மிகவும் உண்மையே. ஏனெனில் அம்மொழியின் பிறப்பு வளர்ப்பி லிதுகாறும் "நிகழ்ச்சிக் குறிப்பொலி யிலக்கணம்" என்னும் ஒன்றைக் கனவிலும் கண்டதில்லையாகலின் வேண்டுவனவாகிய நிகழ்ச்சிக் குறிப்பொலிகளை (pathio-phones) எழுதவேணும் அம்மொழியில் எழுத்துக்களில்லாமையால் பேசும்போதே சேர்த்துக் கொள்ளவேண்டியிருக்கின்றது.

31. "நிகழ்ச்சிக் குறிப்பொலி யிலக்கணத்தை" (pathio-phony) நன்குணர்ந்து பின்பற்றியே தமிழ்மொழி தோன்றி

யிருத்தலின் எழுதிப்படிக்கும் சொற்றிறமும் செந்தமிழில் நன்மை பயக்கும்.

32. நெடில் குறிலெழுத்துக்கள் எத்தகைய நிகழ்ச்சியை நிகழ்த்துகின்றன ?

33. உயிர்களும், மெய்களும், ஆய்தவொலிகளும் எத்தகைய நிகழ்ச்சியை நிகழ்த்துகின்றன ?

34. மிடற்றொலிகளும், நாவண்ணவொலிகளும், நாப்பல்லொலிகளும், இதழ்ப்பல்லொலிகளும், இதழொலிகளும் எத்தகைய நிகழ்ச்சியை நிகழ்த்துகின்றன ?

35. வல்லொலியும், மெல்லொலியும், இடையொலியும், வாய்மூக்கொலிகளும் எத்தகைய நிகழ்ச்சியை நிகழ்த்துகின்றன?

36. இயற்கை நிகழ்ச்சிக் குறிப்பொலி வழக்கில் (in pathiophoncs) மூச்சை விடும்போதாக்கு மொலிகளோடு மூச்சு இழுக்கும்போ தாக்கு மொலிகளும் மிகவும் சிக்கனத்தோடும் பயனோடும் வழங்கப்படுகின்றன, ஆனால் செயற்கை மொழிகள் (பாஷைகள்) யாவும் இம்மூச்சிழுக்கும்போதா மொலிகளைப் புலனுக்கிக் கொள்ளவில்லை.

37. உயிர்ப்பொலிகள் (aspirants) மிகுத்துள்ள போதல்லாது மற்றபடி மூச்சுவிடும் போதாக்கும் குறிப்பொலிகள் எந் நிகழ்ச்சிகளை நிகழ்த்துகின்றனவோ அவைகளுக்கு நேரேதிரான நிகழ்ச்சிகளை மூச்சிழுக்கும் போதாக்கும் ஒத்த குறிப்பொலிகள் நிகழ்த்துகின்றன.

38. குசுகுசுவெனல், முறுமுறுத்தல், பொருமுதல், அதும்புதல், விளையிடல், கூப்பாடுபோடுதல், அழுகை, உளறல், திக்கல், ஒலிவழுக்கல், அழுத்திப்பேசுதல், அளபெடுத்தல், மூக்காலழுதல் வாயொலிகளை மூக்கிற்பஹுக்குதல், மூக்கொலிகளை வாயிற்பஹுக்குதல், உயிர்மெய் யொலிகளை உயிர்ப்பொலியாக்குதல், ஒலிகளை விழுங்கிவிடுதல், அகாரம் பேசுதல், தாழ்குரல் பாடல், குரல் எடுத்துப்பாடல், ஒலிகளைத்தேய்த்து முடித்தல், விக்குள், கொட்டாவிவிடல், இருமல், ஏழ்ப்பம், வாந்தியொலி முதலாகிய இவைகளின் நிகழ்த்தற் குறிப்புக்களைத் திருத்தமாக தமிழ் எழுத்தின் தன்மை யிலக்கணத்தால் கண்டறிய வியல்கின்றது.

39. இனவுணர்ச்சி, அன்பு, காதல், மனநெகிழ்ச்சி, பொறாமை, சினப், மூர்க்கம், கடுஞ்சினம் அச்சம், விதிர் விதிர்ப்பு, நறுக்கம், காமம், களைப்பு, ஊக்கம், சோம்பல், பதற்றம், மன நிலையாமை, தாழ்மை, ஆணவம், கட்டளை, பணிவு, இழிப்பு,

மதிப்பு, திடுக்கம், வெறுப்பு, மகிழ்ச்சி, கொண்டாட்டம், திகைப்பு, ஐயப்பாடு, தீர்மானம், பசி, வறட்சி, நினைத்தல், குறு குறுத்தல், மனனம் செய்தல், பழிப்பு, குடித்தனம், பலவகை யான நோயுழத்தல், நோயை யடக்கல், துன்பத்தை யடக்கல், நோய்க்கும் துன்பத்திற்கும் தளர்தல், படிப்படியான குடிமயக்கம், பலவேறு வகையான மயக்கம், முதலாகிய உணர்ச்சிகளை உணர்த் தும் இயற்கை யொலிகள் தமிழெழுத்துக்களின் ஒலித் தத்துவங் களுக் கிணக்கமாகவே யிருக்கின்றன.

40. தமிழ் எழுத்துக்களின் வடிவிலக்கணம் ஒன்றுமே இயற்கையுண்மை யாராய்வோர் ஆழ்ந்தறிதற்கேற்ற ஓர் பெரிய இயற்கை விலக்கணம் (natural science).

41. வடமொழியில் எகர ஒகரக் குற்றொலிகளில்லை. ஆனல் ஏனில்லை யென்பதைத் தமிழின் நிகழ்ச்சிக் குறிப்பொலி யிலக் கிணத்திற்றான் றேடியறியவேண்டும்.

42 வடமொழியில் குற்றொலிகளைவிட நெட்டொலிகள் மொழியியற்கையினும் மிதம் மிஞ்சியிருக்கின்றன. ஆனல் ஏனப்படி யிருக்கின்றன வென்பதைத் தமிழின் நிகழ்ச்சிக் குறிப் பொலி யிலக்கணத்திற்றான் (in pathio-phony) தேடி யறிய வேண்டும்

43. உயிர்ப் பெழுத்துக்களும் (aspirants) உயிர்ப்பித்த மெய்யெழுத்துக்களும் (voiced consonants) வடமொழியில் அதிகமாக இருக்கின்றன, ஆனல் அவைகளின் நிகழ்த்தற் குறிப் பருமையை (pathio-phonetic importance) தமிழிலிருந்து அறியவேண்டும்.

44. வடமொழி யெழுத்துக்களை முற்றிலும் ஒலிமுறையிலக் கணப்படி (phonology) யமைக்காததனுண்மையைத தமிழின் மந்திர விலக்கணத்தினின்றும் எடுத்தறிய வேண்டியிருக்கின்றது.

45. வடமொழியின் பெருமையை அம்மொழியிலிருக்கும் ஒலிகளைக் காட்டினும் இல்லா ஒலிகளே மிக்க சொல்வன்மை யோடு உணர்த்துகின்றன. அவ்வில்லா வொலிகள் யாவும் தமிழில் தான் இருக்கின்றன.

46. நிகழ்த்தற் குறிப்பொலி (pathio-phony) யுண்மைப் படி கற்றோர் மற்றோர் யாவர்க்கும் பொது வழக்கில் வடமொழி இருக்க இயலாதது. ஆகையால் அம்மொழியை இறந்தமொழி யென்பது ஓர் பெருந்தவறு.

47. வடமொழி தென்மொழியெனு மிவ்விரண்டும் கதிரும் ஞாயிறும் போல்வன என்னலாம். வேறு விதமாகச் சொல்லின்

தென்மொழியை "அறியத்தகுவது" எனவும் வடமொழியை "அறிவு" எனவும் தகும்.

48. மந்திரப் பொருளிற்காகவந்த வடமொழியானது உண்மையான பார்ப்பார் அதாவது பிராமணரிடத்து இறப்பு நிகழ்வு எதிர்வெனு முக்காலத்தினு முளதேயாகும்.

49. வடமொழியின் ஒப்பிலா மந்திரப் பொருட்பெருமையைத் தமிழ்ப்படிப்பின்றி நன்குணரவாவது நுகரவாவது இயலாதாகலின் எவ்வித வடமொழிப்படிப்பினோடும் தென்மொழிப்படிப்பை கட்டாயமாக்க வேண்டியது இன்றியமையாதது.

50. எல்லாமொழிக்கும் பொதுவான செந்தமிழொலியிலக்கணத்தை எம்மொழி பயில்வோர்க்கும் கட்டாயபாடமாக வாக்கின் மிக்க நன்மையினும்.

51. தமிழ்மொழியினூடே யமைந்து கிடக்கும் இயற்கையிலக்கணத்தைக் கட்டாயபாடமாக எல்லா வியற்கையிலக்கணங் கற்கு மாணவர்களுக்கும் (students of philosophy) வைக்கின் நலமுண்டு.

52. மேல்நாட்டாருக்கு இற்றைக்கும் தெரியாத கீழ் கண்டவையும் இன்னும் பல இயற்கை யுண்மை நூல்களும் (natural sciences) தமிழில் இருந்திருக்க வேண்டுமென்று இயற்கை யுண்மையடங்கிய (philosophic) தமிழிலக்கணத்தால் விளங்குகின்றது. அவை, முப்பொருளுண்மை யிலக்கணம், பரமுளையிலக்கணம், உயிர்முளையிலக்கணம், மாமுளையிலக்கணம், பண்டமுளையிலக்கணம், பரவிலக்கணம், பரவடிவிலக்கணம், பரவொலியிலக்கணம், ஒலியிலக்கணம், ஒலிநிகழ்ச்சியிலக்கணம், வடிவியற்கையிலக்கணம், வரியிலக்கணம், பொருட்டன்மை யுயிரிலக்கணம், வடிவளவையிலக்கணம் ஒலியளவையிலக்கணம், உயிர்ப்பிலக்கணம் முதலானவை.

53. சென்னைக் பல்கலைக்கழகத்தினர் (The Madras University) தமிழ்மொழியைப் புறக்கணித்ததனால் தங்கட்குத் தாங்களே தீங்கிழைத்துக்கொண்டதுமன்றி தமிழ்மொழியாகிய செல்வத்தில் பொது உரிமையுடைய உலகத்தினர் மற்றையர்க்கும் தீங்கிழைத்தவராகின்றனர். ஆகலின் முதன்மையாகத் தமிழரும் அவர்களையன்றி கல்வியறிவென்பதில் நன்கு மதிப்புடைய எல்லோரும் அத்தமிழ்மொழிச் செல்வத்தைத் தாங்களடையவும் உலகின் மற்றையோரும் ஒக்க அடையவும் வேண்டிய முயற்சியை எடுத்துக்கொள்ளக் கடமைப்பட்டவர்களாவர்.

54. "தமிழ்க் பல்கலைக்கழகம்" (Tamil University) ஒன்று நிறுவுவது விரைவாகவும் கட்டாயமாகவும் வேண்டியது.

55. ஓர் குறுநிலத்திற்கோ, ஓர் நாட்டிற்கோ, அல்லது உலகிற்கேயோ ஓர் மொழியைப் (பாஷையை) பொது மொழியாக்குவது எப்போதும் ஆட்சி வலிமையின் பிடியைப் பற்றியதேயொழிய மற்றெம்மொழியின் சிறப்பைப் பற்றியது மன்று.

56. எண்ணிலக்கணம் (கணிதம்) முதலான வரைபிறழாக் கொள்கைகளை யுடைய இலக்கணங்களைப்போல (sciences of precision) உலகிற்குப் பொது எழுத்தென்பது ஆட்சி வலியின் பிடிக்குச் சிக்காத நுண்ணிய வியற்கையை யுடையது.

57. உண்மையிலக்கணப் பான்மையும் (scientific) எம்மொழிக்கும் பொதுப்பான்மையும் (universal) உடைய்து தமிழொலி யெழுத்தமைப்பொன்றே யாகையால் அதை உலக மேற்றுக்கொள்ளப்படுவதில் ஐயமில்லை.

58. உலகமொழிகளி யாவற்றையும் எழுதக்கூடிய கையச்சுக்கருவிக்கு (type writer) செந்தமிழெழுத்துக்களை யமைப்பின் இப்போது ஆங்கில மொன்றை எழுத இருக்கும் கருவியினும் சிறியதும் எளியதுமாக அமைகின்றது.

59. தமிழொலியிலக்கணத்தில் நல்லுணர்விலரே யாயினும் சரி, முற்றும் ஐயப்பாடுடைய இயல்பினராயினும் சரியே அத் தமிழொலியிலக்கணத்தோடு வழக்கிட்டு அவ்வழக்கிடும் முயற்சியிலேயே உலக மொழிகள் யாவற்றினுடைய ஒலிகளையும் இயற்கை நிகழ்ச்சிக் குறிப்பொலிகள் பெரும்பான்மையையும் ஆளக்கூடிய வல்லமையை இத்தமிழொலியிலக்கணப் பயிற்சியால் மூன்று மணி நேரகாலத்திற்கு மேலும் தங்களுக்கு வரப்பெறுதிருக்க வல்லீராவென்று சிறிது உங்கள் வலுவை அதில் செலுத்திப் பார்த்தறியுங்களென்று எல்லா வொலியிலக்கணக்காரர்களும் மிகவும் ஆர்வத்தோடு அழைக்கப்படுகின்றனர்.

60. தமிழ்க்கல்வியின் பெறுமானத்திற்கேற்ப அதனில் உலகத்தார் மனம் செலுத்தச் செய்யவும் தமிழொலி யிலக்கணத்தை விரைவாக எல்லோரும் ஏற்கச்செய்யவும் வேண்டிய நடவடிக்கைகள் வருமாறு:—

(*a*) தமிழொலி யிலக்கணத்திற்காக அச்சுக்கூடமொன்று நிறுவுதல், எல்லா முதன்மையான மொழிகளினும் தமிழொலி யிலக்கணத்தை வெளியாக்குதல், பொதுத் தமிழெழுத்தில் மற்றைய மொழிகளின் முதன்மையான நூல்களை எழுதி வெளியாக்குதல், இந்தப் பொதுத் தமிழெழுத்தில் நிகழ்ச்சிக் குறிப்

பொலிகளையும் உளறலொலிகளையும் எழுதி வெளியாக்குதல். இடற்கை நிகழ்ச்சிக் குறிப்பொலிகளையும் எல்லா மொழிகளையும், வழங்கும்படியான ஒருமுறைபதிப்பு (journal) வெளியாக்குதல் முதலியன.

(*b*) பொதுத் தமிழொலி யிலக்கணம் உலகம் முழுவதும் உடனே கிடைக்கும்படிக்கும் ஒலிகள் நிலையாகப் பதிவுசெய்யப் படும்படிக்குமாக, அவ்விலக்கணத்தை ஒலிக்கருவியில் (gramaphone) அகப்படுத்தி வெளியாக்கல்.

(*c*) இவ்வொலியிலக்கணப் பொருளை உலகி லெவ்விடத்தும் சென்று எடுத்துரைக்க கூட்டங்கள் தயாரித்தல்.

(*d*) தமிழில் இயற்கை நிகழ்ச்சிக்குறிப்பொலி யிலக்கணம் உயர்நிலைமையுற்றிருந்த தென்பதை யுணர்த்தும் வண்ணம், ஒரு வித மொழியையும் (பாஷையையும்) வழங்காமல் இயற்கை நிகழ்ச்சிக்குறிப் பொலிகளைக்கொண்டே சிறுகூத்த நூற்கள் இயற்றுதல்; அதனை ஆடிக்காட்ட கூத்தர்களைப் பயிற்றல்.

(*e*) இன்னும் சான்றோர் எடுத்துச் சொல்லும் வேறு முயற்சிகள்.

குறுந்தொகை

மூலமும் விளக்க உரையும்

[இலந்தையடிகள் வித்துவான் இரா. சிவ. சாம்பசிவன்]

(பதிப்புரிமை ஆசிரியர்க்கே)

(முன் ௯சகூ-ம் பக்கத் தொடர்ச்சி)

குறிஞ்சி

தலைமகன் சிறைப்புறமாக, அவன் வரைந்து கொள்வது வேண்டித் தோழி இயற்பழித்தவழி தலைமகள் இயற்பட மொழிந்தது.

களவொழுக்கத்தில் புணர்ந்து பிரிந்த தலைமகன், தலைவி தோழியர்களின் செய்திகளை அறியச் சிறைப்புறமாக நின்றானாக, அதனை அறிந்த தோழி வருந்தும் தலைவியை நோக்கி, அவன் விரைவில் வந்து மணந்துகொள்ள வேண்டி., அத்தலைமகன் கொடுமைகளைச் சொல்லிப் பழிக்கத் தலைவி அவனிடத்துக்கொண்ட அன்பினால் அதனைப் பொறாது தலைவன் குணத்தைக் கொண்டாடிக் கூறியது இச்செய்யுள்.

தேவகுலத்தார் பாடியது

3. நிலத்தினும் பெரிதே வானினு முயர்ந்தன்று
நீரினு மாரள வின்றே சாரற்
கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தே னிழைக்கு நாடனொடு நட்பே.

பதவுரை:— சாரல்—மலைச்சாரலாகிய தாழ்வரையிலே; கரும்கோல் குறிஞ்சி பூ கொண்டு—கரியதாளையுடைய குறிஞ்சிப் பூவின் தேனைக்கொண்டு; பெருந்தேன் இழைக்கும்—வண்டுகள் பெரிய பெரிய தேனிறாலைச் செய்கின்ற; நாடனொடு நட்பு—நாட்டை யுடையவனாகிய தலைவனுக்கு என்னிடத்து உள்ள தாகிய நட்பு; நிலத்தினும் பெரிதே—நிலத்தைக் காட்டிலும் பெரிது; வானினும் உயர்ந்தன்று—தேவலோகத்தினும் உயர்ந்தது; நீரினும் ஆர்அளவின்று—கடலைக் காட்டிலும் அளவிடற் கரிய ஆழத்தை யுடையது.

வான்—ஆகுபெயர். உயர்ந்தன்று—உயர்ந்தது; அளவின்று—அளவை யுடையது. அன், இன்—சாரியைகள்; ஆர்அளவு—அரிய அளவு, கருங்கோல்—வலியதண்டு, கொம்புமாம்; கருமை—வலிமை. பூக்கொண்டு—பூவிலுள்ள தேனைக்கொண்டு; ஏழாம் வேற்றுமைத்தொகை; தேன்—தேனிறால், தேன்கூடு; இழைக்கு நாடு—இடத்தில் நிகழும் வண்டின்தொழில் இடத்தின்மேல் ஏற்றிக்கூறப்பட்டது. நாடனொடு நட்பு—நாடனிடத்துள்ள நட்பு; உருபுமயக்கம். நாடனொடு—ஒடு—இசைநிறை எனவுமாம்.

இறைச்சி:—"சாரல் கருங்கோல் குறிஞ்சிப் பூக்கொண்டு பெருந்தேன் இழைக்கும் நாடன்" என்றதனல், வண்டுகள் அற்பமான குறிஞ்சிப் பூக்களிடமுள்ள தேனைச் சிறிது சிறிதாகப் பன்னாட்கொண்டு முடிவில் பெருந் தேன்கூட்டைச் சமைப்பது போல இப்பொழுது என்னுடன்கூடி இன்புறும் சாரக்கிராகி யான தலைவனுடைய வழி முறையாற் பெருகற் பாலதாகிய சிறுமையை யுடைய நட்பு நாளடைவில் பெருகி முதிர்ந்து இடையறாத இன்பந்துய்க்கும் நன்மணமாய் இறுதியில் முடியும் என்பது திண்ணம்; என்னெனில், என்னிடத்துத் தலைவற்குள்ள அன்பு (நிலத்தினும் பெரிது; வானினுமுயர்ந்தது; கடலினும் அளவிடற்கரிய ஆழமுடையது) அகற்சி, உயரம், ஆழம் இவற்றை முற்ற உடைமையான் என்க.

மேற்கோள் விளக்கம்

1. "நிலத்தினும்......நட்பே"—"இஃது ஈற்றயலடி முச்சீரடியால் வந்தமையால் நேரிசை யாசிரியப்பா.
—(யாப்பு—காரிகை 92 பக்.)—(யாப்பருங்கலம்—பக். 256)

2. "நிலத்தினும்......நட்பே"—"இஃது அன்பில் என்பதற்கு நிறுத்தற்கட் கூறியது" —(தொல்காப்பியம்—கற்பு—643 பக்.)

3. 'நிலத்தினும் பெரிது' — "ஞாலத்தின் மாணப்பெரிது" —குறள்

4. "நிலத்தினும்......நட்பே"—என ஆசிரியப்பா அளவடியான் வந்தது. —(யாப்பருங்கலம் பக்கம் 111)

5. "நிலத்தினும்......நட்பே"
—(தொல்—களவு 145-சூ. இளம்பூ உரை மேற்கோள் பக்கம் 237)

6. "நிலத்தினும்......நட்பே" —"என்றவழி நாட்டிற் கடையாகிய குறிஞ்சிப்பூவுந் தேனும் இறைச்சிப் பொருள் என்று கொள்க" என்பது "இறைச்சிதானே யுரிப்புறத்ததுவே".

—(தொல்காப்பியம்-பொருளியல் 225-சூ. உரைமேற்கோள்)

7. "நிலத்தினும்......நட்பே"—"என்பது பெருமை வியப்பு. என்னை? கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு பெருந்தேன் இழைத்தாற்போல வழிமுறை முறையால் பெருகற் பாலதாகிய நட்பு மற்றவனைக் கண்ணுற்ற ஞான்றே நிலத்தின தகலம் போலவும் ஒருகாலே பெருகிற் றென்றமையின் இது தன்கட் டோன்றிய பெருமை வியப்பு. இது தலைமகன் கருத்தினை நட்பிற்குங் கொள்ளுங்காற் பிறன்கட் டோன்றிய பெருமை வியப்பாம் என்பது கொள்க"—

—(தொல்காப்பியம்—மெய்ப்பாட்டியல் பக். 16)

8. கருமை—வலிமை—"கருங்கைக் கொல்லன்"—(புறம் 21-7)

9. கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு பெருந்தேனிழைக்கும் நாடனொடு நட்பு"—"என்றவழி மைவரை யுலகிற்குக் குறிஞ்சிப்பூ சிறந்ததாகலானும்"

—(தொல்காப்பியம்—அகத்திணை சூ 5. இளம்பூரணம்)

10. "கருங்கோற் குறிஞ்சி":—

"கருங்கோல் குறிஞ்சி யடுக்கம் பாட" —(புறம் 374-8)
"கருங்கோன் குறிஞ்சி மதனில் வான்பூ" —(நற் 268-3)
"பெருங்கோல் குறிஞ்சி" —(நற் 301-1)
"கருங்கோல் குறிஞ்சி" —(அகம் 308-16)
"கருங்காற் குறிஞ்சி" —(மதுரைக்காஞ்சி 300)

11. "கருங்காற் குறிஞ்சி"—கரிய அடியையுடைய குறிஞ்சி மரம்.

"கருங்காற் குறிஞ்சியும் கடிநாள் வேங்கையும்"
—(பெருங்கதை 1-50-26)

மெய்ப்பாடு—பெருமைபற்றிய வியப்பு என்னை?

"புதுமை பெருமை சிறுமை ஆக்கமொடு
மதிமை சாலா மருட்கை நான்கே"—(தொல்-மெய்ப். 7)

என்பாராகலின்.

பயன்:—இயற்பட மொழிதல்.

நெய்தல்

பிரிவிடை ஆற்றாளெனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி யுரைத்தது. அதாவது; தலைமகன் பிரிவிடைத் தலைமகள் அப்பிரிவை ஆற்றாள் என்று கவன்ற தோழிக்குத் தலைமகள் தனது ஆற்றாமை தோன்றக் கூறியது.

காமஞ்சேர் குளத்தார் பாடியது

4. நோமென் னெஞ்சே நோமென் னெஞ்சே
இமைதீப் பன்ன கண்ணீர் தாங்கி
அமைதற் கமைந்தநங் காதலர்
அமைவில ராகுத னோமென் னெஞ்சே.

பதவுரை:—என்நெஞ்சுநோம்—எனது உள்ளம் வருந்தும், என் நெஞ்சுநோம்—எனது உள்ளம் வருந்தும்; இமை தீப்பு அன்ன கண்ணீர் தாங்கி—(முன் என்னிடத்து அன்பு பொருந்தியிருந்த காதலர் இப்பொழுது பிரிதலால்) இமை தீய்ப்பதை ஒப்ப வெப்பம்மிகுந்த கண்ணீரை மிகத் தாங்கி, அமைதற்கு அமைந்த நம் காதலர்—இங்கு அன்போடு பொருந்தி இருத்தற்குத் தகுந்த நம் தலைவர்; அமைவிலர் ஆகுதல்—நான் வருந்தும்படி அன்புபொருந்தியிராததைக் குறித்து; என் நெஞ்சு நோம்—எனது உள்ளம் வருந்தும்.

நோகும் — நோம் — இடைக்குறை. பிரிதலைக் குறித்து இரங்கல் ஆதலின் நெய்தற்றிணை. இமைதீப்பன்ன — இமை தீய்ப்பன்ன—பிரதிபேதம்.

1. "இமைதீப்பன்ன கண்ணீர் தாங்கி"—
"உண் கண், நீரொடு" —(குறுந்-38)
2. "நோமென் னெஞ்சே...நோமென் னெஞ்சே"—
"முனிவு மெய்ந்நிறுத்தற்கு மேற்கோள்"
—(தொல்-களவு இளம்பூ-பக். 179)
3. "நோமென் னெஞ்சே...............நோமென் னெஞ்சே
....
..................அமைவிலராகுதல் நோமென் னெஞ்சே" என மும்முறை கூறினுள் ஆற்றாமை தோன்ற. இலக்கணமின்மை நோக்கி இதற்குமேல் சொற்றாளில்லை.

'தாங்கி' என்பது கண்ணீரின் மிகுதியைக் காட்டிற்று. 'காதலர்'—காதலியார் எனப்பொருள்தருதலின் குறிப்பு மொழி.

மெய்ப்பாடு:-தன்னிடம்கண்ட அசைவுபற்றிய அழுகை. என்னை?
'இளிவே யிழவே அசைவே வறுமைஎன
விளிவில் கொள்கை யழுகை நான்கே" —(தொல். மெய்ப் 5.)
என்பாராகலின்

பயன்:—ஆற்றாமை அறிவித்தல். அதுவும் ஆற்றுதலைப் பயக்கும். என்னை? உள்ள வருத்தம் உரைக்கக் குறையுமாதலின்.

அறிவியற் பகுதி - Science

உளநூல் (Psychology)

[திரு. மா. பாலசுப்பிரமணியம், எம். ஏ.]

உட்பாட்டியல்

(சிலம்பு கஉ—பரல் கஉ—இருஙு-ம் பக்கத் தொடர்ச்சி)

புணர்ச்சிச் சார்புக் கூட்டு நிலைமை (The Sex-Complex)

புணர்ச்சிச் சார்புக் கூட்டு நிலைமை மூன்று சார்புகளால் ஆக்கப்பட்டது. அவை: 1. உடல் தொடர்பு விழைவு, 2. உள்ளத்தொடர்பு விழைவு, 3. புணர்ச்சிப் பயன் விழைவு என்பன. தலைப்பட்ட புணர்ச்சிச் சார்புக் கூட்டு நிலைமையில் இவை மூன்றும் முழுதும் இயங்கி நிற்கும். சில நிலைமைகளில் உடல் தொடர்பு விழைவின்றி உள்ளத் தொடர்பு விழைவு ஒன்றே இயங்கும். இதனை, ஆங்கிலத்தில் ப்ளேடானிக் ப்ரேண்ட்ஷிப் (Platonic Friendship) என்பர். ஒரு மனைவி பிறனொருவனை விரும்புகின்றாள்; ஆனால் அவனுடன் உடற் புணர்ச்சிகொள்ள விரும்பவில்லை, தன் கணவனிடத்து உடற் புணர்ச்சியின்பம் பெறுகின்றாளாதலின். இந்நிலைமை ப்ளேடானிக் ப்ரேண்ட்ஷிப் என்பதன் சிறந்த எடுத்துக் காட்டாம்.

புணர்ச்சிச் சார்புக் கூட்டு நிலைமை, பெண்பாலாரிடத்து, காமக் காலம் தொடங்கி குழவி கருவினுள் முதிருங்காலம் வரை நீடித்து நிற்கும். ஆண்பாலாரிடத்து இது மிகச் சிறிய காலமே நிற்கும்.

எந்தக் கணவன் மனைவியருடைய உடல்நிலையிசைவும் உள்ளநிலையிசைவும் ஒத்திருக்கின்றனவோ, அவர்களுடைய வாழ்க்கை சிறந்து விளங்கும்.

இனி, புணர்ச்சிச் சார்புக் கூட்டு நிலைமையின் சில வியத்தக்க உண்மைகளை ஆராய்வோம்.

1. ஒருவன் தன் மனைவி மக்கள்பால் ஆழ்ந்த அன்பினனாகவே யிருப்பன். இருப்பினும், காமக் கிழத்தியருடன் கூடிவாழவும் விழைவன். காமக்கிழத்தியர்பால் அவன் கொண்டுள்ள

அன்பு, மனைவி மக்கள்பால் அவன் கொண்டுள்ள அன்பினெடு முரண்படாது. இவ்வுள்ள வியல்பு பெண்பாலார்பால் மிகுதியாகக் காணப்படுவதில்லை.

2. சிலர்க்குப் புணர்ச்சி விழைவு மிகைப்பட்ட அளவில் எழுவதில்லை. எனினும் அவர்கள் தம் மனைவியரை விடுத்து, பழகியறியா புறப்பெண்டிரிடம் கூடியொழுக விழைகின்றனர். நெருங்கிப்பழகிய மனைவியர்பால் அவர்கள் பெறும் புணர்ச்சி இன்பம் பழகியறியாப் புறப்பெண்டிர் உறவால் பெறும் இன்பத்திற்கு மிகவும் குறைபட்டிருத்தலின், அவர்கள் பின்னவரின் புணர்ச்சிப்புதுஇன்பத்தையே விழைகின்றனர். எனினும் அன்னவர் தம் மனைவியரைப் பிரிந்து செல்ல ஒருப்படுவாரல்லர்.

3. ஒரு மனைவி தன் கணவனிடத்தே உள்ளன்பு கொண்டிலள் எனினும் அவனுடன் கூடியே வாழ்வாள். தற்கால மனைவியருள் பலர் இந்நிலையில் இருக்கின்றனர்.

4. சில மனைவியர் கட்டழியா இளமையினராக விருப்பினும், தம்முடைய மக்கள்பால் கொண்ட அன்பால், தம் கணவர் தம்மால் விரும்பப்படாதவ ரெனினும், அவர்களைப் பிரிந்து செல்ல உடன்படுவதில்லை.

மேற் குறிப்பிட்ட நான்கு உண்மைகளால் நமக்குப் புலனைவதொன்றுண்டு. அது புணர்ச்சிச் சார்புக்கூட்டு நிலைமையின் பல திறப்பட்ட தன்மையேயாம். புணர்ச்சி விழைவு ஒருவனுக்காதல் ஒருத்திக்காதல் மிக்கெழினும் பிறசார்புகளால் அது அடங்கிவிடும் என்பதும் ஈண்டு உணர்தற்பாற்று.

இனி, மேலும் சில உண்மைகளை ஆராய்வோம்.

1. காம ஆற்றலும் காம இச்சையும் மிகுதியிற் கொண்டவர்கள் வேறுதுறைகளில் தம் உளவன்மையைச் செலுத்துவராயின் அவ்வாற்றலால் ஆம் உடல் துன்பத்தையும், அவ்விச்சையாலாம் உள்ளத் துன்பத்தையும் நுகராதொழிவர். எனினும் இது பலர்க்கும் இயல்வதன்று. காமஇச்சையும் காமவன்மையும் கழியப்பெறாது நிறைவுற்று நிற்பவர் அவைகளால், பகற்கனவு, மனமாற்றம் முதலிய நிலைகளில் உழன்று துன்புறுவர்.

2. ஆண்பாலாருள் சிலர் தம் வாழ்க்கையில் எவ்வகையாலும் காமவிழைவின் எழுச்சி யின்றியே வாழ்கின்றனர். அற்றே, பெண்பாலாருள் சிலரும் தம் வாழ்க்கையில் எவ்வகைப்பட்ட காமவிழைவும் எழுதலின்றி வாழ்கின்றனர். இஃது இவர்க்கு இயல்வது, காமவிழைவினையும் காமவன்மையினையும்

அடக்கி வேறு துறைகளில் செலுத்தும் விழைவாலும் வன்மையாலுமேயாம். அன்றியும், 'கசடறக்கற்று' உடலின் தன்மை நுணுக்கங்களைத் தெரிந்து, உளவியல்பினையும் செயல்களையும் நன்கு அறிந்து, புலனடக்கம், கரணவடக்கம் முதலிய சீரிய பழக்கங்களை மேற்கொண்டு நிற்பார்க்குப் புணர்ச்சிச் சார்பின் உட்பாடுகளும், புணர்ச்சிச் சார்புக்கூட்டு நிலைமையும் தோன்றுவனவாகா.

3. சில வாலிபர்கள் தம் தோழர்களைக் கட்டியணைத்து முத்தமிடுவதும், சில பருவமங்கையர் தம் தோழிகளைக் கட்டியணைத்து முத்தமிடுவதும், இந்நாள், காணப்படுகின்றன. இவை புணர்ச்சிச் சார்புக்கூட்டு நிலைமையின்பாற்பட்ட தவறான ஒழுக்கங்களேயாம். ஆங்கிலத்தில் இவைகளை ஹோமோ ஸெக்ஷுவல் மேனிபெஸ்டேஷன்ஸ் (Homosexual Manifestations) என்பர். தமிழ்மொழியில் இவைகளை ஓரினப்புணர்ச்சி விழைவெழுச்சிகள் எனக்கூறலாம். சில உளநூற் புலவர், ஒவ்வொருவருடைய உள்ளத்தும் ஓரினப்புணர்ச்சிச் சார்புப்பகுதி (Homosexual Component) உண்டு எனக்கூறுகின்றனர். இப்பகுதி, குழவிப்பருவப் புணர்ச்சிவிழைவின் (Sexuatity of the childhood) பின்னிலையாம் (Remnant) எனவும் அவர் கொள்ளுகின்றனர்.

4. சில ஆடவர்கள் குழவிகளை மார்பில் அணைத்து உச்சி மோந்து முத்தமிட விழைகின்றனர். அற்றே சில மடந்தையரும் விழைகின்றனர். உளநூற்புலவர் சிலர் இதனைப் புணர்ச்சிச் சார்பின் உட்பாடுகளில் ஒன்றாகக்கொள்வர். தம் வெற்றுடல் மேல் தம் குழவிகளின் வெற்றுடல் (ஆடையில்லாமல்) பதிய அணைத்துத்தழுவி முத்தமிட விழைகின்றனர் சிலர். இஃதும் குற்றமற்ற புணர்ச்சிச் சார்பின் உட்பாடுகளில் ஒன்றும் எனக் கொள்வர் சில உளநூற்புலவர். "மக்கள் மெய்தீண்டல் உடற்கின்பம்" என்னும் வள்ளுவர் கொள்கை ஈண்டு உன்னற்பாற்று. வள்ளுவர் மொழிந்தது மக்களிடை நிகழும் ஒரு குற்றமற்ற வியல்பினை.

புணர்ச்சிச் சார்பின் உட்பாடுகளையும் புணர்ச்சிச் சார்புக்கூட்டு நிலைமைகளையும் விளக்க மேலும் பல எடுத்துக்காட்டுக்களை மொழியலாம். விரிப்பின் பெருகும் என விடுத்தாம்.

மொழிபெயர்ப்பு-Translation

[MR. T .B. KRISHNASWAMY MUDALIAR, M. A. B. L., L. T.]

மதுரைக் கண்ணங்கூத்தனர் இயற்றிய

கார் நாற்பது

சிறப்புப்பாயிரம்

முல்லைக் கொடிமகிழ மொய்குழலா ருண்மகிழ
மெல்லப் புனல்பொழியு மின்னெழிற்கார்—தொல்லைநூல்
வல்லா ருளமகிழத் தீந்தமிழை வார்க்குமே
சொல்லாய்ந்த கூத்தர்கார் சூழ்ந்து.

IN RAINY SEASON: FORTY (STANZAS)

BY

KANNAN KUTHTHANAR

Being forty poems dealing with the emotions of lovers parted and expecting to meet each other with the fall of rains and the cessation of wars.

(தோழி தலைமகட்குப் பருவங் காட்டி வற்புறுத்தது)

பொருகடல் வண்ணன் புனைமார்பிற் றார்போல்
திருவில் விலங்கூன்றித் தீம்பெய றாழ
வருது மெனமொழிந்தார் வாரார்கொல் வானங்
கருவிருந் தாலிக்கும் போழ்து. (க)

THE MAID SPEAKS TO HER MISTRESS.

" When like the garland on the chest of Vishnu, the Lord coloured as the dashing waves of ocean, lies the Rainbow in the sky and the sweet showers fall, I shall come" so said our lord. Now that the skies are dark and pour down rain, will he not come? (1)

கடுங்கதிர் நல்கூரக் கார்செல்வ மெய்த
நெடுங்காடு நேர்சினை யீனக்—கொடுங்குழாய்
இன்னே வருவர் நமரென் றெழில்வான
மின்னு மவர்தூ துரைத்து. (௨)

Sunshine growing less, the showers growing plentiful, and the length of the forest yielding its wealth of flowers, O wearer of the bent ear-ornament, the beautiful sky lightens with the message of his instant coming! (2)

வரிநிறப் பாதிரி வாட வளிபோழ்ந்
தயிர்மணற் றண்புறவி னாலி—புரள
உருமிடி வான மிழிய வெழுமே
நெருந லொருத்தி திறத்து. (௩)

The striped flower of the Padri is fading; hailstones are rolling on the soft sand in the cool forest cut through by storms; and the thunder-cloud is pouring its showers since yesterday to pain one poor solitary woman. (3)

ஆடு மகளிரின் மஞ்ஞை யணிகொளக்
காடுங் கடுக்கை கவின்பெறப் பூத்தன
பாடுவண் டூதும் பருவம் பணைத்தோளி
வாடும் பசலை மருந்து. (௪)

The peacocks are lovely as women that dance; the forests are aglow with the Cassia bloom; the singing beetles blow music through the flowers; O thou, with shoulders like the bamboo, this season shall bring balm to thy love-longing. (4)

இகழுநர் சொல்லஞ்சிச் சென்றார் வருதல்
பகழிபோ லுண்கண்ணாய் பொய்யன்மை யீண்டைப்
பவழஞ் சிதறி யவைபோலக் கோபந்
தவழுந் தகைய புறவு. (௫)

O thou, with arrow-like sharp eyes, that have fed on collyrium, here are forests with scarlet insects like

corals scattered. Sure he will return now who fearing derision fared forth to seek a fortune. (5)

தொடியிட வாற்று தொலேந்ததோ ணேக்கி
வடுவிடைப் போழ்ந்தகன்ற கண்ணுய் வருந்தல்
கடிதிடி வான முரறு நெடுவிடைச்
சென்ருரை நீடன்மி னென்று. (சா)

The frightful thunder-cloud roars to those on a long journey "Tarry no longer"; therefore, Oh thou, with large eyes, like the split tender mango, grieve not, looking at my arms grown too thin even to wear golden bracelets. (6)

நச்சியார்க் கீதலு நண்ணார்த் தெறுதலுந்
தற்செய்வான் சென்ருர்த் தரூஉந் தளரியலாய்
பொச்சாப் பிலாத புகழ்வேள்வித் தீப்போல
எச்சாரு மின்னு மழை. (எ)

Like the ever-tended, never forgotten sacrificial fire, the lightning flashes everywhere and rain falls; therefore O weary one, he will soon come back to thee who went forth to seek a fortune to help friends, to fight enemies and to maintain his self-respect. (7)

மண்ணியன் ஞாலத்து மன்னும் புகழ்வேண்டிப்
பெண்ணிய னல்லாய் பிரிந்தார் வரல்கூறும்
கண்ணிய லஞ்சனந் தோய்ந்தபோற் காயாவும்
நுண்ணரும் பூழ்த்த புறவு. (அ)

O most feminine of women, the collyrium-dark flowers of the *Kaya* filling the forests, declare the return of him who left you, seeking a fortune to establish his fame on earth. (8)

கருவிளே கண்மலர்போற் பூத்தன கார்க்கேற்
றெரிவனப் புற்றன தோன்றி—வரிவளே
முன்கை யிறப்பத் துறந்தார் வரல்கூறும்
இன்சொற் பலவு முரைத்து. (கூ)

The eye-like flowers of the black *vilai* and the red flame-like flowers of the *thonri* have blossomed, indicating with many sweet words the return of him, whose departure made the striped bangles slip down the slender forearm. (9)

புணர்தரு செல்வந் தருபாக்குச் சென்ருர்
ஆனேற் ருெருத்த லதனே டெதிர்செறுப்பக்
கான்யாற் ருெலியிற் கடுமான்றே ரென்ருேழி
மேனி தளிர்ப்ப வரும். (ഥ)

Oh my companion, taking the thunder to be the growl of the bull of heaven, the sturdy buffalo enraged opposes itself to it; The car of the lord drawn by fast-running steeds comes sounding like a forest-river to make thy body regain its lustre. (10)

மதிப்புரை

தமிழ்நாடும் நம்மாழ்வாரும் :—விலை அணு எட்டு. கிடைக்குமிடம் முருகவேள் புத்தகசாலை நெ. 12, கணபதி முதலி தெரு. இராயப்பேட்டை, சென்னை.

அழகிய இச்சிறு நூல் திருவாளர். திரு. வி. கலியாணசுந்தர முதலியார் எழுதியச்சிட்ட ஆராய்ச்சிக் கட்டுரையாகும். இதன் இரண்டாம் பதிப்புப் பிரதி எம் பார்வைக்கு வந்துளது. எளிய இனிய கொழுவிய தமிழில் கட்டுரை யெழுதுவதில் திரு. முதலியாரவர்கள் மிகவுஞ் சிறந்தவர் என்பதைத் தமிழ்நாடு நன்கறியும். வைணவ ஆழ்வார்களிற் றலையாய ஒருவர் பெருமையைத் தீர்ந்த சைவராகிய திரு. முதலியாரவர்கள் எட்டுணையும் வெறுப்பின்றிப் புகழ்ந்துள்ளமையைத் தமிழ் மக்கள் இந்நூற்கண் கண்டு மகிழ்வார்கள்.

அபிமன்யு :—விலை அணு எட்டு. வெங்களத்தூர் திரு. சாமிநாத சர்மா இயற்றியது. கிடைக்குமிடம் வசந்தாலயம், மாம்பலம் சென்னை.

பழமையிற் புதுமை பொலிய வேண்டும் என்ற அவாவுடன் பண்டைய காவியமாகிய பாரதத்தின் ஒரு பகுதியைப் புதிய ஆடையணிவித்து நாடக உருவில், இனிய தமிழிற் படிப்போர்க்குப் புத்துணர்ச்சி பிறக்குமாறு சுவையுடன் நூலாசிரியர் எழுதியுள்ளது போற்றத் தகுந்ததாம். இந்நாடகம் நடிப்பதற்கு மிகவும் ஏற்ற தொன்றாகும்.

கவின்கலைப் பகுதி - Fine arts

மகேந்திரவர்மன் வடமொழியில் இயற்றிய

மத்த விலாசம்

களிக்கூத்து

[திரு. தி. கி. கு. நாராயணசாமி நாயுடு அவர்கள்]

(முன் ௫௯௨-ம் பக்கத் தொடர்ச்சி)

நான்காம் களம்

(பித்தன் வருகிறான்)

பித்தன்:—அதோ! அதோ! அந்தக் கொடிய நாய்! வதக்கின மாமிசம் நிறைந்த ஒரு மண்டை ஓட்டை, எங்கேயோ பொறுக்கிக் கொண்டா ஓடுகிறாய்? அதோ பார்! அந்த வோட்டைக் கீழே போட்டுவிட்டு அந்நாய் என்னைத் தின்பதற்காக ஓடி வருகிறது. (சுற்றுமுற்றும் பார்க்கிறான்) இந்தக் கல்லால் அதன் பல்லை உடைக்கிறேன் பார். ஆஹா! ஓட்டைப் போட்டு விட்டு ஓடுகிறாயா பைத்தியங்கொள்ளி நாயே! என் தைரியத்தைப் பார்த்து உனக்கு என்மேல் கோபமா? காட்டுப் பன்றியின் மேல் ஏறிகிட்டு சமுத்திரம் என்ன செஞ்சிதா, மானத்து மேலே குதிச்சி ராவணனை அடிச்சி, தள்ளி, சகரமகன் திமிங்கிலத்தைப் பிடிச்சிகிட்டு ஓடியாந்துடுச்சா? ஓ! ஓகோ! ஏ! எருக்கஞ் செடி! நீ என்ன சொல்றே? பொய், பொயின்ணு? இந்த உலக்கை கையும் காலு மிருக்கிற தவளை தான் எனக்கு சாக்ஷி. மூன்று லோகத்திலும் என் வல்லமை தெரிஞ்சிருக்கா? எனக்கு சாக்ஷியும் வேணுமா?—அதான் நான் செய்யப் போறேன். அதோ அந்த நாய் தின்னுட்டு மீதி வைச்சிருக்கிற கறி துண்டை நான் திங்க போரேன். (அதைத்தின்று பயந்தவன் போல் கூச்சலிடுகிறான்) ஐயோ! ஐயோ! நான் செத்தேன் 'அழுது செத்தேன்' (அழுது கொண்டே சுற்றுமுற்றும் பார்க்கிறான்) நீ யார் என்னை அடிக்கிறே? துஷ்ட பசங்களா! நான் யார் தெரியுமா? கடோத்கஜன். வீமசேனனுக்கு மருமகன் போல நான் ஒருத்தனுக்கு மருமகனில்லையா? கேளுங்க! ஒரு ஆயிரம் பிசாசு கையிலே எச்ச துப்பிகிட்டு என் வயிற்றிலே சவாரி செய்து கிட்டு ஆயிரம் பாம்பும் புலியும் என் வாயிலிருந்து நான்

றுப்புறேன். ஐயோ! என்ன தெந்தரவு? பொறுத்துகணும்; பொறுத்துகணும். சிறுகனவான்களே! இந்த கறித்துண்டுக் காக என்னைத் தொந்தரவு செய்யாதிங்க. (நீதி மன்றத்திற்குப் போகிறவர்கள் அவ்வழி வருகிறார்கள். அவர்களைக் கண்டு) அதோ! என் ஐயன்! சூரநந்தி யிருக்கிறான். நான் அவன் கிட்ட போறேன் (ஓடுகிறான்.)

பாசு:—அதோ பாருங்கள்! அந்த பித்தன் இப்பக்கம் ஓடி வருகிறான். அதோ வந்து விட்டான். கந்தலையுங் கிழிசலையும் கட்டிக் கொண்டு தலை பரட்டையா சாம்பலில் புரண்டு உடலில் புழுதி படர, எருக்கமாலை கழுத்திற் புரள, காக்கைக் கூட்டம் புடை சூழ எச்சிலைப் பொறுக்கி யுண்டு குப்பமேடே நடந்து வந்தது போல் வருகிறான் பாருங்கள்.

பித்த:—நான் அவர்கிட்ட போறேன். (பாசுபதனை சமீபித்து) ஐயா! இந்த ஓட்டை வாங்கிகிட்டு பொறுத்தருளண்ணு. இதை நான் ஒரு பறையனோட கண்ணியமான நாய்கிட்ட யிருந்து பிடுங்கிட்டு வந்தேன்.

பாசு:—(பக்கத்திலிருப்போரை ஒரு பார்வை பார்த்து) இதைத் தக்க மனிதரைப் பார்த்து கொடு.

பித்த:—உயர்குல பிராமணனே! இதை வாங்கிகணு.

கபா:—இந்தப் பாசுபதன் தான் இதைப் பெற்றுக் கொள்ளத் தகுந்தவன்.

பித்த:—(காபலியை அணுகிக் கபாலத்தைத் தரையில் வைத்து அவனை வலம் வந்து அவன் காலில் விழுந்து) பெரிய சாமி! இதை வாங்கிகணு. உங்களைக் கும்பிடுகிறேன்.

கபா:—நம் கபாலம்.

தேவ:—ஆமாம்.

கபா:—நம் சிவனருளால் நான் மீண்டும் கபாலியானேன் (அதை எடுக்கப் போகிறான்.)

பித்த:—கூத்தியார் மகனே! விஷத்தைச் சாப்பிடேன்! (கபாலத்தைப் பிடுங்கிக்கொண்டு போகிறான்.)

கபா:—(அவனைப் பின் தொடர்ந்து) இந்த காலதூதன் என் உயிரைப் பிடித்துக்கொண்டு போகிறான்! ஐயா! பெரியோரே! துணை செய்யவேண்டும்!

பாசு:—நாங்கள் உமக்கு உதவி செய்வோம் (பித்தன் வழியை எல்லோரும் மறைக்கிறார்கள்)

கபா:—ஏ! நில்! நில்!

பித்த:—ஏன் என் வழியை மறைக்குறுங்கோ?

கபா:—என் கபாலத்தைக் கொடுத்து விட்டுப்போ.

பித்த:—அடே மண்டு! கபாலமா! இது பொன் கிண்ண மல்லவா?

கபா:—அது பொன் கிண்ணமென்றால் அதைச் செய்தது யார்?

பித்த:—ஐயா! சொல்றேன். தட்டான் செய்தது. அந்த பொன்போல துணிகட்டிகிட்டு இருக்கிற மனுஷன்தான் இந்தப் பொன் கிண்ணத்தைச் செய்தது.

புத்த:—என்ன சொல்கிறாய்?

பித்த:—இது ஒரு பொன் கிண்ணம்.

புத்த:—இவன் பித்தனா? இவனுக்கும் பயித்தியமா?

பித்த:—பயித்தியம்! பயித்தியம்! என்று சும்மா சும்மா என் காதில் கேக்குது. இதை எடுத்துக்கிட்டு பயித்திக்காரனைக் காட்டு (கபாலியிடம் கபாலத்தைத் தருகிறான்.)

கபா:—(அதை எடுத்துக்கொண்டு) அதா! அந்த மதிலின் பின்னால் அவன் ஒளித்துக் கொண்டு இருக்கின்றான் ஓடு.

பித்த:—நான் உங்களுக்கு நமஸ்காரம். (போய்விடுகிறான்.)

புத்த:—என்ன அதிசயம்! என் எதிரியின் அதிர்ஷ்டத் திற்கு நான் பெரிதும் ஆனந்திக்கிறேன்.

கபா:—(கபாலத்தை மார்போடு இறுகத் தழுவி) இந் நாளாக துறவறத்தினின்றும் எட்டுணையும் பிசகாது வாழ்ந்து வந் தேன். என் இறைவன் சிவனுக்கே தொண்டு செய்தேன். ஏ! என் அருமைக் கபாலமே, உன்னைக் கண்ட மாத்திரத்தில் என் துறவும் பறந்தது; என் இறைவனும் சிவனும் மறைந்தான். எல்லாம் என் ஆனந்தத்திற்கே.

சிவனடி தொண்டே யாற்றிச் சிதைவிலா துறவு பூண்டேன்
தவநெறி உறைந்தேன் நின்றன் தனை எதிர்கண்டகாலே
அவமதாய் மறைந்த தந்தோ! அவையெலாம் கணத்தேஎன்னில்
கவர்திறக்கபாலமே! நின்றனக்கு இணைகழறலாமோ?

தேவ:—ஐயா! உங்களையும் உங்க கையிலே யிருக்கிற கபாலத்தையும் பாத்தா அந்திவானத்திலே சந்திரன் கிளம்பினது போலிருக்கு. காஷியைக் கண்டு என் கண் குளிருது.

பாசு:—ஐயா! உங்கள் அதிர்ஷ்டத்தைப் பார்க்க எனக்கு மெத்த திருப்தி.

கபா:—ஐயா! திண்ணமாக இந்தச் சந்தோஷம் உங்களையும் சார்ந்ததே.

பாசு:—தனக்குள் 'நல்லவன் எதற்கும் அஞ்சவேண்டுவ தில்லை' என்பது உண்மைதான். அதற்கு இந்த புத்த பிக்ஷு இன்று இப்புலிவாயினின்று மீண்டதே தகுந்த சான்று. (வெளிப் படையாக) இப்பொழுது என் நண்பனே! ஆனந்தத்தைக் கண்டு ஆனந்தித்தேன். இனிமேல் நம் இறைவனை சுடலை யாடியின் தூமகாலத்தை எதிர் பார்ப்போம். நீங்கள் இருவரும் பகை ஒழிந்து கிராதனனை சிவனும் அருச்சுனனும்போல் தோழமை கொண்டிருப்பீர்களாக. (பாசுபதன் போய்விடுகிறுன்)

கபா:—நாகசேனரே! இப்படி வாரும். நான் உமக்கேதும் பிழை செய்திருந்தால் மன்னிக்கவேண்டும்.

புத்த:—இதற்கு வேண்டுகோள் ஏதற்கு? என்னல் உமக்கு ஆகவேண்டுவது ஏதாவது இருப்பின் சொல்லும்.

கபா:—நீர் என்னை மன்னிப்பதைவிட எனக்கு வேறு என்ன வேண்டும்?

புத்த:—நான் போய்வருகிறேன்.

கபா:—போய்வாருங்கள் ஐயா. மறுபடியும் தங்களைச் சந்திக்கவேண்டும்.

புத்த:—அப்படியே. (போகிறுன்)

கபா:—என் கண்ணே! தேவசோமா! நாம் போவோம் வா

பரதவாக்கியம்

மன்னுயிர் செழித்திட, மாமறை வேள்வியின்
துன்னிய ஆகுதி சூழ்ந் தெழுந்திடுக!
ஆன்பால் பெருகுக! அந்தணர் ஓதுக!
வான்பால் மதிகதிர் வழக்குறு மளவும்
நீதியும் கடமையும் நிலவுவ தாகுக!
உலகெலாம் துன்ப மொருவி யதாகி,
இலகிய வின்பம் இசையொடு மெய்த
சந்துரு மல்லன் தனியர சாட்சி
நித்தியமாக நிலவுக! அரச
பத்தியும் பெருகிப் பரவுக வினிதே!

முற்றும்

வரலாற்றுப் பகுதி : History & Biography

இத்தாலிய தேயப் பழங்குடிகள்

[பருத்தித்துறை திரு. த. இராமநாத பிள்ளை, B A, (Lond.)]

மேலைத் தேயங்களுள் மத்தித்தரைக்கடற் பக்கங்களிலுள்ள நாடுகளே நாகரிக மடைந்து சிறப்புற்றோங்கியவை என்பது பண்டைய வரலாற்று வல்லோர் யாவருக்கும் ஒப்ப முடிந்த கொள்கை. எகிப்தியர், பினீசியர், யவனர் என்போர் முசிரி, காவிரிப்பூம்பட்டினம், கொற்கை முதலிய துறைகளில் இறங்கித் தமிழ் நாட்டாரோடு வாணிகஞ் செய்து தமிழருடைய நாகரிகத்தையும், கல்வி முறைகளையும், தெய்வ வழிபாடுகளையும், பழக்க வழக்கங்களையும் மேலைத் தேயத்திற்குக் கொண்டுசென்றனர் என்பதை மேற்கூறியோரின் மொழிகளில் தமிழ்ச் சொற்கள் வழங்குகின்றமையாலும், தமிழ் நூற்கள் அவர்களைப் பற்றிக் கூறுகின்றமையாலும் கருதலாம். இனி எகிப்தியர், பினீசியர், யவனர், எற்றாரியர், காதாக்கினியர் முதலியோரின் பண்டை நாகரிகங்களின் பயனைத் துய்த்தற்கு எழுந்த மக்கட் கூட்டத்தினர் உரோமரென வரலாற்றாசிரியர்கள் கூறுநிற்கின்றனர். இத்தாலியா தேயத்தைக் காடுகெடுத்து நாடாக்கிக் குளந் தொட்டு வளம் பெருக்கியோர் உரோமரே.

உரோமருடைய நாணயங்கள் தமிழ்நாட்டுப் பழைய ஊர்களில் அகழ்ந்து எடுக்கப்படுகின்றமையால் உரோமர் பண்டைக் காலத்தில் தமிழரொடு வணிகஞ் செய்தனர் என்பதற்கு ஐயமில்லை. உரோம வரலாற்றாசிரியருள் ஒருவராகிய பிளினி (Pliny) நிமைத் தேயத்துப் பொருள்களை உரோமர் வாங்குவதனால் ஆண்டுதோறும் பல கோடி பொன் செலவாகின்றதெனக் கவலைப்பட்டனர். இது நிற்க, உரோமர் தம் வலியால் பிறதேயத்தாரை அடக்கி அவர்களின் நாகரிகத்தைத் தழுவியும், தம் நாகரிகத்தைப் பரப்பியும் ஆண்டனர். ஆங்கிலேயர் உரோமரது நாகரிகத்தையும், அரசியல் முறைகளையும் கையாளுகின்றனர். ஆகையால் உரோமர் வரலாற்றைத் தமிழர் கற்றல் பயனுடைத்தாகும்.

மத்தித்தரைக் கடலைத் தெற்கெல்லையாக உடைய மூன்று ஐரோப்பிய குடா நாடுகளுள் நடுவணது இத்தாலியாக் குடா நாடாகலான் உரோமர் யவன குடா நாட்டாரோடும் மற்றைய குடா நாட்டாரோடும் இலகுவாய்ப் பண்டமாற்றுச் செய்து அவர்களுடைய பயிற்சி நூல்களையும், ஆராய்ச்சி நூல்களையும் கற்றுத் தமது நாகரிகத்தை வளர்த்தனர். இத்தாலியா தேயத்திற்கு மேற்

கெல்லையாகிய கடலை ஹைதிரினியன்கட லென்றும், கிழக்கெல்லை யாகிய கடலை அத்திரியாட்டிக் கடலென்றும் உரோமர் வழங்கினர். குடக்கும், குணக்கும், தெற்கும் கடலை எல்லையாகவும், வடக்கில் அல்ப்பைன் மலைத்தொடரை எல்லையாகவும் உள்ள தேயம் இத்தாலியாக் குடா நாடெனப்படும். இத்தாலிய தேசத்தின் கிழ் கரை மலையும் மலை சார்ந்த இடமுமாகலின் குறிஞ்சி நாடாயிற்று. அம் மலைகளை அப்பினைன் மலைத்தொட ரெனக் கூறுப. அப்பினைன் மலைச் சிமையங்கள் ஏழாயிரம் அடி உயரமானவை. அம் மலைக்கு மேற்குள்ள நாடு சமபூமி. அச் சம பூமியில் கம்பேனியா, எற்றூரியா என்னும் மருத நிலங்களையுடைய நாடுகள் பல வுள. வடக்கின்கண்ணுள்ள அல்ப்பைன் மலை இத்தாலியாவிற்கு ஓர் இயற்கை யரணாக இருந்தது. அல்ப்பைனுக்கு மேலைப் ப கத்தினுள்ள தேயம் கல்லிய தேயம். கீழைப் பக்கத்துச் சம பூமி இத்தாலிய கல்லிய நாடென வழங்கப்பட்டது. கீழ்ப் பக்கத்துக் கல்லிய நாடு போநதியைத் தெற்கெல்லையாக உடையது. இப் போநதி அல்ப்பைன் மலையில் உற்பத்தியாகி இலம்பாடிச் சம பூமியிற் பாய்ந்து அத்திரியாட்டிக் கடலொடு கலக்கும் சங்கமத் துறையில், உரோமருடைய இராச்சியம் அழிந்தபின்னர் வெனிஸ் நகரம் அமைக்கப் பெற்றது. இவ் வெனிஸ் நகரம் ஒரு குடியரசாகி வியாபாரத்தாற் செல்வமுற்றிருந்து பதினைன்காம் நூற்றுண்டில் ஒட்டொமான் துருக்கரை இத்தாலியா தேயத்துட் புகவிடாது தடுத்தது. வெனிஸ் வரலாற்றைச் செப்புதல் பிறிதொன்று மொழிதலாகும்.

அல்ப்பைன் கணவாய் வழி உட்புகுந்த ஆரியர் மலைப் பாகங்களில் வசித்தனர். எற்றூரிய சம பூமியில் வாழ்ந்த மக்கள் நாகரிமுடைய நன்மக்களாயினர். எற்றூரியர் கமத் தொழிலை விருத்தி செய்து, நாடு நகரங்களை அமைத்துச் சிறப்புற்றூங்கினராக, வடவித்தாலியாவில் நுழைந்த ஆரியர் அலைந்து திரியும் இடையராய்த் தம் பட்டிகளையே மேய்த்தனர். ஆரியர் கி. மு. 2000 ஆண்டுகட்குமுன் இத்தாலியா நாடு புக்கனரென ஆசிரியர்கள் கூறுப. ஆரியர்கள் வட இத்தாலியாக் குகைகளினும் குன்றுகளினும் வசித்த புலையரை வேற்றுப் புலங்களுக்குக் கலைத்தனர். அப்புலையர் மனிதருடைய ஊனத்தினும் ஒரு மூர்க்கசாதியாரென அறியக்கிடக்கிறது. அப்புலையர் பெலாஸ்கியர் எனப்படுவர். அப்பெலாஸ்கியராற் கலைபட்டோர் தென்னித்தாலியாவில் வசித்தனர். அவர்கள் சிக்கூலியர் எனப் பெயர் பெற்றூர்கள். கி. மு. ஈராயிரம் முதல் கி. மு. 1000-ம் ஈறுன காலத்தில் இத்தாலியா நாட்டிற் குடியேறிய ஆரியர் உம்பிரியரென அழைக்கப்பட்டனர். உம்பிரியருடைய உடை, தோல்; ஆயுதம் கல், கோல் முதலியன; தொழில் நிரைமேய்த்

தல். இக்காலங்களில் அவர்கள் வெண்கலம் இரும்பு முதலியவற்றால் கலங்களும் ஆயுதங்களும் ஆக்க, யவனர் முதலிய கீழைத் தேயத்தாரிடம் பழகினரெனத் தெரிகிறது. உம்பிரியரை எற்றாறியர் நெருக்க, எற்றாரியரை கல்லியர் நெருக்க யாவரும் தென் இத்தாலியாவை நோக்கினர். இந்த எற்றாறியரை ஆரியரோ அல்லரோ எனத் துணியமுடியாமல் இருக்கிறது. எற்றாரியர் தம்மைத் தம் மொழியில் இராசினியர் என வழங்கினர். அவர்கள் சின்னாசியாவிலுள்ள ரிரா (திரா) என்னும் நகரத்தினின்றும் போந்தனர் என்பது பாரம்பரியம். திரா நாட்டினின்றும் வந்தமையால் யவனர் அவர்களைத் திரானியர் என அழைத்தனர் போலும். எற்றாரியர் கமத் தொழில் செய்தும், சமயக் கிரியை நூல்களை ஓதியும், நிமித்த நூல்கள் கற்றும் அரசியலை நடாத்தினர். எற்றாரியருடைய கிரியை நூல்களுக்கும் நிமித்த நூல்களுக்கும் உரோமரும் அமைந்து ஒழுகினர்கள் என நன்கு புலப்படுகின்றது. விழாக்காலங்களில் எற்றாரியர் காட்டிய வாட்போர்க் காட்சிகளை உரோமரும் விழைந்து அக் காட்சிகளில் தாமும் இன்புற்றனர். கி. மு. 500-ம் ஆண்டளவில் எத்திசையும் பகைவர் எழுந்தமையால் எற்றாரியர் வலி குன்றினர். இலத்தினரும், உரோமரும், கல்லியரும், உம்பிரியரும், சம்நிதியரும் பலதிக்காலும் நெருக்க, எற்றாரியருடைய இராச்சியம் நிலைகுலைந்தது.



இத்தாலியா தேயத்துப் பதியெழுவறியாப் பழங்குடிகள் உம்பிரியர், ஒஸ்கோசபேலியர், இலத்தினர் என மூவகுப்பினர். ஒஸ்கோசபேலியருடைய ஒரு கிளை சபினியர். ஒஸ்கர் சனத்தொகை மிகுங்காலத்தில் பிறக்கும் குழந்தைகளையும் குட்டிகளையும் கொல்லுதல் வழக்கம். இருபதாம் ஆண்டெய்திய இளைஞர்களைப் புதிய இல்லங்களைத் தேடும்படி தம் ஊரினின்றும் அகற்று

வர். ஒஸ்கோ சபேலியர் ஆக்குவியர், கேணிக்கியர் மார்சியர் எனப் பல்கினர். சம்நிநியர் உம்பிரிய இனத்தைச் சேர்ந்தவரே. சம்நிநியர் பெருகிக் கம்பேனியா நாடுளைக் கடந்து, தென் னித்தாலியாவில் வதிந்து லுக்கேனியர் எனப்பெயர் பெற்றனர். இனி இலத்தினரும் சபீனியரும் உரோமரும் ஒரு கூட்டத் தினரே.

கி. மு. 800-ம் ஆண்டு யவனர் கிரேக்க நாட்டினின்றும் பெயர்ந்து கம்பேனியா நாட்டில் குடியேறிக் கூமாயிநகரை அமைத்தனர். கி. மு. 743-ல் இரேசிய நகரையும், 710-ல் குரோ ரோனு நகரையும், 600-ல் சிபாரிரிஸ் நகரையும் நிறுவினார்கள் கி. மு. 400-ல கல்லியரும் வடபால் வந்திறங்கி போநதிக் கரை யில் தங்கினார்கள். உரோமர் கி. மு. 753-ம் ஆண்டில் உரோமா புரத்தை அமைத்தனரெனப் பழங்கதைகள் கூறுகின்றன.

புதுக் கவிகள் - Original Poetry

திருஞானசம்பந்தர் நாமாவளி

[திரு மணி. திருநாவுக்கரசு முதலியார் அவர்கள்]

நற்றமிழ் மூன்றிலும் நாவலனே, ஞான மணங்கமழ் பாவலனே.
பால்மண மாறாப் பாலகனே, பாவலர்க் கெல்லாம் மேலவனே.
அருமறைக் கதவை அடைத்தவனே, அருளா ரமுதம் படைத்தவனே.
ஆண்பனை பெண்பனை யாக்கியவா, அவள் துயர் மருகலிற் போக்கியவா.
கன்னியென் றெலும்பைக் கண்டவனே, கபாலியை மயிலையிற் கொண் [டவனே.
சோதியில் உயிர்களைச் சேர்த்தவனே, தூய விழியாற் பார்த்தவனே.
பருவம் மூன்றினிற் பாலுண்டாய், பரமன் அன்பினில் மாலுண்டாய்.
பசுபதி யருளைப் பருகியவா, பாசம் நீங்கியுள் ளுருகியவா.
கனியே யுனக்கிணை கண்டதில்லை கருதி யெவரும் விண்டதில்லை.
உன்னைப் பாடார் ஒளிகூடார், உன்பதஞ் சூடார் வினை வீடார்.
சம்பந்தன் திருவடி எம்பந்தம், வெம்பந்தம் போக்குஞ் சம்பந்தம்.
ஆண்டரு ளெம்மை அற்புதனே, அணிந்தனம் நின்னரும் பொற்பதமே.
செந்தமிழ்த் தேன்மொழி செழுங்காவே, சேர்ந்தோர் மனமென் றும் [அழுங்காவே.
இசைத்தமிழ்க் குயிராம் இலக்கணமே, இயற்றமிழ்க் கிருப்பாம் [புலக்கணமே.
பாடுதும் பாடுதும் பாவையரே, பாலரு வாயனை ஆவியரே.
நவிலுதும் வாரீர் நமரங்காள் ஞானசம் பந்தனே தமரங்காண்.
முத்தமிழ்ப் புலமையின் முதியவனே முதிர்தரு சுவையிற் புதியவனே.
காழியன் புகழிற் களிப்போமே, கலந்திடு பசுபாச மளிப்போமே.



கடைச் சரக்குகளைப் பயன் படுத்தும் முறை

“காசிகன்” எழுதுவது

மிளகு (Pepper)

மிளகு என்றது நல்ல மிளகென்று சொல்லப்படுங் கரி மிளகையேயாம். புது மிளகாகவும் செம்மையானதாகவுமிருப்பவை மருந்துக்குப் பற்பலவகைகளிற் பயன்படும்.

சீதசுரம் பாண்டு சிலேஷ்மங் கிராணி குன்மம்
வாத மருசிபித்த மாமூல - மோதுசந்நி
யாசம பஸ்மார மடன்மேகங் காசமிவை
நாசங் கறிமிளகி னால்.

கோணுகின்ற பக்கவலி குய்யரோகம் வாத
சோணிதங் கழுத்திற்குட் டோன்றுநோய் - காணரிய
காதுநோய் மாதர்குன்மங் காமாலை மந்தமென்றீ
ரேதுநோய் காயிருக்கி லீங்கு.

என்பன பதார்த்த குண சிந்தாமணிச் செய்யுட்கள்.

1. நல்ல மிளகு, பெருங்காயம், அபின் ஆகிய இவற்றில் வகைக்கு 20 கிறெயின் எடுத்து ஒன்றாகச் சேர இடித்துப் பன்னிரண்டு மாத்திரைகளாக உருட்டி வைத்துக்கொண்டு, அரை அல்லது ஒரு மணிநேரத்திற் கொரு முறை காலரா என்ற வாந்திபேதி கண்டவர்களுக்குக் கொடுத்து வந்தால், நோய் தீரும். இது வங்காளத்தில் பயன்படுத்தப்பட்டுப் பலனுள்ளதென வறிந்ததோர் முறையாகும். இம்மாத்திரையை யுண்ணும் நோயாளி வேண்டிய அளவிற்குத் தண்ணீர் அல்லது கஞ்சி நீரைக் குடிக்கலாம். இந்த அளவு, வயதுவந்த ஆடவர்கள் மகளிர்க்காகும். இதிற் பாதியளவே ஏழு முதல் பதினான்கு வயது வரையுள்ள சிறுவர்களுக்குக் கொடுக்க வேண்டும்.

2. நல்ல மிளகு 40 கிறெயின், காயம் 20 கிறெயின், கழற்சிக்காய்ப்பருப்பு 100 கிறெயின், எடுத்துத் தேனைவிட்டு ஒன்றுயிடித்து 30 மாத்திரைகளாக உருட்டிக் கொண்டு, குளிர் காய்ச்சல்அல்லது முறைக் காய்ச்சல் கண்டவர்களுக்குக் காய்ச்சல் விட்டிருக்கிறபொழுது நாளொன்றுக்கு இரண்டு அல்லது மூன்று வேளை இரண்டிரண்டு மாத்திரையாகக் கொடுத்துவர, நோய் நீங்கும். இது பெரியவர்களுக்குரிய அளவு. குழந்தை களுக்கு இதிற்பாதியளவே கொடுத்தல் வேண்டும். இம்மாத் திரைகளை யுண்பதற்குமுன் பேதிக்குச் சாப்பிட்டு வயிற்றைத் துப்புரவாக்கிக் கொள்ளல் நலமாகும்.

3. நல்ல மிளகின்தூள் ஒரு அவுன்ஸ், நெய் 4 அவுன்ஸ் ஆகிய இரண்டையும் நன்றாக அரைத்து, நாடோறும் இருமுறை, படர்தாமரையுள்ளவர்கள் அதன் மீது தேய்த்து வந்தால், அது நீங்கும்.

4. வால்மிளகு, அது இல்லாவிட்டால் நல்லமிளகு, பத்து கிறெயின் எடுத்துத் தேனில் அரைத்து ஒரு வேளையாகச் சாப் பிட வேண்டும்; இவ்வாறு ஒரு நாளைக்கு மூன்று வேளை உண் டால் மேக வெள்ளை நீங்கும். இந்நோய்க்கு நல்ல மிளகினும் வால்மிளகே சிறந்ததாம்.

முயிறு முட்டைத் தைலம்

அரைப்படி வேப்பெண்ணெயில், சங்கிலைச் சாறு முக்காற் படியும், பாவட்டையிலைச்சாறு முக்காற்படியும் முயிறு முட்டை முக்காற்படியுஞ் சேர்த்துக் கொள்ளவேண்டும். பின், சுக்கு, திப்பிலி, வசம்பு, பூண்டு, மிளகு, நற்சீரகம், கருஞ்சீரகம், கஸ் தூரி மஞ்சள் ஆகிய இவற்றில் வகைக்கு ஒரு வராகன் எடை எடுத்துப் பொடித்து மேற்குறித்த எண்ணெயிற் போட்டு அடுப்பிலேற்றி மெழுகு பதமாகக் காய்ச்சி வடிகட்டி எடுத்து ஒரு துட்டு எடை வீதம் கொடுக்க சன்னிசுரம், கபம், மாந்தம், முதலிய நீங்கும்.

—(வைத்திய ராஜரத்தின சிந்தாமணி.)

மகளிர் பகுதி

இந்திய மகளிர் உடை

[இலக்குமணபுரி இஸபெல்லா தபோர்ன் கல்லூரியில் கல்வித்துறைத் தலைவர் திரு ஏ. எச். மேஅக்கேன்ஃஸி என்பார் நிகழ்த்திய சொற்பொழிவின் ஒரு பகுதி]

* * * முடிக்குமுன், பெண்களுக்கு ஒன்று சொல்லவிரும்பு கிறேன். ஆணாகப் பிறந்த யான் அதைப்பற்றிக் கூறப்புகுந்தது பெருந் துணிவே யாகும். நான் மகளிரணியும் உடையைப் பற்றிப் பேசப் போகிறேன். இந்திய மகளிர் உடுத்தும் புடவைகள் எனக்கு வியப்பையே அளிக்கின்றன. நாட்டின் பல பகுதிகளிலும் பற்பல விதமாக இப்புடவைகள் மகளிரால் அணியப் படுகின்றன. சிலர் தலைமேல் முக்காடிட்டு அணிகின்றனர்; சிலர் வலது தோளின் மீது "மாராப்பு" போட்டுக்கொள்கின்றனர்; சிலர் இடது தோளின் மீது போட்டுக் கொள்கின்றனர்; சிலரோ இருதோள்களின் மீதும் வரும்படியாக அணிகின்றனர். சிலர் தட்டுச் சுற்றாக அணிகின்றனர்; சிலர் ''மடிசா''ரிட்டு அணிகின்றனர். புடவைகளின் நிறங்களோ வானவில்லின் பலபடித்தான நிறங்களையும் பூக்களின் பல நிறங்களையும் தோற்கடிக்கின்றன என்றே கூறலாம். இவ்வளவு வேறுபாட்டிற்கு மிடையே தனிப்பட்ட ஒரு ஒருமைப்பாடு காணப்படுகிறது. அஃதென்ன வென்றால், இந்திய மகளிர் தம் உடைகளை எவ்வாறு அணியினும், எப்புறம் அணியினும் மிகவும் எழிலுற அணிகின்றார்கள் என்பதே வயலில் வேலை செய்யும் உழத்தியரணியினும் வளமனை வதியும் அரசியரணியினும் புடவை யுடை இந்திய மகளிரின் எழில் நலத்தையும் இனிமைப் பண்பையும் நன்கெடுத்துக் காட்டுவதற் கெனவே அமைந்தது போலும்!

இந்திய மகளிர்க்கு மேனாட்டுக் கல்வி முறை வேண்டற்பாலதுதான். அஃது அவர்கள் கருத்தைத் திருத்தி, அறிவைப் பெருக்கி, வாழ்க்கையில் புதியதோர் குறிக்கோளை யளிப்பதென்பது உண்மையே யெனினும், அதை அப்படியே ஏற்றுப் பழக இந்திய மகளிர் விரும்பின் அது ஒரு பெருந் தவறே யாகும். ஒவ்வொரு நாட்டு மக்களுக்கும் ஒவ்வொரு தனிப்பட்ட பண்பு நலம் உண்டு. இந்திய மகளிரின் தனிப் பண்பு, கற்பும் பொறுமையும் விளங்கும், எண்ணிறந்த இந்தியக் கதைகளால் நன்கு விளங்கும். ஒப்பற்ற எழிலும் இனிமையும் அவர்தம் புடவை

யுடையில் தாமிருக்கின்றன. மேனாட்டுக் கல்வி முறை மக ளிர்க்குத் துணிவையளிக்கக்கூடிய பல பண்புகளை வளர்த்து வரக்கூடியதே; ஆயினும், இப்பண்புகள் இயற்கையாய்ப் பெண் மைக் குரியவையும் புகழ்ச்சிக்குரியவையுமான இந்திய மகளிர் தம் தனிப்பட்ட அடக்கமான பண்புகளை விரட்டியடித்து விடாமற் பாதுகாத்தல் இன்றியமையாததாகும்—சுருங்கக்கூறின் புடவை யுடையைக் கைவிடவேண்டாம்.

(கா. சிவ. க.) —இந்து.

செய்திகளும் குறிப்புகளும்
News and Notes

சென்னைக் கீழ்ப்பாக்கத்திலுள்ள ஒரு சிற்றோடையிலிருந்து ஐயாயிரம் ஆண்டுகட்கு மேற்பட்டனவெனக் கணிக்கக்கூடிய சில விந்தையான மட்கலங்களும் சவச்சால்களும் அகழ்ந்தெடுக் கப்பட் டிருக்கின்றன. இப்பொருள்கள் சென்னைப் பொருட் காட்சிச் சாலையில் சேமித்து வைக்கப்பட்டுள்ளன.

* * *

டையா வளவைச் சேர்ந்த பெயிந்தியா என்ற ஊர்க்கருகில் ஓராற்றங்கரையில் 31½ அடி நீளமுள்ள ஒரு மனித எலும்புக்கூடு தோண்டி யெடுக்கப்பட்டுள்ளது. அதன் கால்களின் நீளம் மட்டும் 10 அடி இருந்தன. அது இப்பொழுது இராம்கார் நிலக் கிழவரின்மாளிகையில் எடுத்து வைக்கப்பட்டுள்ளது.

* * *

ஆங்கிலேயர்க்கும் ஆஸ்திரேலியர்க்கும் நடைபெற்ற கோற் பந்துப் போட்டியில் ஆஸ்திரேலியர் இவ்வாண்டு தீர்ந்த வெற்றி பெற்றனர்.

* * *

உலகத்திலேயே மிகவும் பெரிய கல்லணை என்று கருதப் படும் மேட்டூர் அணை கட்டி முடிவு பெற்றது. அதனைக் கட்டி முடிக்கநாலே முக்காற் கோடி ரூபாக்களுக்குமேற் செலவாகி யுள்ளது. அதனைக் கட்ட ஆறு ஆண்டுகள் ஆயின. மைசூர் கிருஷ்ண ராஜசாகர அணைக்கட்டு தேக்கக்கூடிய நீர்த்தொகுதி யைப்போல் இரண்டு மடங்குக்கு அதிகமாக இவ்வணை தேக்கக் கூடும்.

* * *

ஈழநாட்டுக் கண்டி மன்னர்களின் அரியணையையும் திரு முடியையும் ஆங்கிலேய அரசாங்கத்தார் இவ்வாண்டு திருப்பிக் கொடுத்துவிட முடிவு செய்துள்ளனர்.



கியூரி அம்மையார்

MADAME MARYA CURIE

(கதிரி (Radium) கண்டவர்)

ஓம்

செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

சிலம்பு கரு] பவ—புரட்டாசி [பரல் உ

திருநாவுக்கரசு அடிகள் தேவாரம்

உள்ளத் திருக்குறுந் தொகை

முன்னெஞ் சம்மின்றி மூர்க்கராய்ச் சாகின்ருர்
தந்நெஞ் சந்தமக் குத்தா மிலாதவர்
வன்னெஞ் சம்மது நீங்குதல் வல்லீரே
என்னெஞ்சி லீசனைக் கண்ட தென்னுள்ளமே.

பதவுரை :—

தம் நெஞ்சம்—(தாம் உலக வாழ்வில் பேரின்ப நிலையை அடையும்படி இறைவனற் கொடுக்கப்பெற்ற) தமது உள்ளத்தை

தமக்கு இலாதவர்—தமக்குப் பயன் தரும்படியாகச் செய்யத் தக்கன வற்றைச் செய்து திருத்தாத மக்கள் பலர்

முன்—தாம் உலகில் வாழ்ந்திருக்கும் காலத்தில்

மூர்க்கராய்—பேரின்ப வாழ்வைப் பற்றி ஒன்றும் அறியாத மூடராக

நெஞ்சம்இன்றி—திருந்திய தூய நெஞ்சு இல்லாமல்

சாகின்ருர்—தமது உயிர் கூற்றுவனல் பரு உடலினின்று பிரிக்கப் பெற்று நில உலகை விட்டுச் செல்கின்ருர்.

வன்னெஞ்சம் அது நீங்குதல் வல்லீர்—(இது மிகவும் இரங்கத்தக்க செயல். மக்களே! நீங்கள் உலகப்பற்றை விட்டுத் தன் முனைப் பின்றி இறைவனை வழிபட்டால்) உங்களுடைய திருந்தாத நெஞ்சத்தினது வன்கண்மை நீங்கித் திருந்தி அதனல் நீங்கள், பலர் முன் இறந்தது போல இறக்காமல் இறைவனைக் கண்டு பேரின்பம் அடைதற்கு வலிமை யுடையீர். (ஆகையால் நீங்கள் வீழ்நாள்படாமல் இறைவனை வழிபடுமின்.)

உள்ளம் என்நெஞ்சில் ஈசனைக்கண்டது—(நான் சொன்னதை நீங்கள் ஐயுறவேண்டாம்.) உயிரானது எனது திருந்திய தூய நெஞ்சில் இறைவனைக் கண்கூடாய்க் கண்டு அறிந்தது. அதாவது நான் இறைவனை என் உள்ளத்தில் கண்டறிந்து உணர்ந்து பேரின்ப நிலையை அடைந்தேன். (நான் இறைவனை வழிபட்டு எனது நெஞ்சம் திருந்தித் தூய்மை அடைந்து சாகாது அவனைக்கண்டு பேரின்ப நிலையை அடைந்தது போல நீங்களும் உங்கள் நெஞ்சம் திருந்தித் தூய்மை அடையப் பெற்றுச் சாகாது பேரின்ப நிலையை அடையலாம்.) அதற்காக இறைவனை வழிபடுமின் என்பது குறிப்பெச்சம்.

விளக்கவுரை :—

தம் நெஞ்சம்—எல்லா உயிர்களுக்கும் போகம் நுகர்தற்குப் பொதுவாய் அமைந்திருக்கிற புவன போகங்கள் போல அன்றி மக்கள் ஒவ்வொருவரும் சிறப்பாகப் பயனடைதற்கு உரியதாய் உள்ளமிருத்தலால் தம் நெஞ்சம் என்றார். இறைவனால் பேரின்பம் அடையும் கருவிகளாக உயிர்களுக்குக் கொடுக்கப்பெற்ற தனு கரண புவனபோகங்களுள் (உடல் உட்கருவி உலக நுகர்வுகள்) தனு கரணங்கள் சிறப்புப் பொருள்களாயும் புவனபோகங்கள் பொதுப் பொருள்களாயு முள்ளன.

தமக்கு (தாம்)—தாம் : அசை.

இலாதவர்—நெஞ்சம் உடையரா யிருந்தும் அதனைத் திருத்தித் தூய்மை செய்து அதனால் அடையப்பெறும் பேரின்பப் பயனை அடைத லின்மையால் தமக்கு இல்லாதவர் என்றார். ஒருவர் ஒரு பொருளை உடையராந் தன்மை, அவர் அப்பொருளைப் பயன் படுத்துதற் பற்றிக் கூறுதல் தமிழ் ஆன்றோர் நூல்வழக்கு.

நெஞ்சம்இன்றி—இங்கே நெஞ்சம் திருந்துதல் இன்றி என்ற பொருள் பட நின்றது. பயிர்விளையாக் களர்நிலம் ஒருவற்கு உடைமையா யிருப்பினும் அஃது அவருக்கு இல்லாததாக எண்ணப்படுதல் போலப் பேரின்பம் விளையாத திருந்தா நெஞ்சம் இல்லாத. பொருளாகக் கூறப்பட்டது.

மூர்க்கர்—மூடர்; மலத்தினால் மறைவுபட்ட மயக்க அறிவால் உலக வாழ்வைப் பெரிதென மதித்து வாழ்வின் குறிக்கோளாகிய பேரின்பம் அடைதலை அறியாதவர்? "முத்தி நெறி அறியாத மூர்க்கர்" என்று மாணிக்கவாசக அடிகள் திருவாசகம் அச்சோப் பதிகம் 1-வது பாட்டிலும், அருணந்திசிவாச்சாரியார் உலக மெல்லாம் 'மூர்க்கராகி' என்று சிவஞானசித்தியார் 8-வது சூத்திரம் 16-வது பாட்டிலும் பேரின்ப நிலையை அறியாத மக்களைக் கூறியிருத்தல் காண்க.

சாகின்றார்—சாதல் என்பது பரு உடலைப் பிற உடல்களோடுங்கூடிய உயிரினின்றும் வெங்கூற்றுவனால் துறத்தல்: கூற்றுவனாலே உயிர்

துறத்தலுண்டெனின், பின்வரும் பிறத்தலும் உண்டு. இக்கருத்தைத் துறக்கப்படாத உடலைத்துறந்து வெந்தூதுவரோ டிறப்பன். "இறந்தாவிரு விசும்பேறுவ னேறிவந்து பிறப்பன் (114,8) என்று அடிகள் தனித் திருவிருத்தத்திற் கூறி அருளினர். இதனால், "சித்தாந்தத்தே சிவன்றன் திருக்கடைக்கண் சேர்த்திச் செனன மோன்றிலே சீவன் முத்தராக-வைத்தாண்டு மலங்கழுவி ஞானவாரி மடுத்தானந்தம் பொழிந்து வரும் பிறப்பை யறுத்து- முத்தாந்தப் பாதமலர்க்கீழ் வைப்பனென்று மொழிந்திடவு முலகமெலா மூர்க்கராகி - பித்தாந்தம் பெரும் பிதற்றுப் பிதற்றிப் பாவப் பெருங்குழியில் வீழ்ந்திடுவ ரிது வென்ன பிராந்தி" என்று அருணந்திசிவாசாரியாரும், "இக் காய நீக்கி யினியொரு காயத்திற்—புக்குப்பிறவாமற் போம்வழி நாடுமின்" என்று திருமூலநும் கூறிய சைவசித்தாந்த உண்மையை அடிகள் கூறி அருளினர். அடிகள் தாம் எடுத்த பிறப்பில் இறைவனருளால் பேரின்ப நிலையை அடைந்திருத்தலைப் பற்றி "சாவாமே காத்து என்னை யாண்டாய் போற்றி" என்று திருவாநூர், போற்றித் திருத்தாண்டகம் 9-வது பாட்டில் (246—9) கூறியிருத்தல் காண்க.

வல் நெஞ்சம்அது நீங்குதல் வல்விரே—வல்நெஞ்சம் - உயிர்கள் ஆணவமல மறைப்பு நீங்கி உய்தற்கு வேண்டப்படும் தனுகரண புவனபோகங்களை (உடல் உட்கருவி உலக நுகர்வுகளை)க் கொடுத்தருளி அவைகளுடன் ஒன்றாயும் வேறாயும் உடனாயும் நின்று எஞ்ஞான்றும் சலியாது தம் பொருட்டு ஒன்றும் வேண்டாது ஐந்தொழில் செய்துவரும் பேருதவியைப் பகுத்தறிவுடைய மக்கள் அறிந்து நினைந்து இளகிக் கரைந்துருகி அவனிடத்து அன்பு செய்யாதிருக்கும் நெஞ்சை அடிகள் வல் நெஞ்சம் என்றார். அது - பகுதிப்பொருள் விகுதி.

இந்த நெஞ்சம் வன்கண்மை நீங்கி இறைவனை நினைந்து கரைந்துருகும் இளகிய தன்மை அடைந்தாலொழிய இம்மையிலேமேலே கூறப்பட்ட பேரின்பநிலை அடைதலாகிய சீவமுத்தத் தன்மை அடைய முடியாது என்பார் வன்னெஞ்சமது நீங்குதல் என்றும், அப் பேர்ப்பட்ட இளகிய நெஞ்சை மக்கள் தங்கள் தவமுயற்சியால் எடுத்த பிறப்பிலே அடையமுடியும் என்பார் நீங்குதல் வல்லீர் என்றும் அடிகள் கூறி அருளினர்.


மக்கள் தாங்கள் எடுத்த பிறப்பிலே பேரின்பநிலை அடைதற்கு இறைவனாற் செய்யப்படும் கடப்பாட்டில் ஒன்றும் குறைவில்லை; மக்களே இறைவன் கருத்தை யறிந்து அதன்வழி ஒழுகாதிருக்கிறார்கள். "தேடிச் சென்று திருந்தடி யேத்துமின்—நாடிவந்தவர் நம்மையும் ஆட்கொள்வர்" (119—5) என்று அடிகளும், "என்னாலறியாப் பதந்தந்தா யான் அதறியாதே கெட்டேன், உன்னாலொன்றுங் குறைவில்லை" என்று மாணிக்கவாசக அடிகளும் கூறி அருளினர். இறை

வனை வழிபட்டு மெய்ஞ்ஞான மடைதலை அடிகள் அடுத்த பாட்டில் "துணைத்தாலே வணங்கிட நன்றால் நம்மனம் வைத்திடு ஞானமாம் ஒன்றானை" என்று கூறி யருளினர். அடிகள் "நான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்," என்னும் பேரிரக்க நெஞ்சினை உடையர் ஆதலின் தாம் அடைந்த பேரின்ப நிலையை ஏனைய மக்களும் அடைதல் வேண்டும் என்ற குறிப்புடன் வன்னெஞ்சமது நீங்குதல் வல்லீர் என்றார். வல்லீர் - குறிப்பு வினைமுற்று. வன்மை + ஈர் = வல்லீர்; ஈர் - முன்னிலைப்பன்மை விகுதி. ஏ - அசை.

உள்ளம் என் நெஞ்சில் ஈசனைக் கண்டது—உள்ளம் என்ற சொல் இங்கே உயிர் என்ற பொருளில் வந்தது.

உள்ளம்கண்டது—நான் கண்டேன். காணுதல் என்பது அகக் கண்ணுற் காணுதல். நெஞ்சு என்பது இங்கே உலகவாழ்வில் உலக இன்பம் நுகர்வின் பொருட்டு சங்கற்ப விகற்பங்கள் செய்து ஓயாது சுழலும் நெஞ்சு அன்று; உலகப்பற்று முழுவதும் அற்றுத் தன்முனைப்புச் சிறிதுமின்றி இறைவனையே நினைப்பற நினைந்து பேரா இயற்கைப் பேரின்பம் உணர்ந்து நுகர்ந்து கொண்டிருக்கும் நெஞ்சு. நான்கு உட்கருவிகளும் (அந்தக்கரணங்களும்) ஒன்றாய்ச் சுத்தமாயை சாந்தியாதீத கலையிலுள்ள அருளொளி விளங்கப்பெற்று நின்மலமாயுள்ள நெஞ்சு. 'சிந்தையினுள்ளே தெரிய வல்லார்க்குச் சிந்தையினுள்ளே சிவனிருந்தானே' என்று திருமூலர் கூறியாங்கு அடிகள் உள்ளம் என் நெஞ்சில் ஈசனைக் கண்டது என்றருளினர். அடிகள் இந்தப் பாட்டு முன் இரண்டு அடிகளிலும் படர்க்கையில் பொது மக்களுடைய வாழ்க்கை நடையைப்பற்றியும், மூன்றாவது அடியில் முன்னிலையில் மக்களை விளித்தும், நான்காவது அடியில் தன்மையில் தமது சிவானுபூதி நிலையையும் கூறுகின்றார். அடிகள் கூறிய இப்பாட்டினால் அவர்களிருந்த காலத்தில் நமது தென்தமிழ் நாட்டில் பெரும்பான்மையான மக்கள் உலகவாழ்வின் குறிக்கோளை அறிந்து பேரின்பப் பயனை அடையாதிருந்தார்கள் என்பது புலனாகும். ஏறக்குறைய 1300 ஆண்டுகள் கழிந்த இக்காலத்திலும் நமது நாட்டிலுள்ள பெரும்பான்மையான மக்கள் உலகவாழ்வின் குறிக்கோளை அறிந்து உணர்ந்து பேரின்பப் பயன் அடையாதவர்களா யிருக்கிறார்கள் என்பது நாம் நேரே அறிகிறோம்; ஏனைய நாடுகளின் நிலைமையும் அவ்வாறே யிருக்கின்றது.

—மா. வே. நெல்லையப்ப பிள்ளை.



சிவஞான போதக் கருத்து

[திரு மா. வே. நெல்லையப்ப பிள்ளை]

இரண்டாவது சூத்திரம் நாலாவது அதிகரணம்

(சிலம்பு 9, 370 பக்கம் தொடர்ச்சி)

94. மேலே கூறியவாறு ஐந்தொழில்கள் செய்தற்பொருட்டுப் பலவகைத் தத்துவங்களில் சிவன், அருட்சத்தியுடன் ஒன்றாயும் வேறாயும் உடனாயும் நிற்றலின் சிவ வேறுபாடுகள்பலவும் சத்திவேறு பாடுகள் பலவும் அமைகின்றன. தீயினது சத்தியொன்றே. அது பலபொருள்களிற் பலவகையாகத் தொழிற்படும் வேறுபாட்டால் சுடுஞ் சத்தி, அடுஞ் சத்தி, விளக்குஞ் சத்தி, கருக்குஞ் சத்தி, உருக்குஞ் சத்தி முதலிய பல பெயர்கள் பெறுதல்போல சிவத்தினோடு பிரிப்பின்றி இயைந்து நிற்கிற அருட்சத்தி யொன்றே, தத்துவங்களைக் கடந்துநிற்கும் நிலையில் பராசத்தி யெனவும் அப்பராசத்தி உயிர்கள் பொருட்டுத் தத்துவங்கள் பலவற்றில் நிகழ்த்துகிற தொழில் வேறுபாட்டால் திரோதான சத்தி, இச்சா சத்தி, ஞான சத்தி, கிரியா சத்தி யெனவும் வெவ்வேறு பெயர்களாற் கூறப்படுகின்றாள். தன்னை அடைந்து பேரின்பம் அடையவொட்டாமல் அநாதியே மூலமலம் ஆகிய ஆணவமலம் உயிர்களின் வேட்கை அறிவு செயல்களைத் தடுத்துக் கொண்டிருப்பதை நோக்கிச் சகியாமல் சிவன் முதலாவது பேரிரக்கம் கொள்ளுகிற சமயத்தில் அவனோடியைந்து நிற்கிற அருட்சத்தி பராசத்தி என்று கூறப்படுவள். அந்தப் பராசத்தியானவள் முதலாவது உயிர்களுக்கு அருளுதல் மாத்திரம் குறித்துப் பொதுவகையால் அறிவித்தும், அறிந்தும் தடையிலா ஞானமாய் நிற்பள். தடை என்பது ஆணவமலத்தி

றுள்ளதாகிய மறைப்பு. தடைசெய்யாத ஞானம் ஆகிய பராசத்தி உயிர்களினது ஆணவமல வலியைத் தீர்க்க வேண்டும் என எண்ணி உயிர்கட்கு மலபரிபாகம் வருவித்தற் பொருட்டுப் படைத்தல் முதலிய ஐந்தொழில் செய்தலைக் குறித்துச் சிறப்பு வகையால் தனது ஒரு கூற்றான் தொழில் செய்ய நிற்கிற சமயத்தில் திரோதான சத்தி என்று கூறப்படுவள். திரோதாவ சத்தி, ஆதி சத்தி, மறைப்பாற்றல் என்பன ஒருபொருட் சொற்கள்; பராசத்தி திரோதானசத்தியாய் நின்று உயிரினது ஆணவமலத்தைப் போக்கும் அவாவாய் நிற்கிற சமயத்தில் இச்சாசத்தி என்றும், உயிரினது ஆணவமலத்தைப் போக்கும் வகையை அறிந்து நிற்கிற சமயத்தில் ஞான சத்தி என்றும், உயிரினது ஆணவமலத்தைப் போக்குதற்கு ஆகந்துகமலங்களாகிய திரோத மலம், பிரார்த்தவினைமலம், சுத்தமாயாமலம், அசுத்தமாயாமலம் ஆகிய இவைகளை உயிருக்குக் கருவிகளாய்க் கூட்டுவிக்கும் சமயத்தில் கிரியா சத்தி என்றும் கூறப்படுவள். ஆகந்துக மலம் என்பது இடையிலே கூட்டப்படுகிற மலம். இச்சா சத்தி எனினும் வேட்கைவலி அல்லது வேட்கை ஆற்றல் எனினும் பொருந்தும். ஞான சத்தி எனினும் அறிவுவலி அல்லது அறிவாற்றல் எனினும் பொருந்தும். கிரியாசத்தி எனினும் செயல்வலி அல்லது செயலாற்றல் எனினும் பொருந்தும்.

95. மேலே கூறப்பட்ட இச்சா சத்தி, ஞான சத்தி, கிரியா சத்திகள் அநாதியே ஆணவமல மறைப்பினால் விளங்காமலிருக்கிற உயிர்கள், அம்மறைப்பினின்று படிமுறையில் சிறிது சிறிதாய் நீங்கி முடிவில் அவை முற்றிலும் விளங்கப் பெற்று வியாபகம் (நிறைவு) உடையவைகளாய் இறைவனது திருவடிப் பேரின்பம் அடையும்படி செய்தலே ஐந்தொழிலின் பயனாகும். பகுத்தறிவுடைய மக்கள் உயிர்கள், தங்கள் பொருட்டு இறைவன் செய்யும் ஐந்தொழிலின் கருத்தை அறிந்து அதற்கு ஏற்ப உலக வாழ்க்கையில் மறத்தை விலக்கி அறவழியில் ஒழுகித் தங்கள் வேட்கை அறிவு செயல்கள் திருந்தும்படி வாழ்தல் உயிர்வளர்ச்சி (Soul evolution) வாழ்வு ஆகும். பார் ஆளும் பெரிய மன்று வாழ்வாயினும், ஊர் ஆளும் சிறிய மன்று வாழ்வாயினும் அவ்வாழ்வுகளெல்லாம் மக்களுக்கு அவர்களுடைய வேட்கை அறிவு செயல்கள் திருத்த மடைதற்கு வேண்டப்படும் பழக்க இடங்களாகும் (Training grounds). வேட்கை அறிவு செயல்களைத் தவிர்த்து மக்களுக்கு எவ்வகை வாழ்வுமில்லை. உயிர் வளர்ச்சிக்குத் தக்கவாறு பலவகை உயிர்களின் உருவங்கள் வளர்தல் உருவ வளர்ச்சியாகும் (Form evolution). மேற்குநாட்டு ஆராய்ச்சியாளர் ஏறக்குறைய சென்ற நூறு

ஆண்டுகளாக உயிர்களின் உருவ வளர்ச்சியை அறிவாரன்றி உயிர் வளர்ச்சியை அறியார்.

96. நோயினாற் பிணிப்புண்ட ஒருவனுக்கு மருத்துவன் அந்நோ யணுகியிருக்கிற உடலில் வைத்து மருந்து கொடுத்துச் சிறிது சிறிதாக நோயின் வலியை நீக்கிக்கொண்டே வந்து நோய் தீர்ந்தபின் நோய் நீங்கின உடலில் வைத்து வலிமருந்து (Tonic) கொடுத்து முழு உடல் நலமடையச் செய்தல் போல, அநாதியா யுள்ள ஆணவமலத்தினால் வேட்கை அறிவு செயல்கள் பிணிப்புண் டிருக்கிற உயிர்களுக்கு ஆணவமலம் சேர்ந்திருக்கிற மாயா உடல் களைக் கொடுத்து அவ்வுடல்களில் வைத்து மல மறைப்பைப் படிமுறையில் சிறிது சிறிதாக நீக்கி மலம் முற்றும் நீங்குகிற சமயத்தில் உயிர்களை ஆண்டருள் செய்து வீட்டின்பம் அருளு கின்றான். முடிவிலே செய்யப்படுகிற அருட் டொழிலுக்கு திரோதான சத்தியின்வழிச் செய்யப்படுகிற படைத்தல், காத் தல், அழித்தல் ஆகிய மூன்று தொழில்களும் ஏதுவாயுள்ளன. இறைவன் உயிர்களுக்கு ஆணவமல அழுக்கை மாயாமல அழுக் கைச் சேர்த்துப் போக்குதல், வண்ணான் ஆடையிலுள்ள அழுக்கை உவர் மண்ணிலுள்ள அழுக்கைச் சேர்த்துப் போக்கு தல் போலும். நோய் தீருமளவும் நோயாளிக்கு 'இன்ன செய்க', 'இன்ன செய்யற்க' என்று மருத்துவன் விதிவிலக்குகள் ஆகிய பத்தியம் வைத்தல் போல, இறைவன் மக்களுயிர்களுக்கு மல நோய் நீங்குமளவும் 'இன்ன செய்க' 'இன்ன செய்யற்க' என்னும் அறம்மறங்கள் ஆகிய விதிவிலக்குகளை ஆணை செய்கின்றான். மக்கள் விதிவிலக்குகளைப் பின்பற்றி ஒழுகுங்கால் நல்வினையும் அதனால் வரும் உலக இன்பமும், பின்பற்றாது ஒழுகுங்கால் தீவினையும் அதனால் வரும் துன்பமும் உண்டாகின்றன. நோய் நீங்கின மக்களுக்கு விதிவிலக்குகள் இல்லாதன போல, மலம் நீங்கின மக்களுக்கு விதிவிலக்குகள் இல்லை. மாயை மலமும் வினைமலமும் அநாதியாக உளவாயினும் ஆணவமலம்போல அல் லாது உயிர்களுக்கு இடைக்காலத்தில் கூட்டப்படுதலால் அவை ஆகந்துகமலம் என்று கூறப்படும்.

97. இன்னும் அருட்சத்தியானது தொழில் வேறுபாடு களால் ஆரணி, செனனி, இரோதயித்திரி என்னும் மூவகைச் சத்திகளாயும் ஈசானி, பூரணி, ஆர்த்தி, வாமை, மூர்த்தி என்னும் ஐவகைச்சத்திகளாயும், நிவிர்த்தி, பிரதிட்டை, வித்தை சாந்தி சாந்தியதீதை என்னும் ஐவகைச்சத்திகளாயும் வாமை, சேட்டை, இரௌத்திரி காளி, கலவிகரணி, பலவிகரணி பலப்பிர தமனி, சர்வபூத்தமனி என்னும் எண்வகைச் சத்திகளாயும், பர வாகீசுவரி, அபரவாகீசுவரி, மனோன்மணி, மகேசை, உமை, திரு,

வாணி என்னும் எழுவகைச் சத்திகளாயும், உன்மனே, சமனே, வியாபினி, சத்தி, நாதாந்தம், நாதம், நிரோதி, அர்த்தசந்திரன், விருத்தி, விடம், அருக்கிசம், மேதை என்னும் பன்னிரண்டு கலைகளாயும் இன்னும் பல்வேறு வகைப்பட்டும் நிற்கும்.

98. இவ்வாறு பல்வேறு வகைப்பட விரிந்த சத்திகளுடன் சேர்ந்த சிவமும் சதாசிவன், மகேசன், அநந்ததேவர், சிகண்ட தேவர், உருத்திரன், மால், நான்முகன் முதலாகிய பல்வேறு பெயர்கள்பெற்று நிற்கும். இவ்வகைச்சத்திகட்கு இடமாகிய விந்துவும் சிவதத்துவம் (சுத்தமாயை), வித்தியாதத்துவம் (அசுத்தமாயை), ஆன்மதத்துவம் (பிரகிருதிமாயை) எனப் பல் வேறு வகைப்பட்டு நிற்கும். தத்துவங்கள் ஒவ்வொன்றினும் உள் வேறுபாடுகளுள் இங்ஙனம் சத்தி வேறுபாடுகளும், சிவ வேறு பாடுகளும், தத்துவவேறுபாடுகளும் ஒன்ருேடொன்று சேர்ந்து பிரிப்பின்றி நிற்கும் என அறிக.

99. மேற்கூறப்பட்ட முக்கூற்றுப் பல்வகை வேறுபாடு களை இறைவன் அமைத்தது எதன் பொருட்டெனின் மலமறைப் பினல் அறியாமையி லுழலு முயிர்கள் கீழேயுள்ள தூலதத் துவங்களிலிருந்து சூக்குமதத்துவங்கள், அதிசூக்கும தத்துவங் கள், பாசூக்கும தத்துவங்கள் வழியில் படிமுறை ஏறி ஏறி அவ் வத்தத்துவங்களில் விளங்கும் வேட்கை அறிவு செயல்களாலுள தாகும். பலவகைப் போகம் நுகர்ந்து முடிவில் தத்துவங் களுக்கு மேலேயுளதாம் சிவபோகம் அடையும் பொருட்டே யாகும். (தொடரும்)

"சொற்பதங் கடந்த தொல்லோன்
உள்ளத் துணர்ச்சியிற் கொள்ளவும் படான்
கண்முதற் புலனுற் காட்சியு மில்லோன் "

—திருவாசகம்.

(He transcends the description of words,
Is not comprehensible by the mind,
Is not visible to the eye and the other senses.)

"O! the depth of the riches, both of the wisdom and knowledge of God, how unsearchable are His judgements, and his ways past finding out! For who hath known the mind of the Lord, or who hath been His councillor."

—*St. Paul.*

இலக்கணமும் இலக்கியமும்:
LANGUAGE AND LITERATURE

இந்தியாவும் சாவகமும்

[திருவாளர் S. நடராஜ பிள்ளை B. A.]

(கஅ-ம் பக்கத் தொடர்ச்சி.)

கீழைச் சாவகம்—10, 11, 12, 13, 14, 15-ம் நூற்றுண்டுகள்

10-ம் நூற்றுண்டின் தொடக்கத்தில் கீழைச் சாவகத்திலே முபூசிந்துக் என்பவரின்கீழ் ஒரு வல்லரசு தோன்றியது. இவர் காலத்தில் சுபத்திதந்திரம் என்ற பௌத்தநூல் எழுதப்பட்டது. இவர் கீழைச்சாவகத்தை வலிவுள்ள நாடாக்கினுர். பாலி, நடுச்சாவகம், மேற்குச்சாவகம், மலாக்கா முதலிய பக்கத்து நாடுகளை யெல்லாம் வென்றும் தம் நாட்டுடன் சேர்த்துக் கொண்டார். இவர் மக்கள் காலத்தும் இந்நாடு வலி குன்ருது விளங்கிற்று. இவருடைய பேத்தியாய மகேந்திரத்தாவைப் பாலி தேயத்துக் குறுநில மன்னனுன உதயணன் என்பாருக்குத் திருமணம் செய்வித்தார்கள். இவ்விருவருக்கும் தோன்றியவர்தாம் பெருமைபெற்ற எர்லங்கராசன் ஆவார். எர்லங்கர் தமது 15-வது ஆண்டில் பகைஞர்க்குப் பயந்து வானகிரிக்காட்டில் கரந்து வாழநேர்ந்தது. இவர் இக்கானில் உறையும் முனிவர்களுடன் வாழ்ந்து வந்தார். தாம் அரசுரிமை யடைந்ததும் தவசிகட்கு ஆசிரமம் அமைப்பதாக வாக்களித்தார். கி. பி. 1035-ல் பகைவரை வென்று அரசுக்கட்டிலேறினர். காவி மொழியில் சிறப்புற்ருேங்கும் இலக்கியங்களாய "அருச்சுன விவாகம்", "விராடபர்வம்", "மாபாரதம்", "இராமாயணம்", ஆயவை இவர் காலத்தில் தோன்றியனவாம்.

இம்மன்னர்க்கு இருபுதல்வர் இருந்தனர். கி. பி. 1042-ல் இவர் மறுபடியும் துறவியாயினர். இவருடைய நண்பரான பரதர் என்னும் சித்தர் இவர் மக்களுக்கு இவர் நாட்டைத் தம் தவ வலியால் மேகத்திலிருந்து கொணரப்பட்ட தண்ணீரால் கோடிட்டு இருகூருகப் பிரித்துக் கொடுத்தார். எனவே, கீழைச் சாவகம், சங்கலம் (Jangala) கேதரம் (Kediri) என இரண்டாகப் பிரிக்கப்பட்டது. சங்கலத்தைப்பற்றி ஒன்றும் விரிவாக இதுபோழ்து அறியக்கூடவில்லை.

கேதரம்

கேதரத்தின் புலவர்கள் காவிமொழிக்குச் செய்துள்ள பேருதவியால் இன்றும் சாவகத்து மக்கள் கேதரத்தின் பண்டைச் சிறப்பை நினைந்து நினைந்து இறும்பூ தெய்துகின்றனர்.

கி. பி. 1104-ல் கேதரத்தை வர்ஷஜயன் என்பார் அரசாண்டார். இவருடைய அவைப்புலவரான திரிகுணன் "சுமனசாந்தகம்" "கிருஷ்ணாயனம்" என்னும் இரு நூல்களை இயற்றினர்.

கி. பி 1120-ல் காமேஸ்வரன் பட்டத்திற்கு வந்தார். இவர் சங்கலத்தின் இளவரசியான சந்திரகிரணி என்பாளை மணந்து இருவரும் அரி ஆசனத்தில் ஒன்றாய் அமர்ந்து செங்கோலோச்சினர். இவர்கள் அரும்பெரும் வீரச் செயல்கள் பல புரிந்ததாக இன்றளவும் நம்பப்பட்டு வருகிறது. இவரது அவைப் புலவரான "மூபுதர்மஜ" என்பார் காம தகனத்தை ஓர் இனிய நூலாகக் காவியில் செய்தார்.

கி. பி. 1135—1155 வரை ஜெயபாயன் அரசாண்டார். பென் ஊலுன் என்பார் இவருடைய அவைப்புலவர். பாரத யுத்தத்தையும், ஹரிவம்சத்தையும் இவர் காவியில் செய்தார். பாரதக் கதைகள் மாற்றப்பட்டுக் காவியில் எழுதப்பட்டதுமன்றி பாரத யுத்தம் சாவகத்தில் நடந்ததாயும், அதில் பங்கு எடுத்துக் கொண்டவர்கள் சாவகத்து மன்னர்கள் எனவும் கருதப்பட்டனர். சாவகத்து மன்னர்கள் தாம் மாபாரத வீரர்களின் கொடிவழித் தோன்றல்களெனவும் நம்பலாயினர். ஜெயபாயன் பிற நாட்டுமன்னர்களை வென்று தன் நாட்டைப் பலமுறச் செய்தான். ஜெயபாயன் மறு முறையும் பிறந்து தங்கள் நாட்டை அன்னியரின் ஆட்சியினின்று மீட்டு நன்மை செய்வானென இன்றும் சாவகத்து மக்கள் நம்புகின்றனர். இத்துடன் கல்கி அவதாரமும், இயேசுவின் இரண்டாவது வருகையும் நோக்கத்தக்கன.

கேதரத்தின் மன்னர் பெருமையும், செல்வாக்கும் ஏனைய நாடுகளில் பரவி யிருந்தது. சீனத்தரசர் இவர்களுக்குத் தூதுக் கூட்டங்களை அனுப்பிப் பெருமைப்படுத்தினர். சாவகத்து மக்கள் அரேபியா, இந்தியா, ஆஃப்ரிக்கா முதலிய நாடுகளுடன் வாணிபஞ் செய்து பொருளிட்டிக் கலை பெருக்கினர். பிற நாடுகளில் சென்று குடியேறியும் வந்தனர்.

கேதரம் 13-ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் கேன் அருக் என்பவரால் கைப்பற்றப்பட்டது. பராதன், நாகரக்கிருதகமா என்னும் காவி மொழியின் இரு பெருங் கதைகளும் கேன் அருக் வரலாற்றை விவரிக்கின்றன.

சிங்கசாரி

கேன் அருக்கைப் பற்றிய சிறு கதைகள் பல வழங்குகின்றன. இவர் பிரமனின் மகனுகவும், திருமாலின் அவதாரமாகவும், சிவனின் உறவினராயும் கருதப்படுகிருர். இவர் மக்கள் செய்யக்கூடாத அரும் பெருஞ் செயல்கள் பல புரிந்ததாகவும் கூறப்படுகிறது. இவரிடத்தில் கெட்ட பழக்கங்கள் பல குடிகொண் டிருந்தன. ஒரு நாள் இவர் ஒரு கூட்டத்தின் நடுவில் இருந்து சூதாடிக்கொண் டிருக்கும்போது ஓர் இந்தியப் பிராமணர் இவரைக் காண வந்தார். இப் பிராமணர் இவருக்கு நெருங்கிய நண்பரானுர். இந் நண்பரின் உதவியால் கேதரத்திற்குட்பட்ட சிற்றரசுகளில் ஒன்ருய சிங்கசாரியில் ஓர் அலுவல் கிடைத்தது. இச் சிங்கசாரியின் அரசி டேட்டீஸ் எனபாள் உளங் கவரும் வனப்பு வாய்ந்தவள். அவள் எழில் கேன் அருக்கை அவள்பால் இழுத்தது. சிங்கசாரி மன்னன் அயர்ந்த வேளையில் கரவாக உட்சென்று அவனைக் கொன்று கி. பி. 1220-ல் கேன் அருக் சிங்கசாரியின் மன்ன ராயினுர்.

சிங்கசாரியின் அரசுக் கட்டி லேறியதும் தம் நிலையை வலுப்படுத்துவதற்கும், மக்களின் கவனத்தை ஈர்ப்பதற்கும் பிற நாடுகளின் மேற் படையெடுத்தார். விரைவில் சிங்கசாரியை ஒரு வல்லரசாக்கினுர். பிற நாடுகளைத் தம் குடைக் கீழ் கொணர்ந்ததும் தனக்கு "ராஜஸசங் அமுர்வபூமி" என்று பட்டஞ் சூட்டிக்கொண்டார். மனக் கசப்பும், வெறுப்பும் மிக, மக்கள் இவரை கி. பி. 1227-ல் கொலை புரிந்தனர். பெயர் பெற்ற பிரஜனபரமித என்னும் சிலை இவர் காலத்தில் செய்யப்பட்டது.

கென் அருக்குக்குப் பின்னர் நான்கு மன்னர்கள் அரசாண்டனர். நாலாவது மன்னர் கிருதநாகரன் என்பார் 1268—1292 வரை அரசாண்டார். இவர் உண்மையில் ஆண்மை யற்ற கோழை யெனினும் மக்கள் இவரைச் சிவ புத்தர் எனக் கொண்டாடினர். சுமித்திராவிலுள்ள மல்யு என்ற நாட்டின்மேல் படையெடுத்துப் பண்டாரத் (Treasury) திலுள்ள பணத்தை வீணுக்கினுர். இத்துடன் நில்லாது, சீன தேசத்து அரசரையும் அவமதித்தார். இவருக்கு விரோதமாய் உள்நாட்டுக் கலகங்களும் கிளம்பின. கேதரத்தின் சிற்றரசராய் இருந்த ஜயடாங் என்பார் இச் சமயத்தில் பெரும் படையுடன் சிங்கசாரியை எதிர்த்தார். கிருதநாகரன் ஜயடாங்கை எதிர்க்க வழி யில்லாது விழித்தா ரெனினும் இவரின் மருமகனுனாதன் விஜயன் என்பார் ஒரு சிறு படையுடன் கடும் போர் புரிந்தார். போரிற் பின்னிட நேர்ந்ததும் அவர் பக்கத்தி

னுள்ள மதுரை என்னும் தீவில் ஒளிந்து கொண்டார். கிருத நாகரர் போரில் கொல்லப் பட்டார். இவருடன் சிங்கசாரியின் ஆதிக்கம் ஒழிந்தது.

பதிற்றுப்பத்து விளக்கம்

[பண்டித. திரு. அ. நடராஜ பிள்ளையவர்கள்]

(௧௨-ம் சிலம்பு, ௨-ம் பரல், ௬௪-ம் பக்கத் தொடர்ச்சி)

துயிலின் பாயல்

விருத்தியுரை

தோன்றல் - அண்மை விளி. உறழ்ந்து - உறழ எனச் செய வென் எச்சமாக்குக. விலங்கல், அமிழ்து - உவமையாகு பெயர் கள். புனிற்று மகள் பூணும் ஐயவி - வெண் சிறுகடுகு. இதனை அக்காலத்தில் ஈன்றணிமையினையுடைய பெண்மகளிர் கடிப்பகை யாக அணிவது மரபு. பகைவர் படையாற் கோட்டை மதில் சூழப்பட்ட காலத்தே வேண்டியவற்றை விளைத்துக் கோடற்குத் தகுதியாக வயலுங் குளமுங்கொண்ட இடைமதில்கள் அமைக் கப்பட்டிருந்தன. அசைநடை - வினைத்தொகை யன்மொழி. உள்ளாலும் - உம்மை எதிர்மறை; இறந்தது தழுவியது. தா - கெட்டித்தன்மை: செப்பு முதலியவற்றின் கலப்பாலுண்டாவது. இன்று - இன்றாக எனத் திரிக்க. அகலத்து - அத்து அல்வழிச் சாரியை. அகலப் பாயல் - இரு பெயரொட்டு. உய்யுமோ - ஓகாரம் எதிர்மறைப் பொருள் கொண்டது. இஞ்சியினையும், விலங்கலினையும், மதிலினையுமுடைய கோட்டை எனக் கூட்டுக. இது, பகைப்புலத்தே நீட்டித்த தலைவனை நோக்கிக் கூறிய பாணன் கூற்று. சேரனது மார்பு அவனது காதன் மகளிர்க்குப் படுக்கை யாம் என்ற சிறப்புக் கருதி இப் பாட்டிற்கு, 'துயிலின் பாயல்,' என்ற பெயர் கொடுக்கப்பட்டது. இதனால், சேரனது வென்றிச் சிறப்பும், குலமகளிரோடு கூடிவாழும் வாழ்க்கைச் சிறப்பும் கூறப்பட்டன.

பதிய நடை

தோற்றமிக்க அரசனே! நீ இப்படை வீட்டினில் நீட்டித் துத் தங்கி விட்டாய்! தலைவியைப் பிரியும் அமயத்துக் குறிப் பிட்டு வந்த காலங் கடந்து விட்டது! ஆகலின், நின்னைக் கண்டு தலைவியின் நிலையினைக் கூறுவதற்காக யான் இங்கு வந்தனன். இப்படை விடு, மதகிர் வழியப் பெற்று, கொடிய கோபம்

மிகுந்து, மரங்களை வேருடன் கிளப்பி வீழ்த்தும் இனிமையான களிறுகள் பிளிறிக் கொண்டிருக்கும் பெற்றியதாய் இருக்கின்றது! அக் களிறுகள் பகைவரின் கோட்டையின் கண்ணுள்ள நன்கு அழகுபெற இயற்றிய பெரிய கதவினை யுடைத்து, அழிக்கும் ஆற்றலமைந்த கருவியாகிய நுனிப்பாகஞ் சிதைந்துள்ள கொம்பு களோடு கூடி விளங்குகின்றன. அக் கோட்டையோ மலையுள்ள விடங்களில் அம்மலை தானே அரணாகவும், மலையில்லாத விடங்க ளில் மதில் அரணாகவும் மலையோடு மாறுடும்படியாகக் கட்டப் பட்டதும், வளைந்து கூர்ந்து நோக்கும் இரு கண்களைப் போன்ற தோற்றத்தினைக் கொண்ட வாயிலோடு கூடியதுமான புறமதிலை யுடையது; நாட்டினைக் கண்டாற் போன்று வயல்களுங் குளங் களு மிக்கு, அம்புக் கட்டுகள் நிறைந்த மலைபோன்ற இடை மதி லையு முடையது; கடக்க முயல்வாரைச் சாவச் செய்யும் கழுக் கோலாக நாட்டிய மரக்கூட்டங்கள் நெருங்கப் பெற்றதும், ஈன் றணிமை கொண்ட பெண்டிர் அணியாத ஐயவியாகிய துலா மரம் கதவிற்குக் காவலாக வாயிலின் உட்புறத்திலே தூக்கி விடப் பட்டதுமான உண்மதிலையு முடையதாம்.

நினது தலைவி நின்னாற் குறிக்கப்பட்ட கால அளவு வரை நின்னேவற்படியே ஆற்றி யிருந்தனள்; கால நீட்டித்தமையான் இப்பொழுது நின்னை நினைத்து வருந்துதற்கு முரியளாயினள். அவள் அமைதியாகிய ஒழுக்கத்தினை மேற்கொள்ளுதற்குக் காரணமான கல்வியினை யுடையாள்; அடக்க குணத்தான் மிகுந்த அழகி; ஊடற் காலத்திலும் இன்பமாய கருத்துக்களை யெடுத்துக் காட்டும் இனிய பற்களைக் கொண்டவள்; அமிழ்து போன்ற மொழிகள் நிறைந்த பவளவாயினள்; ஆராய்வுகள் பல வற்றை யடக்கிய அரிய நோக்கினள்; பிறைபோன்ற நெற்றியள்; அன்னம் போன்று அசைந்த நடையள்.

திருமகள் எழுந்தருளியுள்ள நினது திருமார்பு குலமகளி ராகிய நினது காதலியர் கண்ணுறங்குதற் கினிய படுக்கையாகப் பரந்துள்ளது. அதன்கண் நின்னை எதிர்த்த எழு அரசர்களின் முடிகளாலாகிய மாலை முதன்மை கொண்டு விளங்குகின்றது. அம்முடிமாலையுடன், செம்பு முதலியவற்றின் சேர்க்கை விட்டு, நெகிழ்ந்த நிலையினனே அழகிய மணிகளுடன் சேர்க்கப்பட்டுப் பலவித அணிகள் இயற்றுதற்குத் தகுதியாக ஓட்டற்ற ஒளி யுடைய கிளிச்சிறைப் பொன், விளங்குகின்ற சுடர்க் கொடி களையுடைய வயிர மணிகளுடன் கூடி மாறுபட்டு ஒளியினை வீசும் பூண்கள் பொலிந்துள்ளன.

இங்ஙனஞ் சிறந்த நினது காதலியர் படுக்கையாகிய மார் பினைப் போர் காரணமாக வேற்றுப் புலஞ்செல்ல வேண்டாக்

காலத்து அவர்க்குப் பகுத்துக் கொடுத்தலினும், வேற்றுப் புலஞ் செல்ல வேண்டிய காலத்து அதனை அவர்பாலிருந்து வாங்கிச் செல்லுதலினும் வல்லவனே! நினது மார்பு தலைவியை மிகவும் வருத்தா நின்றது. அவள் இனி, தனிமையான படுக்கை யிடத்தே தங்குதலைப் பொருள். ஆகலின், அன்பு கூர்ந்து அவள் பால் வந்து அருள் புரிவாயாக!

(7) வலம்படு வியன்பணை

(கஎ) பாட்டு

புரைவது நினைப்பிற் புரைவதோ வின்றே
பெரிய தப்புந ராயினும் பகைவர்
பணிந்துதிறை பகரக் கொள்ளுநை யாதலிற்
றுளங்குபிசி ருடைய மாக்கட னீக்கிக்
கடம்பறுத் தியற்றிய வலம்படு வியன்பணை
யாடுநர் பெயர்ந்துவந் தரும்பலி தூஉய்க்
கடிப்புக் கண்ணுறூஉந் தொடித்தோ ளியவ
ரரணங் காணாது மாதிரந் துழைஇய
நனந்தலைப் பஞ்ஞிலம் வருகவிந் நிழலென
ஞாயிறு புகன்ற தீதுதீர் சிறப்பி
னமிழ்துதிகழ் கருவிய கணமழை தலைஇக்
கடுங்கால் கொட்டு நன்பெரும் பரப்பின்
விசும்புதோய் வெண்குடை நுவலும்
பசும்பூண் மார்ப பாடினி வேந்தே.

பதவுரை

துளங்கு - ஆடுகின்ற, பிசிர் உடைய - துளிகளைக்கொண்ட, மா கடல் - பெரிய கடலை, நீக்கி - விலக்கிச் (கடந்து) சென்று, கடம்பு - எதிரிகளின் காவல் மரமாகிய கடப்ப மரத்தினை, அறுத்து - வெட்டி, இயற்றிய - உண்டாக்கிய, வலம் - வெற்றி யானது, படு - போர் செய்து வருந்தாமலே பகைவர் வெருவி யோடும்படி முழங்குதலால் தோன்றும்படியான, வியன் - பெரிய, பணை - முரச வாத்தியத்தை, ஆடுநர் - ஆடிக்கொண்டே, பெயர்ந்து வந்து - நடந்து சென்று, அரும்பலி - அருமையான பலிகளை, தூய் - கொடுத்து, கடிப்பு - கோல்களாலே, கண் உறும் - அடித்தொலிக்கும்படியான, தொடி - வளையல்களணிந்த, தோள் - புயங்களையுடைய, இயவர் - வாச்சியக்காரர்கள், (ஆடுகின்ற துளி கள் = அலை.)

அரணம் - பாதுகாவலாகிய இடம், காணாது - கிடைக்கப் பெறாது, மாதிரம் - எட்டுத் திக்குகளிலும் சென்று, துழை இய -

தூருவிக்கொண்டு திரிகின்ற, நனந்தலை - பரந்த வுலகத்தே யுள்ள, பஞ்ஞிலம் - மக்கட் கூட்டத்திற்கு, இங்நிழல் - பாதுகாவலாகிய எமது அரசன் குடைநிழலின் கீழே, வருக என - வருவீர்களாக என்று, ஞாயிறு - சூரியன், புகன்ற - வெளிவிட்ட, தீது - வெப்பமாகிய கொடுமையினை தீர் - விலக்கும்படியான, சிறப்பின் - மேன்மையினையும், அமிழ்து - தேவாமிர்தினைப் போன்ற செயலினைக் கொண்ட நீரினையும், திகழ் - கொண்டு விளங்காநின்ற, கருவிய - தொடர்ச்சியான, கணமழை - மிகுந்த மழை, தலைஇ - பெய்து (பின்பு), கடுங்கால் - கொடுங்காற்று, கொட்கும் - வீசும்படியான, நன்பெரும் - மிகப் பெரிய, பரப்பின் - வெளியினைக் கொண்ட, விசும்பு - ஆகாயத்திடத்தே, தோய் - பொருந்தி விளங்கும்படியான, வெண்குடை - நினது வெண்கொற்றக் குடையின் அருட்சிறப்பை நுவலும் - எடுத்துச் சொல்லுதற்குக் காரணமான, பசும்பூண் - பசிய பொன்னாலும் மணிகளாலும் செய்யப்பட்ட ஆபரணங்களை யணிந்த, மார்ப - மார்பினை யுடையவனே, பாடினி - பாடிப்புகழும் விறலியர்களை, வேந்தே - ஆதரிக்கும் அரசனே! நினக்கு - உனக்கு, புரைவது - குற்றங்களைக் கொடுக்கக்கூடியதன்மை, நினைப்பின் - ஏதேனுமுண்டோ என்று ஆராயின், பகைவர் - நினது எதிரிகள், பெரிய - கொடிய தவறுகளை, தப்புநராயினும் - செய்திருந்தாராலும், பணிந்து அவர்கள் கீழ்ப்படிந்து, திறைபகர - கப்பங் கொடுத்தவளவிலே, கொள்ளுநை - மன்னித்து ஏற்றுக் கொள்கின்றாய், ஆதலின் - ஆகையால், புரைவது - குற்றங்களைக் கொடுக்கக் கூடிய தன்மை, இன்று - யாதுமில்லை. ஏ-அசைநிலை.

விருத்தியுரை

ஆடுநர் - முற்றெச்சம். தூஉய் - சொல்லிசை யளபெடை. கண்ணுறாஉம் - இன்னிசையளபெடை. கண்ணுறல் - முரசின் கட் பாகத்தே (கடிப்பு) பொருந்துதல்; அஃதாவது அடித்தல். துழைஇய - சொல்லிசையளபெடை. பஞ்ஞிலம் - மக்கட் கூட்டம். மழைநீர் அதன் சிறப்புக் கருதி அமிழ்து எனப்பட்டது. இதனை, "வானின்றுலகம் வழங்கி வருதலாற், றானமிழ்த மென்றுணரற் பாற்று," என்ற குறளா லுணர்க. கருவி - தொடர்பு. சேர நாடாகிய மலையாளத்தில் இக்காலத்தும் ஆண்டின் தொடக்கத்திற் பெருமழை தொடர்ந்து பெய்து, பின்பு கொடுங்காற்று வீசுதலை, "கருவிய கணமழை தலைஇக் கடுங்கால் கொட்கும்," என்ற அடிகளின் பொருளோடு கூட்டி நோக்குக. கொள்ளுநை - முன்னிலை யொருமைவினைமுற்று; விகுதி ஐகாரம் நகர வொற்றோடு கூடிவரல் அக்காலவழக்கு. இயவர் பஞ்ஞிலம் இங்நிழல் வருக என வெண்குடை நுவலும் மார்ப! எனக் கூட்டுக. இத

னால், சேரனது வெற்றியும் பொறுமையும் விளக்கப்பட்டன. இதில் சேரனது முரச வாத்தியம் வீரர் போர் செய்து வருந்தா வண்ணம் பகைவர் வெருவி யோடும்படி முழங்கி அரசனுக்கு வெற்றியை யுண்டாக்கும் என்று சிறப்பித்தபடியால் இதற்கு வலம்படு வியன்பணை என்ற பெயர் கொடுக்கப்பட்டது.

புதிய நடை

பசும்பொன்னாலும், பசிய மணிகளாலுஞ் செய்யப்பட்ட பணிகளை அணிந்துள்ள பரந்த மார்பனே! பாடிப் புகழும் விறலியர்களைப் பாதுகாக்கும் பண்புடைய வேந்தனே! வளைய லணிந்த தோள்களையுடைய நினது வாய்ச்சியக்காரர்கள் ஆடிக் கொண்டே நடந்து சென்றனர்; நினது பெரிய முரசிற்கு அருமையான பலிகளைக் கொடுத்தனர்; கோல்களாலே அதனை அடித்து முழக்கினர். அது வீரர்கள் போர் செய்து வருந்தா மலே பகைவர்களை வெருவியோடும்படி முழங்கியது. அவ் வளவில், உனது படைகள் அலைகள் நிறைந்த பெருங் கடலைக் கடந்து சென்று, பகைவர்களின் காவன்மரமாகிய கடம்பினை வெட்டி வெற்றியை உண்டாக்கின.

பாதுகாவலாகிய அரசாட்சியை நாடி, எட்டுத் திக்கிலுஞ் சென்று திரிந்து கொண்டிருந்த பரந்த உலகத்தேயுள்ள மக்கட் பரப்பிற்கு அவ்வாய்ச்சியக்காரர்கள், "பாதுகாவலாகிய எமது அரசன் குடைநிழலின் கீழே வருவீர்களாக." என்று உனது வெண்கொற்றக் குடையின் அருட் சிறப்பை விளக்கிக் கூறினர். நினது வெண்கொற்றக் குடையோ, மிகப் பெரிய வெளியினைக் கொண்ட விண்ணகத்தே நின்று விளங்கும் மேன்மையினையுடைய தாம். அவ் விண்ணகமோ முதலிற் பெருமழை பெய்து, பின்பு, கொடுங்காற்று வீசப்பெறுங் குணமுடையதாம். அப் பெரு மழையோ, வெய்யோன் வெளிவிட்ட வெப்பமாகிய கொடுமை யினை விலக்கும் மேன்மையினையும், அமிழ்தினைப் போன்று உயிர்களைக் காக்கும் அருஞ்செயல் கொண்ட நீரினையும், தொடர்ச்சியாகப் பெய்யும் தொன்மையினையு முடையதாம்.

நின்னிடத்திற் குற்றங்களை யுண்டாக்கக் கூடிய கொடுங் குணம் யாதேனுமுண்டோ என்று ஆராயின், நினது பகைவர்கள் பெருங் குற்றங்களைச் செய்திருந்தனராயினும், அவர்கள் நினக் குக் கீழ்ப்படிந்து திறை கட்டிய வளவிலே, நீ அவர்களை மன் னித்து ஏற்றுக் கொள்கின்றாய். ஆகலின் நின்னிடத்தில் குற்றங் களை யுண்டாக்குங் கொடுங்குணம் யாதுமில்லையாம்.

(தொடரும்)

வரலாற்றுப் பகுதி : History & Biography

இத்தாலிய தேயப் பழங்குடிகள்

[பருத்தித்துறை திரு. த. இராமநாத பிள்ளை, B.A., (Lond.)]

இரண்டாம் அதிகாரம்

உரோமாபுரத்தின் ஆதி வரலாறு

இரைபர் நதி முகத்துவாரத்தில்நின்று பதினறு மைல் தூரத்தில் அந்நதிக்கரையில் எழுகுன்றுகள் உண்டு. அக்குன்று கண்மிசை அமைக்கப்பட்ட காவலரண் உரோமாபுரமாகும். ஏழுகுன்றுகளையும் இக்காலத்திற் காணவியலாது. குன்றுகளுட் சில தீ, வளி, நீர், முதலிய இயல்பேதுக்களால் அழிவெய்தி யிருக்கக்கூடும். உரோமர் தம் உற்பத்தி வரலாற்றை மறந்து சில பழங்கதைகளை நம்பி அவற்றினைத் தம் வரலாறென எழுதி வைத்தனர். உரோமரது ஆதி வரலாறு வேர்சிலியஸ் எழுதிய காப்பியத்தில் கூறப்பட்டுள்ளது. வேர்சிலியஸ், அகஸ்தஸ் தனிக்கோலனின் அரசவை வித்துவா ஞகையால், அகஸ்தஸ் தேவ வம்சம் என நாட்டுதற்காக ஏனியாஸ் என்னும் உரோஜ தலைவனின் சந்ததியில் தோற்றின னெனப் புகழ்ந்து ஏனீட் என்னும் இதிகாசத்தைப் பாடினன். உரோமா புரத்தின் ஆதி வரலாற்றை ஏனீட் இதிகாச வரலாற்றைச் சார்ந்து கூறுதும்.

கிரேக்க மன்னர்களுள் துலங்கிய அக மன்னனுக்கு மெனிலேயஸ் என ஒரு உடன்பிறந்தான் இருந்தான். அவன் மனைவி தான் மானிடப் பெண்களுள் அழகிற் சிறந்த எலன் என்பவள். அப் பெண்ணை ரோஜமாநகரத்து இளங்கோ பாரிஸ் கவர்ந்து சென்றனன். முதற் கடவுள் யூப்பிற்றரின் தேவி யூனோவும், கலைமகள் மினேர்வாவும், வீனஸ் என்னும் காம தேவதையும் தம்முள் யார் அழகு வாய்ந்தவரெனப் பாரிஸ் என்பவனிடம் கேட்க அவன் மூவருள் காமதேவதையே அழகிற் சிறந்தவளெனத் தீர்த்தான். அக்காம தேவதையின் நன்கொடையாக அவளைப் பாரிஸ் பெற்றான். கிரேக்க தலைவர் யாவரும் யுத்தத்திற்கு ஆரவாரித்தனர். அவ்யுத்தவரலாற்றை கிரேக்க இதிகாச மாகிய இலியட் என்னும் நூலில் வாசிக்கலாம். அக மன்னன் தானைகளைப் படகேற்றிக் கடல் கடத்தற்குச் சாந்தியாக ஒரு தலைவனின் தனிக் குமரி ஒருத்தியைப் பலியிட்டுச் சின்னுசி

யாக்கரை சேர்ந்து பேர்காமம் என்னு ரோஜமா நகரைச் சூழ்ந்தான். கிரேக்கரும் உரோஜரும் பத்து ஆண்டுகள் பொருதனர். ரோஜதலைவன் கெக்ரரைக் கிரேக்க வீரன் அச்கிலீஸ் கொன்ருனுயினும், கெக்ரரின் தம்பிமார் பாரிஸ் முதலிய நாற்பத்தொன்பதின்மர் போரை நடாத்தினுர்கள். கிரேக்கர் ரோஜமா நகரத்தைக் கைப்பற்ற இயலாது கலங்கினர். பத்தாம் ஆண்டு ஒடிசியஸ் என்னும் கிரேக்கவீரன் நகருட் புக ஓர் உபாயங் கூறினுன். ஒரு மரக்குதிரை செய்து அதனுள் வீரர் பலரை அடைத்து விட்டுக் கிரேக்கர் வீடு பேர்வார்போலக் கப்பலேறிப் பாய்விரித்து அகன்றனர். ரோஜரில் ஒரு சாரார் பகைவருடைய குதிரையைத் தொட்டாலும் கேடுவிளையும் என்றனர்; ஒரு சாரார் குதிரையை நகருட் செலுத்தின் தமது வெற்றிக்கு அடையாளமாகுமெனக் கிளக்தனர். பகைவர் தம் நாடேகினர் என்றெண்ணி உரோஜர் குதிரையை நகருள் இழுத்து வெற்றி விழாக் கொண்டாடினுர்கள். அன்றிரவு உரோஜர் இனிது உறங்க எண்ணினர். குதிரையினுள் இருந்த கிரேக்க வீரர் நள்ளிருள் யாமத்தில் வெளிவந்து கணையமாத்தை நீக்கி நகரவாயிலைத் திறந்து மரக்கலத்தில் ஏகிய வீரரை உள்ளேற்று நகரவீதிகள் தோறுஞ்சென்று உரோசரைக் கொன்று நகருக்குத் தீயிட்டு அழித்தனர். பாரிஸ் இறந்தபின் அவன் சகோதரர் சிலரொடு கூடிவாழ்ந்த எலனை மெனிலேயஸ் திரும்பவும் மனைவியாக ஏற்ருன். நகர் எரிய உரோஜவீரர் சிலர் தப்பி ஓடினர். ஏனியாஸ் என்னும் உரோஜ வீரன் தனது தந்தை அன்கயிசைத்தோளி லிட்டுத் தன் சுற்றத்தாரோடு கப்பலேறி புது நாடுகளைத் தேடி அலைந்தான். வீனஸ் என்னுங் காமதேவதை ஏனியாஸ் வீரனின் தாயாகையால் அவனுக்கு இத்தாலியா தேசத்தை அளிக்கும்படி யூப்பிற்றரிடம் வரங்கேட்டுப் பெற்றனள். யூனே தன் செறுநரை அழித்தற்கெண்ணி வாயுதேவனுகிய ஏயோலனது உதவியால் ஒரு புயல் எழுப்பி, உரோஜருக்கு இடுக்கண் விளைத்தனள். சமுத்திரதேவன் நெப்ட்யூன் (Neptune) தனது கடலில் பிறர் அதிகாரம் செலுத்துவதைக் கண்டு வெகுண்டு சூலாயுதத்தால் அடித்துத் திரை கடலை அடக்கினுன். இவ்வண்ணம் ஏனியாஸ் பலகாலம் அலைந்து ஆபிரிக்காக் கரையில் எற்றுண்டான். ஏனியாஸ் காதாக்கா என்னும் பட்டினத்தில் இறங்கி இராணி டைடோவின் முன்றில் அடைந்து தன் வரலாற்றைச் செப்பினன். டைடோ அவனை உபசரித்து மோகித்தாளாக, அவன் அவளொடு சில காலங் கழித்தான். பின்னர், தாயின் கட்டளையால் தலைவியைப் பிரிந்து தனக்கு வாக்களிக்கப்பட்ட இத்தாலியா தேசத்திற்குப் புறப்பட்டான். ஏனியாஸ் பிரிந்ததை டைடோ அறிந்து ஆற்ருளாகித் தீப்பாய்ந்தாள். ஏனியாஸ்

இத்தாலியாக் கரை அடைந்து இலத்தின் நாட்டில் இறங்கி லெவினியஸ் மன்னனால் உபசரிக்கப்பட்டு, அவன் மகள் லெவினியாவை மணம் புரிந்தான். லெவினியாவைக் காதலித்த ரேணஸ் ஏனியாசோடு பொருது தோற்றான். ரேணஸ் இரண்டாம் முறையும் ஏனியாசோடு யுத்தஞ் செய்தனென்றும் அவ் யுத்தத்தில் ஏனியாஸ் மறைந்தனென்றுந் தெரிகிறது. ஏனியாஸ் கீழுலகு சென்று தன் முற்சந்ததியாரையும் உரோஜ யுத்தத்தில் இறந்த வீரரையும் தனது பிற்சந்ததியாராகும் உரோமரையும் கண்டு மகிழ்ந்த முறையாகப் புலவன் வேர்சிலியஸ் அகஸ்தஸை முகமன் கூறி அகஸ்தஸ் ஏனியாசின் வம்சத்தவன் என காட்டினான். உரோமர் நரகமுண்டென நம்பினரென்றும் பாவஞ் செய்தோர் கல்லுருட்டல், சில்லிற் சுழல்தல், நெருப்பில் எரிதல் முதலிய தண்டனைக்குட்படுவரென நம்பினர் என்றும் ஏனிட் இதிகாசத்தாற் புலப்படுகிறது. இத் தண்டனைகளை வேர்சிலியஸ் நன்கு வருணிக்கின்றனர். இது நிற்க.

ஏனியாஸ் மகன் அஸ்கானியாஸ் லவினியம் நகரை அரசாண்டு, பின்னர், அல்பா லோங்கா என்னும் புது நகரொன்றை அமைத்தான். ஏனியாஸின் பன்னிரண்டாந் தலைமுறையாகத் தோன்றிய புருக்கஸ் அல்பாலோங்காவில் ஆணை செலுத்தினான். அவன் மக்கள் நூமிற்றர் அமுலன் என்னும் இருவர் தம்முள் முரண்பட்டு, மூத்தோன் மகளாகிய றேயா சில்வியாவை இளையோனாகிய அமுலன் வெஸ்தாத்தேவியின் சேவைப் பெண்ணாக்கினான். தேவராட்டிகள் கன்னியராக நிறைகாத்தல் மரபாயினும், அப் பெண் போர்க்கடவுள் மார்ஸ் என்போனுக்கு இரட்டைக் குழந்தைகளைப் பயந்தாள். அக் குற்றத்திற்காக அவளை அமுலன் கொல்வித்தான். அவளீன்ற இரட்டைக் குழந்தைகளை ஒரு தொட்டிலில் வைத்து இரைபர் நதியிலிட்டான். பலற்றையின் குன்றில் அத்தொட்டில் கரைசேர, தன் குட்டிகளை இழந்த ஓநாயொன்று அக்குழவிகளைப் பாலூட்டி வளர்த்தது. ஓநாய் முலைகொடுத்த விநோதத்தைக் கண்ட இடையன் ஒருவன் அக் குழந்தைகளை தானெடுத்துச் சென்று உரோமியுலுஸ் உரேமுஸ் எனப் பெயரிட்டு வளர்த்தான். அவ்விருவரும் வலிய இடையராகிக் களவுக் குற்றஞ் சாட்டப் பெற்றனராய் நூமிற்றர் முன்னிலையில் நின்றனராக, அவர்களை அவன் தன் பேரப்பிள்ளைகளென அறிந்தான். பின்பு உரோமியுலுஸ், உரேமுஸ் என்போர் அமுலனைக் கொன்று தம் பாட்டனுக்கு அரசுரிமை அளித்தனர். உரோமுயுலுஸ் என்போனும் அல்பாலோங்காவை நீங்கிப் புதிய நகரொன்றைத் தாம் வளர்ந்த இடத்தில் அமைக்க நினைத்து முழுத்தம் பார்த்து நின்றுழி உரேமுஸ் ஆறு பிணந்தின்னிப் பறவைகளையும் உரோமுயுலுஸ் பன்னி

ரண்டு பறவைகளையும் கண்டனராகையால் உரோமுலுஸ் தேவரிடம் அனுமதி பெற்ருன். ஒரு சிறு நகரைப் பலற்றையின் குன்றில் அமைத்து நிலவரணைக் கட்டினுன். உரேமுஸ் அப் புரிசையை நிந்தித்துக் கடந்தமையால் உடன்பிறந்தோனுல் கொல்லப்பட்டான். உரோமாபுரம் கட்டப்பட்டது கி. மு. 753 என்ப. உரோமர் அவ்வாண்டை முதலாண்டாகக் கொண்டனர். இனி அல்போலோங்காவிலிருந்தும் குடிகள் சிலரை உரோமுலுஸ் குடியேற்றியும் நகருக்குச் சனங்கள் போதாமையால் வேந்தராணைக் கமையாத கள்வர் மறவர் முதலியோர்க்கு தமது நகரம் ஏமவரணுகுமென உரோமுலுஸ் பறைசாற்றிக் குடிகளைப் பெற்ருன். அவர்களுக்குப் பெண்கள் இல்லாமையால் கவன்ருன். தியோருக்கு சபீனியர் பெண் கொடுக்க மறுத்தனராதலின் உரோமுலுஸ் பெண்களை யெடுத்தற்கு ஓர் உபாயம் ஆலோசிப்பானுயினுன். கொன்சஸ் என்னும் தெய்வத்திற்கு விழா நடத்துவேமென உரோமுலுஸ் சபீனியரை அழைக்க, அவர்கள் தம் மகளிரொடு வந்தார்கள். விழா நடந்துழி பெண் வேண்டினேர் தாம் விரும்பிய பெண்களை இராக்கத முறையாக மணஞ் செய்தனர். இவ்வண்ணம் மகளிரை இழந்த பெற்ருேர் தமது அரசன் ரையிற்றஸ் றேற்றியனுக்கு முறையிட்டனர். கயினியர் கிறிஸ்த்துமேனியர் அந்தெனுயி என்னும் சபீனிய சாதிகள், ரோமரொடு பொருது தோற்றனராக, ரையிற்றஸ் ரேற்றியன் சேனையொடு சென்று ரோமா நகரத்தைச் சூழ்ந்து நின்ருன். உண்ணகர் ஸ்பூறியஸ் இராறிப்பஸ் என்பவனின் காவலில் இருந்ததென்றும் அவன் மகள் சபீனியர் இடக்கையிலணிந்த பொன்னணிகளை விழைந்து அரண்வாயிலைக் காட்ட பகைவர் நுழைந்து நன்றியாகத் தமது இடக்கைப் பரிசங்களால் அவளை இடித்துக் கொன்றனரென்றும் ஒரு கட்டுரை உண்டு; இனி, சபீனியர்க்கும் :உரோமருக்கும் போர் நடந்துழி உரோமர் தோல்வியடையுஞ் சமயத்தில் வதுவைகள் போர்க்களத்துக்குச் சென்று தம் கணவர்க்கும் பிதாக்களுக்கும் இடையில் நின்று குலைந்த கூந்தலராய் நீர் உகுத்த கண்ணினராய்த் தம் பால்வாய்க் குழந்தைகளை யேந்திக் கைநீட்டிச் சமாதானம் இரந்து பெற்றனரென வேருேர் இனிய கதையுண்டு. சபீனியர் சிலர் உரோமா நகரத்தில் குடியேறினுர்களென்றும் ரைற்றஸ் மரித்தபின் உரோ:முலுஸ் இரு சாதிக்கும் வேந்தனுனென்றும் ஒரு கடும் புயலில் மறைந்தானென்றும் ஒரு கோயில் அவனுக்கு அமைக்கப்பட்டதென்றும் பழங்கதை செப்பும்.

இனி உரோமுலுஸ் உரோமரை மேன் மக்கள் கீழ் மக்களாகப் பிரித்தனனெனவும், மேன்மக்களை இராமினிஸ் தித்தீஸ் இலுக்குறீஸ் என மூன்று சாதிகளாக வகுத்தனனெனவும், ஒவ்

வொரு சாதியையும் பத்தினங்களாகவும் ஒவ்வொரு இனத்தையும் பத்துக் குழுக்களாகிவும் ஒவ்வொரு குழுவையும் பத்துக் குடும்பங்களாகவும் வகுத்தான் எனவும் பழங்கதை கூறு மாதலின், உரோமாபுரம் மூன்று சாதிகளையும் முப்பது இனங்களையும் முந்நூறு குழுக்களையும் 3,000 குடும்பங்களையும் உடையதாயிற்று. இக் குடும்பங்களில் தெரிவு செய்யப்பட்ட முதியோரே மேன்மக்கட் சபையங்கத்தினராதற்கு உரிமை யுடையோர். 3000 காற்படையும் 300 குதிரைப்படையும் இக்குடும்பங்களினின்று தெரியப்பட்டன. அவை மூன்று கூட்டம் சேனையாயின. கீழ்மக்களை இங்ஙனம் வகுக்கவில்லை. இஃதெல்லாம் புனைந்துரை என்பது வெளிப்படை. உரோமெனப் பெயர் வந்தமைக்குக் காரணந் தெரியாமையால் உரோம் என்னும் பதத்திற்கு ஊலுஸ் விகுதி கொடுத்து உரோமுலுஸ் என்போனின் பேரால் நகருக்கு நாம கரணஞ் செய்யப் பட்டதென மொழிந்தனர் போலும். இலத்தின் மொழியில் பெயர்ச் சொற்கள் ஊலுஸ் என்னும் பகுதிப் பொருள் விகுதி பெற்று வேறு பெயர்ச்சொற்களாதல் இலக்கணமுறை யென்பது உணரற் பாலது. இனிக் கீழ்மக்களுக்கு உரிமைகளை மறுத்தற்காகத் தொன்றுதொட்டே கீழ்மக்கள் கீழ்மக்களாய் உரிமை களில்லாதவர்களாய் இருந்தனரென வற்புறுத்தினர். அங்ஙனம் வற்புறுத்துதற்கு உரோமுலுஸ் அங்ஙனம் வகுத்தனரென மேன் மக்கள் கட்டுரை செய்தனர் என்பதும் பொருந்தும். (தொடரும்)

மாணிக்கவாசகர் குலம்

"குரு:—அவர் (மாணிக்கவாசகர்) குலம் ஆமாத்திய ரென்னும் ஓர்வகை அந்தணர் குலமென்று கூறப்பட்டிருக்கின்றது.

சீடன்:—ஆமாத்தியர் என்னும் மொழி வடமொழி யாதலின், அம் மொழிக்கு மந்திரிகளென்று வடமொழிப் பண்டிதர்கள் பொருள் கூறுகின்றனர். எனவே அம்மொழி, எமது மணிவாசகப் பெருமான் அமைச்சுரிமை பூண்டிருந்தமையை விளக்குமேயன்றி அவர் குலத்தை விளக்கமாட்டாது. மேலும், அந்தணருக்குள் ஸ்மார்த்தரென்றும், ஆதிசைவரென்றும், நம்பூரியரென்றும் ஆராத்தியரென்றும் பெயர்கள் வழங்கப்பட்டுள்ளன."

—மணிவாசகப் பெருமான் வரலாற்று வினாவிடை.

ஆராத்தியன்—ஜங்கம் என்ற இலிங்காயத பிராமணர்களின் வகுப்புப் பெயர். அவர் ஏனைய பிராமண வகுப்பாருடனும் கொள்வினை கொடுப்பினை செய்வதில்லை. ஆனால் சில உயர்குல மக்களுக்குக் குருவாகவும் ஆசாரியராகவும் இருந்து வந்தனர். மகாதேவனை இலிங்கவடிவிற் பணிந்து பிராமண ஆசாரங்களை யனுஷ்டித்து காயத்திரி மந்திரத்தைச் செபித்து வந்தார்கள்.

கா. சிவ. க.) —சென்னை அரசியன் முறை விளக்கம்.

கவின்கலைப் பகுதி - Fine arts

"மண்ணியல் சிறுதேர்"

[திரு. அ. சிதம்பரநாதஞ் செட்டியார், பி.ஏ.]

"மண்ணியல் சிறு தேர்" என்னும் எண்ணுறுஞ் சுவை ததும்பும் பாட்டிடைவைத்த உரைவகைப் பனுவ லொன்று மேலைச்சிவபுரி சன்மார்க்க சபையாரால் சமீபத்தில் வெளியிடப் பட்டுளது. அது சூத்திரகன் என்னும் வடமொழிவாணர் அம் மொழியிற் செய்த "மிருச்சகடிகம்" என்னும் சங்கீர்ணப் பிரகரண நாடகத்தின் விழுமிய மொழிபெயர்ப்பாகும். அதனை நமக்குத் தந்தவர்கள் "நல்ல பல நூலின் நறுஞ் சுவையும், மெய்ப் பொருளும், வல்லை யுணரும் மதி" பெற்ற பண்டித மணி கதிரேசச் செட்டியாரவர்கள்.

இந் நாடகத் தலைவனுய சாருதத்தனது அரும் பெரும் குணங்கள் யாவர் உள்ளத்தையும் ஈர்த்துருக்கும் பெற்றிய. எண்ணு செல்வம் அனைத்தும் பெற்ற அவ் வண்ணல் நல்ல நீர்த் தடம் போல் அல்ல லுற்றோர்க்கு அளித்து மெலிவினை அடைகிறான். (பக். 46). "அவன் காண்டற்கு எல்லாரானும் விரும்பத் தக்கவன்; இன் சொலாளன்; தன் கொடைப்பெருமையைப் பிறரிடம் கூறுபவனல்லன்; நன்றல்லது அன்றே மறப்பவன்; பலவாறு விரிப்ப தென்? கண்ணோட்டத்தால் தன் உடல், பொருள் முதலிய எல்லாம் பிறர்க் குரியன என்றே உணர்ந்தவன்; அடைக்கலம் புகுந்தார்க்கு அருள் செய்யும் வள்ளல்." (பக். 86). "மலர்ந்த மாதவிக் கொடியையும் வளைத்து மலர் பறிப்பின், அங்ஙனம் செய்தலால் ஓர் அமயம் அதன் தளிர் உதிர்ந்து விடுமோ என்னும் ஐயத்தால் அக் காரியத்தைச் செய்தற்கும் மனம் ஒருப்படாத இனிய நண்பன் அச் சாருதத்தன்." (பக். 344). அவன் தனது தண்ணருங் குணங்களாலேயே எண்ணரும் இடர்களை அடைகிறான் என்பதை இந் நாடகம் காட்டுகிறது எனின், அஃது உலகியலை அன்றி வேறெதைக் காட்டுகிறது? தன் பொருள் வளங் குன்றியகாலையில், தன்னிடத்து அடைக்கலமாக வைக்கப்பட்ட பலகலன்களைத் திருடனொருவன் திருடிச்சென்றானாகவும், அத் திருடன் வறிதேகாது பயனெய்தினான் என்பதுபற்றி அகமகிழும் அவ் வண்ணல், 'கள்வன் வந்து கன்னமிட்டு வெளியேறினான்' என்ற சொல்லை முதற்கண் கேட்ட காலையில், அவ் வேழைக் கள்வன் தன்னில்லுட் புக்கு ஒன்றும் பெறவில்லையே என வருந்தி யிருப்பன் கொல்லோ என்று தான் வருந்துங்கால் காம் வியப்படையாவிடினும், "வீட்டிற் கன்னம் வைக்கப்பட்டது" என்ற சொல் கேட்டவுடனே அக்கன்னத்துளை யைக் கண்டு "அது அழகாக இருக்கிறது, குட வுருவுடைத்து" என்று சொல்லி அவன் இன்புறுங்கால் வியப்புறுது நிற்போமா?

அடைக்கலப் பொருளினிமித்தம் அதற்கீடாகத் தன் மனைவி தனக்கு அனுப்பிய இரத்தின மாலையைக் கண்டு, "ஓ பார்ப்பனி (என் மனைவி) என்மாட்டு அருள் புரிகின்றாள். அந்தோ! இப்பொழுதுதான் வறியவனாகின்றேன்" என்று கூறுங்கால் அவனது இணையற்ற பெருமை துணைக் கூற லரிதாய்த் தோன்றுகின்றது.

இத்துணைப் பெருமை வாய்ந்த தருமனது முகத்தைக் காண்டலும் சண்டாளர்களுக்குள்ளேயே இவனைக் கொல்வதில் விருப்பின்றிப் போதலும், சீட்டுப் போடலும், வாள் நழுவி வீழ்தலும் வியப்பன்றே. பின், வசந்தசேனையைக் கொன்றதாகப் பொய்க் கொலைக் குற்றத்தைக் கோடிய மனத்தாற் சாருதத்தன் மீது சாற்றிய சகாரன் என்னும் காதகன் தப்புவதுதான் வியப்பு. ஆனால், அவனும் சாருதத்தரை யல்லாது வேறு யாரிடம் அடைக்கலம் புகுந்தாலும் அந் நிலையில் உய்ந்திருக்கமாட்டான். அப் பேய் போலுங் கொடியானை நாய்களை விட்டுக் கடித்துண்ணச் செய்ய வேண்டுமெனக் கூறும் சருவிலகன் என்னும் அந்தணன் சொற்கேளாது, செந்தண்மை கொண் டொழுகும் அறவோனாகிய சாருதத்தன் விடுதலை செய்தல், வியப்பன்று.

ஆனால், சாருதத்தன் நமக்கு வியப்பை எவ்விடத்துந் தாராது செல்கின்றானில்லை. வியப்பை நயவாரும் நயந்து வியக்கும்படி ஓரிடத்தே நடந்துகொள்கின்றான். கழுவில் ஏற்றித் தன்னைக் (காரணமின்றிக்) கொல்லும்படி அரசன் ஏவினான் என்பதைக் கேட்ட சாருதத்தன்,

> "எனைத்
> தகவறக் கொல்லுதி; சாற்றுமிச் செயலால்
> சுடுநர கிடைநின் குடிவழி மக்களொடு
> கடிதின் வீழ்ந்து படுதுயர் உறுகவே".

என்று கூறுகின்றானாயின், குணமென்னும் குன்றேறி நின்றார்க்கும் கண நேரம் வரும் சினனுண்டு என்றும், உலகில் அற்றார் நவை முழுதும் என்றற்கு யாரும் இலர் என்றும் கவி காட்டக் கருதியதாகக் கருதி அடக்கிக்கொள்வ தல்லால் வேறென் செய்வது? இங்ஙனம் விலக்கத் தக்க குணநலன் பலவும், அக் குணநலத்தானேயே விடக்கத் தகும் குற்ற மொன்றும் பெற்று நின்ற சாருதத்தனை முற்ற முடிய அறிய வேண்டுவார், நூலினுள் நுழைந்து பார்க்கக் கடவர்.

இனி, மனக் கினிய உவப்பளிக்கும் பகுதிகளில் சில காண்போம். "வண்டி மாற்றம்" என்னும் ஆறும் அங்கம் முழுதுமே ஒரு பெருங் கருங் கூத்து (a comedy of errors) ஆகலின், அது முழுதும் நூலிலேயே காணல் தகும். மற்றைய சில பகுதிகளையே ஈண்டு நோக்குவோம். வசந்தசேனையின் இல்லத்துள் எட்டாங் கட்டிற் புகுந்த விதூடகன் வசந்தசேனையின்

நற்ருயைக் கண்டு, "பெரிய தெய்வ வுருவத்தைப் போன்ற இவளை முதலில் உள்ளே புகுத்திப் பின்னர் இவ் வீட்டின் வாயில்வழி நிருமிக்கப்பட்டதுகொல்?" என்று சேடியை வினவும் இடமும் (பக். 163), சேடன் போட்ட வினு விரண்டிற்கு அவன் விடை தந்து பதங்களை மாற்றிக் கூறும் இடமும் நகைச் சுவை தருவனவாம். மாமரங்கள் அரும்பும் காலம் "வசந்தம்" என்றும், கிராமங்களைக் காப்பது "சேனை" என்றும் விதூடகன் சாருதத்தன்பாற் கேட்டுக் கூறியதைச் சேர்த்துக் கூறும்படி சேடன் சொல்ல, "சேனை வசந்த" என அவன் விளம்ப, பதங்களை மாற்றிச் சொல்லுமாறு பணிக்கப்பட்ட விதூடகன் பாதங்களைத் திருப்பிக்கொண்டு "சேனை வசந்த" என்று கூறுமிடம் அது (பக். 181-182). தேவர் கடன் இறுக்குங்கால் இடத் தோளினும், தென்புலத்தார் கடன் இறுக்குங்கால் வலத் தோளினும் அணியப்படும் பூணூல் (பக். 370), கன்னம் வைக்கும் சமயத்தில் சுவரில் துளை அளக்கவும், தாலிப் பூட்டகற்றவும், கதவுத் தாழ் திறக்கவும், தேள் கொட்டினுற் கட்டவும் உதவும் என்று கூறிச் சருவிலகன் இந் நான்கனுள் இரண்டிற்குத் தனது பூணூலைக் கையாளுவது கண்டு இன்புறற்பாற்று. நீதி மன்றத்தே காட்டப்பட்ட அணிகலன்களைக் கண்ட வசந்தசேனையின் தாய், "இது அதனை (வசந்தசேனையின் அணியை) ஒத்திருக்கின்றது. அஃதன்று" என்று கூறியவுடன், சகாரன் "கண்களாற் சொல்லி வாக்கினுல் மறைத்துவிட்டாய்" (பக். 548) என்று கூறுவதைப் பார்த்து இன்புறுபவரே, "காணப்பட்டான் ஆரியன் (என்று பாதி கூறிய அளவில்) இல்லை; ஆரியை வசந்தசேனை காணப்பட்டாள்" (பக். 235) என்ற சந்தனகனது சொற்கேட்டு இன்புற்ருராவர்.

மேலும்; சகாரன் பகர்கின்ற மொழிகளெல்லாம் நகைச் சுவை மலிந்து நிற்கின்றன. ஆங்கில நாடக வாசிரியர் ஷேரிடன் (Sheridan) எழுதிய நாடகமொன்றனுள் வரும் ஸ்ரீமதி மேலப்பிராப் (Mrs. Malaprop) என்பாளுடைய மொழிகளால் விளையும் விநோதம் எத்தகைத்தோ அத்தகைத்து இச்சகாரன் கூற்ருல் விளைவதும். செய்யுள் 45, 257, 267 முதலான புராணவிருத்தங்களையும், ஆகம விருத்தங்களையும் காண்பார் அதனை அறியலாம்.

அன்பின் ஐந்திணையில் "ஒப்பு வழி யுவத்தல்" என ஒரு துறை யுண்டன்ருே? அத் துறையை யொட்டியதே நானுயகமாக விளங்கும் பண்டைத் தமிழ் நூல் சிலவற்றிற்கும் இம் மண்ணியல் சிறு தேர்க்கும் உள்ள ஒப்புமை கண்டு உவத்தலும்.

இத்தகைய அரிய பெரிய அருமருந்தனைய நூலை நமக்குத் தந்து புகழைத் தமதாக்கிக் கொண்டவரும், நந் தமிழ் நாட்டுக் குறையொன்றை நிறைவு செய்த கோதிலாமணியாரும் ஆகிய பண்டிதமணியார் அவர்கட்குத் தமிழுலகு பெரிதுங்கடப்பாடுடைத்து.

ஆராய்ச்சிப் பகுதி-Research

தமிழ் மன்னர் பெயர்

[பண்டித திரு. ஞா. தேவநேயப் பாவாணர்.]

பண்டைத் தமிழ் மன்னர்க்குப் பல பெயர்கள் வழங்கினும் அவற்றுட் பாண்டியன், சோழன், சேரன் என்பவை மிக முதுமையும், முதன்மையும் பற்றிய வாகும். பாண்டியன், சோழன், சேரன் என்பதே கால முறையாயினும், இசைவு பற்றிச் சேரன், சோழன், பாண்டியன் எனத் தலை மாற்றிக் கூறப்படும்.

தமிழரசர் கொடிவழிகள் ஆரிய வருகைக்கு முன்னமே தமிழ் நாட்டிலிருந்தும், அவற்றின் பெயர்கட்கு வட மொழி மூலங் காட்டினர் கால்டுவேல் கண்காணியார். மேனாட் டறிஞர் எத்துணையோ ஆராய்ச்சி வன்மையும், நடுவு நிலைமையும் உடையரேனும், இந்திய மொழிகளெல்லாம் வடமொழிவழி யென்னு மோர் தவற்றெண்ணம் அவர் மனதிற் குடி கொண்டமையின், அவராராய்ச்சி சிற்சில விடத்துப் பயன்பட் டிலது. சேர சோழ பாண்டியர் தமிழ் மன்னரா யிருப்பவும் அவர்க்குப் பெயர் வட மொழியினின்று வந்தன வென்பது எங்ஙனம் பொருந்தும்? ஆரிய பரபினரா யிருந்திருப்பினன்றோ அவர்க்கு ஆரியப் பெயர் வழங்கியிருக்கும்? சேர சோழ பாண்டியப் பெயர்கள் சேர சேரட பாண்டிய ரென்று அசோகக் கல் வெட்டி லிருக்கின்றன வென்பது ஆரிய வழிக்கு ஆதார மாகுமா? ழகரம் தெலுங்கினும், வட மொழியினும் டகரமாய்த் திரியும்.

உ-ம்.	தெலுங்கு	வட மொழி
	கோழி - கோடி	நாழி - நாடி
	கிழங்கு - கெட்டா	பீழை - பீட

நாளம் = மூங்கில். நாளி-மூங்கிலாற் செய்யப்பட்ட படி. இக் காலத்தும் மூங்கிற்படிகளைச் சிற்றூர்களினும், சிறு கடைகளினும் காணலாம். நாளி - நாழி. சீகாளி - சீகாழி.

சோழன் என்பது சோடன் என்பதன் திரிபென்றும், நாழி என்பது நாடி என்பதன் திரிபென்றும், தமிழர் என்பது த்ரவிடர் என்பதன் திரிபென்றும், பாண்டியன் என்பது பாண்டுவினின்றும் திரிந்ததென்றும் கூறுவர் கால்டுவெல் கண்காணியார்.

மெய்யெழுத்துக்கள் ரகரத்தோடு சேர்ந்து மொழிமுதல் நிற்பது வட மொழியிற் பெரும்பான்மை. அதன்படி த என்பது த்ர என்றாகும். மகரத்திற்கு வகரம் போலியாகும்,

உ - ம்.   குமி - குவி.   மிஞ்சு - விஞ்சு.

ழ வட மொழியில் ட ஆகும். இங்ஙனம் தமிழ என்னும் சொல் வட மொழியில் த்ரவிட என்றாகும். தமிழகம் என்னும் சொல் கிறிஸ்துவுக்குப் பன்னூறாண்டிற்கு முன்னரே மேலை நாடுகளில் Damurica - Lemurica - Lemuria என்று பலவாறு திரிந்து வழங்கி யிருப்பவும், அதற்குப் பின் இந்தியாவிற்கு வந்த ஆரிய வாய்ச் சொல்லின் திரிபென்பது சற்றும் பொருந்தாது.

தமிழ் மன்னர் பெயர் வட மொழிப் பழங் காவியங்களாகிய பாரத இராமாயணங்களிற் கூறப்பட்டுள. உதியன் என்னும் ஓர் சேர நாட் டரசன் பாரதப் படைகட்குச் சோறு வழங்கியமை பற்றிப் பெருஞ் சோற்றுதியஞ் சேரலாதன் என்று பழந் தமிழ் நூல்களிற் பாராட்டப்படுகின்றான். வான்மீகி இராமாயணத்திற் றமிழ் மன்னரைப் பற்றிய குறிப்பு, பிற்காலத் திடைச்செருகலென்று சிலர் புறக்கணிக்கலாம். இராமர் தெற்கே வந்து அகத்தியரைக் கண்டதை எவரும் மறுக்கார். அகத்திய ருண்மையானே பாண்டிய னுண்மையும் அறியப்படும். பாரதத்திற்கு முன்னமே பாண்டிய னுண்மை இராமாயணத்தால் விளங்காவிடினும், கிறிஸ்துவுக்கு முன்னைய மேனாட்டுப் பூமி சாஸ்திரிகள் குறித்துள்ள தமிழகப் படங்களானும், பிரித்தானியப் பொருட்காட்சிச்சாலைத் தலைவர், Dr. ஹால் என்பவர் பாபிலோனியக் குடைபொருள்கள் பற்றிக் கூறியுள்ள ஆராய்ச்சி யுரையானும் விளங்குவதாகும்.

பாண்டு, பாண்டியன் என்னும் பெயரொப்புமை பற்றியும், பாண்டுவின் மகனாகிய அர்ச்சுனன் தீர்த்தயாத்திரை வந்தபோது பாண்டியன் மகளை மணந்தான் என்னும் கதை பற்றியும், மகாவம்சம் என்னும் இலங்கைச் சரித்திர நூலில் பாண்டியன் என்னும் பெயர் பாண்டி, பாண்டு எனத் திரிந்திருப்பது பற்றியும் ஆரியர் வருகைக்கு முன்னமே வழங்கிய பழந் தமிழ்ப் பெயராகிய பாண்டியன் என்பதை, பாண்டு என்பதினின்றும் திரிந்த பாண்டவன் என்னும் தத்திதாந்தத் திரிபென்று கூறுவது மொட்டைத் தலைக்கும், முழங்காற்கும் முடிபோட்ட தொக்குமன்றோ?

பாண்டியன், சோழன், சேரன் என்னும் பெயர்கள் வடமொழியாயின், வடமொழியில் அவற்றிற்குப் பொருளிருத்தல் வேண்டும். பாண்டியப் பெயர்க்குக் கூறும் வடமொழிப் பொருள் சரித்திர வாயிலாய் மறுக்கப்பட்டது. சோழசேரப் பெயர்கட்குப் பொருந்தப் புளுகும் பொருளும் வட மொழியி லில்லை. இனி, இத் தமிழ் மன்னர் பெயர்கள் தமிழ்ச் சொற்களாயின் அவற்றிற்குப் பொருள் என்னை யெனிற் கூறுதும்:—

பாண்டியன்—பாண்டியன் = பாண்டி + அன்.

பாண்டி என்பது வட்டமென்னும் பொருளிலேயே வழங்கப்பட்டுள்ளது. பாண்டி, ஒரு விளையாட்டு. ஓட்டை வட்டமாக நறுக்கி நிலத்தில் அரங்கு கீறி எறிந்து விளையாடுவது. வட்டமாக நறுக்கப்பட்ட ஓடு வட்டு எனப்படும். வட்டு என்பது கருவியாகுபெயராய் அதைக் கொண்டு ஆடும் விளையாட்டையும் உணர்த்தும்.

'கல்லாச்சிறாஅர் நெல்லிவட்டாடும்' (குறுந்தொகை)

வட்டு என்பதன் பரியாயப்பெயராகவே பாண்டியென்பது தென்னாட்டில் வழங்குகின்றது.

தொட்டி, புட்டி, விட்டி என்பன தொட்டில், புட்டில், விட்டில் என்று நின்றாற்போல, பாண்டி என்பதும் பாண்டில் என நிற்கும்.

பாண்டில்=வட்டம். பாண்டில் என்பது வட்டம் என்னும் மூலப் பொருள் பற்றியே பல பொருள்களை யுணர்த்தும்.

பாண்டில்=1. அகல், வட்டமா யிருப்பது.
2. காளை, வட்டமாய் அல்லது உருண்டிருப்பது.
3. கைத் தாளம், வட்டமா யிருப்பது.
4. நாடு. ஒரு நாட்டை அல்லது நாட்டுப் பகுதியை வட்டம், வட்டகை, வட்டாரம் என்று சொல்வது வழக்கு. மண்டலம் என்பதும் வட்டத்தின் பரியாயப் பெயரே. இங்கிலீஷிலும் (Circle) என்று நாட்டுப் பகுதியைக் கூறுவர்.
5. சக்கரம், வட்டமா யிருப்பது.
6. *பண்டி (வண்டி).

பண்டி யென்பது வண்டி யென்பதன் திரிபு. ப—வ, போலி. வண்டி - வள் பகுதி, தி விகுதி. வள்+தி=வண்டி, வளைந்திருப்பது. வண்டி யென்பது முதலில் சக்கரத்தையும் பின்பு உறுப்பாகுபெயராய்ச் சகடத்தையும் குறிக்கும்.

பண்டி என்பதே பாண்டி, பாண்டில் எனத் திரியும்.

'பாண்டில் எடுத்த பஃறாமரை கீழும் பழனங்களே' என்னும் திருக்கோவை யடியில் பாண்டில் என்பது கிண்ணம் என்னும் பொருளில் தாமரைக் குவமையாய் வந்துள்ளது. கிண்ணம் வட்டமா யிருப்பது.

வட்டம் என்னும் சொல் உருட்சியையும், திரட்சியையும் குறிக்கும். ஓர் உருண்டையின் பரப்பு தூரத்தில் வட்டமாகவே தோன்றும்.

---

* கொல்லாப் பண்டி எனச் சிலப்பதிகார உரையில் வழங்குவது காண்க. (கா. சிவ. க.)

பாண்டியன் குதிரைக்குக் கனவட்டம் என்று பெயர். ஓர் இளேஞனை இளவட்டம் என்பர் தென் ஞட்டார். வட்டம் என்பதைப் போலவே அதன் பரியாயப் பெயராகிய பாண்டில் என்பதும் உருட்சியும், திரட்சியுமாகிய பொருள்களை யுணர்த்தும்.

பாண்டில், உருட்சியான ஒரு காளையை யுணர்த்துவது போல உருட்சியான ஒரு வீரனையும் உணர்த்தும். காளை என்னும் பெயர் உவமையாகுபெயராய் வீரனைக் குறிப்பது செய்யுளிற் பெரு வழக்கு. தென் ஞட்டார் காளை என்னும் பெயரைத் தம் சிறார்க்கிடுவது இன்றும் வழக்கம். இப்போதுள்ள சிவகிரி ஜமீன்தார்அவர்களின் பெயர் செந்தட்டிக் காளேப் பாண்டியன் என்பது. ஆகவே பாண்டி யென்பதற்கு வீரன்* என்பதே பொருளாம். அது அன் விகுதி பெற்றுப் பாண்டியன் என நிற்கும். பாண்டியன் வீரத்தைச் சங்க நூல்களானும், 'பாண்டியனர் பராக்கிரமம் பகர்வரிதே யம்மானே' என்னும் புகழேந்தியார் கூற்ருனு முணர்க.

இனி, பாண்டியனுக்குரிய மறு பெயர்களாவன :—
செழியன்=செழிய நாட்டை யுடையவன்.
தென்னவன்=தென் ஞட் டரசன்.
வழுதி=புலவரால் வழுத்தப்படுகின்றவன்.
மாறன்=பகைவரொடு மாறு கொண்டவன்.
மீனவன்=மீனக் கொடியுடையவன்.

கைதவன்=தன் கையை வெட்டினவன் (கொற்கைப் பாண்டியன். அவனுக்குப் பின்னுல் ஏற்பட்ட பெயர்.)

பஞ்சவன்=ஐந்து சிற்றரசரால் ஆண்டவன். (கல் வெட்டு கலேயும், சரித்திரத்தையுங் காண்க.) முல்லே, குறிஞ்சி முதலிய ஐந்திணை நிலங்களே யுடையவன் என்று பொருள் கூறல் பொருந்தாது.

கௌரியன்=கௌரியின் வழித் தோன்றல்.
கௌரி தடாதகைப் பிராட்டியாரான பார்வதி.

சின்னமும், அங்கமும் பற்றிய தொடர் மொழிப் பெயர்கள் இங்குக் கூறப்பட்டில.

(தொடரும்)

---

* "பாய்ந்தான் பாண்டியன் புலிபோல" என்பது தென்ஞட்டில் வழக்காற்றிலிருப்பதையும் நோக்குக. (கா. சிவ. க.)

அச்சுதப்ப நாயக்கர்

(கி. பி. 1577 - 1614)

[திரு. கி. சாமிக்கண்ணு அவர்கள்]

தோற்றுவாய் :—பூந்தண் பொன்னி யெந்நாளும் பொய்யா தளிக்கும் புனனாட்டுள் பண்டைச் சீரும் சிறப்புங் குன்றாது இயற்கையரண்களோடு கூடிய தஞ்சாவூரைத் தலைநகராகக் கொண்டு கி. பி. 1577 முதல் 1614 வரை செங்கோலோச்சிப் புகழ் படைத்த அச்சுதப்ப நாயக்கர், தஞ்சாவூர் நாட்டை ஆண்ட நாயக்க அரச வழியின் இரண்டாம் மன்னர். இவர், சேவப்ப நாய்க்கரின் மகன். சின்னசேவப்ப அச்சுதப்ப நாய்க்கர் என்பது இவருக்கு வழங்கிய மறுபெயர்.

காலம் :— தஞ்சைப் பெருவுடையார் கோயில் இரண்டாவது கோபுரத்துத் தென்பக்கத்து வெளிச்சூழலில் சகாப்தம் 1499 (கி. பி. 1577) ல் சேவப்ப நாயக்கர் குமாரர் அச்சுதப்ப நாயக்கர், பொன்செய் கொல்லருக்குச் சில இறையிலிகள் விட்டதாகத் தெளிவாய்க் கூறும் ஒரு கல்வெட்டு வரையப்பட்டிருப்பதிலிருந்து இவர் காலம் தெரிகிறது.

இறைமாட்சி:—இவரதுரிமை மூர்த்திமாம்பா வென்பாள் பெயரால் மூர்த்திமாம்பாபுரம் என்று சிற்றாரொன்றுளது. இவ்வூர் இப்போது பாவநாசம் கூற்றத்தில் சேர்ந்திருக்கிறது. இவ்வூரில் பெருங் கோயிலொன்று சீரழிந்த நிலையிலுளது. முத்திசையும் புனற்பொன்னி மொய்பவழங் கொழித்துந்த வளம் பெறுவது தன்னாடாதலால், அக்காவிரியாற்றின் கல்லணையைப் புதுப்பித்துப் பழுது பார்த்தார்.

கல்விநிலை:—பன்னூல்களையும் வெளிவரச் செய்து கல்வியைப் பரப்பினார். இவரது அரசாட்சி காலத்தில் அமைச்சராயிருந்தவரும், தென்னாடெங்கும் புகழ்பெற்ற கர்நாடகப் பிராமணருமாகிய கோவிந்தய்யர் என்ற கோவிந்த தீட்சிதர் கட்டளையால் அறம் வளர்த்த செல்வியுடன் செம்பவழக் குன்றுறையும் திருவையாற்றுப் புராணம் வடமொழியினின்றும் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது. இவர் ஈகைக்குணம் படைத்து அறநூல்களில் சொல்லியபடி யெல்லாம் தக்கவர்களுக்கு நற்கொடைகள் அளித்தார்.

கடவுட்கோட்பாடு:—தெண்ணீர்ப் பொன்னி திரைக்கையாலடிவருடப் பள்ளிகொள்ளும் கோமளக் கருமணிக்கு விலைபெற்ற மணியிருக்கையும், விலைமிகுந்த மணிகளால் பதக்கம், முடி, காற்சதங்கை முதலிய அணிகளும் அளித்து அணிவித்தார். இவர் தமது பெயரால் பார்ப்பனச் சேரிகள் பல கட்டுவித்து

அவைகளில் மறைவல்லாரைக் குடியேற்றினர். திருமயிலாடுதுறை, திருவிடைமருதூர், திருவலஞ்சுழி, பழமலை, திருவையாறு, இராமசேது முதலிய இடங்களில் படித்துறைகளும், புஷ்ப மண்டபங்களும் கட்டுவித்தார். புலியூர், மந்திபாய் வடவேங்கடம், காளத்தி, முதலிய இடங்களுக்குப் பல திருப்பணிகளும், பணிவிடைகளும் செய்தார். இவர் தமது அமைச்சரான கோவிந்த திட்சிதரின் வேண்டுகோளின் பேரில் மகாமக நாளன்று திருக்குடந்தையில் துலா புக்கார். அதாவது துலாக்கோலின் (தராசு) ஒரு தட்டில் தாம் இருந்து மற்றொரு தட்டில் தம் நிறைக்குச் சரியாகப் பொன் முதலிய பொருள்களைத் தானம் வழங்கியதாகவும், அப்பொருள் பெரும்பாலும் அறங்கள் செய்யச் செலவழிக்கப்பட்டதாகவும் தெரிய வருகிறது. திருக்குடந்தையில், தன்னகத்தே 13 கிணறுகளையுடைய பெரிய மகாமகக் குளத்தைச் சீர்திருத்திப் படித்துறைகளையும், அக் குளத்தைச் சுற்றிப் பதினறு சிறு கோயில்களையும் (ஷோடச லிங்கங்கள் உடைய மண்டபங்கள்) சிறப்பாகக் கட்டி முடித்தார். இவ் விரிவான வரலாறு மகாமகக் குளத்தின் மேற்குக் கோடியில் துலாபார மண்டபம் என்று அழைக்கப்பெறும் சிறு கோயிலினுள்ள கல்வெட்டில் வரையப்பட்டிருக்கிறது. திருக்குடந்தையில் மிக்க பொருட் செலவில் இராமசாமி கோயில் கட்டினர். இக் கோயிலில் செய்யப்பட்டுள்ள சிற்ப வேலையி னருந்திறல் நுணுகியாராய்ந்து மகிழத்தக்கது. இக் கோயிலி னுட்சூழல் சுவர்களில் இராமாயணத்தை ஓவியங்கள் வாயிலாகக் காட்டியிருப்பது கண்டு களிக்கத் தக்கதொன்று. இக்கோயில் நற்காலச் சீட்டுவருவாயேற்பாட்டால் அண்மையில் திருப்பணி செய்து முடிக்கப்பட்டுளது.

நாட்டினளவும் முடிவுரையும் :— இவர் காலத்தில் இவரது நாடு திரிசிராப்பள்ளிமுதல் குணகடல்காறும், இராமசேது முதல் பழமலை வரையினும் எட்டி யிருந்தது. இவர் நாகபட்டினத்தில் கடல் வழியாய் வந்திறங்கின பாரசீகர்களை முறியடித்ததாகச் சொல்லப்பட்டிருப்பதில் பாரசீகர்கள் என்பது முகம்மதியர்களைப் பற்றி யிருக்கலாம். இவர் காலத்தில் சோழ குலத்தினன் ஒருவன் சிறிது இவருக்குத் துன்பம் விளைவித்துக் கொண்டு அங்குமிங்கும் நாட்டைக் கொள்ளையடித்து வந்தான். கர்நாடகத்தில் அரசுரிமையின் பொருட்டு உள்நாட்டுக் கலகம் நடந்தது இவர் காலத்திலாம். அச்சுதப்ப நாயக்கர் தம்முடைய மகன் ரகுநாத நாயக்கருக்குத் தமது வாணாளிலேயே முடிசூட்டி வைத்து விட்டுக் காவிரியிரண்டி டைக்குறையி லமைந்துள்ள கோயிலில் அழகிய மணவாளனை வணங்கிக்கொண்டு அங்கேயே நிலையாய் வாழ்ந்திருந்து அந்தமிலின்பத் தரசாள் வேந்தராயினர்.

வடிவு திருந்த அறிவு வளர்ந்த வகை

[திரு. பா. மாணிக்க நாயக்கர்—திரு. க. ப. சந்தோஷம் B A., L.T.]

(வடிவும் அறிவும் ஒன்றையொன்று பற்றிநின்று திருந்தி வளர்ந்தன என்பதைப் பொருளாகக்கொண்டு காலஞ்சென்ற நுண்ணறிஞர் திரு. பா. வே. மாணிக்க நாயக்கர் 30-9-21-ல் ஆங்கில மொழியில் நிகழ்த்திய ஒரு சொற்பொழிவின் மொழிபெயர்ப்பு. புல்முதல் மக்கள் ஈருக உள்ள உயிர்கள் பெற்றிருக்கும் உருவங்களைக் கூர்ந்து நோக்கி அறிவின் வளர்ச்சியைக் காட்டுகின்றது இவ்வுரை. இப்பொருள்பற்றிய நினைவு முதன்முதல் தமக்கு எங்ஙனம் வந்ததென்பதைக் கூறி மேற்செல்கின்றார்.)

யான் கல்லூரியிற் படித்துக்கொண்டிருந்த காலத்தில் உடலின் வடிவிற்கும் அறிவிற்குமுள்ள பொருத்தத்தைப்பற்றி நினைக்க நேர்ந்தது. அக்காலத்தில் ஆங்கில மொழியின் எழுத்துக்களையாவது அறிந்த ஒரு தமிழாசிரியரும் கிடையாது. தமிழ்ப்பாடம் நடக்கும் நேரத்தை விளையாட்டு நேரமாகவே நாங்கள் கருதினோம். இந்த நிலையில் ஆங்கிலமுந் தமிழும் நன்கறிந்த ஒருவர் தமிழாசிரியராக எங்கள் கல்லூரிக்கு வந்தார். அவர் பெயர் சரவணப்பிள்ளை. இந்நல்லார் தமிழாசிரியராக வந்தபின், தமிழைக் கற்குநேரம் முன்போல் எளிதாகவும் இனிதாகவும் கழியவிடமில்லாது போயிற்று. ஆசிரியர்மேல் எங்களுக்கு எரிவுண்டாக, நாங்கள் பலவகையில் அவர்க்கு இடர்செய்ய நினைத்தோம். ஆசிரியர் ஆளுந்தன்மை நன்குடையவராயிருந்தமையின் எங்கள் சூழ்ச்சிகளெல்லாம் வீணாயின.

சரவணப் பிள்ளையவர்கள் தமிழ்க்கவியை எங்களுக்குப் புகட்டு முறையில் சில மாறுதல் நிகழ்த்தக் கருதினார். இஃதெங்கள் செவிக்கெட்டிய பொழுது, 'தமிழாசிரியர் தமது பெருமையை வெளிப்படுத்த ஏதேதோ செய்யத் துணிகின்றார்', என்று நாங்கள் நினைத்தோம். படித்தவற்றைப் பற்றியல்லாது, பொதுவான ஒரு அல்லது சில பொருள்களைப்பற்றி விரிவாக எழுதப்பயிற்றுவிக்கும்முறை ஆங்கிலத்தில் உண்டு. (General paper). அவ்வாறே தமிழிலும் மாணவர் எழுதப் பயிற்றுவிக்கப்படல் வேண்டுமென்று ஆசிரியர் எண்ணங்கொண்டார். ஒருநாள் அவர் வகுப்பிற்கு வந்து, 'மூன்று மணி நேரம் ஆகக்கூடிய ஒரு தேர்வு நடத்தப்போகின்றேன்' என்று கூறினார். இதைக்கேட்டு மற்றவர்கள் திகைத்தனராயினும் யான் அதற்கு இசையத் துணிந்தேன். மற்றவர்களும் அதற்கிணங்க வேண்டுமென்று என் கண்களினாற் சாடை காட்டினேன். யான்

இங்ஙனம் செய்ததற்குக் காரணம், ஆசிரியர் கருதிய ஏழரை நாழிகைத் தேர்வில் ஒருவன் தன் நினைவிற்குவந்த குழறுபாடு களை எல்லாம் கொட்டினாலும் அது குற்றமாகாது என்பதே. ஆதலின், 'இவ்வேற்பாடு மிக நல்லது' என்று நாங்கள் அதைப் புகழ்ந்தோம். ஆசிரியர் மிகத் தேர்ந்தவராயினும் அவருடைய முறைகள் எங்களுக்குச் சற்றும் பிடிக்கவில்லை. இஃதொரு வேளை, பதினாறு, பதினேழு, பதினெட்டு ஆண்டுகளுக்கு மேற் படாத எங்கள் வயதின் குற்றமாக இருக்கலாம். ஏழரை நாழிகை நேரம் தமிழில் ஒரு தேர்வை நடத்த ஆசிரியர் எண்ணியது எங் களை இழிவுபடுத்தும் பொருட்டே என்று எங்களுக்குத் தோன் றிற்று.

மேற்கூறிய ஏற்பாடு நடைபெறத் தொடங்கியபின் ஒரு நாள் 'வாழை மரம்' என்பதுபற்றி எங்களை அவர் எழுதச் சொன்னார். பட்டம் பெறும் வகுப்பிற்கு முந்திய (F. A.) வகுப் பில் 'படித்துக்கொண் டிருந்த எங்களை இதுபோன்ற ஒரு பொருளைக் குறித்து எழுதச் சொல்லியது மிக இழிவென்றே நாங்கள் கருதினோம். ஒருவன் எழுந்து நின்று, 'இப் பொருள் பற்றி எங்களை வரையச் சொல்லி எங்கள் உளத்தைத் தாங்கள் புண்படுத்துகின்றீர்கள்' என்றான். ஆசிரியர் அப்பொழுது நிரம் பிய அமைதியுடன் 'நல்லது, இப் பொருள் பற்றி எழுதுவது கடிதென்றே நான் நினைத்தேன். அறிவில் நீங்கள் இவ்வளவு முதிர்ந்தவர்கள் என்பதை நான் அறியாமற்போனேன். அடுத்த முறை பெரிய கேள்வி யொன்று கேட்கிறேன்' என்று நவின்றார். இதன்பின், வாழை மரத்தைப் பற்றிய கட்டுரையை நாங்கள் தொடங்கினோம். பொருள் மிக விரிந்த தொன்றாதலாலும், எழுதுவதற்கு ஏழரை நாழிகை நேர மிருந்ததாலும், வாழைப் பட்டையைப் பொடிப்பட்டையாக்குவதற்குப் பதஞ் செய்வதி லிருந்து, பிணங்களைத் தூக்கிக்கொண்டு செல்லுங்கால் வாழை மரங்களுங் கன்றுகளும் எங்ஙனம் பயன்படுகின்றன என்பது வரையில் பலவற்றைப் பற்றி வரைந்து, முடிவில், புண்ணியார்த் தம், புருஷார்த்தம் ஆகிய இவற்றிற்கு வாழையைப் போல் உத வுவது வேறொன்றுமில்லை என்று காட்டினோம்.

அடுத்தமுறை ஆசிரியர் எங்களுக்குக் கொடுத்த பொருள் 'கடவுளைப் பற்றி உங்களுக்கு என்ன தெரியும்' என்பதாகும். 'வடிவும், அறிவும் ஒன்றிற்கொன்று இசைந்து வளர்தல்' என்ற பொருள் ஈண்டுத் தொடங்குகின்றது.

'கடவுளைப்பற்றி உங்களுக்கென்ன தெரியும்?' என்ற கேள் விக்கு விடை எழுதப் புகுந்த நான், 'அந்தக் கடவுளைப்பற்றி எனக்கு நன்றாகத் தெரியும்' என்று தொடங்கினேன். இங்

னம் சிறிதும் அடக்கமின்றித் தொடங்கியபின், இடக்கர் என்று இலக்கணங் கூறும் குற்றத்தின்பாற்படுவதாகிய ஒன்றை எழுதினேன். அதன் கருத்து, கடவுளுக்கு ஆண்பெண் குறிகளில்லை என்பதாகும். இங்ஙனம் கூறியதை நிலைநாட்டுதற்கு யான் சான்றுகள் காட்ட வேண்டியதாயிற்று. யான் சிறுவனாயிருந்த நாளில் நூல்கள் பல எனக்குக் கிட்டாமையின் இயற்கையையே ஒரு நூலாகக் கற்றேன். புழுக்கள், விலங்குகள் முதலியவற்றை யான் கூர்ந்து கவனித்திருந்தேன். இவ்வகையிற் கண்டறிந்தவற்றையெல்லாம் 'கடவுளைப்பற்றி என்னதெரியும்?' என்ற கட்டுரையிற் புகுத்தினேன். எழுதுவதற்கு மூன்றுமணி நேரம் இருந்ததனால் இவைபற்றியெல்லாம் விரிவாக எழுதிக்கொண்டே போய், இறுதியில், 'நேரம் போதாது' என்று குறைகூறத் தீர்மானித்திருந்தேன். பிறகு யான் எழுதியதாவது:—

'கடவுள் உண்டென்பதை ஏற்றுக் கொள்பவரும், ஏற்றுக் கொள்ளாதவரும், கடவுளிருப்பினும் அக் கடவுளைப்பற்றி நாம் அறியவியலாது என்பவரும், வேறு எக் கொள்கையினரும் ஒத்துக்கொள்ளக்கூடிய உண்மை ஒன்றுண்டு. உயிர்களிலெல்லாம் மக்கள் மிகச் சிறந்தவர்களென்பது யாவர்க்கும் ஒப்பமுடிந்த ஓர் உண்மை. குரங்கு, குதிரை, எருது, கழுதை ஆகிய் உயிர்கள், மக்களோடு ஒப்பிட்டுப் பார்க்குங்கால், குறைவுள்ளவைகள் என்பதை எல்லோரும் ஏற்றுக்கொண்டே தீரவேண்டும். இதை ஒருவரும் மறுக்கத்துணியார்'.

இவ்வாறு கூறி, உயிர்களில் உயர்ந்தவற்றிற்கும் தாழ்ந்தவற்றிற்குமுள்ள வேற்றுமைகளை யான் எடுத்துரைக்கலானேன். கல்லூரியிற் பயின்ற நாளில் உடற்கூறும் உயிர்நூலும் எனக்கு இன்பம் பயக்கும் படிப்பாயிருந்தன. இவற்றிற்கண்ட சில உண்மைகளை யான் எழுதிய கட்டுரையில் வெளிப்படுத்தினேன்.

*வண்ணாத்திப் பூச்சியை எடுத்துக்கொள்வோமாயின், அது

---

* வண்ணாத்திப்பூச்சிகள் இடுகின்ற முட்டையிலிருந்து புழுக்கள் பிறக்கின்றன. இப் புழுக்கள் இலைகளைத் தின்று வளர்ந்து, குறித்த ஒரு நிலையை அடைந்தவுடன், தாங்களே அமைத்துக்கொள்கின்ற கூடுகளில், முட்டைக்குள்ளிருக்கும் உயிர்போல் ஒடுங்கி நிற்கின்றன. தக்க வளர்ச்சி பெற்றவுடன் அவை கூட்டைக் கிழித்துக்கொண்டு பன்னிறம் பொருந்திய இறகுகளுடன் வெளிப்படுகின்றன. நகர்கின்ற புழு நிலையிலிருந்து விண்ணிற் பறந்து திரியும் நிலையை அடைய இவை புலனடக்கித் தவங் கிடப்பனபோற் கூட்டிலொடுங்குகின்றன.

முதலிற் புழு நிலையி லிருந்து பின் ஒரு கூட்டி லடங்கிநின்று அழகிய இரக்கைகள் பெற்று வெளிப்படுகின்றது.

கூட்டி லிருந்து வெளிப்பட்டவுடன் வண்ணாத்திப்பூச்சிகள் புணர்ச்சியை நாடுகின்றன. இது நிகழ்ந்தபின் பெண் பூச்சி ஆயிரக்கணக்கான முட்டைகளை இட்டு மாள்கின்றது. வண்ணாத்திப்பூச்சியின் வாழ்க்கை இத்தொழிலிலேயே கழிகின்றதென்பது மிகைபடச் சொல்வதாகாது. மற்றொன்றை ஈண்டு நாம் கருத வேண்டும். அஃதென்னவெனின், இவ்வுயிர்களுடைய புணர்ச்சிக் கருவிகளின் அளவேயாகும். மிகச் சிறிய புழுக்கள் சிலவற்றை எடுத்துப் பகுத்துப் பார்த்திடின், புணர்ச்சிக் கருவிகளே அவற்றின் உடலாயிருப்பது புலப்படும். சிலவற்றில் உடலின் அரைப்பங்கு புணர்ச்சிக் கருவியாக அமைந்திருக்க, மற்றொரு பங்கில் எல்லாக் கருவிகளும் அடங்கியிருக்கக் காணலாம். அறுபது அல்லது எழுபது இராத்தல் நிறையுள்ள ஒரு செம்மறியாட்டைக் கவனித்தால், அதன் புணர்ச்சிக் கருவிகள் மூன்று அல்லது நான்கு இராத்தல் எடையுடையனவா யிருக்கின்றன. மக்களுடைய புணர்ச்சிக் கருவிகளுக்கும் உடலுக்குமுள்ள வீதத்தோடு ஒப்பிட்டுப் பார்க்குங்கால் ஆட்டில் நாம் காண்கின்ற இந்த வீதம் பெரியதாகும். இம்முறையில் உயிர்களை யான் ஒப்பிட்டுக் கொண்டுபோய், ஓர் உயிரைவிட மற்றோருயிர் உயர்ந்ததென்பதற்குச் சான்று அதன் புணர்ச்சிக் கருவிகள் (உடலோடு ஒப்பிடுங்கால்) அளவிற் சுருங்கி யிருப்பதுதானென்று காட்டினேன். மக்களுடைய புணர்ச்சிக் கருவிகள் மற்றெந்த உயிரின் குறிகளையும்விட அளவில் மிகக் குறைந்தவை என்று இவ்வாராய்ச்சியால் தெரிகின்றது. இது கண்டபின், கடவுளென்று ஒன்று இருந்தால் அது மக்களைவிட உயர்ந்திருத்தல் வேண்டுமென்றும், உயர்ந்திருந்தால் அதன் குறிகள் நனி சுருங்கிய அளவுடையனவா யிருத்தல் வேண்டுமென்றும் சொன்னேன். ஆனால், எத்துணைச் சுருங்கி யிருக்கவேண்டு மென்பதை அளவிடுதல் யாங்ஙனம்? அது பத்துநூறுயிரத்தில் ஒரு கூறு என்று சொல்வோமாயின், அதனினுங் குறைந்த மற்றோரளவு இருத்தல் கூடுமே! குறி எவ்வளவு குறைந்திருப்பினும், அஃதிருக்கும் வரையில் கடவுட்டன்மை ஆண்டில்லை. ஆதலின், கடவுளுக்குக் குறியே யில்லை என்பது எனது முடிவாயிற்று.

இதற்குமேல், கடவுளென்ற கருத்தின் மற்றொரு பகுதியை எடுத்து எழுதினேன். இதிற் கடவுளுக்குக் காலில்லை என்பதை நிலைநிறுத்த முயன்றேன். இதற்குச் சார்பாக உயிர்நூல் உண்மைகளை முன்போல் எடுத்துக்காட்ட வேண்டியதாயிற்று. நூறு கால் அட்டை (Centipede) எனப்படும் ஓர் உயிர் இருக்கிறது.

அதற்குக் கால்கள் நூற்றுக்கு மேலேயே இருக்கின்றன. ஊர்ந்து திரிகின்ற சில புழுக்களுக்கு இன்னும் பல கால்கள் உண்டு. ஊர்ந்து திரிகின்ற உயிர்நிலையிலிருந்து மேலே செல்லச்செல்ல, கால்களின் தொகை குறைந்துகொண்டே வருவதைப் பார்க்கலாம். வண்டுகளுக்கு ஆறுகாலும், விலங்குகளுக்கு நாலு காலுமிருக்கக் காண்கின்றோம். வண்டுகளைவிட விலங்குகள் உயர்ந்தன. குரங்குகளை நோக்கும்போது அவை சிலவேளை இருகாலும் சிலவேளை நாற்காலும் உடையனவாய்த் தோன்றுகின்றன. மக்கள் நிலையில் கால்கள் இரண்டேயுள. முதன்முதல் உலகத் தொடக்கத்தில் தோன்றிய உயிர்களுக்கிருந்த நூறுயிரக்கணக்கான கால்கள், வரவரக் குறைந்து, மக்கள் வடிவம் அமைந்தபொழுது இரண்டாயின. கால்களின் தொகை குறையக்குறைய வடிவம் சிறிது சிறிதாய்த் திருந்தி மக்கள் உருவில் அது முற்றுப்பெற்றிருக்கின்றது. கடவுளுக்கு எத்தனை கால்களிருக்கவேண்டும்?

உயிர்களிற் சிறந்த மக்களுங்கூட விலங்கின் தன்மை யுடையவர்களாயிருக்கின்றனர். சிலர் கையுங்காலுங் கொண்டு நகர்கின்றனர். இந்த நிலையில் அவர்கள் பூனையை ஒத்திருக்கின்றனர். நேரே நிற்கின்ற தன்னிலைமை மாற, ஒரு மகன் குனிந்து கையுங் காலுங் கொண்டு நகருங்கால் அவன் பூனையின் நிலையை எய்துகின்றான். ஏனெனின், அந்நிலையில் விலங்கு பதுங்கும்போது அதன் எண்ணம் யாதாயிருக்குமோ அதுபோலவே அம்மகனின் நினைவும் இருக்கவேண்டுமாதலின். தான் அறியாமலே அவன் விலங்கைப் போலாகின்றான். பெண் ஒருத்தியைக் காதலித்துக் கெஞ்சும் நிலையில் ஒரு மகன் அவள்முன் முழங்காலில் நிற்கின்றான். உள்ளே தோன்றுகின்ற ஓர் உணர்ச்சி நாற்கால் விலங்கின் நிலைக்குச் செல்லும்படி அவனைத் தூண்டுகின்றது. ஆனால், ஒரு மகன் கடவுட்டன்மை எய்துகின்ற நிலையிலோ கால்கள் குறைந்து விடுகின்றன. பத்மாசன முதலிய பல ஆசனங்களில் கால்களை வழங்கல் விலக்கப்படுகின்றது. பூசனை செய்யச் செல்லுங்கால் நாம் நிற்கின்றோமில்லை. கீழே உட்கார்ந்து கால்களை உடலின்கீழ் மடக்கி வைத்துக் கொள்கின்றோம். கால்கள் குறைய வேண்டுமென்ற உணர்ச்சி இங்கே உண்டாகின்றது. இதிலிருந்து, கடவுளுக்குக் காலில்லை என்று முடித்தேன்.

(தொடரும்.)

அறிவியற் பகுதி - Science

உளநூல் (Psychology)

[திரு. மா. பாலசுப்பிரமணியம், எம். ஏ.]

(௯௨-ம் பக்கத் தொடர்ச்சி)

தன்மையியல் (Personality)

மக்கள் அறிவாலும் ஆற்றலாலும் பல்வேறு படிமுறையில் நிற்பர். தன்மை என்பதொன்றாலும் மாந்தர் வேற்றுமைப்படுவர் என்பது பலரும் அறிந்ததொன்றாம். தன்மை என்பது ஆங்கிலத்தில் பேர்ஸனலிடி (Personality) எனப்படும். "இவன், தனக்கு அறிமுகமாவார் யாரையும், தன்பால் ஈர்த்துப் பிணித்துக்கொள்ளும் தன்மையை யுடையவன்" எனவும், "இவன், தன்னை அறிந்தவர்களை, இவனைவிட அவர்கள் எவ்வாற்றானும் தாழ்ந்தவர்கள் என அவர்களே நினைக்குமாறு, வெறும் தோற்றத்தானேயும், செய்யும் தன்மையுள்ளவன்" எனவும்; "இவன் உண்மையில் சிறிதும் சிறப்பிலனாயினும் சென்றவிடமெல்லாம் சிறப்பாகக் கருதப்படற்கு உரிய தன்மையை யுடையவன்" எனவும்;"இவன் அலுவற்சாலையில் கடைப்படியில் இருப்பவனேயாயினும் மிக்குயர்ந்தபடியிலுள்ளாரும் இவனை நச்சும்படி நிற்கும் தன்மை யுள்ளவன்" "எனவும்; முதன்முறை காணும் பொழுதே இவள் கற்புடையாள் எனப்பிறர் அறிதற்குரிய தன்மை இவள்பால் விளங்குகின்றது" எனவும்; "இவனைக் கண்டவுடனே இவன்றன் கல்வியினையாதல் நற்பண்பினையாதல் அறிதற்கும் நினையாமல் இவன் வெறுக்கத்தக்கவன் எனப்பிறர் எண்ணுதற்குரிய தன்மையை யுடையவன் இவன்" எனவும்; "எத்துணை அன்புடனாயினும் குழவிகளை அழைப்பினும் குழவிகள் இவனை விரும்பி அணுகாமைக்குரிய தன்மையுள்ளவன் இவன்" எனவும் வழக்காற்றிலுள்ள பொது மாற்றங்களை நாம் மிகுதியும் கேள்விவாயிலாக அறிந்திருக்கின்றோம்.

மேற்சென்ற எடுத்துக் காட்டுக்களில் கூறப்பட்ட தன்மையே ஆங்கிலத்தில் பேர்ஸனலிடி எனப்படுவது. இத் தன்மையின் ஒருவகையே இக்காலத் தமிழ்நாட்டு வழக்காற்றில் முகராசி எனப்படுகின்றது. "திருவுடை மன்னரைக் காணிற்றிருமாலைக் கண்டேனே யென்னும்" என்றவிடத்தும், திரு என்பது கண்டாரால் விரும்பப்படும் தன்மை நோக்கம்" என்னும் திருக்கோவையார் உரையிடத்துக் கூறப்பட்ட திரு வென்பது தன்

மையின் உயர்வெல்லையாம். (*Thiru* is the culmination of *Personality*.) திருவாளன் என்னும் இறைப்பெயரும் நிறைந்த தன்மையினைக் (Absolute Personality) காட்டுவதேயாம். (The word *Thiruvalan* signifies the *Absoluteness of Personality* inherent in *God-Hood*) திருக்கோவையார் உரையாசிரியரும் திருவையும் தன்மையையும் இயைத்துக் கூறியது எங் கொள்கையை வலியுறுத்துகின்றது.

மேற்சென்ற எடுத்துக் காட்டுக்களில் உள்ள தன்மையின் வகைகளைத் திரட்டி அறியின் தன்மையின் ஆக்கம் சிறிது புலனும். இன்சொல்லாடல், பணிவு, பயனில மொழியாமை, பெரியாரைச் சார்ந்தொழுகல், அமைந்த உள்ள வியல்பு, வணங்கிய வாய்மை, நுணங்கிய கேள்வி, இன் முகத்தொடு கூடல் என்பனவும் பிறவும் தன்மை யாக்கத்தின் பகுதிகளாம். ஆயின் மீக் கூறப்பட்டவை யாவும் ஒழுக்கத்தின் பாற்பட்டவை யாதலின் ஒழுக்கமுடைமையே தன்மையுடைமையாம் எனக் கூறலமையாதோ வெனின், சிறிதே அமையுமன்றி முழுவதும் அமையாதென்பதே துணிபு. என்னை? தன்மை யென்பது நற்பண்புகளையாதல் தீய பண்புகளையாதல் தன்னுள் கொண்டிருத்தலன்றியும், அவையிற்றின் வேருய், பிரித்தறிதற் கியலாத ஒரு சிறப்பையும் உடைத்தாயிருக்கின்றது. ஒருவற்குப் பல நற்பண்புகளிருந்தும் அவனைக் கண்டவுடனே இவன் வன்றன்மை (Forceful Personality) உடையான் என்றுதல், இவன் இன்றன்மை (Pleasing Personality) உடையான் என்றுதல், இவன் அச்சந்தரும் தன்மை (Awe-inspiring Personality) உடையான் என்றுதல் துணிந்து கூற இயல்வதில்லை. எனவே, ஈண்டு, வெறும் பண்புக் கூட்டமே தன்மையாக்கமாம் எனத்துணிதல் ஏற்புடைத்தன்று. ஆயின் தன்மையின் சிறப் பியல்புதானியாதோ வெனின், அது கலையாராய்ச்சி அறிவிற்குப் புலனுகாத, நுகர்ச்சியினுக்கே (Experience) புலனும் ஒன்றும் எனவே கூறல் வேண்டும். மேனுட்டு உளநூற் புலவர்கள் நுண் பொருள்களையும் பருப்பொருள்களால் அறிய விழையும் இயல்பினராதலின், நுகர்ச்சியின் பாற்பட்டவைகளையும் அறிவின் பாற்படுத்தி ஆராய்ந்தறிய விழைபவராதலின், தன்மையின் இயல்பை ஒருவாறு துணிந்துள்ளார்கள். அஃதாவது, ஒருவனுடைய ஒழுக்க முறைகள் அவனிடத்துள்ள எச்சிறப்பினைச் சார்ந்து நிற்கின்றவோ அச் சிறப்பாந் தன்மையே தன்மை யெனப்படும், என்பது. ஒருவனுடைய தன்மையைத் துணியவேண்டின், அவன் பல காலத்தும் பல விடத்தும் ஒழுகின முறைகளை யெல்லாம் ஓர்ந்தே துணியவேண்டும் என்பது உளநூற் புலவர்தம் கொள்கையாம்.

தன்மையின் ஆக்கம் (Factors in Personality)

1. ஒருவனது உடலமைப்பு (physique) அவன்றன் தன்மையின் ஒருறுப்பாம். உடற்பருமை யுள்ளாரைக் குடும்பத் திருவினைக் கருவினைக் காலங்களில் (on auspicious and inauspicious ceremonial occasions) நம்மவரில் பலர் மிகு மதிப்பைப் புலப்படுத்தி வரவேற்பது கண்கூடு. ஆகலான் உடலமைப்பின் உண்மை, தன்மை யாக்கத்திற்கு இன்றியமையாது வேண்டப்படுவது புலனாகின்றது.

சோடில்லை மேல்வேள்ளைச் சோக்காயிலைநல்ல சோமனில்லை
பாடில்லை கையிற் பணமில்லை தேகப்பருமனில்லை
வீடில்லை யாதோரு வீருப்புமில்லை விவாகமது
நாடில்லை நீநேஞ்சமே யேந்தவாறினி நண்ணுவையே.


என்னும் செய்யுளில் அருட்பேரோளி வள்ளலார், தேகப் பருமன் இல்லை என்றதும் ஈண்டு உன்னற்பாலது. உடற்பருமை யுள்ளானைப் பலரும் மதித்தலின், அவன் அவர்களிடத்தே இன்சொல் ஆடி கேளிக்கையாகவும் அளவளாவுகின்றான். ஆயின் மெல்லிய கவர்ச்சி யில்லா உடலினன் ஒருவன் பலராலும் நன்கு மதிக்கப் படா னாதலின் அவன் அவர்கள்மாட்டுத் தன் உயர்வு தோற்றுவித்தாதல் தாழ்வு தோற்றுவித்தாதல் பழக வேண்டியவனாகின்றான். எனவே, இவன்றன் தன்மை முன்னவன் தன்மையின் வேறுபட்டதாகின்றது. ஆகலான் உடலமைப்பால் தன்மை யாக்கம் ஒரு வகையான் நிலைபெறெய்துகின்றது என்பது துணிபு. நிறைந்த கல்வி யறிவுள்ளவன் ஒருவன் உடற்குறளினனாகி விருக்கின்றா னாதலின், யாவரும் அவனைப் பொருட்படுத்தி மதிப்பதில்லை. எனவே, அவர்கள்மாட்டு அவனுக்கு எழும் மெய்ப்பாடுகள் அவனை விரைவில் கடுஞ் சொல்லனாகவும், கொடுஞ் சீற்றத்தனாகவும், அன்பிலா நெஞ்சினனாகவும் மாற்றிவிடுகின்றன. ஆகலான் அவனது தன்மை பெரும் மாற்றத்தினை யெய்துகின்றது. அவனே உடற்பருமையனாகவும், உடற்கட்டுடையனாகவும் இருந்திருப்பின், பலரும் அவனை மதித்தலானும், அவனுக்கு அடங்கி நிற்றலானும் அவனகத்தே யெழும் மெய்ப்பாடுகள் அவனை வன்றன்மையனாகவும், (Forceful Personality) அச்சந்தரும் தன்மையனாகவும் (Awe-inspiring Personality) நிலைப்படுத்தி யிருக்கும்.

2. ஒருவனது மீப்பண்பு (temperament) என்பதும் அவன்றன் தன்மையின் ஒருறுப்பாம். சிலர் பல நற்பண்புகளை யுடையராயிருப்பர். ஆனால் அவர் விரைவிற் சினங்கொள்ளும் இயல்பினராகவும் இருப்பர். இவ்விரைவிற் சினங்கோள்ளுமியல்பே ஈண்டு அவர்தம் மீப்பண்பு எனப்படுவேது. சிலர், தம் வாழ்க்கையில் துன்பங்களையே நுகர்வாராயிருப்பினும் என்

றும் இன்சொல்லாடல் என்னும் மீப்பண்பினை யுடையராயிருப்பர். சிலர் தம் வாழ்க்கையில் இன்பங்களையே நுகர்வாராயிருப்பினும் என்றும் உளச்சோர்வு (Melancholy) என்னும் மீப்பண்பினை யுடையவராயிருப்பர். அன்றியும், ஆப்டிமிஸ்டிக் டெம்பரமெண்ட் (Optimistic temperament) எனவும், பெஸ்ஸிமிஸ்டிக் டெம்பரமெண்ட் (Pessimistic temperament) எனவும் பேசப்படும் உளமீதூர்வு மீப்பண்பு, உளஅயர்வு மீப்பண்பு என்னும் மீப்பண்புகளும் உள.

பழைய உளநூற் புலவர்கள் மீப்பண்புகளையும் மகனின் உடலினுள்ள சில நீர்ப்பொருள்களையும் தொடர்புடையன வாகக் கருதியிருந்தனர். குருதி (Blood) மிகுதியாகவுள்ளவர்கள் இன்புறுத்தும் மீப்பண்பினர்கள் (Individuals with a Sanguine temperament) எனவும், பித்தநீர் மிகுதியாகவுள்ளவர் சினமீப்பண்பை (Choleric temperament) உடையவர்கள் எனவும், சளிநீர் மிகுதியாக வுள்ளவர்கள் கூச்சம் என்னும் மீப்பண்பை (Bashfulness or Phlegmatic temperament) உடையவர்கள் எனவும், மண்ணீரலின் நீர்ப்பொருளை மிகுதியாகப் பெற்றுள்ளவர்கள் உளச்சோர்வு (Melancholic temperament) என்னும் மீப்பண்பை யுடையவர்கள் எனவும் அவர்கள் கருதியிருந்தனர். நந்தமிழ்நாட்டுத் தனிமருத்துவர்தம் கொள்கைகளும் ஈண்டு உன்னற்பாலன. கோழை (சளி அல்லது விலேஷ்மம்) உடலினன் தன்மைகளைக் கூறவந்த தேரையர், "அறம்பொறை நாணம் மத்திய ஞானகம்" எனக் கூறுமாற்றால் சளிநீருடையான் கூச்சம் என்னும் மீப்பண்பினை உடையான் எனத் தெரிந்திருக்கின்றமையும், "போதவே கோபமுள்ளே பொருமினல் நாடி பித்தம்" என அகத்தியர் தம் இரத்தினச் சுருக்கத்தில் கூறுமாற்றான், 'பித்தநீர் மிக்குடையான் சினமேனும் மீப்பண்பை உடையான் எனத் தெரித்திருக்கின்றமையும், ப்லீகம் (spleen) மலத்தை யிறுகி மந்திக்கும்" என அகத்தியர்தம் சாம்பிரதாய வைத்தியம் என்னும் நூலில் கூறுமாற்றால், மண்ணீரலில் நீர்ப்பொருள் மந்தம் என்னும் உளச்சோர்வாம் மீப்பண்பினைத் தோற்றுவிக்கும் எனத் தெரிந்திருக்கின்றமையும் நாம் அறியத் தக்கன.

இக் கால உளநூற்புலவர் சிலர் மீப்பண்புகளுக்கும், எண்டோகிரைன் கிளாண்ட்ஸ் (Endocrine glands) என்னும் உட்சுரப்புறுப்புக்களின் நீர்ப்பொருள்களுக்கும் தொடர்பைக் கற்பிக்கின்றனர். எடுத்துக் காட்டாகக் கூறுமிடத்து தைராய்ட் (Thyroid) என்னும் உட்சுரப்புறுப்பு மிகுதியாகச் சுரந்தால் ஒருவனுக்கு முன்கோபம் என்னும் மீப்பண்பு (Irritable temperament) தோன்றும் என்பது அவர் கொள்கை. (தொடரும்)



[MR. T. B. KRISHNASWAMY MUDALIAR, M. A., B. L.]

மதுரைக் கண்ணங்கூத்தனார் இயற்றிய

கார் நாற்பது

(௯௬-ம் பக்கத் தொடர்ச்சி.)

புணர்தரு செல்வந் தருபாக்குச் சென்றார்
வணரொலி யைம்பாலாய் வல்வருதல் கூறும்
அணர்த்தெழு பாம்பின் றலைபோற் புணர்கோடல்
பூங்குலை யீன்ற பறவு. (௧௧)

O thou with curled and abundant locks of hair, the forests with their bunches of white *kandal* rising up like a snake's hood, declare the speedy return of him who went forth to seek a fortune to be of help here and hereafter. (11)

மையெழி லுண்கண் மயிலன்ன சாயலாய்
ஐயந்திர் காட்சி யவர்வருத றிண்ணிதாம்
நெய்யணி குஞ்சரம் போல விருங்கொண்மூ
வைகலு மேரும் வலம். (௧௨)

Daily the clouds black as elephants oiled, roll towards the night; and so O thou, whose dark and beautiful eyes have fed on collyrium and who thyself resemblest the pea-fowl in beauty, surely he cometh back, thy clear-brained Lord. (12)

ஏந்தெழி லல்குலா யேமார்ந்த காதலர்
கூந்தல் வனப்பிற் பெயலுழ—வேந்தர்
களிறெறி வாளரவம் போலக்கண் வெளவி
ஒளிறுபு மின்னு மழை. கங

O thou lovely one, the rain falls in loveliness like to the long locks of women who have enjoyed all happiness with their husbands; like to the sword flung by kings on opposing war-elephants are the sound of rain and the flash of lightning. (13)

செல்வந் தரல்வேண்டிச் சென்றநங் காதலர்
வல்லே வருத றெளிந்தாம் வயங்கிழாய்
முல்லை யிலங்கெயி றீன நறுந்தண்கார்
மெல்ல வினிய நகும். கச

O thou that wearest shining ornaments! We have learnt with certainty the speedy return of our lord, who went forth to bring home a fortune, even from the gentle smile of the cool and beautiful clouds, which have drawn forth the *Mullai* buds, that much resemble maidens' teeth. (14)

திருந்திழாய் காதலர் தீர்குவ ரல்லர்
குருந்தின் குவியிணர் உள்ளுறை யாகத்
திருந்தி னிளிவண்டு பாட விருந்தும்பி
இன்குழ லூதும் பொழுது. கரு

O wearer of well-shaped ornaments! at this season when beetles sing sweetly in the half-open flowers of the *Kuruntha* and the black beetle sends forth sweet flute-like music, our lord will not be away from us. (15)

கருங்குயில் கையற மாமயி லாலப்
பெருங்கலி வான முரறும்—பெருந்தோள்
செயலை யிளந்தளி ரன்னநின் மேனிப்
பசலை பழங்கண் கொள. கசு

The big thunder-clouds roar terribly making koels helpless and unhappy; but the big peacocks dance with mirth. They make feeble the glow of your wide shoulders, soft as the tender leaves of the asoka. (16)

அறைக்க விறுவரைமேற் பாம்பு சவட்டிப்
பறைக்குர லேறொடு பௌவம் பருகி

உறைத்திருள் கூர்ந்தன்று வானம் பிறைத்தகை
கொண்டன்று பேதை நுதல். கஎ

O Innocent! the clouds having drunk of the sea, with thunder-like noise of drums terrify the snakes; and darkening all the sky, pour down their water on the rocks of the neighbouring mountain. Therefore your brow partakes of the quality of the crescent and wanes. (17)

கல்பயில் கானங் கடந்தார் வரவாங்கே
நல்லிசை யேறொடு வான நடுநிற்பச்
செல்வர் மனம்போற் கவினீன்ற நல்கூர்ந்தார்
மேனிபோற் புல்லென்ற காடு. கஅ

At the return of him who went past the mountain forest, the clouds much roaring and standing in the centre of the sky have poured rain on all around, until the jungle, lean like beggar's bodies, now shines jubilant as the hearts of the rich. (18)

(வினைமுற்றிய தலைவன் பாகற்குச் சொல்லியது)

நாஞ்சில் வலவ னிறம்போலப் பூஞ்சினைச்
செங்கான் மராஅந் தகைந்தன—பைங்கோற்
றொடிபொலி முன்கையா டோடுணையா வேண்டி
நெடுவிடைச் சென்றதென் னெஞ்சு. கசு

THE MAN, WHOSE WORK OF SEEKING A FORTUNE IS FINISHED, SPEAKS.

The white cedar with brown branches, has blossomed white like Parasurama, the hero with the plough-weapon: and hence my heart seeking the shoulders of her who wears bangles on her soft rounded arms, has traversed the length of the forest. (19)

வீறுசால் வேந்தன் வினையு முடிந்தன
ஆறும் பதமினிய வாயின—ஏறோ
டருமணி நாக மனுங்கச் செருமன்னர்
சேனைபோற் செல்லு மழை. உ௰

The wars of the valiant King are over; the ways have become smooth; the clouds march like armies of contending Kings, terrifying with their thunder the gem-bearing snakes. (20)



கறங்கு என்னுங் காற்றாடி

[திரு. C. M. இராமச்சந்திரஞ் செட்டியார் அவர்கள்]

கறங்கு என்னும் பதம் பழைய தமிழ்ச் செய்யுள்களில் வழங்கப்பட்டு வந்ததொன்று. அதற்குப் பொருள் காற்றாடி சுழற்சி, ஒலி செய்தல் என நிகண்டுகளிலும் அகராதியிலும் சொல்லப்பட்டிருக்கிறது. என்றாலும், அஃது ஒரு விளையாட்டுக் கருவியாகத் தற்காலத்திலும் நமது சிறுவர்களால் எடுத்தாளப் பட்டு வருகிறதை நாம் பார்க்கலாம். ஆகவே, இக்கருவி ஒரு பண்டைக்காலக் கருவியாக இருந்து இக்காலம் வரை வழங்கி வருகிறது என்று அறியவேண்டும்.

சிறு பிள்ளைகள் இக்கறங்கு என்னும் காற்றாடியை வெகு சுலபமாகச் செய்வார்கள். ஒரு பனை ஓலையை 4 அல்லது 5 அங்குல அளவில் இரண்டு துண்டுகளாகக் கத்தரித்து அவைகளின் நடுவில் $\frac{1}{8}$ அங்குல அளவிற்கு ஒரு வட்டமான துளை செய்வார்கள். பிறகு அந்த இரண்டு ஓலை நறுக்குகளையும் குறுக்களவில் வைத்து, துளையில் ஒரு சிறு குச்சியைச் செருகி அந்தக் குச்சியை 4 அங்குலம் நீளமுள்ள ஒரு தட்டுக் குச்சியில் அழுத்தி விடுவார்கள். இவ்விதமாகச் செய்த ஒரு கருவியைக் காற்று வீசும்போது சிறு பிள்ளைகள் அதற்கு எதிரே வைத்துக்கொண்டு நிற்பார்கள். அப்போது காற்றின் விசையால் ஓலைநறுக்குகள் வெகு விரைவாகச் சுழலும். சில பிள்ளைகள் காற்றுவரும் வழியே அக்கருவியைப் பிடித்துக் கொண்டு ஓடுவார்கள். அப்போது இன்னும் விரைவாக அது சுழலும். இவ்வாறு சுழலுகிறதினால் அக்கருவிக்குக் காற்றாடி என்றும் பண்டைக் காலத்தில் கறங்கு என்றும் பெயர் வந்தது. இக்காற்றாடியை ஆகாயத்தில் பறக்க விடும் பட்டம் என்னும் காற்றாடியோடு மயங்கவைக்கக் கூடாது.

நமது பிள்ளைகள் வேறொரு விதமாகவும் கறங்கினைச் செய்வார்கள். நன்றாய் மலர்ந்த பூவரசம் பூவைக் கிள்ளி அதனுடைய காம்பை அரிந்து விடுவார்கள். பிறகு அதன் இதழ்களில் நேர் கோணமாக உள்ள நான்கு அகன்ற இதழ்களை மாத்திரம் வைத்துக்கொண்டு மற்றவைகளைக் கிள்ளி எறிந்து விடுவார்கள். அதன்

பிறகு பூவின் மத்தியிலிருக்கும் மகரந்தத் தண்டைப் பிடுங்கி விடுவார்கள். அப்போது ஒரு சிறு துளை தோன்றும். அத்துளை யிலே ஒரு சிறு குச்சியைவிட்டு அக்குச்சியைக் கையில் பிடித் துக் கொள்வார்கள். காற்று வீசும்போது அதன் எதிரே பிடித் தால், காற்றடிக்க அது விரைவாகச் சுழலும். இதுவும் கறங்கில் ஒருவகையாகும். பூ சுற்றும்போது இதழ்கள் மஞ்சளாக இருப் பதாலும் மத்தியில் இரத்தச் சிவப்பான புள்ளிகள் இருப்ப தாலும், இப் பூவரசங் கறங்கு பார்வைக்கு வெகு நேர்த்தியாகத் தோன்றும். இவ்விளையாட்டினைத் தமிழ் நாடெங்கும் இக் காலத்திலும் காணலாம்.

நாம் முன்னரே கூறியபடி கறங்கு என்பது பண்டைக் காலத்திலிருந்து வழங்கிவரும் ஒரு விளையாட்டுக் கருவியாகும். இதனைச் சூளாமணி எழுதிய தோலாமொழித் தேவர் அடியில் கண்ட செய்யுளில் எடுத்தாளுகின்றார்.

“கறங்கெனக் காலசக் கரங்க டாமென
மறங்கிளர் மன்னர்தம் மகுட நெற்றியு
முறங்கலில் கடாக்களிற் றுச்சிமே லுமாய்த்
திறங்கிளர் புரவிக டிரிதர் கின்றவே”

இச் செய்யுளில் கறங்கு எனவும் கால சக்கரம் எனவும் கூறு கின்றார். ஆகவே கறங்கு என்பது காற்றில் ஆடும் ஓலைக்கருவி எனப் பெற்றோம்.

மேலும் திருமூல தேவர் தம் அரும் பெரும் திருமந்திரத் தில் அடியில் கண்டபடி கறங்கினை எடுத்தாளுகின்றார்.

“கறங்கோலை கொள்ளிவட் டங்கட விற்றிரை
சிறஞ்சேர் ததிமத்தின் மலத்தே னின்றங்
கறங்காண் சுவர்க்க நரகம் புவிசேர்ந்
திறங்கா வுயிரரு ளாவிவை நீங்குமே.”

இச் செய்யுளால் கறங்கு என்பது ஓலையால் செய்யப்பட்டது எனப் பெற்றோம். அப்பதத்தினை அடுத்துக் கொள்ளிவட்டம் கூறப்படுவதால் கறங்கு கொள்ளி வட்டத்தைப் போல இருக்கும் எனலாம். கறங்கு சுற்றினால் தனித்தனியாக இருக் கும் ஓலை ஒரே வட்டமாகப் பரவினதைப் போலத் தோன்றும். அதைப் போலவே கொள்ளியை எடுத்துச் சுற்றினால் ஒரே வட்ட மாகச் சுடர் தோன்றும் என்ற கொள்கையைத் திருமூல தேவர் எடுத்தாண்டிருக்கின்றார். கறங்கோலை என்ற பதப் பிரயோகத் தினால் கறங்கு என்பது ஓலையால் செய்யப்பட்டது என்றும் அஃது ஆகாயத்தில் பறக்கவிடும் பட்டம் அன்று என்றும் தெரி கிறது. இதனை அறியாத சில தமிழ் உபாத்தியாயர்கள் தம் வகுப்புப் பிள்ளைகளுக்குக் கறங்கு என்றால் ஆகாயத்தில் பறக்

கின்ற பட்டம் என்று கூறிவருகிறுர்கள். இது தப்பு என்று அறிய வேண்டும்.

இவ்விதம் பண்டைக் காலத்துப் புலவர்கள் கறங்கினை எடுத்தாண்டிருக்க அதே பொருளில் சமீப காலத்துப் புலவர்களும் எடுத்தாண்டிருப்பதை இனி எடுத்துக் காட்டுவோம். சமீப காலத்துச் சிறந்த கவிஞரான தாயுமான சுவாமிகள் அடியில் கண்டபடி இரண்டு செயயுட்களில் கறங்கினை உவமித்திருக்கின்றுர்.

“ஆடுங் கறங்குந் திரிகையும் போல வலைந்தலைந்து
காடுங் கரையுந் திரிவதல் லானின் கருணைவந்து
கூடும் படிக்குத் தவமுய லாத கொடிய ரெமன்
தேடும் பொழுதென்ன செய்வார் பரானந்த சிற்சுடரே.”

‘ஆடு கறங்காகி யலமந் துழன்று மனம்
வாடு மெனை யையாநீ வாவெனவுங் காண்பேனே’

மேலே எடுத்துக் காட்டிய மேற்கோள்களினுல் கறங்கு என்னும் ஒருசிறு விளையாட்டுக் கருவி திருமூல தேவர், தோலாமொழித்தேவர் முதலான பண்டைக் காலத்துப் பெரும் நூலாசிரியர்களால் எடுத்தாளப் படுவதன்றி தற்காலத்திலும் புலவர்களால் உவமைக்கு உகந்த பொருளாக மதிக்கப்பட்டு வருவதைக் காண்கிறேம். தவிர, பண்டைக்காலம் முதல் அக்கருவி நம் நாட்டுச் சிறுவர்களால் பாராட்டப் பெற்று வந்ததெனவும் அறிகிறேம்.

நம் நாட்டு அரும் பெரும் புலவர்கள் மிகத் தாழ்ந்த பொருள்களிலும் உயர்ந்த எண்ணங்களைக் காண்பதுண்டு. அதற்கு மேலே காட்டிய மேற்கோள்களே தகுந்த உதாரணங்களாகும். திருமூலதேவர் கறங்கோலையையும் கொள்ளி வட்டத்தையும் பிறவாழியில் சுழலும் ஆன்மாவிற்கு ஒப்பிடுகின்றுர். மேலும் தாயுமானவர் ஆடுகிற கறங்கு போலவும் சுழலுகிற திரிகை போலவும் ஒருவன் அலைந் தலைந்து திரிவதாகக் கூறுகிறுர். மற்றும், ஆடுகிற கறங்குபோல மனம் சுழலுகிறதெனவும் இரண்டாவது செய்யுளில் கூறுகிறுர். ஆகவே தாழ்ந்த அறிவுடையவர்களும் உயர்ந்த தத்துவங்களை அறியவேண்டும் என்ற பேரெண்ணத்தினுல் தினந்தோறும் நேரில் காண்கிற விளையாட்டுக் கருவியாகிய கறங்கினை உதாரணமாகக் கொண்டது எத்துணை மேன்மையது பாருங்கள் !

இவ்விதம் பண்டைத் தமிழர்கள் விளையாட்டுக்கருவிகளைத் தத்துவ விசாரணைக்குக் காரண கருவிகளாகக் கொண்டிருக்க, தற்காலக் கலாவல்லபர்கள் இக்கருவிகளை வேறு என்னவகைக்குப் பயன் படுத்திக் கொள்ளுகிறுர்கள் என்பதை இனி ஆராய்வோம்.

இரண்டு ஓலை நறுக்குகள் காற்று அடிப்பதனால் வெகு விரைவாகச் சுழல்கின்றன. அதனுடைய வேகம் ஒரே வட்ட ஓலையைப்போல அதனைக் காண்பிக்கும். அது சுற்றுகிற வேகத்தினால் அவ்வோலைகளுக்கு எத்துணை விசை அல்லது சக்தி வந்திருக்கிறது பாருங்கள். இவ்வித சக்தியினால் பல பயன் கொடுக்கத்தக்க கருவிகளையும் செய்யலாம் அல்லவா? கறங்கோலையைப் போலவே பெரிதாகவும் பலமாகவும் தகடுகளைக் கொண்டு ஒரு கறங்கினைச் செய்தால், அதின்மேல் வீசும் காற்றினால் அது விரைவாகச் சுற்றும். அதன் இரிசுக்குக் கயிற்றையோ அல்லது சங்கிலியையோ இணைத்து மறுபக்கத்தில் ஒரு சக்கரத்துடன் இணைத்துவிட்டால், அச்சக்கரமும் விரைவாகச் சுழலும். அதன் மூலமாகப் பலகாரியங்களை நிறைவேற்றிக் கொள்ளலாம். இவ்விதமாகச் செய்யப்படும் ஓர் இயந்திரந் தான் காற்று யந்திரம் (Wind Mill) என்பது. காற்று அதிகமாக வீசும்படியான இடமாகிய சுமார் 100 அடி உயரத்தில் சக்கரம்போன்ற ஒரு விசிறியை வைத்துவிட்டால் அது சுழலுவதினாலே ஆழத்திலிருக்கும் தண்ணீரை மேலே இறைக்கமுடியும்; ஆலையில் இருக்கும் தானியங்களை அரைக்க முடியும். இவ்விதம் நீர் எடுக்கும் காற்று இயந்திரங்களை நமது நாட்டிலும் கடற்கரையோரங்களில் பார்க்கலாம். உதாரணமாகக் கன்னியா குமரிக்குச் சென்றவர்கள் இதனைப் பார்த்திருப்பார்கள். தானியம் அரைக்கும் காற்று இயந்திரங்கள் ஹாலண்டு, பெல்ஜியம், இங்கிலாந்து முதலிய நாடுகளில் இருப்பதாக நாம் நூல்களில் வாசித்திருக்கின்றோம்.

இவ்விதக் கருவிகளைக் கொண்டு விசிறிகளையும் செய்வதுண்டு. எடுத்துக்காட்டாக மின்சார விசிறிகளைப் பாருங்கள். காற்றினால் விசிறி ஆடுவதற்குப் பதிலாக விசிறி சுழல்வதினால் காற்று அடிக்கும்; ஆகவே, இதனுடைய தத்துவம் எதிர்முறையான தத்துவமாகும். இவ்வித எதிர்முறைத் தத்துவத்தைக் கொண்டு வேறுவித இயந்திரங்களையும் கண்டுபிடித்திருக்கின்றார்கள். அவைகளை உந்து வண்டிகளிலும் ஆகாய விமானங்களிலும் காணலாம். அவைகளுக்கு முன்னால் பலமான விசிறிகள் வைத்திருப்பார்கள். அவை சுழல்வதினால் காற்றினை இழுத்துவிடுகின்றன. அதனாலே முன்னால் இருக்கும் காற்றானது குறையவே வாகனத்தை முன் செலுத்துகிறது. ஆகவே ஒரு தாழ்ந்த விளையாட்டுக் கருவியினால் எத்துணைச் சிறந்த தத்துவங்களைக் கண்டு பிடித்திருக்கின்றார்கள் பாருங்கள்!

மகளிர் பகுதி

கியூரி அம்மையார்*

(கதிரி கண்ட மதிமிகு மங்கை)

[திரு. கு. ஞானசம்பந்தம்]

முகப்புப் படம் பார்க்க.

பொருள்நூல்களை நுண்ணறிவு கொண்டு செவ்விய முறையில் ஆராய்ந்து பயன் வழியும் அரும்பெரும் பொருள்களைக் கண்டு நம்மனோர்க்கீந்து புகழும் நலமும் பெற்று நிலவிய மங்கையர் மணியாம் கியூரி யம்மையாரை ஆ! நம் நிலவுலகம் இனி என்று காணப்போகிறது! அறிவியலுலகம் என்னும் நாகம் கியூரியம்மை என்னும் அருமணியை இழந்து தவிக்கின்றதே! என்னே அவ்வம்மையின் அறிவியல் நுண்ணறிவு!

கியூரி அம்மையார் 1867-ம் ஆண்டு நவம்பர்த் திங்கள் 7-ம் நாளில் போலந்து நாட்டின் அணிநகராக விளங்கும் வார்சா என்னும் நகரில், டாக்டர் ஸ்க்லோடாஸ்கா என்னும் பேராசிரியர்க்குப் புதல்வியாராகத் தோன்றியவர். தந்தையார் நுண்பொரு ளாராய்ச்சியில் வல்லுநராகலின், புதல்வியாரும் தமது இளம்போதிலே தந்தையாரிடமிருந்து அறிவியற் (Science) புலமை பெறுவாராயினர்.

சில்லாண்டுகட்குப் பின்னர், தம் தாய்நாடு விட்டுப் பாரிஸ் (Paris) நகரஞ் சேர்ந்து சோர்போன் (Sorbonne) என்னும் பல்கலைக் கழகத்தே மேற்கல்வி பயிலத் தொடங்கினர். அதன் பின்பு சேவ்ரீ (Sevres) நகரில் மகளிர் கல்லூரியாகிய எகோல் நார்மேலில் (Ecole Normale) விரிவுரையாளராய் அமர்ந்து தம் கடமையை ஆற்றினர். அதுகாலை பாரிஸ் அணிநகரில் வாழ்ந்த ஆசிரியர் பியரி கியூரி (Pro. Pierre Curie) என்னும் ஆண்டகையரோடு நட்புக்கொண்டு அவரே தம் கருத்திற்கும், நடைக்கும் இசைந்தவரெனக் கண்டமையால் அவரையே தமக்குக் கணவராகக்கொண்டு அவரோடு இன்புற்று வாழ்ந்துவந்தார். இருவரும் காதலரன்றி ஆசிரியராகவே அமைந்தமையால், இவர் தம் விரிவுரைக் கடமைக்குச் செலுத்தும் பொழுதுபோக எஞ்சிய வேளைகளில் நுண்பொருள் ஆராய்ச்சியிற் றலைப்பட்டுப் புதுமைகளைக் காண்டலிற் கண்ணுங் கருத்துமாயினர்.

---

* Madame Marya Curie.

ஐம்பெரும் பொருள்களான முதற் பொருள்களின் நுண்மைகளை ஆராய்வதே அவர்தம் செயல் என்றேமன்றே! இவ்வைம்பொரு ளியக்கத்தில் வேறு பல அரிய பொருளியக்கங்கள் மிக நுண்மையாக உளவென அவர்கள் கண்டனர். அது 'கதிரி இயக்கம்' அல்லது ரேடியோ ஆக்டிவிடி (Radio Activity) என்னும் நுண் செயலாகும்.

இஃதிங்ஙனமாக, இராட்சன் என்பார் கண்டுபிடித்த நுண்ணுழை கதிர் (X-Rays)களுக்கு ஒப்பாக நுழைய இயலாத இடங்களின் வழியாகவும் நுழைந்து ஒளிதரும் ஆற்றல் ஒன்று, நிறத்திலும், ஒளியிலும் இரும்பை யொத்திலங்கும் ஒருவகைக் கனிப் பொருள்களின் (உலோகம்) கூட்டுப் பொருளில் (Uranium Compounds) இருப்பதாக ஆசிரியர் ஹென்ரி பெஅக்கெரல் (Prof. Henry Becquerel) என்பாரால் 1896-ம் ஆண்டிற் கண்டுபிடிக்கப் பெற்றது. இதை அடிப்படையாகக் கொண்டு கூரிய மதிவாய்ந்த கியூரி அம்மையார், யுரானியம் கிடைக்கப் பெறுகின்ற கனிப் பொருள்களுக்கு ரேடியோ ஆக்டிவிடி என்னும் கதிரி இயக்கத்தின் தன்மை போன்ற இயக்கம் (உள்ளீடாக) இருக்கிறதா என்று கண்டறியும் பொருட்டுத் தம் கணவரோடு இருந்து ஆழ்ந்து ஆராய்ச்சி செய்யலுற்றனர். நீண்ட ஆராய்ச்சியின் பயன் அவரையே வியப்புக்குள்ளாக்கும்படி நன்மை தந்தது. கனிவகைகளினின்றும் பெறக்கூடிய யுரானியத்திற் கிருக்கும் வன்மையைக் காட்டிலும், நான்கு அல்லது ஐந்து மடங்கு வன்மை அக்கனி வகைகட்கே யுளதெனக் கண்டுபிடித்தார் அம்மையார். மேலும், அவர் யுரானியத்திற் குளதாகும் ஒளி வீசும் ஆற்றல் சிற்றணு (Atom) வைச் சேர்ந்தது எனவும், அவ்வாற்றல் கூட்டணு (Mole cule) வைச் சேர்ந்ததன்று எனவும் செயலால் மெய்ப்பித்து விளக்கிக் காட்டினர். ஆகவே முன்னர்க் கண்ட யுரானியம் என்னும் கதிர்ப் பொருளைக் காட்டிலும் வன்மை மிக்க ஒளி கனிப்பொருள் வகைகளிற் கிடைக்கப் பெறுவதைப் பொருளாராய்ச்சி வழியாகச் செயலில் நன்கு தெளிந்து அதன் அளவினைக் காண்டற்கு அவ் வம்மையார் 1898-ம் ஆண்டினில் தமது கணவரின் உதவி கொண்டு துணிவோடு அக்கனிப் பொருள்களின் வகைகளினின்றும் யுரானியத்தைக் காட்டிலும் வன்மை மிகுந்த ஒளியாற்றலை வேறு பிரித்தறியத் தொடங்கினர். முடிவில் இந்நுண் முயற்சி முழு வெற்றி யடைந்தது. ஆராயத் தொடங்கிய இரண்டு கிழமைகட்குள்ளாகவே அவ்வம்மையார் அக்கனிப் பொருளிற் பேராற்றல் மிக்க இருபொருள்கள் இலங்குவதாக நுனித்துக் கண்டுமகிழ்ந்தார். அப்பொருள்களில் ஒன்றுக்குத் தம் தாய்நாட்டு நன்றி காரணமாக அந்நாட்டுப் பெயரையே 'போலோனியம்' என

இட்டார்; மற்றொன்றினுக்கு 'ரேடியம்' என வைத்தார். உலோகப் பொருளாகிய கனிப்பொருளில் இவ்விரு நுண்ணுற்றற் பொருள்களும் மிகச் சிறிய பகுதிகளாகவே இருக்கின்றன. ஆயின், இப்பொருள்களின் ஆற்றலோ கணக்கி லடங்கியதன்று! இத்தகைய நுண்மையில், இவ்வளவு பேராற்றலை வைத்த இறைவனின் பேரருட்டிறத்திற்கு நாம் ஆற்றும் நன்றி யாதுளது! ரேடியம் என்னும் கதிரியில் யுரானியத்திலிருப்பதைக் காட்டினும் 10,00,000 மடங்கு கதிரியியக்கம் (Radio-Activity) உளதா என்பது தெரியவில்லை.

இத்தகைய நுண் ஆற்றலைக் கண்டறிந்த பின்னர் ரேடியம் என்னும் கதிர்ப் பொருளின் மருத்துவ (ராசாயன) ஆற்றலைச் சோதித் தறிதற்கும் மிகுந்த கதிர்ப் பொருள் (Radium) தேவையாக இருந்தது. கியூரி அம்மையார் மிக்க ஏழ்மை நிலையிலிருந்தமையால் தமக்குத் தேவையான அத்துணை மிகுந்த கனிப் பொருள்களை எங்ஙனம் பெறல் கூடும்! இது கண்ட ஆஸ்ட்ரிய அரசினர் தங்கள் கனிகளினின்றும் கியூரி யம்மையார்க்குத் தேவையான அளவு கதிரி (Radium) நிறைந்த கூட்டுப் பொருள்களைத் தந்து உதவினர்.

தமக்குக் கிடைத்த கூட்டுப் பொருள்(Minerals)களைக் கொண்டு சில ஆண்டுகளாக ஆராய்ச்சி செய்ததன் பயனாக, முடிவில் ஒரு பவுண்டு கூட்டுப் பொருளில் எழுபதினாயிரத்தில் ஒரு பங்கு ரேடியம் குளோரேட் என்னும் கதிரியைப் பிரித்து எடுத்தார். அதன் பின்னர்ப் பொருட் சேர்வின் இயல் நலங்களையும் மருத்துவ இயல்களையும்பற்றி ஆராய்ச்சி செய்யத் தொடங்கினார். அக் கதிரிக்கு ஒரு குறிப்பிட்ட எடையும், கணக்கான ஒளியும் இருப்பதாக உணர்ந்தார் அம்மையார்; இவ்வாறு தொடர்ந்து ஆராய்ந்தபின், கதிரி இயக்கத்தை மிகுதியாகக் கொண்டுள்ள ரேடியம் என்னும் கதிரி ஒரு தனித்த மண்பொருள் எனக் கண்டு தெளிந்தார். மேலும், 1910-ம் ஆண்டில் கியூரி அம்மையார் கனிப் பொருள்களைப் (Metal) பிரித்து ஒவ்வொன்றின் தன்மைகளையும் நன்காராய்ச்சி செய்தார்.

கதிரி (Radium) ஆராய்ச்சிக்குப்பின் தாம் முதலிற் கண்டு பிடித்த பொலோனியம் (Polonium) என்னும் மற்றொரு கதிர்ப் பொருளைப் பிரித்தெடுக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். அம்மையார் அத்துடன் பொலோனியம் ஈயமாக மாறும் இயல்புடையதா எனவும் ஆராயத் தொடங்கினர். நாளடைவில் அப் பொருள் ஈயமாக மாறும் என்னும் உண்மையை நிலை நாட்டப் பல ஆதாவுகள் கிடைத்தன. ஆயின், கருநிறமுள்ள 1 டன் யுரானியம் ஆக்ஸைடி (Uranium oxide) லிருந்து காற்குன்றிமணி யளவு (1 Milli-Gram)ள்ள தூய பொலோனியக் கதிரி எடுக்கப்பட

முடிவதால் அவ்வுண்மையைத் திண்ணமாக மெய்ப்பிப்பது இயலாமை யாயிற்று.

மணம் புரிந்து கொண்ட காலத்திற் கியூரி யம்மையாரும் அவரது காதலரும் மிகவும் எளியவரா யிருந்தமையின் பெருந் துன்பத்துக் கிடையிலேயே தங்கள் அரும் பொருளாராய்ச்சியை நடாத்திவந்தனர். ஆயின், அவர்கள் ஆராய்ச்சியின் பயன் மலையினும் பெரிதாகலின் பட்ட துன்பங்களையும் நேர்ந்த இடுக்கண்களையும் மறைத்துப் பெருமையையும், புகழையும் தந்தது.

இதற்கிடையில் கியூரி அம்மையாரின் கணவனார் கோரமான நிலையில் 1906-ல் உயிர் துறந்தனர். ஆயினும், அம்மையார் சிறிதும் முயற்சி கைவிடாதாராகி இருந்தார். உடனே இவரது அரிய ஆராய்ச்சியின் காரணமாகப் பாரிஸ் அணிநகரத்தே பல் கலைக் கழகத்து விரிவுரை யாளராய் அம்மையார் தேர்ந்தெடுக்கப் பட்டார். அச்சமயம் தமக்குத் துணைபுரியப் பல அறிஞரிருந் தமையாலே தமது அறிவாராய்ச்சியை யாதொரு முட்டும் இன்றி நடாத்துவாராயினர். மேலும், இக்கதிரி யியக்கத்தைப் (Radio Activity) பற்றிய ஆராய்ச்சி செய்வதற் கெனவே இவர் ஒரு பள்ளிக்கூடத்தை நிறுவி அதன் வழியாகத் தமது ஆய்வுக் கூடத்(Laboratory) திற்குப் பல உதவிச் செயலாளரையும் சேர்த்தார்.

இவர் பருப் பொருள்களின் நுண்ணாற்றலை ஆராய்ச்சி செய்வதில் மிக்க வல்லமை பெற்றவர்; மிக விழிப்பாகவும், உன்னிப்பாகவுமே தமது ஆராய்ச்சியை முடிக்க வல்லவர்; சலியா வுழைப்பும், முயற்சியு முடையவர். தாம் கண்ட பருப் பொருளாராய்ச்சியிலே குன்றாத ஊக்கத்துடன் மிகக் கருத்தூன்றி யிருந்தமையால் அம்மையார் பற்பல காலங்களில் உடல் நலங் குன்றினார். அவரது ஆராய்ச்சித்திறன் அறிஞர் எல்லாராலும் போற்றிப் புகழப்பட்டது. 1904-ஆம் ஆண்டைய ஆய்வினர் பரிசை (Nobel prize) ஆசிரியர் ஹென்ரி பெஅக்கெரல் (Prof. Henry Becquerel) என்பார்க்கும், கியூரி அம்மையார்க்கும் அவர் தம் கணவனார்க்கும் பகிர்ந்தளித்து ஊக்கம் தந்தனர். (தொடரும்)

சிவஞானபோதக் கருத்து

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
ஙிடு	ம	யொன்றே.	யொன்றே
,,	மரு	யெனவும்	யெனவும்,
,,	உக	சிவன்	சிவன்,
ஙிரு	நச	சர்வபூத்தமனி	சர்வபூததமனி
ஙிசு	மடு	வேறுபாடுகளுள்.	வேறுபாடுகளுள.

செய்திகளும் குறிப்புகளும்
News and Notes

கடந்த முப்பது ஆண்டுகளாக இல்லாத கடிய விசையுடன் கூடிய டைஃபூன் என்னுங் கடும்புயலும் கடற்பொங்கலும் சென்ற செப்டம்பர் 21-ம் நாளன்று மத்திய ஜப்பானில் உண்டாயின. கணக்கற்ற உயிர்கள் சேதமடைந்தன. மட்டற்ற பொருள்கள் அழிந்தன. ஒசாக்கா நகரம் உருவின்றி யழிந்தது. பாழடைந்த பொருளின் மதிப்பு 50 கோடி யேன் ஆகும்.

* * *

நம் மன்னர் ஐந்தாம் ஜார்ஜின் மகனுன ஜார்ஜ் இளவரசருக்கும் கிரேக்க நாட்டு இளவரசியான மெரீனு என்பாருக்கும் வரும் நவம்பர் 29-ம் நாள் திருமணம் நடப்பதென்று முடிவு செய்துள்ளார்கள்.

* * *

இந்து மதம் ஒரு புழுத்த மதமென்றும், இந்தியர்கள் அழுக்கும் முடைநாற்றமும் நிறைந்த மக்கள் என்றும், இந்திய அரசர்களிற் பலர் வறுமைமிகுந்த கயவர்கள் என்றும் "ஸண்டே டிஸ்பாட்ச்" என்ற ஆங்கில வாரத்தாளின் எழுத்தாளர் ஒருவர் வரைந்துள்ளார். ஆறே வாரங்கள் இந்தியாவில் தங்கியிருந்து இத்தகைய கொடுங்கூற்றை யெழுதியவர்தம் திமிர் இருந்தவாறென்னே! எவ்விதிக்கும் விலக்கொன் றிருப்பதுபோல் ஆங்கிலக் குழுவினருக்கு இவர் ஒரு விலக்குபோலும்.

* * *

முகத்திற்கு நறுமாப் பூசிக்கொள்வதால் சிலர்க்கு விடாச் சளி பிடித்துக் கொள்கின்றதாம்.

* * *

வயது வந்த ஒருவனுடைய தொடை என்பின்மேல் ஒன்றரை டன் எடையுள்ள ஒரு பொருளை வைத்தாலும் அது முறிந்து போகாமல் தாங்கிக் கொள்ளுமாம்.

* * *

இன்னும் சில நாட்களில் அமெரிக்கக் கூட்டு மாநாடுகளிலிருந்து ஓர் ஆராய்ச்சிக் குழுவினர் இந்தியாவிற்கு வரப்போகிறார்களாம். அவர்கள் சிந்துநதிக் கரையிலும் லார்க்கானு கராச்சி முதலிய இடங்களிலும் அகழ்ந்து தோண்டி ஆராயப் போகிறார்களாம். அங்கே கிடைக்கக்கூடும் என்று அவர்கள் கருதியுள்ள பொருள்கள் மொகஞ்சதாரோ, பனுச்சிஸ்தானம் முதலிய இடங்களிற் கண்டுபிடிக்கப்பட்ட பொருள்களைவிடப் பழமையில் மிகுந்தவையாம்.

சென்னை இந்துமத அறநிலையப் பாதுகாப்பு அலுவற்கூட மேற்பார்வை யாளராயிருந்த திருவாளர் வி. எஸ். சுவாமிநாத முதலியார் அவர்கள் திடுமெனச் சென்ற 6-ம் நாள் சனியன்று இறந்தமையறிந்து பெரிதும் வருந்துகிறோம்.

* * *

கூட்டுறவுத்துறை டிப்டி ரெஜிஸ்ட்ராராயிருந்து உதவிச் சம்பளம் பெற்றுவரும் திரு. செ. தெ. நாயகம் அவர்களின் மூத்த மகனார் திரு. செ. நெ. நாயகம் அவர்கள் ராக்ஃபெல்லர் மாணவனாக அமெரிக்காவிற்கு மேற்கல்வி பயிலச் செல்லும் போது அவருடன் சென்ற அவர் மனைவியார் திருமதி மகா லெட்சுமி யம்மை மார்ஸேலில் இறந்துபட்டது மிகவும் இரங்கற் குரியதாம்.

மதிப்புரை

நவீன தர்க்கம் :—அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பதிப்பு திரு. கே. ஆர். அப்பாசாரியரால் எழுதப்பட்டது.

ஏனைய பல மொழிகளிலுமுள்ள புதுக் கருத்துக்களையும், கலை யறிவுகளையும் தமிழின்கண் மொழிபெயர்த்து மொழியை வளம்படுத்தல் இஞ்ஞான்று வேண்டப்படும் திருத்தங்களுள் சாலச் சிறந்ததொன்றும். இக் கருத்துடன் அண்ணாமலைப் பல்கழகத்தார் தர்க்கம் என்ற அளவை நூலை முதன்முதலாகத் தமிழில் மொழிபெயர்த் தெழுதுவித்து அச்சிட்டிருக்கின்றனர். அப் பல்கலைக் கழகத்தார்தம் முயற்சி மிகவும் போற்றத்தக்க தொன்றும். ஆசிரியருக்கு ஆயிரம் வெண் பொற்காசு பரிசளிக் கப்பட்டமை யாவரு மறிந்ததே. "நவீனம்" என்று நூலுக்குக் கொடுத்த அடைமொழி அத்துணைப் பொருத்த முடையதாகத் தோற்றவில்லை. நூலின்கண்ணும் மொழிபெயர்த்துள்ள மரபுச் சொற்களும் பெரும்பான்மையும் வடமொழிகளாகவே இருக் கின்றமை வருந்தத் தக்கது. மற்றபடி நூல் மிகவும் அழகுட னும் சிருடனும் அச்சிடப்பட்டுள்ளது.

சருவசன சேபம் : இராவ் சாஹிப் வெ. ப. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் இயற்றியது. விலை ஓரணு. சமரசக் கொள்கை பரவிவரு மிக்காலத்தில் இத்தகைய பொது நூல் ஒன்றை யெழுதி வெளியிட்ட ஆசிரியரைப் போற்றுகிறோம்.



சிவஞான போதம், சிவஞான சித்தியார் முதலிய நூல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துதவியவரும், சித்தாந்த தீபிகை எனப் பெயரிய திங்கள் வெளியீட்டாசிரியரும், வழக்குமன்ற நடுவராயுமிருந்து காலஞ்சென்ற திருவாளர் J. M. நல்லசாமிப் பிள்ளை, பி.ஏ., பி.எல்.

ஓம்
செந்தமிழ்ச் செல்வி
திங்கள் வெளியீடு

சிலம்பு-௧௫]   பவ—ஐப்பசி   [பரல்-௫

திருநாவுக்கரசு அடிகள் தேவாரம்

உள்ளத் திருக்குறுந்தொகை

வென்றானைப் புலனைந்துமென் றீவினை
கொன்றானைக் குணத் தாலே வணங்கிட
நன்றா நன்மனம் வைத்திடு ஞானமாம்
ஒன்றானைக் கண்டு கொண்டதென் னுள்ளமே.

பதவுரை :—

என் உள்ளம்—எனது உள்ளமானது

(என்) புலன்ஐந்தும் வென்றானை—(நான் உலகவாழ்வின் குறிக்கோளை நன்கு அறிந்து அருள்நெறியாகிய வீட்டு நெறியில் ஒழுகினபொழுது) மெய் வாய் கண் மூக்குச் செவி என்னும் என்னுடைய ஐந்து அறிவுக் கருவிகளையும் (ஞானேந்திரியங்களையும்) உலக நுகர்வுப் பொருள்களிற் செல்லவொட்டாது தடுத்து அவற்றாற் றொடக்குண்ணாதபடி அவற்றை வெல்லும்படி என்னைச் செய்தவனும்

என் தீவினை கொன்றானை—(ஐம்புலன்களின் ஆட்சி நீங்கியதால் ஐம்புலன்கள் உள்ளத்திலொடுங்கி அவ்வுள்ளம் சிவபெருமானை நோக்கியபொழுது) நான் எனது உள்ளத்தால் முற்பிறப்புகளிற் செய்த தீவினையின் பயனானது என்னைத் தொடராதபடி செய்தவனுமாகிய சிவபெருமானை

குணத்தாலே வணங்கிட—(ஐம்புலன் ஒடுங்கிய உள்ளத்தோடு கூடிய நான், சிவபெருமான் ஆண்டான், நான் அடிமை என்ற முறைமையில்) என்னுடைய வேட்கை, அறிவு, செயல்கள் முறையே அவனுடைய நிறைவுள்ள (வியாபகமான) வேட்கை அறிவு செயல்களுக்குள்ளே அடங்கி (வியாப்பியமாய்) தன்முனைப்பு அறநின்று தன்னை வணங்கும்படி அவன் செய்தலால்

நன்றாகும் நன்மனம் வைத்திடும் ஞானமாகும் ஒன்றானை—இன்பமே இயல்பாக உண்டாகின்ற எனது தூய உள்ளத்தில் விளங்குகின்ற அருளாகிய பராசத்தியோடு இரண்டறக் கலந்து நிற்கிற தனி முதற்பொருளாகிய அவனை

கண்டுகொண்டது—(அருள் அறிவினாலே) அநுபூதியில் உணர்ந்து கண்டது; அதாவது, மலத்தன்மை முற்றிலும் நீங்கி சிவத்தன்மை அடைந்த எனது நின்மலமான உள்ளத்தில் சிவன் திருவடிகளை அடைந்து பேரின்ப உணர்வு உணரப்பெற்றேன்.

விளக்கவுரை :—

புலன்ஐந்தும் வென்றானை—இதற்கு அடுத்து 'என்தீவினை கொன்றானை' என்று அடிகள் கூறுதலால் 'புலன்' என்ற சொல்லுக்குமுன் 'என்' என்பதைச் சேர்த்துப் பொருளுரைக்கப்பட்டது. அடிகளுடைய புலன்களைச் சிவபெருமான் வெல்லுதல் எவ்வாறு எனின், அடிகளுடைய ஐம்புலன்களோடும் நின்றும் அவற்றாற் றொடக்குண்ணாது அருளுருவாய் நிற்கிற சிவபெருமானை அடிகள் சேர்ந்து நிற்றலால் என்க. 'வென்றான்' என்பது வெல்லுவித்தான் என்ற பிறவினைப் பொருளில் வந்தது. இக்கருத்தை நன்கு அறிய சிவஞான சித்தியார் 10-வது சூத்திரம் 3-வது செய்யுளை ஓதுக. இதனால் சிவஞான போதம் 8-வது சூத்திரத்திற் கூறப்பட்ட ஞானத்தில் சரியை ஆகிய கேட்டல் அறிவு கூறப்பட்டது.

என்தீவினை கொன்றானை—உயிரோடு சேர்ந்த உள்ளமானது முதலாவது மெய் வாய் கண் மூக்குச் செவி என்ற ஐம்பொறிகளோடு சேர்ந்து உலக நுகர்வுப்பொருள்களை நுகர்கின்றது. உயிர் ஐம்புலன்களையும் வென்று ஐம்புலன்கள் உள்ளத்தில் ஒடுங்கிய பொழுது உள்ளம் உலக நுகர்வுகளை நினைத்தலும் கூடாது; ஆதலின் அடிகள் உள்ளத்துக்கு உரிய தீவினைகொல்லுதலை அடுத்தபடியிற் கூறினார். "வினையால் சத்து விளைதலால் ஞானம் வினைதிரினன்றி விளையா" என்று மெய்கண்டார் கூறியபடி வினைத்தொடக்கு நீங்கினாலொழிய உள்ளம் மெய்யறிவு அடையமாட்டாது. ஆதலின் சிவபெருமான் உயிரானது மெய்யறிவை அடைதற்குரிய பருவம் அறிந்து தீவினைப்பயன் அதனைத் தொடராதிருக்கும்படி செய்கின்றான். சிவஞான சித்தியார் 10-வது சூத்திரம் 4-வது செய்யுள் பார்க்க. மெய்யறிவு அடைதற்கு உயிர் தகுதியடைந்த பின்னும் உயிர் முற்பிறவிகளிற் செய்த தீவினையின் பயனை நுகர்ந்த பின்பே பேரின்ப நிலையை அடைதல் வேண்டியதா யிருந்தால் அது பல பிறப்புக்கள் எடுத்தல்வேண்டும். "முன்னெஞ்சமின்றி மூர்க்கராய்ச் சாகின்றார்" என்ற தேவாரப்பாட்டிற் கூறியபடி, பருவமடைந்து வீட்டுநெறியி லொழுகும் உயிர் ஒரு பிறப்பிலே பேரின்பநிலை அடைதல் முடியாது. உயிரினது கட்டுக்காலத்தில் உள்ளமானது உலக அறிவு அறிதற் கருவியாய் ஆகாமியம்,

பிராரத்தம், சஞ்சிதம் என்னும் மூவினைகளின் தொடக்குக்கு உட்பட்டதாயிருக்கின்றது. கட்டுவிடுதிக் காலத்தில் உள்ளம் அம்மூவினைத் தொடக்கினின்று நீங்கி அருள் அறிவு அறிதற்கருவியாய் விளங்கும்பொழுது அதற்கு நல்வினை தீவினைப் பாகுபாடுகள் ஒழிந்து நல்வினையாகிய நலம் செய்தலே இயல்பான தன்மையாய் அமைகின்றது. ஆதலின் அடிகள் 'வினை கொன்றானை' என்னாது 'தீவினை கொன்றானை' என்றார். 'தீவினை கொன்றானை' என்றதனால் சிவஞான போதம் 9-வது சூத்திரத்திற் கூறப்பட்ட ஞானத்திற் கிரியை ஆகிய நினைத்தல் அறிவு (சிந்தித்தல் அறிவு) கூறப்பட்டது.

குணத்தாலே வணங்கிட—குணம் என்பது இங்கே அருளைச் சேர்ந்த குணம். அதாவது அருளினின்று தோன்றுகிற வேட்கை அறிவு செயல்களாலுண்டாகும் குணம். திருந்திய வேட்கை அன்பு ஆகும். வணங்கிட என்பது வணங்கச் செய்திட என்ற பிறவினைப் பொருளில் வந்தது. வணங்கிட - வணங்கச் செய்தலால் என்ற காரணப் பொருளில் வந்தது. வணங்கல் என்பது முதற்பொருளாக வளைதல் என்று பொருள்படும். உயிர் வளையாது நேராய் நிற்றலானது உயிர் இறைவனது நிலைமையை அறிந்து அதற்குய் அடங்காது தானே தலைவன் என நிற்றலையும், வளைந்து நிலத்திற் கிடத்தலானது உயிர் இறைவனது உண்மைத் தலைமையை அறிந்து அத்தலைமைக்குள் அடங்கித் தன்முனைப் பில்லா திருத்தலையும் குறிக்கின்றன. இறைவனுக்குச் செய்யப்படும் அஞ்சுறுப்பு வணக்கமும் எட்டுறுப்பு வணக்கமும் இப்பொருளை உணர்த்துகின்றன. குணத்தாலே வணங்கிட என்றதனால் சிவஞான போதம் 10-வது சூத்திரத்திற் கூறப்பட்ட ஞானத்தில் போகமாகிய தெளிவு அறிவு கூறப்பட்டது.

நன்று ஆம் நல்மனம்—மனம், உள்ளம், சிந்தை, சித்தம், நெஞ்சு என்பன ஒருபொருட் சொற்கள். இப்பாட்டில் வருகிற உள்ளம், மனம் இரண்டும் ஒரு பொருளன. மனம் இங்கே திருமூலர் திருமந்திரம் 620-வது பாட்டிற் கூறுகிற மன்மனம்; காம மனம் அன்று. நல்மனம்—தூயமனம்; விருப்பு வெறுப்புக்கள் நீங்கின மனம். நன்று என்ற சொல் இங்கே இன்பத்தை உணர்த்துகிறது. நன்றாகும் ஆக்கம் என்ற 328-வது திருக்குறட் செய்யுளில், நன்று இன்பம் எனப் பொருள்படுதல் காண்க. ஆம்—ஆகும். அதாவது உண்டாகும் அல்லது எழும். விருப்பு வெறுப்புக்கள் நீங்கின தூயமனதில் இன்பமே எப்பொழுதும் இயல்பாக எழும் ஆதலின் நன்று ஆகும் நல்மனம் என்றார்.

வைத்திடும் ஞானம்ஆம் ஒன்று ஆன ஐ—ஞானம் என்பது இங்கே பராசத்தியாகிய நின்மல அருட்சத்தியைக் குறிக்கிறது. "சுத்தமாஞ் சத்தி ஞானச் சுடராகும்" என்பது சிவப்பிரகாசம் 8-ம் சூத்திரம் 5-வது பாட்டிற் கூறப்பட்டிருத்தல் காண்க. ஒன்றானை என்பதில் ஆன் சாரியை; ஒன்று என்பது ஒப்பாரும் மிக்

காரும் இல்லாத தனி மெய்ப்பொருளைக் குறிக்கிறது. பராசத்தியோடு சிவமாகிய மெய்ப்பொருள் வேறறக் கலந்து ஒன்று என நிற்றலால் "ஞானம் ஆம் ஒன்றை" என்றார். சிவமொழிந்து அச்சத்தி தான் இன்றாம் என்பது சிவப்பிரகாசத்தில் (8—5) கூறப்பட்டிருத்தல் அறிக. "திருவானைக் காவிலுறை சிவனே ஞானமானாய்" என்று அடிகள் திருவானைக்காத் திருத்தாண்டகம் இரண்டாவது பாட்டிற் கூறியருளினர். வைத்திடும் என்பது விளங்கும் என்ற பொருளில் வந்தது. அருள், எப்பொழுதும் எங்கும் நிறைந்திருத்தலால் அப்பொருள் உரைக்கப்பட்டது. உள்ளம் தூய்மை அடைய அதனோடு கலந்திருக்கிற அருள் தானாகவே விளங்கும். இவ்வாறு தூய்மை அடைந்த உள்ளத்தோடு கூடிய உயிர் அருளோடு பிரிப்பின்றி விளங்கி நிற்க, அவ்வருள் அவ்வுயிரைச் சிவனுடைய திருவடிகளிற் கூட்டுவிக்கும் என்பது கருத்து. ஞானமாகிய அருள் உயிரினிடத்து எவ்வாறு எப்பொழுது விளங்கும் என்ற உண்மையை விரிவாய் அறிய விரும்பும் சிவநேயர்கள் திருவருட் பயன் 6-வது சூத்திரம் 8, 9, 10 செய்யுள்களையும் சிவப்பிரகாசம் 8-வது சூத்திரம் 2, 3, 4 செய்யுள்களையும் ஓதி அறிக.

நன்றாஆம் நன்மனம் வைத்திடும் ஞானமாம் ஒன்றானை என்றதனால் சிவஞான போதம் 11-ம் சூத்திரத்திற் கூறப்பட்ட ஞானத்தில் ஞானமாகிய அயரா அன்பு கூறப்பட்டது.

கண்டுகொண்டது—காணுதல் ஆவது அருட்கண்ணாற் காணுதல். ஒருவனுடைய கண்கள் கதிரவனொளியோடு கலந்து அவ்வொளி வருகின்ற கதிரவனைப் பார்த்தல்போல உயிர், இறைவனது அருள் ஒளியோடு கலந்து நின்று அவ்வருளோடு பிரிப்பின்றிச் சேர்ந்திருக்கும் இறைவனைக் காணுதல். என் உள்ளம் கண்டு கொண்டது என முடிக்க. அதாவது, நான் அருள் நிறைந்து சிவத்தன்மை அடைந்த எனது உள்ளத்தில் வைத்து இறைவனைக் கண்டேன். அருட்கண்ணாற் காணப்பட்ட பொருள் (1) என் ஐம்புலன்களை வெல்லச் செய்தவனும் (2) என் தீவினையைக் கொன்றவனும் (3) குணத்தால் என்னை வணங்கச் செய்தவனும் (4) நன்றாஆம் நன்மனம் வைத்திடும் ஞானமாயும் உள்ளான் என்பது இப்பாட்டிற் கூறப்பட்டது. இறைவன், அவன் அருளினை அறிந்து அவ்வருளுக்குள் ளடங்கி வீட்டு நெறியிலொழுகின என்னை முறையே (1) சரியை (2) கிரியை (3) யோகம் (4) ஞானம் என்ற படிமுறைமைகளிற் செல்லும்படி செய்து தன் திருவடிகளை அடைவித்தான் என்பது கருத்து. இவை நான்கும் முறையே மந்ததரம் மந்தம், தீவிரம், தீவிரதரம் என்ற சத்திநிபாதங்களைக் குறிக்கின்றன. "மன்னுயிருளை மதிதூர்ந்த வாறன்பின்—மன்னு மரனே மலந்துரந்து—தன்னின்—வலித்திரும்பைக் காந்தம் வசஞ்செய்வான் செய்தல்—சலிப்பில் விகாரியலன் றான்" என்னும் சிவஞானபோத வெண்பாக் கருத்தை நோக்குக. "காண்டலே கருத்தாய்

நினைந்திருந்தேன் மனம் புகுந்தாய் கழலடி—பூண்டுகொண் டொழிந்தேன்" என்று அடிகள் திருவாரூர்ப் பதிகம் முதலாவது பாட்டிலுங் கூறியருளினர். கண்டுகொண்டது என்றதனுல் சிவஞான போதம் 11-வது சூத்திரத்திற் கூறப்பட்ட "அரன் கழல் செல்லுதல்" கூறப்பட்டது.


போது:—

"முன்னெஞ்ச மின்றி" என்ற முதற்குறிப்புடைய முந்திய தேவாரப் பாட்டில் அடிகள், வீட்டு நெறியில் திருவருளையே களைகணுகக்கொண் டொழுகும் மாந்தரெல்லாரும் எடுத்த பிறப்பொன்றிலேயே பேரின்பநிலை அடைதல்கூடும் என்றும், பேரின்ப நிலை அடைதல் வேண்டும் என்றும் கூறி இந்தப் பாட்டில் அப் பேரின்ப நிலையை அடையும் முறைமையைக் கூறுகின்ருர். இப் பாட்டின் கருத்தை அஞ்செழுத்து முறைமையிற் கூறுமிடத்து, புலனைந்தும் வெல்லுதல் 'ம' எழுத்தாகிய மலம் நீங்குதலையும், தீவினை கொல்லுதல் 'ந' எழுத்தாகிய திரோத மலம் நீங்குதலையும், குணத்தாலே வணங்குதல் 'ய' எழுத்தாகிய உயிர் தன்முனைப்பு நீங்குதலையும், நன்மனம் வைத்திடும் ஞானம் 'வ' எழுத்தாகிய அருள் சேர்தலையும், காணுதல் 'சி' எழுத்தாகிய சிவத்தை அடைதலையுங் குறிக்கின்றன. ஐம்புலன் உள்ளத்திலொடுங்கி, ஐம்புலன் ஒடுங்கிய உள்ளம் உயிரிலொடுங்கி, உள்ளம் ஒடுங்கிய உயிர் அருளி லொடுங்கி, அவ்வருள் சிவத்தி லொடுங்கும் முறைமையினுல் பேரின்ப நிலை அடைதல் கூறப்பட்டது.

முந்திய தேவாரப் பாட்டினுலும், இந்தத் தேவாரப் பாட்டினுலும் மாந்தருக்கு அவர்களுடைய உலகநெறி வாழ்விலும், வீட்டுநெறி வாழ்விலும் அவர்களெல்லாராலும் விரும்பப்படுகிற இன்பத்துக்கு உள்ளத் தூய்மை எத்துணை இன்றி அமையாது வேண்டப்படுவது என்பது நன்கு புலனுகும். உலகநெறி வாழ்விலுள்ள உள்ளத் தூய்மையானது வீட்டுநெறி வாழ்விலுள்ள மேலான உள்ளத் தூய்மைக்குக் காரணமாயுள்ளது. உள்ளத்தைப் பற்றியே மாந்தருக்கு இன்பம் நிகழ்தலால் உள்ளத் தூய்மை எம்மட்டி லமையுமோ அம்மட்டில் இன்ப வாழ்வும் அமையும் என்பது தெளிவு.

வட மொழி நான்மறைகளுக்கும் சேர்ந்த ஞான காண்டமாகிய உபநிடதங்களெல்லாம், இறைவன் மனம் வாக்குக்களுக்கு எட்டாதவன் என்று அன்மைச் சொற்களாலேயே கூறுகின்றன. தமிழ் மறைகளாகிய தேவார திருவாசகங்களைப் பாடின நான்கு சமய ஆசாரியர்களும் தாங்கள் அருட்கண்ணுல் இறைவனைக் கண்டதாக உண்மைச் சொற்களினுற் கூறுவதல்லாமல் இறைவனைத் தாங்கள் கண்டவாறு ஏனைய மக்கள் காணும் வழியையும் கூறியருளினர். தேவார திருவாசகங்களின் சிறப்பைச் சிவநேயர்கள் அறிந்து அவைகளை ஓதிப் பொருளுணர்ந்து நற்பயன் அடைவார்களாக.

—மா. வே. நெல்லையப்ப பிள்ளை



சிவஞான போதக் கருத்து

[திரு. மா. வே. நெல்லையப்ப பிள்ளை]

(முன் 56-ம் பக்கம் தொடர்ச்சி)

100. இரண்டாவது சூத்திரத்திற்குச் சேர்ந்த தத்துவ வகைகள் சிவஞான போதமாகிய முதல்நூலிற் கூறப்பட வில்லை. அவை சிவஞானசித்தியார் ஆகிய வழிநூலிலும் பிற சைவநூல்களிலும் கூறப்பட்டுள்ளன. தத்துவ வகைகளின் நுட்பங்களெல்லாம் மாதவச்சிவஞான அடிகள் செய்த பேருரையில் விரிவாய்க் கூறப்பட்டுள்ளன. சிவநேயர்கள் அந்நூல்களை ஓதி உண்மை அறிந்துகொள்க.

101. தத்துவங்களைப்பற்றிய அறிவின் சிறப்பு எத்தகையது என்பதுமாத்திரம் இங்கே சிறிது குறிப்பிடப்படும்:- தத்துவ அமைப்பின் அறிவின்றி உலகியல் அறிவாவது தனி அருளியல் அறிவாகிய மெய்யறிவாவது நன்கு விளங்காது. உலகில் மலிந்துள்ள பல கருத்துக் குழப்பங்களெல்லாம் சைவ சமயத்துக்குரிய சைவசித்தாந்தத்திற் கூறப்பட்டிருக்கிற தத்துவ அமைப்பின் அறிவின்மையினாலேயாகும். சைவ சித்தாந்தத்திற் கூறப்பட்டிருக்கிற தத்துவ அமைப்பு உண்மைகள் உலகிலுள்ள பிற எந்தச் சமயத்திலும், எந்தத் தத்துவ நூல்களிலும் கூறப்படவில்லை. இந்து சமயப்பகுதிகளாகிய ஸ்மார்த்தம், வைணவம், மாத்துவம் ஆகிய சமயங்களில் இருபத்துநான்கு தத்துவங்கள் கூறப்பட்டிருக்கின்றனவேயன்றிச் சைவ சமயத்திற்போல முப்பத்தாறு தத்துவங்கள் கூறப்பட வில்லை. தத்துவ வகைபற்றி அமைந்துள்ள சுத்தமாயை அசுத்த மாயை பிரகிருதிமாயை என்கிற பூதப் (Matter) பாகுபாடுகளும், விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் என்னும் உயிர் வகைகளும், முழுமுதற்கடவுள் ஒருவனே உளன் என்ற உண்மைக்கு மாறுபடாத மூர்த்தி வேறுபாடுகளும், பிறவும் அச்சமயங்களில்லை. அச்சமயங்கள் கூறும் இருபத்துநான்கு தத்து

வங்களும் சைவசமயம் கூறுகிற பிரகிருதிமாயாத் தத்துவங்களி லடங்கும். பிரகிருதிமாயையின் மத்தகத்திலுள்ள மூலப் பகுதிதான் அவர்களுக்கு மேலான தத்துவம். அச்சமயங்கள் கூறும் கடவுளிருப்பும், வீட்டு நிலையும் அந்த மூலப்பகுதிக்கு மேலேதான் உள்ளன. கடவுளுக்கும் உயிருக்குமுள்ள தொடர்பைக் குறிக்கும் அத்துவித உண்மையை, நாம் முதலா வது அதிகரணத்திற் கூறியது போல, அவர்கள் நன்கு அறி யாமலிருப்பதும், தத்துவ அமைப்பினை அறியாமையினாலே தான். மேலே கூறப்பட்ட இந்து சமயப்பகுதிகளன்றி, உலகி லுள்ள ஏனைய சமயங்களும் தத்துவ அமைப்பைப்பற்றி அறியா.

102. கிறிஸ்துசமயமுதலிய சில சமயங்களி லுள்ளவர் கள் தங்கள் சமயமே உண்மையான சமயம் என்றும், பிற சமயங்களிலுள்ளவர் நிரயம் புகுவர் என்றுங்கூறிப் பிற சமயி களைத் தங்கள் சமயத்துக்கு மாற்றம் செய்தலும் அவர்கள் தத்துவ அமைப்பை அறியாமையினாலேதான். இயற்கையில் இறைவன் அருளொளி விளங்குகிற பலவகைத் தத்துவங்களி னிலைகள், ஒருகல்லூரியி லமைந்திருக்கிற பலவகை வகுப்புகள் போல, பலவகை அறிவுநிலைகளையுடைய பலவகைச் சமயங் களுக்கும் காரணம் என்பதும் வேட்கை அறிவு செயல்கள் திருத்த மடைதலுக்குச் சமயமாற்றம் வேண்டப்படுவதில்லை என்பதும் அவர்கள் அறியார். இயற்கைக்குப் பொருந்தி யுள்ள வழிபாடாகிய உருவ வழிபாட்டை அச்சமயங்களி லுள்ளவர் பழித்தற்கும் இதுவே காரணம். அனைத்துலகும் தூலசூக்கும உருவங்களாய் அமைந்திருத்தலையும், அவ்வுலகில் வாழும் மக்கள் எல்லாரும் தூலசூக்கும பூதங்களாலாகிய உருவ உடல்களிலே யிருந்துதான் எத்தொழிலையுஞ் செய்தலையும் குறியீடுகளின் துணையின்றி உலகிலுள்ள எத்துறையிலும் செயல் நிகழ்வில்லை என்பதையும் அவர்கள் உற்றுநோக்கி உண ருந்திறனுடையவர்களாயிருப்பின் உருவவழிபாட்டையிகழார்.

103. கடவுளுடைய உண்மை யிலக்கணத்தை யறிதற் குத் தத்துவஅமைப்பு அறிவு துணைச் செய்வதா யுள்ளது. கடவுளுடைய உண்மை இலக்கணத்தை அறியாமையினாலேயே புறச்சமயத்தார் சைவர்கள் கடவுளைப் பெண்வடிவில் வைத்து வழிபடுதலை இகழ்கிறார்கள். கடவுள் அருள்வடிவா யிருத்தலை யும் அவ்வருள் பெண்வடிவு என்பதையும் கடவுளுடைய உருவில் அமைந்துள்ள உலகம் அனைத்தும் ஆண்பெண் வடிவங் களா யிருத்தலையும் அவர்கள் ஆழ்ந்து நோக்குவார்களாயின் சத்திவழிபாட்டினை இகழார். ஆனால் இக்காலத்தில் வங்காள நாட்டில் சத்திவழிபாடு வாமமார்க்கத்தில் கோர உருவங்களில்

உயிர்ப்பலிகளுடன் தவறான முறையில் செய்யப்பட்டு வரு கிறது. அங்கே செய்யப்படும் தவறானமுறையே இகழப்படு தற்கும் விலக்கப்படுதற்கும் உரியது என அறிக.

104. தத்துவ அமைப்பு அறிவு உலகினுள்ள உயர்தர ஆங்கிலப் பட்டம் தாங்கும் அறிஞர்களுக்குள்ளேயும் நன்கு விளங்காதிருத்தலினாலேதான் ஆண்பெண் தொடர்பை (Sex relation) ப்பற்றி இயற்கையினுள்ளபடி உண்மையான கருத்து விளங்காமலிருக்கிறது.

105. மேற்குநாட்டுப் பலவகைத் தத்துவநூலார் (Philosophers) கூறும் உண்மைகள் எல்லாம் பெரும்பான்மை யும் கண்ணாற்காணப்படும் தூலதத்துவங்களில்வைத்து அறியப் படும் ஆராய்ச்சியறிவை (Discursive reasoning)ப் பொறுத் துள்ளன. அவை மெய்கண்டார் போனுள்ள மெய்யறிவர் தத்துவங்களிற் றோய்வின்றி இறைவன் அருள் முற்றினும் விளங்கப்பெற்ற தங்கள் தூய நின்மல உள்ளத்தில் வைத்து உரைப்படும் சைவசித்தாந்த உண்மைகள் போல் அன்று. அத்தத்துவ நூலார் பலபடக்கூறும் உண்மைகளெல்லாம் இறைவனது இலக்கணம் கூறுகிற சமயத்தொடர்பின்றிக் கூறப் பட்டுள்ளன. நமதுநாட்டிற் கூறப்படுகின்ற உத்தரமீமாம்சம் (வேதாந்தம்), பூர்வ மீமாம்சம், சாங்கியம், யோகம், நியாயம், வைசேடிகம் என்னும் ஆறு தத்துவ உண்மைகளும் (Philosophical Truths) இருபத்துநான்கு தத்துவங்களை ஆதாரமாகக் கொண்டும், அபரஞான நூல்களாகிய வேதம் பிரமசூத்திரங் களை ஆதாரமாகக்கொண்டும் கூறப்பட்டிருக்கின்றன. ஆதலின் சைவசமய உண்மைகளை நோக்க அவையெல்லாம் பூர்வபக்க உண்மைகளன்றி சித்தாந்த உண்மைகள் ஆகா.

104. சைவசமய உண்மைகளெல்லாம் அவைகளை ஓது கின்றவர், தம் உள்ளத்திலே அறிந்து உணர்ந்து அறிவுநிலைக் குத் தக்கவாறு இம்மையிலேயே இன்பம் அடையச் செய்யும் செயலுண்மைகள் (Practical Truths). அவ்வுண்மைகளை அறிந்து உணர்ந்து ஒழுகிப் பயன்படுத்திக் கொள்ளும் நேர்மை யாளர்களுக்கு அவைகளெல்லாம் கண்கூடு. அவ்வுண்மை களெல்லாம் உலகம் நலமடைந்து வாழ்தற்கு ஏதுவாயுள்ளன. அவைகளை யறிந்து உணர்கிறவர்களுக்கு உலகில் இக் காலத்தில் பலவகைத் துயரங்களுக்குக் காரணமாயிருக்கிற சமயப் பிணக்கு, சாதிப் பிணக்கு, வகுப்புப் பிணக்கு, செல்வச் செருக்கு, கல்விச் செருக்கு, அதிகாரச் செருக்கு முதலிய வைகள் உண்டாகாமல் அருட்பொலிவும் உயிர்நேய ஒருமைப் பாடும்(Universal Brotherhood) விளங்கும். அத்தகைய பெரி

யாருடைய எடுத்துக்காட்டு வாழ்வினாலேயே உலகம் அறியாமை நீங்கி அறிவுவிளங்கித் தூய்மையுற்று இன்பநலம்அடையும்.

நான்காவது அதிகரணம் முடிந்தது.

செந்தமிழ்த் திருமந்திரம்

[நவாலியூர், சோ. பாலசுப்பிரமணியம் (இளமுருகனார்)]

"செந்தமிழ்த் திருமந்திரம்" என்னும் இச்சொற்றொடர் செம்மை, தமிழ், திரு, மந்திரம் என்ற நான்கு சொற்களின் கூட்டுறவினாலே பிறந்தது; இதனுள் முதற்கண்ணதாய செந்தமிழ் என்பது திருந்திய பண்புசான்ற தமிழ். என்னை? இந்நிலவுலகம் தோன்றிய ஞான்று உடன் தோன்றிக் கடவுளருங் காதல்கொள்ளும் தெய்வப் புதுநலமும், ஏனைய மொழிகள் போலாது இயற்கை ஒலிவழாமையும், தேனினும் பாலினும் யாழினும் குழலினும் காணினுங் கேட்பினும் கருதினுமினிக்கும் சுவைநலப் பேறும், இலக்கணவரம்பும், இலக்கியப் பொலிவும், மூவா இளமைச்செவ்வியும் தண்மையும் பிறமொழிக் கலப்பின்றித் தனித்துமின் றியங்கும் பேராற்றலும் இன்னோரன்ன பிறவும் ஒருங்கே சிவணப்பெற்று நிலவுதலான் என்பது.

திருவென்பது போகமும் வீடும் பொருந்த அளிக்கும் பொருளும் அருளும் ஆகிய இருவகைச் செல்வமுமாம். என்னை?

> "அருளென்னு மன்பீன் குழவி பொருளென்னும்
> செல்வச் செவிலியா லுண்டு" எனவும்,

'அருட்செல்வம் செல்வத்துட்செல்வம்' எனவும் திருவள்ளுவநாயனார் ஓதியருளினாராகலின் என்பது.

மந்திரம் என்பது தவத்தினாலே மனத்தூய்மையுடையராய் மெய்யுணர்ந்து அவாவறுத்து வீடுபேறு தலைக்கூடி அருள்வளம் பழுநிய நிறைமொழி மாந்தரால் முழுமுதலிறைவனது ஆணைவழி நின்று அருளிச் செய்யப்பட்ட மெய்ப்பொருள் பொதிந்த மணி மொழிகளாம். என்னை?

> "நிறைமொழி மாந்த ராணையிற் கிளந்த
> மறைமொழி தானே மந்திரம் என்ப" என்றும்,

"நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்" என்றும்,

தொல்லாணை நல்லாசிரியர் மணிவாய் மலர்ந்தாராகலின் என்பது.

எனவே, 'செந்தமிழ்த் திருமந்திரம்' என்ற சொற்றொடர், இறைவனாலும் அவன் நல்லருள் நிரம்பிய சான்றோராலும், இருவகை வழக்கினும் செயிர்தப வாய்ந்து, தெள்ளி வளமுற நிறுவிய செந்தமிழ்மொழியிலே, போகமும் வீடும் பொருந்த அளிக்கும் பொருளு மருளுமாகிய இருவகைச் செல்வங்களைப் பயப்பனவாய், அருள்வளம் துறும்பிய நிறைமொழி மாந்தரால் இறைவனது ஆணைவழிநின்று அருளிச் செய்யப்பட்ட மெய்ப்பொருள் பொதிந்த மணிமொழிகளாம் என விரிந்து பொருள் படுமாறு கண்டுணர்க.

இச்செந்தமிழ் மொழிக்கண்ணே யுள்ள செந்தமிழ்த் திருமந்திரங்களின் தொன்மை, பிறப்பு, வரலாறு, கடவுட்டன்மை, பெருமை என்ற இவைகளைக் கூறுமுன்னர், அவை தாமுண்டாகிய தமிழ் மொழியின் சிறப்பியல்புகளைப்பற்றி ஈண்டு ஒரு சிறிது ஆராய்ந்து கூறிப் பின்னர் பொருட்கட் புகுதும்:—

இருண்மலப் புணர்ப்பினாலே மயங்கி யிருவினைப் பயன்களையும் நுகர்ந்து கழிக்குமாறு எழுவகைப் பிறவிகளிலே, மண்ணினும் விண்ணினும் யாக்கைபெற்றுத் துன்பமுழந்து வலியற்றுநின்ற மன்னுயிர்த்தொகுதிக்கு, இளைப்பொழிப்பான் வேண்டி இறைவனாலே செய்யப்படும் உலக ஒடுக்கமாகிய பேருழிக் காலத்திலே பொருளுலகம் மூலப்பகுதியினும் அசுத்த மாயையினும் முறையே ஒடுங்குவதுபோலச் சொல்லுலகமும் சுத்தமாயை எனப்படும் குடிலையில் ஒடுங்காநிற்கும். அங்ஙனம் ஒடுங்காநின்ற சொல்லுலகம் படைப்புக் காலத்திலே இறைவனது திருவருட்டுணையாலே மீட்டுமக் குடிலையில் நின்று பிறக்கும். அவ்வாறு பிறக்குங்காற் றோன்றிய கடவுள் மொழிகள் இரண்டு: அவை முறையே 'ஆரியம்' 'தமிழ்' என்று கூறப்படும். இது யாங்ஙனம் பெறுதும் எனின் :—

"மாரியுங் கோடையும் வான்பனி தூங்கநின்
றேரியு நின்றங் கிளைக்கின்ற காலத்து
ஆரியமும் தமிழு முடனே சொல்லிக்
காரிகை யார்க்குக் கருணைசெய் தானே"

என வரும் திருமூலர் திருமந்திரச் செய்யுளானும்,

"தமிழ்ச்சொலும் வடசொலும் தாணிழற் சேர"

என வரும் திருஞானசம்பந்தப் பெருமான் மந்திரத்தானும் பெறுதும் என்பது.

"மாரியுங் கோடையும் வான்பனி தூங்கநின்
றேரியு நின்றங் கிளக்கின்ற காலம்" என்பது

உலகை மொடுங்கிநின்ற பேரூழிக்காலத்தை யுணர்த்திற்று. "ஆரியமும் தமிழு முடனே சொலி" என்பது அவ்விரு மொழிகளையும் உலகமுய்யுமாறு நல்லிறைவன் நிலனோடு உடன்படைத்தமையை யுணர்த்திற்று. எனவே, நம் செந்தமிழ்மொழி படைப்புக் காலத்து உடன் தோன்றிய கடவுண் மொழி என்பது இனிது புலனாகும்.

இவ்வுண்மையை மிகவும் நுண்ணிதின் உணர்ந்தன்றே, ஆசிரியர் தோல்காப்பியனார்,

"தோலென மொழிப தொன்மொழிப் புலவர்"

என்று இதன் தொன்மையைக் கிளந்துரைப்பாராயினா ரென்பது.

இனி, இம்மொழி பண்டுதொட்டு ஆலவாயி லவிர்சடைக் கடவுளாலும், சூர் முதல் தடிந்த சுடரிலைநெடுவேள் முருகக் கடவுளாலும், சந்தனப்பொதியச் செந்தமிழ் முனிவராகிய அகத்தியனாராலும் தொல்காப்பியனார் முதலிய (?) தொல் லாணை நல்லாசிரியர் பல்லோராலும், தமிழ்நாட்டிலே செங் கோன்மை செய்த தென்னவன் சேரன் செம்பியன் என்னும் மன்னவர் மூவராலும், காலத்துக்குக்காலம் புரைதீர ஆராய்ந்து நிறுவப்பெற்றதோர் உயர்தனிச் செம்மொழியாம்.

பன்னூற்றுறை போகிய செந்நாப்புலவர் இம்மொழியின் இணைவேறில்லா விழுமிய சிறப்புக்களை நுனித்தாராய்ந்து இதனைச் 'செந்தமிழ்' 'தீந்தமிழ்' 'வண்டமிழ்' 'கன்னித் தமிழ்' 'தனித்தமிழ்' என்று தமது நாக்குளிர நயந்து எடுத் தோதுவாராயினார் என்பது.

இனி, இம்மொழி இயற்கை ஒசை யுடைமையான் மன் னுயிர் நாவிற்கு எளிதாய்ச் செவிக்கு இன்பந்தந்து தட்பமுட் டும் பெற்றியதாய்க் கற்குந்தோறும் கேட்குந்தோறும் தீஞ் சுவை சிறந்து மனத்துக்குப் பேருவகைதரும் பெற்றியதாய் நின்று நிலவுகின்றது. இச்சிறப்பு நோக்கியன்றே, கல்லாட னாரும்,

"உள்ளுதோ றுள்ளுதோ றுள்ளுவமு தூறைக்கு திருமுத் தமிழ்" என்றும், "அமுதவூற்றெழுந்து நெஞ்சங்களிக்கும் தமிழ்" என்றும், மணிவாசகப் பெருமான், "ஒண்டீந்தமிழின் றுறைவாய் நுழைந்தனையோ" என்றும், குமரகுருபர அடிகள், "புத்தமுது வழிந்தொழுகுந் தீந்தமிழ்" என்றும் வியந் தெடுத்து மொழிவாராயினர் என்பது.

இந்நிலத்துப் பல மொழிகள் தோன்றி அழிந்தன. இம்மொழியோடு ஒத்த பழமையுடைய 'ஆரியம்' 'இலத்தீன்' 'கீபுறு' முதலிய மொழிகள் உலகவழக் கிறந்துபட்டுச் சிதைந்துநிற்பவும், இது, உலகவழக்கினும் செய்யுள் வழக் கினும் தன் முதிராப் புத்திளமைச் செவ்வியும் அஃகாவளனும் சான்று விளங்குகின்றது.

இயற்கையொலி கொண்டியலும் இனிய ஓசையுடைமை யான் தனக்கிணை வேண்டாததாய், அயன்மொழி பலவற்றிற் கும் தனிப்பெரும் தாயாய், இருவகை வழக்கினும் தனதியக் கத்திற்கு அயன்மொழிகளின் உதவியை ஒருசிறிதும் வேண் டாததாய், எஞ்ஞான்றும் அசைவில்லாததாய் நின்று நிலவு கின்றது. இத்துணை விழுத்திறன்களைத் தனதகத்துக் கொண்டு நிற்றலைப் பகுத்துணர்ந்தன்றே "மனோன்மணீய" நாலுடையாரும், "பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினுமோர், எல்லையறு பரம்பொருள்முன் னிருந்தபடி யிருப்பதுபோல், கன்னடமும் களிதெலுங்குங் கவின்மலையாள முந் துளுவும், உன்னுதரத் துதித்தெழுந்தே யொன்று பல வாயிடினும், ஆரியம்போ லுலகவழக் கழிந்தொழிந்து சிதை யாவுன், சிரிளமைத் திறம்வியந்து செயன் மறந்து வாழ்த்து துமே" என்று சொல்லுவாராயினர் என்பது.

இனி, இம்மொழி கடவுளருங் காதல் கொள்ளும் தெய்வப் புதுமையோடு மன்னுகின்றதென்று முன்னோரிடத்துக் கூறினும்.

தலைச்சங்கம் நிலவிய காலத்திலே சிவபிரானும், முருகக் கடவுளும், அகத்தியனருள்ளிட்ட தமிழ்ச்சான்றோரோடொக்க விற்றிருந்து தமிழாராய்ந்து வளம்படுத்து வீந்தாராதலானும் "செந்தமிழ் பயில்வோர்பின் திரிகின்றவன்" என்றும் "முத் தமிழால் வைதாரையு மங்குவாழ வைப்போன்" என்றும் அருணகிரிநாதர் முருகக்கடவுளைக் குறித்துக் கூறுதலானும், சிவபிரானும் அம்முருகக் கடவுள்போலவே தீந்தமிழின் சுவை யிலே தோய்ந்தவராய், மணிவாசகப் பெருமான், நக்கீரனர், முதலியோரைப் பாடும்படி ஆணைதந்தும், மற்றப்பாடல்களைத்

தாமே ஏடு எழுத்தாணி கொண்டு எழுதியும் வந்தாராதலானும், இம்மொழியைக் கடவுளர் காதலித்தல் தெற்றெனப் பெறப்படும்.

இத்துணை வியத்தகு பெற்றி யமைந்தமையை நோக்கியே குமரகுருபர அடிகளும்,

“ தமரநீர்ப் புவனமுழு தொருங்கீன்றருள்
தடாதகா தேவியென் றொருபேர்
தரிக்கவந் ததவும்தனி முதலொருநீ
சவுந்தர மாறனா னதுவும்
குமரவேள் வழுதி யுக்கிரன் எனப்பேர்
கொண்டதும் தண்டமிழ் மதுரங்
கூட்டுணவெழுந்த வேட்கையா லெனிலிக்
கொழிதமிழ்ப் பெருமையா ரறிவார் ”

என்று நாக்குளிர வியந்து கூறியதூஉங் கண்டுணர்க.

என்று இதுகாறும் தமிழ்மொழியின் விழுமிய திறன்களை யெல்லாம் ஒரு சிறிது விளக்கினோம் ;

இனி யாம் எடுத்துக்கொண்ட பொருட்கட் புகுதும் :—

இந்நிலவுலகத்து மக்கள் உடம்பு மருவப்பெற்ற மன்னுயிர்த் தொகுதிகள். இவர்கள் இருண்மலப் புணர்ப்பினின்றும் நீங்கி ஈடேற்றமடைய மந்திரங்க ளின்றியமையாது வேண்டற்பாலன. பண்டுதொட்டு ‘ஆரியம்’ ‘தமிழ்’ என்னு மிருமொழிக்கண்ணேயும் மந்திரங்க ளுண்டென்று அடிப்பட்ட சான்றோர் கூறுப. அஃதுணருமாற்றலில்லாத தமிழ்மக்களிற் சிலரும், தெலுங்குநாட்டில்நின்று பொருள்தேடக் கருதி நம் யாழ்ப்பாணநாடு போந்த பார்ப்பாரொருவரும் உலகவழக்கிறந்துபட்ட சமக்கிருத மொழியிலும் மந்திரங்கள் உண்டு கொல்? என்றும் வாளாகூறி உண்மை வரம்பழித்து அழி வழக்குப் பேசித் தமிழ்த்தாயின் மணி வயிறு வாய்க்கப்பெற்ற உண்மைப் புதல்வரின் நெஞ்சுகளைப் பெரிதும் புண்படுத்து வருகின்றனர்.

அதனையே ஈண்டு வழுவற வாராய்ந்து நாட்டுதும் :—

இற்றைக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் பனிபடு சிமைய நெடுவரை நீங்கிப் பொதியமலைக்கண்ணே வைகுதற்கு வழிக்கொண்டு வந்த தமிழ் முனிவராகிய ஆசிரியர் அகத்திய

ஞர் கடிமதில்சூழ் கொடிமாடக் காஞ்சிமா நகரைத் தலைக் கூடினர்.

கூடியவர் ஆண்டு எழுந்தருளியிருந்த திருவேகம்ப முடைய சிவபிரானைக் குறையிரந்து வரம்பெறு நின்றவர்,

“மன்னுமித் தமிழ்க்கிளவி மந்திரங்கள் கணித்தடியேன், செந்நெறியின் வழுவாதித் திருக்காஞ்சி வரைப்பினிலே, உன் னனுக் கனுகியினி துறைந்திடவும் பெறவேண்டும்” என்று செந்தமிழ்த் திருமந்திரங்களையு முடன்பெற்ருர் என்று சிவ ஞானமுனிவர் காஞ்சிப்புராணத்துட் கூறுமாற்ருன், மந்திரங் கள் தமிழ்மொழிக்கண் பண்டுதொட்டுண்டென்பது பெறப் படும்.

இன்னும் தமிழ்நாற் பெருவெளியிலே இளவளஞாயிறு போல நின்று அறிவொளி பரப்பிப் புத்தமுதொழுக்கும் முழுமுதற் ருெல்காப்பியத்தில்,

“நிறைமொழி மாந்த ராணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திர மென்ப” என்றும்,

“மந்திரப் பொருள் வயினு குநவும்” என்றும்,

“மறைமொழி கிளந்த மந்திரத் தான்” என்றும்,

காணக்கிடத்தலானும், மற்றவை தமக்கு நல்லுரைகண்ட தமிழ்ச்சான்ருேர் தமிழ் மொழிக்கண் மந்திரங்க ளுளவென் றும் அவை தம்மை வல்லார்வாய்க் கேட்டுணர்க என்று கூறிப் போதலானும்,

“ஆறெழுத் தடங்கிய அருமறைக் கேள்வி நாவியன் மருங் கில் நவிலப் பாடி” என்று நக்கீரனர் தாமருளிச்செய்த திரு முருகாற்றுப் படைக்கண்ணே கூறுதலானும், தமிழ் மொழிக் கண் மந்திரங்கள் நிலவின என்பது மலைக்குவட்டிற் பெய்த மணிவிளக்குப்போற் புலனுதல் கண்டுகொள்க. அல்லதூஉம், “அருமறையைச் சிச்சிலிபண்டருந்தத் தேடுமதுபோ லன்றிது வென்றுமுளதாம்” என்று திருமுறைகண்டபுராண முடை யார் ஆணைதந்து கூறுதலான் செந்தமிழ்மொழியிலே திருமந் திரங்கள் படைப்புக்காலம் தொட்டு உண்டென்பதூஉம், மற் றவை ஒருஞான்றும் அழியாது நிலைபெறு மென்பதூம் தெரி யக் கிடப்பனவாம்.

இனி, நம் செந்தமிழ் மொழிக்கண்ணே பண்டிருந்த மந்தி ரங்களெல்லாம் கால வேறுபாட்டினுனும், அவை தம்மை ஒதுவாரும் ஒம்புவாரும் இன்மையானும் இறந்துபடலாயின.

"அவை வல்லார்வாய்க் கேட்டுணர்க; தானே யென்று பிரித்தான் இவை தமிழ் மந்திரமென்றற்கு" என்று பேராசிரியர் தொல்காப்பியச் செய்யுளியலுட் கூறுதலினால் அவர் தங் காலத்திலேயே தமிழ் மந்திரங்கள் வழக்கிறந்துபட்டு அருகிப் போனமை இனிதுபோதரும் என்க.

மன்னுயிர்களிலே பேரருள் பூண்ட இறைவன் அறநெறி திறம்பிப் புறநெறி போந்து அல்லல் உழலுங்கால் அதனினின்று அவை தம்மை ஈடேற்றுவான் கருதித் தனது திருவருள் நிறைந்து அறிவுவிளக்கம்பெற்ற நல்லுயிர்கள் வாயிலாக அம்மந்திரங்களை மீட்டுமுலகிற் றந்து நிலைபெறச் செய்வான். அவ்வாற்றான் செந்தமிழ் மந்திரங்கள் மறைந்து, மக்கள் நிலை திரிந்து கடவுட் கொள்கையிலராய் நிற்கும் ஞான்று திருஞானசம்பந்தப் பெருமான், திருநாவுக்கரசு அடிகள், சுந்தரமூர்த்தியடிகள், மணிவாசகப் பெருமான், திருமாளிகைத் தேவர், திருமூலர், நக்கீரனார், சேக்கிழார் முதலாம் தவப் பெரியார் வாயிலாக அச் செந்தமிழ்த் திருமந்திரங்களை மீட்டும் தோற்றுவித்தாரென்று அறிந்துகொள்க.

அங்ஙனம் நல்லிறைவன் திருவருட்டுணை கொண்டு பிறந்தனவே 'தேவாரம்' 'திருவாசகம்' 'திருக்கோவையார்' 'திருவிசைப்பா' 'திருப்பல்லாண்டு' திருமந்திரம்' 'திருத்தொண்டர் புராணம்' பதினோராந் திருமுறை' என்று வழங்கலாயின என்பது.

இலக்கணமும் இலக்கியமும்:
LANGUAGE AND LITERATURE

இந்தியாவும் சாவகமும்

[திருவாளர் S. நடராஜ பிள்ளை, B. A.]

(௬0-ம் பக்கத் தொடர்ச்சி)

மஜபாகித்

வெற்றி பெற்ற ஜயடாங் கேதரத்துடன் சிங்கசாரியைச் சேர்த்து அரசாண்டு வந்தான். சின்னுட்கள் சென்றதும் ராதன் விஜயன் ஜயடாங்கிற்குப் பணிந்து அவனது உத்தரவின் மேல் வில்வ மரங்கள் அடர்ந்த காடான ஓர் இடத்தில் மஜபாகித் என்னும் பட்டினத்தை உண்டாக்கி அதை ஆண்டு வந்தான். ராதன் விஜயன் ஜயடாங்கிற்குப் பணிந்திருந்தனனெனினும் அவனைக் கவிழ்க்கச் சமயம் நோக்கி யிருந்தான்.

கிருதநாகரனல் அவமதிக்கப்பட்ட சின அரசர் குபலைக்கான் என்ற படைத்தலைவனின் தலைமையில் ஓர் பெரும் படையைச் சாவகத்திற்கு அனுப்பினர். ராதன் இவ்வேளையைத் தனக்குப் பயன்படுத்தக் கருதினன். ராதன் குபலைக்காரனுக்கு உளவாளி யாயினன். ராதனின் உதவியால் குபலைக்கான் கேதரத்தை எதிர்த்து ஜயடாங்கைக் கொன்ருன். ஜயடாங்கை வென்ற சினப் படையின்மேல் ராதன் திடீரென்று எதிர்த்துத் தோற்கடித்தான். சினப் படைகள் சிதறுண்டு சினம் சென்றது. ராதன் இச்சமயத்தைக் கைநழுவ விடாது தம் ஆட்சியை வலுப்படுத்திக்கொண்டான். கி. பி. 1294-ல் கிருதராஜக ஜயவர்த்தனன் என்ற பட்டம் சூட்டிக்கொண்டான். இவன் சிருஞ் சிறப்புடன் சின்னுள் அரசாட்சி செய்து பின்னர் விண்ணுலகெய்தினன். இவன் இறந்ததும் இவன் சாம்பலை அடக்கஞ் செய்துள்ள இடத்தில் ஓர் அழகிய கோயில் கட்டினர்கள். இக் கோயிலில் இம் மன்னனின் சிலை ஒன்று வைக்கப்பட்டுளது. இச் சிலை விஷ்ணு போல் எல்லா ஆயுதமுந் தாங்கி நிற்கிறது. சாவகத்துள்ள மிக விலைமதிப்புள்ள சிலைகளில் இதுவும் ஒன்று. வீரர்களைக் கடவுளரைப் போற் போற்றுவது பண்டைத் தமிழ் மரபு. சாவகம், கம்போடியா முதலிய நாடுகளிலும், தமிழ் நாட்டிலும் இப் பழக்கம் இன்றும் இருந்து வருகின்றமை நோக்கத் தக்கது.

ராதன் விஜயனின் மகன் வன்மையற்ற ஓர் கோழை. ராதனுக்குப் பின் மூன்றாவது அரசாண்டது திரிபுவன துங்கதேவி என்னும் பெண்ணரசி. இவளும் இவள் தாய் சாயத்திரியும், தங்கை ராஜதேவியும் ஒன்றாய் அரசு நடாத்தினர். திரிபுவன துங்கதேவியின் கணவர் முதலமைச்சராய் விளங்கினர். எனினும் மிகவும் முதன்மையான பதவி வகித்தவர் கஜமதன் என்பார். ஓர் நாள் அரசவையில் கஜமதன் மஜபாகித்தின் கொடி பிற நாடுகளிற் பறக்கச் செய்ய வேண்டும் என மதியுரை கூறினன். ஏனைய அமைச்சரும் பிரதானிகளும் இவன் எண்ணத்தைப் பகற்கனவு என ஏளனஞ் செய்தனர். இவ் வசையைத் தாங்காது கஜமதன் தன் எண்ணத்தின்படி படை திரட்டும்படி அரசி திரிபுவன துங்கதேவியைத் தூண்டினன். அரசியும் இவன் வேண்டுகோட்கிணங்கி ஒரு பெரும் படை திரட்டி கஜமதன் எண்ணப்படி பிற நாடுகளைக் கைப்பற்ற இசைவு கொடுத்தாள். 1343-ல் பாலித் தீவுக் கூட்டங்கள் இவன் கைவசமாயின. விரைவில் மதுரைத் தீவையும், சிலிபஸ் தீவையும் கைப்பற்றினன்.

1350-ல் தன் மகன் ஹியம்வுருக் [இளங் காளை] வயதடையவும் திரிபுவன துங்கதேவி அரசை அவனிடம் ஒப்புவித்தாள். எனினும் முதன்மையான அதிகாரியாய் இருந்து அரசாட்சியைப் பரப்பினள். அக்கம்பக்கத்து நாடுகளை வென்று மஜபாகித்தை வல்லரசாக்கினள். வேற்றரசர்களும் மஜபாகித்தை வல்லரசராய் ஒப்புக்கொண்டு நட்புப் பூண்டனர்.

மஜபாகித்தின் வீழ்ச்சி

விரைவில் ஹியம்வுருக் காலஞ்சென்றார். அவருக் குப் பின் மஜபாகித்தின் வன்மை குறையத் தொடங்கிற்று. அவர் மகனுக்கும், மருமகனுக்கும் உள் நாட்டில் சண்டை உண்டாயிற்று. வட போர்னியோ, சுமித்திரா முதலிய நாடுகள் மஜபாகித்தின் ஆட்சியில் இருந்து பிரிந்து தன்னரசு நாடுகளாய் மாறின. ஓர் கடுமையான பஞ்சம் மஜபாகித்திற்குக் கொடும் இன்னலிழைத்தது.

மஜபாகித்தின் இறுதிக் கால மன்னர்களைப் பற்றி விரிவாகத் தெரியவில்லை. ஹியம்வுருக்கின் பேத்தியான சுகிதா என்னும் அரசியின் காலத்தில் கேநரம் மஜபாகித்தினின்றும் விலகித் தனி நாடாயிற்று. அரசி சுகிதாவுக்குப் பின் அவள் தம்பியாய கிருதவிஜயன் அரசனானன். இவன் சம்பா தேசத்து இளவரசியை மணந்தான். இவள் இஸ்லாம் மதத்திற்கு உறவு

காட்டினுள். இவளுடைய ஆதரவால் இஸ்லாம் முதல் முதல் சாவகமண்ணிற் பரவத் தொடங்கிற்று.

மஜபாகித்தின் கடைசி மன்னனுன பிரவிஜயன் என்பார் மகமதியருக்குக் காட்டிய உறவை அவர்கள் நன்றி கெட்ட வழியிற் பயன்படுத்தி மஜபாகித்தைக் கவிழ்த்தினுர்கள் எனவும், இறக்குந் தறுவாயில் இருந்த மன்னன், கடல் கடந்து வரும் அன்னியர்கள் மகமதியர்களின் மேல் பழிக்குப் பழி வாங்குவார்கள் எனக் கூறிவிட்டு உயிர் நீத்ததாகவும் சாவகத்தில் இன்னும் ஓர் ஐதிகம் (Tradition) வழங்குகின்றது. டச்சுக்காரர்கள் இம் மன்னனின் வாக்கை நிறைவேற்றியதாகக் கூறிக்கொள்ளுகின்றனர்.

ஆனுல் டாக்டர் க்ரோம் (Dr Krom) என்பார் தாம் கண்டு பிடித்த கல்வெட்டு ஒன்றினுலே கி. பி. 1478-ல் மஜபாகித்தை விழ்த்தியது கேதரத்தின் இந்து மன்னனுன ரானவிஜயன் எனக் கூறுகிருர். மஜபாகித்தின் ஆட்சி 1478-ல் வீழ்ந்த போதிலும் 1521 வரை இஃது ஓர் முதன்மை நகராகவே கருதப்பட்டு வந்ததாகத் தெரிகிறது. ரானவிஜயனும், அவன் வழித் தோன்றல்களும் மகம்மதியரின் எழுச்சியின் முன் நிற்கக்கூடவில்லை. சாவக வரலாற்றில் மகம்மதியர் காலம் 16-ம் நூற்ருண்டிலிருந்து தொடங்கி வருகிறது.

மஜபாகித் நகரம்

நாகரக் கிருதசாமாவில் மஜபாகித்தின் நகராட்சியைப் பற்றி விரிவாகக் கூறப்பட்டுளது. ஊரைச் சுற்றி நாற்றிசைகளிலும் ஆழமான குளங்கள் இருந்தனவாம். இக் குளக் கரையில் உள்ள பல மரங்கள் குளிர்ந்த பார்வையை அளித்தன. ஊரின் உட்புறத்திலும், வீதிகளின் இரு புறங்களிலும் மரங்கள் வளர்க்கப்பட்டிருந்தன. சந்தைகள் கூடுவதற்கு ஊரின் ஒவ்வோர் பாகத்திலும் சதுக்கங்கள் வகுக்கப்பட் டிருந்தன. கடைவீதி, இராஜ வீதி முதலிய வீதிகள் அழகாய்ப் பிரிக்கப்பட்டிருந்தன. நகர், காண்போர் மனதைக் கவர்ந்து களிப்படையச் செய்தது. இந் நகரின் கிழ்ப் பகுதியில் சைவ அந்தணர்கள் வாழ்ந்து வந்தனர். இவர்களின் தலைவருக்கு பிரம ராஜன் என்ற பட்டமுண்டு. தென் பாகத்தில் புத்தர்கள் வதிந்தனர். புத்த சங்கத் தலைவர் பெயர் ஸ்தாவிர ரேங்கனடி. மேற்குப் பாகத்தில் க்ஷத்திரியர்களும், அமைச்சர்களும் பிரதானிகளும் வசித்து வந்தனர்.

அமைச்சக் கழகத்தின் தொகை ஐந்து. இவ்வைம் பெருங் குழுவினரே பொறுப்பாய் ஆட்சியை நடாத்தி வந்தனர். நீர்

அமைச்சர்கள் (Admirals) என்னும் அதிகாரிகள் வல்லரசின் எல்லைகளில் கடற்படைகளின் உதவியால் காப்பாற்றி வந்தனர். அரச குடும்பத்தினரும் எல்லைப் புறங்களிலிருந்து பொறுப்பான பதவிகளை வகித்தனர். எனினும் அவர்கள் அரசனிடத்தில் உள்ள அன்பைக் காட்டிக்கொள்வதற்காக அடிக்கடி தலைநகர் வந்து போவார்கள்.

கீழைச்சாவகத்தின் சமயம்

இந்து மதமும் பௌத்தமும் ஒன்றுடன் ஒன்று விரவி வழங்கி வந்ததாக அறியக் கிடக்கின்றது.

கிருதநாகரன் என்னும் சிங்கசாரியின் இறுதி மன்னன் காலத்தில் தந்திரமதம் வலிவுடன் திகழ்ந்தது. கிருதநாகரன் சிவபௌத்தன் எனக்கருதப்பட்டான். இவன் சுடலையிற் போய்த் தவங்கிடந்து தன்னைத் தூய்மைப்படுத்திக் கொண்டதாகக் கூறப்படுகிறது. இவர் காலத்தில் எழுந்த சாங்ஹியங் காமாயணிக்கன் (Saug Hyang Kamahayanikam) என்னும் மந்திராயன மகாயான நூலில் தந்திரமதம் மிகவும் பரவியிருந்ததாகக் கூறப்பட்டிருக்கிறது.

சாவகத்து மன்னர்களால் சைவபுஜங்கர்கள் (மதபோதகர்கள்) அரசியற் பணிகளை யாற்றுவதுடன் சைவ சமயத்தைப் பரப்பவும் அநுமதிக்கப்பட்டனர். பௌத்த புஜங்கர்கள் மேற்குச் சாவகம் தவிர ஏனைய இடங்களில் மதத்தைப் பரப்ப அநுமதிக்கப்பட்டனர்.

சாவகத்தின் நிலை

O. C. கங்கோலி என்னும் வங்காள அறிஞர் சாவகத்தின் கலை (The Art of Java) என்ற ஓர் சிறந்த நூலை வெளியிட்டுள்ளார். இதில் 67 புகைப்படங்களும் 16 கீற்றுப்படங்களும் (Diagram) அடங்கியுள்ளன. இப்படங்களைக் கண்ணுறுவார் இவை இந்திய நாட்டில் எடுக்கப்பட்டனவோ என மயங்காநிரார்.

சாவகத்துக் கோவில்களின் கூடகோபுரங்களும் விமானங்களும் தென்னிந்தியக் கோவிற் கூடகோபுரங்களையும் விமானங்களையும் ஒத்திருக்கின்றன. சந்திபீமா என்ற கோவிலிலுள்ள துவார பாலகர்சிலை தென்னிந்தியக் கோவில்களிலுள்ள துவார பாலகர் சிலைபோல் இருக்கின்றது. சந்திசிரிகிண்டி என்னும் கோவிலிலுள்ள பிரம்ம, விஷ்ணு, சிவன் சிலைகள் இந்திய நாட்

டினதைப்போலவே தோன்றுகின்றன*. துங்கபத்திரா நதிக் கரையிலிருந்த குஞ்சரகோன என்ற கோவிலை மாதிரியாகக் கொண்டுதான் முதற்கோவில் சாவகத்தில் கட்டப்பட்டிருக்க வேண்டும் என்று Dr. கெர்ன் என்பார் கருதுகின்றார். சாளுக்கிய, பல்லவ காலத்துச் சிற்பக் கலையைப் பின்பற்றியே சாவகத்துக் கோவில்கள் பல கட்டப்பட்டன எனக் கருத வேண்டியிருக்கிறது.

கிழைச் சாவகத்தின் ஆட்சியின் இறுதிக் காலத்தில் சாவகத்துக்கலை இந்தியக் கலையைத் தன்னுட்கொண்டு தனிக் கலையாகத் திகழத் தொடங்கிற்று. பாரா என்ற இடத்தி லுள்ள கணேசர் சிலை இதற்கு ஓர் அத்தாட்சியாம்.

சாவகத்தின் கலையும் நாகரிகமும் பண்டை இந்தியாவின் சிறப்பையும் அதன் நாகரிக ஒளியின் பரப்பையும் காட்டுகின் றன. பரந்த கடல் கடந்து இந்தியச் சிற்பிகள் தங்கள் கலைத் திறனை எல்லைப்புற நாடுகளிற் பரப்பியுள்ளமையைச் சாவகத் தில் எஞ்சியுள்ள அடையாளங்கள் அறிவுறுத்துகின்றன. பண் டைத் தமிழரும் தென்னிந்திய மக்களும் கடல்கடந்து தங்கள் நாகரிகத்தையும் கலையையும் சென்ற சென்ற இடங்களில் நிலை நாட்டியிருந்தமை இஞ்ஞான்று ஆராய்ச்சி வல்லுநர்களால் தெளிவாக எடுத்துக் காட்டப்படுகிறது.†

S. நடராஜன் B. A.

---

*These figures appear to recall Southern Indian types in details of iconography, dress & ornaments as well as in general plastic feeling.

—O. C. Gangoly.

† The Art of Java really recovers to us one of the lost pages of Indian Art, and helps us to reconstruct the continuous development of the history of Indian Art. It is one of the outlying frontiers of the civilization of a greater India stretching itself to the shores beyond "the moving seas".

—O. C. Gangoly.

குறுந்தொகை

மூலமும் விளக்க உரையும்

[இலங்தையடிகள் வித்துவான் இரா. சிவ. சாம்பசிவன்]

(பதிப்புரிமை ஆசிரியர்க்கே)

(௨௯-ம் பக்கத் தொடர்ச்சி)

நெய்தல்

பிரிவிடை யாற்றுளெனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி யுரைத்தது. அதாவது தலைமகன் பிரிவால் தலைவி வருந்துவளே எனக் கவன்ற தோழிக்குத் தலைவி தனது ஆற்றுமை தோன்றக் கூறியது.

நரிவெரூஉத் தலையார் பாடியது

5. அதுகொல் தோழி காம நோயே
வதிகுரு குறங்கு மின்னிலைப் புன்னை
யுடைதிரைத் திவலை யரும்புந் தீநீர்
மெல்லம் புலம்பன் பிரிந்தெனப்
பல்லித ழுண்கண் பாடொல் லாவே.

பதவுரை:—தோழி, அதுகொல் காமநோயே—தோழியே இதுதானே காமநோய் என்று சொல்லப்படுவது! வதி குருகு உறங்கும்—தன்னிடத்தே தங்கப்பெற்ற நாரை துயில்கொள்கின்ற; இன் இலைப்புன்னை—இனிய இலைகளையுடைய புன்னை மரத்தின்மீது; உடை திரைத் திவலை அரும்பும் தீநீர்—சிதறிப் போகும் இயல்பினவாகிய அலைகளின் நீர்த்துளிகள் நிறைந்து காணும் தீயநீரையுடைய; மெல்லம் புலம்பன்—மெல்லிய கடலினையுடைய துறைவன்; பிரிந்தென—பிரிந்தானாக; பல்இதழ் உண்கண்—பலவாகிய இதழ்களையுடைய மலரை யொத்த மையுண்ட கண்கள்; பாடு ஒல்லாவே—துயிலினைப் பொருந்தாவாயின.

அதுகொல்—கொல் ஐயப்பொருள் தரும் இடைச்சொல். அது என்பது கண்பாடு இல்லாமை என்பதைக் குறித்து நின்றது. இன்+நிலை எனக்கொண்டு இனிய நிலை என்றும் இல்+நிலை எனில் இல்லாத நிலை என்றும் வீட்டின் நிலை என்றும் கூறலாம். உடைதிரை—கரையை மோதி உடைக்கும் திரை (எனின் வினைத்தொகை) தீநீர்—தீதாகிய நீர்; தீயகுணமுமாம்; என்னெனில் குருகு உறங்கும் நிலையைக் கெடுத்தலால். புலம்

பன் சேர்ப்பன்—நெய்தல் நிலத்தலைவன். புலம்பு—கடல், சேர்ப்பு—கடற்கரை. பல்இதழ்—பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை. இதழ்—சினையாகு பெயராய் மலரைக் குறித்தது. கண்பாடு — கண்படுதல் — தூங்குதல். பலவாகிய இதழ்களையுடைய மலராவன—தாமரை, கருவிளை, குவளை, கருநெய்தல் முதலியன.

மேற்கோள் விளக்கம்

1. "அதுகொல் தோழி காமநோயே"—இடைச்சொற் புணர்ச்சிக்கு உதாரணமாகக் காட்டப்பட்டது.

(நன்னூல்—சங்கரநமச்—204 பக்; மயிலைநாதர்—247 பக்;)

தொகாநிலைத் தொடருக்கு உதாரணமாகக் காட்டப்பட்டது.
—(நன்—மயிலை—பக். 143)

பகாப்பதம் தன்னொடு பிறிதொடும் வந்ததற்கு மேற்கோள்.
—(நன்—மயிலை—பக். 77)

2. "அது கொல்......ஒல்லாவே"—தொல்—களவு—பக் 480 வரைவிடைக் கவன்று தோழிக்குக் கூறியது.

3. "புன்னை யுடைதிரைத் திவலையரும்புந் தீநீர்"—
'துவற் கவித்த தேம்பாய் புன்னை'—புறம் 247.
புணரி பொருத பூமணலடை கரை—(நற்றிணை 11)

4. "பல்லிதழ் உண்கண்'—'பல்லிதழுண் கண்ணுந்தோளும் பாட"—(முல்லைக் கலி — 12-9); (நற்றிணை — 240-11);
(ஐங்குறு நூறு 170, 190, 334, 351, 471)

பல்லிதழ் மலருண்கண் பசப்பநீ சிதைத்ததை
—(குறிஞ்சிக் கலி—45-11)

"பல்லிதழ் மலருண்கண் பனிமல்கக் காணுங்கால்"
—(மருதக்கலி-100-10)

5. "அதுகொல் தோழி காமநோயே'—என்றது இதுவரை உணராதிருந்ததை புணர்த்தியதாயிற்று.

6. 'அது கொல்தோழி......பாடொல்லாவே'—இது பிரிந்த வழிக் கலங்கியதற்கு மேற்கோள்' (தொல் — களவு — இளம் பூரணம்—பக் 174.)

இறைச்சி:

நாரை உறங்கும் புன்னையின்மீது அலைநீர்த் துளிகள் தெறிக்கும் கடற்றுறைவன் என்றது தான் உறங்கும் மனையில் உறங்கலாகாதவாறு பிரிவால் வருந்தும் இயல்பினள் தலைவி என்பதாம்.

குருகு:

இது நெய்தல் நிலத்துக்கு உரியதெனக் கூறப்படுவதாகிய ஒரு பறவை; கரிய காலையும் வெண்ணிறத்தையும் உடையது. இது பனைமடலிற் கூடுகட்டிக்கொண்டு வதியும்; மீன் முதலிய நீர்வாழ் பிராணிகளை இரையாகக் கொள்ளும்; துணை பிரிந்திருப்பின் அதனை அழைக்கும் தன்மையது. நள்ளிரவில் இது உயவுந் தன்மையது. இதற்குச் சங்கும், இதன் காலுக்குத் தினை யரிதாளும், வெண்டாழம் பூவும், வெண்கூதாளம் பூவும் உவமை கூறப்படும். இதன் இறகை யும் தூவி என்று வழங்குவதுண்டு. இதனைக் கொக்கு, நாரை, அன் னம் என்பாரும் உளர். இது வெண்ணிற முடைமையால் வெள்ளாங் குருகு எனவும் படும். இதன் குரலுக்கு யாழ் ஒலியும், இதன் கூட்டத் தின் ஆர்ப்புக்குத் தேர்மணி ஒலியும் உவமை கூறப்படும். யானையங் குருகினும் இது வேறு என்பார் சிறு வெள்ளாங் குருகு என்பர். இதனையே அன்றில் எனக் கருதுவாரும் உளர். இவற்றைப் பின் வருவனவற்றால் அறிக.

1. "புன்னை, வாலிணர்ப் படுசினைக் குருகிறை கொள்ளு
மல்குறு கானலோங்குமணை லடைகரை"

2. "கருங்கால் வெண்குருகு."

3. "பெண்ணை, வீங்குமடற் குடம்பைப் பைதல் வெண்குருகு
நள்ளென் யாமத் துயவுதோறுருகி"

4. "பெண்ணைத் தோடுமட லேறிக்
கொடுவாய்ப் பேடைக் குடம்பைச் சேரிய
உயிர்செலக் கடைஇப் புணர்துணைப்
பயிர்தலானு பைதலங் குருகே"

5. "நெய்த்தலைக் கொழுமீனருந்த வினக்குருகு
குப்பை வெண் மணலேறி"

6. "குருகுடைத் துண்ட வெள்ளகட் டியாமை"

7. "கோடு துணர்ந்தன்ன குருகொழுக்கு"

8. "தினைத்தாளன்ன சிறுபசுங்கால
வொழுகுநீராரல் பார்க்குங் குருகுமுண்டு"

9. "தாழை குருகீனுந் தண்ணந் துறைவனே"

10. "தாழை வெண்பூக், குருகென மலரும் பெருந்துறை"

11. "பிணர் முடத்தாழை விரிமலர் குருகென
நெடுங் கழிக்குறுங்கயல் நெய்தலுண் மறைந்தும்"

12. "குருகிருந் தன்ன, வன்பிணி யவிழ்ந்த வெண்கூதாளத்
தலங்கு குலை யலரி"

13 "துறைபோ கறுவைத் தூமடியன்ன, நிறங்கிளர்
தூவிச் சிறுவெள்ளாங் குருகே"

14. "யாழ், நரம்பிசைத் தன்னவின்குரற் குருகின்"

15. "விருந்தின் வெண்குரு கார்ப்பின்......பண்ணமை
நெடுந்தேர்ப் பரணியினொலிக்கும், தண்ணந்துறைவன்"

16. "வெள்ளாங் குருகின் பிள்ளை"

17. "யானையங் குருகின் கானலம் பெருந்தோ
டட்ட மள்ள ரார்ப்பிசை வெரூஉங்
குட்டுவன் மாந்தை"

18. "இன்றுணை நீப்ப விரவினுட் டுணையாகித்
தன்றுணைப் பிரிந்தயாஅந் தனிக்குருகு சவுமே"

19. "எறிசுறவங் கழிக்கான விளங்குருகே"
—(சம்பந்தர் தேவாரம்—திருத்தோணிபுரம்)

1. "தெண்ணீர்ப், பொய்கை மேய்ந்த செவ்வரிநாரை
தேங்கொண் மருதின் பூஞ்சினை முனையிற்
காமரு காஞ்சி துஞ்சு
மேமஞ்சால் சிறப்பினிப் பணைநல் லூரே"—(புறம் 351)

2. "வயலமர் கழனி வாயிற் பொய்கைக்
கயலார் நாரை யுகைத்த வாளை" —(புறம் 354)

3. "மென்பாலா னுடனணைஇ
வஞ்சிக் கோட் டுறங்குநாரை —(புறம் 384)

4. "நாராய் நாராய் செங்கால் நாராய்" —நாரைவிடுதூது
என்பனவற்றாலும்,

5. "காண்தகைய செங்காலொண் கழிநாராய்"
—(சம்பந்தர்—திருத்தோணிபுரம்)

என மேல் வருவனவற்றால் நாரை வேறு; குருகு வேறு என்றே கொள்வாருமுண்டு.

இதனை, ஐங்குறு நூற்றில் "வெள்ளாங் குருகுப் பத்து" என்பதில்,

"வெள்ளாங் குருகின் பிள்ளை செத்தெனக்
காணிய சென்ற மடநடை நாரை" என

(151, 152, 153, 154, 155, 156, 157, 158, 159, 160) 151 முதல் 160 ஈறுகவுள்ள பத்துச் செய்யுட்களிலும் நாரை வேறு; குருகு வேறு எனக்கொண்டு கூறியிருத்தலால் அறிக.

புன்னை :

புன்னை - இது ஓர் வகை மரம். நெய்தல் நிலத்துக்குரியது. இது பருத்துக் கருத்த நீண்ட அடியையும் குறுகிய கொம்பையு முடையது. இதன் கொம்பைப் பசுநிறமுடைய தென்பர். அதற்கு இரும்பை உவமை கூறுவர். இம்மரம் பரதவர்க்கு மிகவும் பயன்

படுவதாகும். மீன் உண்ணவந்த பறவைகளும் இதன்மீது தங்கும். மகளிர் நறவு கொப்பளிப்பதாலும், ஆடுவதாலும் பூப்பதென்பர். இம்மரத் தொகுதியைப் பொழில் என்பர். இதன் இலை நீலநிறமும் அகலமும் உடையது. இது கொத்துக் கொத்தாகப் பூக்கும் இயல்பினது. இது நிறம், உருட்சி முதலியவற்றால் மண்ணுமுத்து, பல்லி முட்டை, சங்குமணி, விண்மீன் முதலியவற்றிற்கு உவமையாகக் கூறப்படும். இதன் அரும்பு வெண்மை, பொன்மை, செம்மையாய நிறங்களைத் தன்னிடமுடைமையால் இது பவழத்தையும் பொன்னையும் உள்ளடக்கிய முத்தென்று புனைந்து கூறுவர். இதன் பூவையும் இவ்வாறு கூறுதலுண்டு. பூவை மக்கள் அணிவதுமுண்டு. இப்பூவில் தாதுளதால் வண்டு முரன்றுகொண் டிருக்கும். இதன் போது அவிழ்கின்ற நிலைக்கு ஊர்க்குருவியின் முட்டை உடைந்ததை உவமை கூறுவர். இதன் தாது பொன்னிறம் உடையது; முப்பத்திருவகை ஓமாலிகைப் பொருள்களுள் ஒன்று. இதன் நிழலை, புகர் நிழல் என்றும், கொழுநிழல் என்றும் கூறுவர். கொழுநிழலுள்ள இம்மரத்தடியில் மன்றம் அமைப்பர். இவற்றைக் கீழ் வருவனவற்றால் அறிக.

1. " வெண்டிரை பொருதவேலை வாலுகத்துக்
குண்டுநீ ரடைகரைக் குவையிரும் புன்னை."
2. " முதுநீர்ப் புணரி திளைக்கும் புள்ளிமிழ்கான
லிணரவிழ் புன்னை "
3. " உரவுத்திரை பொருத்தணி மணலடைகரை
நனைந்த புன்னைமாச் சினை."
4. " ஓங்கல் வெண்மணற் றாழ்ந்த புன்னைத்
தாதுசேர் நிகர்மலர்."
5. " வான்கடற் பரப்பிற் றூவற் கெதிரிய
மீன் கண்டன்ன மெல்லரும் பூழ்த்த
முடவுமுதிர் புன்னைத் தடவுநிலை மாச்சினை
புள்ளிறை கூரு மெல்லம் புலம்ப "
6. " பராரைப் புன்னைச்சேரி "
7. " நுரைபிதிர்ப் படுதிரைப் பராரைப் புன்னை வாங்குசினை "
8. " முடக்காற் புன்னையும் "
9. " கொடுங்காற் புன்னை "
10. " நெடுங்காற் புன்னை நித்திலம் வைப்பவும் "
11. " எல்லியன்ன விருணிறப் புன்னை, நல்லரை முழுமுத
லவ்வயிற் றொடுத்த தூங்கலம்பி "
12. " கருங்கோட்டுப் புன்னைப் பூம்பொழில் "
13. " நெடுஞ்சினைப் புன்னை "
14. " குறுஞ்சினைப் புன்னை நறுந்தாது "
15. " பைங்கோட்டு மலர்ப்புன்னை "

(தொடரும்)

வரலாற்றுப் பகுதி : History & Biography

இத்தாலிய தேயப் பழங்குடிகள்

[பருத்தித்துறை திரு. த. இராமநாத பிள்ளை, B.A., (Lon.)]

இரண்டாம் அதிகாரம்

(கூ-ம் பக்கத் தொடர்ச்சி)

நூமா பம்பிலியஸ்

உரோமுயுலஸ் மறைந்தபின் ஒரு வருடகாலமாக வேந்தனுக்குப் பிரதியாக ஐந்துநாளைக் கொருமுறை ஒரு தலைவனைத் தெரிந்தனர். பின்னர் நூமா பம்பிலியஸ் என்னும் சபீனியன்மக னொருவனுக்கு அரசுரிமை அளித்தனர். அவன் ஆட்சிக் காலம் 715 - 673 கி. மு. என்ப. நூமா கலைகளையும் வித்தைகளையுங் கற்றுப் பண்டங்களையாக்கும் பயிற்சிகளைப் பரப்பினான். சமயக்கிரியைகளையும் ஒழுங்காக முறைப்படுத்தினன். கம்பேனிய நாட்டில் வசித்த பிதாகொரஸ் கலைஞனிடம் ஞானங் கற்றுப் பின்பு ஏகோரியா தேவதையிடம் விஞ்ஞானங் கற்று விளங்கித் தனது தெய்வத் தன்மையைக் காட்டுதற்காகச் சனங்களைக் கூவி மட்குடங்களைப் பொற்குடங்க ளாக்கினன். நூமா மாக்கியனைச் சமயக் கணக்கனாக்கினன். தேவர்களின் ஆணைகளை அறிதற்காகப் புள் நிமித்தம் பார்க்கும் நிமித்திகர் கூட்டமொன்றை நிறுவினன். போர்த்தேவன் மாறுசுக்கும் யுப்பிற்றருக்கும் குவைதினஸ் என்னும் உரோமுயஸ்க்கும் கோட்டங்களைச் சமைத்துச் சாலினிகளைச் சேவை செய்யும்படி நியமித்தான். வெஸ்தா தேவிக்கும் தீவளர்க்கும் அரிவையரை நியமித்தான். சாலினிகள் கற்பு நிலை தவறாதிருத்தல் வேண்டும். போர்த்தேவனது ஸ்ரீ பரிசத்தைப் பன்னிருவர் காத்தனர். இருமுகக் கடவுள் யானஸ் என்பவனும் ஒரு கோட்டம் பெற்றான். இருமுகக் கடவுளின் கோட்டை வாயில் போர்க்காலத்தில் திறந்தும் சமாதான காலத்தில் அடைக்கப் பட்டும் இருந்தது. நிலத்தைப் பங்கிட்டதை நினைவு கூர்தற்காக எல்லைத் தேவனுக்கும் ஓர் கோட்டம் கட்டப்பட்டது. பாணர் தட்டார் தச்சர் சுவர்கட்டுவோர் சாயக்காரர் செம்மார் கன்னார் குயவர் எனப் பல கூட்டத்தினராகத் தொழிலாளரை வகுத்தது நூமா எனக் கூறுப. ஆண்டைத் திங்கள் கிழமை நாளாகப் பிரித்ததும் நூமா என்ப. நூமா நாற்பத்திரண்டு ஆண்டுகள் செங்கோல் செலுத்திய பின் துஞ்சினன்.

துல்லஸ் கஸ்திலியஸ்

நூமாவின் அரசு கட்டில் ஏறிய துல்லஸ் கஸ்திலியஸ் என்பான் போர்ப் பிரியன். துல்லஸ் உரோம வம்சத்தவன். அல்பாலோங்காவின் கமக்காரருக்கும் உரோமக் கமக்காரருக்கும் கலகம் ஏற்பட்டதாக அல்பாவின் வேந்தன் மெற்றஸ் என்பானும் உரோம வேந்தன் துல்லஸ் என்பானும் போரை நிறுத்தி இரு வீரரைத் தெரிந்து அவர்களின் தனிப் போரால் வெற்றி தோல்வியை நிச்சயிக்க உடன்பட்டார்கள். உரோம வீரர் கொருற்றிய சகோதரர் மூவர் குயிருற்றிய சகோதரர் மூவரை எதிர்த்தனர். கொருற்றிய மூவருள் இருவர் இறந்தனர். இறக்கவும் கொருற்றியன் தமியனாக நின்று தன்செருநர் மூவரையும் ஒவ்வொருவராகக் கொன்று அவர்களுடைய ஆடைகளையும் அணிகலங்களையும் ஏந்திவெற்றிக்கோலத்துடன் வந்தான். அவன் தங்கை தன் காதலனின் ஆடையைத் தமயன் கையிற்கண்டு துயருற்று அழுதாளாக, கொருற்றியன் தனது பெரு வெற்றியில் தங்கை மகிழ்கின்றிலள் எனச் சிற்றங் கொண்டு அவளை ஈட்டியாலெறிந்து கொன்றான். நீதிபதிகள் கொருற்றியனுக்குக் கொலைத் தண்டனை விதித்தனரென்றும் அரசன் சனங்களின் விருப்பத்தைக் கேட்க, கொருற்றியன் வீரனாகையாலும் அவன் தந்தை தான் மக்கள் மூவரையும் ஒரே நாளில் இழக்க நேரிட்டதெனப் புலம்பினமையாலும் சனங்கள் இரங்கி கொருற்றியனை மன்னிக்கும்படி வேண்டினரென்றும் பழங்கதைகள் கூறும். வியரும் பிடேனியரும் உரோமரொடு பகைத்து மெற்றஸ் வேந்தனின் துணை வலியில் நம்பிப் போர்க்கெழுந்தனர். மெற்றஸ் உரோமருக்குத் துணை புரியுமாறு வந்து போர்க் களத்தில் தனது படையை வாளாவிருக்கச் செய்தானாகையான் கஸ்திலியஸ் அவனைச்சிறைப்படுத்திக் காட்டுக் குதிரைகளின் கால்களிற் கட்டிக் கிழிப்பித்தான். கஸ்திலியஸ் அல்போலோங்காவின் குடிகளைக் கயிலியன் குன்றிற் குடியேற்றினன். ஊரில் ஓர் நோய் பரவினதாக, கிரியை நூல்களை ஆராய்ந்து சாந்திகளைச் செய்வித்தான். சாந்தியாக யுப்பிற்றர் என்னும் வியாழ பகவானுக்குப் பலியிடும்போது இடியேறுபட்டு இறந்தான்.

அங்கஸ் மாக்கியஸ்

நூமா பம்பிலியஸின் பேரன் அங்கஸ் மாக்கியஸ் அரசுரிமை பெற்றான். மாக்கியஸ் போரை வெறுத்தான். இலத்தினரை அவந்தையின் குன்றிற் குடியேற்றினன். றைபர் நதி கடலொடு கலக்குமிடத்து ஒஸ்தியா என்னும் துறை

முகத்தை அமைத்தான். போர் தொடங்குமுன் போர் முழங்கும் தூதுவர் மூலமாக யுத்த வறிக்கை பண்ணும் வழக்கத்தை நிலை நாட்டினான்.

இராக்குவினியஸ்

கொறிந்துத் தொன்னகரத்துக் கொடுங்கோன் மன்னன் சிப நிலனால் நாடு கடத்தப்பட்ட பிரபு தெமருட்டஸ் இத்தாலிய நாட்டிற் குடியேறினான். அவன் மகன் லுக்குமோ இரனக்குயில் என்னும் எற்றூறியப் பெண்ணொருத்தியை மணம் புரிந்தான். அந்நியனெனப் புறக்கணிக்கப்பட்டுத் தன் மனைவியோடும் உரோமா புரத்தை யடைந்து வாழ்ந்தான். உரோமாபுரத்துக்குச் செல்லும் வழியில் அவனுடைய தலைப்பாகையை ஒரு கழுகு கொத்தியெடுத்துத் திரும்பவும் தலையிலிட்டதைக் கண்ட இரனக்குயில் நிமித்த நூலறிவுடையள் ஆகையால் தன் கணவனுக்குச் சுககாலம் வருமென எதிர்பார்த்திருந்தாள். அங்கஸ் அரசனோடு லுக்குமோ நட்பாகி லூசியஸ் இராக்குவினியஸ் என்னும் பெயர் பெற்று வேந்தனுக்குத் தொண்டு புரிந்தான். அங்கஸ் அவனைத் தன் மக்களுக்குக் காவலனாக்கினான். அங்கஸ் இறந்தபின் சனங்கள் காவலனது ஊக்கத்தை மெச்சி அவனுக்கே முடிசூட்டினார்கள்.

இராக்குவினியஸ் சபீனியரையும் இலத்தினரையும் எற்றூறியரையும் அடக்கி அவருட் சிலரை உரோமா புரத்திற் குடியேற்ற எண்ணி முச்சாதிகளொடு வேறு சாதிகளையுங் கூட்டத் தொடங்கினான். அக்றஸ் நாவியஸ் என்னும் நிமித்திகன் "எடுத்துக்கொண்ட மாற்றம் தேவற்கேற்கா" தென்றான். வேந்தன் நிமித்திகனை நோக்கி "நினைத்த காரியம் சித்தியாகுமோ அல்லவோ" என்று கேட்டுச் சித்தியாகு மெனவிடை பெற்று, "இதோ சாணைக்கல்லும் மயிர் மழிக்கும் கத்தியும் உண்டு. கத்தியால் கல்லை வெட்டுவாயென" மொழிந்தான். நிமித்திகன் உடனே வெட்டிக் காட்டினான். அது கண்டு வியப்புற்ற வேந்தன் அரசியன் முறையை மாற்றாமல் சாதிகளின் சனத் தொகையை மாத்திரம் கூட்டினான். நகரில் நாளங்காடிகளும் அல்லங்காடிகளும் விளையாட்டு முற்றங்களும் அமைத்தான். இங்ஙனம் நேமியுருட்டுவோன் மாளிகையில் ஓர் அடிமைச் சிறுவன் இருந்தான். அவன் பெயர் சேவியஸ் துல்லியஸ். ஒரு நாள் அச்சிறுவன் துயின் றுழி தலை திப்பற்றி எரிந்ததைக் கண்ட இரனக்குயில் "இச்சிறுவன் புகழ் பெற்றுப் பெருந்தலைவனாவான்" என மொழிந்தனள். இராக்குவினியஸ் தன் மகளை சேவியஸ் துல்லியனுக்கு மணஞ் செய்தான். உடனே

அங்கஸின் மக்கள் தமது அரசுரிமையைப் பிறனுள்வதா வென நினைந்து இராக்குவினியஸைக் கொல்லும்படி தீவினையாளரை ஏவினார்கள். வேந்தன் இறந்ததும் இராணுக்குயில் குடிகளைக் கூவி “நம் வேந்தன் இறந்திலன்” எனச்சொற்று சேவியஸைப் படி வேந்தனாக நியமித்தாள்.

சேவியஸ் துல்லியஸ்

சேவியஸ் செங்கோல் செலுத்தினமையால் குடிகள் உவந்து அவனுக்கே அரசுரிமை அளித்தார்கள். அரசன் பல திருத்தங்களை ஏற்படுத்திக் குடிகளைப் படைத்தொழிலில் நன்கு பழக்கினான். அக்காலத்து உரோமர் தொகை 80, 000. அரசன் படையைப் புதிதாக வகுத்ததுமன்றி நகரை மதிலாலும் அகழியாலும் காவற்படுத்தினான். அவந்தையின் குன்றில் கற்பின் கடவுளாகிய அரசன் இரு புத்திரிகளைப் பெற்றான். ஒருத்தி சாந்த குணமுடையவள், ஒருத்தி அகங்காரி. இராக்குவினியஸ் தன் குமாரரிருவருள் சாதுவாகிய அரன்ஸ் என்போனை அகங்காரியான பெண்ணுக்கும் பேராசையுள்ள லூசியனைச் சாந்த குணமுடையாளுக்கும் மணமுடித்தான். இருவரையும் தத்தம் குணத்தில் அளவு கடவாமல் நிற்கச் செய்ய எண்ணினான். அவ்வெண்ணம் பிழைத்தது. என்னை! லூசியஸ் தன் மனைவியை இகழ்ந்து தன் சகோதரன் மனைவியின் அகங்காரத்தை மெச்சி அவளைக் காமுற்றான். அவளும் அவனைக் காமுற்று அவனைத் தன் மனைவியைக் கொல்லும்படி தூண்டினாள். அவ்வாறு தீத்தொழில் செய்வான் சேவியஸ் மேன்மக்கட் சபையை அணுகும்நேரம் பார்த்து அவனையுங் கொன்றான். சேவியஸின்மகளும் லூசியசும் இறந்தோனுக்கு மரியாதை செய்யாது பிணத்தின் மீது தமது தேரைச் செலுத்தினர். ஆதலின் அவ்வீதி அன்றுதொட்டுக் கெட்ட வீதியென வழங்கிற்று.

லூசியஸ் இராக்குவினியஸ்தான் காமுற்ற அகங்காரியுடன் வாழ்ந்து அரசாண்டான். மேன்மக்களைக் கொலைக்குத் தீர்த்தும் கீழ்மக்களைக் கோயில்களிலும் வீதிகளிலும் ஊழியஞ்செய்வித்தானாகையான் அவனைச் சனங்கள் தருக்கனென அழைத்தார்கள். லூசியஸ் இராக்குவினியஸ் வெய்யோனாகினும் தன் இராச்சியத்தைப் பெருக்கினான். காபியை என்னும் இலத்தின் நகரொன்றை உபாயத்தால் தன் ஆணைக்குட்படுத்தினான். தன் மகன் செக்சுரஸ் என்பானைப் பொய்ப்பகை பூண்டு நகரினின்றும் அகற்றினான். செக்சுரஸ் தந்தை தன் விரோதியென்பதை அறிவித்துக் காபியைக்குச் சென்று சனங்களைத்

தன் வசமாக்கித் தலைமை பெற்ற பின் நகரைத் தந்தையிடம் ஒப்புவித்தான். இராக்குவினியஸ் வல்சியரோடு போர் புரிந்து அவர் நாடுகளில் உரோமரைக் குடியேற்றினன்.

ஒரு நாள் தன் வீட்டில் பாம்பொன்றைக் கண்டு தன் குமாரர்களை டெல்பிக் கோயிலுக்குச் சென்று நிமித்தம் கேட்டு வரும்படி அனுப்பினன். அரசகுமாரரொடு பேயனெனப் பட்டம் பெற்ற யூனியஸ் புருட்டனுஞ் சென்றான். கடவுளை யாவரும் வணங்கி நிற்ப, "எவன் தனது அன்னையை முதலில் முத்தமிடுகிறானோ அவனே அரசுரிமை பெறுவனென ஒரு அசரீரி பிறந்தது." உடனே புருட்டன் பூமாதேவியே உலகமாதாவென நினைத்துத் தரையில் விழ்ந்து நிலத்தை முத்தமிட்டானும். இது நிற்க.

இராக்குவினியஸ் வேந்தன் ஆடியா நகரை முற்றுகையிட்டு நின்றுழி, உடனிருந்த மேன்மக்கள் சிலர் தத்தம் மனைவியரின் கற்பைப் புகழ அதைக் காண்டலாற் றெரும்படி மேன்மக்கள் பலர் புறப்பட்டனர். அரசகுமாரரின் மனைவிகள் புலன் வழிச்சென்று கண்டுகேட்டு உண்டு உயிர்த்து உற்றறியும் இன்பங்களில் காலங் கழித்ததையும் இராக்குவினியஸ் கொலாற்றையினன் மனைவி லுக்கிறீசியா என்பாள் தம் தோழிகளோடு நெசவு செய்துகொண்டிருந்ததையும் கண்டனர். இளங்கோ செக்ஸ்டஸ் லுக்கிறீசியாவை மோகித்துக் காமபரவசனாகி நள்ளிருள் யாமத்து அவள் சேக்கை சேர்ந்து அருந்ததியன்னாளிடம் தன் வேட்கையைக் கூற, கற்புடைநங்கை மறுத்தனள். "ஒரு அடிமையைக் கொன்று உன் பக்கலில் விழுத்தி உன்னையுங்கொன்று உன் கற்பை இகழ்வேனென செக்சரஸ் லுக்கிறிசியாவை வெருட்டிப் புணர்ந்தான். மறுநாட் காலை கற்பின் கொழுந்தாகிய லுக்கிறீசியா ஆறிய கற்பினளாகி ஆற்றாத் துன்பம் நேரிட்டதெனத் தந்தைக்கும் கொழுநனுக்கும் அறிவித்தாள். அவர்கள் வந்து சேர்ந்தவுடன் நிகழ்ந்த இழிவை உணர்த்திய பின் தற்கொலை புரிந்தாள். லுக்கிறிசியாவின் அறக்கற்பை மெச்சிய யூனியஸ் புருட்டன் இளங்கோவின் கொடுஞ் செயலைத் தண்டிக்குமாறு சனங்களை வேண்டினன். சனங்கள் திரண்டு இராக்குவினியஸ் வேந்தனை நகருட்புக விடாமல் அரண் வாயிலை அடைத்தார்கள். இச்செய்தி நிகழ்ந்தது கி. மு. 510 என்ப. அடுத்தவாண்டு செக்ஸ்டஸ் காபியையால் கொலையுண்டான். உரோமபுரமும் குடியரசு முறையைத் தழுவிற்று. வேந்தர் வேண்டாமெனச் சனங்கள் ஆர்ப்பரித்தனராதலின், மேன்மக்கள் இரு தலைவர்களைத் தெரிந்து அரசியலை நடத்தினர். முதன்முதல் கூட்டுத் தலைவராக (Consuls)

யூனியஸ் புறாட்டன் என்போனும் இராக்குவினியஸ் கொலாற்றையின்ஸ் என்போனும் நியமிக்கப்பட்டனர். கொலாற்றையினஸ் வேந்தர் குடும்பத்தைச் சேர்ந்தோனுகையால் சனங்கள் அவனை வெறுத்தனர். புறாட்டன் அவனை நாடு துறந்து செல்லும்படி புத்தி கூறினன். அவனும் நாட்டினின்றும் நீங்கினன். புறாட்டஸின் குமாரரும் வேறு சில இளைஞரும் குடியரசாட்சியில் விளையாட்டு முதலிய வேடிக்கைகள் இல்லையென வருந்தி இராக்குவினியஸ்ஸைத் திரும்பவும் வேந்தனுக்க முயன்றனர். புறாட்டஸ் இதையறிந்து தன் குமாரரைச் சிரச்சேதம் செய்வித்தான். வியரும் ஒற்றாறியரும் இராக்குவினியசுக்குத் துணைபுரிந்தனர். புறாட்டஸ் அவர்களொடு பொருது வென்றான். கூட்டுத் தலைவன் பப்ளியஸ் வலேறியஸ் தன் வீட்டை அரணுக்கினனெனச் சனங்கள் கூச்சலிட அவன் "அரசுரிமையை விழைவோர் யாவராயினும் கொலைத் தண்டனைக்கு ஆளாவரென" முரசறைவித்தான். அத்துடன் கொலைத் தண்டனை விதிக்கப்பட்டோருக்குச் சனங்களிடம் முறை வேண்டும் உரிமை யுண்டென்றும் சனங்களுக்கு மன்னிக்கும் உரிமை யுண்டென்றும் அறிவித்தான். இவ்வுரிமைகளைப் பொது சனங்களுக்கு அளித்தானுகையான் தேசநேசனெனப் பட்டம் பெற்றான்.

அக்காலத்தில் இராக்குவினியஸ் எற்றாறிய் வேந்தன் லாறுஸ் போர்சினுவிடம் துணைவேண்டினன். லாறுஸ் போர்சினு தானையுடன் புறப்பட்டு உரோமரைக் குளுசியக் களத்தில் வென்று இரைபர் ஆற்றை அணுகினன். மேன்மக்கட் சபை பாலத்தை அழிக்கும்படி கட்டளை யிட்டது. பாலத்தை உடைக்குந் துணையும் கெருசியஸ் கொக்கிள்ஸ் என்போனும் கேமினியஸ் லூசியஸ் எனும் வேறிரு வீரரும் பாலத்தில் நின்று எற்றாறியப் படைமுழுவதையும் தாங்கிப் போர் செய்தனர். பாலம் உடைந்தபின் கொக்கிள்ஸ் கவசத்தோடு ஆற்றில் விழுந்து நீந்தித் திரும்பினன். போர்சினு உரோமா நகர்முன் பாசறை அமைத் திருந்தானுக அவனைக் கோறற்குச்சென்ற உரோமன் மூசியஸ் என்போன் அரசன் பக்கலில் இருந்த அமைச்சன் ஒருவனை அரசனென மயங்கிக் கொன்றான். மூசியஸ் உயிருக் கஞ்சானுகி வேந்தனைக் கோறற்கு 300 இளைஞர்கள் சத்தியஞ் செய்திருக்கின்றனர் என்றும் ஒருவர் பின் ஒருவராய் வருவாரென்றும் வஞ்சினங்கூறித் தன் வார்த்தையை உண்மை யெனக் காட்டுதற்குத் தன் கையை அழற் கலத்தில் புதைத்தான். போர் சினு அவன் வீரத்தைப் போற்றி உரோமரொடு உடன்படிக்கை யெழுதிச் சென்றான். இங்ஙனம் உரோ

மர் குடியரசு நிலைத்ததும் உரோமா புரத்தின் வேந்தகால வரலாறு முற்றிற்று.

முதலாம் பகுதி முற்றிற்று.

பண்டைக்கால மேல்நாட்டு ஒளிநூற் புலவர்கள்

[திரு. இ. மு. சுப்பிரமணிய பிள்ளையவர்கள்]

வரலாற்றுக் காலத்தின் முன்னரே ஒளிநூலாராய்ச்சி நடைபெற்று வந்ததாகக் காணப்படுகிறது. "கி. மு. 3102-வது ஆண்டினை அடுத்த காலத்தில் இந்தியாவில் ஒளிநூற் கணிதத்திற்காகவே சில கணக்கு அட்டவணைகள் (Tables) பயன்படுத்தப் பெற்றன" எனவும், "இக்கலை இந்தியாவின் இயற்கை வாழ்வையும் சமய வாழ்க்கையையும் பண்டைக்கால முதல் நாளதுவரை வழிப்படுத்தியிருந்த" தெனவும் டக்டர் புரூச்டர் (Dr. Brewster) என்ற பெரியார் கூறுகிறார்.

சாலடியர் (Chaldeans) களது ஆட்சி நிலைபெற்றிருந்த வடஆப்பிரிக்கா, ஆசியாப் பகுதிகளில்தான் முதன்முதல் ஒளிநூலாராய்ச்சி நடைபெற்றதாகத் தெரிகிறது. மேல்நாடு முழுவதும் கடமைப்பட்டுள்ள கிளாடியசு டாலமி (Claudius Ptolemy) என்பார் கி. பி. 126-ஐ அடுத்து வாழ்ந்திருந்தவர். அவர் எகிப்தியப் பெரும்புலவராகிய எர்மீசு (Hermes) என்பவருடைய நூல்களை ஆராய்ந்தே தமது ஒளிநூலறிவைப் பெற்றார்.

உலகப் புதுமைகளில் ஒன்றாகக் கருதப்பெறும் பெரிய கூர்நுதிக்கோபுரம் (The Great Pyramid) பலரால் சோதி மண்டபம் (Astronomical observatory) எனக் கருதப்பெறுகிறது. இதன் கட்டிட அளவுகளெல்லாம், உண்மையாகவே, மிக்க ஒளிநூற் கணித அறிவைப் புலப்படுத்துகின்றன. கி. மு. 3000-ல் வாழ்ந்திருந்தவராகிய சீயோப்சு (Cheops) என்ற மன்னரே இப்பெருஞ்சோதி மண்டபத்தைக் கட்டினார்; ஆனால், அம்மண்டபம் அவர் காலத்திற்குப் பல்லாயிர மாண்டுகளுக்கு முன்னரே இருந்ததெனவும், அதனை அவர் செம்மை செய்தார் என்றும் ஆராய்ச்சியாளர் சிலர் நினைக்கின்றனர்.

சினவரலாறுகளில் இரண்டு ஒளிநூற் புலவர்களைப் பற்றிக் குறிக்கப் பெறுகிறது. அவர்கள் கி. மு. 2154-ல் வாழ்ந்திருந்தவர்கள். அவர்கள் பெயர் ஈ (Hi), ஓ (Ho) என்பன. அன்னார் அரசருடைய அரண்மனைப் புலவராக இருந்த

னர். அவ்வாண்டில் அக்டோபர்த் திங்கள் பத்தாம் நாள் (10-10-2154 B. C.) காலை ஏழு மணி முதல் ஒன்பது மணி வரை நிகழ்ந்த முழு இரவி மறைவை (Solar eclipse) அவர்கள் அந்நாட்டு மக்களுக்கு முன்னரே அறிவிக்கத் தவறிவிட்டார்கள். மறைவு தோன்றியவுடனே அதனை எதிர்பாராத மக்கள், மூடநினைப்புடையவ ரானதால், மிக்க அச்சத்தையடைந்து நடுங்கினார்கள். உடனே ஈவும் ஓவும் நாடு கடத்தப் பெற்றனர்; அவருடைய சொத்துக்களெல்லாம் அரசரால் கைப்பற்றப்பட்டன.

இதைவிடக் கொடிய துன்பம் நிகழ்ந்தது கி. பி. 717-ல் அரேபியாவில் இருந்த புலவரொருவருக்கு. ஆலி ஏசாகி (Al-Hezagi) அக்காலத்தில் புகழ் மிகப்பெற்ற அரேபிய சேனைத் தலைவர். அவர் தீமை மிக்க ஒழுக்கத்தினர். அவருக்குக் கொடிய நோய்வந்து தாக்கி அவரைப் படுத்த படுக்கையிற் போட்டுவிட்டது. அவர் ஒரு ஒளிநூற் புலவரை யழைத்துத் தமது காலநிலையை ஆராய்ந்து சொல்லக் கேட்டுக்கொண்டார். ஆலி ஏசாகி, “ஓர் போர்ப் பெருந்தலைவர் இப்போது இறந்து போவார்? கூறும்” என வினவினார். புலவர் ஆராய்ந்தார்; விண்மீன் நிலைகளைக் கணக்கிட்டுத் தெளிந்த அப்பெரியார் “நாய்” என்று அம்மொழியிற் பொருள்படும் “கோட்டேபு” என்ற பெருந்தலைவர் சாகும் நிலையில் இருக்கிறதாக மறுமொழி பகர்ந்தார். “ஓ, நாம் சிறுவராயிருந்தபோது எம்மை உமது தாயார் அப்பெயரால் அழைப்பது வழக்கம். புலவரே! எமது முடிபு உண்மையாகுமா?” எனக் கேட்டார் ஏசாகி. “உண்மைதான், உண்மைதான்” எனப் பெருமிதத்துடன் மொழிந்தார் புலவர். உடனே தலைவர், “அப்படியாயின் நாம் உம்மையும் மறுஉலகத்திற்கு எம்மோடு அழைத்துச் செல்வோம், அங்கேயும் யாம் உமது அறிவுப் பெருக்கால் நலமடைய வேண்டாமா?” எனக்கூறி அப்பொழுதே அப்புலவருடைய தலையை வெட்டி விட்டார்.

“மெக்சிகோ வெற்றி” (Conquest of Mexico) என்ற நூலில் அதன் ஆசிரியர் பிரசுக்காட் (W. H Prescott) என்பவர், “இரவி வழிபாட்டினையும் ஒளிநூற் கலையினையும் அடிப்படையாகக்கொண்ட அமைதியும் ஒழுங்கும் திகழும் ஒப்புயர்வற்ற நாகரிகத்தினை ஆசுடேக்சு (Aztecs) மக்கள் கொண்டிருந்தனர். அவர்களுடைய பஞ்சாங்க ஆண்டு கி. பி. 1091-ல் தொடங்கிற்று. எகிப்தியர்களுடைய காலஅளவையை மிகவும் ஒத்திருந்தது அவர்களுடைய காலக்கணிதம்.” என எழுதுகிறார். நெடும் பெருந்தூரங்களுக்கு அப்பாலுள்ள மெக்சி

கோவும் எகிப்தும் பன்னூற்றாண்டுகளுக்கு முன் ஒரு காலத்தில் தொடர்புடையனவா யிருந்திருக்க வேண்டும் என்ற உண்மையை இக்குறிப்பு வெளிப்படுத்துகிற தல்லவா? உலகத்தினுள்ள நாடுகளிலெல்லாம் ஒளிநூற் புலவருடைய அறிவுரை ஒருநாளும் தடுக்கப்பெற்றதில்லை. குற்றஞ் செய்தவர்களுக்குத் தண்டனை கொடுப்பதற்கு மாருகச் சமயக்கழுவாய் பல நாடுகளில் சட்டமாகவே அமைந்திருந்தது; அதனால் கழுவாயினைச் செய்து முடித்த குற்றவாளிகள் தண்டனை பெருமலே விடுதலை பெற்றனர். அங்ஙனம் விடுதலை செய்யப்பெறும் போது சமயவாசிரியர் பின் வருமாறு இறைவழிபாடு செய்வார்:—“அருட்கடலாகிய தெய்வமே! எல்லாருடைய உள்ளங்களினும் கலந்து நிற்கும் நீவிர் அறியாத உண்மையுளதோ? விண்ணிலிருந்து மண்ணிலிறங்கிப் பொழியும் மழை புற அழுக்குக்களை யெல்லாம் எங்ஙனம் போக்குகின்றதோ அங்ஙனமே உமது அருள்வெள்ளம் இறங்கி வந்து உயிரின் அகக்களங்கத்தை மாற்றி மன்னிக்கும்படி அருள் செய்யும். இந்த ஏழை வேண்டுமென்று இக்குற்றத்தைச் செய்யவில்லை என்பதையும், இவன் பிறந்த வேளைப்பயனே இவனை இதனைச் செய்யத் தூண்டிற்று என்பதனையும் நீவிர் அறிவிரல்லீரோ?”

‘மெக்சிகோவில் கி. பி. 1735-ல் பிறந்த அந்தோனியோ காமா என்ற புலவருடைய நூல்களினும், சவாகன் என்ற புலவருடைய நாட்டு வரலாற்றினும் பண்டைக்கால ஆசுடெக்சுகள் எப்படிப் பிறந்தநாட்குறிப்புகள் (Horoscopes) கணித்துப் பலனறிந்தார்கள் என்ற முழுவிவரம் குறிக்கப்படுகிறது’ எனவும் பிரசுக்காட் தம் நூலில் குறித்திருக்கிறார்.

உரோமானியருடைய ஆட்சி அழிந்ததன் பயனுக மேல்நாட்டில் ஏனைய கலைகளெல்லாம் மறைந்தனபோலவே ஒளிநூற்கலையும் மறைந்தது. ஆனல், கழிந்த இரண்டாயிரமாண்டுகளாக அவ்வப்போது சிறந்த ஒளிநூற் புலவர் பலர் தோன்றித் திகழ்ந்தனர். அவர்கள் பல்கலைப் புலவராய் விண்மீன்களின் நிலையாராய்ச்சியும் அவைகளின் போக்கை அறிவதற்கேற்ற உயர்ந்த கணித நூலாராய்ச்சியும் கொண்டிருந்தனர்.

மருத்துவக்கலையின் தந்தையெனக் கூறப்பெறுபவர் இப்போகிரேட்சு (Hippocrates) என்ற பெரியார். அவர், ‘ஒளிநூற் கலையறியாதவன் மருத்துவன் ஆகான், அவன் அறிவற்றவனே” எனக்கூறுகிருர். ஆதலின், பண்டைக்கால மருத்துவரனைவரும் ஒளிநூ லாராய்ச்சியு முடையரா யிருந்தனர் என்பது விளங்குகின்றது. ஒளிநூல், மருத்துவம் ஆகிய இரு

பெருங்கலைகளிலும் வல்லவராயிருந்த மிக்கேல் டி நாட்டிரிடாம் (Michel de Notre Dame) என்பவர் வரலாற்றைக் குறிப்போம்.

(a) நாசுத்திரடாமசு (Nostradamus)

மிக்கேல்டி நாட்டிரிடாமே நாசுத்திரடாமசு என்றழைக்கப் பெறுவார். புரோஸென்சிலுள்ள செயின்ட் ரீமி என்ற இடத்தில் கி. பி. 14-12-1503-ல் அவர் பிறந்தார். அவர் ஒரு யூதர். அவருடைய தந்தை ஒரு எழுத்தாளர்; அவரது தந்தையும் பாட்டனும் புகழ்பெற்ற மருத்துவர்.

நாசுத்திரடாமசு சிறு பருவத்திலேயே விண்ணூலில் மிக்க பற்றுடையவராகக் காணப்பெற்றார். ஆனால் அவரது தந்தை அவரை மருத்துவராக்க எண்ணி மாண்ட் பேல்லியர் என்ற இடத்திற்கு மருத்துக்கலை யாராய்ச்சி பெறும்பொருட்டு அனுப்பினர். அவர் இருபத்திரண்டு வயதினராக இருந்த போது அந்நகரில் கொள்ளைக்காய்ச்சல் (Plague) தோன்றிப் பெருந்துன்பம் விளைத்தது. அவர் அந்நோயைப் பரவவிடாமல் தடுத்து அழித்ததோடு எண்ணற்ற மக்களுக்கு உயிர்ப்பிச்சை கொடுத்துக் காப்பாற்றினர். அதனல் அவர்புகழ் நாடெங்கும் பரவுவதாயிற்று. பின்பு, அவர் பல நாடுகளுக்குச் சென்று அவைகளைச் சுற்றிப் பார்த்து வந்தார். அதன்பின் அவருக்குத் திருமணம் நடைபெற்றது.

அறியாமை மிக்க அக்காலத்தில் அறிவாற்றல் படைத்த புலவர் பலர் துன்புற நேர்ந்தது. அவ்வாறே, நமது புலவரும் கி. பி. 1546-ல் நாட்டு மக்களால் துன்பமிக அடைந்தார். அவர்கள் அவரை ஒரு மாயா வித்தைக்காரரென ஐயுற்றார்கள். ஆனல், ஏக்சு என்ற நகரில் இவ்வேளை பரவிய கொள்ளைக் காய்ச்சலைப் போக்குவதில் மிகவும் ஊக்கத்தோடு முயன்று அவர் நலன்விளைத்தார். அதனல் மகிழ்ந்த அவ்வூரார் நன்றியறிவுடன் அவருக்குப் பரிசாக உதவிச்சம்பளம் (pension) ஏற்படுத்தி உதவினர்கள். இருந்தாலும் அவரிடைத் தோன்றிய ஐயப்பாடு அந்நாட்டு மக்களைவிட்டு விலகவில்லை. அதனல் அவர் உலகப் பொது நல்வாழ்க்கையை விட்டு விலகித் தனியே இருந்து நூல்களை ஆராய்வதிலும் எழுதுவதிலுமே நாளைப்போக்கினர். அப்போதுதான் நூற்றுண்டுகள் (Centuries) என்ற நூலை அவர் எழுதிமுடித்தார். அதனல் அவரது புகழ் நிலைபெற்றது. ஆனல் அவர் தமக்கு அப்போது காலம் சரியாக இல்லாதபடியால் அந்நூலைக் கி. பி. 1555 வரை வெளியிடவில்லை. அதில் அவர் மிகவும் நுட்பமாக ஆராய்ந்து பின் நடக்கக்கூடிய நிகழ்ச்சிகளைக் குறித்

திருக்கிறார். முதலாவது சார்ல்சு (Charles I) கொலை செய்யப் படப்போவதையும், சுடுவர்ட் (Stewart) குடும்பத்தினரது ஆட்சியின் வீழ்ச்சியையும், தமது தனி வாழ்க்கையையும், தமது படுக்கையின் அருகே இருக்கும் நாற்காற் பலகை யொன்றில் உட்கார்ந்த வண்ணம் தாம் இன்ன காலத்தில் இறக்கப் போவதையும் அவர் அந்நூலில் விவரித்திருக்கிறார். அவை யெல்லாம் அவர் எழுதியபடியே நடைபெற்றன.

அவருடைய முன்னறிவிப்புக் (Prophecy) களில் முதன்மையானது பிரஞ்சு நாட்டு மன்னராகிய ஹென்ரி (Henry) என்பாருடைய முடிவே. அதன் சிறப்பு பின் வரும் பாடலால் அறியப்படும்:—

"தனித்தபோர்க் களத்தே தனியிளஞ் சிங்கம்
கிழச்சிங் கத்தைக் கீழே தள்ளிக்
கனகக் கூட்டினிற் கண்களைப் பிடுங்கி
வெற்றி கொண்டு விளங்கும்
இரண்டே புண்கள் எய்தும் சாவே."

அவ்வாறே, அரசர் பந்தயத்தனிப்போரில் மாண்ட்கமரி என்பவரால் கண்ணில் விளைந்த புண்ணால் கொல்லப்பட்டார். நாசுத்திரடாமசு இலண்டனிற் பற்றிய பெருந்தீ (The Great Fire of London) யைப் பற்றியும் முன்னரே அறிவித்தார். அதனைக் குறிக்கும் பாடல் வருமாறு:—

"நல்லோர் இரத்தமிக் நகரியி லண்டனில்
சிந்திய தாலிச் சீர்நகர்
அறுபத் தாறில் அழித்திடும் தீயே,"

இங்கே நல்லோர் என்றது இங்கிலாந்தில் சமய வெறியரால் அழிந்த உரோமன் கத்தோலிக்கச் சமய வீரரைப்போலும்!

நூற்றாண்டுகள் என்ற நூல் வெளியானவுடனே நாசுத்திரடாமசை அரசர் அழைத்து, கி. பி. 1556 ஆகஸ்ட் மாதத்தில் தமது அரண்மனை மருத்துவராகவும் ஒளி நூற்புலவராகவும் அமர்த்திக்கொண்டார். மன்னரது மக்களின் நாட்குறிப்புக்களை அவர் எழுதி யிருப்பதிலிருந்து இது தெரிகிறது. அவர் அக்குறிப்புக்களிற் கண்ட உண்மைகளை யெல்லாம் வெளியிட்டுக் கூறவில்லை. ஏனெனில், நன்மைச் செய்திகளைக் கேட்டு மகிழ்வதும், தீய செய்திகளைக் கேட்டுச் சினம் கொள்வதும் உலக இயற்கையல்லவா? 1564-ல் அவர் ஒன்பதாவது சார்ல்சு மன்னரிடம் அரண்மனைப் புலவராக இருந்தார். எல்லாராலும் போற்றப்பெற்ற அப்பெரும் புலவர் தமது அறுபத்திரண்டாவது வயதில் மண்ணுலக வாழ்வை நீத்தார்.

ஆராய்ச்சிப் பகுதி-Research

தமிழ் மன்னர் பெயர்

[பண்டித திரு. ஞா. தேவநேயப் பாவாணர்]

[சி. ௰௩, ப. உ-ல், எசு-ஆம் பக்கத் தொடர்ச்சி]

2. சோழன் — சோளம் — சோழம் — சோழம் + அன் = சோழன்.

சோளம் என்பது மக்காச்சோளம்; கள்ளர் வெட்டிச் சோளம் என்றும் கூறப்படும்.

மக்காச்சோளம் சோழநாட்டிலேயே சிறப்பாய் விளைகின்றது. பாண்டி நாட்டிற் பயிரிடப்படுவதேயில்லை. கொங்கு நாட்டிலும், பிற சேர நாட்டுப் பகுதிகளிலும் விளைந்தாலும், சிற்றுண்டியாய்த் தின்னத் தக்க அவ்வளவு சிற்றளவாகவே விளைகின்றது. சோழநாட்டிற் கள்ளருக்குச் சிறந்த வுணவாகின்றது. கள்ளர் அதை மிகுதியாகப் பயிரிடுகின்றனர். அதனாலேயே கள்ளர் வெட்டிச் சோளம் எனப் பெயர் பெற்றது. கள்ளர் என்னும் வகுப்பார் சோழ நாட்டிலன்றிப் பிற நாட்டில்லை. இதனாலும் சோளம் சோழ நாட்டிற்கே சிறப்பென்பது பெறப்படும்.

தாவரப் பொருள்களால் இடங்கள் பெயர் பெறுவது சாதாரணம்.

உ-ம். பொழில் = (சோலை) உலகம். உலகமுழுதும் முன் காலத்தில் ஒரே சோலைபோல் தோன்றிற்று.

நாவலந் தீவு = நாவன் மரம் மிகுந்த பரத கண்டம்.

நெல்வேலி, திருநெல்வேலி, நென்மேனி, நெல்லூர் முதலியன நெல் விளையும் இடங்கள்.

புளியம்பட்டி, புளியங்குடி, அத்திகுளம், வேப்பங்குளம், பனையூர், பனையடிப்பட்டி முதலியன மரங்களாற் பெற்ற பெயர்கள்.

எருக்கலங்குடி செடியாற் பெற்ற பெயர். இங்ஙனமே பிறவும்.

சோளம் விளையும் நாடு தானியாகுபெயராகச் சோளம் எனப்பட்டது. சோளம் சோழம் எனத் திரியும்.

ள—ழ. C. f. தோள்+அன் = தோளன் = தோழன். தோள்போல் உதவுபவன் அல்லது தோளிற் கைபோடுபவன்.

சிகாளி—சிகாழி. யாளி—யாழ். நாளி—நாழி. தேளி—தேழி, தேள்போற் கொட்டுவது.

சோழ நாட்டையுடையவன் சோழன்.
இனி, சோழனுக்குரிய மறு பெயர்களாவன :—
சென்னி=தலைவன், சென்னி=தலை.
கிள்ளி=பகைவர் தலையைக் கிள்ளுபவன்.
அபயன்=பயத்தை நீக்குபவன், அடைக்கலந் தருபவன்.
வளவன்=வளநாட்டை யுடையவன்.
செம்பியன்=சிபியின் வழித் தோன்றல்.

சின்னமும், அங்கமும் பற்றிய தொடர் மொழிப் பெயர்கள் இங்குக் கூறப்பட்டில.

3. சேரன்—சாரல்—சேரல்—சேரன்.

தமிழ் வேந்தர் மூவருள்ளும் சேரனே மலை நாட்டையுடையவன். சாரல் என்பது மலையின் அடிவாரத்தையும், மலை நாட்டையுங் குறிக்கும். பின்பு இடவாகுபெயராய் அம் மலை நாட்டை ஆள்பவனைக் குறித்தது.

சாரல் என்பது சேரல் என்று திரியும். c. f. சார்—சேர், சேரல் என்பது சேரன் என்று திரியும். ல்—ன் போலி. c. f.

மறன்—மறல், மறலி—எமன். திறன்—திறல்.
சேரல் என்பதே சேரன் பழம்பெயராகும்.
உ-ம். குடக்கோச் சேரல்.
மாந்தரஞ் சேரல்.

சேரல்+அன்=சேரலன்—கேரளன்.

ச—க போலி. c. f. சேர்த்தி—கீர்த்தி, சுலவு—குலவு. ல—ள போலி c. f. இறலி—இறளி, கசலி—கசளி.

சேரன், கேரளன் என்பவை பிந்திய வடிவங்களாகும். அவற்றுள்ளும் மிகப் பிந்தியது கேரளன் என்பது. பண்டைத் தமிழ் நூல்களிலெல்லாம் சேரல் என்பதே பெரு வழக்காய் வரும். பிற்காலத்துப் புராணங்களிலெல்லாம் கேரளன் என்பது பெரு வழக்காய் வரும்.

சேரன் என்னும் பெயரோடு மான் என்னும் பெயர் சேர்த்துச் சேரமான் என்று வழங்குவதுமுண்டு. மான் என்

பது மகன் என்பதன் திரிபு. பெருமகன்—பெருமான், மருமகன்—மருமான்.

இனிச் சேரனுக்குரிய பிற பெயர்களாவன :—
வில்லவன்—வில்லையுடையவன்.
கொங்கன்—கொங்கு நாட்டையுடையவன்.
குடக்கோ—குடநாட்டரசன். குடம்=மேற்கு.
குட்டுவன்— „ குடம்—குட்டம்.
குடகன்— „
கோதை-(வில்லுக்காக)முன்கைத்தோற்கட்டுடையவன்.
உதியன்—உயர்ந்தவன், உயர்ந்த மலை நாடன்.
வானவன்—வானத்தையளாவும் மலை நாடன்.
வானவரம்பன்— „
மலையமான்—மலைநாட்டரசன்.
சேய்—மலைத் தெய்வமாகிய முருகன் போன்றவன்.

சின்னமும், அங்கமும் பற்றிய தொடர் மொழிப் பெயர்கள் கூறுது விடப்பட்டன.

இதுகாறுங் கூறியவற்ருல் தமிழரும், தமிழரசரும் ஆரிய வருகைக்கு முன்பே, தமிழ் நாட்டி லிருந்தவர்க ளென்றும், அவர்கள் தமிழ் நாட்டின் பழங்குடிகளே யென்றும், அவர்கள் பெயர்களெல்லாம் செந்தமிழ்ச் சொற்களேயென்றும், அவை வட மொழியிற் பலவாறு திரியுமென்றும், தமிழரசருள் பாண்டியன் காலத்தால் முற்பட்டவன் என்றும், சோழன் இடைப்பட்டவன் என்றும், சேரன் கடைப்பட்டவன் என்றும் தெரிந்துகொள்க.

பாண்டியன் முற்பட்டவன் என்பது தமிழ் நாடன் என்னும் பெயரினுலும், சங்க வரலாற்ருலும், சரித்திரத்தினுலும்,

> 'பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
> குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள
> வடதிசைக் கங்கையு மிமயமுங் கொண்டு
> தென்றிசை யாண்ட தென்னவன் வாழி'

என்னும் சிலப்பதிகாரவடிகளாலும்,முழுகின தமிழகமுண்மையினும், மேனுட்டுக் குறிப்புகளாலும் அறியப்படும். முழுகின தமிழகம் பாண்டி நாட்டுப் பகுதியாகும். அதுவே மக்கள் முதன்முதற் ருேன்றியவிடம்.

மக்கள் பெருகி வடக்கே வரவே சோழநாடு தோன்றிற்று. தென்றிசையினின்றே மக்கள் ஆதியில் வடக்கே சென்று உலகமுழுதும் பரவினதாகச் சரித்திரம் கூறும். பல்வகைக் கலைகளும் இதற்குச் சான்று பகரும்.

சோழ நாட்டின்பின் சேர நாடு தோன்றிற்று. சேரநாடு முதலாவது குடமலைக்குக் கீழ்ப்பட்ட கொங்கு நாட்டளவா யிருந்து பின்பு மேல் கரையும் சென்று தாவிற்று.

தமிழ் மொழி பாண்டி நாட்டின் செந்தமிழாயிருந்ததும், வடக்கே சோழ நாட்டிற் சற்றுத் திரிந்ததும், அதை அடுத்து அதன் மேற்கே மிகத் திரிந்து கொடுந் தமிழானதும்,

கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்தில் பாண்டியன் தமிழ் நாட்டில் தலைமை வகித்ததும், பின்பு சோழன் தலைமை வகித்ததும், பின்பு சேரன் செங்குட்டுவன் தலைமை வகித்ததும், பாண்டிய சோழ சேர முன்மை இடைமை பின்மைகளை யுணர்த்துவனவாகும்.

சங்க காலத்தோடு தனித் தமிழரசு தலை தாழ்த்ததனுல் அதற்குப் பிறபட்ட சிற்றிடைச் சிறுபோதைத் தமிழரசக் கிளர்ச்சிகள் இங்குக் கொள்ளப்பட்டில.

மேனுட்டுப் பழஞ் சரித்திர நூல்களில் தமிழரசரைப் பற்றிய குறிப்புக்களிலெல்லாம் பாண்டியன் பெயரே குறிப் பிடப்பட்டுள்ளது.

சோழ நாடு வடக்கே வரவர விரிந்திருத்தலால் மக்கள் மேற்கே சென்று குடியேறினர் என்க.

சேர நாட்டுத் தமிழ் தன்பெருந் திரிபிஞலேயே வட மொழித் துணைகொண்டு மலையாளம் எனத் தனிமொழி யாய்ப் பிரிந்தது.

ஆதலால் பாண்டியன் பெயர் மிகப் பழமையான தென்க.

வடிவு திருந்த அறிவு வளர்ந்த வகை

[திரு. பா.வே. மாணிக்கநாயகர்-திரு. க.ப.சந்தோஷம் B.A., L.T.]

(அகூ-ம் பக்கத் தொடர்ச்சி)

(சென்ற பகுதியிற்கண்டவை :–புழுக்கள் முதல் மக்களீருக இயங்கும் உயிர்களின் புணர்ச்சிக் கருவிகளுடைய அளவை ஆராயுங் கால், அறிவு பெருகப் புணர்ச்சிக் கருவிகளின் அளவு குறைகின்றது. மக்களைவிட உயர்ந்த நிலையில் குறிகளுக்கிடமில்லை. இங்ஙனமே, கீழ் நிலையிலுள்ள உயிர்களிலிருந்து மேலே செல்லச் செல்லக் கால் களின் தொகை குறைகின்றது. கடவுளென ஒன்றிருப்பின், அதற் குக் குறியுங்காலுமிரா.)

கடவுளுக்கு வயிறுமில்லை. இதைச் செவ்வனம் காண வேண்டு மாயின் முன் போல் உயிர்களைக் கீழ் நிலையிலிருந்து உயர் நிலைவரை ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும். ஈண்டு, அசையா உயிரினமாகிய மரம், செடி, கொடி ஆகியவற்றை முதலிற் கருதுவோம். இவைகளின் வாழ்க்கை எத்தன்மைத்து? தின்பதும், தின்றதைச் செரிக்கச் செய்தலுமாகிய இவ்விரண்டில் மரம், செடி, கொடிகளின் வாழ்க்கை யடங்கும். இவற்றின் உடல் முழுதும் வயிறேயாகுமென்று சொல்லினும் அமையும். இவற்றிற்கு அடுத்தபடியில், இயங்குந்தன்மை பெற்றமிக நுண்ணிலைப் புழுக்கள் (Microbes) இருக்கின்றன. இவற்றுள் ஒன்று, நூற்றுயிரக்கணக்கான முட்டைகளைத் தன் வயிற்றுள் வைத்துக்கொண் டிருக்கும். இது கொண்டு இவைகளின் வயிற் றளவைக் கணித்துக்கொளலாம். வாழ்க்கை என்பது இவற்றிற்குத் தின்பதும் பல்குதலுமேயாம். பன்றி இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். தீனியையும் புணர்ச்சியையும் நீக்கி வேறொன்றையும் பன்றியறியாது. இப்பெற்றி வாய்ந்த வேறு பல்லுயிர்களுமுள. ஓய்வின்றி இவற்றின் வாயினுட் புகுந்தீனியை ஏற்றுக் கொள்வதற்குப் போதிய இடம் உடலில் இவற்றிற்கு வேண்டும். தங்கள் வாழ்க்கையிற் பெரும் பகுதியைத் தின்பதிலேயே கழிக்கின்ற உயிர்வகைகட்கெல்லாம் தலையைவிட வயிறு பெரியதாயிருக்கும். குதிரையை நோக்குக. அதன் முழுவடிவத்தோடு ஒப்பிடுங்கால், அதன் வயிறு அவ்வளவு பெரிதென்று சொல்லொணுது. ஆனுல், நாளெல்லாந் தெருத்தெருவாய் இரைதேடித் திரிகின்ற கழுதையின் வயிற்றைப் பாருங்கள். குதிரையைவிட அதற்குப் பெரிய வயிறு இருக்கிறது. (கழுதையின் அறிவைக் காட்டிலும் குதிரையின் அறிவு சிறந்த தென்பதை எவர் அறியார்? நன்கு வளர்க்கப்பட்ட வேட்டை நாய்களின் வயிறு மிகச் சுருங்கி இருக்கும். இதற்கேற்ப, அவைகளின் அறிவு பெருகி இருக்கக் காண்கின்றோம்.) இவற்றோடு மக்களுடைய வயிற்றை ஆராயுங்கால், அது அளவிற்குறைந்திருப்பதற்குக் காரணம், அவர்கள் ஏற்றுக்கொள்ளும் உணவு சிறியதென்பதே. நாளுக்கு மூன்று முறை இந்தியர்கள் உணவருந்துகின்றனர். இதுபற்றி அவர்கள் தங்களைப் பாராட்டிக்கொளல் வேண்டும். மேலை நாட்டு மக்கள் ஐந்துமுறை உண்கின்றனர்; இதற்குமேலும் அவர்கள் உண்பதுண்டு. மக்கள் காலமறிந்து உண்பதனுல் அவர்கள் வயிறு அளவிற் சிறிதாக விருக்கின்றது. மக்கள் நிலைக்கு மேலே வயிறு மற்றும் சுருங்கவேண்டும். இங்ஙனமாயின் கடவுளுக்கு வயிறில்லை என்பது பெறப்படும். இதற்கு மேல், கடவுளுக்குக் கை இல்லை, வாய் இல்லை என்று எனது

கட்டுரையில் எழுதினேன். வாய் இல்லை என்பது விளம்பாதே போதரும். வயிறில்லாதிருக்கையில் வாய் எதற்கு? இங்ஙனம் மக்கள் நிலையிலிருந்து கடவுளின் அமைப்பை யான் வகுத்தேன். கடவுளுக்குக் குறியில்லை, காலில்லை, வயிறில்லை, கையில்லை என்று சொல்லிக்கொண்டு போனால், இறுதியில் அதற்குளது தான் யாது?

புழுக்களையுங் கீழ் நிலையிலுள்ள வேறு உயிர்களையு மெடுத்துக்கொண்டு, இவற்றின் தலைக்கும் உடலுக்கு மிடையே ஒரு கோடு இழுப்போமாயின், உடலின் அளவில் ஒரு சிறு பகுதியே தலையின் அளவாகு மென்பதைக் காணலாம். ஒரு மீனையாயினும் பாம்பையாயினு மெடுத்துக் கொள்க. இவற்றின் தலை அரை அங்குலம் அளவுடையதா யிருக்கலாம். உடலின் அளவு இவற்றிற்குப் பத்து அங்குலத்திற்கதிகமாக இருக்கலாம். தலையின் அளவை உடலோடு ஒப்பிடுங்கால், அது பத்திலொரு பங்கிற்குக் குறைந்த தென்று பார்க்கிறோம். இங்ஙனம் ஒவ்வொரு உயிரின் தலையளவையுங் கணக்கிடலாம். ஈண்டுயான், இனி வரப்போகின்றவற்றிற்கு முகவுரையாகச் சில கூற வேண்டியதாகின்றது. மேலேசெல்லு முன், தலை யென்பது யாது? உடலென்பது யாது? என்று ஐயமற வகுத்துக் கூறவிழைகின்றேன்.

தலை என்பது யாதென்று கூறவேண்டுவதில்லை; அது காணுதற்கெளிதென்று நீங்கள் சொல்லலாம். அங்ஙனமன்று. நாம் கூறப்போகின்ற வரையறுப்பு எல்லா உயிர்கட்கும் பொருந்தவேண்டும். உயிருடையவற்றிற்கெல்லாம் உடலமைப்பில் ஒற்றுமையுண்டென்ற உண்மை டார்வின் (Darwin) என்ற அறிவியல் ஆசிரியரால் நிறுவப்பட்டது. எவ்வடிவத்தில் உயிர் இருப்பினும், அவ்வுயிர் உணருந்தன்மை ஒன்றே என்பது ஜகதீச சந்திரபோஸ் எனும் இந்தியப் பேரறிஞராற் காட்டப்பட்டிருக்கிறது.

[உயிர் முதன்முதல் எங்ஙனந் தோன்றிற் றென்பதை அறிவியலார் கூறினரல்லர்; உயிர்த் தோற்றத்தை யறியலாகா தென்பாருமுளர். இவ்வையகம் முதலில் நெருப்புத்திரளா யிருந்து, வரவரக் குளிர்ந்து இறுகிய பின்னர், மழையாகப் பெய்தநீர் பள்ளமான விடங்களில் நின்று கடலா யமைய, அதில் உயிர் தோன்றிற்றென்றும்; அவ்வுயிர் கடற்கரைக்கு வந்து வதியத்தொடங்கி, நீரிலுள்ள காற்றை உட்கொள்ள முயன்றதென்றும்; இம்முயற்சியால் அது நுரை ஈரலைப் பெற்றதென்றும்; நாளாவட்டத்தில் இவ்வுயிர் ஊர்வனவும், பறப்பனவும், நடப்பனவுமாகிய பல்வேறு வடிவங்களுடைய உயிர்களாகப் பெருகிற்றென்றும், அறிவியல் சாற்றுகின்றது. கடல்நீரிலிருந்து உயிர் வந்ததென்பதற்குச் சான்று, உயிர்களின் செந்நீர் முந்நீரைப்

போல் உவர்ப்புடையதா யிருத்தலென்ப. ஒருயிரே இடம் பற்றியும் முயற்சி பற்றியும் வெவ்வேறு வடிவங்களுடைய உயிர்களாகத் திரிந்த தென்பது உண்மையாயின், உடலமைப்பில் அவை யாவுக்கும் ஒற்றுமை இருத்தல்வேண்டும். விலங்கில் முன்னங் கால்களென்று சொல்லப்படும் உறுப்புக்கள், பறவைகளிற் செட்டைகளாகவும், மக்களிற் கைகளாகவும் வளர்ச்சி பெற்றன. குதிரையின் குளம்பு ஒற்றையும், மாட்டின் குளம்பு இரட்டையுமாயினும், அவை ஒத்திருக்கின்றன. முதலில், குதிரையின் கால்கள், மக்களுடைய கை கால்களைப் போல் ஐந்து பிரிவுகளை யுடையனவா யமைந்திருந்தன வென்று அறிவியலார் சான்றுகளுடன் காட்டுகின்றார். இன்னும் பலவகையில் இவ்வொற்றுமை வெளிப்படுகின்றது. மக்களின் எற்புச் சட்டத்தை விலங்குகளின் சட்டத்தோடு ஒப்பிட்டால் இது விளங்கும். இவ்வாராய்ச்சியை நன்கு நிகழ்த்தியவர் டார்வின் (Darwin) என்னும் ஆசிரியர்.

உயிர் உணருந் தன்மையது. இவ்வுணர்ச்சி எல்லா உயிர்களிலும் ஒரு தன்மையதே என்ற உண்மையை நம்நாட்டு நல்லறிஞர் ஜகதீச சந்திரபோஸ் காட்டியுளார். இவர் செய்த ஆராய்ச்சிகளால், புழு, விலங்கு, மக்கள், செடி, கொடி, மரங்கள், ஆகிய எல்லாவற்றிலும் ஒரே தன்மையான உணர்ச்சி ஊடுருவிச் செல்கின்றதென்பது வெளியாயிற்று. இரும்பு, செம்பு, ஈயம் முதலியவற்றிலும் உணர்ச்சி யுண்டென்று இயம்புகின்றார் இவ்வாசிரியர்.]

இவ்விரு பேரறிஞர் கண்ட உண்மைகள் தொல்காப்பியத்திற் காணக் கிடக்கின்றன. இவ்வரிய நூலில், எல்லா உயிர்கட்கும் எல்லாவற்றிலும் ஒற்றுமை யுண்மை காட்டப்பட்டிருக்கிறது.

[தொல்காப்பியம். பவானந்தம் பிள்ளை பதிப்பு. மரபியல். 582.

"ஒன்றறி வதுவே யுற்றறி வதுவே
... ...
நேரிதி னுணர்ந்தோர் நெறிப் படுத்தினரே."

ஈண்டுப் புல் முதல் மக்க ளீறாக நிற்பவற்றை ஒன்றாகத் தொகுத்துக் கூறி இருத்தல் கருதத் தக்கது. மேலை நாடுகளில், பத்தொன்பதாம் நூற்றாண்டு வரையில், உயிர்களை வெவ்வேறு தொகுதிகளாகப் பகுத்து, அவை ஒன்றிற்கொன்று தொடர்பில்லாதன வென்று, கருதி வந்தார்கள். பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில்தான் டார்வின் ஆசிரியரும் வாலஸ் (Wallace) என்பவரும், உயிர்கள் சிறிது சிறிதாக வேறுபட்டுப் பலப்பல நூற்றாண்டுகளுக்குப் பின் வேறு வேறு இனங்களாகப் பிரிந்தன என்பதை நிலைநாட்டினார்கள். இங்கெடுத்துக் காட்டிய தொல்காப்பியச் செய்யுளில், முகத்துக் கண்கொண்டு பார்ப்பதால் தெரியும் வேற்றுமைகளை யொழித்துப் புல்லையும் மக்களையும் ஒரு வகையில் ஒன்றாகவே நினைக்க வேண்டுமென்பது வற்புறுத்தப்படுகின்றது. ஓரறிவுயிர், ஈரறிவுயிர், மூவறிவுயிர் என்று ஒற்றுமையில் வேற்றுமை விளங்க ஈண்டுக் கூறியது காண்க. உயிர்

ஒன்றே; ஆயின், அதன் அறிவிற்கேற்ற வண்ணம் வடிவம் வேறு படும் என்ற ஓர் உண்மை இச் செய்யுளிற் கூறப்பட்டுளது. அறிவும் வடிவும் ஒன்றை யொன்று பற்றியே நிற்கும்; அவை இணைந்து வளரும், என்பதே இக்கட்டுரையின் பொருள். ஆசிரியர் மாணிக்க நாயக்கர் இத் தொல்காப்பியச் செய்யுளிலிருந்து பழந்தமிழ்க் கொள் கைகளை வெளிப்படுத்தும் வகை வியக்கத்தக்கது. தொல்காப்பியம் வெறும் இலக்கணமன்று, அருந்தமிழ் மக்கள் கண்ட மிக ஆழ்ந்த உண்மைகள் அழியாமே காக்குமொரு பெருநூல் எனும் முடிபுடை யார் இவ்வாசிரியர். தொல்காப்பியம் என்ற சொற்றொடர்க்குப் பொருள் அதுவே என்பதிவர் துணிபு. தமிழ் மக்கள் இவ்வுண் மையை நன்குணர வேண்டுமென்ற பேரவாவால் தூண்டப்பட்டு இவர் ஆற்றியிருக்குந் தொண்டு எற்றவாறு போற்றப்படாதன இரங் கத் தக்கது. நிற்க,

உயிர் முதிர்ச்சி பெறப்பெற, அதன் வடிவிற் சிறிது சிறிதாக மாறுதல்கள் நிகழும். ஒருயிரின் உடலமைப்பு மற்றோருயிரின் அமைப்பிலிருந்து படிப்படியாக விலகும் இவ்வுண்மையைத் தான், 'அதனொடு நாவே', 'அவற்றொடு மூக்கே' எனுந் தொடர்கள் விளக்குகின்றன. மேலை நாட்டு உயிர்நூற் புலவர்கள் உயிர்களின் வளர்ச்சியையும், வகையையும் இங்ஙனம் நோக்கினரல்லர், "நேரிதி னுணர்ந்தோர் நெறிப்படுத்தினரே." மேற் காட்டியவாறு உயிர்களை வகை செய்தோர் நுணுகி ஆய்ந்து அம்முடிவிற்கு வந்தார் என்று தொல்காப்பியஞ் சாற்றுகின்றது. அவர்களை வாழ்த்தி வணங்கு தும். எல்லோர்க்கும் வெளிப்படா வகையில் உண்மைகளைப் பொதிந்து நூலெழுதுவது தமிழ் வழக்கமென்று கருத இடமுளது. "அந்தணர் மறை" "நரம்பின் மறை" என்று நூல்கள் குறிப்பிடப் படுவதை நோக்குக. தொல்காப்பியமும் ஒரு மறையே.]

தொல்காப்பியத்தில் உலகிலுள்ள உயிர்கள் அனைத்திற்கும் அடிப்படையான வடிவங்கள் கூறப்பட்டிருக்கின்றன. (மரபி யல் 582 முதல் 588 வரை) ஆண்டுக்கூறியதனுண்மையை இந்நாளிலுள்ள உயிர் நூலறிஞர் மறுக்கொணாதது. உரு, அரு எனும் இரண்டனுள் காட்சிக்கெட்டியனவும், எட்டாதனவும் தொல்காப்பியத்தில் தொகுக்கப் பட்டிருக்கின்றன.

உலகிலுள்ள உயிர்வகைகளை ஒப்பிட்டுப் பார்க்கப்புகுங் கால், இதுதலை, இதுஉடல் என்று வரையறுத்துக் கூறுவது இன்றியமையாததாகின்றது. ஒரு மரத்தை எடுத்துக் கொள்வோமாயின், அது வளர்கின்ற தென்பதில் எள்ளளவும் ஐயமின்று. அதற்கோர் உடலுண்டென்று சொல்வதரிதாயி னும், உயிருண்டென்பதை மறுக்க முடியாது. கிறித்தவக் கொள்கையினர் இதை ஒத்துக்கொள்கின்றனர்: ஆனால், ஆன்மா அதற்கில்லை என்பர். மரமும் ஓர் உயிராதலின், உடலுந்தலையும் அதற்கிருந்தே திரவேண்டும். மேலேயுள்ளது

தலை என்றும், கீழேயிருப்பது உடலென்றும் பலர் தவறாக எண்ணுகின்றனர். தலையிது, உடலிது என்ற திருத்தமான கருத் திருப்பின் இத்தகைய தவறுகள் நேரா. ஆதலின் தலையையும் உடலையும் வரையறுத்துக் கூறுகின்றேன்: பெரும்பாலும் வாங்கும் பொறிகளையுடையது தலை; பெரும்பாலும் நீக்கும் பொறிகளையுடையது உடல்; இவ் வரையறுப்பை உளத்திற் பதித்துக்கொண்டு உயிருள்ளவற்றை யுற்று நோக்குவோம். விலங்கிற்கு வாய், மூக்கு முதலிய பொறிகளிருக்கின்றன. மூக்கின் வழியாய் அது காற்றை உட்கொள்கின்றது; காதின் வழியால் அது ஒலியைக் கேட்கின்றது; கண்களின் வழியாகக் காட்சிகள் அதன் மூளைக் கெட்டுகின்றன; வாயின் வழியாக உணவு அதன் வயிற்றுக்குட் போகின்றது.

தலையையும் உடலையும் பற்றிக் கூறிய வரையறுப்பில், "பெரும்பாலும்" என்ற சொல்லை வழங்கியதாற் சிலவிடங் களில் அது பொருந்தாதென்பது பெறப்படும். வாங்கும் பொறி களிற்சில நீக்கும் பொறிகளாகவுந் தொழிலாற்றுகின்றன. மூக்கின் வழியாகக் காற்றை வாங்குகிறோம்; அதே வழியாக மூச்சை விடுகின்றோம். நீக்கும், அல்லது, கழிக்குங் கருவி களைப் பெரும்பாலுமுடைய உடலாகும். எருவாயும் கரு வாயும் கழிக்குங் கருவிகளாம். இவ்வரையறுப்பும் பெரும் பான்மை பொருந்துமென்றே கொள்க. இது கொண்டு விலங்குகளையும் பறவைகளையுங் கவனித்தால், தலையிது, உட லிதுவென்று எளிதாகச் சொல்லிவிடலாம். ஆனால், நிலைத்திணை யுயிர்களை நோக்குவேமாயின், அவற்றில் வாங்குங் கருவிகளை யுடைய பகுதி இது நீக்குங் கருவிகளையுடைய பகுதி இது என்று சொல்வதாகும். நிலத்திற்குள்ளிருக்கும் வேர், வாங் குங் கருவிக ளனைத்தையுந் தன்பாலுடையதா யிருக்கின்றது. வேரின் வழியாக மரம் நீரைக் குடிக்கின்றது. இலைகளின் வாயிலாய்த் தங்களுக்கு வேண்டிய காற்றை மரஞ்செடி கொடி கள் உட்கொள்வது முடிவு கொளல் கூடாது. இன்றியமை யாத வாங்குங் கருவிகள் நிலைத்திணை உயிர்களுக்கு வேரிலேயே உள. இதனால், மரத்தின் வேரே அதன் தலையாகின்றது. அதன் மலர்கள் விலங்குகளின் கருவாயை ஒத்திருக்கின்றன. இலைகள் நுரை ஈரலை ஒத்திருக்கின்றன. நீக்குங் கருவிகள் கண்ணிற்கு நன்கு புலப்படும் வகையில் நிலத்திற்கு மேலே யும், வாங்குங்கருவிகள் கண்ணிற்கு மறைக்கப்பட்டு நிலத்திற் குக் கீழேயும், மரத்திலமைந்திருக்கப் பார்க்கின்றோம். மக் களோடொப்பிடுங்கால், மரம் தலைகீழாக நிற்கின்றதென்பது புலனாகின்றது. இத்துடன் இதை நிறுத்தி, அறிவும் வடிவும் ஒன்றையொன்றுபற்றி நின்று வளருமுறையைப் பார்ப்போம்.

(தொடரும்)

செய்திகளும் குறிப்புகளும்
News and Notes

தென்னிந்திய தமிழ் சங்கம், திருநெல்வேலி
தனித் தமிழ்த் தேர்வுகள்

நிகழும் 1934ஆம் ஜூன்மீ 28, 29, 30உக்குச் சரியான மெய்கண்டான் யாண்டு எசு ஆனி யச, யரு, யசா வியாழன், வெள்ளி, சனிக்கிழமைகளில் திருநெல்வேலி, திருச்சி, ஆரணி, சென்னை ஆகிய நான்கு நல நகர்களிலும் நடைபெற்ற தனித் தமிழ்த் தேர்வுகளுக்கு விண்ணப்பித்தவர் எழுவர். எழுதா தவர் ஒருவர். எழுதியவருள் இளந் தமிழ்ப் புலவரி லொருவரும், தமிழ்த் தேர்வில் நால்வரும் தேர்ச்சி பெற்றுள்ளார்கள். தேர்ச்சியுற்றவர்கள் தமிழ்ச் சங்கத் தலைவர், திருவாளர், ஸர். தி. நெ. சிவஞானம் பிள்ளை அவர்கள், பி.எ. (மாகாண மாஜி வளர்நெறி அமைச்சர்) கையெழுத்துடனும், சங்க முத்திரையுடனும் கூடிய தேர்ச்சி இதழ்களைப் பெறுதற்குரியார்.

சங்கத் தேர்வுகளை அவ்வவ்விடங்களில் மேற்பார்த்து நடத்தித் தந்த அறிஞர்களுக்கும், வினாத் தாள் குறித்தும் விடைத் தாள் நிறுத்தியும் உதவி புரிந்த புலவர்கட்கும் இச் சங்கத்தின் நன்றி பெரிதும் உரித்தாகின்றது.

சங்கத்தின் தேர்வுகட்கு உரிய பாட முறைகள் 1935 ஜூன் முதல் 1939 முடிய உள்ளவை சங்கத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

வரும் யாண்டு முதல் சங்கத் தேர்வுகட்குப் பல ஊர்களினின்றும் பலர் விண்ணப்பித்து தேர்ச்சி பெறுவார்களாக.

தேர்ச்சிக் குறிப்பு

இளந்தமிழ்ப் புலவர்

மூன்றும் பகுதி

பதிவெண் இ. 29. திரு. அ. கவிராசன், தேவதானம், தெப்பக்குளம் போஸ்ட், திருச்சிராப்பள்ளி.

தமிழ்த் தேர்வு

இரண்டாம் பகுதி

பதிவெண் த. 101. திரு. E. M. சேஷாசலம் பிள்ளை, 120, சு. கிராமம், இரையூர், திருவள்ளூர், செங்கற்பட்டு ஜில்லா.

மூன்றும் பகுதி

த. 103. திரு. ச. பலவேசம், சாயர்புரம், தூத்துக்குடி.
த. 102. திரு. ஞா. அருமைநாயகம், உதவித் தமிழாசிரியர், கால்டுவெல் கலாசாலை, தூத்துக்குடி.

த. 104. திரு. தெ. தா. முனிசாமிக் கவுண்டர், தெள்ளூர், ஆரணித் தாலுகா, வட ஆற்காடு ஜில்லா.

தெ. த. சங்கம்,
திருநெல்வேலி,
4-11-'34.

பு. சி. புன்னைவனநாதர்,
அமைச்சர்.

சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம், திருநெல்வேலி

வேண்டுகோள்

நிகழும் 1934ஆ ஜூன் திங்கள் 10, 11-ஆம் நாட்களில் சென்னை மாகாணத் தமிழர் மகாநாடு திருநெல்வேலியில் நடைபெற்றதும், அம்மகாநாட்டில் நமது சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம் தோன்றியதும், அம்மகாநாட்டுத் தீர்மானப்படி 1860-ஆம் ஆண்டு 21-வது சட்டப்படி பதிவு செய்யப் பெற்றதும் யாவரும் அறிவர். தமிழ் மொழியின் அரும் பெரும் பொருள்களின் உண்மைகளை எச்சமயத்தாரும் தெரிந்துணர வேண்டியவற்றைச் செய்வதே இச்சங்கத்தின் முதன்மை நோக்கம். இச்சங்கத்திற்சேர ஆண்டுக் கட்டணம் ரூபா ஒன்று. நோக்கம் இனிது நிறைவேற, இச்சங்கத்தினின்றும் மூன்று திங்களுக்கொரு முறை "தமிழ்த் தாய்" என்ற தாள் வெளி வரும். அதன் ஆண்டுக் கையொப்பம் சங்க உறுப்பினருக்கு மட்டும் அரை ரூபா. மற்றையர்க்கு ரூபா ஒன்று.

ஆகவே அன்பரனைவரும் சங்கத்திற் சேர்ந்து தமிழ்த் தாயைப் பேணுதலோடு சங்கத்தை வளர்க்கு முறையிலே நன் கொடைப் பொருளுதவி செய்யவும் வேண்டுகின்றோம்.

தொழிற் கழகம்:—இச் சங்கத்தின் தொழிற் கழகம் 7-10-34-இலும், 3-11-34-இலும் கூடி, இதன் சார்பாகத் 'தமிழ்த் தாய்' என்னும் தாள் வெளியீட்டின் கட்டாயத்தையும், அதன் அமைப்பு வகைபற்றியும் முடிவு செய்தது.

பொறுப்பாளர் கழகம் :—இது 14-10-'34-ற் கூடிச் 'சொல் லாக்கக் கழகம்' ஒன்றும், அதற்குத் தலைவர் திருவனந்தபுரம் இசைத் தமிழ்ச் செல்வர், திருவாளர், தி. இலக்குமணப் பிள்ளை அவர்கள், பி.ஏ. எனவும் நிறுவிற்று.

விரிவுரைகள்:—7-10-34-ல் கூடிய கழகத்தின் தீர்மானப் படி, திருநெல்வேலியில் திருவாளர். கா. சுப்பிரமணிய பிள்ளை யவர்கள் எம். ஏ., எம். எல். ' தமிழின் தொன்மை' பற்றி 14, 15-10-'34-நாட்களில் முறையே, சில்லாப் பதிவுத்தலைவர் திரு வாளர். சு. ஞானதேசிகன் பிள்ளையவர்கள் பி. ஏ., சாத்தூர்த் திருவாளர், து. சு. கந்தசாமி முதலியாரவர்கள் பி. ஏ. என்ப வர்தம் தலைமைகளில் அரிய விரிவுரைகள் நிகழ்த்தினர்கள்.

குறிப்பு: பணம் அனுப்பவேண்டிய முகவரி :—திருவாளர். மு. சுப்பிரமணியன் செட்டியாரவர்கள் (காசுக்கடை) பொருளாளர், சென்னை மாகாணத் தமிழ்ச்சங்கம், திருநெல்வேலி.

திருநெல்வேலி, 9-11-'34. } இ. மு. சுப்பிரமணிய பிள்ளை,
அமைச்சர்.



சுவாமி விவேகானந்தர்

ஓம்

செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

சிலம்பு-கரு.] பவ—கார்த்திகை [பரல்-ச

சுந்தரமூர்த்தி அடிகள் தேவாரம்

திருவன்பார்த்தான் பனங்காட்டூர்

விடையின்மேல் வருவானை வேதத்தின் பொருளானை
அடையிலன் புடையானை யாவர்க்கு மறிவொண்ணு
மடையில்வா ளைகள்பாயும் வன்பார்த்தான் பனங்காட்டூர்ச்
சடையிற்கங்கை தரித்தானைச் சாராதார் சார்பென்னே.

பதவுரை :—

விடையின்மேல் வருவானை—எருதினை ஊர்தியாகக்கொண்டு அதன் மேல் ஏறி (தெருவில் உலா) வருபவனும்,

வேதத்தின் பொருளானை—அருள் அறிவு நூல்களில் உண்மைப் பொருளாகக் கூறப்பட் டிருக்கின்றவனும்,

அடையில் அன்புடையானை—யார் தன்னை (அன்புடன் வழிபட்டுச்) சார்கின்றூர்களோ அவர்களுக்குத் தானும் அன்புடையவனுய் அருள் செய்கின்றவனும்,

யாவர்க்கும் அறியொண்ணு—தன்னைச் சாராத எவராலும் அறிய முடியாத,

மடையில் வாளைகள்பாயும்—(குளம் முதலிய நீர் நிலைகளிலும், வயல் மடைகளிலும்) வாளைமீன்கள் பாய்கின்ற (நீர்வளமுடைய),

வன்பார்த்தான் பனங்காட்டூர்—வன்பார்த்தான் பனங்காட்டூர்த் திருப்பதியில் திருக்கோயில் கொண்டருளி யிருக்கின்ற,

சடையிற் கங்கை தரித்தானை—தனது சடைமேல் வான் யாற்று நீரைத் தாங்கிக்கொண் டிருக்கின்றவனும் ஆகிய சிவபெருமானை,

சாராதார் சார்பு என்?—சார்ந்து அச்சார்பினு லுண்டாகும் பிறவிப் பெரும்பயனாகிய வீட்டின்பத்தை அடையாத மக்களுடைய பிற பொருட்சார்பு உயிர்ச்சார்புகள் என்ன பயனைத்தரும்? (ஒரு பயனையும் தராது என்றபடி).

விளக்கவுரை :—

விடையின்மேல் வருவான் :—ஐந்தொழில் செய்து உயிர்களுக்கு அருள்செய்கின்ற தலைவன் என்பது கூறப்பட்டது.

வேதத்தின் பொருளானை :—அருள் விளங்கப் பெற்ற பெரியார்களுடைய மலம் நீங்கிய உள்ளத்திலிருந்து வெளிப்படும் பதிநூல்களெல்லாம் பொதுவாக வடமொழியில் வேதம் என்றும் தமிழில் மறை என்றும் கூறப்படும். அருள் விளங்கப்பெறாதவர்கள் கூறுவனவெல்லாம் பசுநூல் பாசநூல்களாகும். "சித்தத்தினுள்ளே சிறக்கின்ற நூல்களில் உத்தமமாகவே யோதிய வேதந்தின்" என்று திருமூலர் திருமந்திரம் 94-வது பாட்டிற் கூறியிருத்தல் காண்க.

அடையில் அன்பு உடையானை:—உயிர்கள் ஒன்றைச் சார்தலையும் சாராதவண்ணமாந்தன்மை அடைதலையும் இயல்பாக உடையவைகள். மலக்கட்டு உடைய மக்கள் மலம் எக்காலு மில்லாதவன் (அநாதிமுத்தன்) ஆகிய சிவபெருமானைச் சார்ந்தால் அல்லாமல் தங்கள் மலக்கட்டு நீங்கி உய்தி பெற்றுப் பேரின்பம் அடையமாட்டார்கள். மலக்கட்டு நீங்கி உய்தி அடைதற்காகவே மக்களுக்குப் பலவகை வழிபாடுகள் அருள்நூல்களிற் கூறப்பட்டுள்ளன. சிவபெருமானுக்கும் உயிர்களுக்குமுள்ள இரண்டற்ற அத்துவித இன்பக்கலப்பு இந்தச் சார்தலையே பற்றியுள்ளது.

"சலமிலன் சங்கரன் சார்ந்தவர்க்கல்லால் நலமிலன்"

என்று திருநாவுக்கரசு அடிகள் நமச்சிவாயப் பதிகம் 6-வது பாட்டிலும், "சார்ந்தாரைக் காத்தல் தலைவன் (சிவபெருமான்) கடனாதல்" என்று மெய்கண்ட தேவர் சிவஞானபோதம் 10-வது சூத்திர வெண்பாவிலும், "நலமிலன் நண்ணார்க்கு, நண்ணினர்க்கு நல்லன்" என்று உமாபதி சிவம் திருவருட்பயன் முதல் அதிகாரம் 9-வது பாட்டிலும், "சார்ந்தவர்க்கு இன்பங் கொடுக்குந் தழல் வண்ணன்" என்று திருமூலர் திருமந்திரம் 2114-ஆம் பாட்டிலும் கூறி அருளினமை காண்க.

சடையிற் கங்கை தரித்தானை:—பகீரதன் தனது தவவலியால் வானினின்று நிலவுலகத்தி விழிந்த கங்கைப்பெருக்கை உலகம் அழிந்து போகாதபடி சிவபெருமான் ஒரு துளியாக அடக்கிச்

சடையில் வைத்தருளினர் என்பது புராணவரலாறு. இதனல் சிவபெருமானது அளவிலாற்றல் கூறப்பட்டது.

சாராதார் சார்பு என்:—எவன் என்னும் வினப்பெயர் என என்றுயது. அஃது இங்கே இன்மைப் பொருள் குறித்து நின்றது.

சார்பு மூவகை; அவை பொருட்சார்பு, உயிர்ச்சார்பு, இறைவன் சார்பு. அவற்றுள், பொருட்சார்பு உயிர்ச்சார்பு இரண்டும் நிலையில்லா தனவாயும், பிறவித்துன்பத்துக்கு ஏதுக்களாயுமுள்ளன. இறைவனைச் சாரும் சார்பு ஒன்றுமட்டும் பிறவிப் பிணியை நீக்கி நிலையான வீட்டின்பத்தை அடைவிக்கும். ஆதலால், அடிகள் சாராதார் சார்பு என் என்றுர். "சார்புணர்ந்து சார்பு கெடவொழுகின் மற்றழித்துச் சார்தரா சார்தரு நோய்" என்ற திருக்குறட் பாக் கருத்தும் இதுவே. ஏ, அசை.

இந்தப்பாட்டில் விடையின்மேல்வருவானை என்றதனுல் சிவபெருமான் உயிர்களுக்குத் தலைவனுய் அவைகளைக் காத்து அருள்செய்கிறவன் என்பது கூறப்பட்டது. அவ்வாறு அவன் உயிர்களைக் காத்து அருள் செய்தற்கு வேண்டப்படும் பேராற்ற லுடைமை, முற்றறிவுடைமை பேரருளுடைமை ஆகிய மூன்று உண்மை அறி வின்பகுணங்களையும் (சச்சிதானந்த குணங்களையும்) உடையவன் என்பது முறையே சடையிற் கங்கைதரித்தானை என்றதனுலும், வேதத்தின் பொருளானை என்றதனுலும், அடையில் அன்புடையானை என்றதனுலும் கூறப் பட்டது.

மக்கள் உயிர்ப்பற்று பொருட் பற்றுக்களைவிட்டு உண்மை அறிவு இன்பப் பொருளாகிய இறைவனைப்பற்றுதல் செய்து வீட்டின் பம் அடைதல் வேண்டும் என்பது இந்தத் தேவாரப் பாட்டின் கருத்து.

திருஞானசம்பந்த அடிகள் தேவாரம்.

திருவாலவாய்　—　திருவிருக்குக்குறள்

அண்ண லாலவாய், நண்ணி னுன் றனை
எண்ணி யேதொழக், திண்ண மின்பமே.

பதவுரை:—

ஆலவாய்— மதுரையிலுள்ள திருவாலவாயில்
நண்ணினுன் அண்ணல்தனை— வீற்றிருக்கின்ற சிவபெருமான் ஆகிய தலைவனை

எண்ணியே தொழ— மக்கள் (தங்களுக்கும் சிவபெருமானுக்கு முளதாகிய ஆண்டான் அடிமைத் தொடர்பையும் அத்தொடர்பு

பற்றி அவன் தாங்கள் மலம் நீங்கி இன்பமடைதற்குச் சலியாம லெப்பொழுதும் செய்துவரும் காட்டு முதவியையும் காணுமுதவி யையும்) உள்ளத்தில் அன்பினுல் உள்ளுருகி நினைத்தும், (நாவி ஞற் புகழ்ந்து பாடியும் உடலினுல் எட்டுறுப்பு வணக்கம் அஞ் சுறுப்பு வணக்கம் மூன்றுறுப்பு வணக்கம் என்பன செய்தும்) வழிபடுதலினுல், இன்பம் திண்ணம்—பேரின்பம் பெறுதல் உறுதி.

மக்களே, ஆலவாயிலுள்ள சிவபெருமானை வணங்கிப் பேரின்பம் பெறுமின் என்பது குறிப்பெச்சம்.


விளக்கவுரை :—

ஆலவாய் நண்ணினுன் அண்ணல்தனை—இவ்வாறு உரை நடைசெய்க. அண்ணல்—தலைவன், அண் + அல் = அண்ணல். சேர் என்று பொருள்படும் அண் என்ற அடிச்சொல் அல் என்ற தொழிற் பெயர் விகுதியுடன் சேர்ந்து அண்ணல் என்ருயது. இறைவன் உயிர்களுடன் பிரிவின்றிச் சேர்ந்து இருத்தலால் அவனுக்கு அண்ணல் என்ற பெயரைப் பண்டைத் தமிழர்கள் வழங்கிவந் தார்கள். அவ்வாறு அவன் உயிர்களுடன் சேர்ந்து இருத்தல் அவனது தலைமைபற்றி ஆதலின் அச்சொல் தலைவன் என்ற பொருளினைக் குறித்தது. இந்தச் சொல்லின் பொருளை விரி வாய் அறிய விரும்புகிறவர்கள் **செந்தமிழ்ச் செல்வி 9-ஆம் சிலம்** பின் 9-ஆம் பரலில் 390-முதல் 395ஆம் பக்கம்வரை பார்க்க. தன்—அசை.

எண்ணியே தொழ—எண்ணியே என்பதிலுள்ள ஏ தேற்றப் பொரு ளில் வந்தது. உள்ளத்தில் எண்ணிச் செய்யாத தொழுகையி ஞல் பயன் ஒன்று மில்லையாதலின் எண்ணியே தொழ என்ருர். தொழ—தொழுதலினுல்; காரணப்பொருளில் வந்தது; மழை பெய்யக் குளம் நிறைந்தது என்ருற்போல. எண்ணுதல்—உள் ளத்தினுல் எண்ணுதல். இனம்பற்றி நாவினுலும் உடலினுலும் செய்யும் வழிபாடுகள் கொள்ளப்படும்.

இன்பம் திண்ணம்—இன்பமென்றது சிவபெருமானுடைய திருவடி களைச் சார்ந்து அடையும் நிலையான பேரின்பம். திண்ண மென்பது ஐய மின்மையைக் குறிக்கின்றது. இன்பம் எழுவாய், திண்ணம் பயனிலை, ஏ-அசை.

—மா. வே. நெல்லையப்ப பிள்ளை



சிவஞான போதக் கருத்து

[திரு. மா. வே. நெல்லையப்ப பிள்ளை, பி. ஏ.]

(முன் 109-ம் பக்கத் தொடர்ச்சி)

மூன்றாவது சூத்திரம்

நூலை ஓதிச் சூத்திரமும் வெண்பாக்களும் அறிந்துகொள்க.

மேலே இரண்டாவது சூத்திரத்திற் கூறப்பட்ட நான்கு அதிகரணப் பொருள்களும் ஆகம அளவையால் அறியப்பட்ட உயிர்களின் மேல் வைத்து முதல்வன் இலக்கணங் கூறப்பட்டன. அவ்வாறு ஆகம அளவையாற் கூறப்பட்ட உயிர் உண்டு என்று கருதல் அளவையாலும் நிலைநாட்டி இரண்டாவது சூத்திரத்திற் கூறப்பட்ட முதல்வன் இலக்கணத்தை வலியுறுத்துவது இந்த மூன்றாவது சூத்திரத்தின் கருத்து. இதனாற் சூத்திர இயைபு விளங்கும்.

2. முதலாவது சூத்திரத்தில் முதல்வனது உண்மைக்கும் (பதி உண்மைக்கும்) இரண்டாவது சூத்திரத்தில் மாயையாலாகிய உலக உண்மைக்கும் (பாச உண்மைக்கும்) பிரமாணங் கூறிய ஆசிரியர், மூன்றாவது சூத்திரத்தில் முப்பொருள்களுள் எஞ்சி நின்ற உயிர் உண்மைக்கு (பசு உண்மைக்கு)ப் பிரமாணங் கூறுகின்றார். இதனாற் பிரமாண வியல் பற்றிய ஒத்து இயைபு பெறப்படும் முதலாவது சூத்திரத்திற் காணப்படாத முதல்வனது உண்மையைக் காணப்பட்ட உலகின் மேல் வைத்துக் கருதல் அளவையாற் றெரித்துணர்த்திய ஆசிரியர், இச்சூத்திரத்திற் காணப்படாத உயிர் உண்மையைக் காணப்பட்ட உடலின் மேல் வைத்துக் கருதல் அளவையாற் கூறுகின்றார்.

3. இரண்டாவது சூத்திரம் நான்காவது அதிகரண வெண்பாவில் "ஆளா நாமங்கு" என்று முதல்வனுக்கு அடிமைகளாகக் கூறப்பட்ட உயிர்கள்உண்மையானது இச்சூத்திரம் முதலாவது அதிகரணத்திற் கூறப்படுதலால் அதிகரண இயைபு அறியப்படும்.

4. உயிர் என்பது தனியே ஒரு பொருள் இல்லை எனக் கூறும் கொள்கையர் (வாதிகள்) எண் வகையர். அவர்கள் 1. சூனியான்ம வாதி, 2. தேகான்ம வாதி, 3. இந்திரியான்ம வாதி, 4. அந்தக்கரணான்ம வாதி, 5. சூக்குமதேகான்ம வாதி, 6. பிராணான்மவாதி, 7. பிரமான்மவாதி, 8. சமுகான்மவாதி. இந்த எண் வகைக் கொள்கையர்களையும் தமிழில் நாமுறையே 1. உயிர் இல்லைஎன் வழக்கர், 2. உயிர் பருவுடல் என் வழக்கர், 3. உயிர் பொறி என் வழக்கர், 4. உயிர் உட்கருவி என் வழக்கர், 5. உயிர் நுண்ணுடல் என் வழக்கர், 6. உயிர் உயிர்ப்பு வளி என் வழக்கர், 7. உயிர் கடவுள் என் வழக்கர், 8. உயிர் கருவித் தொகுதி என் வழக்கர் என்று கூறலாம். வாதி, வழக்கர், கொள்கையர் என்பன ஒரு பொருட் சொற்கள். இக்காலத்தில் உலகிலுள்ளபடி முதல் நான்கு கொள்கையர்களும் உலகம் தவிர வேறு பொருளில்லை என்று கூறுங் கொள்கையரில் (Materialists) அடங்குவர். பிரமான்ம வாதிகளாவார் நமது நாட்டில் வேதாந்திகள் என்று கூறப் படுகின்ற ஏகான்ம வாதிகள். ஏனைய வாதிகள் இக்காலத்தி லிருப்பதாக நமக்குத் தெரியவில்லை.

5. இந்தக் கொள்கையர் எண்மரும் உயிரினது உண்மை நிலையை அறியாது மயங்கிக் கூறுகின்றார்கள். சூனியான்ம வாதி, உயிர் இல்லை என்றும் ஏனைய கொள்கையர் உயிரல்லாத பொருள்களை உயிரென்றும் மயங்கிக் கூறுகிறார்கள். 2, 3, 4, 5, 6, 8 எண்களாற் குறிக்கப்பட்ட கொள்கையர்கள் உயிரானது அறிதற்குத் துணையாயுள்ள தத்துவக் கருவிகள் ஒவ்வொன்றையும் அதுவதுவாய் மயங்கி அறிந்து உயிர் என்று கூறுகிறார்கள். பிரமான்ம வாதிகள் கடவுள் உயிரில் விளங்குந் தன்மை பற்றிக் கடவுளையே உயிர் என்று மயங்கி அறிகிறார் கள். ஆசிரியர் பல்வேறு கொள்கையர்களுடைய மயக்க அறிவு நிலையை அறிந்து அவரவர் கூறிய ஏதுக்களையே ஏதுக்க ளாகக் கொண்டு அவை பொருத்தமுடையன அல்ல எனக் கூறி மறுத்து அறிவுறுத்துகின்றார்.

6. இந்த எண் வகைக் கொள்கையர்களில், அந்தக்கரணான்ம வாதியினுடைய கொள்கையானது நான்காவது சூத்திரத்தில் உயிர்களுக்கு இலக்கணங் கூறு முகத்தால் மறுக்கப்படுதலின், சொற்பல்காமைப் பொருட்டும் கூறியது கூறல் நிகழாமைப் பொருட்டும் ஆசிரியர் அதனை ஒழித்து ஏனைய ஏழு கொள்கையர்களையும் மூன்றாவது சூத்திரத்தில் மறுத்துக் கூறுகின்றார். இவ்வாறு ஆசிரியர் ஏழு கொள்கையர்களையும் மறுத் துக் கூறுதலால் இச்சூத்திரம் ஏழு அதிகரணங்களை உடைய

தாயிற்று. ஏனைய சூத்திரங்கள்போலன்றி இச்சூத்திரத்தில் எழு அதிகரணங்களுக்கும் உயிர் இல்லை என்னும் மேற்கோள் ஒன்றே. இந்த ஒரு மேற்கோளுக்கே ஒவ்வொரு அதிகரணத்திலும் அந்த அந்தக் கொள்கையர் கூறும் ஏதுவே ஏதுவாகச் சென்றியைகின்றது.

முதல் அதிகரணம்

7. இலதென்றலின் ஆன்மா உளது என்பது சூத்திரத்தினுள்ள முதல் அதிகரணம். இந்த அதிகரணத்தில் ஆசிரியர் புத்தர் நால்வகையரில் ஒருவராகிய மாத்துமிகர் கூறும் சூனியான்ம வாதத்தை மறுக்கின்றனர். இந்த அதிகரணத்தின் மேற்கோள் ஆன்மா உளது என்பது. அம்மேற்கோளுக்கு ஆசிரியர் கூறும் ஏது சூனியான்ம வாதி கூறும் 'உயிர் இல்லை' என்னும் ஏதுவே. ஏனைய சூத்திரங்களிற்போல எதிர் வாதிகள் கூறுத ஏதுக்கள் மேற்கோளுக்குக் கூறுவது இச்சூத்திரத்தில் வேண்டப்படுவதன்று.

8. கண்ணால் நேராய்க் காணப்படாத உயிர் இல்லையென்று கூறும் சூனியான்ம வாதியும், கண்ணால் நேராய்க் காணப்படுகின்ற உடல், புலன்கள் உலகநுகர்வுப் பொருள்கள் முதலிய பொருள்கள் ஒவ்வொன்றையும் பார்த்து, இது உயிரன்று, இது உயிரன்று, என ஒரோ ஒன்றாய்ச் சுட்டிக் கழித்துக் கூறுகின்றான். அவ்வாறு அவன் கூறுதல் அவனிடத்தில் அறிவு நிகழ்ந்த வழியன்றி அமையாது. யாதானும் ஒரு பொருளினது உண்மை அதன் இலக்கணம் அறிதல் பற்றி அறியப்படும். உயிரினது இலக்கணம் அறிவுடைமை. இந்த அறிவு, உயிர் இல்லை எனக் கூறும் சூனியான்ம வாதியிடம் மேலே கூறியவாறு காணப்படுதலால் ஆசிரியர் அவன் கூறிய ஏதுவைக் கொண்டே அவன் தனது அறிவு நிலையில் அறியும்படி உயிர் உண்டு என்று நிறுவுகின்றார். ஆசிரியர் கூறியவாறு மேற்கு நாட்டுத் தத்துவ நூலுடையார்களில் ஒருவராகிய பிரான்சு நாட்டு டேக்கார்ட் (Descartes) என்பவரும் "Cogito ergo sum (I think, therefore I exist)........................." என்று கூறி உயிர் உண்மையை நிறுவுதல் காண்க. ஆனால் ஆசிரியர் சூனியான்ம வாதிக்கு உயிர் உண்டு என்று கூறுதலோடு அமையாது, எடுத்துக் காட்டு வெண்பாவிற் கூறியபடி அவர் பின் 6 அதிகரணங்களிற் கூறப்படுகிற கொள்கையர்களுடைய மயக்க அறிவை அடையாதிருக்கும்படி உயிர் அதற்குக் கீழாய்க் கண்ணாடிபோல அறிவுக் கருவிகளாய் விளங்குகிற மாயை அன்று என்றும் அதற்கு மேலாய நிறைவு அறிவுடைய கடவுளல்ல என்றும் கூறி உயிரானது அவ்விருவகைப்

பொருள்களினின்றும் வேருன தனிப் பொருளென்றும் அவ னுக்கு அறிவுறுத்துகின்ருர். இவ்வாறு அவர் கூறுதலால் பின் ஆறு அதிகரணங்களுக்குத் தோற்றுவாயும் கூறப்படுகின்றது.

முதலாவது அதிகரணம் முடிந்தது

மும்மையாலுலகாண்ட மூர்த்தி

[திரு. T. P. மீனுட்சிசுந்தரம் பிள்ளையவர்கள்]

(முன் சிலம்பு கூ௱அ-ம் பக்கத் தொடர்ச்சி)

அன்பு எனும் கடலோடு கலந்த அழகெனும் ஆறு:—இப் பாட்டினுள்ளே உள்ளுறையாகத் (த்வனி) தோன்றுவது யாது? தன் பொருநையையும் (தாம்ரபர்ணியையும்) கடலை யும் இடைக்காலத்தார், காதலனும் காதலியுமாக்கி அவ் விருவர்க்கும் மணம்புரிந்து வைத்தனர். இதனை மனநிற் கொண்டு பெண்களும் தத்தம்முடைய காதலன்மாரோடு இணைந்தியைந்து பிணைந்து நிற்பதனையே இப்பாட்டும் சுட்டு கிறது என்பார் ஒருசிலர். கடலினைப் பொருநை தழுவிநிற்கை யில் ஆங்கே முத்தம் தோன்றுகிறது. காதலனைக் காதலி தழுவி நிற்கையில், அவளும் இன்பத்திலே மூழ்கி நகைமுகம்கொண்டு முறுவல் பூக்கின்ருள். அதுபற்றியன்றே, காதலாற் றளர்ந்து, மெல்ல ஒசிந்து, கணவன்மீது சாயும் வல்லி மருங்குலையும், கணவனைப் பிணிக்கும் கண்ணையும், அவனைத் தழுவும் தோளை யும், அவனேடு பேசி நிற்கும் இனிய சொற்களையும் சேக்கிழார் சுட்டுகின்றனர் என எடுத்துக் காட்டுகின்றனர், அப்பெரியோர்.

அருட் கடலோடு கலந்த அன்பாறு:—அவ்வாறு கொள்ளு தலும் தக்கதே யாயினும் இதினும் சிறந்ததொரு பொருள் இப்பாட்டினுள்ளே மிளிரக் காண்கிறேம். கடலும் ஆறும் கொண்ட புனைந்துரையாம் காதலைச் சிறிது மறந்தால் ஈது புலனுகும். ஆறு, தன்னே டியைபுடைய வாய்க்கால்களின் வழியோடி, இருகரையினும் நிறைந்த வயல்களையும் தோட்டங் களையும் வளர்த்து இன்பமூட்டியபின், அருள்வெள்ளம்பொங்கி வழிய வழிய, குறுகிய இடத்தே உலவுவது ஒழிந்து, பெருங் கடலினுள்ளே புகுந்தொன்றுய்க் கலக்கின்றது. அங்ஙனமே, இந்நாட்டு மகளும் அன்புவழியோடித் தன்னேடியைபுடைய கணவனையும் மக்களையும் பேணிப் பாராட்டுகின்றனள். அப் பழக்கத்தால் அன்பு மலர்ந்து மலர்ந்து அருளாய் மாறிப் பொங்கிவழிய ஒப்புரவு வழிநின்று கைம்மாறு வேண்டாக் கடப்பாட்டினைக் கைக்கொள்கின்றனள். அவ்வருள் மிகுதிப்

பாட்டால் உள்ளமும் உடலும் கொடிபோலக் குழைய நிற்கின்றனர். அருள்வழியே மலர்ந்த கண்களால், ஆழ்வாரது ஆண்டவன் அமலங்களாக நோக்குகின்றார் போல இவளும் உலகினரை அமலங்களாக நோக்குகின்றாள். தனது செல்வக்குடிப் பிறப்பையும் தன்னும் பின் மென்மைச்சாயலையும் பாராது, தன் கைகொண்டே உலகிற்குத் திருத்தொண்டு புரிகின்றனள். விருந்தோம்புதற்கு இன்சொல் இன்றியமையாத தன்றோ? இனிய சொற்களாம் மழை பொழிந்து புன்முறுவலாம் நிலவு வீசி உயிர்களைத் தளிர்ப்பிக்கின்றனள். இதனையே இப்பாட்டுச் சுட்டுகின்ற தெனலாம். இவ்வழகிய கருத்துக்களைச் சுட்டவும் கொடியினையும், கண்ணையும், தோளையும், இன்சொல்லையும், முறுவலையும் கூறவேண்டாவோ?

சமணக் கருங்கல் :—இவ்வாறு பெண்களும் கடவுள் வழி நிற்பாரானால், அவர்களுக்கு வீடுபே றில்லை என எந்த வாயாற் கூறுவது? "குரத்திகட்பேணார்" எனச்சம்பந்தப் பெருந்தகையார் சமணர்களைப் பழிக்கின்றார். சமணர்களில் உடையிலாப்பிரிவைச்சேர்ந்தார், பெண்களுக்கு வீடு பேறில்லை என மன்றாடுவதை மனத்தே கொண்டு, கௌந்தியடிகளாய்த் துறவறம் பூண்டு வீட்டுநெறிநின்றாரையும் பேணிப் போற்றாது பெண் எனப் புறக்கணிப்பாரைத் தாய்ப்பாலுண்ட தனிப் பெருந் தகையார் தம்வயிறெரிய எரிய வருந்திப் பழித்துப் பாடுகின்றார். பாவுலகில் வாழ்ந்த சமணர்களோ பெண்களைத் தம்மை மறந்தும் புகழ்ந்து பாடுகின்றனர். சூளாமணி பாட வந்த தோலாமொழித் தேவரே பெண்களையும் நாட்டினையும் பிணைத்துப்பாடும் வழியை சேக்கிழார்க்குக் காட்டினர் என்றால் போலிச்சமணமீ தென்றும் உண்மைச் சமணமீ தென்றும் நன்குவிளங்கவில்லையா? தேவர்

> பங்கயங்காடு கொண்டலர்ந்த பாங்கெலாம்
> செங்கயலின நிரை திளைக்குஞ் செல்வமும்
> மங்கையர் முகத்தன மதர்த்த வாளரி
> யங்கயற் பிறழ்ச்சியு மருத நீரவே

என்று நாட்டைப் புனைந் துரைக்கத்தொடங்கி நான்கு பாடல்கள் பாடுதல் காண்க. இயற்கையன்னையை முன்வைத்து, அவ்வன்னையின் காலடியே பின்பற்றுகின்றார்கள் அம்மங்கையர் என்பது தோன்றப் பெண்களைப் பின்வைத்தார் சூளாமணியார். சேக்கிழாரோ இம்முறையை மாற்றிப் பெண்களை முன்கூறி அவர்கள் அன்பைக் கண்டு இயற்கையன்னையும் அத்தகைய இன்பம் பெற்று அவர்களுக்கென முத்தையும் உதவுகின்றாள் என்பதுதோன்ற இயற்கையைப் பின்னே கூறுகின்றார். மேலே காட்டிய உள்ளுறை சேக்கிழார் பாட்டிலன்

ளுஞ்சிறந்து திகழ்கின்றது. போலிச்சமணக் கருங்கல்லைச் சூளாமணியார், தூயபளிங்காக்கினர்; சேக்கிழார் அதனைக் கடவுட்டன்மைகொண்ட கௌத்துப மெனும் திருமணியாக்கினர்.

ஒப்புமைக் கூட்டமும் விளக்கும்:—புனைவுளியும்(உபமேயம்) புனைபிலியும் (உபமானமும்) ஆம். இரண்டுபொருள்களை அணிநூலார் பொதுத்தன்மையில் முடிப்பது விளக்கணி என்பார். இரண்டு புனைவுளிகளையோ அல்லது இரண்டு புனைவிலிகளையோ ஒருங்கியைப்பது ஒப்புமைக் கூட்டமென்பர். பொருளை விளக்குதற்கே இவ்வேற்றுமை எழுந்தது. அதுபற்றி இவற்றை இங்குக் கூறுகின்றேமேயன்றி இவற்றிற் கடிமையாய் ஒழிய வல்ல. கடலொடு கலத்தலை ஒப்புமைபோலக்கொண்டு பொருள் கூறிவந்தமையால் அதனைப் புனைவிலியாகக் கொண்டோமென என்னை இடமுண்டு. ஆகையால் விளக்கணியோ இங்கு அழகு செய்வதெனச் சிலர் வினவலாம். பாண்டி நாட்டின் சிறப்பழகாக முத்தும் திகழ்தலின் நாட்டைப் புகழவந்தார் அதனையும் புகழ்வாராயின், அதனைப் புனைவிலி என எவ்வாறு கூறுதல் கூடும். அதுவும் புனைவுளியேயாம். ஆதலின் ஒப்புமைக்கூட்டவணியே இங்குத் திகழ்கின்றதென்க. இவ்விரண்டு அணியினூடேயும் ஒப்புமையணி வெளிப்படையான திட்டங்களுக் கடங்காது புலவரின் கருத்தின்படியே குறிப்பாக ஒளிருமன்றே? இதுவரையும் கூறியபொருளைத் தூய்மைசெய்து கருத்தை அறுதியிட்டு விளக்க இவ்வாறு அணிகளின் பாகுபாட்டைப் பயன்படுத்துவது வெறுஞ் சொல்லாரவாரமாக ஒழியாது பொருணயம் ஊட்டுவதாம்.

இன்பப் பழம் :—

மொய்வைத்த வண்டின் செறிகுழன் முரன்ற சந்தின்
மைவைத்த சோலை மலயந்தர வந்தமந்த
மெய்வைத்த காலுந் தருஞால மளந்த மேன்மைத்
தெய்வத் தமிழுந் தருஞ்செல்வி மணஞ் செயீரம்.

முதற்பாட்டிலே, நான்மன்னு சிந்தையாம் அடிமரத்தின்மீதே சீர்தழைத்துச் செல்வம் பூத்துக் குடிகளாம் விழுதுகளும் விட்டுப் புகழாய்ப் பரவிநிற்கும் தொல்லாலமரத்தைப் புகழ்ந்தார் சேக்கிழார். இரண்டாவது பாட்டில், அம்மரத்திற்கு நீர் பாய்ச்சி முத்தைக் கொழிக்கும் இயற்கையினையும், அதற்கு வேராய் நின்ற கற்புடை மங்கையரின் கடவுளன்பையும் சுட்டிக் காட்டினர். இப்பாட்டிலே இம்மரம் இன்பப் பழம் பழுத்து உலகினை இன்புறுத்துவதைப் புனைந்துரைக்கின்றார் சேக்கிழார் பெருமான். உடற்கு ஊற்றின்பம் ஊட்டி மனதை மகிழ்விப்பது இயற்கையன்னை அங்குச் செய்யும் தென்றல் விருந்து, செவிக்கின்ப மூட்டி மனதை ஒருநிலைப்படுத்தி உயிர்க்கின்ப

மூட்டுவது அறிவோர் செய்யும் தமிழ் விருந்து. இவ்விரு விருந்திலும் தம்மைமறந்து தலைவனுடைய இன்பமடியில் அறிதுயிலமர்கின்றனர் அந்நாட்டினர். ஈதோ அத்தொல்லால மரத்தின் இன்பப் பழம்.

தென்றலின்பம்:—உடல் வழியே உள்ளத்திற்கு இன்ப மூட்டும் தென்றலுலவுவதனையும் உள்ளத்தின் வழியே உயிருக்கு இன்ப மூட்டும் தமிழுலவுவதனையும் ஒன்றாகப் பிணைத்துப் பாடுகின்றார் சேக்கிழார். தென்றலோ கடவுளின்பம் ஊட்டுவதொன்றாம். "வீசுதென்றலும் போன்றதே ஈசனெந்தை இணையடி நீழலே" என்பதன்றோ திருநாவுக்கரசர் கண்டவுண்மை. ஆகவே அகத்தியரோடு ஒருங்கிருப்ப தென நினைப்பூட்டுகின்றார் அத்தென்றலைப் புகழவருகின்ற சேக்கிழார். காற்று இன்பத்தையூட்டுவது மணத்தொடுகூடி, மெல்லெனக்குளிர்ந்து வீசும்போதே என அவ்வின்பத்தில் மூழ்கிய புலவோர் பலரும் பாடுகின்றனர். இத்தென்றலும் அங்ஙனமே கடுங்காற்றாய் மக்களை வீட்டினுள் சிறைப்படுத்தாது, மென்மையைத் தன் வடிவமனைத்திலும் பொதிய வைத்து விளங்குகிறது. மிகுதிப் படாதும் குறைபடாதும் தக்ககாலத்தே தக்க வளவில் தக்க படி நிற்பதைச் செவ்வி என்பர். இக்காற்றும் செவ்வியுடைய தாகிறது. அகத்தியனாரின் தவப்பள்ளியாம் மலைய மலையினின்றும் வருதலின் கடவுட்டன்மை மிகச் செவ்வியு முடைய தாகிறது. இயற்கையன்னையாம் அம்மலை, மக்கள் மேல் அன்பு கூர்ந்து இக்காற்றைப் பெற்றுத்தர அக்காற்றும் அவ்வன்னை யின் வழியேநடந்து வருகிறது. மலயம்தர என அஃறிணைப் பொருளை வினைமுதலாக்கிக் கூறியது அதனூடே ஒளிரும் இயற்கையன்னையை மனதிற் கொண்டே யாகும். அம் மலையோ பொழில்கள் நிறைந்தமலை. அப்பொழில்களும் இருண்டடர்ந்து கிடக்கின்றன. இருளை மையாகத்திரட்டி ஓரிடத்தே வைத்ததே போன்றன. அல்லது முகிற்கூட்டம் புகுந்து நிற்கும் பொழில்களே எனினும் ஒக்கும். இத்தகைய பொழில்களூடிருந்து வரும் அத்தென்றல் ஈரமுடையதாகிக் குளிர்ந்தன்றோ வீசுகிறது. அவ்விருண்ட பொழில்களும் சந்தனப் பொழில்களேயாம். வண்டுகள் செறிந்து சூழுகின்றன. "நான் முந்தி நீமுந்தி" என அம் மணத்தை நுகரப் போராடுகின்றன அவ்வண்டுகள் (மொய்ப்போர்). அவ்வாறு முந்தி நுகரப் பொருகின்ற வண்டின் செறிசூழலாம் கூட்டமானது இன்பத்தால் ஒலிக்கின்ற இடமாகும். அப்பொழில்கள் மணமிகுதியை இவ்வாறு புனைந்துரைக்கின்றார் சேக்கிழார். ஆகவே அங்கிருந்து நறுமணங்கொண்டு உலவுகிறது அத் தென்றல். ஆகையால், அத்தென்றல் செவ்வி மணஞ் செய்யீரத் தைத் தருகின்றது.

இலக்கணமும் இலக்கியமும்:
LANGUAGE AND LITERATURE

நெடுங்கணக்கு (அரிவரி)

[பண்டித திரு. ஞா. தேவநேயப் பாவாணர்]

சென்ற ஜ-ன்மீ 10-ஆம் 11-ஆம் நாட்களில், நெல்லையில் நடந்த, சென்னை மாகாணத் தமிழன்பர் மாநாட்டில், பதின் மூவர்போல், தமிழ் நெடுங்கணக்கு குறைவுள்ள தென்றும், அதிற் சில எழுத்துக்களைப் புதிதாய்ச் சேர்க்கவேண்டு மென்றும், பேசினதாக அம் மாநாட்டறிக்கையிற் கண்டாம்.

ஒரு மொழியிலுள்ள அரிவரி நிறைவுள்ள தில்ல தென்றறிதற்கு, அம்மொழியிலுள்ள ஒலிகளை யெல்லாம் குறித்தற்கு வரிகளுண்டா என்று காண்டல் வேண்டும். தமிழில் அதன் ஒலிகளையெல்லாம் குறித்தற்குப் போதிய வரிகளுண்டென்றே சொல்லவேண்டும்.

மெய்யெழுத்துக்களிற் சிலவற்றிற்கு ஈரொலியும் சிலவற்றிற்கு மூவொலியு மேனுமுள.

உ-ம். க—1. க், க்கா K. (வலிய ககரம்.)

2. உலகு, அகம் என்னும் சொற்களில் மெல்லிய ககரம், ககரத்திற்கும் ஆய்தத்திற்கும் இடைத்தர ஒலி.

3. தங்கம், என்னும் சொல்லில் g போன்ற தொனிப்பொலி (Voiced letter).

ஙகரத்தை யடுத்த ககரமெல்லாம் தொனித்தே ஒலிக்கும்.

ச—1. ச், ச்ச ch வலிய சகரம்.

2. சட்டி, சட்டை என்னும் சொற்களில் ஐ போன்ற மெல்லிய ஒலி.

3. பசி, ஏசி என்னும் சொற்களில் s அல்லது ஸ போன்ற மெல்லிய ஒலி.

4. பஞ்சம் என்றும் சொல்லில் j போன்ற தொனிப்பொலி. ஞகரத்தை யடுத்த சகரமெல்லாம் தொனித்தே ஒலிக்கும்.

ஞ—1. ஞ், ஏறத்தாழ ய்ங் போன்ற ஒலி.

2. மஞ்சள் என்னும் சொல்லில் nj போன்ற ஒலி.

ட—1. ட், ட்ட, ट போன்ற வல்லொலி.

2. ட, ड போன்ற தொனிப்பொலி.

டகரம் உயிர்மெய்யாய்த் தனித்து வரும்போதெல்லாம் தொனித்தே ஒலிக்கும்.

த—1. த், த்த, त போன்ற வல்லொலி.

தட்டை, தண்ணீர் முதலிய சொற்களிலுள்ள தகரமும் வலித்தே ஒலிக்கும்.

2. விந்தை, மதி முதலிய சொற்களில் द போன்ற தொனிப்பொலி.

நகர மெய்யை அடுத்துவரும் தகரமெல்லாம் தொனித்தே ஒலிக்கும்.

ப—1. ப,ப்,ப்ப, p வல்லொலி.

2. கம்பம், பண்பு, அன்பு, மரபு முதலிய சொற்களில் b போன்ற தொனிப்பொலி.

ம், ண், ன், என்ற மெய்களை யடுத்துவரும் பகரம் தொனித்தே யொலிக்கும்.

ற—1. ற,ற், வலியரகரம் (Hard or trilled r).

2. ற்ற, t போன்ற வல்லொலி.

3. கன்று என்னும் சொல்லில் (Candle என்னும் சொல்லிலுள்ள) d போன்ற மெல்லிய டகரம்.

னகரமெய்யை அடுத்துவரும்போ தெல்லாம் றகரம் இங்ஙனமே ஒலிக்கும்.

றகரம் இரட்டிக்கும் போது இரண்டு மிசைந்து t போல ஒரே யொலியா யொலிக்கும்; னகர மெய்யை அடுத்துவரும் போது இரண்டுமிசைந்து, nd போல ஒலிக்கும். இதையறியாத அங்கிலரும், அங்கிலவழித் தமிழறிஞரும், வெற்றி என்பதை வெற்றிறி என்றும் வென்றி என்பதை வென்றிறி என்றும் பிழைபட உச்சரிப்பர்.

எழுத்துக்கள் இடமும் சார்பும்பற்றிப் பற்பல விதமாக ஒலிப்பதைக் குறித்தே,

'எடுத்தல் படுத்தல் நலித லுழப்பின்
திரிபும் தத்தமிற் சிறிதுள வாகும்'

என்றார் பவணந்தியார். இங்ஙனம் ஓரெழுத்தே பற்பல விதமாக ஒலிக்கினும், எவ்விடத்தில் எவ்வொலியென்றறிய ஏதும் இடர்ப்பாடில்லை. ஏனென்றால் ஒவ்வோ ரொலியும் இயல்பாகவே இடமும் சார்பும் பற்றி வெவ்வே றொலியாய் ஒலிக்கின்றது. தமிழருள் எவர் பேசினும் இவ்வியல்பு மாறுவதின்று. பேசும்போது மட்டுமன்றி ஒரு நூலை வாசிக்கும்போதும் இவ்வியல்பு மாறுவதின்று. இதைக் கால்டுவேல் கண்காணியாரும் தமது ஒப்பியல் நூலிற் குறித்துள்ளார்.

இயல்பாகவும் எளிதாகவும் இருக்கிற தமிழ் மொழியைப் போன்றே, அதன் எழுத்துமுறையும் இயல்பாகவும் எளிதாகவு மிருக்கவேண்டி நம் நுண்மாண் நுழைபுல முன்னையாசிரியர் ஒரு வரியானேயே பல ஒலிகளைக் குறிப்பித்தனர். என்னே! அவர் அறிவின் மாண்பு!

இனி, தமிழிலுள்ள இசையும் குறிப்பும் பற்றிய பல்வகை யொலிகளையுங் குறிக்க வரியில்லை யென்னலாம்.

உ-ம். கும் கும் (Gum Gum) மிருதங்கத் தொனி.

உஸ்—நாயை உஸ்காட்டல் அல்லது வேட்டைமேல் ஏவல்.

ஜல் ஜல்—சலங்கை யொலி.

ஜம்— கம்பீரத் தோற்றக் குறிப்பு.

இஸ்ஸ்ஸ் (Ezzz)—பாம்பு, வண்டு முதலியவற்றின் இரைச்சல்.

உஷ் (Ush—hush)அமைத்தற் குறிப்பு. இவையெல்லாம் எழுத்துமுறைக் கேலாத புறவொலிகளாகக் கொண்டனரே யன்றி, பொருண்மொழிக்கு வேண்டும் எழுத்தொலிகளாகக் கொண்டிலரென்க.

அற்றேல் பிறமொழிகளில் இவ்வொலிகளைக் கொண்டதென்னையெனின், அவையெல்லாம் செயற்கை மொழிகளாதலின் அவற்றுக்குக் கொள்ளப்பட்டன வென்றும், அவற்றுள்ளும் முற்கு, வீளை, கனைப்பு, கத்து, அழுகை, தும்மல் முதலிய ஒலிகளையெல்லாம் குறிக்க வரியில்லை யென்றும், எல்லா ஒலிகளையும் குறிக்க வரியுள்ள மொழி உலகத்தில் ஒன்றுமேயில்லை யென்றும் கூறிவிடுக்க.

எ, ஒ, ழ, ற என்ற ஒலிகள் வடமொழிக்கில்லை. ஆகையால் ஒட்டெறும்பு என்பதை ஒட்டேறும்பு என்றும், வாழைப்

பழவற்றல் என்பதை வாலபல வர்ரல் என்றுமல்லவோ எழுத வேண்டும்?

ஞ, ண, ழ, ள, என்ற ஒலிகள் அங்கிலத்திற்கில்லை. இவ்வொலிகள் வருகின்ற சொற்களை எங்ஙன் அங்கிலத்தில் எழுத முடியும்? கண்ணியைக் கன்னியென்றும் மூளையை மூலையென்று மல்லவோ எழுதவேண்டும்?

இங்கிலீஷில் உள்ள f, z, zh முதலிய ஒலிகள் எத்துணையோ ஒலிகளையுடைய வடமொழிக்கும் இல்லையே! இங்ஙனம் ஒவ்வொரு மொழிக்கும் சில சிறப்பெழுத்துக்களிருப்பதால், ஒருமொழிச் சிறப்பெழுத்துச் சொற்களைப் பிறமொழியிலெழுத வொண்ணுதாகும். இதை யறியாத வடமொழிவாணன் ஒருவன், ஒரு தமிழனை நோக்கிச் சகஸ்திரதளாம்புஜம் என்பதைத் தமிழில் எழுதுக என்று பழித்தானும், பின்பு வாழைப்பழவற்றல் என்பதை வடமொழியில் எழுதுக என்று தமிழன் சொன்னது விழித்தானும். ஆகையால் ஒரு மொழிச் சிறப்பெழுத்துச் சொற்களை இன்னொரு மொழியில் விகாரமின்றி யெழுதவொண்ணுதென்றும், எல்லா மொழிச் சொற்களையும் தற்சமமாக எழுதும்மொழி உலகத்தே ஒன்று மில்லையென்றும் தெரிந்து கொள்க.

இதை யறியாதார் F தமிழில் இல்லையென்றும் ஜ தமிழிலில்லையென்றும், இன்னோரன்ன எழுத்துக்களைப் புதிதாய்ச் சேர்த்தல்வேண்டுமென்றும் ஒலமிட்டுத்திரிவர். உலக முழுமைக்கும் பொதுமொழியாய் வந்து கொண்டிருக்கின்ற இங்கிலீஷில், ஏனைமொழிச் சிறப்பெழுத்துக்களைச் சேர்க்கக் காரணமிருப்பினும், எவரேனும் ஞ, ண, ழ, ள முதலிய எழுத்துக்களை இங்கிலீஷில் சேர்க்கவேண்டு மென்று கூறினதுண்டா? அன்றி, மிக நிறைவுள்ளதாகக் கருதப்படும் வடமொழியரிவரியை இன்னும் நிறைவாக்க வேண்டி எ, ஒ, ழ, ற என்ற எழுத்துக்களைச் சேர்க்கவேண்டுமென்று எவரேனும் கூறினதுண்டா? இவரெல்லாம் அமைந்திருக்கவும் தமிழர் மட்டும் முனைந்து நிற்பதேன்? இதனுனேயே பிறர்க்குத்தாய் மொழிப்பற்றுளதென்றும் தமிழர்க்கிலதென்றும் விளங்குகின்றதே!

ஒரு மொழியின் அரிவரி அம்மொழி யொலிகட்குமட்டும் அமைந்ததா? அல்லது பிறமொழியொலிகட்கும் அமைந்ததா? ஒருமொழியரிவரியால் அம்மொழிச் சொற்களை மட்டும் எழுதாது, பிறமொழிச் சொற்களை எழுதிநகைப்பது பெரும்பேதைமையாகும். ஒருமொழிக்கு அதிலுள்ள ஒலிகளை யெல்லாம் குறிக்க வரியின்றெனின் அதுவே உண்மையான குறையாகும்.

தமிழில் ஒவ்வோரொலிக்கும் ஒவ்வோர் வரியுண்டு. உலக மொழிகளெல்லாவற்றின் அரிவரிகளையும் ஒவ்வொன்றாய் உற்று நோக்கின், தமிழரிவரியே பிறமொழிகள் அழுக்கறுமாறு அத்தனை நிரம்பினதும் வரம்பினதுமா யிருக்கின்றது. உயிரெழுத்துக்கள் பன்னிரண்டிற்கும் தனித்தனி வரியுள்ளது. குறில் குறிலாகவும் நெடில் நெடிலாகவும் உச்சரிக்கப்படும். மெய்யெழுத்துக்கள் எல்லா மொழிகட்கும் பொதுவாக இயற்கையான எளிய வொலிகள் பத்தொன்பதே. ஜ ககரத்தின் பேதமும் T சகரத்தின் பேதமுமின்றித்தனி யொலிகளாகா.

இங்கிலீஷில் 5-வரிகளால் 18 (20 Nesfield) உயிர்ஒலிகளைக்குறிப்பிக்கின்றனர். ஒரொலிக்குப்பலவரியும், ஒரு வரிக்குப் பலவொலியு முள்ளன. C. g x (ks) w என்பன மிகை வரிகள். ங (ng), ஷ (sh), த (th), zh என்னும் ஒலிகளைக் குறிக்கத் தனிவரியில்லை, இணைவரி (digraph) களே.

அரபி மொழியில் ஏ, ய என்னும் ஈரொலிகட்கு ஒரே வரியும் ஓ, வ என்னும் ஈரொலிகட்கு ஒரே வரியும் உள்ளன.

தமிழில் ஒரு வரி பலவொலிப் பேதங்களைக் குறிப்பினும் அப்பேதங்கள் இடமும் சார்பும் பற்றி இயற்கையாலேயே தோன்றுவதால் வேண்டாத வரிகளைப் பெருக்கி நம்மை வருத்தியிலர் நம் முன்னோர்.

இனி, இசை விளி புலம்பல் ஆதியில், எழுத்துக்கள் எத்துணையும் நீண்டொலிப்பதைக் குறிக்கத் தமிழில் இருவகை யளபெடைகளுள. பிறமொழிகட்கிவையில்லை. வடமொழியில் உயிரளபெடையேயுண்டு; ஒற்றளபெடையில்லை.

தமிழில் வரிகள் எளிதாய் விளங்குமாறு வெவ்வேறு வடிவாயுள்ளன. ஔ என்பதிலுள்ள ள வடிவைச் சிறிதாயெழுதாதது அச்சுவார்ப்பார் குற்றமேயன்றி எழுத்தாசிரியர் குற்றமன்று. தெலுங்கு, அரபி, சம்ஸ்கிருதம் முதலிய மொழிகளில் மாணவர் மயங்குமாறு பலவரிகள் ஏறத்தாழ ஒரேவடிவாயுள்ளன.

தமிழ்வரிகள் இங்கிலீஷ் வரிகள்போல மிகநுண்ணிய (Diamond, Brilliant) வடிவினு மெழுதப்படும். சம்ஸ்கிருதம், அரபி, தெலுங்கு முதலியவற்றின்வரிகள் அத்துணை நுணுக்கியெழுத இடந்தரா. இதனாலேயே சம்ஸ்கிருதவெழுத்துக்களைக் கூட்டெழுத்துக் (சம்யுக்தாக்ஷரம்) களாக எழுதுவர்.

(தொடரும்)

குறுந்தொகை

மூலமும் விளக்க உரையும்

[இலந்தையடிகள் வித்துவான் இரா. சிவ. சாம்பசிவன்]

(பதிப்புரிமை ஆசிரியர்க்கே)

(கஉ௫-ம் பக்கத் தொடர்ச்சி)

நெய்தல்

தலைவன், வரைவிடை வைத்துப் பொருள் வயிற் பிரிந்தானாகத் தலைவி தனது ஆற்றாமை தோன்றத் தோழிக்குக் கூறியது.

பதுமனார் பாடியது

6. நள்ளென் றன்றே யாமஞ் சொல்லவிந்
இனிதடங் கினரே மாக்கள் முனிவின்று
நனந்தலை யுலகமுந் துஞ்சும்
ஓஒயான் மன்ற துஞ்சா தேனே.

என்பது வரைவிடை வைத்துப் பிரிந்தவழி ஆற்றாளாகிய தலைமகள் தோழியை நெருங்கிச் சொல்லியது.

பதவுரை:—யாமம் நள் என்று அன்றே—இரவின் நடு யாமமும் 'நள்' என்னும் ஓசையை உடையதா யிருந்தது; சொல் அவிந்து மாக்கள் இனிது அடங்கினரே—சொல்லாடலை யொழிந்து கீழ் மக்களும் இனிதாக உறக்கங்கொண்டு அடங்கினர்; முனிவு இன்று நனந்தலை யுலகமும் துஞ்சும்—வெறுப்பின்றிப் பரந்த உலகத்து மேன்மக்களும் துயிலுவாராயினர்; ஓஒ—அந்தோ; யான் மன்ற துஞ்சாதேனே—யான் ஒருத்தியே உண்மையில் துயில் கொள்ளாதிருக்கின்றேன்.

நள்—நள் என்னும் ஓசையை யுடைய ஒலிக்குறிப்புச் சொல். யாமம்—தற்பவ வடசொல். மாக்கள்—ஐயறிவினவாகிய விலங்குகளை யொத்த கீழ்மக்கள்.

உலகம்—இடவாகுபெயராய் உயர்ந்தோரை யுணர்த்திற்று. "உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே" ஆதலின் (பிங்கலந்தை). ஓ—இரக்கப் பொருள்தரும் இடைச்சொல். மன்ற—தெளிவுப் பொருள்தரும் இடைச்சொல். முனிவின்று—வெறுப்பில்லாமல்.

மேற்கோள் விளக்கம்

1. "நள்ளென் யாமத்தும் பள்ளிகொள்ளான்"

—(நெடுநெல் 186)

2. 'நனந்தலை யுலகு' —(தொல்—சொல்—இளம் சூ. 370)

3. "நள்ளென்றன்றே..............துஞ்சாதேனே"—இதனுள் பொழுது சென்றதில்லை என்றும், மாக்கள் இன்னும் துயின்றிலர் என்றும் அருமையை வாயில் கூறிய வழித் தலைவி யாமமும் நள்ளென்றும் மாக்களும் துயின்றும் வந்திலர் என வருந்திக் கூறியவாறு காண்க. —(தொல்—களவு—பக் 451 நச்)

'ஒஒ யான்மன்ற துஞ்சாதேனே'—
ஓர் யான் மன்ற துஞ்சாதேனே —(பாட பேதம்.)

'நள்ளென் யாமத்து' —(நற் 22)

"ஊர்துஞ்சியாமமும்" —(குறுந் 32)

"நள்ளென்றன்றே........துஞ்சாதேனே"—இச்செய்யுள், "பொழுதுமாறும் புரைவதன்மையின் அழிவுதலை வந்த சிந்தையால் தலைவி கூறிய செய்யுள். இது தன்வயின் உரிமை.

—(தொல்—பொருள். களவு இளம்பூ, பக். 183)

மாக்கள்

"செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்"

—(குறள்-420)

"தவஞ்செய் மாக்க டம்முடம் பிடாஅ, ததன்பய மெய்திய அளவை மான" —(பொருந். 191-92)

என்பதில், மாக்கள் என்பதற்கு, "மக்கள் என்னது மாக்கள் என்றார்; வீடுபேறு குறியாது செல்வத்தைக் குறித்தலின்" என்பது நச்சருரை.

"பொழுதளந்தறியும் பொய்யாமாக்கள்" —(முல்லை. 55)

எனுமிடத்து, மாக்கள் என்பதற்கு "அறிவில்லாதோர்" என்பர்.

"மூவாறு பாடைமாக்கள்"—(சீவக. 93) என்னுமிடத்து, "மிலேச்சராதலின் ஐயறிவிற்குரிய மாக்கள் என்னும் பெயராற் கூறினார்" என்றும், "மையலங்கோயின் மாக்கள்" (சீவக-1278) என்னுமிடத்து, "மக்கட்குரிய மனனின்றி அறிவு கெட்டமையின் ஐயறிவுடையாரென்று மாக்களென்றார்" என்றும் கூறியிருப்பது காணத்தக்கன. "நடவாமடிசீ" என்னும் நன்னூற் சூத்திர விசேடவுரையில், "மையறியாமாக்கட் கன்றி நூலியற்றும் அறிவினையுடைய மக்கட்கு" எனக் கூறியிருத்தலும் உணரத்தக்கது.

"தக்க வின்ன தகாதன வின்னவென்
ஞெருக்க வுன்னல ராயி னுயர்ந்துள
மக்களும் விலங்கே" —(கம்ப. வாலிவதை. 112)

என்பதும் காண்க.

"நகான்மின் கூறுவேன் மாக்காண்" —(கலி—145-12)

'மாக்கள்' என்பது இழிவின் கண்வரும் சொல்.

"மாவும் மாக்களும் ஐயறிவினவே" —(தொல்—மரபு 32)

"மக்கள் தாமே ஆறறி வுயிரே" (தொல்—மரபு 33)
என்பதாலறிக.

"கையறியா மாக்கள் இழிப்பும்"—(நாலடியார்—பெரியாரைப் பிழையாமை 3.)

"கொலைவினை யராகிய மாக்கள்"

(திருக்குறள்—கொல்லாமை 6)

'உலகம் துஞ்சும்'—இடத்துநிகழ் பொருளின்தொழில் இடத்துமேல் நின்று.

'மன்ற'—தெளிவுப் பொருள் தருவதோர் இடைசொல்.

"மன்ற வென் கிளவி தேற்றஞ்செய்யும்"

(தொல்—சொல்—இடையியல் 17)

"யான் மன்ற துஞ் சாதேன்; இனிது அடங்கினரே நனந்தலை உலகமும் துஞ்சும்" எனத் தோழியை வேறுபடுத்தித் தலைவி கூறினாள், உடன்கொண்டு செல்லவேனும் பிரியாதிருக்கவேனும், வரைந்து கொள்ளவேனும் செய்யாமை பற்றிய கோபத்தால் என்க.

மெய்ப்பாடு—தன்கண் தோன்றிய அசைவு பற்றிய அழுகை. பயன்—ஆற்றாமை யறிவித்தல்.

அறிவியற் பகுதி - Science

உளநூல் (Psychology)

[திரு. மா. பாலசுப்பிரமணியம், எம். ஏ.]

(அஎ-ம் பக்கத் தொடர்ச்சி)

தன்மையியல் (Personality)

தன்மையின் உறுப்புக்களுட் சிறந்தது அறிவாம். தெள்ளிய அறிவுடையான் ஒள்ளிய தன்மையினன் (Graceful Personality) ஆவான். அறிவுடையான் தன் சுற்றத்துடன் (Environment) ஒழுக வேண்டிய முறையில் ஒழுகுவான்: அவ்வாற்ருன் தன் தன்மை நல்லாக்கம் அடையப் பெறுவான். ஆயின், அறிவிலாதான் தன் சுற்றத்துடன் ஒழுகலாற்ருன் ஒழுகானுய் தன் தன்மையாக்கம் சிதைவுறப் பெறுவான். கூர்த்த அறிவுடையாரும் தன்மை நல்லாக்கமின்றி இருப்பக் காண்கின்ருேமே எனின் அதன் அமைவு கூறுதும். கூர்த்த அறிவுடையாருட் சிலர் பள்ளிச் சிருராக விருந்த ஞான்று அவர் தம் பெற்ருேரால் நன்கு வளர்க்கப் பெருதவர்களாவார்கள். ஒரு தந்தை, தன் மைந்தன் கூர்த்த அறிவினனுயிருத்தலின் பிற சிறுவர்களுடன் அவன் பழகிக் கெடா வண்ணம் வளர்க்க வேண்டும் எனக் கருதி, மிகைபட அடக்கி வளர்ப்பானேயாயின், அம் மைந்தன் தன்மை நல்லாக்கம் பெறுமாறு யாது? பல்வகைச் சுற்றத்துடனும் பழகி, நன்மை தீமைகளைத் தன் அறிவானும், பெரியாரின் கண்ணோட்டத்தானும் பிரித்தறியுமாறும், இணக்கம் ஆராய்ந்தறிந்து இணங்குமாறும், பிற மக்களின் உளப் பான்மை வகைகளை நன்கு ஆராய்ந்தறியுமாறும், ஒரு கூர்த்த அறிவுடைய சிறுவன் வளர்க்கப்படானுயின் அவன் தன்மை நல்லாக்கம் பெறுமாறு இல்லை.

தன்மை வகைகள் (Types of Personality)

மக்களைத் தன்மை முறையில் வகுத்தல் கூடாததொன்ரும். தன்மைகளின் செவ்வெண் (Total number) இனைத்து என்ருதல், இன்ன வியல்புகளுடைமை இன்ன தன்மையுடைமையாம், மற்றின்ன வியல்புகளுடைமை மற்றின்ன தன்மையுடைமையாம் என்ருதல், இன்ன வியல்புகளின்மை இத்தன்மையைக் குறிக்கும், மற்றின்ன வியல்புகளின்மை இப் பிற தன்மையைக் குறிக்கும் என்ருதல் வரையறுத்துத் துணிதல்

இயலாததொன்றும். என்னை? பருப்பொருட்களை, உறுப்பு வேற்றுமையானும், தொழில் வேற்றுமையானும் பல வகைக ளாகப் பகுத்தமைத்தல்போல, நுகர்ச்சியான் உணரத் தக்க தன்மையெனும் நுண்பொருளைப் பலவாகப் பிரித்தமைத்தல் இயலாது. எனினும் சிற்சில உளநூற்புலவர்கள் சிற்சில சார் புகள் பற்றி மக்களைத் தன்மை முறையில் வகுத்திருக்கின்ற னர். அவ்வகுப்பின் அமைவை ஈண்டு ஆராய்வாம்.

உளநூற்புலவர் சிலர், மக்களை அகவிழைவுத் தன்மையி னர் எனவும் புற விழைவுத் தன்மையினர் எனவும் இரு வகை யாக வகுக்கின்றனர். அகவிழைவுத் தன்மை என்பது ஆங்கி லத்தில் இண்ட்ரோவேர்ட் பேர்ஸனலிடி (Introvert Personality) எனப்படும். புற விழைவுத் தன்மை என்பது ஆங்கி லத்தில் எக்ஸ்ட்ரோவேர்ட் பேர்ஸனலிடி (Extrovert Personality) எனப்படும். அகவிழைவுத் தன்மையினர் அகத்தைச் சார்ந்த நிகழ்ச்சிகளில் மிகைபட ஈடுபட விழைவர்; கனவின் தன்மையை ஆராய்தல், மெய்ப்பாடு, உட்பாடு முதலிய உள்ள நிகழ்ச்சிகளையும், அவை சார்ந்த புறத் தொழிற்பாடுகளையும் ஆராய்தல், உயிரின் தன்மைகளை ஆராய்தல், அந்தக்கரணங் களின் தன்மைகளை யாராய்தல், தம் நற்பண்புகளையும், தீய பண்புகளையும் ஆராய்தல் முதலிய அக நிகழ்ச்சி ஆராய்ச் சிகளைச் செய்ய மிகு விழைவு கொள்வர்: ஆதலின் அவர் அக விழைவுத் தன்மையர் எனப்படுவர். புற விழைவுத் தன்மையர் புறப் பொருட்களை ஆராய்ந் தறிய விழைவர். பிற மக்களுடைய உளப்பான்மை வேற்றுமைகளை ஆராய் தல், செய்தொழில் பற்றி மக்கள்தம் ஒழுக்கம் வேற்றுமையுறு மாறு ஆராய்தல், புள்ளினம், விலங்கினம், மரஞ் செடி கொடி யினம் முதலியவற்றின் இயல்புகளை யாராய்தல், முதலிய புறப் பொருள் ஆராய்ச்சித் துறையில் ஈடுபட மிக்கு விழைவராத லின், அவர் புற விழைவுத் தன்மையர் எனப்படுவர்.

ஆயின், மக்களுட்பலர் அகநிகழ்ச்சி யாராய்ச்சியில் ஒரள வாகவும், புறப் பொருளாராய்ச்சியில் ஒரளவாகவும் விழைந்து ஈடுபடக் காண்கின்றோமே! அவர் எத்தன்மையர்? என்னும் ஐயமும், கேள்வியும் ஈண்டு எழுமன்றே! இஃதறிந்த அவ்வுள நூற்புலவர்கள் இப்பலரை அகப் புற நடுவிழைவுத் தன்மையர் என்னும் பகுதியுட்படுத்தினர். அகப் புற நடுவிழைவுத் தன்மை என்பது ஆங்கிலத்தில் ஆம்பிவேர்ட் பேர்ஸனலிடி (Ambivert Personality) எனப்படும்.

மக்களைத் தன்மை பற்றி வகுத்த இம்மூவகை முறை நனி ஏற்புடைத்தன்று. என்னை? ஒருவனே சில்வகை நிலைமைகளில்

அகவிழைவுத் தன்மையனாகவும், பல்வகை நிலைமைகளில் புற விழைவுத் தன்மையனாகவும் நிற்கக் காண்கின்றோம். மற்றொருவன் சில்வகை நிலைமைகளில் புற விழைவுத் தன்மையனாகவும், பல்வகை நிலைமைகளில் அக விழைவுத் தன்மையனாகவும் நிற்கக் காண்கின்றோம். அன்றியும் புற விழைவுத் தன்மையருட் சிலர் சில்வகைப் புறப் பொருட்களை ஆராய விழைதலில்லை. எடுத்துக்காட்டாகக் கூறுமிடத்து, விலங்கினங்களை ஆராய விழைவார், மக்களுடைய உளப்பான்மை வகைகளை ஆராய விழைவதில்லை. மரஞ்செடி கொடியினங்களை ஆராய்வார் விலங்கினங்களையாதல் மக்களையாதல் ஆராய விழைவதில்லை. இன்னன நிலைமைகள் மேலும் பலவுள. ஆகலான் வரையறைப்படுத்தி மக்களை மூவகைத் தன்மை முறையின்பாற்படுத்தல் ஏற்புடைத்தன்று.

உளநூற்புலவர் சிலர் தன்மை வகைகள் இரண்டென்பர். அவை, சுழற்சித் தன்மை என்பதொன்றும், ஒழிவுத் தன்மை என்பதொன்றுமாம். சுழற்சித் தன்மை என்பது ஆங்கிலத்தில் ஸைக்ளாய்ட் பேர்ஸனாலிடி (Cycloid Personality) எனப்படும். ஒழிவுத்தன்மை என்பது ஆங்கிலத்தில் ஷிஸாய்ட் பேர்ஸனாலிடி (Schizoid Personality) எனப்படும். சுழற்சித் தன்மையன் நிலையுள்ள பண்பில்லாதவனாவன். ஒரு பகல் கழிவதற்குள் அவன் பல மனப்பான்மைகளுக்கு ஆளாவான்: சில நாழிகை இன்பப் பான்மையுடனிருப்பன்; சில நாழிகை துன்பப் பான்மையுட னிருப்பன்; சில நாழிகை விருப்புப் பான்மையுட னிருப்பன்; சில நாழிகை வெறுப்புப் பான்மையுட னிருப்பன்; சில பொழுது இன்சொல்லாடும் இன்முகப் பான்மையுட னிருப்பன்; சிலபொழுது கடுஞ்சொல்லாடுங் கடுமுகப் பான்மையுட னிருப்பன். மனப்பான்மைகள் மாறி மாறி, சுழன்று சுழன்று அவனது அகவொழுக்கத்துட் படுதலின் அவன் சுழற்சித் தன்மையன் எனப்படுவன். ஒழிவுத் தன்மையன் பிறரொடு புறவகையானும் அகவகையானும் கூடி பொழுகாது ஒழிவுற்ற தன்மையனாய் இருப்பன். மக்களுட் சிலர், தம் மனைவி மக்களுடனும் உரையாடார்; தம் இல்லம் நாடி வரும் விருந்தினரோடும் இன்முக மலர்ந்து இன்மொழி பகரார்; தம் உற்ற நண்பரொடும் உரிமைமொழி கூறார்; தம் அலுவற் கூடத்துள்ளாரொடும் உவகைமொழி உரையார்: இவர்தாம் ஒழிவுத் தன்மைய ராவார்.

ஒழிவுத் தன்மை என்னும் பெயரும், சுழற்சித் தன்மை என்னும் பெயரும் இருவகைப்பட்ட பைத்திய நோய்களின் (Two kinds of Insanity) பெயர்களிலிருந்து கொள்ளப்

பட்டனவாம். சுழற்சிப் பைத்தியம் கொண்டவனது மன நிலைமை ஒரு பகலுக்குள் பலப் பலவாக மாறும். அவன் சில பொழுது பெருஞ் சிரிப்புச்செய்து ஆரவாரிப்பான்; சில பொழுது கண்ணீர் உகுத்து அழுவான்; சிலபொழுது காதல் மொழி வரையின்றிக் கூறி மகிழ்வான்போல் தோன்றுவான்; சில பொழுது வருத்தந் தருஞ் செய்திகளையே கூறி உளந்துன் புறுவான்போல் தோன்றுவான். எனவே அவனது பைத்தியம் சுழற்சிப் பைத்தியம் எனப்படும். ஒழிவுப் பைத்தியம்கொண்டவன், பிறரொடு கூடாமல் தனி யிடத்திருந்து, மனித உணர்ச்சியின்றி, ஒருவகைப்பட்ட சோர்வுடன், சோம்பலில் மூழ்கியிருப்பன். இவனது உட்கரணங்கள் பிறரிடத்துத் தொழிற்படுதல் போலத் தொழிற்படா. இவன் உறங்குவான்போலும் மௌனி போலும் காணப்படுவான்.

சுழற்சிப் பைத்தியங் கொண்டவனது மன நிலைமை சுழன்று வருதல் போல, பண்புகள் மாறி மாறி வருதலின் சிலர் சுழற்சித்தன்மையர் எனப்படுவர். ஒழிவுப் பைத்தியங் கொண்டவனது மன நிலைமை உள்ளடங்கிச் சோர்வுற்று ஒழிந்திருத்தல்போல, பிறரொடுங் கலந்துறவாடாப் பண்பினையும் அது சார்ந்த ஒழிந்த உளப்பான்மையையு முடையார் ஒழிவுத் தன்மையர் எனப்படுவர். (தொடரும்.)

மதிப்புரை

"Right of Temple Entry"

"கோவில் நுழைவுரிமை" எனப் பெயரிய ஆங்கில நூல் ஒன்று நாகர்கோவில் வழக்கறிஞர், திரு. P. சிதம்பரம் பிள்ளை, (B.A., B.L., M. L. A.) அவர்களால் எழுதப் பெற்று வெளி வந்துளது. 'இந்துக்கள்' என்பார் யாவரும் 'இந்து'க் கோவில்களுட் பண்டைக் காலத்துச் சென்று வந்துளர் என்பதும், இனிச் செல்லவும் உரிமையுடையவர் என்பதும், செல்லவொட்டாது தடுப்பார் பக்கம் நடு நிலையின்றென்பதும் மறுக்கப்படா வகை தக்க சான்றுகளாலும், ஏதுக்களாலும் அந்நூலுள் யாப்புற நிலைநாட்டப்பட்டுள்ளன.

கோவில்கள் வருவாய்க் களமாகவே மன்னர்களாற் கருதப்பட்டும், ஆளப்பட்டும் வந்தமை விளக்கப்பட்டுளது. ஆங்கில வரசாங்கத்தாரும் அவைகளை யங்ஙனமே கருதி ஆண்டு வந்தமையும், கிறித்துவப் பாதிரிமார்கள் அதைக் கண்டு கிறித்துவ அரசாங்கம் ஏனைய கோவில்களைப் பாதுகாத்தல் ஏனைய மதங்களைப் பாதுகாத்தலாய் முடிந்து எங்கே தம் மதம் தளர்வுறுமோ என அஞ்சி இந்துக் கோவில்கள்பால் வைத்துள தொடர்பை, அவ்வரசாங்கத்தாரை நீக்குமாறு செய்யத் தூண்டினமையும், அதுபற்றி அத்தொடர்பை அவர் நீக்கினமையும், நன்கு காட்டப்பட்டுள்ளன. கோவில்களைப் பற்றிய உண்மைகள் பல, பிள்ளையவர்கள் நூலிற்காணலாம். அவ்வுண்மைகளை பிள்ளையவர்கள் காட்டியிராவிடில் இன்னும் மிவ்வுலகம் அறிந்திராது என்பது திண்ணம். கோவில் பற்றிய சட்டம் இப்போதடைந்துள நிலைமைக்குக் காரணம் யாதெனவும், காரணர் யாரெனவும் இந்நூலைப் படிப்போர் அறியலாம். கோவில்பற்றிய விதிகள் வகுத்துச் சட்டம் செய்வதற்கு, மன்னர்க்கு உரிமை எக்காலம் இருந்து வந்துளதென்பதும், ஆங்கில மன்னர்க்கு இன்னும் அவ்வுரிமை யுளதென்பதும் அவ்வுரிமை யில்லையென்பார் கூற்று வெற்றுரையென்பதும் காட்டப்பட்டுள்ளன.

ஆற்றொழுக்கன்ன அழகொழுகு மாங்கில நடையடையப் பெற்றும்கோவில்களின் வரலாற்றுண்மைகள் விரவப்பெற்று நுண்ணறிவுச் சுடர்கள் மின்னப்பெற்றும், சுவைதருசெய்திகள் பொதியப் பெற்றும், அயலார்போலயரும் கோவிலுள் விடப்பெரு மக்கள்பால் அயரா அன்பே யொழுகப்பெற்று இந்நூல் எழுதப் பெற்றுளதால், இந்நூலைப் படிகக் கையிலெடுப்போர் அதனைப் படித்து முடித்தாலன்றிக் கைநெகிழ விடார். இந்நூல் சுவை மிக்க காப்பியம்போல் படிப்போர்க்கினிமை பயக்கின்றது. திரு. பிள்ளையவர்கள் இந்நூலை வெளியிட்டு உலகிற்கோரும் பணி செய்துளார்கள். இந்நூல் தமிழ் மொழிபெயர்க்கப்படின், பெருநலம் விளையும் என்பது திண்ணம். இதன் விலை ரூபாஒன்று. வேண்வோர் கீழ்க்குறித்த இடங்களிற் பெறலாம்.கிரிப்பன் கம்பெனி, தினவனந்தபுரம். P. சுப்பிரமணிய பிள்ளையவர்கள் பி.ஏ., பி.எல்., டிஸ்டிரிக்ட்டு கோர்ட்டு வைக்கில், நாகர் கோவில்; மானேஜர், ‘ தமிழன் ’ ஆபீஸ், கேப் ரோடு, நாகர்கோவில்.

வரலாற்றுப் பகுதி : History & Biography

பண்டைக்கால மேல்நாட்டு ஒளிநூற் புலவர்கள்

(கங-கூ-ஆம் பக்கத் தொடர்ச்சி)

[திரு. இ. மு. சுப்பிரமணிய பிள்ளையவர்கள்]

ஜான் டீ (John Dee)

அக்காலத்தி லிருந்த மற்றொரு ஆங்கிலப் பெரும் புலவர் ஜான் டீ என்பவர். அவர் கி. பி. 3-7-1527ல் இலண்டன்மா நகரத்தில் பிறந்தார். அவருக்கு மட்டில்லாத நினைவாற்றல் இருந்தது. ஒரு நாளைக்குப் பதினாறு முதல் பதினெட்டு மணி நேரம் வரை அவர் படித்து வந்தார். கேம்பிரிட்சு நகரத்தி லிருந்த செயின்ட் சான் கல்லூரியில் தமது பதினைந்தாவது ஆண்டிற் சேர்ந்த அவ்வறிஞர் பத்தொன்பதாவது ஆண்டில் ஒப்பற்ற கலைஞரானார். அவருடன் பயின்ற அறிவற்ற மக்கள் சிலர் அவருடைய முன்னேற்றத்திற்குத் தடையா யிருந்தனர். அவரைப் பலர் மாய வித்தையாளி என ஐயுற்றபடியால் டீ நாட்டை விட் டகன்று உலூவைன் (Louvain) நகரத்திற் சென்று வாழ்ந்துவந்தார். ஆனால் சிறிது காலத்தில் அவர்இங்கிலாந்து மன்னராகிய ஆறுவது எட்வர்ட் (Edward VI). மன்னரது உதவியைப் பெற்று அரண்மனை ஒளிநூற்புலவராயினார்.

குழப்பம் மிக்க அந்நாளையில் அரசியல் நிலைமையும், ஒளிநூற்புலவர் நிலைமையும் ஒழுங்கு பெறாமல் துன்பத்திற்கு இடமாகவே இருந்தன. ஏனெனில் அடுத்து அரசியலைக் கைக்கொள்வோர் யாவரென்பது உறுதியாயில்லை. மேரி அரசியார் எப்போது இறப்பாரென எலிஸபெத் அம்மையார் அடிக்கடி டீயிடம் கேட்டு வந்தார். அதன் பயனாக ஜான் டீ அரசியாரது உயிருக்கு மாயா வித்தையால் உலை வைக்க முயன்றதாகக் குற்றஞ் சாட்டப்பட்டார். "அவர் ஒரு பெரிய மாயாவி என்றும், பேய்களைக் கொண்டு பல தீமைகளை விளைப்பவர் என்றும், அதனால் அந்நாடு முழுமைக்கும் அவர் மாயாவிகளின் தலைவரா யிருந்தா ரென்றும் அவர் மேல் குற்றஞ் சாட்டப்பட்டது." ஆனால் அவர் கடைசியாக அரசியைக் கொல்ல முயலவில்லையென விடுவிக்கப் பெற்றார்; மேலும், இலண்டன் நகரச் சமயாசிரியராகவிருந்த போனர் (Bonner) என்பவரின்முன் 'சமயப் பகைவன்' என எழுந்த குற்றத்தி லிருந்தும் அவர் ஒருவாறு மறுமொழி கூறித் தப்பிக்கொண்டார்.

எலிஸபெத் அம்மையார் அரசாட்சியேற்றவுடனே டீக்கு நல்ல காலம் வந்தது. அரசியார் தமது முடிசூட்டு விழா நாளைக் குறித்துத் தரும்படி அவரை வேண்டிக்கொண்டார். மற்றும் ஒருசமயம் அவர் நோய்வாய்ப்பட் டிருந்தகாலை மார்ட்லேக் ஊரிலுள்ள அவருடைய வீட்டுக்குச் சென்று அவரைப் பார்த்து வந்தார் அரசியார். எலிஸபெத் தமது வாழ் நாள் முழுவதும் அவருடன் நட்புப் பாராட்டி அவருக்கு அடிக்கடி பொருளுதவியும் செய்து வந்தார். தீயோனும், மூடனுமாகிய மருத்துவர் எட்வர்ட் கெல்லி என்பவனோடு கூட்டுறவு கொண் டிராமல் அரசியாரது நட்பையே விடாமல் பற்றி யிருந்தா ராயின் அவர் பிற்காலம் செம்மையாக இருந்திருக்கும்.

எட்வர்ட் கெல்லிக்குச் சட்ட அறிவு சிறிதிருந்தது. அவன் தன்னை ஒரு பெரிய இரசவாதி யென்றும், மறை பொருள் உணர்ச்சி யுடையவ னெனவும் கூறிக்கொண்டான். பிறரைத் தம் வசப்படுத்தும் ஆற்றலைப் பெற வேண்டுமென மிக விருப்ப முடையவரா யிருந்தார் ஜான் டீ. கெல்லி அவருக்கு அவ்வாற்றலைப் பெறும் வழியைக் காட்டுவதாகக் கூறி அவரை ஏமாற்றித் தன் வழிப்படுத்திக்கொண்டான். அவர்களிருவரும் ஒன்று கூடி ஐரோப்பாக் கண்ட முழுவதிலும் சுற்றி வந்தனர். அன்னார் அங்கங்கே பல செல்வரை ஏமாற்றிப் பொருள் பெற்றார்கள்; அதனால் அரசியல் வீரர்பால் அகப்பட நேர்ந்து தப்பிக்கொண்டனர். கெல்லியிடம் மிகவும் மயங்கிக் கிடந்தார் டீ. ஆனால் தம் மனைவிமாரை இருவரும் பொதுவாக வைத்துக்கொள்ள வேண்டுமெனக் கெல்லி கூறியபோதுதான் டீ அம்மயக்கத்திலிருந்து விழித்துக்கொண்டார்.

டீ வறுமையாளராகவே இங்கிலாந்திற்குத் திரும்பி வந்தார். ஆனால் அவருக்குத் தமது பழைய நட்பாளராகிய எலிசபெத் அரசியாருடைய துணை கிடைத்தது. அதன் பயனாக அவர் 1595-ல் மான்செஸ்டர் நகரக் கல்லூரியில் மாணவர் பாதுகாவலராக அமர்ந்தார். அரசியார் இறந்தபின் அவர் வறுமையுற்று 1608-ல் மார்டலேக் நகரத்தின்கண் தமது எண் பத்தோராவது வயதில் இறந்தார்.

3. வில்லியம் லில்லி (William Lilly)

ஒப்புயர்வற்ற பெரும் புகழ் பெற்ற மற்றோர் ஆங்கில ஒளிநூற்புலவர் வில்லியம் லில்லி என்பவர். அவர் டேர்பி நகரின் அருகே கி. பி. 1602-ல் பிறந்தார். ஆசுபிடிலா சேளச் என்ற ஊரிலுள்ள பள்ளிக்கூடத்தில் அவர் தமது பதினோரா வது ஆண்டில் சேர்ந்தார். அவர் அங்கே சிறந்த கல்வியைப்

அடையலாமென எதிர்பார்க்கப் பெற்றது. ஆனால் அவரது பதினெட்டாவது வயதில் அப்பள்ளிக்கூடம் உலைந்து போயிற்று; ஏனெனில் அப்பள்ளியாசிரியர் சமய நம்பிக்கைக் குறைவுக்காகக் குற்றமேற்றப்பட்டுச் சிறையிலடைக்கப்பட்டார். அவ்வேளை அவருடைய தந்தையார் கடனிறுக்க மாட்டாமல் சிறையிலிருந்தார். லில்லி அப்பள்ளியைத் தாமே நடாத்த முயன்றார். அவருடைய முயற்சி பயன் பெறாது போகவே பிழைக்க வழி தேடி அவர் இலண்டன்மா நகரைச் சேர்ந்தார். அங்கே அவர் ஒரு சிறுவேலையி லமர்ந்தார். ஆனால் அவர் தமது தலைவரின் அன்பைப் பெற்றார். தலைவரின் மனைவி லில்லிக்குச் சிறிது பொருளுதவி செய்து இறந்தார். அதன்பின் தலைவர் மறுமணம் செய்துகொண்டார். அவர் லில்லிக்கு ஆண்டொன்றுக்கு இருபதுபவுன் உதவிச்சம்பளம் அமைத்து விட்டு இறந்துபோனார். அப்போது லில்லிக்கு வயது இருபத்தைந்து தான். அவர் கூரிய அறிவுடையவர். அவர் உடனே தமது தலைவரின் மனைவியைத் தாமே மணந்து கொண்டு அதனால் சிறிது செல்வமும் பெற்றார். லில்லி மூன்றுமுறை மணஞ் செய்துகொண்டார். ஒவ்வொரு மனைவியும் அவருடைய செல்வ வளர்ச்சிக்குத் துணை புரிந்தனர். மூத்தவளும் இளையவளும் அவருக்கு மனம்போல நடந்து மகிழ்ச்சியை ஊட்டினார்கள். நடுவணவள் அவருக்குத் துன்பமே தந்தாள். அதனால் அவளை அவர் கோள்களில் செவ்வாய் போல்பவள் என விவரிக்கிறார்.

தமது முப்பதாவது ஆண்டிலேயே அவர் ஒளிநூற்கலையைக் கற்கத் தொடங்கி நாடோறும் பன்னிரண்டு முதல் பதினெட்டு மணி நேரம் வரை படித்து வந்தார். அப்புலவர் பின்னர் தமது ஆயுள் முழுமையும் அக்கலையைப் பயின்று பல நூல்களை எழுதியதோடு பல தாள்களும் வெளியிட்டார். அவைகளில் அவர் பின்னால் நடக்கப்போகும் பெரு நிகழ்ச்சிகளையும் முன்னரே எழுதினார். உலகநிகழ்ச்சிகளையும், காலத்தையும் ஆராய்வதில் அவர் மிகவும் ஈடுபட்டிருந்தார்.

அரசியல் நிகழ்ச்சிகளை வெளியிடுவோருக்கு அடிக்கடி துன்பமுண்டாவது இயல்பே. "விண்மீன் தூதன்" (Starry Messenger) என்ற தமது தாளில் வெளியிட்ட சில செய்திகளுக்காக அவர் இரண்டு முறை பாராளுமன்ற ஆராய்ச்சிக் குழுவினர்முன் செல்ல வேண்டி நேர்ந்தது. அவர் இங்கிலாந்தில் நடைபெற்ற பெருங் கொள்ளைக் காய்ச்சலையும் (The Great Plague), இலண்டனில் கிளம்பிய பெருந் தீயையும் பற்றி முன்னரே அறிவித்தார். பெருந் தீயின்பின் அதன் காரணத்தை அறிந்துகூறும்படி அவர் பாராளுமன்ற ஆராய்ச்

சிக் குழுவினரால் வேண்டிக்கொள்ளப்பெற்ருர். ஆனல் அஃது அவரால் முடியவில்லை. வில்லியம் லில்லி இரண்டு முறை முதலாவது சார்ல்ஸ் வேந்தருக்கு நல்லறிவு புகட்டியதாகத் தெரிகிறது; ஆனல் மன்னர் அவரது அறிவுரையைக் கேட்டு நடக்கவில்லை; அதனல் அரசர் தலைமையை யிழந்ததோடு தலையையுமிழந்தார்.

லில்லி தளரா ஊக்கமுடையவர். அவர் தமது கிழப் பருவத்தில் மருந்துக் கலையைக் கற்று வல்லராகி 1670-ல் மருத்துவராயினர். அவருக்கு அப்போது அறுபத்தெட்டு வயது. மருந்துச் செலவை மட்டும் அவர் பெற்று வந்ததால் அவரை யாவரும் போற்றிப் புகழ்ந்தனர். ஆனல் சில ஆண்டுகளில் அவருக்கு உடல் வலி குன்றிப் பார்வையும் குறைந்தது. இருந்தாலும் அவர் ஒளிநூலாராய்ச்சியை விடாது கைப் பற்றியேயிருந்தார். கி. பி. 1681-ல் தமது எழுபத்தொன்பதாவது வயதில் அவர் இறந்தனர். அவருடைய கல்லறையை தேம்ஸ் ஆற்றங்கரையிலுள்ள வரல்டன் நகரில் இன்றும் காணலாம்.

நாசுத்திர டாமசு தமது நூல்களொன்றில் முகவுரையாக "பின்வரும் நிகழ்ச்சிகளை முன்னரே அறிந்து கூறுவதற்கு கணக்குமட்டும் போதாது. அதற்கு மக்கள் இயற்கைக்கு அப்பாற்பட்டதொரு உணர்ச்சி ஒருவரிடம் இயல்பாகவே அமைந்திருத்தல் வேண்டும். அத்தன்மையை இறைவர் ஒரு சிலருக்கே அருள்கின்ருர்." என எழுதியிருக்கின்ருர். தம்மிடம் சில குறைகளிருப்பதை யுணர்ந்து அத்தகைய உணர்ச்சியை அடைவதற்கு ஜான் டீ மிகவும் முயன்ருர். நாழிகையால் பின்வரும் நிகழ்ச்சிகளை அறிந்து கூறும் கலையை (ஆரூடம்) லில்லிஎன்ற புலவர் கையாண்டுவந்தார்; அதனை இக்காலத்தில் பயில்வார் அருகிவிட்டனர். பண்டைக்காலப் புலவனைப்போலப் பின்னல் நிகழவிருக்கும் செய்திகளை முன்னரே உறுதியாக அறிந்துரைக்கும் ஒளிநூற் புலவரும் இந்நாளில் ஒரு சிலரே இருக்கின்றனர்.

குறிப்பு:—தியாசபிஸ்ட் (Theosophist) என்ற தாளில் 1930 சூன் திங்கள் இதழில் "பண்டைக்கால நடுக்கால ஒளிநூற் புலவர்" என்ற தலைப்பின் கீழ் இங்கிலாந்து சசெக்ஸ் மாகாணத்தின் ஒர்திங் நகரத்திய திருவாளர் ஈ. சூலியன் மில்ஸ் (E. Julian Mills) என்ற அறிஞர் எழுதிய உரையின் மொழிபெயர்ப்புக் கட்டுரை.

இலத்தின் ஐக்கிய நகரங்கள்

[பருத்தித்துறை திரு. த. இராமநாத பிள்ளை, B.A., (Lon.)]

(கருஎ-ம் பக்கத் தொடர்ச்சி)

(Consuls) கூட்டுத் தலைவரது ஆட்சி இருவேந்தர் மனமொத்து ஒரு நாட்டை ஆளுதலொடு ஒக்கும். கூட்டுத்தலைவர் இருவரும் ஒப்பான உரிமைகளை உடையராக, ஒருவரது அதிகாரத்தை ஒருவர் அடக்கும் ஆற்றல் உடையராய் அதிகாரத்தால் ஏனைய தலைவருள் ஒப்பாரும் மிக்காருமின்றி அரசியலை நடாத்தினர். கூட்டுத் தலைவரே போர்க் காலத்தில் படைத் தலைமை வகித்தும் முறை குறைவேண்டும் குடிகளுக்கு நீதி செலுத்தியும் ஆண்டார்கள். பகைவர் மிகும் காலத்திலும் பகைவர் வலிமிகும் காலத்திலும் உரோமர் தனித் தலைவர் ஒருவரை நியமித்தல் வழக்கம். தனித் தலைவனை முடிசூடாத மன்னன் எனச் செப்பலாம். தனித் தலைவனுக்கு எல்லா உரிமைகளும் ஆற்றல்களும் உண்டு. தனித் தலைவன் தான் நினைந்தவாறு ஆட்சி செய்யலாம். என்னை? தனித் தலைவனைத் தண்டித்தற்கு ஒருவருக்கும் உரிமையில்லை. தனித் தலைவனாகத் தெரியப்பட்டோன் செருநரைப் புடைத்துக் குடியோம்பிய பின் தலைமையைத் துறந்து அரசியலை சனங்களிடம் ஒப்புவிப்பான். கி. மு 501-ம் ஆண்டில் இலத்தின் நகரங்கள் இகலாகு மென நினைத்து உரோமர் தனித்தலைவனை நியமித்தார்கள். சிலர் முதன் முதல் தனித் தலைவனாக்கப்பட்டவன் மான்லியஸ் வலேறியஸ் என்றும் சிலர் ரையிற்றஸ் லாட்டியஸ் என்றும் கூறுகின்றனர். கி. மு. 496- ல் தனித்தலைவன் அவுலஸ் பொஸ்தூமியஸ் இலத்தினரை வென்றனன். அப்போரில் கஸ்ரர் போலக்ச் என்னும் இரட்டைத்தேவர்கள் உரோமருக்கு உதவி புரிந்தனர் எனவும் அறிகிறோம். கி. மு. 493 தொடங்கி கி. மு. 328-ம் வருடமளவும் இலத்தின் நகரங்கள் ஒரு ஐக்கியக் கூட்டமாக தமது நாட்டைக் காத்தும் பகைவரை எதிர்த்தும் ஒற்றுமையாக இருந்தன. இலத்தினர் கூட்டத்தில் 30 நகரங்கள் சேர்ந்தன. பொதுக்காவலுக்காக ஒவ்வொரு நகரமும் தத்தம் ஆற்றலுக்கேற்பப் படையும் பொருளும் அளித்தல் தமது கடமையாகக் கொண்டன. பெரும்பாலும் அப்பொதுப்படைக்கு உரோமரே தலைவராகத் தெரியப்பட்டனர். உதவித் தலைவர்களும் கீழ்த்தலைவர்களும் இலத்தினர்களே. கேணிக்கியருக்கும் இலத்தினருக்கும் ஆக்குவியருக்கும் வல்ஸ்கியர் பொதுப் பகைவராகையால், கேணிக்கியர் இலத்தின் கூட்டத்தாரோடு நட்பானுர். கேணிக்கியர் எற்றூறியரோடும் பகைத்தமையால் இலத்தின் கூட்டத்தில் சேர்ந்தார்கள்.

கோறியலானஸ்

கி. மு. 428-ம் ஆண்டு வல்ஸ்கியருடைய நகராகிய பிடேனுபி நகரை இலத்தினர் நாசமாக்கின ராகலின், வல்ஸ்கியரோடு உரோமர் இகலாகினர். உரோமர் தலைவன் காமக்கியஸ் வல்ஸ்கியர் தலைவன் ஒளபிடியனை நெருக்கித் தலைநகரின் காவன் மதிலேறிக் கடும்போர் செய்து பகைவரால் சூழப்பட்டுத் தனியே பகைவரோடு பொருது நின்றான். அவ்வயின் எருமை மறம் செய்து கொறியோலி என்னும் வல்ஸ்கியர் தலைநகரைக் கைப்பற்றினமையால் உரோமர் மாக்கியனுக்குக் கொறியலானஸ் என்னும் பட்டத்தை அளித்தார்கள். கொறியலானஸ் மேன் மகனாகையால் பொதுச் சனங்களின் நன்மையை ஒருபோதும் கருதாதவ னாகிக் கீழ்மக்களால் வெறுக்கப்பட்டான். அக்காலத்தில் கீழ்மக்கள் மேன்மக்களோடு கலகப்பட்டுக் கொறியலானஸ் வீரனை நகரினின்றும் அகற்றினார்கள். கொறியலானஸ் தனது எதிரியைச் சந்தித்து நட்பு கூர்ந்து சேனாதிபதி யாக்கப்பட்டு பதினொரு இலத்தின் நகரங்களைக் கைப் பற்றியபின் உரோமபுரத்து வாயிலில் பாசறை அமைத்தான். அப்போது உரோமர் கலங்கி அவனது சிநேகிதர் மூலமாக அவன் சினத்தைத் தணிக்க முயன்றனர். கொறியலானஸ் மூர்க்கனாகையால் கொண்டது விடாது அவண் வயின் நின்றான். மேன் மக்கட்சபையார் அவனது தாயையும் மனைவியையும் சமாதானம் இரந்து வரும்படி அனுப்ப, தாய் முழந்தாளிட்டு இரந்தும் மறுத்தானாக, தாயானவள் "நீ என் மகனல்லன்! உன் தாய் ஒரு வல்ஸ்கியப் பெண்" என வசை மொழிந்தாள். அவ்வசை கேட்ட கொறியலானஸ் உள்ள முருகி உரோமரோடு உடன்படிக்கை எழுதினான். வல்ஸ்கியர் உடனே கொறியலானஸைக் கொன்றார்கள் என ஒரு கதையுண்டு.

459-ஆம் ஆண்டில் மினுசியஸ் என்னும் உரோமர் படைத் தலைவன் ஆக்குவியரோடு பொருது தோற்றனன். அப்போது சனங்கள் சின்சினாட்டஸ் வீரனைத் தோட்டத்திலிருந்து அழைத்து, தனித் தலைவ னாக்கினார்கள்; அவன் நகர வாசிகளை எல்லா முயற்சிகளையும் விட்டுப் போருக்கு ஆயத்தம் செய்யும்படி ஆஞ்ஞாபித்து ஒரு படை சேர்த்து ஆக்குவிய நாடு புக்கு அந்நாட்டை யடக்கிய பின் தனித் தலைமையை ஒப்புவித்துத் தன் கமத்துக்குத் திரும்பினான் எனவும் ஒரு கதை யுண்டு. இக்கட்டுரைகளின் உண்மை ஆராயற்பாலன.

இனி கி. மு. 477-ல் எற்றாறியர் உரோமரோடு போர் செய்தனர். பேவியர் என்னும் குழுவினர் பெருமிதங்கொண்டு தாமே அப்போர்முழுவதையும் நடத்தச்சென்று கிறமோனக்

களத்தில் 300 மக்களும் மாண்டனர் என்றும் அவற்றுள் ஒருவன் தப்பியோடி அக்குடும்பத்தை அழியாமற் காத்தனன் என்றும் கட்டுரையுண்டு.

கி. மு. 405-ல் உரோமர் வியை நகரத்தாரோடு பகையாகிப் பத்து வருடமாகப் போர் செய்தனர். எட்டாமாண்டு உரோமர் தலைவன் கமிலஸ் நகரைச் சூழ்ந்து நிற்கையில் உரோமன் ஒருவன், "அல்பன் வாவியின் நீரைக் கடலுக்குப் பாய்ச்சினலொழிய, வியா நகரத்தை உரோமரால் அழிக்க முடியா" தென்னும் விதி வாக்கியத்தைக் கேட்டுச் சொன்னான். கமிலஸ் அங்ஙனம் செய்து பத்தாமாண்டு ஒரு நிலச் சுரங்க மறுத்துச் சென்று வீயை நகரைக் கைப்பற்றினன். நகரில் கிடைக்கும் சூறையில் பத்திலொரு பங்கு தெய்வங்களுக்கென நேர்ந்தான். அப்பகுதியைப்படைவீரர் கவர்ந்தமையால், கமிலஸ் கோபித்து உரோமபுரத்தைத் துறந்து பிற நாட்டில் வசித்தான். பின்பு கல்லியர் எற்றாறியரைத் தாக்க பேவியர் என்னும் உரோம தூதர் இருவர் நா வீரம் பேசி வாளுருவினர். கல்லியர் உரோம தூதர் இங்ஙனம் ஒழுகினர்களென மேன்மக்கட் சபைக்கு முறையிட்டனர். சபை அவர்களைக் கண்டியாது விட்டமையால், கல்லியர் உரோமாபுரத்தை முற்றுகை யிட்டனர் உரோம குடிகள் வியை நகரில் போய் ஒதுங்கிக் கமிலஸை அழைத்து உரோம நகரத்துக்கு மீண்டு கல்லியரைத் துரத்தினர்.

இக்கதைகள் யாவும் பொய்யே. வல்ஸ்கியர் உரோமரைத் தோற்கடித்தமையால் அவ்வெற்றியைப் பகைவர் உரோமர் தலைவன் சாமாக்கியனது வலிமையால்பெற்றனர் எனக் காட்டி வல்ஸ்கியரின் புகழைக் குறைத்தனர்போலும். சின்சினட்டஸ் ஒரு நாளையில் ஆக்குவிய நாடடைந்து அவரை அடக்குதல் நம்பத் தக்கதல்ல. அல்பன் வாய்க்காலை உரோமர் அக்காலத்தில் திருத்தி அகழ்ந்தனர் என்பது கமிலஸ் தலைவனின் கதையால் விளங்குகின்றது. கல்லியர் உரோமரைத் தோற்கடித்த இழிவைக் கரத்தற் பொருட்டு கமிலஸ் நாடு துறந்த கதையைக் கட்டினர் என்பது பொருத்தமாகும். இலிவியஸ் என்னும் உரோம வரலாற்றாசிரியன் உரோமனுகையால் உரோமர் தலைவர்களை அளவு கடந்து புகழ்ந்தனன். அங்ஙனம் இலிவியஸ் பல உரோமத் தலைவர்களைப் புகழ்தலை யாம் வாசிக்கலாம். வேந்தர் காலத்து நடந்த உற்பாதங்களும், அதிசயங்களும் பொய்க் கதைகள் என்பது கூறுமலே அமையும். ஆதி காலத்தில் உரோமரை எற்றாறியர் வென்று ஆண்டனர் எனக் கருதுதற்கு இடமுண்டு. கல்லியர் வரவுக்கு முன் எழுதப்பட்ட வர

லாறுகள் உரோமபுரத்தைக் கல்லியர் தாக்கின காலத்தில் அழி வெய்தியமையால் கி. மு. 390-ஆம் ஆண்டு முன் நிகழ்ந்த செய்திகள் எல்லாம் பழங்கதையொழிய உண்மைகளல்ல.


கல்லியர் வரவும் இலத்தின் உட்பகையும்

கி. மு. 390-ஆம் ஆண்டு செனேனியர் என்னும் ஒரு கல்லிய சாதியார் போ நதியைக் கடந்து இத்தாலியாவினுட் புகுந்து உரோமாபுரத்தைத் தாக்கினர். இக்கல்லியர் வரவுடன் உரோமரது சரித்திரகாலம் தொடங்குமென வரலாற்றுசிரியர் யாவரும் கூறுகின்றனர். ஆலியா வென்னும் சிற்றாற்றுக் கரையில் கல்லியர் உரோமர் படையை அடியோடே அழித்து உரோமாபுரத்தைச் சூழ்ந்தனர். புற நகரில் வாழ்ந்த உரோமர் எற்றுறியா நாட்டிற்கு ஓடித் தப்பினர். உரோமருடைய வயல்கள், வீடுகள் எல்லாவற்றையும் கல்லியர் பாழாக்கினராகையால் உரோமரென்னும் பெயரே அழிவெய்தும்போலக் கிடந்தது. பெண்கள், குழந்தைகள், வயோதிகர் முதலியோரை ஏமவரணுகிய உள்ளரணில் வைத்து வீரர்கள் மதிலைக் காத்தனர். கல்லியர் புற நகரத்துட் புகுந்து ஒருவரையும் காணுமல் சினந்து ஆங்கிருந்த சில வயோதிக மேன்மக்களைத் தாடியாற் பற்றிக் கொன்றனர் என ஒரு கதை உண்டு. கல்லியர் சீர் திருந்தாத மூர்க்கர் என்பதை இக்கதை வலியுறுத்துகின்றது. இனி வீரனொருவனுல் தெய்விகமாக உள்ளரண் காப்பாற்றப்பட்டது என்பதை வேறோர் கதை உணர்த்துகிறது. அரண் காவலர் உறங்கும் நேரம் பார்த்துக் கல்லியர் குன்றின்மிசை ஏறினாராகக் குன்றின்கண் உறைந்த சில தாராக் கோழிகள் கொக்கரித்தமையால், மான்லியஸ் என்னும் வீரன் துயில் எழுந்து கல்லியன் ஒருவனைத் தன் பரிசத்தால் இடித்து விழுத்த, தனி வரிசையாக ஏறினராகலின் கல்லியர் யாவரும் ஒருவர் மேல் ஒருவர் விழுந்து இறந்தனர். (தொடரும்)

கல்விச் சிறப்பு

“பொருள் தொகுக்கும் முயற்சியின் திறமெல்லாம் அறிவின் திறத்தைப் பொருத்திருத்தலானும், அறிவின் திறமெல்லாம் கற்கும் கல்வியின் திறனைப் பொருத்திருத்தலானும் கல்விப்பொருளைச் சாந்துணையும் இடையறாது தொகுத்துவரல் வேண்டும்.”

மறைமலையடிகள்.



[MR. T. B. KRISHNASWAMY MUDALIAR, M. A., B. L.]

மதுரைக் கண்ணங்கூத்தனார் இயற்றிய

கார் நாற்பது

(௩௯-ம் பக்கத் தொடர்ச்சி.)

பொறிமாண் புனைதிண்டேர் போந்த வழியே
சிறுமுல்லைப் போதெல்லாஞ் செவ்வி—நறுநுதற்
செல்வ மழைத்தடங்கட் சின்மொழிப் பேதைவாய்
முள்ளெயி றேய்ப்ப வடிந்து. ௨௧

All along the line of the machine-driven and much adorned chariot, the tender buds of the *Mullai* shone like the sharp teeth of an innocent maiden of beautiful forehead, broad eyes, cool as plentiful rain and soft words. (21)

இளையரு மீர்ங்கட் டயர வுளையணிந்து
புல்லுண் கலிமாவும் பூட்டிய—நல்லார்
இளநலம் போலக் கவினி வளமுடையார்
ஆக்கம்போற் பூத்தன காடு. ௨௨

As the young soldiers changed into their winter clothes and the grass-fed horses adorned with head-gear were yoked to the chariot, the forests burst into bloom like the loveliness of young women and shone like the prosperity of the fortunate. (22)

(தோழி தலைமகட்குப் பருவங்காட்டி வற்புறுத்தது)

கண்டிரண் முத்தங் கடுப்பப் புறவெல்லாந்
தண்டுளி யாலி புரளப் புயல்கான்று
கொண்டெழில் வானமுங் கொண்டன் றெவன்கொலோ
ஒண்டொடி யூடு நிலை. ௨௩

THE MAID SPEAKS TO THE MISTRESS

Oh thou with the radiant bangles! all over the forest like large pearls; the cool drops of rain fall; the hail-stones roll; and the wind driving the clouds fills the whole beautiful sky. Wherefore should you pine? (23)

(வினைமுற்றிய தலைமகன் நெஞ்சோடு சொல்லியது)

எல்லா வினையுங் கிடப்ப வெழுநெஞ்சே
கல்லோங்கு கானங் களிற்றின் மதநாறும்
பல்லிருங் கூந்தல் பணிநோனாள் கார்வானம்
மெல்லவுந் தோன்றும் பெயர். உச

THE MAN SPEAKS TO HIMSELF

Let all labour cease, O Heart. Where the lofty ranges rise, the forest is fragrant with the out-flowing juice of the elephant: even at night rain-clouds appear and she of the dark-locks tied up variously will bear my absence no longer. (24)

(பருவங்கண்டழிந்த தலைமகள் ஆற்றல் வேண்டித்
தோழி தனது ஆற்றுமை தோன்ற வுரைத்தது)

கருங்கால் வரகின் பொரிப்போ லரும்பவிழ்ந்
திர்ந்தண் புறவிற் றெறுழ்வீ மலர்ந்தன
சேர்ந்தன செய்குறி வாரா ரவரென்று
கூர்ந்த பசலை யவட்கு. உரு

THE MAID ABOUT HER MISTRESS

In the cool forest the *therulvi* has burst its buds and blossomed like the dark-stalked fried rye. All the signs indicated of her Lord's coming are seen now and hence from fear the increase of her love-longing. (25)

(தோழி தலைமகட்குப் பருவங்காட்டி வற்புறுத்தது)

நலமிகு கார்த்திகை நாட்டவ ரிட்ட
தலைநாள் விளக்கிற் றகையுடைய வாகிப்
புலமெலாம் பூத்தன தோன்றி சிலமொழி
தூதொடு வந்த மழை. உசு

O soft-spoken maid! Like the lamps lit by the villagers on Karthigai day in Karthigai month (November—December), all the fields are full of Kandal Flowers (Gloriosa Superba). The rains have come as heralds (of thy Lord's approach). (26)

(ஊடுதலாற் பசலைமிகும் எனத் தோழி தலைமகட்குக் கூறி வற்புறுத்தது)

முருகியம்போல் வான முழங்கி யிரங்கக்
குருகிலை பூத்தன கானம்—பிரிவெண்ணி
உள்ளா தகன்றாரென் றாடியாம் பாராட்டப்
பள்ளியுட் பாயும் பசப்பு. ௨௭

Clouds roar like Muruga's war-drums; the forests are full of the fiowers of the *Kurugu*. Thinking her Lord went away heedless of her, we comfort her and her love-longing only increases. (27)

(வினைமுற்றிய தலைமகன் நெஞ்சோடு சொல்லியது)

இமிழிசை வானம் முழங்கக் குமிழின்பூப்
பொன்செய் குழையிற் றுணர்தூங்கத் தண்பதஞ்
செவ்வி யுடைய சுரநெஞ்சே காதலியூர்
கவ்வை யழுங்கச் செலற்கு. ௨௮

THE MAN SPEAKS TO HIMSELF

The sounding heavens roar; and the flowers of the *chimil* like golden ear-ornaments hang in bunches. O heart; the roads are good now to go to my beloved's town and end her sorrows. (28)

பொங்கரு ஞாங்கர் மலர்ந்தன தங்காத்
தகைவண்டு பாண்முரலுங் கானம்—பகைகொண்ட
லெவ்வெத் திசைகளும் வந்தன்று சேறுநாஞ்
செவ்வி யுடைய சுரம். ௨௯

All along the forest, the boughs are blossom-laden and the bees are resonant with music. All directions held the inimical sun, are now held by the friendly clouds. Therefore O heart, let us forth on our way! (29)

வரைமல்க வானஞ் சிறப்ப வுறைபோழ்ந்
திருநிலந் தீம்பெய றாழ—விரைநாற
வூதை யுளரு நறுந்தண்கா பேதை
பெருமட நம்மாட் டுரைத்து. ௩௰

Rich growth on the mountain, proud glory in the sky, with sweet rain falling and soaking into the earth! Sweet fragrance is pervading all around! The wind tells me of the extreme youth of my lady and fills the cool grove with its gentle motion. (30)

மகளிர் பகுதி

கியூரி அம்மையார்*

(கதிரி கண்ட மதிமிகு மங்கை)

[திரு. கு. ஞானசம்பந்தம்]

(கஅ-ஆம் பக்கத் தொடர்ச்சி)

மீண்டும் 1911-ஆம் ஆண்டிலும் அவர் ரேடியோ என்னும் கதிரியைக் (கனிக்) கூட்டுப் (Metals) பொருளினின்றும் பிரித்தெடுத்ததற்காகவும் அவரது பொலோனியம் (Poloniuum) என்னும் கதிரி ஆராய்ச்சிக்காகவும் அவ்வம்மையாருக்குச் நோபல் பரிசு (Nobel Prize) வழங்கப்பட்டது.

அம்மையார் தமது அருஞ்செயலிற் பெரும் புகழும் வெற்றியும் பெற்றிருந்தமையின், அன்னார் தம் பிற்கால வாழ்விலும் கதிரி இயக்கத்தைத் (Radio Activity) தொடர்ந்து நடாத்தச் செல்வர் பலர் இவர்க்கு நன்கொடை (Endowment) வழங்கினர். அப்பெருந் தொகையைக் கொண்டு அம்மையார் பாரிஸ் அணிநகரினில் கதிரிக் (இயக்கக்) கழகம் (Radium Institute) என்னும் நிலையம் ஒன்றை நிறுவி, அதனில் அவர் தம் கருத்தெல்லையிலே கதிரி இயக்க ஆராய்ச்சி நுண்மையாக நடந்து வந்தது.

இவரது ஆராய்ச்சியின் முற்போக்கினை விழைந்து அதற்குதவி செய்யக் கருதிய அமெரிக்க மகளிர் ஒரு கிராம் (Gram) என்னும் எடையுள்ள கதிரி (Radium) யை விலை கொடுத்து வாங்கி அம்மையார்க்குப் பரிசாக அளித்தனர்.

கியூரி அம்மையார் தமது இளந்தையிற் கண்டுபிடித்த நுண்மைகளைத் தம் கால்வழியினரும், கதிரி ஆராய்ச்சிக் கழகத்தாரும் விடாது பின்பற்றி ஆராய்ச்சி செய்து வருகின்றனர். அம்மையார் தம் புதல்வியாரான ஐரீனி அம்மையும், மருகரான எஃப் ஜோலியட் என்பாரும் கியூரி யம்மையாரின் ஆராய்ச்சியை விடாது செய்தவராகலின் இவரது முயற்சியின் பயனுக வேறு சில நுண்மைகளைக் கியூரி யம்மையார் தம் மனமகிழக் கண்ணுற்ற பின்பே இம் மண்ணுலகை நீத்தார். சென்ற ஆறு திங்கட்கு முன்பு தான் ஐரீனி யம்மையாரும்

---

*Madame Marya Curie

அவர்தம் காதற் கொழுநராகிய ஜோலியட் என்பாரும், கதிரி இயக்க நுண்பொருள்களை முதன் முதற் செயற்கை முறையிற் கண்டுபிடித்தனர். 'மகனறிவு தந்தையறிவு' என்ற வண்ணம் கியூரியம்மையின் தந்தையார் நுண்பொருளாராய்ச்சியில் மிக விழைவுள்ளவராகலின் அவர்தம் மகளாரும், அவர்பின் அவர் மகளாரும், மருகரும் வழிவழியாக நுண்ணறிவு படைத்தவ ராகி உலகுள்ளளவும் மறக்க இயலாத நன்மையைத் தேடித் தந்தனர்.

ஓர்கால், ஒருவர் நுண்மதி மிக்க கியூரி அம்மையாரை, 'அம்மா! இவ்வுலகிலே தாங்கள் விரும்பும் பொருளனைத்தும் கிடைப்பதெனில் எப்பொருளைத் தாங்கள் விரும்பித் தேர்ந்து எடுப்பீர்கள்?' என்று கேட்க, 'அன்பீர்! என் ஆராய்ச்சி பயன்பெறுதற் பொருட்டு நான் விழைவது ஒரு கிராம் எடை யுள்ள கதிரியே (Raduim) ஆகும்,' என்று விடை பகர்ந்தார் அம்மையார்.

பின்பு, மேரி கியூரிக் கழகம் என்பது நிறுவப்பட்டு, அக்கழ கத்தினரால் அமெரிக்கச் செல்வநாட்டு மங்கையரிடமிருந்து 20,000 பவுன்கள் திரட்டப்பட்டு, அப்பொருள் கொண்டு அரும் பொருளான ஒரு கிராம் எடையுள்ள ரேடியம் என்னும் கதிரியை விலைக்கு வாங்கப் பெற்ற பின்புதான் கியூரி அம்மை யாரின் ஆர்வம் அடங்கிற்று.

அம்மையார் தமது ஆராய்ச்சியிலேயே கருத்தூன்றி யுள்ளவர் ஆகலின் தம் வீட்டிலும் வெளியிலும் நடக்கும் செயல் இன்னது என்பதை அறியார். ஓர் நாள் அம்மை யார் தம் சாய்வுமணையில் ஏதோ வரைந்துகொண் டிருந் தார். தம் அரும்பெறற் குழந்தை அதுபோழ்து தவழ்ந்து வந்து மணையின் கீழுள்ள கழிகடிதக் கூடை (Waste-paper basket) யிலே உட்கார்ந்து கொண்டிருந்தது. அம்மையார் அச்செயலை யறியாது தம திடக்கையினாலே, கழித்த காகிதத் தைச் சுருட்டிக் கூடையிலே யிட்டமுக்கினார். உள்ளே தமதின் னுயிர்க் குழவி யுளதாகலின் அதன் தலைமீதே கடிதத்தை யிட் டமுக்கினபோது, கைக்கு வன்மையாக இருந்தும், தம் எண்ணம் ஆராய்ச்சியிலிருப்பதால் மேலும் வைத்துத் தலையை அழுத்தினர். துன்புற்ற குழந்தை அழுத பின்பே சிறிது உண்மையை உணர்ந்தார். இச்செயல் அவர் தம் கணவனார் நேரிலிருந்து கண்டது.

மற்றோர் கால், அம்மையாரது பணிப் பெண்ணொருத்தி, தம் ஆய்வுக் கூடத்திற்குள் (Laboratory) ஓடிவந்து, 'அம்மா!

யான் ஓர் ஊசியை விழுங்கிவிட்டேனே ! இனி என் செய்வேன் ?' எனக்கதற அம்மையார் யாதொரு பரபரப்பும், அச்சமும், உணர்ச்சியு மில்லாராகிப் "போனது போகட்டும்; இதோ இன்னொரு ஊசி என்னிடமுளது!" என மிக்க அமைதியோடும் விடைகூறினர்.

கியூரி அம்மையார் அன்மையில் உயிர்துறந்ததைப்பற்றி "டைம்ஸ்" செய்தித்தாள் பின் வருமாறு கூறுகிறது:—

"கியூரியம்மையாரின் காதலர் கட்டுரை வரைந்து பேரவையில் ஓதி விளக்கின ஓர் நாளில்தான் முதன்முதல் அம்மையார் தம் கணவரைக் கண்டது. அவர் வரைந்து படித்த கட்டுரையிலே 'நுண்ணறிவும் முற்போக்கு முடைய மங்கையர் இவ்வுலகிற்காணப்படுதல் அருமை; இப்போது காணப்படும் பெண்களிற் பெரும்பாலாரும், முற்போக்குள்ள நுண்பொருளாராய்ச்சியிற் றலைப்படும் அறிஞர்க்கு ஊறு விளைப்பாரேயாவர்,' என்னும் பகுதியும் ஒன்று ஆகலின், இத்தகைய கருத்துடைய ஆடவ வீரரையே மணந்த கியூரியம்மையார் அவர் கருத்துக் கிசைந்த இன்பவாழ்வு நடாத்தி, அதனல் தம் கணவர்க்கேற்பட்ட மனநிறைவைக் கண்டு பெருங்களிப் பெய்தி யிருப்பர் அல்லரோ ?"

ஓர் காலே, ஆசிரியர் ஜில்பெர்ட் முர்ரே (Prof. Gilbert Murray) என்பார், தம் நினைவுக் குறிப்பிலே அம்மையாரின் அடக்கமான வாழ்வையும், அமைதியான தோற்றத்தையும் பற்றிக் கீழ்வருமாறு எழுதியுள்ளார் :—

"கியூரி அம்மையார் தம் பெயரை வெளியில் எங்கணும் பரப்பிப் பெருமை பெறுவதில் வெறுப்புக் கொள்பவர். நான் ஓர்நாள் இக்கியூரி அம்மையாரின் புன்னகையின் கவர்ச்சியைப் பற்றி ஓர் இதழாசிரியரிடம் (Journalist) மொழிந்தேன்: அதற்கு அவர் 'ஆம், இருக்கலாம்; அச்சுத் தொழிலினன் ஆன என் போன்ருர் அதை ஒரு போதும் கண்டதில்லையே,' என்றனர்."

"மார்னிங் போஸ்ட்" செய்தித் தாளின் கருத்து :—

"நுண்பொருளாராய்ச்சியிற் றலைசிறந்த பெண்மணியாரை பிரான்சு நாடு இழக்க நேர்ந்தது. இதுகாறும் இத்தகைய மாதர் திலகத்தை இந்நெறியில் இவ்வுலகு கண்டிரா தென்றே கூறலாம். கதிரி இயக்கத்தைக்(Radio-Activity)கண்டுபிடித்த பெருமை கியூரி அம்மையாருக்கும், அவர்தம் கணவனுருக்குமே உரிய தெனினும் அம்மையார் அவரை மணந்து கொள்

வதற்கு முன்னிருந்தே அவ்வியக்கத்தைப் பற்றிய முதன்மையான ஆராய்ச்சிக் கருத்துக்களைத் தெளிந் திருந்தனர். இங்ஙனம் கூறுவதால் கியூரியம்மையாரின் கொழுநரான ஆசிரியர் கியூரிக்குப் பெருமைக்குறைவு என்று கூறுதற்கில்லை. ஏனெனில் தம் மனைவிக்குரிய புகழையும் பெருமையையும் தம் மனைவியே அடையவேண்டும் எனத் தாமே முன்னின்று வற்புறுத்தி வந்திருக்கின்றார் ஆதலின் என்க. கியூரியம்மையார், இக்காலம் வழங்கும் பிணிதீர்க்குமுறையை மருத்துவர்களுக்குக் கண்டு பிடித்துக் கொடுத்துப் பேருதவி புரிந்ததோடு கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்துப் (Cambridge University) பருப்பொருள் ஆராய்ச்சியாளர்கள் அணுவைப் பிரித் தறிதலில் வெற்றியுறும் வழியையும் அவர்க்குக் காட்டினர். இவ்வகையிலே இப்போது சில காலமாகக் கேம்பிரிட்ஜில் உள்ள காவண்டிஷ் (Cavendish) பருப்பொருள் ஆய்வுக் கூடத்தினர்க்கும் பாரிஸ் அணி நகரிலுள்ள கியூரியின் பொருளாராய்ச்சிக் கூடத்தினர்க்கும் போட்டி நடந்து வருவதாகச் சில அறிகுறிகள் காணப்படுகின்றன. பாரிஸ் கியூரியாராய்ச்சிக் குழுவினர் அடைந்த பெரு வெற்றி குறித்துக் கியூரி அம்மையாரின் மகளாரான ஐரீனி என்பாரும் ஐரீனியாரின் காதற் கணவரான எஃப் ஜோலியட் என்பாரும் பெரிதும் அறிவுழைப் பெடுத்திருக்கின்றனர். கியூரி யம்மையார் விண்ணுலகடைந்தமை குறித்து அவர்தம் மகளார்க்கும் மருகருக்கும் இரக்கங் கூறுவது ஆங்கிலப் பொருள்நூ லறிஞர் ஒவ்வொருவரின் கடமை யாதலோடு, அம்மையாரின் வழியினராகிய ஐரீனியாரும், எஃப் ஜோலியட்டும் அம்மையாரது அரிய ஆராய்ச்சியைக் கைவிடாதுழைத்து நாட்டுக்கு நலஞ் செய்வார் என்று எதிர்பார்த்தலும் அவரது கடமையாகும் அல்லவா?

தமது 66ஆம் ஆண்டினில், 1934, ஜூலை மீ 4உ பிரான்சு நாட்டிலே ஸல்லாஞ்சஸ் (Sallanches) நகரில் கியூரியம்மையார் வாழ்வை நீத்தார். அண்மையில் நடந்த பொருணூல் அறிஞர் மாநாட்டிலே (The International Conference on Physics) அம்மையாரின் புதல்வியான கியூரி ஜோலியட் கதிரிக்கீடான மற்றொரு நுண் பொருளைத் (Radium 'Substitute') தாம் கண்டுபிடித்த வரலாற்றை விரித்துப் பேசினர்.

ஆகவே, நம் ஒள்ளிய தமிழகத்துச் சிறுமியீர்! கியூரியார் போல் நீவிரும் அறிவொளி கான்று மிளிர இன்னே விரிட்டு எழுமின்!! கலை மணம் பரப்புமின்!

வாழ்க! வாழ்க!! கியூரியார் வளவியல்!

புதுக் கவிகள் - Original Poetry

[திரு. அ. சிதம்பரநாதஞ் செட்டியார், பி.ஏ.]

தேனாற்றுப்படை *

உலகொடு தலைஇய புலமையோர் பலர்புகழ்
குவளை கமலம் குமிழொடு அனிச்சம்
காந்தள் அல்லி ஆம்பல் முல்லை
கோங்கம் வேங்கை பூந்துணர்ச் சண்பகம்
ஆதிய வற்றை நாடியே வந்தாய்

ஊதியே பார்த்தாய் உள்ளுள் உருகித்
தினைத்தனைத் தேனாணைத் திரிதருந் தும்பி!
அனைத்தா னந்தம் அளித்திடுந் தேனை
நினைத்துங் கண்டும் உண்டும் வருதும்;
எனைத்தே யெனைத்தே யெப்புறத் ததுவே

எனநீ வினவிற் கூறுவங் கேட்டி;
சற்றே நினைக்க அமுதாங் கருணையும்,
கெட்டார்க் காக்க இட்ட கறையும்
எனைத்தோ பிறவி யெனவிரப் போர்க்கே
வினைத்தளை நீக்கி விடுத்திடும் அருளும்

தாதைக்குந் தாதை தப்பிலாத் தாயாய்
மேதைக்கும் மேதையாய் மேவிய மேன்மையும்,
ஆருயிர்க் காருயிரா யடைந்தார்க் கம்பலமாய்
ஈருயிர்க் கோருடலா யனைத்துயிர்க்கு மனைத்துயிராய்
வேடன்பாற் சேர்ந்து விலங்கிய மகற்கு


நாடளித்து நலனல்கு மன்னவன் போலத்
தாடலை வைத்தற்குந் தன தாக்கிக் கொள்ளற்கும்
ஓடியே வந்துவந் தோங்கார மாமுருவும்,
தோலும் நீறுந் துகிலுஞ் சாந்தங்
கோலும் மானுஞ் சூலுந் தாங்கிப்

பாலெனக் கண்டெனப் பகருங் கனியென
மேலென மொழிந்த கன்னலாய் விளைந்து
விளக்க விளக்க மிளிர்ந்திடும் ஆடிபோற்

---

* மனிதனாகிய வண்டை இறைவனது அடித் தாமரையிடத்து ஆற்றுவித்ததுபோல் இயற்றப்பட்டது.

கிளக்கக் கிளக்கக் கிட்டிடும் வண்மையும்,
வேட்டன வேட்டன வேட்டு விட்டன
கேட்டன கேட்டன கேளா விட்டன
யாவையும் மேவிடச் செய்திடும் ஆற்றலும்,
ஒவியம் என்பார்க் கொளித்திடுஞ் சோதியும்,
உள்ளக் கவலை கையா றழுங்கல்
துள்ளி யோடத் துணிக்கும் பெருமையும்,
பொள்ளற் பிழைகள் எல்லாம் பொறுத்துக்
கள்ள மனத்தைக் கரைக்கும் விச்சையும்,
திருவா சகமெனும் ஒருவா சகத்தார்க்
கொருவாய் பெருந்தனை ஒடித்த அருமையும்,
காணார் நிற்பக் காட்டும் இச்சையும்
பூணுப் பொலியும் புனிதன் பொன்மலர்
அடியென நின்ற அரவிந்த முளகாண் !
படிமீ தியாரும் பரவவும் போற்றவும்
ஞானம் மடுத்து வினையை யறுத்தே
ஆனந்தஞ் சொரியுந் தேனவை யாங்கே
உண்ண வுண்ண வுவட்டா தினிக்கும்
உள்ள வுள்ள வூற்றெனப் பெருகும்
கொள்ளக் கொள்ளக் குறைவின்றி வளரும்;
அதனால், சொல்லிய அம்மலத் துணையிணைப்பாடிச்
செல்லின் நீயுஞ் செல்வை யாகுவை
அள்ளி யருந்துவை யானந்தத் தேனே.



எலுமிச்சம் பழத்தின் இயல் நலம்

எலும்மிச்சம் பழத்தால் எளிதிலே தீரும் சில நோய்களையும் அவற்றிற்குப் பயன்படுத்தும் முறைகளையும் ஈண்டுத் தருதல் மக்கட்கு நலந் தருவதாகும்.

முகப்பரு :—எலுமிச்சம் பழத்தின் சாற்றை மட்டும் பருவின் மேலே தடவி உலரவிட்டால் நல மடையலாம்.

நச்சுக்கடி :—சாற்றை உட்கொண்டால் எவ்வளவு நலமுண்டோ அவ்வளவு மேலே தடவுதலாலும் உண்டு. நஞ்சைக் கொல்வதில் இச் சாற்றைக் காட்டிலும் சிறந்ததில்லை. அயோடின் (Iodine) என்னும் மருந்து இவ்வகைக்கு நலந் தருவதானாலும், சில வகைகளில் அது தீங்குடையதாகும். அயோடைன் தசை நாரை அழிக்கும். சாறு அவ்வாறு அழிக்காது. நச்சுப் புழுக்களைச் சாறு நேரே தாக்கித் தசை நாரை ஆற்றுவிக்கும்.

சுவாச காசம் :—படுக்கைக்குப் போகுங்கால் ஓர் பழத்தின் சாற்றைப் பருகிவந்தால் நல மடையலாம்.

பித்தமயக்கம் :—உணவை நீக்கி இரைப் பைக்கு ஓய்வு கொடுத்து அரைப்பழத்தின் சாற்றை நாளுக்கு ரு முறை உட்கொள்ளின் பித்தம் நீங்கும்.

வேப்பக் கட்டிகள் :—இக் கட்டிகள் நீங்காமல் அடிக்கடி வருவதாயினும், சாற்றை உட்கொண்டு வருவதோடும், அக் கட்டி வளரும் வரை பழத்தின் சாற்றைக் கட்டியின் மேலே பூசி வருதல் வேண்டும். பழத்தைச் சுட்டு இரு கூறாக்கிப் பொறுக்கும் சூட்டோடு கட்டியின்மேல் வைத்துக் கட்டினால் கட்டி உடையும். உடைந்தவுடன் ஒருபடி கொதி நீரில் ஒரு பழத்தின் சாற்றை விட்டுக் கலக்கி இளஞ் சூடாயிருக்கும் போது புண்ணைக் கழுவிச் சீழை யெல்லாம் எடுத்துத் துப்புரவாக்குக; மேலும் கட்டி வராது.

குடல் பெயர்தல் :—ஒருபடி கொதிநீரிலே ஒரு பழத்தின் சாற்றை விட்டுக் கலக்கி நீரேற்றிகொண்டு (Enema) மலக் குடரைத் துப்புரவாக்குக.

மேக நோய் :—இந் நோயாளர் இப்பழத்தை மிகுதியாய் உணவிலும், குடி நீரிலும் சேர்த்துக் கொள்ளப் பழகினுல் நல மடையலாம்.

மூக்கடைப்பு :—நீர்க் கோவை (ஜலதோஷம்) கண்ட போது இப்பழத்தின் சாற்றைச் சம அளவான வெந்நீரிற் கலந்து மூக்கிலேற்றி இறக்குக.

நீர்க் கோவை :—குறைவான நெருப்புள்ள அடுப்பிலே ஒரு பழத்தின் தோலை உரித்து விட்டுச் சாறு கசியும் வரை இட்டு வதக்குக. பின் அதன் சாற்றை வேளைக்கு ஒரு மேசைக் கரண்டி அளவாக ௩ மணிக்கொருமுறை உட்கொள் ளவும். குழந்தைகட்குக் கொடுக்கும் போது சிறிதளவு தேனை உடன் கூட்டிக் கொள்க. நோய் நீங்கும்வரை உணவு இலேசா கவே இருத்தல் வேண்டும்.

மலச் சிக்கலும், வயிற்றுக் கழிச்சலும் :—ஒருபடி வெந்நீரில் ஒரு பழத்தின் சாற்றை விட்டுக் கலக்கி நீரேற்றி கொண்டு மலக் குடரைத் துப்புரவாக்குக. எளிதிற் செரிக்கக் கூடிய உணவை உட்கொள்க. அரைப்படி வெந்நீரில் ஒரு பழத்தின் சாற்றைப் பிழிந்து கலக்கி வைத்துக்கொண்டு அடிக்கடி அருந் துக. இவ் விருநோய்களும் ஒன்றுக் கொன்று மாறுதலான தாய் இருப்பினும் இரண்டும் நீங்கி நலம் அடையலாம்.

இருமல் :—இதற்கும் நீர்க்கோவைக்குச் செய்யும் சிகிச்சை முறையையே கைக்கொள்ளுக. வேண்டுமாகின் 'கிளிசரைன்' என்னும் மருந்தோடு உட்கொள்ளுக. கலந்து ஒரு மேசைக் கரண்டி அளவு இரண்டு மணிக்கொரு முறை தொண்டை யில் விட்டு விழுங்குக.

சோண்டு :—பழத்தையறுத்துச் சாற்றினைத் தலையிற் றேய்த்துக் குளிக்க நலமடையலாம்.

டிப்தீரியா :—பழச்சாறும் நீரும் கலந்து மணிக்கொரு முறையும், பின்பு இரண்டு மணிக்கொரு முறையுமாகத் தொண் டையில் விட்டுக் கொப்புளித்தல் வேண்டும். தனிச்சாற்றை ஒருமேசைக் கரண்டி யளவு நோயாளி உட்கொண்டால் பொய்ச் சவ்வு அறுந்துவிடும். மேலும் இதை முறை செய்க.

ஊது காமாலை :—இச்சாறு கலந்த உணவே மிக நல்லது என்பது உண்மை.

ஞன்மம் :—உணவு செரியாமைக்குச் செய்த சிகிச்சையையே இதற்கும் செய்க.

எரிசிபாலிஸ் :—இப்பழத்தின் சாற்றையும் சிமைச் சாராயத்தையும் கலந்து அழற்சியுற்ற பாகத்தில் அது திரும்வரையில் தடவுக.

வெப்பு நோய்கள் :—எல்லா வகையான வெப்பு நோய்களையும் தடுக்கும்.

வயிற்றுக் கோளாறுகள் :—சாற்றை மிகுதியாகப் பயன் படுத்துவதோடு உணவோடும் கூட்டிக்கொள்ளுதல் வேண்டும்.

தலைவலி :— (பித்தத்தால் உண்டாவது) —ஒருகாற்படி காப்பியோடு ஒரு தேக் கரண்டி சாற்றைக் கலந்து குடித்தால் நலமடையலாம்.

இதயம் துடித்தல் :—சாற்றை உட்கொள்ள நீங்கும்.

எரிச்சல் :—செரிக்காமைக்குச் செய்யும் சிகிச்சை போலவே செய்க. கு. ஞா.

செய்திகளும் குறிப்புகளும்
News and Notes

தாய்மொழி ஆசிரியர் சம்பள நிலை

தாய்மொழிகட்கு ஆக்கந் தருவதாகக் கூறும் அரசியலார், அம்மொழியாசிரியர்கட்குக் கொடுக்கப்படும் சம்பளம் மிகக் குறைவாகும் எனவும், அதை அவர்கட்குச் சமானமான பி. ஏ. எல். டி ஆசிரியர்கட்குக் கொடுக்கப் பெறும் சம்பள நிலைக்குயர்த்த வேண்டும் எனவும் ஆங்காங்குத் தக்கார் பலர் கூடிப் பேசி மனுக்கள் அனுப்பியிருந்தும் அதற்கு மாறாக, முன் இருந்தபடி இருப்பதையும் செய்யாமல் பள்ளியிற் சேவகர்கட்கு அடுத்த மிகத் தாழ்ந்த நிலையில் அவர்கள் சம்பளத்தை சில ரூபாவோடு நிறுத்தி வயிற்றிலடித்தமை அந்தோ கொடிது! ஓவியம், உடற்பயிற்சி என்பவற்றின் ஆசிரியர்களின் நிலையினும் இவரைத் தாழ்த்திவிட்டமை பிறநாட்டு மொழிவல்லுநராலும் மிக எள்ளற்பாலது.

மேனாட்டுக் கலை நூல்களைத் தாய்மொழிகளிலே மொழி பெயர்த்துத் தாய்மொழிகள் நல்லாக்கம் பெறுமாறு செய்வதாக உறுதி கூறும் அரசினர் தாய்மொழியாசியர்களை இவ் வறுமை நிலைக்கிழுத்துவிடின், இவர்கள் மொழி பெயர்த்தல் எங்கே? உயர்வு தருதல் எங்ஙனம்! சொல்லும் செயலும் ஒன்றனுக்கொன்று மாறுபடுகின்றதே!

ஒரு நாடு முன்னடைய அந்நாட்டு மொழி வளர்ச்சியே முதன்மை; அம்மொழி வளர்ச்சிக்கு அதன் ஆசிரியர் மன நிறைவே முதன்மை; அம்மன நிறைவுக்குத் தக்க சம்பள மன்றோ காரணம்? உலகெல்லாம் சுற்றி, ஏழைத் தாய்மொழி யாசிரியர் சம்பளத்தைக் குறைத்து விட்டமையாலா பொரு ளாதாரம் வலிவடையப் போகின்றது! துரும்பு தெரிவார்க் குத் தூண் தெரியாத காலமாயிற்றே!

மாணவரால் ஆசிரியர் மதிக்கப் படுதற்கு அவர்கள் பெறும் சம்பளமே காரணமாகும். பெரும்பாலும் தாய் மொழியாசிரியர்கள், பள்ளி மாணவர்களால் இப்போது எவ் வாறு அவமதிக்கப்படுகின்றார்கள் என்பதை எவரும் உணர்வர். இன்னும் அவரது நிலையைக் குலைப்பின் அவர்களை மாணவர் மிக எள்ளி அவமதிக்கத் தலைப் படுவதன்றி இவராற் பிள்ளை கள் எந்நலம் அடையப் போகின்றனரோ? அந்தோ இவர் நிலை மிகவும் கொடிது!

கிறித்துவக் கலாசாலைகளிலே தாய்மொழி யாசியர்க்குக் கொடுக்கப்படும் நிலையும் மதிப்புங்கூட நம் தாய் நாட்டிற் பிறந்த ஒரு சாரார் அவர்கட்குக் கொடுக்காமலிருக்கும் சட் டத்தை வெளிவிடக் காரணமாயினமை பெரிதும் வருந்தத் தக்கதாம்.

அதினும், இட்ட சம்பளத் திட்டத்திற்குமேல் இது வரை சம்பளம் வாங்கிக் கொண்டிருந்தவர்களையும் இத்திட்டம் உடன் படுத்தியதை உன்னிப் பார்ப்பின், தாய் மொழிப் பற்றுடைய, தாய் வயிற்றிற் பிறந்தநன்றி மறவாத எவரும் மனங் கொதித் துக் கண்களிற் குருதி வடியாதிரார்!

ஆகவே, தாய் மொழிகட்கும் அவற்றின் நல்லாசிரியர் கட்கும் நேர்ந்த இக்கொடு நிலைக்குக் காரணமான திட்டத்தை மறுதலை செய்து, தாய் மொழிகளின் வளர்ச்சி கருதி ஏழை ஆசிரியர்கட்கு மனவமைதி செய்யுமாறு அருள்மிகும் அரசிய லாரைப் பன் முறையும் வேண்டுகின்றோம்.

* * *

சென்னைப் பல்கலைக் கழகத்தாரால் நடத்தப் பெறும் தனித்தமிழ் வித்துவான் தேர்விலே 1934-ஆம் ஆண்டில் முதல்வராகத் தேர்ச்சி பெற்ற திருப்பூர் நகராண்மைக் கழக உயர்தரப் பள்ளித் தமிழாசிரியர் திருவாளர்—'வித்துவான்' A. S. நாராயணசாமி நாயுடு அவர்கட்குக் கோயமுத்தூர் Y. M. C. A. மண்டபத்தில் 1934 ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்கள் 8-ஆம் நாள் கோவைத் திருவாளர்—'ராவ் பகதூர்' T. A. இராமலிங்கஞ் செட்டியாரவர்கள் B.A., B.L., M.L.C., தலைமையில், திருப்பனந்தாட் காசி மடத்துத் தலைவர்களாகிய மறைத்திரு—காசிவாசி சுவாமிநாதத் தம்பிரானவர்கள் ஓர் ஆயிரம் ரூபா பரிசாக சென்னைத் திருவாளர் - டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள் வழியாக வழங்கியரு ளினர்கள்

வழிவழி மரபியல் போல் மன்றத்திரு - அடிகளாரும் தமிழ்த் தாய்பேணும் தகைமையைப் போற்றுகின்றோம்.

* * *

சைவ சித்தாந்த மகா சமாஜ ஆண்டு விழா நிகழும் 1934-ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்கள் 22, 23, 24 ஆகிய நாட்களில், திருவதிகை விரட்டானத்தே, "நவசக்தி" ஆசிரியர் சைவத் திருவாளர் திரு. வி. கலியாண சுந்தர முதலியாரவர்கள் இனிய தலைமையில் நடைபெறும்.

சைவ மங்கையர் மாநாடும், அவ்விழாவை ஒட்டிய 3-ஆம் நாளில், சென்னைத் திருமதி வித்துவான்—தா. தாணு அம்மையார் தலைமையில் நடந்தேறும்.

அன்பர்கள் போந்திருந் தின்புறுவ ராக !

* * *

தூத்துக்குடி மேலவூர்ச் சைவசித்தாந்த சபையின் ருக-ஆம் ஆண்டு நிறைவு விழா, நிகழும் 1934-ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்கள் 29, 30-ஆம் நாட்களில் (மார்கழி கச, கரு) கோயமுத்தூர் வழக்கறிஞர் திருவாளர்—ராவ் சாகிப் C. M. இராமச் சந்திரஞ் செட்டியாரவர்கள் B.A., B.L., அரிய தலைமையின்கீழ் நுண்மாண் நுழைபுலமிக்க பல கலைவாணர்கள் அரிய பொருள்கண்மேல் விரிவுரையாற்ற இனிது நடைபெறும்.

விழாவின் ௩-ஆம் நாளாகிய 31௳ அன்று சென்னைத் திருமதி வித்துவான் தா. தாணு அம்மையாரவர்கள் அரிய தலைமையிற் 'சைவ மங்கையர் மாநாடும்' நடைபெறும்.

அன்பர்கள் போந்திருந்து நலம் பெறுவாராக !



டாக்டர் மில்லர்

ஓம்

செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

சிலம்பு-௧௫.] பவ—மார்கழி [பரல்-௫

சுந்தரமூர்த்தி அடிகள் தேவாரம்

வஞ்சமற்ற மனத்தாரை மறவாத பிறப்பிலியைப்
பஞ்சிற்சீ றடியாளைப் பாகம்வைத் துகந்தானை
மஞ்சுற்ற மணிமாட வன்பார்த்தான் பனங்காட்டூர்
நெஞ்சத்தெங் கள்பிரானை நினையாதார் நினைவென்னே.

பதவுரை:—

வஞ்சமற்ற மனத்தாரை—பொய்மை பொருந்திய, நிலையில்லாத உலக வாழ்வுப் பற்றினைவிட்டு முற்றிலும் நீங்கிய உள்ளத்தினையுடைய மெய்யடியார்களை,

மறவாத பிறப்பிலியை—எப்பொழுதும் நினைந்து (அவர்களுடைய உள்ளத்தில் அருட் பேரொளியாய் விளங்கிக்கொண் டிருக்கும்) பிறப்பு இறப்பு இன்றி என்று முள்ளவரும்,

பஞ்சிற் சீறடியாளைப்பாகம் வைத்துகந்தானை—(உயிர்களுக்கு அருள் செய்யும் வண்ணம்) பஞ்சுபோல மெதுவான சிறு அடிகளையுடைய உமாதேவியாரை இடப் பாகத்தில் வைத்து மகிழ்ந்து வீற்றிருக்கிறவனும்,

மஞ்சுற்றமணி மாடம்—மேகங்கள் தவழும்படி உயர்ந்திருக்கிற அழகிய மேடை வீடுகளை உடைய,

வன்பார்த்தான் பனங்காட்டூர்—திருவன்பார்த்தான் பனங்காட்டூர்ப் பதியில் திருக்கோயில் கொண்டிருக்கிற,

எங்கள் பிரானை—அடியார்களாகிய எங்களுக்கு முழுமுதற் றலைவனுமாகிய சிவபெருமானை,

நெஞ்சத்து—தங்களுடைய உள்ளத்தில்,

நினையாதார் நினைவு என்—தங்களுக்கும் அவனுக்குமுள்ள அத்துவிதத் தொடர்பையும், அதுபற்றித் தங்களுக்கு அவன் செய்துவரும் அருட் செயலையும் நினையாதவர்களுடைய நினைப்பு என்ன பயனைச் செய்யும்? (ஒரு பயனும் செய்யாது என்றபடி.)

விளக்கவுரை :—

வஞ்சம் அற்ற மனத்தாரை மறவாத பிறப்பிலியை—வஞ்சம்=பொய்; நிலையின்மை. உலகவாழ்வானது ஒரு தன்மைத்தாக நிலைத்திராது மாறிமாறி வருதல்பற்றிப் 'பொய்' எனப்பட்டது. 'அற்ற மனம்' என்பது உலகவாழ்வுத் தொடர்பு சிறிது மில்லாது விட்டுப்போன உள்ளம். பிறப்பிலி=பிறப்பில்லாதவர்; இனம் பற்றி இறப்புமில்லாதவர் என்பதும் கொள்ளப்பட்டது; பிறப்பும் இறப்பும் இல்லாது என்றும் உள்ளவர். 'மறவாத' என்பது எப்பொழுதும் நினைந்து கொண்டிருப்பது. அதாவது நிலையான அருட் பேரொளியோடு எப்பொழுதும் சிவமாய் விளங்குகிற உள்ளம் என்பது கருத்து. அத்தகைய உள்ள முடையவர் சிவன் திருவடியை மறவாது பேரின்பம் நுகர்வர். "சிந்தையினுள்ளே தெளிய வல்லார்க்கு, சிந்தையினுள்ளே சிவனிருந்தானே" என்று திருமூலர் திருமந்திரம் **2853**-ஆம் பாட்டிலும், "பொறிப் புலன்களைப் போக்கறுத்துள்ளத்தை--நெறிப்படுத்து நினைந்தவர் சிந்தையுள்—அறிப்புறும் மமுதாயவன்" என்று திருநாவுக்கரசு அடிகள் திருவேகம்பத் திருக்குறுந் தொகை 4-ஆவது பாட்டிலும் கூறியருளினமை காண்க.

பஞ்சிற் சீறடியாளைப் பாகம்வைத் துகந்தானை—மேலே கூறியபடி வஞ்சமற்ற மனத்தாரை மறவாதிருத்தலுக்குக் காரணமாகச் சிவபெருமானுடைய அருட்டன்மை கூறப்பட்டது.

எங்கள் பிரான்.—பிரான்—பெருமான் என்ற சொல்லின் திரிபு போலும்—முழுமுதற்றலைவன். மேலே கூறப்பட்ட அருட்டன்மைக்குக்காரணமாகச் சிவபெருமான் எல்லா உயிர்களுக்கும் முழுமுதற்றலைவன் என்பது கூறப்பட்டது. சிவபெருமான் உயிர்களுக்கு முதல்வன் ஆதலின் தன்னைச் சார்ந்து அன்பு செய்து மறவாதிருக்கிற அடியார்களுக்குப் பேரின்ப மளித்தல் கடனுகின்றது. "தன்கட னடியேனையுந் தாங்குதல்—என்கடன் பணி செய்துகிடப்பதே" என்று திருநாவுக்கரசு அடிகளுடைய திருக்குறுந்தொகைத் தேவாரமும், "சார்ந்தாரைக் காத்தல் தலைவர் கடனுதல்" என்று சிவஞானபோதம் 10-ஆவது சூத்திர வெண்பாவும் கூறுதல் காண்க.

நினையாதார் நினைவு என்—நினைவு என்பது மக்கள் தங்களுடைய உள்ளத்தில் தங்களுக்கும் சிவபெருமானுக்கு முளதாகிய அத்து

விதத் தொடர்பையும், அதுபற்றி அவன் தங்களுக்கு இடைவிடாது சலியாமற்செய்துவரும் அருட் செயல்களையும் நினைத்தல்; நினைத்தலே மக்களுடைய சிறந்த செயல். நினைவு நல்வழியிற் சென்றாலன்றி அவர்கள் யாதொருநலமும் உலகில் அடைய முடியாது. அவர்கள் சிவபெருமானை நினைந்தாலல்லாமல் உலக நெறியில் அற நெறியிலொழுகி உலகச் சிற்றின்பம் அடைதலும், அருள்நெறியி லொழுகிப் பேரின்பம் அடைதலும் கூடாது. ஆதலின், 'நினையாதார் நினைவு என்' என்றார். 'எவன்' என்ற வினைப் பெயர் 'என்' எனக்குறுகி இன்மைப் பொருள் குறித்து நின்றது. 'ஏ' அசை.

திருஞானசம்பந்த அடிகள் தேவாரம்

சீகாழி

அடலேறு மருங்கொடி யண்ணல்
மடலார் குழலாளொடு மன்னுங்
கடலார் புடைசூழ் தருகாழி
தொடர்வா ரவர்தூ நெறியாரே.

பதவுரை :—

ஆர்கடல் புடைசூழ் தருகாழி—நீர் நிறைந்த கடலாற் பக்கத்திற் சூழப்பட்ட சீகாழிப் பதியில்,

மடலார் குழலாளொடு மன்னும்—பூக்களை அணிந்திருக்கிற கூந்தலையுடைய உமாதேவியாரோடு நிலையாகத் திருக்கோயில் கொண்டிருக்கும்,

அடல் ஏறு அமருங்கொடி அண்ணல்—எருது விளங்குகிற துணிக் கொடியை யுடைய எல்லாம் வல்ல தலைவனாகிய சிவபெருமானை,

தொடர்வார் அவர் தூநெறியாரே—சார்ந்து தொழுகின்ற மக்கள் தூய வழியிற் செல்கின்றவர் ஆவர்.

விளக்கவுரை :—

இப்பாடலின் பதவுரையிற் கண்டிருக்கிறபடி உரைநடை செய்து பொருள் கொள்க.


கடலார்புடைசூழ்தருகாழி—'கடலார்' என்பதை 'ஆர்கடல்' என மாற்றிப் பொருள் கொள்க. சூழ்தரு=சூழ்ந்த; தரு—துணைவினை.

மடலார் குழலாளொடு மன்னும்—மடல்=பூவிதழ். அஃது இங்கே ஆகுபெயராய்ப் பூ என்ற பொருள்பட நின்றது. மன்னும்=நிலை யாக வீற்றிருக்கும். 'மடலார் குழலாளொடு மன்னும்' என்றத ளுல் சிவபெருமான் சீகாழிப்பதியில் வீற்றிருப்பது அங்கே தன்னை வந்து வணங்கும் மக்களுக்கு அருள்செய்யும் பொருட்டு என்பது குறிப்பிடப் பட்டது.

அடல் ஏறு அமரும் கொடி அண்ணல்—அடல் என்ற அடைமொழியை அண்ணல் என்ற சொல்லோடு சேர்த்துப் பொருள் கொள்க. அடல் அண்ணல்—எல்லா வல்லமையு முடைய தலைவன். உலகி லுள்ள எல்லா உயிர்களையுங் காத்து இன்பம் அளிக்க வல்லவன் என்பது கூறப்பட்டது. எருது, உயிர்களைக் குறிக்கிறது; எருத்துக் கொடியானது சிவபெருமான் உயிர்களை எல்லாம் காக் கும் தொழிலை உடையவன் என்று எவரும் அறியக் குறிக்கிறது; ஒரு நாட்டினை ஆளும் மன்னனுடைய கொடியானது அவன் குடிகளை ஆண்டு காத்தலைக் குறித்தல் போல. அமர்தல்=பொலி தல்; விளங்குதல். அண்ணல்='அண்' என்ற அடிச் சொல்லி லிருந்து பிறந்தசொல். இந்தச் சொல்லின் பொருள் ஆராய்ச்சி அறிதற்குச் செந்தமிழ்ச் செல்வி 9-ஆவது சிலம்பு 9-ஆவது பரல் 390 முதல் 395 வரையுள்ள பக்கங்கள் பார்க்க.

தொடர்வாரவர் தூநெறியார்—தொடர்தல் என்பது தொடர்பை அறிந்து சார்ந்து தொழுதல் என்னும் பொருள்பட நின்றது. ஓர் ஊருக்குப் போகும் வழியிற் செல்லுகிறவர் முடிவில் அவ் வூரை உறுதியாயடைதல் போல, உள்ளம், நா, உடல்களால் சிவபெருமானை உண்மையாய்த் தொழுகிறவர்கள் முடிவில் அவன் அடிகளைச் சேர்ந்து பேரின்பம் அடைதல் உறுதியாதலின் அவர்களை அடிகள் 'தூநெறியார்' என்று கூறினர். கட்டு நிலை யில் உலகச் சிற்றின்பத்தை அடையச் செய்யும் அறநெறியும், வீட்டு நிலையில் பேரின்பத்தை அடையச் செய்யும் அருள் நெறி யும் தூநெறிகளாகும். இவ் விருநெறிகளினின்றும் விலகிய நெறி துன்பத்தை அடைவிக்கும் ஆதலின் தூயதல்லாத தீ நெறி யாகும். தொடர்வார் அவர் என்பதில் அவர் பகுதிப்பொருள் விகுதி. தூநெறியாரே என்பதில் ஏ அசை; தேற்றப் பொருள் கொள்ளினும் பொருந்தும்.

—மா. வே. நெல்லையப்ப பிள்ளை.



சிவஞானபோதக் கருத்து

[திரு. மா. வே நெல்லையப்ப பிள்ளை, பி. ஏ.]

பதிப்புரிமை ஆக்கியோற்குரியது

(முன் ௧௯௬-ஆம் பக்கத் தொடர்ச்சி)

இரண்டாவது அதிகரணம்

எனது உடல் என்றலின் ஆன்மா உளது.

8. தேகான்மவாதி கண்ணுற் காணப்படுகிற உடலே உயிர் அன்றி அதனின் வேறாய்க் காணப்படாத உயிர் என்ற பொருள் வேறே இல்லை என்று கூறுகிறான். அவன் இக் கூற்றின் உண்மையைத் தெரிவிப்பதாக உலகில் "யான்பருத்தேன்," "யான் சிறுத்தேன்," "யான் குறியன்," "யான் நெடியன்," "யான் மனிதன்," முதலியனவாக மக்கள் கூறும் உலகவழக்கை ஏதுவாக எடுத்துக் கூறுகின்றான்.

9. உடலின் வேறாய உயிர் உளது என்பதற்குச் சிறந்த ஏதுக்கள் உளவாயினும் ஆசிரியர் அவை தேகான்மவாதி அறிவுநிலைக்கு எட்டாதனவென அவற்றைக் கூறாது அவன் தனது அறிவுநிலையில் மயக்கம் நீங்கி அடுத்தபடியாயுள்ள அறிவுநிலையை அடையும் வண்ணம் ஆசிரியர் அடியிற் கண்டவாறு அவன் ஏதுவாகக் கூறிய உலகவழக்கு முறையைக் கொண்டே அவனை மறுக்கின்றார்.

10. "யான் பருத்தேன்," "யான் சிறுத்தேன்" முதலியனவாகக் கூறும் உலகவழக்கு, மக்கள் உயிருக்குள்ள குணங்களை உடலுக்கேற்றி உபசாரத்தாற் கூறு முறைமையில் உளதாயினும் அது மக்களுக்குள் சிறுபான்மையே வழங்கப் படுகின்றது. எனது உடல், எனது தலை, எனது கை, எனது கால், எனது உறுப்பு, எனது அறிவு முதலியனவாகப் பெரும்பான்மையும் மக்கள் கூறுகின்றார்களே யன்றி நான் உடல், நான் தலை, நான் கை, நான் கால், நான் உறுப்பு, நான் அறிவு முதலியனவாகக் கூறுவதில்லை. இவ்வாறு உலகவழக்கு முறை

யில் மக்கள் பெரும்பான்மையும் கூறுதலினால் உடலின் வேறாய அவ் வுடலைக் கருவியாய் வழங்குதற்கு அதனை உடையதாயிருக்கிற உயிர் உண்டு என்பது பெறப்படுகின்றது. இதனால் "நீ கூறிய உலகவழக்கு முறை உனக்கு ஏதுவாக அமையாது நான் உடலின்வேறாய உயிர்உண்டு என்று கூறும் உண்மைக்கு ஏதுவாய் அமைந்து அதனை அரண் செய்கிறது என்பது அறிவாயாக".

11. ஆசிரியர் கூறிய மொழியைக் கேட்ட பின்னர் தேகான்மவாதி கூறும் தடைமொழியாவது:—பதி, மனை முதலியனவாயுள்ள பொருள்களை என் பதி என் மனை முதலியனவாய் மக்கள் கூறுதல் போலவே தலை, கை, கால், கண், செவி முதலிய உடலுறுப்புக்களையும் என் தலை, என் கை, என் கால், என் கண், என் செவி முதலியனவாக உலகவழக்கில் கூறுகின்றார்கள். இராகுவை இராகுவினது தலையென்று ஒற்றுமைபற்றியே மக்கள் கூறுகின்றார்கள். ஆதலின் எனது உடல் என்று ஒற்றுமைபற்றிக் கூறும் உலகவழக்கினால் உடலே உயிர் என்பது பெறப்படுகிறது.

12. ஆசிரியர் கூறும் விடை மொழியாவது:—என் பதி, என் மனை முதலியனவாகக் கூறும் உலகவழக்கில் பதி, மனை முதலியன உடலினின்று வேறுபட்ட பிறிதின்கிழமைப் பொருள்கள். அப்பொருள்கள் பலருக்கும் உரியனவாகலாம்; ஒருகாலத்தில் ஒருவருக்கு உரிமையான பதி, மனை முதலியன பிறிதொருகாலத்தில் பிறரொருவருக்கும் உரியனவாகலாம்; அல்லதூஉம் ஒரே புறப்பொருள் ஒரே காலத்தில் பலருக்கும் உரியதாயிருக்கலாம். ஆனால் தலை, கை, கால், கண், செவி முதலிய உடலுறுப்புக்கள் உடலினின்று வேறாய்ப் பிரிக்கப்படாதனவாயும் உடலோடு ஒற்றுமையுடையனவாயு முள்ள தற்கிழமைப் பொருள்கள். அப் பொருள்கள் அவ்வுறுப்புக்களிருக்கிற உடலினை உடையவனுக்கன்றி வேறெவருக்கும் உரிமையுடையன வாகா. ஆதலின் பதி, மனை முதலிய பிறிதின் கிழமைப் பொருள்களுக்கும் தலை, கை, கால், கண், செவி முதலிய தற்கிழமைப் பொருள்களுக்கும் பெரிதும் வேறுபாடு உளது. நீ உலகாயத நூல் கேட்கு முன்னர் பதி, மனை முதலிய பிறிதின் கிழமைப் பொருள்களையே உயிரெனநினைத்து அவற்றைத் தனித்தனி "எனது பொருள்" என்று தற்கிழமைப் பொருள்படக் கூறி மயங்கினின்றாய்; அதுபோல உலகாயதநூல்கேட்டபின் நீஉனவல்லனவாகிய பதி, மனை முதலிய பிறிதின் கிழமைப் பொருள்களை உனது உடலினின்று வேறாகப் பிரித்து அறிந்தாலும் நீ அல்லாத உனது தலை, கை, கால்,

கண், உடல் முதலிய தற்கிழமைப் பொருள்களை உன்னினின்று வேறாய்ப் பிரித்தறியாமல் அவற்றை உன்னோடொற்றுமைப் பட்ட பொருள்களாக மயங்கி அறிகின்றாய். நீ உடலைப் பொருளாகக் கொண்டால் தலை, கை, கால் முதலியன தற் கிழமைப் பொருள்களாகும். உயிரைப் பொருளாகக் கொண் டால் தலை, கை, கால் முதலியனவும் உனக்கு வேறாயுள்ள பிறிதின் கிழமைப் பொருளாகும். பிறிதின் கிழமைப் பொருள் தற்கிழமைப் பொருள் என்ற சொற்றொடர்களால் மயங்காது நீ உற்று நோக்கி ஆராய்வாயாயின் அத் தலை, கை, கால்கள் முதலியன உனக்கு வேறாய்த் தோன்றும். உடலின் வேறாய உயிரிருக்கிறதா இல்லையா என்று பார்ப்பதற்கு, உடல் பிண மான பொழுது எல்லா உறுப்புக்களும் உயிரிருந்த காலத்தி லிருந்தனபோ லிருந்தும் அது அசையாமற் கிடப்பதை உற்று நோக்கி அறிவாயாக.

மூன்றாவது அதிகரணம்

ஐம்புலன் அறிதலின் ஆன்மா உளது.

13. உடலானது உயிரன்று என்ற உண்மை பொருந்தும். உலகிலுள்ள நுகர்வுப்பொருள்களாகிய நாற்றம், சுவை, உரு வம், ஊறு, ஓசைகளை முறையே உடலின்கண்ணுள்ள மூக்கு, வாய், கண், மெய், செவி ஆகிய அறிவுப் பொறிகள் அறிகின் றன என்று நாம் கண்கூடாய் நேரில் அறிகின்றோம். ஆதலின் அந்த ஐம் பொறிகளுமே அறியும் பொருளாகிய உயிர் என்று இந்திரியான்ம வாதி கூறுகின்றான். ஆசிரியர் இந்திரியான்ம வாதி கூறிய மொழியைக் கேட்டு அவன் அறிவுப் பொறிக ளாகிய கருவிகளை உயிரென மயங்கும் மயக்கத்தை நீக்கும் பொருட்டு அவன் கூறியமுறைமையில் வைத்தே அவனை மறுத் துரைக்கின்றார்.

14. ஆசிரியர் கூறும் விடைமொழியாவது:—நீ கூறுகிற படியே உடலின்கண் ஐம்பொறிக ளிருக்கின்றன. மூக்குப் பொறியானது நாற்றத்தை அறியுமேயன்றி வாய்ப்பொறி அறிகிற சுவையை அறியமாட்டாது. வாய்ப்பொறி சுவையை அறியுமேயன்றி மூக்குப்பொறியறிகிற நாற்றத்தை அறிய மாட்டாது. இவ்விரண்டு பொறிகளும் பிறபொறிகள் அறி கிற உருவம், ஊறு, ஓசைகளை அறியமாட்டா. இவ்வாறே பிறபொறிகளினும் ஒன்று அறிந்ததைப் பிறிதொன்று அறிய மாட்டாது. ஆதலின் ஐம்பொறிகளையும் அறியும் கருவிப் பொருள்களாகக்கொண்டு அவற்றிற்குவேறாய் அறியும் பொரு ளாய உயிர் என்ற பொருளொன்றுண்டு என்பது அறிவாயாக.

15. ஆசிரியர் கூறியதைக் கேட்ட இந்திரியான்ம வாதி கூறும் தடைமொழியாவது :—ஐந்து பொறிகளில் ஒருபொறி அறிந்ததைப் பிறிதொருபொறி அறியாது என்று நீர் கூறியதை நான் ஒப்புக்கொள்கிறேன். உடலிலுள்ள ஐம்பொறிகளையும் ஐந்து உயிர்கள் என்று கருதி அவை நாற்றம், சுவை, உருவம், ஊறு, ஓசைகளை அறிகின்றன என்று ஏன் கூறுதல் கூடாது? ஒருயிரே ஐம்பொறிகளையும் கருவிகளாகக் கொண்டு நாற்ற முதலியவற்றை அறியும் என்பதற்கு என்ன பிரமாணம் இருக்கிறது?

16. இந்திரியான்ம வாதி கூறிய தடைமொழியைக் கேட்டு அவன் கருவிப்பொருளையே உயிர் என்று கொள்ளும் மயக்க அறிவாலுண்டாகிற ஐயத்தை நீக்கும் பொருட்டு ஆசிரியர் பின் வருகிறபடி சூத்திரத்திலுள்ள எடுத்துக்காட்டுச் செய்யுட் பொருள்களைக்கூறி அவனை மறுக்கின்றார்:—

17. மூக்கு முதலிய ஐம்பொறிகளும் உயிரினாலேவப்பட்டு முறையே நாற்றம் சுவை முதலிய உலக நுகர்வுப் பொருள்களை அறியுமே யன்றித் தனித்தனி அவ்வப்பொருளை அறிந்ததாக உணர மாட்டாது. அவ்வாறு பொறிகளுக்கு உலகப் பொருள்களை அறிதல் மாத்திரமன்றி அவற்றை உணர்கின்றதாக உணரும் உணர்வும் இல்லையாயின் நினைப்பு (Memory) என்பது ஒன்றில்லாமற்போம். நினைப்பு இல்லையாயின் உலகில் இப்பொழுது நாம் காண்கிறபடியுள்ள அறிவு வளர்ச்சியே மக்களுக்கு இல்லாமற்போம் ஆதலால் நீ கூறுவது அடாது. ஐம்பொறிகளுக்கும் வேறாய் அவற்றைக் கருவிப் பொருள்களாகக் கொண்டு உலக நுகர்வுப் பொருள்களைக் கண்டு கேட்டுண்டுயிர்த்துற்று அறிந்தும் அவ்வாறு அறிந்ததை நான் அறிகிறேன் என்ற உணர்வும் (Self-consciousness) உடைய உயிர் என்ற பொருள் ஐம்பொறிகளுக்கும் வேறாய் உண்டு என்பது அறிவாயாக.

நான்காவது அதிகரணம்

ஒடுக்கம் அறிதலின் ஆன்மா உளது.

18. ஐம்பொறிகளும் உயிர் அல்லவாயினும் அவ்வைம் பொறிகளுக்கு வேறாய்ப் புறத்து நிகழாது அகத்தே நின்று ஐம்பொறிகளையும் செலுத்தி உலக நுகர்வுப் பொருள்களைப் புரியட்ட தேகம் என்று கூறப்பட்ட சூக்குமதேகம் அறியும் ஆதலின் அந்தச் சூக்குமதேகமே உயிர் என்று சூக்கும தேகான்மவாதி கூறுகின்றான்.

19. சூக்குமதேகான்மவாதி கூறியதைக் கேட்ட ஆசிரியர் அவனும் முன்னைய கொள்கையர்களைப் போல உயிர் அறிதற்கு ஏதுவாயுள்ள கருவிப்பொருள்களில் ஒன்ருகிய சூக்கும தேக (நுண்ணுடலை) உயிர் என மயங்கி அறிகின்ருன் என்பதை அறிந்து அம்மயக்கத்தைத் தீர்க்கும்படி அவன் கூறிய ஏதுவைக் கொண்டே அடியிற் கண்டவாறு மறுத்துக் கூறுகின்ருர்:—

20. சூக்கும தேகமே உயிராயிருந்தால் அவ்வுயிர் அச்சூக்கும தேகத்தில் நிகழ்ந்த கனவுச் செய்திகளைக் கனவு நீங்கிய நனவின்கண் மயங்காது சூக்கும தேகத்தில் நிகழ்ந்தவாறே அறிதல் வேண்டும். அவ்வாறு உலக அநுபவத்தில் நாம் காணவில்லை. சூக்கும தேகத்தில் நிகழ்ந்த கனவுச்செய்திகள் அவ்வாறே நனவின்கண் அறியப்படாமல் மயங்கியும் பிறழ்ந்தும் அறியப்படுகின்றன; அவை முற்றும் அறியப்படாமலும் போகின்றன. ஆதலால் சூக்கும தேகத்துக்கு வேருய் அச்சூக்கும தேகத்தையும் அதற்குப் புறம்பாயுள்ள தூல தேகத்தையும் கருவிகளாகக் கொண்டு அறியும் உயிர் ஒன்று உளது என்று நாம் கோடல்வேண்டும். உயிர் என்ற தனிப்பொருள் இரண்டு தேகங்களையும் வேறுவேறு காலத்தில் கருவிகளாகக்கொண்டு அறிதலினுலேதான் ஒரு காலத்தில் கனவின்கண் அறிந்த செய்திகளைப் பிறிதொரு காலத்தில் நனவின்கட் பிறழ்ந்தும் அறிந்தும் அறியாமலும், அவ்வாறே நனவின்கட் கண்ட செய்திகள் கனவின்கண் அறியப்படாமலு மிருக்கின்றன. இதனை நீ உற்றுநோக்கிச் சூக்கும தேகத்துக்கு வேருய உயிர் உண்டு என்ற உண்மையை அறிவாயாக. (தொடரும்)

மும்மையாலுலகாண்ட மூர்த்தி

[வித்வான் திரு. T. P. மீனுட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் M. A., B. L.]

(கஙஅ-ஆம் பக்கத் தொடர்ச்சி)

தமிழின்பம்:—இத்தென்றற் காற்று ஊற்றின்பத்தையேயன்றி இயற்கையன்னை யூட்டும் ஐம்புலவின்பத்தையும் காட்டும் அடையாளமாக இங்கு விளங்குகிறது. இவ்வாறு ஐயுணர்வெய்தி மனமொருமுகப்பட்டு அலைவற்று நின்றபோது மெய்யுணர் வூட்டும் தமிழ்க்காற்று வீசுகின்றது. அத்தென்றலே போல அம்மலயமலையிலே அகத்தியரிடத்தே வளர்ந்த தமிழும்

செவ்வி மணஞ்செய்யீரம் தருகின்றது. ஈரமாவது அன்பு. செவ்வி மணமாவது இயற்கைப் புணர்ச்சியாகிய திருமணம். அதனை விளைவிக்கும் அன்பே செவ்வி மணஞ்செய் ஈரமாம் என்க. நக்கீரனார் களவியற்கு உரை காணும்போது, தூய்மையான அன்பின் வடிவத்தைக் காதலன் காதலி மேலாக்கி, அதனைச் செல்வத்தை நாடியும், அழகை விரும்பியும், இன்பத்தைக் குறித்தும், அறிவை வியந்தும் இன்னும் பலவற்றைக் கருதியும் எழும் அவாவினின்றும் வேறுபிரித்து, "அவனே தானே ஆகிய அந்நெறி ஏகனாகி இறைபணி நிற்பதுபோல" இந் நாட்டங்கள் எல்லாம் இன்றி "அவளே தானே தமியர் காணக் காமப்புணர்ச்சி இருவயினொத்தல்" ஆகி நானென்ற முனைப்புங் கெட்டு, அவ்விருவரும், பால்வழியோடிக் கடவுளியக்க இயங்கி, ஓராவிற் கிருகோடு ஒருங்கே தோன்றினாற் போல அவ் விருவர் மனத்தும் ஒருங்கே அன்புதளிர்க்க இயைவதே அன்பினைந்திணைக் களவெனப்பெறும் எனவிரித்து விளக்குகின்றனர் அல்லரோ? அதுபற்றியன்றோ இல்லது இனியது நல்லதெனப் புலவரான் நாட்டப்பட்டதென நக்கீரர் கூறும் இவ்வியற்கைப் புணர்ச்சி தெய்வப் புணர்ச்சி அல்லது கடவுட்புணர்ச்சி என்றும் பெயர் பெறுகிறது! கண்டது கொண்டுகாணாததை விளக்குமுறையைப் பின்பற்றிக் காதலன் காதலிமேல் வைத்துக் கூறினார்களேனும், ஆங்கு ஆராயப் படுவது உண்மை யன்பின் வடிவே யன்றோ? அம்முறையே காதலன் காதலிமேல் வைத்துச் செவ்விமணஞ்செய் ஈரம்— என்றாரேனும், இங்கும் உண்மையின் பின் வடிவமே சுட்டப் படுகின்றதென்று கொள்க. இதனுண்மைவடிவ மறியாது சில போலிச் சமணர் இதனைப் பழிப்பதற்கு இத்தமிழ் நாட்டிலிடமுண்டோ? இவ்வன்பன்றோ கடவுள் வடிவம்! அருகனார் விளக்கிய அருள் இதன் வடிவமேயன்றோ? தமிழ் என்றால் இனிமை என்று பொருள் காண்கின்றனர் பெரியோர். தமிழே ஈரமாம். தெய்வத்தமி ழென்றாராதலின் அவ்வீரமும் செவ்வீரமாயிற்று. ஞாலமளந்தமேன்மையுடையதாதலின் எங்கும் மணமுடையதாய்ச் செவ்விமணஞ் செய்யீரமாயிற்று. இயற்கைப் புணர்ச்சியை மணம் என்பதும் ஞாலத்தாரனைவரும் அதனை நன்றென உட்கொள்வதாலன்றோ? எனவே செவ்விமணஞ்செய்யீரம் தமிழின் தனிச்சிறப்பியல்பாய் அதன் வடிவமேயாகிறது என்க. அன்பினை விளக்குவதாலன்றோ இத்தமிழ், நம்நாட்டளவில் நில்லாது உலகையே யளந்து காண்கிற மேன்மை பெறுகிறது! அன்பும் சிவமும் ஒன்றாதல் அறிந்த பின் அன்பே சிவமாய் அமர்ந்திருப்பராதலின் அன்பு வடிவாம் தமிழ், கடவுள் வடிவாம் தமிழுமாகிறது.

தென்றலாம் தமிழ்:—ஒப்புமைக் கூட்ட வணியிலும் ஒப்புமை உள்ளே ஒளிர்தலின் தென்றற்குக் கூறிய அடைகளைத் தமிழுக்கும் தமிழ்க்குக் கூறியவற்றைத் தென்றற்கும் கூட்டிப் பொருள் கொள்ளுதலும் தகும். தமிழ்கூறும் இயற்கைப் புணர்ச்சி வளர்வதும், குன்றிடையே வண்டுகள் ஒலிக்கும் சந்தனப் பொழிலிடையே யன்றோ? இயற்கைப்புணர்ச்சி குறிஞ்சி யொழுக்கமென அகப்பொருணூல்கள் கூறுதல் காண்க. "ஞாலமளந்த" என்று தமிழுக்கு அடைகொடுத்தார், தென்றலைக் கால் எனக்கூறலின். தென்றலும் கால்கொண்டு உலகையளத்தல் காண்க. தெய்வத்தமிழ் என்கிறார். ஆளுடைய அரசு, தென்றலைத் திருவடி நிழலுக்கு ஒப்புமை கூறின் அதனையும் தெய்வத் தென்றல்எனக் கூறத் தட்டில்லை யன்றோ? தமிழும் தென்றலும், அகத்தியப் பள்ளியினின்றும் வருகின்றமையால், மேலான கருத்துக்களைக் குறிக்கோளாய்க் கொண்டவை. உடற்கின்ப மூட்டுவதோடு நில்லாது, உள்ளத்திற்கு மின்ப மூட்டி நமது மனத்தை ஒருமுகப்படுத்துகின்றது தென்றல். தமிழும் உள்ளத்திற்கு இன்பமூட்டுவதோடு நில்லாது உயிர்க்கு மின்பமூட்டி உயிர்க் குயிரான ஆண்டவனை இன்ப அன்புவடிவாகக்காட்டி நிற்கின்றது. "ஞாலமளத்தல்" என்றமையால், இவ்விரண்டும் காக்கும் கடவுளாம் திருமாலோடு இகலி, முதனூேக்கிற் சிறியவாய்த் தோன்றிடினும் பின்னரும் நோக்க நோக்க அடிமுடி காணுப்பேருருவாய் ஓங்கிவளர்ந்து தீயவற்றைக் கீழழுத்தி இன்பத்தையூட்டி உலகத்தைக் காத்தலும் கொள்க. தமிழ்நாட்டிற்கே சிறந்த தென்றலையும் தமிழையும் முத்திற்குப் பின்னே இத்துணையழகாகக் கூறுவதனைக்கண்டு அவ்வின்பத்திற்றோய வேண்டாவோ? இப்பாட்டின் நுட்பத்தை உய்த்துணர்ந்து கொள்க. இத்தகைய நாட்டிலே, மனதை ஒருமுகப்படுத்தும் தென்றலினும் அன்புவடிவாம் ஆண்டவனைக் காட்டும் தமிழ் நூல்களினும் உலவுவதைப் பழிப்பார்க்கு நாம் வயிறுபிடிக்க வேண்டாவோ? இத்தென்றலும் இத்தமிழுமன்றோ, இதனால், இறைவனுக்கும் இனியவாயின எனப் பின்வந்தாரும் மனமுருகிப் பாடித் தம்மை மறக்கின்றனர். திருவிளையாடற் புராணம் பாடவந்த பரஞ்சோதியார்,

> "கடுக்க வின்பெறு கண்டனுந் தென்றிசை நோக்கி
> அடுக்க வந்துவந் தாடுவா னுடைவினி ளைப்பு
> விடுக்க வாரமென் காறிரு முகத்திடை வீசி
> மடுக்க வுந்தமிழ் திருச்செவி மாந்தவு மன்றோ"

எனப்பாடுவது இவ்வாறு சேக்கிழார் காட்டிய வழியேயன்றோ? "தரவந்த" என்பதன் நுட்பத்தையும் காண்க.

"ஈதா கொடுவெனு மூன்று முறையே
இழிந்தோனெப் போன் மிக்கானிரப்புரை"

என்றார் பவணந்தியார். தா எனக்கேட்டல் ஒப்போனிரப்புரையாயின் தரல் ஒப்போன் செய்கையேன்றோ? அந்நாட்டிற்கு அம் மலயம், தமிழையும் தென்றலையுந் தந்தது. அந்நாட்டினர்க்கு அவ்விரண்டு தக்கனவாயின்மை இதனால் விளங்கவில்லையா? இதனாலும் அந்நாட்டினரின் பெருமையன்றோ மலயக்குன்றிடை வளரும் விளக்காகப் பிறங்குகிறது?

செந்தமிழ்த் திருமந்திரம்

[நவாலியூர், சோ. பாலசுப்பிரமணியம் (இளமுருகனார்)]

(ககB-ம் பக்கத் தொடர்ச்சி)

இனி, இம்மந்திர நூல்கள் தோன்றிய வரலாறு சொல்லுதும் :—

இற்றைக்கு ஓர் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் சோழ மரபிலே 'அபயகுல சேகரன்' என்னும் பெயர் பூண்ட அரசனொருவன் தெய்வச் சிவநெறியினும் செந்தமிழ் மொழியினும் வரம்பிறந்த பேரன் புடையவனாய் அரசியல் நடாத்திவந்தான். ஒருநாட் சிவனடியார் சிலர் அவ்வரசனது அவைக்களம் புகுந்து, மூவர் தேவாரத் திருமந்திரச் செய்யுட்களில் ஒரோவொன்றைப் பண்ணோடு பிழைதப ஓதினர். ஓதக்கேட்ட அம் மன்னர்பிரான் நெஞ்சம் நெக்குருகி அத்தேவாரத் திருமந்திரங்களைத் தேடியெடுக்க யாண்டும் தலைப்பட்டும் அகப்படாமை கண்டு துன்பமுழந்திருந்தான். இருந்தவன், பொல்லாப் பிள்ளையார் அருள்பெற்ற நம்பியாண்டார் நம்பி என்பவரின் பெருமையைப் பலரால் நன்கு தெரிந்து, அவருழைச் சென்று தம் பெருங்குறையை முறையிட்டான். அந்நம்பியாண்டார் நம்பி பொல்லாப்பிள்ளையாரின் பேரருளினாலே தேவாரத் திருமந்திர ஏடுகள் வைக்கப்பெற்ற இடத்தைத் தெரிந்து அரசர்க்குணர்த்தினர். உணர்த்தக் கேட்ட வேந்தனும் நம்பியாரும் சிதம்பரத்தை நண்ணி, ஐந்தொழில் நாடகவண்ணலுக்குச் சிறப்பாகத் தளிர்தூவிப்போற்றி வழிபாடு உஞற்றி, நால்வர் திருவுருவங்களையும் அழகுபெறச் செய்து திருவுலாவெடுத்துத் தேவாரத் திருமந்திர ஏடுகள் வைக்கப்பெற்றிருந்த அறைக்கு முன்பு நிறுத்தி அம் மந்திர ஏடுகளைக் கண்டெடுத்தார்கள்.

அவற்றை வான்மீகம் மூடியிருக்கக்கண்டு உள்ளம் உடைந்து பெரிதும் வருந்தினர்கள்.

அவ்வமயத்து, "அன்பர்களே! இக்காலத்து வேண்டுவன தந்து எஞ்சியன மறைந்தொழியச் செய்தேம்" என்றோரோசை எல்லார்க்குங் கேட்கும்படியாக முதல்வனுணையால் விசும்பகத்தெழுந்தது.

அதுகேட்டுக் கவலைதபுத்துத் திருமந்திர ஏடுகளையெடுத்துத் திருமுறைகளாக வகுப்பான் தொடங்கினர்.

திருஞான சம்பந்தப்பெருமான் அருளிச்செய்த தேவாரப் பதிகங்களை முதன் மூன்று திருமுறைகளாகவும், திருநாவுக்கரசு அடிகள் அருளிச்செய்த திருப்பதிகங்களை நாலாவது ஐந்தாவது ஆறுவது திருமுறைகளாகவும், சுந்தரமூர்த்தியடிகள் அருளிச்செய்த தேவாரப்பதிகங்களை ஏழாவது திருமுறையாகவும், வகுத்து முடித்தனர். முடித்தபின்னர் மணிவாசகப் பெருமான் அருளிச்செய்த திருவாசகம் திருச்சிற்றம்பலக்கோவையார் என்னும் இருநூல்களையும் எட்டாவது திருமுறையாகவும், திருமாளிகைத் தேவர், சேந்தனர், கருவூர்த்தேவர் என்றித் தொடக்கத்தார் ஒன்பதின்மர் பாடிய திருவிசைப்பாவும் அவ்வொன்பதின்மருள் ஒருவராகிய சேந்தனர் பாடிய திருப்பல்லாண்டும் ஆகிய இரண்டையும் ஒருங்கு கூட்டி ஒன்பதாவது திருமுறையாகவும் வகுத்தனர்.

பின்னர், திருமூலர் செய்தருளிய திருமந்திரம் என்னும் தமிழாகமத்தைப் பத்தாவது திருமுறையாகவும், திருவாலவாயுடையார், நம்பியாண்டார்நம்பி, காரைக்காலம்மையார், நக்கீரனர் என்றிவருள்ளிட்டார் பன்னிருவர்பாடிய நாற்பது மந்திரத்தொகை நூல்களையும் பதினொராந் திருமுறையாகவும் வகுத்தாரென்பது.

இவ்வாற்றான் செந்தமிழ்மொழிக் கண்ணுள்ள மந்திர நூல்களை யெல்லாம் ஓர் அடைவுபடுத்துப் பதினொரு திருமுறைகளாக வகுத்தருளிய பின்னர், பொல்லாப் பிள்ளையாரறிவுறுத்தியபடி, நம்பியாண்டார் சுந்தரமூர்த்தியடிகள் அருளிச் செய்த திருத்தொண்டத் தொகையை முதனூலாகக் கொண்டு அறுபத்துமூன்று தனியடியாரும் ஒன்பது தொகையடியாரும் ஆகிய உண்மைச் சிவதொண்டரின் உண்மைநிலையையும், அவர் தாம் சைவ ஒழுக்க நெறிநின்று ஆண்டவன் திருவுள்ளக்குறிப்பையும் மக்கட் பிறவியின் விழுமிய நோக்கத்தையும் முட்டின்றி யினிது முடித்த தனிப்பெருந் திறனையும்

"திருத்தொண்டர் திருவந்தாதி" என்னும் நூலால் விரித்துரைத்தருளினர் என்பது.

இது நிகழ்ந்து ஒரு நூறுயாண்டு கழிந்தபின்றை, குலசேகரவேந்தன் வழித்தோன்றலாய்ப் பிறந்த அநபாய சோழன் காலத்திலே சேக்கிழார் அடிகள் பிறந்து, அவ்வேந்தன் வேண்டுகோளின்படி நம்பியாண்டார் நம்பி முன்பு பாடிய திருவந்தாதியை விரித்துத் திருத்தொண்டர் புராணம் என்று சொல்லப்படும் பெரிய புராணத்தை யிறைவன் திருவருட்டுணையாற்பாடி முடித்தார். அத்திருத் தொண்டர் புராணத்தை முன்னர்த் தொகுத்த பதினொரு திருமுறைகளோடு பன்னிரண்டாவது திருமுறையாக அடைவுபடுத்தினர். படுத்திய பின்னர் அவை தம்மைச் செப்பேட்டிலே செவ்வனே பொறித்துக் கூத்தப்பிரானின் தூயதிரு முன்பு வைத்தாரென்பது.

என்றிதுகாறும் விரித்துரைத்தவாற்றான் செந்தமிழ்த் திருமந்திர நூல்கள் ஆகிய பன்னிரு திருமுறைகளின் பிறப்பும், அவை தம்மைப் பின்னர் அடைவுபடுத்தி வரையறுத்துத் தொகுத்த வரலாறும், கூறப்பட்டன.

இனி, இப்பன்னிரு திருமுறைகளையும் மந்திர நூல்கள் என்று குறியீடு செய்தல் அமையுமோவெனின், அமையும்; அது காட்டுதும்.—

"கண்ட பெருமந்திரமே மூவர்பாடல்"

என்றும்,

"மந்திரங்க ளெழுகோடி யாதலினால் மன்னுமவர்
இந்தவகை திருமுறைகள் ஏழாக வெடுத்தமைத்துப்
பந்தமுறு மந்திரங்கள் பதினொன்று மாதலினல்
அந்தமுறை நான்கினொடு முறைபதினொன் றாக்கினர்"

என்று திருமுறைகண்டபுராணமுடையார் கூறுதலானும், "ஒண் செந்தமிழ் மந்திர ஏடு" என்று பெரும்பற்றப் புலியூர் நம்பி, திருவிளையாடற் புராணத்துட் கூறுதலானும், அவை தம்மை மந்திர நூல்கள் என்று குறியீடு செய்தல் பெரிதும் இயை புடைத்தாம் என்க.

பண்டொருநாள் நுதல்விழி நாட்டத் திறையோனைத் தூதுவிடுத்தும், முதலைவாய்ப்பட் டிறந்த மதலையஞ் செல்வனை நல்லுயிர் பெற்றெழச் செய்தும், எற்புக்கூட்டங்களை ஓர் ஏலவார் குழலியாக்கியும், மறைக் கதவினைத் திறந்தும், மூங்கைப் பிள்ளையை மணிவாய் மலரச்செய்தும் வந்தது நம்செந்தமிழ்த்

திருமந்திரங்கள் என்று உணர்ந்துகொள்க. இவற்ருனும் இத் திருமுறைகள் மந்திர நூல்களாம் என்றறிக.

"பந்தமுறு மந்திரங்கள் பதினென்று" என்று திருமுறைகண்ட புராணமுடையார் பதினெரு திருமுறைகளையுமே மந்திரநூல்களென் றுரைத்தலினல், பன்னிரண்டாவது திருமுறையும் மந்திரநூ லாகாதோவெனின்; அஃதாமாறு காட்டுதும் :—

தவத்தினலே மனத்தூய்மை பெற்று மெய்யுணர்ந்து அவாவறுத்து வீடு பேறு தலைக்கூடியதனல் தூய பேரறிவு விளக்கம் வாய்க்கப் பெற்ற சேக்கிழார் அடிகளால் அத் திருத்தொண்டர் புராணம் செய்தருளப் பட்டமையானும், மற்றந் நூலுக்கு 'உலகெலாம் உணர்ந்தோதற் கரியவன்' என்று முழுமுதற் றலைவனல் அடியெடுத்துக் கொடுக்கப்பட்டமையானும், சைவ ஒழுக்க நெறிநின்று மக்கட் பிறவியின் விழுமிய நோக்கத்தை இனிது நிறைவுசெய்த திருஞான சம்பந்தப் பெருமான், திருநாவுக்கரசு அடிகள், முதலாம் தவப்பெரியார் அருள்கொண்டு கிளந்தவிடத்தும் அன்றி வெகுண்டு கிளந்தவிடத்தும் அவர் தம் ஆணை தப்பாது அவ்வப்பயனை யுய்த்த மந்திரச் செய்யுட்களின் பெருமையை விரித்துரைத்தலானும், 'பாவை பாகர் சிறந்த திருமுறை' என்று இந்நூலை உமாபதிசிவனர் எடுத்தோதுதலானும், அநபாய சோழன் தொன்றுதொட்டு இன்றுகாறும் சிவநெறித் தொண்டரால் ஓம்பப்பட்டும் ஓதப்பட்டும் வருதலானும், அவ்வாற்ருன் ஓதிவந்தார் ஆக்கமும் சிறப்பும் பிணிநீக்கமும் பெற்று நல்வாழ்வுற்று நின்றமை தெரியக் கிடத்தலானும், இக்காலத் தோதுவார் மேலே சொல்லிய பெரும்பயன்களைத் தப்பாது பெறக் காண்டலானும், இத்திருத்தொண்டர் புராணம் என்று சொல்லப்படும் பன்னிரண்டாவது திருமுறையும் மந்திரநூலாமென்றுணர்க. எனவே, பன்னிரு திருமுறைகளும் முதல்வன் பேரருட் பெருக்கத்தால் செந்தமிழ் மொழிக்கண்ணே தோன்றிய விலைமதிப் பறியாப் பெருமந்திர நூல்களாம் என்று கடைப்பிடிக்க.

இம்மந்திர நூல்கள் ஒருசிறிது ஆற்றலும் கடவுட் பெற்றியும் உடைய உயிர்த் தொகுதிகளையும், அவை தாமும் வாய்க்கப் பெருத உயிர்த் தொகுதிகளையும், கடவுளர் என்று கொள்ளாது அவற்றை யெல்லாம் உயிர்களே யென்ருெதுக்கி யாண்டும் ஒழிவற நிறைந்து நின்று எல்லாப் பொருள்களையும் இயக்கி, உலகத்தை நடைபெறச் செய்யும் சிவபிரானையே

முழுமுதற் கடவுளாகக் கொள்கின்றன. கடவுள், உலகம், உயிர் என்னும் முப்பொருளின் உண்மைகளையும் கடவுள் உலகெலாமாகி வேருய் உடனுய் நிற்கும் நிலையையும், உயிர்கள் தம்மை நெருங்கப் பிணித்த இருண்மலப் புணர்ப்பினின்றும் நீங்கித் தூய்மைபெறும் பொருள்களையும் மிகவும் திட்ப நுட்பமாக அறிவுறுத்துவனவாம். அவற்றை ஈண்டு உரைப்பின் வரம்பு கடந்து பெருகும்.

இனி இம் மந்திர நூல்களை யாம் ஓதவேண்டிய முறை பிறழாது உண்மை நம்பிக்கையும் பேரன்பும் வைத்து ஒழுங்கு தப்பாது ஓதிவருவோமாயின், உடப்போடு மருவி வாழுங் காலத்து யாம் வேண்டும் பொருட் செல்வம், கல்விச்செல்வம், மக்கட்பேறு, பிணி நீக்கம், பகைத்தபுதி முதலா மார்க்கமும், ஊழ்வினையான்வரும் பேரிடர் இறப்பு முதலியவற்றின் நீக்கமும், பிறவும் மாணப்பெற்று இறுதியில் வீட்டின்ப நுகர்ச்சியும் பெறுதல் ஒருதலை.

இம்மந்திர நூல்கள் எழுந்த ஞான்று செய்த தெய்வச் செயல்களும், பெருமையும், அவை தம்மை ஓதும் முறையும், பயனும், என்ற இவற்றைக் காலம் வாய்ப்புழி இவ்வெளியீட்டின் வாயிலாக எழுதி உதவுவல்.

கடல்

(மறைமலையடிகள்)

கடல்—கட்பார்வையினைக் கடந்து நிற்பது.

ஆர்கலி
நரலை
குரவை
அழுவம் } —பேரிரைச்சல் இடுவது.

பரவை—பரந்திருப்பது.

அளக்கர்
பவ்வம்
உவரி } —உப்புநீரை யுடையது.

கார்கோள்—மழை முகிலையுண்டாக்குவது.

முந்நீர்—ஆற்றுநீர், ஊற்றுநீர், மழைநீர் மூன்றுக்குங் காரணமாவது.

ஆழி—ஆழம் மிக்கது.

(சிறுவர்க்கான செந்தமிழ்)

இலக்கணமும் இலக்கியமும்:
LANGUAGE AND LITERATURE

நெடுங்கணக்கு (அரிவரி)

[பண்டித திரு. ஞா. தேவநேயப் பாவாணர்]

(கசு ச-ஆம் பக்கத் தொடர்ச்சி)

இனி, உயிரொலியும் மெய்யொலியும் உயிரும் மெய்யும் (Life and body) கூடிய உயிர்மெய் (பிராணி) போல ஒன்றி ஒலிப்பது உயிர்மெய்வரிகளாற் குறிக்கப்பட்டது. உயிர், மெய், உயிர்மெய் முதலியகுறியீடுள் தமிழரின் தத்துவவறிவை யுணர்த்தும். உயிர்மெய் வரிகளால் ஒலிநூலறிவும் வரிச்சுருக்கமும் பயனும்.

தமிழ் அரிவரியில் உயிர் முன்னும், மெய் பின்னும் ஆய்தம் இடையும், உயிருள் குறில் முன்னும் நெடில் பின்னும், மெய்யுள் வலி முன்னும் மெலி பின்னும் இடை இடையும் வைக்கப்பட்டன.

உயிர்மெய் வரியும் எழுத்து முறையும் தமிழுக்கே சிறப்பாகும். இந்திய மொழிகட்கெல்லாம் இவை பிற்காலத்தே தமிழைப் பின்பற்றி யேற்பட்டன. அரபி, ஹீப்ரு முதலிய சேமியர் (Semitic) கவை மொழிகள் எல்லாவற்றிற்கும், சம்ஸ்கிருத மொழிந்த ஆரியக் கவைமொழிகள் எல்லாவற்றிற்கும் இவையில்லை. எழுத்துக்கள் இங்கிலீஷிற் போல உயிரும் மெய்யும் வேறு வேறு அடுத்தடுத் தெழுதப்படுவதுடன், அரிவரியில் உயிரும் மெய்யும் முறையின்றி மயங்கிக்கிடக்கும். ஆரியமும் சேமியமுமாகிய மேலை மொழிகட்கெல்லாம் உயிர்மெய் வடிவும், எழுத்து முறையும் இல்லாதிருக்கவும், சம்ஸ்கிருதத்திற்கு மட்டும் அவை எங்ஙனமிருந்திருத்தல் கூடும்? சம்ஸ்கிருதத்திற்கு அவை இருந்தனவெனின், அதன் இனமாகிய ஜெர்மன், டச்சு, கிரேக்கு, லத்தீன் முதலிய மொழிகட்கும், அவற்றை அடுத்து வழங்கும் சேமிய மொழிகட்கும் ஏன் அவையில்லை? வடமொழி ஆரியர் இந்தியாவிற்கு வந்தது கி. மு. 3000. அவர் வருகைக்கு முன்னரே தமிழில் எழுத்திருந்தது. அவ்வெழுத்துக்கள் உயிர்மெய் நீங்கலாக 31.

ஒலி முறையினும் சொன் முறையினும் தமிழுக்கு அடுத்துள்ள கிரேக்க, லத்தின் மொழிகளில் முறையே எழுத்துக்கள்

24, 25; வடமொழியில் 48. லத்தின் எழுத்துக்கள் 24, என்றும், 23 என்றும் கணக்கிடுவதுமுண்டு. தமிழிலில்லாத சில செயற்கை யொலிகள் லத்தின், கிரேக்கு மொழிகளிலுள. ஆனால் அவற்றிற் பலவற்றிற்குத் தனி வரிகள் இல்லை. B, G, முதலிய தொனிப் பொலிகட்குத் தனி வரியுள. bh, gh முதலிய மூச்சொலி சேர்ந்த தொனிப் பொலிகட்குத் தனிவரியில்லை. சம்ஸ்கிருதத்தில் அவற்றிற்கெல்லாம் தனிவரி யுண்டு. அதோடு ஞ, ண முதலிய தமிழ் எழுத்துக்களும் சேர்க்கப் பட்டுள. மேலை மொழிகட்கும் தமிழுக்குமுள்ள எழுத்துக்களிற் பெரும்பாலன வற்றிற்குத் தனிவரி யமைத்து வடமொழி யெழுத்துக்களைப் பெருக்கிக் காட்டினர் வடமொழி வாணர். க, ச, ட, த, ப என்று தமிழ் முறையில் வல்லின மெய்யெழுத்துக்களிருப்பதும், k, kh, g, gh என ஒவ்வொரு வல்லின மெய்யும் தொனிப்பதும், தொனியாததும், மூச்சொலி சேர்ந்ததும் சேராததுமாக நந்நான்காக உறழப்பட்டிருப்பதும், சம்ஸ்கிருதத்தின் செயற்கையான எழுத்துப் பெருக்கைக் காட்டும்.

சம்ஸ்கிருதம், கிரேக்க லத்தின் மொழிகளின் திரிபு அல்லது வளர்ச்சி யென்பதற்குப் பல ஆதாரங்களுள. கிரேக்க லத்தின்மொழிகள்ஆரியமொழிகளில்மிகப்பழைமையானவை. கிரேக்க லத்தின் எழுத்துக்களினும் சம்ஸ்கிருத எழுத்துக்கள் மிகுதி. கிரேக்க லத்தினிலுள்ள பல சொற்கள் சம்ஸ்கிருதத்தில் மிகத் திரிந்துள்ளன. சம்ஸ்கிருதம் என்னும் பெயருக்கே நன்றாகச் செய்யப்பட்டது என்பது பொருள். உலகத்திலுள்ள மொழிகள் எல்லாவற்றினும் எழுத்துப் பெருக்கமும் செயற்கை யொலிப் பெருக்கமுமுள்ளது சம்ஸ்கிருத மொன்றே. அதனானேயே அது வழக்கற்றொழிந்தது.

வடமொழி யெழுத்துக்களை 48 ஆகப் பெருக்கி யிருப்பினும், ஒலி முறைப்படி பார்ப்பின், அவற்றிற் புணரொலிகள் அல்லது கூட்டெழுத்துக்கள் பலவாகும்.

ऋ, ऌ என்பவை குற்றியலுகரம் சேர்ந்த ரகர லகரங்களாகும். ॠ என்பது ऋ என்பதன் நீட்டம். अं என்பது அம் என்னும் அசை: அகர உயிரும் மகர மெய்யும் சேர்ந்தது. இவை உயிர்மெய்களும் அசையுமாக விருந்தும் ; உயிரெழுத்துக்களிற் சேர்க்கப்பட் டிருக்கின்றன. எ, ஒ என்ற உயிர்கள் வடமொழிக்கில்லாதது ஒரு பெருங் குறைவாகும்.

மெய் யெழுந்துக்களில் ஐ வருக்கத்தில் h சேர்ந்த எழுத்துக்களெல்லாம் இரட்டை யெழுத்துக்களாகும். சந்தி யக்ஷ

ரங்கள் சில தனி யெழுத்துக்கள் போற் காட்டப்படும். இத னால் வடமொழி யெழுத்துப் பெருக்கினால் ஒரு சிறப்புமில்லை யென்க.

வடமொழி ஆரியர் இந்தியாவிற்கு வந்த பின்னரே உயிர் மெய் வரியும் எழுத்து முறையும் வடமொழிக்கு ஏற்பட்டன. வடமொழி வரிகள் தென்மொழி வரிகளின் திரிபே என்பது இருமொழி வரிகளையும் ஒப்பு நோக்குவார்க்கு இனிது புலனாம். வடமொழி யரிவரி யேற்பட்ட பின் அதை யொட்டி அதன் கிளைமொழிகட்கும் பின்பு தமிழ்க் கிளைமொழிகட்கும் அரிவரி கள் ஏற்பட்டன. இதனால் பெர்சியன் அரபி வரிகளைக் கொண்ட இந்துஸ்தானி யொழிந்த ஏனை யிந்திய மொழிகட் கெல்லாம் உயிர்மெய் வரியும் எழுத்து முறையும் ஏற்பட்டுள.

ஆதியில் ஏனைய மொழிகட்கெல்லா மில்லாது உயிர்மெய் வரிகள் தமிழுக் கிருந்ததினாலேயே, அதன் அரிவரி நீண்டு நெடுங்கணக் கெனப்பட்டது. ஏற்கெனவே நெடுங்கணக்கா யிருக்கும் அரிவரியை (செந்தமிழ்ப் புரவலர் உமாமகேசுவரம் பிள்ளையவர்கள் கூறியபடி) இன்னும் நெடுங்கணக்காக்க நினைப் பது என்னே பேதைமை!

இனி ஒரு மொழிக்கு நிரம்பின அரிவரி யிருப்பினும், பிறமொழிச் சொற்களை அதில் மொழி பெயர்க்கப் போதிய சொற்களுளவா என்று பார்த்தல் வேண்டும். இலவெனின் பிறமொழிச் சொற்களையும் பிறமொழி யெழுத்துக்களையும் அதிற் புதிதாய்ச் சேர்க்க இடமுண்டு. தமிழில் எல்லாப் பொருள்களையும் வெளியிடத் தக்க எண்ணிறந்த சொற்களுள் ளன. ஆதலின் பிறமொழிச் சொற்களையேனும் எழுத்துக் களையேனும் புதிதாய்ச் சேர்க்க எட்டுணையும் இடமின்று. பொருள்களின் சிறப்புப் பெயர் (Proper Name) களே எழுத் துப் பெயர்ப்பிற்கும் (Translation) தற்பவத்திற்கும் இட மாகும். இதற்குப் பிறமொழி யெழுத்துக்கள் வேண்டுவவல்ல. தமிழில் இயன்ற துணை எழுதல் தகும். ஏதேனுங் குறை யிருப்பின் அது எல்லா மொழிகட்கும் பொதுவாகும். இதற் கென்றே தமிழிற் புத்தெழுத்துக்களைச் சேர்ப்பின் தமிழின் தூய்மையும் இயல்பும் எளிமையும் இனிமையும் கெடும். அங் ஙனம் தமிழைக் கெடுத்து வழங்குவதினும், அதை விட்டுவிட்டு அயன் மொழியை வழங்குவதே சாலச் சிறந்ததாம். அதனாற் புத்தெழுத்துக்களைத் தமிழிற் புகுத்தவேண்டும் என்னும் பொருந்தாக் கூற்றைப் புறத்தே விடுக்க.

குறுந்தொகை

மூலமும் விளக்க உரையும்

[இலங்கையடிகள் வித்துவான் இரா. சிவ. சாம்பசிவன்]

(பதிப்புரிமை ஆசிரியர்க்கே)

(கசுஎ-ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாலை

தலைமகன் தலைமகளை உடன்கொண்டு செல்லும்பொழுது இடைச்சுரத்து அவர்களைக் கண்டார் சொல்லியது.

பெரும் பதுமனுர் பாடியது

[இவரை மீளிப்பெரும்பதுமனுர் என்று கூறுப.]

7. வில்லோன் காலன கழலே தொடியோள்
மெல்லடி மேவுன சிலம்பே நல்லோர்
யார்கொ லளியர் தாமே யாரியர்
கயிருடு பறையிற் கால்பொரக் கலங்கி
வாகை வெண்ணெற் றொலிக்கும்
வேய்பயி லழுவ முன்னி யோரே.

என்பது செலவின்கண் இடைச்சுரத்துக் கண்டோர் கூறியது.

பதவுரை:—வில்லோன் காலன கழலே—வில்லையுடையவனுடைய காலினிடத்துள்ளன விரக்கழல்கள்; தொடியோள் மெல்லடி மேவுன சிலம்பே—வளையல்களை அணிந்தவளின் மெல்லிய பாதங்களின் மேலிடத்திருப்பன சிலம்புகள்; நல்லோர் யார்கொல்—அழகிய இவ்விருவரும் யாவரோ? ஆரியர்—கூத்தாடிகள் கயிறுஆடு—(கயிற்றில் ஆடுகின்ற காலத்தில்) கயிற்றில் ஆடிக்கொண்டிருக்கின்ற; பறையின்—அடிக்கப்படுகின்ற பறையைப்போல: கால்பொர—காற்று வீசுதலால்; கலங்கி—நிலை கலங்கி அலைவுற்று; வாகை வெள்நெற்று ஒலிக்கும்—வாகையினது வெள்ளிய நெற்றுக்கள் ஒலிக்கின்ற; வேய் பயில் அழுவம்—மூங்கில் நெருங்கி வளர்ந்த காட்டில்; முன்னியோர்—போகக் கருதி முன்தோன்றிச் செல்பவர்; அளியர்—அன்னுர் இரங்கத்தக்கார். தாம், ஏ - அசைகள்.

அளியர் தாம் ஆரியர் எனக்கொண்டு, “இவர்களின் இருமுது குரவர் இரங்கத் தக்கார்” என்றும் கூறுப.

காலன, மேவுன—குறிப்பு முற்றுக்கள். வில்லோன் தொடியோள்—குறிப்பு வினையாலணையும் பெயர்கள். யார் கொல்—கொல்—ஐயப்பொருளில் வந்ததோர் இடைச்சொல். கயிறுஆடு—ஏழாம் வேற்றுமைத் தொகை. ஆடுபறை—வினைத்தொகை. கால்—காற்று. வாகை—மாவிசேடம். வெண்ணெற்று—வெள்ளை நிறமுடைய முதிர்ந்து உலர்ந்த காய். வேய்—மூங்கில். அழுவம்—பரப்பு, இங்குப் பாலைவனம். பழுவம் எனில் நடுக்கம் தரும் வழி என்க.

முன்னியோர்—போகக் கருதி வந்தோர்; முன்னிடத்திலுள்ளவர்களுமாம். ஆரியர் என்பதற்கு மேலோர், இருமுது குரவர் (தாய் தந்தை) எனப் பொருள் கொண்டு, ‘அளியர் தாமே ஆரியர்’ என்பதற்குத் தலைவன் தலைவிகளின் பெற்றோர்கள் அவர்கள் பிரிவால் கவலுவர் ஆதலின், அவர்கள் துயர்நிலைகுறித்து இரங்கத்தக்கார் என்று கூறுவாரும் உண்டு.

‘வில்லோன் காலன கழலே, தொடியோள் மெல்லடி மேவுன சிலம்பே’ என்று கூறியது;—யாதொரு பாரமுமின்றியும் செல்லற்கரிய இக்கொடும் பாலைவனத்தில், வில்லையும் கழலையும் சுமந்த தலைவனும், தொடியும் சிலம்பும் சுமந்த தலைவியும் வருந்திக் கடந்து செல்லல் நோக்கிக் கண்டோர் இரங்கிக் கூறியவாறும்.

‘தொடியோள் மெல்லடி மேவுன சிலம்பு’—பெண்களின் கால்களில் அணியப்படும் சிலம்பு வதுவைக் காலத்துக் கழற்றப்படுதல் மரபு. தலைவி சிலம்பணிந்தவாறு தலைவனோடு செல்கின்றாள் என்பதால் தலைவன் தலைவியைக் களவிற்கொண்டு செல்கின்றான் என்று கண்டார் அயிர்த்தற்குக் காரணமாயிற்றென்க.

“போக்கெல்லாம் பாலை,” என்பதும், “கொண்டு தலைக் கழியினும்” என்பதும் இங்கு அறியத்தக்கன.

மேற்கோள் விளக்கம்

1. “வில்லோன் ....அளியர் தாமே”—எனும் செய்யுளுள் பெயர் வினைகளின் ஈற்றின் நின்ற ன, ள, ர, யக்களின் அயலிலுள்ள ஆகாரம் ஓகாரமாகவும் பெறும் என்பதற்கு மேற்கோள்.

—(நன்னூல்—மயிலை, 226 பக்.)
—(நன்னூல்—சங்கரநம, 187 பக்.)

2. "வில்லோன்..........முன்னியோரே"—"இஃது இடைச் சுரத்துக் குறும்பினுள்ளோர் இவரைக் கண்டு கோள் இழைப்புற் றோர்க்கு அவர் பெண்டிர் கூறியது; இவை செலவின்கட் கூறியன."

—(தொல்—அகத்—நச், 100)

3. "சேய் நிலைக்கு அகன்றோர் செலவினும் வரவினும்" என் பதற்கு—"வில்லோன்........முன்னியோரே." மேற்கோள்.

—(தொல்—அகத்—இளம்பூ—37 பக், சூ. 43)

4. "வில்லோன்........அளியர் தாமே"—எனும் செய்யுளுள் ஆகாரம் ஓகாரமாய்த் திரியும் பெயருமுள என்பதற்கு மேற்கோள்.

—(தொல்—சொல்—இளம்பூ, சூ. 192)

—(தொல்—சொல்—தெய்வச்சிலை, சூ. 188)

—(தொல்—சொல், சூ. 195)

5. "வில்லோன்........சிலம்பே" —செவிலிக்குக் கண்டோர் கூறியது. —(தொல்—செய்யுளியல், 498)

6. "வில்லோன் காலன கழலே"—எனும் பாட்டில், வில்லோ னும் தொடியோளும் பொருளெனப்படும். "வேய்பயில் அழுவம் முன்னியோரே" என்பது அப்பொருள் நிகழ்ச்சியான் இறந்த காலம் எனப்படும். அப்பாட்டிற்குச் சிறந்தார் அவராகலின் அவரே பொரு ளாயினர் என்பது." (—தொல்—செய்யுளியல், பக். 506)

7. "வில்லோன்........முன்னியோரே"—சுரத்திடைச் செல் லும் தலைமகனையும் தலைமகளையும் கண்டு எதிர் வருகின்றோர் யார் கொல் இவ்வாறு போந்தார் எனச் சொல்லியதற்கு மேற்கோள்"

(—இறையனாரகப் பொருள்—பக். 166)

8. "வில்லோன்......—சிலம்பே"

"வில்லோன் விறலடி மேலன பொற்கழல் வெண்முத் தன்ன, பல்லாவிணை யடிமேலன பாடகம்".

—(இறையனாரகப் பொருள்—மேற்கோள்—பக். 166)

9. "வாகை வெண்ணெற்றொலிக்கும்"

"வாகைவிரிந்து வெண்ணெற்றொலிப்ப."

—(காரைக்காற்பேய்—மூத்த திருப்பதிகம், 3—1)

10. "செற்றவிளை யுழிஞ்சில் வற்றலார்க்கும்"—(குறுந்.—39.)

11. இச்செய்யுளைக் "கண்டார் அயிர்த்தல்" என்னும் துறைக்கு உதாரணமாகக் காட்டுவர்.—(நம்பி யகப்பொருள்—ரங்கப் பதிப்பு)

12. "வில்லோன் காலன......சிலம்பே"—என்பது நற்றிணை உரையிற் காணும் மேற்கோள்.

13. "மாதர்க்குக் காலணியாகிய சிலம்பு, வதுவைக் காலத்தில் கழற்றுதல் மரபு; அங்ஙனமாக இவள் சிலம்பணிந்தபடி ஓராடவனுடன் செல்லக் காண்டலால் களவினிற் கொண்டு தலைக்கழியப் பெறுவளா மென்றேனையோர் அயிர்த்துக் கூறியதாயிற்று"

—(நற்றிணை 2 உரை)

" வேம்பயில் அழுவம் "

14. "வெவ்வளி வழங்கும் வேய்பயில் அழுவம்"

—(நற்றிணை 46)

15. "வேய்பயில் அழுவ முவக்கும்"

—(தோல்—அகத், 44 சூ. இளம்பூ—உரை மேற்கோள்)

16. "வில்லோன் காலன கழலே தொடியோள்
மெல்லடி மேவுன சிலம்பே நல்லோர்"

என்றமையால் இருவரும் பெருஞ்செல்வத்தினர் என்று குறிப்பித்தவாறு.

"வில்லோன் காலன கழலே" என்றமையால் தலைவன் வலிமையையும் விளக்கியவாறுமாயிற்று.

'அழுவம்'—"மாதவத் தாட்டியும் மயங்கதர் அழுவத்து"

—(சிலப்பதிகாரம்—காடுகாண் காதை, 206)

மெய்ப்பாடு :—பிறன்கண் தோன்றிய வருத்தம் பற்றிய இளிவரல் என்னை? "மூப்பே, பிணியே, வருத்த மென்மையோ டியாப்புற வந்த இளிவரல் நான்கே"—(தோல்—மெய்ப்பாட்டியல் 6). என்பாராகலின்.

பயன்—செலவு விலக்குதல்.

தனித்தமிழ் மாட்சி

"உலகில் உள்ள எல்லாப் பொருள்களும் எல்லா உயிர்களும் மாறுதல் அடைதலாகிய பொது நிகழ்ச்சியைப் பார்த்து, அப் பொது வகையான மாறுதலுள் எத்தகைய மாறுதல் மக்களால் வேண்டப்படுவது என்பதனை உணர்ந்து பாராமல், தம் நிலைகுலைந்து மாறுதலாகிய வேண்டாத தொன்றைக் கடைப்பிடியாய்ப் பிடித்துக் கொண்டு, அதன்படி நமது அருமைச் செந்தமிழ் மொழியுந் தனது தூய நிலை குலைந்து மாறுதல் அடையவேண்டு மென்று உரைப்பது அறிவுடையோரால் ஏற்றுக் கோடற் பாலதாமோ?"

—மறைமலை யடிகள்.

அறிவியற் பகுதி - Science

உளநூல் (Psychology)

[திரு. மா. பாலசுப்பிரமணியம், எம். ஏ.]

(௧௭௧-ஆம் பக்கத் தொடர்ச்சி)

தன்மையியல் (Personality)

சுற்றமும் தன்மையாக்கமும் :—ஒருவனது தன்மை நல்லாக்கம் பெறுவது அவனுடன் இயைபு கொண்ட சுற்றத்தின் இயல்பானும் என்பது உளநூற் புலவர் தங் கொள்கை. இதனை ஈண்டு சிறிது விரிப்பாம். பச்சிளங் குழவியாக இருக்குஞான்று குழவியின் தன்மை பெரும்பாலும் பெற்றோர்களால் நிச்சயிக்கப்படுகின்றது என்பது கண்கூடு. குழவியின் விழைவுகளை யெல்லாம் குழவியே தெரிந்து நிறைவேற்றிக் கொள்ளுதல் இயலாத தொன்றும். ஆகலான் குழவியின் பெற்றோர்களே குழவிக்கு விழைவு நிறைவேற்றம் செய்தல் வேண்டும். எனவே குழவியின் தன்மை பிறரைச் சார்ந்து நிற்ப தொன்றுகின்றது. (The Personality of the Child is one of Dependence) நான்கு அல்லது ஐந்து ஆண்டுகள் நிறையப் பெற்று, ஓர் உடன் பிறப்பைக் கொண்ட குழந்தையின் தன்மையாக்கம் சிறிது முதிர்ச்சி யடைகின்றது. இம்முதிர்ச்சி நன்முறையிலேனும் தியமுறையிலேனும் நிகழ்வதொன்றும். பெற்றோர்கள் தம் இளம் உடன்பிறப்பை மிகுதியாக உன்னிப்பதைக் கண்டு சில குழந்தைகள் பொறுமை கொள்வர்; சில குழந்தைகள் தாமும் இனித் தம் நலம் கருதாது, தம் பெற்றோர்களைப் போன்று, தம் இளம் உடன் பிறப்பை நன்கு உன்னிக்கவேண்டும் எனக் கருதுவர். உடன்பிறப்பின் சார்பால் சில குழந்தைகளின் தன்மையில் பொறுமை எனுங் குற்றம் புகுவதும், சில குழந்தைகளின் தன்மையில் தந்நலங் கருதாப் பிறர்நலங் கருதும் நற்பான்மை புகுவதும் அக்குழந்தைகளின் எதிர்காலத் தன்மை யாக்கத்தை நிச்சயிக்கின்றன.

முதற்கண் தன் தன்மை ஆக்கம் அடைதற்குத் தன் பெற்றோரைச் சார்ந்துநின்ற பச்சிளங்குழவி நான்கு அல்லது ஐந்து ஆண்டுள்ள குழந்தை யாம்பொழுது தன் தன்மையைத் தானே நிச்சயித்துக்கொள்ளச் சிறிது சிறிதாகத் தொடங்குகின்றது. அக்கால் தான் பிறர்மாட்டுச் செய்யத் தக்கனவற்றையும் தன் மாட்டுப் பிறர் செய்யத் தக்கனவற்றையும் அறியும்

அறிவு தலைப்பட்டு அவ்வறிவு வழியான் ஒழுகலாற்றான் தன்மை நிலைபேறு எய்துகின்றது. நிற்க.

பள்ளிச் சிறுவனாக வாதல் பள்ளிச் சிறுமியாகவாதல் விளங்கும் காலம் வந்துறுதலும், சிறுவர் சிறுமிகளின் கடப்பாடுகள் மிகுதிப் படுகின்றன. அன்றியும் பெற்றோர், ஆசிரியர் முதலிய பிறர் அச் சிறுவர் சிறுமியர் மாட்டுச் செய்தக்க கடப்பாடுகளும் மிகுதிப் படுகின்றன. இவ்விரு கடப்பாடுகளையும் அவ்வவர் ஆற்றுமாற்றால் அவ்வவர்க்குரிய தன்மையாக்கம் எதிர் எதிர் நிலைபேறு எய்துகின்றது.

பள்ளி வாழ்க்கைக்குப் பிறகு தொழில் வாழ்க்கை எழுகின்றது. ஈண்டுத், தனிமகன் குழுவிற்குச் செய்தக்க கடப்பாடுகளும், குழு தனிமகற்குச் செய்தக்க கடப்பாடுகளும் மேலும் பெருக்கம் அடைகின்றன. இப் பெருகிய கடப்பாடுகளை ஆற்றுமாற்றால் தனிமகனும் குழுவும் தன்மை ஆக்கம் பெறுகின்றன. ஆயின் குழுவிற்கும் ஒரு தன்மையுளதோ எனும் ஐயம் ஈண்டு எழும். குழுவிற்கும் தன்மையுண்டு இறைப்பொருட்கும் தன்மை யுண்டு என்பதே உளநூற் புலவர்தங் கொள்கையாம். (Note such sayings as "The whole army acted as One Person"). குழுவிற்கும் தன்மையுண்டு எனுங் கொள்கையைக் குழுவுள்ள நூல் (Social Psychology), இனவுள்ள நூல் (Racial Psychology) என்னும் நூல்களில் கண்டு தெளிக. நிற்க.

தொழில் வாழ்க்கையொடு இயைந்து மணவாழ்க்கை எழுங்கால் இல்லானும் இல்லாளும் ஐம்புலத்தார்க் காற்ற வேண்டிய கடப்பாடுகளும், அவ்வைம்புலத்தார் இல்லறத்தார்க்கு எதிராற்றவேண்டிய கடப்பாடுகளும் பெருகுகின்றன. இக் கடப்பாடுகளை அவ்வவர் ஆற்றுமாற்றால் அவ்வவர்க்கும் எதிரவர்க்கும் தன்மை யாக்கம் நிலைபேறு எய்துகின்றது.

இதுகாறும் கூறியவற்றால் ஒருவனது தன்மை ஆக்கமடையுமாறு நன்கு புலனாகின்றது. தனிமகனாய ஒருவன் தன்மாட்டுப் பிறர் இன்னின்ன கடப்பாடுகள் ஆற்றற்குரியர் என எதிர்பார்த்தலும், தான் பிறர்மாட்டு இன்னின்ன கடப்பாடுகள் ஆற்றற்குரியன் என அறிதலும், ஆய இவ்விருவகை முறையில் ஒழுகலாற்றான் ஒருவனது தன்மை தேற்றம் எய்துகின்றது என்பது துணிபு. தனிமகற்கும் குழுவிற்கு மிடையுள்ள உளச்சார்பான இயைபு அமைவு உடைத்தாயின் அன்றி, தனிமகனின் தன்மை ஆக்கம் அடையாது எனும் உண்மை

ஈண்டு அறிதற்பாலது. (The Personality of an individual depends upon the adjustment (அமைவு) which he maintains with reference to the demands of Society on him.)

தன்மையின் அமைவின்மைகளும் அவையிற்றை அமைவு படுத்துமாறும்

(Maladjustments in Personality and their Treatment)

குழுவின் உளப்பான்மையுடன் தம் உளப்பான்மையை இயைபு படுத்த இயலாதார் அமைவிலா தன்மையினராவர். தன்மையின் அமைவின்மை (Maladjustments in Personality) பலவகைப்படும். அவையிற்றுள் (1) உண்ணிலைத் தன்மை, (2) தகவின்மைத் தன்மை, (3) சிற்றீட்டுத் தன்மை என்பன மூன்று. இவை ஆங்கிலத்தில் முறையே (1) Shut-in-Personality, (2) Invalidism, (3) Poor Compensation (1. ஷட் இன் பேர்ஸனுலிடி, 2. இன்வேலிடிஸம். 3. பூர் காம்பேன்ஸேஷன்) எனப்படுகின்றன. தனிமகனுய தன்னிடத்திருந்து குழு எதிர்பார்க்கும் தன் கடப்பாடுகளை ஆற்ற இயலாதவனுய், அக்காரணம் பற்றி குழுவுடன் கலந்து வாழ மாட்டாதவனுய் நிற்பானொருவன் உண்ணிலைத் தன்மையனுவன். மிகுந்த செல்வம் படைத்தவன் ஒருவன் தன்னைச் சூழ்ந்து வாழும் பிறர் வறுமையாற் பீடிக்கப் படுவதை நன்குணர்கின்ருன். ஆயினும் ஒரு வாசியில்லாக் காசும் அவர்தம் அவ்வறுமையைப் போக்குமாறு பயன்படுத்த ஒருப்படுகின்ருனல்லன். தனது இச்செய்கையால் பிறர் தன்னை விரும்பார் என்பதை அறிந்து அச்செல்வன் அப் பிறருடன் கலந்து (தற்காலச் செல்வர் பலர் வாழ்வதுபோல) வாழமாட்டாதவனுய்த் தனித்து வாழ்கின்ருன். அவ்வாறு வாழுங்கால் அவனது உளவாழ்க்கையும், பிறரவர் உளங்களுடைய கலவி இன்மையான், தனித்த தொன்ருகின்றது: எனவே அவனது தன்மை ஒரு பயனற்ற உண்ணிலைத் தன்மையாகின்றது. ஓர் ஆராய்ச்சியாளன் பல்லாண்டுகள் பல்வகைக் கலைகளையும் ஆராய்ந்ததன் பயனுகக் கடவுளின்மைக் கொள்கையனுக (Atheist) ஆகின்ருன்: இக் கொள்கையை முடிந்ததோர் கொள்கையாகவும் கருதுகின்ருன். இன்னவன் தன் கொள்கைகளைப் பிறர்க்குப் பலகால் பன்னிப் பன்னிக் கூறியும் ஒருவரும் அவன் கொள்கையை ஏற்றுக்கொள்ளாமை கண்டு உள்ளம் கவலுகின்ருன். அன்றியும் தன் கொள்கையைக் கொள்ளாதாவரையும் அறிவிலிகளாகக் கருதி அவர்களுடன் உளங்கலந்து வாழ இசையானுகின்ருன். இவன் மொழி கேட்டாரும் இவனுடன் உளமியைந்து வாழ ஒருப்

படுகின்றாரல்லர். எனவே அவ்வன் தனித்த வாழ்க்கையில் நிற்கின்றான். ஆகலான் அவனது தன்மையும் நல்லாக்கம் பெறுமாறின்றி உண்ணிலைப்ப தொன்றுகின்றது: அவன் ஓர் உண்ணிலைத் தன்மையனாகின்றான்.

தகவின்மைத் தன்மையை இனி அறிதல் வேண்டும். ஒரு போர்வீரன் போர்க்களத்தில் நின்று மாற்றார்களைத் தன் சுடு கருவியால் வீழ்த்தத் தொடங்குகின்றான். அஞ்ஞான்று மாற்றார் அணியினின்றும் பல வெடிகுண்டுகள் ஒன்றன்பின் ஒன்றாய் அவனருகில் வந்து விழுந்து வெடிக்கின்றன. அந்நிகழ்ச்சியால் உண்டாம் மின்னொளிகளும் அதிரொலிகளும் அவனது கட்புலனையும் செவிப்புலனையும் மிக்கு அயர்விக்கின்றன. அவ்வயர்வைப் பொறுக்க மாட்டாதவனாய் அவன் கட்பார்வை யிழந்து விடுகின்றான். அப்போர் வீரன் களத்துக்கு வருமுன்னர்த் தன் உயிரை இழக்கத் துணிந்திருந்தும், களத்தில் தனக்கு நேரக்கூடிய இன்னல்களின் வகைகளையும் அளவினையும் நன்கு அறியாமையினால், தன்னால் எதிர் பார்க்கப் படாத வகையினதும் அளவினதுமாய இன்னல் நேர்ந்த ஞான்று, அந்நிலையுடன் தன் வீரச்சார்பான உளப்பான்மையை இயைபு படுத்தத் தகவிலனாய், உளம் மருளவும் தன் வீரம் குன்றவும் அதனால் தன் தன்மையாக்கம் சிதைவுறவும் பெற்றுத், தன் கட்பார்வையை இழந்து விடுகின்றான். போர் நிலைமை அப்போர் வீரன் மாட்டு உயரிய பான்மையுள்ள வீர உளத்திட்பத்தை எதிர்பார்த்திருக்க, அவன் அத்தகைய உளத் திட்பத்தைத் தோற்றுவிக்கும் தகவின்மையினாலுயினமையின் தன் கட்பார்வையை இழக்க நேரிட்டது. சுருங்கக் கூறுமிடத்து அவன் தகவின்மைத் தன்மைக்கு ஆளாய் அதனாலாம் கேட்டினைப் பெற்றான் என்பது விளக்கம்.

சிற்றீட்டுத் தன்மையை இனி அறிதல் வேண்டும். ஒரு வகையால் நேர்ந்த உளப்பான்மைசார் இழப்பினை ஈடுசெய்யுங்கால் சிறுமையுள்ள வகையால் ஈடுசெய்ய முயல்வாரவர் தன்மை சிற்றீட்டுத்தன்மை எனப்படும். இதனை ஓர் எடுத்துக் காட்டால் விளக்குவாம். ஒரு செல்வச்செருக்குள்ள மனைவி, ஏழையாகிய தன் கணவன் என்றும் தனக்கு அடிமைப்பட்டு நிற்கவேண்டும் என்று விழைகின்றாள். கணவனோ அதற்கு ஒருப்படாமல் அவளை முற்றப் புறக்கணித்து நிற்கின்றான். இஃது ஆற்றாத மனைவி, தான் விரும்பிய வகையில் தன்மை அமைவுபெற இயலாமைக்கு மனங் கவன்று, வேறு வகையில் உள நிறைவு பெறக் கருதி களவொழுக்கத்தில் ஈடு படுகின்றாள். அஃதாவது அவள் சிற்றீட்டுத் தன்மையள் ஆகின்றாள்

என்பது. நல்லிசை அரிதிற்பெற முயலகில்லான் பெருஞ்சுட்டு எளிதிற்பெறவே முயல்வான் எனும் பொருள்படும்.—He who cannot obtain fame can easily earn notoriety—என்னும் ஆங்கிலப் பொது மொழி மேற்கூறப்பட்ட சிற்றீட்டுத் தன்மையை விளக்குவதேயாம்.


ஆங்கிலத்தில் Fame எனப்படுவது தமிழில் நல்லிசை எனப்படும் என்பதும், ஆங்கிலத்தில் Notoriety எனப்படுவது தமிழில் பெருஞ்சுட்டு எனப்படும் என்பதும் பின்வரும் இரு நீதி நெறிவிளக்கச் செய்யுட்களால் அறியக் கிடக்கின்றன.

(1) அறம்பொரு ளின்பமும் வீடும் பயக்கும்
புறங்கடை நல்லிசையு நாட்டும்—உறுங்கவலொன்
றுற்றுழியுங் கைகொடுக்குங் கல்வியி னூங்கில்லைச்
சிற்றுயிர்க் குற்ற துணை.

(2) பிறராற் பெருஞ்சுட்டு வேண்டுவான் யாண்டும்
மறவாமே நோற்பதொன் றுண்டு—பிறர்பிறர்
சீரெல்லாந் தூற்றிச் சிறுமை புறங்காத்தி
யார்யார்க்குந் தாழ்ச்சி சொலல்.

மலாய் நாட்டில், நச்சு நீக்கும் செடி

மலாய் நாட்டிற் கொடு நஞ்சுடைய பாம்பினங்கள் பல வாழ்கின்றன. ஆயினும் அவற்றால் அங்குள்ள மக்கள் கடிபடுதல் மிக அருமை. காரணம், இயற்கையாகவே அவண் தோன்றியுள்ள ஒருவகைச் செடியே. மலாய் நாட்டில் ஒருவன் பாம்பு கடித்திறந்த பின் பிணத்தைச் சுடலை கெடுத்தேகும் வழியில் ஒரு செடியருகிற் சிறிது நேரம் பிணத்தைப் போட்டு வைக்க, உடனே செத்தவன் உயிர் பெற்றெழுந்து நடந்து வீடு சென்றவுடன் மயங்கி உயிர் துறப்ப, மறுபடியும் அவனை அச்செடிக் கடியிலே கிடத்தமீண்டும் உயிர் பெற்றதைக் கண்ட அவன் உறவினர், அவனை அச்செடியைவிட்டு அழைத்துக் கொண்டு செல்ல முன்போலவே உயிர் நீத்தான். இது கண்ட அவர்கள் அச்செடி நச்சு நீக்கும் என எண்ணிச் சிலநாள் அச்செடியடியிலேயே இறந்தவனைக் கிடத்தி நஞ்சு நீக்கி நலப் படுத்தியுள்ளனர். இச்செடியையே பழைய மலேயர்கள் தங்கள் குடிசையின் நாற்புறத்திலும் பயிரிட்டு வைத்திருப்பதோடு வெளியிற் செல்லும்போதும் அதன் வேர்த்துண்டில் ஒன்றினை இடுப்பிற் சேர்த்திருப்பர். ஆகவே, இந்திய அரசினர்க்கு இவ்வேர் ஒன்று மலேயாவிலிருந்து பார்வைக்கு அனுப்பப் பட்டுள்ளது. இச்செடி அழகிய பூக்களுடன் மிளிர்கிறதாம். ஆ! இறைவன் படைப்பு மிக இனிது!



[MR. T. B. KRISHNASWAMY MUDALIAR, M.A., B.L.]

மதுரைக் கண்ணங்கூத்தனார் இயற்றிய

கார் நாற்பது

(க௮௫-ஆம் பக்கத் தொடர்ச்சி)

கார்ச்சே ணிகந்த கரைமருங்கி னீர்ச்சேர்ந்
தெருமை யெழிலே றெறிபவர் சூடிச்
செருமிகு மள்ளரிற் செம்மாக்குஞ் செல்வி
திருநுதற் கியாஞ்செய் குறி. ௩௧

This season when the sturdy buffalo wallows in the rain-fed tanks and wearing the flower wreaths flung by men on the banks goes forth proudly like warriors in the field of battle, is the one I spoke of as the time of my return to my beautiful-browed lady. (31)

(வினைமுற்றிய தலைமகன் பாகற்குச் சொல்லியது)

கடாவுக பாகதேர் காரோடக் கண்டே
கெடாஅப் புகழ்வேட்கைச் செல்வர் மனம்போற்
படாஅ மகிழ்வண்டு பாண்முரலுங் கானம்
பிடாஅப் பெருந்தகை நற்கு. ௩௨

THE MAN SPEAKS TO HIS FRIEND

Like to the mind of the fortunate, who seek undying renown the bees with irrepressible mirth sing sweet songs in the forest. The *Pidav* trees are rich in blossom. Following the fast-running clouds, O Charioteer, drive the car swiftly. (32)

கடனீர் முகந்த கமஞ்சூ லெழிலி
குடமலை யாகத்துக் கொள்ளப் பிறைக்கும்
இடமென வாங்கே குறிசெய்தேம் பேதை
மடமொழி யெவ்வங் கெட. கூக

The clouds full of the water lifted from the sea, pour it on the western hills; that season I marked out as the time of return to my young beloved to end her sorrows; therefore drive swift the car, O Charioteer! (33)

(பருவங் கண்டழிந்த தலைமகள் ஆற்றல் வேண்டித்
தோழி தனது ஆற்றாமை தோன்ற வுரைத்தது)

விரிதிரை வெள்ளம் வெறுப்பப் பருகிப்
பெருவிறல் வானம் பெருவரை சேருங்
கருவணி காலங் குறித்தார் திருவணிந்த
ஒண்ணுதல் மாதர் திறத்து. கூச

THE MAID SPEAKS

The majestic clouds having drunk to the full of the wide waves of ocean reach the tall mountain. That season the Lord marked out to his belowed, the wearer of the Golden ornament on her bright forehead, as the time of his return. (34)

சென்றநங் காதலர் சேணிகந்தா ரென்றெண்ணி
ஒன்றிய நோயோ டிடும்பை பலகூர
வென்றி முரசி னிரங்கி யெழில்வானம்
நின்று மிரங்கு மிவட்கு. கூரு

Her husband having gone to a far distant land and her many cares and love-longing being intense, even the cloud that goes sounding victoriously in the sky, stops awhile to pity her. (35)

(வினைமுற்றி மீளூந் தலைமகன் பாகற்குச் சொல்லியது)

சிரல்வாய் வனப்பின வாகி நிரலொப்ப
ஈர்ந்தண் டளவந் தகைந்தன—சீர்த்தக்க
செல்வ மழைமதர்க்கட் சின்மொழிப் பேதையூர்
நல்விருந் தாக நமக்கு. கூசா

THE MAN TO THE CHARIOTEER

The cool red buds of the *mullai* in beautiful rows have blossomed like the open mouths of the callow young of the *chichili* bird. Most grateful unto us therefore is the famous and flourishing town of the maiden with the rain-cool eyes and sweet speech. (36)

(தோழி பருவங்காட்டித் தலைமகளை வற்புறுத்தது)

கருங்கடல் மேய்ந்த கமஞ்சூ லெழிலி
இருங்க லிறுவரை யேறி யுயிர்க்கும்
பெரும்பதக் காலையும் வாரார்கொல் வேந்தன்
அருந்தொழில் வாய்த்த நமர். ௩௭

THE MAID SPEAKS TO HIS MISTRESS

The clouds very heavy with water gathered from the dark ocean pour their flood on the big rocks of the neighbouring mountain. Even in this season, will he not return, our Lord, who is engaged in the King's wars. (37)

புகர்முகம் பூழிப் புரள வுயர்நிலைய
வெஞ்சின வேழம் பிடியோ டியைந்தாடுந்
தண்பதக் காலையும் வாரா ரெவன்கொலோ
ஒண்டொடி யூடு நிலை. ௩௮

The fierce elephant of the mountain marked with spots on its face, rolls on the ground with its she-elephant raising the dust. Even in such season will he not come our Lord? Cease your love-longing, O Maid, with the radiant bangles! (38)

அலவன்க ணேய்ப்ப வரும்பீன் றவிழ்ந்த
கருங்குர னொச்சிப் பசுந்தழை சூடி
இரும்புன மேர்க்கடி கொண்டார் பெருங்கௌவை
ஆகின்று நம்மூ ரவர்க்கு. ௩௯

Wearing the leaves of the black *Nochi* whose buds look like crab's eyes and then blossom, the plough men have begun newly to plough the wide fields. The delay must, therefore, be a great pain to our Lord. (39)

(பருவம் வந்தமையால் தலைவர் வருதல் ஒருதலையெனக் கூறித் தோழி தலைமகளை ஆற்றுவித்தது)

வந்தன செய்குறி வாரா ரவரென்று
நொந்த வொருத்திக்கு நோய்தீர் மருந்தாகி
இந்தின் கருவண்ணங் கொண்டன் றெழில்வானம்
நந்துமென் பேதை நுதல். ௪௰

Oh, Soft Maid! All the indications of our Lord's return have come to pass. As comfort to thy distress, the beautiful clouds have taken on the colour of the dark dates. Thy forehead shall brighten up. (40)

பதினாறுபேறு

“பதினாறும்பெற்றுப் பெருவாழ்வடைக”
என்னும் பழமொழியின் வாய்மை

“மறைக ளிந்தனை சைவநிந்தனை பொருத மனமும்
தருக ணைம்புலன் களுக்கேவல் செய்யுருச் சதுரும்
பிறவி திதெனுப் பேதையர் தம்மொடு பிணக்கும்
உறுதி நல்லறஞ் செய்பவர் தங்களோ டுறவும்

யாது நல்லன்பர் கேட்கினு முதவுறு மியல்பும்
மாதவத்தினோ ரொறுப்பினும் வணங்கிடு மகிழ்வும்
ஓது நல்லுப தேசமெய் யுறுதியு மன்பர்
தீது செய்யினுஞ் சிவச்செய லெனக்கொளுந் தெளிவும்

மனமும் வாக்குநின் னன்பர்பா லொருப்படு செயலும்
கனவி லும்முன தன்பருக் கடிமையாங் கருத்தும்
நினைவில் வேறொரு கடவுளை வழிபடா நிலையும்
புனித நின்புகழ் நாடொறு முரைத்திடும் பொலிவும்

திமை யாம்புறச் சமயங்க ளொழித்திடுந் திறனும்
வாய்மை யாகவே பிறர்பொருள் விழைவுறு வளனும்
ஏமு றும்பர தாரநச் சிடாதநன் னேன்பும்
தூய்மை நெஞ்சின்யா னெனதெனுஞ் செருக்குறுத்

துறக்கமீ துறையினு நரகிற் றேய்கினும் [துறவும்
இறக்கினும் பிறக்கினு மின்பந் துய்க்கினும்
பிறைக்கொழுந் தணிசடைப் பெரும விவ்வரம்
மறுத்திடா தெனக்குநீ வழங்கல் வேண்டுமால்”

—

உ

கணபதி துணை.

திருத்தணிகைப் பிள்ளைத்தமிழ்

[பருவத்துக்கு ஒரே பாடல் கொண்டது]

[வ. சு. செங்கல்வராய பிள்ளை, எம். ஏ., இயற்றியது.]

"திருத்தணிகைப் பிள்ளைத் தமிழ்" செப்பச் சேர்ப்பேன்
கருத்தினிலே ரம்பன் கழல்.

1. காப்புப் பருவம்

*பின்னைக் குரியோன்! முதலாய
பெரியோ ருன்முன் னிலைநின்று
முன்னைப் பொருளே! தணிகைமலை
முத்தே! காவாய் காவாயென்
றுன்னைப் போற்றுங் காரணத்தால்
ஒப்பில் மணியே! ஒளிவிளக்கே!
நின்னைக் காப்பா ரெவரேயோ
நீயே நின்னைக் காக்கவே.

2. செங்கீரைப் பருவம்.

கடியுறு மாமல ரிடுபவர் காவல! செங்கோ செங்கீரை
கலையுள யாவுமு முறைதரு காரண! செங்கோ செங்கீரை
செடியுறு தீவினை எரிசெய்வ சிகர! செங்கோ செங்கீரை
திருமகள் நாமகள் புகழ்செய்சு சீகர! செங்கோ செங்கீரை
அடியுறு பாவலர் இடர்களை சேவக! செங்கோ செங்கீரை
அலைவிரி காவிரி வருகரை ஏரக! செங்கோ செங்கீரை
வடியுறு வேல்வ சிகையுறு சேவல! செங்கோ செங்கீரை
வரைமகள் பாலக தணிமலை நாயக! செங்கோ செங்கீரை.

3. தாலப் பருவம்

1தந்தைக் குரைசொ லும் விந்தைக் குருபர! சாமீ! தாலேலோ
சததள மலரினன்2 வழிபட அருளும்வி சாகா! தாலேலோ
வந்தித் திடுமரி3 தந்திக்4 கருள்தரு வாழ்வே! தாலேலோ
மகபதி5 துதிசெய வரமுத வியதனி வாகா! தாலேலோ

---

* 'பின்னைக் குரியோன் திருமால்'

1. தந்தைக் குபதேசித்தது
2. பிரமன் வழிபட்டது
3. விஷ்ணு பூசித்தது
4. நாகம் பூசித்தது
5. இந்திரன் பூசித்தது

செச்திற் குருமணி நந்திக்[6] கருளிய தேவே! தாலேலோ
திருமலை குருமலை பலமலை மருவிய சேயே! தாலேலோ
சந்தத் தமிழ்சொ லு மெந்தைக் கொருகுரு! தாலே தலேலோ
தணிமலை வருமொரு சரவண பவகுக! தாலே தாலேலோ.

4. சப்பாணிப் பருவம்

மோனத் துளதே உண்மை நிலைப்பொருள் என்றறி வித்தவனே!
முத்துக் குமரா! பத்தர்க்கெளியாய் கொட்டுக சப்பாணி!
ஞானத் திரளே! வேதப் பொருளே! தாள விளக்கமெலாம்
நற்பது மக்கர ஒத்தி லிலங்கக் கொட்டுக சப்பாணி!
தானத் துறையே அருள்பெறு நெறியென அன்றறி வித்திட்ட
சந்தப் புலவற் கன்புற் றவனே! கொட்டுக சப்பாணி!
கூனற் பிறைமுடி சூடிக் கொருகுரு! குன்ற மெறிந்தவனே!
குணதர! சுசிதர! தணிமலை வருகுக! கொட்டுக சப்பாணி!

5. முத்தப் பருவம்

புதுமலர்க்குங் கிரிதனக்கும் பிரிய! முத்தந் தருகவே
புனமகட்குஞ் சசிமகட்குங் கணவ! முத்தந் தருகவே
விதுமுடிக்குஞ் சடையர் மெச்சும் புதல்வ! முத்தந் தருகவே
வினைதொலைக்கும் படை பிடிக்குங் கலைஞ முத்தந் தருகவே
பதுமனுக்குங் குறுமுனிக்கும் குருவ! முத்தந் தருகவே
பலனளிக்குஞ் சரணபத்மந் தருக முத்தந் தருகவே
சதுமறைக்கும் பலகலைக்குங் குரவ! முத்தந் தருகவே
தமிழ்மொழிக்குந் தணிமலைக்குந் தலைவ முத்தந் தருகவே.

6. வருகைப் பருவம்

அமர ருலகை நிலைசெய் தருளு மொருவ! வருக வருகவே
அடியரிடர்கள் அடியொ டகல அருள்செய் தலைவ வருகவே
குமர முருக அழக குழக அமல விமல வருகவே
குணமு நிறையு மதியு நிறைய அருளு மரச வருகவே
வெமர அணிகள் புனையு நிமலர் சிறுவ குளவ வருகவே
வினைவெ லயிலை மயிலை யுடைய வரத பெரும வருகவே
*சமர புரியில் அருணை நகரில் வளரு குரிசில் வருகவே
தணிகை மலையி லிலகு புலவ வருக வருக வருகவே.

---

6. நந்தி வரம் பெற்றது. இவை தணிகைப் புராணத்தில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

*சமரபுரி=திருப்போரூர்

7. அம்புலிப் பருவம்

தண்ணளியி னுஙிவன் தனக்கு நீ ஒரு சிறிது சமமெனச்
சொல்வர் புலவோர்
தாண்டவம் புரிசிவன் உனைப்போ லிவற்குமே தலையிடந்
தந்துள்ளனன்
எண்ணரிய கலையெலாம் இவனிடம் நிரம்புமற் றிங்குனது
கலைகள் தேயும்
எவ்வகைக் களங்கமு மிலான் இவன் உன்னிடம் களங்கமோ
என்றும் நிற்கும்
கண்ணன்முத லாங்தேவர் இவனடி பணிந்துதங் காரியம்
நிறைவு பெற்றார்
கழறினேன் உண்மையிஃ தோர்ந்துமக் கஞ்சனைக்
கண்டித்த கதையறிந்தும்
அண்ணல் மறை எண்ணிலவு நண்ணரிய பண்ணவனெ
டம்புலீ யாடவாவே
அணிகொள்மயி லேறுநந் தணிகையதி காரியோ
டம்புலீ யாடவாவே.

8. சிற்றிற் பருவம்

அந்தத் தமைத்த மதின்மீதே
ஆடுமயில்வேல் சேவலென்ன!
அப்பா லமைத்த புறக்கடையி
லழகார் வெட்சி கடம்பென்ன!
கந்தப் புகையின் மணமென்ன!
கானக் கருவி அமைப்பென்ன!
கமழ்தே னென்ன! தினையென்ன!
கண்டே தேனே எனத்திதிக்கும்
சந்தத் தமிழ்சொல் அருணகிரி
தனது படிவ அமைப்பென்ன!
சாமீ! இந்தப் படியுனக்குச்
சந்தோடத்தைத் தருவனவாம்
எந்தப் பொருளும் அமைத்துள்ளோம்
எளியேஞ் சிற்றில் அழியேலே!
எழிலார் தணிகை மலையரசே!
எளியேஞ் சிற்றில் அழியேலே!

9. சிறுபறைப் பருவம்

சந்நிதியில் நின்று[1] புகழ் அந்தாதி[2] பாடுந் தருணத்தில்
அந்தாதியில்
தனிமலைக் குரியதாம் "சேர்ப்பது [3] மாலெ"'னத்
துவக்குந் தனிப்பாடலை
அந்நிலையி லோதுதற் கடியேன் மறந்திடலும் அன்றிரவில்
என் கனவிலே
அண்டியொரு விப்பிரச் சிறுவனைத் தோன்றி உடை
அங்கம் ப்ரகாசமாக
நன்னிறத் தேகத்தில் வெண்ணிறத் திருநீறு
நன்றொளிர எதிரில் நின்று
"நல்ல எலுமிச்சம் பழமொன்று கந்தரந் தாதியில்
மறந்தனை" யெனச்
செந்நெறியை யானுறத் திருவாய் மலர்ந்த இறை
சிறுபறை முழக்கி யருளே!
செந்தமிழி னேயனே செங்கல்வ ராயனே[4]
சிறுபறை முழக்கி யருளே!

10. சிறுதேர்ப் பருவம்

அந்திப் பிறைச் சடையர் அந்தப் பொருட் குரைசெய்
அன்பிற் குகந்த அரசே
அறுமா முகக்குழவி அமுதே எனக்குரிய
அறிவே எனத்துதி சொலி
வந்தித்து நந்திநதி அன்டைக் கணப்பொழுது
சிந்திக்க வந்தருளினை

---

1. "புகழ்=திருப்புகழ்; 2. அந்தாதி=கந்தரந்தாதி.

3. "சேர்ப்பது மாலய னீலோற் பலகிரித் தெய்வ வள்ளி
சேர்ப்பது மாலய முற்றா ரெனப்பலர் செப்பவெப்புச்
சேர்ப்பது மாலய வத்தைமன் யாக்கை சிதைவதன்முன்
சேர்ப்பது மாலய வாசவன் செப்பிய செப்பதத்தே."

கந்தரந்தாதி 59-ஆம் செய்யுள்

திருத்தணிகை யாண்டவர் இதனை 'நல்ல எலுமிச்சம் பழம்" என்று குறிப்பிட்டதால் இச் செய்யுள் "எலுமிச்சம் பழப் பாட்டு" என இனி வழங்கும்.

4. செங்கல்வராயன்—செங்கல்வம்=செங்கழுநீர்; ராயன்=ராஜன். செங்கழுநீர் மாலை அணியும் ராஜன்—இது திருத்தணிகை மலை முருகருக்குச் சிறப்புப் பெயர்.

வாக்குக்கு மெட்டாது சிந்தைக்கு மெட்டாத
　　மாயப் பெரும் பொருளினை !
பந்தித்து நின்றவினை சிந்தப் பெருந்துணை செய்
　　பான்மையுறு மேன்மை பெறுவேல்
பாடிக் கசிந்துருகு நேசத்தை நன்குதவு
　　பால குமரா குழகனே !
சிந்திப் பவர்க்கருள் செய் செந்திற் பதித்தலைவ !
　　சிறுதே ருருட்டி யருளே !
சேடனுர் தொழுமொருவி சேடமார் தணிகையிறை
　　சிறுதே ருருட்டி யருளே !

வேலுமயிலுந் துணை

AN APPRECIATION

BY

T. SIVARAMASETU PILLAI, M.A., B.L.,

Indian Audit and Accounts Service.

SEN TAMIL CHELVI: A TAMIL MONTHLY

I was wondering what to read. Periodicals and Journals; weeklies and monthlies. Light and especially "Comic" penny plentifuls have flooded the Tamil land. I wanted something to my taste—sedate and entertaining, and I found it in the monthly published by the Saiva Siddhanta Publishing Works: Sen Tamil Selvi.

This brave little journal has reached its thirteenth year—a thing to be congratulated in itself. It is printed in fine paper, clear and legible, not fudged in ink—a common pastime of Tamil periodicals.

Its fine print is not its only merit. It contains articles in fine language—Chaste Tamil, in pure vigour and sweet euphony.

You find in Sen Tamil Chelvi, Tamil as it ought to be written and it is pleasing to read it and understand it. Yes, in pure Tamil. And, what variety! Literature (Poetry and Prose), History, Archaeology; Philosophy, and all possible branches of knowledge—something of everything, and that, curiously enough, done well.

A special feature is the translation of the works of the late lion of Tamil literature—Manicka Naicker.

And the translator, Mr. Kannuswamy, with a rare genius for translation, portrays Manicka Naicker's ideas in a manner better than the great master himself, if I may venture to say so. Manicka Naicker threw open several avenues for new thought and all his invigorating ideas are presented in a clear and incisive style.

There are also some articles from the hand of a daughter of Manicka Naicker. It opens a new field—Botany, and if pursued; I look forward to some interesting contributions to, what to me is an ever enchanting field of flowers.

Yet one more—there are some very interesting contributions to the field of Psychology by a young and rising scholar. This is a new and developing science, and an intelligent attempt to co-relate modern ideas with the imbedded philosophic truths of the ancient Tamil world is made. I have spent many pleasant hours with these articles.

To the novice some Sangam Classics are commented upon and annotated in detail. The palm in this respect should be given to the able Pandit who handles "Kurunthogai."

(*Justice, 24 - 11 - 34*)

மதிப்புரை

இந்தியன் ஆடிட் அண்டு அக்கவுண்ட்ஸ் ஸர்வீஸ்

[உயர்திரு. T. சிவராமசேது பிள்ளை எம். எ.,பி. எல். எழுதுவது]

எதைப் படிப்பதென்று புரியாமல் திகைத்துப்போனேன். வாரத்தாள்கள், திங்கட்டாள்கள், விகடன்கள், விநோதன்கள், ஓரணாத் தாள்கள், இரண்டணாத் தாள்கள் எத்தனையோ வந்து குவி கின்றன, எனக்கோ அமைதியும் இலக்கியக் சுவையும் பயக்கவல்ல கட்டுரைகளைப் படிப்பதிலேயே விருப்பம். அத்தகைய கட்டுரை களைத் திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப் புக் கழகத்தாரால் வெளியிடப்படும் **செந்தமிழ்ச் செல்வி** என்னும் திங்கட்டாளிற் கண்டேன்.

இத் திங்கட்டாள் பதின் மூன்றாண்டுகளாக நடை பெற்று வருவதே போற்றத் தக்கதோர் முதற் சான்றாகும். வெள்ளிய அழகிய தாளில் செம்மையாகவும் சீராகவும் மையழிவில்லாமல் அச்சடிக்கப் பட்டிருப்பது இதன் தனிச் சிறப்பாகும்.

நன்ருக அச்சிடப்பட்டுள்ள சிறப்பேயன்றிச் செந்தமிழில் தூய்மையும் ஆற்றலும் ஓசைநயமும் ஒருங்கே பொருந்தக் கட்டுரைகளைக் கொண்டிருப்பதும் இதன் பெருஞ் சிறப்பாகும்.

செந்தமிழ்ச் செல்வியில் எம்முறையில் தமிழ்நடை இக்காலத்தே இருத்தல் வேண்டும் என்று ஆய்ந்தறிந்த கல்வியாளர் விரும்புவர்களோ அம்முறையிலேயே அமைந்திருப்பதைக் காணலாம். அத்துணையும் கலப்பில்லாத தூயதமிழே! ஆ! எத்தனை வேறுபட்ட பகுதிகள்! இலக்கிய இலக்கணப் பகுதி, வரலாற்றுப் பகுதி, ஆராய்ச்சிப் பகுதி, அறிவியற் பகுதி இன்னும் இவையோன்ற அறிவுவிளக்கும் பகுதிகள் பலவற்றிலும் கட்டுரைகள் காணப்படுகின்றன; வியக்கதக்க வகையில் அத்தனை கட்டுரைகளும் தேர்ந்த சீரிய முறையில் எழுதப்பட்டு வருகின்றன!

தமிழிலக்கியக் கோளரி என்று சொல்லத்தக்க காலஞ் சென்ற திரு. பா. வே. மணிக்க நாயக்கர் அவர்கள் எழுதிய ஆராய்ச்சியுரைகள் இதன்கண் மொழி பெயர்க்கப்பட்டு வெளிவருதல் இத் திங்கட்டாளின் சிறப்பியல்பாகும். மொழி பெயர்ப்புத் துறையிலே தனிப் புலமை வாய்ந்துள்ள திரு. கண்ணுசாமி என்பார் மாணிக்கநாயக்கர் அவர்களின் கருத்துக்களைத் திரு. நாயக்கர் அவர்களினும் மேம்பட்ட வகையில் மொழிபெயர்த்து விளக்கியுள்ளார் என்று கூடத் துணிந்து சொல்வேன். பற்பல புதுத்துறைகளில் தமிழர்தங் கருத்துச் செல்லுமாறு திரு. நாயக்கர் வழிகாட்டினர்; கிளர்ச்சியை யளிக்கவல்ல அப் புதுக் கருத்துகள் யாவும் தெளிவான ஆணித்தரமான நடையில் மொழி பெயர்ப்பாசிரியரால் இத்தாளின்கண் விளக்கி யெழுதப் பட்டிருக்கின்றன.

திரு. நாயக்கர் அவர்களின் திருமகளார் ஒருவராலும் சில கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளன. மரநூல் என்ற புதியதொரு துறையில் அவை எழுதப் படுகின்றன. தொடர்ந்து எழுதப்படின், என்றும் இன்பமளித்துக் களிப்பூட்டும் இனிய பூக்களைப் பற்றிச் சுவைமலிந்த சில கட்டுரைகளைப் படிக்க வாய்ப்புண்டாம்.

இது மட்டுமோ? ஆற்றல் மிகுந்த இளம் புலவர் ஒருவரால் உளநூற் றுறையில் சுவைபொருந்திய சில கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளன. இது புதியதும் வளர்ச்சிக்குரியது மானதோர் அறிவியற் றுறையாகும். அத்துறையில் இக்கால காணப்படும் புதுக் கருத்துக்களையும் பண்டைக்காலத் தமிழர் தம் தத்துவக் கருத்துக்களையும் ஒன்றுபடுத்தி யுரைக்கும் அரிய முயற்சி இக்கட்டுரைகளிற் காணப் படுகின்றது. இவற்றைப் படித்து நான் மகிழ் வெய்தியுள்ளேன்.

மாணவர்களுக்குப் பயன்படும் வகையில் சங்கநூற்களிற் சிலவற்றிற்கு இத் திங்கட்டாளிற் பதவுரை பொழிப்புரை விளக்கவுரை முதலிய எழுதப்பட்டு வருகின்றன. அவ்வாறு உரை யெழுதியுதவுவோரில் குறுந்தொகைக்கு உரை யெழுதுந் தமிழ்ப்புலவர் போற்றற் குரியாராவர்.

("ஜஸ்டிஸ்"—24-11-1934).

வரலாற்றுப் பகுதி: History & Biography

டாக்டர் மில்லர்

[திரு. பு. க. முத்துசுவாமிப் பிள்ளையவர்கள்]

[முகப்புப் படம் பார்க்க]

நற்குணங்கள் நிறைந்த டாக்டர் மில்லர் துரை மகனார் ஸ்காட்லாந்து தேசத்துக் கெயித்னஸ் நாட்டில் தர்ஸோ என்னும் நகரில் 1838-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 13-ஆம் நாள் பிறந்தவர். இவர் தந்தை ஒரு பேர் பெற்ற வணிகர். தாயாரும் நல்ல குடும்பத்திற் பிறந்தவர்; நற்குணங்கள் அமைந்தவர். தந்தை பொதுநலத்துக்குப் பாடுபடும் முயற்சி மிக்குடையவர். அவரே தம் மகன் மில்லர் துரையை சென்னை மாகாணத்தின் கல்விக்காக மிகுந்த உழைப்பெடுக்கும்படி ஊக்க மூட்டியவர். தாயாரும் கல்விக்காக மகன் உழைப்பதில் மிகுந்த ஊக்கமே காட்டினர். தாயாருக்கு நேரில் அவர் மகன் செய்துவரும் வேலையைப் பார்க்க முடியவில்லையானாலும், மாணவர் வழியாயும் ஆசிரியர் வழியாயும் கேட்டு அறிந்து கொள்வார். பத்திரிகைகளில் மகன் செயலைப் பற்றி எழுதியிருப்பனவற்றைக் கண்டும் மகிழ்ந்து கொள்வார். நல்ல தாய் தந்தையர்கட்குப் பிறக்கும் பிள்ளைகள் தந்தையினும் பதின் மடங்கு நல்லவர்களா யிருத்தல் இயல்பே.

டாக்டர் மில்லர் இளம்பருவத்திலே கல்வியை மிகுந்த விருப்பமாய்க் கற்றார். அவர் கூரிய அறிவுடையராய் இருந்தமையால் 1856-ஆம் ஆண்டு அதாவது தம் 18-ஆம் வயதிலே எம். ஏ. பட்டம் (கலைப்பெரும் புலவர்) பெற்றுத் தேறினர். அறிவு ஆராய்ச்சியிலும் ஆங்கில உரை நடை எழுதுவதிலும் நன்றாகத் தேர்ந்திருந்தார். அதற்காக அபர்தீன் நகரத்தார் தங்கப் பரிசு ஒன்று அளித்தார்கள். கலை ஆராய்ச்சியில் இவருக்கு மிகுந்த விருப்பம் உண்டு. பின் நான்காண்டுகள் தம் சமய நூலாராய்ச்சியிற் செலவிட்டார். அந்தக் கழகத்தில் (Theological Society) மற்றவர்களோடு வாது புரிவதிலும் புகழ் அடைந்தார்.

அப்பொழுது சென்னையில் ஸ்காட்லாந்து மிஷனின் ஆதரவில் வேப்பேரியில் ஒரு பள்ளிக்கூடம் நடந்தது. அந்த மிஷனில் வேலை பார்த்த ஆசிரியர் எவரும் திறமை உள்ளவர்களாயில்லை. திறமையுள்ள ஆசிரியர் ஒருவர் வேண்டுமென்று ஏற்படவே டாக்டர் மில்லரைச் சென்னைக்கு வரும்படி வேண்டி.

னர். அதற்கிசைந்து டாக்டர் மில்லர் 1862-ஆம் ஆண்டு டிசம்பர் 9-ஆம் நாள் சென்னைக்கு வந்தார். அங்கு வந்த பொழுது அவருக்கு வயது 24. வந்த முதலாண்டில் ஆலயங்களின் வேலையையும் கடமையுமே செய்தார். பின் மிஷன் காரியதரிசியாயிருந்து பல துறைகளிலும் நடக்கும் வேலைகளையும் கண்காணித்து வந்தார். பள்ளிக்கூடத்தின் முன்னேற்றத்துக்கும் அது நன்முய் நடந்து வருவதற்குமே தமது வலிமையையும் பொருளையும் செலவிட்டார். அவர் உழைப்பின் பயனுய்ப் பள்ளிக்கூடம் நல்ல நிலைமையை அடையவே 1865-ஆம் ஆண்டில் எப். ஏ. வகுப்பையையும், 1867-ல் பி. ஏ. வகுப்பையும் வைத்து அதனை முதல்தரக் கலாசாலை (First Grade College) யாக ஏற்படுத்தினர். 1867-ஆம் ஆண்டு காலாசாலைக்கு வாய்ப்பான ஆசிரியர்கள் அமைந்தவுடன் அதனை மிஷனிலிருந்தும் பிரித்துத் தனியே நடத்தற்குரிய முயற்சியைச் செய்தார். 1877-ல் 'சென்னைக் கிறித்துவக் கலாசாலை' என மாற்றப்பட்டு இப்பொழுதும் நன்கு நடைபெற்று வருகின்றது. தம் தாய் நாட்டுக்கு டாக்டர் மில்லர் போயிருந்த பொழுது இந்தியாவின் கல்வி முன்னேற்றத்தில் ஊக்கங் கொண்ட எல்லாரிடத்திலும் சென்னைக் கிறித்துவக் கலாசாலை புதியதாய் அடைந்துள்ள முன்னேற்றத்தையே வெளியிட்டார்.

சென்னை மாகாணத்திலுள்ள கல்வி அதிகாரிகள் பலரிடமும் பள்ளிக்குச்செல்லும் மாணவரின் சீர்திருத்தத்திற்கும், ஒழுங்குக்குமாகச் சில சட்டதிட்டங்களை ஏற்படுத்தி அவர்களை ஒப்புக்கொள்ளும்படி இவர் செய்தார். அரசியலாரால் ஒப்புக்கொள்ளப்பட்ட இச்சட்டதிட்டங்கள் 'சென்னைக் கல்வி இலாகா ஒழுங்குகள்' (Madras Educational Rules) என வழங்கப்பட்டு வருகின்றன. கலாசாலை மாணவர்கள் நாளுக்கு நாள் மிகுதியாய் வரவே இடவசதிகளைத் தம்மாலானமட்டும் முயற்சி எடுத்து விரிவு செய்து கொடுத்தார் மில்லர்.

அயல் இடங்களிலிருந்து வரும் மாணவர்களின் துன்பங்களை மில்லர் உணர்ந்து அதற்காக மாணவர் உணவு விடுதி அமைக்க எண்ணினர்; 1882-ல் கலாசாலையின் பக்கத்தில் ஒரு வாடகைவீடு அமர்த்தி அதில் பார்ப்பன மாணவர் பலருக்குச் சாப்பாட்டுக்கும் தங்கி யிருப்பதற்கும் வசதிசெய்து கொடுத்தார். இந்த இயக்கத்தை முதன் முதல் இவர் தென்னிந்தியாவில் ஏற்படுத்தியது குறிப்பிடத் தக்கது. இவ்வியக்கத்தின் நன்மை மிகவே தம்புச் செட்டித் தெருவில் 'சென்னை மாணவர் வீடு' (Madras Students' Home) ஒன்றை அமைத்தார்.

இந்த விடுதி இயக்கம் வெற்றிபெறவே இந்தியக் கிறித்துவ மாணவர்களுக்கும் ஒரு விடுதி அமைத்தார். இவர் காலத்திலே தான் சென்னைத் தர்க்க சபையும், கிரிக்கட் விளையாட்டுச் கூட்டமும் உண்டாக்கப்பட்டன. இவர் முயற்சியினாலே கலாசாலை மாணவர்களுக்குப் படிப்புக்காக உதவித் தொகை வழங்கும் வழக்கமும் 1885-ல் நியமிக்கப்பட்டது.

இக் கலாசாலையில் ஆசிரியருக்கும் மாணுக்கருக்கும் நேராக அமைந்திருந்த ஒற்றுமை மிகவும் பாராட்டத் தக்கது. இக்குணத்தில் டாக்டர் மில்லர் மிக மேன்மையாக வழிகாட்டியவராவர். இவர் ஆலோசனைச் சபையில் (syndicate) ஓர் உறுப்பினராயிருந்து நல்ல தொண்டு ஆற்றி வந்தனர். அதைக் குறித்துச் சென்னைப் பல்கலைக் கழகத்தார் எல். எல். டி. என்னும் பட்டத்தை அவருக்கு வழங்கினர்.

மாணவர்களிடத்து இவர் நடந்து கொண்ட முறையிலே மற்ற எந்த ஆசிரியர்களும் நடந்திருப்பார்கள் என்று நினைக்க இடமில்லை. இவர் தம் மாணவர்களிடத்து மிகுந்த அன்பு காட்டியிருக்கின்றார். ஒரு சமயம் 'பீப்பிள்ஸ் பார்க்' என்ற இடத்திற் பெருந்தீப் பற்றிக் கொண்டபொழுது தம் மாணவர்களைத் தேடித் திரிந்தலைந்திருக்கின்றார். ஒரு நேரம் பெரும் புயற்காற்று அடித்தபோது, வீடு வீடாய்ச் சென்று தம் மாணவர்கள் சுகமாயிருக்கிறார்களா வென்று பார்த்து வந்தார். நோயாய்க் கிடந்த பல மாணவர்களை அவர்கள் படுக்கையிலிருக்கும் பொழுதே, நேரிற் போய்ப் பார்த்து வருவதுண்டு. அவரால் மிகவும் நேசிக்கப்பட்ட மாணவர் ஒருவர் புதைக்கப்பட்டிருந்த கல்லறைக்குக் கண்ணீர் வடியச் சென்று திரும்பி வந்தனர். இன்னும் இரக்க நெஞ்சினையும் தயாள குணத்தையும் காட்டும் அளவில்லா நற்செய்கைகளைச் செய்திருக்கின்றார்.

மாணுக்கர்களிடத்து இவர் காட்டிய அன்பு பழைய குருகுல வாசத்தின் நினைவைக் கொண்டு வருகின்றது. இவ்வருங் குணங்கள் நிறைந்த டாக்டர் மில்லர் துரை மகனுருக்குப் பொது மக்களின் பொருளுதவியால் அழகிய உருவச்சிலை ஒன்று செய்யப்பட்டு ஆம்தில் பிரபுவால் (Lord Ampthill) 1901-ஆம் ஆண்டு சென்னைக் கிறித்தவக் கலாசாலைக்கெதிரே நிறுவப் பெற்றது. அதிற் கீழ்க்கண்ட வரலாறு எழுதப்பட்டிருக்கின்றது.

வில்லியம் மில்லர் L. L. D., D. D., C. I. E.,
சென்னைக் கிறிஸ்தவக் கலாசாலை.
பொதுமக்களின் பொருளுதவியால்
நிறுவப்பட்டது. 1901.

ஆராய்ச்சிப் பகுதி-Research

திருப்புகழ்ப் பதிப்பிற்கண்ட தல மாறுதல்கள்

[திரு. கு. குமாரசாமிப் பிள்ளையவர்கள், பவானி]

தேவாரத் திருப்பதிகங்கள் பெற்ற திருத்தலங்கள் யாவும் யாவர்க்கும் இன்னின்ன தலங்கள் இன்னின்ன நாட்டில் உளவென விளக்கமாகத் தெரிவனவாம். அவற்றுள் தனிப் பதிகமின்றி வேறு தலப்பதிகங்களுள் வைத்துக் கூறப்பெறும் வைப்புத் தலங்களை அவ்வாறு காண்டல் அரிதினும் அரிதே. அவற்றை அவ்வந் நாட்டினுள்ள சைவப் பெரியார்கள் விளக்கி, விபரமாகத் திங்கள் வெளியீடு முதலிய தாள்களில் வெளியிடு வார்களேல் நம் சைவ வுலகிற்குப் பெரிதும் நலம்பயப்பன வாகலாம்.

நம் செந்தமிழ்ச் செல்வியில் முன் ஓர்கால் எளியேன் "கொங்கு நாட்டின் வைப்புத்தல விளக்கம்" எனத் தலைப் பெயரிட்டுக் கொங்குநாட்டிற் காணும் பதின்மூன்று வைப்புத் தலங்களைப்பற்றி, என் சிற்றறிவுக் கெட்டிய அளவு திருவருள் தூண்டச் சைவத் திருமுறைகளின் ஆதாரங்கொண்டும், சாசனங்கள், உலகில் வழங்கும் வழக்கம் முதலியவற்றைக் கொண்டும் வெளியிட்டிருந்தேன்.

இப்பொழுது திருப்புகழை எளியேன் கண்ணுறும் பொழுது இக்கொங்கு நாட்டினுள்ள இரண்டு திருத்தலங்கட்கு விளக்கமாக உள்ள திருப்பெயர்களை வேறு ஒரே தலத்திற்கு வலிந்து பொருள் கொண்டும், மற்றும் ஒன்றன் திருப்பெயரை வேறோர் திருத் தலத்தின் பெயராக் கருதியும் அச்சிட்டிருப் பன கண்டேன்.

அவற்றுள் "மலரளி கொண்டை" என்ற தலைப்பினை யுடைய பழநித் திருப்புகழின் ஈற்றில் வந்துள்ள,

"பதியினில் மங்கைக் கதித்த மாமலை
யொடுசில குன்றிற் றரித்து வாழ்வுயர்
பழநியி லின்புற் றிருக்கும் வானவர் பெருமாளே"

என்ற தொடரிற் காணும் "பதியினில் மங்கைக் கதித்த மாமலை" என்பது வள்ளிமலை எனக்குறிப்பெழுதி யுள்ளார்கள் திருவாளர்கள் எம். ஆர். கந்தசாமிக் கவிராயரவர்களும், சு. செங்கல்வராய பிள்ளையவர்களும். ஆனல் எல்லா இடங் களையும் ஒருவர் கண்டெழுதுவதென்றால் எளிதன்று. தேவார வைப்புத் தலங்களை எப்படிக் காண்ப தரிதாக இருக்கின் றதோ அது போன்றதே திருப்புகழ்ப் பாடல்பெற்ற குன்று

தோறுடற்றலங்களைக் காண்பதும். அன்றியும் இக்கொங்கு நாட்டிற்றான் குன்றுதோறுடற் றிருத்தலங்கள் மிகுதியாக உண்டு என்பதைஅறிஞர் யாவரும் நன்குணர்வர்.

இஃதிங்ஙனமாக, மேற்காட்டிய தலங்கள் எவை யெனிற் கூறுவல். "பதியினில்=நகரத்தில், மங்கை=விஜய மங்கலத் தும், கதித்தமாமலை யொடு=கதித்தமாமலையுடன், சில குன் றில்=சில மலைகளினும்", என உம்மைத் தொகையாக்கிப் பொருள் கொண்டு நன்மை யுறுதல் வேண்டும். ஆதலின் இதில் இரண்டு தலங்கள் காண்க.

சோழ நாட்டிலுள்ள தேவாரப் பதிகம் பெற்ற விஜய மங்கை வேறு; இதுவேறும். திருப்புகழ்ப் பாடல்கள் இரண் டிற்கும் வெவ்வேறாக உண்டு.

இந்த விஜய மங்கலம் என்பது ஈரோட்டிலிருந்து போத் தனூர் செல்லும் இருப்புப் பாதையில் "விஜய மங்கலம்" என்ற பெயராலேயே உள்ள புகை வண்டி நிலயத்தின் வடக் கில் இரண்டுமைல் அளவிலுள்ள புராதன நகரமாகும். "கொங் குவேண் மாக்கதை" என்ற நூலைப் பாடிய கொங்கு வேளிர் வாழ்ந்ததாகக் கூறுவது இந்நகரையே. சிலப்பதிகாரத்திற்கு உரைகண்ட அடியார்க்கு நல்லார் என்னும் பெரியார் வாழ்ந்த நிரம்பை என்ற ஊரும் இந்நகரத்திற் கருகாக உள்ளதே. இத் தொன்னகரில் ஒருசிவாலயமும், முருகப்பெருமான் ஆலயமும் நன்கு விளக்கமாக உள்ளவையே. இக்கோவில்கட்கு, கூனம் பட்டி மடாலயத்து ஆதிசைவ பரம்பரையினர்களாகிய மாணிக்கவாசக ரவர்களால் நித்திய நைமித்திகங்கள் நடத்தப் பெற்று வருகின்றன.

அன்றியும் இங்குச் சமணாலயமும் மிகத் தொன்மையான தாய்ப் பெரிதாக ஒன்றுண்டு. இவ்வாலயத்திற் பல சாசனங் கள் உண்டு. அவற்றுள் முக்கியமான ஒன்று கூன்பாண்டிய னால் செதுக்கப்பெற்ற கல்வெட்டாகும். இதனைச் சுமார் இருபத்தைந் தாண்டுகட்கு முன்னர் அக்கோவில் அர்ச்சக ராகிய சிநிவாசையர் என்ற ஜைனர் எடுத்து வைத்திருந்த கல் வெட்டுகளின் படியோலைகளுட் கண்டேன். ஆனால் அப் பொழுது அதனைப் படியெழுதிக் கொள்ளும் எண்ணம் எனக் குத் தோற்றவில்லை. இனித் தருணம் வாய்க்கில் அதனை எப் படியாவது படியெழுதிக் கொள்ளவேண்டும் என்னும் எண் ணம் என் சித்தத்தைவிட்டு அகன்றிலது. நிற்க.

"கதித்தமாமலை" என்ற மற்றொரு திருத்தலம் மேற்கூறிய விஜயமங்கலம் என்னும் புகைவண்டி நிலயத்திற்கு மேற்கில் ஐந்து மைல் தூரத்தேயுள்ள ஊத்துக்குழி என்ற நிலயத்திற் கருகிலேயே வடபுறம் முக்கால்மைல் தூரத்தேதெரியும் குன்ற

மும், அதன்மீது தெரியும் கோவிலுமேயாம். இத்திருத்தலத்தை இங்குக் கதித்தமலை என்ற பெயராலேயே யாவரும் கூறுவார்கள். இம்மலைக்கு அருகாமையில் உள்ள கிராமங்களிலுள்ள ஆன்பாலார்கட்குப் பெரும்பாலும் தொன்று தொட்டுக் 'கதித்தமலை' 'கதித்தமலை' என்னும் பெயரிட்டு வழங்குவதும் கண்கூடே. இவ்வாலயத்திலும் நித்திய நைமித்திகங்களை முன்னர்க் காட்டிய மாணிக்கவாசகா மடாலயத்தாராலேயே நடத்தப்பெற்று வருகின்றன. தைப்பூசத் திருவிழா மிகச் சிறப்பாய் நடைபெறுவதுண்டு.

இத்திருத்தலத்திற்குத் தென்மேற்கில் சுமார் ஐந்து மைல் அளவில் உடையதே "கொங்கிற் குறும்பிற் குரக்குத் தளியாய் குழகா" எனச் சுந்தரமூர்த்தி சுவாமிகளால் ஊர்த்தொகைத் திருப்பதிகத்துட் போற்றப் பெறும் குரக்குத் தளி என்ற தேவார வைப்புத்தலமும். மேற்காட்டிய மூன்று திருத்தலங்களும் இக்கொங்கு நாட்டின் உட்பிரிவு நாடுகளாய இருபத்து நான்கனுள் குறும்புநாடு என்ற நாட்டிலுள்ளனவே. இதற்குக் குறும்பு நாடு என்பது தொன்று தொட்டு இன்று வரை மாறுதவரும் பெயரென்பது நன்கு விளங்கும். எனவே, மங்கை என்பது விஜயமங்கல மென்றும், கதித்தமாமலை என்பது 'கதித்தமலை' என்றும் வலியுறுத்தியவாறுயிற்று.

மற்றும் ஒன்று

மதுரை என்று திருக்கோயிற் றலைப் பெயரிட்டுப் பதித்துள்ள "கலைமேவு ஞானப் பிரகாச" என்ற தொடக்கத்தையுடையதாய், இறுதியில் "திருவாணி கூடற் பெருமாளே" என்று முடிகின்ற திருப்பாடல், இக் கொங்கு நாட்டில் தேவாரத் திருப்பதிகம் பெற்ற திருத்தலங்கள் ஏழனுள் ஒன்றுகிய திருநணு வென்னும் பவாநி கூடற் றிருத்தலத்திற் குரிய திருப்புகழ்ப் பாடலாகும். எங்ஙன மெனில்,

இத்தலம் காவிரி என்னும் யாற்றுடன் வானி என்னும் பெயரையுடைய பவாநியாறு கூடுகின்ற சங்கமுகத் துறையிலிருப்பதால் திருவானி கூடல் எனவும், பவாநி கூடல் எனவும் பெயர்களைப் பெற்றது. இங்குள்ள கல்வெட்டுகளி லெல்லாம் இத்தலத்துக்குத் திருவானி கூடலென்ற திருப்பெயரையே காணலாம்.

மேலும் "குடகில் வருங்கா விரிபுகு வானிக் கொழுநாடு" என்ற திருவவிநாசிப் புராணத்தில் இவ் யாற்றுக்கு வானி என்னும் பெயர் இருப்பது காணலாம்.

அன்றியும், எட்டுத் தொகை நூல்களுள் ஒன்றுகிய பதிற்றுப் பத்து என்னும் சங்கநூலுள் ஒன்பதாம் பத்தில்

உள்ள அக-ஆம் பாடலில் பெருங் குன்றூர்க் கிழார் என்னும் புலவர் பெருமான் இளஞ் சேரலிரும் பொறை என்னும் சேர வரசனைப்பற்றி, "இளஞ் சேரலிரும் பொறையை எல்லாரும் வெருவரச் செருக்களம் புலவக் கொன்றமர்க் கடந்த கடக்கைப் பொறைய னென்று சொல்லுகையாலே, யான் அவனை வெப்பமுடையா னொருமக னென்று கருதினேன்; அஃது இப்பொழுது கழிந்தது; அப்பொறையனாகிய பாடுநர் புரவலன், ஆடு நடை அண்ணல், யான் தன்னொடு கலந்திருந்த வழித் தன்னாட்டு வானி யென்னும் யாற்று நீரினும் சாயலனா யிருந்தான் முனென்" என்று வரும் பழைய உரையை யுடைய பாட்டில்,

"புனல்பாய் மகளி ராட வொழிந்த
பொன்செய் பூங்குழை மீமிசைத் தோன்றுஞ்
சாந்துவரு வானி நீரினுந்
தீந்தண் சாயலன் மன்ற தானே"

என்ற அடிகளால் வானி யாற்றின் தன்மையை விளக்குகின்றார். மேற்கூறிய சேரன் வெம்மையனல்லன், தன்னாட்டு வானி நீரினுந் தண்ணியன் என்றதனால் அது விளங்குகிறது. இவ் யாறு நீல்கிரியில் உற்பத்தியாகி வருவதால் என்றும் மிக்க தண்மைனென்றிருத்தல் இயல்பே. கண்கூடுமதுவே.

இவ் யாற்றிற்கு வானி என்ற பெயர் இங்ஙனஞ் செய்யுள் வழக்கிலேயன்றி, உலக வழக்கிலும் பெரும்பாலும் சாதாரணமாக எல்லா மனிதர்களாலும் இங்குக் கூறுவதையுங் காணலாம். அல்லாமலும் இவ்வாற்றங் கரைகளிலுள்ள இரண்டூர்களுக்கு மேல்வானி, கீழ்வானி என்ற பெயர்களிருப்பதை இப்பொழுதுங் காணலாம். ஆனால் வானி யென்பதை வாணி எனத்திரித்து வழங்குவோரும் சிலருண்டு. இவ்வாற்றுக்கு வேறாக உள்ளதாய்த் தற்போது கோவைமா நகர்க்குத் தீங்தண்ணீர் தருவதாய் வெள்ளியங் கிரியினுச்சியி னின்றும் பாய்கின்ற ஆற்றுக்குச் சிறு வாணி என்னும் பெயரிருத்தலும் இதனை வலியுறுத்தும்.

அங்ஙனமாயின் பவானி என்ற பெயர்க் காரணம் யாதெனில், துர்வாச முனிவர் சிவபெருமானை வழிபடற்காத் தவங் கிடந்த ஞான்று, சிவபெருமானுக்குரிய ஆண்பாற்பெயராகிய பவன் (பாதிவ்யோ பவ:) என்றதற்கும் பொருந்தப் பவானி என்னும் பெண்பாற் பெயரையுடைய அம்பிகையின் திருவருளா லிவ்யாறு பெருகி வந்தமையாற் போந்த பெயராகும்.

" அலம்புரி பவநித் தோங்கு மருந்தவத் துருவாச
னலம்புரி தவத்தால் வேத நாயகி யருளே நல்ல

சலம்பயி னதியாய்த் தன்பேர் தரித்திரு கரையுந் தூய
வலம்புரி யினங்கள் வீசி வருதிரைப் பவானிக் கீழ்பால்.

அதனை என்ற பவானி கூடற்புராணத் திருவிருத்தத்தாற் காண்க.

ஆதலின், இதுவரை கூறியவற்றி லிருந்து வானி என்ற பெயர் திருநணு என்னுந் தலத்திற் காவிரி யாற்றிற் கூடும் யாற்றின் பெயரெனவும் திரு என்பது தலத்திற்கு அடையெனவுங் கொள்க. வாணி என்பது மரூஉ மொழியாகக் கொள்க. இவ்வாறு வழக்கிலிருப்பதும் மேலே காட்டிய தொன்றும்.

அன்றித் தென்மதுரைக்குங் கூடல் என்ற பெயர் உண்மையின் அது வாணி கூடியதால்வந்த பெயரன்று. சோமசுந்தரக் கடவுளால் விடுத்த மேகங்கள் நான்கு மாடங்களிலும் கூடியதால் வந்த பெயராம். அது நான் மாடக்கூடல் என்பதாம். திருப்புகழ்ப் பதிப்பாளர்கள் வாணி கூடலென்பது மதுரையெனக் கொண்டது அதனில் தமிழ்ச் சங்க மிருந்தமை கருதியே போலும். அது பொருந்தாத தாகும். அன்றி மதுரைக் குரியவேறு குறிப்புகளொன்றும் அப்பாடலில் வரவுங் காணேம்.

அப் பாடலும் இது:

கலைமேவு ஞானப் பிரகாசக்
    கடலாடி ஆசைக் கடலேறி
பல மாய வாதிற் பிறழாதே
    பதிஞான வாழ்வைத் தருவாயே
மலை மேவு மாயக் குறமாதின்
    மன மேவு வாலக் குமரேசா
சிலை வேட சேவற் கோடி யோனே
    திருவானி கூடற் பெருமாளே.

ஆதலின், "திருவானி கூடல்" என்ற பெயர் திருநணு வென்னும் பவானி கூடற் றலத்திற் குரிய பெயரென்பதை இங்குள்ள கல்வெட்டு, தல புராணங்கள், சங்க நூல், உலக வழக்கு முதலிய பலவகை யாதாரங்களாலும் வலியுறுத்தப் பெற்றஒன்றாதலினால், இத்திருப் புகழைப் படிப்பவர்கள் யாவரும் உண்மை யுணர்ந்து படித்து நலம் பெறுவார்களென நம்புகின்றேன்.

"மலரளி கொண்டை" என்ற தலைப்பினை யுடைய பழநித்திருப்புகழிற் காணும் "பதியினில் மங்கைக் கதித்த மாமலை" என்பன இரண்டும் மேலேகாட்டிய இரண்டு தலங்களென்பது தெளிவாயிற்று.

இனிமேல் திருப்புகழைப் பதிக்கும் பெரியோர்களும் திருவானி கூடல் என்பது மதுரையின்றித் திருநணு என்று திருத்திப் பதிப்பார்களெனவும் நம்பி வேண்டுகின்றேன்.

செய்திகளும் குறிப்புகளும்
News and Notes

தூத்துக்குடிச் சைவசித்தாந்த சபையின்
51-ஆம் ஆண்டு நிறைவு விழா

1934ஆம் டிசம்பர்மீ 29, 30-ஆம் நாட்களில் கோயமுத்தூர் உயர் நிதி மன்ற வழக்கறிஞர் "இராவ் சாகிப்" C. M. இராமச்சந்திரஞ் செட்டியாரவர்கள் B.A., B.L. தலைமையில், திருவாளர். சுந்தரஓதுவா மூர்த்திகள் இன்னிசைத் தேவாரம் இடை இடையே ஓத, பல அன்பர்கள் அரிய சொற்பொழிவுகள் நிகழ்த்தினர். அவைத் தலைவரவர்கள் தலைமையுரை படித்ததும்,

திருவாளர்கள் லால்குடி அ. மு. சரவண முதலியாரவர்கள், ஜலகண்டபுரம் அ. வரதநஞ்சைய பிள்ளையவர்கள், நாகர்கோயில் K. ஆறுமுகம் பிள்ளை அவர்கள் முறையே "நீலகண்டர் மனமும், ஆலமுண்டான் சினமும்" "திருவருட் செயல்", "கோவில்களும் உருவ வழிபாடுகளும்", என்னும் பொருள்கள் பற்றி இனிமையாய்ப் பேசினர்கள்.

மறுநாள் திருவாளர். மா. வே. நெல்லையப்ப பிள்ளையவர்களால் சைவ சித்தாந்தப் பொருள் பற்றிய ஐயத்தெளிவுகள் நீக்கப் பெற்றதும், திரு. மா. கிருஷ்ணப் பிள்ளையவர்கள் பெண்பாடசாலை மாணவிகளால் ஸ்ரீ சுந்தர மூர்த்தி நாயனர் வரலாறு நடித்துக் காட்டப்பட்டது. பின்பு, திருவாளர்கள், அ-வரதநஞ்சைய பிள்ளையவர்கள், சென்னை வித்துவான். தானு அம்மாள் அவர்கள், அ. மு. சரவண முதலியாரவர்கள் முறையே "இளையான் குடிமாற நாயனர்" "மங்கையர்க்கரசியார்", "திருவாதவூரடிகட்குபதேசம்", "முருகன்" என்பன பற்றி விரிவுரை ஆற்றினர்.

தமிழாசிரியர்க்கு அரசினர் குறைத்த சம்பளத்தைப் பற்றிக் கண்டித்துப் பேசியபின் ஏனைய ஆசிரியர்க்குப் போல் அவர்க்கும் தக்க சம்பளம் தருதல் வேண்டும் என்ற தீர்மானமும், நிறைவேறிற்று. மூன்றும் நாள் சென்னை வித்துவான். தானு அம்மாள் அவர்கள் தலைமையிற் சைவ மங்கையர் மகா நாடு கூடிற்று. தலைவர் முன்னுரையின் பின் சைவ மங்கையர் விரிவுரைகள் நிகழ்த்தினர்கள் இரவு மணி 8½-க்கு மகா நாடு இனிது நிறைவேறிற்று.



இசைத்தமிழ்ச் செல்வர், உயர்திரு. தி. இலக்குமண பிள்ளையவர்கள் B.A.

(உ அ௲-ம் பக்கம் பார்க்க.)

ஓம்
செந்தமிழ்ச் செல்வி
திங்கள் வெளியீடு

சிலம்பு-கரு] பவ—தை [பரல்-சு

சுந்தரமூர்த்தி அடிகள் தேவாரம்

**பொய்யா நாவதனாற் புகழ்வார்கள் மனத்தினுள்ளே
மெய்யேநின் றெரியும்விளக் கேயொத்த தேவர்பிரான்
செய்யா னுங்கரிய நிறத்தானுந் தெரிவரியான்
மையார் கண்ணியொடு மகிழ்வான்கழிப் பாலையதே.**

பதவுரை :—

செய்யானுங் கரிய நிறத்தானும்—சிவந்த நிறத்தையுடைய நான்முகனும், கரிய நிறத்தையுடைய திருமாலும்

தெரிவு அரியான்—முறையே முடியும், அடியும் தேடிக் காணுதற்கு முடியாதவண்ணம் புறத்தில் அவர்கள் நடுவே தீப்பிழம்பாய் நின்றவனும்

பொய்யா நா அதனாற் புகழ்வார் மனத்தினுள்ளே—அவ்வாறு அவர்கள் அவனைக் காணவிடினும், மெய்யினையே கூறுகிற மெய்யடியார்களுடைய தூய உள்ளத்தினுள்ளே

மெய்யேநின்று எரியும் விளக்கே ஒத்த தேவர் பிரான்—உண்மைப் பொருள் இன்னது என்று அகத்தே முற்றிலும் விளங்கும்படி அருட்பேரொளியா யிலங்கும் மாதேவனும்

மையார் கண்ணியொடும் மகிழ்வான்—மைதீட்டிய கண்களையுடைய உமாதேவியாரோடும் (உயிர்களுக்கு அருள்செய்யும்படி) உவந்து வீற்றிருக்கின்றவனுமாகிய சிவபெருமான்

கழிப்பாலையது—திருக்கோயில் கொண்டெழுந்தருளியிருக்கிற திருப்பதி, திருக்கழிப்பாலையாகும்.

மாந்தர்களே, திருக்கழிப்பாலையில் வீற்றிருக்கிற சிவபெருமானை வழிபடுங்கள் என்பது குறிப்பெச்சம்.

விளக்கவுரை :—

செய்யானும் கரிய நிறத்தானும்—செய்யான்=நான்முகன். செந்தாமரைமலரில் வீற்றிருப்பவனாதலின் 'நான்முகன்' 'செய்யான்' என்று கூறப்பட்டான்.

பொய்யா நா அதனாற் புகழ்வார் மனத்தினுள்ளே—பொய்யாநா= மெய்யினையே கூறுகிற நா. நேர்மையாய் ஒழுகுகிறவர்களது மனத்திலுள்ளது நாவினாற் கூறப்படுதலால், மெய்யினையே கூறுகிற நாவுடையவன் மெய்யினையே உணருகிற உள்ளத்தினையும் உடையவனாயிருப்பன். இதனால், பொய்யான உலகவாழ்வில் மயங்காது மெய்யாகிய சிவத்தினையே நினைக்கின்ற உள்ளம் மெய்யுள்ளம் என்பதும், அம்மெய்யுள்ளத்தினர் மெய்யினையே கூறுவர் என்பதும் கூறப்பட்டன. "நினைவதும் வாய்மை மொழிவது மல்லாற், கனைகழலீசனைக் காணவரிதாம்" என்றார் திருமூலர்: திருமந்திரம் 1826-வது பாட்டு.

மெய்யே நின்று எரியும் விளக்கே ஒத்த தேவர்பிரான்—அருள் ஒளி இங்கே விளக்கு ஒளியாக உருவகஞ்செய்து கூறப்பட்டது. ஆணவமலத்தாலாகிய அக இருளை நீக்கி, சிவமாகிய உண்மைப் பொருளை அகக்கண்ணுக்குத் தெரியச் செய்கிற அருள் ஒளியானது, இரவின்கண் புறஇருளை நீக்கிப் புறப்பொருளைப் புறக்கண்ணுக்குத் தெரியச் செய்கிற விளக்கொளி போல்வது ஆகலின், அடிகள் இங்கே அருள் ஒளியை விளக்கொளிக்கு ஒப்பாக உருவகஞ்செய்து கூறியருளினர். விளக்கு என்பது ஆகுபெயராய் விளக்கொளியைக் குறிக்கின்றது. "சோதியே சுடரே சூழொளி விளக்கே" என்று மாணிக்கவாசக அடிகள் திருவாசகத்திலும் "ஒளிவளர் விளக்கே" என்று திருமாளிகைத்தேவர் திருவிசைப்பாவிலும் கூறியருளினமை காண்க.

மெய்யே' என்பதிலுள்ள 'ஏ' பிரிநிலை குறித்தது. பொய்மை முற்றிலும் விட்டு நீங்கிய மெய் என்பது பிரிநிலை ஏகாரத்தாற் குறிப்பிடப்பட்டது. விளக்கே என்பதிலுள்ள ஏகாரம் தேற்றம் குறித்து நின்றது: பிரிநிலை குறித்தது என்றலும் பொருந்தும். விளக்கே என்றதால் திரோதமலம் முற்றிலும் நீங்கிய அருள் விளக்கம் என்பது குறிப்பிடப்பட்டது.

மையார்கண்ணியொடு மகிழ்வான்—மகிழ்கின்றான் என்று நிகழ்காலத்தாற் கூறற்பாலது இயல்புபற்றி மகிழ்வான் என எதிர்காலத்தாற் கூறப்பட்டது. இதனால், சிவபெருமான் ஐந்தொழிலையும் இயல்பாக உவந்து செய்கின்றான் என்பதும், அவன் தன்னை வழிபடும் உயிர்களுக்கு அருள் செய்தற்குத் திருக்கோயில்களில் திருமேனி கொண்டருளி யிருக்கின்றான் என்பதும் கூறப்பட்டன.

கழிப்பாலையது—'அது' பகுதிப் பொருள் விகுதி. 'ஏ' ஈற்றசை.

திருஞானசம்பந்த அடிகள் தேவாரம்

எண்ணொன்றி நினைந்தவர் தம்பால்
உண்ணின்று மகிழ்ந்தவ னூராம்
கண்ணின்றெழு சோலையில் வண்டு
பண்ணின்றொலி செய்பனை யூரே.

பதவுரை :—

கள் நின்று எழுசோலையில் வண்டு—தேன் எப்பொழுதும் துளும்பு கின்ற (மலர்களையுடைய) சோலையிலுள்ள வண்டுகள்

பண்நின்று ஒலி செய்யும் பனையூர்—பண்ணொடு எப்பொழுதும் ஒலி செய்து பாடுகின்ற திருப்பனையூர் என்னும் திருப்பதியானது

எண் ஒன்றி நினைந்தவர் தம்பால்—தங்கள் அறிவைச் சிவபெருமா னுடைய அறிவுடனே இரண்டறக் கலந்து அடங்கிப் பொருந் தும்படிசெய்து நினைக்கிற மெய் அடியார்களிடத்து

உள் நின்று மகிழ்ந்தவன் ஊராம்—அவர்களுடைய நின்மலமான தூய உள்ளத்தில் உவந்து நிலைபெற்று நின்று, அவர்களை இன்பம் நுக ரச்செய்து, மகிழ்கின்ற சிவபெருமான் திருக்கோயில் கொண் டெழுந்தருளியிருக்கின்ற ஊராகும்.

விளக்கவுரை:—

கள் நின்று எழுசோலையில் வண்டு—கள் + நின்று = கண்ணின்று. கள் = தேன். நின்றுஎழு = நிலைபெற்று, அதாவது, எப்பொழுதும்.

பண் நின்று ஒலி செய்யும் பனையூர்—'வண்டு' சாதி ஒருமைப் பெய ராய் 'வண்டுகளின் கூட்டத்தைக்' குறிக்கிறது. வண்டுகள் பூக் களிலுள்ள தேனை உண்ணுதற்கு ரீங்காரம் செய்தல், பண்ணொடு பாடுதலாகக் கூறப்பட்டது. இஃது இயற்கைவிற்சியணி.

எண் ஒன்றி நினைந்தவர் தம்பால்—'எண்' என்பது எண்ணம். அஃது இங்கே ஆகுபெயராய் எண்ணத்தினலுண்டாகும் அறிவைக் குறிக்கிறது. ஒன்றி நினைந்தவர்—பசு, பாசங்களை நினையாது சிவமாகிய பதிப்பொருள் ஒன்றினையே நினைக்கும் மெய்யடியார் கள். இது உயிருக்கும், சிவத்துக்கும் இயல்பாயுள்ள இரண்டற்ற அத்துவிதக் கலப்பு அறிவு. இயல்புபற்றி 'நினைக்கின்றவர்' என்று கூறற்பாலது 'நினைந்தவர்' என்று இறந்தகாலத்தாற் கூறப்பட்டது.

உள் நின்று மகிழ்ந்தவன்—உள் = உள்ளம். நின்று = நிலைபெற்று. மலம் நீங்கிய மெய் அடியார்கள், சிவபெருமான் தங்கள் உள் ளத்தில் நிலைபெற்றுத் தங்கி நின்று பேரின்பம் நுகர்வித்தா லன்றி, பேரின்பம் நுகரார் ஆதலின், 'உள் நின்று மகிழ்ந்த

வன்' என்று சிவபெருமானை அடிகள் கூறியருளினர். மெய்யடியார்கள் பேரின்பம் நுகர்தற் பொருட்டே, சிவபெருமான் அவர்களுடைய உள்ளத்தில் நின்று மகிழ்கின்றான் என்பது இங்கே கூறப்பட்டது. மகிழ்தல் என்பது பேரின்பம் நுகர்தல். இன்பம் நுகர்ந்தன்றி மகிழ்தல் உண்டாகாதாகலின், இன்ப உருவனாகிய சிவபெருமானுக்கு மெய்யடியார்கள் இன்பம் நுகர்தல்போல அழுந்தி அறிதல் அவ்வாறு அறிதலாகும் என்று உணர்க.

பனையூரே என்பதிலுள்ள 'ஏ' அசை. மலம் முற்றிலும் நீங்கிய மெய்யடியார்கள் தனது பேரின்பம் நுகருமாறு அவர்களுடைய தூய உள்ளத்தில் இருத்தல்போல, உயிர்கள் தன்னை வழிபட்டு உய்யும் பொருட்டுத் திருப்பனையூரில் திருக்கோயில் கொண்டெழுந்தருளியிருக்கின்றான் என்பது இப்பாட்டின் கருத்து.

—மா. வே. நெல்லையப்ப பிள்ளை.

மலை

[மறைமலையடிகள்]

மலை—மல் என்னுஞ் சொல்லடியாப் பிறந்து வலிமையினையுடையது என்று பொருள்படும்.

ஓங்கல்
பிறங்கல்
பொருப்பு
வெற்பு } —மிகவும் உயரமாக இருப்பது.

விலங்கல்—குறுக்கே வளர்ந்து நீண்டு கிடப்பது.

சிலம்பு—எதிரொலி செய்வது.

வரை—மூங்கிற்காடுகள் உள்ளது.

இறும்பு—காடுகள் அடர்ந்தது.

குன்று
குவடு
குறும்பொறை } —சிறியமலை.

பொற்றை
பொச்சை } —மண் மிகுந்த மலை.

—(சிறுவர்க்கான செந்தமிழ்)

இலக்கணமும் இலக்கியமும்:
LANGUAGE AND LITERATURE

குறுந்தொகை

மூலமும் விளக்க உரையும்

[இலந்தையடிகள் வித்துவான் இரா. சிவ. சாம்பசிவன்]

(பதிப்புரிமை ஆசிரியர்க்கே)

(உகள-ஆம் பக்கத் தொடர்ச்சி)

மருதம்

தலைமகள் தன்னைப் பழித்துக் கூறினாள் எனக்கேட்ட காதற் பரத்தை, தலைமகற்குப் பாங்காயினார் கேட்பச் சொல்லியது.

ஆலங்குடி வங்கனார் பாடியது

8. கழனி மரத்து விளைந்துகு தீம்பழம்
பழன வாளை கதூஉ மூரன்
எம்மிற் பெருமொழி கூறித் தம்மில்
கையுங் காலுந் தூக்கத் தூக்கும்
ஆடிப் பாவை போல
மேவின செய்யும் புதல்வன் றாய்க்கே.

என்பது கிழத்தி தன்னைப் புறனுரைத்தாள் எனக்கேட்ட காதற்பரத்தை தலைமகற்குப் பாங்காயினார் கேட்பச் சொல்லியது.

பதவுரை:—கழனி மரத்து விளைந்து உகுதீம்பழம்—வயற் கரையினிடத்துள்ள மரத்தில் விளைந்து முதிர்ந்து கீழே விழுகின்ற இனிய கனியை; பழனவாளை கதூஉம் ஊரன்—நீர் நிலைகளிலுள்ள வாளை மீன்கள் கௌவிக்கொள்ளும் மருதநிலத்துத் தலைமகன்; எம்இல் பெருமொழி கூறி—எம்மனையில் தங்கியிருந்த காலத்தில் எம்மைப் பாராட்டிப் புகழ்ந்து சூளுரை கூறி; தம்இல்—தன் மனையை அடைந்த காலத்து; தன் புதல்வன் தாய்க்கு—தன்னுடைய புதல்வனின் தாயான தலைவியிடத்து; கையும் காலும் தூக்கத் தூக்கும் ஆடிப்பாவை

போல—கை கால்களைத் தூக்கி நின்றாடினால் எதிரிலுள்ள கண்ணாடியில் தோன்றும் பிரதிபிம்பமும் அவ்வாறே செய்வது போல; மேவின செய்யும் — விரும்பியவற்றைச் செய்வானாயினான்.

கழனி—வயல். பழனம்—நீர் நிலை, ஏரி, குளம், வயல், மருதநிலம். ஊரன்—மருதநிலத் தலைவன். பெருமொழி—சபதம், சூளுரை. ஆடி—கண்ணாடி. புதல்வன் தாய் —தலைவி. மேவின—விரும்பியன. கதூஉம்—உயிரளபெடை.

இறைச்சிப் பொருள் :—

"கழனி மரத்து விளைந்துகு தீம்பழம் பழனவாளை கதூஉமூரன்" என்றது, தன் மனைவியை விட்டு நீங்கிய தலைமகனைப் பரத்தையர் தழுவிக்கோடல் அந்நிலத்தியல்பு என்றவாறும். மற்றும், ஊரிலுள்ள எல்லா நுகர்ச்சிகளையும் தனக்கே கிடைக்குமாறு முயன்று நுகர்கின்றான் என்பதுமாம். தலைவி கடுஞ்சூலுற்றுக் கூடற்குரிய ளல்லாத காலத்துத் தலைவன் பரத்தையை மேவி இருந்து இன்பந் துய்த்துத் தங்கி நின்றானாக, தலைவி புதல்வனை ஈன்றாள் என்பதை அவற்கு அறிவித்தற்கு வெள்ளணி அணிவித்துச் சேடியைப்போக்க, தலைவன் செய்தி அறிந்து, தன் மனைக்கேகி மீள்வதாகப் பரத்தைபால் கூறி இல்லத்தை யடைந்து தன் மகனிடம் கொண்ட ஆர்வத்தால் பரத்தையிடம் மீண்டு செல்லாது இல்லின்கண்ணே தலைவியின் குறிப்பின்வழி ஒழுகி இருந்தான் என்பது காரணமாம் என்க.

"தலைவன் என்னிடத்திருந்தகாலை என் விருப்பப்படி நடப்பதாகப் பெருமொழி கூறினன். தன் இல்லினை அடைந்ததும் அவன் தன் தலைவியின் வசமாகி அவள் விருப்பப்படி நடக்கலாயினான். ஆதலின் அவள் என்னை ஏசத்தகும்" என்று தலைவன் பாங்காயினார் கேட்பப் பரத்தை கூறியதுமாம்.

புதல்வன் தாய்க்கு மேவின செய்யும்—உருபுமயக்கம்.

புதல்வன் தாய் என்றது தன்னைப்போல் இளையலல்லள்; முதியோள் என்று குறித்தவாறாயிற்று.

"கழனி மரத்து—கழனி மாஅத்து"
"மேவின செய்யும்—மேவன செய்யும்" }—பிரதிபேதங்கள்

"கையுங் காலுந் தூக்கத் தூக்கும்"—"கையும் காலுந் தூக்கத் தூங்கும்"—பிரதிபேதம்.

மேற்கோள் விளக்கம்

1. "கழனி மரத்து......தாய்க்கே"—"இல்லோர் செய்வினை இகழ்ச்சிக்கண்ணும்" என்பதன் உரையில் இளையோர் கூற்றுக்கு உதாரணமாகக் காட்டப்பட்டது.

—(தொல்—கற்பி—சூ. 151-2; தொல்—கற்பி—பக் 707)

2. இச்செய்யுளைப் "புறனுரைத்தாள் எனக்கேட்ட பரத்தை தலைவனை நெருங்கித் தலைவன் பாங்காயினர் கேட்ப உரைத்தது; இது முதுவேனில் வந்தது" என்பதற்கு மேற்கோள்.

—(தொல்—அகத்—பக் 22)

3. "கழனி மரத்து விளைந்துகு தீம்பழம் பழனவாளை கதூஉ மூரன்" என்பது,

"உள்ளுறை யுவமம் இன்பதுன்பங்கள் தோன்றச் சொல்லப் படும், அதில் இது பலவகை இன்பமும் வருந்தாது பெறுவர் என்ப தற்கு உவமையாகி வருதலின் 'இனிதுறுகிளவி' எனப்பட்டது" என்பதற்கு மேற்கோள். —(தொல்—உவம—134 பக்)

4. "ஆடிப் பாவைபோல மேவின செய்யும் புதல்வன் தாய்க்கே"—முதற்குறைந்து வந்ததற்கு மேற்கோள்.

—(நன்—மயிலை—153 பக்)

ஆடி—கண்ணடி. "ஆடியானன் மதலை"—பாரதம்

5. "ஆடிப்பாவைபோல"—ஆடியுட் பாவைபோ னீயணங்கிய தணங்கவென்றான்" —(சீவக—957-4)

"நாடவினை யாடிவந்த நற்பாவை போலடியார்
கூடவினை யாடிவந்த கோமானே" —(தமிழ் விடுதூது—252)

"ஆடிப் பாவையோ டலர் நிழற்பாவை
கைகான் மெய்பிறி தெவையும் பைபயத்
தூக்கிற் றாக்கி மேக்குயர் புயர்தல்" —(ஞானமிர்தம்—6)

6. "கழனி மாஅத்துவிளைந்துகு...தாய்க்கே"—என்பது, "இல் லோர் செய்வினை இகழ்ச்சிக் கண்ணும்" என்பதில், பான்மையால் தலைமகனை இகழ்தல் என்பதற்கு மேற்கோள்.

—(தொல்—கற்பு—இளம்பூ 260 பக்)

7. கழனி மரத்து விளைந்துகு தீம்பழத்தைப் பழன வாளை கவ்வுவதுபோல் ஊரிலுள்ள எல்லா இன்பங்களையும் முயற்சியின்றித் தலைவன் எய்துகின்றான் என்றது உள்ளுறை யுவமம். என்னை?

"உள்ளுறை யுவம மேனை யுவமமெனத்
தள்ளா தாகுந் திணையுணர் வகையே"

—(தொல் பொருள்—அகத் 46)

"உள்ளுறுத் ததனே டொத்துப் பொருள்முடிகென
உள்ளுறுத் திறுவதை யுள்ளுறை யுவமம்"—
என்பனவற்றாலறிக. —(தொல்—பொருள்—அகத் 48)

மெய்ப்பாடு—மடம்பற்றிய நகை என்க. என்னை?
"எள்ளல் இளமை பேதமை மடனென்
றுள்ளப் பட்ட நகைநான் கென்ப"—(தொல்—மெய்ப்—4 ரு)

பயன்—தலைவனைப் பழித்தல்.

நெய்தல்

தலைமகன், பரத்தையிடமிருந்து பிரிந்துவந்து தலைவியின் தோழியை யணுகித் தலைவியின் ஊடலைத் தணிப்பதற்கு வாயில் வேண்ட, தோழி தான் வாயில் நேர்ந்ததைக் குறிப்பால் அவனுக்கு உணர்த்தியது.

கயமனர் பாடியது

9. யாயா கியளே மாஅ யோளே
மடைமாண் செப்பிற் றமிய வைகிய
பெய்யாப் பூவின் மெய்சா யினளே;
பாசடை நிவந்த கணைக்கா னெய்தல்
இனமீ னிருங்கழி யோதம் மல்குதொறுங்
கயமூழ்கு மகளிர் கண்ணின் மானுந்
தண்ணந் துறைவன் கொடுமை
நம்மு ணாணிக் காப்பா டும்மே.

என்பது தலைமகற்குத் தோழி வாயில் நேர்ந்தது.

பதவுரை:—யாய்ஆகியள்—எவர்க்குங் கற்பினால் தாய் எனத்தக்காளும்; மாஅயோள்—அழகிய மாமை நிறத்தை யுடையோளுமாகிய தலைவி; மடைமாண் செப்பின்—சந்து தெரியாமல் மூடப்பட்ட மூட்டு வாயினையுடைய மாட்சிமைப் பட்ட செப்பிலே; தமிய—தனியாக; வைகிய—அடைத்து வைக்கப்பட்ட; பெய்யாப் பூவின்—சூடாத பூவைப்போல; மெய்சாயினள்—உடல் வாடி அழகு கெடுவாளானாள்; பாசு அடை நிவந்த—பசிய இலை நீர்மேல் உயர்ந்து காணப்படு கின்ற; கணைகால்—திரண்ட காம்பையுடைய, நெய்தல்—கரிய நெய்தல் மலர்; இனம் மீன் இருங்கழி ஓதம் மல்குதொறும்—திரளாகிய மீனையுடைய பெரிய கழியில் நீர் மிகுந்தொறும்; கயம் மூழ்கு மகளிர் கண்ணின் மானும்—நீர்நிலையில் மூழ்கு கின்ற மகளிர் கண்களை ஒத்திருக்கின்ற; தண் அம்துறை வன்—குளிர்ச்சி பொருந்திய அழகிய கடற்றுறையை யுடைய தலைவனது; கொடுமை—கொடுமையை; நம்முள் நாணி—நம் மிடத்துச் சொல்லவும் வெட்கமுற்று; காப்பாடும்—மறைத் துக் காப்பாற்றிக் கொள்வோம்.

யாய்—தாய். புலத்தற்கு உரிய காரணம் பல உளவாக வும், அவற்றைக் கருத்துட் கொள்ளாதாள் என்றமை தோன் றத் தலைவியை 'யாய்' என்றார்; மற்றும், புதல்வனைப் பெற் றமையாலும் 'யாய்' என்றார். மாயோள்—மாமை நிறத்தை யுடையவள். கண்ணின்மானும்—உருபு மயக்கம் (கண்ணினை) என்றும், உருபுஇன்றிச் சாரியைமட்டும் வந்தது என்றும் கூறுப. காப்பு—காப்பாற்றல் [கரப்பு—மறைத்தல்]. காப் பாடும்மே—உம்மை சிறப்பின்கண் வந்தது.

மேற்கோள் விளக்கம்

1. "யாயாகியளே" —(குறுந்—10-1)

2. "மடைமாண் செப்பில் வைகிய பெய்யாப்பூவின் மெய் சாயினளே"—"வகைவரிச் செப்பினுள் வைகிய மலர்போல், தகை நலம் வாடி" —(மணிமே –4-65)

"வகைவரிச் செப்பினுள் வைகிய கோதையேம்" —(மருதக்கலி—3-15)

"பெய்யாது வைகிய கோதை போல, மெய்சாயினையவர்" —(நற்—11-12)

"பீர்தங்கிய பெய்யா மலரிற் பிறிதாயினளே"—(சீவக.—1960)

"பாதிரிக் குறுமயிர் மாமலர், நறுமோரோட மொடுடனெறிந் தடைச்சிய செப்பிடந்தன்ன நாற்றம்" —(நற்—337: 4-6)

"செப்புவாயவிழ்ந்த நறுவிரை நறுமலர்" —(சிலப்—22: 121-12)

"பித்திகைக் கோதை செப்புவாய் மலரவும்" —(பெருங் (1) 33-76)

"கற்பக மாலையுஞ், சேமமணி நகைச் செப்பினு ளேந்துபு" —(சூளாமணி மந்திரப்—54)

3. "கணைக்கால் நெய்தல்"—கணைக்கால் என்பது நீர்ப்பூக் களுள் ஆம்பல், குவளை, நெய்தல், மருது என்பனவற்றிற்கு அடை யாக வரும்.

—நற் 230, 262, 138; ஐங் 68, திணைமொழி 23; நெய்தற்கலி 2-5.

" முயப்பிடிச் செவியன்அன்ன பாசடைக்
கயக்கணக் கொக்கின் கூம்புமுகை யன்ன
கணைக்கா லாம்ப லமிழ்துநா று தண்போது" —(நற்—230)

" பணைத்தோ ளரும்பிய சுரும்பிற் கணைக்காற்
குவளை நாறுங் கூந்தல்" —(நற்—262)

"பாசடைக் கலித்த கணைக்கா னெய்தற்
பூவுட னெறிதரு தொடலை தைஇக்" —(நற்—138)

"கண்ணி விடியற் கணைக்கா லாம்பல்" —(ஐங்குறு-68)

"கண்பாயல் பெற்றபோற் கணைக்கால மலர்கூம்ப"
—(நெய்தற்கலி—2: 5)

4. "பாசடைநெய்தல் மகளிர் கண்ணின் மானும்"
சிறுபாசடைய செப்பூர் நெய்தற்,
றெண்ணீர் மலரிற் றொலைந்தகள்" —(நற்— 23)

"கண்ணோர் ஒப்பின் கமழ்நறு நெய்தல்" —(நற் - 283-2)
"நெய்தற் கூம்புவிடு நிகர்மலரன்ன,

வேந்தெழின் மழைக்கணெங் காதலி"—(அகநா—83 12, 14)

"நெய்தற்போ தனைய வுண்கண் நேரிழை"
—(திருவிளை—மாபாதகம்-36)

"நெய்தல் மலரன்ன கண்" —(நெய்தற்கலி—25: 23)

5. "தண்ணந் துறைவன் கொடுமை, நம்முணுணிக் காப்பா டும்மே" என்பது பாணர்க் குரைத்தது"—(தொல் - செய்-பக்: 505)

6. "பாசடை நிவந்த கணைக்கா னெய்தல், இனமீ னிருங்கழி யோத மல்குதொறுங், கயமூழ்குமகளிர் கண்ணின்மானும்"—என்பது பெருமணல் உலகிற்கு நெய்தல் சிறந்தமை என்பதற்கு மேற்கோள்
—(தொல் - அகத்-இளம்பூ -சூ 5.)

7. "கயமூழ்கு மகளிர் கண்ணின் மானும்"—"என இன் வேற் றுமையும் உவமஉருபோடு வந்தது" —(தொல்-உவம - 105)

இது வினையுவமத்திற்கும் மேற்கோள். —(தொல்-உவம - 106)

8. "பாசடை நிவந்த......கண்ணின் மானும்"—பொருட்கு அடுத்த அடையும் உவமவடைக் கேற்றது உணரப் படாதன களையப் படும்" என்பதற்கு மேற்கோளாகக் காட்டி இதில் "பாசடை நிவந்த கணைக்கால் என நெய்தலாகிய பொருட்குவந்த அடை இரண்டும் கண் ணெனப்பட்ட உவமத்திற்கேற்ப வாராமையான் அவை தெளி மருங் கில என்று களைந்து கொள்க" —என்பர்-(தொல் - உவம-பக் 123)

9. "யாயா கியளே......கரப்பாடும்மே"—"பேணு ஒழுக்கம் நாணிய பொருளினும்" என்ற (தொல் - கற்பி: 150—சூ) சூத்திர வழக்கு உதாரணமாகக் காட்டித் 'தலைவனது பேணு ஒழுக்கத்திற்குத் தலைவி நாணிய பொருளின் கண்ணும்' என்பதற்கு மேற்கோள் காட்டினர். —(தொல் - கற்பி - பக். 692)

10. இச்செய்யுளைப் 'பாங்கி மனைவியைப் புகழ்தல்' என்பதற்கு உதாரணம் காட்டினர். —(நம்பியகப்பொருள் - சங்கப்பதிப்பு)

11. 'நெய்தல் கண்போல் பூத்தல்'—"சுறவம், கழிசேர் மருங்கிற் கணைக்கா னீடிக், கண்போல் பூத்தமை கண்டு நுண்பல, சிறு பாசடை நெய்தல்" என்பதால் அறிக. —(நற் - 27)

12. கயமூழ்கு மகளிர்கண் சேக்கும் என்பதை "மாயிரும் பனித் தடம் படிந்து மையழி, சேயரி நெடுமலர்க் கண்கள் சேந்தென" —(சூளாமணி-131) என்பதனாலறிக.

13. இக்குறுந்தொகைச் செய்யுளின் கருத்தோடு அடியிற்காணும் திருக்கோவையாரின் செய்யுட்கருத்தையும் ஒப்பிட்டுக் காண்க.

"வேயாது செப்பினடைத்துத் தனிவைகும் வீயினன்ன
தீயாடி சிற்றம் பலமனை யாடில்லை யூரனுக்கின்
றேயாப் பழியென நாணியென் கண்ணிங் ஙனே மறைத்தான்
யாயா மியல்பிவள் கற்புநற் பால வியல்புகளே"

—திருக்கோவை—374.

"மடைமாண் செப்பிற் றமிய வைகிய"—"மடைமாண் செப்பிற் றமியள் வைகிய" என்பது பிரதிபேதம்.

"நம்மு ணுணிக் காப்பாடும்மே"—"நம்மு ணுணிக் கரப்பாகும்மே" என்பது பிரதிபேதம்.

மெய்ப்பாடு :—வருத்தம் பற்றிய இளிவரல்.
பயன் :—வாயில் நேர்தல்.

வடமொழித் தென் சொற்கள்

[பண்டித திரு. ஞா. தேவநேயப் பாவாணர்]

உலகத்திலுள்ள மொழிகளெல்லாம் ஒரு பெருந் தாய் மொழியினின்றும் உதித்தவை யென்பது வரலாற்றுநூல் (History) குலநூல், (Ethnology), மொழிநூல் (Philology) முதலிய பல நூல்களாலும் வலியுறுத்தப்படும். ஆயினும் திசைச்சொல் வகையில் ஒரு வகுப்பார் புதியனவாய் ஆக்கிக் கொண்டனவும், தாய்மொழியினின்றும் புதியனவாய்த் திரித்துக்கொண்டனவுமான இருவகைச் சொற்கள் ஒவ்வொரு மொழிக்கும் சிறப்பாகும். ஒவ்வொரு மொழிக்கும் சிறப்பாகும். இவ்விருவகைச் சொற்களும் ஒருகிளைமொழிக்குரிய அதன் தாய்மொழியைச் சாரும்; ஒரு தாய் மொழிக்குரியவை ஒரு பெருந் தாய்மொழியைச் சாரும். திராவிட மொழிகளை நோக்கத் தமிழ் ஒரு தாய் மொழியும், ஆரிய மொழிகளை நோக்க ஒரு பெருந் தாய் மொழியுமாகும். எண்ணிறந்த தமிழ்ச் சொற்கள் இறந்து பட்டமையாலும், ஆரியச் சொற்களில் பல உருத்தெரியாத

வாறு அத்துணைத் திரிந்துள்ளதினும், பல வடசொற்கள் வடமொழிச் சிறப்புச் சொற்களாகவே தோன்றுநிற்கும். ஏனைச் சொற்களை இதுபோதுள்ள தென்சொற்றுணை கொண்டே தென் சொல்லெனக் காட்டல் மொழி நூலான் முட்டின்றி முடிவதாகும். இடுகுறிச் சொற்களாயின் இவ் வரம்பிற் குட்படா.

ஒரு சொல்லை ஒரு மொழிக் குரியதென்று அறிதற்கு அதன் பகுதி (Stem) அல்லது மூலம் (root) எம்மொழியி னுள்ளதென்று அறிதல் வேண்டும்.

ஒரு சொல்லின் பகுதி அல்லது மூலம் பலமொழியி லிருப்பின், எம்மொழியில், பகுதி இயற்கையானதென்றும், பொருள் சிறந்ததென்றும் அறிதல் வேண்டும்.

பலமொழியினும், பகுதி வடிவினும் பொருளினும் ஒத் திருப்பின், எம்மொழியில் அதன் திரிசொற்களுள வென்றும், அவையும் பல மொழியிலிருப்பின், எதில் அவை கழிபல வென்றும் காண்டல் வேண்டும்.

எத்துணையோ தென் சொற்களை வட சொற்களென்று பன்மொழிப் பேரறிஞருங்கூடப் பகர்ந்து வருகின்றனர். அவற்றுட் சில வருமாறு:—

அகங்காரம். அகம்+காரம். அகம் - அவ்வுலகம், வானு லகு,மோக்ஷம். அகரச்சுட்டடியாப் பிறந்தது; சேய்மையி னுள்ள வானுலகத்தைக் குறிப்பது; அம்பர் என்னும் சொற் போல. அ-அம்பர் - அம்பரம். இகரச் சுட்டடியாப் பிறந்த இகம், இம்பர் என்னும் சொற்கள் அண்மைச் சுட்டாய் இவ் வுலகத்தைக் குறித்தல் காண்க.

விண்ணுலகையும் மண்ணுலகையும் சேய்மை அண்மை பற்றி அவ்வுலகம் இவ்வுலகம் என்பது மரபு.

> 'அருளில்லார்க் கவ்வுலகமில்லை பொருளில்லார்க்
> கிவ்வுலக மில்லா தியாங்கு.'

என்றார் திருவள்ளுவரும்.

வீடு என்னும் முத்திப் பெயர் இல்லத்தை உணர்த் தினாற்போல, அகம் என்னும் பெயரும் இல்லத்தை உணர்த் தும். விடு=விடுதலை; விடுவது வீடு. பிறவித் துன்பத்தினின் றும் விடுதலை செய்வது பேரின்ப வீடு. வெயில் மழைத் துன் பத்தினின்றும் விடுதலை செய்வது இவ்வுலக வீடு.

இல் என்னும் வீட்டுப் பெயர் ஏழாம் வேற்றுமை உரு பாய் உட்பாகத்தைக் குறித்தாற்போல, அகம் என்னும் வீட்

டுப் பெயரும் உட்பாகத்தையும் உள்ளத்தையும் குறிக்கும் 'அகம் என் கிளவி' எனத் தனித்தமிழ் இலக்கணமாகிய தொல்காப்பியத் துள்ளும் கூறப்பட்டுள்ளது.

காரம்: கரி என்னும் வினையடியாப் பிறந்த தொழிற் பெயர். கரி + அம் = காரம்; முதனிலை திரிந்து விகுதி பெற்ற தொழிற்பெயர். Cf படி + அம் = பாடம். தவி + அம் = தாவம்.

கரித்தல் மிகுதல். காரம் மிகுதி.

கரி என்பது கடி என்னும் உரிச்சொல்லின் திரிபு.

ட-ர போலி. Cf. படவர்—பரவர். முகடி—முகரி. உப்புக்கரிக்கும், உப்புக் கடுக்கும் என்பன ஒருபொருள் பற்றிய உலக வழக்கு. கடி என்னும் உரிச்சொற்பொருள்களுள் மிகுதியும் ஒன்று.

காரம் என்னும் சொல் முதலாவது மிகுதியை உணர்த்திப் பின்பு உறைப்பு மிகுதியை உணர்த்தும்.

கரி என்னும் சொல்லே அதி என்னும் உபசர்க்கம் (prefix) பெற்று அதிகரி என நிற்கும். அதிகரிப்பது அதிகாரம்.

அதி என்பது ஒரு மிகுதிப் பொருளுபசர்க்கம் (Intensive).

அதிகாரத்தை (ஆணை மிகுதியை or ஆற்றன் மிகுதியை) உடையவன்) அதிகாரி.

ஒரு நூலின் பெரும்பாகம் அதிகாரம்.

அகம் கரிப்பது அகங்காரம். அகங்காரம்—ஆங்காரம்.

அகண்டம். அ + கண்டம். அ, எதிர்மறை உபசர்க்கம், அல் என்பதன் குறுக்கம். அல் என்னும் எதிர்மறைச் சொல்லே un என்று ஆரியமொழிகளில் திரியும். இல் என்பது il, in, im, என்று திரியும்.

கண்டம்:

கண்—கணு—கண்டு — கண்டம்.

கண்டு—கண்டி. Cf. துண்டு—துண்டி. தண்டு—தண்டி —தடி.

கண்போன்று இருப்பது கணு.

கணுக்கணுவாய் நறுக்குவது கண்டு.

கண்டு என்னும் பெயரினின்று கண்டி என்னும் வினையுண்டாகும். கண்டித்தல் கணுக்கணுவாய் அல்லது துண்டு துண்டாய் வெட்டுதலும், அங்ஙனம் வெட்டுதல்போற் கடுமொழி கூறலும்.

கண்டிப்பது கண்டம். கண்டி + அம் = கண்டம். Cf. துண்டி + அம் = துண்டம். தண்டி + அம் = தண்டம்.

கண்டி என்னும் சொல் இடைக்குறைந்து கடி என்றும் நிற்கும். Cf. தண்டி—தடி.

கண்டம் என்பதன் நீட்டல் காண்டம். Cf. கரணம்—காரணம்.

கண்டம் = துண்டு, பாகம், பிரிவு.

கண்டம் என்பது சதைப்பாகம் நிலப்பாகங்களையும், கண்டம் (Canto) என்பது நூற்பாகங்களையும் குறிக்கும்.

Canto என்னும் ஆங்கிலச் சொல்லை Cano (to Sing) என்னும் Latin வினையடிப்பிறப்பாகக் கொள்வது சிறந்ததன்று.

அகதி. அ—அல் என்பதன் கடைக்குறை.

கதி—செலவு, கட என்பதன் திரிபு.

கதித்தல் - செல்லுதல். கதி + அம் = கதம்.

இராக்கதம்—இராச் செலவு

இராக்கதன்—இராச்சென்று உணவு தேர்பவன்.

இராக்கதன்—ராக்ஷஸன்—(Transliteration)
நிசாசரன் (Translation)
நிசி = இரவு; சரம்—அசைவு, செலவு.

அகந்தை. அகம்—அகந்தை, அகத்தின் மிகுதி.

அகம் = மனம். Cf. குடம்—குடந்தை (கும்பகோணம்). உடம்—உடந்தை. Cf. உள்ளம் = ஊக்கம், உள்ளத்தின் மிகுதி.

அகராதி. அகரம் + ஆதி. அகரம்—கரம் சாரியை.

ஆரியர் இந்தியாவிற்கு வருமுன்னும் வடமொழியில் இலக்கணம் வகுக்கப்படுமுன்னும், தமிழில் இலக்கண நூல்களிருந்தன. அவற்றின் வழிநூல்களே அகத்தியமும், தொல்காப்பியமும். கரம், காரம் முதலிய எழுத்துச் சாரியைகள் மேனாட்டு மொழிகட்கில்லை. ஆதி பொதுச்சொல்.

அகாரணம். அ + காரணம்.

கரணம்—காரணம். கரு + அணம் = கரணம்.

கருத்தல்—மேகம் கருத்தலைக் குறிக்கும்.

கரு—கார். மேகம் சூல் கொள்ளும்போது கருத்திருத்தலின் மக்களின் சூலும் கரு, கருப்பம் எனப்படும்.

மேகம் கருத்து மழைபொழிவது உலகவினைகட்கெல்லாம் காரணமா யிருத்தலின் கரு என்பது காரணத்தையும் குறிக்கும்.

'வானின் றுலகம் வழங்கி வருதலால்'

என்றார் திருவள்ளுவரும்.

கரணம், கருவி என்பன கரு என்னும் ஒருவினைத் தொழிற் பெயர்கள். திரிகரணம்=முக்கருவி. அந்தக்கரணம்-உட்கருவி. கரணம்—அணம் விகுதி. கருவி—வி விகுதி. கரணத்தின் நீட்டம் காரணம். கருவி மேகத்தின் தொகுதியையும் உணர்த்தும்: உ-ம். 'கருவி மாமழை' 'கருவி தொகுதி'—தொல்காப்பியம். கரு—கார் கார்+அணம்=காரணம். கார்+இயம்=காரியம், இயம் தொழிற் பெயர் விகுதி. (தொடரும்)

நடுகல்

[தமிழ்ப்புலவர் பாரிப்பாக்கம் திரு. கண்ணப்ப முதலியாரவர்கள்]

'நெருநல் உளன்ஒருவன் இன்றில்லை என்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு'.

என்னும் பெருநாவலர் திருவாக்கின் வண்ணம், உயிர்களின் நிலைபேறில்லா நிலையையே நிலைத்த புகழாக உடையது இவ்வுலகம். இதன்கண் தோன்றின மறைதலும் மறைந்தன தோன்றலும், பிறந்தன இறத்தலும் இறந்தன பிறத்தலும் இயற்கை நிகழ்ச்சிகளாக இராநிற்கின்றன; இவ்வாறு உயிர்கள் இப்பிறப் பிறப்பாகிய வட்டங்களின் சுழற்சியின் இடைகிடந் துழலுங்கால் உண்டாம் ஆற்றுத் துயர்க்கு ஓர் அளவின்றும். இதனை விரித்துரைத்தல் வேண்டா. இதனானே

'பிறப்பென்னும் பேதமை நீங்கச் சிறப்பென்னும்
செம்பொருள் காண்ப தறிவு'

எனத் தெய்வப் புலவர் வற்புறுத்துவா ராயினர். இங்ஙனமாய இப்பிறவிவெங்கோடையின் உறுதுயர் உண்மையானுணர்ந்து இவ்வுலகியலால் வரும் இன்பமனைத்தும் கணந்தொறும் அழிந்தொழியும் கானல்நீராமெனக் கண்டு அவாவினை ஆற்ற அறுத்தாரான் எய்தப் பெறுவது மணியினது ஒளியும் மலரினது நாற்றமும் சந்தனத்துத் தட்பமும் போல உண்ணின்று எழுதரும் ஒரு பேரின்பவெள்ளத்தது என்று கூறப்படும் வீடுபேறும்.

மறந்து மறந்து அறிதலும், மயங்கி மயங்கி அறிதலும் இயல்பாக உடைய சிற்றறிவுப் பசுக்களாகிய ஆன்மாக்கள் இறைபணி நிற்றலாகிய தன்னை அறிந்து வழிபடும் நெறிக்கண் நின்று வழிபட்டு, அவா அறுத்துப் பிறவா நன்னெறி எய்துதற் பொருட்டே இவ்வுலகினைத் தோற்றுவித்து அளித்துப் பின்னழித்து அருள்செய்து வருகின்றான் இறைவன் என ஞான சாத்திரங்கள் நவிலாநின்றன.

'வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனைச்
சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே
வீழ்த்த வாவினை யேன்நெடுங் காலமே'

'வணங்கத் தலைவைத்து வார்கழல்வாய் வாழ்த்தவைத்து
இணங்கத்தன் சீரடியார் கூட்டம் வைத்து எம்பெருமான்
அணங்கொடு அணிதில்லை அம்பலத்தே ஆடுகின்ற
குணங்கூறப் பாடிநாம் பூவல்லி கொய்யாமோ'

'மானிடப் பிறவி தானும் வகுத்தது மனவாக் காயம்
ஆனிடத் தைந்து மாடும் அரன்பணிக்காக அன்றோ
வானிடத் தவரும் மண்மேல் வந்தரன் தனைஅருச் சிப்பர்
ஊனெடுத் துழலும் ஊமர் ஒன்றையும் உணரார் அந்தோ'

என்றற்றொடக்கத்துப் போதும் திருவாக்குகள் இக்கருத்தினையே கருக்கொண்டுள்ளவாறு காண்க.

இவ்வுண்மை யுணர்ந்து விடுபேற்றின் அவாமிக்குடையராய்ப் பல பிறப்பிடை இறைபணி நிற்றலின் தவமுதிர்ச்சி பெற்றுப் பண்டை நற்றவத்தால் தோன்றிப் பரமனைப் பக்தி பண்ணும் தொண்டர்கள் பரமானந்தப் பழங்கடலாகவுள்ள இறைமுதற் பொருளாம் பரசிவத்தொடு இரண்டறக் கலத்தலாகிய சிவமாந்தன்மைப் பெருவாழ்வினை எய்தப் பெறுவார்கள். இந்நித்திய நிரதிசயானந்தப் பெருவாழ்வுறுவோர் புனிததேகம் தத்துவசுத்தியுடையதாகலின் இது பேரொளிப் பிழம்பாக விளங்கும் இறைமுதற் பொருளாம்; எம்பெருமான் செம்பொற் சோதியினும் அவனது திருவருள் விலாசப் பரவெளியினும் கலந்திடும் தன்மைத்தாம் ஒரு நிலையினை உடையதாய் இலங்குகின்றது. இனி, எஞ்சி நின்ற மக்கட் பாடுடைய நம்போன்றோர் பூதவுடல் உயிர் நீங்கியவழிச்செயலற்று வீழ்ந்து படுவதொன்றாக இலங்கலின் இவ்வுடற் சம்பந்தமுடைய பின்னோர் இதற்கு ஆற்றவேண்டிய கடனை இனி ஆராய்வோம்.

(தொடரும்)

ஆராய்ச்சிப் பகுதி-Research

தர்மபுரி

[திரு. C. M. இராமச்சந்திரஞ் செட்டியார், B.A.]

இவ்வூர் தர்மபுரி தாலூகாவின் தலைநகர். சென்னைப் பெரும்பாதையில் இருக்கிறது. மற்றும் பல ஊர்களுக்குச் செல்லும் பாதைகள் இவ்வூர் வழியாகச் செல்கின்றன.

இவ்வூரில் பழைய கட்டிடங்கள் சில இன்னும் இருக்கின்றன. தாமஸ் மன்ரோ வசித்த பங்களா இருந்த இடத்தில் இப்பொழுது தபாலாபீஸானது இருக்கிறது. இவ்வூரில் 12 கோயில்களுக்கு தஸ்திக் வருமானம் வருகிறது. ஆனால், கோட்டையிலுள்ள ஆலயத்தைத் தவிர மற்றவைகளில் யாதொரு சிற்பச் சிறப்பும் இல்லை. 1803-ஆம் ஆண்டு முதல் 1820 வரை இருந்த கலெக்டர் ஹார்கிரேவ் காலத்தில் நரசையன் என்பவன் ஒரு குளத்தைக் கட்டினன். அவன் செய்த அட்டூழியங்களை மறைப்பதற்காக இந்தத் தருமத்தைச் செய்தான் போலும். 1808 முதல் 20 வரை இவ்வூர் இச் சில்லாவின் தலைநகராக இருந்தது. பிறகு நரசையன் செய்த பழிச் செயல்களால் தலைமை நிலையம் சேலத்திற்குப் போய்விட்டது.

தர்மபுரிக் கோட்டையானது ஊருக்கு வடக்கே சந்தைக்கு அடுத்தாற் போல் மொரப்பூர், காவேரிப் பட்டினம் பாதைகளுக்கு இடையில் இருக்கிறது. இதற்கு அடுத்திருக்கும் பாகத்திற்கு டைக்ஸ் (Dykes) பேட்டை என்று பெயர். இக்கோட்டையின் மதில்களைக் கொடும் பஞ்ச காலத்தில் அழித்து விட்டார்கள். இவை இருந்த இடத்தையும் கண்டுபிடிக்க முடியாது. இக்கோட்டைக்கு வடபுறத்தில் இராமக்கா குளத்திறைப் பாயப்பட்ட வயல்கள்தாம் இருக்கின்றன. ஆகையால் இராணுவ சம்பந்தமாக இக்கோட்டை சிறந்திருக்க முடியாது. இப்போது கோட்டை இருந்த இடத்திற் சில குடிசைகள் தாம் இருக்கின்றன. சிவாலயத்திற்குத் தெற்கில் ஜேம்ஸ் ஐவிஸ் (Ivis) என்ற ஒரு சேனைத் தலைவனுடைய சமாதி இருக்கிறது. மகித்பூர் என்ற இடத்தில் நடந்த சண்டையில் இவன் புகழ் அடைந்தவன்.

சிவாலயத்தின் சுவாமியின் பெயர் மல்லிகார்ஜுனர். ஆலயக் கட்டிடத்தைப் பார்க்கையில் 8, 9-ம் நூற்றுண்டுகளில் ஆண்ட, பின் பல்லவர்களின் ஆலய அமைப்புப் போன்று

இருக்கிறது. அம்மன் கோயிலானது பெரியது. அதனுடைய அமைப்பும் சாதாரணமான தன்று. தளவரிசை மிக உயர்ந்து இருக்கிறது. அதற்குப் படிகள் வைத்திருக்கிறார்கள். அஸ்திபாரச் சுற்றுகள் முழுதும் இராமாயணக் கதைகளை விளக்கும் சிற்பங்களை உருக்கமாகச் செதுக்கி யிருக்கிறார்கள். நில அமைப்பு 48 மூலைகள் கொண்டதா யிருக்கிறது. ஆகவே வெயி லடிக்கும்போது ஒளியும் நிழலும் மிகவும் அழகாகத் தோன்றுகின்றன. ஆலயத்துள் மண்டபத்தின் ஒரு தூண் நிலத்தில் ஒட்டாமல் நிற்கின்றது.

விஷ்ணு ஆலயமானது சிவாலயத்திற்குப் பின்னால் இருக்கிறது. அது சிவாலயத்தைவிடச் சிறியது. சுவாமியின் பெயர் பரவாசுதேவர். அவ்வாலயத்திற்கு இப்போது 583 ரூபாய் தஸ்திக் வருகிறது. ஆனால் அது கவனிப்பாரின்றிச் சீர் கெட்டு வருகிறது. ஒரு காலத்தில் ஒரு கிறிஸ்துவ முனிசிப்பு இக்கோயிலில் நுழைந்து விக்கிரகத்தைத் தொட்டபோது அதன் கண்ணிலிருந்து கண்ணீர் வடிந்ததாம். அக்குற்றத்திற்காக அம்முனிசிப்பிற்கு அபராதம் விழுந்ததாம். அருகே, பாதைக்கு அருகில் சமண உருவத்தைப் போன்று செதுக்கப்பட்ட இரண்டு உருவங்கள் இருக்கின்றன. அவைகளை ஊரார் இராமக்காள், இலட்சுமக்காள் என்று சொல்லுவார்கள்.

பழைய தருமபுரி (ஹளே தருமபுரி) என்ற ஊரில் யாதொரு சிறப்பும் கிடையாது. நரசிம்ம ஆலயம் ஒன்று தான் அங்கே உண்டு.

தாமஸ் மன்ரோ என்றவர் தர்மபுரியில் முன்காலத்தில் இருந்திருக்கிறார். அவ்வூரில் ஓர் அழகிய தோட்டத்தை ஏற்படுத்தினார். அதற்கு அருகில் மாந்தோப்பு ஒன்று இருந்ததாம். மற்றொரு புறத்தில் நெடிய மலைகள் தெரியுமாம். அத்தோட்டத்தில் 100 அடிச் சதுரமுள்ள ஒரு குளத்தை வெட்டி அதற்குக் கற்படிகள் அமைத்தாராம். அதில் ஓர் ஊற்று எப்போதும் 10 அடிக்குக் குறையாமல் தண்ணீர் கொடுத்து வந்ததாம். அதில் அடிக்கடி அவர் குளிப்பாராம். மா, ஆரஞ்சு முதலிய மரங்களையும் திராட்சை முதலிய கொடிகளையும் நட்டாராம். தினந்தோறும் அத்தோட்டத்தில் ஒரு மணி நேரம் இருந்துவிட்டு வீட்டிற்குத் திரும்பும்போது விசனத்துடன் திரும்புவாராம். இதைப்பற்றி எழுதிய லீ பானு (Le Fanu) என்ற கலெக்டர் இத்தோட்டம் இருந்த இடத்தைக் கண்டு பிடிக்க முடியவில்லை என்றும், தர்மபுரியில் இவ்வளவு பெருமை வாய்ந்த இடம் கிடையாதென்றும் ஏளனமாக எழுதி யிருக்கிறார். ஆனால் மன்ரோவின் ஞாபகச் சின்னமாக ஒரு தூண் இவ்வூரில் இப்போதும் இருக்கிறது.

தருமபுரியின் பழைய பெயர் தகடூர் என்பது. இதனைச் சிறப்பித்துச் சங்க நூல்கள் கூறுகின்றன. தகடூர் யாத்திரை என்ற ஒரு பண்டைய நூலும் இருந்ததாகத் தெரிகிறது; ஆனால் இப்பொழுது கிடைக்கவில்லை. சங்கத்தார் காலம் முதல் நூற்றாண்டு என்பர். அக்காலத்தில் அதியமான் நெடுமான் அஞ்சி என்பவனும் அவனுடைய மகன் பொகுட்டெழுனி என்பவனும் இவ்வூரை ஆண்டனர். அவர்களைப் பற்றி ஒளவை மூதாட்டியார் பல பாக்களைப் பாடியிருக்கின்றார். பெரும் சேரல் இரும்பொறை என்ற சேரமன்னன் தகடூரை முற்றுகை யிட்டு வென்றான். நெடுமானஞ்சியும் அச்சேரனால் தோல்வி யடைந்தான்.

சேரனுடைய படை வருவதைக் கண்டு நெடுமானஞ்சியின் மகன் எழினி தன் சேனைகளை எதிரே நடத்திச் சென்று போர் புரிந்தான். முதல் நாள் போரில் எழினியின் சேனைகள் பின்வாங்கிக் கோட்டைக்குள் புகுந்தன. இரண்டாவது நாள் கோட்டையின் சுற்றிலுமிருந்த முள்ளங்காடு அழிக்கப் பட்டது. பிறகு அகழி தூர்க்கப்பட்டது. யானைகளைக் கொண்டு கோட்டையின் கதவுகள் தாக்கப்பட்டன.

பின்னர் நடந்த போரில் எழினியும் அவன் வீரர்களும் அஞ்சாநெஞ்சுடன் போர்புரிந்தும் பகைவரால் வெட்டப் பட்டனர். தர்மபுரிக் கோட்டையும் சேரர் வசம் சேர்ந்தது. அது சங்கத்தார் காலம் முதலே இருந்தது எனலாம்.

கல்வெட்டுகளின் ஆதாரம் 9, 10-ம் நூற்றாண்டுகளில்தான் கிடைக்கிறது. அக்காலத்தில் நொளம்ப பல்லவர்கள் தலைமை சிறக்க ஆரம்பித்தனர். நொளம்பாதி ராஜன் என்பவன் மேற்குக் கங்க மன்னன் ராஜமல்லன் (கி. பி. 840—870) என்பவனுடைய மகள் ஜெயப்பே என்பவளை மணந்தான். பிறகு அவன் மகன் மகேந்திராதி ராஜன் நொளம்பர்கள் தலைவனானான். கங்கர்களுக்கும் நொளம்பர்களுக்கும் ஏற்பட்ட இந்த சம்பந்தத்தால் மகேந்திரன் வலுப்பெற்றுப் பாரமஹாலிலிருந்த பாணர்களைத் துரத்திவிட்டான். தர்மபுரிக் கோட்டையிலுள்ள மாரியம்மன் கோயிலில் கி. பி. 878-வது ஆண்டில் மகேந்திரனுடைய கன்னட மொழிக் கல்வெட்டு ஒன்று இருக்கிறது. மகேந்திரனுடைய மற்றொரு கல்வெட்டு கி. பி. 893-ல் மல்லிகார்ஜுன ஆலயத்து மண்டபத்திலுள்ள கற்றூணில் செதுக்கப்பட்டுள்ளது. அதேதூணில் அம் மகேந்திரனுடைய மகன் ஐயப்பதேவனுடைய சாசனம் ஒன்றிருக்கிறது. கி. பி. 931-ம் ஆண்டு விருபாக்ஷி புரத்தில் அண்ணிகன் மகன் இருளனுடைய கல்வெட்டு ஒன்று இருக்கிறது. விருபாக்ஷிபுர

மென்பது தர்மபுரியின் ஒரு பாகத்துக்குப் பெயர். அதமன் கோட்டையிலும் நொளம்பருடைய கல்வெட்டு உண்டு.

ஆகவே, தகடூரில் நொளம்பர்கள் நான்கு தலைமுறைகளாக ஆண்டனர் எனலாம். (1) மகேந்திரன் (2) அவன் மகன் ஐயப்பன் (3) அவன் மகன் அண்ணிகன் (4) அவன் மகன் இருளன் என்பார்கள். நொளம்பர்களிற் கடைசியாக ஆண்ட மன்னன் அண்ணிகனுடைய தம்பியான திலீபரசன் என்பவன். விருபாக்ஷிபுரத்துக் கல்வெட்டினால் நொளம்பர்கள் கங்கர்களோடு கல்யாண சம்பந்தம் ஏற்படுத்திக் கொண்ட செய்தியை அறியலாம். ஐயப்பன் அண்ணிகன் இவர்களுடைய தாய்மார்கள் கங்க வம்சத்து இளவரசிகள். பின்னால் நொளம்பர்களுக்கும் கங்கர்களுக்கும் சம்பந்தம் அற்றுப்போய், கங்கர்கள் பாணர்களோடு உறவு கொண்டார்கள். அவர்களுள் கங்கபாணன் மாரசிம்மன் என்பவன் நொளம்பர் அரசியலைத் தொலைத்தான். அதனால் நொளம்பகுலாந்தகன் என்ற பட்டத்தையும் வகித்துக்கொண்டான்.

மல்லிகார்ஜுனர் ஆலயத்து மகேந்திரன் கல்வெட்டு ஸ்ரீமங்கலத்து வியாபாரி ஒருவனுடைய மக்கள் நிதியண்ணன், சண்டியண்ணன் என்பவர்கள் தகடூரில் ஒரு ஜெயினபஸ்தியை கட்டினதாகச் சொல்லுகிறது. அவர்களுள் நிதியண்ணன் மகேந்திரனிடமிருந்து மூலஹல்லி என்ற ஊரைத் தானமாகப் பெற்றான். பிறகு அவன் வினையசேனனுடைய சீடன் கனகசேனனுக்கு அதனைக் கொடுத்து, பஸ்தியில் பழுது பார்க்கவும், பூஜை செய்யவும் ஏற்படுத்தினன்.

மூல ஹல்லி என்பது தருமபுரிக்கு மேற்கே 9 மைலில் உள்ள மூலக்காடு என்பதாகும். மேலும், ஐயப்ப தேவனால் நிதியண்ணனுக்குப் புதுகூர் என்ற கிராமம் அளிக்கப்பட்டது. 878-ல் எழுதின மாரியம்மன் ஆலயத்துக் கல் வெட்டு ஒன்று ஒரு சைவ ஆசாரியனுக்கு மருதனேரி என்ற ஒரு குளத்தை மகேந்திரன் தானம் செய்ததாகச் சொல்லுகிறது. மற்றும் தகடூரில் சில வியாபாரிகள் ஜெயின பஸ்தியைக் கட்டிச் சில விலைபொருள்களின்மீது கோயிலுக்காக வரிவாங்கினதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. இக்கல்வெட்டுகளினால் நொளம்பர்கள் ஆட்சியில் தர்மபுரியில் 9-வது நூற்றாண்டில் சைவமும் ஜைனமும் அடுத்து அடுத்து விளங்கின என்று அறிகிறோம். இக்காலத்தில் அந்த ஜெயின பஸ்தி இருந்த இடம் தெரியவில்லை. மைசூர் நாட்டைச் சேர்ந்த நந்தி துர்க்கத்தில் இருக்கும் போக நந்திஸ்வரர் ஆலயத்தைப் போல் மல்லிகார்ஜுன ஆலயம் இருப்பதால், இவ்வாலயமும் நொளம்பர்களால் கட்டப்பட்டிருத்தல் வேண்டுமென்று ஆராயப்படுகிறது.

இராமக்கா குளத்துக் கரையில் உள்ள ஒரு பலகைக் கல்லில் ஒரு கன்னடச் செய்யுள் செதுக்கப்பட்டிருக்கிறது. அதுவும் நொளம்பர்கள் காலத்ததையதாய் இருக்கலாம். அது தகடூரை அடியில் கண்டபடி வருணிக்கிறது. "தகடூர் உலகத்தினுடைய பிரதி பிம்பம்; ஏனெனில் அதில் சைவாச்சாரியன் வித்தராசியும் காளி-சோமேஸ்வரர், பல்லவேஸ்வரர், பெரிய போகேஸ்வரர், உன்னதமும் களங்கமுமில்லா நன்னேஸ்வரர், புகழ்பெற்ற காஞ்சி புஜங்கேஸ்வரர் முதலிய ஆலயங்களும், பிரகாரங்களும் சிங்கம்போலச் சக்திவாய்ந்த அரசர்களின் உல்லாச நிலங்களும் இருக்கின்றன."

சோழவம்சத்து ஆட்சியில் தகடூர் நாடு என்பது கங்கர் நாட்டின் ஒரு பாகமாக யிருந்தது. அது நிகரிலி சோழ மண்டலம் என்பதில் அடங்கியிருந்தது. தகடூர் நாட்டில் புறமலை நாடு என்பது ஒரு பாகமாக இருந்தது. சோழர்கள் காலத்திலும் அதிகமான் என்ற பட்டத்தை அவர்களுடைய பிரதிநிதிகள் இட்டிருந்தார்கள். விஷ்ணு வர்த்தனன் தலைக்காட்டிலிருந்து சோழர்களைத் துரத்தினபோது சோழர்கள் சேனையின் தலைவன் ஒருவன் அதிகமான் என்ற பெயருடையவனாக இருந்தான். ஆனால் இவ்வூரில் சோழர்களுடைய கல்வெட்டுகள் அதிகமாக இல்லை. அவர்களுடைய கண்காணிப்பும் குறைந்திருக்கலாம். காமாட்சி ஆலயத்தின் தென் புறச்சுவரில் கி. பி. 1188-ம் ஆண்டு குலோத்துங்கன் III என்பவன் கல்வெட்டு ஒன்றும், கீழ்புறச்சுவரில் அவனது 12-வது ஆண்டு கல்வெட்டு ஒன்றும் இருக்கின்றன. அவைகளில் இரண்டாவது அதியமான் பொருட்டுச் செய்த தானமாகும். அந்த அதியமான் வாகன் என்கிற ராஜ ராஜன் அல்லது அவன் மகன் விடுகாதழகிய பெருமாள் என்பவனு யிருக்கலாம். இவன் சேரவம்சத்தானென்றும், எழினியைப் போன்று தானும் ஆண்டான் என்றும் சொல்லிச் சுயேச்சை அதிகாரம் பூண்டு தர்மபுரியைத் தலைநகராக்கிக் கொண்டு சிறந்திருந்தான்.

ஆனால் இம்மன்னன் வெகுநாள் நிலைக்கவில்லை. ஏனெனில் உடனே ஹொய்சளர்கள் இந்நாட்டைப் பிடித்துக்கொண்டனர். மூடூரில் உள்ள ஒரு சாசனத்தில் ஹொய்சள மன்னன் விஷ்ணு வர்த்தனனைப் பற்றிச் சொல்லியிருக்கிறது. இவ்வூரில் 1331-வது ஆண்டில் ஏற்பட்ட மற்றொரு கல்வெட்டு ஒன்று உண்டு.

பிறகு வந்தவர்கள் விஜய நகரத்து அரசர்கள். அவர்களில் தேவராயர் II (1430—1440) மல்லிகார்ஜுனன் (1476) இவர்கள் காலத்துக் கல்வெட்டுகள் கிடைத்தன. கடைசியாக ஜெகதேவராயனுடைய இரண்டு கல்வெட்டுகளில் ஒன்று குளக்

கரையைப் பலப்படுத்தினதும் விருபாக்ஷிபுரத்தைப் பிராமணர்களுக்குக் கொடுத்ததும் கண்டிருக்கிறது. அவைகளில் முதலாவது 1622-ல் குமாரஜெகதேவனுக்காகவும் இரண்டாவது 1619-ல்இம்மடி ஜெகதேவராயனுக்காகவும் ஏற்பட்டவை.

தர்மபுரியில் இராணுவ மேம்பாடு எக்காலத்திலும் இருக்கவில்லை. 17-வது நூற்றாண்டில் பீஜபூர் முகமதிய மன்னன் அதைப் பிடித்துக் கொண்டான். பிறகு 1652-ல் மைசூர் கண்டீரவ நரசராஜன் அதைத் தன் வசப்படுத்திக் கொண்டான். பிறகு சிலநாள் அவன் கைவிட்டு விலகி விட்டது. பின்னும் 1688-ல் சிக்க தேவராயன் அதனைப் பிடித்தான். 1768-ல் ஆங்கிலர் இதை முற்றுகையிட்டுத் தாக்கினர். 1792-ல் இஃது ஆங்கிலயர் வசம் வந்தது.

வடிவுதிருந்த அறிவு வளர்ந்தவகை

[திரு. பா. வே. மாணிக்க நாயக்கர்—

திரு. க. ப. சந்தோஷம் B.A.,L.T.]

(கசகு-ம் பக்கத் தொடர்ச்சி)

(முன் கண்டவை:— உயிர்வகைகளை அறிவின் வளர்ச்சிக்கேற்ப ஒழுங்குசெய்து பார்க்குங்கால் புணர்ச்சிக்கருவியின் அளவு சுருங்குகின்றது; கால்களின் தொகை குறைகின்றது; வயிறு சிறுத்துத் தோன்றுகின்றது. மக்களில் இவ்வுறுப்புக்கள் சுருங்கியிருப்பதால் மக்கட்பிறவிக்கு மேற்பட்டபிறவியுண்டாயின் இவைமேலும் சுருங்கித் தோன்றவேண்டும் கடவுளென ஒன்றிருப்பின், அதற்கு இவை இரா. புணர்ச்சிக்கருவி, கால், வயிறு, கை ஆகிய இவற்றை நீக்கிய பின் எஞ்சிநிற்பது தலை. தலைக்கும் உடலுக்குமுள்ள வேற்றுமை. மரம், செடி, கொடிகளில் தலை நிலத்திற்குக் கீழே இருக்கின்றது.)

வடிவிற் கேற்ப அறிவும், அறிவிற்கிசைய வடிவும் அமைந்திருப்பதைப் பல வகைகளில் அளந்து காட்டுதல் கூடும். அறிவென்ற சொல்லை இங்கே மிக விரிந்த பொருளிற் கொள்ள வேண்டும். ஒழுக்கம், இணக்கம், விழைவு முதலிய பல பகுதிகள் இதிலடங்கி யிருக்கின்றன. நாகரிகம் என்று நாம் சொல்லுகின்ற ஒன்றும் இதின்பாற்படும். ஈண்டு, இவற்றை எல்லாம் எடுத்துக்கொள்ளாது அறியுந்திறம் என்ற ஒருபகுதியை மாத்திரம் கருதுவோம்.

தலையை நிலத்தில் ஊன்றிக்கொண்டு மரங்கள் நிற்கின்றன என்று முன்னரே மொழிந்தேன். தலை நிலத்தால் மூடுண்டு மறைக்கப் படுகின்றது; உடல் முழுமையும் வெளிப்பட்டுத் தோன்றுகின்றது. உடலினும், புணர்ச்சிக் கருவிகளே காட்சியை ஈர்க்குந் தன்மையனவாய் வெளிப்படுகின்றன. இவ்வமைப்பு மரத்திற்கு இன்றியமையாதது. ஏனெனில், மரங்கள் காய்த்துக் கனி தருவதற்கு அவற்றின் மலர்களிலுள்ள தாது இடம் பெயரவேண்டும். மலர்களில் ஆணும் பெண்ணு முண்டாதலால், ஆண்மலரிலுள்ள தாது பெண்மலரிற் பட்டாலன்றிக் கரு வளராது. இப்புணர்ச்சியை மரங்கள் தாமே நிகழ்த்திக் கொள்ளுமாறில்லை. தேனீக்கள், வண்டுகள் முதலியவை ஒரு மலரிலிருந்து மற்றொரு மலருக்குச் சென்று ஆண்பெண் மலர்களின் தாதுக்களைக் கலக்கச் செய்கின்றன. தேனீக்களையும் வண்டுகளையும் ஈர்ப்பதன் பொருட்டு மரங்களிலுள்ள மலர்கள் அழகிய நிறங்களுடனும் இனிய மணங்களுடனும் முற்பட்டுத் தோன்றுகின்றன. இஃது அறிவியலிற் கண்ட உண்மை. பூக்களாகிய தன்னுடைய புணர்ச்சிக் கருவிகளை ஒரு மரம் மறைத்து வைத்திருக்குமாயின் எவரும் அம்மரத்தைக் கண்டு மகிழமாட்டார். யாவருங் காண அவை வெளிப்பட்டு நிற்கும் போதன்றோ நாம் மகிழ்வடைகின்றோம்! இதை ஊன்றிப் பார்க்கும்பொழுது, கீழ்நிலையிலுள்ள உயிர்களில் அழகென நாம் மதிப்பது மேல்நிலையிலுள்ள உயிர்களுக்கு வெட்கத்தைத் தோற்றுவிப்பதாகின்றது என்பது விளங்கவில்லையா?

தமிழர் யாவரும் எளிதிலறிந்து வழங்கும் ஒரு சொற்றொடருண்டு. "ஏன் தலை கீழாய் நிற்கிறாய்?" என்பது அச் சொற்றொடர். மேல் நாம் கூறிய உண்மைக்கு இஃதொரு சிறந்த எடுத்துக்காட்டாகும். இது பற்றிய மிகத் திருத்தமான கருத்துக்கள் தொல்காப்பியப் பொருளதிகாரத்திலுண்டு. விவரங்கள் கூறப்படா விடினும் தலையாய பகுதிகள் ஆண்டு விளக்கப்பட்டிருக்கின்றன.


உயிர்வகைகளின் ஒழுங்கில் அடுத்தபடியில் வருகின்ற புழுக்களை இப்பொழு தெடுத்துக் கொள்வோம். மரத்தை விடப் புழு உயர்ந்தது. நாகரிகத்தில் மரத்தை விடப் புழு மேனிலையிலுள்ளது. புழுக்கள் தாமே கூடுந் திறமை யுடையன. மரங்கள், தம்மோடு நேரான தொடர்பில்லாத வண்டுகளின் துணைகொண்டு புணர்ச்சி நிகழ்த்திக் கொள்கின்றன. நாகரிகத்தில் புழுவின் ஏற்றமும், மரத்தின் தாழ்வும் இதனால் நமக்குத் தெரிகிறது. மரத்தின் அறிவை இது கொண்டு அளந்து கொள்க.

நிலைத்திணை உயிர் ஆசிரியர்கள் சிலர், மரஞ் செடி, கொடி ஆகிய இவற்றில், கொடி மிகத் தாழ்ந்தது என்று கருதுகின்றனர். இதை யான் ஏற்றுக் கொள்ளேன். தொட்டாற்சிணுங்கியைப் பார்ப்போமாயின், தீண்டுதலை யுணருந் தன்மை யதற்குண்டென்பதை யறிகின்றோம். மரத்திற் கிவ்வுணர்ச்சி யில்லை. மற்றொரு தன்மையுங் கொடிகளுக்குண்டு; முளைக்கின்ற ஒரு கொடியின் மீது ஒரு பானையைக் கவிழ்த்து, அப்பானையின் ஒரு மூலையில் துளை யொன்று செய்வோமாயின், துளையின் வழியே கொடி தன் நரம்புகளை நீட்டுகின்றது. மரஞ் செடி கொடிகளைப் பற்றியவற்றை இத்துடன் நிறுத்தி வேறு உயிர் வகைகளை ஆராயப் புகுவோம்.

புழுக்களினும், அவற்றிற்குமேற்பட்ட உயிர் வகைகளினும் நாம் காணும் ஓர் அமைப்பு யாதெனில், இவை யெல்லாவற்றினும் தலை முன்னே இடம்பெற, உடல் அதனொடு பிறகே பொருத்தப்பட்டிருக்கிறது என்பதே. மரத்தில் தலை கீழ் நிற்க, உடம்பு அதற்குமேல் அமைந்திருக்கிறது. நாம் ஒவ்வொரு நாளும் பார்க்கின்ற விலங்குகளிலொன்றை எடுத்துக்கொள்வோம். பன்றி மிக நல்ல எடுத்துக்காட்டாகும். பன்றியின் தலை நிலத்தை நோக்கிச் சாய்ந்ததாயிருக்கின்றது. ஒருவன் அதனருகே வந்து உதைக்குந் துணையும் அவனைக் காணாத வண்ணம் அதன் பார்வை கீழ் நோக்கியிருக்கின்றது. மற்றும், அதைத் தூண்டினாலன்றி அதுமேலே பார்க்காது.

இதிலிருந்து ஒரு படி உயர்ந்த கழுதையைக் கருதுவோம். இதற்கு மேல்நோக்குந் திறமையுண்டு. ஆயினும் மிகக் குறைந்த அளவிற்றான் கழுதை அவ்வாறு செய்யமுடியும். குதிரை நிமிர்ந்து பார்க்கக்கூடிய அளவு கழுதை நிமிராது. பன்றியைவிடக் கழுதையும், கழுதையைவிடக் குதிரையும் அறிவினுயர்ந்தன. நிலைத்திணை உயிர்களில் புதையுண்டு கிழிருந்த தலை, புழுக்களினும் விலங்குகளினும் வெளிவந்து உடலுக்கு முன்னே இடம் பெற்றிருக்கக் காண்கிறோம்; இங்ஙனம் நிலத்திலிருந்து வெளிப்பட்டு, விலங்குகளில் முன்னே இடம்பெற்ற தலை, தான் முதலிலிருந்த நிலத்திற்கு நேரே பார்வையுடையதாயிருக்கிறது. எந்த அளவிற்குத் தலை நிலத்திலிருந்து தூக்கப்பட்டிருக்கின்றதோ அந்த அளவிற்கு அறிவும் பெருகியிருக்கக் காண்கின்றோம். ஆதலின் இது எண்ணளவை முறைக்குட்பட்டது. தலையுமுடலும் பொருத்தம் பெறும் முடக்கி (Angle) மாறிக்கொண்டே வருகிறது. குரங்கில் அது ஏறக்குறைய மக்களில் நாம் காணும் நிலையிலிருப்பதால், குரங்கினறிவு விரிந்துளது. மக்கள் நிலையில் உட

னுக்கு மேலே தலை அமைந்திருக்கின்றது. புல்லிலிருந்து மக்கள்நிலை எய்தும் பொருட்டுக் கீழ்நோக்கிப் புதையுண்டிருந்த தலை, சிறிது சிறிதாக நிமிர்ந்து 180 டிக்கிரி (Degree)



மரம். புழு. பன்றி குரங்கு. மனிதன்.

உயர வேண்டியதாயிற்று. இதன் பொருளென்னவெனின், அறியாமையிலிருந்து நல்லறிவு பெற்றிலங்குதற்குத் தலை கீழாய் நிற்கும் நிலையிலிருந்து தலை மேலாக அமையப்பெறும் நிலைக்கு உயிர் வரவேண்டியதாயிற்று என்பதாகும். இந்த நிலையை மக்கள் எய்தியிருப்பதனால், இதற்குமேல் ஒன்றுங் கிடையாதென நாம் கருதுதல் கூடுமோ? எண்ணளவை முறைகொண்டு நோக்குமளவில், மக்கள் வளர்ச்சியில் பாதியளவே நாம் உயர்ந்திருக்கிறோம்; இன்னும் பாதியளவு நாம் உயர வேண்டியிருக்கிறது, என்று கருதக்கிடக்கின்றது.

ஐயன்மீர், மறுபடியும் நாம் பன்றியை நோக்குவோம். இயற்கை யுணர்ச்சியா னுந்தப்பட்டுப் பன்றி என்ன செய்கிறது? உயிரின் வளர்ச்சியிற் புதையுண்டிருந்த தலை வெளிப் பட்டதென்று கண்டோம். பன்றியின் வடிவில் தலை சற்றே வெளிப்பட்டு நிற்கிறது. இங்ஙனம் வெளிப்பட்ட தலையைப் பன்றி மறுபடியும் நிலத்தில் நுழைக்கப் பார்க்கின்றது! அது தலையால் நிலத்தைத் தோண்டுவதை அறியார் யார்? நிலத்தில் தலையை நுழைப்பதற்கு அதற்குக் கற்றுக் கொடுத்தவர் யார்? உள்ளெழும் ஓர் உணர்ச்சியினாலேயே அஃது அவ்வாறு செய்கின்றது.


அடுத்த படியாக எலிகளைப் பார்ப்போம். பிளேக் (Plague) என்ற கொள்ளை நோயைப் பரப்புகின்ற எலிகள் பன்றியைப் போன்றனவே. பன்றியைப்போல் எலிகள் தலையை நிலத்திலிருந்து அத்துணை மேலெடுக்கவில்லை. இது பற்றி அவை பன்றியைவிட நிலத்தோடு மிகக் கேண்மையுடையனவா யிருக்கின்றன. அவை வளை தோண்டி நிலத்திற்குள் வதிவதால் இஃதறியப்படும்.

மரம் தன் தலையை மண்ணிற்குள் திதனுகா வண்ணம் மறைத்து வைத்திருப்பது போல் வேறு சில உயிர்களுஞ் செய்ய முயல்கின்றன. திக்கோழி என்று ஒரு பறவை யுளது. (இது பறவையாயினும் பறந்து செல்லும் ஆற்றலற்றது. மிக விரைந்து ஓடக்கூடியது. ஈண்டு இக்கோழியைப் பற்றிக் கூறப்படுவது மேலை நாட்டுப் புலவர் பலரால் ஆளப்பட்டிருப்பினும், ஐயத்திற் கிடமானது). இதை நெடுந்தூரம் துரத்தினல், தப்பிச் செல்வதரிதென்று இதற்குத் தோன்றுமாயின், தலையை மண்ணிற்குள் அது நுழைத்து விடுகிறது. இஃதோருணர்ச்சியாற் பிறக்குஞ் செய்கையாகும்.

மக்களிலும் இத்தகைய உணர்ச்சி யுண்டோ? ஆம். நமது பிழைகள் வெளிப்படுத்தப் பட்டு நாம் வெட்கத்தில் மூழ்குங்கால் என்ன செய்கிறோம்? தலையை நாம் தொங்க விடுகின்றோம். பன்னெடுங் காலத்திற்குமுன் நாம் நமது தலையை மண்ணிற்குள்ளிருந்து வெளியே எடுத்திருக்க வேண்டும். என் இதைச் சொல்லுகின்றேன் என்பதை இங்கு யான் விளக்கப் போவதில்லை. நிற்க.

உளத்தில் நமக்குப் பெருமிதந் தோன்றும் பொழுது நாம் யாது செய்கின்றோம்? பெருமித மடையுங்கால் 180 டிக்கிரி நிமிர்ந்த நமது தலையை அதற்குமேல் முதுகெலும்பு இடந் தரும் வரையில் நாம் நிமிர்த்துகின்றோம். தமிழில் வழங்கும் ஒரு சொற்றொடர் இதை நன்கு விளக்குகிறது. "அவன் இப்பொழுது நிமிர்ந்தாற்போல் நடக்கின்றான்" என்பது அது. வெற்றி யடைந்தவன், பிறரினுந் தன்னை உயர்ந்தவனாகக் கருதுகின்றானாதலின், தலையை நிமிர்த்தி நடக்கிறான்.

நாம் ஒன்று மில்லாமையி லிருந்து அல்லது அறியாமையிலிருந்து வர வரத் தலையைத் தூக்கி, அதை நிமிர்ந்த நிலைக்குக் கொண்டுவந்தது மன்றி, அதை விண்ணிற்கு நேரே உயர்த்தவுஞ் செய்கின்றோம். ஆனல் உளமோ, அறிவோ சோர்ந்து போகுங்கால் தலை இறங்குகின்றது. வணக்கத்தில் நமது தலை இருக்கும் நிலை என்ன? பெருமிதமும் பெருமையும் நீங்கிய இந்நிலையில் தலை நிமிர்வதில்லை. வழிபாட்டில் எல்லா மக்களும் தலை வணங்கிய நிலையை எய்துகின்றனர். நாம் எடுத்துக்கொண்ட பொருளில் இஃதோர் இனிய பகுதி யாதலால், இத்துடன் நிறுத்துகின்றேன்.



சிவஞானபோதக் கருத்து

[திரு. மா. வே நெல்லையப்ப பிள்ளை, பி. ஏ.]

(முன் ௨0௩-ஆம் பக்கத் தொடர்ச்சி)

மூன்றாவது சூத்திரம், ஐந்தாம் அதிகரணம்

21. கனவிடத்தின் கண்ணன்றித் தொழிற்படாத நுண்ணுடல் (சூக்கும தேகம்) போலன்றிச் சுழுத்தி துரியங்களிலும் தொழிற் படுவதாகிய பிராணவாயுவே அடங்குதல் விடுதல் செய்து அறிவதாகிய ஆன்மா என்று கூறும் பிராணான்மவாதி கொள்கையை மறுத்தற்கு எழுந்தது இவ்வதிகரண மேற்கோள்.

இனிக் கண்படி லுண்டிவினையின்மையில் ஆன்மா உளது என்பது நூலிற் கூறப்பட்ட மேற்கோள். கண்படில் = கனவு நிகழாத துயிலிடத்து; உண்டி = விடயங்கள் வாயிலாக நுகரப்படும் இன்ப துன்ப நுகர்ச்சி; வினை = பரு உடல் (தூலதேகம்) தொழிற் படுதல். விடயங்களிடமாக நுகரப்படும் இன்பதுன்ப நுகர்ச்சியும், பரு உடல் தொழிற் படுதலும் ஆன்மாவுக்குக் கனவு நிகழாத் துயிலின்கண் இலவாதலால் பிராணவாயுக்கு வேறாய் ஆன்மா உண்டு என்று ஆசிரியர் இவ்வதிகரணம் மேற்கோளைக் கூறுகின்றார்.

22. ஆசிரியர் கூறும் மேற்கோளின் கருத்து அடியில் வருமாறு விளக்கிக் கூறப்படும்:—பிராணவாயுவானது ஆன்மாவினுடைய நனவு (சாக்கிரம்), கனவு (சொப்பனம்), நிலை (அவத்தை) களிலன்றி சுழுத்தி துரிய நிலைகளிலும் இயங்குகின்றது. ஆனால் நனவு நிலையில் மாத்திரம் ஆன்மாவுக்கு விடயங்களினிடமாக வரும் இன்ப துன்ப நுகர்ச்சியும், பரு உடல் (தூல தேகம்) தொழிற் படுதலும் (சேட்டித்தலும்) நிகழ நாம் காண்கின்றோமேயன்றித் துயில் நிகழும் சுழுத்தி நிலையில் காண்பதில்லை. துயிலிடத்துப் பிராணவாயு இயங்கி

னும் இன்ப துன்ப நுகர்ச்சியும், பரு உடல் தொழிற் படுதலும் இல்லனவாதலுக்கு ஏது யாதெனின், ஆன்மா நனவின்கண் பிராணவாயுவைக் கருவியாக விடுத்து ஐம்பொறிகளை இயக்கியும், சுழுத்தி நிலையிலுள்ள துயிலிடத்து அதனை ஒடுக்கி ஐம்பொறிகளைத் தொழிற்படாமலிருக்கவும் செய்து வருதலினாலேயாம். ஆதலின் ஆன்மா பிராணவாயுவுக்கு வேறாய் உண்டு என அறிவாயாக.

23. ஆசிரியர் கூறிய அறிவுரையைப் பிராணான்மவாதி கேட்டு அதனை மறுத்துத் தடையுரை கூறுகின்றான்:—உடலிற் பிராணவாயு இயங்குதலினாலே ஆன்மாவுக்கு அறிவு நிகழ்கின்றது. அப்பிராணவாயுவே ஐம்பொறிகளையும் கருவிகளாகக் கொண்டு அறிகின்றது. துயிலின்கண் உடலினிடத்துப் பிராணவாயு இயங்கினும் ஐம்பொறிகளாகிய கருவிகள் ஒடுங்கியிருத்தலால் அது அறியவில்லை; அதனால் பரு உடலினிடத்துப் பிராணவாயுவுக்கு இன்ப துன்ப நுகர்ச்சியும், தொழிற் படுதலும் நிகழவில்லை. மேலும் ஒருவன் துயிலினின்று விழித்தெழுந்தபொழுது அவனுக்கு "நான் சுகமாய்த் தூங்கினேன்" என்ற உணர்ச்சி உண்டாகிறது. அதனால் சுழுத்தியில் இன்ப நுகர்ச்சியும் உளது. ஆதலால் பிராணவாயுவே அறியும் பொருளாகிய ஆன்மாவா யிருத்தலின் அதற்கு வேறாய் ஆன்மா என்ற ஒரு அறிவுப் பொருள் உளது என்று கோடல் பொருந்தாது.

24. பிராணான்மவாதி கூறின தடை உரையை (ஆக்ஷேபனையை) ஆசிரியர் கேட்டு அவனுடைய அறிவு மயக்கம் நீங்கும்படி கூறும் மறுப்புரையாவது:—பிராணவாயுவானது உடலில் இயங்குகிற தன்மையை நீ நன்றாய் அறிந்து கொள்ளவில்லை. அது ஒரு நிலையில் நின்று இயங்காமல் மேலும் கீழும் மாறிமாறி இயங்குகின்றது. இவ்வாறு அது உடலில் இயங்குதலினாலேயே உடலினிடத்து எல்லாக் கருவிகளும் இயங்குகின்றன. அது இயங்கும் காலத்தில் உடலிலுள்ள கருவிகள் ஒவ்வொன்றும் தாமாக இயங்காமலிரா*. ஆதலின் பிராணவாயு, துயில் நிகழும் சுழுத்தியில் இயங்கும்பொழுது ஐம்பொறிகளாகிய கருவிகள் ஒடுங்கி யிருக்கும் என்று நீ கூறிய கூற்றுப் பொருந்தாது. சுழுத்தியில் உண்டாகிறது என்று நீ கூறுகிற சுக உணர்வு நாம் கூறுகிற உண்டிக்குச் சேர்ந்ததன்று. நாம் கூறுகிற உண்டி என்பது புறப்பொருள் விடயங்களினிடமாக வரும் இன்ப துன்ப நுகர்ச்சியாகும். உட

* சிவஞான சித்தியார், மூன்றாவது சூத்திரம், 4வது பாட்டு.

லில் இயங்கும் பிராணவாயுவே அறியும் பொருளாகிய ஆன்மாவாக இருப்பின் அது இயங்குகிற நனவு நிலையிலும், சுழுத்தி நிலையிலும் அறிவு ஒருதன்மைத்தாக நிகழ்தல் வேண்டும். ஆனால் நனவில் அறிவு நிகழவும், சுழுத்தியில் அறிவு நிகழாதிருக்கவும் நாம் அனுபவத்தில் காண்கின்றோம். பிராணவாயு நிகழாத துரியாதீத நிலையில் "நான் சுகமாய்த் தூங்கினேன்" என்ற உணர்வு ஒருவனுக்கு அவன் துயில் நீங்கி விழித்த பொழுது உண்டாகின்றது†. பிராணவாயுவே அறியும் பொருளாகிய ஆன்மாவா யிருந்தால் இந்தச் சுக உணர்வு உண்டாகாது. இந்த ஏதுக்களால் பிராணவாயுவுக்கு வேறாய் ஓர் அறிவுப் பொருள் ஏவலாளன் போல ஒரு தன்மைத்தான நிலையிலிருந்து நனவு நிலையிலே உடலில் இயங்குகிற பிராணவாயுவைப் பணியாளனாக விடுத்து அதனைக் கொண்டு ஐம்பொறிகளை இயக்கி அறிந்தும், விடயங்களிடமாக வரும் இன்ப துன்பங்களை நுகர்ந்தும், பரு உடலைத் தொழிற்படுத்தியும், சுழுத்தியில் பிராணவாயு இயங்கினாலும் அதனை ஒடுக்கி அச்செயல்களை நிகழ்விக்காமலும் செய்தல் வேண்டும். இந்த அறிவுப் பொருளே நாம் உளதென்று கூறுகிற ஆன்மா என்று அறிதி.

காடு

(மறைமலையடிகள்)

காடு—மரங்களடர்ந்த நிலப்பகுதி
வல்லை—பருத்துயர்ந்த மரங்கள் நெருங்கிய காடு.
இறும்பு, குறுங்காடு }—சிறு மரங்கள் மிடைந்த காடு.
அரில், அறல், பதுக்கை }—சிறு தூறுகள் பம்பிய காடு.
முதை—மிக முதிர்ந்து முற்றிப்போன மரங்களையுடைய காடு.
பொச்சை, சுரம், பொதி }—மரங்கள் கரிந்துபோன காடு.
கணையம், மிளை, அரண் }—அரசன் காவலிலுள்ள காடு.

---

† சிவஞான சித்தியார். மூன்றாவது சூத்திரம் முதலாவது பாட்டிலுள்ள சிவஞான சுவாமிகள் உரை.

அறிவியற் பகுதி - Science

ஞாலநூல் (Geology)

[திரு. S. நடராஜன், B. A.]

முன்னுரை

1. மாந்தர் தாம் சிந்திக்கத்தொடங்கிய காலந்தொட்டு, அதாவது, அவர்களின் பகுத்தறிவு வளர்ச்சியுற்ற காலத்திலிருந்து, தங்கள் இருப்பிடமாகிய ஆர்கலி சூழ் ஞாலத்தைப் பற்றி அறிய அவா மிக்குள்ளனர். ஞாலத்தைப் பற்றி எழும் ஐயங்களும் வினக்களும் பலதிறப் பட்டவையாம். மாந்தர்க்கு ஊன் உடை அளித்து அவர்கள் தோன்றி வளர்ந்து இறுதியுறச் செய்யும் இவ்வுலகைப் பற்றி அறிய ஆசைப்படுவது இயற்கையேயாம். மானிடர் தோன்றிப் பல்லாயிர மாண்டுகளாய் விலங்கென வாழ்க்கை நடாத்தினர். இவ்வாழ்க்கையின் பயனுய் விளைந்த அறிவு முதிர முதிர மக்கள் நாகரிக மெய்தினர். நாகரிகமடைந்த மக்கள் தங்கள் அறிவு வளர்ச்சிக் கேற்ப, இவ்வுலகில் நிகழும் அற்புத நிகழ்ச்சிகளையும், இவ்வுலகின் தன்மையையும் நன்கு அறிய முயன்றனர். இதை அறியவேண்டும் என்னும் உணர்ச்சியே சமயம், குலம் வகுக்கத் தூண்டியது எனலாம். "சண் மதஸ்தாபனமும், வேதாந்த சித்தாந்த, சமரச நிர்வாக நிலையும், வந்தருளு ஞானகுருவே," எனத் தாயுமானுர் திருவாய் மலர்ந்தருளியபடி நாகரிக மக்களின் வேட்கை அண்டப் பரப்பை அறிய வேண்டுவதேயாம். எனவே மக்கட்குப் பின்வரும் வினக்கள் தோன்றுகின்றன. இவ்வுலகு எவ்வெப்பொருள்களால் ஆக்கப் பட்டுளது? எப்பொழுது, எப்படி இஃது தோன்றியது? தோன்றிய கால முதல் இற்றைவரை என்ன மாறுதல்கள் அடைந்துளது? இவ்வுலகில் தோன்றி வாழ்ந்த, வாழ்ந்து வருகின்ற உயிர்களின் வகை தொகை எவ்வளவு? இதின் மேற்பரப்பில் நடந்துவந்துள்ள நாடகத்தில் மானிடர் என்ன பங்கு எடுத்துக் கொண்டிருக்கின்றனர்? இத்தகைய வினக்கள் மக்கள் கூட்டத்தில் எழுந்ததன் பயனுய்ப் பல்வகைப் புராணங்களும், சமய சாத்திரங்களும் தோன்றியுள்ளன. மேனுடுகளில் பிதாகோரஸ், அரிஸ்ட்டாட்டில் போன்ற அறிஞர்களும், நம் நாட்டில் மணிவாசகர் முதலிய சமயகுரவர்களும், நந்தமிழ்ச் சங்கமேறித் தமிழாய்ந்தாரும் இவ்வுண்மையை அறிய முற்பட்டிருக்கின்றனர்.

உண்மை ஒருவாறு இப்பண்டைப் பெரியார்க்குப் புலப்பட்டதெனினும் இந்நாளில் இஃது ஞாலநூல் அறிஞர்களால் அதிநுட்பமாயும், விரிவாயும், விளக்கப்பட்டு வருகிறது. ஆராய்ச்சியாளர்களால் 18-ம் நூற்றுண்டில்தான் ஞாலநூல் தனிநூலாகக்கருதப்பட்டது. இஞ்ஞான்று இஃது ஏனைய தனிநூல் (exact sciences)களுடன் ஒன்றுய்த் திகழ்கின்றது. ஜெர்மானியரும், அமெரிக்கரும், பிரான்சியரும், ஆங்கிலேயரும் இந்நூலில் ஏராளமான புத்தகங்கள் வெளியிட்டுள்ளனர். இப்புத்தகங்களை வெளியிட்டுள்ள ஆசிரியர்கள் மிகுந்த பொருட்செலவில் தாங்களே நேரில் பல இடங்களுக்குச் சென்று பார்வையிட்டும் புகைப்படங்கள் எடுத்தும் அவைகளைத் தங்கள் புத்தகங்களில் சேர்த்து அழகுற எளிதில் கற்போர் மனதைக் கவரக்கூடிய வகையில் வெளியிட்டுள்ளனர். இந்திய அரசாங்கத்தார் இதற்கென ஒரு தனி அலுவற்றுறை வைத்திருந்தும் நம் நாட்டவர் இதில் கலந்து தனியாக ஆராய்ச்சி செய்யப் போதிய வசதியுமில்லை; ஆராய்வாரும் கிடைப்பது அருமையாகிறது. பலவிதமான இடையூறுகளினிடையே இஞ்ஞால நூலைச் சிறிதேனும் தமிழர் உணர வேண்டும் என்னும் ஆசையால் நஞ்செல்வி மூலம் இச்சிறியேனின் (புத்தக) ஆராய்ச்சியைத் தொகுத்து "மூங்கையான் பேசலுற்றுன் என்ன யான் மொழியலுற்றேன்." இறைவனருள்கூடின் பின்னர் நேரில் பலவிடங்கள் சென்று ஆராய்ந்து படங்களுடன் தனிப் புத்தகம் வெளியிட ஆசைமிக்குள்ளேன். ஈண்டு ஞாலநூலின் எல்லைக் குறிகளை மட்டும் குறிப்பிடுகின்றேன்.

2. பண்டை வரலாற்று ஆராய்ச்சிக்கு ஞால நூல் உறுதுணையாகின்றது. நாகரிகம் வாய்ந்த ஒவ்வோர் நாட்டினரும் இந்நூல் உதவியால் தங்கள் தங்கள் நாடு உலகந் தோன்றிய காலமுதல் இன்றுவரை அடைந்துள்ள மாறுதல்களை உணர்ந்து வரலாற்றைத் தொகுக்கின்றனர். ஏனையோரைக் காட்டிலும் நந்தமிழ் நாட்டார் இந்நூலை ஊன்றிப்படித்தல் வேண்டும். உலகின் மேற்பரப்பில் தற்காலம் உள்ள ஏனைய நாடுகள் கடலினுள் இருந்தகாலத்திலும் தமிழ் நாடு நிலமாய் இருந்துளது. ஞாலம் தோன்றியது முதல் இற்றைவரை இதற்கு நான்கு கடற் பெருவெள்ளங்கள் நிகழ்ந்துள்ளன. இந் நான்கு காலங்களிலும் நிலப்பரப்பு மாறி வந்திருக்கின்றது. ஆனால் நந்தமிழ் நாடு மட்டும் நிலை பெயராது நான்கு ஊழிகளையும் கண்டுள்ளது. இதன் தொன்மையை அறிந்து நாம் பெருமை அடையவேண்டும். நந்தமிழ் நாட்டுப் பண்டைச் சரிதத்தைச் சரியாக ஆராயும் நாவலர்கட்கு இந்நூலறிவு சாலவும் இன்றியமையாததாம்.

3. பல நாடுகளின் வரலாறுகளில் உண்மை சிற்சில இடங்களில் திரித்துக் கூறப்பட்டுளது. போரில் வெற்றிபெற்ற வர்கள் உண்மைக்கு மாருய்த் தங்களைப் பெருமைப் படுத்தியும் தோல்வியுற்றவர்களை இழிவு படுத்தியும் எழுத முற்பட்டு விடுகின்றனர். வரலாறுகளில் ஆங்காங்கே இத்தகை இழுக்கு இருத்தல் வருந்தத் தக்கதே. ஒரு நாட்டுச் சரித்திரத்தை எழுதும் சரித்திர ஆசிரியர் தமக்கு வேண்டிய சான்றுகளை அந்நாட்டு மக்களிடம் கேட்டும், நேரில் கண்டும், பிறர் எழுதிய குறிப்புக்களைக் கொண்டும் தெரிந்து எழுதுகின்றனர். உலகின் வரலாற்றைத் தொகுக்கும் ஞாலநூல் அறிஞர் பிறரின் சான்றுகளைக் கொண்டு எழுத வேண்டியதில்லை. கான்யாறும், கடுஞ்சுரமும், கற்குன்றும், மலைகளும், கடற்கரைகளும், பள்ளத்தாக்குகளும், சமவெளிகளும் சரித்திரச் சான்றுகளை அளிக்கின்றன. மலைகளும், காடுகளும், பாறைகளின் அடிப்படைகளும் இவ்வுலகின் வரலாற்றைத் தெளிவு படுத்துகின்றன. ஆகையால் ஒரு காவலரின் நாட்டுப் பற்ருே, மத வெறியோ, பண வேட்கையோ இந்நூலைத் தம் மனதிற்கேற்றவாறு திரித்துக்கூற இடந்தராது. எனவே, இது பண்டை வரலாற்றை அறிய ஒரு பெருந் துணையாகிறது.

4. இந்நூலை இருபெரும் பகுதிகளாய்ப் பிரிக்கலாம். ஒரு பகுதி ஞாலம் எவ்வெப் பொருள்களால் அமைக்கப்பட்டுளது என்பதையும், அவைகளின் தன்மையையும் கூறு நிற்கும். இப்பகுதியில் ஞாலத்தின் மேற்ருேடு, உட்பாகம் ஆயவை எவ்வாறு அமைக்கப்பட்டுளது எனவும், கடல், ஆறு, மலை, எரிமலை, பூமியதிர்ச்சி, காற்று மழை, கால நிலை மாறுபாடு முதலியவைகளைப் பற்றியும் விளக்கப்பெறும். மற்ெருரு பகுதியில் ஞாலத்தில் ஏற்பட்டுள்ள மாறுதல்களையும், ஊழி முடிவுகளையும், அவ்வக்காலங்களில் வாழ்ந்து வந்த உயிர்களின் வரலாறுகளைப் பற்றியும் கூறப்படும். எனவே இந்நூல் கற்போர்க்கு உற்சாகமளித்துப் புதுப் புதுப் பொருள்களைத் தெளிவுபடுத்தி ஊக்கமூட்டும்.

5. இந்நூலுக்கு இலக்கணம் (Definition) பின் வருமாறு கூறலாம். ஞாலத்தின் உற்பத்தி, அமைப்பு, அதன் மேற்பரப்பில் உள்ள நிலநீர்ப் பகுதிகளின் தோற்றம் மாற்றம் முதலியவைகளையும், இதன் வரலாற்றையும், இதில் தோன்றி வாழ்ந்துவரும் புல் பூண்டுகள், மரங்கள் உயிர்கள் முதலியவைகளின் வரலாறுகளையும் பாறைகளின் அடிப்படையிலும், நிலத்தின் அடிப்படைகளிலும் கிடைக்கும் சான்றுகளால் ஆராய்ந்து கூறும் நூல் ஞாலநூல் எனப்படும்.

உளநூல் (Psychology)

[திரு. மா. பாலசுப்பிரமணியம், எம். ஏ.]

(௨௨௨-ம் பக்கத் தொடர்ச்சி)

தன்மையியல் (Personality)

இனித் தன்மையின் அமைவின்மைகளை அமைவு படுத்துமாறு அறிவாம். தன்மையின் சிதைவுகளை அமைவு படுத்தும் முறைகளைக் கூறும் நூல் ஆங்கிலத்தில் ஸைகோ தேராபி (Psycho therapy) எனப்படும். இதனைத் தமிழில் உளமருத்துநூல் எனக் கூறலாம். உளமருத்துவத்தில் நாம் நான்கு அறியத்தக்கன இரண்டு உள. தன்மைச் சிதைவுள்ளவனது முழு உள வாழ்க்கையின் வரலாற்றை அறிந்து, அச் சிதைவு நேர்ந்ததன் காரணத்தைத் தெரிதல், ஒன்று: தன்மைச் சிதைவினனது நிகழ்கால உளப்பான்மையின் அமைப்பை நன்கு அறிந்து, அதை வருங்காலத்தில் சீர்படுத்தும் முறைகளை ஆராய்ந்து தெளிதல், பிறிதொன்று.

உளமருத்துவ முறைகள் பல உள. அவையிற்றுள் சிறந்தன சில. அவை ஆங்கிலத்தில்,

1. ஸஜ்ஜேஷன் (Suggestion)
2. ஹிப்னுடிக் ஸ்ஜ்ஜேஷன் (Hypnotic Suggestion)
3. ஆட்டோ ஸஜ்ஜேஷன் அல்லது ஸேல்ஃப் ஸஜ்ஜேஷன் (Auto-Suggestion or Self-Suggestion)
4. கௌண்டர் ஸஜ்ஜேஷன் (Counter Suggestion)
5. ஸைகோ அனலிஸிஸ் (Psycho-analysis)

எனப் பேசப்படுகின்றன. தமிழ்மொழியில் இவை முறையே,

1. எண்ண ஏற்றம்
2. அறிதுயில் சார் எண்ண ஏற்றம்
3. தற்செய் எண்ண ஏற்றம்
4. எதிர் எண்ண ஏற்றம்
5. உள ஆராய்வு

எனப் பேசப்படும்.

எண்ண ஏற்றம்

ஒருவன் ஒருவினை செய்யுங்கால் பல்வகைச் சார்புகளால் உளத்தளர்ச்சி அடைகின்றான். இந்நிலையை அவனால் நன்கு மதிக்கப்பட்டவன் ஒருவன் கண்டு அவனை நண்ணி 'இவ்வினையை மீண்டும் வலிதின் முயன்று செய்; இம்முறை நீ வெற்றி பெறுவாய்' என வன்புடன் கூறுகின்றான். இக்கூற்றினைக்

கேட்ட முன்னவன் உள்ளத்தில் 'இம்முறை முயன்றால் உண்மையில் வேற்றி பேறுவோம்' என்னும் எண்ணம் ஏற்றம் எய்துகின்றது. இவ்வெண்ண ஏற்றத்தின் பயனாக அவன் தன் வினையை இனிது முடிக்கின்றான். ஒருவனுக்கு எண்ண ஏற்றத்தினால் உண்டாம் பயன் அவ்வெண்ண ஏற்றத்தினைத் தோற்றுவித்தவனது உளவன்மை, செந்தன்மை, பெருமிதம் முதலியவற்றுடன் இயைந்து நிற்கும். இவ்வுண்மையைச் சற்று விளக்குவாம். உலகத்தில் மாந்தரிடை நிகழும் உளந்தொடர்புகளுள் மதிப்பு என்பதொன்று. ஒருவன் பலர்பால் மதிப்பினைக் கொண்டுள்ளான் எனக்கொள்வோம். ஆயின் அவற்கு அப்பலர் மாட்டும் ஒரே அளவினதாய மதிப்பு நிலைப்பதில்லை.

ஒருவர் மாட்டு ஒரு பகுதி மதிப்பினைக் கொண்டுள்ள அவன் மற்றொருவர் மாட்டு இருபகுதி மதிப்பினைக் கொண்டவனாக இருப்பன்: பிறிதொருவர் மாட்டு மூன்று பகுதி மதிப்பினைக் கொண்டவனாக இருப்பன். அவன் உளத்தின்கண் மேற்கூறப்பட்ட மூவருள் முதலவரால் தோற்றுவிக்கப்படும் எண்ண ஏற்றம் இரண்டாமவரால் தோற்றுவிக்கப்படும் எண்ண ஏற்றத்தின் குறைந்த வன்புடையதாகவே இருக்கும்: மூன்றாமவரால் தோற்றுவிக்கப்படும் எண்ண ஏற்றம் இரண்டாமவரால் தோற்றுவிக்கப்படும் : எண்ண ஏற்றத்தின் மேற்பட்ட வன்புடையதாக இருக்கும். இது கண் கூடு.

ஆராய்ச்சி அறிவுடையார்க்கு, உலகியல் வாழ்க்கையில், இவ்வெண்ண ஏற்றத்தின்பாற் பட்ட பல நிகழ்ச்சிகள் நன்கு புலனும். நல்லாசிரியர்கள் தம் மாணுக்கர்களைக் கல்வி யறிவொழுக்கங்களிற் நலை சிறந்தவர்களாகப் பழக்கும் முறைகளும், சம் போர் மறவர்களால் மிக்கு மதிக்கப்பட்ட ஏனாதிகள் அம் மறவர்களைத் திண்ணிய வீரர்களாகப் பழக்கும் முறைகளும், ஓவியம் முதலிய தொழில்களில் மிகுந்த ஆற்றல் பெற்றவர்கள் தங்கள் மாணுக்கர்களை அவ்வத்துறைகளில் சிறந்தவர்களாகப் பழக்கும் முறைகளும், உடற்பயிற்சி ஆசிரியர்கள் தம் உடல்மெலிந்த மாணுக்கர்களை வல்லுடலினராகப் பழக்கும் உளச்சார்பான முறைகளும், சிரிய யோகியர் தம் புது மாணுக்கர்களை அத்துறையில் பழக்கும் முறைகளும், சொல்வன்மையிற் சிறந்தவர் தம் நண்பர்களையும் மாணவர்களையும் அத்துறையில் தேர்ச்சி பெறுவிக்கக் கையாளும் முறைகளும் இன்னோரன்ன பிறவும் எண்ண ஏற்றத்தின் பாற்பட்டனவாம்.

எண்ண ஏற்றத்தின் வன்பு அதனைத் தோற்றுவித்தவரது உளவன்மையாதியவுடன் இயைந்து நிற்கும் என முன்னர்க்

கூறினேம். எண்ண ஏற்றத்தின் வன்பு பிறிதொரு சார்புடனும் இயைந்து நிற்கும். அச்சார்பாவது எண்ண ஏற்றத்தை ஏற்பவனது உளப்பான்மையாம். சிலர் எண்ண ஏற்றத்தை எளிதில் ஏற்பவராக இருப்பர்: அவர் உள மென்மை யுடையர். வேறு சிலர் எண்ண ஏற்றத்தை ஒரு காலும் ஏலாதவராக இருப்பர்: அவர் உளவன்மை யுடையர். இனி, ஒருவரே ஒரு நிலையில் எண்ண ஏற்றத்தை எளிதில் ஏற்பர்; பிறிதொரு நிலையில் அதனை வலிதில் ஏற்பர்; மற்றொரு நிலையில் அதனை ஏலாதொழிவர்.

2. அறிதுயில்சார் எண்ண ஏற்றம்

ஒருவன் அறிதுயில் நிலையில் இருக்குஞான்று எண்ண ஏற்றத்தினை எளிதில் ஏற்கின்றான். இஃது உளநூற் புலவர் ஆய்ந்தறிந்த உண்மை. அறிதுயில் என்பது உணர்வு விளங்கும் விழிப்பு நிலைக்கும், உணர்வு விளங்கா உறக்க நிலைக்கும் நடுவண் உள்ள ஒரு தனி உணர்வுநிலை. Hypnosis is a passive and sleeplike state that is nevertheless attentive and concentrated.) இந்நிலையில் உள்ளவனுக்குப் புறவுணர்வு சிறிதும் இன்றெனினும் அறிதுயில் ஏவியின் (Hypnotiser) உள ஆணைகளை (Mental Commands) மட்டும் அறியும் தனி உணர்வு உண்டு. அறிதுயில் நிலையினனது உணர்வு விழிப்பு நிலையில் பலபடப் படர்ந்து இருந்தது போலின்றி மிகவும் குறுகி ஒரு புள்ளி அளவிற்கு அஃகும். எனினும், அவ்வளவிற்கு அஃது ஆழ்ந்த தன்மையினதாக நிற்கும். விளக்கிக் கூறுமிடத்து, அறிதுயில் நிலையினனது உணர்வின் தொழிற்பாடு அறிதுயிலேவியின் உளவாணைகளை அறிந்து அவையின்படி நடத்தல் என்னும் அவ் ஒரே ஆற்றான் நிகழ்வதெனினும், அந்நிலையில் ஏவியின் மிகவும் நுண்ணிய உள ஆணைகளையும் அறிந்து அவையிற்றின்படி நடத்தலால், அறிதுயில் நிலையினனது அஃகிய உணர்வு ஆழம் உடைத்து என்பது போதரும்.

அறிதுயிலேவியின் ஆற்றல்யாவர் மாட்டும் ஒரே அளவினதாகச் செல்லாது. சிலரே எளிதாகவும் விரைவாகவும் அவனது ஆற்றற்கு உட்பட்டு அறிதுயில் நிலையை அடைவர். அவருள்ளும் சிலர் எளிதில் அந்நிலையினின்று நீங்குவர்; பிறசிலர் அந்நிலையினின்று அரிதல் நீங்குவர். இனி, அறிதுயில் ஏற்போனது உடனிகழ் உதவியின்றி அறிதுயிலேவியின் முயற்சி ஒரு சிறிதும் பயன் தாராது என்பதும் ஈண்டு அறியத்தக்கது.

அறிதுயிலைத் தோற்றுவிக்கும் வழிகள் பல. அவையிற்றின் அடிப்படையான படிமுறைகள் கீழ்க் கூறப்படும்.


1. அறிதுயிலேற்பானது உளத்துள்ள பயனற்ற எண்ணங்களையெல்லாம் அறவே உணர்வு வட்டத்தினின்றும் (from the circle of Consciousness) நீக்கி, ஏற்பு விருப்பு (receptive attitude) என்னும் அமைதி சார்ந்த நிலையினைத் தோற்றுவித்தல் அறிதுயிலேவியின் முதற்றொழில். இஃது ஏற்புநிலை தோற்றுவித்தலாம்.

2. ஏற்பு நிலையைத் தோற்றுவித்த பின்னர் அறிதுயிலேவி செயற்பாலது எண்ண ஏற்றம் புரிதலாம்.

அறிதுயிலினன் மாட்டு எண்ண ஏற்றம் புரிவதால் அறிதுயிலேவி ஆற்றும் வினைகள் இருவகையினவாம். பல்வகை உள நிலைமைகளைத் தோற்றுவித்தல் ஒன்று; சில்வகைத் தொழிற்பாடுகளைத் தோற்றுவித்தல் பிறிதொன்று. முதல் வகையைச் சார்ந்த சில எடுத்துக்காட்டுகளை ஈண்டுக் கூறுவாம். அறிதுயில் இயக்குநன் (Hypnosis - operator) என்னும் அறிதுயிலேவி ஏற்பானது கையில் ஒரு தீ நாற்றமுள்ள பொருளைக் கொடுத்து "இஃது ஒரு நறுநாற்றமுள்ள மல்லிகை மலர்; இதனை நீ முகர்!" எனக்கூறி ஏவுதலும் அவன் அதனைப் பலகாலும் முகர்ந்து இன்பமே நுகர்கின்றான். தன் கையிலுள்ள பொருள் நறுநாற்றமுள்ளது என எண்ணும் உள நிலைமையை ஏற்பானது உளத்தே ஏவி தோற்றுவித்தல் காண்க. நிற்க. ஏற்பானை நோக்கி 'உன் வலக்கை தன் புலனுணர்ச்சியை (Sensation) இழந்து விட்டது. இனி உனக்கு ஊசிக் குத்தினால் நோய் தோன்றாது' எனக்கூறி அவனது வலக்கையை ஊசிகொண்டு பலகால் குத்துகின்றான். ஏற்பான் ஒரு சிறிதும் நோய் நுகராமலே இருக்கின்றான். 'ஊசிக் குத்தினால் இனி நாம் ஒருசிறிதும் நோய் நுகரமாட்டோம்' என எண்ணும் உளப்பான்மையை ஏற்பானிடத்தே ஏவி தோற்றுவித்தல் காண்க.

• இனி இரண்டாம் வகையைச் சார்ந்த ஒரு எடுத்துக்காட்டினை ஈண்டுக் கூறுவாம். ஏற்பானது கையில் இயக்குநன் ஒரு அட்டையாற் செய்யப் பட்ட வாளைக் கொடுத்து 'இஃது ஒரு கூரிய எஃகு வாள்; இதனால் உன்னைச் சூழ்ந்து நிற்கும் பகைவர்களைத் தாக்கு' எனக்கூறி ஏவுகின்றான். ஏற்பான் உடனே யாதொரு தயக்கமு மின்றி நாற்புறமும் வாளை வீசி எவரையோ உண்மையில் தாக்குவது போல் முனைந்து முயல்கின்றான். (தொடரும்)

—



குறுந்தொகை

[MR. T. B. KRISHNASWAMY MUDALIAR, M.A., B.L.]

1. கடவுள் வாழ்த்து

தாமரை புரையுங் காமர் சேவடிப்
பவளத் தன்ன மேனித் திகழொளிக்
குன்றி யேய்க்கு முடுக்கைக் குன்றின்
நெஞ்சுபக வெறிந்த வஞ்சுடர் நெடுவேற்
சேவலங் கொடியோன் காப்ப
ஏம வைக லெய்தின்று லுலகே.

—பாரதம் பாடிய பெருந்தேவனுர்.

2. குறிஞ்சி

கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி
காமஞ் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியற்
செறியெயிற் றரிவை கூந்தலின்
நறியவு முளவோ நீயறியும் பூவே.

—இறையனுர்.

3. குறிஞ்சி

நிலத்தினும் பெரிதே வானினு முயர்ந்தன்று
நீரினு மாரள வின்றே சாரற்
கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தே னிழைக்கு நாடனொடு நட்பே.

—தேவகுலத்தார்.

KURUNTHOGAI

OR

COLLECTION OF SHORT LYRICS

The world hath its safety day after day, being protected by Him whose charming feet are as the lotus; whose body has the radiance of red coral; whose raiments are crimson as the carat seed; whose valiant long split spear open the heart of the hills and whose hoisted standard bears the cock as His Emblem!

—*Invocation by Perun-tevanar,*
Author of the Baratham.

II

Oh honey bee, with lovely wings and life amid soft pollen-dust, speak not to please me, but speak the truth and tell me, if of the many flowers ycu visit, there be any more fragrant than the long locks of this maiden, with close-grown teeth, with peacock-grace and capable of much friendly intimacy?

—*Iraiyanar.*

III

Wider than the Earth, higher than the Heavens and deeper than the Ocean, is the love of the Lord whose domain borders on the mountains where, from the small flowers of the black-KURINCHI, the bees build up huge honey-combs.

—*Devakulathar.*

ஜெர்மானியர் கல்வி முறை

[திரு. மா. பாலசுப்பிரமணியம், எம். ஏ.]

உலகத்துள்ள பல நாடுகளினும் வழங்கும் கல்வி முறைக ளுள் ஜெர்மனி நாட்டுக் கல்விமுறை சிறந்ததென்று ஆங்கிலே யர்களும் பின்பற்றப் பலகால் முயன்றனரெனில் இம்முறை யின் சிறப்பு போற்றத் தக்கதன்றோ ?

சென்ற உலகப் பெரும்போருக்கு முன்னர் வழக்காற்றில் இருந்த ஜெர்மனி நாட்டுக் கல்வி முறை அப்போருக்குப் பின் னர்ப் புதுக்கி அமைக்கப்பட்டது. ஹேர் ஹிட்லரின் ஏற்றத் தின் பின்னர் அம் முறையும் மாறித் தற்போதையை நாட்டு நிலைமைக் கேற்ற ஒரு புதுமுறை அமைக்கப்பட்டிருக்கின்றது.

போருக்குப் பின்னர், 1919 ம் ஆண்டில் ஜெர்மனிநாட் டின் அரசியல் அமைப்பு (Constitution) நிறுவப்பட்டது. அவ் வமைப்பின்படி நாட்டின்கல்வி கூட்டரசின்(Federal Government) மேற்பார்வையில் இயக்கப்பட வேண்டும் என்று விதிக் கப்பட்டது. ஒவ்வொரு சிறுவனும் சிறுமியும் எட்டு ஆண் டுகளேனும் கல்வி கற்க வேண்டும் என்னும் கட்டாய விதி யும் ஏற்படுத்தப்பட்டது. எட்டு ஆண்டுகள் வாக்ஷூல் (Vokschule) என்னும் போதுமக்கள் பள்ளிக்கூடங்களில் (Folk schools), மாணவர்கள் பயின்ற பின்னர், தங்கள் பதி னெட்டாம் வயதுவரை தொடர்ச்சிப் பள்ளிக்கூடங்களில் (Continuation Schools) அவர்கள் பயிலவேண்டும். இவ் விரண்டு பள்ளிகளிலும் மாணவர்கள் இலவசமாகக் கற்பிக்கப் பட்டனர். மிகவும் ஏழ்மையில் உள்ள தந்தையர்கள் தங்கள் மைந்தர்களைப் பள்ளிகளுக்கு அனுப்பாமல் பொருள் வருவாய் கருதித் தொழிற்சாலைகளுக்கும் பிற அலுவற்சாலைகளுக்கும் அனுப்பிவைப்பதை அறிந்த அரசியலார் அவர்கட்குப் பொருளுதவி (Compensation) செய்து அவர்தம் மக்களைப் பள்ளிகளுக்கு அனுப்புமாறு செய்தனர்.

நாட்டின் பல்வகை நலம் கருதி, மாணவர்கள் அற நூல் கள், அறக்கல்வி, தொழிற் கல்வி, முதலியவைகளில் பயிற்றப் பட்டனர். அன்றியும் ஒவ்வொரு மாணவனுக்கும் குழுநலத் தைப் பேணு முணர்ச்சி தோன்றுமாறும் பொது இயக்கங் களில் கலந்து கொள்ளுமாறும் மன எழுச்சி தோன்றும் வகை யில் பள்ளிப் பயிற்சி யளிக்கப்பட்டது.

ஒவ்வொரு மாணவனும் மாணவியும் தம் பள்ளிக்கல்வி முடிந்தபின்னர் ஒவ்வொரு வளர்ச்சிக் குறிப்பேடு (Record of Progress) கொடுக்கப்பெற்றனர். இந்தியாவிலும் சில பிறநாடு

களிலும் தேர்வுச் சான்றுகள் (Certificates) மாணவர்களுக்குக் கொடுக்கப் படுவது போன்றதொரு வழக்கம் ஜெர்மனியில் கிடையாது. நிற்க.

ஹேர் ஹிட்லர் அரசுக்கட்டில் ஏறிய பின்னர் மேற்கூறப்பட்ட கல்வி முறையில் சில மாற்றங்கள் ஏற்பட்டன. எல்லாத் துணைப்பள்ளி (Secondary School) மாணவர்களுக்கும் ஒரேபடித்தான அளவில் (One uniform standard) கல்வி கற்பிக்கவேண்டும் என்பதும், மாணவர்கள் யாவரும் நாட்டின் நலங்களுக்கேற்ற துறைகளிலேயே முற்றும் பயிற்றப்படவேண்டும் என்பதும், ஒவ்வொரு மாணவனும் மாணவியும் நாட்டுக் குழுவியற்கோள்கையினராக (National Socialist) ஆதற்கேற்ற கல்வி பயிற்றுவிக்கப்பட வேண்டும் என்பதும், மாணவர்கள் வருங்கால நாட்டுத் தலைவர்களாக ஆதற்கேற்ற முறையில் பயிற்றப்பட வேண்டும் என்பதும் ஹிட்லரின் தேர்ந்த கொள்கைகளாம்.

ஹிட்லர் கல்விமுறை மக்களின் அறிவையும் உளத்தையும் விளக்கத் தோன்றினதன்று; உயிர்க் குறுதி பயப்பதுமன்றும். நாட்டின் ஒருமை கருதி அரசியலின் நிலை வேண்டி, ஆற்றலுள்ளார் சிலர் நடாத்தும் ஓர் இயக்கமே இன்று ஜெர்மனியின் கல்விமுறை ஆகின்றது. உடலுறுதியும் கடமை உணர்ச்சியும்(Sense of responsibility), நாட்டின் நலங் கருதி, தந்நலம் விடுத்து, அரசியலார்க்கு உட்பட்டு உழைக்க விரும்பும் உணர்ச்சியும், கட்டுப்படும் தன்மையுணர்ச்சியும் (Sense of discipline) தோழமை உணர்ச்சியும் (Sense of comradeship) ஆய இவைகளைத் தோற்றுவித்தலே தற்காலத்திற் கேற்ற கல்விப் பணியாம் என்பது ஹிட்லரின் கொள்கை. அறிவின் ஆற்றலைப் பெருகுவித்தலும், அறிவியற் கலைகளைக் கற்பித்தலும், தற்போதைய ஜெர்மானிய கல்வி முறையில் இரண்டாம் படி முறையிலேயே வைக்கப்பட்டிருக்கின்றன.

பல்கலைக் கழகங்களில் தேர்ந்து எண்ணற்ற மாணவர்கள் அரசியலில் அலுவல் தேடி அலைவதைக் கண்ட ஹிட்லர் இன்னின்ன பல்கலைக் கழகங்கள் இன்னின்ன எண்ணிற்கு மேற்பட்ட அளவில் மாணவர்களைக் கொள்ளுதல் கூடாதென ஒரு புது விதியும் செய்தனர். இது அறிவு விளக்கம் ஒன்றே கருதிக் கற்கும் மாணவர்க்கு ஓர் இடையூறு ஆயிற்று. ஹிட்லர் அரசியல் பெற்றநாளிலிருந்து பெண் கல்வி மிகவும் குன்றி விட்டது. ஆண்பாலார்க்கு அடங்கி நிற்றலும், அவருடன் கூடி இல்லறம் நடாத்தலுமே பெண்பாலார்க் குரிய கடமைகள் என்பது ஹிட்லரின் கொள்கை.

இசைத் தமிழ்ச் செல்வர்

திரு. தி. இலக்குமணப் பிள்ளை அவர்கள் B. A.

(முகப்புப் படம் பார்க்க)

பிறப்பு

தொடக்கத்தில் திருச்செந்தூரிலிருந்து பின்பு பாளையங் கோட்டையிற் சிலகாலம் வாழ்ந்து கி. பி. 1764-ம் ஆண்டு திருவிதாங்கூரிற் குடியேறிய உயரிய சைவ வேளாள குடும்பத்திற் பிறந்து திகழ்பவர் திரு. தி. இலக்குமணப் பிள்ளையென்பார். திருவிதாங்கூர் வலிய மேலெழுத் ததிகாரி (Accountant General) யாக இருந்த திருவாளர் எம். திரவியம் பிள்ளை என்பாரின் இரண்டாவது பிள்ளையாக இவர் 1864-ம் ஆண்டு மே மாதம் 3-ம் நாள் பிறந்தார். திருவனந்தபுரம் ஆங்கிலக் கல்லூரியில் தருக்க தத்துவப் பேராசிரியராயிருந்தவரும், பின் திருவிதாங்கூர் டிவிஷன் அஸிஸ்டென்டாயிருந்தவரும், இரண்டாவது இளைய மன்னராயிருந்த அசுவதி திருநாள் அரசகுமாரருக்கு ஆசிரியராயிருந்து புகழ் பெற்றவருமான திரு. தி. முத்துக்குமார சுவாமி பிள்ளை என்பார் இவருடைய தமையனாராவர்.

கல்வி

திரு. இலக்குமணப் பிள்ளையவர்கள் திருவனந்தபுரம் ஆங்கிலக் கல்லூரியில் 1886-ம் ஆண்டில் பி. ஏ. பட்டம் பெற்றனர். அக்கல்லூரித் தலைமை யாசிரியராயிருந்த டாக்டர் ஹார்வி என்பார் ஆங்கிலத்திலும் உளநூற்றுறையிலும் பிள்ளையவர்கள் உயர்புலமை யெய்தி யிருந்ததைப் புகழ்ந்து கூறியுள்ளார். பி. ஏ. பட்டம் பெற்றபின் சட்டத்தேர்விற்குப் படித்துவருங்காலை, திருவனந்தைத் திவானாக இருந்த கண்ணியம் பொருந்திய இராமையங்கார் அவர்களால் கணக்குப் பயிற்சிக்கெனத் தேர்ந்தெடுக்கப்பட்டுச் சென்னைக்கு அனுப்பப்பட்டனர்.

அலுவலேற்றமை

கணக்குப் பயிற்சி பெற்றுத் திருவனந்தபுரம் திரும்பியவுடன் பிள்ளையவர்கள் "ஜமாபந்தி" தனிக்கையாளராகவும், பின்னர் மராமத்து "ஸெக்ரட்டெரி"யின் கீழ் இரண்டாம் எழுத்தாளராகவும் அலுவலேற்றார். பின் கம்பட்டசாலை (Mint) அதிகாரியாகவும், அச்சுக்கூட அதிகாரியாகவும்

ஆலப்புழை கச்சவடம் வகைத் (Commercial Office) தலைமை எழுத்தாளராகவும் இருந்து திருவனந்தபுரம் உப்பு வட்டம் கண்காணிப்பாளராக அமர்ந்தார். இவர் வேலைத் திறமையையும் உண்மை யுழைப்பையும் கண்ட திவான் கிருஷ்ணசாமி ஐயர் அவர்கள் இவரைக் கோட்டையம் வட்டம் "ஷெரிஸ்ததார்" ஆகவும் பின்னர் "ஸ்டாம்பு அண்டு ஸ்டேஷனரி சூப்பரின்டெண்டென்" டாகவும் உயர்த்தினர். சிறிது காலத்திற்குப்பின்னர், கணக்கு வட்டம் கண்காணிப்பாள ராகவும், திருவனந்தை ஹுஸூர் கஜானு ஆபீஸராகவும், அக்கவுன்ட் அஸிஸ்டென்டு ஆபீஸராகவும் இறுதியில் ரூ. 250 சம்பளத்தில் மேஜர் கஜானு ஆபீஸராகவும் அமர்ந்து பணியாற்றி 1920-ம் ஆண்டில் தம் 56-ம் வயதில் அடுத்தூண் (Pension) பெற்றுக் கொண்டார். அதன் பின்னர், திருவிதாங்கூர் சட்டசபை உறுப்பினராகவும் அமர்ந்து விளங்கினர்.

ஆசிரியப் புலமை

ஆங்கிலப் பயிற்சி முடிந்ததும் இவர் தமது 21-வது வயது முதல் 27-ம் வயது வரையில் தமிழிலக்கியத்திலும் ஆங்கிலப் பயிற்சியிலும் இசை நூற்கேள்வியிலும் தம் காலத்தைச் செலவிட்டு வந்தனர். திருக்குறள், திருவருட்பா, அடிஸன், ஷேக்ஸ்பியர், எமர்ஸன் முதலிய ஆங்கில ஆசிரியர் எழுதிய நூல்கள், சோபக்குலீசர் (Sophocles) டெமாஸ்தெனிஸ் முதலிய கிரேக்க ஆசிரியர் நூல்கள் ஆகிய இவற்றில் பிள்ளையவர்கள் தம் தனிக்கருத்தைச் செலுத்திப் பயின்று வந்தனர். தம் 24-ம் ஆண்டில் "தமிழ்மொழி வளர்த்தல்" என்னும் அரிய கட்டுரை யொன்றை எழுதி அம்மொழியில் தமக்கிருந்த ஆர்வத்தை வெளியிட்டனர். சோபக்குலீசர் எழுதிய "பீலக்டிட்டிஸ்" என்ற கிரேக்க நாடகத்தைத் தமிழில் "வீல நாடகம்" என்ற பெயருடனும் ஷேக்ஸ்பியர் எழுதிய "ஸிம்பலேன்" என்ற ஆங்கில நாடகத்தைத் தமிழில் "சத்தியவதி" என்னும் பெயருடனும் "மயங்கு கட்டளைக் கலித்தொடர்" என்னும் புதியதோர் பாவினத்தில் அமைத்துப் பாடி வெளியிட்டனர். "இரவிவர்மன்" என்ற பெயருடன் ஒரு வரலாற்றுத்துறை நாடகத்தைத் தாமாகவே இயற்றி மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் 1906-ம் ஆண்டில் அரங்கேற்றினர். இன்னும் பலபாவினங்களில் ஞானனந்தனடி மாலை, நினைவாட்சி இயற்கைக் குறிப்பு முதலிய பாடல்களைப் பாடியுள்ளார் அன்றியும் ஆங்கிலத்தில் தத்துவம், இசை, இலக்கியம் முதலியவற்றைப்பற்றிப் பல கட்டுரைகள் எழுதியுள்ளார். இவர்தம் செய்யுட்டிறத்தை

வியந்து உயர்திரு. பாப்புலித் துரைமகனார் இவரை வங்கக் கவிஞர் இரவீந்திரநாத தாகூருடன் ஒப்பிட்டுப் புகழ்ந்துள்ளார். "தமிழ்ச் சொல்வழக்கு" (Tamil Idioms) என்னும் பெயருடன் தமிழ் மரபுச் சொற்களையும் சொற்றொடர்களையுந் தொகுத்து ஒரு நூலும் வெளியிட்டுள்ளார்.

இசைப் பயிற்சி

இளமையிலேயே பிள்ளையவர்கள் தமக்கிருந்த இசைத் திருவை வெளிக்காட்டவே, இவர்தம் தந்தையார் ஏழாவது வயது முதல் இவருக்கு முறையாக இசைக்கலை பயிற்றுவித்தார். ஏழு ஆண்டுகள் பயின்றதன் பயனாக, இவர் தம் பதினான்காம் ஆண்டில் திருச்செந்தூர் முருகன்மீது ஓர் இசைப்பா (கீர்த்தனம்) இயற்றிப்பாடினர். அதுமுதல் ஒய்வு கிடைத்தபோதெல்லாம் இசைக்கலையைப் பெரிதும் ஊக்கத்துடன் பயின்றுவரலானார். இவ்வாறிருக்கத் தம் 27-ம் ஆண்டில் அருவிக்கரை யென்னும் சிற்றூருக்குச் சென்றிருந்தகாலை எதிர்பாராத வகையில் நீர் வெள்ளத்திற் சிக்கி உயிர்துறக்கவிருந்த தருவாயில் இவர் கடவுளைப்பரவி வழிபடவே, எவ்வாறு தப்பினாரென்று அறியாத வகையில் கடவுளருளால் கரைசேர்ந்தார். இந்நிகழ்ச்சி காரணமாக அதுமுதல் வாய்த்தபோதெல்லாம் திருவருளை வியந்தும், உயிர்கள்மாட் டிரங்குவதைக் குறித்தும் பல இசைப்பாக்கள் பாடிவரலானார்.

இசைத் தேர்ச்சி

இவருடைய கீர்த்தனங்கள் ஞானம், அறம், பக்தி என்ற மூன்று வகையாகப் பாகுபடுத்தற்குரியன. அவை திருவிதாங்கூர் மன்னர் மூலம் திருநாளாலும், கேரளவர்ம கோயில் தம்பிரான் வி. எஸ். ஐ. என்பாராலும் ஓவியக்கலைப் பேரறிஞர் இராஜா இரவிவர்மராலும் புகழ்ந்து பாராட்டப் பெற்றிருக்கின்றன.

1927-ம் ஆண்டு சென்னையில் கூடிய பேரிசை மகாநாட்டில் இவர்தம் இசைப்புலமையை வியந்து இவருக்கு ஒரு பொற்பதக்கம் அளிக்கப்பட்டது. இசை நூலாசிரியர் திரு. எம். எஸ். இராமசாமி ஐயர் பி. ஏ., பி. எல். எல். டி. என்பார் இவரைத் "தமிழ்த்தியாகையர்" என்றே புகழ்ந்தோதியுள்ளார். இவர் தம் இசைத்தேர்ச்சியை வியந்து பாராட்டி, திருவனந்தக் காட்சிச்சாலையில் இவருடைய உருவப்படத்

யைத் திறந்து வைப்பதென்ற நோக்கத்துடன் இவர்தம் நண்பர்களால் ஒரு படமும் திட்டப்பெற்று வருகிறது. 1934-ம் ஆண்டு திருநெல்வேலியிற்கூடிய சென்னை மாகாணத் தமிழர் மாநாட்டில் இவருடைய கீர்த்தனங்கள் பாடப்பெற்று "இசைத் தமிழ்ச் செல்வர்" என்ற பட்டம் அளிக்கப் பெற்றார். சென்னைச் சங்கித மகாசங்கத் தேர்ச்சியாளர் கூட்ட உறுப்பினராகவும், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் நடைபெறும் "சங்கித பூஷண" த் தேர்விற்கு தேர்வுத் தாளசிரியர்களில் ஒருவராகவும் இருந்து வருகிறார். இவர் தம் கீர்த்தனைகள் சுரக்குறியீட்டுடன் இப்போது அச்சிடப்பட்டு வருகின்றன; விரைவில் வெளிவரும்.

இவ்வாறு ஆங்கிலத்திலும் தமிழிலும் இசையிலும் கடவுட்பற்றிலும் ஒருங்கே தனிப் பெருமை பெற்று இலங்கிவரும் திரு. பிள்ளையவர்கள் இன்னும் பல்லாண்டுகள் உடல் நலத்துடனிருந்து தமிழுலகிற்கும் இசையுலகிற்கும் பெரும் பணியாற்றி வருமாறு இறைவன் அருள் புரிவானாக.

செய்திகளும் குறிப்புகளும்:
News and Notes

திருநெல்வேலி கவர்ன்மெண்டு பிளீடரும், பப்ளிக் பிராசிக்யூட்டருமான திருவாளர் P. ஆவுடையப்ப பிள்ளை அவர்களுக்கு "இராவ் சாகிப்" என்னும் பட்டம் அரசாங்கத்தாரால் அளிக்கப் பட்டிருப்பது குறித்து நாம் மகிழ்வதுடன் திரு. பிள்ளையவர்களையும் பாராட்டுகின்றோம்.

* * *

சென்ற மார்கழித் திங்கள் 6-ம் நாள் (21-12-1934) காலஞ்சென்ற பா. வே. மாணிக்க நாயக்கர் அவர்களது மூன்றாம் ஆண்டு நினைநாள் நமது கழக மேடையில் மிகவும் சிறப்பாகக் கொண்டாடப் பட்டது. அக்காலை, திருவாளர் திவான் பகதூர் எ. இராமசாமி முதலியார் அவர்கள் B.A., B.L. தலைமை வகித்தனர்; திரு. டாக்டர் இராவ்பகதூர் C. நடேச முதலியார் அவர்கள், மயிலை சிவ. முத்துக்

குமாரசாமி முதலியார் அவர்கள், பழனியாண்டிப் பிள்ளையவர்கள் முதலிய பலர் குழுமியிருந்தனர். "தமிழர் இயக்கம்" என்ற பொருள் பற்றி, பச்சையப்பன் கலாசாலை ஆசிரியர் திரு. T. செங்கல்வராய பிள்ளையவர்கள் BA. L.T. மிகவும் உருக்கமாகவும் நயம்படவும் சொற்பொழிவாற்றிக் குழுமியிருந்தோர் உள்ளத்தில் புதியதோர் கிளர்ச்சியை யுண்டுபண்ணினார்கள். திரு. மணி. திருஞானசம்பந்தமுதலியார் அவர்கள் "தமிழ்ச் சிறப்பு" என்பதை பொருளாகக் கொண்டுஇனிமையும் பொருட் செறிவும் பொருந்தியதோர் அரிய சொற்பொழிவாற்றினார்கள். அதன்பின் தலைவர் திரு. எ. இராமசாமி முதலியாரவர்கள் திரு. மாணிக்க நாயக்கர் அவர்களின் பண்பு அறிவாற்றல்களையும் செய்தொழிற்றினையும் பலபடப் பாராட்டிக் கூறி, வடநாட்டில் திரு. கங்காராம் என்ற பொறிவலாளர் ஒருவருடைய திறமையை மெச்சிச் சாலைகளும் கட்டிடங்களும் பாலங்களும் அவர் பெயராலே அழைக்கப்படுவது போல், திரு. கங்காராமினும் எத்துணையோ மடங்கு சிறந்த பேரறிஞர் திரு. மாணிக்க நாயக்கர் பெயரால் அத்தகைய நினைவுக் குறிகள் ஒன்றும் அமைக்கப்படாதிருப்பது தமிழர்தம் நன்றியறிதலுக்கும் மேம்பாட்டிற்கும் ஓர் இழுக்காகும் என்று வருந்திக் கூறினார்கள். கூட்டம் இரவு 8-30 மணிக்குக் கலைந்தது.

* * *

மகா மகோபாத்யாய தாக்ஷிண்த்ய கலாநிதி டாக்டர். உ. வே சாமிநாத ஐயர் அவர்களுடைய எண்பதாம் ஆண்டு நிறைவு விழாவைச் சிறப்புடன் 1935-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 6-ம் நாள் கொண்டாடி சென்னைப் பல்கலைக் கழகக் கட்டிடத்தில் அன்னார்தம் உருவப்படம் ஒன்றைத் திறந்து வைத்துப் பெருமைப் படுத்த கனம் பி. டி இராஜன் திரு. டி. சிவராமசேதுப் பிள்ளை, என். எஸ். வையாபுரிப்பிள்ளை முதலியோர் சேர்ந்து ஒரு சுற்றறிக்கை அனுப்பியுள்ளார்கள். தமிழ்நூற் பயந்த தமிழர் ஒருவரைப் பெருமைப் படுத்துதல் இக்காலத்தில் மிகவும் இன்றியமையாததாகும். இச் சிறப்புவிழாவிற்கு அன்பர்கள் தத்தம் மாலியன்ற பொருளுதவியைப் புரியுமாறு வேண்டிக் கொள்கிறோம்.

* * *

மாட்சிமை தங்கிய ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் அரசுக் கட்டிலேறி இருபத்தைந்தாண்டுகள் ஆகப்போகின்றமையின் வருகிற மே மாதம் 6-ம் நாளன்று வெள்ளி விழா கொண்டாடுவதென முடிவு கட்டப் பட்டுளது.

* * *

சென்னைக் கருகிலுள்ள கோடம்பாக்கத்திலிருக்கும் வட பழனி யாண்டவர் கோயில் குடமுழுக்குவிழா சென்ற 7-ம் நாள வியாழனன்று மிகவுஞ் சிறப்பாக நடைபெற்றது.

மதிப்புரை

சோமசம்பு பத்ததி:—சோமசம்பு சிவாசாரியார் இயற்றிய "கிரியாகாண்ட க்ரமாவளி" என்னும் நூலின் தமிழ்மொழி பெயர்ப்பு. விலை ரூ. 2—8—0. கிடைக்குமிடம்: சிவாகம சங்கம் தேவகோட்டை.

சிவாகமங்களிலுள்ள கிரியாகாண்டப் பொருள்களைத் திரட்டி முறையாக வரிசைப்படுத்திப் பத்ததி என்னும் பெயருடன் பதினெட்டுப் பத்ததிகள் பதினெட்டு சிவாசாரியர்களால் செய்யப்பட்டுள்ளன என்றும் அவருள் ஒருவரான சோமசம்பு சிவாசாரியார் எழுதியதே சோமசம்பு பத்ததியென்றும் கூறுவர். இந்நூல் 1180 ஆண்டுகட்குமுன் எழுதப்பட்ட தொன்றாகும். இதற்கு இதுகாறும் வெளிவராத தமிழ் மொழிபெயர்ப்பு ஒன்றைச் சைவ உலகினுக்கு அச்சிட்டு உதவிய தேவகோட்டைச் சிவாகம சங்கத்தின் முயற்சி போற்றற்பாற்று.

இராஜயோகம்:—சுவாமி விவேகாநந்தர் எழுதிய ஆங்கில நூலின் மொழிபெயர்ப்பு. விலை ரூ. 1—4—0. கிடைக்குமிடம் இராமகிருஷ்ண மடம், மயிலாப்பூர், சென்னை.

இந்தியர்தம் உயர்வையும் மேன்மையையும் உலகெங்கும் நிலைநாட்டிய விவேகாநந்த அடிகளை அறியாதார் யார்? அப்பெரியார் தாம் செய்கையில் உணர்ந்து எழுதிய "இராஜயோகம்" என்ற நூல் யோகத்தின் உண்மைப் பெருமையுணர்ந்த ஒவ்வொருவராலும் படித்துச் சிந்தித்துப் பயிலற்குரியதாம். இயற்கைக்கு அப்பாலும் உயிர்கள் உளவென்று கொள்வதால் மனிதனுக்கு அச்சமும் மூட நம்பிக்கையும் உண்டாகி ஓரளவுக்கு அவன் வலியிழந்தவனாகின்றான். என்று இச்சைகளும் குறைவுகளும் மனிதனிடத்திற் காணப்பட்டதோ அன்றே அவற்றை நிறைவிக்கும் ஆற்றலும் அவனிடத்து அமைந்துளது. அவ்வாற்றல் தானும் அவனையொழிந்த வேறொரு உயிரிடத்திலிருந்து வருவதாகக் கொள்வது பொருளற்றதாம். இயற்கைக்கு மேலான பொருள் வேறொன்றுமில்லை. இத்தகைய உயர்ந்த கருத்துக்களைப் படிப்போர் மனத்திடையுண்டுபண்ணி, தமிழர்தம் கொள்கையின் அடிப்படையான இயற்கை வழிபாட்டை மேனிறுத்தும் இந்நூல் தமிழர் ஒவ்வொருவராலும் வாங்கிப் படித்தற்குரியதாம்.

மனோன்மணீயம்:—(வசன அமைப்பு) திரு. ம. சண்முக சுந்தர முதலியார் அவர்கள் எம். ஏ. எல்.டி., எழுதியது. விலை ரூ. 1—4—0. கிடைக்குமிடம்: ம. சண்முகசுந்தரமுதலியார் எம். ஏ. எல். டி. சுந்தர நிலையம், பச்சையப்பா ஹாஸ்டல் ரோட். சேத்துப்பட்டு, சென்னை.

இராய்பகதூர் P. சுந்தரம்பிள்ளை அவர்கள் நமது செல்வி நேயர்களுக்கு நன்கனம் தெரிந்தவர்களே. அன்னாரெழுதிய ஒப்பும் உயர்வுமற்ற நாடக நூலாகிய "மனோன்மணீயம்" தமிழ்க் கல்வியின் தற்போதைய நிலைமையில் யாதொரு இடர்ப்பாடுமின்றி எளிதில் உணர்ந்து கொள்வதற்கு இயலா திருக்கின்றமை கருதியும், நடித்துக் காட்ட முடியாதிருக்கின் றமை கருதியும் தெள்ளிய உரைநடையில் அதனைத் திரு. ம. சண்முகசுந்தரமுதலியார் அவர்கள் தமிழுலகிற்கு எழுதி யுதவி யுள்ளார்கள். இதனுற் சேருந் தொகையைத் திரு. சுந்தரம் பிள்ளை அவர்கள் பெயரால் தமிழ்க்கலை வளர்ச்சி கருதி சென் னைப் பல்கலைக் கழகத்தார் பொறுப்பில் ஒரு பரிசளிப்ப தற்குப் பயன்படுத்தப்படும் என்று கண்டு கழிபேருவகை யெய்துகிறோம். காலஞ் சென்ற பேராசிரியர் சுந்தரம்பிள்ளை யவர்களின் அன்பர்கள் இவ்வுரைநடை நூலை யேற்றுப் பரிசுக் கான மூலப்பொருளை விரைவில் திரட்டியளிக்க உதவுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தருக்கசாத்திரச் சுருக்கம். (The Elements of Logic) நல்லூர் உயர்திரு. சுவாமி ஞானப்பிரகாசர் எழுதியது. பதிப் பாளர் பாலபண்டிதர் P. S. ஞானப்பிரகாசம் மிரிசுவில், யாழ்ப்பாணம்.

அறிவியற்கல்வி யகன்று மேம்பாடுற்று வருகின்ற இக் காலத்தில் அறிவியற்றுறைகள் பற்பலவற்றைப் பற்றியும் எத் தனை நூல்கள் எழுதப்பட்டு வெளிவரினும் அவை மிகை யாகா. அண்ணாமலைச் சர்வகலாசாலையார் அளவை நூலைப் பற்றியபாடபுத்தகமொன்றை வெளியிட்டதைத் தொடர்ந்து, பன்மொழி வல்லுநரும் பேரறிஞரும் தேர்ந்த மொழிநூலா ராய்ச்சியாளருமாகிய யாழ்ப்பாணத்து உயர்திரு. சுவாமி ஞானப்பிரகாசர் எழுதிய இந்நூல் அச்சேறி வெளிவந்தது மகிழ்தற்பாற்றே. இத்தகைய பல நூல்கள் தொடர்ந்து வெளிவருதல் இன்றியமையாததாகும்.

"தனித்தமிழே அன்றி வடமொழிச் சொற்கலப்புள்ள தமிழ் தக்கதன்று என விலக்குகின்ற நவீன நூலாசிரியர் சில் லோரது அபிமதத்தை இந்நூலினுள் மேற்கொண்டிலேம்."

* * * * "வடசொற்களை அடியோடு நீக்கி விடுவமாயின் தருக்கம் ஆதிய சாத்திரங்கள் சில இருக்க இடமுந் தெரியாமற் போய்விடும். இதனால் அன்றே வேண்டும் இடங்தோறும் இந்நூலின்கண் வடசொற்களையும் எடுத்தாண்டிருக்கின்றனம்" என்று ஆக்கியோர் முன்னுரையில் எழுதியிருப்பதைத் தமிழ்மொழிப் பற்றுள்ளோர் எத்துணை ஆதரிப்பார் என்று கூறுதன் முடியாது.

"வடசொற் பகுதிகளை அங்கமாக வைத்து ஆக்கும் விஞ்ஞான சம்பந்தச் சொற்கள் சுருக்கமும் விளக்கமும் பொருந்தியன என்றல் ஒருதலை" என்று அறுதியிட்டுக் கூறிய ஆசிரியர் பின் "சுருங்கச் சொல்லல் நோக்கியும் உயர்தரக் கல்வி பயில்வோர்க்கு இன்பம் ஊட்டும் முகத்தானும் இந்நூல் செந்தமிழ் நடையை ஒருபுடை தழுவி யாக்கப்பெற்றது என அறிக" என்று கூறியிருப்பதால் நூலாசிரியர் இரு மொழிகளையும் ஏற்றத்தாழ்வின்றி ஒப்ப நோக்கும் பெருந்தகையாளர் என்றே கருதக் கிடக்கின்றது.

ஆசிரியர் கருதிய பயனை இந்நூல் எய்துவிக்கும் என நம்புகிறோம்.

திருவருணைக் கலம்பகம்: மூலமும் உரையும்: காழி. சிவ. கண்ணுசாமி B.A. பதிப்பித்தது. 192. பக்கங்கள் கொண்டது. விலை ரூ. 1—0—0. நமது கழகத்திற் கிடைக்கும்.

நவில்தொறும் நவில்தொறும் நாநயம் பயப்பதும் பயில்தொறும் பயில்தொறும் பத்திச்சுவை மிகுப்பதுமாகிய சைவர் கருவூலமெனத் தகும் திருவருணைக் கலம்பகத்திற்கு இதுகாறும் ஒரு தெளிவான உரை யில்லாதிருந்தது பெருங்குறையேயாகும். நம் செல்வி இதழாசிரியர்களில் ஒருவராகிய தருமையாதீன வித்துவான் காழி. சிவ. கண்ணுசாமி அவர்கள் சிதம்பரத்தையடுத்த நகராமலை. இராமலிங்கம் பிள்ளை என்ற பெரியா ரெழுதி யுதவிய உரையை யச்சிட்டு அக்குறையைத் தீர்த்துவைத்தது கண்டு களிபேருவகை யெய்துகிறோம். செவ்விய நடையில் உரைநூலுக்கு வேண்டிய எல்லா இலக்கணங்களு மமைந்து மாணவர்க்கும் மற்றையோர்க்கும் ஒருங்கே பயன்படுமாறு இந்நூல் அமைந்திருப்பது இதன் தனிச்சிறப்பாகும். கண்ணைக் கவரத் தக்கவிதமாய்ச் சிறிய முறையில் அச்சிடப்பட்டிருக்கும் இந்நூலைத் தமிழ் மக்கள் வாங்கிப் படித்துப் பயன்பெறுமாறு வேண்டுகிறோம்.



மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர்

ஓம்

செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

சிலம்பு-௧௫] பவ—மாசி [பரல்-௭

திருவாசகம்

இன்றெனக் கருளி யிருள்கடிந் துள்ளத்
    தெழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் றன்மை நினைப்பற நினைந்தே
    னீயலாற் பிறிது மற்றின்மை
சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந்
    திருப்பெருந் துறையுறை சிவனே [தொன்றாந்
யொன்றுநீ யல்லை யன்றியொன் றில்லை
    யாருன்னை யறியகிற் பாரே.

பதவுரை:—

எனக்கு—உனக்கு என்றும் மீளா அடிமையாயுள்ள எனக்கு

இன்று—(திருப்பெருந்துறையில் என் தலைமேல் உன்னுடைய இரண்டு திருவடிகளையும் வைத்து ஞானதீக்கை செய்து ஆண்டருளின) இந்த நாள்

எழுகின்ற ஞாயிறே போன்று—உலகின்கண் இரவு நீங்கிய காலை நேரத்தில் பேரொளியோ டெழுந்து புறவிருளை நீக்குகின்ற பகலவனைப்போல

உள்ளத்து இருள்கடிந்து நின்ற நின் தன்மை—எனது உள்ளத்திலுள்ள மலஇருளை உனது அருட்பேரொளியாலே முற்றும் நீக்கி அவ்வுள்ளம் சிவத்தன்மை நிறையும்படி செய்து நீ என்னோடு இரண்டற (அத்துவிதமாய்)ச் கலந்து நிலையாக நிற்கும் பேரருட் டிறனால்

நீ யல்லால் பிறிதுமற்று இன்மை—நீ உலகு எங்கும் ஒழிவற அறிவாய் நிறைந்திருந்தாலன்றி எந்த உயிர்ப்பொருளும் இயங்கவும் அறியவும் செய்யாது, எந்த உயிரில்பொருளும் இயங்காது என்ற உண்மையை

நினைப்பற நினைந்தேன்—எனது உள்ளத்தில் விளங்கும் நினைப்பும் மறப்பும் நீங்கின மெய்யுணர்வினுல் நான் அறிந்தேன்.

அணுவாய்ச் சென்று சென்று (உம்)—கட்டு நிலையில் (பெத்த நிலையில்) ஒவ்வொரு உயிருக்கும் அதன் பருவத்துக்குத் தக்கபடி அவ்வுயிரேயாய் அதனுடன் அத்துவிதமா யியைந்து விளங்கி நின்று அதனுடைய வேட்கை அறிவு செயல்களைப் படிமுறையில் விளக்கி அதற்கேற்ற உலகபோகத்தை நுகரும்படி செய்தும்

தேய்ந்து தேய்ந்து (உம்)—வீட்டு நிலையில் (முத்தி நிலையில்) அவ்வுயிர் உலகப்பற்றை விட்டு இருவினையொப்பு, மலபரிபாகம், சத்திநிபாதம், அடையத்தொடங்கித் தன்னையே (சிவத்தையே) நோக்கி நின்று படிமுறையில் மலவலி தேயப் பெறும்பொழுது மலவலி தேய்ந்து சிவமாய் விளங்கும் அளவுக்கேற்றவாறு நீயும் சிவமாய் விளங்கும் உயிராய் அதனோடு அத்துவிதமாய் இயைந்த நின்று அதன் வேட்கை, அறிவு, செயல்களைப் படிமுறையில் விளக்கி உயர்போகம் நுகரும்படி செய்தும்

ஒன்று ஆம் திருப்பெருந்துறைஉறை சிவனே—(அவ்வுயிர் தனது மலவலி முற்றுந் தேய்ந்து சிவத்தன்மை நிரம்பி விளங்கும்பொழுது) பொருட்டன்மையால் இருபொருள்களா யிருப்பினும் அவ்வுயிரோடு நீ வேறு அவ்வுயிர் வேறு என்பதின்றிக் கலப்புத் தன்மையால் ஒருமைப்பட்டு விளங்கும், திருப்பெருந் துறையில் கோயில் கொண்டருளிய சிவபெருமானே!

நீ ஒன்றும் அல்லை—(உயிர், படிமுறையில் அறிவுப்பெருக்கம் அடைதற்குத் தத்துவப்படிகளிலேறிச் செல்லும்பொழுது நீ அவ்வுயிரோடும் தத்துவங்களோடும் ஒன்ருயும், வேருயும் உடனுயும் கலந்திருந்தாலும் உயிரிலாவது தத்துவங்களிலாவது சிறிதும் தோய்ந்து மாறுதலடையாமல் உனது இயற்கைத் தன்மையில் நிலையாக விளங்குதலால்) நீ உயிர் அல்லாதவனும், தத்துவங்கள் அல்லாதவனும் அவற்றிற்கு வேருயுள்ள நிறை அறிவுப் பொருளாயிருக்கின்ருய்;

நீ அன்றி ஒன்றில்லை—(அவ்வாறு நீ உயிராவது, தத்துவங்களாவது அல்லாதவனுய் அதனின்று வேறு தனிப்பொருளாயிருப்பினும்) அவ்வுயிரிலும், தத்துவங்களிலும் நீ நிறைந்திருக்காவிட்டால் உயிர் இயங்கவும் அறியவும் செய்தற்கு வல்லதன்று; தத்துவங்களும் இயங்குதற்கு வல்லவன்று.

ஆர்உன்னை அறியகிற்பார்—(அவ்வாறு நீ உயிரிலும், தத்துவங்களிலும் உண்மையும் இன்மையுமாய் விளங்கும் இயற்கைத் தன்மை

யினால்) மாந்தரில் யார்தான் உன்னை உன்னோடு அத்துவிதமாய்க் கலந்து நின்று உணராமல் உனக்கு வேறாய் நின்று தனித்த நிலையில் அறியவல்லவர்? (ஒருவரும் இல்லை என்றபடி.)

விளக்க வுரை:—

இன்று—என்பது சிவபெருமான் திருப்பெருந்துறைக்கு அடியார் கூட்டத்தோடு வந்து மாணிக்கவாசக அடிகளுடைய தலையின் மேல் தமது திருவடிகளை வைத்துத் தீக்கைசெய்து ஆண்டருளிய நாளைக் குறிக்கிறது. இந்த நாளில் அடிகளுடைய தீவிர தர சத்திநிபாதநிலையானது தீக்கையால் குறைவிலா நிறைவு பெற்றது என்பது குறிப்பிடப்பட்டது. "மெய்யே உன் பொன்னடிகள் கண்டு இன்று வீடுற்றேன்" (1-32) என்றும், "பெருந்துறையின் மேயபெருமான் பிரியா-திருந் துறையு மென்மனத்தே யின்று" (621) என்றும், "களித்தனனுன்னைக் கண்ணுறக் கண்டு கொண்டு இன்றே" (393) என்றும், "இன்று எனக்கு ஆரமுதானாய் போற்றி" (4-93) என்றும் அடிகள் பிற இடங்களிலும் அந்நாளைக் குறிப்பிட்டருளியது காண்க.

எழுகின்ற ஞாயிறே போன்று—எழுகின்ற என்ற சொல் உலகில் என்ற சொல்லை அவாவி நிற்றலால் உலகில் எழுகின்ற என்று பொருள் உரைக்கப்பட்டது. பகுத்தறிவுடைய மாந்தர் எளிதில் உண்மையை அறிந்து கொள்ளுமாறு இயற்கைத் தன்மையில் அமைந்துள்ள உலக இயற்கைப் பொருள்களையே சைவ சித்தாந்த உண்மைகளை விளக்குதற்கு மெய்கண்டார் முதலிய ஆசிரியர்கள் உவமானமாகக் கூறியிருக்கிறார்கள். நாம் புறக்கண்ணாற் காணமுடியாத இறைவனோடு வேறற விளங்கும் அருட் பேரொளியைப் புறக்கண்ணாற் காணக்கூடிய பகலவனினின்றும் வேறாகாத பகலவன் ஒளி உவமையினால் அறிகின்றோம். மாந்தருக்குக் கட்டுநிலையில் கருவியால் விளங்கும் ஒருபுடை அறிவு, இரவிலுள்ள விளக்கொளிக்கும், வீட்டு நிலையில் அருளால் விளங்கும் அகவொளி அறிவு பகலிலுள்ள பகலவன் ஒளிக்கும் ஒப்புமை செய்து விளக்கப்படுகின்றன.

உள்ளத்து இருள்கடிந்து நின்ற நின் தன்மை—இருள் என்பது மல இருள். மலத்தினாலுண்டாகும் அறியாமை. நின்ற என்பது எப்பொழுதும் நிலையாய் ஒருதன்மைத்தாய் நிற்கிற என்ற பொருள் பட நின்றது. இயல்புபற்றி 'நிற்கின்ற' எனக் கூறற்பாலது 'நின்ற' என இறந்த காலத்தாற் கூறப்பட்டது. தன்மை என்ற சொல் அருட்பண்பை அல்லது சிவத்தன்மையைக் குறிக்கின்றது; அருள் ஆற்றலைக் குறிக்கின்ற தெனினும் பொருந்தும். தன்மை=சிவத்தன்மை அடைந்ததினால்.

நீ யல்லால் பிறிதுமற்று இன்மை—பிறிது என்ற ஒருமைப் பெயர்ச்சொல் இங்கே சாதி ஒருமைப்பெயராய்ச் சிவபெருமானினின்றும் வேறாயுள்ள உயிர்ப்பொருளையும் உயிரில் பொருளையும்

குறிக்கிறது. * நீ எல்லாமா யிருக்கிறாய் என்பது கருத்து. மற்று—அசைநிலை. இன்மை—விளங்காமை என்ற பொருள் குறிக்கிறது.

நினைப்பற நினைந்தேன்—மலமுற்றிலும் நீங்கி முழுஅருள் விளங்கப் பெற்ற உயிர் அறிதலும் அறியாமலிருத்தலுமின்றி எப்பொழுதும் ஒரே தன்மையில் இறைவனையே நினைந்து அறிந்து கொண்டிருத்தலால் நினைப்பற நினைந்தேன் என்றார். நினையாமல் நினைந்து என்ற சொற்றொடரும் இப்பொருளையே குறிக்கின்றது. இந்த முற்றறிவு நிலையில் நினைதலும் நினைதலால் அறிதலும் ஒன்றாதலின் நினைந்தேன் என்பதற்கு அறிந்தேன் என்ற பொருள் கூறப்பட்டது.

அணுவாய்ச் சென்று சென்று அணுவாய்த் தேய்ந்து தேய்ந்து—அணுவாய் என்ற சொல் சிங்கநோக்காய்ச் சென்று சென்று என்ற சொற்றொடருடனும் தேய்ந்து தேய்ந்து என்ற சொற்றொடருடனும் இயைந்து பொருள்தர நிற்கின்றது. 'உம்', 'சென்று சென்று' என்பதன் பின்னும் 'தேய்ந்து தேய்ந்து' என்பதன் பின்னும் தொக்கி நிற்கிறது. அணு=உயிர், ஆன்மா.

'சென்று சென்று' என்ற அடுக்குவினையெச்சச் சொல் மாந்தர், தங்கள் கட்டு நிலையில் அவரவர் ஒரு புடை அறிவு விளக்கத்துக்குத் தக்கவாறு, முதலாவது ஒருவகை உலக போகத்திற்குச் சென்று துய்த்து அதில் அமைதி (Satisfaction) பெறாமல், பிறிதொருவகை உலக போகத்திற் சென்று துய்த்து அதிலும் அமைதிபெறாமல்; அவ்வாறே ஒவ்வொருவகை உலகபோகத்திலுஞ் சென்று சென்று துய்த்தலைக் குறிக்கிறது. இவ்வாறு ஒவ்வொருவகை உலக போகத்திலுஞ் சென்று துய்க்கும் மாந்தருடைய ஒரு புடையறிவு விளக்கத்துக்குத்தக்க அளவில் ஒன்றாய் நின்று அவர்களுடைய வேட்கையை விளக்கி வேட்பித்தும், வேறாய் நின்று அறிவை விளக்கி அறிவித்தும், உடனாய் நின்று செயலை விளக்கிச் செய்வித்தும், அத்துவிதமாய் நின்று என்றும் ஒருநிலைத்தாயிருக்கிற இறைவனை அந்தந்த உயிராய்ச் சென்று சென்று என்று அடிகள் கூறியருளினர். இக்கருத்தை இருபா விருபது, கஅ-வது பாட்டில் "என்னுட் கரந்தென்பின் வந்தருளி—யென்னையுந் தன்னையு மறிவின்றியற்று-மென்னதியானெனு மகந்தையுங் கண்டி-யாவரி யாவையு மியாங்கணுஞ் சென்று-புக்குழித்துப்புக்குப் பெயர்ந்துழிப் பெயர்ந்து - மிக்க போகம் விதியால் விளைத்திட் - டெற்பணியாளா யெனைப் பிரியாதே - யோடி மீள்கென வாடல்பார்த்திட் - டேன்வழி நின்றனை னெந்தை" என்று அருணந்தி சிவாச்சாரியார் கூறியருளினது காண்க.

'தேய்ந்து தேய்ந்து' என்ற அடுக்குவினையெச்சச்சொல், மாந்தர் வீட்டு நிலையில் இருவினை யொப்பு, மலபரிபாகம், சத்திநிபாதம் ஆகிய

---

* எல்லாஞ் சிவனென்ன நின்றாய் போற்றி—அப்பர் தேவாரம் 219-1.

நிலைகளைத் தங்கள் அறிவில் எய்தத் தொடங்கித் தங்களை யிது வரையுஞ் சேர்ந்திருந்த மலவலி தேய்ந்து தேய்ந்து படிமுறையில் சிவத்தன்மை அடையும்பொழுது, மலவலிதேய்ந்து சிவத்தன்மை அடைந்த அளவுக்குத்தக்க பருவம் நோக்கி அவ்வுயிர்களேயாய் அவர்களறியும்படி தன்னைக்காட்டி அவர்களோடு ஒன்றாய்நின்று அவர்கள் வேட்கையை விளக்கி வேட்பித்தும் வேறாய் நின்று அறிவை விளக்கி அறிவித்தும் உடனாய் நின்று செயலை விளக்கிச் செய்வித்தும் உயர்போகம் படிமுறையில் நுகரச் செய்து முடிவில் சிவபோகம் நுகரச் செய்துவரும் இறைவனுடைய அருட்செயலைக் குறிக்கிறது. மலவலி தேய்ந்து சிவத்தன்மை அடையும் அளவுக்குத் தக்கபடி வீட்டு நிலையிலுள்ள மாந்தர் உயர்போகம் துய்த்து வருதலால் தேய்ந்து தேய்ந்து என்றார். "என்வண்ண மெவ்வண்ண மவ்வண்ணமாகிய ஈசனுக்கே" என்று சேரமான் பெருமாள் நாயனார் பொன்வண்ணத் தந்தாதி முதலாவது பாட்டிற் கூறியருளியது காண்க.

ஏகனுயிருக்கிற இறைவன் பல்லுயிர்கள் தோறும் அதன்தன் பருவத்துக்குத் தக்கவாறு அவ்வவ்வுயிரேயாய்த் தோன்றுதல்பற்றி அனேகன் என்றும் கூறப்படுகின்றான்.

'சென்று சென்று' என்பது மாந்தருடைய உலகப்பற்று நிலையையும் 'தேய்ந்து தேய்ந்து' என்பது அவர்களுடைய சிவனருட்பற்று நிலையையும் குறிக்கின்றன. உலகப்பற்று நிலையில் இறைவன் உயிரேயாய் விளங்கவும், உயிர் அதனை மலமறைப்பினு லறியாது தன்முனைப்புக்கொண்டு முன் செல்லத் தான் அதன்பின் அது அறியாதவண்ணம் சென்று படிமுறையில் உலகபோகம் துய்ப்பிக்கின்றான் ஆதலின் இறைவனைச் 'சென்று சென்று' என்று கூறுதல் பொருத்தமா யிருத்தலையும், அருட்பற்று நிலையில் இறைவன் தன்னை உயிரின் பருவத்துக்குத் தக்கபடி காட்டிக்கொடுத்து முன் செல்லவும், உயிர் அதனை யறிந்து பின் செல்லவும் அது மலவலி தேயப்பெற்று படிமுறையில் உயர் போகம் துய்க்கும்படி செய்தலால் இறைவனைச் 'சென்று சென்று' என்று சொல்லாமல் 'தேய்ந்து தேய்ந்து' என்று சொல்லுதல் பொருத்தமாயிருத்தலையும் நோக்கி யறிக.

ஒன்றுஆம் திருப்பெருந்துறை யுறை சிவனே — ஒன்று என்பது இங்கே உயிரோடு அத்துவிதமாய்க் கலந்து ஒரு பொருள் எனும்படி நிற்றலைக் குறிக்கிறது. 'ஆகும்' என்பது 'ஆம்' என இடை குறைந்து நிற்கிறது.

திருப்பெருந்துறை யென்ற ஊர்ப்பெயருக்கு உள்ளுறைப் பொருளாய் மாணிக்கவாசக அடிகளைச் சிவபெருமான் திருவடிகளை அடையச் செய்த "மிகு சைவத்துறை" யாகிய பேரருட்டுறை என்று கூறலுமாகும். உயிர்களுக்குப் பேரின்பங்கொடுக்கிற பேரின்பனாகிய சிவன் பேரருளுடையன் ஆதலின் அவன் உறையுமிடம் திருப்பெருந்துறையாயது.

ஒன்றும் அல்லை—ஒன்றும் - உயிர்ப் பொருள்களில் ஒன்றும், உயிரில் பொருள்களில் ஒன்றும் என்றும் பொருள்பட நிற்கிறது. 'அல்லை' என்ற குறிப்பு வினைமுற்று பொருட்டன்மையால் அவற்றினின்றும் வேறு என்ற பொருள்பட நிற்கிறது.

நீ அன்றி ஒன்றில்லை—'அன்றி' என்ற சொல்லுக்கு முன் 'ஒன்றும் அல்லை'க்கு முன் நிற்கிற 'நீ'யை வருவித்துப் பொருள் உரைக்கப் பட்டது. 'இல்லை' என்பது இங்கேயும் விளங்குதலில்லை என்ற பொருள்பட நிற்கிறது.

ஆருன்னை அறியகிற்பார்—'அறியகிற்பார்' என்பதில் 'கில்' என்பது ஆற்றல் உணர்த்தும் இடைநிலை.

இப்பாட்டும் இதனோடு சேர்ந்த ஒன்பது பாட்டுக்களும் அடங்கிய **கோயிற்றிருப்பதிகம்** அநுபோக இலக்கணங் கூறுகிறது. இப் பாட்டில் அடிகள் தாம் அடைந்த அத்துவிதப்பேரின்ப நிலையைக் கூறுகின்றார். முதல் இரண்டு அடிகளில் அடிகள் தாம் அடைந்த "அருள் நாட்டப்பேற்றினால் அத்துவித நிலையை அநுபூதியில் அறிந்ததையும், மூன்றாவது அடியில் எல்லா உயிர்களும் தாம் அடைந்தவாறு அத்துவிதப் பேரின்ப நிலையை அடைதற்கு இறைவன் சலிப்பின்றி ஓயாது செய்துவரும் பேரருட் செயலையும் கூறுகின்றார். அடிகள் தமது உள்ளத்தில் ஞாயிறுபோன்று இறைவன் விளங்கி நிற்கின்ற அருட்பெருந் தன்மையையும், அவனோடு அத்துவிதமாய்க் கலந்து நிற்கின்ற தமது நிலையையும் காணும்பொழுது பிற உயிர்களின் நிலையையும் காண்கின்றார் ஆதலின் தமது அத்துவித நிலையை முன் இரண்டு அடிகளிலும் கூறியபின்பு மூன்றாவது அடியில் பிற உயிர்கள் பல்வேறு படிமுறைகளில் இறைவனோடு அத்துவிதமாய்க் கலந்து நிற்கும் நிலையைக் கூறுகின்றார். *மூன்றாவது அடியின் பொருள் இன்னது என்று அறிதற்குப் பல்வேறு வகையிற் பார்த்து அவ்வகையிலெல்லாம் பொருள் பொருந்தாது என்று கண்டபின் நான் கடைமுறையில் இறிற் கூறப்பட்ட பொருளைத் துணிந்தேன். நான்காவது அடியில் அடிகள் சதசத்தாயுள்ள உயிர் சத்தாயுள்ள இறைவனைச் சார்ந்து நின்றே அறிய முடியும் என்ற உண்மையைக் கூறுகின்றார்.

குறிப்பு: மூன்றாவது அடிக்காவது பிறஅடிகளுக்காவது சிவநேய அன்பர்கள் இறிற்கூறப்பட்ட பொருளைப் பார்க்கிலும் சிறந்தபொருள் காண்பார்களாயின் அதனை விளக்கி எழுதும்படிக்கு நான் அவர்களைத் தாழ்மையாகக் கேட்டுக் கொள்கிறேன்.

மா. வே. நெல்லையப்ப பிள்ளை.

---

*"தூய, ஞானநாட்டம் பெற்றபின் யானும், நின்பெருந் தன்மையுங் கண்டேன் காண்டலும், மென்மையும் கண்டேன் பிறரையுங் கண்டேன்." திருவிடைமருதூர் மும்மணிக் கோவை: பட்டினத்துப் பிள்ளையார்.

புதுக்கவி - Original Poetry

தமிழ்த்தாய் திருத்தசாங்கம்

[வித்துவான் இலந்தையடிக் கவுணியன்
இரா. சிவ. சாம்பசிவ சர்மன்]

1. பேர்

தாரணியி லென்றென்றுந் தங்கிவிளை யாடுகின்ற
பூரணியின் 'பேர்' உரையாய் பூவாய் நீ!—ஆரணியும்
அன்பர் பணிந்தேத்தும் ஆநந்த வல்லியுமாம்
இன்பத் 'தமிழ்த்தாயே' என்று. 1

2. நாடு

இயம்பு வனவியம்பி இன்பளிக்குங் கிள்ளாய்!
நயம்பெறவள் 'நாடு' நவில்வாய்—வயங்கிமிளிர்
'வேங்கடமா வெற்புமுதல் மேவுகன்னி யாகுமரி
தாங்கிடுமா நாடாகுந் தான். 2

3. நகர்

பொற்றொடியார் போற்றுகின்ற பொற்கிளியே! பைந்தமிழாம்
நற்றாய் 'நகர்'நீ நயந்துரைப்பாய்—வெற்றிக்
குதிரைப் படைகொணர்ந்த கொற்றவன் றன்கூடல் 3
'மதுரை'ப் பதியாம் மதி.

4. ஆறு

அன்பூட்டும் நற்றமிழ்த்தாய் 'ஆறு'தனை ஐயமற
இன்பூட்டுங் கிள்ளாய்! இயம்புவாய்—என்பும்
கரைந்துருகப் பாடும் கவுணியர்கோன் ஏடு
விரைந்தெதிர்செல் 'வையை' விளம்பு. 4

5. மலை

தலைவன் தலைவி தமக்கிடையே தூது
செலுங்கிளி! நற் றாய் 'வெற்பு'ச் செப்பாய்—கலைத்தமிழும்
சந்துகமழ் மாருதமும் சார்ந்துமணம் உந்துமுயர்
சந்தப் 'பொதியம்' எனத் தான். 5

6, ஊர்தி

உலகுபுகழ் தண்டமிழ்த்தாய் ‘ஊர்தி’ யிது என்ன
இலகுமொழிக் கிள்ளாய் ! இயம்பாய்—நலமிகுந்த
சொற்றிறனுல் கோதிலாத் தூயநடை யாலான்ற
‘கற்றறிந்தோர் நா’வதுவே காண். 6

7. படை

பகைவர்தமை வென்றவப் பண்புடையாள் கொள்ளுந்
தகு‘படை’யா தோதுகநீ தத்தாய் !—புகழால்
‘சிறந்தாசு வித்தார சித்ர மதுரம்
நிறைந்தகவி’ ஆகும் நினை. 7

8. முரசு

ஆனந்தம் யார்க்கும் அளிக்குந்தா யின்‘முரசம்’
கானமொழிக் கிள்ளாய் ! கழறுவாய்—தேனேர்
‘இயலும் இசையும் எழில்நா டகமும்’
வயங்கொள் முரசாகும் மற்று. 8

9. தார்

மங்கையர்கள் கையில் மகிழ்ந்திருக்கும் வண்கிளியே !
தொங்கவிழும் அன்னையின் ‘தார்’ கூறுதிநீ—பொங்கியொளிர்
பூவாரத் தும்பொலியும் பூணாரத் துஞ்சிறந்த
‘தேவாரப் பாவாரம்’ தேர். 9

10. கோடி

அன்னைபுகழ் நாட்டும் அணி‘கோடி’ தான் ஓதுவாய்
இன்னமுத நேர்சொல் இளங்கிளியே !—தன்னிகரில்
நற்றகைய முத்தமிழின் நாற்கவியும் நாட்டுபுகழ்க்
கொற்றப் ‘புலமை’க் கொடி. 10

வாழ்த்து

கட்டுரைகள் மிக்குக் கவினுர் வடிவுற்று
மட்டில் பொருளுரைகள் மாண்புறவே—எட்டுத்
திசையும் புகு‘சேந் தமிழ்ச்செல்வி’ என்றும்
இசையோ டிலங்க வினிது.

இலக்கணமும் இலக்கியமும்:
LANGUAGE AND LITERATURE

வடமொழித் தென் சொற்கள்

[பண்டித திரு. ஞா. தேவநேயப் பாவாணர்]

(முன் உஙஎ-ம் பக்கத் தொடர்ச்சி)

அகாலம். அ + காலம்.

காலம்: கால் + அம் = காலம். அம் சாரியை. கால் உடம்பின் காற்பாகமாகிய உறுப்பு.

கால் = 1. leg
2. தூண், கால் போல்வது
3. canal—கால்போல நீண்டோடுவது
4. வம்சம்—கால்போலத் தொடர்வது
5. காற்று—கால்போலச் சென்று வீசுவது
6. time—கால்போல நீண்டு செல்வது

அங்குட்டம். அம் + குட்டம்.
அம் = அழகு.
குட்டம்—குட்டையான விரல்.

அசரம். அ + சரம்.
சரி + அம் = சரம். தொழிற்பெயர்.
சரிதல் = அசைதல், சாய்தல்.
சலி—சரி; போலி எனினும் ஒக்கும்.
சரம் அசையும் பொருளைக் குறிக்கும்போது தொழிலாகு பெயர்.

அசலம். அ + சலம் = அசலம் = மலை, அசையாதது.
சலி + அம் = சலம், தொழிற்பெயர்.
சலித்தல்—அசைதல்.
சலம் = நீர், சலிப்பது, தொழிலாகு பெயர்.

சலம் என்பது தென்னாட்டில் நீர்ப்பொருள்களில் ஒன்றாகிய சிழுக்கு வழங்கி வருகின்றது.

சலம் என்னும் தென்சொல்லையே ஜலம் எனத் திரித்தனர் ஆரியரும் தமிழரும்.

'ஜெட்டியார் கடைக்கு ஜென்று ஜேலம் ஜீனி வாங்கி வா' என்று இன்றைக்கும் தமிழ்மக்கள் தென்சொற்களை வடசொற்போலத் திரித்து வழங்குதல் காண்க. சலிப்பு என்பது களைப்பு என்று பொருள்பட்டாற் போல, அதன் பரியாயச் சொல்லாகிய அசைவு என்பதும் களைப்பு என்று பொருள்படும்.

> 'இளிவே இழவே அசைவே வறுமையென
> விளிவில் கொள்கை அழுகை நான்கே.'
>
> —தொல்காப்பியம்.

சலித்தல்—அசைத்து மாத்தெள்ளுதலையுங் குறிக்கும். சலிக்கும் கருவி—சலிப்பான், சல்லடை எனப்படும். சலி + அடை = சல்லடை.

அஞ்சலி. அஞ்சல்—அஞ்சலி.
அஞ்சலி = வணக்கம், அஞ்சிச் செய்வது.

அதிகம். அதி—அதை என்னும் சொல்லின் திரிபு.
அதைத்தல் = விங்குதல், பருத்தல், மிகுதல்.
அதி + இகம் = அதிகம், தொழிற்பெயர்.
அதி என்பது மிகுதிப்பொருள் உபசர்க்கமாய் வரும்.

அதிமதுரம். அதி + மதுரம் = அதிமதுரம், ஒரு சரக்கு.
மதுரம் = கள், தேன், மதர்ப்புச் செய்வது.
மதமத என்பது எரிப்புப்பற்றிய குறிப்புச்சொல்.
மத—மதர்—மதுர்—மதுரம்—மது.

அதிவேகம். அதி + வேகம்.
வேகம் = வேகு + அம்.
= வேதல், சூடு, எரிதல்.

ஒரு பொருள் வேகும்போது விரைவாய் எரிதலின் விரைவு வேகம் எனப்படும். சுறுசுறுப்பைச் சூட்டிக்கையென்பர். ஒருவினை மும்முரமாய் நடந்தால் 'நெருப்பெழுந்து வேகிறதே!' என்பர் தென்னாட்டார்.

அநுசிதம். அந் + உசிதம்.
அந்—அல் என்பதன் திரிபு
உசிதம் = உயர்வு, சிறப்பு, உகரச் சுட்டடியாகப் பிறந்தது.

உயர்வுபற்றிய சொற்களெல்லாம் பெரும்பாலும் உகரச் சுட்டடியாகவே பிறக்கும்.

உ-ம். உயர்வு, உம்பர், உன்னதம், உச்சி, உச்சிதம்.
உத் (உபசர்க்கம்), உத்துங்கன்.

அநுதாபம். அநு + தாபம். அநு—உபசர்க்கம்.
அநு, அண்ணு என்பதன் திரிபு.
அண்ணுதல்=கிட்டுதல், கூடுதல்
தவி + அம்=தாவம்—தாபம்
தவித்தல்—நீர்வேட்டல், வருந்தல், விரும்புதல், இரங்குதல்.
அநுதாபம்=இரக்கம். அநு=உடன், கூட, துணையான.

அநுமதி. அநு + மதி.
மதி=அறிவு
மதித்தல்=அளத்தல், அளந்தறிதல், நிதானித்தல், பெரிதாய் எண்ணுதல்.

அநுமானம். அநு—மானம்
மானி + அம்=மானம், தொழிற்பெயர்
மானித்தல்=அளத்தல், மதித்தல்
மானம்—அளவு
படியை மானம் என்பது வடாற்காட்டு வழக்கு
மானம்—Moon, காலத்தை அளப்பது
Cf. மதி—மாதம்.
அவமானம்=மதிப்பின்மை
உபமானம்=துணை, அளவு, ஒத்த
சன்மானம்=நல்ல மதிப்பு, மதித்தளிக்கும் பரிசு
அபிமானம்=மிக மதித்தல்
பெறுமானம்=பெறும் அளவு, மதிப்பு
வருமானம்=வரும் அளவு, வருவாய்

கட்டுமானம்=கட்டும் அளவு, கட்டடம் + மானம் விகுதி
உபமனத்தா லறியப்படுவது உபமேயம்.

மானம்=அளவு, விதம். மானம்—manner
மானம் மானை என்று உலகவழக்கில் திரியும்.

'இந்த மானைக்குப் போட்டேன் என்றால் என்னமாயிருக்கும்?' என்பது ஓர் உலகவழக்கு (தென்னாடு)

மானி=அளப்பது, அளப்பவன், மதிப்பது, மதிப்பவன்
உஷ்ணமானி=உஷ்ணத்தை அளப்பது
வாயுமானி=வாயுவை அளப்பது

அபிமானி=ஒரு பொருளை மதிப்பவன்
மானம்—மாணம்
பரிமாணம்—அளவு
பிரமாணம்—அளவு, அளவை, அளவையாலறியும் உண்மைப் பொருள், உண்மையாகக் கூறும் ஆணை.

பிரமாணத்தா லறியப்படுவது பிரமேயம்.

அநு, அவ, உப, சன், அபி, பரி, பிர என்பன பொருள் உள்ளவும் இல்லவுமான உபசர்க்கங்கள்.

பெருமானம் முதலிய மூன்று சொற்களில் மானம் தொழிற்பெயர் விகுதியாகவுங் கொள்ளப்படும்.

அந்தப்புரம். அந்தர்+புரம். அந்தர்—inter. இல் (=உள்) என்னும் சொல் ஆரியமொழிகளில் in என்று திரியும். Cf. இல் (=வீடு)—inn=சத்திரம். in என்பதின் உறழ்தரம் (Comparative degree) inter என்பது. inter—அந்தர்.

அந்தர்ப்புரம்—அந்தப்புரம்—நிலைமொழி யீறுகெட்டது.

புரம்:—புரி+அம்=புரம், தொழிற்பெயர். புரிதல்=வளைதல். புரி—spire. புரம்=கோட்டை. வளைந்திருப்பது, தொழிலாகு பெயர்.

Cf. கோட்டம் from கோடு=வளை.
கோடு+அம்=கோட்டம்.
கோடு+ஐ=கோட்டை.

கோட்டம்—Caster, (Eng) கோஷ்டகம் (Sans.) பண்டைக் காலத்தில் ஒவ்வொரு நகரும் ஒவ்வொரு கோட்டையாற் சூழப்பட்டிருந்தது. அதனாற் புரம் அல்லது கோட்டையென்று கூறப்பட்டது.

திரிசிரபுரம். பிஜபுரம்—பிஜப்பூர்.
புரி—முதனிலைத் தொழிலாகு பெயர்.
புரம்—Borough, Berg, Burgh—Edinburgh.
புரி—Bery, Pury, Bury—Canterbury.

கோட்டை—Caster. நால்வாசங் கோட்டை, பாளையங் கோட்டை. Lancaster, Doncaster.

புரம்—அரண்மனை, கோட்டையாற் சூழப்பட்டது.

C. f. நகர்-a town or a palace.

அந்தப்புரம்—உள் அரண்மனை. (தொடரும்)

குறுந்தொகை
மூலமும் விளக்க உரையும்

[இலந்தையடிகள் வித்துவான் இரா. சிவ. சாம்பசிவன்]

(பதிப்புரிமை ஆசிரியர்க்கே)

(௨௯௫-ம் பக்கத் தொடர்ச்சி)

மருதம்

தலைமகற்குத் தோழி வாயில் நேர்ந்தது. அஃதாவது, தலைமகன் பரத்தையிடமிருந்து பிரிந்துவந்து தலைவியின் ஊடலைத் தணிப்பதற்கு வாயில் வேண்டத், தோழி தான் வாயில் நேர்ந்ததைக் குறிப்பால் அவனுக்கு உணர்த்தியது.

ஓரம்போகியார் பாடியது

10. யாயா கியளே விழவுமுத லாட்டி
பயறுபோ லிணர பைந்தாது படீஇயர்
உழவர் வாங்கிய கமழ்பூ மென்சினைக்
காஞ்சி யூரன் கொடுமை
கரந்தன ளாகலி னாணிய வருமே.

பதவுரை :— யாய் ஆகியளே — கற்பினால் யாவர்க்கும் தாயாகியவளும்; விழவு முதலாட்டி—மணவிழவினாலே முதன்மையை யாள்பவளுமான தலைவி; பயறுபோல் இணர பைந்தாது படீஇயர் — பயற்றைப்போலப் பசிய பூங்கொத்துக்களின் தாது தம்மீது படியும்படியாக; உழவர் வாங்கிய கமழ் பூ மென்சினை—உழவர்கள் வளைக்கும் வாசனை வீசுகின்ற பூக்களையுடைய மென்மையான கிளைகளை உடைய; காஞ்சி யூரன் கொடுமை—காஞ்சி என்னும் மரங்கள் நிறைந்த மருத நிலத்தலைவனது கொடுமையை; கரந்தனளாகலின் — பிறர் அறியாதபடி மறைத்து வைத்தாள் ஆதலினால்; நாணிய வருமே—நான் நாணைப் பொருந்தத் தலைவன் இதுகாலை ஈண்டு வருவான்.

(வரின், யான் அவற்கு வாயில் நேர்தல் அன்றிச் செய்யத்தக்கது பிறிதொன்று உளதோ? இல்லை என்றவாறு.)

விழவு—மணம் திருநாள்.

" வதுவை விழவணி வைகலுங் காட்டினையாய் "— (மருதக்கலி-33-3).

தலைமகன் கொடுமையாவது, தலைவனையன்றிப் பிறிதோர் களைகணற்ற தலைவியை அவன் பிரிந்து அவள் துயருறத் தனித்து விடுத்துப் பரத்தைபால் சார்ந்தொழுகுதலாகிய கொடுமை என்க.

ஊடற்குற்ற காரணங்கள் பலவாக இருந்து ஊடாமையால் "யாயா கியளே விழவு முதலாட்டி" என்றார்.

காஞ்சி—மருத நிலத்தில் காணும் மரவிசேடம்.
'காஞ்சித் தாதாடுதல்'—

"விரிகாஞ்சித் தாதாடி"—(பாலைக்கலி-11-8)

"புன்காஞ்சித் தாதுதன் புறம்புதைய"
—(சீவக-648)

"கொழுங்காஞ்சித் தாதாடி"—(சீவக-650)

வாங்கிய—வளைத்த.
"இமையவில் வாங்கிய விர்ஞ்சடை யந்தணன்"
—(குறிஞ்சிக்கலி-2)

"இமையவில் வளைய வாங்கி"—(உத்தரகோச மங்கைப் புராணம்-நளச்-34)

இறைச்சிப் பொருள்:—

பூங்கொத்து உண்டாதலினாலே உழவர் வளைத்த காஞ்சி மரத்தையுடைய ஊரன் என்றது தம்மிடத்து வேட்கை கொண்டமையை உணர்ந்த காரணத்தால் பரத்தையரால் வளைக்கப்படும் இயல்பினன் என்றவாறு.

மெய்ப்பாடு—வருத்தம் பற்றிய இளிவரல்.
பயன்—வாயில் நேர்தல்.

பாலை

தலைமகன் போர்வயிற் பிரிந்தானாக, அவன் பிரிவாற்றாது வருந்தும் தலைவி, தன்னெஞ்சிற்குக் கூறுவாள்போல், தோழி கேட்பச் சொல்லியது.

மாமூலனார் பாடியது

11. கோடீ ரிலங்குவளை ஞெகிழ நாடொறும்
பாடில கலுழுங் கண்ணொடு புலம்பி
ஈங்கிவ ணுறைதலு முயங்குவ மாங்கே
எழுவினி வாழி னெஞ்சே முனாஅது

குல்லைக் கண்ணி வடுகர் முனையது
வல்வேற்கட்டி நன்னாட் டும்பர்
மொழிபெயர் தேத்தா ராயினும்
வழிவிடல் சூழ்ந்திசி னவருடை நாட்டே.

என்பது தலைமகள் தன் னெஞ்சிற்குச் சொல்லுவாளாகத் தோழி கேட்பச் சொல்லியது.

பதவுரை:—கோடு ஈர் இலங்கு வளை நெகிழ நாடொறும்—சங்குகளை அறுத்துச் செய்து விளங்காநின்ற என் கைவளைகள் நழுவி விழத் தினந்தோறும்; பாடு இல கலுழும் கண்ணொடு புலம்பி—நித்திரை யில்லாது வருந்தும் கண்களோடு அழுது கலங்கி; ஈங்கு இவண் உறைதலும்—இங்கே தனித்து வாழ்தலினும்; (வாழ்தலோ அரிது: அதனினும்); முனாது—எதிரில் உள்ள; குல்லைக் கண்ணி வடுகர் முனையது—கஞ்சங்குல்லை மலர்களால் ஆக்கப்பட்ட தலைமாலையைச் சூடிய வடுகருடைய போர்க்களத்தை யுடையதும்; வல்வேல் கட்டி நல் நாட்டு உம்பர்—வலியதான வேலங்காட்டினையுடைய நல்ல நாட்டிற்கு மேலிடத்ததுமான; மொழிபெயர் தேத்தார் ஆயினும்—பிறிதான மொழிபயிலும் தேயத்தில் தலைவர் உள்ளாராயினும்; முயங்குவம் ஆங்கே—அங்கே சென்று அவரைக் கூடுவோம்; வாழிநெஞ்சே—மனமே வாழ்வாயாக; எழுஇனி—நீ என்னுடன் இப்பொழுதே எழுக; வழிபடல் சூழ்ந்திசின் அவருடை நாட்டே—அவருடைய நாட்டைக் குறித்து யான் செல்லற்கு வழிவிடுதற்குக் கருதுவாயாக.

ஈரிலங்குவளை—இஃது ஈர்வளை, இலங்குவளை என இயையும். கோடு—சங்கு. கோடீர் என்பதைக்கோள் + தீர் எனப் பிரித்துக் குற்றமற்ற என்றும் பொருள் கூறலாம். பாடு—படுதல், துயிலல். புலம்பல்—(தனிமையுற்று) அழுதல், வருந்தல். நல்ல நாடு—தீய நாடு எனும் பிறகுறிப்பு. மொழிபெயர் தேம்—பிறபாஷை பேசும் நாடு. சூழ்ந்திசின்—இசின்—பண்டு வழங்கியதோர் இடைச்சொல். வாழிநெஞ்சே—வியங்கோள் வினைமுற்றுத் தொடர்.

"வழிபடல் சூழ்ந்திசி னவருடை நட்பே" என்பது பாடமாயின், "நெஞ்சே, அவருடைய நட்பினை விரும்பி வழிபட்டு ஒழுகுதற்கு இனி எழு" எனப் பொருள் கூறுக.

நெகிழ, ஞெகிழ—இரண்டும் ஒரு பொருளன.

மேற்கோள் விளக்கம்

1. 'கோடீர் இலங்குவளை நெகிழ' —(குறுந்—31, 50)

2. "கோடீரிலங்குவளை......அவருடை நாட்டே"—"தலைவன் உள்வழித் தலைவி செல்லினும், மனவலிஇன்றிச் செல்வாம் என்று கூறும் நன்மொழியினைத் தலைவி தானே கூறினும், அகப்பொருளாய்த் தோன்றும்" என்பதற்கு மேற்கோள்.

—(தோல்—களவு சூ. 113 பக். 487)

3. "கோடீ ரிலங்குவளை......நாட்டே" — என்பது "காமக் கிழவனுள்வழிப்படினும், தாவி னன்மொழி கிழவி கிளப்பினு, மாவகை பிறவும்தோன்றுமன் பொருளே"—(தோல்-களவு-சூ. 111) என்பதில் காமக்கிழவனுள்வழிப்படுதலுக்கு உதாரணம்.

—(தோல்—களவு—இளம்பூ. பக். 186)

4. "கோடீரிலங்குவளை......வாழிய நெஞ்சே" — என்பது — "ஒரு சிறை நெஞ்சோ டுசாவுங் காலை, யுரியதாகலு முண்டென மொழிப —(தோல்—பொருளியல் சூ. 201) என்னும் சூத்திரத்து, "உம்மை எச்சவும்மை யாகலாற் றோழியோடு உசாதலும் கொள்க" என்பதற்கு மேற்கோள்.

—(தோல்—பொருளியல்—இளம்பூ. பக்-291)

வடுகர்—வடுகர் என்பார் வடநாட்டினருள் ஒருவகை வீரர்கள். வடுகர், வடகர் எனவும் வழங்கப்பெறுவர்; தெலுங்கு மொழியினர் என்பாருமுண்டு.

5. "தென்பரதவர் மிடல்சாய வடவடுகர் வாளோட்டிய"

—(புறம்—378)

6. "குல்லைக்கண்ணி வடுகர்"—இதனை,

"கடுங்குரற் பம்பைக் கதநாய் வடுகர்" —(நற்றிணை—212)

"கல்லா நீண்மொழிக் கதநாய் வடுகர்"—(அகநா—107-11)

"வாளிணைப் புகவின் வடுகர்" —(அகம்—218-8)

"முரண்மிகு வடுகர்" —(அகம் 281-8)

"தொடையமை பகழித் துவன்றுநிலை வடுகர்"

—(அகம், 295-15)

"வம்பவடுகர் பைந்தலை சவட்டி" —(அகம், 375-14)

"கதநாய் வடுகர்" —(அகம் 381-7)

இனி—இனி என்பது இப்பொழுது எனும் பொருள்படும் இதனை,

"பண்டறியேன் கூற்றென் பதனை யினியறிந்தேன்
பெண்டகையாற் பேரமர்க் கட்டு"—(திருக்குறள் 1093)

என்னுமிடத்தா லறிக.

"வாழி" என்றும், "என்" என்றும் கூறினுள் வழிவிடல் சூழ்தற்கு என்க.

கண்ணி—போர்க்குச் செல்லுங்கால் தலையிற் சூடும் பூ.

கண்ணி—தலையில் அணியும் மாலை. "கண்ணிகார் நறுங் கொன்றை"—என்பதும் காண்க.

'மொழி பெயர் தேம்'—வழங்கும் மொழி வேறுபட்ட தேசம் என்க. இதனைத் "தமிழ்கெழு மூவர்காக்கு, மொழிபெயர் தேஎத்த பன்மலை யிறந்தே"—(அகம்—களிற்றியானை நிரை 31-1415) என்னும் இடத்தும் காண்க.

(1) "எழுவினி வாழி நெஞ்சே"—
"எழுவினி வாழியென் னெஞ்சே"—பிரதிபேதம்

(2) "கோடீ ரிலங்குவளை நெகிழ நாளும்—
"கோடீ ரிலங்குவளை ஞெகிழ நாளும்"—பிரதிபேதம்

(3) "வழிபடல் சூழ்ந்திசி னவருடை நாட்டே"—
"வழிபடல் சூழ்ந்திசி னவருடை நட்பே"—பிரதிபேதம்

மெய்ப்பாடு: அணங்குபற்றிய அச்சம். என்னை?

"அணங்கே விலங்கே கள்வர்த மிறையெனப்
பிணங்கல் சாலா வச்சம் நான்கே"

—(தொல்—மெய்ப்பாட்—8)


என்பாராகலின்.

பயன்: உடன்போக்கு நயந்தமையைத் தோழிக்கு அறிவித்தல்.

(தொடரும்)

புதிய கல்வெட்டு

மேலைக்குண்டூரைச் சேர்ந்த சாத்தன் பஸ்பாரிக் கருகிலுள்ள வேள்பூர் என்னும் சிற்றூரின் கோயிலொன்றில் ஒரு பளிங்குத்தூண் உள்ளது. அதில் அமராவதி கற்றூணிற் காணப்படுவன போன்ற சித்திரங்கள் செதுக்கப் பட்டுள்ளன. அண்டிரர்களின் பண்டை வரலாற்றை விளக்கவல்ல ஒரு கல்வெட்டும் அதன்கண் காணப்படுகிறது. கி. பி. ஐந்தாவது நூற்றாண்டிலிருந்து விஷ்ணு குண்டின மன்னர்களைப் பற்றிய கல்வெட்டாகும் அது என்று கருதப்படுகிறது.



[MR. T. B. KRISHNASWAMY MUDALIAR, M.A., B.L.]

மதுரைக் கண்ணங்கூத்தனார் இயற்றிய

களவழி நாற்பது

(உ௮0-ம் பக்கத் தொடர்ச்சி)

நான்ஞாயி றுற்ற செருவிற்கு வீழ்ந்தவர்
வான்மாய் குருதி களிறுழக்கத்-தான்மாய்ந்து
முன்பக லெல்லாங் குழம்பாகிப் பின்பகற்
றுப்புத் துகளிற் கெழூஉம் புனனாட
றப்பியா ரட்ட களத்து. (க)

Of the Field of Battle—Forty (Stanzas).

In the field of battle where Chola of the beautiful eyes, Lord of the river-fed lands of Cholamandala, slew his enemies, at dawn the blood flowed freely wherever the sword drew it; by the forenoon the elephants moving about in the puddle had trampled everything into a paste; in the afternoon the dust like coral powder floated and filled the air. (1)

ஞாட்பினு ளெஞ்சிய ஞாலஞ்சேர் யானைக்கீழ்ப்
போர்ப்பி லிடிமுரசி னூடுபோ மொண்குருதி
கார்ப்பெயல் பெய்தபிற் செங்குளக் கோட்டுக்கீழ்
நீர்த்தூம்பு நீருமிழ்வ போன்ற புனனாட
னார்த்தம ரட்ட களத்து. (உ)

In the field of battle, where King Chola of the beautiful-eyes, Lord of the river-fed land of Chola-

mandala, raised the war-cry and slew his enemies, the blood of those that perished by the sword filled the war-drums and as the elephants went trampling up and down bubbled up like sluices in a tank of mud-brown water after heavy rain. (2)

ஒழுக்குங் குருதி யுழக்கித் தளர்வா
ரிழுக்குங் களிற்றுக் கோடூன்றி யெழுவர்
மழைக்குரன் மாமுரசின் மல்குநீர் நாடன்
பிழைத்தாரை யட்ட களத்து. (௩)

In the field of battle, where King Chola of the beautiful eyes, Lord of water-filled lands of Chola-mandala, he whose drum sounds loud as the thunder-clouds, slew his enemies, men wearied full as they struggled through the puddle of blood, but rose up with the help of elephants' tusks that lay plentifully on the ground. (3)

உருவக் கடுந்தேர் முருக்கிமற் றத்தேர்ப்
பரிதி சுமந்தெழுந்த யானை-யிருவிசும்பிற்
செல்சுடர் சேர்ந்த மலைபோன்ற செங்கண்மால்
புல்லாரை யட்ட களத்து. (௪)

Where King Chola of the beautiful eyes slew his enemies, the elephants breaking up the formidable chariots and rising up with the chariot wheels of their tusks seemed like mountains on whose peaks the sun rests awhile on his wide celestial course. (4)

தெரிகணை யெஃகந் திறந்தவா யெல்லாங்
குருதி படிந்துண்ட காக - முருவிழந்து
குக்கிற் புறத்த சிரல்வாய செங்கண்மா
றப்பியா ரட்ட களத்து. (௫)

Where King Chola of the beautiful eyes slew his enemies, the unerring arrows and spears opened up wounds streaming with so much blood that the crow that drank thereof changed appearance looking very much without like the brown-feathered crow pheasant and otherwise like the red-mouthed King Fisher. (5)

நாலுற் றிசையும் பிணம்பிறங்க யானை
யடுக்குபு வேற்றிக் கிடந்த விடித்துராறி
யங்கண் விசும்பி னுருமெறிந் தெங்கும்
பெருமலைத் தூறெறிந் தற்றே யருமணிப்
பூணேந் தெழின்மார் பியறிண்டேர்ச் செம்பியன்றெவ்
வேந்தரை யட்ட களத்து. (சு)

Where King Chola of the beautiful eyes on whose breast rest the costly jewels set with precious stones and who valiantly directs the great chariot slew the kings opposed to him, the corpses lay in all directions, the dead elephants lay piled up high. It was like the scattering of rocks by a thunder-storm from the wide heavens. (6)

அஞ்சனக் குன்றேய்க்கும் யானை யமருழக்கி
யிங்கு லிகக்குன்றே போற்றோன் றுஞ் - செங்கண்
வரிவரான் மீன்பிறழுங் காவிரி நாடன்
பொருநரை யட்ட களத்து. (எ)

Elephants that were as blue mountains looked as they waded through the slaughter of the battle field red like sand-stone Rocks in the field where King Chola of the beautiful eyes slew his opponents, he, the Lord of the land watered by the Cauveri that has red eyed, striped carp rolling therein. (7)

யானைமேல் யானை நெரிதர வானாது
கண்ணேர் கடுங்கணை மெய்ம்மாய்ப்ப - வெவ்வாயு
மெண்ணருங் குன்றிற் குரீஇயினம் போன்றவே
பண்ணு ரிடிமுரசிற் பாய்புன னீர்நாட
னண்ணாரை யட்ட களத்து. (அ)

Where the Lord of the fertile land, whose waters flow sounding like harmonious drums, slew his enemies, the elephants rushed against elephants so close that arrows flying all round seemed like countless birds that thronged about a mountain. (8)

மேலோரைக் கீழோர் குறுகிக் குறைத்திட்ட
காலார்சோ டற்ற கழற்கா லிருங்கட
லூணில் சுறபிறழ்வ போன்ற புனனுட
னேராரை யட்ட களத்து. (௯)

In the field of battle where the Lord of the water-fed land slew his enemies, the foot-soldiers nearing the cavalry men cut off their legs which with stirrup and shoes rolled about on the ground like blue sharks in the sea! (9)

பல்கணை யெவ்வாயும் பாய்தலிற் செல்கலா
தொல்கி யுயங்குங் களிறெல்லாந்-தொல்சிறப்பிற்
செவ்வலங் குன்றம்போற் றோன்றும் புனனுடன்
றெவ்வரை யட்ட களத்து. (ம)

In the field of battle where the Lord of the fertile land of Cholamandalam slew his enemies the many elephants weary and unable to move by reason of the many arrows that stuck in many parts of their body seemed like ancient mountains of red sand-stone. (10)

கழுமிய ஞாட்பினுண் மைந்திகந்தா ரிட்ட
வொழிமுரச மொண்குருதி யாடித்—தொழின்மடிந்து
கண்காணு யானை யுதைப்ப விழுமென
மங்குன் மழையி னதிரு மதிராப்போர்ச்
செங்கண்மா லட்ட களத்து. (கக)

In the flelds of battle where king Chola of the beautiful eyes unshaken by the Terrors of the war slew his enemies. the drums of those that fell in the crowded battle being filled with blood and having lost their proper fnnction sounded like the roar of rain-clouds when the elephants unaware trod on them. (11)

(தொடரும்)

கட்டுரைக் குறிப்புகள்

[திரு. காழி. சிவ. கண்ணுசாமி யவர்கள் B. A.]

"உள்ளத்தில் எழுந்த ஒரு கருத்தை ஏற்ற ஒலி வடிவிலோ வரி வடிவிலோ வெளியிடுதலே மொழியாகும்."* ஆதலால், மொழியை வழங்குதல் என்பது பேசும் வாய் உரைகளாலும் எழுதுங் கட்டுரை யெழுத்துக்களாலுமேயாம் என்பது எளிதில் தெளிந்து கொள்ளப்படும்.

இனி, "ஒவ்வொரு கருத்தையுந் திருத்தமாகவும் எளிதில் உணர்ந்துகொள்ளும்படியும் அதன் உண்மைப் பண்புகளெல்லாம் உள் அமைய வரையறுத்து மொழியப்படுவதே ஒரு மொழியின் முதன்மையான உண்மையாகும்."† வரையறுத்துக் கூறுதல் எளிதன்று. வரை யறுத்துக் கூறத் தொடங்கி ஒரு கருத்துப்பற்றி ஏடு ஏடாக எழுதி நிரப்பி உண்மையை விளங்கச் செய்வதுமட்டும் வரையறுப்பதாகாது. சில்வகை யெழுத்திற் பல்வகைப் பொருளைச் செவ்விதின் அமைத்து இனிது விளக்கித் திட்ப நுட்பந்தெரிய மொழிவதே வரையறுப்பதாகும். "அந்தணரென்போர் அறவோர்" "உழுவோர் உலகத்தார்க்கு ஆணி" என்னுந் திறமான மொழிகளை உற்று நோக்கி உளம் மகிழ்க.

"சொல்ல எண்ணிய ஒரு கருத்தை எண்ணியபடியே சொல்லுந் திறமைபெறுதல் எல்லார்க்கும் எளிதாய்விடுமோ? எல்லாரும் அங்ஙனம் ஆவதற்கு முயலுதலென்னவோ உண்மைதான். ஆயினும் ஐயம் திரிபு அற்ற தெளிவான வகையில் ஒரு கருத்தை வரையறுத்துச் சொல்லவோ அல்லது எழுதவோ ஆற்றல் வாய்ந்தவர் ஒரு தலை முறையில் எத்தனை பேர் இருத்தல் கூடும்!"‡ ஒரு தலை முறையைச் சேர்ந்தவரின் தொகைப் பெருக்கத்தையும் மேற்குறித்த ஆற்றல் வாய்ந்தவரின் தொகைச் சிறுமையையும் சீர் தூக்கிப் பார்த்தால், "கற்றது கை மண் அளவு கல்லாதது உலகு அளவு" என்னும் உவமை நினைவுக்கு வருகின்றது.

"மகன் என்று மதிக்கப்படுவதற்கும், உலகத்திற் பிறந்ததனால் ஆகும் பெரும் பயனை நுகர்வதற்கும் நினைத்தவுடன் எழுந்து செம்மையாகவும் இலக்கு பிழையாமலும் பேச வல்ல ஆற்றலாகிய ஒரு கருவியைத் தவிர வேறு சிறந்த கருவிகளை

*ஜோவலிப் ஆங்கஸ். †பலிபெண்டார்லிப். ‡"நண்பர் குழாம்"

யாம் கண்டதில்லை"* போக்கு வரவு வசதிகளும் நாளிதழ் திங்களிதழ் முதலிய அச்சு வசதிகளும் குறைந்தும் அருகியும் இருந்த காலங்களில் நமது நாட்டின் அருந்தமிழ்ப் புலவர்க்கு நற் பெயர் அளித்து "வலவன் ஏவா வான ஊர்தி" பெற உதவியது சொல் வன்மையே யல்லாமல் வேறு என்ன சொல்லுமின்கள்!

"கருத்துகளைச் சுருக்கமாகவும், விளக்கமாகவும், தெளிவாகவும், பொருள் வலிவும் ஓசை யழகும் ஒருங்கே இணையுமாறுந் தேர்ந்த நன் மொழிகளால் இனிது அமைத்து வழங்குதலே ஒரு மொழியின் சீரிய பண்பாகும். திட்ப நுட்பஞ் செறித்தும் ஆனல் மிடுக்கும் பகட்டும் அல்லாமலும், பல்வகைப் பொருள்களைச் சில்வகைச் சொற்களிற் சிறந்து விளங்கச் செய்தும் ஆனல் குன்றக் கூறல் மயங்க வைத்தல் என்னுங் குற்றங்களுக்கு உட்படாமலும், செம்போக்காகவும் எளிதாகவும் ஆனல் மிகைபடக் கூருமலும் வழூஉச் சொற் புணர்த்தாமலும் பயில்விப்பதே சீரிய மொழிப் பண்பாகும்"† இப் பண்புதானும் வாயுரைகளினுங் கட்டுரைகளிலேயே சிறந்து நின்று நிலவும்.

எனவே பேசுவது எழுதுவது என்ற இரண்டிற் பின்னதே சிறப்புடையது என்பது போதரும். (இதனல் முன்னையதற்கு எய்திய இழுக்குப் பெரிதில்லை.) "கட்டுரை எழுதத் தொடங்கும் ஒவ்வொருவனும், விரைவில் உள்ளத்தில் தோன்றுகின்ற கருத்தாலும், அக் கருத்துகளின் செறிவாலும் பெரிய சொற்றொடர்களையும், ஏராளமான எச்சத் தொடர்களையும் ஒரு வரையறையின்றித் தொடுத்துக் கருத்துக்களை விளக்க முயல்வதே இயல்பாக அமைந்துள்ளது என்பதற்கும் இவ் வியற்கை நிலையை எதிர்த்து நின்று, ஒரு முறையாகவும் இன்னேசை யொலிக்கும் சிறிதும் பெரிதுமான சொற்றொடர்கள் அழகாகவும் விரவிவரச் சீர்தூக்கி வரைதல் எவ்வளவு அருமையான திறமையுந் தேர்ச்சியுமாகும் என்பதை நினைத்துப் பாருமின்கள்!‡

"நல்லிசைப் புலவர்களால் இயற்றப்பட்ட நூல்களைக் கற்றும், திறம்படக் கூறும் சொல்வன்மை யுள்ளவர்களின் உரைகளைக் கேட்டும் பன்முறை எழுதி எழுதிப் பழகியும் வந்தால் மட்டுமே ஒருவன் நயம்பட எழுத வல்லவனாவான்"¶

---

*பேராசிரியர் லாக்.
† ஆர்ம்ஸ்ட்ராங்
‡ டிக்வின்ஸி
¶ பென்ஜான்ஸன்.

"அறிவினல் அடைவது அரிய பெரிய உயர்ந்த கருத்துக்களைக் கருதும் வல்லமையாகும்: கருவிலேயே அமைவது அரிய சொற்பொழிவுகள் செய்யுந் திறம்; கருத்து நுணுகிக் கற்பதனல் தெளியப்பெறுவது மெய்யுணர்வு: பழக்கத்தால் வாய்வது எற்ப எழுதும் ஆற்றலாகும்.*

"ஒவ்வொரு கலையும் பழக்கத்தால் இயற்கையாக மாறின லல்லாமல், கலையினல் இயற்கை கவின் பெறுதலென்பது இல்லை."†

தெளிவான நடையில் உயர்ந்த கருத்துகளை இனிதாக்கியமைத்துக் கட்டுரைகள் எழுதிப் பழகப் பழக, அங்ஙனம் எழுதுவோர் உள்ளம் அக் கட்டுரைக் கருத்துகளால் ஊடுருவப் பெற்று நினைவழுந்தி அவற்றின் வயமாய்மாறித் தெளிவும் உரமும் அடைகின்றது. உயர்ந்த கருத்துகளில் உள்ளம் பற்றப்பற்ற, அங்ஙனம் பற்றப்பெற்ற மலநிலைகளுக்கு அறிவு கலங்குங் கோழைகளாயிராமல், மற்று அதற்கு அறிவு நிலை கலங்காத் துறவோராய் விளங்குவர்.


கல்வி

"மன நிலையினையும் உடம்பின் நிலையினையும் ஒழுங்குசெய்து கொண்ட பின்னர் வேறு நினைக்கத் தருவது யாதெனின்; கல்வியிற் சிறக்க வேண்டுமென்பதேயாம். கல்வியானது அறிவை விளக்கி அறியாமையினைப் போக்குவது. இந்த உடம்போடு கூடிப் பிறவியெடுத்தது எதன் பொருட்டென்று ஆராய்ந்து பார்த்தால், இவ்வுடம்பின் வாயிலாக அறிவை விளக்கி இன்பத்தைப் பெறுதற்கேயாமென்பது புலப்படுகின்றது. அறிவை விளக்கிக் கொள்ளாவிட்டால் இவ்வுடம்பினுற் பெற்ற பயன் சிறிதும் இன்றும். கைவருந்தி மெய்வருந்தி மனம் புழுங்கி அல்லும் பகலும் உழன்று தேடித் தொகுத்த பொருளும் மனையும் நிலமுங் கூட வரப்போகிறதில்லை. அறிவும் அறிவோடு கூடித் தோன்றும் இன்பமுமே உயிரைவிட்டுப் பிரியாமல் அதனேடு எங்கும் ஏகும். ஆகையால் அத்தனைச் சிறந்த அறிவை மேன்மேல் விளங்கச் செய்யும் கல்வியைக் கற்றலில் நினைவை நிலைபெறச் செய்தல் வேண்டும். கற்ற கல்விப் பொருள் நினைவை விட்டு அகலா திருக்கும்படி நினைவை வலிபெறச் செய்தல் வேண்டும்."

—மனித வசியம்.

---

* "நினைவு நூல்." † "உண்மையுசாதல்"



சிவஞானபோதக் கருத்து

[திரு. மா. வே நெல்லையப்ப பிள்ளை, பி. ஏ.]

(முன் உஎக-ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆறும் அதிகரணம்

25. பிரமப்பொருளாகிய முதல்வன், முன்னைய அதிகரணங்களிற் கூறிப்போந்த கருவிகளாகிய உயிரில்பொருள்கள் போலன்றி அறிவுப் பொருளாகலான், அதுவே ஆன்மா ஆதலையும் என்று விஞ்ஞானான்மவாதி கூறும் கொள்கையை மறுத்தற்கெழுந்தது இவ்வதிகரணம் மேற்கோள். அம்மேற்கோள் "இனி உணர்த்த உணர்தலின் ஆன்மா உளது" என்பது.

26. மேற்கோளின் பொருள்விளக்கம். உணர்த்த = அறிவிக்க; உணர்தல் — அறிதல். உணர்த்த உணர்தல் என்ற ஏதுவினால் உணர்த்துதற்கு முன் உணராது என்ற கருத்தும் அதனுள் அடங்கும். முன்னர்க் கூறியபடி ஆன்மாவின் இலக்கணம் அறிதல்:—பிரமப்பொருளும் அறிவுப்பொருள். ஆன்மாவும் பிரமப்பொருளும் அறியுந்தன்மையால் ஒரு சாதிப்பொருள்களாயினும் இருவகை அறிவுப் பொருள்களுக்கும் பெரிதும் வேறுபாடு உளது. சகல கேவல நிலையானது ஆன்மா கருவிகளோடுங் கூடாது தனித்து நிற்கிற துரியாதீத நிலையாகும். இந்தத் துரியாதீத நிலையில் கருவிகள் ஒன்றுமில்லாமையால் ஆன்மா அறியாது. கருவிகளோடுங்கூடிய சகலத்திற் சகல நிலையினும் ஆன்மா வேதாகமங்கள் முதலிய அறிவுக்கலைகளை ஓதியும், கற்றுக் கேட்டுத் தெளிந்த ஆசிரியரிடம் கேட்டும் அறிகின்றது. பிரமப்பொருளோ எப்பொழுதும் ஒருதன்மைத்தாய்க் கருவிகளின் துணையின்றித் தானே அறிந்தவாறே அறியும். ஆன்மா இவ்வாறு கருவிகளோடு கூடாதபொழுது அறியாமலும், கருவிகளோடு கூடிய வழியும் கலைகளும் ஆசிரியரும் அறிவிக்க அறிந்தும் வருதலால் பிரமப் பொருளே ஆன்மா என்று கூறுதல் பொருந்தது. ஆதலால்

பிரமப் பொருளுக்கு வேருய் ஆன்மா என்னும் அறிவுப் பொருள் உண்டு.

27. ஆசிரியர் கூறிய அறிவுரையைக் கேட்டு விஞ்ஞானன்மவாதி அடியிற்கண்ட தடை உரை (ஆக்ஷேபனை) கூறுகின்றான். அறிந்தவாறே ஒருதன்மைத்தாய் அறிகின்ற பிரமப்பொருள் உயிரினுலகமாய் அதனோடு கலந்து கட்டுண்ட அவிச்சைகாலத்துக் கலைமுதலாகிய தத்துவக் கருவிகளோடுங் கூடி விடயங்களை அறியும் என்பதனை நான் ஒப்புக் கொள்கின்றேன். அவ்வாறு கூறுதலினால் பிரமப்பொருள் ஆன்மா அல்ல என்றல் பொருந்தாது. பிரமப் பொருளே ஆன்மா.

28. விஞ்ஞானன்மவாதி கூறிய தடை உரையை ஆசிரியர் கேட்டுக்கூறும் மறுப்புரையாவது:—நீ உன் கொள்கையை நிலைநாட்டுதற் பொருட்டு வேறுவழியின்றி, 'என்றும் ஒரு தன்மைத்தான நிலையிலிருக்கிற பிரமப்பொருளாகிய முதல்வன் உலகப் பொருளோடு கூடிய அறியாமைக் காலத்துக் கருவிகளோடுங்கூடி யல்லாமல் விடயங்களை அறியாது' எனக் கூறினாய். அளவை முறைமை (Logical Process) தப்பாது நீ கூறியதனை நாம் அம்மட்டில் மகிழ்ந்து உடம்படுகின்றோம். ஆனால் இவ்வாறு பிரமப் பொருளாகிய முதல்வன் கருவிகளோடு கூடி அன்றி விடயங்களை அறியாது எனக் கூறினாலும் உன் கருத்து நிரம்புமாறில்லை. ஆன்மா கருவிகளோடு கூடி அறிந்தாலும் உலக விடயங்களை அறியுமேயன்றி அறியாமையினின்று நீங்காது; தன்னியல்பினையும் அறியமாட்டாது. தன்னியல்பினை அறியாத ஆன்மா அம்முதல்வன் மறந்து மறந்து அறிதலின்றி அறிந்தவாறே அறிந்து நிற்கும் பேரறிவுடையன் என்ற உண்மையையும் அறியாது. இவ்வுண்மையை அறிந்தாலன்றி ஆன்மா தவமுயன்று உலகவாழ்வின் பயனை அடையமாட்டாது. இவ்வுண்மையை அறிதற்கு ஆன்மா வேதாகமங்கள் முதலிய அறிவுக்கலைகளை ஓதுதலும், முன் அக்கலைகளை ஓதிக் கேட்டுத் தெளிந்த குரவனால் அறிவுறுக்கப்படுதலும் வேண்டப்படுவன. ஆதலால், நீ கூறிய பிரமப்பொருள்வேறு, ஆன்மாவேறு; பிரமப் பொருளே ஆன்மாவாக மாட்டாது.

29. ஆசிரியர் கூறிய மறுப்புரையை விஞ்ஞானன்மவாதி கேட்டு மீளவும் கூறுகின்றான்:—பிரமப் பொருளானது கருவிகளோடு கூடி அறியும் வழியும் அறியாமை நீங்காமையால் தன்னியல்பினைக் குரவனால் அறிவுறுக்கப்பட்டு அறியும் என்பதனை நானும் ஒப்புக்கொள்கின்றேன். அதுபற்றிப் பிரமப்பொருள் ஆன்மா என்பதற்கு இழுக்கு என்ன இருக்கின்றது?

30. விஞ்ஞானன்மவாதி கூறியதனை ஆசிரியர் கேட்டு உடம்பட்டுப் பிரமப்பொருள் ஆன்மா ஆகாது என்பதற்கு ஒரு சிறந்த ஏது, எடுத்துக்காட்டு வெண்பாவிற் கூறப்பட்ட படி கூறுகின்றார்:—ஆன்மா கருவிகளோடுங் கூடி விடயங்களை மாத்திரம் அறிந்து தன்னியல்பினை அறியாமலிருத்தலோடு தான் கனவிடத்தினின்று அறிகிற விடயங்களையும் ஒருங்கே நன்கு அறியமாட்டாது. அது ஒரு விடயத்தினை அறிந்தும், அதனை அறியுங்காலத்துப் பிறிதொரு விடயத்தை அறியப் புகுந்தும், முன்னறிந்த விடயமொன்றனை அறியாது விட்டொழிந்தும் இங்ஙனம் ஒரோவொன்றாக அறிகிற விடயங்களையும் தொடர்ச்சியாக அறியாது ஐந்து அவத்தையுட்பட்டு விட்டுவிட்டறிந்தும் வருகிறது. ஆன்மா ஐந்தவத்தையுட்பட்டு விடயங்களை அறிதல் நான்காவது சூத்திரத்தில் விரிவாய்க் கூறப்படும். ஆன்மா இவ்வளவு குறைபாடுகளை உடையதாய் உலகவிடயங்களை அறிதற்கு ஏது யாதெனின் அது ஒன்றனைச் சார்தலும், சார்ந்தவண்ண மாதலுமாகிய இயல்பினை உடையது. ஆன்மா எந்தப் பொருளைச் சார்ந்தாலும் அதுவதுவாய் அறியும். அது உலகத்தைச் சார்ந்து உலகமயமாயும், முதல்வனைச்சார்ந்து முதல்வன் மயமாயும் அறியும் இயல்பினை உடையது. இந்த ஏதுவினால் மேலே கூறியபடி பல குறைபாடுகளை உடைய ஆன்மா அக்குறைபாடுகளொன்றுமில்லாத நிறைவறிவுடைய முதல்வனொருவனைச் சார்ந்தன்றித் தன் இயல்பினையும் அறியமாட்டாது. இக்குறைபாடுகளை உடைய ஆன்மா பேரறிவுப் பிரமப்பொருளாகிய முதல்வனைச் சார்ந்தாலன்றி உலக வாழ்வில் அடையப்பெறும் பயனை அடையமாட்டாது. பிரமப் பொருளே ஆன்மாவாயிருப்பின் ஆன்மாவுக்கு இந்தத் துன்ப உலக வாழ்க்கை எதற்காக வருதல் வேண்டும்? என்றும் திரிபின்றி ஒருதன்மைத்தான இயல்புள்ள பேரறிவுப் பிரமப்பொருள் நீ கூறுகிற மாறுதல்களை அடைந்து அறியாமை வயப்படும் என்று கூறுதல் சிறிதும் பொருந்தாது. அவ்வாறு மாறுதல் அடைதற்கு யாதொரு காரணமுமில்லை. ஆதலின் நீ கூறுகிறபடி பிரமப்பொருள் ஆன்மா ஆகாது; பிரமப் பொருள் வேறு; ஆன்மா வேறு என்று அறிவாயாக. இதனால் நாம் கூறிய மேற்கோளில் மேற்கொண்ட ஆன்மா உளது என்பது பெறப்பட்டது. இங்கே ஆசிரியர் ஆணவமல உண்மை முதலிய பல ஏதுக்களைக் கூறவில்லை. ஆசிரியர் முதலதிகரணம் எடுத்துக்காட்டு வெண்பாவில் தோற்றுவாயாகக் கூறிய தற்பரமும் நீயல்லை என்பதனை இவ் வதிகரணத்தில் வற்புறுத்திக் கூறி நிலை நாட்டினர்.

(தொடரும்)

அறிவியற் பகுதி - Science

உளநூல் (Psychology)

[திரு. மா. பாலசுப்பிரமணியம், எம். ஏ.]

(உஎஅ-ஆம் பக்கத் தொடர்ச்சி)

தன்மையியல் (Personality)

அறிதுயில் வன்மையில் பலதிறப்படும் என்பது முன்னரே கூறினோம். மேற்கூறப்பட்ட நிகழ்ச்சிகள் யாவும் வன்மையுள்ள ஆழ்ந்த அறிதுயிலில் மட்டே நிகழ்வன. மெல்லிய அறிதுயிலில் இயக்குநனால் ஆற்றத் தகுந்தது நோய் நீக்கங் கருதிய எண்ண ஏற்றங்களைத் தோற்றுவித்தலேயாம். பேரச்சத்தால் விளைந்த பேய் வலிப்பு, (Hysterical Paralysis) எதிர் பாராத கொடிய நிகழ்ச்சியைக் கண்டதனால் நேர்ந்த கண்குருடு முதலிய நோய்களை அறிதுயில் சார் எண்ண ஏற்றத்தினால் நீக்குவது தேர்ந்த அறிதுயிலியக்குநரால் இயல்வதொன்றே. முதற்கண் நோயாளியை அறிதுயிற் படுத்தி அவனது பழைய நுகர்ச்சிகளை யெல்லாம் நினைவு படுத்திக் கூறுமாறு ஏவி, அவன் கூறும் அவ்வுண்மைகளை ஆராய்ந்து, அதனால் நோய்ச் சார்புகளைத் தெளிந்து அச்சார்புகளை அறவே யொழிக்கும் புது எண்ணங்களை ஏற்பானுளத்தே வன்மையுடன் பலகால் ஏற்றினால் சிறிது சிறிதாக அவனது நோயைத் தவிர்த்தல் கூடும். இஃது உளமருத்துவர் (Psychotherapists) பழகி அறிந்து கூறிய உண்மை. எனினும், சில உளமருத்துவர் இம்முறையால் ஆழ்ந்த நன்மை ஏற்படுவதில்லை எனக் கூறுகின்றனர். நோயின் முதற் சார்பை இம்முறையால் அறிந்து ஒழிக்க இயலாது என அவர் கருதுகின்றனர்.

3. தற்செய் எண்ண ஏற்றம்

ஒருவன் ஓர் உயர்ந்த இடத்திலிருந்து கீழே விழுந்து விடுகிறான். விழுந்த அதிர்ச்சியால் அவனுடைய கால்கள் அசைக்க முடியாத நிலையில் இருக்கின்றன. இதைக்கண்டஅவன் "இனி இக்கால்கள் பயன்படா போலும்" என எண்ணுகின்றான். இவ்வெண்ணம் இடையறாது பலகால் எழுமாற்றால் அவனுடைய கால்கள் உண்மையாகவே பயன்படா நிலையை அடைகின்றன. தானாகவே செய்து கொண்ட (தற்செய்) எண்ண ஏற்றத்தால் அவன் நிங்கெய்தி நின்றான்.

ஒரு பள்ளி மாணவன் தன் பாடங்களை யெல்லாம் நன்கு கற்றுத் தேர்வுக்குச் (Examination) செல்கின்றான். போகூழ் இருந்தவாறு அவன் தேர்வில் தவறிவிடுகின்றான். அடுத்த முறையும் நன்கு தன் பாடங்களை யெல்லாம் ஓதித் தேர்வுக்குச் செல்கின்றான்: மீண்டும் தவறிவிடுகின்றான். எனவே, அவனுளத்தில் "இனி எத்துணை முயன்று பாடமோதி னும் நாம் தேர்வில் தேர்ச்சியுறுதல் இயலாது போலும்" என் னும் எண்ணம் ஏற்றமெய்துகின்றது. இறுதியில் அவன் தேர்ச்சியுறாமலே ஒழிகின்றான். தற்செய் எண்ண ஏற்றத் தால் அவன் தீங்குறுகின்றான். தற்செய் எண்ண ஏற்றத்தால் நன்மைப் பேறும் உண்டாம். "இம்முறை முயன்றால் இவ் வினையைச் செய்தே தீர்வோம்" என்னும் எண்ண ஏற்றம் பல கால் இடை யறாது நிகழுமாயின், எவ்வினையும் நன்கு ஆற் றப்படும். இவ்வுண்மையினையே ஆசிரியர் திருவள்ளுவர்,

> வினைத்திட்ப மென்ப தொருவன் மனத்திட்பம்
> மற்றைய வெல்லாம் பிற.

என்னும் குறளில் விதந்தோதினார். இக்கால உள நூல் முறை யில் தற்செய் எண்ண ஏற்றம் எனப்படுவது பண்டைத் தமி ழான்றோர் கூறியுள்ள மனத்திட்பத்தின் ஒரு படிமுறையே யாம். இதனைத் திருவள்ளுவனார் 'திண்ணிய எண்ணமுடை மை' என வேண்டுவர் போலும்; அன்றேல் 'எண்ணத் திட்ப முடைமை' என வேண்டுவர் போலும்.

> எண்ணிய வெண்ணியாங் கெய்துப வெண்ணியார்
> திண்ணிய ராகப் பெறின்.

என்னும் குறளை நன்கு ஆராய்வார்க்கு இது புலனாம்.

4. எதிர் எண்ண ஏற்றம்

மாந்தருட் சிலர் விலக்கியனவே செய்தலில் விழை வுடையராக இருக்கின்றனர். இத்தகையவருள் ஒருவன் தன் நண்பன் ஒருவனால் 'இவ்வினை இன்னமுறையாற்றான் செய் தற் பாற்று' எனக் கூறப்படுவானாயின், அம்முறைக்கு நேர் மாறான முறையிலேயே அவ்வினையை ஆற்ற முயல்வன். அவன் தன் நண்பன் வாய்மொழியைக் கேளாதிருப்பின் அவ்வினையை நேர்முறையாற்றான் செய்திருப்பன். நண்ப னது வாய்மொழியைக் கேட்டவுடன் அவனுளத்தில் 'இவன் கூறும் முறைக்கு மாறான முறையால் இவ்வினையை ஆற்ற இயலாதோ? காண்பாம்!" என ஒரு முரண்பட்ட விழைவு தோற்ற முறுகின்றது. "வேண்டாம் என்பதை வேண்டும்

எனச் செய்கின்றவன் இவன்'' என்னும் பொதுமாற்றம் உலகியலில் வழங்க நாம் காண்கிறோம். இது மேற்கூறப்பட்ட உண்மையினையே புலப்படுத்துகின்றது. நிற்க.

இன்ன தகையவரது இன்ன தன்மை யமைவின்மையை அமைவு படுத்தற்கு உளநூற் புலவர்கள் கண்டறிந்த ஒரு முறையே எதிர் எண்ண ஏற்றம் என்பது. இதனை ஓர் எடுத்துக் காட்டான் விளக்குவாம். ஒருவன் சிலருடன் இணக்கங் கொள்ளும் தருவாயில் இருக்கின்றான். அச்சிலரோ மிகவும் தீய ஒழுக்கத்தினர். இதனை அறிந்த அவ்வொருவனின் நண்பன் அவனைக் காக்க விரும்புகின்றான். வேண்டாம் என்பதை வேண்டும் எனச் செய்யும் தன்மை அவனுக்குண்டு என்பதை அந்நண்பன் அறிந்திருக்கிறான். எனவே அந்நண்பன் அவனை நண்ணிப் பலகால் "அவருடன் இணக்கங் கொண்டால் உனக்கு நன்மையுண்டு'' என எதிர் எண்ண ஏற்றம் புரிகின்றான். பலகாலும் இம் மொழியைக் கேட்ட முன்னவன் "அவர் இணக்கம் இன்றேல் நன்மை உளதாகாதோ? காண்பாம்!'' எனத் தனதுள்ளத்துள் பன்முறையும் கருதத் தொடங்கி இறுதியில் அத்தீய ஒழுக்கத்தினருடன் இணக்கங் கொள்ளாது ஒழிகின்றான். தாய்தந்தையர் மொழியை மீறும் குழவிகளைச் சீர்படுத்தற்கும் இவ் எதிர் எண்ண ஏற்றம் மிகவும் பயன்படுகின்றது.

5. உள ஆராய்வு

உள ஆராய்வு எனத் தமிழ்மொழியிலும் ஸைகோ அனலிஸிஸ் என ஆங்கிலத்திலும் கூறப்படும் உள மருத்துவ முறையை மேனாட்டில் முதன் முதல் கண்டவர் ஃப்ரூஃட் (Freud) என்பவர். இவர் காட்டிய வழியில் உழைத்தவர்களுள் சிறந்தவர் ஜங் (Jung), ஜேனட் (Janet), ஆஃட்லர் (Adler) என்பவர். எர்னஸ்ட் ஜோன்ஸ் (Ernest Jones), மாரிஸ் நிகால் (Maurice Nicoll), கான்ஸ்டன்ஸ் லாங் (Constonice Long) முதலிய சிலரும் ஃப்ரூஃட் ஆசிரியரைப் பெரும்பாலும் பின் பற்றினவர்களே. நிற்க.

உள ஆராய்வுக் கொள்கை தோன்றின காலந் தொட்டு இதுகாறும் அது வளர்ந்த வரலாற்றைக் கூறுவதெனின் அஃது ஒரு தனி நூலுக்குரிய பொருளாம். மிக மிகச் சுருங்கிய அளவில் அது சார்ந்த சில உண்மைகளை ஈண்டு மொழிவாம். ஒருவனது தன்மைச் சிதைவினை ஒழித்து அவனுக்கு உளநல்லாக்கத்தைத் தோற்றுவித்தற்கு முதன்முதல் செயற்பாலது அன்னவனுக்கு அத்தன்மைச்

சிதைவு நேர்ந்ததன் சார்புகளை அறிதலாம். அச்சார்புகளை அறிதற்கு ஏற்ற வழி அவனது உள்ளத்திருந்து பழைய நினைவுகளை யெல்லாம் மீண்டும் உணர்வு வட்டத்திற்குக் (Circle of Consciousness) கொணர்தலேயாம். உள்ளத்தின் கண் புதைந்துள்ள பழைய நினைவுகளை யெல்லாம் மீண்டும் புறப்படுத்தற்கு ஃப்ரூஃட் ஆசிரியர் மேற்கொண்ட வழி ஃப்ரீ அஸோஸியேஷன் மெதேஅட் (Free Association Method) எனப்படும். இது தமிழில் பிணையிலா இன நினைவு முறை எனப்படும். ஐங் என்பார் கையாண்ட முறை வேர்ஃட் அஸோஸியேஷன் மெதேஅட் (Word Association Method) எனப்படும். இது தமிழில் சொல் இனநினைவு முறை எனப் படும்.

(தொடரும்)

ஞாலநூல் (Geology)

[திரு. S. நடராஜன், B. A.]

(முன் உஎ௪-ஆம் பக்கத் தொடர்ச்சி)

1. முதல் அதிகாரம்

விண்ணகம்— கோள்கள்— சிறுகோளங்கள்—ஞாயிறு— ஞாலத்தின்மேற்றோடு— உள் அமைப்பு— உட் கூடு— உட் பகுதிகளின் அடுக்குவகை— ஞாலஉற்பத்தி.

1. தொலைநோக்காடி (Telescope) கொண்டு விண்ணைத் துருவி நோக்குங்கால் எண்ணில் பலகோடி ஞாயிறுகளையும், விண்மீன் குழாங்களையும் காண்கின்றோம். ஆகாய வெளியில் உள்ள அண்டங்களின் தொகை கணக்கிடுவதற்கரிதாய் விரிந்து கிடக்கின்றது, "* அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம், அளப்பருந் தன்மை வளப்பெருங் காட்சி, ஒன்றனுக்கொன்று நின்றெழில் பகரின் நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன." இப்பல்கோடி ஞாயிறுகளும், அவற்றைச்சுற்றும் கோள்களும், சிறுகோளங்களும் அகண்டாகாரப் பெருவெளியில் நிலவி வருகின்றன. ஒரு ஞாயிற்றையும் அதைச்சுற்றும் கோள்களையும் சிறு கோளங்களையும் ஓர் அண்டம் அல்லது ஞாயிற்றின் விண்வட்டம் (Solar System) எனலாம்.

* திருவாசகம் திருவண்டப் பகுதி.

2. ஞாயிற்றின் விண்வட்டத்துள்ள கோள்களில் நாம் வசிக்கும் ஞாலமும் ஒன்று. ஞாயிற்றை நடுவில் வைத்துப் பிற கோள்களும் அக்கோள்களைச் சுற்றும் சில கோளங்களும் அதைச்சுற்றி வருகின்றன. இக்கோள்கள் எல்லாம் ஆகாய வெளியில் ஒரேமட்டத்தில் இருக்கின்றன. இவை எல்லாம் ஒரேமுகமாய்த் தம்மைத்தாமேசுற்றிக்கொண்டு ஞாயிற்றையும் சுற்றி வருகின்றன. ஞாயிற்றின் விண்வட்டத்தில் உள்ள கோள்கள் எட்டு. அவைகளில் புதன், சுக்கிரன், ஞாலம், செவ்வாய், என்னும் நான்கு கோள்களும் உட்கோள்களாம். வியாழன், சனி, யுரேனஸ், நெப்தியூன் என்னும் நான்கு கோள்களும் வெளிக் கோள்களாம். உட்கோள்கள் ஒன்றை யொன்று ஒப்பிட்டு நோக்குமிடத்துச் சிறியவையாயும், செறிவுள்ளதாயும் (Density) இருக்கின்றன. புதன் பிற கோள்களைக் காட்டிலும் சிறியது. செவ்வாய் புதனிலும் பெரியது. சுக்கிரனும் ஞாலமும் ஏறக்குறைய ஒரே குறுக்களவு உள்ளவை; புதனைக் காட்டிலும் பெரியவை. வெளிக்கோள்கள் பெரியவையாய் இருக்கின்றன வெனினும் அவைகளின் திண்மை மிகக் குறைவா யிருக்கின்றது. அவை ஆவிவடிவுள்ளவையாயிருக்கலாம் எனக் கருதுகின்றனர். சனியின் திண்மை தண்ணீரைக் காட்டிலும் இலேசாக இருக்கின்றது. இவ்வெண்கோள்களைத் தவிர இவைகளின் இடையிடையே பல சிறு கோள்களின் கூட்டங்கள் உள. இவைகளைச்சிறு கோள்கள் எனலாம். இச்சிறு கோள்கள் சுமார் 15 கல் முதல் 400 கல் வரையுள்ள குறுக்களவு உள்ளவைகளாய் இருக்கின்றன. இவைகளில் இஞ்ஞான்று 600 சிறு கோள்களைக் கண்டு பிடித்துள்ளனர். நெப்தியூனுக்கு அப்பால் ஒரு சிறு கோளைக் கண்டுள்ளனர். இதற்கு நெப்தியூனியன் புளுட்டோ (Trans-Neptunian puluto) எனப் பெயரிட்டிருக்கின்றனர்.

3. புதனையும், சுக்கிரனையும் தவிர ஏனையகோள்களுக்குத் தங்களைச் சுற்றும் சிறு கோளங்கள் உள. ஞாலத்தைச் சுற்றும் சிறு கோளைச் சந்திரன் என்கின்றோம். செவ்வாய்க்கு இருசிறு கோளங்களும், வியாழனுக்கு எட்டும், சனிக்கு ஒன்பதும், யுரேனசுக்கு நாலும், நெப்தியூனுக்கு இரண்டும் உண்டு. சிறு கோளங்களில் சந்திரன்தான் அவை சுற்றும்கோள்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் இடத்துப் பெரியதாம். சனிக்கு ஒன்பது சிறு கோளங்கள் இருப்பதுடன், ஒரேமையமுள்ள இருவட்டங்கள் (Two concentric rings) உள. இவை தொலைநோக்காடி கொண்டு நோக்குங்கால் மிக்க வியப்பை விளைவிக்கின்றனவாம். கோள்கள் சுற்றும்

வட்டங்கள் சரியான வட்டமல்ல. கோழி முட்டையின் வடிவத்தை ஒப்ப நீண்ட வட்டவடிவமா யிருக்கின்றன. ஞாலமானது தனது அச்சில் 23½ பாகை (Degree) சரிந்து இருக்கிறது. இவ்வாறு சரிந்து இருப்பதுதான் காலநிலைமாறுபாட்டிற்குக் (Change of Seasons) காரணமாம். வடகோட்டு, தென் கோட்டுப் பனிமண்டலங்களின் நடுப்பகுதி ஒரு புள்ளியன்று, 30 அடி குறுக்களவுள்ள ஒரு வட்டப்பரப்பாம். ஞாலத்தின் தோற்றத்திலிருந்து இதன்சரிவும் பனிமண்டலங்களும் மாறி இருந்திராவெனவும், தொன்று தொட்டு இதுகாலைஇருப்பது போலவே இருந்திருக்கவேண்டும் என்றும் ஒளிநூல்வல்லார் கருதுகின்றனர், இதைப்பற்றிய கருத்து மாறுபாடுகள் உண்டு. பனிமண்டலங்களும் சரிவும் மாறியிருந் திருத்தல் வேண்டும் என ஒருசாரார் கருது கின்றனர்.

4. ஞாயிற்றின் விண்வட்டத்தின் நடுவிலிருக்கும் ஞாயிறு மற்றக்கோள்களைக் காட்டிலும் பெரியது. பிறஎல்லாக் கோள்களின் காட்டிலும் பெரியது. பிறஎல்லாக்கோள்களின் சுற்றளவைக்கூட்டிப் பார்த்ாலும் அவைகளைவிட ஞாயிற்றின் சுற்றளவுதான் மிகப்பெரியதாம். ஞாயிறு கடுஞ்சூடுள்ள அனற்பிழம்பாய் இருக்கின்றது. அதன் திண்மை குறைவாய் இருக்கிறது. ஞாலத்தில் வாழும் மரம், செடி, கொடி, உயிர்களின் வாழ்விற்கு ஞாயிற்றின் வெப்பமும் வெளிச்சமும் இன்றியமையாதிருப்பதுடன் உலகில் உண்டாகும் ஞால மாறுதல்களுக்கும் ஞாயிறே காரணமாம். இதைப் பின்னர் விரிப்பாம்.

5. ஞாலம் பனிமண்டலத்தில் தட்டையாய் இருக்கிறது. ஏறக்குறைய ஆரஞ்சுப்பழம் போன்ற வடிவுள்ளது. இதன் மேற்பரப்பு, மலை, பள்ளத்தாக்கு, வயல் முதலியவைகளால் நம் பார்வைக்குக் கரடுமுரடாய்க் காணப்பட்டாலும் உண்மையில் இஃது ஆரஞ்சுப்பழத்தின் தோடுபோல் வழுவழுப்பாயே இருக்கின்றது. நாம் உலகின் ஒரு சிறுபாகத்தைக் காண்கின்றோம். ஆதலால் நம்கண்ணிற்கு உலகின் முழுத்தன்மை புலப்படாது.

6. மண்கம்ப அலைகளினின்றும் (Earthquake waves) ஞாலத்தின் உள், புறஅமைப்பைப்பற்றி அதிகம் அறிந்து கொண்டிருக்கிறோம். ஞாலத்தின் மேற்பகுதி உருக்கிய இரும்பு போல் கடினமாயும் நெகிழ்ந்து உறழத்தக்கதாயும் இருக்கிறதென்று தெரிகிறது. திங்கள் எவ்வாறு கடலில் கொந்தளிப்புகளை உண்டாக்கி நீரைப் பெருக்கி மேலே இழுக்கிறதோ,

அதேபோல் திண்மையான நிலப்பகுதியைத் திங்களும் ஞாயிறும் மேலும் கீழும் இழுக்கின்றன. நிலப்பகுதி திண்மையாய் இருப்பதாலும், இழுப்புக் குறைவாய் இருப்பதாலும், நம் புலன்களுக்குத் தெரிவதில்லை. மேற்பரப்பு ஒவ்வொரு நாளும் இருமுறை 6 முதல் 8 அங்குலம்வரை மேலும் கீழும் இழுக்கப் படுகிறது. பூமியின் உரியகனம் (Specific gravity) 5·52. அதாவது ஞாலத்தின், பருமனுள்ள ஒரு தண்ணீர்க் கோளத்தைக் காட்டிலும் ஞாலத்தின் கனம் 5½ மடங்கு அதிகம்*. மேற் பரப்பில் காணப்படுபவைகளைக் காட்டிலும் ஞாலத்தின் உட்பாகம் அதிக கனமாய் இருத்தல் வேண்டும்; ஏன் எனில், மேற்பரப்பில் கிடைக்கக் கூடிய பாறையின் திண்மை (உரியகனம்) 3 தான். தண்ணீரைக் காட்டிலும் பாறை ஏறக்குறைய மும்மடங்குதான் கனமுள்ளதாயிருக்கிறதாம். ஞாலத்தின் நடுவில் இரும்பும், விண்வீழ்கொள்ளியில் கலந்திருக்கும் நிக்கல்போன்றதொரு உலோகமும் இருக்கவேண்டுமென்று நிபுணர்கள் அறுதி யிடுகின்றனர்.

(தொடரும்)

மூவாயிரம் ஆண்டிற்குமுன் எகிப்து நாட்டிலிருந்த ஓர் அரசனின் நாணய மொன்று பம்பாயிலுள்ள ஒரு பார்விக்காரர் குடும்பத்திலிருக்கிறதாம். இலண்டன் பொருட்காட்சிச்சாலை அதிகாரிகள் அந் நாணயம் நெபக்கட்நாஸெர் என்ற அரசன் காலத்தது என்று அந்நாணயத்தின் மேலிருந்த எழுத்துக்களினல் கண்டு பிடித்துக் கூறியுள்ளார்களாம்.

---

* The specific gravity or density of the earth is 5·52; that is to say, it weighs more than five & a half times as much as a globe of water of the same size —W. B. Scot.

ஆராய்ச்சிப் பகுதி-Research

கிருஷ்ணகிரிக் கோட்டை

[இராவ்சாஹிப் திரு. C. M. இராமச்சந்திரஞ் செட்டியார், B.A.]

இவ்வூர் சேலம் ஜில்லா கிருஷ்ணகிரி தாலூக்காவின் தலைநகர். கோட்டையானது கிருஷ்ணகிரிப் புகைவண்டி நிலையத்திலிருந்து 2 மைல் தூரத்தில் இருக்கிறது. *இவ்வூர்க் கோட்டை சேலம் ஜில்லாவிலுள்ள மற்றை எல்லாக் கோட்டைகளிலும் மிகவும் அழகானது. அது ஒரு உயர்ந்த கற்பாறையாகிய மலையின்மீது கட்டப்பட்டுள்ளது. இம்மலை செடி, கொடிகள் இல்லாத வெறும் பாறையாக நிற்கிறது. அதன் உச்சி சமமாக இருக்கிறது. அதன் வடக்கு, தெற்கு, கிழக்குப் பாகங்கள் மிகவும் செங்குத்தானவை. ஆனால் மேற்குப் பக்கத்தில் பாறையானது சாய்வாக இருக்கிறது. அடிவாரத்தில் பெரிய கருங்கற்பாறைகள் இருக்கின்றன. இம்மலையின் அடிவாரத்தில் இருக்கும் பழைய ஊரிலிருந்து இம்மலையின் தெற்குப் புறமாக உச்சி வரைக்கும் கற்படிகள் முன்காலத்தில் இருந்தன. இப்பொழுது அவைகள் இடிந்து போய் ஏறமுடியாமல் இருக்கின்றன. ஆனால் அவைகளை அரசாங்கத்தார் பழுது பார்க்கிறார்கள். வடக்கு, மேற்கு, கிழக்கு பக்கங்களிலுள்ள கொத்தளங்கள் இப்பொழுதும் நல்ல நிலைமையில் இருக்கின்றன. ஆனால் தெற்குப் புறத்தில் இருந்தவைகள் அநேகமாய் அழிந்துபோய் விட்டன.

மலையின்மேல் இடிந்துபோன சில கட்டிடங்கள் இருக்கின்றன. சில குளங்களும் இருக்கின்றன. ஆனால் அவைகளில் சிற்ப வேலைப்பாடு ஒன்றும் இல்லை. தவிர, இரண்டு முகம்மதிய சமாதிகளும் அவைகளைச் சுற்றி அழகான சுற்று

---

*கிருஷ்ணகிரியில் பழையபேட்டை, புதுப்பேட்டை, கோட்டை என மூன்று பாகங்கள் உண்டு. பழையபேட்டை கோட்டைக்கு அருகில் உள்ளது. புதுப்பேட்டையானது 1794-ல் கேப்டன் கிரஹாம் கம்பைய நல்லூர் இலக்ஷ்மணராவ் இவர்களால் கட்டப்பட்டது. முதலில் அதற்கு கிரஹாம்பெட் என்று பெயரிடவேண்டுமென்று இருந்தார்கள். ஆனால் சென்னைக் கவர்னர் அங்கு வந்தபோது அதற்கு 'தௌலதாபாத்' என்ற பெயரிட வேண்டுமென்று சொல்ல அவ்விதமே பெயரிடப்பட்டது. 'க்ஷேம விலாசம்' என்பது அர்த்தம்.

மதிலும் இருக்கின்றன. அவைகளைப்பற்றிய வரலாறுகளில் யாதொரு விசேஷமும் இல்லை. ஆனால் இவ்வூர் முகம்மதியர்கள் அவைகளை மிகவும் புனித ஸ்தலங்களாக மதித்து வழிபடுகிறார்கள். மலைமேல் இருக்கும் அரண்களும் குளங்களும் இடிந்த கட்டிடங்களும் மலைக்கு ஏறும் படிக்கட்டுகளும் பழுது பார்க்கப்பட வேண்டியவைகள். இவைகள் தற்காலத்தில் அரசாங்கத்தார் மேற் பார்வையில் இருக்கின்றன.

இக் கோட்டையைப் பற்றிப் பழைய சரித்திரம் அதிகமாகத் தெரியவில்லை. ஹைதரும் திப்புவும் ஆங்கிலரோடு சண்டைபிடித்த காலங்களில்தான் இக்கோட்டையைப் பற்றி அதிகமாகக் கவனம் செலுத்தப்பட்டது. அப்போது இக் கோட்டை ஒருவராலும் வெல்லக் கூடாததாய் இருந்தது. இருமுறை ஆங்கிலேயர்கள் இதனைப் பிடிக்க முயன்றார்கள். இருமுறையிலும் அவர்கள் தோல்வி அடைந்தார்கள். முதன் மைசூர் யுத்தத்தில் (கி. பி. 1767) சென்னையிலிருந்து 3000 துருப்புகள் பாராமஹாலைப் பிடிக்கச் சென்றன. வாணியம்பாடி, திருப்பத்தூர், காவேரிப் பட்டினம் என்ற இடங்களிலிருந்த மண்கோட்டைகளைச் சுலபமாகப் பிடித்துவிட்டார்கள். பிறகு ஜூன் மாதம் 3-ம் தேதியில் கிருஷ்ணகிரிக் கோட்டையைப் பிடிக்கச் சென்றார்கள். அப்போது பிடிக்க முடியவில்லை. பிறகு சேனை முழுவதும் கோட்டையைச் சுற்றிக் கொண்டு முற்றுகை போட்டார்கள். அதனால் ஆங்கிலர்கள் வேறு இடத்தில் கவனம் செலுத்தமுடியாமல் போய்விட்டது. பிறகு கர்னல் ஸ்மித் என்பவர் ஆங்கிலச் சேனைக்குத் தலைவர் ஆனார். ஆகஸ்டு மாதத்தில் ஹைதர் அலி கிருஷ்ணகிரி வழியாக இறங்கினான். 25-ம் தேதியன்று ஆங்கிலருடைய பொதி மாடுகள் காக்கன்கறை என்ற இடத்தில் மேய்ந்துகொண்டிருந்தன. ஹைதர் அவைகளைப் பிடித்துக்கொண்டு சென்றான். ஸ்மித் அவைகளை மீட்பதற்கு விரைவாக வந்தான். ஆனால் ஹைதரின் சேனைத் தலைவனான மகதூ மாலி என்பவன் ஸ்மித்தோடு எதிர்த்து அவன் சேனையில் மூன்றில் ஒருபங்கைத் தொலைத்துப் பொதி மாடுகளைக் கொண்டுபோய் விட்டான். இவ்விதமாக கிருஷ்ணகிரிக் கோட்டையை ஆங்கிலரால் பிடிக்க முடியவில்லை.

மறுபடியும் 1768-ம் வருஷத்தில் கர்னல் ஸ்மித் என்பவன் பாராமஹால்மீது படை எடுத்தான். உடனே கிருஷ்ணகிரிக் கோட்டையை முற்றுகை யிட்டான். அம்முற்றுகை மே மாதம் 2-ம் தேதி வரைக்கும் நடந்தது. ஜூன் மாதம் 8-ம் தேதியில் ஆங்கிலர் சேனை கிருஷ்ணகிரியை விட்டுப் பூதிக்

கோட்டை வழியாகச் சென்றது. பிறகு கர்னல் உட் என்பவன் ஆகஸ்டு மாதம் 3-ம் தேதியில் திண்டுக்கல் கோட்டையைப் பிடித்துவிட்டு வடக்கே சென்று ஸ்மித்தோடு சேர்ந்து சண்டைபிடிக்கச் சென்றான். அவ்விதம் செல்லுகையில் தோப்பூர் கணவாய் வழியாகப் போய்ச் செப்டம்பர் மாதம் முதல் தேதியில் கிருஷ்ணகிரிக்கு வந்து சேர்ந்தான். ஆனால் ஒருவன் சென்றதை மற்றொருவன் அறியாததனால் இவ்விரண்டு சேனைத்தலைவர்களும் சந்திக்கமுடியவில்லை அந்தக் காரணத்தினால் ஹைதருடைய கை பலத்துப் போய்விட்டது.

அக்டோபர்மாதம் 3-ம் தேதியில் கர்னல் உஃட் கிருஷ்ணகிரிப் பேட்டையைப் பிடித்துக்கொண்டான். ஆனால் கோட்டையைப் பிடிக்க முடியவில்லை. மறுநாள் ஹைதர் வந்து கர்னல் உஃட்டைத் தாக்கினான். உஃட் எதிர்க்கமுடியாமல் திரும்பி வரவேண்டி வந்தது. இந்த வகையில் இரண்டாம் தடவையும் கிருஷ்ணகிரிக் கோட்டையை ஆங்கிலர் பிடிக்க முடியவில்லை. பின்னர் ஹைதர் வெற்றி அடைய ஆரம்பித்ததில் ஆங்கிலர் சமாதானம் கோரவேண்டி வந்தது.

மூன்றாவது மைசூர் யுத்தம் 1790-ல் ஆரம்பமாயிற்று. அப்போது 9500 துருப்புகளுடன் கர்னல் மேக்ஸ்வெல் என்பவர் வாணியம்பாடி வழியாகச் சென்று நவம்பர் முதல் தேதியில் கிருஷ்ணகிரியைச் சமீபித்தனர். ஆனால் அதனைத் தாக்காது திரும்பிக் காவேரிப்பட்டினத்திற்கு வந்துவிட்டான். ஆகவே கிருஷ்ணகிரி திப்பு வசமே இருந்தது. பிறகு சில மாதங்கள் யுத்தம் வேறு இடங்களில் நடந்தது. 1791ஆம் அக்டோபர் மாதத்தில் பகீர் (Bakir) சாகிப் என்பவன் சேனைகளை நடத்திக்கொண்டு தோப்பூர் வழியாகப் பாராமஹால் சென்றான். அவன் கிருஷ்ணகிரிக் கோட்டையில் பட்டாளங்களை நிறுத்தி அதனைப் பலப்படுத்த வேண்டுமென்றும் ஆங்கிலர்களின் வழிப்போக்கைத் தடைசெய்ய வேண்டுமென்றும் கருத்துக்கொண்டு சென்றான். அப்போது கர்னல் மேக்ஸ்வெல் அவனை எதிர்க்கச் சென்றான். அவன் செய்த யுத்தத்தின் பலனாக பகீர் சாகிப் எதிர்த்து நிற்கமுடியாமல் போய்விட்டது. பிற்பாடு மேக்ஸ்வெல் கிருஷ்ணகிரிக்குச் சென்று நவம்பர் 7-ம் தேதியில் பேட்டையைப் பிடித்துக் கொண்டான். ஆனால் கோட்டையைப் பிடிக்க முயன்றதில் ஒன்றும் பலிக்கவில்லை. ஆகவே மேக்ஸ்வெல் திரும்பவேண்டி வந்தது.

அப்போது லார்ட் கார்ன்வாலிஸ் தலைமைபூண்டு சிரங்கப்பட்டினத்தை முற்றுகையிடச் சென்றதினால் திப்பு சமா

தானத்திற்கு வரவேண்டியதாயிற்று. 19-3-1792 ஏற்பட்ட சிரங்கப்பட்டினத்து உடன்படிக்கையின்படி கிருஷ்ணகிரிக் கோட்டை ஆங்கிலர் வசம் வந்துவிட்டது.

இக்கோட்டை ஆங்கிலர் வசம் வந்தவுடன் அதில் ஒரு சைன்யத்தை நிறுத்தி அதனை ஒரு சைன்ய ஸ்தலமாகவும் கேப்டன் அலெக்ஸாண்டர் ரீஃட் என்பவரை முதல் கலெக்டராகவும் நியமித்தார்கள். அவனுக்குத் தலைமை நகர் கிருஷ்ணகிரியாக இருந்தது. உதவியாக 15-வது பட்டாளத்தை அங்கே வைத்திருந்தார்கள். 1779-வது வருஷத்தில் ஏற்பட்ட கடைசி யுத்தத்தில் திப்பு சுல்தான் இறந்துபோக, ஆங்கிலர்கள் தங்கள் சேனைகளை அந்தச் சமயத்திற்குஎற்றபடி மாற்றலானார்கள். பாரா மஹால் பகுதிக்குக் கிருஷ்ணகிரியைத் தலைநகராக்கி அங்கே ஒரு பட்டாளத்தை வைத்தார்கள். 1809-ம் வருஷத்தில் கர்னல் வெல்ஸ் என்பவன் கிருஷ்ணகிரிக்கு வந்து அதைப்பற்றி எழுதியிருக்கிறான். அதன்படி இக்கோட்டை மிகவும் பலமாக இருந்திருந்தும் 1801-ம் வருஷத்தில் ஏற்பட்ட வெடி மருந்து விபத்தினால் பெரும்பான்மையான கொத்தளங்களெல்லாம் நாசமாய் விட்டன என்று அறிகிறோம். அவ்விதம் நாசமான பாகங்களைப் பின்னால் யாரும் பழுது பார்க்கவில்லை. திப்பு இறந்த பிறகு தலைமை ஸ்தானமும் சேலத்திற்குப் போய்விட்டது. 1832-வது வருஷத்தில் கிருஷ்ணகிரியி லிருந்த சேனையையும் நீக்கிவிட்டார்கள். அது முதல் இக்கோட்டையின் பெருமையும் குறைந்துவிட்டது.

திராவிடம்

[சீகாழி, ப. அ. முத்துத்தாண்டவராய பிள்ளை]

திராவிடம் என்னும் பதத்திற்கு ஒப்புவது என்பது பொருள். இச் சொற்கு இப் பொருளாயது காஞ்சிப்புராணம் தழுவக்குழைந்த படலத்தில் சிவஞான சுவாமிகள் கூறியருளிய

" எவ்வினையு மோப்புதலாற் றிராவிடமென் றியல்பாடை
யெவ்வமறப் புதிதாக யான் வகுப்ப நல்கியது
வெவ்வருணத் துள்ளார்க்கு மெளிதாகப் புத்தேளி
ரெவ்வெவர்க்குஞ் சுவையமிழ்தி னினிதாகச் செய்தருளாய்."

என்ற செய்யுளானும், அப்புராணத்தின் பூர்வகிரந்தத்தானும் விளக்கமாகும். வடநாட்டிலிருந்து பெருங்குழுவினராகப் பல சமயங்களில் தென்பரத கண்டத்து வந்து குடியேறிய பூர்வ ஆரியமக்களும், அவரது தேர்ச்சிக் குள்ளாகிய பெருமக்களும் இம்மண்டலத்திற்கு இட்டகுறி திராவிடமென்பதே. இவர்கள் தங்கட்கிருந்த குறையனைத்தையும் இத்தமிழகம் ஒப்பியது பற்றி இந்நாட்டிற்குத் திடமாக இவ்வபிதானத்தை வழங்கிவந்தனர். வைதிக நூல்களினும், பௌத்த சமண கிரந்தத்தினும், அருங்கலான்வய முதலிய சங்கங்களினும், கணங்களினும், சபைகளினும், திராவிட தேசமெனப் பயின்று வருதல் நோக்கற்பாலது.

இங்ஙனமாக வடநாட்டிலுள்ள பஞ்சகௌடர்களும் இத்தென் பாரதத்திற் குடிபுகுந்த மாந்தரைத் திராவிடரெனவுங் கூறினர். இவர்கள் வழங்கிய பாகத மொழியைத் திராவிடமொழி எனவும், அவற்றைப் பாகுபாடு செய்து, பாகத மொழி இலக்கணங்களில் ஆந்திர திராவிடம் கர்நாடக திராவிட முதலியன எனவும், தமிழ் மொழியைச் சுத்த திராவிடமெனவும் அதன் சிறப்புவகையால் திராவிடமெனவும் பலகாற் பயின்று சொல்வாராயினர். இத்திராவிட மொழிக்குப் பொதுவகையாலும் சிறப்புவகையாலும் பாகத இலக்கணம் பல எழுதி வழங்கினர். இங்ஙனமாகச் சிறந்த தமிழ் மொழிக்கு எவ்வினையும் ஒப்பிவரும் காரணம்பற்றித் திராவிடமென்பது தொன்றுதொட்ட வழக்காகும்.

துடியர் முதல் நால்வகைப் பழந்தமிழ்க் குடிகளின் பேச்சு வழக்கில்நின்ற அவப் பிரஞ்சுமாகிய செம்மொழியானது ஆயர்முதல் ஐவகைத்திணை மாந்தரது சொல் வழக்கினின்ற மக்கள் மொழியோடு விரவித் தனிச்செம் மொழியாகி உயர்ந்தோரென்று எண்ணப்பட்ட திராவிடராகிய நகரமாந்தரது பிராகிருத பாஷையோடு கலந்து உயர்தனிச் செம்மொழியாயிற்று.

இவ்வினிய மொழியானது ஆகஸ்தியமென்ற வகையால் தமிழென்றும், ஆன்றோரால் கொடுந்தமிழி னின்று பிரித்துச் செப்பஞ் செய்த வகையால் செந்தமிழென்றும், உயர்ந்தோரால் தழுவப்பட்டுச் சூக்திகளாய வகையால் பைந்தமிழென்றும், அச்சூக்திகளால் வினைகளை ஒப்பிப் பேரின்ப மளிக்கும் வகையால் திராவிட மென்றும் ஆயினமை உய்த்துணர்க.

வடிவுதிருந்த அறிவு வளர்ந்தவகை

[திரு. பா. வே. மாணிக்க நாய்க்கர்—
திரு. க. ப. சந்தோஷம் B.A., L.T.]

(உகூஅ-ம் பக்கத் தொடர்ச்சி)

(அறிவும் வடிவும் ஒன்றிற்கொன்று இசைந்து வளர்தல் என்ற தலைப்புடன் காலஞ்சென்ற திரு. பா. வே. மாணிக்க நாய்க்கர் மூன்று சொற்பொழிவுகள் நிகழ்த்தி வந்தார். சென்ற பகுதியோடு முதற் சொற்பொழிவு முற்றிற்று. இவ்விரண்டாவது சொற்பொழிவில் முதற் சொற்பொழிவைக் குறித்துச் சிலர் கூறிய குறைகளை ஆராய்ந்து தடையளித்து மேற்செல்லுகின்றார் ஆசிரியர்.)

ஐயன்மீர்,

உங்களிற் பெரும்பான்மையோர் நேற்று யான் நிகழ்த்திய சொற்பொழிவைக் கேட்க வந்திருந்தீர்களென்று நினைக்கின்றேன். நேற்று யான் குறித்த நேரத்தில் எனது சொற்பொழிவை ஆற்றக் கூடவில்லை. சிறிது நேரங் கழித்து நேற்று எனது சொற்பொழிவைத் தொடங்க நேர்ந்தமையைப் பொறுத்துக்கொள்ளுமாறு உங்களை வேண்டிக்கொள்ளாதொழிந்தேன். நேரந் தவறாது ஒன்றை நிறைவேற்றுவதில் நான் மிகுந்த அக்கறை செலுத்துகின்றவ னென்பதை நீங்கள் ஒருவேளை அறிந்திருக்கலாம். ஆனால், நேற்று யான் பல் வைத்தியன் கையிற் சிக்கிக்கொள்ள வேண்டியதாயிற்று. காலந்தாழ்ந்தமைக்கு அதுவே காரணம். எனது முயற்சியால் அக்குற்றத்தினின்றும் என்னை விலக்கிக்கொள்ள முடியவில்லை. ஆதலின், அதைப் பொறுத்திடுக.

மற்றொரு வகையிலும் யான் தங்கள் பொறையை நாடுகின்றேன். வடிவின் வளர்ச்சியைப்பற்றி நேற்று யான் கூறியதில் எள்ளி நகையாடும் வகையில் கடவுளைப்பற்றிப் பேசினேனென்று சிலர் கருதுவதாகக் கேள்விப்பட்டேன். ஒரு சொற்பொழிவைக் கேட்டவர்கள் அதன் கண்ணுள்ள குற்றத்தை அவ்வுரையை நிகழ்த்துவோருக்கு அறிவிப்பது நல்லது. நாம் குழுமியிருக்கும் இக்கலாசாலை (St. Joseph's College, Trichy) ஆசிரியர்கள் தங்களது கொள்கைகளைப் பிறர்க்கெடுத்துரைத்துப் பரவச் செய்பவராவர். ஆதலின், இவ்விடத்தில் நின்றுகொண்டு யான் கடவுளை இழித்துரைத்தேனென்ற எண்ணம் பிறர் உளத்திற் படியவிடாது தடுக்கவேண்டியது எனது கடமையாகின்றது. ஒன்றை அரைகுறையாகச் செய்வது, அதைச் செய்யாது விடுவதை விட மிகக்கேடு பயக்குந் தன்மையது. எடுத்துக்கொண்ட

ஒன்றை முடிவுறச் செயல் வேண்டும். அல்லது செய்யாது விட்டொழிதல் வேண்டும். நேற்று எனது சொற்பொழிவைக் கேட்ட எனது நண்பர்கள் எஞ்சி நிற்கின்ற பகுதிகளையும் செவி மடுத்தபின், எனது சொற்பொழிவு கடவுளை இகழ்ந்துரைத்தலைப் பொருளாகக் கொண்டதா என்ற கேள்விக்கு முடிவு காண்பது தகுதியாகும். சொற்பொழிவின் தொடக்கத்தில் ஒருவேளை அத்தகைய எண்ணம் எழுதற்கிடமிருந்திருத்தல்கூடும். அஃதியற்கையே. ஒரு குழந்தை பிறக்கும்பொழுது அம்மணமாக விருக்கின்றது. அக்குழந்தை ஓர் ஆண்மகவாயின் நாளாவட்டத்தில் வளர்ந்து அறிவு முதிர்ந்து பெரும் புலவனுகவோ ஆட்சியில் வல்லுநனுகவோ அது திகழ்கின்றது. குழவிப் பருவத்தில் ஆடையின்றிக் கிடந்த நிலை கடிதில் மறைந்து போகின்றது. பெரியவனுனபின் அக்குழந்தை தன் அம்மண நிலையை நினைந்து நகுதல் அரிதன்றே.

எனது சொற்பொழிவின் தொடக்கத்தில் 'அறிவும் வடிவும்' எனும் இப்பொருள்பற்றி எங்ஙனம் யான் நினைக்கலானேன் என்பது குறித்து எனதிளமையில் நடந்த ஒரு நிகழ்ச்சியைக் கூறினேன். அந்நிகழ்ச்சியை யான் முற்றுங் கூருது ஒரு பகுதியை மாத்திரங் கூறினேன். முதலிலிருந்து இறுதிவரை அதைச் சொல்லப் புகுந்தால், எனக்கு இன்ப மளிக்கும் அத்துணை அஃது உங்களுக் கின்பமளிக்காதென்ற கருத்தால் அதை முற்றுங் கூருதொழிந்தேன். ஈண்டு, மற்றென்றை நீங்கள் உளத்திற் பதிக்கவேண்டும். கடவுளைப் பற்றி யான் எழுதத் துணிந்த கட்டுரையின்முடிவை உங்களுக்கெடுத்துரைத்தேன் கொல்! இல்லை, அதை அப்பொழுதே பகர்ந்திருப்பேனுயின் எனது சொற் பொழிவு கடவுளை இகழ்ந்துரைக்குங் குற்ற முடைத்தென்று நீங்கள் எண்ணுதற் கிடமில்லாது போயிருக்கும்.

முன் யான் மொழிந்தவற்றில் மக்கள் வடிவிற் காலிலிருந்து இடைவரையுஞ் சென்று, கடவுளுக்குக் காலுங்குறிகளுமில்லையென்று காட்டினேன். மற்றும் கடவுளைப்பற்றிய கருத்தில், அல்லது வடிவோடுகூடிய கடவுளில் வயிறெனஒன்றிருத்தல் கூடாதென்று சொன்னேன். இவையெல்லாம் எதிர்மறையின் பாலன. கடவுளுக்குள்ளது யாதெனவென்பதை யான் விளம்பவில்லை. எதிர்மறைப் பகுதியாயவற்றையுங் கூடயான் தொடங்கினேனேயன்றி முடித்திலேன். வயிறு இருந்தாலன்றி வாய் வேண்டாமென்ற காரணத்தைக்கொண்டு கடவுளுக்கு வாய் இல்லை என்று மொழிந்தேன். இவ்வாறு நான் மொழிந்தவை யாவும் எல்லோரும் ஏற்றுக்கொள்ளக்

கூடியனவே. இனி, கடவுளுக்குள்ளது யாது? என்றகேள்வி யிலிறங்குவோம்.

உயிருடைய பலவற்றை எடுத்துக்கொண்டு ஒப்பிட்டுப் பார்ப்போமாயின், ஒன்று மற்றொன்றைவிட உயர உயர, அதன் உடலிற் சில பகுதிகள் குறைந்து மறைவதையும், வேறு சில பகுதிகள் வளர்ந்து விரிவதையும் பார்க்கின்றோம். பல் வேறு உயிர் வகைகளை எடுத்துக்கொண்டு அவற்றின் பகுதி களை ஆராய்ந்து பார்க்குங்கால் ஒன்று மற்றொன்றைவிடச் சிறந்திருக்குமளவில், கால்கள், புணர்ச்சிக் கருவிகள், வயிறு, வாய் எனும் உறுப்புக்கள் சுருங்குகின்றனவென்பதை எடுத் துக் காட்டினேன். புலனறிவிற்கப்பாற்சென்று உயிர்களெல் லாவற்றிற்கும் மேலான உயிரென்று கடவுளைக் காணுமுறை யில் மேற்குறித்த உறுப்புக்கள் இல்லாமலே போகும். இது கருத்தளவையானுணரப்படும்.

மேலே நாம் காட்டிய உண்மைக்குச் சான்றாக எவ்வெவ் உயிர்களை எடுத்துக்கொண்டோமோ அவற்றைக்கொண்டே மற்றொருண்மையையுங் காணலாம். என்னவெனின் உடலிற் சில பகுதிகள் குறையும் வண்ணம் வேறு சில பகுதிகள் வளர் கின்றன. ஆதலின், கடவுளைக் கருதும் வகையில் எதிர்மறை யுடன் உடன்பாட்டுப் பகுதியும் உண்டென அறிதல் வேண்டும். கடவுளில் உள்ளவை யாவை? இதைக் காண்பான் வேண்டிக் கிழ் நிலையிலுள்ள உயிர்கள் சிலவற்றை உற்று நோக்குவோம். ஒரு மீனையாதல், பாம்பையாதல், புழுவையாதல், எடுத்துக் கொள்க. மீனின் தலையெனப்படும் உறுப்பை உடலெனப்படும் பகுதியுடனொப்பிடுக. தலையைவிட உடல் மிகப்பெரிதென்பது தெற்றெனத் தெரிகின்றது. தலையினளவு உடலோடு ஒப்ப நோக்கின்,இருபதிலொரு பங்கிலிருந்து நூற்றிலொரு பங்கு வரையிலிருக்கலாம். எங்ஙனமாயினும், அந்த அளவு மிகச் சிறிதென்பது ஒருதலை. மேற்குறித்த உயிர்களை விடச் சிறிது உயர்ந்திருப்பவற்றிற் பன்றியைப் பார்த்திடின், தலையினளவு சிறிது பெருகியிருப்பதைக் காண்கின்றோம். ஈண்டு, உடலி னளவு குறையத் தலையினளவு விரிகின்றது. கழுதை, குதிரை, எருது ஆகிய இவற்றில் தலையினளவு அதிகப்பட்டுக்கொண்டே வருகின்றது. குரங்கில் இது மற்றும் அதிகரித்திருக்கின்றது. (ஈண்டுக் கூறப்பட்டவற்றின் உண்மையைக் காண்பதற்கு வெறுங் கண்ணாற் பார்ப்பது சாலாது; கணக்கு முறையைக் கையாள வேண்டும். அம்முறையை ஆண்டு பார்ப்பவர்க்கு அணுவளவும் ஐயமேற்படாது) மக்கள் வடிவத்தை ஆராயுங் கால் தலையினளவு வியக்கத்தகுந்த வகையில் விரிந்திருக்கிறது.

மக்களுடைய தலையின் கனம் அல்லது எடை, உடலுடைய எடையில் எட்டிலொரு பங்கிலிருந்து ஆறிலொரு பங்கு வரையிற் செல்கின்றது. இவற்றிலிருந்து யாமறிவ தென்னை? மேனிலையிலுள்ள உயிர்களில் உடல் குறைந்துகொண்டே செல்ல, அந்த அளவிற்குத்தலை பெருகிக்கொண்டே போகிறது என்பதே. இவ்வாராய்ச்சியைப் புலனுணர்ச்சிக் கப்பாற் புகுத்துவோமாயின், உயிர்வாழ்கின்றவற்றிற்கெல்லாம் மேலாய ஒருயிரை—கடவுளை—கருத்தில் வகுக்குமாற்றில் அதன் தலையினளவு அளவிலடங்காது விரிந்திருக்க, உடலினளவு ஒன்றுமின்றி முடிந்துவிடுமென்று நாம் கருதுதல் திருந்திய காட்சியினர் நெறிக்குச்சற்றும் முரண்படாது. கடவுளின் தலைக்கு முடலுக்குமுள்ள அளவைக் கணக்கு முறையிற் காட்டவேண்டுமாயின், $\frac{1}{0}$ என்று குறிப்பிடல் வேண்டும். $\frac{1}{0}$ என்பதென்னை? அது எண்ணிலடங்காமையேயாகும். (Infinity) ஆதலின் கடவுளுக்குள்ளது யாது? என்ற கேள்விக்கு விடை கடவுள் தலையன்றிவேறில்லை என்பதாகும்.

இப்பொழுது யான் கூறுவது கடவுளை இகழ்ந்துரைப்பதாகாது. அதனின்றும் முற்றும் வேறுபட்ட ஒன்றைப் பொருளாகக் கொண்டது இச்சொற்பொழிவு. கடவுள் தலையைத் தவிர வேறொன்றுமில்லை என்போமாயின், அதன் வடிவம் யாது? அதன் உள்ளீடு யாது? அதனளவு யாது? இவை ஆராயற்பாலன.

செய்திகளும் குறிப்புகளும்:
News and Notes

பன்னாட்டு இசைப் பெருவிழா:—இவ்வாண்டு ஜூன் மாதம் 7-ம் நாள் ஹாம்பர்க் நகரத்தில் பன்னாட்டு இசைப் பெருவிழா நடைபெறும். அதில் பத்தொன்பது நாடுகளிலிருந்துவரும் இசைவலாளர்கள் கலந்து கொள்வார்கள். இவ்விழா ஜெர்மன் இசைக் கழகத்தாரால் நடத்தப்படுகிறது. அக் கழகத்தலைவர் டாக்டர் ரிச்சர்ட் ஸ்ட்ராஸ் என்பவரே.

பன்னாட்டுக் கோழிச் சந்தை:—மூன்று ஆண்டுகட்கு ஒருமுறை உலகத்திலுள்ள பலநாடுகளிலும் கிடைக்கும் கோழிகள் சேவல்கள் வாத்துகள் முதலியவற்றின் சந்தை ஒன்று கூட்டப்பட்டு வருவது

வழக்கமாக இருக்கிறது. இவ்வாண்டு ஆறாவது சந்தை ஜூலை 31-ம் நாள் தொடங்கிப் பத்து நாட்கள் பெர்லின் நகரில்கூடும் 1933-ம் ஆண்டு நடைபெற்ற ஐந்தாவது சந்தை உரோம் நகரிற் கூடிற்று.

பன்னாட்டு விளையாட்டு விழா:—இவ்வாண்டு இவ்விழா பெர்லின் நகரில் ஆகஸ்ட் மாதத்தில் நடைபெறும். உலகத்திலுள்ள நாற்பத்தாறு நாடுகளைச் சேர்ந்த தேர்ச்சியாளர்கள் இதிற் கலந்து கொள்வார்கள். இத்தனை மிகுதியான நாடுகள் கலந்து கொள்வது இத்தடவை தானாம். 1932-ல் லாஸ் ஆஞ்சலிஸில் நடைபெற்ற பெருவிழாவிற்கூட நாற்பத்திரண்டு நாடுகளே கலந்து கொண்டனவாம்.

வேலையில்லாத் தொல்லை:—தஞ்சை ஜில்லாவில் சில சிறு நீர்ப்பாசன வசதிகள் கட்டிக் கொடுப்பதற்கென நூறாயிரம் ரூபாய்களைச் சென்னை அரசாங்கத்தார் இவ்வாண்டு ஒதுக்கிவைத்துள்ளனர். அந்த ஜில்லாவில் வேலையில்லாமல் பல ஏழைமக்கள் திண்டாடுவதை நீக்கி அவர்களுக்கு வேலையளித்து உதவிபுரியவே இத்திட்டம் ஏற்படுத்தப் பட்டதாகும்.

கல்விப்பயிற்சி முறை

"நூல்களைக் கற்பதனாலும் கற்பவற்றின் பொருளறிந்து கற்பதனாலுமே அறிவு வளர்ச்சியுறுகின்றது. இந்தியாவில் பல்கலைக் கழகக் கல்வி முறையின் குறைபாடுகள் காணப்படுவதற்கு முதற்காரணம், கற்பவற்றை மாணவர்கள் பொருளறிந்து கற்க வியலாமலிருப்பதேயாம். அவர்கள் நிறையக் கற்பதென்னவோ உண்மைதான். ஆயினும் கற்கும் அவையெல்லாம் அவர்கள் உள்ளத்திடையே ஊன்றிக் கிளர்ச்சிகொண்டு எழுந்து பயன்படுமாறில்லை. கூடைகள் கற்றை கற்றையான குறிப்புகளால் நிறைக்கப்படுவதுபோல் மாணவர்தம் மூளைகள் ஆசிரியர் கொடுக்கும் குறிப்புகளால் நிறைக்கப்படுகின்றன. எனினும் பெருந் தொகையான மாணவர்களுக்கு அயல்நாட்டு மொழியிற் கல்வி பயிற்ற நேருங்கால் ஒவ்வொரு முறையைத்தான் கையாள முடியும். அயல்நாட்டு மொழியின் நுட்பங்களைச் செவ்விதின் உணர இயலாமையால் அம்மொழியிற் பயில்வோர் அதனைத் தம் உளத்தெழுங் கருத்துக்களையெல்லாம் வெளியிடக்கூடிய கருவியாகப் பயன்படுத்துவதற் கியலாதவராகின்றனர். ஆண்டுதோறும் நடைபெறும் தேர்வுகளில் வெற்றிபெறுவது கருதி மாணவர்கள் தம்மாற் பொருளுணர முடியாதவற்றையெல்லாம் குருட்டுப் பாடமாக மனப்பாடம் பண்ணவேண்டியவர்களாகின்றனர். கற்றுக்கொடுக்கும் ஆசிரியர்களுக்கும் கற்றுக்கொள்ளும் மாணவர்களுக்கும் சொந்தமல்லாத ஒரு மொழியில் கல்விபயிற்றுவதென்பது இயற்கைக்கு மாறுபட்டதோர் முறையாகும். சிறந்த இம்முறையால் கருத்துக் குழறுபாடுகள் நேர்கின்றன; புதுக் கருத்துகளின் எழுச்சி தடைபடுகின்றது; காலமும் ஆற்றலும் பயனின்றிக் கழிகின்றன."

—டாக்டர் எ. எச். மேக்கென்ஸி.

கடவுள் துணை

திருவள்ளுவர் திருநாட் கழகம்
(Tiruvalluvar Day Celebration Committee)

அறிக்கை-1

புலவர்ப் போற்றுதும்! புலவர்ப் போற்றுதும்!!

நந்தண்டமிழ் நாட்டிற் பண்டைக் காலத்தில், ஞாயிற்றையும் திங்களையும் மாமழையையும் போற்றிவந்ததுபோல் புலவர்களையும் போற்றிவருதல் பெருவழக்காயிருந்தது. மலரவன் செய் வெற்றுடம்பு மாய்ந்துபோவதானும், வண்டமிழோர் பாவுடம்பு மாயாது புகழ்கொண்டு நின்று நிலவுவதானும் "மலரவன் வண்டமிழோர்க் கொவ்வான்" என்று மதிப்பிட்டுக் கூறிய பெருமை தமிழ்நாட்டிற்கே உரித்தாம். அத்தகைய அரும்பெறற் புலவர் தம் நினைவு மறவாது மக்கள் உள்ளத்தே என்றும் நின்று நிலவச்செய்தல் நாட்டுத் தொண்டுகளில் ஒன்றாகும் என்பது யாவர்க்கும் ஒப்பமுடிந்ததோர் உண்மையாகும். நானிலம் போற்றும் நாடகப் புலவரான ஷேக்ஸ்பியர் என்பார் தம் திருநாளை, அது கொண்டன்றோ, ஆங்கிலேயர் ஆங்காங்குச் சிறப்பாகக் கொண்டாடுகின்றனர்! அவ்வாறே ஏனைய நாட்டினரும் தத்தம் நாட்டுப் பெரும்புலவர் நாட்களை வழாஅது கொண்டாடுகின்றனரல்லரோ? அற்றாக, உலகப் புலவர்களின் நடுநாயக மாமணியாயும் ஒழுக்கத்திற்கு உறையுளாயும் தமிழ்மொழிக்கு உயிர்நிலையாயும் இலகும் திருவள்ளுவர் திருநாளைக் கொண்டாடுவது தமிழரின் கடமையன்றோ? இதுகருதி இவ்வாண்டுமுதல் ஆண்டுதோறும் வள்ளுவர்தந் திருநாளாய வைகாசி அனுடத்தன்று வள்ளுவர் விழாக் கொண்டாடுதற்கான முறைகளைத் தேர்ந்து அமைப்பதற்காகவே இக்கழகம் கூட்டப்பட்டது. தமிழ்நாட்டிற்கும், தமிழ்மக்கட்கும், தமிழ்மொழிக்கும் இயன்றவரையில் எத்துறையினும் பணியாற்றி வருவதே இக்கழகத்தின் பொதுநோக்கமாயினும், இதன் சிறப்பான நோக்கங்கள் பின்வருவனவாம் :—

1. வள்ளுவர் விழா :—பொதுநெறி பொதுளும் முதனூலாகிய திருக்குறளை யருளித்தந்த திருவள்ளுவர் திருநாளை ஆண்டுதொறும் சென்னையிற் சிறப்பாகக் கொண்டாடுவதுடன் தமிழ்நாடெங்கும் கொண்டாடச் செய்தல். பிள்ளையார் விழா, கலைமகள் விழா என்பனபோல் வள்ளுவர் விழா என்பதும் தமிழர்கள் திருவிழாக்களில் ஒன்றாக நடைபெறுமாறு செய்தல்.

2. வள்ளுவர் மன்றம் :—எத்திறத்தார்க்கும் பொதுவிற் பயன்படும் வகையில் சென்னை நகர்க்கண் ஆசிரியர் திருவள்ளுவனார் பெயரால் ஒரு மன்றம் கட்டுதல்.

3. வள்ளுவர் சிலை :—உள்ளுதொறுள்ளுதொறுள்ள முவக்கும் திருக்குறள் பயந்த தெய்வப்புலவரின் திருவுருவைக் காண்டொறுங் காண்டொறும் மக்கள் களிப்புற்றுக் கனியுமாறு பளிங்கினால் உருவச்சிலை யொன்று செய்வித்து மேற்குறித்த மன்றத்தினடுவே நிறுத்துதல்.

4. வள்ளுவர் நூல் நிலையம்:—தமிழ் நூல்கட்கு முதலிடம் அமைப்பதாயும், பதினாயிரத்துக்குக் குறையாத நூல்களோடு கூடியதாயுமுள்ள ஒரு பொது நூல் நிலையத்தைஅம்மன்றத்தே அமைத்தல்.

5. வள்ளுவர் பரிசு :—சென்னை மாகாணத்திலுள்ள எல்லாப் பல்கலைக் கழகங்களிலும் தமிழ்மொழியில் முதன்மையாகத் தேர்வுபெறும் மாணவர்களுக்கு நூல்கள், பொற்பதக்கங்கள் முதலிய பரிசுகளை யளித்தல்.

6. இந்தியாவிலுள்ள திருந்திய மொழிகளில் எந்தெந்த மொழியில் திருக்குறள் மொழிபெயர்க்கப் படாதிருக்கின்றதெனத் தெரிகிறதோ அந்தந்த மொழிகளில் மொழிபெயர்க்கச் செய்தல்.

7. திருவள்ளுவர் திருநாளன்று ஆங்காங்கு ஏழைகளுக்கு உணவளிப்பதற்கான முறைகளைத் தேடி அமைத்தல்.

8. திருவள்ளுவர் பெயரால் ஒரு "நினைவு மலர்" அச்சிட்டு, திருநாளன்று அடக்க விலைக்குத் தருதல்.

9. திருவள்ளுவர் பண்டசாலை யொன்று சென்னை நகரிலே நிறுவுதற்கான முறைகளைத் தேடியமைத்தல்.

இவ்வொன்பது நோக்கங்களும் எண்ணியாங்கு நடைபெறும்வகையில் தமிழ் நாட்டு மக்கள் தத்தம்மாலியன்ற உதவியை யளித்து ஊக்க வேண்டுமென்று பணிவுடன் கேட்டுக் கொள்கின்றோம். மிகக் குறைந்த கையொப்பம் நாலணாவாகும். அன்பு கூர்ந்து உதவும் நன்கொடைகளைக் கீழ்க்குறித்த இடத்திற்கு அனுப்பிவைக்குமாறு வேண்டுதும். ஒவ்வொரு நன்கொடைக்கும் அவ்வப்போது பற்றுச்சீட்டுக் கொடுப்பதுடன் தொகை யேடுகளும் அவ்வப்போது துண்டறிக்கைகள் மூலமாகவோ செய்தித்தாள்கள் மூலமாகவோ வெளியிடப்படும்.

இவ்வாண்டு வள்ளுவர் விழா (**18-5-1935**) யுவஞூ வைகாசிமீ ௫-ம் நாள் நடைபெறும்.

எ. 6 பவளக்காரத் தெரு, மண்ணடி, சென்னை. } காழி. சிவ: கண்ணுசாமி, கழக அமைப்பாளர்.

திருவள்ளுவர் திருநாள்

எல்லா நாட்டவர்க்கும், எல்லாச் சாதியார்க்கும், எல்லாச் சமயத்தார்க்கும் எக்காலத்தினுக்கும் பொதுவான கொள்கைகளையுடைய 'திருக்குறள்' என்னும் பொது மறை நந்தம் கன்னித் தண்டமிழ் மொழியிலே முதனூலா யமைந்தமை உலகத்தே நம் தமிழ் மக்கட்கு என்றும் குன்றாத பெருமையும் புகழும் தருவதாகும்.

அத்தகைய பெருமைதரும் திருக்குறள் நூலையும் அதன் ஆசிரியராகிய தெய்வத் திருவள்ளுவனாரையும் இன்னும் நம் தமிழ் நாட்டவரிற் பலர் அறியாமலும், அறிந்து ஆராயாமலும், ஆராய்ந்து பயனடையாமலும் வாளா கழிகின்றனர் என்பது அந்தோ! மிகவருந்தற் குரியது!

தமிழர்க்குள்ளேயும், பல திறப்பட்ட மக்களுள்ளும் நிகழும் சாதி சமயப் பிணக்குகளைக் களைந்து, அன்பெனும் நீர் பாய்ச்சி ஒன்றுமைப் பயிரை வளர்த்து மெய்ப்பயன் றருவதிலே திருக்குறளினும் மேம்பட்ட பெருநூ லொன் றுளதோ?

அத்தன்மைய பொதுநூல் வேறு பிற நாட்டு மொழிகளிலே மொழிபெயர்க்கப்படின் எல்லா நாட்டுமக்களையும் தம்முள் ஒற்றுமையாக்கித் தமிழ் மக்களோடும் ஒற்றுமைப் படுத்தி அன்பாலார்த்து இன்பம் தருமன்றோ? அவ்வாறு ஒற்றுமைப் பயிர் வளர்க்க வள்ளுவர் பெருமான் திருநாளைப் போற்றுதல் அடிப்படையாகும்.

டாக்டர். உ. வே. சுவாமிநாதைய ரவர்களின் 80 ஆம் ஆண்டு நிறைவுவிழா

(முகப்புப் படம் பார்க்க)

பண்டைக்காலத்திலே நம் செந்தமிழ் மொழியினைப் பெரும்பாலும் அரசர் பெருமக்களே புரந்து வந்தனர். பொதிந்து கிடந்த அருந்தமிழ் நூல்களைப் பிற்காலத்தே அச்சேற்றி வெளியிட்ட பெருந்தொண்டினை முதன்முதற் கைக்கொண்டவர் யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலர் பெருமானவர். அவர்பின், சி. வை. தாமோதரம்பிள்ளை யவர்கள் சங்க இலக்கிய இலக்கண நூல்களை அச்சேற்றிப் பரப்பினர். பிழையற்ற தூய பதிப்புகளிலே தமிழ் நூல்களையச் சேற்றிய மேற் கண்ட பெரியா ரிருவர்தம் காலத்தே அவர்தம் அரும்பணியை வியந்து ஆதரிப்பாரிலர்.

ஆயின், இக்காலத்தே தமது வாழ்க்கையிற் பெரும் பகுதியையும் தண்டமிழ்ச் சங்க நூல்களை அறிவுழைப்போடு அச்சிட்

டுதவிய மறைத்திரு. மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்திய கலாநிதி டாக்டர் உ. வே. சுவாமிநாதையவரவர்களின் எண்பதாம் ஆண்டு நிறைவு விழாவை நம் தமிழ் மக்கள் கொண்டாடியது மிகவும் மகிழ்தற்குரியதாகும்.

1935 ஆம் மார்ச்சு மீ 6உ காலை 11 மணிக்கு ஐயரவர்கள் இல்லத்திலே அவர்கட்கு அபிஷேக முதலியன மிகச் சிறப்பாக நடந்தேறின. பெருமக்கள் பலர் குழுமியிருந்தனர். அன்று மாலை 4½-மணிக்குச் சென்னைப் பல்கலைக்கழக மண்டபத்தில் சென்னைத் தமிழ் மாணவர் சார்பாகவும், சில சங்கங்களின் சார்பாகவும் வாழ்த்துப் பாக்கள் திரு. ஐயரவர்கட்குப் படித்துக் கொடுக்கப் பெற்றன. திரு. ஐயரவர்கள் உருவப் படமொன்று திறந்து வைக்கப்பட்டது. அன்பர் பலரால் வழங்கப்பட்ட தொகைகள் திரு. ஐயரவர்கட் களிக்கப்பட்டன.

திரு. ஐயரவர்கள் வரலாறு நமது செல்வியின்கண் பின்னர் வெளியிடப்படும்.

மதிப்புரை

திருக்குறள் விருத்தியுரை:—திருக்குறள் அறத்துப் பாலுக்குத் தூத்துக்குடித் திருவாளர், வ. உ. சிதம்பரம்பிள்ளை யவர்கள் விருத்தியுரை எழுதியுள்ளனர். இந்நூல் திருக்குறளை நன்கு கற்க விழையும் எவர்க்கும் பயன்படும் என்பதில் ஐயமில்லை. உரை எளிய நடையில் எழுதப்பட்டுள்ளது. இதன் விலை ரூபா ஒன்றுதான். திருவாளர் வ. உ. சிதம்பரம் பிள்ளை அவர்கள், வக்கில், தூத்துக்குடி என்ற விலாசத்திற்கு எழுதிப் புத்தகம் பெறலாம்.

சதாசிவ முனிவர் சரிதம்:—இப் பெயரிய நூலொன்று அதன் பதிப்பாசிரியர் புதுக்கோட்டைத் திருவாளர் P. S. சுப்பிரமணிய ஐயரவர்களால் நமது பார்வைக்கு அனுப்பப்பட்டது. புதுகோட்டை மகாராஜா கலாசாலைத் தமிழாசிரியர் திருவாளர் - பண்டித நா - கனகராஜையர் அவர்களால் இயற்றப்பட்டது அந்நூல்.

பெருமை மிக்க புதுக்கோட்டை அரசர் மரபினர்க்கு ஞானசிரியரான சதாசிவ முனிவர்தம் வரலாற்றைச் செம்பாகமான விருத்தப்பாவினுற் கூறுவது. சதாசிவ முனிவர் இயற்றியருளிய அருஞ்செயல்களை அழகாக நுவல்வது. இது படிப்பார்க்கினிமை பயப்பது. இதன் விலை அணா. 8. ஜனமித்திரன் காரியாலயம், வடக்கு ராஜவீதி, புதுக்கோட்டை என்ற விலாசத்துக் கெழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.



ஓம்
செந்தமிழ்ச் செல்வி
திங்கள் வெளியீடு

சிலம்பு-கரு] பவ—பங்குனி [பரல்-அ

திருமூலர் திருமந்திரம்

ஆறாந் தந்திரம்

8. அவவேடம்

**இன்பமுந் துன்பமும் நாட்டா ரிடத்துள்ள
நன்செயல் புன்செய லாலந்த நாட்டிற்காம்
என்ப இறைநாடி நாடோறும் நாட்டினின்
மன்பதை செப்பஞ் செயின்வையம் வாழுமே.**

பதவுரை:—

நாட்டாரிடத்துள்ள இன்பமும் துன்பமும்—(உலக வாழ்வில் ஒரு நாட்டில் வாழும்) மக்களுடைய இன்பங்களும், துன்பங்களும்

நாட்டாரிடத்துள்ள நன்செயல் புன்செயலால் அந்நாட்டிற்கு ஆம்—அந்த நாட்டுமக்கள் முறையே செய்யும் நல்ல செயல்களாலும், தீய செயல்களாலும் அந்த நாட்டு மக்களுக்கு உண்டாகும்

என்ப—என்று (கற்றுக் கேட்டுத் தெரிந்தபெரியார்) கூறுவார்கள்.

இறை—(இந்த மக்கட் கூட்டவினைச் சட்ட உண்மை (Collective Law of Karma) யைக் கருத்தில் வைத்து) அந்நாட்டினை ஆளும் அரசன்

நாடோறும்—நாளுக்கு நாள்

மன்பதை நாடி—தன் அரசாட்சியின் கீழ்வாழும் குடிகளில் யார் யார் எந்த எந்தவகையில் தீநெறியி லொழுகு கின்றார்க ளென்று ஒற்றர் முதலியவர்களால் ஆராய்ந்து அறிந்து

செப்பம் செய்யின்—அவ்வாறு தீய நெறியி லொழுகுகிறவர்களை அமைச்சர் முதலிய சூழ்ச்சித்துணைவர்களைக் கொண்டு துணிந்து தகவொறுத்து நன்னெறியில் நேர்மையா யொழுகும்படி செய்வானாயின்

வையம் வாழும்—உலகிலுள்ள மக்களெல்லாரும் துன்பமின்றி இன்ப நலத்துடன் உலகில் வாழ்வார்கள்.

விளக்கவுரை:—

நாட்டாரிடத்துள்ள—இச் சொற்றொடர், சிங்கநோக்காய் முன்னிற்கிற 'இன்பமும், துன்பமும்' என்ற தொடரையும் பின்னிற்கிற 'நன் செயல் புன் செயலால்' என்ற தொடரையும் தழுவி நிற்கிறது.

இன்பமும் துன்பமும் நன்செயலால் புன்செயலால் அந்த நாட்டிற்கு ஆம்—நன்செயல்—நன்மையைத் தருஞ் செயல். புன் செயல்—அற்பச் செயல், அதாவது தீமையைத் தருஞ்செயல். இன்பம் நற்செயலாலும், துன்பம் புன்செயலாலும், முறையே உண்டாகும் என்று கொள்க. ஆம்=ஆகும்; உண்டாகும். நன்செயல் புன்செயல்கள் வேட்கை, அறிவு, செயல்களுடன் தொடர்புபட்டு உள்ளம், நா, உடல் என்னும் மூன்று கருவிகளாலும் செய்யப்படும் செயல்களாகும். ஒரு நாட்டில் நடைபெறும் இன்ப துன்பங்களுக்கு அதன்கண் வாழும் ஒவ்வொருவரும் காரணர் என்னும் கூட்ட வினைச் சட்டம் (Collective Law of Karma) உண்மை கூறப்பட்டது. இந்த உண்மையைப்பற்றிய அறிவு அதனை உடையவர்கள் ஒவ்வொருவருக்கும் தம் தம் ஒழுக்கத்தில் பொறுப்புணர்வை உண்டுபண்ணித் தீநெறியினின்று விலக்கும். இந்த அறிவு இக்காலத்தில் மேலைநாட்டு மக்களுள் ஒரு சிறு பகுதியினரிடம் மாத்திரம் நின்றுநிலவுகின்றது. கீழைநாட்டு மக்களுள்ளும் அவ்வுண்மையை நன்கு அறிந்து உணர்கின்றவர் சிறுபகுதி மக்களேயாவர்.

என்ப—பெரியார் என்ற எழுவாய்ச்சொல் தொக்குநிற்கிறது. என்ப=என்று சொல்லுவார்கள்; உயர்திணை, பலர்பால், படர்க்கை வினைமுற்று.

இறை நாடி—இறை நாடுதலாவது, யார் யார் எந்த எந்தத் தீய செயல்கள் செய்கின்றார்கள் என்று, தன் கண்போன்ற ஒற்றர்களால் அறிந்து ஆராய்தல்.

செப்பம் செய்யின்—செப்பம்—நேர்மை; செம்மை. செப்பம் என்பது உள்ளம் கருதும் கருத்தும், நா உரைக்கும் சொல்லும், உடல் செய்யும் செயலும் தமக்குள் ஒன்றுபட்டு நேர்மையாயிருத்தல். இவ்வாறு ஒருவர் மூவகைகளிலும் நேர்பட ஒன்று பட்டுச் செய்யும் நற்செயலானது தன் நாட்டிலும்,

உலகிலுள்ள பிற எல்லா நாடுகளிலும் வாழும் மக்களுடைய உண்மையான இன்ப நலத்துக்கும் நேர்மையாய்ப் பொருந்தும் படியாயுள்ள செயலாயிருந்தால் அச் செயல் செப்பமுடையது என்று கூறப்படும். ஒருவர் தமது உள்ளம், நா, உடல்களின் செயல்களில் செப்பமில்லாதபொழுது பிறமக்களுடைய நலத்துக்குப் பொருந்த ஒழுகல் முடியாது. இச்செப்பமுடைய ஒழுக்கம் நடுநிலை (நீதி) ஒழுக்கமாகும். அரசன் செப்பம் செய்தலாவது இவ்வகையான நடுநிலை ஒழுக்கத்தினின்று வழுவித் தங்களுக்கும் பிறர்க்கும் கேடுவிளைப்பவர்களை மேலே கூறப்பட்டபடி அறிந்து துணிந்து தகவொறுத்து நல்வழியில் நிறுத்துதல் ஆகும். இவ்வாறு தமது குடிகளை உலக வாழ்வில் இன்பநலம் பொருந்த நிலையாக வாழச்செய்கிற அரசனே 'மன்னன்' என்று தமிழ் மொழியிற் கூறப்படுகின்றான்.

வையம் வாழும்—நாடு வாழும் என்னாது வையம் வாழும் என்று ஆசிரியர் திருமூலர் கூறியதனால் ஒவ்வொரு நாட்டிலுள்ள மக்களும் உலகிலுள்ள எல்லா மக்களுடைய இன்ப நலத்துக்குப் பொருந்தும்படியான செயல்களையே செய்யும்படி அரசன் செப்பம் செய்யல் வேண்டும் என்பது கூறப்பட்டது. இது இக் காலத்தில் பல துயர்களுக்கும் காரணமாய் நடைபெறும் நாட்டு நல்லொழுக்க உணர்வைக் (nationalism) கடந்த உலக நல்லொழுக்க உணர்வு (internationalism) ஆகும். இந்தப் பாட்டு, ஒவ்வொரு நாட்டுமக்களும் உலக நல்லொழுக்க உணர்வை (internationalism) உடையவர்களாய் ஒழுகினால் உலகிலுள்ள மக்கள் எல்லோரும் மொத்தமாக இன்ப நலத்துடன் வாழ்வார்கள் என்னும் இக்காலத்துக்கு இன்றியமையாது வேண்டப்படும் உண்மையை வற்புறுத்திக் கூறுகின்றது. இவ்வாறு மக்களை ஒழுகச் செய்தல் உலகினை ஆளும் அரசர்களுடைய கடமை என்று கூறுகின்றது.

திருஞானசம்பந்த அடிகள் தேவாரம்

அம்பொ னாலவாய் நம்பனார் கழல்
நம்பி வாழ்பவர் துன்பம் வீடுமே.

பதவுரை :—

அம்பொன் ஆலவாய்—(மதுரைத் திருப்பதியின்) அழகிய பொன் போலும் ஒளிவிளங்கும் திருஆலவாய் என்னும் திருக்கோயிலில்

நம்பனார் கழல்—வீற்றிருந்தருளுகின்ற சிவபெருமானுடைய இரண்டு திருவடிகளையும்

நம்பிவாழ்பவர்—(புகலிடமென்று) விரும்பித் துதிசெய்து வாழ்கிற மக்களுடைய.

துன்பம் வீடும்—முன் செய்த தீவினையால் வருதற்குரிய துன்பங்கள் நீங்கும்.

விளக்க வுரை :—

நம்பனூர்கழல்—'நண்பனூர்' என்ற சொல் 'நம்பனூர்' எனத்திரிந்தது. நண்பன்=அன்பன். ஆர்=மரியாதைப் பன்மை விகுதி. உயிர்களிடத்தில் அன்பு செய்து அவைகள் நலமடைவதற்கு வேண்டுவன செய்கின்றவன்.

கழல்—வீரத்தாலும், கொடையாலும் காலில் அணியப்படும் ஓர் அணி. அது இங்கே ஆகு பெயராய்க் கழலை அணிந்திருக்கிற திருவடிகளைக் குறிக்கிறது.

நம்பி வாழ்பவர் —நம்புதல்—விரும்பி அன்பு செய்தல்.

வீடுமே—'ஏ' அசை நிலை.

மக்களுக்கு அருளுக்குமாறாய்ச் செய்யப்பட்ட தீவினையால் வருதற்குரிய துன்பங்கள் அவ்வருளைச் சார்ந்து நிற்றலால் நீங்கும் என்ற உண்மை இந்தப் பாட்டிற் கூறப்பட்டது.

மா. வே. நெல்லையப்ப பிள்ளை

திருவாசகம்

"இன்றெனக் கருளி"

[திரு. போ. முத்தையபிள்ளை.]

செந்தமிழ்ச் செல்வி சிலம்பு 13: பரல் 7ல் எனது ஆப்தரும் சிவநேசச் செல்வருமாகிய சைவத்திருவாளர்., மா வே. நெல்லையப்பபிள்ளை யவர்கள், திருவாசகத்திலுள்ள "இன்றெனக்கருளி" என்ற சொற்றொடரை முதலாகவுடைய செய்யுளுக்குப் பதவுரை விளக்கவுரைகள் வரைந்து, இறுதியில் "மூன்றாவது அடிக்காவது பிற அடிகளுக்காவது சிவநேய அன்பர்கள் இதிற் கூறப்பட்ட பொருளைப்பார்க்கிலும் சிறந்த பொருள் காண்பார்களாயின், அதனை விளக்கி எழுதும்படிக்கு நான் அவர்களைத் தாழ்மையாய்க் கேட்டுக்கொள்கிறேன்" என்று கூறியுள்ளார்கள். ஆகையால் என் சிற்றறிவிற் கெட்டிய பொருளை இங்கே கூறுகின்றேன். சிவநேய அன்பன் என்ற முறையிலாவது, சிறந்த பொருளென்ற முறையிலாவது நான் பொருள்கூற முன்வரவில்லை யென்பதையும்,

நம்முடைய கருத்தையுந் தெரிவித்துக் கொள்ளுதல் குறையாகாதென்பதுகருதிக் கூற முன்வந்தேனென்பதையும் மிகத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

செய்யுள்

இன்றெனக் கருளி யிருள்கடிந் துள்ளத்
தெழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் றன்மை நினைப்பற நினைந்தேன்
நீயலாற் பிறிதுமற் றின்மை
சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந் தொன்றாந்
திருப்பெருந் துறையுறை சிவனே
யொன்றுநீ யல்லை யன்றியொன் றில்லை
யாருனை யறியகிற் பாரே.

கொண்டுகூட்டு :—சென்று சென்று அணுவாய் தேய்ந்து தேய்ந்து ஒன்று ஆம் திருப்பெருந்துறை உறைசிவனே! இருள் கடிந்து எழுகின்ற ஞாயிறே போன்று, இன்று எனக்கு அருளி உள்ளத்து நின்ற நின் தன்மை(யை) நீயலால் பிறிது மற்று இன்மை(யால்) நினைப்பு அற நினைந்தேன். ஒன்றும் நீயல்லை. அன்றி (ஒன்றும்) இல்லை. யார் உனை அறியகிற்பார்.

பொழிப்புரை :—(இறைவனுடைய உண்மை நிலையை ஆராய்ந்தறியப் புகுவார்க்கு) தூலநிலையாகிய பலவற்றினின்றும் மேம்பட்டு மேம்பட்டுச் சூக்குமமாய் நீங்கி (முடிவில்) ஒன்றாய்விளங்கும் திருப்பெருந்துறையில் எழுந்தருளியிருக்கின்ற சிவபெருமானே! இருளையோட்டி உதயமாகின்ற சூரியனே போல, இப்பொழுது அடியேனுக்கு அநுக்கிரகஞ் செய்து என்னுடைய உள்ளத்தின் கண்ணே (மல இருளைநீக்கி ஒளிரூபமாய்) நிலைபெற்று விளங்கும் உன்னுடைய உண்மை நிலையை, உன்னையன்றி வேறாக நான் தனித்து நில்லாமையால், சிவபோதமற்றுச் சிவபோதமாய் நின்று அறிந்தேன். வேறாகச் சுட்டி யறியப்படும் பொருள்களொன்றும் நீ அல்லையாகையாலும், உன்னையன்றி அப்பொருள்கள் ஒன்றும் தனித்து நில்லாமையாலும், உன்னுடையஉண்மை நிலையைச்சிவபோதத்துடன் எவர் அறிவார்? என்றவாறு.

கருத்துரை :—சிவபெருமானுடைய உண்மை நிலை சிவபோதத்துடன் நிற்பவர்க்கன்றிச் சீவபோதத்துடன் நிற்பவர்க்கு அறியவராது என்பதாம்.

சென்று சென்று :—மேம்பட்டு மேம்பட்டு, அணுவாய்—சூக்குமமாய். தேய்ந்து தேய்ந்து—நீங்கி நீங்கி; அடுக்குகள் இடைவிடாமை குறித்தன, பொய்யாமை பொய்யாமை என்பதுபோல. (திருக்குறள். வாய்மை. செ. எ.)

சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந் தொன்ருதல் சிவபெருமானுடைய உண்மை நிலை யென்பது, சங்கற்ப நிராகரணத்தில் ஸ்ரீ உமாபதி சிவாசாரியார் அருளுமாற்ருல் அறியப்படும். அது வருமாறு :—

சைவவாதி சங்கற்ப நிராகரணம்

பதிபசு பாச முதிரறி வுகளுடன்
ஆரு முன்னர்க் கூருப் பின்னர்
இருபொரு ளீத்துமற் றெருநால் வகையும்
ஈனமில் ஞாதிரு ஞான ஞேயமென்று
இசைய மூன்ருய்ப் பசுபதி யென்றவற்று
இரண்டா யிரண்டு மொன்றிஞென் ருகத்
திரண்டாம் பயனெனுந் திருவருள் தெளியில்
சென்றசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந் தொன்ரும்
என்றிறை யியற்கை யியம்புதல் தகுமே.

இதன் பொருள் :—இறைவன், பதி பசு பாசம் பதிஞானம் பசுஞானம் பாசஞானம் என்னும் ஆறினுங் கலந்து நிற்கின்ற நிலையை முன்னர் உணர்ந்து, பின்னர், பாசம் பாசஞானமென்னும் இரண்டினிடத்தும் நிற்கின்ற நிலையை நீக்கி, பதி பசு என்னும் இரண்டும் அவற்றின் ஞானங்களும் என நான்காய் விளங்கும் நிலையினை உணர்ந்து, அந்நான்கனுள் குறையுடைய பசுஞானத்தை நீத்து, பசு பதிஞானம் பதி யென்னும் மூன்ருய் நிற்கும் நிலையை உணர்ந்து, அம் மூன்றனுள் பதி ஞானத்தையும் நீத்து பசு பதி யென்னும் இரண்டாய் நிற்கும் நிலையை உணர்ந்து, அவ்விரண்டனுள் பதியினிடத்துப் பசு கலந்து சிவம் மாத்திரம் விளங்கும் திருவருள் நிலையைத் தெளியுமிடத்து, சென்று சென்று அணுவாய்த் தேய்ந்து தேய்ந்து ஒன்ருமென்று இறைவனுடைய இயல்பை மாணிக்க வாசகர் கூறியது தகும், என்றவாறு.

இப்பொருளில், திரட்சி—கலத்தல். உள்ளத்தில் விளங்கித் தோன்றும் சிவபெருமானுடைய தோற்றம் செம்மையாய்க் காட்சிக்குரியதாய்க் கனிவைத் தருவதா யிருத்தலின் எழுகின்ற ஞாயிறேபோன்று என்ருர். உதயமாகும் பொழுதுதான் சூரியன் செந்நிறமாகவும் காட்சிக்குரியதாகவும் இன்பம் பயப்பதாகவும் காணப்படும். நாழிகை செல்லச் செல்ல செந்நிறமாறி வெப்பம் மீறி, காணப்புகின் கண்ணொளியை மழுங்கச் செய்யு மியல்புடையதாய்க் காணப்படும். மாலைச்சூரியன் காலைச்சூரியன் போலக் காணப்படினும் இருளையோட்டுந் திறன் முன்னதற்கில்லை.

இருள்கடிந்து என்னும் உவமையடை உள்ளத்து நின்ற நின்றன்மை யென்னும் பொருளோடும் சென்று பொருந்து மாதலின், மலத்தை நீக்கி யென்பது வருவிக்கப்பட்டது.

ஞாயிறே என்றவிடத்து ஏகாரம், இருளையோட்டுந்திறம் பிறபொருள்கட்கில்லை யென்று விலக்கலின் பிரிநிலை. நட்சத்திரங்களுக்கும் சந்திரனுக்கும் இருளையறவே யோட்டுந் திறனில்லை.

நின்ற என்பது சூரியன்போலத் தோன்றி மறைதலின்றி நிலைபெற்று விளங்குதலைக் குறித்தது.

பிறிது ஈண்டு என்பது இவ்விடத்துத் தன்னைக் குறித்தது. மற்று அசை.

நினைவு இரண்டனுள், முன்னையது சிவபோதம், பின்னையது சிவபோதம்.

தன்மை யென்றவிடத்து ஐ உருபும், இன்மை யென்றவிடத்து ஆல் உருபுந் தொக்கு நின்றன.

காணப்படும் பொருள்க ளனைத்திலும் கலந்தும், அப்பொருள்களது தன்மையைக் கடந்தும் நிற்கின்ற இறைவனது உண்மை நிலை சிவபோதமுடையார்க்கு அறியவராது ஆதலின், யார் உனை அறியகிற்பார் என்றார்.

ஒன்றில்லை யென்ற விடத்து உம்மை தொக்கு நின்றது.

(மறைமலை யடிகள்)

"கடவுள் உலகத்தைப் படைத்ததன் நோக்கம் அவர் தனது பேரருட் சிறப்பினை உயிர்களுக்கு வழங்கவேண்டுமென்பதே யாகையால் இவ் வியல்பும் நமது வாழ்க்கையோடு திட்டமான தொடர்புடையதாக விளங்கா நிற்கின்றது"* எனவும் "கடந்த நிலையினைக் கூறும் மாயாவாத ஆராய்ச்சியுரைகள் சமய உண்மையினை உலக மெல்லாந் தழுவும்படி செய்யமாட்டாதனவாய் வழுவுகின்றன"† எனவும் அமெரிக்காவில் மெய்யுணர்வினராய் விளங்கிய உவில்லியம் ஜேம்ஸ் என்னுஞ் சான்றோர் ஆழ்ந்து ஆராய்ந்து உரைத்த அறிவுரைகள், கடவுளின் பொதுவியல்பாகிய கடந்த நிலைமையினை வற்புறுத்தி உரைக்குங் கோட்பாடுகள் சிற்றுயிர்களாகிய நமக்கு எவ்வாற்றானும் பயன்படா என்பதையும், அவர் சிற்றுயிர்க ளெல்லாவற்றிற்கும் வேண்டுவதாகிய அழியாப் பெரும்பேற்றை நல்குதற்கும் அதனை நல்குதற்பொருட்டு எளியராய் வந்து அவை தம்மை ஆட்கொள்ளுதற்கும் அவர்க்கு இயற்கையாயுள்ள அன்பும் அருளும் இரக்கமுமாகிய அரும் பேரியல்புகளே எமக்கு எவ்வாற்றானும் பயன்படு மென்பதையும் இனிது விளக்குகின்றன.

---

* Professor William James, 'The Varieties of Religious Experience' PP. 445-447.　　† Ibid P. 454.

புதுக்கவி - Original Poetry

[வித்துவான் இலந்தையடிக் கவுணியன்
இரா. சிவ. சாம்பசிவ சர்மன்]

பிரிவுநினைந்திரங்கல்

தண்ணருந்தா மரைக்கயத்துத் தனிமலர்மே லினிதுறையும்
ஒண்சிறகா லணிகொளுநல் லோதிமமே! ஒருகணத்தில்
விண்ணவனே எனவழைப்பார் வினைவினைநோய் அகற்றுமெங்கள்
கண்ணவனை வேலவனைக் கண்டின்றே கூறீரோ! 1

மரக்கிளையி லமர்தருநல் லிளங்குயிலே; மண்ணதனில்
இரக்கமில னுயென்னை யிவணீத்தே மறந்துறையும்
அரக்குறுவேற் கையானை யடைந்தென்றன் அல்லறனை
யுரைக்கவென வேண்டுகின்றே னுவந்துசெய னுங்கடனே! 2

என்றென்றும் பிரிதலிலா இணையன்றில்! இன்றே நான்
என்றென்றும் பிரிவடையா வென்றலைவன் பிரிவதனுல்
இன்றென்ற னுளத்தகத்தே இயங்குறுவன் துன்பினைநீ
இன்றென்பா னுளங்குழைந்தே வெடுத்தியம்ப வேண்டுவனே. 3

பன்மலர்கள் குடைந்தாடிப் பைந்தாது படிந்துமிக
இன்னறுந்தேன் முழுதுண்டே இனிதுறையும் மதுகரங்காள்!
கன்னலினும் இன்னுரைகள் பலபகர்ந்த கந்தனுக்கென்
மென்மொழிகள் பகர்ந்தென்னை மேவுறுமா செய்யீரோ? 4

புறச்சிறகால் வளைமூக்கால் பொன்மொழியால் மெல்லியர்கள்
பெறப்பெறுஞ்சீர்க் கிள்ளைகாள்! பெரும்புனத்தே குஞ்சரத்தைக்
குறத்திமக டனைவேட்டுக் கூவியநங் குமரனுக்கென்
இறப்பில்லாக் காதலினை யெடுத்தியம்ப வேண்டுவனே. 5

தேனிறைந்து முகையவிழும் தாமரைசேர் வாவியிடை
மீனூர்ந்தே இனிதுறையும் மென்னெடுங்கால் வெண்ணாராய்!
தேனார்ந்து வண்டரற்றும் தேமலர்நற் றொடையானை
யானேர்ந்து காதலித்த இங்கிதத்தை இயம்பாயே. 6

பலப்பலவாய் விண்படர்ந்து பறந்திடுநற் புறவங்காள்!
பலப்பலவாய் நினைந்துமனம் பரிவுற்றுச் சலிப்புறுமால்
குலப்பெருமை நினையாமற் குறத்திமக டனைவேட்ட
நிலப் புலவர் புகழ்முருகன் நும்மொழியால் வருவானோ? 7

உடல்வேறும் உயிரொன்று முண்மைக்கா தலர்க்கென்றே
கடல்சூழும் புவிப்புலவர் கழறுமுரை மெய்யெனவே
அடலார்ந்த காகங்காள்! அறைகுவிரென் றலைவருக்கே
திடமாக இருவிழிக்கும் ஒரு மணியைக் கொண்டதுவே. 8

துளிகண்டாற் களிகொண்டே தோகைவிரித் தாலுகின்ற
ஒளிகொண்ட மயிற்குலங்காள்! ஒள்வேலோன் தனையடைந்தே
அளிகொண்டே அரற்றுகின்ற வடியேன்றன் றுயர்கூறி
வளிகொண்ட விசைகொண்டு வந்திடுமா செய்வீரே. 9

(மறைமலை யடிகள்)

"பாட்டியற்றும் நல்லிசைப்புலவர் நம்மறிவை ஒருமுகப் படுத்து விளக்குமாறுபோற் பிறர் அங்ஙனஞ் செய்ய மாட்டுவாரல்லர். நம்மறிவெல்லாம் ஐம்பொறிவழிச் சென்று உலகியற்பொருள்களை அங்ஙனம் பற்றிக்கொண்டு நிகழ்வுழியும் அப்பொருட் டன்மைகளை நுணுகி யறிய மாட்டாவா யொழிகின்றன. இங்ஙனம் ஒரு நேரத் தொருபொருளைப் பற்றியும், பிறிதொரு நேரத்துப் பிறிதொரு பொருளைப்பற்றியும் ஓரிடத்தும் நிலைபெறலின்றிக் குரங்குபோல் ஓடுதலாலன்றோ நம்மறிவு விளக்கமடைதலின்றி மழுங்கியே கிடக்கின்றது. அறிவு விளங்காது மழுங்கிக் கிடக்குமாயின், அதன் மேற்பட்ட உணர்வு எழுப்பெறுதல் ஒருவாற்றானு மில்லை. ஆகவே, கறங்கோலைபோல் ஒருவழி நில்லாது சுழன்று திரிதரும் நம்மறிவை ஓர் ஒழுங்குற ஒருமுகப்படுத்திக்கொண்டு சென்று உணர்வெழச் செய்தலே நல்லிசைப் புலவர்க்கு இன்றியமையாத நெறியாம்."

ஆராய்ச்சிப் பகுதி-Research

சேலம் கோட்டை

[இராவ்சாஹிப் திரு C. M. இராமச்சந்திரஞ் செட்டியார், B.A.]

சேலம், திருமணிமுத்தாறு என்ற ஆற்றின் இருகரையிலும் கட்டப்பட்ட ஊராகும். பெங்களூர், திரிச்சி, கூடலூர் இம்மூன்று ஊர்களிலிருந்தும் வரும் பாதைகள் இங்கே கூடுகின்றன. வடக்கே 5 கல்லில் சேர்வராயன் மலையும் தெற்கே ஜெருகு மலையும், மேற்கே கஞ்ச மலையும் கிழக்கே கோடுமலையும் இருக்கின்றன. ஊரைச் சுற்றிலும் பசுமையாகப் பயிர்கள் முளைத்து இவ்வூருக்கு அழகைக் கொடுக்கின்றன. சாலை ஓரங்களிலெல்லாம் பெரிய மரங்கள் அழகாகவும் வரிசையாகவும் வளர்ந்திருக்கின்றன. இவ்வூரைத் திருமணிமுத்தாறு என்ற நதி இரண்டு பிரிவுகளாகப் பிரித்து நடுவில் ஓடுகின்றது. நதிக்குக் கிழக்கே சேலத்தின் முக்கிய பாகமும் மேற்கே செவ்வாய்ப் பேட்டையும் இரண்டுக்கும் நடுவில் நதியின் வலது பக்கத்தில் கோட்டையும் இருக்கின்றன. இருபாகங்களையும் இணைக்க ஒரு பாலம் கட்டப்பட்டிருக்கிறது.

கோட்டையானது சேலத்தின் மிகப் பழைமையான பாகம். அதன் கிழக்கிலும் தெற்கிலும் திருமணி முத்தாறு ஓடுகிறது. ஆனால் வடக்கிலும் மேற்கிலும் அவ்விதக் காப்பு இல்லை. ஆகவே இப்பாகங்களில் எதிரிகள் கோட்டையை எளிதில் தாக்க முடியும். பழைய காலத்து மதில் சுவர்களில் இப்போது கிழக்கு மதில் மாத்திரம் நிற்கிறது. அது காடு முரடான கற்களைக் கொண்டு மண்ணினால் கட்டப்பட்டிருக்கிறது. இப்போதுள்ள பாகம் வைத்திய சாலையி (Hospital) லிருந்து மூலை அணைக்கட்டுவரை செல்கிறது. இம்மூலையில் முற்காலத்தில் ஒரு தெப்பக்குளம் இருந்தது. அக்குளத்திற்கு முன் சொல்லிய அணைக்கட்டிலிருந்து நீர் வந்துகொண்டிருந்தது. அக்குளத்திலிருந்து கோட்டை அகழிக்கு நீர் பாய்ந்துகொண்டிருந்தது. இப்போது அணை உடைந்துவிட்டபடியால் தண்ணீர் வருவதில்லை. கோட்டையின் தென்புறத்து மதில் இடிந்து தரை மட்டம் ஆக்கிவிடப்பட்டது. அதற்கு வெளியில் இருந்த அகழியும் மூடிவிடப்பட்டது. அவ்வகழியிருந்த இடத்தில் ஒரு வீதி உண்டாக்கப்பட் டிருக்கிறது. மதில் இருந்த இடத்தில் வீடுகள் கட்டியிருக்கிறார்கள். கோட்டையின் மேற்குச் சுவர் இலண்டன் மிஷன் சங்கத்தாருடைய மதில் சுவரிற்கு நேராக இருந்தது. அதற்கும் அச்சங்கத்தாருடைய விடுதிக்கும் மத்தியில் இப்போது சாலைமரங்கள் நிறைந்த ஒரு பெரிய தெருவு இருக்கிறது. ஆதியில் இச்சாலை மரங்கள் ஒரு சந்தை ஏற்படுத்துவதற்காக நடப்பட்டன. ஆனால் அங்கிருந்த இடம் சந்தைக்குப் போதாமல் இருந்ததாலும் சுகாதாரக் குறைவாயிருந்ததாலும் சந்தையை அவ்விடமிருந்து செவ்வாய்ப் பேட்டைக்கு

மேற்கில் மாற்றி விட்டார்கள். கோட்டையின் கீழ் மதிலில் ஆறு கொத்தளங்கள் இருந்தன. அங்கே ஒரு மண்மேடும் இருந்தது. இவை எல்லாம் இலண்டன் மிஷன் சங்கத்தாரது விடுதிக்குள் இருந்துவிட்டன. அவைகளைப் பிற்காலத்தில் அழித்து விட்டார்கள் போல் இருக்கிறது. இவ்விடத்திற்குக் கீழ்ப்பாகத்தில் பள்ளமான இடங்கள் இப்போதும் தென்படுகின்றன. அவைகள் முற்காலத்தில் கோட்டையின் பாதுகாப்பிற்காகத் தோன்றியிருக்கலாம்.

கோட்டையின் முக்கிய வாசல் வடபுறத்தில் இருந்ததாம். ஆனால் இப்போது வடபுறத்து மதில் இருந்த இடமே தெரியவில்லை. இப்போது இருக்கும் உயர்தரப் பாடசாலை, நகர சபா மண்டபம் இவைகளின் பின்புறத்தில் நிலம் மிகவும் தளர்வாக இருக்கிறது. ஆகவே இவ்விடத்தில் முற்காலத்தில் கோட்டையின் அகழி இருந்திருக்கலாம் என்று தோன்றுகிறது. இந்த இடத்தில் மண்ணினுடைய தன்மையைக் கவனித்துப்பார்த்தால் பால்பிள்ளைத்தெரு வழியாக அகழி இருந்திருக்க வேண்டுமென்று கூறலாம்.

கோட்டைக்குள் இருக்கும் முக்கிய கட்டிடங்கள் மகமதியருடைய பள்ளி வாசலும் சுந்தரராஜப் பெருமாள் கோயிலுமாம். பள்ளி வாசல் வெளித் தெருவின் மட்டத்திற்கு இரண்டடிக்குக் கீழும் பெருமாள் கோயில் 4 அடிக்குக் கீழும் தாழ்ந்திருக்கின்றன. இங்கே மஹால் என்று சொல்லக்கூடிய மற்றொரு பாழடைந்த கட்டிடம் இருக்கிறது. திப்பு சுல்தான் காலத்தில் இக்கோட்டைத் தலைவனும் மேஷ்கானுமாயிருந்த இஸ்மேல்கான் என்பவனுடைய கச்சேரி ஜாகா இருந்ததாம். அவனுடைய வீடு இதற்கு மேற்கே இருக்கும் ஓர் உயர்ந்த நிலத்தில் இருந்ததாம். அந்த இடத்தில் இப்போது சிறு வீடுகள் நிறைந்திருக்கின்றன. இதற்கருகில் ஒரு தென்னந்தோப்பும் அதில் ஒரு ஆழமான குளமும் இருக்கின்றன. குளத்துக் கைப்பிடிச் செங்கற்களைப் பார்த்தால் அது மிகப் பழையது என்று சொல்லவேண்டும். தோப்பானது பெருமாள் கோயிலுக்குச் சேர்ந்த நந்தவனமாக முந்தியிருந்தது.

பழைய கலெக்டர் பங்களாவுக்கு எதிரில் ஒரு ஜெயின விக்கிரகம் இருக்கிறது. அது யோகத்தில் உட்கார்ந்த பாவனையாக இருக்கிறது. அதனைப் பொது மக்கள் தலைவெட்டி முனியப்பன் என்று சொல்லுவார்கள். ஜெயின மதத்தின் ஒப்பற்ற விதிகளுக்கு விரோதமாக இவ்விக்கிரகத்திற்கு மக்கள் ஆடு, கோழி இவைகளைப் பலியிட்டு இரத்தத்தை அதனிடத்துச் சிந்துவார்கள். இந்த ஜெயின விக்கிரகத்திற்கு அடுத்தாற்போற் சிறிது தூரத்தில் தீப்பாய்ந்தவம்மன் கோயில் என்ற சிறு கோயில் இருக்கிறது. அங்கே 18 அங்குலம் உயரமுள்ள ஒரு பலகைக்கல் நாட்டப்பட்டிருக்கிறது. அதில் இரண்டு மனித உருவங்கள் செதுக்கப்பட்டிருக்கின்றன. அவ்விரு உருவங்களும் பெண் உருவங்கள். அதைப்பற்றி வழங்குகிற கர்ண பரம்பரைக்கதை என்னவெனில் ஒப்பனைக்கார வகுப்பில் திருமலையம்மாள், வீர வெங்கடம்மாள் என்ற இரண்டு பெண்கள் இருந்தார்கள் என்றும் அவர்களுடைய கணவர்கள் யுத்தத்தில் இறந்த செய்தி கேட்டதும் இந்த இடத்தில் அவ்விருவரும் உடன்கட்டை ஏறினார்கள்

என்றும் அச்செய்தியைச் சிறப்பிப்பதற்காக இவ்விரு உருவச் சிலைகளும் நாட்டப்பட்டனவென்றும் வழங்கி வருகிறது. இவ்விதமான சிலைகளுக்கு மாதிக்கல் அல்லது மாஸ்திக்கல்* என்று சொல்லுவார்கள்.

மேற் சொல்லிய இலண்டன் மிஷன் விடுதிக்கு மேற்கே உள்ளது செவ்வாய்ப் பேட்டை என்ற ஒரு பாகம். இவ்விடத்தில் செவ்வாய்க் கிழமை தோறும் சந்தை கூடுவதால் இதற்குச் செவ்வாய்ப் பேட்டை என்று பெயர் வந்ததாம். கோட்டையில் முகமதியர்கள் அதிகமாகக் குடியிருக்கின்றனர். இவர்கள் எல்லோரும் உருது பேசும்படியான பட்டாணியர், ஷேக், சையித், முகல் முதலிய வகுப்பார்கள். இவர்கள் சேலம் ஊரிலுள்ள லப்பை (தமிழ் பேசுபவர்) முகமதியருடன் அதிகமாகக் கலப்பதில்லையாம்.

1792 கி. பியில் சேலம் ஆங்கிலர் வசம் வந்தது. அப்போது சேலத்தை ஒரு இராணுவ ஸ்தலம் ஆக்கினார்கள். அங்கே சென்னை 22 வது பட்டாளத்தின் ஒரு பகுதியை வைத்திருந்தார்கள். 1766ல் அதனை 3 வது பட்டாளத்தோடு சேர்த்து விட்டார்கள். அப்போதிருந்த இராணுவத் தலைவன் மேக்டொனால்டு (Macdonald) என்பவன் பட்டாளத்தினுடைய இருப்பிடம் சங்ககிரி துர்க்கத்தில் இருந்தது. 1899ல் லார்ட் கிளைவ் என்பவர் மறுபடியும் சங்ககிரி துர்க்கத்திலிருந்து சில துருப்புகளைச் சேலத்திற்கு மாற்றினான். 1823ல் கேப்டன் பீல்டு (Capt Field) என்பவன் சங்ககிரி துர்க்கத்திலிருந்து தன் சேனையோடு சேலத்திற்கே வந்து விட்டான். 1850வது ஆண்டு வரையில் சேலம் இராணுவ ஸ்தலமாக இருந்தது அந்த ஆண்டில் சேனைகளை திரிசிராப்பள்ளிக்கு மாற்றிவிட்டார்.

சேலத்தின் பெரும்பாகம் ஜமீனுக்குச் சேர்ந்தது. முதல் ஜமீன்தார் கந்தப்ப செட்டி என்பவர். அவர் இறந்துபோக அவருடைய மனைவி நைனம்மாளிடத்திலிருந்து 1836 மே மாதத்தில்பிஷ்ஷர் (Fisher) என்ற இங்கிலீஷ்காரன் விலைக்கு வாங்கினான். அவன் 1867 ஜூலையில் இறந்துபோக அவன்மகளுக்கு அச்சொத்து சேர்ந்து விட்டது. அவள் பொகிஸ் (Foolks) என்ற ஒரு வித்துவானை மணம் செய்து கொண்டாள். இவ்விதமாகச் சேலம் ஜமீன் ஒரு இங்கிலீஷ்காரனுடைய வசத்தில் சேர்ந்து விட்டது. இந்த ஜமீனுக்கு 32,000 ரூபாய் வரும்படி வருகிறது.

சேலத்திலிருந்து பார்த்தால் தென்கிழக்கில் மலையில் ஒரு பெரிய நாமத்தைப் பார்க்கலாம். இந்நாமம் 40 அடி நீளமும் 6 அடி அகலமும் கொண்ட கோடுகளைக் கொண்டது. இந்நாமகிரிக்குக் கீழே 80 அடி உயரமுள்ள சந்நியாசி குண்டு என்ற பெரிய பாறையிருக்கிறது. இக்குண்டுக்குக் கீழே ஒரு குகை யிருக்கிறது. இக்குகைக்கும் சேலத்தில் ஒரு பாகமாகிய குகையில் இருக்கும் முனியப்பன் கோயில் குகைக்கும் ஒரு சுரங்கம் இருப்பதாகச் சொல்லுவார்கள். இச்சந்நியாசி குண்டு மலையிலிருந்து உருண்டு வரும்போது ஒரு சந்நியாசி அதனைத் தன்காலாலும் கைகளாலும் தடுத்து நிறுத்தியதாகச் சொல்லுவார்கள். சந்நியாசியின் கால் கை அடையாளம் இப்பாறையில் காட்டுகிறார்கள்.

* மகா சதிக்கல் என்பதன் மரூஉ. (கு. ஞா.)

சேலத்துச் சிவாலயம் சுகவனேஸ்வரர் ஆலயமாகும். இவ்வாலயத்தில் சோழ பாண்டியர் கல் வெட்டுகள் இருக்கின்றன. அவைகளில் சுவாமியின் பெயர் 'கிளி வர்ணமுடையார்' என்று கண்டிருக்கிறது. கோபுரத்திற்கும் மஹா மண்டபத்திற்கும் மத்தியில் 80 தூண்களைக் கொண்ட ஒரு பெரிய மண்டபம் இருக்கிறது. கல்யாண மண்டபத்தை 1823-வது ஆண்டில் கலெக்டராயிருந்த டேவிஸ் (Davis) என்பவர் கட்டினதாகச் சொல்லுவார்கள்.

கோட்டையிலிருக்கும் விஷ்ணு ஆலயம் சௌந்தரராஜப் பெருமாள் ஆலயம். அதில் சுந்தரபாண்டிய தேவனுடைய 24-வது ஆண்டு சாசனங்கள் 3 இருக்கின்றன. இப்பாண்டியனுடைய பெயராலே கோயிலும் ஏற்பட்டிருக்கலாம். இப்பாண்டியன் 1274 முதல் 1302-வரை ஆண்ட சுந்தரபாண்டின் என்பவராக இருக்கலாம். அல்லது ஒரு கொங்குப் பாண்டியனாகவும் இருக்கலாம். இவ்வாலயத்துக் கடவுளை அழகிரிசுவாமி என்றும் சொல்லுவார்கள். மதில்கள் மிகப் பெரியவை. மகாமண்டபம் பெரிதாகவும் 66 தூண்கள் கொண்டதாகவும் இருக்கிறது. ஆலயச் சந்நிதிக்கு எதிரே ஒரு பெரிய அநுமார் உருவம் இருக்கிறது. தென்கிழக்கு மூலையில் ஒரு கிணறும் அதற்குள் ஒரு சுரங்க வழியும் இருக்கிறது. வடகிழக்கு மூலையில் டேவிஸ் கட்டிய மண்டபம் ஒன்று இருக்கிறது.

கோட்டைக்குள் இருக்கும் பள்ளிவாசல் மிகப் பழைமையானது. அது சாதாரணமாகவும் மிகப் பலமுள்ளதாகவும் இருக்கிறது. அதில் சிற்பவேலை ஒன்றும் இல்லை. சமீபத்தில் ஸ்தூபிகளைக் கட்டியிருக்கிறார்கள். இதனைச் சின்ன மசீது அல்லது நவாப் மசீது என்று சொல்லுவார்கள். திருமணிமுத்தாற்றுக்கு இடது புறத்தில் திப்பு சுல்தான் கட்டினதாகச் சொல்லும் மற்றொரு பள்ளி வாசலும் இருக்கிறது. இதற்கு அடுத்தாற்போல் ஒரு முகமதிய மயானத்தில் சேலம் கில்லேதார் இஸ்மேயில்கான் என்பவனுடைய சமாதி இருக்கிறது.

சேலம் என்ற பெயரின் காரணம் சரியாக விளங்கவில்லை. சேலை என்ற பதத்திலிருந்து வந்ததாகச் சொல்லுவர். இவ்வூரில் நெசவுத் தொழில் அதிகம் என்றும் அத்தொழிலிலும் சேலைகள் நெய்வது அதிகம் என்றும் அதனால் சேலம் என்று பெயர் வந்ததென்றும் ஒரு காரணம் கூறுவர். சௌந்தர ராஜப் பெருமாள் கோயிலில் உள்ள சுந்தர பாண்டியனுடைய 26-வது ஆண்டுக் கல்வெட்டில் இவ்வூரை ராஜஸ்ராய சதுர்வேத மங்கலம் என்று கூறப்பட்டிருக்கிறது. இவ்வூரில் ஒரு அக்கிரகாரம் கட்டுவதற்குத் தானம் செய்த ஓர் அரசன் தன் பெயரால் இவ்விதப் பெயரை நிலை நாட்டி இருக்கலாம். ஆகவே இப்பெயர் மத்தியில் வந்த பெயராய் இருக்கவேண்டும். உத்தமச் சோழ புரத்தில் உள்ள கிருஷ்ண ராஜனுடைய சாசனம் ஒன்றில் சேல நாடு என்ற பெயர் கண்டிருக்கிறது. எத்தாப்பூரிலுள்ள கிருஷ்ணராஜ உடையார் சாசனம் ஒன்றில் சேர நாட்டில் உள்ள சால்யம் என்ற பெயர் கண்டிருக்கிறது. சேர்வ ராயன் மலையின்மீது வசிக்கும் பூர்வ ஜனங்களாகிய மலையாளிகள் சேலநாட்டைச் சேர நாடு என்பதன் திரிபு என்று கர்ண பரம்பரையாகச் சொல்லுவார்கள். அவர்களுடைய பத்ததிப்படி ஒரு சேர அரசன் சேலத்தி

லும் சேர்வராயன் மலையிலும் வந்து தங்கினதாகவும் அவன் பெயரால் அந்நாடும் அம்மலையும் பெயர் பெற்று வந்த தென்றும் கூறுவர். இக் காரணத்தை ஆராய்ச்சியாளர்கள் அதிகமாக எடுத்தாளுவதில்லை.

கொங்கு மண்டல சதகப்படியும் ஊர்த்தொகையின் படியும் சேர நாடு என்பது 24 நாடுகளில் ஒன்றாகும். கர்ண பரம்பரையின்படி கல்வியிற் சிறந்த ஔவையார் அவதரித்தது சேலம் என்பார்கள். ஆனால் இன்னும் பல ஊர்கள் ஔவையாருடைய அவதார ஸ்தல மாகக் கொண்டாடப்படுவதுமுண்டு.

சேலத்திலுள்ள சுகவனேஸ்வரர் சௌந்தரராஜர் ஆலயங்களில் சோழ பாண்டிய அரசுகளுடைய கல்வெட்டுகள் 17 வரை காணலாம்.

தாரமங்கலத்திலுள்ள ஹாயிசள மன்னர்களுடைய 1274-ம் ஆண்டிய கல்வெட்டைக் கொண்டு சேலம் அக்காலத்தில் ஹாயி சளர்களுடைய ஆட்சிக்கு உட்பட்டிருந்தது என்று சொல்லலாம். பிறகு விஜயநகரத்து அரசர்கள் வசத்தில் சென்றது. விஜய நகரம் க்ஷீணதசை அடையவே மதுரையார் ஆட்சிக்குள் சென்றது. மதுரை நாயக்கன்மார்கள் நாடுமுழுவதும் பாளையக்காரர்களை ஏற் படுத்தி அவர்கள் மூலமாக ஆண்டுவந்தார்கள், சேலமும் ஒருபாளையக் காரனுடைய வாசஸ்தலமாக இருந்தது. அக்காலத்தில் இராஜ்ஜியத் தின் நிலைமை எவ்வாறு இருந்த தென்பதற்கு மதுரை மிஷன் என்ற மிஷன் பாதிரிமார்கள் எழுதிவைத்த புத்தகங்களிலிருந்து அறியலாம்.

1624-ல் ராபர்ட் டி நொபிலி (Robert De Nobeli) என்ற பாதிரி சேலத்துக்கு வந்திருந்தார். அக்காலத்தில் சேலத்தில் சலபட்டி நாயகர் என்பவன் அதிகாரம் செலுத்திவந்தான். அவன் மதுரை நாயகன் கீழ் ஆண்ட ஒரு சிற்றரசன். அப்போது சேந்தமங்கலத்தில் பாளையக்காரனாய் இருந்த இராமச்சந்திர நாயகனை விடச் சேலத்து நாயகன் பராக்கிரமசாலியாக இருந்தான். (சேந்த மங்கலத்தில் பாளையக் காரனாயிருந்த திருமங்கல நாயகனை அவன் தம்பி இராமச் சந்திர நாயகன் துரத்திவிட்டுப் பட்டத்திற்குவந்தான். அவ்விதம் துரத்தப்பட்ட திருமங்கல நாயகன் சேலத்து நாயகனிடம் அடைக்கலம் புகுந்திருந்தான். அப்போது கிருஸ்துவ மார்க்கத்தை உபதேசித்துக் கொண்டிருந்த நொபிலி பாதிரியார் பேச்சுகளைத் திரு மங்கல நாயகனும் அவனுடைய ஐந்து மக்களும் கேட்டுக் கொண் டிருந்தார்கள். இதனைக்கேட்ட பிராமணர்களுக்குப் பயம் உண்டா யிற்றும். ஏனெனில் இராமச்சந்திர நாயகனுக்குச் சந்ததி யில்லா மல் இருந்தால் அவனுக்குப் பிறகு திருமங்கலனுடைய 20 வயதுள்ள மூத்த மகன்தான் பட்டத்திற்கு உரியவனாயிருந்தான். அவன் கிருஸ்தவ னாகி விட்டால் தேச ஆசாரம் கெட்டுவிடும் என்று எண்ணி நொபிலிப் பாதிரியார் சேலத்தைவிட்டுக் கொச்சிக்குப் போனவுடனே அவ்வூர்ப் பிராமணர்கள் சேலத்து நாயகனை, சேந்தமங்கலம்மீது படை எடுக்கத் தூண்டினார்கள். இந்தக் கபடமான எண்ணத்தைத் திருமங்கல நாய கன் அறிந்தவுடனே தனது நான்கு பிள்ளைகளுடன் மோரமங்கலத் துச் சிற்றரசனிடம் அடைக்கலம் புகுந்தான். அப்போது இருந்த மோர மங்கலத்துச் சிற்றரசர்கள் கெட்டி முதலியார்கள். அவ்வூரில் சில நாள்களில் திருமங்கலன் கிருஸ்துவனாகி விட்டான்.

நொபிலிப் பாதிரியார் தன் மார்க்கத்திற் சேர்த்துக் கொண்ட கிருஸ்துவர்களின் பிற்கால சரிதம் தெரியவில்லை. சேலத்து நாயகன் மதுரைக்குக் கீழ் ஆண்ட 72 பாளையக் காரர்களில் ஒருவனுக இருக்கலாம். 1659-ல் இறந்துபோன திருமலை நாயகன் காலம் முழுதும் இப்பாளையக்காரர்கள் அவனுக்கு அடங்கியே இருந்தார்கள். சேலத்து நாயகனுடைய உதவி மதுரைக்கு அவசியம் வேண்டி இருந்தது. ஏனெனில் தஞ்சை, திருச்சிமுதலிய இடங்களுக்கு ஆத்தூர்க்கணவாய் வழியாகச் சேலமானது ஒருமுக்கிய இடமாக இருந்தது. 1663-ல் சென்னம நாயக்கன் என்பவன் சேலத்துப் பாளையக்காரனுக இருந்தான். அவன்தான் சென்னம'சமுத்திரம் என்ற ஊரை ஒரு பிராமணனுக்குத் தானம் கொடுத்தவன். இவனைச் சென்னப்ப நாயகன் என்றும் கூறுவார்கள். இவன்தென்கரைக் கோட்டை கட்டினவன். மற்ருெரு பாளையக்காரன் பெயர் சீர நாயகன் என்பது.

திருமலை நாயகனுக்குப் பிறகு மதுரை க்ஷீணமடையவே மைசூரார் அத்தலத்தைக் கைக்கொண்டனர். ஹைதர் காலத்தில் சேலம் அவன்வசம் இருந்தது. முதல் மைசூர் யுத்தத்தில் அதாவது 1678-ல் கர்னல் உட்என்பவன் ஹைதர் அலியிட மிருந்து சேலத்தைப் பிடித்தான். அதேவருஷம் டிசம்பர் மாதம் 9-ம் தேதியில் ஹைதர் சேலத்திற்குவந்து கோட்டையை விட்டுவிடும்படி கேட்டான். கோட்டைக்குள் கேப்டன் ஹேயில் என்பவனும் அவனுக்குக்கீழ் மூன்று பட்டாளங்களும் இருந்தன. அப்போர்வீரன் சரணமடைய முடியாதென்று மறுத்துவிட்டான். டிசம்பர் 10-ம் தேதியில் ஹைதர் கோட்டையைத் தாக்க ஆரம்பித்தான். ஆனுல் ஒன்றும் பயன்படவில்லை. அன்றைய சாயந்திரம் ஹைதரிடமிருந்து ஒரு ஐரோப்பிய தூதன் வந்து கோட்டையையும் சாமான்களையும் ஒப்புவித்துவிட்டால் சேனைகளை ஆயுதங்களுடன் திருச்சிக்கு அனுப்பமுடியும் என்று சொன்னுன். இந்நிபந்தனையை ஆங்கிலர்கள் ஒத்துக்கொள்ளவில்லை. ஆகவே மறுபடியும் ஹைதர் தாக்கினுன். மறுநாள் கேப்டன் ஹேயில் என்பவன் தன் சிறு சேனை போரில் நிற்கமுடியாது என்று கண்டு முன் சொல்லி அனுப்பின நிபந்தனைகளை ஒத்துக்கொள்வதாகச் சொல்லியனுப்பினுன். மற்றும் அவ் ஒப்பந்தத்தை எழுதவேண்டுமென்றும் கேட்டான். ஆனுல் ஹைதர் தன் வார்த்தையே போதுமென்றும் தான் எழுதிக் கொடுக்க முடியாதென்றும் சொல்லி விட்டான். மேலும் தாம் சொன்ன நிபந்தனைகளுக்கு உட்பட்டுச் சரண் அடையாமல் இருந்தால் எல்லாரையும் வெட்டி விடுவதாகப் பயமுறுத்தினுன். இதனைக் கேட்டுக் கேப்டன் ஹேயில் கோட்டையை விட்டு வெளியே வந்தான். ஆனுல் ஹைதர் தான் சொன்னதற்கு மாருக அவனையும் அவன் ஆட்களையும் கைது செய்து விட்டான்.

சேலம் ஆங்கிலர் வசம் வந்த சில ஆண்டுகளுக்குப் பிறகுதான் முக்கிய நிலைமைக்கு வந்தது. ஆனுல் ஜில்லாவின் தலைநகர் என்ற உரிமை 1860-ல் தான் அதற்குக் கிடைத்தது.

—

இலக்கண அறிவும் கட்டுரை வன்மையும்

[திரு. காழி. சிவ. கண்ணுசாமியவர்கள் B. A.]

சிற்ப நூலை யறிந்திருப்பதற்கும் தச்சுவேலை செய்யத் தெரிந்திருப்பதற்கும் எத்துணை வேறுபாடு உளதோ அத்துணை வேறுபாடு கட்டுரைக்கும் வன்மைக்கும் இலக்கண அறிவுக்கும் இருக்கின்றது.

மண்ணையோ சுண்ணம்பையோ ஏற்றவாறு குழைத்துக் கொண்டு கற்களைப் பதித்தடுக்கி மட்டம் பார்த்துச் சுவர் முதலிய எழுப்புவதான கொத்துவேலை ஒருவனுக்குத் தெரிந்திருக்கலாம். மரங்களைக் கொத்தியும் செதுக்கியும் அறுத்தும் இழைத்தும் வேண்டியாங்கு வேண்டியவாறு சீர்ப்படுத்திக் கொள்ளும் தச்சுவேலை மற்றொருவனுக்குத் தெரிந்திருக்கலாம். பாறைகளைத் தகர்த்து எடுக்கப்படுங் கருங்கற்களைச் சிற்றுளியும் சிறு சுத்தியுங் கொண்டு தக்கவாறு பொளிந்து பளிங்கனைய சலவைக் கற்களாக இழைக்கும் கற்றச்சு வேலை வேறொருவனுக்குத் தெரிந்திருக்கலாம். ஆயினும் இவைகளைத் தெரிந்திருப்பதனாலேயே அம் முத்திறத்தினரையும் சிற்ப நூல் வல்லுநர் என்று கொள்ளுதல் பொருந்துமோ? குடியிருக்குஞ் சிறு மனையமைப்பதற்கும், அணி தேர்ப் புரவி யாட் பெரும் படையொடு அண்ணல் வதியும் அரண்மனை கட்டுவதற்கும், அரசர்க்கரசரும் அடியார்க் கெளியருமான இறைவன் எழுந்தருளுந் திருக்கோவில் இயற்றுதற்கும் வெவ்வேறு யமைந்துள்ள சட்ட திட்டங்களை அம் மூவரும் சிற்ப நூல் முறைப்படி அறிந்திருப்பார்களென்று கொள்ளல் கூடுமோ? கூடாதன்றே.

அவ்வாறே, ஒலி எழுத்தாகவும், எழுத்து சொல்லாகவும், சொல் தொடராகவும் எவ்வாறு தோன்றி ஒன்றோடொன்று புணர்ந்து உருவாகின்ற தென்பதுணர்த்தும் இலக்கணங் கற்றுணர்ந்த இலக்கண அறிவிற்கும், ஒரு பொருளைக் குறித்துக் கொண்டு முற்கூறிய இலக்கண வரம்பிகவாமல் அப் பொருளை விளக்கியும் பெருக்கியுங் கூறும் கட்டுரை வன்மைக்கும் பெரியதோர் வேறுபாடு உண்டென்பது எளிதி னுணரப்படும். கொத்துந் தச்சுங் கற்றச்சு மின்றிச் சிற்பம் உருப்பெறுமாறில்லை. எழுத்துஞ் சொல்லுந் தொடருமின்றிக் கட்டுரை முடிவு பெறுமாறில்லை. கொத்துந் தச்சுங் கற்றச்சும் ஒருங்கே ஒத்துழைத்துச் சிற்பநூல் விதித்தவாறு அமைந்து உருப் பெறுவதே சிற்பமெனப்படும். அற்றே, எழுத்துஞ் சொல்லுந் தொடரும் இலக்கண விதிப்படி நன்கியைந்து எழுதுவோனின்


கருத்திற்கும் அறிவுத் திறனிற்கும் ஏற்றவாறு தொழிற் படுவதே கட்டுரையாகும்.

இனி, இலக்கணமோ பண்டை யிலக்கியங்களிற் கையாளப்பட்டுள்ள முறையை ஆய்ந்து வகுத்த ஓர் அளவையாகும். கட்டுரைவன்மையோ ஒவ்வொருவனுடைய நுழை புலனையும் திருந்திய உணர்ச்சியையும் பற்றி யமைந்து வேறுபாடுறும் ஓர் ஆற்றலாகும். எனவே, இலக்கண அறிவென்பது அமைக்கப்பட்ட விதிகளுக்கியைந்தவாறு சொற்களைப் பாகுபடுத்தும் பொறி போன்றதொரு செயற்கைக் கருவியாகும். கட்டுரை வன்மையோ அறிவையும் படைக்குமாற்றலையும் பற்றியெழும் ஓர் இயற்கைத் திறனாகும்.

இன்னும், இலக்கணம் புறத் தொழிற் பண்பாயின் கட்டுரை வன்மை அகத் தொழிற் பண்பாம். சொற்பிழை என்பதின்றித் திருந்திய வகையிற் பேசவோ எழுதவோ பயன்படுவது இலக்கணம். தெளிவாகவும் கேட்போர் உள்ளத்திற் பதியுமாறும் ஒரு பொருளை எடுத்துக்கொண்டு பேசவோ எழுதவோ பயன்படுவது கட்டுரை வன்மை. சுருங்கக் கூறின் இலக்கணம் என்பது பண்பும் கட்டுரை யென்பது பயனுமாகும்.

(மறைமலை யடிகள்)

“ தமிழ் மொழியிலுள்ள செய்யுளின் ஓசை அமைதியே பா என்று பெயர் பெறுவதாம். ஒருவன் தொலைவிடத்திலிருந்து ஒரு பாட்டுப்பாட அப்பாட்டின் சொற்பொருள் இவை யென்று புலப்படாவாயினும், அவ்வோசை வருமாற்றை உய்த்துணர்ந்து காண்பானுக்கு அவன் பாடுஞ் செய்யுள் இன்ன பா வென்று அறியக் கிடக்கும். இங்ஙனம் நுண்ணிய விசும்பின்கண் அலைஅலையாய் எழும்பி ஓர் ஒழுங்காக வரும் ஓசையே பாவாகுமெனத் தொல்காப்பியச் செய்யுளியலுரையிலே பேராசிரியரும் நன்கு விளக்கினர்.”



சிவஞானபோதக் கருத்து

[திரு. மா. வே நெல்லையப்ப பிள்ளை, பி. ஏ.]

(முன் உகஎ-ஆம் பக்கத் தொடர்ச்சி)

மூன்றாவதுசூத்திரம். ஏழாவது அதிகரணம்

31. புத்தர், சௌத்திராந்திகர் யோகாசாரர் மாத்தியமிகர் வைபாடிகர், என்னும் நால் வகையர். அவருள் சௌத்திராந்திகர், வைபாடிகர் என்னும் இரு வகையாரும் சமுதாய ஆன்மவாதிகள். சமுதாயம் என்பது கூட்டம், திரள், சமுதாயம், புறச்சமுதாயம் என இருவகை. புறச்சமுதாயமும் அகச்சமுதாயமும் சேர்ந்து கணந்தோறும் தோன்றி அழியும் உலகமாகும். அகச்சமுதாயத்தாற் புறச்சமுதாயம் அறியப்படும். புறச்சமுதாயம் நிலம், நீர், தீ, வளி என்பன. புறச்சமுதாயத்திற்குக் காரணம் பரமாணுக்கள். அகச்சமுதாயம் சித்தமும், சித்தப் பகுதியுமாம். அகச்சமுதாயத்திற்குக் காரணம் உருவம், வேதனை, ஞானம், குறி, வாதனை என்ற ஐந்து கந்தங்களும். கந்தம் என்பது திரள். இந்த ஐந்து கந்தங்களும் சேர்ந்து ஆன்மா என்று கூறுங்கொள்கையர் சமுதாய ஆன்மவாதிகள் ஆவர்.

இக்கொள்கையை மறுப்பதற்கெழுந்தது இந்த ஏழாவது அதிகரணம்.

32. "இனி மாயா வியந்திரந்திரதனுவினுள் ஆன்மா உளது" என்பது அதிகரணம் மேற்கோள். மாயை என்பது இங்கே ஆகுபெயராய் மாயா காரியமாகிய தத்துவங்களைக் குறிக்கிறது. மாயை என்ற சொல் யந்திரம் (Machine) சொல்லுடன் சேருங்கால் நிலைமொழி ஈற்றிலுள்ள ஐகாரம் ஆகாரமாகத் திரிந்தும், இரு சொற்களுக்கும் இடையில் இகரம் தோன்றி விரிந்தும், வகர உடம்படு மெய் தோன்றியும் மாயா வியந்திரம் என்றாயது. தனு என்பது உடம்பு. மாயா வியந்திரதனு என்பது தத்துவங்களால் ஆக்கப்பட்டு இயலும்

சூத்திரப் பாவைபோலும் உடம்பு என்று பொருள் படும். பல உறுப்புக்களோடு கூடிய ஒரு சூத்திரப்பாவையானது அதனை ஒருவர் கயிற்றினல் இழுக்க அசைதல் போல பல உறுப்புக்களோடு கூடிய உடல் ஒருயிரால் அசைக்கப்பட்டுத் தொழில் செய்கிறது என்பது உருவகத்தாற் பெறப்படும் பொருள்.

33. சமுதாய ஆன்மவாதி கூறும் கொள்கையாவது:—தூல உடம்பு, சூக்கும உடம்பு, இந்திரியங்கள், பிராணவாயு ஆகிய இவற்றுள் ஒவ்வொரு தத்துவக் கருவியும் ஆன்மா அன்று என்று நீர் முன் கூறியதை நான் ஒப்புக்கொள்கிறேன். (நாலாவது சூத்திரத்திற் கூறப்படும் அந்தக் கரணமும் ஆன்மா அன்று என்பதை இத்துடன் சேர்த்துக் கொள்ள வேண்டும்.) இந்தத் தத்துவக் கருவிகளில் ஒன்று குறைந்த வழியும் அறிவு நிகழாதாகையால் அத்தத்துவக் கருவிகளெல்லாங் கூடிய சமுதாயமே ஆன்மா என்றல் பொருத்த முடைத்து.

34. சமுதாய ஆன்மவாதி கூறியதைக் கேட்டு ஆசிரியர் கூறுகின்றார். தூலஉடம்பு, சூக்கும உடம்பு முதலிய தத்துவக் கருவிகள் எல்லாம் மாயா காரியங்கள். மாயா காரியங்களெல்லாம் நிலைபெறுதலின்றித் தோன்றி அழிவனவாகும். ஆதலின் நிலைபெறுதலில்லாத தத்துவக் கருவிகள் எல்லாம் சேர்ந்தாலும் அவை நிலைபேறுடையதாய் எப்பொழுதும் அழிவின்றி நிற்கும் ஆன்மா ஆகா.

35. ஆசிரியர் கூறிய அறிவுரையைக் கேட்டுச் சமுதாய ஆன்மவாதி கூறுகின்றான். புறச்சமுதாயத்தைச் சேர்ந்த நிலம், நீர், தி, வளி, ஆகிய பூதங்கள் அழிவனவாகும். ஆனல் புறச்சமுதாயத்தை அறிவதாகிய சித்தமும், சித்தப் பகுதியுமாகிய அகச்சமுதாயம் ஐந்து கந்தமும் அழியுந் தன்மையுடைய மாயா காரியங்கள் என்பது எனக்கு உடம்பாடின்று. ஆதலின் அகச்சமுதாயமாகிய ஐந்து கந்தமுமே ஆன்மா. அகச்சமுதாயத்திற்கு வேறுய் ஆன்மா உண்டு என்று கூறுதல் பொருந்தாது.

36. சமுதாய ஆன்மவாதி சொன்னதைக் கேட்டு ஆசிரியர் கூறுகிறதாவது:—சித்தமும் சித்தப்பகுதியுமாகிய ஐந்து கந்தமும் மாயா காரியங்களே யாகும். நீ கூறுகிறபடி அவை மாயா காரியங்களல்ல என்று கொள்ளினும் அவை ஆன்மா எனப் பெயர் பெறுதலின்றி உருவம், வேதனை, ஞானம், குறி, வாதனை என ஐந்து வெவ்வேறு பெயாகள்பெற்று நிற்பன.

ஆதலின் ஐந்து வெவ்வேறு பெயர்கள் கொண்ட அச்சமுதாயம் ஒரு பெயர் பெற்று நிற்பதாகிய ஆன்மா ஆகும் என்று நீ கூறுதல் பொருந்தாது.

37. ஆசிரியர் கூறியதைக்கேட்ட சமுதாய ஆன்மவாதி மறுபடியுங் கூறுகின்றான். அகச் சமுதாயம் ஐந்து கந்தமும் வெவ்வேறு பெயர் பெற்று நிற்பதனால் என்ன? ஐந்து கந்தமும் கொண்ட சமுதாயத்துக்கு ஆன்மா என்று பெயரிட்டு வழங்குதற்கு இழுக்கு என்னையுளது?

38. சமுதாய ஆன்மாவாதி கூறியதைக் கேட்ட ஆசிரியர் மறுபடியுங்கூறுகின்றார். ஐந்து கந்தமும் கூடிய அகச் சமுதாயத்துக்கு நீ ஆன்மா என்று பெயரிட்டு வழங்கினும் அது ஆன்மா ஆகமாட்டாது. நீ புறச் சமுதாயம் அகச் சமுதாயம் என்று கூறியவை யெல்லாம் அளவைகளால் அறியப்படின் கீழே தூலத்திலிருந்து மேலே சூக்குமம் வரை மண் முதல் கலைஈறுகமுப்பத்தொரு தத்துவங்களில் அடங்கும். இந்த முப்பத்தொரு தத்துவங்களும் அசுத்த மாயையின் காரியங்களாதலின் நிலை பேறுடையன வாதலின்றிச் சில காலத்தில் நின்றழிவனவாகும். இந்த முப்பத்தொருதத்துவங்களுஞ் சேர்ந்த சமுதாயத்தின்கண் அதற்கு வேறாய் உன்னிடம் ஞான உணர்ச்சி தோன்றுதலை நீ அநுபவத்தில் பாத்து அறியலாம். அஃது எப்படியென்றால் நீ புறப்பொருள்களைச் சிறிதும் நோக்காது அவைகளிற் கருத்தும் வையாது கருத்தை ஒரு முகப்படுத்தி அசையாமலிருந்து உள் நோக்கிப் பார்ப்பாயாயின் அந்த முப்பத்தொரு கருவிகளாகிய சமுதாயமும் தூல சூக்கும பர*உடம்புகளாய் உனக்கு வேறாய்க் கண்ணுக்கு விளக்குத் தோன்றுதல் போலத் தோன்றும். கண் ஆன்மாப் போலவும் தூல சூக்கும பர உடம்புகள் விளக்குப் போலவும் உள்ளன. கண் விளக்கின் வேறாயினாற்போல ஆன்மா சமுதாயத் தாலாகிய தூல சூக்கும்பர உடம்புகளினின்றும் வேறு என்று அறிவாயாக.

[ஆசிரியர் இந்த அதிகரணத்தில் கருவிகளனைத்துங் கூடிய சமுதாயம் ஆன்மா அன்று என்று கூறி, கருவிகளனைத்தும் நீங்கிய துரியாதீதத்தில் ஆன்மா காட்சிப்படும் என்று கூறினர். ஆசிரியர் முன்னைய ஆறு அதிகரணங்களிலும் அந்தந்த வாதிகள் கூறும் பொருள்கள் கருவிகளும் பிரமமுமாவன அன்றி ஆன்மா அன்று

* தூல சூக்குமபர உடம்புகள் இன்ன என அறிதற்குச் சிவஞான சித்தியார் ௪-வது சூத்திரம் ௨௧, ௨௨, ௨௩, ௨௪ பாட்டுகளையும், சிவஞான பாஷ்யம் ௧௧௪, ௧௧௫ பக்கங்களையும் ஓதுக.

என்று மாத்திரம்எதிர்மறையிற்கூறி கருவிகள் அனைத்தும் சேர்ந்து ஆன்மாவாகும் என்று கூறிய சமுதாய ஆன்மவாதிக்கு அவன் கூறிய சமுதாயத்துக்கு வேறாய் ஆன்மா உண்டு என்பதை வலியுறுத்துதற்கு அவனையே உள்ளாக உற்றுப்பார்த்து அநுபவத்தில் அறியும்படி உடன் பாட்டிற்கூறிய வேறுபாடு நோக்குக. ஆன்மா அநுபவத்தில் அறியப்படும் பொருளல்லாமல் சுட்டியறியப்படும் பொருளுமன்று, சுட்டிக் கூறப்படும் பொருளுமன்று. ஆதலின் ஆசிரியர் அவ்வாறு கூறினார் என்பதறிக. ஆசிரியர் இவ்வாறு ஆன்மா உண்டு என்று வலியுறுத்திக் கூறியது அடுத்த சூத்திரத்திற் கூறப்போகும் ஆன்மா வின் இலக்கணத்துக்குத் தோற்றுவாய் செய்ததாயிற்று.]

39. இங்ஙனம் ஆசிரியர் மூன்றாவது சூத்திரத்தில் ஏழு வாதிகள் தங்கள் தங்கள் அறிவு நிலையில் நின்று ஆன்மா அல்லாத பொருளை ஆன்மா என்று மயங்கிக் கூறிய உரைகளைத் தமது உயர்ந்த அறிவு நிலையில் நின்று சிறந்த ஏதுக்களால் மறுத்துக்கூறி மயங்கவையாது அவரவர் அறிவு நிலைக் குத்தக்கபடி அவரவர் அறிவு மயக்கத்தை விளக்கிக் காட்டி அவரவர் கொண்ட கொள்கையை உண்மை அன்று என்று அறியும்படி செய்தார். இதனால் பல தர அறிவு நிலையிலுள்ள மாந்தருக்கு அறிவுறுத்தும் முறைமை இதுவே என்பது குறிப்பால் நமக்கு ஆசிரியர் அறிவுறுத்தியவாறாயிற்று.

40. இச்சூத்திரத்திற் கூறப்படாது எஞ்சி நின்ற அந்தக் கரண ஆன்மவாதியினுடைய கொள்கை அடுத்த சூத்திரத்திற் கூறப்பட்டு மறுக்கப்படும். ஒன்று, இரண்டு, மூன்று அதி கரணங்களில் உயிரினுடைய சாக்கிர அவத்தையும், நாலாம் அதிகரணத்தில் சொப்பன அவத்தையும், அஞ்சாம் அதி கரணத்தில் சுழுத்தி, துரியம், துரியாதீத அவத்தைகளும் தொகுத்துக் கூறப்பட்டன. இந்த அஞ்சு அவத்தைகளும் உயிரினது இலக்கணம் கூறப்படும். நாலாம் சூத்திரத்தில் விரித்துக் கூறப்படும் உயிருக்கு இடைவிட்டுநிகழும் அவத்தை வேறுபாடுகளும் உண்டாயின

41. மூன்றாவது சூத்திரத்துடன் பொது அதிகாரத்தின் கண் கூறப்படுகின்ற பிரமாண இயல் முற்றுப் பெறுகின்றது. இவ்வாறு ஆசிரியர் சைவாகம உரை அளவையால் அறியப் படுகின்ற பதியினது உண்மை, பாசத்தினது உண்மை, பசு வினது உண்மைகளை முறையே ௧, ௨, ௩ சூத்திரங்களிற் கருத லளவையாற் கூறி நிலை நாட்டி யருளினர். முதலாவது சூத்திரத்தில் முதல்வன் உலகிற்கு நிமித்த காரணனாயுளன் என்பதும், இரண்டாவது சூத்திரத்தில் முதல்வன் நிமித்த

காரணனுயிருத்தற்கு முதற்காரணம், துணைக்கர்ணங்கள் வேண்டப்படும் என்பதும், மூன்ருவது சூத்திரத்தில் முதல்வன் நிமித்த காரணங்களைக் கொண்டு ஐந்தொழில் உயிரின் பொருட்டுச் செய்கின்ருன் ஆதலின் அந்த உயிரினது உண்மையும் கூறப்பட்டன.

42. சைவாகம உரை அளவையால் பதி, பசு, பாச உண்மைகளை அறிந்த மாணவர் பிறசமய நூல்களின் உண்மையைக் கேட்டபொழுது அவைகளினுல் மலைவு அடையாதிருத்தற் பொருட்டும் சைவாகம உண்மைகளைக் கேட்டறிந்த பின் அவ்வுண்மைகளைச் சிந்தித்து வன்மை மென்மைகளை உணர்ந்து தெளிந்து நிட்டைகூடி அநுபவங் கைவருதற் பொருட்டும் ஊக்கமுடைய ராதற்கு உரை அளவையோடு கருதலளவையால் அறிதலும் இன்றியமையாது வேண்டப்படும்.

மூன்ருவது சூத்திரம் முடிந்தது.

(மறைமலையடிகள்)

“கடவுளுக்கு உருவமில்லையென்றும், அவர் அருவமாகவே இருப்பாரென்றும், அவர் குணமற்றவரென்றும், அதனுல் நிர்க்குணுேபாசனையே சிறந்ததென்றும் நன்ருய் ஆராய்ந்து பாராமற் கூறுஞ் சொற்கள் பொருளற்ற புன் மொழிகளாய் இருக்கின்றன. ஏனென்ருற் பேரறிவுப் பொருளாகிய அதற்கு அறிவும் பேரருட் பொருளாகிய அதற்கு அருளும், பேரின்பப் பொருளாகிய அதற்கு இன்பமும், பெருவல்லமைப் பொருளாகிய அதற்கு வல்லமையும் அரிய பெரிய குணங்களாயிருக்க அதனைக் குணமற்ற நிர்க்குணப் பொருள் என்பது எவ்வாறு பொருந்தும்? குணமில்லாத பொருள் எங்கேனும் உண்டா? குணமில்லாதது பொருளாகுமா? என்று இங்ஙனமெல்லாம் சிறிதாயினும் ஆராய்ந்து பார்க்க வல்லார்க்கு நிர்க்குணுேபாசனை முதலிய சொற்களெல்லாம் பொருளில்லாத வெற்ருரவார உரைகளேயாம் என்பது தெளிவாக விளங்கும்.”

வரலாற்றுப் பகுதி: History & Biography

இலத்தின் ஐக்கிய நகரங்கள்

[பருத்தித்துறை திரு. த. இராமநாத பிள்ளை, B. A., (Lond.)]

(கஅ0-ஆம் பக்கத் தொடர்ச்சி)

கல்லியர் உரோமரையும் இலத்தினரையும் தோற்கடித்தனராகையால், உரோமருக்கு எட்டுத்திக்கிலும் பகைவர் எழுந்தனர். துணைவரான இலத்தினரும் இகலாயினர். சிற்சில பகைநாடுகள் தம்முள் முரண்பட்டமையால் உரோமரும் களைதீர்ந்து தழைத்தனர். அக்காலத்தில் கமிலஸ் தனித் தலைவனானன். உரோமர் கி. மு. 389-ம் ஆண்டு ஆக்குவியர் வாஸ்கியர் எற்ரூறியர் முதலியோரை வென்று எற்ரூரிய நாடுகள் சிலவற்றை ஆட்சி நடாத்தி நெப்பெற்றி, சத்திரியம் என்னும் இரு நகரையும் உரோம குடியேற்ற நாடாக்கி அவ்விரு நகரையும் வடவெல்லைக் காவல் அரண்களாக்கினர் என இலிவியின் வரலாறு செப்புகின்றது. தெற்கே ஹேணிக்கியரை வென்று சாற்றிக்கம் என்னும் குடியேற்ற நாட்டை அமைத்தனர். அக்குடியேற்ற நாடுகளில் இலத்தினரைக் குடியேற்றாமையால் இலத்தினர் உரோமரைப் பகைத்தனர். இரைபூர், பிரூயி, நெஸ்தி முதலிய இலத்தின் நகரங்கள் போர் தொடங்கின. அக்காலத்தில் கல்லியரும் இடையிடையே திரண்டு உரோமரோடு பொருதனரென அறிகிறோம். கல்லியரின் ஆக்கிரமத்தைப் பற்றி விரிவாக ஒன்றும் தெரியவில்லை. கி. மு. 367—439-ம் ஆண்டுகள் அறு முறை பொருதார்கள் என இலிவி எழுதியுள்ளார்.

கி.மு. 367-ம் ஆண்டு கமிலஸ் வயதால் முதிர்ந்து கிழவனாலும் கல்லியரோடு பொருது அவரைக் களத்தில் வென்றான். கி. மு. 361-ம் ஆண்டு உரோம வீரன் மான்லியஸ் வேய்போன்ற தோளிணையுடைய கல்லிய வீரன் ஒருவனைத் தனிப் போரில் கொன்று அவனுடைய பொற்சங்கிலியைத் தான் அணிந்தமையால் பொற்சங்கிலியனெனப் பெயர்பெற்றானென இலிவி புகழ்கின்றார். 349 கி. மு. கமிலியின் மகன் பியூறியஸ் கமிலஸ் கல்லிய படையைத் துரத்தினனாக அப் போரில் காக்கை ஒன்று உரோம வீரன் வலேறியனோடு பொருத கல்லிய வீரன் கண்ணைக் கொத்தினமையால், வலேறியஸ் கல்லியரைக் கொன்றான். அவ்வெற்றியின்பின் வலேறியஸ்காக்கையன் என்னும்

பட்டம் பெற்ருன். இலிவியஸ் உரோம வீரரைக் புகழ்தல் வழக்கமெனக் கூறினேம்.

கி. மு 356-ம் ஆண்டு எற்ருறியர் உரோமரோடு அமர்க் கெழ காயஸ் மாக்கியஸ் உருத்திலியன் தனித் தலைவனாக நிய மிக்கப்பட்டான். ஐந்து வருடமாக யுத்தம் நீடித்ததென்றும் எற்ருறியர் 307 உரோமரைத் தமது கோயிலில் பலியிட்டன ரென்றும் உரோமரும் பதிலுக்குப் பதிலாக 388 எற்ருறிய ரைச் சதுக்கத்தில் பலியிட்டனர் என்றும் கி. மு. 351-ம் ஆண்டு சமாதானம் எழுதப்பட்ட தென்றும் தெரிகிறது.

இலத்தின் யுத்தம் 340 கி. மு.—338. கி. மு 340-ல் இலத் தின் நாட்டுத் தலைவர் ல. அன்னியல், ல. மினுசியஸ் என்போர் உரோம புரத்துச் சபையிடம் தூதராகச்சென்று உரோமருக் கும் இலத்தினருக்கும் தாய்மொழி ஒன்ருகையாலும் இலத் தினர் உறுநராகலாலும் இலத்தின் குடிகளுக்கும் தெரிவுரிமை மணவுரிமை முதலியவற்றை ஈயவேண்டுமென்றும் இரந்தனர். உரோமர் இவ்வேண்டுகோளுக் கிணங்காமையால் இலத்தினர் கம்பேனியரிடம் துணைபெற்று உரோமரோடு இகலாகிப் போர் முரசு அறைந்தனர். சில இலத்தின் நகரங்கள் நொதுமலா யிருந்தன. கி. மு. 340-ம் ஆண்டுத் தலைவர்கள் மான்லியஸ் என்போனும், பப்பிளியஸ் டீசியஸ்முஸ் என்போனும் படை யொடு சென்று வெசூவியஸ் எரிமலை யண்டையில் போர்புரிந்து இலத்தினரை வென்றனர். அப்போரில் நிகழ்ந்த செய்தி யொன்று கவனிக்கற்பாலது. பாசறையிலிருந்த வீரரைப் போர் தொடங்குமுன் தனிப்போர் செய்யக் கூடாதெனப் படைத்தலைவன் கற்பித்தும் தலைவன் மகன் மான்லியஸ் தனிப் போர்செய்து எதிரியைக் கொன்ருகையால் போர்க்காலப் பிரமாணத்தின்படி படைநிதி செலுத்திய தந்தை தன்மகனைக் கொன்ருன். அப்போரில் உரோமருடைய படை முதுகிட்ட தென்றும் டேசியஸ் முஸ் பகைவரைத் தனியே எதிர்த்து உயிர் இழந்தானென்றும் அறியக்கிடக்கின்றது. கி. மு. 328-ம் ஆண்டு இலத்தின் நாடுகள் ஒருவகைச் சுதந்தரமு மின்றி உரோமருடைய ஆட்சிநாடாயின.

இலக்கணமும் இலக்கியமும்:
LANGUAGE AND LITERATURE

வடமொழித் தென் சொற்கள்

[பண்டித திரு. ஞா. தேவநேயப் பாவாணர்]

(முன் ௩௦௨-ம் பக்கத் தொடர்ச்சி)

புரி என்னும் தென்சொல் புரீ என வடசொல்லாகுமே யன்றிப் புரீ என்னும் வடசொல் புரி எனத் தென்சொல் லாகாது. இகர வீற்றுத் தென்சொற்கள் வடமொழியில் ஈகார வீறுபெறும்.

C. f. காஞ்சி—காஞ்சீ.

காஞ்சி—ஒரு தமிழ்நாட்டு மரப்பெயர். பின்பு தானியாகு பெயராய் ஒரு நகரைக் குறிக்கும்.

'ஈயீறிகரமும்' என நன்னூலார் கூறியது மொழிபெயர்க் கப்படாத வடமொழிச் சிறப்புப் பெயர்கட்கே யன்றிப் பிற சொற்கட் கன்றெனத் தெளிக.

அந்தோ. அந்தோ! இரக்கக் குறிப்பு. அத்தோ என்ப தன் திரிபு. அத்தன்—அத்தோ! அந்தோ!

அத்தோ என்பது அத்தன் என்பதன் விளி. இரக்கக் குறிப்புக்களெல்லாம் பெரும்பாலும் தாய்தந்தைப் பெயர் களின் விளியாகவே யிருக்கும். துன்பம் வருங்கால் தாய் தந்தையரையே விளிப்பது மக்கள் வழக்கம், அவரினுஞ் சிறந் தார் பிறரின்மையின்.

இரக்கமென்பது தற்பொருட் டிரங்கலும் பிறர்பொருட் டிரங்கலுமென இருவகை. இரக்கம் = அழுகை, வருத்தம்.

உ - ம்:

தந்தைப் பெயர்.	தாய்ப் பெயர்.
அப்பன்—அப்பா!	அம்மை—அம்மா!
அச்சன்—அச்சோ!	அன்னை—அன்னே!
அத்தன்—அத்தோ!—அந்தோ!	
ஐயன்—ஐயோ!	

அத்த என்பது வடசொல்லு மன்று; சிங்களச் சொல்லு மன்று.

அபங்கம். அ+பங்கம்.

அ—அன் என்பதன் குறை.
பங்கம்=பங்கு+அம். பகு—பக்கு—பங்கு.

பகுக்கப்படுவது அல்லது பக்கிருப்பது பக்கு. பக்கு என்பதன் மெலித்தல் பங்கு. C. f. போக்கு—போங்கு.

பக்கு என்பது பகுதி யிரட்டித்த தொழிற்பெயர்; பாட்டு, திருட்டு என்பன போல.

பக்கு } =பாகம், குறை, பிளவு.
பங்கு }

பக்கு+அம்=பக்கம்.
பங்கு+அம்=பங்கம்; அம் சாரியை.
மானபங்கம்=மானக்குறை.

நிலம் ஏரால் அல்லது மண்வெட்டியாற் பகுக்கப்பட்டுச் சேறுவதால், சேறு பங்கமெனப் பட்டது.

'பங்கப் பழனத்துழு முழவர்'—புகழேந்தி.

பங்கி—பங்கையுடையது.

அபசாரம். அப+சாரம். அப, அவ என்பதன் திரிபு.

அவம்=அழிவு; அவி, பகுதி.
சரி+அம்=சாரம், தொழிற்பெயர்.
சலி—சரி, போலி. ல—ர
C. f. பந்தல்—பந்தர். கூதல்—கூதர்.

சரித்தல்=அசைதல், நடத்தல், ஒழுக்கம்.
அபசாரம் செய்பவள் அபிசாரி.
ஆ+சரி=ஆசரி ஆசரி+அம்=ஆசாரம்
அநு+சரி=அநுசரி அன்+ஆசாரம்=அனாசாரம்.

ஆ, அநு உபசர்க்கங்கள். ஆசாரத்தை யுடையவன் ஆசாரி, ஆசாரியன்.

அபதூறு. அப+தூறு.

அவம்=அவி+அம், தொழிற்பெயர்.
அவிதல்=அழிதல். அவ—அப
தூறுவது—தூறு; முதனிலைத் தொழிற்பெயர்.
தூறு=சிந்து.

மழை தூறுவதுபோலப் பழிமொழியைத் (அவமான சொல்லைத்) தூற்றுவது அவதூறு.

அபமரணம். அப+மரணம். அவ—அப
மரணம்=மரி+அணம், அணம் தொழிற்பெயர் விகுதி.
மடி—மரி, (போலி) ட—ர

C. f. கடி—கரி, படவர்—பரவர்.

மரியாதவர் அமரர்

அபரம். அ+பரம். அ, அல் என்பதன் குறை.
பரம்=பர+அம். பரத்தல்=விரிதல், பெருத்தல், மேற்படுதல்.

பரம் என்பது மிகுதிப் பொருளில் மேலிடத்தை யுணர்த்தும். இதன் பரியாயச் சொல்லாகிய மிகல் என்னுஞ் சொல்லும் அங்ஙனமே.

மிகு—மிகல்—மேல். மேலிடம் உயரத்தின் மிகுதியாகும். நட்டுக்குத்தலாய் (Vertical) ஒரு பொருள் மிக்கிருக்கும் போது உயரமா யிருத்தல் காண்க.

பரம்=மேல். அபரம்=கீழ்.
பரன்=மேலானவன்—கடவுள். பராபரன்=மேலும் கீழுமுள்ள பொருள்களா யிருப்பவன்.

பரன்—சிவன், ஆண்பால்.
பரை—சிவை (பார்வதி), பெண்பால்.
பரம்+அன்=பரமன்.
பரதேசம்=பரம்+தேசம்.
பரம்—Foreign. (Latin), Foras.
பரலோகம்=பரம்+லோகம்.

பரதேசம்—பக்கமாக (Sidewise)ப் பரந்தது.

பரலோகம்—மேனோக்கிப் பரந்தது.—ஒரு பொருள் பரக்கும்போது விரிந்து தூரமாகும்.

மேனோக்கிய பரப்பு உயரம்.
பக்கமான பரப்பு—தூரம்.
பரந்த (தூரமான) தேசம்=பரதேசம்.
பரதேசத்தான்—பரதேசி.
பரம்+காலன்=பரகாலன்.
பரம்+கேசரி=பரகேசரி. பரம்=தூரம், அயல், பிறிது.
பரகாலன் பிறர்க்குக் காலன் போன்றவன்.
அபரூபம். அப+ரூபம்.

அவ—அப.
உருவம்—ரூபம்.
உரு—உருவு—உருவம்—ரூபம்.—உருவு—உரூபம்—ரூபம்.
உருத்தல்=எரிதல், சினத்தல், தோன்றுதல்.
உரும்=(Warm)வெப்பம்=(இடி),(நெருப்பானது)
உருத்தல்—சினத்தல். சினம்—நெருப்புப்போல்வது.

C. f. கனல்=நெருப்பு. கனலுதல்=சினத்தல்.
அழல்=நெருப்பு. அழலுதல்=சினத்தல்.

உருத்தல்=தோன்றுதல். வடிவம் நெருப்பின் தன்மை. நெருப்பால் ஒளியும் ஒளியால் உருவமும் தோன்றும். உருபு=உருவம், வடிவம்.

வேற்றுமையின் வடிவைக்காட்டும் அசை உருபு எனப் பட்டது.

'எழுவாயுருபு திரிபில் பெயரே' என்னும் சூத்திரத்தில், உருபு என்பது வடிவென்றே பொருள் படுதல் காண்க.

உருபம் என்னும் சொல்லே ரண்டு, ரம்ப என்னும் சொற்களைப்போல முதல் கெட்டுப் பின்பு அயல் நீண்டு ரூபம் என்றாகும்.

உரு என்பது முதனிலைத் தொழிலாகு பெயர்.
உரு × அரு. c. f. உறு × அறு
உருபம் × அருபம்.
உருபத்தை யுடையவன் உருபி. உருபி—உரூபி.
அருபமானவன் அருபி. அருபி—அரூபி
உரு=வடிவம், முதனிலைத் தொழிலாகுபெயர்.

உரு என்னும் சொல் வடிவுப்பொருளில் உலகவழக்கில் மிகுதியும் வழங்கி வருகின்றது.

குறுந்தொகை

மூலமும் விளக்க உரையும்

[இலந்தையடிகள் வித்துவான் இரா. சிவ. சாம்பசிவன்]

(பதிப்புரிமை ஆசிரியர்க்கே)

(௩௦௭-ம் பக்கத் தொடர்ச்சி)

பாலை

தலைமகன் பிரிவதற்குத் தலைமகள், ஆற்றாளே என வருந்திய தோழிக்குத் தலைவி, கொடிய காட்டின் வழியே தனித்துச் சென்ற தலைவனைக் குறித்து வருந்தாது தன்னைப்பற்றி வருந்துவதென்னோ—! தான் ஆற்றும் தன்மையள் என்று கூறியது.

ஓதலாந்தையார் பாடியது

12. எறும்பி யளையிற் குறும்பல் சுனைய
உலைக்கல் லன்ன பாறை யேறிக்
கொடுவில் லெயினர் பகழி மாய்க்குங்
கவலைத் தென்பவர் தேர்சென்ற வாறே;
அதுமற் றவலங் கொள்ளாது
நொதுமற் கலுழுமற் றிவ்வழுங்க லூரே.

என்பது ஆற்றாளெனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி யுரைத்தது.

பதவுரை:—எறும்பி அளையின் குறும் பல் சுனைய—எறும்பினுடைய வளையைப் போலச் சிறியவாகிய பல சுனைகளை யுடையது; உலைக்கல் என்ன—கொல்லன் உலைக்களத்துள்ள பட்டறையைப் போல வெப்பம் மிக்க, பாறை ஏறி—பாறைகளின் மீதேறிக்கொண்டு, கொடுவில் எயினர் பகழி மாய்க்கும்—கொடியவில்லை ஏந்திய வேடர்கள் தம் அம்பால் வழிப் போவார்களைக் கொல்லும், கவலைத்து என்ப அவர் தேர்சென்ற ஆறு—பல பிரிவாகப் பிரிந்து செல்லும் கவர்த்த வழிகளை யுடைய (கவலைக் கிடமான) தென்பர் தலைவர் தேரேறிச் சென்ற நெறி; அது அவலம் கொள்ளாது—அதனைக் குறித்து வருத்தப்படாது, இ அழுங்கல் ஊர்—இந்த இரங்குதலை யுடைய இவ்வூரார், நொதுமல் கலுழும்—பிறிதான (என்

நிலைமையான)பொருட்கு வருந்துகின்றார். (என்னபேதைமை!) மற்று, ஏ அசைகள்.

உலைக்கல்--கொல்லன் உலைக்களத்தில் இரும்பைக் காய்ச்சி வைத்தடிக்கும் கல்; பட்டறை என்றும், உலைக்கூடம் என்றும் கூறுவர். அடைகல் என்பதுமாம். கவலை—பலவாகப் பிரிந்து செல்லும் கவர்வழி; கவல்கின்ற தன்மையுமாம். கவலைத்து — குறிப்புமுற்று. நொதுமல்--பிற பொருள் — வருந்துதல். அழுங்கல்—வருந்தல். அவலம்—அச்சத்தோடு கூடிய வருத்தம். பகழி—அம்பு. பகழி மாய்க்கும்—மூன்றும் வேற்றுமைத்தொகை—கொடுவில்.— வளைந்த வில்லுமாம். எயினர்—பாலைநில மக்கள். கலுழ்தல்—வருந்துதல். எறும்பி—எறும்புக்கு ஒரு பெயர், 'திருவெறும்பியூர்' என்பதும் காண்க.

சுனைகளைப் பக்கத்திற் கொண்ட பாறைக்கு, கொல்லன் உலைக்களத்தில் இரும்பைக் காய்ச்சித் தேய்க்கும் நீர்ச் சட்டியின் அருகிலிருக்கும் பட்டறையை உவமை கூறினர். மற்று—இடைச்சொல். அது என்னும் சுட்டு தலைவன் தேரேறிக் கொடிய காட்டிடைச் சென்றதைக் குறித்தது.

நொதுமல்—தலைவி ஆற்றுவளோ, ஆற்றாளோ எனத் தோழிகவலுங் கவற்சி.

மேற்கோள் விளக்கம்

1. "எறும்பியளையிற்......ஊரே"—இச்செய்யுள், "ஆவயின் வரூஉம் பல்வேறு நிலையினும்"

—(தொல்—கற்பு—சூ. 147)

என்ற தொல்காப்பியச் சூத்திரத்துப், பல்வேறு நிலையில் வழியருமை பிறர் கூறக் கேட்டுக் கூறுவதற்கு மேற்கோள்.

—(தொல்—கற்பு—பக். 669)

2. தலைவி கொடுஞ்சொல் சொல்லல் என்பதற்கு மேற்கோள் இச்செய்யுள். —(நம்பியகப் பொருள் சங்கப்பதிப்பு.)

3. "எறும்பி யளையிற் குறும்பல் சுனைய, உலைக்கல் லன்ன பாறை யேறி"—என்பது இயற்சீர் வெள்ளடி யாசிரியத்தொடுக்குங் கால் பாவினை ஒன்றாகத் தொடுத்தற்கு உதாரணமாகக் காட்டினர்.

—(தொல்—செய்யுள்—பக். 472)

4. "எறும்பி யளையிற்......ஊரே"—இச்செய்யுள் இயற்சீர் வெள்ளடிக்கு உதாரணமாகக் காட்டினர்.

—(யாப்பருங்கலம்—பக் 116)

5. "கவலைத்தென்ப வவர்தேர் சென்ற வாறே" என இச்செய்யுளின் நான்காம் அடி யாப்பருங் கலத்தில் (பக். 116ல்) சீர்பிரிக்கப் பட்டுள்ளதறிக.

6. "அதுமற்றவலங் கொள்ளாது நொதுமற் கலுழும்"—'மற்று' என்பது அசை நிலையாக வந்ததற்கு மேற்கோள்.

—(தொல்—சொல்—சேனுவ—சூ. 262)

7. 'உலைக்கல்'—"உலைக்கல் லன்ன வல்லா ளன்னே"

—(புறம். 170-17)

8. "கொடுவில் லெயினர் பகழி மாய்ங்குங், கவலைத் தென்ப வவர்தேர் சென்ற வாறே"—

(அ) "செந்தொடை மறவர், அதர் பார்த் தல்கு மஞ்சுவரு நெறியிடை யிறப்ப வெண்ணுவர்"—(நற்றிணை—33)

"வலிமுன்பின் வல்லென்ற யாக்கைப் புலிநோக்கிற், சுற்றமை வில்லர் சுரிவளர் பித்தையர், அற்றம்பார்த் தல்குங் கடுங்கண் மறவர், தாம் கொள்ளும்
பொருளிலராயினும் வம்பலர், துள்ளுநர்க் காண்மார் தொட்டுத் துயிர் வெளவலிற், புள்ளும் வழங்காப் புலம்புகொள் ஆரிடை"

—(பாலைக்கலி—4)

9. "கவலைத் தென்ப தேர்சென்ற வாறே"—
"கவலை யருஞ்சுரம் போயினர்"

—(ஐங்குறு-100; பாலை செலவு-10)

10. கொலைவில் லெயினர் குறும்பி லுறங்கு

மலைவிலங்கு நீள்சுரம் சிலையொடு கழிமார்"—(யாப்பருங் கலம்-பக். 116) என்ற அடிகளும் இச் செய்யுளடிகளோடு ஒப்பு நோக்கத்தக்கன.

1. 'எறும்பியளையிற்'—'எறும்பினளையிற்'—பிரதிபேதம்

2. 'உலைக்கன்ன'—'உலக்கல் லன்ன'—பிரதிபேதம்

3. 'கொடிவிலெயினர்'—'கொறுவில் லெயினர்'—பிரதிபேதம

4. 'நொதுமலர்க்கலுழும்—'நொதுமலர்க்கழறும்'—பிரதிபேதம்
மெய்ப்பாடு—அணங்கு பற்றிய அச்சம்.

பயன்—ஆற்றுமாறு அறிவித்தல்.

குறிஞ்சி

தோழியால் தலைவனைத் தலைவி கூடிப் பிரியும்வழி ஆற்றும் வகையா லாற்றுவித்தும் தலைமகனது பிரிவாற்றாளாகிய தலைவி தன் பசப்புறு பருவரலைத் தோழிக்குக் கூறியது.

கபிலர் பாடியது

13. மாசறக் கழீஇய யானை போலப்
பெரும்பெய லுழந்த விரும்பிணர்த் துறுகற்
பைத லொருதலை சேக்கு நாடன்
நோய்தந் தனனே தோழி
பசலை யார்ந்தநங் குவளையங் கண்ணே.

என்பது தோழியிற் கூட்டங்கூடி ஆற்றும் வகையான் ஆற்றுவித்தும் பிரிய வேறுபட்ட கிழத்தி தோழிக்கு உரைத்தது.

பதவுரை :— மாசு அற கழீஇய யானை போல—அழுக்கு நீங்கக் கழுவப்பட்ட யானையைப் போல; பெரும் பெயல் உழந்த—பெரிய மழையால் அலசலுற்ற; இரும் பிணர் துறுகல்—(சோங்கின்) பக்கத்துள்ள கரிய (பெரிய) கரடுமுரடான நெருங்கிய கற்பாறை; பைதல் ஒருதலை சேக்கு நாடன்—காண் பார்க்குத் துன்ப முண்டாமாறு ஒருபுறம் தங்கும் குறிஞ்சி நிலத் தலைவன்; நோய் தந்தனன்—தன் பிரிவால் எனக்குக் காமநோயைத் தந்தான்; தோழி—தோழியே; நம் குவளை அம் கண்—(அதனால்) என்னுடைய குவளை மலர்போன்ற அழகிய கண்கள்; பசலை ஆர்ந்த— பசப்பு நிறைந்தனவாயின. ஏ, ஏ—அசைகள்.

பிணர்— சோங்கு எனவும் கூறுப. கழீஇய—கழுவிய, சொல்லிசை யுயிரளபெடை, பெயரெச்சம். பெரும் பெயல் பெரியமழை (தலைப்பெயல்). பெயல்—முதனிலைத் தொழிலாகு பெயர். இருமை—பெருமை; கருமை. பிணர்—சருச்சரை; கரடுமுரடு. துறுகல்—கற்பாறை. பைதல்.— துன்பம். ஒரு தலை—ஒரு பக்கம். சேக்கை—அடைதல்.

பசலை—மகளிர்க்குக் கணவர் பிரிவால் காம நோயுற்ற காலத்தில் காணும் மேனி நிற வேறுபாடு.

மேற்கோள் விளக்கம்

1. குவளை, கண்ணிற்கு உவமையாகக் கூறப்படுதலைக், 'குவளை யுண்கண் குய்ப்புகை கமழ'—என வருவனவற்றாலறிக.

2. "செங்கடு மொழியார் சிதைவுடைத்தாயினு, மென்பு நெகப் பிரிந்தோன் வழிச் சென்று கடைஇ, அன்பு தலை யடுத்த வன்புரைக் கண்ணும்" என்பதில், "செங்கடுமொழி, என்றது கொடிய கடு மொழியே யன்றி மனத்தினுன் இனியளாகிக் கூறுங் கடுமொழி. அஃதாவது இயற் பழித்தல். அவ்வாறு இயற்பழித்தவழித் தலைவன் அன்பு சிதைவுடைத் தாயினும் என்றவாறு. அன்பு தலையடுத்த வன்புறை யாவது தலைவன் இன்றியமையான் என ஆற்றுவித்தல்" என இளம்பூரணர் உரை கூறி; இயற்பழித்தற்குச் செய்யுள், "மாசறக் கழீஇய........குவளையங் கண்ணே" எனக் காட்டினர்.

—(தொல்—பொருள்—களவு—இளம்பூ—பக். 200)

3. பிணர்—கோங்கு.

" கன்னி காரந்துரு மோற்பலவேகு யாகூன் பிணரே கோங் காகும்மே" —(பிங்கலந்தை—மரப்பெயர்வகை. 34)

4. துறுகல்—நெருங்கிய மலை.

(அ) "துறுகல் சுற்றிய சோலை வாழை—(மலைபடு கடாம்—131)

(ஆ) "தூறிவர் துறுகல் போல" —(பட்டினப்பாலை—234)

5. " மாசறக் கழீஇய......கண்ணே"—

இஃது அவன்குளுறவு பொய்த்தது என இயற்பழித்தற்கு மேற்கோள். —(தொல்—களவு—525)

6. கருங் கற் பாறை யானைபோலத் தோன்றும்—

(அ) " சுரும் புணக் களித்த புகர்முக வேழம்
இரும்பிணர்த் துறுகற் பிடிசெத்துத் தழூஉம்"

—(ஐங்குறு—239)

(ஆ) "குறுங்கா லியற்றிப் புன்றலை நெடுவீழ்
இரும்பிணர்த் துறுகற் றீண்டி வளிபொரப்
பெருங்கை யானை நிவப்பிற் றூங்கும்
குன்றம்" —(அகம்—57)

(இ) "மாசறக் கழீஇய யானைபோலப், பெரும்பெய லுழந்த விரும்பிணர்த் துறுகல்"—இதனை மாற்றித் துறுகலைப் போன்ற யானை என,

"சிறுகண் யானையி னினஞ் சேர்ந்து சேவகங் கொளத்
துறுகலென் றுணர்கலாத் துள்ளிமந்திம் மகவு"
—(சீவக. 1897) என்று கூறியிருத்தல் அறிக.

7. 'குவளைக்கண்'—

(அ) குவளை யன்ன வேர்தெழின் மழைக்கண்"—(நற்—6)

8. பசலை—தலைவரைப் பிரிந்த மகளிர் மெய்யிடத்துக் காணும் நிறவேறுபாடு. அது கண்ணிடத்தும் பரவும். இதனை,

"முயக்கிடைத் தண்வளி போழப் பசப்புற்ற
பேதை பெருமழைக் கண்"

—(திருக்குறள்—உறுப்பு நலனழிதல் 9)

என்பதாலும் அறிக.

யானை மரத்தடியில் நிற்றல் இயல்பு பிணரை யடுத்ததுறுகல் யானை யென்ற மயக்கத்தைத் தருவதாயிற் றென்க.

"குவளையங்கண்" என்பதில் ஏழன் உருபு ஈற்றில் தொக்கது.

இறைச்சி:—


ஏதந் தராத துறுகல் ஏதந் தரும் யானை எனக்காண்பார் வருத்தத் தங்கும் நாடன் என்றதனுனே இனிமை தருங் கூட்டமும் பிரியுமோ என்னும் கவற்சியால் இன்பம் பயவாதிருக்கும்படி ஒழுகினுன் என்பதாம்.

1. 'பைதல் ஒருதலை'—'பைதல் ஒருகலை'—பிரதிபேதம்
2. 'பசலையார்ந்த நங் குவளையங் கண்ணே'—

(அ) "பசலையார்ந்தன குவளைக் கண்ணே"
(ஆ) "பசலை ஆன்றன குவளைக் கண்ணே" }—பி,

மெய்ப்பாடு—அசைவு பற்றிய அழுகை

பயன்—ஆற்றுமை அறிவித்தல்



[MR. T. B. KRISHNASWAMY MUDALIAR, M.A., B.L.]

மதுரைக் கண்ணங்கூத்தனார் இயற்றிய

களவழி நாற்பது

(௬கக-ம் பக்கத் தொடர்ச்சி)

ஓவர்க் கணைபாய வொல்கி யெழில்வேழந்
தீவாய்க் குருதி யிழிதலாற் செந்தலைப்
பூவலங் குன்றம் புயற்கேற்ற போன்றவே
காவிரி நாடன் கடாஅய்க் கடிதாகக்
கூடாரை யட்ட களத்து. (கஉ)

Of the Field of Battle—Forty (Stanzas).

Where the Lord of the Cauvery land urged his army forward and slew his enemies, the incessant fall of arrows made the dignified elephants weary and by the flowing of flame like blood they seemed gravel mounds under heavy rain. (12)

நிரைகதிர் நீளெஃக நீட்டி வயவர்
வரைபுரை யானைக்கை நூற-வரைமே
லுருமெறி பாம்பிற் புரளுஞ் செருமொய்ம்பிற்
சேஎய்பொரு தட்ட களத்து. (கந)

When with long shining swords the soldiers cut off the trunks of elephants in the field of battle where the valorous king Chola slew his enemies, the trunks rolling seemed like snakes on thunderstricken hills. (13)

கவளங்கொள் யானையின் கைதுணிக்கப் பட்டுப்
பவளஞ் சொரிதரு பைபோற் றிவளொளிய
வொண்செங் குருதி யுமிழும் புனனாடன்
கொங்கரை யட்ட களத்து. (௧௪)

Where King Chola of the fertile lands slew his enemies of the Chera land, the elephants that eat with their trunks sustaining injuries therein poured forth blood like bags of coral emptying. (14)

கொல்யானை பாயக் குடைமுருக்கி யெவ்வாயும்
புக்கவா யெல்லாம் பிணம்பிறங்கத்-தச்சன்
வினைவிடு பள்ளியிற் றோன்றுமே செங்கட்
சினமால் பொருத களத்து. (௧௫)

When the death-dealing elephants trampling on umbrellas and causing corpses to fall wherever they moved, the field of battle where the angry King Chola of the beautiful eyes slew his enemies seemed like a Smithy. (15)

பருவ வினைமாக் கடவித் தெரிமறவ
ருக்கி யெடுத்த வரவத்தி னார்ப்பஞ்சாக்
குஞ்சரக் கும்பத்துப் பாய்வன குன்றிவரும்
வேங்கை யிரும்புலி போன்ற புனனாடன்
வேந்தரை யட்ட களத்து. (௧௬)

Where the Lord of the fertile Chola land slew his enemies, the saddled horses surging went, urged forward by valorous riders and leaping on the unperturbed heads of elephants seemed like tigers leaping about on the mountains. (16)

ஆர்ப்பெழுந்த ஞாட்பினு ளாளா ளெதிர்த்தோடித்
தாக்கி யெறிதர வீழ்தரு மொண்குருதி
கார்த்திகைச் சாற்றிற் கழிவிளக்கைப் போன்றனவே

போர்க்கொடித் தானைப் பொருபுன னீர்நாட
ஞர்த்தம ரட்ட களத்து. (௧௭)

In the field of battle where the Lord of the fertile land of dashing waters raising his battle flag slew his enemies, the soldiers went shouting, and opposing each other drew blood. The flashing swords shone like lamps lit up at the feast of lights in Karthigai time. (17)

நளிந்த கடலுட் டிமிறிரை போலெங்கும்
விளிந்தார் பிணங்குருதி யீர்க்குந்-தெளிந்து
தடற்றிடங் கொள்வாட் டளையவிழுந் தார்ச்சே
யுடற்றியா ரட்ட களத்து. (௧௮)

In the field of battle where the Lord of the Chola land with his garland dishevelled slew his enemies and sheathed his sword the piles of the dead amid the pool of blood resembled boats tossing at sea. (18)

இடைமருப்பின் விட்டெறிந்த வெஃகங்கான் மூழ்கிக்
கடைமணி காண்வரத் தோற்றி நடைமெலிந்து
முக்கோட்ட போன்ற களிறெல்லா நீர்நாடன்
புக்கம ரட்ட களத்து. (௧௯)

In the field of battle where the Lord of the fertile Chola land slew his enemies the spears flung upon the elephants sank so deep that the wearied elephants as they struggled along seemed to have three tusks. (19)

இருசிறக ரீர்க்குப் பரப்பி யெருவை
குருதி பிணங்கவருந் தோற்ற—மதிர்விலாச்
சிர்முழாப் பண்ணமைப்பான் போன்ற புனலுட
னேராரை யட்ட களத்து. (௨௦)

Where the Lord of the fertile Chola land slew his enemies the eagles with their wings spread out feeding on corpses and drinking blood looked like adepts tuning musical instruments. (20)

ஹாரியட் பீச்சர் ஸ்டோ

(முகப்புப் படம் பார்க்க)

Hariet Beecher Stow
(1811 - 1896)

[திரு. கு. ஞானசம்பந்தன்]

செல்வம் வளரும் அமெரிக்காக் கண்டத்தின் கூட்டு மாகாணத்திலே கன்னெக்டிகட்டு என்னும் நாட்டில் லிச்சு பீல்டு நகரத்தில் 1811-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 14-ஆம் நாளிற் றோன்றியவள் ஹாரியட் பெண்மணி; இவள் தன் தந்தை கல்வியும் புகழும் வாய்ந்த கிறிஸ்துவப் பாதிரியார்; இவளோடு பிறந்தவர் ஆணும் பெண்ணுமாய் எண்மராவர். ஹாரியட் நாலாண்டுச் சிறுமியாயிருக்கும் போதே அவள் தன் தாய் விண்ணுல கடைந்தனள். ஏனவே, ஹாரியட் வளர்ச்சி யினில் நேர்ந்த துன்பங்களைக் கூறவேண்டா.

ஹாரியட்டின் அன்னை அன்பினும் அழகினும் கல்வியி னும் சிறந்து விளங்கியவளாகலின், அவளிறந்த பின் அவளது உயர் நலங்களை யெல்லாம் மாந்தர் புகழ்ந்து பேசுதலினாலேயே ஹாரியட்டும் அவள் தன் உடன் பிறந்தவரும் நல்லொழுக்கத் தில் நிலை நிற்க ஏதுவாயிற்று. தாயிறந்தபின் சிறிது காலம் பாட்டி மனையில் வளர்ந்தனள். இவளுக்கு ஆறும் ஆண்டினிற் றந்தை மறுமணம் புரிந்து கொண்டனர்.

மாற்றாந்தாய் நல்லியல்புடையளா யிருந்தமையான், ஹாரியட் கல்விப் பயற்சியிற் றேர்ச்சியுற்றனள். சிறுபோதி லேயே இயற்கை வளங்களைக் கண்டு களிப்பதிலும், அவற்றின் நுண்மைகளைக் கூர்ந்தறிந்து மகிழ்வதிலும் காலங்கழிப்பள். அத்துடன் நன்னூல் வல்லார் ஆற்றும் விரிவுரைகட்குச் சென்று கேட்பதில் மிகுந்த அவா உடையவளா யிருந்தாள். மெல்ல மெல்லத் தெளிவான உரைநடையிற் பெரிய கருத்துக் களைப் பெய்து அழகாக எழுதும் ஆற்றலையும் பெற்றாள்.

ஒருநாள் ஒரு பேரவையிலே அவள் வரைந்த அரிய நூல்களுள் ஒன்றைப் படித்துக் காட்டியபின் எல்லாரும் வியப்படைந்தனர். அதிலே, இவள்தன் தந்தை 'இது யார் வரைந்தது?' என மகனைக் கேட்க 'இது தங்கள் செல்வப் புதல்வி வரைந்தது' என விடை பகர்ந்தபின் தந்தை கொண்ட மகிழ்ச்சிக் களவே யில்லை.

இந்நூல் கடவுள் உயிர் உலகம் என்னும் மூன்று உண்மைப் பொருள்களைப் பற்றிய விளக்கமேயாகும்! கண்ணுற் காணப்

படும் உலகத்தைக் கொண்டு காணப்படாத இறையும் உயிரும் என்றும் உளவாகும் என்னும் முடிவைத் தெளிவாக நுவல்வது.

தான் பெற்ற கல்வியின் பயனையும், நாட்டிற் பெரும்பாலான பெண்டிர் கல்வி கல்லாமல் அறியாமை என்னும் இருளில் மயங்குதலையும் ஹாரியட் நன்குணர்ந்து, எங்கும் கல்வியைப் பரப்புதல் வேண்டும் என்பதில் மிகமுனைத்து நின்றாள். ஸின்ஸினேட்டஸ் நகரிலே மறைநூற் கழகத் தலைவராகிய டாக்டர் பீச்சர் என்பார் இவ் வம்மைக்கு நண்பராயினர். இவ் அம்மைக்குக் கல்வி வளர்ச்சியில் இருக்கும் முனைப்பைத் தெரிந்து பாடசாலை நிறுவுவதற்கு வேண்டிய துணையை அவர் புரிந்தார். ஹாரியட் நிறுவின கலாசாலையில் பெருந்தொகையான பெண்மக்கள் கல்வி கற்று முன்னேற்றமடைந்தனர். இஃதிங்ஙனமாக டாக்டர் பீச்சரின் மனையாட்டி இலைஜா, தன்குழந்தைகளை நீத்துக் காலமாகவே அக் குழவிகளின் வளர்ச்சியையும், பீச்சரின் மன ஆறுதலையும் கருதி, அவரைக் காதற்கொழுநராகக் கொண்டாள் ஹாரியட்.

1833-ஆம் ஆண்டில் டல்டன் மாதுடனே கெண்டகி மாகாணத்துக்கு ஹாரியட் சென்றபோது, அங்கு அடிமை வாணிபம் நடந்ததையும் அவர்கள் அதனாற் படும் துன்பங்களையும் நேரிற்கண்டு மனமுருகிக் கண்ணீருகுத்து 'ஆ! சிற்றுயிர்க் கிரங்கும் செம்மேனி இறைவா! இவ்வேழை அடிமைகள் துயரை அகற்றாயா அந்தோ! இவர் நலமுறல் எந்நாள்?' எனக் கடவுளைப் பணிந்து அரற்றினாள்.

அன்றுமுதல் ஊணும் உறக்கமும் இன்றி அடிமை வாணிபத்தை ஒழிப்பதிலேயே கண்ணுங் கருத்துமாயினாள். நாடெங்கும் இதை ஒழிக்கச் செய்தித்தாள்களிலே தன் கருத்தினை வெளியிட்டாள். செல்வர் பலர் இவளை எதிர்த்தனர்; வேறுபலர் உடன் பட்டனர்; நாடெங்கும் இதுபற்றிய கூக்குரல் மிகுந்தது. மிகுக்கவே அம்மையின் எண்ணத்திற்கு மாறாக, செல்வர் பலர் கூடி நாட்டில் ஆங்காங்கு பதுங்கிக் கொண்டிருக்கும் அடிமைகளை அவர்தம் உரியவர்கள் பிடித்து வைத்துக்கொள்வதற்கெனக் கடுஞ் சட்டம் ஒன்றை விதித்தனர். இதனால் மேலும் அடிமைகள் பட்ட துன்பம் கணக்கிலடங்கா. இதனுள் ஹாரியட் மனமுடைந்தாளாயினும் முயற்சியிற் பின்தாங்கவில்லை. இதனிடையில் இவ் அம்மை பல குழந்தைகட்குத் தாயாயினமையால் உடல் மிக மெலிவுற்றாள். பின்னர் இவ் அம்மை பிரன்ஸ்விக் நகரடைந்து இவ்வடிமைச் சட்டத்தைத் தொலைக்க வேண்டிய வழிகளைத்தேடி யலைந்தாள்.

1850-ல், தான் எழுதிவந்த 'அங்கிள் டாம்ஸ் காபின்' (Uncle Tom's Cabin) என்னும் நூலும் முடிவுற்றது. அடிமைகள் துயரும், அதை நீக்கும் வழிகளும், மக்கட்குக் கல்வியின் கட்டாயமும், இந்நூலுள் நன்கு விளக்கப் பட்டுள்ளன. எழுதி வெளியிட்ட முதலாண்டிலேயே ஒருநூற்றிருபது பதிப்புகளாகி மூந்நூறுயிரம் படிகள் விற்பனையாயின! அந்நூலின் நடை யழகினையும், அதனால் மக்கள் எய்தும் நற்பயனையும் பற்றிப் புகழாதவர் எவருமிலர்! அதனால் அடிமை வாணிபத்தின் கொடுமையை எல்லாரும் நன்குணர்ந்தனர். அடிமைத் துயரத்தை நீக்க மக்களெல்லாரும் உலகின் நாற்புறங்களினின்றும் வீரவெறியுடன் கிளம்பினர்!

அடிமையை ஒழிக்கக் கழகங்கள் கூட்டினர். அம்மை ஹாரியட்டும் கணவர் பீச்சரும் கிளாஸ்கோவில் நடந்த ஒரு கழகத்துக்குச் சென்றனர் இங்கிலாந்திலும் அம்மை புகழடைந்தாள். அக்கழகத்தினர், அடிமை ஒழியப் பெரும் பொருள் திரட்டித்தந்தனர்! அம்மை அமெரிக்காவுக்குத் திரும்பினள்; கலாசாலைகளையும், கலைக்கழகங்களையும் நிறுவினள்; கல்வியைப் பரப்பினள்; அறிவையும் அன்பையும் மக்கட்கு வளர்த்தனள்.

இதனுள், அடிமைகளை வைத்தாளுதலை மறுத்த வட அமெரிக்கருக்கும், அடிமைகளை ஆளும் தென்பாகத்தினர்க்கும் 1860-ஆம் ஆண்டில் பெரும்போர் தொடங்கிற்று. அதில் மக்கள் பலர் உயிர் துறந்தனர். வேறுபலர் காயமடைந்து துயருழந்தனர். முடிவில், வடநாட்டினரே வெற்றியடைந்தனர்! அடிமைகள் தம் அடிமை வாழ்வினின்றும் விடுபட்டனர்; தன்னிச்சை வாழ்வு வாழ்ந்தனர்! நாடெங்கும் களிப்பு! எங்கணும் வெற்றி முழக்கம்! தென்பகுதியினர் தாம் தோற்றமைக்கு மன மிகப் புழுங்கினர்.

ஹாரியட் அம்மையின் எண்ணம் திருவருளால் முடிவடைந்தது. இப்போரில் பிரடரிக் என்னும் தன் மைந்தன் படுகாய மடைந்தமையால் அவன் நலங் குறித்து பிளாரிடா என்னு மிடத்திற்குச் சென்று பல்லாண்டுகள் வாழ்ந்து வந்தாள். பல கலாசாலைகளை நிறுவி அடிமை மக்களை முற்போக்குடையாராக ஆக்கினள். பல நற்றூண்டுகளின் பின் ஹாரியட் பீச்சர் ஸ்டோ 1896-ல் ஒருநாள் இறைவனை மன முருக வழுத்திக்கொண்டிருக்கும் தறுவாயில் அவன் அடிமலர் எய்தினள்.

அம்மை அரும்பணியும் புகழும் என்றும் நிலவுக!

அறிவியற் பகுதி - Science

ஞாலநூல் (Geology)

[திரு. S. நடராஜன், B. A.]

(சிலம்பு கக பரல் எ பக். ௩௨௪-தொடர்ச்சி)

7. உலகின் மேற்பரப்பிலுள்ள சூடு கதிரவன் வெப்பத்தால் ஏற்படுகின்றது. கதிரவன் வெப்பம் ஞாலத்தின் உள் சிறிது தொலைதான் செல்கிறது. இது செல்லும் ஆழம் எல்லா இடங்களிலும் ஒரே அளவை யுடையதாய் இல்லை. எடுத்துக் காட்டாகக் கூறுமிடத்து வட அமெரிக்காவிலுள்ள நீயூயார்க் என்னும் பட்டினத்தில் சூரிய வெப்பம் 50 அடி ஆழம் வரை உள் செல்கிறது. இவ்வைம்பது அடிக்குக் கீழ் இருக்கும் சூடு எல்லாப் பருவகாலங்களிலும் ஒரே அளவை யுடையதாய் இருக்கிறது. காலநிலை மாறுபாட்டால் நிகழும் தட்பவெப்பம் இந்த 50 அடிக்குக் கீழ் நியூயார்க்கில் இல்லை. இவ்வெல்லைக் குறியான 50 அடியிலிருந்து கீழ்நோக்கிச் செல்லுங்கால் சூடு அதிகரித்துக்கொண்டே போகிறது. ஈண்டு அதிகரிக்கும் சூட்டிற்குக் கதிரவன் காரணமல்ல. ஞாலத்தின் உள்சூடே காரணமாம். இவ்வுட்சூடு நியூயார்க்கில் 50 அடிக்கு (1°F) ஒரு பாகை அதிகமாகிறது. ஏறக்குறைய ஒரு கல் ஆழத்தில் (88°F) எண்பத்தெட்டுப் பாகைச்சூடு அதிகமாகிறது. மேற்பரப்பிற்கு வெகு தொலைவில்லாத ஓர் இடத்தில் (1800°F) ஆயிரத்து எண்ணூறு பாகைச்சூடு இருப்பதாக உலகின் மேற்பரப்பிலுள்ள எரிமலைகள் காட்டுகின்றன. மேற்பரப்பிலிருந்து சுமார் 25, அல்லது 30 கற்கள் உட்சென்றால் ஆங்கு பெரு நெருப்புமா கடலில் அனற்குழம்புகள் கொதித்துக்கொண் டிருக்கும் என நிச்சயமாய் நம்பலாம். உலகின் உட்சூடு கணக்கிடற்கரியதாய் இருக்கின்றதெனக் கூறலாமேயொழிய இவ்வளவுதான் என அறுதியிட்டுக் கூறமுடியாது.*

---

*"...Beyond saying that the inteiror of the earth is very hot it is inpossible to determine what its temperature actually is" W. B. Scot.

8. (க) ஞாலத்தின் மேற்போர்வை அல்லது அதைச் சூழ்ந்துகொண் டிருக்கும் மண்டலம், காற்றுமண்டலம் (Atmosphere). இஃது ஆவி வடிவாயுளது. ஞாலத்தின் மேற்பரப்பின் பெரும்பகுதியில் இருப்பது நீர். இது தண்ணீர் மண்டலம் (Hydrosphere) மேற்பரப்பின் சிறு பகுதி நிலம் இது நிலமண்டலம் (Littiosphere) இம் மும்மண்டலங்களை யும் ஞாலத்தின் உறுப்புக்கள் எனலாம். ஞாலத்தின் உட் பகுதிகளின் அழுக்கு வகையை நிலமண்டலத்தை ஆராய்ந்து தொகுத்துள்ளனர்.

(உ) வானநூல் ஆராய்ச்சியாலும், மண்கம்ப ஆராய்ச்சி யாலும் முன்னர்க் குறிப்பிட்டபடி ஞாலத்தின் நடுப்பகுதி யைத் தவிர ஏனைய பகுதிகள் உருக்குப்போல் நெகிழக்கூடிய தென்று பெறப்படுகின்றது. மண் கம்பம் நிகழுங்கால் ஏற் படும் தாக்குதல்கள் குறைந்த கால அளவுடையதாய் இருக் கும்பொழுது ஞாலத்தின் நெகிழும் தன்மை புலப்படுகிறது. நீண்ட காலம் இருக்கும் தாக்குதல் ஞாலத்தின் மேற்பரப்பின் வடிவைச் சிறிது சிறிதாக அழித்து மாற்றுகிறது. இதன் விரிவு பின்னர் மண் கம்பம் என்னும் அதிகாரத்தில் காண்க.

(ங) எவ்வெப் பொருள்களால் ஞாலம் ஆக்கப்பட் டுளதோ அவ்வப்பொருள்கள் ஒரே மையமுள்ள வட்டமான தோடுகளாய் ஒன்றின்மேல் ஒன்றாய்ப் படைபடையாக அடுக் கப்பட்டுளது. ஒரு அடுக்கலுக்கும் மற்றோர் அடுக்கலுக்கும் மாறுதலுண்டு. எவ்வாறு வெளிச்ச அலைகள் காற்றிலிருந்து நீருக்குள் செல்லும்போது வேறுபடுகின்றதோ அதேபோல் மண்கம்ப அலைகளின் வேகம் ஞாலத்தின் ஒரு படையிலிருந்து மற்றொரு படைக்குச் செல்லும்போது வேறுபடுகின்றது. ஞானநூல் அறிஞர்கள் ஒருமையத்தின்மேல் வட்டமான படைகளாய் ஞாலம் அடுக்கப்பட்டுளது என ஒரு முகமாய்க் கூறுகின்றார்கள் எனினும் ஒவ்வொரு படையும் எவ்வெப் பொருள்களால் ஆக்கப்பட்டுளது என்பதில் மாறுபட்ட கருத்துக்கள் கொண்டுள்ளார்கள். இவ்வாறு படைகளின் அடுக்கு வரிசைகளை மலைகளில் எளிதிற் காணலாம். மலைக்கு அடுக்கல் எனவும் தமிழில் ஒரு பெயர் உண்டு. மலைகளில்

அடுக்குகள் தென்படுவதால் காரணப் பெயராய் ஏற்பட்டதோ அல்லது மலை கூட்டங்களாய் ஒன்றின்மேல் ஒன்ருய் அடுக்கு வரிசையாய்க் காணப்படுவதால் ஏற்பட்டதோ அறியேம். மலையின் பெயர்கள் பின்வருமாறு:—

"விலங்கலே பொறைவே தண்டம் விண்மோ திரமே வெற்புச்
சிலம்புகோத் திரம டுக்கல் சிலோச்சயஞ் சிமயம் பொங்கர்
நலங்கொள்குத் திரம்ப ·றம்பு நகங்குறும் பொறையே நாகம்
இலங்கிய வரையே பொச்சை யிறும்புகல் லகமே யோங்கல்".

—சூடாமணிநிகண்டு 5-வது இடப்பெயர்த்தொகுதி 10-ம் செய்யுள்.

(ச) சென்ற 30, 40 ஆண்டுகளுக்குள் வெளியிட்டுள்ள பல அறிஞர்களின் நூல்களில் காணப்படும் உட்பாகத்தைக் குறுக்காகக் காட்டும் (Cross Section) படத்தை ஒப்பிட்டுப் பார்த்தால் முதன்மையான உறுப்புகளில் அதிகமான வேற்றுமை யில்லை. ஆனல் ஒவ்வோர் உறுப்புகளின் தன்மைகளையும், அவை ஆக்கப்பட்டுள்ள பொருள்களின் தன்மைகளையும்பற்றி விரிவாய்க் கூறுமிடத்துக் கருத்து வேற்றுமைகள் பல காணப்படுகின்றன.

(ரு) ஞாலத்தின் உட்பகுதி (centre) இரும்பு என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்கின்றனர். இவ் இரும்புடன் நிக்கலும், மிகக் குறைவான பிளாட்டினம் என்னும் உலோகமும் தங்கமும் கலந்து இருக்கவேண்டும் எனச் சிலர் கருதுகின்றனர். இப்பகுதியின் குறுக்களவு ஞாலத்தின் குறுக்களவின் பாதியைக் காட்டிலும் சற்று அதிகமாகும் எனச் சிலர் கூறுகின்றனர். இதன் உரிய கனம் பூமியின் உரிய கனத்தில் ஆறில் ஒரு பங்கு இருக்கலாம். திண்மை சுமார் 1470 கல்கள்.

(சு) இவ் வுட்பகுதியைச் சுற்றி 1400 கல்கனத்தில் இடைப்பகுதி ஒன்று இருக்கிறது. இஃது பாறைகள் ஆகும் பொருள்களாலும், தீக்கற்கள், உலோகங்கள் உண்டாகும் பொருள்களாலும் ஆக்கப்பட்டுளது. இப்பகுதி பாறை கற்கள் உலோகங்கள் ஆய பலபொருள்கள் ஒன்ருய்க் கலந்துள்ள ஒரு பொருளால் ஆக்கப்பட்டுள்ள பகுதியாம். இதன் உரிய கனம் $\frac{3}{6}$.

(எ) மேற்பகுதி (outer crest) அல்லது மேற்ரோடு மூன்று பகுதியாய்ப் பிரிக்கப்பட்டுளது. முதலாவதாக வெளியில் காணப்படும் மேற்றலை, மணல், மண், களி, பாறை உலோகங்கள் முதலியவற்றால் ஆக்கப்பட்டுளது. இதற்குக்கீழ் அடுத்துள்ள நடுப்பாகம் தன்மையான முகில் நிறத்தீப் பாறைகளால் படைக்கப்பட்டுளது. இதன் அடியிலுள்ள பகுதி கற்களும் இரும்பும் சேர்ந்து கீழ்நோக்கிச் செல்லச் செல்ல இரும்பாகக் கூடியதாய் ஆக்கப்பட்டுளது. இப்பகுதி கடைசியில் ஞாலத்தின் இடைப்பகுதியை ஊடுருவி உட்பகுதியிலுள்ள இரும்புடன் இணைக்கக்கூடியதாய்ப் படைக்கப்பட்டுளது. இதன் திண்மை சுமார் 720 கற்கள் இருக்கும். ஞாலத்தின் உட்பகுதி இடைப்பகுதி மேற்பகுதி ஆயமூன்று பகுதிகளின் உரியகனம் குறுக்களவு முதலியவற்றில் கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன. இவற்றை விரிக்கிற் பெருகும் என அஞ்சி அறிஞர் பலரின் கருத்துக்களை எடுத்துக் காட்டாது பொதுவாகப் பெரும்பாலோரின் முடிவுகளைமட்டும் மேலே கூறியுள்ளோம்.

(அ) கோள்களின் அமைப்பு ஏறக்குறைய விண்வீழ் கொள்ளிகளை ஒத்திருக்கின்றது என்பது பெரும்பாலோர் கருத்து இக்கொள்ளிகள் கோள்களின் பகுதிகளாம். இவற்றை ஆராய்ந்து பார்த்தால் மூன்று பொருள்கள் காணப்படுகின்றன. ஒன்று உலோகப்பொருள் மற்றொன்று பாறைப் பொருள் மூன்றாவது உலோகமும் பாறையும் கலந்த பொருள் உலோகப் பொருள்களில் இருப்பு அதிகமாவும், பாறைகளில்* தீக்கற்பாறைகள் அதிகமாகவும் காணப்படுகின்றன. இரும்பும் தீக்கற்களும்தான் பெரும்பாலும் கலந்து மூன்றாவது பொருள் ஆகின்றது. எனவே பூமியும் உலோகத்தாலும், உலோகமும் பாறையும் கலந்த ஓர் கலவைப்பொருளாலும், பாறைகளாலும் படைக்கப்பட்டுளது என ஐயமின்றிக் கருதலாம்.

---

* பாறைகள் நான்கு வகைப்படும் விரிவு அடுத்த அதிகாரத்தில் காண்க.

செய்திகளும் குறிப்புகளும்: News and Notes

திருவள்ளுவர் திருநாட் கழகம்

அறிக்கை 2

சேந்தமிழ்ச் செல்வி அன்பர்காள்!

திருவள்ளுவர் நினைவுமலர் வெளிவருதற்குத் தங்கள் அறிவாற்றல் அருங்கொடையைக் கீழ்வரும் வகைகளில் விரைவில் எதிர்பார்க்கிறோம்.

1. தங்களிடமுள்ள திருக்குறள் நூல் பதிப்புகள் இன்னின்ன வென்றும், அவற்றின் பதிப்பாசிரியர் இன்னின்னார் என்றும் விபரமாகத் தெரிவித்தல் .

(i) மூலம் மட்டுமா? உரையுடனா? (ii) உரையுடனாயின், பதவுரையா? பொழிப்புரையா?

(iii) ஆங்கிலம் அல்லது பிற மொழிபெயர்ப்புடைய தாயின் யாருடைய மொழி பெயர்ப்பு?

(iv) உரைநடை நூலாயின் ஆசிரியர் பெயர் (v) பதிப்பு ஆண்டு (vi) மொத்தப் பக்கங்கள்.

2. திருக்குறட் கருத்துக்கள் தங்கட்குத் தெரிந்த வரையில் வேறு எந்த நூல்களில் எடுத்தாளப்பட் டிருப்பினும் அவற்றைப்பற்றிய குறிப்புகளை எழுதியனுப்புதல்.

3 திருவள்ளுவரைப் பற்றியோ திருக்குறளைப் பற்றியோ தங்களுக்குத் தெரிந்த பொதுவகையான உண்மைகளைத் தெரிவித்தல். (எடுத்துக்காட்டாக:—திருக்குறட் பதிப்பொன்று மாட்சிமை தங்கிய நம் ஜார்ஜ் மன்னரின் நூல் நிலையத்தில் இருக்கிறதென்பது)

4. திருக்குறள் வேறு எந்த மொழிகளில் மொழி பெயர்க்கப்பட் டிருப்பதாகத் தெரிந்தாலும் அம்மொழி பெயர்ப்புப் பதிப்புப் பற்றிய விவரங்கள்.

5. திருவள்ளுவரைப் பற்றியாதல் திருக்குறளைப் பற்றியாதல் தாங்கள் கொண்டுள்ள நன்மதிப்பைத் தமிழிலேனும், ஆங்கிலத்திலேனும் செய்யுளாகவேனும், உரைநடையிலேனும் நாற்பது வரிகட்கு மேற்போகாமற் சுருக்கமாவெழுதியுதவுதல்.

6. தங்களூரிலோ சுற்றுப் புறத்திலோ உள்ள இத்துறையிற் சிறந்த தமிழ்ச் சான்றோர்களின் பெயர், முகவரி முதலியவற்றை எழுதியுதவுதல்.

7. தங்கள் ஊரில் திருவள்ளுவர் பெயராலுள்ள சங்கங்களையும், தொழிற்சாலைகள், வாசகசாலைகள், பரிசுகள், நூல் நிலையங்கள் முதலியவற்றின் பெயர்களையும், அவ்வவற்றின் அமைச்சர், தலைவர் முதலியோர் விலாசங்களுடன் எழுதியனுப்புமாறு வேண்டிக் கொள்ளுகிறோம்.

திருவள்ளுவர் நினைவு மலரை (Tiruvalluvar Souvenir) விரைந்து அச்சிட்டு வெளிப்படுத்த வேண்டியிருப்பதால் மேலே குறிப்பிட்ட விவரங்களை இக்கழக அமைச்சருக்கு 30-5-35-க்குள் அன்புகூர்ந்து எழுதியனுப்புமாறு வேண்டிக் கொள்ளுகிறோம்.

சென்னை
20-4-35 } திருவள்ளுவர் திருநாட் கழகத்தார்.

திருவள்ளுவர் திருநாட் கழகம்:—1935ஆம் மார்ச்சுமீ 19ஆ மாலை 5½ மணிக்குச் சென்னை கோவிந்த நாய்க்கர் செகண்டரி ஸ்கூல் மண்டபத்தில் கழகத்தலைவர் திருவாளர் கா. நமச்சிவாய முதலியாரவர்கள் தலைமையில் ஒரு பொதுக் கூட்டம் கூடிற்று. அவ்வமயம் திருவாளர்கள் சப்ரிஜிஸ்தரார் K. இராமலிங்க முதலியார் B. A. அவர்களும், T. செங்கல்வராய பிள்ளை B. A. L. T., அவர்களும் திருவள்ளுவர் பெருமை அவர்தம் நூற்பெருமை முதலிய பொருள்களின் மேல் அரிய விரிவுரை ஆற்றினர்கள். அன்பர் பலர் குழுமியிருந்து சிறப்பித்தனர்.

ஒரு நன்கோடை

தஞ்சை இராச ராசேச்சரத்துப் பெரிய நாயகியம்மையார் பங்குறை இராசராசேச்சுரர் திருக்கோயில் முழுதும் மின்சார விளக்குகள் போட்டு எங்கணும் அருளொளி விளங்க திருப்பனந்தாள் மடாலயத் தலைவர்களாகிய மறைத்திரு. காசிவாசி அடிகள் பெருங்கொடை தரமனமுவந்துள்ளார்கள் என்பது அடிகளின் பேரறச்செயல்களை வலியுறுத்தும் பெற்றியவற்றுள் முதன்மையாவதாகும்.

மடாதிபதிகளாயுள்ள திருவருட் பெரியார் எல்லாரும் இங்ஙனம் சிவபுண்ணியமியற்றுவதோடு சைவசமயம் முதலிய மெய்ச்சமயங்களை வளர்த்துத் தழைக்கச் செய்வதிலும் முனைத்து நிற்பார்களாயின் நம் செந்தமிழகம் விரைவில் அருளொளி காணும் என்பதற்கு ஐயமில்லை.

மதிப்புரை

அற்புதத்திருவந்தாதி, திருவிரட்டைமணிமாலை மூலமும் உரையும்:—

சைவத்திருமுறை பதினொன்றினுள்ளனவும், காரைக்காலம்மையார் அருளியனவும் ஆகிய அற்புதத் திருவந்தாதிக்கும், திருவிரட்டைமணிமாலைக்கும், திருமலைராயன்பட்டினம் சைவசித்தந்த சாகரம் திருவாளர் உ. அருணாசல முதலியார் அவர்கள் அரிய உரை எழுதியுள்ளனர். இந்நூல் நம் பார்வைக்கு வந்துளது. இந்நூல்களில் உள்ள சைவசித்தாந்தக் கருத்துக்களைச் சுருக்கி எளிய உரையில் இவர் விளக்கியிருத்தல் இவர் தம் ஞானநூற் பயிற்சியின் திறனை அதனைப் படிப்பார்க்கு நன்குணர்த்திச் செல்கின்றது. கற்றோரும் மற்றோரும் எளிதில் உணர்ந் துய்திபெறுந்தகையது. இதன் விலை அணா 5. வேண்டுவோர், உ. அருணாசல முதலியார், நாகாபரணப் பிள்ளையார்கோவில் தெரு, திருமலைராயன் பட்டினம் என்னும் விலாசத்திற் கெழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

இளைஞர் வாழ்வு:—இப்பெயரிய சீர்திருத்த நூலொன்று செல்வியின் பார்வைக்கு வந்தது. இதனை இயற்றியவர் கோலாலம்பூர் திருவாளர். இரா. சண்முகம் என்பார் ஆவர். இதன்கண் இளமையின் பெருமை, ஜப்பானின் மாட்சி, இரஷ்யாவின் சமதருமம், சீனத்தின் சீர்திருத்தம், இந்தியாவின் தொன்மை என்னும் பொருள்கள்பற்றி எளிய நடையில் எழுதப்பட்ட கட்டுரைகள் அடங்கி யிருக்கின்றன சைவ சமயத்தின் பழைய கொள்கைகள் நாளாவட்டத்தில் மாசுபட்டு வருகின்றன என்பதும், மாசற்ற தூய பழஞ் சமய நெறியே உயரிய சீர்திருத்த முறை யென்பதும் ஆசிரியர் கருத்து. இதன் விலை 20 காசு.

தமிழ்த் தாய்:—இது சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தினின்றும் (திருநெல்வேலி) மூன்று திங்கட் கொருமுறை வெளிவரும் இனிய செந்தமிழ்த்தாளாகும். இது தண்டமிழ்த் தாயின் வளர்ச்சி கருதி கலைவல்லவர் பலராலும் எழுதப்பட்ட கட்டுரை கொண்டு மிளிர்வது. ஆங்கில அறிவியல் நூல்களின் சிறப்புச் சொற்க (Scientific Technical Terms) ளுக்குத் தக்க தமிழ்ச் சொற்கள் தருவதிற் சிறப்புடையது. இதன் ஆண்டுக் கட்டணம் ரூபா ஒன்றே.

கந்தன் வெண்பா மாலையும் கந்தன் கவிப்பத்தும்—இந்நூல் கோயமுத்தூர்ச் செட்டிபாளையம் திருவாளர் R. N. கலியாணசுந்தரக் கவுண்டரவர்களால் இயற்றப்பெற்றது. வெண்பா அனைத்தும் முற்றெதுகையாய் நின்று ஓசையின்பம் பயந்து ஓசை ஒலியெலாமான முருகப்பெருமானிடத்துப் பேரன்பை வளர்ப்பது; கந்தன் சித்திர பந்தனமாலை, முதலிய நூல்களையும் இவ்வாசியர் இயற்றியுள்ளனர்.

———



அப்பர் திருமுன் யானை அடிபணிந்தது.

ஓம்
செந்தமிழ்ச் செல்வி
திங்கள் வெளியீடு

சிலம்பு-௩௩] பவ—பங்குனி [பரல்-௬

திருமூலர் திருமந்திரம்

ஆறாந் தந்திரம்

திருவடிப்பேறு

தாடந்த போதே தலைதந்த வெம்மிறை
வாடந்த ஞான வலியையுந் தந்திட்டு
வீடந்த மின்றியே யாள்கென விட்டருட்
பாடின் முடிவைத்துப் பார்வந்து தந்ததே.

பதவுரை:—

அருள்பாடின்—(உயிர்கள்மேல் தான் வைத்திருக்கிற) பேரருள் முறைமையினால்

பார் வந்து—(குருவடிவில்) உலகிற்கு வந்து

தாள் முடிவைத்து தந்தபோதே—எனது சென்னியின்மேல் தமது இரண்டு திருவடிகளையும் வைத்து அருள் செய்த நேரத்திலேயே

தலைதந்த—(என்னைப் பசுபாசப் பிணிப்பினின்று நீக்கி அவை இனி என்னைச் சேராதபடி அவற்றின் மேலே) தலைமைத் தன்மையைக் கொடுத்த

எம் இறை—எமது தலைவனாகிய சிவபெருமான் (என்னைப் பசுபாசப் பிணிப்பினின்று நீக்கியது மன்றி)

வாள்தந்த ஞான வலியையும் தந்திட்டு—பேரொளி விளக்கமாயுள்ள மெய்ஞ்ஞான ஆற்றலையும் எனக்குக் கொடுத்து

அந்தமின்றி வீடு ஆள்க என விட்டு தந்தது—இறவாத பேரின்பத்தை (நிரதிசய இன்பத்தை) நீ நுகர்க என்று கூறி அருள் செய்தான்.

விளக்கவுரை:—

இப்பாட்டு அதன் தலைப்பிற் குறிப்பிடப்பட்டபடி "திருவடிப்பேறு" கூறுகிறது. திருவடிப்பேறு என்பது சொல்மாத்திரையாய்ச் சிவபெருமானுடைய திருவடிகளைப் பெறுதலாம்; அதாவது, உயிர் சிவபெருமானோடு இரண்டற்ற அத்துவிதக் கலப்புநிலை பெற்று இறவாத பேரின்பம் நுகர்ந்துகொண்டிருத்தல். இந்தப் பேரின்ப நிலையானது தமிழ்த் திருமறைநூல்களில் திருவடி இணையின் கீழிருத்தல், அரன் கழல் செல்லுதல் முதலிய பல சொற்றொடர்களாற் குறிக்கப்படுகின்றது. உலகிலுள்ள ஒரு சகலவருக்கத்து உயிர் பேரின்ப நிலை அடைகிற பருவமடைந்த பொழுது, சிவபெருமான் குருவடிவில் உலகிற்கு வந்து தமது இரண்டு திருவடிகளையும் அவ்வுயிரின் தலைமேல் வைத்து அருள் செய்கின்றார் என்பதை மாணிக்கவாசக அடிகள் முதலியபேராசிரியர்களுடைய வரலாற்றினால் நாம் அறிகிறோம். இது திருவடி தீக்கை என்று கூறப்படும். "பிரானாய் அடி என்மேல் வைத்தாய் நீயே" என்று திருநாவுக்கரசு அடிகள் கூறியது காண்க.

பதவுரை சொல் வரிசையிற்போல உரைநடை செய்க.

அருள்பாடு—அருள் + பாடு = அருட்பாடு
அருள் என்பது சிவபெருமான் உயிர்கள்மேல் வைத்த பேரிரக்கம்; கதிரவனொளிபோன்று சிவபெருமானை விட்டு நீங்காத பேராற்றல். பாடு—முறைமை; பெருந்தன்மை என்று பொருள் உரைப்பினும் பொருந்தும்.

தாள்தந்தபோதே தலைதந்த—சிவபெருமான் தமது திருவடிகளைத் தலைமேல் வைத்தலும் அப்பேறுபெறும் உயிரினுடைய பசுபாச நீக்கமும் உடன்நிகழ்வது ஆதலால் 'தாள்தந்த போதே தலை தந்த எம்மிறை' என்றார்.
தெளிவுபற்றி, 'தாள்தந்த' 'தலைதந்த' என இறந்தகாலத்தாற்கூறினார். தலை—தலைமை; அதாவது முன் தம்மை அடிமை கொண்டிருந்த பசுபாசங்களை அடிப்படுத்து அவற்றிற்குத் தலைமை கொள்ளுகின்ற தன்மை.

எம்இறை—இறை—தலைவன். உயிர்களுக்கு எல்லாம் தலைவனாயுள்ளவன் எனக்கு வந்து அருள் செய்தான் என்பார், எம்மிறை என்றார்—இறை என்ற சொல்லால், தன்னை நண்ணினர்க்கு அருள் செய்தல் அவர்களுக்குத் தலைவனாயுள்ளவன் கடன் என்பது குறிப்பிடப்பட்டது.

வாள்தந்த ஞான வலியையும் தந்திட்டு—வாள் என்பது ஒளி; இங்கே அது அருட் பேரொளியைக் குறிக்கிறது. வாள்தந்த ஞானம் = அருள்ஞானம், சிவஞானம், மெய்யுணர்வு.
ஞான வலியைத் தருதல் என்பது சிவபெருமான் தமது முற்றறிவு முதலிய எண்குணங்களையும் உயிரினிடத்துப் பதித்துத்

தம்மைப்போ லாகச்செய்தல். ஞானவலியையும் என்பதிலுள்ள உம் இறந்தது தழீஇய எச்ச உம்மை. பொருள் பதவுரையில் விளக்கப்பட்டது.

தந்திட்டு—இடு—துணைவினை; தந்து. .

அந்தமின்றி வீடு ஆள்க என விட்டு தந்தது—வீட்டின்பம் அளவுபடாத இன்பம் (Infinite Bliss) ஆதலின் அந்தமின்றி வீடு ஆள்க என்றார். 'வீடுஆள்க என' என்பது 'வீடுஆள்கென' என அகரம் கெட்டு நின்றது. ஆள்தல் இங்கே நுகர்தல் என்ற பொருளில் வந்தது. தந்தது=அருள்செய்தது.

எம்மிறை (எழுவாய்), தந்தது (பயனிலை) எனமுடிக்க. வந்தது - உயர்வுபற்றி அஃறிணையாற் கூறினார்; திணைவழுவமைதி; அடிகள் வந்தது என்பதுபோல்.

இந்தப் பாட்டானது சிவபெருமான், பேரின்பமடைகிற பருவம் வந்த உயிருக்குத் திருவடி தீக்கை செய்தலும் அப்பொழுது உடனிகழும் நிகழ்ச்சிகளும் கூறுகின்றது. முடிவைத்துத் தாள்தந்த பொழுது என்றதனால் பசுபாசமறுத்தலா லுண்டாகும் மலநீக்கமும், வாள்தந்த ஞானவலியையுந் தந்திட்டு என்றதனால் அருள்ஒளிவிளக்கமும், அந்தமின்றியே வீடுஆள்க எனவிட்டு என்றதனால் பேரின்ப விளக்கமுங் கூறப்பட்டன. இந்நிகழ்ச்சிகள் சிவஞானபோதம் 11-வது சூத்திரத்திற் கூறப்பட்டிருக்கிறபடி உயிரினது சிறப்பியல்பு அத்துவித நிலையின்கண் நிகழ்வதாகும். இது சுத்தாவத்தையின் துரியாதீதநிலை (நின்மல துரியாதீதநிலை.) நின்மல துரியாதீத நிலையில் உடன் நிகழும் இம்மூன்று நிகழ்ச்சிகளும் திருவாசகத்திலுள்ள பல பாட்டுக்களிற் கூறப்பட்டுள்ளன. சில பாட்டுக்களில் ஒரு நிகழ்ச்சியும் சில பாட்டுக்களில் இரண்டு நிகழ்ச்சிகளும் கூறப்பட்டுள்ளன.

(1) பத்திமையும் பரிசுமிலாப் பசுபாச மறுத்தருளி; (2) இந்திரிய வயமயங்கி (3) முத்திநெறி அறியாத (4) இன்றெனக்கருளி; (5) நானுரென்னுள்ளமார் என்னும் முதற்குறிப்புகளுடைய பாட்டுக்களிலும் பிறபாட்டுக்களிலும் இம்மூன்று நிகழ்ச்சிகளும் ஒருங்கு கூறப்பட்டிருத்தலை நோக்குக. விரிப்பில் உரை பெருகும்.

—மா. வே. நெல்லையப்பபிள்ளை

திருவாசகம்

"இன்றெனக் கருளி"

[திரு. மா. வே. நெல்லையப்ப பிள்ளை]

மேற்படி முதற்குறிப்புடைய பாட்டிற்கு நான் எழுதிய உரை செந்தமிழ்ச் செல்வி சிலம்பு ௧௩: பரல் ௭: 291 முதல் 296 பக்கங்களில் வெளியிடப்பட்டிருந்தது. அவ்வுரையின் முடிவில் அதனைப் பார்க்கினும் சிறந்த உரைகாணும் சிவநேயர்கள் அச்சிறந்த உரையை எழுதும்படி ஒரு வேண்டுகோள் விடுத்திருந்தேன். அவ்வேண்டுகோளுக்கு இணங்கி இரண்டு சிவநேய நண்பர்கள் விடை எழுதினார்கள். ஒரு நண்பர் யாழ்ப்பாணம் திருவாளர் R. நடராஜா அவர்கள். சில குறிப்புகளை எழுதி அவர்கள் எனக்கு நேரே அனுப்பினார்கள். அவர்களை எனக்கு நேரில் தெரியாது. மற்றொரு சிவநேயர் எனக்கு நெடு நாளாகத் தெரிந்த நண்பர், திருவாளர் பொ. முத்தைய பிள்ளையவர்கள். அவர்கள் சைவசித்தாந்தப் புலமை உடையவர்கள்; சைவ உலகிற்கு நீண்டகாலமாக பரோபகாரச் சிவத்தொண்டு செய்து வருகிறவர்கள்; அவர்கள் அப்பாட்டு முழுமைக்கும் பொழிப்புரையும் கருத்துரையும் எழுதிச் செந்தமிழ்ச் செல்விப் பத்திரிகை பதிப்பிக்குமிடத்துக்கு அனுப்பி அவை பங்குனித் திங்கள் வெளியீட்டில் அச்சிடப்பட்டுள்ளன; அவர்கள் இருவர்களுக்கும் நான் எனது மனமார்ந்த வந்தனம் செய்கின்றேன். திருவாளர் பொ. முத்தைய பிள்ளையவர்கள் நான் ஐயங்கொண்டிருந்த "சென்று சென்றணுவாய்த் தேய்ந்து தேய்ந்து ஒன்றாஞ்சிவன்" என்ற பாகத்துக்குச் சைவவாதி சங்கற்ப நிராகரணத்தில் மேற்கோள் எடுத்துக்காட்டி விளக்கினார்கள். இந்த மேற்கோள் நான் முன் ஓதி அறியாதிருந்ததொன்று. அம்மேற்கோள், பாட்டின் மூன்றாவது வரியை விளக்குதற்கு மிக்க துணையாயிருந்தது. அதற்காக அவர்களுக்கு எனது தாழ்ந்த வணக்கத்தைச் செய்கின்றேன். இவ்வாறு சிவநேயர்கள் ஒருவருக்கொருவர் துணைசெய்து கருத்துக்களை வெளியிடுவதனால்தான் திருவாசகத்துக்கு ஒருவாறு உரைகாண முடியும். இனி, இரண்டு சிவநேயர்களிடமிருந்துவந்த குறிப்பையும் உரையையும் வைத்துக்கொண்டு "நினைப்பென்னும் நெடுங்கிணற்றினில்" உள்ளாக என் அறிவளவில் சென்று இறைவன் திருவருளைத் துணையாகக்கொண்டு பாட்டுக்கு உரைகாண முயன்றதில் நான் அறிந்த கருத்துக்களை இதனடியில் எழுதுகின்றேன். அவை பெரும்பாலும் நான் முன்னெழுதிய உரைகளை விளக்குவதாயிருக்கும். சிவநேயர்கள்

அவற்றைப் பொருந்துமட்டில் கொள்க. திருவாசகப் பாட்டுக்களுக்கு என்போன்றவர்கள் உரைகாண்பது எளிதன்று என்பது எனக்குத் தெரியும். ஆயினும், நான் ஏதாவது உரையெழுதி வெளியிட்டால் என்னைப் பார்க்கிலும் சைவ சித்தாந்த உண்மை நன்கு தெரிந்தவர்கள் அதனைத் திருத்தியும் விளக்கியும் எழுதிச் சைவ உலகத்துக்குப் பயன்படும்படி செய்வார்கள் என்ற பேரவாவினுல் எனது உரையை வெளியிடலானேன்.

இந்தப் பாட்டு எதைப்பற்றிச் சொல்லுகிறது என்பதற்கு அதிற் சில குறிப்புகளுள்ளன. இந்தப் பாட்டும் இதனுடன் சேர்ந்த பிறபாட்டுக்களும் சேர்ந்த கோயிற்றிருப்பதிகம் அநுபோக இலக்கணத்தைக் கூறுகின்றது என்பது தலைப்பில் எழுதப்பட்டிருக்கிறது. இந்தப் பாட்டுக்கு முந்திய பாட்டினிறுதியில் மாணிக்கவாசக அடிகள், "களித்தனனுன்னைக் கண்ணுறக்கண்டு கொண்டின்றே" என்றுகூறி அடுத்த பாட்டில் முந்திய பாட்டின் கடைச்சொல்லாகிய 'இன்று', என்பதை முதலில் வைத்து அடுத்து 'எனக்கு' என்று கூறுகின்ருர். இதனுல், மாணிக்கவாசக அடிகள் திருப்பெருந்துறையில் தமக்கு இறைவன் தமது சென்னியின்மேல் திருவடிகளை வைத்துத் திருவடி தீக்கை செய்து ஆண்டருளிய போது, தாம் தமது சிவானந்த சுவாநுபூதியிற்கண்டு உணர்ந்த உண்மைகளை உலகம் உய்யுமாறு கூறியருளினுர் என்று நாம் நினைக்கவேண்டியதாயிருக்கிறது. இங்ஙனம் அடிகள் அடைந்த சிவானந்த சுவானுபூதி நிலையானது சுத்தாவத்தையைச் சேர்ந்த நின்மல துரியாதீத நிலையாகும். இது நாலாஞ் சத்திநிபாதம் முற்றிய சிறப்புஇயல் அத்துவிதநிலை. இந்த அத்துவிதக் கலப்பு நிலையில் இறைவன் உயிரோடு வேருய் நின்று அறிவிக்கும் நிலையானது "உள்ளத்தெழுகின்ற ஞாயிறேபோன்று நின்றநின் தன்மை" என்றதனுலும், உடனுய் நின்று அறியும் நிலையானது "நீயலாற்பிறிது மற்றின்மை" என்றதனுலும், ஒன்ருய் நின்று பரபோகம் துய்க்கும் நிலையானது "நினைப்பற நினைந்தேன்" என்றதனுலும் இந்தப் பாட்டிற் கூறப்பட்டன. வேருய் நின்று அறிவிக்கும் நிலையினுல் உயிருக்குப் பசுபாசம் அறுதலாகிய மலநீக்கமுண்டாகின்றது. இந்த நிலையை அடிகள் அற்புதப்பத்தில் "பொய்யெலாம்விடத் திருவருள்தந்து தன் பொன்னடியிணை காட்டி மெய்யனுய் வெளிகாட்டி" எனவும் "பொற்கழலிணைகாட்டி வேந்தனுய்வெளியே என்முன் னின்றதோ ரற்புதமறியேனே" எனவும், கண்டபத்திலே "சிந்தைதனைத் தெளிவித்து" எனவும் "பல்லோருங்காண என்

பசுபாசு மறுத்தானை'' எனவும், அச்சோப்பதிகத்தில் ''சித்தமல மறுவித்து'' எனவும் கூறியருளினர். உடனாய்நின்று அறியும் நிலையினால் உயிருக்கு அருளொளிவிளக்க முண்டாகின்றது. அருளொளி விளக்கமாவது, பசுபாசப் பொருள்கள் இறைவனது அருளையின்றித் தனித்துநில்லா என்று உயிர் தனது அறிவிற் காணுதல். இந்த நிலையை அடிகள் கண்டபத்தில் ''சிந்தைதனைத் தெளிவித்து'' என்றதற்குப்பின் ''சிவமாக்கி'' எனவும் ''பித்தனிவனென வென்னை ஆக்குவித்து'' எனவும், அச்சோப்பதிகத்தில் ''சித்தமல மறுவித்து'' என்றதற்குப் பின் ''சிவமாக்கி'' எனவும், உயிருண்ணிப்பத்தில் ''எனை நான் என்பதறியேன்'' எனவும் ''திருப்பெருந்துறை யுறைவான் நிச்சம் என்னெஞ்சினின் மன்னி யானாகி நின்றானே'' எனவும் கூறியருளினர். ஒன்றாய் நின்று பரபோகம் துய்க்கும் நிலையினால் உயிருக்கு இன்ப விளக்கமுண்டாகின்றது. இந்த நிலையை அடிகள் சிவபுராண அகவலில் ''மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று விடுற்றேன்'' எனவும், போற்றித்திருவகவலில் ''இன்றெனக் காரமுதானாய்'' எனவும், குலாப்பத்தில் ''தனதாள் முயங்குவித்த அடியேனை'' கண்டபத்தில் ''சிவமாக்கி'' என்றதற்குப்பின் ''எனை ஆண்ட அந்தமிலா ஆனந்தம்'' எனவும், ''பேதைகுணம் பிறருருவம் யானெனதென் னுரைமாய்த்துக் கோதிலமுதானானை'' எனவும் ''அளவிலா ஆனந்தமளித்தென்னை யாண்டானை'' எனவும் கூறியருளினர். இவ்வாறு அடிகள் இந்த மூன்று அத்துவித நிலைகளையும் திருவாசகத்திற் பல இடங்களில் கூறியிருக்கின்றார். இந்த மூன்று அத்துவித நிலைகளும் சிவஞானபோத சூத்திரத்தில் (1) ''காண உள்ளத்தைக் கண்டு'' எனவும் (2) ''காண்டலின்'' எனவும் (3) ''அரன்கழல் செலுமே'' எனவும் கூறப்பட்டிருத்தல் காண்க. மேலே கூறப்பட்ட திருமந்திரப் பாட்டிலும் இம்மூன்று நிலைகளும் கூறப்பட்டன.

''உள்ளத்தெழுகின்ற ஞாயிறேபோன்று நின்றநின் தன்மை'' என்ற சொற்றொடருக்கும் ''நினைப்பற நினைந்தேன்'' என்ற வாசகத்துக்கும் திரு. பொ. மு. பிள்ளையவர்கள் எழுதிய உரையும் நான் கூறிய உரையும் சொல்லால் வேற்றுமையுடையனவாயினும் பொருளா லொன்றுபட்டுள்ளன என்பதறிக. ''நீ அலாற்பிறிது மற்றின்மை'' என்ற சொற்றொடர்க்கு இருவர்கூறிய உரைகளில் பொருள் வேற்றுமையுளது. பிள்ளை அவர்கள் பிறிது என்றசொல் 'தன்னை' அதாவது பசுவைக் குறித்தது என்று கூறுகிறார்கள். பிறிது என்பது (பதியை அல்லாத) பசுபாசப் பொருள்களைக் குறிக்கிறது என்று நான்

நினைக்கிறேன். இறைவன் திருவருளையன்றிப் பசுபாசப்பொருள்கள் ஒன்றும் சிவித்து நில்லா என்ற சித்தாந்தக் கருத்தை அது உணர்த்துகின்றது. இவ்வுரை பொருந்துமாறு பின் நான் கூறுவனவற்றாலும் விளங்கும்: இன்னும் 'இன்மை' என்ற சொல்லுக்கு அவர்கள் தாங்கள் கொண்ட கருத்துக்குத் தக்கவாறு நில்லாமை என்று பொருள் கொண்டிருக்கிறார்கள். நான் கொண்ட கருத்துக்குத் தக்கவாறு இன்மை என்பதற்கு விளங்காமை என்று பொருள் கொண்டிருக்கிறேன். எது பொருந்துமோ அதனை நேயர்கள் கொள்க.

மூன்று சொற்றொடர்களையும் தொடர்பு படுத்துவதில் பிள்ளையவர்கள் 'தன்மை' என்பதற்கு ஐ உருபு விரித்தும் 'இளமை' என்பதற்கு 'ஆல்' உருபு விரித்தும் உரைகூறியிருக்கிறார்கள். நான் 'தன்மை'க்கு 'ஆல்' உருபு விரித்தும் இன்மைக்கு ஐ உருபு விரித்தும் உரைகூறினேன். "உள்ளத்தைக் காணக்காட்டிக் காண்டலின்" என 11-வது சூத்திர வாசகம் இருத்தலால் 'தன்மை'க்கும் இன்மை'க்கும் 'ஆல்' உருபு விரித்து உரைப்பது பொருத்தம் என்று நான் நினைக்கிறேன். காட்டும் நிலையும் காணும் நிலையும் பரபோகந் துய்க்கும் நிலையுள் அடங்குதலால், இரண்டிற்கும் 'ஐ' உருபு கொடுத்து விரித்துப் பொருளுரைத்தலும் நான் கொண்ட கருத்துக்குப் பொருந்தும்.

"ஒன்றும் நீ அல்லை," "அன்றி யொன்றில்லை," "யாருன்னை அறியகிற்பாரே" என்ற மூன்று சொற்றொடர்களுக்கு இருவர் உரைகளும் கருத்தால் ஒற்றுமை உடையன. இங்கே மாத்திரம் அவர்கள் 'பொருள்கள்' என்று பன்மையிற் கூறிப் பசுபாசப் பொருள்களைக் குறித்தலை நோக்குக. பிள்ளை அவர்கள் இந்தப் பாட்டிற் கூறப்பட்டிருக்கிற அத்துவித நிலையைப்பற்றி ஒன்றும் கூறவில்லை.

(தொடரும்)

புதுக்கவி - Original Poetry

மலரவன் வரலாறு

(திரு. அ. நடராஜ பிள்ளையவர்கள்)

(குறள் வெண் செந்துறை)

"கலைமகளே! நினைமறந்த காரணத்தா லந்தோ!
காசினியிற் பட்டதுயர் கணக்கிலடங் கா;யான்
அலைமகளின் திருமகனு யவதரித்து நின்பா
லயர்ப்பதனு லிக்கோல மாயினனென் செய்வேன்! 1

என்செய்வே னீரிரவு மொருபகலு மியாண்டும்
இருப்பதற்கு முண்பதற்கு மிடமுணவு கிட்டா
தன்பே! நின் னருளுருவை யலைந்தெங்குந் தேடி
யடவிபல கடந்திளைத்தே னவ்வுருவங் காணேன். 2

காணுமிந்தக் காநாப்பண் கடுவெயிலிற் களைத்தோர்
காணுகின்ற கானலெனக் காணுகின்ற குடிலிற்
பேணுமென்ற னுயிர்நிலைப்பப் பெறுமுணவைப் பெற்றுப்
பெயர்ந்திடுவ னுயர்ந்திடுமென் பேற்றினையான் பெறவே. 3

ஏ! என்னே! இக்குடிலி னெதிரகத்தே நிற்கு
மிளங்கொடியின் திருமுகமுன் விளங்கியநன் முகமாய்
மேயினதென்?" எனவினவி வீறுளதோ ரிளவன்
மெல்லெனவே தென்றலென மேனோக்கி நடந்தான். 4

நடந்தவன்பின் வேனிலெனு நல்லதொரு துணைவன்
நற்காலை வெயிற்கொடியை நலனுறவே பிடித்துத்
தொடர்ந்திடமா மரக்குயில்கள் தொல்லிசைகள் பாடத்
தோகைமயில் முன்சென்று தோழன்வர வுரைக்கச் 5

சென்றமகன் தவவடிவாய் நின்றமகட் சேர்ந்தே,
"தேமொழியே! பசிப்பிணியாற் சேர்ந்தனன் சோர்வுடனே;
ஒன்பதிராப் பகலுறக்க மோய்வின்றி நடந்தேன்;
ஒருபகலு மீரிரவு முணவொன்றுங் காணேன்." 6

ஒருபகலு மீரிரவு முணவில்லே னென்ற
ஒருநிலைமை தவமகளி னுள்ளமதை வாட்ட
அருமைநிறை குடிலகத்தே யடைந்துபல கனிகாய்
ஆள்வள்ளிக் கிழங்குசில வன்புடனே கொடுத்தாள். 7

கொடுத்துப்பின் விருந்தினன்முன் கோதையவ ளின்று
கோலவெழி னணமிகக் 'கொள்ளுமுண' வென்றாள்.
மிடித்துயராம் பசிப்பிணியான் மிக்கநலி வுற்ற
மேலவனும் பசிதணிக்க விரைந்தன னப்போது. 8

போதுவிரி நறுந்தேறற் போனுமந்த நங்கை
புன்குடிலி னொருபாலிற் போற்றுதலை யுற்ற
போதுகமழ் தெண்ணீரைப் புதுக்கலத்திற் பெய்து
போற்றுமிள வற்கொடுத்துப் புரிவேட்கை தீர்த்தாள். 9

தீர்த்தமகள் குடிலருகே தெற்றியெனக் கிடந்த
சிறுகல்லி னிளவலினைச் சேர்ந்திருக்கச் செப்பி,
போர்த்திடுநன் னுணமெனும் போர்வையினைச் சிறிது
புறத்தகற்றி நெடுந்தருவின் புறத்தொதுங்கி நின்று. 10

"தருவைநிகர் கொடைவள்ளால்! தமையெங்கோ முன்பு,
தமியேன்கண் கண்டதெனச் சாற்றிடுமெ னெஞ்சு,
பெருமைமிகு நும்முடைய பெருங்காட்சி யகன்று,
பேதுற்ற தெந்நகரோ? பேசிடுவீர்! சற்றே." 11

சற்றெனவே வினவிடுநற் றையன்மொழி கேளா,
தனயனுந்தன் வரலாறு தனையுரைக்கப் புக்கு,
"பற்றினைவே ரோடகற்றிப் பலநாளாய்த் தவஞ்செய்
பாவையரே! கேட்டிடு; யான் பகர்ந்திடுநல் லாறே. 12

பாவையரே! சான்றோர்கள் படர்ந்துநிறை தொண்டைப்
பல்வளஞ்சா னாடதனிற் பகர்காஞ்சி நகரிற்
காவைநிக ரந்தணர்தங் கால்வழியில் வந்த
கருணைமிகு மொருபெரியா ரருணையெனும் பெயரார். 13

பெற்றமகா ராணென்று பெண்ணொன்று மிருவர்
பேதுறலி லாண்மகனிப் பெரும்புவியைத் தனதாக்
கொற்றமிக வாண்டிடுமம் மாயவனார். அவர்செய்
கொடுந்தவத்தான் வந்துதித்த கொடும்பாவி யான்காண்.

தவமகளா மலைமகளென் றகைமைநிறை மாமி
தான்பெற்ற கலைமகளென் றனிப்பெயர்க்கே யுரியாள்;
நவமான வெண்ணிறமா நன்மேனி யுள்ளாள்;
நற்கலையில் வெண்கலையே நாடுமவ ளுடையாம். 15

வெண்மணியே யவள்பூண விளங்கிடுநற் கலனும்,
வித்தகமே யவள்கொண்டு விளங்கிடுநற் குணமாம்;
எண்ணெழுத்தைக் கண்ணெனவே கொண்டிடுநல் லெழிலாள்;
இயற்றமிழு மிசைத்தமிழு மிசைந்திடுநன் மொழியாள். 16

மொழிநான்கு மறைகளினு முதனிலையைப் பெற்றாள்
மூதறிவி லவளைநிகர் மூவுலகி லில்லை.
பழிநிறையும் பொருட்செருக்காற் பாழிலலை வேனைப்
பன்முறையு நன்னெறியிற் படரவிடுத் தப்பால். 17

முறையாக மறைநான்கும் மொழிவித்தே யெற்கு
மூவுலகு மறையவனென் றோர்பெயரை மொழியக்
குறைவில்லாத் திருவேறு குணம்வேறு கொள்ளுங்
கோதில்லாத் திருக்குறளுங் கோதறவே கொண்டாள்.

கோதில்லாக் குணமணியின் கொழுந்தாய வவள்போற்
குவலயத்தி லன்புமிகு கொம்பினைக்காண் பரிதாம்.
நீதில்லாச் செல்வியவள் சிறுபோதி லென்னைச்
சிறியவிழல் போற்றொடர்ந்து திரிந்துவிளை யாடும். 19

விளையாட்டி னுங்கல்வி மேன்மையினை விளக்கி
வீறுற்று விளங்கினள்காண் மேதினியி லந்தோ!
விளையாட்டுப் பருவமது விட்டகல யாங்கள்
வினைவயத்தாற் சிலகாலம் வேறாக்கப் பட்டோம். 20

பட்டதனா லவள்சேர்க்கைப் பழக்கமது நீங்கப்
படியினிலே வினர்கடம் பழக்கமது வோங்கக்
கற்றவற்றை விழற்கிறைத்த கதைபோல போக்கிக்
காசினியிற் பொருட்செருக்காற் கழித்தனன்பல் காலம்.

காலமது வீணாகக் கழிவதனைக் கண்ட
காரிகையாங் கலைமளுங் கவலைமிகக் கொண்டு,
சீலமிகு நாணமதைச் சிறிதுவிலக் கிட்டுச்
சிறைப்புறத்தே சேர்த்திடுமச் சிறுமையினை விட்டு, 22

விட்டடனே வெளியேறி வெளிற்றறிவி னேன்பால்
மெலிவுமிகு நன்மொழிகள் மிகப்பலவே கூற,
உட்டுளைகள் பலகொண்ட வொண்மையிலா மதியேன்
உவர்த்தவற்றை யுதறிவிடுத் துருமேற்றை யொப்ப, 23

பற்பலவாங் கொடுமொழிகள் பாவிமிகப் பகர்ந்து,
பாவைவிழி பனித்துளிகள் பலவுதிர்க்கச் செய்தேன்.
முற்பிறப்பில் யான்செய்த முழுத்தவமே யொப்பாள்
மொழியொன்றும் பகராது விழிமாரி பொழிய, 24

பொழிலைவிட்டுப் புறமோடும் பொன்மயிலே போல
பூங்குயிலு மெனைவெறுத்துப் போயினளப் பாலே
எழிலைவிடுத் தெனும்புருவை யேற்குமொரு மூடன்
எண்ணமெனப் பொருட்பொலிவை யெண்ணியக மகிழ்ந்தேன்.

(தொடரும்)

ஆராய்ச்சிப் பகுதி-Research

தாரமங்கலம்

[இராவ்சாஹிப் திரு C. M. இராமச்சந்திரஞ் செட்டியார், B.A.]

இவ்வூர் கள்ளிக்கோட்டை—சென்னைப் பெரும்பாதையில் இருக்கிறது. சேலத்திலிருந்து 14 கல் தொலைவிலுள்ளது. கி. பி. 1848 முதல் 1860 வரை மேலூர்த் தாலூக்காக் கச்சேரி இவ்வூரில் இருந்தது. பழைய கச்சேரி சத்திரமாக உபயோகப்பட்டு வந்து இப்போது ஆண் பெண் பாடசாலையாயிருக்கிறது. இதன்கீழ், ஆயிரக் கால் மண்டபம் கட்டுவதற்காக வைத்திருந்த 500 கல்தூண்கள் புதைக்கப்பட்டிருக்கின்றனவாம். இவ்வூரைச் சுற்றிலும், முதன்மையாகக் கோயிலின் மேற்புறத்திலும் பல கற்கம்பங்கள் சிதறிக்கிடக்கின்றன. சில வேலை செய்யப்பட்டும் சில வேலை செய்யப்படாமலும் இருக்கின்றன. இவற்றை ஆராயுங்கால், கோயில் திருப்பணி முடிவடைதற்கு முன்னமேயே அரசியல் மாறுதல் ஏற்பட்டிருக்கலாம் என்று தோன்றுகிறது.

இவ்வூரில் பெரும்பான்மையோர் கைக்கோளர்கள். தாரமங்கலம் பூவானிய நாட்டுத்தலைநகர். கொங்குக் கைக்கோளருடைய ஏழு நாடுகளில் பூவானிய நாடும் ஒன்றாகும்.

தாரமங்கலத்திலுள்ள முதன்மையான கோயில் கைலாசநாதர் கோயிலே. இக்கோயில் சேலம் ஜில்லாவிலேயே மிகவும் அழகு பொருந்தியது. இதன் வேலைத் திறத்தை மெச்சாதார் எவருமில்லை; அதற்கு இந்நாட்டில் வழங்குகிற பழமொழியாகிய "பேரூர் பெரிய பாளையம் தாரமங்கலம் தாடிக்கொம்பு" என்பதே சான்று ஆகும். இக்கோயில் மிகப் பழமையானது. 1268-ம் ஆண்டு ஹாயிசள இராமநாதனுடைய கல்வெட்டு இருப்பதினால் இவ்வாலயத்தின் சில பாகங்களாவது அவ்வாண்டிற்கு முந்தி இருந்திருத்தல் வேண்டும். ஆனால் பெரும்பகுதி 1600 முதல் 50 ஆண்டுகளுக்குள் கட்டப்பட்டிருத்தல் வேண்டும். அக்காலம் மதுரை நாயகன்மார்கள் சிறப்புடன் இருந்த காலம். அக்காலத்தில் இக்கோயிலில் திருப்பணி செய்தவர்கள் கெட்டி முதலியார்களில் மூன்று தலைமுறையாக வந்தவர்கள்.

இக்கோயிலின் தோற்றத்தைப்பற்றிக் கொங்கு நாட்டுக் கர்ண பரம்பரை ஒன்று வழங்குகிறது. கெட்டி முதலியாரின் பசுக்கள் மேயச் சென்றபோது ஒரு பசு தானாக இப்போது இலிங்கம் இருக்கும் இடத்தில் பால் சுரந்துகொண்டிருந்ததாம். அதற்காக இடையன் அடிபட அன்றிரவு முதலியார் கனவில் கடவுள் தோன்றி அவ்விடத்தில் இலிங்கம் மறைந்திருப்பதும் அருகில் புதையல்

இருப்பதும் தெரிவித்தாராம். உடனே முதலியார் புதையலை எடுத்துக் கோயில் கட்டினாராம். இக்கதையின் உண்மையைப்பற்றி மிகுதியாய் ஆராயவேண்டியதில்லை. ஏனெனில், கெட்டி முதலியார்கள் வருவதற்கு வெகு காலத்திற்கு முந்தியே, அதாவது ஹாயிசள இராமநாதன் காலத்திற்கு முன்பே இக்கோயில் இருந்தது என்று கி. பி. 1268-ம் ஆண்டின் கல்வெட்டொன்று நிலைநாட்டுகின்றது.

கோயிலின் சுற்றுமதில் 306 அடி நீளமும் 164 அடி அகலமும் உள்ளது. அம்மதிலில் ஆமைகள் முதலைகள் மீன்கள் இன்னும் மற்ற நீர்வாழுயிர்களின் அழகிய உருவங்கள் செதுக்கப்பட்டிருக்கின்றன. இக்கோயிற் சந்நிதி மேற்கு பார்த்தது. முன்வாயிலும் மேற்கே. இதற்குத் தகுந்தபடி மற்ற பாகங்கள் மாற்றப்படவில்லை. வேள்விக்கூடமும் மடைப்பள்ளியும் பின் பக்கத்திலே முறையே வடகிழக்கிலும், தென்கிழக்கிலும் இருக்கின்றன. பஞ்சலிங்க மண்டபமும், பிள்ளையார், முருகப்பெருமான் திருக்கோயில்களும் முன் பாகத்தில் இருக்கின்றன. இவையும் உமையம்மையார் நிலையும் கிழக்கே நோக்கி யிருக்கின்றன. ஆகவே பொதுவாகச் சிவபிரான் திருக்கோயில்கட்குள்ள அமைப்பு முறைகள் இங்கே மாறுபட்டிருப்பதைப் பார்க்கலாம்.

திருக்கோயிலின் பெரிய கோபுரம் தென்னிந்தியப் பொதுச் சிற்பப்படி கட்டப்பெற்றிருக்கிறது. அடிப்பாகம் கல்லினால் கட்டப்பட்டுப் பார்வைக்கு எளிமையாகவும், அழகாகவும் தோன்றுகிறது. அதற்குமேல் கோபுரமானது 5 அடுக்குகள் கொண்டதாய்ச் செங்கல்லினாலும் காறையினாலும் கட்டப்பட்ட உருவங்களை உடையதாய் மேலே ஏழு பித்தளைக்கலசங்களை உச்சியிற் கொண்டதாய் நிற்கிறது. கோபுரத்தில் மேற்குத் திசையில் சிவபிரான் உமையம்மை என்பார் தம் திருஉருவங்களும் தெற்கில் தக்ஷிணாமூர்த்தி உருவமும் வடக்கில் முருகப்பெருமான் திருவுருவமும் அமைக்கப்பெற்றிருக்கின்றன. ஒவ்வோர் அடுக்கிலும் இவ்வுருவங்களே சிறிது மாறியிருக்கக் காணலாம்.

திருக்கோயிலின் முன்கதவு வேங்கை மரத்தாற் செய்யப்பட்டிருக்கிறது. வேலை மிகச் சிறந்தது. வடபுறத்துக் கதவில் 60 குமிழிகள் இருக்கின்றன. அவை ஒவ்வொன்றும் வெவ்வேறு வகையின. தென்புறத்துக் கதவில் 75 குமிழிகள் இருக்கின்றன. இதில் ஒரு சிறு கதவு வைக்கப்பட்டிருக்கிறது. வடபுறத்துக் கதவில் 56 அழகிய உருவங்கள் அமைக்கப்பெற்றிருக்கின்றன. தென் கதவில் அதைவிடச் சிறிது குறைவான உருவங்கள் உள்ளன. இவ்வுருவங்கள் பெரும்பான்மையாகத் திருமாலின் பத்துப் பிறப்புகளையும், கண்ணபிரானது திருவிளையாடல்களையும் காட்டுகின்றன. சிலமட்டும் சைவ சமயச் சார்புடையவை. வாயிலின் மேல்தளம் அழகான உருவங்களைக் கொண்டிருக்கின்றது.

கோயிலின் திருமுன்வாயில் உட்பகுதியைவிட மிகவும் உயர்ந்திருக்கிறது. அங்கிருந்து திருக்கோயிலினுட் செல்லப் படிகள் வழி

யாகஇறங்கவேண்டும். அவ்விடம் ஒரு தேர்போலச் செய்யப்பட்டு அதனைக் குதிரைகள் இழுக்கிறாற்போல அது அமைக்கப்பெற்றிருக் கிறது. குதிரைகளுக்கு முன்னால் யானைகள் நிற்கின்றன. இவ் வாயில் தளத்தில் 64 வீடுகள் கொண்ட ஒரு சதுரப் படம் வரையப் பெற்றிருக்கின்றது. அதனைச்சுற்றி வில் முதலியவை பொறிக்கப் பெற்றிருக்கின்றன. இச்சித்திரம் கெட்டி முதலியாரின் அரசாங்க முத்திரை என்று ஊகிக்கப்படுகின்றது.

திருக்கோயிலின் வெளிச் சுற்றிலே வடக்கு, மேற்கு, தெற்குப் பக்கங்களில் வரிசையாகத் தூண்களை நிறுத்தித் திண்ணைபோல மண் டபம் கட்டியிருக்கிறார்கள். அத்தூண்களெல்லாம் சிறப்பின்றியும், புதுமையாயும் இருக்கின்றன. அவற்றில் சிலமட்டும் பழைய வேலைப் பாடு கொண்டவை. கோயிலின் மேற்பகுதி பொதுவாய்ச் சிவாலயத் தில் காணும் பின்பாகத்தை ஒத்திருக்கிறது. நந்தி இருக்கும் இடத் தில் உள்ள தூண்களும் மண்டபத்துத் தளமும் சிறந்த சிற்ப வேலைப் பாடுடையன. அவை சிவபிரானோடு அருச்சுனன் செய்த போரினை யும் கிருஷ்ணன் திருவிளையாடல்களையும் தெரிவிக்கின்றன. நடுக்கட் டிடத்தின் தென் சுவரின் ஓரமாக எட்டுமூலைக்கிணறு ஒன்று இருக் கிறது. அக்கிணற்றுக்குள்ளாக ஒரு சுரங்க வழி திருக்கோயிலுக்குச் செல்லுகிறது.

உட்சுற்றுக்குச் செல்லும் வழியில் இருக்கும் மண்டபத்தில் ஆறு தூண்கள் இருக்கின்றன. இரண்டில் யாளிகளும் மற்றவற்றில் குதிரைகளும் பாய்வனபோல் உருச் செதுக்கப்பட்டுள்ளன. குதிரை களின்மேல் இருக்கும் போர்வீரர்கள் உருவம் இரட்டை உருவமாகச் செதுக்கப்பட்டிருந்தாலும் பார்வைக்கு ஒன்றாகத் தோன்றும். ஒரு யாளியினுடைய வாயில் நான்கு அங்குலக் குறுக்களவுள்ள கற்குண்டு ஒன்று சுழல்கிறது. அதை வெளியில் எடுக்கமுடியாது. இம்மண்டபத் தின் மேல்தாங்கலில் குரங்குகள் வைக்கப்பட்டிருக்கின்றன. அவற் றைப் பார்த்தால் உண்மையான உருவங்கள் எனவே தோற்றும்.

இக்குதிரைமண்டபத்திலிருந்து உள்ளே சென்றால் மகாமண்ட பத்திற்குப் போகலாம். அங்கே உள்ள வேலைத்திறம் எல்லாவற்றி லும் சிறந்தது. அழகாய்ச் செதுக்கப்பட்ட உருவங்களையுடைய தூண்கள் வரிசையாக நிற்கின்றன. மேலே ஓர் இடத்தில் ஒரே கல் லில் 7 அடி குறுக்களவுள்ள தாமரைப்பூச் செதுக்கப்பட்டிருக்கிறது. இம்மகா மண்டபத்துத் தூண்களில் கோயிலைக் கட்டின சில கெட்டி முதலியார்களுடைய சிலைகளும் அவர்களுடைய மனைவிமார்களின் சிலைகளும் செதுக்கப்பட்டிருக்கின்றன. இரண்டு தூண்களில் ஒரு புறத்தில் இராமர் வில்லும் அம்புமாக நிற்கவும், மற்றொரு புறத்தில் வாலி சுக்கிரீவர் சண்டைபிடிக்கவும் காண்கிறோம். இதனுடைய சிறப்பு என்னவெனில் இராமர் இருக்கும் இடத்திலிருந்து பார்த்தால் வாலி சுக்ரீவர்களைக் காணலாம். ஆனால் வாலி சுக்கிரீவர்கள் இருக்கும் இடத்திலிருந்து பார்த்தால் இராமரைக் காணமுடியாது. மேலும் ஒரு சுவரில் ஓர் அழகிய பெண்ணின் உருவம் செதுக்கப்பட்டிருக்

கிறது. அவள் கெட்டி முதலியார்களின் உடன்பிறந்தவள் என்றும் இக்கோயிலின் பெருமான்மீது மிகுந்த அன்பு வாய்ந்தவளென்றும் சொல்லுவார்கள். இம்மண்டபத்தின் வடகோடி உருக்கள் வெகு அழகாக இருக்கின்றன. அவற்றில் ஒன்று ஆவுடையார் திருமால் உருவமாகவும் சிவபிரான் இலிங்க உருவமாகவும் அதனைச் சார்ந்த மற்ற உண்மைகளையும் காட்டி நிற்பது வியக்கத்தக்கது. சைவசமய உட்கருத்துக்களை செதுக்குரு வடிவில் இத்துணை உருவ அழகுடன் வேறு எங்கும் காண்பது அரிது.

அர்த்த மண்டபத்தின் வாயிலானது இரண்டு பெரிய வாயிற் காவலர்களால் காக்கப்படுகிறது. இங்கே தூண்கள் வெகு அழகாகவும் அழகிய போதிகைகளைக் கொண்டதாகவும் நிற்கின்றன. மண்டபத்து முகட்டிலிருந்து கற் சங்கிலிகள் தொங்குகின்றன. அவற்றின் வேலைகள் மிகு வியப்புள்ளவை. மகா மண்டபத்துக் கதவுகள் 24 பெரிய கடைச்சலுருக்களையும், 49 குமிழிகளையும் கொண்டுள்ளன. தென் கதவில் சூரசம்ஹாரமும், வடகதவில் நகைச்சுவையுருக்களும் உள்ளன. வட கதவுச் சித்திரங்கள் சில சிதைவாயிருக்கின்றன. நடுமண்டபத்தின் உட்புறத் திருநிலையைச் சுற்றி மூன்று பக்கங்களிலும் வரிசையாகத் தூண்கள் நிற்கின்றன.

கெட்டி முதலியார்களில் கடைசி மன்னன் மேற்கு வாயிலுக்கு முன்னால் ஆயிரக்கால் மண்டபம் கட்டவேண்டுமென்று எண்ணியிருந்தான். அதற்காகப் பெரிய கருங்கற்கள் கொண்டுவரப்பட்டன. இக்கற்களெல்லாம் ஏனாதி கிராமத்து பாம்பாரப்பட்டியிலிருந்து வெட்டி எடுக்கப்பட்டன. இப்பெரும் கற்கள் செதுக்கியும் சித்திரிக்கப்பட்டும் கிடக்கின்றன. ஆனால் அம்மண்டபம் கட்டுவதற்கு முந்தி கெட்டி முதலியார்களுடைய ஆட்சி நின்றுவிட்டது. இக்கற்களை இப்பொழுதும் காணலாம். இவ்வாறு திடீரென்று வேலை நின்றதற்குக் காரணம் 1667-ல் மைசூர் தொட்ட தேவராயன் ஓமலூரைப் பிடித்ததாக இருக்கலாம்.

இக்கோயிலுக்கு எட்டுக் கிராமங்கள் மானியமாக விடப்பட்டிருந்தன. அவையாவன:— 1. தசவிளக்கு (நித்தியபூசைக்காக) 2. பாப்பம்பாடி 3. சின்னக்குருக்கள் பட்டி 4. காடன்பட்டி (மந்திர அர்ச்சனைக்காக) 5. எல்லம்பட்டி (திருவாதிரைத் திருவிழாவிற்காக) 6. பானகப்பாடி (தெப்பத் திருவிழாவிற்காக) 7. சின்னச்சோரகை 8. பெரிய சோரகை (சிப்பந்திகளுக்காக). இம்மானியங்களை அரசாங்கத்தார் எடுத்துக்கொண்டு ஆண்டு ஒன்றுக்கு 1402 ரூபாய் தஸ்திக்காகக் கொடுக்கிறார்கள்.

திருக்கோயிலுக்குப் பின்புறத்தில், அதாவது கிழக்கில், ஒரு தெப்பக்குளம் இருக்கிறது. தென்னிந்தியாவிலேயே இதைவிடச் சிறந்ததொன்று இராதென்னலாம். அது 180 அடிச் சதுரமுள்ளது. சுற்றிலுமுள்ள கைப்பிடிச்சுவர் சிவப்புக் கல்லால் கட்டப்பட்டிருக்கிறது. நான்கு பக்கங்களிலும் உட்செல்ல வழிகள் விடப்பட்

டிருக்கின்றன. கைப்பிடிகளின்மேல் கருங்கல்லால் ஆக்கப்பட்ட சிறு நந்திகள் 36 இருக்கின்றன. கைப்பிடிச் சுவரின் உட்புறத்தில் விளக்குகள் வைக்க சிறு முக்கோணக்கூண்டுகள் 360 இருக்கின்றன. இக்குளத்தின் நடுவில் 16 தூண்கள்கொண்ட ஒரு மண்டபம் இருக்கிறது. இக்குளத்தின் நான்கு புறங்களிலும் அரசனுடைய முத்திரை போடப்பட்டிருக்கிறது. இம்முத்திரை திருக்கோயிலில் இருக்கும்படியான முத்திரை போன்றதே.

இத்தெப்பக்குளத்திற்கு வடபுறத்தில் 100 அடிச்சதுரமுள்ள மற்ெருரு சிறிய தெப்பக்குளம் இருக்கிறது. அக்குளமும் பெரிய குளத்தைப்போலவே கட்டப்பட் டிருக்கிறது. கைப்பிடியின் பேரில் சிவப்புக்கல்லால் செய்த 20 நந்திகள் படுத்திருக்கின்றன. இச்சிறு குளம் குடிநீருக்காகவும் பெரிய குளம் குளிப்பதற்காகவும் ஏற்பட் டிருக்கின்றன. சிறிய குளத்தில் முன்காலத்தில் பிராமணர்கள் குளித்துக்கொண் டிருந்தார்களாம். அதற்குக் காரணம் கி.பி. 1290-ல் இலமந்தை என்ற இளமீஸ்வரர் ஆலயம் கட்டின முதலியார் இக்குளத்தை அவர்களுக்குத் தானம் செய்திருந்ததாம். ஆனுல் இப்போது அவ்வழக்கம் நின்றுவிட்டது.

ஊரின் வடமேற்கில் 8 கோணமுள்ள ஒரு அழகிய கிணறு இருக்கிறது. அதனைச் சுற்றிலும் வட்டவடிவமான மதில் கட்டப் பட்டிருக்கிறது. அதன்மேல் கருங்கல்லால் செய்த சிங்கங்கள் நிற்கின்றன. அச்சிங்கங்களின் வாய்களில் கல் உருண்டைகள் இருந்தனவாம். கிணற்றின் அடிப்பாகம் சதுரம். இக்கிணற்றினுடைய வேலைத்திறத்தைப் பார்த்தால் சேலத்துப் பெரிய ராஜாத் தோட்டத்துக் கிணற்றை ஒத்திருக்கிறது.

இக்கிணற்றுக் கருகில் காளிகோயில் ஒன்று இருக்கிறது. அதில் எருமைகளைப் பலி கொடுப்பதுண்டாம். இக்கோயிலைப்பற்றி ஓர் ஐதீகம் என்னவெனில், நெல் குத்துகிற ஒலி கேட்கக்கூடாத தொலைவில் இக்கோயில் இருக்கவேண்டுமென்பதாம். அதனுல்தான் இக்கோயில் ஊருக்கு வெளியில் இருக்கிறது. இதற்கு வடங்கிலும் மேற்கிலும் இருக்கும் குறிகளைப்பார்த்தால் அங்கே பழையபேட்டை இருந்திருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. இங்கே முற்காலத்தில் ஒரு கோட்டை இருந்த அடையாளங்களும் காணப்படுகின்றன.

காளிகோயிலுக்குச் சிறிது தொலைவில் இளமீஸ்வரர் கோயில் இருக்கிறது. அதில் சிறந்த சிற்பவேலை உண்டு. ஆனுல் இப்பொழுது கோயில் பாழ்அடைந்து கிடக்கிறது. இக்கோயிலிற்குப் பயன்படுத்தியிருக்கும் கற்கள் கைலாசநாதர் கோயில் கற்களைப் போலல்லாது, கருமையும் பழுப்பும் கலந்த கற்களாக இருக்கின்றன. கைலாசநாதர் கோயிலின் சிற்பம் தென்னிந்தியச் (திராவிட) சிற்ப வேலைப்பாடு என்று சொன்னேம். ஆனுல் இக்கோயிலோ ஹாயிசள சாளுக்கியர்கள் காலத்து வேலையாகத் தோன்றுகிறது. கற்சித்திரங்கள் அழகாகவும் நுண்மையாகவும் இருக்கின்றன. தாமரைத் தொங் கல்களும் தூண்களில் உள்ள சித்திரங்களும் மிகச் சிறந்தவை. மகா

மண்டபத்துத் தூண்களில் உள்ள சித்திரங்கள் உருவத்தில் சிறியவையாயிருந்த போதிலும் மிகவும் நுட்பமாகவும் உருக்கமாகவும் இருக்கின்றன.

பெண்கள் நடனமாடும்போது தோன்றும் பலவித பாவனைகள் வெகு அழகாகச் செதுக்கப்பட்டிருக்கின்றன. கோலாட்டம் முதலியவை உண்மையான தோற்றத்துடன் செதுக்கப்பட்டிருக்கின்றன. இவ்வளவு அழகிய தூண் வேலை மற்ற இடங்களில் காண்பதரிது.

இதனைக் கெட்டி முதலியார்களில் முதன் மன்னர்கள் கட்டினதாகச் சொல்லுவார்கள். இதைக் கட்டும்போது அரசன் தன் தலைநகராகிய அமரகுண்டியிலிருந்து எழு அம்புகளை எய்யச் சொல்லி 7-வது அம்பு விழுந்த இடமாகிய இந்த இடத்தில் இக்கோயிலைக் கட்டினனும். இவ்வாலயத்திலும் கல் வெட்டுகள் இருக்கின்றன. ஹாயிசள இராமநாதன், பாண்டியன் ஜடாவர்மன் சுந்தர பாண்டியன் II முதல்கொண்டு அச்சுதராயன் சதாசிவராயன் வரை அவை வரையப்பட்டிருக்கின்றன. இக்கோயிலைத் தாரமங்கலத்துத் தொடர்புடைய ஒருவனுன இளமன் என்பவன் கட்டித் தன் பெயரால் இளமீஸ்வரர் என்ற பெயரும் வைத்தானும்.

இவ்வூரில் வரதராஜர் கோவில் என்ற விஷ்ணுகோயில் ஒன்று உண்டு. ஆனுல் அதில் யாதொரு சிறப்பும் இல்லை.

இவ்வூர் வரலாறு:—இளமீஸ்வரர் கோயிலில் இரண்டும், கைலாசநாதர் கோயிலில் ஒன்றுமாக ஹாயிசள இராமநாதனுடைய கல்வெட்டுகள் கிடைக்கிறபடியால் அவற்றின் தேதிகளாகிய கி.பி. 1268 1274 என்ற ஆண்டுகளில் தாரமங்கலம் ஹாயிசளர்களின் ஆளுகையில் இருந்தது. கூடிய விரைவில் பாண்டியர்கள் படை எடுத்து வந்து இராமநாதனைத் துரத்திவிட்டார்கள். அதை இரண்டாம் ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் என்பவனுடைய 1281, 1289, 1290, 1302 என்ற நான்கு கல்வெட்டுகள் மெய்ப்பிக்கும்.

பின்னர் விஜயநகரத்தார் இதனைத் தம் வசப்படுத்திக் கொண்டார்கள். 1532, 1540 ஆண்டுகளில் அச்சுதராயன், 1544-ல் சதாசிவராயன், இவர்களுடைய கல்வெட்டுகள் கிடைக்கின்றன. 1568-ல் வீரவசந்தராயர் என்ற பெயர் காணப்படுகிறது. இவன் முதலாம் வேங்கடனுக இருக்கலாம்.

மற்றொரு கல்வெட்டு தேதியில்லாமல் இருந்தபோதிலும் முதன்மையானதாக இருக்கிறது. அதன்படி தாரமங்கலத்து "ஆறு வெள்ளாளர்கள்" கௌட சூளாமணி, வித்தியா சமுத்திரன் என்ற பட்டங்களைப்பெற்ற ஸ்ரீகண்ட தேவனுடைய தகப்பனுக்குப் பூதானம் செய்ததாகக் கண்டிருக்கிறது. இதில் கண்ட ஆறு வேளாளர்கள் இன்னுர் என்பது தெரியவில்லை. தாரமங்கலமானது கெட்டி முதலியாருடைய தலைநகர். 1276—1290-ல் ஆண்ட இரண்டாம் ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் காலத்திலேயே "தாரமங்கலத்து முதலிகள்" என்ற பெயரைக் காண்கிறேம். 1290-ன் கல்வெட்டில் அமர

குண்டி, தாரமங்கலம் முதலிய பல ஊர்களில் முதலிகளின் பெயர்களைக் குறித்திருக்கிறார்கள். 1289-ன் கல்வெட்டில் "தாரமங்கலத்து 6 முதலிகள்" என்று கண்டிருக்கிறது. ஆறு முதலிகளில் ஒருவன் இளமீஸ்வரர் கோயிலைக் கட்டின இளமன் என்பவன்.

அமரகுண்டியில் ஆண்ட முதலிகளைப்பற்றி எதுவும் தெரியவில்லை. அவர்கள் தொண்டைமண்டல முதலியார்கள் என்பார்கள். தாரமங்கலத்துக் கோயிலைக் கட்டினவன் மும்முடிக் கெட்டி முதலி என்று கர்ணபரம்பரை அறிவிக்கும். அவனுக்குப் பின் வந்தவன் சியாள கெட்டி முதலி என்பவன். கோயிலைக் கட்டி முடித்தவன் வணங்காமுடி கெட்டி முதலி.

இம்முதலியார்களைப்பற்றிக் கல்வெட்டு ஆதரவு ஒன்றும் கிடைக்கவில்லை. 1844-ன் கல்வெட்டுப்படி சதாசிவராயன் காலத்தில் இம்முடிக் கெட்டிமுதலி என்ற பெயரை அறிகிறோம். அவனைப்பற்றிப் பல பிருதுகள் சொல்லப்பட்டிருக்கின்றன. அதில் தானம் செய்த ஓர் ஊரின் பெயர் வணங்காமுடி சமுத்திரம் என்பது. அதில் கண்டவனே எழுகரைநாட்டு வரிகளைச் சிதம்பரத்தில் இருந்த "வணங்காமுடி மடம்" என்ற சைவ மடத்துக்குத் தானம் செய்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. 1568-ல் வண்ணமுதலியார் இம்முடி இளமநாயக முதலியார் என்பவன் இவ்வூர் இருகோயில்களுக்கும் இளம சமுத்திரம் என்ற கிராமத்தைத் தானம் செய்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

1659-ல், மதுரைத் திருமலை நாயகன் கடைசி ஆண்டில், ஏற்பட்ட ஒரு கல் வெட்டில் இம்முடிக்கட்டி முதலியார் குமாரமுத்து நாயகனுக்காகத் தானம் செய்ததாகக் கண்டிருக்கிறது. 1641-ல் கண்டீரவ நரசராஜன் காவேரி புரக்கணவாய் வழியாக வந்து வணங்காமுடிக் கெட்டி முதலியாரைத் தோற்கடித்துச் சாம்பள்ளி, சத்தியமங்கலம் என்ற ஊர்களைக் கைப்பற்றிக்கொண்டான். 1667-ல் தொட்ட தேவராஜனுடைய படைகள் ஓமலூரைக் கைப்பற்றிக் கொண்டன. 1688-ல் சிக்கதேவராஜன் கொங்கு நாட்டைப் பிடித்ததில் கெட்டி முதலியாருடைய மரபு தொலைந்து சோழப்பாடியில் கடைசி முதலியார் பாளையம் இறங்கி யிருந்தபோது மைசூர் சேனைகள் தாக்கினதினால் கொல்லப்பட்டுப் போனான்.

ஆகவே மேற்சொல்லிய கல்வெட்டுகளின்படி விஜயநகர அரசாட்சியில் கெட்டி முதலியார்கள் முதல் முதல் தோன்றினார்கள். தாலிக்கோட்டைச் சண்டைக்கு 25 ஆண்டுகளுக்கு முந்தி மதுரை விஸ்வநாத நாயகரைப்போலவே கெட்டி முதலியார்கள் ஒரு தனி இராஜ்ஜியத்தை ஏற்படுத்த முயன்றார்கள். ஆனால் விஜயநகரம் அழிந்தவுடன் கெட்டி முதலியார்கள், மதுரை நாயகர்கள் பக்கம் சேர்ந்து கொண்டு அவர்களிடம் சிற்றரசர்களாயிருந்தார்கள். திருமலை நாயகனுடைய காலம் முழுவதும் அவ்வாறாகவே இருந்து, அவன் மரபினர் சீர்குன்ற, மைசூர் மரபினர் மேன்மைக்கு வரும்போது மைசூர் தொட்ட தேவராஜனால் தோற்கடிக்கப்பட்டுக் கெட்டி முதலியார்களின் மரபானது சீர் அழிந்து போய்விட்டது. அத்துடன் தாரமங்கலத்துச் சிறப்பும் குறையத் தலைப்பட்டது.

வடிவுதிருந்த அறிவு வளர்ந்தவகை

[திரு. பா. வே. மாணிக்க நாய்க்கர்—
திரு. க. ப. சந்தோஷம் B.A.,L.T.]

(முன் ௩௩௩-ம் பக்கத் தொடர்ச்சி)

நமது இந்திய உண்மைஇயலில் (Hindu Philosophy) மக்கள் வடிவின்கண் அமைந்துள்ள உறுப்புக்கள் இருகூறாக வகுக்கப்படுகின்றன. சமஸ்கிருதத்தில் இவை ஞானேந்திரியங்கள் என்றும் கன்மேந்திரியங்கள் என்றும் பெயர்பெறும். அறிவின்பாற்படுந் தொழிலுடைய கருவிகள் ஞானேந்திரியங்களென்றும், கிரியை அல்லது செயலின்பாற்படுந் தொழிலுடைய கருவிகள் கன்மேந்திரியங்களென்றுஞ் சொல்லப்படுகின்றன. செயலென்பது புடைபெயர்ச்சி, புணர்ச்சி முதலிய பலவற்றையுங் குறிக்கும். ஞானேந்திரியங்களைக் கன்மேந்திரியங்களினின்றும் பிரிப்பதற்கு வாயை ஊடறுத்துச் செல்லும் ஒரு கோடு வரைந்திருக்கின்றனர். வாய் என்பது ஞானேந்திரியப் பகுதியிலொரு கூறும், கன்மேந்திரியப் பகுதியில் மற்றொரு கூறுமுடையதாயிருக்கின்றது. இங்ஙனம் நமது உண்மை இயலார் வகுத்த வகுப்பு மிகத் திருத்தமானதே.. வாய்க்கு மேலுள்ள கண்கள் பார்வையினால் அறிவையும், காதுகள் ஒலியினால் அறிவையும், மூக்கு மணத்தால் அறிவையும் ஊட்டுகின்றன. வாய் அறிவை வெளிப்படுத்துங் கருவியாகவும் விளங்குகின்றது. இவைகள் ஞானேந்திரியங்களாம். (மூளையைக் கூறாதுவிட்டார் ஆசிரியர். அறிவிற் குறைவிடம் மூளை; இதைப் பின்னாலெடுத்துக்கொள்வர்.)

மேலே குறிக்கப்பட்டவை நீங்கிய பிற கருவிகள் கன்மேந்திரியங்களாம். கன்மேந்திரியங்கள் உணவின்றி வேலை செய்யா. ஞானேந்திரியங்களின் தொழிலும் உணவின்மையாற் குறைவு படுமாயினும், ஓரளவு உணவு சுருங்குவதால் அவை நன்கு தொழிலியற்றுகின்றன வென்று இவ்வகையில் தேர்ச்சியுடையார் கூறுகின்றனர். கன்மேந்திரியங்களைவிட ஞானேந்திரியங்கள் நன்கு தொழிலியற்ற வேண்டுமென்பது கருதியே நமது துறவிகள் உணவைக் குறைக்கின்றனர்.


கடவுளின் வடிவு யாது? இவ்வாராய்ச்சியைப் பன்றியிலிருந்து தொடங்குவோம். பலவற்றை ஒப்பிட்டுப் பார்த்தாலன்றிக் கடவுளின் தலை எத்தன்மையதென்பதை நாமறியலாகாது. பன்றியின் தலையிலுள்ள கண், காது, மூக்கு முதலிய

ஞானேந்திரியங்களின் பகுதியை அதன் உடலோடு ஒப்பிடுங் கால் யாதோ ஓர் அளவு ஏற்படும். இவ் அளவைக் காணுங் கால் பன்றியின் மேல்தாடையையுங் கீழ்த்தாடையையும் நீக்க வேண்டும். அங்ஙனஞ் செய்தாலன்றி உடலில் ஞானேந்திரியங் களுக்கும் கன்மேந்திரியங்களுக்கும் உள்ள அளவு செவ்வனே வெளிப்படாது. எல்லா விலங்குகளையும் எடுத்துக்கொண்டு, அவற்றின் ஞானேந்திரியப்பகுதிக்கும் கன்மேந்திரியப் பகுதிக் கும் உள்ள அளவை நோக்குவோமாயின், கீழ் நிலையிலுள்ள உயிர்களுடைய மூளையின் பகுதி நனிச் சிறிதென்பதைக் காண்போம். சிறப்பாகப் பன்றியின் தலை முழுதுமே வாய் என்று கூறத்தக்கவாறு அதன் தாடைகள் அத்துணை பெருத் திருப்பதை அறியலாம். மேல்நிலையிலுள்ள உயிர்களில் ஞானேந்திரியப்பகுதியின் அளவு சிறிது சிறிதாகப் பெருகு கின்றது. கண்கள் பெரிதாகப் பெரிதாக, அத்துணை தாடையி னளவு சுருங்குகின்றது. கழுதையில் இதைக் காணலாம். இவ் வளர்ச்சி எருதில் இன்னும் விரிகின்றது. குரங்கில் மற்றும் இது பெருகுகின்றது. மக்கள் உடலில் ஞானேந்திரிய வளர்ச்சி வேறெங்குமில்லாத அத்துணை விரிந்திருக்கின்றது. மொத்த மாய்ச் சொல்லுங்கால் மக்களின் தலையிற் பாதி ஞானேந்திரி யக்கூறாகும். பன்றியிலோ அஃது ஏறக்குறைய இருபதிலொரு பங்காம். இங்ஙனம், உயிர்கள் நிலை உயரஉயர ஞானேந்திரியப் பகுதி பெருகுகின்றதைப் பார்க்கின்றோம். ஆயின், கடவு ளின் தலையில் ஞானேந்திரியங்களுக்கும் கன்மேந்திரியங் களுக்கும் உள்ள அளவு எவ்வாறிருக்கவேண்டும்? கடவுள் நிலையில் ஞானேந்திரியப் பகுதி அளவுகடந்து பெருகிக் கன் மேந்திரியப் பகுதி ஒன்றுமில்லாமற் போகவேண்டுமன்றோ? அங்ஙனமாயின், ஞானேந்திரியங்களுக்கும் கன்மேந்திரியங் களுக்கும் கடவுளில் நாம் காணக்கூடிய அளவு $\frac{1}{0}$ ஆகும். க்இ குறியின் பொருள் இன்னதென்பதை மற்றுமொருமுறை எடுத்துகூற வேண்டியதின்று. கடவுளுடைய தலையின் வடிவத்தை, அல் லது, கடவுளின் தலையிலுள்ள உறுப்புகளின் அமைப்பைத் துணியப்புகின், மூளை, கண், மூக்கு, காது ஆகிய இவற்றோடு கடவுளின் தலை ஒன்றுபடவேண்டும். இவ்வாறு கூறுங்கால் கடவுளைப் பற்றிய திருத்தமான கருத்திற்கு முன்னினும் அண் மையில் நாம் வந்து நிற்கின்றோம்.

இனி, மக்களுடைய ஞானேந்திரியங்கள் எல்லாம் பிற உயிர்களின் ஞானேந்திரியங்களைவிட மேம்பட்டனவல்லவென் பதைக் காட்டி, அதிலிருந்து கடவுளைப்பற்றிய வேறோர் உண்மையைக் காண்பாம். இதன் பொருட்டு எறும்பை

ஆராய்வோம். அதற்குக் கண்கள் எத்தனை? எறும்புக் கிருக்குங் கண்களின் எண் இத்துணை என்பது எனது நினைவில் இல்லை; ஆயினும், 1200 முதல் 1800 பார்க்குங் கருவிகள் எறும்பிற்குள வென்று சொல்வது தவறாகாது. இவற்றைக் கண்களென்று சொல்வது பொருந்தாதென்று பார்க்குங் கருவிகள் என்று சொல்கின்றோம். பெருக்கிக் காட்டுங் கண்ணாடி வழியால் இஃதறியப்படும். இவற்றிற்குமேல் எறும்பினுடைய தலையின்மேல் இரண்டு கண்கள் உண்டு. சிவனுக்குங் கூடக் கண் ஒன்றே. எறும்பிற்கோ ஆயிரத்திற்குமேல் கண்கள் உள. இதையறிந்தபின், எறும்பைவிட மக்கள் இவ்வகையிற் சிறந்தவர்களென்று எங்ஙனம் கூறக்கூடும்? நுட்பமில்லாத இருகண்களே மக்களுக்கு உள. சாலச்சிறியவற்றை உற்று நோக்குவதற்கு வேறு கருவிகளை மக்கள் ஆள்கின்றனர். கழுகின் கண்ணுக்கும் ஒரு மகனுடைய கண்ணுக்கும் ஒப்புமையுண்டோ? மிக மிகத் தொலையிலிருந்து பொருட்களைச் சாலத்தெளிவாகக் காணுந்திறமையுடையதாகயிருக்கின்றது கழுகு. மக்கட்கிவ்வாற்றல் இல்லை. ஞானேந்திரியங்களிற் கீழ்நிலையுள்ள கண்ணின் ஆற்றல், மக்களைவிட விலங்கில் மிகுதி என்பது இதனுல் வெளியாகின்றதன்றோ! உயிரின் நிலை உயர உயர, கண்போன்ற கருவிகளின் ஆற்றல் குறைந்து கொண்டே வருகின்றது. மக்கள் நிலையில் இக்கருவிகளின் ஆற்றலைப் பெருக்க, வேறு துணை வேண்டியதாயிருக்கின்றது. ஒரு மகனுடைய மூக்குக்கெட்டாத மணத்தை ஒரு பசு அறிந்து கொள்ளும். ஞானேந்திரியங்களிலுங் கீழ்நிலையிலுள்ளவை, உயிர் வகைகளின் சிறப்பு ஏறஏறக் குறைந்த வன்மையுடையனவாய் இருக்கின்றன. மக்களில் அவற்றின் வன்மை மிகக்குறைந்து தோன்றுகின்றது. கடவுள் நிலையில் அவற்றின் வன்மையும் வடிவும் அறவே நீங்குதல் வேண்டும். ஆதலின், கடவுளுக்குக் கண்ணுமில்லை, காதுமில்லை, மூக்குமில்லை. எஞ்சி நிற்பதியாது?

கீழ்நிலையிலுள்ள உயிர்களிலிருந்து மக்கள் வரையிலுள்ள எல்லா உயிர்களின் மூளைப்பரப்பை நாம் பார்த்தோம். மூளை அமையும் இடத்தின் அளவை உடலின் பிற பகுதிகளின் அளவோடு ஒப்பிடுங்கால் மீன், புழு முதலியவற்றில் மூளையினளவு மிகச் சிறிதென்று பார்க்கிறோம். உயிரின் நிலை சிறக்கச்சிறக்க, மூளையினளவு விரிகின்றது. குரங்கின் மூளைப்பரப்பு, மற்றெல்லா விலங்குகளிலும் நாம் காண்பதைவிடப் பெரியதாகும். இதுபற்றி அது மக்களுக்கு அடுத்தபடியிலுள்ளது. மக்களின் மூளைப்பகுதியோ நிறைக்கு நிறை ஒப்பிடுங்கால் சாலப்பெரிய



பல்வேறு மூளைகளைக் காட்டும் படம்

தாகின்றது. இதுபற்றி யான் இங்கு விரித்துக் கூறவேண்டிய தில்லை. ஏனெனின், ஐரோப்பிய ஆராய்ச்சியாளர் உடலின் எடையொடும் பரப்பொடும், மூளையின் எடையையும் பரப்பையும் ஒப்பிட்டுப் பல்வேறு விலங்கினங்களைப்பற்றிய திருத்தமானபுள்ளி விவரங்கள் கொடுத்திருக்கின்றார்கள். வேண்டியவற்றை ஆண்டுக் காண்க. மக்களின் மூளை விரிந்திருக்கின்ற அளவு வேறெந்த விலங்கிலும் இல்லை.

அறிவும் வடிவும் ஒன்றிற்கொன்று இசைந்து வளர்கின்ற வகையை ஆராயும் இம்முறையில் எல்லாவற்றையும் முடித்துக் கொடுக்கும் ஆற்றல் எனக்கு உண்டென்று யான் கூறவில்லை. அறிவும் வடிவும் இசைந்திருக்கின்றன வென்பதைப் பற்றிய கருத்துக்கள் எல்லோருக்கும் உண்டு. நாடோறும் அக் கருத்துக்களை வாழ்க்கையில் வழங்கவுஞ் செய்கின்றோம். ஒரு மகனை நாம் பார்க்குங்கால், அவனைப்பற்றிய ஒரு மதிப்பு இயல்பாகவே நமக்குண்டாகின்றது. அவனைப் பார்த்தவுடன் அவன் இத்தகையன் என்ற தீர்மானம் நமது உளத்தில் எழுகின்றது. ஒருவன் அறிவுடையவன் என்றும், மற்றொருவன் இணக்கத்திற் கடுத்தவனல்லன் என்றும், இன்னுமொருவன் இசையறிவுடையவ னென்றும் நாம் மதிக்கின்றோமல்லமோ? (ஒரு மகனுடைய வடிவைக்கண்டு இங்ஙனம் அவனது அறிவைத் துணிகின்றோம். வடிவும் அறிவும் ஒன்றிற்கொன்று இசையாதிருப்பின் இங்ஙனம் செய்தல் கூடுங்கொல்?) இவற்றையெல்லாம் ஒரு நாளிற் கற்கவேண்டியதில்லை. இயல்பாகவே இவ்வாற்றல் நமது மதியிலமைந்து கிடக்கின்றது. யான் ஈண்டுச் செய்வதெல்லாம் இயல்பாக அமைந்து கிடக்கும் இவ்வாற்றலைப் பகுத்துக்காட்டி ஒழுங்கு படுத்துவதேயன்றி வேறன்று. நிற்க.

முன்கண்டவாறு மக்களில் மூளையின் பகுதி, உடலொடு ஒப்பிடப்படுங்கால் மிகவிரிந்த அளவுடையதாயிருக்கின்றது. கடவுள் நிலையொன்றுண்டெனின், அந்நிலையில் மூளைப்பகுதி அளவிற்கடங்கா வகையிற் பெருக்கவேண்டும். அந்நிலையில் மூளைக்கும் உடலுக்குமுள்ள கணக்குப்பொருத்தம் $\frac{1}{0}$ ஆக வேண்டும், அதாவது, கடவுளில் மூளையைத் தவிர வேறொன்றுமில்லாதொழிய வேண்டும். இவ்வாராய்ச்சியின் தொடக்கத்தில் கடவுளுக்குக் காலில்லை, புணர்ச்சிக் கருவிகளில்லை என்று நவின்றோம். இவ்வாராய்ச்சியிற் கருத்தளவையாற் பெறுகின்ற முடிபாக நாமிப்பொழுது கடவுள் மூளையேயன்றி வேறன்று என்று காண்கிறோம். ஆனால், 'அம்மூளையை யாம் காண்பதில்லையே. பெறப்பட்ட இம்முடிபை எங்ஙனம் யாம்

ஏற்றுக்கொள்ளக்கூடும்?' என்று சிலர் கேட்கலாம். இக்கேள் விக்கு விடையளிப்பது எனது கடமை.

மற்றோர் ஆராய்ச்சியை ஈண்டுத் தொடர்ந்துசென்று கடவுளின் மூளையைக்காணுதல் கூடாதென்பதை விளக்கு கின்றேன். வெவ்வேறு விலங்கினத்து மூளையின் இறுக்கம் இளக்கம் ஆகியவற்றை நோக்கிடின் இதை அறியலாம். கீழ் நிலையில் மீனின் மூளை எத்தன்மையது? அது மிக இறுகிய ஒன்று. அதை நமது விரல்களினிடையே வைத்து அழுத்தி னுல் எளிதில் உடைந்து போகாத அத்தனை இறுகியுள்ளது. மேல்நிலையுள்ள உயிர்களைப் பார்ப்போமாயின், மூளையினளவு பெருகப்பெருக அதன் இறுக்கம் குறைகின்றதென்பது வெளிப்படும். மக்கள் மூளை எல்லாவற்றினும் இளகியதாம். அஃது ஏறக்குறைய நீரின் தன்மையதாயிருக்கின்றது. இங் ஙனமாயின், கடவுளுடைய மூளை எத்தன்மையதாயிருக்கும்! இறுக்கம் என்பதே அதில் இல்லாமற் போகுமன்றோ? சற்றும் இறுக்கமற்ற வகையில் இளகியிருக்கும் ஒன்றைக் காணமுடி யாது. காற்றை நாம் காண்பதில்லையே. எங்கும் விரிந்திருக் கும் அளவு (பார்க்கு மிடமெங்கும் நீக்கமற நிறைகின்ற அளவு) இளகியிருக்கிற கடவுளின் மூளையில் நாம் வாழ்கின் ரேம். பல்வேறு விலங்கினங்களின் மூளைகளை ஆராய்ந்து பார்ப்பதால் கடவுளின் மூளை கட்புலனுக் கெட்டாததாகி, எங் கும் பரவியிருக்கின்றதென்ற துணிபிற்கு நாம் வருகின்றோம். புலன்களுக்கெட்டாத விசும்பின் தன்மையதாகிய கடவுளது மூளையின் ஆற்றல் யாதென வினவுவாம்.

(தொடரும்)

புத்தாண்டு

[திரு: கி. சாமிக்கண்ணு அவர்கள்]

செப்புமொழி பதினெட்டுடையா ளெனில்
சிந்தனையொன்றுடையாள். —பாரதியார்

மலைகளிலே உயர்மலையை வடவெல்லையாகவும் நீலத் திரைக் கடலோரத்திலே நின்று நித்தம் தவம்செய் குமரி கோயில் கொண்டுள்ள முனையைத் தென்னெல்லை யாகவும் கொண்டு பல்வளங்களும் பல்கி மிளிரும் நம் இந்திய நாட் டிடையே படைப்புக்காலந் தொட்டு நிகழ்ந்து வரும் நிகழ்ச்சி கள் பலவாம். அந்நிகழ்ச்சிகளுள் ஒவ்வொன்றை முதலாகக்

கொண்டு வழங்கப்பெறும் ஆண்டுகளும் பலவாம். எனினும் பன்மைத்தோற்றத்தில் ஒருமை புகட்டும் இந்நாட்டியல்புக் கேற்ப ஆண்டுகளின் கணக்கும் காலக்கணக்கை வரை செய்தலில் ஒற்றுமைப்பட்டுள தென்பது ஒப்பமுடிந்த கொள்கையாம்.

பன்முகப்பட்ட காலக்கணக்குகளும் ஒவ்வோர் பகுதியாரால் ஒரோர் காலத்தே சிறப்பாகக் கொள்ளப்பட்டு இன்றும் அவைகள் நிலவுதல் காண்கிறோம். எனினும், மூங்கையன் கண்ட 'கனவு எவ்வாறு வெளியிடப்படாத நிலையெய்துகிறதோ, தங்கள் உள்ளக்கருத்தின் வேற்றுமைகளைத் தெற்றெனக் கேட்டு, உறுதி கட்டுரைக்கும் காரணிகனற்ற அவைக் களத்தார் எந்நிலையிலிருப்பரோ, அது போன்ற நிலைமையினையெய்தி யவ்வல்லல் களையும் முயற்சியில் தலைப்பட்டுள்ள இந்தியர்களுக்குப் பல்லாயிரம் ஆண்டுகளாக ஏற்பட்டுள்ள கலியுகாதி என்ற ஆண்டுக்கணக்கிலும், இந்நாள்காறு மிருந்த ஒற்றுமை மறைந்து சின்னாளாக வேறுபாடு தோன்றியுள்ளமை குறித்துக் கவற்சி ஒருபுறமும், இரக்கம் மற்றொரு புறமும் ஏற்படுகின்றன.

விக்கிரம சகாப்தம், சாலிவாகன சகாப்தம், கொல்லம் ஆண்டு, பஸலி, முதலிய எல்லாக் காலக்கணக்குகளும் எந்தப் பஞ்சாங்கங்களிலும் ஒத்திருக்கக் கலியுகாதிமட்டும் நிகழும் யுவ ஆண்டுக்கு 5036 என்று காப்புச் செய்யப் பெற்றுள்ள 28-ஆ மனோன்மணி விலாசப் பஞ்சாங்கமும், ஆனந்தபோதினிப் பஞ்சாங்கம், திருவருட்பா நாட்குறிப்பு, திருக்குறள் நாட்குறிப்பு ஆகிய பல பஞ்சாங்கங்கள் புத்தாண்டாகிய யுவ கலியுகாதி 5037 என்றும் குறிக்கின்றன. பாண்டவாப்தம் 5037 என்பது நிகழும் யுவ ஆண்டு ஆகும் என மனோன்மணி விலாசப் பஞ்சாங்கம் குறிப்பிடுகிறது.

இவற்றுள் பெரும்பான்மையைப் பின்பற்றுவதா? இதுகாறும் பின்பற்றிவந்த கணக்குக்கொத்தபடி இவ்வாண்டு 5036 கலி எனக்கொள்வதா? இருசார் பஞ்சாங்கங்களின் கணக்கும் வேறுபடக் காரணம் யாது? எந்தச்சார் பஞ்சாங்கங்கள் மறதியாலோ அல்லது அச்சுப்பேயின் திருவிளையாடலாலோ பிழைபட்டன? கலியுகாதி என்பதே பாண்டவாப்தமா? பாண்டவாப்தம் வேறு கலியுகாதி வேறா? உளன் இலன் எனும் இருதகைமையுடைய கடவுள்போலக் கோள்கள், உடுக்கள் முதலியனவும் இரு தகைமை கொண்டு காலக்கணக்குறுதியிடும் நிமித்திகர்களுக்குத் தக்கவாறு நிலவுகின்றனவா?

என்பன போன்ற ஐயவினுக்கள் வாய்ப்பாட்டு அல்லலுற்றே னுக்குத் திருவாளர் K. வேங்கடராம் என்பவர் 20-4-35 இந்து நாளிதழில் தெலுங்கு நாட்டுப் பஞ்சாங்க மலைவைப்பற்றி எழு திய கடிதத்தைக் கண்ணுற நேர்ந்தபோது அவர் கொள்கை யும் கலி 5036 யுவ என்பதே எனக் கண்டு சிறிது தேறுதல் உண்டாயது. இக்குறைபாட்டைத் தக்க பெரியோர்கள் நீக்க வேண்டுமெனவும், காலக்கணக்கு மாறுபட்டுப் பல செய்திகள் உண்மையல்ல என்று பின்னுளோர் கொள்ள இடந்தரலாகா தென்றும் வேண்டிக் கொள்ளுகிறேன்.

அன்பும் காதலும்

நன்மக்களால் எய்தற்பாலவாய உறுதிப்பொருள் நான்க னுள் ஒத்த அன்புடைய தலைவனும் தலைவியும் கூடி நுகரும் இன்பம் ஒன்ருகும். இவ்வின்பிற்குச் சிறந்த காரணமாகிய அன்பு காதல் என்றுங் கூறப்படும். காதலானது மக்கட்கு உள்ளத்தின் சுருளை மெல்ல நெகிழ்த்து மலர்விப்பது; எப் பொழுதுந் தேன்போல் இனிப்பது; எவ்வகை மாசுகளையும் துடைப்பது; செய்வினைத் திறங்களில் ஊக்கத்தை யெழுப்பு வது; இம்மையின்பமேயன்றி மறுமையின்பமும் பயப்பது. மறமலியுலகமாகிய வன்கொடும் பாலையில் உழன்று திரியும் மாந்தர்கள் பருகியும் திளைத்தும் வெம்புதலொழியும் இன்ப வூற்ருவது இக்காதலே யாமென்க. இதனை 'ஆக்கி அளித்து அழிக்கும் கந்தழியின் பேருருவே' என்றும் ஆன்ருேர் கூறுப. பண்டைத் தண்டமிழ்வாணர் பலரும் இக்காதலின்பமாகிய அகப்பொருளைப் பாரித்துரைத்துப் போந்ததும், பேரின்பக் கடலிற் றிளைத்த மாணிக்கவாசகப் பெருமான் முதலாயினர் அகப்பொருட்கோவை முதலியன பாடியருளினதும், தெய் வப்புலமைத் திருவள்ளுவனர் தமது தமிழ் மறையில் இரு நூற்றைம்பது குறள் வெண்பாக்களால் இதனை விரித்துரைத் தமைத்ததும் முதலாயின நுனித்துணர்வார்க்கு இதன் சிறப்பு நன்கு புலனுகும்.

—ந. மு. வேங்கடசாமி நாட்டார்

இலக்கணமும் இலக்கியமும்:
LANGUAGE AND LITERATURE

குறுந்தொகை

மூலமும் விளக்க உரையும்

[இலங்கையடிகள் வித்துவான் இரா. சிவ. சாம்பசிவன்]

(பதிப்புரிமை ஆசிரியர்க்கே)

(௩எஉ-ம் பக்கத் தொடர்ச்சி)

குறிஞ்சி

தோழியால் தலைவியைப் பெற்றுக் கூடுதற்குக் கருதிய தலைவன் தோழியைக் குறைவேண்ட, அவள் நேராது மறுத்தாளாகத் தலைவன், "இனி யான் நாணொழிந்து பல்லோர் இகழ மடலேறுவன்" எனப் புலந்து கூறியது; "மடன்மாக் கூறும் இடனுமா ருண்டே" என்றாராகலின்.

தொல்கபிலர் பாடியது

14. அமிழ்துபொதி செந்நா வஞ்சிய வந்த
வார்ந்திலங்கு வையெயிற்றுச் சின்மொழி யரிவையைப் [யைப்
பெறுகதில் லம்ம யானே பெற்றாங்
கறிகதில் லம்மவிவ் வூரே மறுகில்
நல்லோள் கணவன் இவனெனப்
பல்லோர் கூறயா அ நாணுகஞ் சிறிதே.

என்பது 'மடன்மாக்கூறு மிடனுமாருண்டே' என்பதனுன் தோழி குறைமறுத்துழித் தலைமகன் மடல் ஏறுவன் என்பதுபடச் சொல்லியது.

பதவுரை:—அமிழ்துபொதி செந்நா வஞ்சி--தேவாமிர்தத்தைப் பொதிந்துள்ள செம்மையான நாவினையுடைய வஞ்சிக்கொடிபோன்றவளே! அந்த வார்ந்து இலங்கும் வை எயிற்றுச் சின்மொழி அரிவையை—அந்த வரிசையாய் ஒழுங்குபட விளங்கும் கூரிய பற்களையுடைய சிலவாகிய மொழிகளைப் பேசும் பெண்ணாகிய தலைவியை, யானே பெறுகதில் அம்ம—யான் உன் உதவியால் இப்பொழுதே பெறக்கடவனாக, பெற்று ஆங்கு—யான் பெற்றபின்பு, அறிகதில்லம்ம இவ்வூரே—அதனை இவ்வூரார் அறிந்துகொள்வாராக; நல்லோள் கண

வன் இவன் என—"நல்லவளான நங்கையின் கணவன் இவன்" என, மறுகில் பல்லோர் கூற—தெருவில் கண்டோர் பலரும் வருந்திக் கூறுமாறு; யாஅம் நாணுகம் சிறிதே—மடல் மாவூர்ந்து செல்வதற்கு இதுகாலை யான் சிறிது நாண் உடைய வனாகின்றேன்.

(நீ என் குறை மறுத்தால், யாம் நாணை யிழந்து மடல் மாவேறுதல் ஒருதலை; அதுவன்றிப் பிறிது ஒன்று எமக்கு ஆற்றுமாறில்லை யாதலின்).

அமிழ்து—தற்பவ வடசொல். வஞ்சி—கொடி, உவம வாகுபெயர். வார்ந்து—ஒழுங்காக, வரிசையாக. வை—கூர்மை. எயிறு—முன் தோன்றி விழுந்து பின் முளைக்கும் பல். அரிவை—காலவாகுபெயர். தில் என்பது விழைவும் காலமும் உணர்த்தவந்த இடைச்சொல். ஊர்—இடவாகு பெயர். "மறுகில் பல்லோர் கூற" என்பது மடலூர்தற்கு என்பது குறிப்பெச்சம். அம்ம, அம்ம,—முன்னிலை இடைச் சொற்கள், கேட்பிக்கும் பொருளன. "அம்ம கேட்பிக்கும்."

மேற்கோள் விளக்கம்

1. 'வையெயிற்றுச் சின்மொழி அரிவை'—

(அ) "வையெயிற்றையள்" —(நற்—2; 7)

(ஆ) "சேயார்கட் சென்றவென் னெஞ்சினைச் சின்மொழி"
—(பாலைக்கலி. 29-10)

(இ) "சேந்துநீ யினையையா லொத்ததோ சின்மொழி"
—(குறிஞ்சிக்கலி. 21-19)

(ஈ) "இன்மணிச் சிலம்பிற் சின்மொழி ஐம்பால்"
—(நெய்தற்கலி. 8; 16)

(உ) "சின்மொழி தெளியெனச் சிறப்பன்றோ"
—(நெய்தற்கலி. 15-13)

'சின்மொழி' என்பதற்குப் பழமொழி யுரைகாரர் 'மென் மொழி' என்று உரைகூறுவர்.

(ஊ) "வையெயிற்று வார்ந்தவாயர்" —(மதுரைக்காஞ்சி.--413-414)

2. "வார்ந்திலங்கு வையெயிற்றுச் சின்மொழியரிவையைப்
பெறுகதில் லம்மயானே"—

"தில்" என்னும் இடைச்சொல் விழைவின்கண் வந்ததற்குமேற் கோள்,

—(நேமிநாதம்—பக். 90)
—(தொல்—சொல்—இளம்பூ—சூ. 248, 255)
—(தொல்—சொல்—தெய்வ—சூ. 249)

3. 'வார்தல்' என்பதற்கு —(தோல்—சோல்—சேனு.—253)

4. "பெறுகதில்லம்ம"—வியங்கோள் வினைமுற்றிற்கு மேற்கோள்.

—(நன்—மயிலை—பக். 212; நன்—சங்கா—பக். 175)

5. 'பெறுகதில்லம்ம', 'அறிகதில்லம்ம'—'தில்' என்னும் இடைச்சொல் விழைவு, காலம் என்பவற்றின்கண் வரும் என்பதற்கு மேற்கோள்

—(நன்—மயிலை—பக். 295; நன், சங்கா—பக். 240)

6. "பெறுகதில்லம்ம யானே"—வியங்கோள் வினைமுற்று வாழ்த்துதற் பொருண்மைக்கண் வந்ததற்கு மேற்கோள்

—(இலக்கண விளக்கம்—பக். 213)

7. "முள்ளெயி றிலங்கச் செவ்வாய் திறந்து
சில்லென் கிளவி மெல்லென மிழற்றி"

—(பெருங்கதை. 4-5; 16-7)

8. "எயிறுகாப் போழ்த லஞ்சி யஞ்சி
யுழன்மாலைத் தீங்கிளவி யொன்றிரண்டு
தான்மிழற்று மொருநாட் காறும்" —(சீவக. 1353)

'அமிழ்துபொதி செந்நா வஞ்சி'—'அமிழ்துபொதி செந்நா வஞ்ச'

—(பிரதிபேதம்)

'அறிகதில் லம்மவிவ் வூரே மறுகில்'—அறிகதில் லம்மவிவ் வூரே மறுகின்'

—(பிரதிபேதம்)

'பல்லோர் கூறயாஅ நாணுகஞ் சிறிதே'—'பல்லோர் கூறியா நாணுகஞ் சிறிதே'

—(பிரதிபேதம்)

மெய்ப்பாடு—வருத்தம் பற்றிய இளிவரல்

பயன்—ஆற்றாமை யறிவித்தல்.

பாலை

தலைவன் தலைவியைக் களவொழுக்கத்தால் கொண்டு சென்றானாக, அவளைக் காணாது தாயரும் பிறரும் வருந்துங்காலை, தோழி செவிலித்தாய்க்கு அறத்தொடு நிற்ப, செவிலித்தாய் நற்றாய்க்கு அறத்தொடு நின்றது.

[உடன் போயின பின்றைத் தோழி செவிலிக்கு அறத்தொடு நின்றாள்; நிற்பச் செவிலித்தாய் நற்றாய்க்கு அறத்தொடு நின்றது]

பாலை பாடிய பெருங் கடுங்கோ பாடியது

15. பறைபடப் பணில மார்ப்ப விறைகொள்பு
தொன்மு தாலத்துப் பொதியிற் றோன்றிய

நல்லூர்க் கோசர் நன்மொழி போல
வாயா கின்றே தோழி யாய்கழல்
சேயிலை வென்வேல் விடலையொடு
தொகுவளை முன்கை மடந்தை நட்பே.

பதவுரை :—தோழி—தோழியே; ஆய்கழல்—ஆராய்ந்து அணியப்பட்ட வீரக் கழலையும், சேயிலை வென்வேல் விடலையொடு—அசோகந் தளிர்போன்ற செம்மையாகிய இலைவடிவமுள்ள வெற்றியைத் தரும் வேலினையுமுடைய பாலை நிலத்தலைவனோடு; தொகுவளை முன்கை—தொகுதியான வளையல்களை யணிந்த முன்கையையுடைய; மடந்தை நட்பு—நம் தலைவியின் நட்பு; பறைபட—பறைவாத்தியங்கள் ஒலிக்கவும்; பணிலம் ஆர்ப்ப—சங்குகள் ஒலிக்கவும்; இறை கொள்பு—தங்குதலைக் கொண்ட; தொன்மூது ஆலத்துப் பொதியில் தோன்றிய—மிக்க பழமையான காலத்து ஆலமரத்து மன்றத்தில் விளங்கிய; நல்லூர்க் கோசர் நன்மொழிபோல—நல்லூர் என்பதைக் கொண்ட கோசர் என்பாரின் சிறந்த மொழிகளைப்போல; வாயாகின்று—உண்மையாகின்றது. ஏ—அசை.

விடலை—பாலை நிலத்தலைவன். பணிலம்—சங்கு. இறை கொள்பு—தங்குதல்கொண்டு. இறை—தங்குதல். கொள்பு—செய்பு என்னும் வாய்பாட்டு வினையெச்சம். செயலை—அசோகந்தளிர். சேயிலை—சிவந்த இலை. வெல், வென்—வெற்றி. தோழி—ஈண்டு நற்றாயைச் செவிலித்தாய் விளித்தது; நற்றாய்க்குத் தோழி. செவிலித்தாய்க்கு மகள் தலைவியின் தோழி. முதுமை ஆலம்—மூதாலம். தொன்மூதாலம்—ஒரு பொருட் பன்மொழி. பொதியில்—மன்றம், அம்பலம்; பொதுக்கூட்டங்கள் நடைபெறுமிடம். இவருடைய நட்பும்கோசர் நன்மொழி போல நன்மணமாய் நிச்சயம் முடியும் என்பது குறிப்பு.

மேற்கோள் விளக்கம்

1. "பறைபட......நட்பே" — "இஃது உடன்போயபின் செவிலி நற்றாய்க்கு அறத்தொடு நின்றது," என்பதற்கு மேற்கோள்.
—(தொல்—களவு—பக். 569)

2. "பறைபட......நட்பே"—"இது புணர்ந்து உடன்போயினார் ஆண்டுக் கொடுப்போரின்றியும், வேள்வியாசான் காட்டிய சடங்கின் வழியாற் கற்புப் பூண்டு வருவதும் ஆம். இனி, ஆண்டு வரையாது மீண்டுவந்து கொடுப்பக் கோடல் உளதேல் அது மேற்கூறிய

தன்கண் அடங்கும். இனிப் போயவழிக் கற்புப் பூண்டலே கரணம் என்பாரும் உளர். இதனுள் (பறைபட...நட்பே) 'வாயாகின்று' எனச் செவிலி நற்றாய்க்குக் கூறினமையானும், 'விடலை' எனப் பாலை நிலத்துத் தலைவன்பெயர் கூறினமையானும் இது கொடுப்போரின்றிக் கரணம் நிகழ்ந்தது" —(தோல்—கற்பு—பக். 600)

3. "தொன்மூதாலத்துப் பொதியிற் றோன்றிய, நல்லூர்க் கோசர் நன்மொழிபோல"

(அ) "ஒன்று மொழிக் கோசர்"—(குறுந் 73.)

(ஆ). "மெய்ம்மலி பெரும்பூட் செம்மற் கோசர்"

(இ). "வடுவுடை முகத்தர் கடுங்கட் கோசர்"

(ஈ). "காப்புக் கைநிறுத்த பல்வேற் கோசர்"

(உ). "வாய்மொழி நிலைஇய சேண்விளங்கு நல்லிசை, வளங் கெழுகோசர்"

(ஊ). "பல்லிளங்கோசர்"

(எ). "புனைதேர்க் கோசர் தொன்மூதாலத் தரும்பணைபொதியில்"

(ஏ). "ஊர் முது கோசர்"

(ஐ). "ஒன்று மொழிக்கோசர்"

—(அகம், 15, 90, 113, 205, 216, 251, 262, 196)

(ஒ). "அவையகம் விளங்க, நன்மொழிக் கோசர்"

(ஓ). "கடுந்தடு வாய்வாள் இளம்பல் கோசர்"

—(மதுரைக்—508-9; 773)

(ஔ). "கொங்கிளங் கோசர்"—(சிலப்—உரைபெறு—2)

(க). "வலம் புரிகோசர்"—(புறம் 283—6)

(ங). "நனைக் கள்ளின் மனைக் கோசர்"—(புறம் 396—7)

4. "பறைபட.........நட்பே"—இச்செய்யுள் செவிலி நற்றாய்க்கு அறத்தொடு நிற்றலுக்கு உதாரணமாகக் காட்டப்பட்டுள்ளது. —(நம்பியகப்பொருள்—சங்கப்பதிப்பு)

5. "போக்குடை யறிந்தபிற் றோழியொடு கெழீஇக்
கற்பி னாக்கத்து நிற்றற் கண்ணும்"

—(தோல்—களவு—சூ. 113)

என்பதற்கு, "பறைபட......நட்பே" என்பது மேற்கோள். —(தோல்—களவு—பக். 212)

6. "கொடுப்போ ரின்றியுங் கரணமுண்டே, புணர்ந்துடன் போகிய காலையான" —(தோல்—கற்பு—141) "இது, கொடுப்போர் இன்றியும் கரண நிகழ்ச்சியுண்டு, புணர்ந்துடன் போகிய காலத்து என்றவாறு. எனவே, கற்பிற்குக் கரண நிகழ்ச்சி ஒருதலையாயிற்று. இதனானே கொடுப்போரில்வழியும், கரண நிகழ்ச்சி

யுண்மையும் ஒழுக்கக் குறைபாடு இன்மையுங் கொள்க. "பறை பட——நட்பே"—இதனுள், விடலையொடு மடந்தை நட்பு பறை படப் பணிலமார்ப்ப விரைகொண்டு நாலூர்க்கோசர் நன்மொழி போல வாயாயிற்றெனச் செவிலி நற்றாய்க்குக் கூறினமையானும், விடலை எனப் பாலைத் தலைவன் பெயர் கூறினமையானும் கொடுப் போரின்றியும் கரணம் நிகழ்ந்தவாறு காண்க"

—(தோல்—கற்பு—இளம்பூ—220)

7. "பறைபட......நட்பே"—" என்பதனுள், "வாயாகின்றே" எனச் செவிலி நற்றாய்க்குக் கூறினமையானும், விடலை எனப் பாலைத் தலைவன் பெயர் கூறினமையானும், கொடுப்போரின்றிக் கரணம் நிகழ்ந்தவாறுங் காண்க" —(இலக்கண விளக்கம்—பக். 465)

8. 'சேயிலை வென்வேல்,—'சேயிலை வெள்வேல்,

—(கச்சி ஆ. வண்டு விடுதூது-82)

'வெற்பின் ,உரந்துளைத்த சேயிலை வேல் வலனுயர்த்த விளைய வனை யுளத்துள் வைப்பாம்'' —(விநாயகபுராணம்-பாயிரம்)

9. குறிப்பு:—

கோசர்

கோசர் என்பார் கொங்கு நாட்டு ஒருவகை வீரர். சிலப்பதி காரத்து அரும்பத வுரையில், "குறும்பு செலுத்துவார் சில வீரர்" என்று காணப்படுகிறது. இவர் நான்கு வகையாகிய கோசர்"— (மதுரைக்காஞ்சி) என்று கூறுவர். இன்னோர் வம்பமோரியரால் செலுத்தப்பட்டு வஞ்சினம் மொழிந்து மோகூர் பழையனுடைய பழைமை ஆலமரத் தம்பலத்தில் பறையறைந்து தோன்றினர் என்பர். (மதுரைக், அகம்) இன்னார் மொழிதிறம்பாதவர் என்பர். இன் னாரைப்பற்றி மதுரைக் காஞ்சியில் நச்சினார்க்கினியர் கூறுவது அறிதற்பாலது.

1. "நல்லூர்க் கோசர்"

—'நரலூர்க் கோசர்' } பிரதிபேதம்
—'நாலூர்க் கோசர்' }

2. 'சேயிலை வென்வேல்'—"செயலை வெள்வேல்"—"சேயிலை வெள்வேல்"

—பிரதிபேதம்.

நரலூர், நாலூர், நல்லூர் என்பன ஓர் ஊரின்பெயர் போலும்.

"பறைபட......நட்பே"—இச் செய்யுள் "ஔவையார்" பாடியதாகக் குறுந்தொகை மூலத்தில் வித்துவான் சோ. அருணாசல தேசிகர் அவர்கள் பதிப்பித்துள்ளனர். சென்னை ஓரியண்டல் புத்தக நிலயத்துக் கையெழுத்துப் பிரதியிலும் ஔவையார் பாடியதாகவே குறிக்கப்பட்டுள்ளது. எமக்குக்கிடைத்த பிரதிகளில் "பாலைபாடிய பெருங்கடுங்கோ"—பாடியதெனக் குறிக்கப் பட்டுள்ளது.

மெய்ப்பாடு—உவகையைச் சார்ந்த அழுகை.

பயன்—உடன்போக்குணர்த்துதல்.

வடமொழி சென்ற தென்சொற்கள்

[பண்டித திரு. ஞா. தேவநேயப் பாவாணர்]

(நகக்கூ-ம் பக்கத் தொடர்ச்சி)

உருபு=உருவம், வடிவம்.

வேற்றுமையின் வடிவைக் காட்டும் அசை உருபு எனப் பட்டது

'எழுவாயுருபு திரிபில் பெயரே' என்னும் சூத்திரத்தில், உருபு என்பது வடிவென்றே பொருள்படுதல் காண்க.

உருபம் என்னும் சொல்லே ரண்டு, ரம்ப என்னும் சொற்களைப் போல முதல் கெட்டுப் பின்பு அயல் நீண்டு ரூபம் என்றாகும்.

உரு என்பது முதனிலைத் தொழிலாகு பெயர். உரு× அரு. Cf. உறு× அறு. உருபம்× அருபம். உருபத்தையுடையவன் உருபி. உருபி—உரூபி. அருபமானவன் அருபி. அருபி—அரூபி.

உரு=வடிவம், முதனிலைத் தொழிலாகுபெயர். உரு என்னும் சொல் வடிவுப் பொருளில் உலக வழக்கில் மிகுதியும் வழங்கி வருகின்றது.

உரு=வடிவுடைப் பொருள்.

சுற்றுரு=தாலிக்கொடியில் தாலியோடு சேர்ந்த பல வடிவான சிறுநகைகள் கழுத்தைச்சுற்றியுள்ள உருக்கள் என்பது பொருள்.

உருப்படி=ஒரு பொருள்.
உருவாகு=உண்டாகு
உருப்படு=வளர், தேறு, பெரியவனாகு
உருக்குலை } =வடிவுமாறு, மெலி
உருமாறு }
உருச்சேவி=விக்கிரகத்தை வணங்கு
உருப்போடு=விக்கிரகத்திற்குரிய மந்திரம் ஜெபி
உருவேற்று=மந்திரம் ஜெபி, உபதேசி.
உருபி=உருவத்தையுடையது. ருப்பி ,Hindi, Sans. and English.

அமங்கலம். அ+மங்கலம்.
நன்கலம்—(நங்கலம்)—மங்கலம்.

நன்கலம்—தாலி, சிறந்த அணி.
நன்கலம் அணியத்தக்க நிலை மங்கலம்.
நன்கலம்—மங்கலம். ந—ம போலி.

C. f. நாம்—மேமு (தெலுங்கு)

மாட்டுப்பெண்—நாட்டுப்பெண்
முனி—நுனி } ம—ந போலி.

மங்கலத்தை யுடையவள் மங்கலி—மங்கலை.
மங்கலம்—மங்கலியம்—மங்கிலியம்
—மாங்கலியம்—மாங்கிலியம்.
மங்கலம்—மங்களம்.
மங்கலம் = மங்கலியம் அணிகின்ற திருமணம்.
= திருமணம்போன்ற நல்வினை.

உ—ம் மண்ணுமங்கலம்=நன்மை.

அமராபதி. அமரர் + பதி.
பதி=பதிந்திருக்கும் இடம்.

பதிதல்=தங்கியிருத்தல், பொருந்தியிருத்தல், நிலையா யிருத்தல், வசித்தல்.

பதி—வதி. ப—வ போலி C. f. பகு—வகு.
பதி—ஊர், நகர் (முதனிலைத் தொழிலாகுபெயர்).
அமராபதி—அமராவதி.
பதி + அம் = பதம்.
அமரர் + பதம் = அமராபதம்.
பதி—bad—(Hind)—பாத்து.
ஐதராபதி—Hyderabad—ஹைதராபாத்து.

அமாத்தியர். அண்மை + ச் + அர் = அண்மைச்சர்— அமைச்சர்.

C. f. அரண்மனை—அரமனை (உலகவழக்கு)
அமைச்சர் அரசனுக்கு அண்மையிலிருப்பவர்.
அமைச்சர்—அமாத்தியர்.
அமுது—அவிழ்—அவிழ்து—அமுது.
அவிழ்தல்—விரிதல்.
அவிழ்=சோற்றுப் பருக்கை, வெந்து விரிந்த அரிசி.
அவிழ்து=சோறு
அவிழ்து—அமுது. வ—ம போலி.
அவிழ்து + அம் = அவிழ்தம்—அமுதம்.
அமுது படைத்தல்—சோறிடுதல்.

அம்பிகை. அம்மை — அம்மாள் — அம்மா—அம்பா—அம்பிகா—அம்பிகை.

அம்பு. கம்—ஓர் ஒலிக்குறிப்பு.
கம்=நீர், ஒலிப்பது.
கம்—அம். C. f. கனல்—அனல். தழல்—அழல்.
அம்—அம்பு (கடைவிரி—Epenthesis).
C. f. உடல்—(உடம்)—உடம்பு.

அம்போதரங்கத்தாழிசைக் கலிப்பா செந்தமிழ்ச் செய்யுட்களுள் ஒன்றாகும்.

அம்பு (arrow) போலப் பெய்யும் மழைநீர் அம்பு எனினும் ஒக்கும்.

அரணியம்.—அரண் + இயம். இயம் ஓர் விகுதி (Suffix).
அரணியம்=காடு, அரணாயிருப்பது.
நால்வகை அரண்களிற் காட்டரண் ஒன்று.
அரணியம்—ஆரணியம்.

அரன். அர்—ஓர் ஒலிக்குறிப்பு.
அர் + அம் = அரம், ஓர் கருவி, அர் என்று ஒலிப்பது.
அரம்—அரம்போல் தேய்த்தல், அழித்தல்.
அரம்—துன்பம், அழிவு செய்வது.
அரம் (Harm)—அரந்தை (மரூஉ).
அரம் = அச்சம், துன்பத்தினாலாவது.
அரள் = அஞ்சு. அரள்—Horror.
அரற்று = அஞ்சிக் கதறு.

அரன் = தேவன், அஞ்சத் தக்கவன், வருத்துபவன். மலையினும் காட்டினுமுள்ள தெய்வங்கள் தமியரை வருத்துமென்பது தமிழ்நாட்டுக் கொள்கை. குறிஞ்சித் திணைச் செய்யுட்களில் சூரர மகளிர் என்பது பெருவழக்காய் வருவதைச் சங்க நூல்களிற் காணலாம். சூர் = அச்சம்.

அரமகளிர் = தெய்வப் பெண்டிர்.
அரன் = சிவன், மலைத்தெய்வம்.

மலைநாட்டிலேயே சைவம் முதன்முதல் தோன்றிற்று. குறிஞ்சித்தெய்வமாகிய முருகன் சிவபிரானது மகன். அகத்தியர் முதலிய பண்டை முனிவரும் மலையிலேயே வதிந்தனர்.

அரன் = உருத்திரன்; ஊழியிறுதியில் உலகையழிப்பவன்.
அரன்—ஹரன். C. f. ஆலி—Hail.
அர் + இ = அரி — அழிப்பது.
அரித்தல்—பூச்சிகள் பொருள்களை அழித்தல்.
அரி = சிங்கம், விலங்குகளை அழிப்பது.

சுரஅரி—(ஜ்வரஹரி)—காய்ச்சலை அழிக்கும் மருந்து.

அரி = விஷ்ணு, சிங்கவடிவு கொண்டவன். சிவனுக்கு மனைவியாயிருந்தவன் எனினும் ஒக்கும்.

அரன் ஆண்பால். அரி பெண்பால். அரி—ஹரி.

அராகம். அர் ஓர் ஒலிக்குறிப்பு.

அராகம்=பண், சந்தம், ஓசை.

அராகம்=இராகம் C. f. அறு—இறு.

இராகம் = பண், விருப்பம்.

பண் இனிமையா யிருத்தலின் எவருக்கும் விருப்பாம். C. f. Music—that which amuses. அநுராகம் = காதல். அராகம் முடுகிய ஓசையுள்ள ஓர் கவியுறுப்பு. செந்தமிழ் இலக்கணமாகிய தொல்காப்பியத்துட் கூறப்பட்டுள்ளது.

அராகம் எனினும் வண்ணகம் எனினும் ஒக்கும்.

வண்ணகம்=பண், ஓசை.

அராகம் என்பது இயற்றமிழ்க்கன்றி இசைத்தமிழ்க்கும் இன்றியமையாததோர் சொல்லாம். இசைத்தமிழும் பொருளிலக்கணமும் ஆரிய வருகைக்கு முன்பே தமிழர்க்கிருந்தவை.

அலட்சியம் அ + லட்சியம்.

இலக்கியம்—லக்ஷியம்.

இலக்கியம்—குறி, உதாரணம், (Lilerature) இலக்கு பகுதி. (இதன் விரிவை இவ்வாட்டைத் தமிழ்ப்பொழிலில் கண்டுகொள்க.)

அவமதி. அவம் + மதி.

மதித்தல்=அளவிடுதல், உயர்வாயெண்ணுதல்.

மதி=அறிவு, பொருள்களை அளந்தறிவது.

மதி=அளந்தறியும் சரக்கு. ஏற்றுமதி, இறக்குமதி.

மதித்தல் + நிதானித்தல், மனதாலளத்தல்.

மதி=சந்திரன், ஒருமாத காலத்தை அளவிடுவது.

மதி + அம் = மாதம்.

மதி + உ =மாது } உணவை .அளவாய்ப் பகிர்பவள்,
மதி + அர் = மாதர் } பெண், தாய்.

மாது—மாதா. Sans.


மதி=அறிவு, Knowledge.

சம்மதி=இசைவு, அறிந்து இசைவது.

அநுமதி = உத்தரவு, அறிந்து விடுப்பது.

மதி=மதித்தளிக்கும் பரிசு, வெகுமதி.

மதி + அம்=மதம், கடவுளை அல்லது வீட்டைப் பற்றிய மதிப்பு அல்லது கொள்கை.



சிவஞானபோதக் கருத்து

[திரு. மா. வே. நெல்லையப்ப பிள்ளை, பி. ஏ.]

இலக்கண வியல்

(முன் ௩௯0-ஆம் பக்கத் தொடர்ச்சி)

நான்காஞ் சூத்திரம்

ஆசிரியர்மேலே பிரமாணவியலில் பதி பாசம் பசு என்ற முப்பொருள்கள் உண்மையைக் கூறியருளினார். பிரமாணம், இலக்கணம் என்னும் இரண்டானும் பொருளுண்மை தெரித்துணர்த்தல் அளவை நூல் முறைமை (logical process) யாதலின் மேலே முப்பொருள்களினது உண்மைக்குப் பிரமாணங் கூறிய ஆசிரியர் அம்முப்பொருள்களுக்கும் இலக்கணம் கூறுதலை இவ்விலக்கண வியலில் முதற்கண் எடுத்துக்கொண்டார். இதனால் இயல்கூறும் ஒத்து இயைபு பெறப்படும்.

2. பிரமாணவியலில் ஆசிரியர் முதலாவது பதி உண்மை கூறி இரண்டாவது பாச உண்மை கூறி மூன்றாவது பசு உண்மை கூறினார். இந்த முறைமைக்கு ஏற்ப இந்த நான்காஞ் சூத்திரத்தில் ஆசிரியர் பதி இலக்கணங் கூறாது பசு இலக்கணம் கூறப்போந்தது எதனாலெனில் அவர்தாம் நான்காவது சூத்திரக் கருத்தோடு நெருங்கிய இயைபுடைமைபற்றியும் சொற்பல்காமைப் பொருட்டும் மூன்றாவது சூத்திரத்தில் கூறாது எஞ்சி நின்ற அந்தக்கரணான்மவாதியை அதற்கு அடுத்த சூத்திரத்திற் கூறி மறுக்கவேண்டிய முறைமையினாலென்க. இதுவன்றி மூன்றாவது சூத்திரத்திற் றொகுத்துக் கூறப்பட்ட அஞ்சு அவத்தைகளும் அடுத்த சூத்திரத்தில் விரித்துக் கூறவேண்டிய முறைமையும் மற்றோர் ஏதுவாகும். இதனாலன்றோ ஆன்மாவினது உண்மையையும் ஆன்மாவினது இலக்கணத்தையும் பொதுவாய்க் குறிக்கிற 'ஆன்மப் பிரகாசம்' என்பதனை மூன்றாவது சூத்திரத்தின்கீழ் அச்சூத்திரக் கருத்தாகக் கூறி நான்காவது சூத்திரத்தின்

கூழும் அதன் கருத்தும் அதுவே என்பதை உணர்த்த இதுவு மது என்று கூறினர். இதனாலே சூத்திர இயைபு விளங்கும்.

3. இச்சூத்திரம், மூன்று அதிகரணங்களை உடையது. அவை ஒன்றன்பின்னொன்று முறையே கூறப்படும்.

முதலாவது அதிகரணம்

4. ஈண்டு இவ்வான்மாவானது அந்தக் கரணங்களா யுள்ள மனோ புத்தி அகங்கார சித்தங்களில் ஒன்றன்று என் பது, முதலாவது அதிகரணம். ஈண்டு என்பது இந்த முதல் அதிகரணத்து; அந்தக்கரணம் என்பது உட்கருவி அல்லது அகக் கருவி; அதாவது உயிர் அறிதற்கு உள்ளாயிருக்கிற அறிகருவி. உயிரானது ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாற்றம் (சத்த பரிச ரூப ரச கந்தம்) என்னும் புறவிடயங்களை அறி தற்கு முதலாவது செவி, மெய், கண், வாய், மூக்கு என்னும் ஐம்பொறிகளும் புறக்கருவிகளா யிருக்கின்றன. அப்புறக் கருவிகளுக்கு வேறாக உயிரானது அறிதற்கு அவைகளைப் பார்க்கினும் உயிருக்கு அண்மையிலிருக்கிற மனம், புத்தி, அகங்காரம், சித்தம் நான்கும் அகக்கருவிகள் அல்லது அந்தக் கரணங்கள் என்று கூறப்பட்டன. புறக்கருவிகள் வாயிலாக உயிர் அறியும் அறிவு, வாயிற் காட்சி அல்லது இந்திரியக் காட்சி என்று கூறப்படும். இங்ஙனம் புறக்கருவிகளாற் றரப் பட்ட விடயப்பொருள்களை உயிரால் செலுத்தப்பட்டுச் சித்தம் சிந்தித்தும், மனம் சங்கற்பித்து ஐயுற்று நிச்சயித்தற் கேது வாகிய வேட்கையை விளைத்தும், ஆங்காரம், 'யான் நிச்சயிப் பேன்' என்ற அகந்தையினாலே நிச்சயித்தற்கண் ஊக்கத்தை யுண்டாக்கியும், புத்தி பெயர், சாதி முதலியவற்றால் சிறப்பு வகையால் துணிந்தும் அறிதற்றொழில்களைச் செய்கின்றன. இவ்வாறு உயிர், அந்தக் கரணங்களைச் செலுத்தி அறியும் அறிவு மானதக்காட்சி அல்லது உள்ளக் காட்சி என்று கூறப் படும். அந்தக்கரணங்கள் நான்கும் கண்ணுக்கு விளக்குப் போல, உயிர்க்கு வேறாய்க் கருவிகளாக அமைந்து உயிரோ டொற்றித்து நிகழ்வனவாம். உள் அந்தக்கரணங்களாகிய கலை வித்தை முதலிய தத்துவங்களைக் குறியாதிருக்கும் பொருட்டு ஆசிரியர் அந்தக்கரணங்கள் என்று கூறாது அந் தக் கரணங்களாயுள்ள மனோபுத்தி அகங்கார சித்தங்களில் ஒன்றன்று என்று கூறினர். உள் அந்தக்கரணங்கள் உண்டு எனக் கூறுங் கொள்கையர்களுக்குள் உயிர் அவற்றிற்கு வேறாய் உண்டு எனக் கொள்ளாதார் இன்மையின் அவற்றை இங்கே கூறுதற்கு இயைபு இல்லையாதலின் ஆசிரியர் இங்கே

புற அந்தக் கரணங்களாகிய மனம் புத்தி அகங்கார சித்தங்கள், உயிர் என்று கூறும் அந்தக்கரண ஆன்மவாதியை மறுத்துக் கூறுதற்கு எழுந்தது இந்த முதல் அதிகரணம்.

5. அந்தக்கரண ஆன்மவாதி கூறுவதாவது:—மேலே மூன்றாவது சூத்திரம் ஏழாம் அதிகரணத்தில் ஐந்து கந்தங்கள் எனப்பட்ட அகச்சமுதாயம் ஆகிய உருவம், வேதனை, ஞானம், குறி, வாதனை ஐந்தும் அவை தாம் வேறு வேறு பெயர் பெற்று நிற்றலான் ஆன்மா அல்ல என்று சமுதாய ஆன்மவாதிகளை நீர் மறுத்துக்கூறியவழி தூலஉடல், பொறி, சூக்கும உடல் முதலியனவெல்லாம் ஆன்மா எனப் பெயர் பெறாது வேறு வேறு பெயர் பெற்று வழங்கப்படுதலால் மாயா வியந்திர தநுவினுள் ஆன்மா உளது என்று கூறினீர். மனம் புத்தி அகங்காரம் சித்தம் ஆகிய அந்தக்கரணங்கள் ஒவ்வொன்றும் ஆன்மா என்ற பெயராலும் ஆண்டாண்டு வழங்கப்படுகின்றன. ஐம்பொறிகளில் ஒன்றாவது ஆன்மா என்று கூறப்படுதலில்லை. சிந்தை (சித்தம்), சிவன் (ஆன்மா) என்றும் சிவன் சிந்தை என்றும் கூறப்படுகின்றன. ஆதலால் நீர் சமுதாய ஆன்மவாதிகளை மறுத்துக்கூறிய வழக்குப்பற்றி அந்தக்கரணங்களில் ஒவ்வொன்றும் ஆன்மா என்று கூறுதல் பொருந்தும். இங்ஙனம் அந்தக்கரண ஆன்மவாதி கூறுவதை ஆசிரியர் இந்த முதல் அதிகரணத்தில் மறுத்துக் கூறுதலால் மூன்றாவது சூத்திரம் ஏழாவது அதிகரணத்துக்கும் இந்த அதிகரணத்துக்குமுள்ள அதிகரண இயைபு பெறப்படும்.

6. அந்தக்கரண ஆன்மவாதி கூறினதைக் கேட்ட ஆசிரியர் விடை கூறுகின்றார்.

வெவ்வேறு பொருள்கள் அவை ஒவ்வொன்றுக்குமுரிய வெவ்வேறு இலக்கணம்பற்றி வெவ்வேறு பெயர்களாற் கூறப்படுதல் பொது வழக்கு. இப்பொதுவழக்குக்கு விலக்காக ஒரோ வழி ஒரு பொருள் அதற்கும் பிறிதொரு பொருளுக்கு முள்ள நெருங்கிய இயைபால் அப்பிறிதொரு பொருளின் பெயராற் கூறப்படுதலுமுண்டு. ஆயினும் இரு பொருள்களுக்கும் வேறு வேறாயுரிய இலக்கணத்தை மறவாதிருப்பின் அவை இரண்டும் ஒரு பொருளென்று மயங்கி அறியும் அறிவு உண்டாகாது. இவ்வாறே அந்தக்கரணங்களில் ஒவ்வொன்றும் அதற்கும் அதனைக் கருவியாகக் கொண்டறிகின்ற ஆன்மாவுக்கு முள்ள நெருங்கிய இயைபால் ஆன்மா என்று கூறப்படுதலுமுண்டு. அவ்வாறு கூறப்படுதல் பற்றி அறிவுடைமையை இலக்கணமாகவுடைய ஆன்மாவும் அறிதற்குக் கருவிப்

பொருள்கள் மாத்திரமா யிருக்கும் அந்தக்கரணங்கள் ஒவ்வொன்றும் ஒரு பொருள்தான் என்று நீ மயங்கி அறிந்து கூறுதல் பொருந்தாது. ஆதலால் ஆன்மாவானது அந்தக்கரணங்களாயுள்ள மனம் புத்தி சித்தம் அகங்காரங்களில் ஒன்றுஅன்று என்று நீ அறிவாயாக.


7. ஆசிரியர் கூறினதைக் கேட்ட அந்தக்கரண ஆன்மவாதி மறுபடியும் தடை உரை ஒன்று கூறுகின்றான்.

"மனமும் புத்தியகங்காரஞ் சித்தம் நான்கும்—மருவியான்மாவே யென்ன வரும்" என நீரும் கொள்கின்றீர் ஆதலால் ஆன்மா அந்தக்கரணங்களுள் ஒன்றாகும் என்பதற்கு இழுக்கு என்னை ?

8. அந்தக்கரண ஆன்மவாதி கூறினதைக் கேட்ட ஆசிரியர் விடை உரை கூறுகின்றார் :—

"நீ உனது கொள்கையை நிலைநாட்டும் பொருட்டுக் கூறிய மேற்கோளின் கருத்து அறியாது சொல்லுகின்றாய். "மனமும் புத்தி அகங்காரஞ் சித்தம் நான்கு மருவியே ஆன்மா என்ன வரும்" என்றதனால் அவை ஆன்மாவை மருவாவிட்டால் சிந்தித்தல் முதலிய தொழில்களைச் செய்யா என்பதும் 'ஆன்மா ஆகும்' என்று கூறாது "ஆன்மாவே என்ன வரும்" என்றதனால் அவை ஆன்மாவோடு ஒற்றித்து நிற்றலால் ஆன்மாவைப்போல கருத்தா என்று சொல்லும்படி நிகழும் என்பதும் அம்மேற்கோளினாற் போந்த பொருள் என்று நீ அறியவில்லையா ? அமைச்சர் அரசனுக்குப் பணியாளராயிருப்பினும் அணுக்கராயிருந்து அரசகாரியஞ் செய்யுஞ் சிறப்புப்பற்றி ஏனையோரை நோக்கி அரசரென்று உபசரித்துக் கூறப்படுமாறுபோல புறக்கருவிகளை நோக்க ஆன்மாவுக்கு அணுக்கமாய் நின்று அறிகருவிகளாயிருத்தற் சிறப்புப் பற்றி அந்தக்கரணங்கள் ஒவ்வொன்றும் ஆன்மாவே என்ன உபசரித்துக் கூறப்படும். ஆகலான் அந்தக்கரணங்கள் ஆன்மா அன்று என அறிவாயாக".

(தொடரும்).



[MR. T. B. KRISHNASWAMY MUDALIAR, M.A., B.L.]

மதுரைக் கண்ணங்கூத்தனார் இயற்றிய

களவழி நாற்பது

(கூகக-ம் பக்கத் தொடர்ச்சி)

இணைவேலெழின்மருமத் திங்கப்புண் கூர்ந்து
கணையலைக் கொல்கிய யானை-துணையிலவாய்த்
தொல்வலி யாற்றித் துளங்கினவாய் மெல்ல
நிலங்கால் கவரு மலைபோன்ற செங்கட்
சினமால் பொருத களத்து. (உக)

Where the angry Lord, King Chola of the beautiful eyes slew his enemies, the arrows deftly discharged sank so deep and made such deep wounds that the elephants unguided went quivering at such slow pace they seemed like mountains that gradually encroach upon the neighbouring lands. (21)

இருநிலஞ் சேர்ந்த குடைக்கீழ் வரிநுத
லாடியல் யானைத் தடக்கை யொளிறுவா
ளோடா மறவர் துணிப்பத் துணிந்தவை
கோடுகொ ளொண்பநிறை நக்கும்பாம் பொக்குமே
பாடா ரிடிமுரசிற் பாய்புன னீர்நாடன்
கூடாரை யட்ட களத்து. (உஉ)

Where King Chola, Lord of the big drum that sounds like thunder and the fertile land full of rushing streams slew his enemies, the trunks of elephants severed by the flashing swords of undaunted soldiers

lying near huge umbrellas looked like serpents eclipsing the full moon. (22)

எற்றி வயவ ரெறிய நுதல்பிளந்து
நெய்த்தோர்ப் புனலு ணிவந்தகளிற் றுடம்பு
செக்கர்கொள் வானிற் கருங்கொண்மூப் போன்றவே
கொற்றவேற் றானைக் கொடித்திண்டேர்ச் செம்பியன்
செற்றாரை யட்ட களத்து. (உ௩)

Where King Chola of the beautiful eyes Lord of victorious sword and army, rider on the chariots surmounted by the battle flag slew his enemies the spears and javelins flung upon the elephants broke open the foreheads and drew streams of blood wherein the elephants appeared like black clouds in a sun-set sky. (23)

திண்டோண் மறவ ரெறியத் திசைதோறும்
பைந்தலை பாரிற் புரள்பவை-நன்கெனைத்தும்
பெண்ணையந் தோட்டம் பெருவளி புக்கற்றே
கண்ணார் கமழ்தெரியற் காவிரி நீர்நாட
னண்ணாரை யட்ட களத்து. (உ௪)

Where the Lord of the fertile Cauveri land, wearer of the beautiful and fragrant garland slew his enemies, the black heads severed and flung on the ground by valiant soldiers looked like the fruits of the palm flung down and scattered by a storm. (24)

மலைகலங்கப் பாயு மலைபோ னிலைகொள்ளாக்
குஞ்சரம் பாயக் கொடியெழுந்து-பொங்குபு
வானந் துடைப்பன போன்ற புனனாடன்
மேவாரை யட்ட களத்து. (உ௫)

Like rock crashing on rock making it vibrate the elephants in terror trembled and rose till the flags surmounting them swept the heavens in the field of battle where the Lord of the fertile Chola land slew his enemies. (25)

எவ்வாயு மோடி வயவர் துணித்திட்ட
கைவாயிற் கொண்டெழுந்த செஞ்செவிப் புன்சேவ
லைவாய் வயநாகங் கவ்வி விசும்பிவருஞ்
செவ்வா யுவணத்திற் ரோன்றும் புனனாடன்
றெவ்வரை யட்ட களத்து. (உகூ)

Where the Lord of the fertile land slew his enemies the greedy kites lifting up the arms of men severed by valiant soldiers that went slashing everywhere seemed like Garuda carrying aloft the five-headed serpent. (26)

செஞ்சேற்றுட் செல்யானை சிறி மிதித்தலா
லொண்செங் குருதிக டொக்கிண்டி நின்றவை
பூநீர் வியன்றமிடாப்*போன்ற புனனாடன்
மேவாரை யட்ட களத்து. (உஎ)

Where King Chola of the fertile land slew his enemies the elephants angrily trampling on mud saturated with blood made the clots standing in pools look like red flowers in a water-basin. (27)

ஒடா மறவ ருருத்து மதஞ்செருக்கிப்
பீடுடை வாளார் பிறங்கிய ஞாட்பினுட்
கேடகத்தோ டற்ற தடக்கைகொண் டோடி
யிகலன்வாய்த் துற்றிய தோற்ற மயலார்க்குக்
கண்ணாடி காண்பாரிற் ரோன்றும் புனனாடன்
னன்னாரை யட்ட களத்து. (உ௮)

Where the Lord of the fertile land slew his enemies the valiant soldiers full of an enthusiasm boldly cut at their enemies and severed the arm that held the shield. These the jackals carrying about seemed like men carrying mirrors for others to look into. (28)

வரலாற்றுப் பகுதி: History & Biography

சென்னைத் தமிழ்ப் புலவர்கள்

[திரு. சே. வெ. சம்புலிங்கம் பிள்ளையவர்கள்]

நமது சென்னைமா நகரிலே இற்றைக்கு ஏறத்தாழ ஐம்பது அறுபது ஆண்டுகளுக்கு முன்னர் விளங்கிய தமிழ்ப் பண்டிதர்களின் சரித்திரக் குறிப்பைத் தெரிந்தமட்டில் எழுதுவாம்.

(1) மழைவை மகாலிங்க ஐயர்

இவர் மதுரையை அடுத்த மழவராயன் நல்லூரைச் சேர்ந்தவர். தாண்டவராய முதலியாருக்குப் பின் சென்னைக் கல்விச் சங்கத்தாரின் (Madras University) தமிழ்ப் பண்டிதராக விளங்கியவர். சிவப்பிராமண குலத்தினர். சரவணப் பெருமாளையர், இராமநுச கவிராயர், மீனாட்சிசுந்தரம் பிள்ளை, ஆறுமுக நாவலர் முதலியவர்கள் காலத்தவர். நயம் படப் பேசுவதிற் சமர்த்தரென்பர். இவர் இயற்றிய நூல்களுள் அதிகமாக வழங்கப் பெறுவது இலக்கணச் சுருக்கமொன்றே. மற்றைய நூல்களாவன:—அருணாசல புராணவுரை; பெரிய புராணம் முதற்காண்டவுரை, மழைவைச்சிங்கார சதகம். மழைவைச் சிங்கார சதகம் என்பது வடமொழிச் சிருங்கார ரசங்களின் தமிழ் மொழிபெயர்ப்பாகும். பின்னைய இரண்டு நூல்களும் இப்போது கிடைப்பதருமை. இவர் வமிசத்தினர் மழவராய நல்லூரில் வசிப்பதாகக் கேள்வி. இவர் தௌகித்திரராய பிச்சுவையர் என்பவர். சில ஆண்டுகளுக்கு முன் வரை தமிழ்ப் பண்டிதராக விளங்கினரென்ப. இவரை வீரசைவரென்று சிலர் தவறாகக் குறிப்பிட்டுள்ளனர்.

(2) காஞ்சீபுரம் சபாபதி முதலியார்

பச்சையப்பன் கல்லூரித் தமிழ்ப் பண்டிதராக விளங்கியவர். தாண்டவராய முதலியார் காலத்தவர். அவ்வப்போது பல நூல்களை அச்சிட்டு வெளியிட்டவர். கந்தபுராணச் சுருக்கம், விரிஞ்சைப் புராணம், திருவாதவூரர் புராணம், திருவிளையாடற் புராணம், நீதிநெறி விளக்கம் முதலியவற்றை உரையோடு அச்சிட்டவர். உரையாசிரியர் மகா வித்துவான் என்னும் பட்டாபிதானம் பிறராற் சூட்டப்பெற்றவர். திருத்தணிகைக் கந்தப்ப ஐயரின் மாணவர்—புரசை அஷ்டாவதானம் சபாபதி முதலியார் முதலானவர்களின் ஆசிரியர். 1871ஷு இறந்தனரென்ப. இவருடைய உருவப்படம் பச்சையப்பன் கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ளது.

(3) புரசை அஷ்டாவதானம் சபாபதி முதலியார்

புரசையை வாசஸ்தானமாகக் கொண்டவர். ஷையாரின் மாணவருட் சிறந்தவர். திருப்போரூர்ப் புராணம், திருவள்ளுவர் இரட்டை மணிமாலை முதலியவற்றைப் பாடியவர். திருமயிலை வித்துவான் சண்முகம் பிள்ளை உரையாசிரியர் இராமசாமி நாயுடு, சின்னசாமிப்பிள்ளை முதலியவர்களின் ஆசிரியர். சுப்பிரமணிய உபாசகர்.

(4) தாச்சி அருணாசல முதலியார்

திருமயிலையில் எழுபது எண்பது ஆண்டுகளுக்கு முன் விளங்கியவர். சிவகாமி உபாசகர். திருவள்ளுவர் கலிவெண்பா, பஞ்சாத்தினர், நடராசர், சிவகாமி தோத்திரப் பாக்கள் முதலியவற்றைப் பாடினவர். ரொட்டிக்காரத் தெரு என வழங்கும் தாச்சி அருணாசல முதலித் தெரு இவர் பெயரால் அழைக்கப்படுவதே. இவருடைய பிரபந்தங்கள் அநேகம் அச்சிடப்படாமல் இறந்துபட்டன.

திருவள்ளுவர் திருநாள்

கொண்டாடு முறை

திருவள்ளுவர் திருநாள் இவ்வாண்டு வைகாசித் திங்கள் 5-ம் நாள் (18-5-35) பின்வரும் வகைகளிற் சிறப்பாகக் கொண்டாடப்படுதல் வேண்டும்:—

1. திருநாளன்று காலையில் இல்லந்தோறும் திருக்குறட் சுவடிக்கேனும், திருவள்ளுவர் திருவுருவத்திற்கேனும் அலங்கார ஆராதனைகள் செய்தல்.

2. பொதுக்கூட்டம் ஒன்று கூட்டித் திருவள்ளுவரையும் திருக்குறளையும் பற்றி விரிவுரை நிகழ்த்துவித்தல்.

3. திருக்குறள் நூற்பிரதிகளை வாங்கி ஏழை மாணவர்களுக்குப் பரிசளித்தல்.

மேற்குறித்தவாறு திருநாள் கொண்டாடப்பட வேண்டுமென்று தமிழ்ப் பெருமக்களை வேண்டிக்கொள்கிறோம்.

சென்னை விழா

சென்னைப் பச்சையப்பன் மண்டபத்தில் பல்லாவரம் மறைமலையடிகளார் தலைமையில் 18, 19-5-35 சனி ஞாயிறுகளில் திருவள்ளுவர் திருநாள் மிகவுஞ் சிறப்பாகக் கொண்டாடப்பெறும்.

செய்திகளும் குறிப்புகளும்:
News and Notes

அறிவிப்பு

தென்னிந்திய தமிழ்ச்சங்கம், திருநெல்வேலி,

தனித்தமிழ்த் தேர்வுகள்

இச்சங்கத்தார் சென்ற ஒன்பதாண்டுகளாக, தமிழ்த் தேர்வு, இளந்தமிழ்ப்புலவர் பொது, தமிழ்ப்புலவர் சிறப்பு என்னும் தேர்வுகளைப் பல தமிழ்த் தலைநகர்களிலும் தக்கார் மேற்பார்வையில் நடத்தி முதன்மையாய்த் தேர்ந்தார்க்குப் பரிசும் மற்றவர்க்குத் தேர்ச்சியிதழ்களும் வழங்கி வருகின்றார்கள். தேர்ச்சியிதழ் பெற்றவர்கள் பல கல்லூரிகளிலும் தமிழ் ஆசிரியர்களாக வேலைபார்த்து வருகின்றார்கள். தமிழகத்திலுள்ள தமிழ் மக்களில் தமிழ்ச் சுவை யறிந்திருப்பவர்களின் தொகையைப் பெருக்கி நலமுறச் செய்வதே இத்தேர்வுகளின் முதல் நோக்கம். ஆண்டுதோறும் தேர்வுப்பாட அட்டவணைத்தாட்கு எழுதிப் பெற்றுப் படிக்கின்றவர்கள் பலர்.

நிகழும் மெய்கண்டான் யாண்டு 712-க்குரிய தேர்வுகள் ஆனித்திங்கள் ௰௩, ௰௪, ௰௫. (1935. ஜூன், 27, 28, 29.) வியாழம், வெள்ளி, சனி ஆகிய மூன்று நாள்களிலும் நடைபெறும்.

தேர்வுகட்கு விண்ணப்பங்களைக் குறித்த கட்டணத்துடன் யங்க அமைச்சர் அவர்கள் முக வலிக்கு 31-5-35-க்குள் அனுப்பிக் கொள்ளவேண்டும்.

இவ்வயாண்டு, பல ஊர்களிலும் மாணவர்கள் பயின்று வருகின்றார்கள.

இப்போது சென்னை சட்ட சபையில் கொண்டுவரப்பட்டிருக்கிற இந்துமதங்களின் மசோதா

BILL NO. 24 OF '34.

இந்த மசோதாப்படி இந்து அறநிலையப் பாதுகாப்புச் சட்டம், மடங்கள் சம்பந்தப்பட்ட மட்டில் இனி ஊர்ஜிதத்திலிருக்கமாட்டாது என்றும் ஏதாவது கோர்ட்டுகள் மூலம்

(Scheme) ஸ்கிம் ஏற்பட்டிருந்தால் அதுவும் இனி ஊர்ஜித மாகாது என்றும் ஒரு விதி ஏற்பட்டிருக்கிறது.

மற்றொரு விதி இஷ்டப்பட்ட மடங்களைமட்டும் இந்த மசோதாவிற்குட்படுத்த சர்க்காருக்கு அதிகாரமுண்டு என்று ஏற்பட்டிருக்கிறது.

மற்றும் போது விதிகளானவை:— மடாதிபதிக்கு இனி மடத்துச் சொத்துக்களில் யாதொருசம்பந்தமும் அனுபோக முங் கிடையாது. மடத்தின் நிர்வாகமானது ஒரு(Executive) எக்சிக்கியூட்டிவ் ஆபீஸரை வைத்து நடைபெறவேண்டியது. அவருக்கு போர்டார் சம்பளம் ஏற்படுத்தி அவரை நியமிக்க வேண்டியது. அவர் சிஷ்யர் என்று நினைக்கிறவர்கட்கு ஒரு ஜாப்தா பிறப்பிக்கவேண்டியது. அதற்கு ஆக்ஷேபனையுள்ளவர் போர்டில் ஒரு மாதத்திற்குள் மனுச் செய்துகொள்ளவேண் டியது. அவர்களுக்குள் (Election) தேர்வு செய்து சிலரை ஒருகமிட்டியாக ஏற்படுத்தவேண்டியது. அதன் எண்ணம் போர்டார் திர்மானம் செய்யவேண்டியது. அவர்கள் காலம் மூன்று வருஷம். அவர்களுக்கு உரிமை மடாதிபதிக்கும் (Executive) எக்சிக்சியூட்டிவ் ஆபீசருக்கும் யோசனை சொல்லவேண்டியது. யோசனையைக் கேட்காவிட்டால் போர்டாருக்கு மனுச்செய்யவேண்டியது. போர்டார் செய் வதே முடிவான பைசல். மடாதிபதி ஸ்தானத்துக்கு விவ காரம் ஏற்பட்டாலும் மைனராயிருந்து கார்டியன் யாரென்று விவகாரம் ஏற்பட்டாலும் இருக்கிற மடாதிபதி திரேகபங்க மாயிருந்தாலும் புத்திக் கூர்மை யில்லாதவராயிருந்தாலும் போர்டாரே மத்திய காலத்திற்கு ஒரு மடாதிபதியை நியமிக் கலாம். அவருக்கு மடாதிபதியினுடைய ஸ்தானம் ஏற்பட்டு விடும். மடாதிபதியானவர் செலவுக்குத் திட்டம் எழுதிப் போர்டில் வைத்து அனுமதி பெற்றுக் கொள்ளவேண்டியது. அனுமதி பெருமல் செலவுசெய்ய அதிகாரமில்லை. (Executive) எக்சிக்கியூட்டிவ் ஆபிசரை இந்து மதத்தை அனுட்டிக்கிற எந்த வகுப்பாரிலிருந்தும் நியமிக்கலாம். அனேக மடங்களுக்கு ஒரே (Executive) எக்சிக்கியூட்டிவ் ஆபீசரை நியமிக்கலாம். அவருக்குக் காலம் 5 வருடம். அவரைத் திரும்ப நியமிக்க வுஞ் செய்யலாம். அவரைப் போர்டார் நீக்கவும் செய்யலாம். நீக்கினால் கவர்ன்மெண்டுக்கு அப்பீல் செய்து கொள்ளவேண் டியது. சகல தாவர சங்கம சொத்துக்களும், ரிக்கார்டுகளும் அவர் வசமே இருந்துவரவேண்டியது. வரவும் செலவும் அவரைப் பொறுத்தவை அவர் கணக்கு வைத்துவரவேண் டியது. ரூபாய் 100-க்குக் கீழ்ப்பட்ட உத்தியோகஸ்தரை

அவரே நியமுகஞ் செய்யவேண்டியது. மேற்பட்ட சம்பளம் உள்ளவர்களைப் போர்டார் நியமிக்கவேண்டியது. வேலைக்காரர்கள் எல்லோரும் அவருடைய அதிகாரத்திற்குள் இருக்க வேண்டியது. மத சம்பந்தமான வேலைக்காரர்களும் ஊழியத்திற்காகச் சொத்துரிமையுள்ளவர்களும் மடாதிபதியின் அதிகாரத்திற்குள்ளிருக்கவேண்டியது. இந்த இரு கூட்டத்தாருக்கும் தண்டனை ஏற்பட்டால் போர்டுக்கு அப்பீல் உண்டு.

வருடா வருடம் (Budget) செலவுத் திட்டம் (Executive. எக்சிக்கியூட்டிவ் ஆபீசர் போர்டுக்கு அனுப்பவேண்டியது) அதன் மேலே திட்டம் ஏற்படுத்தவேண்டியது. அவசியம் ஏற்பட்டால் (Sanction) அனுமதி இல்லாமலே (Executive) எக்சிக்கியூட்டிவ் ஆபீசர் செலவு செய்யலாம். கணக்குகளை (Auditor) ஆடிட்டர் (Audit) தணிக்கை செய்து போர்டுக்கு (Report) ரிப்போர்ட்டு அனுப்ப வேண்டியது. (Auditor) ஆடிட்டர் செலவு மடத்தைப் பொறுக்க வேண்டியது.

மடத்திலிருந்து தொகை வராவிட்டால் சொத்துக்களை (Collector) கலெக்டர் மூலம் ஏலம் போட அதிகாரமுண்டு. போர்டாருக்குக் கணக்குகளையும் சொத்துக்களையும் நேரிற் போய் பரிசீலனை செய்யவும் மடங்கள் சம்பந்தப்பட்ட மட்டில் அவசியமான செலவுகளைத் தாங்களே செய்து தொகைகளை ஈடு செய்யவும் அதிகாரமுண்டு. மடத்தின் உள் நிர்வாகத்தை இன்னபடி செய்யவேண்டுமென்று உத்திரவிடவும் அதிகாரமுண்டு. போர்டு (Sanction) அனுமதியில்லாமல் 5 வருஷத்திற்கு மேற்பட்ட கட்டுக்குத்தகை, கிரயம், பந்தகம், பரிவர்த்தனை செய்ய அதிகாரமில்லை. ஆனால் போர்டு செய்யும் உத்தரவுக்கு மேலே (Executive) எக்சிக்கியூட்டிவ் ஆபீசரும் மடாதிபதியும் அக்கரையுள்ள எவரும் (Suit) வழக்குப் போட்டுக்கொள்ள அதிகாரமுண்டு. கோர்ட்டு மூலமாய்ப் போர்டாரும் அக்கரையுள்ள எவரும் ஒரு மடாதிபதியை நியமிக்கவும், நீக்கவும் (Suit) வழக்குப் போடலாம். பிரயாணிகளுடைய வசதிக்காகவும் சுகாதாரத்திற்காகவும் மடத்துப் பணத்தைச்செலவழிக்க (Executive) எக்சிக்கியூட்டிவ் ஆபீசருக்கு அதிகாரமுண்டு. இன்ன வகை வருமானத்தை இன்ன வகைச் செலவுக்குத்தான் செலவு செய்யவேண்டுமென்று சொல்லப் போர்டுக்குத்தான் அதிகாரமுண்டு. ஆனால் அதனையும் (Civil Court) சிவில் கோர்ட்டில் ஆக்ஷேபிக்கலாம்.

மடங்கள் சம்பந்தமாய் நடக்கிற சகல கோர்ட்டுச் செலவுகளும் மடத்துப்பண்டிலிருந்து ஈடு செய்துகொள்ளலாம். வசூலாகா விட்டால் (Collector) கலெக்டர் மூலமாய்ச் சொத்துக்

களை ஏலம்போட்டு ஈடு செய்துகொள்ளலாம். வருமானத்தின் பேரில் 100-க்கு 1½ போர்டாருக்கு உதவித் தொகை கொடுக்கவேண்டியது. அது பாக்கி விழுந்தாலும் மேலே கண்டபடி ஏலம் போட்டு ஈடு செய்து கொள்ளலாம்.

ஒவ்வொரு மடத்துக்கு ஏற்பட்ட வழக்கங்களும் மடத்தில் சிலருக்கு இருக்கக்கூடிய பாத்தியதைகளும், வருமானங்களும், மரியாதைகளும் இந்தச் சட்டத்தினாலே பாதிக்கப்பட மாட்டது.

N. B. :—இது சம்பந்தமாய் சைவ மகா ஜனங்கள் ஒன்று கூடி ஆலோசித்து முடிவு செய்யவேண்டியே இது தமிழில் வெளியிடப்பெற்றிருக்கிறது.

சைவசித்தாந்த சங்கத்தார், திருநெல்வேலி.


மதிப்புரை

தமிழ்ச்சோலை அல்லது கட்டுரைத்திரட்டு

திருவாளர் திரு. வி. கலியாணசுந்தர முதலியாரவர்கள் இயற்றி அனுப்பிய தமிழ்ச்சோலையுள் நம் செல்வி புகுந்து வானுறவோங்கி நறுமலர் பூத்துக் காய்த்து நிற்கும் மரங்களையும், செடிகளையும், கொடிகளையும் கண்டு களித்தாள். பல வகைப்பட்ட மணங்களைக்கொண்ட எல்லா நறுமலரின் புது மணத்தினையும் நுகர்ந்து தமிழ்த்தேனையும் உண்டு திளைத்தாள். இத்தமிழ்ச்சோலை ரூபா 1-8-க்கு நம்கழகத்தினுங் கிடைக்கும்.

திருமுறை சாத்திரங்கள்:— இப்பெரிய சிறுநூல் காஞ்சிபுரம் மெய்கண்டார் கழகத்தினரால் இலவசமாக வழங்கப்படுகிறது. இது சைவத்திருமுறை பன்னிரண்டு, சைவசித்தாந்த சாத்திரங்கள் பதினான்கு என்னும் ஞான நூல்களின் அமைப்பு முறையும், அருமை பெருமையும் தொகைவரலாறும் விளங்க அறிவிப்பது. திரு. அ. தாந்தோணி முதலியார், 400, ஆடிசன் பேட்டை, காஞ்சிபுரம் என்னும் விலாசத்திற்கு எழுதிப் பெறலாம்.

சித்தன்:— இது பழநித் திருப்பதியினின்றும் திரு, C. P. சாமி அவர்களை ஆசிரியராகக் கொண்டு, மாதமொரு முறை வெளிவரும் இனிய தமிழ்ப்பத்திரிகை. இதில் மக்கள் நல்வாழ்வுக் கின்றியமையாத சித்த மருத்துவ முறைகளும். நல்லுரைகளும், செய்திகளும், நாடகப்பகுதியும் வெளிவருகின்றன. இதன் ஆண்டுக் கையொப்பம் அணா 8.



திருவள்ளுவர்

ஓம்
செந்தமிழ்ச் செல்வி
திங்கள் வெளியீடு

சிலம்பு-௩௫] யுவ—வைகாசி [பரல்-௧௦

திருமூலர் திருமந்திரம்

ஏழாந் தந்திரம்

அருளொளி

புறமே திரிந்தேனைப் பொற்கழல் சூட்டி
நிறமே புகுந்தென்னை நின்மல னாக்கி
அறமே புகுந்தெனக் காரமு தீந்த
திறமே தென்றெண்ணித் திகைத்திருந் தேனே.

பதவுரை:—

புறமே திரிந்தேனை—எனது உள்ளத்தினுள்ளே விளங்குகின்ற இறைவனை நோக்காமல் புறத்திலுள்ள உலக விடயப் பொருள்கள் ஒவ்வொன்றையும் பற்றி நின்று அவை ஒன்றிலும் அமைதி பெறாது அலைந்து திரிந்தவனாகிய என்னை(த் தன்னருளினாலே திருந்தும்படி செய்து)

பொற்கழல் சூட்டி—(நான் அகமுகமாக நோக்கி இறைவனுடைய திருவடிகளே புகலிடம் என்று எண்ணி அவனை வணங்கிப் பக்குவ மடைந்தபொழுது, அப்பக்குவ நோக்கி) இறைவன் எனது தலையின்மேல் தன்னுடைய இரண்டு அழகிய திருவடிகளையும் வைத்துத் திருவடித் தீக்கை செய்து (தத்துவங்களைக் கடந்த தூவெளி அருளொளியை எனக்கு வேறாய் நின்று காட்டி, பசு பாச மலங்களைப் போக்கி)

நிறமே புகுந்து—எனது உடலிற் புகுந்து (என்னோடு உடனாய் நின்று அறிந்து முற்றறிவு முதலிய எண் குணங்களையும் எனது உள்ளத்திற் பதிவித்து)

என்னை நின்மலனாக்கி—தன்னைப்போல என்னையும் சிவமாந் தன்மை உடையவன் ஆக்கி

அறமே புகுந்து—தான் தலைவன் நான் அடிமை என்ற முறைமையில் அவனும் நானும் ஒன்று என்னும்படி ஒன்றுபட்டு நின்று

ஆரமுது ஈந்த—நிறைவான பேரின்ப நுகரும் பேறு எனக்குத் தந்தருளிய

திறம் எது என்று எண்ணி திகைத்திருந்தேன்—அவனுடைய அருட்டிறம் எத்தன்மையதாயிருத்தல் வேண்டும் என்று நினைத்து அதனை அறியமுடியாதபடி வியப்பு அடைந்து மயங்கிக்கொண்டிருந்தேன்.

விளக்கவுரை:—

புறமே திரிந்தேன்—புறம் என்பது புறத்திலுள்ள உலக நுகர்வுப் பொருள்களைப் பற்றுதலைக் குறிக்கிறது; திரிதல் என்பது உயிர் உலக நுகர்வுப் பொருள்கள் ஒவ்வொன்றையும் பற்றிப்பற்றி அவை ஒன்றிலும் அமைதிபெறாது திரிதலைக் குறிக்கிறது.

பொற்கழல் சூட்டி—பொருள் முழுவதும் விளக்குதற்காக அவாய் நிலையால் தொக்கி நிற்கிற சொற்களையும் கருத்துக்களையும் வருவித்துப் பதவுரையில் பொருள் உரைக்கப்பட்டது. திருவாசகம் அற்புதப்பத்து முதலாவது பாட்டில் "பொய்யெலாம்விடத் திருவருள் தந்து தன் பொன்னடியிணைகாட்டி மெய்யனாய் வெளிகாட்டி" எனக் கூறியிருத்தல் காண்க

நிறமே புகுந்து—நிறம்=உடல்; அதாவது உடலிலுள்ள உள்ளம். நிறம், இப்பொருள் படுதல் திருச்சிற்றம்பலக் கோவையார் 58-வது பாட்டின் பேராசிரியர் உரையிற் காண்க. "தானேவந் தெனதுள்ளம் புகுந்தடியேற் கருள் செய்தான்" என்று மாணிக்க வாசக அடிகள் திருவேசறவுப் பதிகம் கடைப்பாட்டிற் கூறியிருத்தல் காண்க. அவ்வாறு புகுதல் காரணமாக இறைவன் உயிரோடு உடனாய் நின்று அறிந்து தன் எண் குணங்களையும் உயிரினிடம் பதியச் செய்து விடயப்பொருளாகிய தன்னை நுகரச் செய்கின்றான் என்பது கூறப்பட்டது. நிறமே என்பதிலுள்ள ஏ-அசை.

என்னை நின்மலனாக்கி—நின்மலன் என்ற சொல் அநாதி முத்தனாகிய சிவனைக் குறிக்கிறது. நின்மலனாக்கி=சிவத்தன்மை உடையவனாக்கி, அல்லது சிவமாக்கி.

அறமே புகுந்து—அறம் என்பது முறைமை; இறைவன் ஆண்டான், உயிர் அடிமை என்னும் முறைமை. அம்முறைமைபற்றி அறவாழி அந்தணனாகிய இறைவன் உயிரோடு அத்துவிதமாய்க் கலந்துநின்று பேரின்பப் பேறு அளித்தல் கடனாதலால் அறமே

புகுந்து என்றார். அறமே என்பதிலுள்ள ஏ-அசை; புகுந்து என்பது இங்கே இறைவன் உயிருடன் ஒன்றுபட்டு இருபொருள்களும் அத்துவிதக் கலப்பினால் ஒன்று எனும்படி பொருந்தி என்ற பொருளில் வந்தது.

ஆர் அமுது—ஆர் - நிறைவான; அமுது - இன்பம். இறைவனை அடையும் இன்பம் உலக இன்பத்தைப்போலக் குறைவு இல்லாததாதலால் அதனை ஆரமுது என்றார். *அமுது - வடமொழி அமிர்தத்தின் திரிபு என்பர். அமிர்தம் = மிர்தம் (மரணம்) இல்லாதது, அதாவது நிலையான இன்பம்.

திகைத்திருந்தேன்—திகைத்தல் = மயங்குதல். இறைவன் திருவடித் தீக்கை செய்து கொண்டதற்கு முன்னுள்ள தனது நிலைமையைப் பின்னுள்ள தனது நிலைமையுடன் ஒத்து நோக்கி வியப்பு அடைதலாலுண்டான திகைப்பு. இந்த வியப்பைத் திருவாசகம் அச்சோப்பதிகத்திற் காண்க.

ஏ—ஈற்றசை.

திருமூலர் இந்தப் பாட்டில் தமக்கு இறைவன் தூவெளி அருள் ஒளிகாட்டிப் பசுபாச மலங்களைப் போக்கியதனால் தன்னை அறிவித்துப் பின் தம்மைச் சிவமாக்கிப் பேரின்பந் தந்தருளியதைக் கூறுகின்றார்.

மா. வே. நெல்லையப்ப பிள்ளை

"இன்றெனக் கருளி"

[திரு. மா. வே நெல்லையப்ப பிள்ளை, பி. ஏ.]

(௩௯௩-ம் பக்கத் தொடர்ச்சி)

மேலே ஒருவாறு மூன்றுவகை அத்துவித நிலைகளும், அநுபோக இலக்கணமாகக் கூறப்பட்டன. இன்னும் அவை இயன்றவாறு விளக்கிக் கூறப்படும். இங்கே கூறப்படுவது அநுபோக இலக்கணமன்றி நாவினாற் கூறப்படுதல் முடியாத அநுபோகம் அன்று. அநுபோகம் என்ற சொல் வடமொழிச் சொல். அது அநுபவம், அநுபூதி, அநுபூதிகம் என்ற உருவங்களிலும் தமிழ்மொழியில் வழங்கப்படுகின்றது; 'சுவ' என்ற முன் அடை (Prefix) சேர்ந்து சுவாநுபவம், சுவாநுபூதி,

---

*அவிழ் என்ற தமிழ்ச் சொல்லடியாப் பிறந்ததென்று கூறுவர் திருக்குறள் அறத்துப்பால் உரைகாரர் தண்டபாணிபிள்ளை.

சுவாநுபூதிகம் என்றும் வழங்கப்படுகின்றது. அநுபவம் என்ற சொல், அநு என்னும் முன்அடையும், பூ (பூ) என்ற அடிச் சொல்லும் சேர்ந்து ஆகிய சொல். அநு என்பது உடன் (with) என்றும் பூ என்பது ஆகு (to become) என்றும் பொருள் படும். ஆகவே அநுபவம் அல்லது அநுபோகம் என்பது தமிழ் மொழியில் ஒன்றுதல் (உடனுதல்) என்று கூறப்படும். இந்த 'ஒன்றுதல்' என்ற சொல்லே இந்தப் பாட்டில் 'ஒன்றுந் திருப்பெருந்துறையுறை சிவனே' என்பதில் வருதல்காண்க. ஒன்றுதல் என்பது ஆன்மா ஆனவன் தனது மலம் நீங்கப் பெற்று இறைவனோடு அத்துவிதமாய்க் கலந்து ஒன்றுதல் ஆகும்.

நாவினுற் கூறப்படுதல் முடியாத சிற்றின்ப உணர்வானது, தலைவனும் தலைவியும், ஒத்த அறிவு ஒத்த அன்பு ஒத்த குணம் முதலிய ஒத்த நலங்களை உடையவர்களாய்ச் சேரின், உண்டாகும் என்று கூறப்படுதல்போலப் பேரின்ப உணர்வானது சார்ந்ததன்வண்ணமாந் தன்மை:உடைய ஆன்மா, முழுமுதற்றன்மை உடைய இறைவனோடு எவ்வாறு சேர்ந்தால் உண்டாகும் என்று கூறப்படுதல் அநுபோக இலக்கணம் ஆகும். இந்த அநுபோக இலக்கணத்தை இப்பாட்டுக் கூறுகின்றது. அநுபோக இலக்கணங் கூறப்படுங்கால் ஒன்று சேரும் பொருள்களாகிய இறைவனது உண்மைஇலக்கணமும் ஆன்மாவினது உண்மைஇலக்கணமும் இவ்விரு பொருள்களையும் ஒன்று சேர்த்துவைக்கும் அருளினது உண்மை இலக்கணமும் வெளிப்படையாகவும் குறிப்பாகவும் கூறப்படுகின்றன.

ஆன்மாவானவன் தனது கட்டுநிலையில் தத்துவக் கருவிகளால் உலக விடயங்களை அறிந்து உலகச் சிற்றின்பம் நுகர்தற்கும், வீட்டு நிலையில் இறைவனை அறிந்து பேரின்பம் நுகர்தற்கும் அவனுக்குத் துணையாயிருப்பது அருளேயாகும். வீட்டு நிலையில் ஆன்மாவானவன் அருளைப்பற்றி நிற்குங்கால் படிமுறையில் அவனிடம் அருள்விளங்குகிறது; அருள் விளங்கும் அளவில் மலவலி தேய்கிறது. ஆன்மாவினிடத்தில் அருட்சத்தி பதிதல் சத்திநிபாதம் என்று கூறப்படும் ஆன்மாவானவன் விடு அடையும்பொழுது நாலாவது சத்திநிபாதம் ஆகிய தீவிரதர சத்திநிபாதம் நிரம்பப்பெறுகின்றான். திருப்பெருந்துறையில் இறைவன் மாணிக்கவாசக அடிகளுக்குத் திருவடித் தீக்கை செய்து இந்தச் சத்திநிபாத நிலையை நிரம்பச்செய்து பேரின்பந் தந்தருளுகின்றான். இந்தப் பாட்டில் மாணிக்கவாசக அடிகள் தமது உள்ளத்தில் இறைவ

னது அருளினல் அருட்பேரொளி விளங்கப்பெற்றுப் பசுபாச மலத் தொடர்பு முற்றிலும் நீங்கிய தன்மையை "உள்ளத் தெழுகின்ற ஞாயிறே போன்று நின்ற நின் தன்மை" என்று கூறி அருளினர். இஃது இறைவன் ஆன்மாவுக்கு வேருய் நின்று காட்டும் உதவியாகும். இதற்குப்பின் இறைவன் அடிகளோடு உடனய்நின்று காணும் உதவிபுரிந்து தான் எல்லா உயிர் களும் உய்யும் பொருட்டுப் பசு பாசங்களோடும் தாக்கறக் கலந்து நின்று "பிரபஞ்ச பேதமெலாந் தானய்த் தோன்றி"ச் செய்யும் படைத்தல் முதலிய ஐந்து பேரருட் செயல்களும் அவருக்கு நன்கு விளங்கும்படி செய்கின்றுன். இதனல் அடி கள் இறைவனது பேரருட்செயலை நோக்கி அவனிடத்தில் அயரா அன்புகூர்ந்து தாம் கண்ட பேரொளி அருளில் தன் முனைப்புச் சிறிதுந் தோன்ருமலடங்கி எங்கெங்கே எப்பொரு ளைப் பார்க்கினும் அங்கங்கே அப்பொருளை யெல்லாம் சிவ மாய்ப் பார்க்கிற வியாபக அறிவைப்பெற்று "நீ அலாற் பிறிது மற்றின்மை" என்று கூறியருளினர். பின் அடிகள் இறைவன் தம்மோடு அபேதமாய்க் கலந்துநின்று சிவபோ கத்தை உணரச்செய்து தாம் சிவபோகந்துய்த்தலை "நினைப்பற நினைந்தேன்" என்று கூறியருளினர். நினைதல் என்பது இங்கே அறிதலாகும். அநுபவம் என்ற சொல்லின் பொருள் அழுந்தி அறிதல் என்பதனல் நினைப்பற நினைத்தல் என்பது பரபோக அநுபவத்தைக் குறிக்கும். பரபோக அநுபத்தில் இவ்வாறு ஆன்மாவினுடைய அறிவு, இச்சை, செயல்கள் மூன்றும் முறையே காரண காரியமாய் இறைவனிடத்தில் ஒருங்கு நிகழ்தல் காண்க.

மேலே கூறப்பட்டவாறு முறையே பேதம், பேதா பேதம், அபேதம் என்னும் மூன்றுவகை அத்துவித நிலைகளி லும் இறைவன் தம்மிடம் நிகழச்செய்த நிகழ்ச்சிகளை அடி கள் இந்தப் பாட்டில் கூறியருளினர். எனது உள்ளத்தில் என்றும் நினைப்பற நினைந்தேன் என்று கூறியதனல் அடிகள் தம்மிடம் நிகழ்ந்த நிகழ்ச்சிகளைக் கூறுகிருர் என்பது நன்கு புலனகும். "இருள்கடிந்து நின்ற நின் தன்மை" என்றதனல் அடிகள் தாம் அசத்துத் தன்மைநீங்கி இறைவனுடைய சத்துத் தன்மையை அடைதலையும், "நீ அலாற்பிறிது மற்றின்மை" என்றதனல் அசித்துத் தன்மைநீங்கி இறைவனுடைய சித்துத்தன்மையை அடைதலையும் "நினைப்பற நினைந்தேன்" என்றதனல் துன்பத் தொடர்பு நீங்கி இறைவனுடைய ஆநந்தத் தன்மையை அடைதலையும் குறிப்பிட்டருளினர். இந்த மூவகை அத்துவித நிலைகளையும் உமாபதி சிவாச்சாரி யார் முறையே (1) ஆன்மதரிசனம் என்றும், (2) ஆன்மசுத்தி

என்றும், (3) ஆன்மலாபம் என்றும் சிவப்பிரகாசம் 8-வது சூத்திரத்தில் கூறுகின்றார். ஆன்ம தரிசனத்தோடு சிவரூபமும், ஆன்ம சுத்தியோடு சிவதரிசனமும் உடனிகழ்கின்றன. ஆன்மலாபம் என்பது சிவப்பேறு அல்லது திருவடிப்பேறு அல்லது சிவபோகந்துய்த்தல் ஆகும். இவை தேவாரம், திருமந்திரம் முதலிய தமிழ் மறைகளிலும் கூறப்பட்டுள்ளன.

சிவபோகம் என்பது இந்த மூன்றுவகை அத்துவித நிலைகளும் அல்லாததாய் அவை மூன்றிற்கும் பொதுவாய் விளங்கும் ஓர் தனிநிலை. "அது இது என்ற ததுவல்லான் கண்டார்க்கு" என்ற முதற்குறிப்புடைய சிவஞானபோதம் 12-வது சூத்திர வெண்பாக் கருத்தை நோக்குக. மோன நிலையில் எய்தப் பெறும் அச்சிவபோக நிலையைக் கூறவல்லவர் யாவர்?

இனி "சென்று சென்றணுவாய்த் தேய்ந்து தேய்ந்தொன்றாந் திருப்பெருந்துறை யுறைசிவனே" என்ற 3-வது வரியின் பொருளைப்பற்றிக் கருதுவாம். திரு. பொ. முத்தைய பிள்ளையவர்கள் எடுத்துக்கூறிய சைவவாதி சங்கற்ப நிராகரணச் செய்யுட் பகுதியினால் இந்த வரியானது இறைவனுடைய இயற்கை இன்னது என்பது நமக்குத் தெரிவிக்கிறது என்று நாம் அறிகிறோம். ஆனால் பிள்ளையவர்கள் அந்த மேற்கோளிலுள்ள 'தகுமே' என்ற கடைசிச் சொல்லுக்கு 'தகும்' என்று உடன்பாட்டிற் பொருள் செய்திருக்கிறார்கள். ஆசிரியர் உமாபதி சிவம் அடிகள் பின் கூறியவாற்றால் 'தகுமே' என்பதற்கு எதிர்மறைப்பொருள் கொள்ளுதல்வேண்டும் என்பது நன்கு விளங்கும். அதாவது ஆசிரியர் சைவவாதியைப்பார்த்து "நீ கூறுங் கொள்கையானது வாதவூர் அடிகள் 'சென்றுசென்றணுவாய்த் தேய்ந்து தேய்ந்தொன்றாந் திருப்பெருந்துறையுறை சிவனே' என்று கூறிய உண்மைக்குப் பொருந்தாது" என்று கூறுகின்றார். பிள்ளையவர்கள் சைவவாதி சங்கற்பம் (பூர்வபக்கம்) அதற்குப் பொருந்தும் என்று கூறி விளக்கியிருக்கிறார்கள்.

(தொடரும்)

திருக்குறளும் பொது நோக்கமும்

[வித்வான் எஸ். ஆறுமுக முதலியார், B.A., (HONS) L.T.]

தமிழ்நாடு செய்த தவப்பயனாய் அவதரித்த திருவள்ளுவர் உலகத்தோருக்கு ஒழுக்க முறை வகுத்த சான்றோர் வரிசையில் சிறந்த ஒருவராக வைத்தெண்ணப்படுகின்றாரென்பது யாவரும் அறிந்த தொன்றும். உலகம் போற்றும் தம் பெருநூலில் ஆசிரியர் வகுத்துப்போந்த ஒழுக்கமுறை இன்னார் என்ற வரையறை யின்றி யாவரும் கையாளுவதற்குரியதாயிருக்கிறது. ஒழுக்கமுடைமையிற் கூறியபடி ஒழுக்கத்தை ஓம்புவோர் விழுப்பமடைவர் என்பதனைத் தம் வாழ்க்கையிலேயே நடத்திக் காட்டி, கூடா வொழுக்கத்தில் கண்டிக்கப்பட்ட போலித் துற வொழுக்கம் உலகத்தாரை ஏமாற்றுவதற்கே உரியது என்பதனையும் உலகத்தவருக்குப் போதித்து, மனத்துக்கண் மாசிலராகிக் குணமென்னுங் குன்றேறி நின்ற திருவள்ளுவர் அனைவரும் ஏற்றுக்கொண்டு கையாளுதற்குரிய ஒழுக்க முறை வகுத்தது ஒரு வியப்பன்று. தம் வாழ்க்கை யனுபவத்தையே, யாம் பெற்ற பேறு பெறுக இவ்வையகம் என்று சுரந்தெழும் அருள் மிகுதியினால், திருவள்ளுவர் அனைவரும் உய்யுமாறு ஒப்பற்ற ஒழுக்க நெறியாகத் திருக்குறள் மூலமாக நமக்கு அருளிச் செய்தார் என்பதிற்படும் இழுக்கொன்று மில்லை. சிறந்த ஒழுக்கமுறை வகுத்த இக்காரணத்தால் இவரைத் தமிழ் நாட்டு சாக்ரடிஸ் என்று கோள்வாருமுண்டு.

தெய்வப் புலவர் அருளிய பொது மறை உலகத்தெழுந்த ஒழுக்க நூல்கள் பலவற்றிலும் தலைசிறந்து விளங்குகிறது. உயரிய கொள்கைகளையும், இவர்தான் கையாளுவதென்ற வரையறை யின்றி உலகத்து மக்கள் எல்லோருமே ஒருங்கே ஏற்றுக்கொண்டு ஒழுகும் முறையையும் கொண்டுள்ள ஒரு நூல், உயர்தனிச் செம்மொழிகளில் ஏதாகிலும் ஒன்றில் எழுதப்படினும், அது அனைவராலும் போற்றிப் படிக்கப் பட்டுப் பல்வேறு மொழிகளிற் பெயர்த்தெழுதவும் படுகிறது. சாதி, மத, கால, தேசப் பிரிவுகளைப் பெருட்படுத்தாது சிறந்த ஒழுக்க முறையை எல்லோருக்கும் பொதுவாக எடுத்துக் கூறிச் செல்வதே இதற்குரிய காரணமாகும். இவ்விதத்தில் திருக்குறளும் ஒப்புயர்வற்று விளங்குகிறது

திருக்குறள் எழுந்த காலமும் இவ்வாறே பொது நோக்கமுடையதாய் ஒழுக்கத்தின் உயர்வையே கருதி, பிறப்பினால் உயர்வு உண்டு என்றல்போன்ற போலி உயர்வுகளுக்கிடந் தராது உண்மை உயர்வையே போற்றி வந்தது. சமுதாயத்

திலும், சமயத்திலும் சமரசஞானம் நிலவி, மக்களது அறிவையும், ஆற்றலையும் ஒழுங்குபடுத்திக் கொண்டிருந்த காலம் அது. அக்காலத்துக்கு முன்பே சாதிப்பிரிவுகளின் அறிகுறிகள் நம்தமிழ் நாட்டில் தோன்றி யிருப்பினும், அப்பிரிவுகளுக்கிடையே கடைச்சங்க நாளில், சமரசக் கொள்கைகள் குடிவாழ்க்கையிலும் சமூகத்திலும் சமயத்திலும் போதிக்கப்பட்டும் கையாளப்பட்டும் வந்தன. சாதிக் கொள்கைகளைக் கண்டிக்க வல்ல சிறந்த பௌத்த சமயப்புலவர்களும் பிறரும் தோன்றினர். தம்மைப் போன்று பிறரை நேசித்தல், ஒத்த உணர்ச்சி, விருந்தோம்பல், அன்பு, முதலிய விழுமிய கொள்கைகள் நின்று மக்களிடையே ஒற்றுமையைப் பரப்பி வந்தன. பிறரை உடன் பிறப்பினராக நோக்கும் தன்மையும், பிறரிடத்தில் நம்பிக்கையும் அன்றாட வாழ்க்கையில் கையாளப்பட்டு வந்து பயனைச் செய்தன. அக்காலத்துப் பல்வேறு சமயங்கள் நம் நாட்டில் வழங்கி வந்திருப்பினும், தாயுமான முனிவர் கூறும்படி, "காகம் உறவு கலந்துண்ணும்" தன்மையும், "சிவபோகமென்னும் பேரின்ப வெள்ளத்தைப் புசிக்கச் சேர வாரும் செகத்திரே" என்று கூவும் அருட்டிறமும் "யாம் பெற்ற பேறு பெறுக இவ்வையகம்" என்னும் பரந்த நோக்கமும், தனக்கென வாழாது, பிறர்க்கென வாழும் பெருமையும் மக்களிடையே தாண்டவமாடின.

இவ்வுண்மையைச் சங்க இலக்கியங்களை மேலெழுந்தவாரியாய் ஆராய்வோரும் கண்கூடாகக் கண்டறிவர். சமயக்கணக்கர் தந்திறங் கேட்ட காதையைப் பார்ப்போர், சைவ, வைணவ, பௌத்த, சமண மதங்களும் பிறவும் ஒருங்கே பக்கத்தே பக்கத்தே ஒற்றுமையுடன் தழைத்தோங்கிய பெருமையைப் பார்க்கலாகும். சிலப்பதிகாரத்திலிருந்து, பல சமயக் கோயில்களும் அடுத்தடுத்து அமைந்து கிடந்த பான்மை விளங்கும். சிலப்பதிகார ஆசிரியராகிய சேரசிகாமணியின் சமரசப் பான்மையை என்னென்று கூறுவது! ஆய்ச்சியர் குரவையைப் படிப்போர் இவர் திருமாலடியாரான ஆழ்வார்களுள் ஒருவரோ என ஐயுறுவர். சிவசம்பந்தமான தொடர்களைக் காண்போர் இவரும் ஒரு நாயனரோ என்பர். கவுந்தி யடிகளின் பக்தி உறுதியை வெளிப்படுத்தும்போது ஆசிரியரை ஒரு சமண சமய தீர்த்தங்கரராகவே காண்கின்றோம். மற்றுமொரு உதாரணங் கூறவேண்டின் சிவபெருமான், திருமால், முருகக் கடவுள் முதலிய பல தெய்வங்களுக்கும் வாழ்த்துச் செய்யுட்கள் அமைத்த பாரதம் பாடிய பெருந்தேவனரைக் கொள்ளலாம்.

மக்களும் சிறந்த ஒழுக்கமுடையராய், தாளாண்மை மிக்கு, உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று சொல்லாது, சொன்னதற்குத் தகவே நடந்து, பிறரையும் குலம், சாதி பற்றி இகழாது, எல்லோரையும் ஒருங்கே நேசித்து, எங்கெங்கே உண்மை, உயர்குணம், ஒழுக்கம், பெருமை முதலியவை உள்ளனவோ, அவற்றை யெல்லாம் போற்றி வந்தனர். ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் பார்ப்பதுபோல்:—

"யாது மூரே யாவருங் கேளிர்
தீது நன்றும் பிறர்தர வாரா
நோதலுந் தணிதலு மவற்றோ ரன்ன
சாதலும் புதுவ தன்றே, வாழ்த
லினிதென மகிழ்ந்தன்று மிலமே முனிவி
னின்னா தென்றலு மிலமே"

"உண்டா லம்மவிவ் வுலக மிந்திர
ரமிழ்த மியைவ தாயினு மினிதெனத்
தமிய ருண்டலு மிலரே முனிவிலர்
துஞ்சலு மிலர்பிற ரஞ்சுவ தஞ்சிப்
புகழெனி னுயிருங் கொடுக்குவர் பழியெனி
னுலகுடன் பெறினுங் கொள்ளல ரயர்வில
ரன்ன மாட்சி யனைய ராகித்
தமக்கென முயலா நோன்றாட்
பிறர்க்கென முயலுந ருண்மை யானே"

என்பன போன்ற புறநானூற்றடிகளை நோக்குவோம்.

மேலும் பெண்ணின் பெருமையும் இல்லறத்தின் மேன்மையும் அக்காலத்து உள்ளபடியே கண்டறியப்பட்டு, இல்வாழ்க்கை மிகவும் இன்பகரமாய் நடந்து வந்தது. புலவர்கள் பலரும் இல்லறத்தின் சிறப்பை விதந்தோதினர். மனைவாழ்க்கையில் ஆணுக்குயர்வு, பெண்ணுக்குத் தாழ்வு என்றும், இதற்கு மாறுபட்டும் புதுப்புதுக் கொள்கைகள் எல்லாம் நின்று நிலவாது சமரச ஞானமே குடும்பத்திலும் நிலவிற்று. மனைவி வாழ்க்கைத்துணையாய் மதிக்கப்பட்டாள். இல்லக்கிழத்தியும் அவளே. "தருமமெனும் பண்டமிடும் சகடமாம் மனைவாழ்க்கை"யைக் "கருமநுகம் பிணித்து" "மனைக்காதலியும்" காதலனும் "இருவராய்ப் பூண்டிழுத்தனர்." சகடமும் தட்டுத்தடையின்றி நெடுந் தொலை ஒழுங்காகச் சென்றது. மனைக்கு மங்கலமாக மனைவியும், அதன் நன்கலமாக நன்மக்களும் விளங்கினர். இங்கும் புறநானூற்றுச் செய்யுள் மற்றொன்றைப் பார்ப்போம்:—

"யாண்டு பலவாக நரையில வாகுதல்
யாங்கா கியரென வினவுதி ராயின்

மாண்டவென் மனைவியொடு மக்களு நிரம்பினர்
யான்க ண்டனையரென் னிளையரும் வேந்தனு
மல்லவை செய்யான் காக்கு மதன்றலை
யான்றவிந் தடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர்யான் வாழு மூரே"

என்பது அது.

இப்பாடல்கள் அக்காலத்துச் சமுதாய நிலையையும், மக்களின் குணமேன்மையையும் ஆடியின் நிழலெனக் காட்டுகின்றனவன்றோ? எனவே அக்காலத்துக், குடிவாழ்க்கை, சமுதாய வாழ்வு, சமயம் என்ற மூன்றிடங்களிலும் சமரச உணர்ச்சியும் ஒழுக்க மேம்பாடுமே தலைசிறந்து விளங்கின.

இப்பெற்றித்தாய காலத்தெழுந்த திருக்குறளின், அறவுரைகளும், ஒழுக்க நெறியும் அத்தன்மையனவே. இல்லான் இல்லாள் என்ற முறையில் நின்று இல்லறம் நடத்தும் முறைகளும், தூய துறவற நெறியும், சமுதாய ஒழுக்கமுறையும், இல்லறத்துக்கு முன்பு தலைவன் தலைவியர் மேற்கொண்டு ஒழுகிய களவும், அரசன், அவன் அங்கங்கள் முதலியோர் மேற்கொள்ள வேண்டிய அரசியல் முறைகளும் இன்னோரன்ன பிறவும், சுருங்கக் கூறின், மனித வாழ்க்கையின் ஒப்பற்ற முழு இலட்சியமும் ஆசிரியரால் பொது நோக்கங் கொண்டே புகலப்படுகிறது. அக்கால நிலையை ஒட்டியே தாம் கூறவந்த செய்தியைச் சமரச ஞானச் செல்வராகிய வள்ளுவதேவரும், தமிழ் நாட்டார் மட்டுமன்றி உலகோரனைவரும் ஒப்புக்கொள்ளுமாறு, சமரசம் ததும்பி ஊற்றெடுத்தோடி, அனைவரும் அள்ளிப்பருகி உய்யப் பொதுமறை எழுதியது ஒரு வியப்பன்று. இவர் வகுத்த ஒழுக்கமுறை தமிழ் நாட்டோடு மட்டும் தன் செல்வாக்கை நிறுத்திக்கொள்ளாமல் உலகு முழுவதும் ஒரு தனிச் செங்கோல் ஒச்சி வருவது நம்மொழிக்குள்ள ஒரு பெருஞ்சிறப்பாகும்.

உலகமுழுவதும் ஒரே கண்கோண்டு பார்த்து எல்லோருக்கும் ஒத்த நீதியையே கூறி, சாதி, மத, கால, இட, மொழி, நிறவேற்றுமைகளைக் கடந்து நிற்கும் இத்தமிழ் மறையின் பொதுத் தன்மையைப், பண்டு தொட்டு இன்றுகாறும் புலவர்களும் பிறரும் போற்றிப் புகழ்ந்து வருகின்றனர். ஒன்று இரண்டு சான்றுகள் தருதும்.

மேல்நாட்டு ஆராய்ச்சியாளர் பலரினும் M. Ariel என்பார் இதைப்பற்றிக் கூறுவது போற்றிப் படித்தற்குரியது. 'That which above all is wonderful in Kural is the fact, its author addresses himself without regard to

castes, peoples or beliefs to the whole community of mankind, the fact that he formulates sovereign morality and absolute reason, that he proclaims in its very essence in their external abstractedness, virtue and truth, that he presents as it were in one group the highest laws of domestic and social life" etc.

எனவே இச்சிரிய நூல் எச்சாதியினருக்கும் எந்நாட்டினருக்கும், எச்சமயத்தாருக்கும், எக்காலத்தாருக்கும் பொதுவாகிய உண்மைகளைத் தன்னகத்தே கொண்டு விளங்கும் தனி நூலாக விருக்கிறது. சில நூல்கள் தாம் எழுந்த காலத்து வாழும் மக்களின் கருத்தைக்கவரும் பொருள்பற்றிக் கூறிச்செல்கின்றன. அந்தத் தலைமுறையில் வாழும் மக்கள் மறையவே, அந்நூலும் படிப்பாரின்றி மறைகின்றது. பிற்காலத்துத் தோன்றுவோரின் கருத்துக்களும், இலட்சியங்களும் மாறிவிடுகின்றன. ஆனல் எக்காலத்துக்கும் பொருந்தக் கூடிய உறுதிப்பாடுகளைத் தெரிக்கும் நூல் முக்காலத்தும் நின்று நிலவும். பிறவிப் பேறுகளாகிய அறம் பொருளின்பங்களையும், அவற்றின் மூலமாக வீட்டின் திறத்தையும் தெரிந்து, திருவள்ளுவர் செய்த நூல் "எக்காலத்திலும் மாறுப்பயன் தரும் மாண்புடைய நூலாக விளங்குகின்றது" இதைக் "காலங்கடந்த நூலென்றே." கூறலாம்.

இதைப்போன்றே திருக்குறள் சாதிப்பொது நூலாகவும் விளங்குகின்றது. நான்குவருணம் என்ற சாதிப் பிரிவைப் பரிமேலழகர் தம்முரையிற் புகுத்திப் பலவிடங்களில் வலிந்து பொருள் கொள்ளினும், திருவள்ளுவர் நான்கு வருணங்களைப் பற்றியும், அவை தமிழ் நாட்டில் ஏற்றுக்கொள்ளத் தகுந்தவை யென்றும் தம் நூலில் யாண்டும் கூறினரில்லை. "சமன் செய்து சீர் தூக்கும் கோல்" போலவே நீதிகளை வகுத்து அனைவரையும் சமரசப் பார்வையால் பார்க்கின்ருர். இந் நூலுக்கு எல்லோரும் உரியர். இத்தன்மையைக் கீழ்க்கண்ட திருவள்ளுவமாலை வெண்பாக்கள் விளக்குகின்றன :—

"செய்யா மொழிக்குந் திருவள்ளுவர் மொழிந்த
பொய்யா மொழிக்கும் பொருளொன்றே—செய்யா
வதற்குரியா ரந்தணரே யாராயி னேனை
இதற்குரிய ரல்லாதா ரில்"　　—வெள்ளி வீதியார்.

"ஆற்ற லழியுமென் றந்தணர்கள் நான்மறையைப்
போற்றி யுரைத்தேட்டின் புறத்தெழுதா—ரேட்டெழுதி
வல்லுநரும் வல்லாரும் வள்ளுவனர் முப்பாலைச்
சொல்லிடினு மாற்றல்சோர் வின்று"　　—கோதமனர்.

காலஞ்சென்ற தமிழறிஞர் திருவனந்தைச் சுந்தரம் பிள்ளையவர்களும்

"வள்ளுவர்செய் திருக்குறளை மறுவறநன் குணர்ந்தோர்கள்
உள்ளுவரோ மநுவாதி யொருகுலத்துக் கொருநீதி"

என்று இந்நாலின் சமரசப் பான்மையை இனிது விளக்கினர். உரையாசிரியராம் பரிமேலழகரும், "எல்லா நூல்களினும் நல்லன எடுத்து எல்லார்க்கும் பொதுப்படக் கூறுதல் இவர்க்கியல்பு" என்கின்றார்.

இதன் சமயப் பொதுத்தன்மைக்கு ஒன்றிரண்டு புறச்சான்று கூறுவோம். அக்காலத்துத் தமிழ்நாட்டுப் பல சமயங்களும் திருவள்ளுவரைத் தத்தம் சமயத்தவர் என்று உரிமை கொண்டாடின. இன்றும் அச்சமயப்போருண்டு. ஆனல் இது, திருக்குறள் எல்லாச் சமயத்தினருக்கும் உரியது என்பதையே காட்டுகிறது. கல்லாட முடையார்.

"சமயக் கணக்கர் மதிவழி கூறாது
உலகியல் கூறிப் பொருளிது வென்ற
வள்ளுவன் றனக்கு"............

என்றும், திருவள்ளுவமாலையில் கல்லாடர் :—

"ஒன்றே பொரு ளெனின் வேறென்ப வேறெனி
னன்றென்ப வாறு சமயத்தார்—நன்றென
எப்பா லவரு மியைபவே வள்ளுவனர்
முப்பால் மொழிந்த மொழி"

என்னும் இதன் சமயப்பொது நோக்கத்தை எடுத்துக் காட்டுகின்றனர். புலவர் புராணமும்.

"நால்வர் சொல் சைவர்வேதம், நளிர்குருகூரன் சொல்லைப்
போல் வலார் சிலர்தாம் சொல்லும் பொருவில்
[பார்கவதர் வேதம்,

"வால்வளை யுலவும் வீதி மயிலை வள்ளுவன் சொல் யார்க்குங்
கீழ்மையை யகற்றி மேன்மை யருளு நல்வேதமாமே,"

என்று முழங்குகின்றது.

கிறிஸ்தவரும் வரவர இதன் பெருமையை அறிய ஆரம்பித்தனர்.

தமிழ்க்கடலின் எல்லை கண்டவரும், திருக்குறளை ஆங்கிலச் செய்யுணடையில் மொழிபெயர்த் தவருமாகிய போப் பாதிரியார், "எங்கள் ஏசுநாதர் மலைமேல் செய்த ஹிதோபதேசத்தின் பிரதி சப்தமாகும் இத்திருக்குறள்" என்பர்.

இஃது எவ்வளவு தூரம் உண்மையைக் கூறுகிறது என்ற ஆராய்ச்சிக்குட்புகாமல், இதனின்றும் நாம் அறியக் கூடியது

தானென்ன என்று பார்ப்பின் திருக்குறளின் நோக்கம் புலப்படும். "இவ்வாறு பலவகைச் சமயத்தினரும் திருக் குறளைத் தம் நூல் என்று போற்றிப்புகழ்கின்ற தன்மையால் அவ்விழுமிய நூல் உலகினுள்ள உயரிய சமயக்கொள்கைகளை யெல்லாம் தன்னகத்தே யடக்கித் தனக்கு அங்கங்களாய் அமைத்துக் கொண்டு அவையனைத்திற்கும் தலைமையாய் நிற்கும் தகுதிவாய்ந்த ஒரு தனி நூல் என்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்குகிறது".

எனவே சமரச ஞானச்செல்வமாகிய இந்நூலைப் படிக் கும் ஒவ்வொருவரும் மனமாற்ற மடைந்து தனக்கென வாழும் சுயநலத்தினின்றும் மாறி, ஒழுக்க சீலர்களாய்ப் பிறர்க்கென வாழ வேண்டுமென்ற எண்ணத்தோடு, சமரசப் பார்வையைப் பெறுவரேல் நம்நாடு எவ்வளவு பயன் பெறும்? ஆனால் இதைப் படிப்போர் எத்துணையர்? திருக்குறள் என்றால் என்ன என்றும், திருவள்ளுவர் யார் என்றும் உணராத தமிழ் மக்கள் பல்லாயிரவர் உளர் என்பது யாருமறிந்ததே. நம் மொழியில் உள்ள பெறலரும் மணிபோன்ற நூல்க ளிருப் பதையும் அறியாராய், அறியாமை இருளினும் அழுக்குச் சேற்றினும் கிடந்துழலும் நம் நாட்டு மக்களிடைக் கல்வியைப் பரப்பி ஒழுக்கச் சீர்திருத்தத்திற்குரிய நூல்களிற் சிறப்பாய்த் திருக்குறளின் போதனையை எடுத்துக் கூற சில பல அபிமானி கள் முன் வருவரேல் அவர்கள் செயல் பெரிய "மஹோபகார" மாகுமன்றோ? இக்காலத்து இத்தொண்டு நம் நாட்டுக்கு மிகவும் பயனைச் செய்யும். தாழ்த்தப்பட்டோர், ஒதுக்கப்பட் டோர், தீண்டாதோர் என ஒதுக்கிவைக்கப்பட்ட மக்களை முன் னிலைக்குக் கொண்டுவந்து, அறிவுடை மக்களாக்குவது மேல் நிலையிலிருக்கும் மாந்தரின் கடமையாகாதோ?

"One Verse of Kural studied, in the morning, pondered over in the intervals of the busy day, and assimilated in the silence of the night to the substance of the soul is a great gain. It is indeed a greater gain, than skipping through entire volumes in the manner of modern haste to be learned or to seem so." என்று ஒரு தமிழறிஞர் கூறிய சொற்கள் நம்மவர் ஒவ்வொரு வர் மனத்திலும் பதியவேண்டிய தவசியம். இதன்படி திருக் குறளை அனைவரும் படித்துப் பயன்பெற்று அதன்மூலம் சமர சம் நாட்டில் தழைத்தோங்குமாறு இறைவன் அருளுக. இவ் வாறு சமரசஞானத்தைப் பரப்புவதே திருவள்ளுவருக்கு நாம் செய்யுங் கைம்மாறும். திருவள்ளுவர் திருவடி வாழ்க.

திருக்குறள் நூற்சிறப்பு

[திரு. மா. வே. நெல்லையப்ப பிள்ளை B.A.]

திருக்குறள் நூலானது ஏறக்குறைய 1900 ஆண்டுகளுக்கு முன் தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனாராற் செய்யப் பெற்று மதுரையிலிருந்த மூன்றாவது தமிழ்ச் சங்கத்தில் அரங்கேற்றப் பெற்றவோர் செந்தமிழ்நூல். "திருக்குறள் நூற் சிறப்பு" என்பது உலகிலுள்ள தமிழ் நூல்களினும் ஏனையமொழி நூல்களினும் இல்லாதனவாய் அந்நூலொன்றிற்கே யுரியனவாயுள்ள பல சிறப்புத்தன்மைகள் என்று பொருள்படும். அச்சிறப்புத்தன்மைகளுட் சிலவற்றை மாத்திரம் எடுத்துச் சுருங்கிய முறையிற் கூறுவது இக்கட்டுரையின் கருத்தாம்.

"பெருமை, பெருமிதமின்மை" என்று திருவள்ளுவர் கூறியாங்கு, பெருஞ்சிறப்பு வாய்ந்த திருக்குறள் நூலானது முதலடி நான்கு சீர்களாலும், ஈற்றடி மூன்று சீர்களாலும் அமைந்த சிறிய குறள் வெண்பாவில் ஆக்கப்பெற்றுள்ளது. அச்சீர்களை ஆக்குஞ் சொற்களும் கல்வித்திறன் கைவரப் பெறாத சிறுவர் சிறுமிகளும் எளிதில் ஓதும் வண்ணம் பெரும் பான்மையும் ஓரசை முதல் மூன்றசைகளுடைய எழுத்துக்களால் அமைந்துள்ளன. அதிற் காணப்படும் சில வடமொழிச் சொற்களும் முற்றிலும் வடமொழி உருவம் நீங்கித் தமிழ் மொழி உருவம் வாய்ந்தவை. அவ்வெழுத்துக்கள் குறிக்கும் ஒலிகளும் மெல்லிய ஒலிகள். உரப்பு ஒலிகளும், இளைப்பு ஒலிகளும், கனைப்பு ஒலிகளும் அதிற் காணப்படுதல் அரிது. சொற்கூட்டங்களினும் பொருள் விளங்குந்தன்மைக்குக் குறைவின்றி இடம் நோக்கிச் சொற்களும், சொற்றொடர்களும் பல குறட்பாக்களில் தொக்கு நிற்பனவாயுள்ளன; எந்தக் குறட்பாவினும் யாதாமொரு சிறிய சொல்லுங்கூட 'நின்று பயனின்மை' என்னும் குற்றத்திற்கு உட்படாததாயுள்ளது. பல குறட்பாக்களில் ஒரு சிறுசொல் ஆணிச் சொல்லாயமைந்திருத்தலினால் அதனை நீக்கி விட்டால் அவற்றின் பொருள் முற்றிலும் மாறிவிடும் தன்மையாயுள்ளது. இவ்வாறு நாலினுடல் அமைந்திருத்தலினால் அஃது ஓதுதற்கு ஆற்றொழுக்கு நீர் போலத் தடை தட்டுதலின்றி ஒழுகிச் செல்லும் இனிமையை உடையதாய் விளங்கும். சீர் எளிமை, அசை எளிமை, சொல் எளிமை, ஒலி எளிமை, சொற்செட்டு, சொற்கூட்டச் செட்டு, ஒலிச்செட்டு, சொற்கிடக்கை முறை முதலிய உடற்றன்

மைச்சிறப்புகளில் இந்நூலைப் போன்று விளங்கும் நூல் உலகிலுள்ள எந்தமொழி நூல்களிலுமில்லை.

இனி நூலின் உயிர்த்தன்மையை அல்லது பொருட்டன்மையைப்பற்றிக் கருதுவாம். மேலே நாம் காட்டியபடி இந்நூலில் வழங்கும் சொற்கள் மிக எளியனவாயினும் ஒரு சிறிய ஆடியானது பல வளம்பொருந்திய ஒரு பெரிய மலையின் பொருள்கள் பலவற்றையும் தன்னுள்ளடக்கிக் காண்பார்க்குத் தெரித்துக் காட்டுதல் போல, எளிய கல்வியுடையார் முதல் அரிய கல்வியுடைய நுண்மாண் நுழைபுலவரும் தங்கள் தங்கள் அறிவளவிற்குத் தக்கவாறு அறிந்து உளங்கொண்டு நற்பயனடையும் பல சீரிய கருத்துக்களைத் தன்னுள் அடக்கி வெளிப்படுத்துந் தகைமையது. திருவள்ளுவரைப்போன்ற அருட்புலமை வாய்ந்த மெய்யறி வுடையார்க்கன்றி சிறந்த பொருள் நன்கு விளங்காத பல குறட்பாக்களும் அதிலுள்ளன.

உலகவாழ்வின் பயனாக மக்களால் அடையப்பெறும் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு உறுதிப் பொருள்களும் நூலிற் கூறப்பட்டுள்ளன. ஓர் ஆடவன் தனது இல்வாழ்க்கைத் துணைக்குப் பொருத்தமாயுள்ள ஒரு பெண்ணை அடைதற்கு ஏற்ற முறைமையைக் காமத்துப் பாலினும் அவ்வில்வாழ்க்கையை அறநெறியில் நடத்தும் முறைமையை அறத்துப்பால் இல்லறவியலினும், அவனுக்கு ஆரா இயற்கை அவாவோடு கூடிய அவ்வில் வாழ்க்கைச் சிற்றின்பத்தினுவர்ப்பு உண்டான பருவத்தில்பேரா இயற்கைப் பேரின்பம் அடைதற்குப் பொருந்திய துறவற வாழ்க்கையை அறத்துப்பால் துறவறவியலினும் அவர் கூறியுள்ளார். இதனால் மக்கள் உலகவாழ்கைக்கு வேண்டப்படுவனவாயுள்ள அடிப்படை அறிவுண்மைகளெல்லாம் நூலிற் கூறப்பட்டுள்ளன என்பது நன்குபுலனாகும். ஆதலின் இந்நூலைச் சிற்றின்ப நூல், அறநூல், ஒழுக்கநூல், அறிவியல்நூல் (Philosophy), அரசியலறிவுநூல், உலக அறிவுநூல், மெய்யறிவுநூல், பேரின்பநூல் ஆகிய நூல்களெல்லா மொன்றுசேர்ந்து விளங்கும் ஒரு தொகுதிநூல் என்று நாம் கூறலாம். உலக வாழ்வுக்கு இன்றியமையாது வேண்டப் படுவனவாயுள்ள அறிவுண்மைகளெல்லாம் ஒன்று சேர்த்துக் கூறப்பட்ட திருக்குறள்போன்ற ஒரு தனிநூல் எம்மொழியிலுமில்லை.

பிற தமிழ் நூல்கள் போன்று இந்நூலை ஓதும் அதிகாரிகள் இன்னாரென்று நூலாசிரியராவது நூலுக்குச் சிறப்

புப்பாயிரம் சொன்ன புலவர்களில் யாராவது குறிப்பிட வில்லை. காலம், இடம், சமயம், வகுப்பு, பால் (Sex), குலம், பருவம் முதலிய எந்த எல்லைகளுக்காவது உட்படுத்தி ஆசிரியர் நூலைக் கூறவில்லை. எச்சமயத்தினரும், எக்குலத் தினரும் எவ்வகுப்பினரும், எந்நாட்டினரும், எக்காலத் தினரும், எக்கல்வியினரும் தமது நூலைக் கற்றுத் தங்கள் தங்கள் அறிவளவில் நற்பயனடைதல் வேண்டுமென்ற விரிந்த நோக்குடன் அவர் நூலை எழுதியிருக்கிறார். இந்த நோக்க மானது அவர் கடவுளுக்கு எந்தச் சமயக்கடவுட் சிறப்புப் பெயரையாவது மறந்தும் வழங்காதிருத்தலினாலும், "நல் லாற்ரு ணாடி யருளாள்க பல்லாற்றாற்—றேரினு மஃதே துணை" (242) என்றும், "பொச்சாப்பார்க் கில்லை புகழ்மை யது வுலகத்—தெப்பானூ லோர்க்குந் துணிவு" (533) என்றும், "தாமின்புறுவ துலகின் புறக் கண்டு—காமுறுவர் கற்றறிந் தார்" (399) என்றும் இவைபோன்றும் விரிந்த கருத்துக்களைப் பல குறள்களிற் கூறியிருத்தலினாலும் நாம் தெற்றென அறிய லாம்.

மக்கள் உலகில் தீங்கின்றி நலமுடன் வாழ்தற்கு ஒரு தாய் வயிற்றுப்பிறந்த உடன் பிறந்தார் போல் ஒருவருக் கொருவர் அன்புடையவர்களாய்ப் பிறர்க்குத் தீங்கு நினை யாதும், நலங்கருதியும், ஒழுகுதலே அருளுக்கு இணங்கின இயல்பான அறநெறி யென்றும், உலக நலத்துக்குப் பொருந்திய செயல்கள் இன்னன என்று அறியாதவன் உயி ரோடிருப்பினும் இறந்தானோ டொப்பானவன் என்றும் திருவள்ளுவர் கூறியுள்ள உண்மைகள் இக்காலத்தில் தங்கள் தங்கள் நாட்டு நலத்தை மாத்திரம் குறியாகக் கொண்டு உலக நலத்தை நன்கு அறிந்து ஒழுகும் ஆற்றலில்லாதிருக்கும் மேலை நாட்டு மக்களுக்கும், தங்கள் நாட்டு நலம் நன்கு அறியா திருக்கிற இந்தியநாட்டு மக்களுக்கும் அவர்கள் திருந்தும் வழிகாட்டுந் தன்மையன. மக்கள் என்ற பண்டைத்தமிழ்ச் சொல்லின் கருத்துமிதுவே. இரந்து வாழ்தல் மிக்க இழிவு என்றும், மக்கள் ஒவ்வொருவரும் எந்நிலையராயினும் பிறர்க் குப் பாரமாயிராமல் மடியின்றி வருந்தி முயன்று வாழ்தல் வேண்டும் என்றும் அவர் கூறியிருக்கிற உண்மைகள் நமது இந்திய நாட்டு மக்கள் பலர் திருந்துதற்கு வழிகளா யமைகின் றன. அவர் கூறிய அரசியல் முறைகள் இக்காலத்திலுள்ள பலநாட்டு அரசியலார்களுக்கும் வழிகாட்டியாயுள்ளன. மக் களுக்குக் கீழுள்ள உயிர்களையும் அவைகளிலும் வலிமையுடைய மக்கள் துன்புறுத்தலாகாதென்றும் அவர் கூறியுள்ளார்.

7. உலகிலுள்ள எல்லா மக்களுடைய நலத்துக்கும் பிற உயிர்களுடைய நலத்துக்கும் பொருத்தமாயுள்ள இத்தகைய சிறப்பினை உடைய திருக்குறள் நூல் உண்மைகளை விளக்குவதும், பரப்புவதும் அறிஞர்கள் உலகுக்குச் செய்யவேண்டிய நன் கடனாகின்றது.

தேவாரத்தில் திருக்குறள்

[திருமயிலை - சீனி. வேங்கடசாமி அவர்கள்]

"சமயக் கணக்கர் மதிவழி கூறாது உலகியல் கூறிப் பொருளிது வென்ற வள்ளுவர்" அருளிச் செய்த "திருக்குறள்" தமிழருக்கு மட்டுமன்றி உலக மக்கள் அனைவருக்கும் ஒழுக்கத்தைப் போதிக்கும் ஒப்பற்ற உயர்ந்த நூலாகும். இலத்தீன், கிரீக்கு, இத்தாலி, ஜெர்மனி, பிரெஞ்சு, இங்கிலீஷ் முதலான மேல் நாட்டு மொழிகளிலும், மலையாளம், தெலுங்கு, ஹிந்தி, கன்னடம், சமஸ்கிருதம் முதலான இந்திய மொழிகளிலும் இதனை மொழிபெயர்த்திருப்பதிலிருந்தே திருக்குறளின் அருமை பெருமைகளை நன்குணரக்கூடும். திருக்குறளில் கூறப்படாத உயர்ந்த உண்மைகளும், கருத்துக்களும், நீதிகளும், ஒழுக்கங்களும் இல்லையென்றே நிச்சயமாகச் சொல்லலாம். திருக்குறள் செய்யுளையோ அன்றி அதன் கருத்தையோ அன்றி அதன் சொற்றொடரையோ தத்தம் நூல்களில் எடுத்தாளாத தமிழாசிரியர் இலர். இளங்கோவடிகள், சீத்தலைச் சாத்தனார், திருத்தக்கதேவர், கம்பர் முதலான கவியரசர்கள் திருக்குறள் பாக்களையும், சொற்றொடர்களையும், கருத்துக்களையும் எடுத்தாண்டிருப்பதை அவர்கள் இயற்றிய நூல்களில் காணலாம். சைவ சமய குரவர்களில் ஒருவராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகள் தாம் அருளிச்செய்த தேவாரத்தில் திருக்குறள் கருத்துக்களையும் சொற்றொடர்களையும் எடுத்தாண்டிருப்பதை இங்கு விளக்கிக் காட்டுவோம்.

I

"கறிமாமிளகும் மிகுவன்மரமும்
மிகவுந்திவருந் நிவவின்கரைமேல்
நெறிவார்குழலா ரவர்காணநடஞ்செய்
நெல்வாயிலரத் துறைநின்மலனே
வறிதேநிலையா தவிம்மண் ணுலகின்
னரனாகவகுத் தனைநானிலையேன்

பொறிவாயி லிவ்வைந்தினை யும்மவியப்
பொருதுன்னடி யேபுகுஞ் சூழல்சொல்லே."

இத் தேவாரத்தில்,

"பொறிவாயிலைந் தவித்தான் பொய்தீ ரொழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்."

என்னும் திருக்குறளின் சொற்றொடரும் கருத்தும் அமைந்திருப்பது காண்க.

II

"புற்றாடரவம் மரையார்த்துகந்தாய்
புனிதாபொரு வெள்விடையூர்தியினாய்
எற்றேயொருகண் ணிலனின்னை யல்லா
னெல்வாயிலரத் துறைநின்மலனே
மற்றேலொருபற் றிலனெம்பெருமான்
வண்டார்குழலாள் மங்கைபங்கினனே
அற்றார்பிறவிக் கடனீந்தியேறி
யடியேனுய்யப்போ வதோர்சூழல்சொல்லே."

இத் தேவாரப் பதிகத்தில்,

"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவ னடிசேரா தார்"

என்னும் திருக்குறளின் கருத்தும் சொற்றொடருங் காணப் படுதல் அறிக.

III

"கோடியர்கோங் கலர்வேங்கையலர்
மிகவுந்திவருந் நிவவின்கரைமேல்
நீடுயர்சோலை நெல்வாயிலரத்
துறைநின்மலனே! நினைவார்மனத்தாய்!
ஓடுபுனற்கரை யாமிளமை யுறங்
கிவிழிந்தாலோக் குமிப்பிறவி
வாடியிருந்து வருந்தல்செய்யா
தடியேனுய்யப்போ வதோர்சூழல்சொல்லே"

என்னும் இத்தேவாரத் திருப்பதிகத்தில்,

"உறங்குவது போலுஞ் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு"

என்னும் தமிழ் வேதத்தின் கருத்துஞ் சொற்றொடரும் விளங்குதல் காண்க.

IV

"சிகரம்முகத்திற் றிரளாரகிலும்
மிகவுந்திவருந் நிவவின்கரைமேல்
நிகரின்மயிலா ரவர்தாம்பயிலுந்
நெல்வாயிலரத் துறைநின்மலனே
மகரக்குழையாய்! மணக்கோலமதே
பிணக்கோலமதாம் பிறவியிதுதான்
அகரம்முதலி னெழுத்தாகிநின்று
யடியேனுயப்போ வதோர்சூழல்சொல்லே."

இதில், "அகர முதல வெழுத்தெல்லா மாதிபகவன் முதற்றே யுலகு" என்னுந் திருக்குறள் காணக் கிடக்கிறது.

V

சுந்தரமூர்த்தி சுவாமிகளின் உற்ற நண்பராய் விளங்கிய சேரமான் பெருமாள் நாயனாரும், தாம் அருளிச் செய்த ஆதி யுலா என்னும் கைலாய ஞான உலாவில், பேரிளம் பெண்ணைக் கூறுமிடத்து,

"பெண்ணரசாய்த் தோன்றிய பேரிளம் பெண்மையாள்
பண்ணமரு மின்சொற் பணிமொழியாண் — மண்ணின் மேற்
கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனும்
மொண்டொடி கண்ணே யுளவென்று—பண்டையோர்

கட்டுரையை மேம்படுத்தாள்...." என்று அருளிச் செய்திருப்பதில் வள்ளுவர் திருக்குறள் நடுநாயகமாய் விளங்குவது காண்க.

பொது நெறித் திருக்குறள்

வேதநெறி தானென்பர் வேத வாணர்
விறன்மிகுந்தத் திருச்சைவ ராக மத்தின்
போதநெறி தானென்பர் அருகர் புத்தர்
பூம்பிடக நூலென்பர் பொழுது மோயா
தோதுநெறி தானென்பர் விவில்ய நூலார்
உயரொழுக்க விதியென்பர் உலக வாணர்
யாதுநெறி தானெனினு மஃதே யாக
இசைத்தனரால் வள்ளுவரும் முப்பா னூலே

—காழி. சிவ. கண்ணுசாமி.

திருவள்ளுவரும் வேளாளரும்

[திரு. அ. மு. சரவண முதலியார் அவர்கள்.]

"இலனென்னு மெவ்வ முரையாமை யீதல்
குலனுடையான் கண்ணே யுள"

என்னும் இக்குறளின் முதலடியை ஒரே தொடராகக்கொண்டு பிறரெல்லாம் உரைவகுத்தனர். அவர் உரைகள் சிறந்த கருத்துக்களை உடையனவாயினும், வலிந்து இலக்கண அமைதி கூறவேண்டியிருத்தலைக் கருதி, பரிமேலழகர் அவ்வடியை இரண்டு பிரிவாக்கி "உரையாமையும் ஈதலும் உயர்ந்த குடியின் கண்ணே உள" என இலக்கணம் பொருந்த உரைகண்டார். ஆசிரியர் கருத்தும் அதுவே என்பது மேல் வருவனவற்றால் விளங்கும்.

'குடிமை' என்னும் அதிகாரத்தில் 'நகையீகை' என்று தொடங்குங்குறளால் 'ஈகை'யும், 'அடுக்கிய' என்று தொடங்குங் குறளினுள்ள 'குன்றுவசெய்தலிலர்' என்பதால் மக்கள் குன்றுதற் கேதுவாய தொழில்களுள்ளே தலையாய இரத்தலைச் செய்யாமையும் உயர்ந்த குடியின்கண்ணே பிறந்தவரிடத்து உள என்பதைப் பெறவைத்தார் செந்நாப்புலவர்.

இனி, 'யான்வறியன்' என்னும் இளிவரவு கூறி இரவாமையும், அதனைத் தன்மாட்டுக் கூறி இரந்தார்க்குக் கரவாது ஈதலும் உடைய உயர் குடியிற் பிறந்தார் யார்? என்னும் வினவிற்கு விடைகூறுவார் போன்று, 'உழவு' என்னும் அதிகாரத்தில்,

'இரவார் இரப்பார்க் கொன்றீவார் கரவாது
கைசெய்தூண் மாலை யவர்'

என உழவுக்குரிய வேளாளரைக் கூறிப் புகழ்ந்தமைபோற்றுதற்குரிய தொன்றாகும்.

எனவே, இந்தியாவின் உயிர்நாடியாயுள்ளது விவசாயம் எனவும் அதனைச் செய்வோரே உலகத்தார்க்கு ஆணி எனவும் பொய்யாமொழியார் மெய்யாகக் கருதியிருந்தார் என்பதை ஊகித்தறிய இவ்வாராய்ச்சி இடந்தந்து நிற்றல் காண்க.

திருவள்ளுவர்

1. சரிதப்பகுதி

[துடிசைக்கிழார். அ. சிதம்பரனுர் அவர்கள்.]

தெய்வப் புலமைத் திருவள்ளுவரைப்பற்றி வழங்கும் சரிதங்கள் பல.

புலவர்களுடைய மதம்—கொள்கை—காலம் முதலிய சரிதப்பகுதிகளை அவரவர்கள் செய்திருக்கும் நூல்களின் உட்சான்றுகளைக் கொண்டும், மற்றைப் புலவர்கள் எடுத்தாண்டிருக்கும் புறச்சான்றுகளைக் கொண்டும் பெரும்பாலும் கூறலாம்.

நம் பெரும்புலவரும் அவ்விதமான பகுதிகளைத் தம்முடைய நூலில் கூறியுள்ளார். ஆராய்ச்சியாளரும் அவ்விதமான பகுதிகளை அறியாதவர்கள் அல்லர். அப்படியிருந்தும் நம் வள்ளுவருடைய சரிதத்தைக் குழப்பிவிட்டிருப்பதை நோக்க வருந்தாமல் இருப்பதற்கு இல்லை.

இது தமிழ் நாட்டார் செய்த தவக்குறைவே.

தமிழ் நாட்டிலேயே பிறந்து, தமிழையே கற்று, தமிழின் உதவியாலேயே சீரும் சிறப்பும் எய்தி, தமிழ்ப்புலவர் என்ற பெயரும்படைத்த சிலர், தமிழ்மொழியைப் பற்றி இழிவாகக் கூறித் தமிழ் தலை எடுக்கவொட்டாத காரியங்களைச் செய்துகொண்டு வருவார்களானல், அன்னவர், நம் வள்ளுவரைப் பற்றி உண்மையை உணர்ந்திருந்தாலும் குழப்பத்தான் செய்வார்கள்.

இனி, இதுவரைஆராய்ச்சியில் கண்ட இவருடைய சரிதப்பகுதிகளைப் பற்றிச் சிறிது கூறுவாம்:—

காலம்:—தென்மதுரை கண்ணகியால் எரியுண்டது 144 கி. பி.; அதனல், சிலப்பதிகாரம் யாக்கப்பட்டது 145 கி. பி. ஆகும்.

மணிமேகலை துறவு பூண்டது கி. பி. 144-க்கு முன்; சுமாராக கி. பி. 140 இருக்கும்.

மணிமேகலை ஆசிரியர் "தெய்வந் தொழாஅள்..........." என்ற குறட்பாவை எடுத்து ஆண்டிருக்கிறர். ஆகையால், குறளாசிரியர் மணிமேகலை ஆசிரியருக்கு ஒரு நூற்றண்டோ

அல்லது அரை நூற்றுண்டோ முந்தியிருக்கலாம். ஆகையால் குறளாசிரியர் காலம் கி. பி. முதல் நூற்றுண்டு என்று கொள்ளலாம்.

ஊர் :—

" உப்பக்க நோக்க உபகேசி தோண்மணந்தான்
உத்தரமா மதுரைக் கச்சென்ப—இப்பக்கம்
மாதாநுபங்கி மறுவில் புலச் செந்நாப்
போதார் புனற்கூடற் கச்சு"

என்ற நல்கூர் வேள்வியார் பாட்டால் இவரது ஊர் மதுரை என்றே கொள்ளவேண்டும்.

மேலும் கீரந்தையார் பாடிய

" தப்பா முதற்பாவால் தாம்மாண்ட பாடலினல்
முப்பாலில் நாற்பால் மொழிந்தவர்—எப்பாலும்
வைவைத்த கூர்வேல் வழுதி மனமகிழ
தெய்வத் திருவள் ளுவர்"

என்ற பாட்டால் பாண்டிய அரசனுடைய மனம் மகிழும்படி குறட்பாவைப் பாடினர் என்று தெரிகிறது.

ஆகையால், இவர் பாண்டிநாட்டில் மதுரையில் உதித்து, பாண்டியருடைய சங்கத்தில் புலவராய்த் திகழ்ந்து, பாண்டியருடைய உள் மந்திரத் தலைவராய் "வள்ளுவர்" என்ற பட்டத்துடன் விளங்கி, பாண்டிய அரசனுடைய வேண்டுகோட்கிணங்கி இவ்வரிய நூலை இயற்றினர் என்று கொள்ளக்கிடக்கின்றது.

ஆகையால் இவரது ஊர் மதுரையே.

பிறப்பு:—ஆதி என்னும் புலைச்சிக்கும் பகவன் என்னும் பார்ப்பனனுக்கும் வள்ளுவர் பிறந்தவர் என்ற கொடிய பொய்க்கதை ஒன்று உலகில் யாதொரு ஆதாரவும் இன்றி வழங்கி வருகிறது.

கபிலர் அகவலை இதற்கு ஆதாரவாகக் கொள்ளின் அது பெரிய இடர்ப்பாட்டை விளைவிக்கும்.
கபிலர் என்ற பெயரை யுடையவர் நால்வர் உண்டு.

அதிகமான் என்ற பெயரையுடையவர் பலர்; ஔவை என்ற பெயரையுடையவர் மூவர் ஆவார்கள்.

இன்னர்தான் இக்குறளாசிரியருடன் பிறந்தவர் என்பதற்கு இடம் கிடைக்கவில்லை.

அதுபோலவே, "வள்ளுவர்" என்ற பட்டம் பெற்றவர்கள் பலர் உண்டு.

ஞானமிர்தம் என்னும் நூல், இவர் யாளிதத்தன் என்னும் பார்ப்பனனுக்கும் புலைச்சி ஒருத்திக்கும் கபிலர், அதிகமான், ஔவை முதலிய அறுவருடன் பிறந்தவர் என்று கூறும்.

கபிலர் அகவலுக்கும் ஞானமிர்தத்துக்குமே வித்தியாசம் இருக்கிறது.

இக்கதைகள் எல்லாம் உண்மைக்கு மாறுபட்டவைகளாக இருப்பதால், அவைகளைச் சரிதங்களாக எடுத்துக் கொள்ள முடியாது.

உண்மையான சரிதம் என்றும் ஒரே படித்தாய் இருக்கும்; உண்மைக்கு மாறுபாடு கிடையாது.

திருவள்ளுவரை இழிவுபடுத்த எண்ணிப் புனைந்துவிட்ட கதைகளாக உள்ளன மேலே கூறியவைகள்.

இதனை அறிந்தே மாமூலனார் என்னும் புலவர்

"அறம் பொருளின்பம் வீடென்னும் அந்நான்கின்
திறம்தெரிந்து செப்பிய தேவை—மறந்தேயும்
வள்ளுவன் என்பானோர் பேதை அவன் வாய்ச்சொல்
கொள்ளார் அறிவுடையார்"

என்று கூறிவைத்துள்ளார்.

ஆகையால் தாழ்ந்த குடிப்பிறப்பாகிய வள்ளுவக் குடியைச் சேர்ந்தவர் நம் குறளாசிரியர் என்று யாராவது கூற முன் வந்தால் அவருடைய வார்த்தையைக் காதிலேயே போட்டுக் கொள்ளக்கூடாது.

உயர்ந்த கருத்துக்கள் அடங்கிய இல்லறவியல்—துறவறவியல்—அரசியல்—அங்கவியல் ஒழிபியல்—களவியல்—கற்பியல் முதலியவைகளைப் பற்றிக் கூறவேண்டுமானால், ஒருவர் உயர்ந்த குடிப்பிறப்பு உள்ளவராயிருக்க வேண்டும். ஏதாவது ஒரு துறையிலோ இரண்டு மூன்று துறைகளிலோ ஈடுபட்டவராயிருக்க வேண்டும். அமைச்சுத் தொழில் அனுபவம் பெற்றவராயிருக்க வேண்டும்.

இவைகளை யெல்லாம் இக்குறளாசிரியர் பெற்றவர் என்பதற்கு அவர் இயற்றிய திருக்குறளே சான்று.

இவர் தமிழ்நாட்டில் உயர்ந்த குடியில் பிறந்தவர் என்பதற்கு ஒரே ஒரு ஆதாரம் உண்டு.

பொன்னினுடைய உயர்வை அதனுடைய மாற்றினல் தெரிந்து கொள்ளுவதுபோல, ஒருவனுடைய குடிப்பிறப்பை அவனுடைய வாழ்க்கைத் துணைவியால் அறியலாம்.

தமிழ் நாட்டில் (Conservatives) பழைய வழக்கங்களை விட்டுக்கொடுக்காமல் உள்ளவர்கள் பரம்பரைச் சைவ வேளாளர்களே. இவ்வகுப்பார் பணத்திற்காகவோ, அரசாங்கப் பதவிக்காகவோ, படிப்பிற்காகவோ பிற வகுப்பாருக்குத் தங்கள் பெண்களைக் கொடுக்கவும் மாட்டார்கள், பிற பெண்களை வாங்கவும் மாட்டார்கள்.

இதனை "பெண்கேட்ட வேந்தனுக்கு........" என்ற ஆத்திசூடி வெண்பாவால் அறியலாம்.

இக்குறளாசிரியருடைய மனைவி வாசுகி அம்மையார்; அவ்வம்மையார் பரம்பரைச் சைவ வேளாளருடைய வமிசத்தைச் சேர்ந்தவர்.

ஆகையால், அரசு, அமைச்சு, சேனதிபதி முதலிய தொழில்களுக்கு அருகாயுள்ள பரம்பரைச் சைவ வேளாள வகுப்பைச் சேர்ந்தவரே நம் குறளாசிரியர்.

இவர் இவ்வகுப்பைச் சார்ந்தவர் என்பது இவர் பாடிய "விருந்தோம்பல்" "உழவு" என்ற அதிகாரங்களை நோக்க எளிதில் அறியலாம்.

சமயம் :—இவர் பிறந்த குடிப்பிறப்புக்கு ஏற்ப இவர் சுத்தாத்துவித சைவ சித்தாந்தி ஆவர்.

ஏனென்ருல், இவர்பாடிய திருக்குறளில் முதற்குறளிலேயே சைவசித்தாந்த முதற்கடவுளை வணங்கியுள்ளார்.

"அகரம் முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே யுலகு"

"ஆதிபகவன்" என்பதற்கு ஆதிசத்தியோடு கூடிய பகவன் என்றே பொருள்.

பகவன் என்னும் பதத்துக்கு

"பகவனே யீசன் மாயோன் பங்கயன்
சினனே புத்தன்"

என்ற பல்பொருள்கள் இருந்தாலும், ஏனைய பொருள்களை நீக்கி ஒரே பொருளைக் குறிக்கவேண்டுமென்று "ஆதி" என்ற அடைகொடுத்துப் பாடியுள்ளார்.

பரசிவத்துக்கு பரை—ஆதி—இச்சை—ஞானம்—கிரியை என்ற அஞ்சு சத்திகள் உண்டு.

பரை என்பது கிரணம்போல் சிவத்தினிடத்திலிருந்து பிரிக்கப்படாதது. அதற்கு 'அபின்னு சத்தி' என்று பெயர்.

உலக சிருட்டிக்கு முதலாக உள்ளது ஆதிசத்தியே.

ஆதி சத்தியோடுங் கூடியவர் ஈசன் ஒருவனே. மற்ற மாயோன் பங்கயன் சினன் புத்தன் அல்லர்.

ஆகையால், சைவசித்தாந்தம் கூறும் முதற்கடவுளாகிய ஆதி சத்தியோடுங்கூடிய ஆதி பகவனை வணக்கம் செய்துள் ளார் என்பது வெள்ளிடைமலே. ஆகையால் அவருடைய சமயம் சுத்தாத்துவித சைவசித்தாந்தமே.

II. நூல்

இதுவரை அவருடைய சரிதப்பகுதிகளில் சில முரண் பாட்டை விளக்கினும். இனி அவர் நூலில் காணும் சில மாறுதல்களை விளக்குவாம்.

திருக்குறள் நூலானது பல படித்தாகச் சிதைந்து இப் போது நம் கைக்கு எட்டியிருக்கிறது.

நாளிதுவரை குறளுக்கு 15 பேர்கள் உரை கண்டிருக் கிருர்கள்.

எல்லோரும் சிதைந்த உருவத்தையுடைய குறளை வைத்துக்கொண்டே உரை எழுதியுள்ளார்கள்.

ஆனுல், கம்பர் மகன் அம்பிகாபதி எழுதி வைத்துள்ள "திருக்குறள் குறிப்பு"ச்சுவடியில் சில உண்மையான பாடங் கள் காணப்படுகின்றன :—

முதற்குறள் :—"அகரம் முதல" என்று காட்டப்பட் டிருக்கிறது.

இப்போது அச்சிடுபவர் எல்லாம் "அகர முதல" என்று அச்சிடுகின்றனர். உரையும் எழுதியுள்ளார்.

தமிழ் எழுத்துக்கள் எல்லாம் அகரம் என்ற நான்கு எழுத்துக்களை முதலாக உடையன என்றும்.

அ	க	ர	ம்
1	1	1	1
ஆ	ங	ழ	ப்

1	1	1	1
இ	ச		
1	1	1	1
ஈ	ஞ	ல	வ்
1	1	1	1
உ	1	1	1
1	1		
ஊ	த	ள	ய்
1			
எ	ந		
1			
ஏ			
1			
ஐ			ட (=ள் + த்)
1			
ஒ			ண (=ள் + ந்)
1			
ஓ			ற (=ல் + த்)
1			
ஔ			ன (=ல் + ந)

என்றும் காட்டப்பட்டிருக்கிறது.

எழுத்துக்கள்--இயற்கை எழுத்துக்கள்--செயற்கை எழுத்துக்கள்—சேர்க்கை எழுத்துக்கள் என மூவகையின என்றும்

அ—க—ம்—இம்மூன்றும் இயற்கை ஒலிகளைக் குறிக்கும் எழுத்துக்கள் என்றும்,

ர—ழ—ல—ள—செயற்கை எழுத்துக்கள் என்றும்,

ட—ண—ற—ன—
எ—ஏ—ஐ—ஒ—ஓ—ஔ } இவைகள் சேர்க்கை எழுத்துக்கள் என்றும் கூறப்பட்டிருக்கின்றன.

பார்க்கப்போனால் உலகில் இயற்கை ஒலிகள் மூன்றே.

எல்லாப் பிராணிகளும் வாயைத்திறந்த உடனே உண்டாகும் ஒலி—அ.

காகம் கரையும் ஒலி—க

ஊமைக் கோட்டான் உளறும் ஒலி—ம்.

“ நுனிநா அண்ணம் வருட
ரழப்பிறக்கும் ”

என்றதன்படி நாவின் முயற்சியால் உண்டாகும் எழுத்துக்கள் ர—ழ—ல—ள என்பன.

ஆகையால், மேலேகாட்டியதுபோல் தமிழ் மொழியிலுள்ள எழுத்துக்கள் எல்லாம் அகரம் என்ற நான்கு எழுத்துக்களையே முதலாக உடையன என்று காட்டப்பட்டிருக்கிறது.

இப்பாடம் மிகவும் பொருத்தமுள்ளதாயிருக்கிறது.

ஆகையால் " அகரம் முதல " என்பதே சரியான பாடம்.

26-வது குறள் :—

"செயற்கரிய செய்வர் பெரியர் சிறியர்
செயற்கெளிய செய்கலா தார் "

என்பது உண்மைப் பாடம்.

இப்போது அப்படியில்லை. செயற்கெளிய என்பதை செயற்கரிய என்றே அச்சிட்டுள்ளார்கள். 15 பேர்களும் அதற்கே உரையும் வகுத்துள்ளார்கள்.

செயற்கரிய செய்வர் பெரியர் என்றால் செயற்கரிய செய்கலாதார் சிறியர் என்று கூற வேண்டுவதில்லை. அப்படிக் கூறினால் கூறியது கூறல் என்னும் குற்றம் ஆகும்.

எளிய என்பது சிறந்த பாடம். செய்வதற்கு எளிமையானவைகளைக் கூடச் செய்யாதவன் சிறியவன் என்பது எவ்வளவு பொருத்தமாயிருக்கிறது!

ஆகையால், குறளாசிரியர் இரண்டாவது வரியில் செயற்கெளிய என்றே கூறியிருக்கிறார் என்று நாம் பாடங்களைத் திருத்தவேண்டும்.

திருக்குறள் ஒரு பொருளாதார நூல்

[திரு. A. முத்தையா பிள்ளையவர்கள், M.A.,]

மிகச்சிறந்த அறிஞரின் நூல்கள், பல அரிய பொருள்கள் பொதிந்திருப்ப, நலசிறந்து விளங்குகின்றன. எக்காலத்தும் எத்தகைய அறிவினருக்கும் அரும் பெரும் விஷயங்களைத் தெரியத்தரும் உயரிய நூல் திருக்குறளாகும். அறத்துறை நின்றோர் அதை அறநூலென்பர். காமுகர் காமநன்னூலெனக் கழறுவர். உயரிய அரசியல் நுட்பங்களைத் தெளியக்கூறு நூலென அக்கலை வல்லுநர் கூறுவர். சில அரிய சுகாதாரக் குறிப்புகளைச் சொல்வதென உடல் நூல்வல்லுநர் உரைப்பர்.

இவர்களையன்றி, பொருளாதார நூல் பயில்வோர் திருக்குறளிற் பல பொருளாதாரக் குறிப்புகள் உளவெனக் கூறப் போதிய ஆதாரம் உண்டு. பொருள் நூல் வளர்ச்சி எல்லாம் சமீபகாலத்ததே. மேனாடுகளிற் கூட கடந்த ஐம்பது வருடங்களாகத்தான் பல அறிஞர் பொருளைப்பற்றிய விஷயங் களைப் பெரிதும் ஆராய்ந்து அவைகளைப்பற்றி எழுதுவா ராயினர். பொருளாதாரத்தைப்பற்றிய விஷயங்களை எந்த ஆசிரியர் எழுதினும் பெரும்பாலும் அவர் காலத்தைய பொரு ளாதார நிலையை அடிப்படையாகக் கொண்டே, அதை யொட்டி எழுதுவது இயல்பாயிருக்கிறது. ஏனெனில் பொருள் நூல் எழுதுவோர் அங் "நிகழ்கால" நிகழ்ச்சிகளையும் இயல் பையுங்கொண்டே தம் முடிபுகளை உறுதி செய்து கோடல் அவசியமாகிறது.

நந்தந் திருவள்ளுவரும் தந்நூலில் பல பொருளாதார நட்பங் களை நிர்ணயித்திருப்பதில் பெரும்பாலும் அக்காலத்தைய பொரு ளாதார நிலையைப் பெரிதும் பயன்படுத்தியுள்ளார். மிகத் துரிதமா கப் பொருளாதாரநிலை மாறும் நாடுகளில் பல நாட்கட்கு முன் சொன்ன உண்மைகள் பல, மற்ற நிலைகள் மாறலால், பொய்த்துவிடும். இப்பொய்யாமொழிப்புலவர் கூற்றுகளோ நம் நாட்டில் இன்றும் மெய்யாய் இருக்கின்றன.

அதற்கு முக்கியகாரணம் பொருள் நிலையில் நம்நாடு மிகத் துரதிர்ஷ்டவசமாகச் சிறிதேனும் மேம்படாததே. சில வகைகளில் நம்நாடு குறைவுற்றதெனக் கூறினும் தவறாகாது.

அக்காலத்தில் பெரும் பாலான மக்கட்கு முக்கிய தொழில் உழவே யாகும். எல்லோரும் அதிகமாகத் துய்த்து வந்தன நிலனிடமிருந்து உழவாற்பெற்ற மூலப்பொருள் களே. அம்மூலப்பொருள்களை (raw materials) உப

யோகத்துக்குப் பயன்படச் செய்ய எடுக்கும் முயற்சியை யன்றி அதிக உழைப்பு வேறின்று. ஏனெனில் செயற்கைப் பொருள் அக்காலத்தில் அதிகமில்லை. எனவே வேளாண்மையே மிக இன்றியமையாத இயல்பிற்று. அதனாற்றான் உழவை நாயனார் மிகச் சிறப்பினதாகவும் அவசியமானதாகவும் கருதுகிறார். உழவினால் வரும் பெருமையே பெருமை என விதந்து கூறுகிறார். சமூகத்தில் மற்றையோ ரெல்லாம் உழுதுண்டு வாழ்வாரின் பின் செல்பவராவார்.[1] சமூகம் பசி பிணி இவைகளால் வாடாது தேர்க்கு அச்சாணிபோல் பயன்பட நின்று வருவர் உழவர்.[2] உலகம் பிற தொழில்களைச் செய்து திரிந்தும் முடிவில் ஏருடையார் வழியதாகும்.[3] உழுதல் தொழிலைச் செய்பவர் கையானது அத்தொழிலைச் செய்யாது இருக்குமாயின், எல்லாராலும் விரும்பப்படும் உணவினையும் நாம் துறந்து விட்டோம் என்று சொல்லுகிற துறவறத்தின்கண் நின்ற துறவிகளுக்கும் அவர் செய்யும் துறவறமானது நடவாது[4] என நன்கு கூறுகிறார்.

இம்மாதிரியே மேல் நாடுகளிலும், பொருள் செய்முறைகளிற் பெரும் புரட்சி (Industrial revolution) ஏற்படுவதன் முன், உழவே உறுதி பயப்பது, 'உழவினர் இன்றேல் உலகமின்று என உழவின் பெருமையைப் பெரிதும் போற்றி அக்கால அறிஞர் எழுதியுள்ளனர். பொருளாதார அறிவியல் கூட்டத்தினர்களில் ஒரு குழுவினரான பிஸியொகிரட்ஸ் (Physiocrats) வேளாண்மையை, திருவள்ளுவரே போல் பெரிதும் பாராட்டியுள்ளனர். அவர்கள் உழவின் அவசியங்கூறி எங்ஙனம் பெரும் உணவுப்பொருள் உண்டாக்குவதென்பதற்கான வழிகளைக் கூறுவர்.

அதுபோலவே வள்ளுவரும் நிலத்தை நன்றாய் உழவேண்டும்; காயவிடவேண்டும்[5]; எருவிடவேண்டும்; களைகட்டல் முதலியன செய்யவேண்டும்[6] அத்துடனமையாது நிலத்துக்குரியவன் நாள்தோறும் பார்த்துப் பயிரோம்பல்வேண்டும்[7] என்பனவாதி கூறுகிறார். செவ்வனே அறிவியல் முறையாக (scientific) எரு முதலியன நிறைய இட்டுப்பயிரிடாமையால் ஒவ்வொரு ஏக்கரா நிலத்திலும் மற்றைய நாடுகளைவிட மிகக்குறைவாக மூலப்பொருள்கள் உற்பத்தி செய்கிறோம் என்பது வருந்தத்தக்கது. நிலக்கிழவன் நிலத்தை நாடோறும்

---

1. அதி. 104. குறள். 3.
2. „ 2.
3. „ 1.
4. „ 6.
5. அதி. 104. குறள். 7.
6. „ 8.
7. „ 9.

கவனிக்கவேண்டு மென்பதை, தூர இடத்திலிருந்து பயிரிடும் முறை (absentee land-lordism) யின் பெருங்குறைபாடுகளை யுணர்ந்தார், பெரிதும் வற்புறுத்துவர்.

இம்மாதிரி நன்முய்ப் பயிரிடுவதற்கு "நிலம்" (land) அவசியம் மக்கள் செழிப்புடன் வாழ மிக நல்ல பூசாரமுள்ள நாடு ஆதாரம். [1] அது இருபுனலும், வாய்ந்த மலையும், வரு புனலும், வல்லரணும், உடையதாய் இருப்பின் நன்று. [2] பஞ்சம் முதலிய பொறை யொருங்கு மேல்வருங்கால், தாங்கக் கூடியதாய் இருக்கவேண்டும். [3] உறுபசி சேரா இயல்பின தாயதே நன்று. [4] கேடறியாது, கெட்ட விடத்தும் வளங் குன்றாது விளங்கும் நாடே நாட்டிற்றலை. [5] அந்நாட்டிற்கு அணியென்ப பிணியின்மை, செல்வம், விளைவு, இன்பம், ஏமம் என ஐந்தாகும். நாடுபடு பொருள்கள், காடுபடு பொருள்கள், மலைபடு பொருள்கள், நிலம்படு பொருள்கள் (mineral products) முதலிய தாதுவர்க்க மூலவர்க்கப் பொருள்கள் தான் மக்களின் பொருளாதார நிலையை நிர்ணயிக்கின்றன என்பதைப் பொருள் நூல் (Economics) எதிலும் காண லாம். அவ்வுண்மையை வள்ளுவர் வலியுறுத்தியுள்ளார்.

எல்லா நில நலனும் இருப்பினும் உழைப்பினுனும், [6] முயற்சியானும், [7] தெரிந்து செயல் வகையானும் பொருளுற்பத்தி செய்யாவிடின் மக்கள் பசிநோய் முதலியவைகளால் வாடுவர் என்பதையும் கூறியுள்ளார்.

இவ்வாறான உழுதொழிலுக்கு இயற்கையும் (Nature) உதவிசெய்ய வேண்டுமென்றும், நம்நாட்டில் பருவக்காற்றால் (monsoon) மழை பெய்யாது ஒழியுமெனின் பெரிதும் மிடி மேலாடும் என்றும் வான்சிறப்பு என்ற அத்தியாயத்தில் விளக்கியுள்ளார். இன்றும் மற்றைத் தொழில்கள், பொருளுற்பத்தி முறைகள் விருத்தியடையாக் காரணத்தால், நாம் [8] வானோக்கி வாழுகின்றோம் [9] நம்நாடு வானின்று வழங்கி வருகிறது. [10] விசும்பிற்றுளி விழினல்லால் மற்றாங்கே நம் நாட்டில் பசும்புற்றலை காண்பதரிது. எனவே [11] விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்து உள் நின்று உடற்றும் பசி. இவை இன்றும் இங்கு உண்மை.

---

1. அதி. 74. குறள். 7.	6. & 7.	Refer respective chapters.
2. ,, 3.		
3. ,, 4.	8.	அதி. 55. குறள். 2.
4. அதி. 74. குறள். 6.	9.	அதி. 2. ,, 1.
5. அதி. 74. குறள். 8.	10.	அதி. 2. ,, 6.
	11.	அதி. 2. குறள். 1.

விவசாயத்தையன்றி வேறு வழிகளினும் பொருள் ஈட்டலாமென வள்ளுவர் அபிப்பிராயப்படுகிறார். பொருள் மிக அவசியம் என்பதைத் தெளிவாகக்கூறி [1], அப்பொருளை அன்பொடும், அருளொடும் ஈட்டவேண்டுமென்றும், விளக்கியுள்ளார். பொருளை நியாய வழியிற்றான் திரட்டவேண்டு மென்பதை ஐரோப்பாவில் மத்தியகாலத்தில்(Middle ages) இருந்த ஸெயிண்ட் தாமஸ் அகினஸ் (St. Thomas Aqunias) முதலிய அறிஞர் கூறுகின்றனர். பொருளீட்டல் முக்கியமாக வாணிபத்தாலேயே [2]. அதில் கொள்வார்க்கும் கொடுப்பார்க்கும் நன்றி பயக்கும் முறைகள் கொண்டாடப் படவேண்டும். முற்கூறிய மேனாட்டு அறிஞர்களும் நியாய விலை (just price) முதலிய முறைகள் அவசியம் என எழுதி யுள்ளார்கள்.

பொருளீட்டலில் [3] செயற்பால செய்யவேண்டும். [4] செய்யும்போது முதலையிழக்காமுறை நடக்கவேண்டும். [5] நஷ்டம் வரினும் மனம் ஒய்வுறலாகாது. இடம், கால முதலிய அறிந்து மறுபடியும்செய்யவேண்டும். பொருள்திரட்டித் தனக்கெனவே வாழாது பிறர்க்கும் அளித்து வாழவேண்டும். [6] பொருளைத் தேடித்துய்க்காமல் வறிதே சேமித்து வைத்தலாகாது. செலவிட்டால்தான் தொழில் துறை நடக்கும், நாடு செழிக்கும் என்பனவாதி கூறுகிறார். அந்நாட்களில் பணத்தின் பயனைத் துய்க்காவிடில் சேமித்துப் புதைத்துவைத்தலையின்றி வேறு வழியில்லை. அப்படிச்செய்யின் (consumption) பொருள் துய்த்தல் இராது; பொருள் உற்பத்தியும் (production) நடவாது; எனவே அவனும் சமூகமும் கஷ்டமுறும் என வள்ளுவர் கூறுவர். சமீபகாலத்தில் மேனாடுகளில் அதிகமாகச் செலவிடு (spend more campaign) என்னும் ஒரு பிரசாரம் நடைபெற்றது பலருக்குத் தெரியலாம்.

அப்படிச் செலவு செய்யுங்கால் [7]அளவு கடவாது தத்தம் நிலைக்கும், அவசியத்துக் கேற்பவும் செய்யவேண்டும் என்னும் விஷயத்தை ஞாபகத்தில் வைத்துகொள்ள வேண்டுமெனப் பொய்யாப் புலவர் கூறுவர்.

இதையல்லாமல், முதல் (capital), தொழில் (labour), தொழில்முறை (organisation) முதலிய பொருள் நூற் பகுப்புகட்கு உரிய அரிய விஷயங்களைக் குறளிற்றருவிப் பொறுக்கி

---

1. அதி. 76. குறள். 5.
   குறள். 7.
2. அதி. 44. குறள். 7.
3. அதி. 47. குறள். 3.
4. அதி. 60. குறள். 10.
5. அதி. 101. குறள். 1, 2.
6. அதி. 12. குறள். 10.
7. அதிகாரம் 48 குறள் 9.

பெடுத் தொன்றுசேர்க்கின் அரிய பொருக்கு மணிமாலை யாகும். அதனைக் கலைமகட்கு அணிபெறச்சூட்டி, அறிஞ ராயினோர் அவ்வழகை ஞானக்கண்களால் துய்த்து ஆனந் திக்கலாம். அப்பொருள் நாற்பொருக்குமணிகளைத் தந்துதவும் வள்ளல் வள்ளுவப்பெருமானே. எனவே அவர் நூல் பொருள் நூலெனமொழிதல் மிகைபடக் கூறலாகாதே!

புகழ்ந்துரை

"செந்தமிழ்ச்செல்வி" என்பது மற்றோர் உயர்தரத் திங்கள் வெளியீடு, அது நெல்லையிலும், சென்னையிலும் நிறுவப்பெற் றிருக்கும் சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழக வெளியீடாம்; சென்னையினின்று வெளிவருவது. இனிமை யூறும் அரிய செந் தமிழ்க் கட்டுரைகளோடு கூடியது. தேர்ந்த புலவர் பெரு மக்கள் அரிதினுணர்ந்த உண்மைகளையும், பொருண்மொழி களையும் தழுவிய உயரிய உரைநடைகளைக்கொண்டு உலாவு வது; மேனாட்டு நுண்ணூல் நுட்பங்களைத் தமிழ் மக்களுக்கு அழகுமிழும் ஆராய்ச்சியுடன் ஊட்டுவது. தமிழின் இலக்கண இலக்கியப் பொருள்களையும், சைவசித்தாந்த அறிவு நுற்கருத் துக்களையும் நன்காராய்ந்து காட்டுவது. ஓர் உயரிய இதழா சிரியர் கூட்டத்தால் (Editorial Board) செவ்விய முறையிலே நடத்தப்பெற்று வருவது. அது தன் பேருக் கிணங்கவே, நற்தமிழ்மக்கட்கு ஒரு செந்தமிழ் நந்தாமணி விளக்காம். தமிழ் மொழிக்கு அருமருந்தன்ன திருந்து செந்தமிழ் இலக் கிய வெளியீடு (A High class Literary Tamil Monthly) உள்தாயின், அது "செந்தமிழ்ச்செல்வி" ஒன்றேதான். அப் புதினத்தாள் நம் தமிழகத்திலே நீடூழி நின்று தொண்டாற்றுவ தாக".

வி. நா. மருதாசலக்கவுண்டர்.

இந்தியப் பத்திரிகைத் தொழிலியல்.

சென்னைத் திருவள்ளுவர் திருநாட் கழகத்தினர்

1935-ஆம் ஆண்டில் நடத்திய தலைவிழாவில் தலைமை பூண்டருளிய
பல்லாவரம் பொதுநிலைக் கழக ஆசிரியரும்
ஞான சாகரப் பத்திராசிரியருமான
சுவாமி வேதாசலம்
என்னும்
மறைத்திரு. மறைமலை அடிகட்குப்
படித்தளித்த

வரவேற்பு

ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வித் தீந்தமிழ்ப் புலவ!

திருவள்ளுவர் திருநாட் கழகத்தினேமாகிய எமது வேண்டுகோட்கு இனிது இணங்கி இத்தலைவிழா நாளின் அவைத்தலைமை பூண்டு விண்மீன் நடுவின் ஒண்மதி என்ன எம்வயின் எழிலுடன் வீற்றிருக்கும் தண்டமிழ்ப் பேராசிரியராம் அடிகளாரது தாமரைபுரையும் காமர்சேவடிகள் நீடூழி வாழ்வனவாக.

வெறுத்த கேள்வி விளங்குபுகழ் நாவல!

சரிதகாலத்தின் பல நூற்றாண்டுகட்கு முன்பே மிகத் திருந்திய நிலையில் ஒளிவிட்டிலங்கிய செந்தமிழ் மொழியின் தெய்வநலத்தினை, இக்காலைத் தமிழகத்தின் எத்திசையுமுணருமாறு செந்தமிழ்த் தெள்ளமுத மாரி பொழிந்து, தனித்தமிழ் மாமுகிலென நிலவும் அடிகள் பெருஞ்சிறப்பினை யாங்கள் எங்ஙனம் எடுத்துரைக்க வல்லேம்!

புலத்துறை முற்றிய நலத்தகு புலவ!

சங்கமிருந்து தமிழாராய்ந்த தண்டமிழ்ச் சான்றோர் தம்மை ஒத்த நல்லிசைப்புலவர் என இக்காலை எடுத்துக்காட்டாக இலங்கும் அடிகளது பெரும்புகழினைச் 'செவ்விய மதுரம் சேர்ந்த சீரிய கூரிய தீஞ்சொல்' அழகு ததும்ப அடிகள் இயற்றியளித்த திருவொற்றி முருகர் மும்மணிக்கோவையும்,

தேனினுமினிய திங்கிளவிகளின் செம்மை நலஞ் செறிந்து பொருள் நலம் பொதிந்து எழிலூறி இன்பங்கனிந்து மதுரச் சுவை ததும்பும் உரை நடையாளியன்ற அடிகளுடைய ஞான சாகரப் பதுமங்களும் எடுத்து விளக்காநிற்கின்றன.

சொல்வளம் பழுத்த நல்லிசைக் கவிஞ!

பத்துப்பாட்டைச் சார்ந்த முல்லைப்பாட்டு, பட்டினப் பாலை ஆகிய இவற்றிற்கு அடிகள் இயற்றியளித்த ஆராய்ச்சி யுரைகளானும், சைவசித்தாந்த சாத்திரக் கடலைக் கடைந் தளித்த சைவசித்தாந்த ஞானபோதம், மாணிக்கவாசகர் கால ஆராய்ச்சி முதலிய அரிய நூற்களானும் தமிழகத்திற்கு அடி கள் காட்டிய முன்னைப் பழமை என்னும் பண்பும், அதனை எடுத்து விளக்கும் பின்னைப் புதுமை என்னுந் துறையும், கண்டு களித்து அடிகளைப் போற்றிப் புகழாதார் யார்?

தொல்லாணை நல்லாசிரிய!

செந்தமிழ் அன்னையின் சிறந்த புதல்வராக விளங்கும் அடிகளார் செந்தமிழ், ஆரியம், ஆங்கில மென்னும் மும்மொழி யினும் பரந்து விரிந்த பெரும்புலமையான் பொருள்வரம்பு கண்டு, உண்மைநிலை நின்று, தருக்க நெறி வழாது திருவாய் மலர்ந்தருளும் விரிவுரையைக் கேட்போர், தம்முள்ளம் உருகி மெய்ம்மறந்து இன்பவெள்ளத்திற் றிளைத்து "இவ்வறவுரை, உள்ளுதோறுள்ளுதோறுள்ள முருக்குவ தாகவுள்ளது; இஃது உணரற்பாலதன்றி உரைத்தற்பாலதன்று" என வாயார வாழ்த்துவராயின் அடிகளது கேளாரும் வேட்ப மொழியும் நாநலத்தினை எங்ஙனம் அளவிட்டுரைக்கவல்லேம்!

தண்டமிழ்க்கடலின் நிலைகண்டுணர்ந்த வண்டமிழ் வாண!

செந்தமிழ்ச் சேமநிதியின் குறைவுற்றிருந்த உரைநடை நூற்களை நிறைவுறுவிக்குந் துறையில் அடிகள் ஆற்றிவரும் தொண்டின் அரும்பயனாக வெளிவந்த சாகுந்தலம், சிந்தனைக் கட்டுரைகள், மரணத்தின்பின் மனிதர் நிலை, மக்கள் நூறாண்டு உயிர்வாழ்தல் எப்படி, யோக நித்திரை ஆகிய அரிய உரைநடை நூற்களின் சொற்பொருள் நுட்ப திட்பங்களைக் கண்டு மகிழா தார் ஒருவருமிலர். இனி, எதிர்காலத்து எழுதப்படும் உண் மைத் தமிழ்ச் சரிதத்துள் இருபதாம் நூற்றாண்டின் தெய்வச் செந்தமிழ்மொழிக்குப் புத்துருவளித்த பேராசிரியரென முதற் கட் பொறிக்கப்படுவது அடிகள் திருப்பெயராம் என்பதை அறியாதார் யார்?

ஞானசிரிய !

ஞானசாகரப்பதுமத்துள் பல்லாண்டுகட்குமுன் தொடங்கப்பெற்ற திருக்குறள் ஆராய்ச்சி என்னும் செம்புலச் செல்வத்தை விரைவின் நிறைத்தளிக்க அடிகள்பால் ஒரு வரம் வேண்டுவதோடு அடிகளது மங்கல சின்மய மதுரச் செந்தமிழ் வாக்கால் இவ்விழாவைச் சிறப்பிக்க இனிதின் இசைந்தருளிய பெருநன்றியை நீடுநினைந்து, "அடிகள் வாழ்நாள் ஊழிதோறூழி ஓங்குவதாக; அடிகள் திருமேனி என்றும் மாறா இளமைத் திருக்கோலத்துடன் மாசுமறுவின்றி எழிலுடன் துலங்குவதாக; தேவரீர் திருவுள்ளம் செல்வத்துட் செல்வமாம் அருட்செல்வத்தில் நிலைத்துத் திளைப்பதாக" எனச் சிந்தித்து வாழ்த்தி வணங்குவதல்லது வேறு யாது செய்யவல்லேம், பெரும !

இங்ஙனம்,

சென்னை, 18-5-35 } அடிகள்பால் அன்பும் பணிவுமுள்ள,
திருவள்ளுவர் திருநாட் கழகத்தார்.

ஆதிபகவன் துணை

சென்னை, திருவள்ளுவர் திருநாட் கழகத்

தலைவிழா அறிக்கை

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே யுலகு.

முன்னுரை

பல்லாயிர ஆண்டுகட்கு முன்பே மிகத் திருந்திய நிலையில் சிறந்து விளங்கியது செந்தமிழ்மொழியா மென்பதும், அங்ஙனமே ஒப்புயர்வற்ற திப்பிய நாகரிகத்திற் சிறந்து விளங்கியவர் அக்காலத் தமிழ்மக்களா மென்பதும் தமிழ் நாட்டு உண்மைச் சரித ஆராய்ச்சி உடையாரெவரும் நன்கறிந்த தொன்றும்.. இஃது இங்ஙன மிருப்பவும், தமிழிலே பிறந்து தமிழிலே வளர்ந்து தமிழிலே தம்வாழ்க்கை நடாத்தும் இக்காலத் தமிழ்மக்கள் தம் மொழியைச் சிறப்பித்து அவ்வாற்றான் தாமும் சிறந்து வாழும் கருத்து ஒருசிறிதும் வாய்ப்பப் பெறாது காலங்கழித்து வருதல் கண்கூடாகக் காணக்கிடக்கின்றது.

இவர்தமக்கு உலகிலுள்ள மற்றெம் மொழிப் புலவர்களாலும் போற்றற்குரிய தெய்வப் புலமை வாய்ந்த செம்புலச் செல்வர் ஒருவர் நம் மொழியினுண்டு என்பதனைத் தக்கவாற்ருன் எடுத்துக்காட்டி அப்புலவர் பெருமாற்கு விழாவெடுத்தல் ஆதியவற்ருல் புலவோர் மாட்டு இவர் அன்பைப் பெருக்கி, அவ்வாற்ருன் இவர் தமக்கு மொழி யுணர்ச்சியைத் தோற்றுவித்து, தமிழ்மொழிக்கும் தமிழ்மக்கட்கும் ஆக்கந்தேடுவதே இத்திருநாட் கழகத்தின் நோக்கமாகும்.

தோற்றம்

இந்நோக்கத்தைக் கொண்டு, திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் சென்னைக் கிளை நிலையப் பொறுப்பாளர் திரு. வ. சுப்பையா பிள்ளை அவர்கள், திருக்குறளை யும் அதனைப் பயந்த ஒப்பிலா மணியான திருவள்ளுவரையும் உலகெங் கும் போற்றுமாறு அப்பெரியார்தம் திருநாளைச் சிறப்பாகக் கொண் டாடச் செய்ய வேண்டுமென்பதைத் தம் நண்பர் காழி. சிவ. கண்ணு சாமி பிள்ளை யவர்களுடன் கலந்து 17-1-35-ல் முடிவு செய்ததன் பயனாக,

வித்வான். பாரிப்பாக்கம் கண்ணப்ப முதலியார்
தமிழ்ப்புலவர். சிவ. முத்துக்குமாரசுவாமி முதலியார்
காழி. சிவ. கண்ணுசாமிபிள்ளை, பி. ஏ.
M. பாலசுப்பிரமணியம், எம். ஏ.
T. செங்கல்வராய பிள்ளை, பி. ஏ., எல். டி.
வ. சுப்பையா பிள்ளை
C. M. கோவிந்தராஜ முதலியார்

ஆகிய இவ்வெழுவரையும் உள்ளிட்ட ஓர் இயக்குநர்க்கழகம் முதலில் தொடங்கப்பட்டது. பின், இப்போதுள்ள உறுப்பினர்களைத் திரட் டிச் செயலுறுப்பினர்களைத் தேர்ந்து, இதற்குத் தலைவராக இருக்க வேண்டுமென, சிறந்த கல்வியும் பரந்த நோக்கமும் உடையாரும், அறிவும் உருவும் ஆற்றலும் புகழும் ஆகிய எல்லாம் ஒருங்கமையப் பெற்று, தமிழ்த் தொண்டாற்றுதலே தம் தவமெனக்கொண்டு புலவர் தமக்கெல்லாம் புகலிடமாக வள்ளன்மையுடன் வாழ்க்கை நடாத் துபவருமாகிய தமிழ்ப்பேராசிரியர், திரு. கா. நமச்சிவாய முதலியார் அவர்களைக் கண்டு விண்ணப்பித்ததும், அவர்கள், யாங்கள் மகிழ்ச்சி யுறுமாறு அகமுகமலர்ச்சியோடும் தலையளி புரிந்தார்கள். அவர்கள் துணைகொண்டு திருநாட் கழகம் மேற்கொண்ட தொண்டினை ஆற்றத் தலைப்பட்டது.

திருநாட்கழக வேலை

முதன்முதலாகக் கழகக் கருத்தினை யாண்டும் பரப்புதல் வேண் டித் தமிழிலும் ஆங்கிலத்திலுமாகப் பல அறிக்கைகள் அச்சிட்டுத் தமிழ்நாடுமட்டுமன்றி இலங்கை, இரங்கோன், பர்மா, சிங்கப்பூர், முதலிய நாடுகட்கும் அனுப்பப்பட்டன. இங்கிலாந்து, ஜெர்மனி முதலிய மேல் நாடுகளிலுள்ள ஆராய்ச்சி அறிஞர்கட்கும் இது

தெரிவிக்கப் பட்டது. விக்டோரியா மகாராணியார் தம் நூல்நிலையத்தின்கண் முதற்புத்தகமாக வைக்கப்பட்டுள்ள விவிலியநூலை அடுத்துத் திருக்குறள் வைக்கப்பட் டிருப்பதாகக் கேள்விப்பட்டு அதை நேரே தெரிந்து இங்கே வெளியிட விரும்பி நண்பர் ஒருவருக்கு எழுதியதில், நம் அரசர் பெருந்தகையின் வெள்ளி விழாவின் பொருட்டு நூல்நிலையம் மூடப்பட் டிருப்பதாகச் செய்தி கிடைத்தது. இலண்டன்மாநகரத்துப் பொருட் காட்சிச் சாலையில், நம் திருவள்ளுவதேவரின் மார்பளவினதாய உருவச் சிலையொன்று வைக்கப்பட் டிருப்பதாகச் சிலர் கூறக்கேட்டு அங்ஙனமிருப்பதுண்மையாயின் அதனை உடனே ஒரு நிழற்படம் எடுத்தனுப்புமாறும் எழுதப் பட்டுள்ளது.

திருவள்ளுவர் நினைவுமலர்

திருவள்ளுவர் திருநாள் தொடர்பாகத் திருவள்ளுவர் பெயரால் நினைவுமலர் ஒன்று பல அரிய கட்டுரைகளுடன் வெளியிடுவதாகத் தீர்மானிக்கப்பட்டது. அதன் பொருட்டுப் பல அறிஞர்களிடமிருந்து கட்டுரைகளும் நல்லெண்ணங்களும் திரட்டப்பட்டுள்ளன.

இதன்கண் திருக்குறள் மூலத்தையும், திருமயிலை மாநகரில் உள்ள திருவள்ளுவர் திருக்கோயிலையும் அக்கோயிலுள் அமைத்து வழிபட்டுவரும் நம் தெய்வப் புலவர்தம் சிலையுருவம் செப்புருவம் ஆகியவற்றையும், இற்றைநாள்வரை, திருக்குறளைப் பதிப்பித்தல், அதற்கு உரை எழுதல், அதனை ஆராய்ச்சி செய்து கட்டுரை எழுதல், அதனை மொழிபெயர்த்தல் ஆகிய துறைகளில் திருக்குறளுக்குத் தொண்டாற்றியுள்ள பெரியோர்களின் உருவப் படங்களில் கிடைக்கக் கூடியவற்றையும் சேர்த்துக் காண்போர் கண்ணும் மனமுங் கவரப்படுமாறு மிக அழகாக அச்சிட்டு அடக்க விலையினும் குறைந்த விலைக்கு எல்லார்க்கும் கொடுக்கவும் கழகத்தின் உறுப்பினர்களுக்கு அதனினும் குறைந்த விலைக்குக் கொடுக்கவும் ஏற்பாடுகள் செய்யப் பட்டு வருகின்றன.

நினைவுமலரை இங்ஙனம் அடக்க விலையினும் குறைந்த விலைக்குக் கொடுப்பதற்கு வேண்டப்படும் பொருளைப் பல விளம்பரங்களை அதன் கண் வெளியிடுவதால் ஈட்டிக் கொள்ளத்தக்க ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.

திருநாள்

இத்திருநாள் நம் தமிழ்நாட்டின் பெரு நகரங்களாக விளங்கும் திருநெல்வேலி, திரிசிராபள்ளி, தஞ்சை, கோயமுத்தூர், சேலம், வேலூர், பெங்களூர், மதனபல்லி போன்ற இடங்களிற் கொண்டாடுமாறு ஆங்காங்குள்ள அன்பர்கட்கு எழுதிக் கேட்டுக்கொண்டதில், ஏறத்தாழ 70 நகரங்களில் இத்திருவிழா நடைபெறுமாறு ஏற்பாடு செய்யப்பட்டது. அவ்வாறு நடாத்தும் அன்பர்களுக் கெல்லாம், சுவர் விளம்பரங்களும், விழாக் கொண்டாடு முறைகளும், அச்சிட்டு

அனுப்பப்பட்டன. சென்னைமா நகரமெங்கும் சுவர் விளம்பரங்கள் செய்யப்பெற்றன. சென்னையின்கண் தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் நடைபெறும் பல வகையான பத்திரிகைகளிலும் வெளியிடப் பெற்றன. சென்னைத் தமிழ்மாணவர் மன்றத்தாரைக் கொண்டு கொடிகள், பெருவிளம்பரங்கள், ஆகியவற்றுடன் ஊர்வலங்கள் நடத்தப் பெற்றன. சென்னையில் திருவள்ளுவர் திருநாளைப் பற்றிய சொற்பொழிவுகள் சில இடங்களில் நடத்தப்பெற்றன. இன்னும் இவ்விழாவைக் குறித்து நடத்த எண்ணிய அனைத்திற்கும் வேண்டப்படுவதாய பொருள் கருதிப் பல செல்வர் பெருமக்களை அவர்கள் உதவிநோக்கித் தக்க துணையுடன் நேரிற் சென்று கண்டும், விண்ணப்பங்களின் வாயிலாய்க் கேட்டும் தக்க ஆதரவு கிடைத்தில.

> தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
> கொள்வர் பயன்றெரி வார்

என்ற வகையில் அன்பர்கள் உதவியதும்,

> காலத்தினுற் செய்த நன்றி சிறிதெனினும்
> ஞாலத்தின் மாணப் பெரிது

என்ற வகையில் யாங்கள் நினைந்தேற்றதுமான பொருளானே இவை நடைபெற்றன. இனி வரும் ஆண்டில், ஊழையும் உப்பக்கங் காணும்வகையில் தொண்டாற்றி ஊருணி நீர்நிறைந்தன்ன பேரறிவாளர் திருவினைப்பெற்று எடுத்தவற்றைத் தொடுத்து முடிக்க எண்ணுகின்றோம்.

பல்வேறுவகைகளில் சிதறிக் கிடக்கும் தமிழ்மக்கள் நம் தெய்வப் புலவரின் நல்வழியாகிய ஒரு நெறிப்படுவார்களாயின் அதன்வழித் தாய்ப் பிற்காலத் துண்டாம் பெரும்பயனை அளவிட்டுரைக்க இயலாது, எல்லாமக்களையும் ஒருமுகப்படுத்தற்கு இதுவே சாலச் சிறந்த முறையாம். எல்லாமக்களும் பல துறையிலும் ஒரே கருத்துடையராய் விளங்குவராயின் அதைவிட நாட்டிற்கு நலம் பயப்பது வேறியாது? இதன் உண்மை உணர்ந்து மக்கள் இக்கொள்கையை மேற்கொள்வார்களானல் சிறப்பாகத் தமிழ்மக்கட்கும், பொதுவாக எல்லாநாட்டவர்க்கும் மேன்மேல் இன்பம் பொங்கிவளர்தல் ஒருதலை. வேண்டிய வேண்டியாங் கெய்தற்கு உறுதுணையாக விளங்கும் ஒற்றுமை என்னுஞ் செல்வத்தை உடனே அடையலாம். பின்னர் ஒவ்வொன்ருக நினைத்தவனைத்தும் கைகூடப்பெறலாம். நம்நாடு தெய்வத்திருநாடாக விளங்கும். செந்தமிழ் மாது நம்மிடையிலே அகங் களிதுளும்ப, முகமலர்ச்சி எய்தத் திருநடம் புரிவாள். உலகமெல்லாம் இன்பவெள்ளம் ஊற்றெடுத்தோடக் காணலாம். இன்னும், இது சம்பந்தமாக விரித்துரைக்க இங்கே இடமில்லை. இது கிடக்க, இப்போது இக்கழகத்திற்கு 24 காப்பாளர்களும், 75 வாழ்நாள் உறுப்பினர்களும், எறக்குறைய 1300 ஆண்டுறுப்பினர்களும் சேர்ந்து துணைபுரிந்துள்ளார்கள். வெளியே அனுப்பப்பட்ட பற்றுச்சீட்டுப் புத்தகங்களிற் சில

இன்னும் வந்து சேராமையானும், ஈட்டிய பொருள் இத்திருவிழாவிற்கே செலவிடப்பட்டு வருதலானும் இவ்விழாவிற்குப்பின், பொருள் வரவுசெலவு இருப்பு முதலியன திருவள்ளுவர் நினைவுமலர் வெளியீட்டுடன் வெளியிடப்பெறும். அன்பர்கள் அதன்வாயிலாய் எல்லாவற்றையும் அறிந்துகொள்ளுமாறு அவர்களைப் பணிவுடன் வேண்டுகின்றோம்.

தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் சைவ சித்தாந்தச் செல்வத்தைத் தமிழ்நாடெங்கும் பரப்பும் தலையாய பணியில் ஈடுபட்டிருந்தும் இலக்கியத் துறையில் ஒப்பரிய முதனூலாக விளங்கும் தெய்வத் திருக்குறளுக்கு இதுகாறும் செய்துவந்துள்ள வேலை மிகச் சிறந்ததாகும். திருக்குறளுக்கு இதுகாறும் ஆற்றிவந்ததே போல் இப்போதும் நந்திருநாட் கழகத்திற்கு இருப்பிடமாகத் தங்கள் திருமாளிகையை உதவி இருக்கின்றார்கள். இன்னும், திருநெல்வேலியிலும் நம் கழக வேண்டுகோட்கிணங்கி இத்திருநாளைக் கொண்டாடுதற்காம் முயற்சிகள் பலவும் செய்து போதருகின்றார்களாதலின் அவர்கட்கும், இவர்களேபோல் தஞ்சை, திரிசிராபள்ளி, சேலம் ஆதிய நகரங்களில் இத்திருநாளைக் கொண்டாடும் அன்பர்கட்கும், ஆண்டாண்டு அவரவர்களுடன் இருந்து உதவிபுரியும் அன்பர்கட்கும் எங்கள் மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துகின்றோம். எங்கள் விண்ணப்பத்திற் கிணங்கிக் காப்பாளர்களாகவும், வாழ்நாள் உறுப்பினர்களாகவும், ஆண்டுறுப்பினர்களாகவும் சேர்ந்தும், சேர இசைந்தும், இக்கழகத்திற்குத் துணைபுரிந்த அனைவர்கட்கும், எங்கள் வேண்டுகோட்கிணங்கி எங்களால் நடைபெற்ற கூட்டங்களில், தலைமை வகித்தற்கும், விரிவுரை செய்தற்கும் இசைந்த அன்பர்கட்கும் எங்கள் மனமார்ந்த வந்தனம் உரித்தாகுக.

இத்திருநாளின் செய்திகள் அனைத்தையும் அவ்வப்போது வெளியிட்டு உதவிபுரிந்த, சென்னையிலும் பிற இடங்களிலும் நடைபெறும் தமிழ், ஆங்கிலப் பத்திரிகைகள் எல்லாவற்றிற்கும் எங்கள் மனமார்ந்த வந்தனங்களைச் செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம்.

இத்திருநாள் நடத்து முறையில் எம்மாட்டு எவ்வகையான குற்றங்குறைகள் காணப்படினும் அவற்றை அன்பர்கள் பொறுத்தருள்வார்களாக.

திருக்குறட் கருத்து உலகெலாம் பரவ இறைவன் துணை புரிவானாக.

அறிவுடையா ரெல்லா முடையார் அறிவிலார்
என்னுடைய ரேனு மிலர்.

சென்னை
18-5-35 } பா. கன்னப்ப முதலியார்,

அமைச்சர்.

—

திருவள்ளுவரும் திருக்குறளும்*

[மறைத் திரு. மறைமலை யடிகள்]

திருவள்ளுவர் திருக்குறளைப் பற்றிப் பண்டைக்கால ஆசிரியர்கள், மக்கள் அறியவேண்டுவ வெல்லாம் அதன் கண் அடங்கியிருப்பதாகக் கூறியுள்ளார்கள். திருக்குறள் எழுதப் பட்ட காலத்தில், அதாவது, ஏறக்குறைய 2000 ஆண்டு கட்குமுன், நந்நாட்டில் ஆறு சமயங்கள் நிலவிவந்தன. இவ் ஆறுவகைச் சமயத்தார்க்குள்ளும் எத்தனையோ சழக்குகளிருந்தாலும் அவர்களெல்லோரும் மனமொருமித்துத் தழுவிக் கொள்ளக்கூடிய கருத்துக்கள் திருக்குறளொன்றிலேதான் இருக்கின்றன என்று ஒரு பண்டைப் புலவர் கூறியுள்ளார். உலகத்திலுள்ள வெவ்வேறு மதக் கோட்பாடுடைய பலரும் ஏற்றுக்கொள்ளுமாறு தம் அரிய நூலின்கண் அறம் பொருள் இன்பம் ஆகிய மூன்றையும் நாயனார் திறம்படக் கூறியதிலிருந்து அம் முப்பொருட்கும் மேலாய வீடென்ற நான்காம் பொருளைத் தாம் நன்கு உய்த்துணர்ந்ததாக மற்றொரு புலவர் கூறியுள்ளார். "அறம் பொருளின்பம் வீடென்னு மந் நான்கின், திறம் தெரிந்து செப்பிய தேவை—மறந்தேயும், வள்ளுவனென்பானோர் பேதை யவன்வாய்ச்சொற், கொள்ளா ரறிவுடையார்" என்று கூறினர் மற்றொரு புலவர். இன்னும் பல புலவர்கள் இவ்வாறே நாயனாரைப் பலபடப் புகழ்ந்து கூறியுள்ளார்கள். ஒரே காலத்தவராய் வாழும் தமிழ்ப் புலவர் கசப்பும் அழுக்காறு மற்று ஒரே மனதாய்த் தம்முள் ஒருவரைப் புகழ்வதென்று அரிதினும் அரியதொரு நிகழ்ச்சியாகும். எனவே, இவ்வாறின்றி ஒப்பரிய நிகழ்ச்சி திருவள்ளுவரைக் குறித்துக் காணப்படுவது திருவள்ளுவரின் மேன்மைக்கும் தனிப்பெருமைக்கும் உற்றதொரு நற்சான்றாகும்.

திருவள்ளுவர் ஏறக்குறைய 1900 ஆண்டுகட்கு முன்பிறந்திருக்கவேண்டும் என்று இற்றைநாள் ஆராய்ச்சியாளர்கள் கூறுவார்கள். "தெய்வந்தொழா அள் கொழுநற் றொழுதெழுவாள்" என்னுங் குறள் மணிமேகலையில் எடுத்தாளப் பட்டுள்ள ஏதுவினாலும் சிலப்பதிகார ஆசிரியரும் மணிமேகலையாசிரியரும் ஒரே காலத்தவர்கள் என்ற ஏதுவினாலும் தொடர்ந்து ஆராய்ச்சி செய்ததன் முடிபாய்த் திருவள்ளுவர் கி. மு. 30-ம் ஆண்டுக்கு முன் பிறந்தவர் என்று சொல்லக் கிடக்கின்றது.

---

* இது திருவள்ளுவர் திருநாளன்று நிகழ்த்திய சொற்பொழிவின் சுருக்கம்.

திருவள்ளுவரின் தந்தையார் பகவன் என்றும், தாயார் ஆதியென்றும் பெயர் படைத்தவர்கள் என்பது வழக்காறு. அவ்விரண்டுபெயர்களையும் நாயனர் தம்முடைய தலைக் குறளில் எடுத்தாண்டிருக்கிறார். குறளில் எடுத்தாளப்பட்டிருக்கிற சொற்கள் தனித்தமிழ்ச் சொற்களே. நூற்றுக்கு இரண்டு மூன்று வடசொல்லையோ பிறசொல்லையோ காண்டலும் அரிதாகும். திருக்குறள் எழுந்த காலம் தமிழன்னை இன்பக்கூத்தாடிய காலம். பிறசொற்களாய தழும்புகள் தமிழன்னையின் முகத்திற் காணப்படாத காலம். அத்தகைய காலத்துத் தாமெழுதிய ஒரு நூலின் தலைச் செய்யுளிலேயே ஆதிபகவன் என்ற இரு வட சொற்களையும் அவர் பெய்துரைத்ததற்கு ஏதோ ஒரு காரணம் இருந்திருக்கவேண்டும். அதனை ஆராய்ந்தால், அஃது அவர் தம் பெற்றோர்மாட்டு வைத்த பேரன்பேதான் என்று கருதுதல் கூடும்.

இக்கருத்து மற்றொருவகையானும் அரண்செய்யப்படுவதாகும். தத்துவக் கொள்கைகள் முதற்கண் உருப்பெற்ற பண்டைக்காலத்தே, உடலையொழித்து உயிர்க்குறுதி தேடும் கொள்கையே தலைசிறந்து நின்றது. காலஞ் செல்லச் செல்ல இது தவறானதொரு கொள்கையென்றும், 'உடம்பாரழியின் உயிராரழிவர், திடம்படமெய்ஞ்ஞானஞ் சேரவுமாட்டார்' என்றும் தமிழர் இயற்கையா யுய்த்துணர்ந்தனர். உடம்பைப் போற்றிக் காத்தல் இன்றியமையாததென் னும்உண்மை தோன்றவே, அவ்வுடம்பு பெற்றதுதானும் இறைவனருளால் தாய் தந்தையர் சேர்க்கைவழியேயாடி என்பது பெறப்பட்டது. பெறப்படவே, உடம்பும் உயிருங் கொடுத்தோரே முதற்றெய்வம் என்ற கொள்கை பரவி, தாய்தந்தையர் வழிபாடு தோன்றி நிலவுவதாயிற்று. நாயனரின் உடன் பிறந்த அவ்வையாரும் "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்றமையால், வள்ளுவனர் தம் தந்தைதாயாரை வழிபடுதல் குறித்தே அவர்கள் பெயரை முதற்கண் அமைத்தார் என்று கோடல் சாலுமன்றே!

இனி, ஆதிபகவன் என்ற சொல்லை எடுத்தாண்டமையால் நேர்முகத்தான் தம் தாய்தந்தையரை வணங்கினதோடு உண்முகத்தான் ஆணும் பெண்ணுமாயமைந்துள்ள தனிப் பெருங் கடவுளை அம்மையப்பராக வணங்கினரென்பதும் எளிதிற் பெறப்படும்.

திருவள்ளுவருடைய உண்மை வரலாற்றையோ அவ்வரலாற்றில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளையோ திட்டமாக வரையறுத்துத் துணிவதற்கில்லை. அவர் பிறந்த ஊர் திருமயிலாப்பூர் என்

றும், அவர் வாழ்க்கைத் துணைவியார் மார்க்கசகாயர் என்ற வேளாளரின் மகளாரான வாசுகியம்மையார் என்றுங் கூறுவர். இந்த இரண்டு பெயர்களும் வடமொழிப் பெயர்களே. தமிழர்கள் நாகம்மாள் என்றும் பாப்பம்மாள் என்றும் பெயரிடுவது பண்டுதொட்டு வரும் ஒரு வழக்கமாகும். பாப்பு என்பது பாம்பு. பாம்பின் வடமொழிப் பெயர் வாசுகி. ஆதலால், திருவள்ளுவர் மனைவியின் பெயர் பாப்பம்மாள் என்பதுதானே என ஐயுறக் கிடக்கின்றது. அடிசிற்கினியளாய், அன்புடையளாய், படிசொற்கடவாதவளாயிருந்த தம் மனைவியுடன் திருவள்ளுவர் மாண்புற நடத்திய இல்வாழ்க்கையைக் குறித்தெழுந்த கதைகள் எத்துணையோ பல.

திருவள்ளுவர், திருக்குறள் என்ற ஒரு நூல்தான் இயற்றியதாகத் தெரிகிறது. இதை முடித்து வேறொரு நூலை அவர் செய்திருக்க முடியாதென்பது திருக்குறளை ஆராய்ந்தால் ஐயமற விளங்கும். உலகத்திலுள்ள பெருங் காப்பிய நூல்களை யெல்லாம் படித்து அவற்றிற் கூறப்பட்டுள்ள உயர்ந்த கருத்துக்களை யெல்லாம் திரட்டி யெடுத்தால் அவை திருக்குறளிலுள்ள இரண்டொரு குறள்களின் பொருளிலே அடங்கியிருக்கக் காணலாம். 'எல்லாப்பொருளு மிதன்பாலுள, இதன் பாலில்லாத எப்பொருளுமில்லை.' "நெருநலுளனொருவன் இன்றில்லை", "உறங்குவதுபோலுஞ் சாக்காடு, உறங்கி விழிப்பது போலும் பிறப்பு," என்பனபோன்ற ஒப்பரிய உலகப் பொது உண்மைகளைச் சுருங்கிய சொல்லால் விரித்துப் பொருள் விளங்கச் சொல்லுதல் ஓரிரவில், ஒரு திங்களில், ஓராண்டில் முடியவல்லதோ! மேனாட்டு அறிஞரான ஜான் ஸ்டுவர்ட் மில் என்பார் "லிபர்ட்டி" என்ற கட்டுரையைத் தம் மனைவியின் துணைகொண்டு எழுதிமுடிக்க ஏழு ஆண்டுகள் ஆயின என்று கூறியுள்ளனர். எனவே திருவள்ளுவர் தம் வாழ்நாள் முழுவதையுமே இவ்வொரு நூலை எழுதி முடிப்பதிலேயே செலவிட்டிருக்க வேண்டுமென்பது கூறாதே பெறப்படுமன்றோ?

திருக்குறளை மதுரைத் தமிழ்ச் சங்கத்திற்கொண்டு அரங்கேற்றியதைக் குறித்தும் பல கட்டுக்கதைகள் உள. அதில் தலையாய்க் குறிக்கத் தக்கது சங்கத்தலைவர் சாத்தனர் சீத்தலைக்குத்துத் தீர்ந்ததேயாம். சீத்தலைச் சாத்தனர் என்ற அடையைச் சிழ்த்தலை எனப் பிறழக்கொண்டு, குற்றங்கண்டவிடத்து எழுத்தாணியாற் குத்திக்கொண்டதனல் சிழ்த்தலையுடையராயிருந்தார் எனப்பொருள்கொண்டு இடர்ப்பட்டார் பலர். சீத்தலை என்பது ஓர் ஊர் என்றும், அவ்வூரினின்றும்

வந்தவரே சாத்தனர் என்றும், நல்ல புலமிக்க நூல்களைப் படித்தாலோ, படிக்கக் கேட்பதாலோ நோய் நீங்கக் கூடும் என்றும் அறியாமையே இவ்விடர்ப்பாட்டுக்குக் காரணங்களாம். தீராத நோய்களைத் தீர்ப்பதற்கு இன்னிசையையும் நன்னூல்களையும் பாடவும் படிக்கவுஞ் செய்தல் இற்றை நாளில் அமெரிக்க மருத்துச் சாலைகளிற் கையாளப்படும் முறைகளாம் என்பதை அவர்கள் அறிவார்களாக.

திருவள்ளுவருடைய மனைவியார் அவருக்கு முன்னரே காலஞ் சென்றுவிட்டதாகக் கதைகள் கூறும். கணவன் மனைவியர்கட் கிடையே கரை கடந்த அன்பு இருந்ததென் பதை அக்கதைகள் விளக்கிக் கூறுகின்றன. குடத்துள் விளக்கும் தடற்றுள் வாளும் போல அன்பு 'உதுகாண்' எனக் காட்டக்கூடாத பொருளாகலின் அதைச் செய்கைகளில் உய்த்தே யுணர்தல் வேண்டும்.

திருவள்ளுவர் மருந்து என்னும் தலைப்பின்கீழ் எழுதியமைத்துள்ள குறட்பாக்களிலிருந்து அவர் உடல்நலக்கூறு நன்கறிந்தவரென்றென்றும், நோய்பட்ட வழி அதனை இயன்றவரையில் எளிதில் தீர்க்கும் முறையை அவர் நன்கறிந்திருந்தனர் என்றும் எளிதிற் பெறப்படும். மேல்நாட்டினரான டாக்டர் டியூயி என்பார் நோயாளிகளைப் பட்டினி கிடக்கச் செய்தே பிணிதீர்க்கிறார் என்பதை நோக்கினல் "அற்றாலளவறிந் துண்க அஃதுடம்பு, பெற்றானெடிதுய்க்கு மாறு" என்பதன் உட்கிடை சிறந்து விளங்கும். முதுமை என்பது முறை கேடான ஒழுக்கத்தினல் வருவதேயாகும். முதுமையைப் பின்பற்றிச் சாவும் வரும். நெறியுடன் வாழ்ந்து முதுமை வாராமற் காத்தால் சந்ததமும் இளமையோடிருக்கலாம்.

'அழுக்காறு, அவா, வெகுளி, இன்னச்சொல், இந்நான்கும் இழுக்கா வியன்றதே அறம்'. சினங்கொண்டால் செந்நீர் நஞ்சாக மாறுகிறதென்பது அறிவியலாராய்ச்சியிற் போந்ததோருண்மை. தன்னுடைய குழந்தைக்குப் பால் கொடுத்துக் கொண்டிருந்த தாய் ஒருத்தி இடையே சினங்கொண்டமையால் அவளுடற்கண்ணுள்ள செந்நீர் கொதிப்பேறி, பால் நஞ்சாக மாற அதனை யுண்ட குழந்தை இறந்ததென்பது நீதிமன்ற முடிபு. எனவே சினங் காத்தலின் இன்றியமையாமை நன்கு விளங்கும்.

அறத்தில் இல்லறம் துறவறம் என்ற பிரிவேற்பட்டது திருவள்ளுவர் காலத்திற்குப் பிறகுதான். தமிழுக்குத் தாயக

நூலாய் விளங்குவது தொல்காப்பியமே. அதன்கண் இப் பிரிவினை காணப்படவில்லை.

ஒரு பற்றை விடற்கு மற்றொரு பற்றைப் பற்றுக என்பது சிறந்ததொரு செயன்முறையாகும். சூது, கள் முதலியவற்றி லுள்ள பற்றை ஒருவனை விடச்செய்தற்கு, படக்காட்சி, பழச் சாறு, பால் முதலிய பிற பற்றுக்கள் உதவியாவது நோக்கற் பாலது.

'ஒன்றாக நல்லது கொல்லாமை, அதன் பின்சாரப் பொய் யாமை நன்று' என்பதே நாயனாரின் தீர்ந்த முடிபாகும். கொல் லாமையாகிய இணையற்ற தீச்செயலை விலக்கி ஓர் உயிரைக் காக்கவேண்டி நேருங்காலத்து மட்டும் பொய்யாமையி லிருந்து வழுவலாம் என்பதே வள்ளுவனார் கருத்தாகும்.

எனவே, மணி யன்ன இத்தகைய ஈடும் எடுப்புமற்ற உல கப் பொது வுண்மைகளைத் திரட்டி யளிக்கும் தலைசிறந்த திருக்குறணூலை,

> " கற்க கசடறக் கற்பவை கற்றபி
> னிற்க அதற்குத் தக"

மதிப்புரை

திருத்தொண்டர் புராணம்:—சைவநெறி தழைத்தோங்க வாழ்க்கை நடத்திப் புகழெய்தி அவனடி நீழலடைந்த அறு பான்மும்மை நாயன்மார்களின் வரலாறுகளையும் உண்மை யாய்த் தொகுத்துரைக்கும் சேக்கிழார்பெருமானார்தம் திருப் பெருநூலாகிய பெரியபுராணத்திற்கு எத்தனை உரைகள் வெளி வரினும் அத்தனையும் வேண்டற்பாலனவே. ஆகவே, சென்னைப் பல்கலைக்கழக உறுப்பினரும், கோவைத் தமிழ்ச்சங்கத் துணைத் தலைவரும் வழக்கறிஞருமாகிய சைவத் திருவாளர் C. K. சுப் பிரமணிய முதலியார் B. A., அவர்கள் தாம் நெடுங்கால முயன்று அரிதிற்சேர்த்த ஆராய்ச்சிக் குறிப்புக்களுடனும், தலக்குறிப்புகளுடனும், வரலாற்றுக் குறிப்புக்களுடனும் பல படங்களுடனும் கண்ணைக்கவரும் வகையில் ஒரு விரிவாராய்ச்சி யுரை யெழுதிச் சஞ்சிகை சஞ்சிகையாக வெளியிட முன் வந்த தைக் கண்டு கழிபேருவகை யெய்துகிறோம். முதற்சஞ்சிகை எதிர்பார்த்த அளவிற்கும் மேலாகப் பல அரியபெரிய உண் மைக் குறிப்புகளையுட்கொண்டிருத்தலினாலே இவ்வுரை மற்றிது

காறும் வெளிவந்துள்ள உரைகள் பலவற்றினும் மேம்பட்டதாய் விளங்குமெனத் துணிந்து கூறலாம். பதவுரை, விளக்கவுரை, ஆராய்ச்சிக் குறிப்புரை, தத்துவவிளக்கம், ஏற்ற மேற்கோள்கள் ஆகிய இவையெல்லாங் கொண்டு ராயல் எட்டு பக்கங்கொண்ட 20 பாரத்திற்குக் குறையாமல் வெளிவரும் இச்சஞ்சிகை ஒவ்வொன்றின் விலை ரூ. ஒன்றுதான். (தபாற் கூலி வேறு). வேண்டுவோர் திரு. S. நமசிவாயன் C/o கோவைத் தமிழ்ச்சங்கம், வைசியாள் வீதி, கோயமுத்தூர் என்ற முகவரிக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும். சிறந்த இவ்வுரை வெளிவருதற்குப் பல்லாற்றானும் துணைபுரியும் கோவைத் தமிழ்ச்சங்கத்தார் திருப்பணி பெரிதும் பாராட்டற்குரித்தாம்.

பொன்வண்ணத்தந்தாதி மூலமும் உரையும்:—சேரமான் பெருமாணாயனார் அருளிச்செய்த பொன்வண்ணத்தந்தாதிக்குத் திருவாளர் கா. பொன்னுசாமி நாட்டார் இயற்றிய உரை. விலை அணா 4. சென்னை, சிந்தாதிரிப்பேட்டை வேதாந்த சங்கத்திற் கிடைக்கும்.

சுந்தரமூர்த்தி சுவாமிகளுடைய திருவடித் தொண்டர்களுள் ஒருவராய்த் திகழ்ந்தவரும் தமிழ்ப்புலமை சான்றவரும் சேரநாடர்கோமானா யிருந்தவருமான சேரமான்பெருமாள் நாயனார் கட்டளைக்கலித்துறை வடிவிற் பாடியருளிய பொன்வண்ணத்தந்தாதி சைவர் கருவூலமெனத்தகும். அத்தகைய நூலின் "உள்ளுறைபொருளைத் தெள்ளுறவுரைத்தும், காதற்பொருளை மேதகக் காட்டியும், அறிவன் நூற்பொருளின் செறிவினை விரித்தும், இலக்கண வமைதியை விளக்கி நன்கியம்பியும்" அரியதொரு பேருரையை ஆசிரியர் கோ. வடிவேலு செட்டியார் அவர்களின் மாணவர்களில் ஒருவராகிய பொன்னுசாமி நாட்டார் இயற்றியிருப்பது மிகவும் புகழ்தற்பாற்றும்.

திருவோத்தூர்த் தேவாரத் திருப்பதிகவுரை:—

இஃது செய்யாறு போர்டு உயர்தரப் பள்ளித் தலைமைத் தமிழாசிரியர் வித்துவான் ஔவை, சு. துரைசாமிப் பிள்ளை எழுதியது. விலை அணா 4. கிடைக்குமிடம்:—வாகீச பக்தஜன சபை, திருவோத்தூர்.

பண்டுபோல் இன்றும் நந்தமிழ்மொழி வளம் குன்றாத் தன்மைத்து என்பதற்கு இவ்வரிய உரைநூலே சான்றாகும்.

நூலை இயற்றுதலினும் இயற்றியதொரு நூலுக்கு நல்லுரை காண்டல் செயற்கரிய செய்யும் பெரியார்க்கே எளிதாகும். இஃது யாவர்க்கும் ஒப்பமுடிந்ததோர் உண்மை.

இஃதிவ்வாருக, சிவபுரத்துள்ளாரும் உவந்துரையாடும் உயர்வு படைத்த செந்தமிழ் மொழியே அன்புடன் ஈன்ற குழவியான புகலிவருபிள்ளையாம் திருஞான சம்பந்தர்தம் திருமறைத் தேவாரப் பதிகங்களுக்கு உரை காண்டல் அரியதினும் அரிய தோர் செய்கையன்றே? எனினும் கல்விப்பெருக்கமும் நுன் மாண் நுழைபுலச் சிறப்பும் ஒருங்கேவாய்ந்த சைவப் பெரியரான ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை அவர்கள் திருவோத்தூர்த் தேவாரப் பதிகத்திற்குச் செய்துள்ள ஒப்பரிய தமிழ்ப் பெரும்பணியைக் கண்டபோது யாம் மட்டற்ற பெருமிதங் கொண்டோம் என்று கூறவும் வேண்டுமோ? உரையை எடுத்துப் படிக்கத்தொடங்கிய அளவானே நச்சினார்க் கினியரும், சேனவரையரும், அடியார்க்கு நல்லாரும், பேராசிரியரும், பரிமேலழகரும் எங்கண்ணெதிர் நின்று களிக்கக்கண்டோமெனின் அது புனைந்துரையாமோ? ஆகவே ஆகாது. சுருங்கிய தூய தமிழ்ச் சொற்களால் விரிந்து அகன்று ஆழ்ந்த அரும்பொருட்களை நுனித்துணர்ந்துதெளிவுறக் காட்டிப்போதரும் இவ்வுரையாசிரியரின் திறத்தை எம்மனோர் யாவரும் இந்நூலை வாங்கிக்கற்றுத் தாமே உணர்ந்து புகழவேண்டுமென்பதே எம் வேணவா.

இந்தியப் பத்திரிகைத் தொழில் (Indian Journalism):—

கோயமுத்தூர் விளாங்குறிச்சி திருவாளர் வி. நா. மருதாசலக்கவுண்டர் இயற்றியது. 250 பக்கங்கட்கு மேற்கொண்ட அழகிய உரைநடைநூல். விலை ரூ. 1-8-0. கிடைக்குமிடம் கோவைத் தமிழ்ச் சங்கம், வைசியாள் வீதி, கோயமுத்தூர்.

கோவைத் தமிழ்ச் சங்கத்தார் செய்துவரும் ஒவ்வொரு பணியும் தமிழ்மொழிக்கும் தமிழ் நாட்டிற்குமே அரண் கோலுவதாகும் என்பதற்கு இந்நூலும் ஒரு சான்றாகத் திகழ்வதாகும். முதன் முதலாகத் தமிழில் பத்திரிகைத் தொழிலைப் பற்றி வெளிவரும் நூல் இதுவே யாகும். சிறிய தமிழ்நடையில் பத்திரிகைகளைப் பற்றிச் சிறந்த ஆராய்ச்சி யுரையாக வந்திருக்கும் இந்நூலை, உவகையுடன் வரவேற்று ஆசிரியர் மருதாசலக்கவுண்டர் அவர்கள் பெருமுயற்சியைப் போற்றுகிறோம். இன்னும் இத்தகைய நலன்விளைக்கும் பல நூல்களை அன்னார் வெளியிட்டுதவுமாறு இறைவன் திருவடிகளை வழுத்துகிறோம்.

தஞ்சை ஸ்ரீபிரகதீஸ்வரர் பெருவுடையார் கோயில் என்ற பெரியகோயில்:—

அழகிய இச்சிறு ஆராய்ச்சி உரை நடைநூல் தஞ்சை அரண்மனை திருத்தளிக் கண்காணிப்பாளராக இருக்கும் திரு

ஜே. எம். சோமசுந்தரம் பிள்ளை பி. ஏ., பி. எல்., இயற்றிய தாகும். தஞ்சைப் பெரிய கோவிலின் நிழலுருவமும், கருவூர்த் தேவர், ஸ்ரீராஜராஜ தேவர் ஆகியோர்களின் சிலையுருவப் படங்களும் இதன்பால் திகழ்கின்றன. வரலாற்று ஆராய்ச்சி முறையில் திறம்பட எழுதப் பெற்றிருக்கும் இந்நூலின் விலை அணு 2 தான். இந்நூலின் விற்பனைத்தொகை முழுதும் பெருவுடையார் கோயில் மின்சார விளக்கமைப்புத் திருப்பணிக்கே வழங்கப்பெறும் என்று நூலாசிரியர் குறித்துள்ளது உளங்கொளற்பாற்று.

ஈழகேசரி ஆண்மடல் (1935):—

இலங்கை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சுன்னுகம் ஈழகேசரிநிலையத்தார் வெளியிட்ட செந்தமிழ்ப் பாட்டும் உரையுந்திட்டிய செய்வெண்மடல் வரப்பெற்ளோம். சுவாமி ஞானப்ரகாசர், பண்டிதர் ந. மு. வேங்கடசாமி நாட்டார் முதலிய பல தமிழ்ப் பேரறிஞர்கள் எழுதிய கட்டுரைகளையும் நூற்றுக்கணக்கான நிழலுருவப் படங்களையும் சைவப்பெரியார் ஆறுமுக நாவலரின் பன்னிற ஓவியத்தையும் கொண்டு இம்மடல் மிளிர்கிறது. தமிழ்மொழியாக்கத்திற்குரிய பல துறைகளிலும் சிரிய கட்டுரைகளைக்கொண்டு இலங்கும் இவ்வாண்டு மடலை வெளியிட்ட ஈழகேசரி நிலையத்தாரை உளமார வாழ்த்துகிறோம். இம்மடலின் விலை 50 சதம் அதாவது எட்டணுதான்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் சைவ சித்தாந்த மகா சமாஜம் 2-ம் பதிப்பு—விலை அணு 12.

இதில் சுவாமிகள் தேவாரம், அவர் பாடின முறையில் அவருடைய சரித்திரத்துடனும், இன்பமும் அன்பும் பெருக்கும் பெரியபுராணச் செய்யுள்களுடனும், குறிப்புரை அகராதியுடனும் தேவாரத்திற்கு எளிதில் பொருள் விளங்கும்படியான வகையில் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

தேவாரத்தில் பொதிந்து கிடக்கும் சைவசித்தாந்தக் கருத்துக்கள், அகச்சான்றுகள், பதி பசு பாச இலக்கணங்கள், வழிபாட்டு முறை முதலிய பல பாகுபாடு செய்யப்பட்டு நன்கு விளங்குமாறு விஷய அகராதி என்னும் தலைப்பின்கீழ் இதில் அச்சிடப்பட்டுள்ளன.

தேவாரத்தின் அரும்பதங்களுக்கு உரையும், பல இடங்களில் விசேஷ உரையும், மேற்கோளும் சேர்க்கப்பட்டுள்ளன.

கிடைக்குமிடம்: அ. சோமசுந்தரஞ் செட்டியார், M. A.,
15, கிழக்கு மாதாகோவில் தெரு,
இராயபுரம், சென்னை.

செய்திகளும் குறிப்புகளும்:
News and Notes

சென்ற மேத் திங்கள் கடைநாட் காலை பலுச்சிஸ்தானத்தைச் சேர்ந்த குவட்டா நகரத்தில் நில நடுக்கத்தினால் பேரிழப்பு உண்டானமை மிகவும் இரங்கத்தக்கதொரு நிகழ்ச்சியாகும். ஏறக்குறைய ஐம்பத்தாறாயிரம் மக்கள் உயிரிழந்தனர் என்றும், நகரில் ஒவ்வொரு கட்டிடமும் தலையெடுத்து நில்லாமல் இடிந்தழிந்ததால் பன்னூறாயிரக் கணக்காகப் பொருளிழப்பு நேர்ந்துளது என்றும் கேட்டார் ஒவ்வொருவர் நெஞ்சும் திடுக்கிட்டு நின்றுவிடக்கூடும். அண்மையில் நடைபெற்றதாக வரலாறுகளில எழுதிவைக்கப்பட்டுள்ளவற்றுள் எந்நிலவகையினாலும் இத்தகையதோர் பேரிழப்பும் பெருங்கேடும் நேர்ந்ததாகத் தெரியவில்லை. அரசாங்கத்தார் தம் மாலியன்ற உதவியை அட்டியின்றிச் செய்து வருவதையும் மற்றையோரும் பிறநாட்டினரும் தத்தம்மாலியன்ற பொருளுதவியைச் செய்து வருவதையும் பெரிதும் பாராட்டுகிறோம். இந்தியனென்ற நிலையில் ஒவ்வொருவரும் தம்மாற்றலுக்கேற்றவாறு இயலும் வகை உதவவேண்டு மென்பதே எமது வேண்டுகோள். ஏனைய இறைவன் கருணையின் பாற்பட்டன.

திருவள்ளுவர் திருநாள்

சென்ற மேத் திங்கள் 18,19-ம் நாட்களிற் சென்னைப் பச்சையப்பன் கல்லூரி மண்டபத்தில் சென்னைத் திருவள்ளுவர் திருநாட் கழகத்தாரால் திருவள்ளுவர் திருநாள் மிகவுஞ் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. மண்டபம் பன்னிறத் தாட்களால் நன்கு அலங்கரிக்கப் பட்டிருந்தது. இறையளவும் இடமில்லாதபடி மக்கள் குழுமி யிருந்தனர். சென்னை நகரிலுள்ள எல்லா வகுப்பைச் சேர்ந்த பெருமக்களும் விழாவிற்கு வந்திருந்தனர். மண்டபத்தின் ஒரு புறத்தில் சென்னை மயிலாப்பூரில் பண்டு தொட்டு இருந்து வரும் திருவள்ளுவர் கோயிலிலுள்ள உருவத்தை யொத்துத் தீட்டப்பட்ட ஒரு படம் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்தது. மற்றொரு புறத்தில் திருக்குறள் நூல்கள் நன்கு அலங்கரித்து வைக்கப்பட்டிருந்தன. உயர் திரு. மறைமலை யடிகள் இருநாளும் தலைமை பூண்டனர். விழா இரண்டு நாட்களிலும் எத்தகைய இடர்ப்பாடும் இன்றி மிகவுஞ் சிறப்பாகவும் கிளர்ச்சியுடனும் நடைபெற்றது குறிப்பிடத் தக்கதாகும்.



18-5-35 திருவள்ளுவர் திருநாளன்று சென்னைப் பச்சையப்பன் மண்டபத்தில் எடுத்த படம்

முதல் நாள் விழா

பிற்பகல் 5 மணிக்குக் கடவுள் வாழ்த்து முடிந்தபின் கழகத்தலைவர் திருவாளர் கா. நமச்சிவாய முதலியாரவர்கள் திருவள்ளுவர் திருநாட் கொண்டாடுவதன் இன்றியமையாமையையும், திருவள்ளுவர் திருநாட் கழகத்தின் நோக்கங்களையும் விளக்கிக் கூறி, பல்லாவரம் உயர் திரு. மறைமலையடிகளாரைத் தலைமை வகிக்குமாறு கேட்டுக்கொண்டார். திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்களும், திரு. தி. பி. மீனாட்சிசுந்தரம்பிள்ளை யவர்களும், திரு. மணி. கோடீசுர முதலியார் அவர்களும் தொடர்ந்து பேசிய பின் உயர் திரு. மறைமலை அடிகளார் தலைமை வகித்தனர். அதன்பின் திருநாட்கழக அமைச்சர் வித்துவான் திரு. பா. கண்ணப்ப முதலியார் கூட்டத்தலைவர் அவர்கட்கு ஒரு வரவேற்புத்தாள் படித்து அதனை விலையுயர்ந்த வெள்ளிப்பேழையுள் வைத்துக்கொடுத்தனர். பின்னர், கழகத் துணையமைச்சர். திரு. மா. பாலசுப்பிரமணியம் அவர்கள் கழக அறிக்கையைப் படித்தனர். வரவேற்புத்தாளும் அறிக்கையும் முன் பக்கங்களில் வெளிவந்திருக்கின்றன. மேல் மற்றொரு துணையமைச்சர் வித்துவான் காழி. சிவ. கண்ணுசாமி அவர்களால் கூட்டம் செவ்வனே நடைபெற வேண்டுமென்று ரெவரண்டு கிங்கஸ்பரி, ரெவரண்டு பாப்ளி, முதலிய அறிஞர்களிடமிருந்து வந்த வாழ்த்துத் தந்திகளும் வாழ்த்துக் கடிதங்களும் படிக்கப்பட்டன. அதற்குப்பின் தலைவர் அவர்கள் அரியதோர் ஆராய்ச்சியுரை நிகழ்த்தினர்கள். அவ்வுரைச்சுருக்கம் பிறிதோரிடத்தில் வெளியிடப்பட்டிருக்கிறது. அன்றைக்கூட்டம் அத்துடன் இனிது முடிந்தது.

இரண்டாம் நாள் விழா

19-5-35 ஞாயிறன்று மாலை அடிகளார் தலைமையில் கூட்டம் மீண்டும் 5 மணிக்குக் கூடிற்று. திருவள்ளுவர் பெயரால் கோவைத் தமிழறிஞர் திரு. ஐயாசாமிப்பிள்ளை அவர்கள் பாடி வெளியிட்ட பஜனைக் கீர்த்தனங்கள் இன்னிசையுடன் திருவள்ளூர் உயர்தரப்பாடசாலை தமிழ்ப்பண்டிதர் திரு. முனிசாமி நாயுடு அவர்களால் பாடப்பட்டன. பின்னர் வேலூர் திரு. க. ப. சந்தோஷம் B.A.L.T, ஆலிஜனுப் அல்ஹாஜ் B. தாவூத்ஷா B.A., திருமதி. மீனம்பாள் சிவராஜ் அம்மையார், அரசாங்கக்கல்லூரி இந்திய வரலாற்று பேராசிரியர், V. ரெங்காச்சாரியா M.A., பண்டிதர் கா. ரா. கோவிந்தராஜ முதலியார், சென்னை நகராண்மைக் கழகக் கல்வித்துறைத் தலைவர் திரு. சச்சிதாநந்தம் பிள்ளை B.A. L.T., ஆகியோர் திருவள்ளுவரையும் திருக்குறளையும் பற்றிப் பல வகையானும் ஆராய்ந்து சொற்பொழிவுகள் நிகழ்த்தினர்கள். அவைத் தலைவர் முடிப்

புரை நிகழ்த்தியபின் அமைச்சர் நன்றியறிதல் கூறக், கூட்டம் இனிது முடிந்தது.

விழாநாளன்று காலையில் மயிலை திருவள்ளுவர் கோவிலி லுள்ள நாயனர் திருவுருவத்திற்கு நீராட்டல், பூச்சூடல், வழி பாடு முதலியவற்றைத் திருநாட் கழகத்தார் நடத்தி வைத்த தும், பல ஏழைகட்கு அன்ன மளித்ததும், திருநாட் கழகச் செயலுறுப்பினர்களிற் பலருடைய இல்லங்களில் விழாக் கொண்டாடப்பட்டதும் குறிப்பிடற்பாலன. மேலும் அன்று காலை திருநாட் கழகத் தலைமை நிலையத்திலிருந்து வள்ளுவர் உருவப்படத்துடனும், திருக்குறள் சுவடிகளுடனும் ஒருபெருங் கூட்டம் புறப்பட்டுத் திருக்குறள் கடவுள் வாழ்த்துச் செய்யுட் களையே தோத்திரமாகக் கூறிக்கொண்டு பல தெருக்களைச் சுற்றி வந்ததும் குறிப்பிடற்பாற்று.

சென்னையில் விழா நடந்ததுபோல் சென்னை மாகாணத் தில் நூற்றுக்கு மேற்பட்ட பல ஊர்களிலும் திருவள்ளுவர் திருநாள் மிகவுஞ் சிறப்பாகவும் எத்தகைய வேறுபாடின்றி யும் கொண்டாடப் பட்டதும் குறிக்கற்பாற்று.

திருவள்ளுவர் திருநாளன்று வெளியிடவிருந்த "திரு வள்ளுவர் நினைவு மலரில்" விழாக் கொண்டாட்டக் குறிப் புக்களையும் சேர்த்து வெளியிடவேண்டுமென்று செயலுறுப் பினர் கூட்டம் முடிவுசெய்ததால் அவற்றுடன் நினைவுமலர் அச்சாகி வருகிறது. கூடிய விரைவில் முடிவுபெற்று அது வெளி வரும் எனத் தெரிகிறது.

பிரிவாற்றுமை

திருக்குறள் விளக்கம் ஆசிரியர் கி. குப்புசாமி முதலியாரவர்கள் 16-6-35 ஞாயிறன்று இறைவன் திருவடி நீழலடைந்த செய்தி தமிழ் மக்களுக்குத்துன்பர் தருவதாகும்.

பாராட்டு

திருநெல்வேலிச் சைவத்திருவாளர்கள் தி. மு. சங்கரலிங்கம் பிள்ளையவர்கள் பி. ஏ., மேலைக் கோதாவரி ஜில்லாவுக்கும், T. M. நெல்லையப்பபிள்ளையவர்கள் பி. ஏ., சித்தூர் ஜில்லாவுக்கும், ஜில்லாப் பதிவுத் தலைவர்களாக (District Registrars) நியமிக்கப் பெற்றமை யறிந்து மிக்க மகிழ்ச்சி யடைகிறோம்.

தஞ்சாவூர்க் கரந்தைத்தமிழ்ச் சங்கத்தலைவர் செந்தமிழ்ப் புரவலர் சைவத்திருவாளர் த. வே உமாமகேசுரன் பிள்ளை பி.ஏ.,பி,எல்., அவர் களுக்கும், சென்னைப் பத்திரப்பதிவு இலாகா உதவித் தலைவராக விருக் கும் உயர் சைவத் திருவாளர் V. S. செங்கல்வராய பிள்ளை M. A. யவர்கட்கும் ராவ்சாகிப்பட்டம் அளித்துள்ளதை யறிந்து பாராட்டு கிறோம். சென்னை சட்டசபை உதவித் தலைவராக இருக்கும் டாக்டர் திரு. C. நடேச முதலியாரவர்கட்குத் திவான்பகதூர் பட்டம் அளிக் கப்பெற்ற செய்தியும் மகிழ்ச்சிக்குரியது.



பண்டிதமணி-மு. கதிரேசச் செட்டியார்,
தமிழ் விரிவுரையாளர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

ஓம்

செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

சிலம்பு-௧௫]　　　யுவ—ஆனி　　　[பரல்-௧௧

திருவாசகம்

அணைந்தோர் தன்மை

இன்பம் பெருக்கி யிருளகற்றி யெஞ்ஞான்றும்
துன்பந் தொடர்வறுத்துச் சோதியா—யன்பமைத்துச்
சீரார் பெருந்துறையா னென்னுடைய சிந்தையே
ஊராகக் கொண்டா னுவந்து.

பதவுரை :—

சீரார் பெருந்துறையான்—எல்லா உயிர்களுக்கும் நன்மையையே செய்யும் அருட்பண்பு நிறைந்த திருப்பெருந்துறையில் திருக்கோயில் கொண்டருளி வீற்றிருக்கிற சிவபெருமான்

சோதியாய் இருள் அகற்றி—(உம்) - (மண்முதல் நாதம்வரையுள்ள முப்பத்தாறு தத்துவங்களுக்கும் அப்பாலுள்ள பெருவெளியில்) பேரொளியாய் எனது உள்ளத்தில் தோன்றி, எனது அறிவுக்கு வேறாய் நின்று, அதனை விளக்கிக்காட்டி என்னைப் பற்றி நின்ற மலம் மாயை கன்மங்களை முற்றிலும் நீக்கியும்

அன்பு அமைத்து (உம்)—(பின் எனது அறிவோடு உடனாய் நின்று காணுதலினால், தான் பசுபாசங்கள் முழுவதும் வியாபகமாய்க் கலந்துநின்று ஐந்தொழில் செய்தலை எனக்கு வியாபக அறிவு அருளிக் காணுமாறு செய்தல்பற்றி நான் அவன் செய்துவருகின்ற பேருதவியை நினைந்து உருகி) தன்னிடத்தில் அயரா அன்பு உண்டாகும்படி செய்தும்

எஞ்ஞான்றுந் துன்பந் தொடர்வறுத்து—இனி எப்பொழுதும் அவிச்சையினா லுண்டாவதாகிய துன்பத்தினுடைய தொடர்பைச் சிறிதுமில்லாமல் நீக்கியும்

இன்பம் பெருக்கி (உம்)—தன்னை அத்துவிதமாய்க் கலந்து நுகரும் பேரின்ப உணர்வை மேலுமேலும் வளரும்படி செய்தும்

உவந்து—மகிழ்ந்து

என்னுடைய சிந்தையே—எனது உள்ளத்தையே

ஊராகக் கொண்டான்—தானிருக்கும் உறைவிடமாகக் கொண்டான்.

ஆதலின் இனி நான் சிவபெருமானை இரந்து வேண்டுவது ஒன்றுமில்லை என்பது குறிப்பெச்சம்.

விளக்கவுரை:

வெண்பாச் செய்யுள் ஆதலின் சொற்கள் முறைபிறழ்ந்து வைக்கப்பட்டன. பதவுரையிற் கூறப்பட்டிருத்தல்போல உரைநடை செய்க.

சீர்ஆர் பெருந்துறையான்-சீர்=நன்மை—எல்லா உயிர்களுக்கும் எப்பொழுதும் நன்மையையே செய்கின்றான் ஆதலின் சீரார் பெருந்துறையான் என்றார். சீர், திரு என்பன ஒரு பொருட் சொற்கள். பெருந்துறையான் என்பது திருப்பெருந்துறைப் பதியைக் குறித்தலோடு எல்லாச் சமயக் கடவுளரையும் அதிட்டித்து நின்று உயிர்களுக்கு அருள் செய்கிறவன் என்பதையும் குறிக்கின்றது.

சோதியாய் இருள் அகற்றி—இதனால் சிவபெருமான் உயிர்களோடு அத்துவிதமாய் நிற்கும் மூவகை நிலைகளில் வேறாய்நின்று காட்டும் உதவி கூறப்பட்டது. "இன்றெனக்கருளி" என்ற திருவாசகப் பாட்டில், 'இன்றெனக்கருளி இருள் கடிந்து உள்ளத் தெழுகின்ற ஞாயிறே போன்று நின்ற நின்தன்மை' என்பதற்கு நான் கூறிய குறிப்புகளை இதற்கும் கொள்க.

அன்பு அமைத்து—இதனால் சிவபெருமான் உயிர்களோடு அத்துவிதமாய் நின்று செய்யும் காணும் உதவி கூறப்பட்டது. அப்பாட்டில், 'நீ அல்லாத் பிறிது மற்றின்மை' என்பதற்கு நான் கூறிய குறிப்புகளைக் கொள்க.

எஞ்ஞான்றும் துன்பந் தொடர்வு அறுத்து—துன்பத் தொடர்புள்ள சிற்றின்பத்தினின்றும் பேரின்பத்தை நீக்குவதற்கு எஞ்ஞான்றும் துன்பந் தொடர்வறுத்து என்றார். 'இன்பமே எந்நாளும் துன்பமில்லை' என்று திருநாவுக்கரசு அடிகள் 'யாமார்க்குங் குடியல்லோம்' என்ற பாட்டிற் கூறியிருத்தல் காண்க.

இன்பம் பெருக்கி—புணருந்தோறும் பெரும் போகம் புதிது புதிதாய் விளங்குதலினால் இன்பம் பெருக்கி என்றார்.

உவந்து—மலமுற்றிலும் நீங்கிச் சிவமாகிய தூய சிந்தையாதலின் உவந்து ஊராகக்கொண்டான் என்றார். 'உடையான் விரும்பி என்னுள்ளத்திருந்தான்' என்றார் திருநாவுக்கரசு அடிகளும்.

ஊராகக் கொண்டான்—ஊர் என்பது இங்கே உறைவிடம் அல்லது தங்குமிடம் என்ற பொருளில் வந்தது. சாக்கிராதீதத்திலுள்ள வியாபகமான சிந்தையாதலின் அதனைப் பரந்த இடம் போலும் ஊர் என்றார். அப்பாட்டில் 'நினைப்பற நினைந்தேன்' என்பதற்கு நான் எழுதிய குறிப்புகளை இதற்குங் கொள்க.

இப்பாட்டில் அடிகள் இறைவன் தாம் பேரின்பம் அடைதற்குச் செய்த அருட்செயல்களைக் கூறுகின்றார். 'இன்றெனக்கருளி' என்ற பாட்டில் இறைவன் செய்த அருட்செயலால் தாம் அடைந்த பயனைக் கூறுகின்றார்.

—மா. வே. நெல்லையப்ப பிள்ளை.

திருவாசகம்

" இன்றெனக் கருளி "

[திரு. மா. வே நெல்லையப்ப பிள்ளை அவர்கள், பி. ஏ.]

(சசO-ம் பக்கத் தொடர்ச்சி)

திரு. பிள்ளையவர்கள் மேற்கோளாக எடுத்துக் கூறிய சங்கற்ப நிராகரணத்திற் கூறப்பட்ட சைவவாதி கோட்பாடு இந்த மூன்றாவது அடியின் கருத்துக்கு மாறுபாடாயுள்ளது என்று உமாபதி சிவாச்சாரியார் கூறுகின்றார். அவர் சைவ சித்தாந்தக் கருத்தைக் கூறாமல் சைவவாதியைத் தாம் இயற்றிய சிவப்பிரகாசத்தை ஓதி அறிந்துகொள்ளும்படி சொல்லுகிறார். ஆதலின் அந்த மேற்கோளின் கருத்து இந்த மூன்றாவது அடியின் உரையாகாது. வீடுபேற்றின்கண் மாயாவாதி கொள்கைபோன்று ஆன்மா சிவத்துடன் சேர்ந்து ஒரு பொருளாகும் என்பது சைவவாதியின் கோட்பாடு. அதனைப்பற்றி யிங்கே விரித்துக் கூறுதல் மிகையாகும். இது நிற்க.

அணு என்கிற சொற்கு இங்கே சிவாநுபவ இலக்கணங் கூறுமிடத்துப் பிள்ளையவர்கள் கூறுகிறபடி நுண்மை என்று பொருள் கொள்ளுதல் பொருந்தாது. உயிரினுடைய சிவாநுபவத்துக்குச் சம்பந்தப்பட்ட பொருள்கள் மூன்று. அவை உயிர், சிவம், திருவருட்சத்தி. ஆதலின் அணு இங்கே உயிர் என்று பொருள் படும். புருடனாகிய உயிர் சிவத்தைச் சேரு

கிற அத்துவிதம் கூறுகிற "அணுவில் அணுவை ஆதிப் பிரானை" என்ற முதற் குறிப்புடைய 2008-வது திருமந்திரப் பாட்டில் அணு என்ற சொல் சிவான்மாவையும், பரமான் மாவையும் குறிக்க வழங்கப்பட்டுள்ளது.

மாணிக்கவாசக அடிகள் இந்தப்பாட்டின் முதல் இரண்டு அடிகளிலும் தம்மை உடையானாகிய சிவபெருமானும், உடையாளாகிய திருவருட் சத்தியும் தம்மில் வேறறக் கலந்து தம் மோடு ஒற்றித்து அத்துவிதமாய் நின்று பேரின்பம் அளித்த முறைமையைக் கூறுகின்றார். "உடையாளுன்ற னடுவிருக் கும்" என்ற முதற் குறிப்புத் திருவாசகப்பாட்டில் அடிகள் "அடியேன் நடுவுளிருவிருமிருப்பதனால்" என்றுகூறி யருளி யதை நோக்குக. அடிகள் தமக்குச் சிவபெருமான் தம்மோடு உடனாய் நின்று கண்டு தான் உயிர்கள் உய்யும் பொருட்டு எல்லா உயிர்களோடும், எல்லா உயிரில்பொருள்களோடும் தோய்வற நின்று ஐந்தொழில்கள் செய்துவருகிற பெருத வியை வியாபகமாய்க் காணும்படி செய்தபொழுது, அன்பு மீக்கூர்ந்து வியப்படைந்து இந்த மூன்றாவது அடியாலும், நான்காவது அடியாலும் சிவபெருமானை விளித்துத் துதி யாகக் கூறுகின்றார். "உடையாளுன்ற னடுவிருக்கும்" என்று அடிகள் கூறுதற்கேற்பச் சிவத்தோடு அபின்னமாய்ச் சேர்ந்து நிற்கிற திருவருட் சத்தியானவள், உயிர்களை முடிவில் சிவபெருமானோடு அத்துவிதமாய்க் கலந்து பேரின்ப முறும்படி செய்கிறதற்குப் படிமுறையில் முதலாவது கட்டு நிலையில் ஒவ்வொரு வகையான உலகபோகத்தை அவ்வுயிர்க ளுடனும், போகப் பொருள்களுடனும் கலந்துநின்று உயிர் களைப் போகம் நுகரும்படி செய்கிறாள். உயிர்கள் ஒவ் வொரு வகையான உலகபோசம் நுகருங்காலத்தில் திருவருட் சத்தி அவ்வுயிர்களுக்கு உயிராய் உயிர்களோடும், போகப் பொருள்களோடுங் கலந்து நின்று போகம் நுகர்தலை அடிகள் "சென்று சென்று" என்று கூறினர். உண்மையில் எங்கும் வியாபகமாயுள்ள திருவருட்சத்தி உயிர்களுடன் கூடச்செல் லுதலில்லை. உயிர்களின் நிலைக்குத் தக்கபடி திருவருட் சத்தி யும் நிற்றலால் உயிர்களின் நிலையை நோக்கித் திருவருட்சத்தி யைச் "சென்று சென்று" என்று கூறினர். உயிர்கள் உலக போகத்தைப் பொய்யெனக் கண்டபின் அதனைக் கழித்துத் தாமாகச் சிவத்தை நோக்கியபொழுது, திருவருட்சத்தியும் உயிர்களுக்குப் படிமுறையில் வீடு அடைதற்குச் செல்லும் வழியைக் காட்டுகின்றாள். அவள் முதலாவது நிவிர்த்தி கலா சத்தியாய் உயிர்களுக்கு நிவிர்த்திகலை ஒளியைக் காட்டி அறி

வித்தும் அறிந்தும், பிரகிருதி மாயையில் மண் தத்துவக் கட்டை நீக்கியும், பின் பிரதிட்டா கலாசத்தியாய்ப் பிரதிட்டா கலை ஒளியைக்காட்டி அறிவித்தும் அறிந்தும், நீர் முதல் மூலப் பகுதி வரையிலுள்ள 23 தத்துவங்களின் கட்டை நீக்கியும், பின் வித்தியா கலாசத்தியாய் வித்தியாகலை ஒளியைக்காட்டி அறிவித்தும் அறிந்தும், அசுத்தமாயா தத்துவங்களின் கட்டை நீக்கியும், பின் சாந்தி கலாசத்தியாய்ச் சாந்தியா கலை ஒளியைக்காட்டி அறிவித்தும் அறிந்தும், சுத்தமாயையிலுள்ள சுத்தவித்தை, ஈசுரம், சாதாக்கியம் என்ற மூன்று தத்துவங்களின் கட்டை நீக்கியும், பின் சாந்தியாதீத கலாசத்தியாய் சாந்தியாதீதகலை ஒளியைக்காட்டி அறிவித்தும் அறிந்தும், சத்தி தத்துவம் சிவதத்துவங்களிலுள்ள கட்டை நீக்கியும், முடிவில் நாத தத்துவத்திற்கு மேலுள்ள பராசத்தியாய்த் தனது அருள் முழுவதும் உயிரினிடத்திற் பதிவித்துச் சிவ பெருமானை அடைந்து பேரின்ப முறும்படி செய்கின்றாள். இங்ஙனம் உயிர்கள் சிவத்தை நோக்கிச் செல்லும் வீட்டு நெறியிலும் படிமுறையில் நிவிர்த்திகலை முதல் சாந்தியாதீதகலை வரையுள்ள ஒவ்வொரு கலையிலுள்ள தத்துவபோகங்களை நுகர்ந்து ஒவ்வொன்றாய் விட்டு மேற்செல்லுதற்குத் திருவருட் சத்தியும் அந்த அந்த நிலைக்குத் தக்கபடி திரோதான சத்தியைக் குறைத்தும், அருட்சத்தியை ஏற்றியும் செல்லுதல் "தேய்ந்து தேய்ந்து" என்று கூறப்பட்டது. உண்மையில் திருவருட்சத்தி குறைதலுமில்லை, ஏறுதலுமில்லை. உயிர்களினுடைய நிலைக்குத் தக்கவாறு திரோதான சத்தியைக் குறைத்தும், அருட்சத்தியை ஏற்றியும் அவைகளுக்கு மலத்தை நீக்கி அருள் செய்தலை உயிர்களின் நிலையை நோக்கி, "தேய்ந்து தேய்ந்து" என்று அடிகள் கூறினார்.

தாயுமான அடிகள் இந்த மூன்றாவது அடியைக் குறித்து "சென்று சென்றே தேய்ந்து தேய்ந்தொன்றாகி, நின்று விடுமென்ற நெறி நிற்கும் நாளெந்நாளோ" என்று அறிஞருரையின்கீழ்க் கூறியருளினர். இதனால் இந்த மூன்றாவது அடி உயிர்களின் வளர்ச்சிமுறை நெறியைக்(Path of Souls' evolutionary progress) கூறுகிறது என்று நாம் அறியலாம். இந்த நெறியானது சிவபெருமானிடத்தில் வந்து நின்று விடும்; அதாவது, அதற்குமேல் செல்லுமிடமில்லை என்று இந்தப் பாட்டுக் கூறுகின்றது. யோக நிலையைக் கூறுகிற "பந்தமும், பிரிவும் தெரிபொருட் பனுவல் படிவழி சென்று சென்று ஏறி" என்ற முதற்குறிப்புடைய திருவிடை மருதூர்த் திருவிசைப்பா 5-வது பாட்டில் ஆன்மா கட்டுநிலையில் சென்று

சென்றும், விட்டு நிலையில் 'ஏறியும்' சிவபெருமானிடம் செல்லு கின்றது என்ற படிமுறை நெறி கூறப்பட்டிருக்கின்றது. திருவாசகப் பாட்டு விட்டு நிலைக்கு அருட்சத்தி செயலைக் கூறுதலால் 'தேய்ந்து' என்று கூறியதும், திருவிசைப்பாப்பாட்டு ஆன்மாவின் செயலைக் கூறுதலால் 'ஏறி' என்று மொழிதலும் நோக்குக.

இனி இந்தப்பாட்டின் 4-வது அடியானது திருவருட் சத்தியானவள் பக்குவப்பட்ட உயிர்களைச் சிவபெருமானோடு அத்துவிதமாய்க் கலந்து பேரின்பமடையச் செய்த பொழுது சிவபெருமான் 'உடையாள் நடுவுள் நீ இருத்தி' என்று அடிகள் கூறியபடி அவ்வுயிர்கள் ஒடுங்கி நிற்கிற திருவருட் சத்தியுடன் நிற்கிற நிலையைக் கூறுகின்றது. இங்ஙனம் அடிகள் முதல் இரண்டு அடிகளிலும் சிவபெருமான் திருவருட் சத்தியோடு சேர்ந்து நின்று தமக்குப் பேரின்பம் அருளிய முறைமையை யும், மூன்றாவது அடியில் திருவருட்சத்தி உயிர்கள் வீடுஅடை தற்குப் பக்குவப்படும்படி செய்யும் அருட் செயல்களையும், 4 வது அடியில் திருவருட்சத்தி சிவபெருமானிடம் வீடுபெற்ற உயிர்களோடு அடங்கிநிற்கும் முறைமையையும் கூறியருளி னர். முதல் இரண்டு அடிகள் சிவபெருமானுடைய போக நிலையையும், மூன்றாவது அடி அதிகார நிலையையும், 4 வது அடி இலயநிலையையும் கூறுகின்றன என்று நாம் ஊகித்து அறியலாம்.

தூய்தான வுயிர் இறைவனோடு இரண்டறக் கலந்த வழி இதற்குமுன் தன்மாட்டு நிகழ்ந்த புறப்பொருளுணர்வு அகப்பொருளுணர்வு முற்றும் அவிந்துவிட, இறைவன துணர்வு ஒன்றுமே தன்னகத்துத் தலையெடுத்து நிற்கத் தன்னுணர்வு அதனுள் அடங்கி அதன்வடிவாய் உரை வரம் பிகந்த பேரின்பப் பெருக்கிற் படிந்து வயங்காநிற்கும்; அங் ஙனம் நிற்குங்கால் அவ்வுயிர் தன்முதல் ஒருசிறிதுங் கெடா மலே இருக்கும். —மறைமலையடிகள்.

புதுக்கவி - Original Poetry

மலரவன் வரலாறு

[திரு. அ. நடராஜ பிள்ளையவர்கள்]

(௩௯௬-ம் பக்கத்தொடர்ச்சி)

குறள் வெண் செந்துறை

மகிழ்ச்சியினா லெனைமறந்து மதமிக்க களிறே
    மகிதலத்தி லெனையொப்ப மத்தனெனத் திரிந்தேன்
இகழ்ச்சியினாற் சான்றோர்க ளென்பெயரா மலரோன்
    என்பதனை யலரோனென் றேசிமிக வுரைத்தார். 26

உரைத்ததனை வீணர்களா முடன்கூடி யுறைவோர்
    ஒருபொருளே மலரலரென் றுரைத்தெனையே தெளித்தார்
குரைத்திடுநன் னாயெனவே குவலயத்தி லவர்கள்
    குறிப்பென்னும் பொருளொன்றுங் கொள்ளாது மொழிந்தார்.

மொழியாட லேபொருளாய் முன்னியயான் வீணே
    மூடர்கடஞ் சேர்க்கையினான் மூர்க்கனாய்த் திரிந்தேன்
விழியிரண்டு பெற்றிருந்தும் வீணர்கட மொழியே
    விழியாகக் கொண்டலைந்தேன், மேலவர்கள் வெறுக்க.

வெறுத்தனரென் பெற்றோர்கள், வெறுத்தனரென் னுறவோர்,
    வெறுத்தனரென் னகர்ச்சான்றோர், வெறுத்தனரென் னாட்டார்,
சிறுத்தவரு மெனைக்கண்டு சிரித்தெள்ளிச் சென்றார்,
    சிறுமிகளு மென்வாழ்க்கை சீயெனவே நின்றார். 29

வாழ்க்கைநிலை யிவ்வாறு மணமின்றிக் கெட்டும்
    மதியிலியான் மதோன்மத்த மாடெனவே திரிந்தேன்
சீழ்க்கையிட்டு வீணர்களுந் திரிதரவென் பின்னே
    தெருவூடே யானொருநாட் செல்லுகின்ற போதில். 30

தில்லையினி லாடெடுக்குந் திகம்பரனார் பெற்ற
    சிறுபயலா மொருகுமரன் றேடியெதிர் வந்து,
‘வல்லைமறை யவனென்று வழங்கிடுநற் பெயரோய்!
    வகுத்திடுவா யோமென்னும் மறைமொழியின் பொருளை’.

என்றறைந்தான் கலைமகளா மென்னிருகண் மணியை
    இகழ்ந்தொதுக்கி விலக்கியதா லியம்பவகை யறியேன்,
நின்றனனற் குன்றெனவே நெடுவிழிகள் பிதுங்க,
    நெடுங்கையா லொருகுட்டு நெற்றியினில் வைத்தான். 32

குட்டதனால் விந்தமெனக் குன்றியயான், ‘கலையின்
    குணமணியைக் கண்டலது குவலயத்தில் வாழேன்

பட்டமென்ன பெற்றாலும் பாவையவள் சார்புப்
பற்றிலனே லென்வாழ்க்கை பாழ்த்தபெருங் காடே'. 33
பாழ்த்தபெருங் காடெனவே பாவியே னுன்னிப்
பாவையவள் காட்சியினைப் பண்புறவே வேண்டித்
தாழ்த்தன்மிகத் தீதென்று தவளநங்கை வைகும்
தனிமனைக்கு யான்சென்றேன் றனியன்பைக் காணேன்.
தனியன்பா மவளில்லாத் தனிமனையென் றனக்குத்
தனியிரவில் மதியில்லாத் தன்மையெனக் காண,
முனிவாய வென்மாமி மாமனொடென் முகத்தை
முனிவாக நோக்கிடுமென் மூதறிவார் தந்தை 35
தமைநோக்கிக் "கலைமகளாந் தனியன்பு யாண்டு
தங்கியுள" தென்றேயான் தனித்தனியே வினவ,
அமைவில்லா வப்பெரியோர், "அடபாவி! நினது
அறிவில்லாச் சுடுமொழியா லன்றிரவே யவளும் 36
'அன்பனிலா வாழ்க்கையினை யரிவையர்மேற் கொள்ளல்
அழகிதழில் லோன்குழலை யூதுகின்ற வழகாம்
இன்பமிலா ரிவ்வுலகி லேற்றிடுநல் வாழ்க்கை
எழின்மிகுநற் றுறவறமே' யென்றொருநல் லோலை 37
நறுக்கினிலே வரைந்துவைத்து நங்கையவள் நடந்தாள்
நாட்கள்பல நடந்துமவள் நடக்கையினை யறியோம்
வெறுக்கையினு னேர்ந்ததிது; விளம்புதலென்?" என்றார்
வினைனேன் மிகநொந்து வியர்த்திட்டே னுள்ளம். 38
உயிரனையா டனையடையா வொருவுதலாம் வாழ்க்கை
யொருகாலு மேற்கொள்ளே னுலகெல்லாந் துருவி
குயிலனையா டனைக்கண்டு கூடியவள் கோலக்
குறுநகையோ டுறவன்மறைக் கோலமதை யென்றும்.
என்றொருக லுறுதிமொழி யென்னெஞ்சிற் கொண்டே
யெழிலாரு முருவெளியா லிழுக்கவே பட்டுக்
கன்றினையே மறையவிட்டுக் கண்கலங்கிச் செல்லும்
கற்றாவின் றிறமெனவே காடுமலை கடந்தேன். 40
மலைமகளென் மாமியவள் வந்துமே பிறந்த
மலையரசா மிமயமலை வட்டமெலா மலைந்தேன்
அலைமகளென் றாய்ப்பிறந்த வலைகடலி னருகாம்
அருநெய்தற் காடெல்லா மலைந்துமிக வலுத்தேன், 41
அலுப்பினாற் சோராதே யருங்கமலக் காடாம்
அரும்பொய்கைப் பெரும்பொழில்கள் அடைந்துபல பார்த்தேன்
இருப்பைபல மிடைந்தோங்கி யெழில்பெறவே நிற்கும்
இருங்காடு பலசுற்றி யிளைப்பினையா னுற்றேன். 42

இளைப்பில்லா முனிவர்பலர் இயமநெறி நிற்கும்
எழில்வாய்ந்த பொதியமலை யிருஞ்சாரல் பலவும்
களைப்பினைநோக் காதோடிக் கால்வலிக்கத் தேடி,
காரிகையென் கண்மணியைக் காணாது வாடி. 43

கண்ணிருளக் காதடைக்கக் கனையிருளிற் பட்டுக்
கலக்கமுடன், செலும்வழியுங் காணாதே கெட்டு,
விண்ணிருள மனமிருள மிகவாடி நொந்து,
மெலிவில்லா வூக்கமது மேற்கொள்ள விரைந்து. 44

துயினோயை விலக்கிடுமென் றோன்றலவன் கீழ்பாற்
றோன்றிடுநல் வேளையினிற் றோன்றியவிப் பொழிலும்
குயிலனையாய்! நீவாழிக் கோயிலுமெற் கண்டு,
குழைந்தழைக்க வேறுவழி குறிப்பிடுதற் கின்றி, 45

வழிநடந்த களைப்பகற்ற மனத்திடையா னுன்னி,
மங்கையரே! இங்குபுக, வாயிலினிற் கண்டு
விழிபடைத்த பெரும்பேறாய் வியந்துன்னை நோக்கி
வேல்விழியாள் கலைமகளின் மெலிவினையான் கண்டேன்.

கண்டனையாய்! கண்டுமியான் காசினியிற் பல்லோர்
கலப்பான வோருருவிற் காணுகின்ற வியல்பே
உண்டெனவே யெண்ணியென்ற னுள்ளமிகு மன்பை
யொளித்தடக்கி னேனவனை யுவப்புமிகக் காணும், 47

காலையதே வேலைமிகுங் காசினியில் யான்வாழ்
காலையதாம் மற்றையவென் வேலையெலாங் கானில்
மாலைமதி தெரித்தநிலை மானுமது வாய்மை
மங்கையரே யிங்கெனக்கு வழங்குதிநல் விடையே." 48

"விடைதருதி!" எனநின்ற மேலவற்கு விடையா
விழியருவி பொழிதரமுன் மெல்லெனவே வந்து,
"கொடைதருவே! குளிர்நிழலே குளிர்நிழலிற் குலவும்
கொழுந்தென்ற னறுமணமே! குறிப்பிட்ட வடியாள், 49

யா"னெனவே மலரோனு நல்வியப்பா னோக்கி,
"நங்கையரே! கலைமகளே! நாமகளே!" என்ன,
மானெனவே துள்ளியவள் மலரவனை யணைந்து
மகிதலத்தோர் கொண்டாடும் வாழ்க்கையினைக் கொடுத்தாள்

வாழி! மலை மகள்வாழி! வாழியலை மகளும்!
வாழிமல ரோன்றந்தை மாயவனார் தாமும்!
பாழிலலை வேனெனது பாழ்வினைகள் தீரப்
பரிந்தருள் சுரந்தகலை பல்வாழிக் காலம். 51

இலக்கணமும் இலக்கியமும்:
LANGUAGE AND LITERATURE

* மெய்ப்பொருளுள்ளமும் எதிரியின் கள்ளமும்

[வானிகூடல் ஞானசம்பந்தன்]

இறைவனின் திருக்குறிகளான திருநீறும், கண்டிகையும், காண்போர் நினைவை மெய்ப்பொருளாகிய இறைவனிடத்துச் செலுத்தி அன்புகொள்ளச் செய்கின்றமையின் அத்திருக்குறிகளே மெய்ப்பொருள்களாகும். ஓர் அரசன் கீழ் வாழும் குடிமக்கள் அவ்வரசனுடைய புதல்வனைக் காணும்போது அவனிடத்துக் குற்றங்குறைகளிருப்பினும் அவற்றைப் பொருட்படுத்தாமல் அவனை வணங்குவார் அல்லரோ? அதுபோல் எல்லாவுலகத்திற்கும் தலைவராகிய சிவபெருமானுக்கு ஆளான அடியாரைக் காணும்போது அவர் எத்தகையராயினும் அதை நினையாது அவர் கொண்ட கோலமாகிய திருநீறும், கண்டிகையுமே பொருளாகக் கொண்டு அவர்களை மனமுருக வணங்குவர் பெரியோர். இவ்வுண்மையைச் சிவஞானபோதம் இறுதிப் பகுதியாகிய பயனியலின் இறுதிச் சூத்திரத்திலே,

> "செம்மலர் நோன்றாள் சேரல் ஒட்டா
> அம்மலங் கழீஇ அன்பரொடு மரீஇ
> மாலற நேய மலிந்தவர் வேடமும்
> ஆலயந் தானும் அரனெனத் தொழுமே"

என்னும் மெய்கண்டார் பொன் மொழியாற் காண்க. இவ்வாறு வழிபடுவோர் சிவன்முத்தராவர்.

மெய்ப்பொருள் நாயனாரும் அத்தகையரே. இவர் சேதி நாட்டிலே, திருக்கோவலூரிலே, மலாடர்கட்கு அரசராயிருந்தவர். நாயனார் சிவபெருமான் திருவடிக்கன்பு பூண்டொழுகும் சிவனடியார்கள் குறிப்பறிந்து அவர்க்குத் தொண்டு செய்வதில் தலைநின்றார்.

நாயனாரது ஆட்சிமுறை மிகச் சிறந்ததாகும். அரசியல் நெறியை அறநெறி வழுவாமற் காத்துவந்தார். பகைவர்களைப் போரில் வென்று குடிகட்குத் திங்கு வராமற் காப்பார்.

---

* இது சென்னை இராயப்பேட்டை குகாநந்த நிலையத்தில் 2-12-34-ல் அரியலூர்த் தமிழாசிரியர் திருவாளர். அ. மு. சரவண முதலியாரவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கம் ஆகும்.

இனி, நம் நாயனர் மங்கையைப் பாகம்வைத்தார்தம் திருக்கோயிலிலே திருமுழுக்கு, வழிபாடு, விழா, உலா முதலியன வழாது நடந்து வருகின்றனவா என்று கண்ணுங்கருத்துமாய்ப் பார்த்துவந்தனர். திருக்கோயில்களிலே வழிபாடு முதலியன, சரிவர நடந்தேறும விருப்பின் மன்னர்க்குத் தீங்கு நேரும், எனவும், மழைபொழியா தெனவும், கள்ளர்களாற் றீங்கு நேரும் எனவும், தெய்வத் திருமூலனர்,

“ முன்னவனர் கோயிற் பூசைகள் முட்டிடில்
மன்னர்க்குத் தீங்குள வாரி வளங்குன்றும்
கன்னங் களவு மிகுத்திடும், காசினி
என்னரு நந்தி எடுத்துரைத் தானே ”

என்னும் திருப்பாசுரத்திலே வலியுறுத்தி யருளினர்.

ஈகை யியல்பிலே நாயனர் திருவுள்ளம் மிகக் கனிந்தது. தாம் தேடிய பொன்னும் செல்வமுமெல்லாம் தில்லையாடிய சிவபிரானடியார்கட்கே ஆவன என்னும் துணிவோடே, வந்த சிவனடியார் யாவர்க்கும் அவர் குறைவின்றிக் கொடுத்து வந்தார். இங்கே ஆசிரியர் சேக்கிழார் பெருமான் கொடுப்போர் குறைவும் நீங்கக் கொடுத்தார் என்னும் பொருள்பட அமைத்தமை மிக அழகன்றே? இனிக் ‘கொடுத்துவந்தார்’ என்பதிற் கொடுத்துப் பின் வருந்தும் பொதுமக்கள் போலன்றிக், ‘கொடுத்து மகிழ்ந்தார்’ என்னும் பொருள்படக் ‘கொடுத்து உவந்தார்’ என்றியைத்தமை நயத்தைக் காட்டுகின்றது.

நாயனர் இந்நிலையிலிருக்குங் காலையில், நாயனரோடு பன்முறை போர்புரிந்து தோற்றுப்போன முத்தநாதன் என்னும் வேற்றரசன் ஒருவன் முடிவில், நாயனரை வஞ்சனையாக வெல்லக் கருதினன். கருதி, நாயனர் சிவவேடத்தில் அன்புடையார் என்பதை நன்கறிந்து, வெண்ணீறு சாத்தியே அவரை வெல்லுதல் எளிதெனக் கொண்டு உடம்பெல்லாம் திருநீற்றினைப் பூசி, சடைகளைச் சேர்த்து முடித்து, கையிலே வாட்படையை மறைத்துச் சுற்றிய ஒருபுத்தகக் கவளியை எடுத்துக்கொண்டு, இருளை நடுவிற்கொண்ட விளக்குப்போல உள்ளத்திற் கறுப்புடையனகித் திருக்கோவலூரை யடைந்தான். மாதவ வேடங் கொண்ட வன்கணன் அரண்மனை வாயிலினுள்ளே நுழையும் நிலையை ஆசிரியர் சேக்கிழார் பெருமான்,

“ மாதவ வேடங் கொண்ட வன்கணன் மாடந் தோறும்
கோதைசூழ் அளக பாரக் குழைக்கொடி ஆட மீது
சோதிவெண் கொடிகள் ஆடுஞ் சுடர்நெடு மறுகிற் போகிச்
சேதியர் பெருமான் கோயில் திருமணி வாயில் சேர்ந்தான் ”

என்று கூறியருளினர். இங்கு, அரண்மனையை யடுத்த மாடங்களில் மணம் வீசும் மாலை யணிந்த கூந்தலையுடைய பாவையர் கொடிபோன்ற தோற்றத்தோடு அசைவுறவும், அரண்மனையின் உச்சியிலே அரசியற்குரிய வெண்ணிறக்கொடிகள் ஆடவும் முத்தநாதன் மணித்தெருவூடே சென்றான் என்றனர். இதிலே. சேக்கிழார் பெருமான் பின்னதை 'வெண்கொடி' என்றும் முன்னதை 'அளகபாரக் குழைக்கொடி' என்றும் கூறியமையால், குழைக் கொடி, 'கருமை' நிறத்தையுடையது என்பது சொல்லாமலே போதரும். மேலும், முத்தநாதனது வெளித்தோற்றம் சிவவேடமாகலின், அதுகொண்டவனை வரவேற்பது கருதி வெண்கொடி 'வா' என அழைப்பதுபோல் அசைந்தது. முத்தநாதன் உள்ளத்தே வஞ்சக முடைமையால், அவனைப் 'போ' எனக் கூறுவதுபோன்று அளகபாரக் கருங்கொடி அசைவுற்றது. வெண்கொடி மகிழ்ச்சிக்குறியை உணர்த்துவதும், கருங்கொடி, துயரக்குறியை யுணர்த்துவதும், இக்காலத்தே வழக்கு. இஃதேபோல் அந்நாளிலும் இருந்தது போலும்!

மேலும் வஞ்சனைகொண்ட முத்தநாதன் தான் கொண்ட கருத்தை முற்றுவிக்கச் சந்து பொந்துகளினூடே புகுந்து போதல் வேண்டுவதே இயல்பு. அவ்வாறு போதலோ ஐயம் விளைவிக்கும் ஆகலானும், அவன் கொண்ட வெளிவேடம் ஐயத்திற்கிடந்தாராதாகலானும், சேக்கிழார் பெருமான் ஈண்டு, 'சுடர் நெடு மறுகிற்போகி' என்று மொழிந்தருளினர். ஆகவே, பகைவன் அகன்ற மணிமாட வீதிவழியே சென்றான்.

இங்ஙனம் முத்தநாதன் சிவவேடத்தோடே அரண்மனை வாயிலைச் சேர்ந்ததும்,

> கடையுடைக் காவலாளர் கைதொழு தேற நின்றே
> "உடையவர் தாமே வந்தார் உள்ளெழுந் தருளும்"
> தடைபல புக்கபின்பு தனித்தடை நின்றதத்தன்
> இடைதெரிந்தருளல் வேண்டும் துயில்கொளும் இறைவன்"

என்றான்.

இவ்வாறு, தடையின்றி முத்தநாதன் உள்ளே சென்றதும் தனியாயுள்ள கடைசிக்கடை காவலாளனாகிய தத்தன் மட்டும் சிவவேடத்தைக் கண்டதால் உள்ளே விட்டுவிடலாமா என்ற ஐயத்தையும், விட்டுவிடின் ஒர்கால் அரசரால் யாது நிகழுமோ என்ற அச்சத்தையும் ஒருங்குடையவனாகிப் பணிந்து, 'இப்போது வேந்தர் பெருமானார் உறங்குகின்றமையாற் சமயம் தெரிந்து போதல் வேண்டும்' என்று கூற, முத்த

நாதன் அதை மறுத்து "அரசனுக்கு அறவுரை கூறப்போவதால் என்னைத் தடைசெய்யேல்' என்று கூறிக்கொண்டே உள்ளே புகுந்தான்; பொற்கட்டிலின்மீது நாயனர் துயில் கொள்ளுதலையும், தேவியார் அருகிலே இருத்தலையும் கண்டான். வந்தவர் சிவனடியாராகலின் அவரைக் கண்டவுடன் விரைவாக எழுந்து தேவியார் தம் கொழுநரை எழுப்ப, நாயனர் விழித்தெழுந்து குவித்த கைகளோடே கட்டிலை விட்டிறங்கினர். இறங்கி, நாயனர் வணக்கஞ் செய்து,

"மங்கலம் பெருக மற்றென் வாழ்வுவந் தணைந்த தென்ன
இங்கெழுந் தருளப் பெற்ற தென்கொலோ"

என்று கூறினர்.

ஈண்டு ஆசிரியர் சேக்கிழார் பெருமான் "நலம் பெருகும்படி என் வாழ்வே வந்ததுபோற் றுங்கள் இவண் போந்தருளியது எதன் பொருட்டு?" என்னும் பொதுப் பொருள்படக் கூறியதில் மற்றொரு நுண்பொருளும் பின்வருமாறு காண்க.

முத்தநாதன் ஈண்டுப் போந்தமையால் நாயனர் உலக வாழ்வு முடிவடைதல் திண்ணம் என்பதாலும், அதனலே தேவியார் மங்கலங் குறைவடைவதாலும், ஈண்டு மங்கலம் பெருக, தாலி பெருக என்னும் பொருளும் அமைந்தமை உன்னித்தற்பாலதன்றோ? மங்கலம் பெருகுதல் என்பது (காராட்டை வெள்ளாடெனல் போல்) மங்கலச் சொல்லாகும்.

இனி, நாயனர் கேள்விக்கு விடையாக முத்தநாதன் புகன்றதைச் சேக்கிழார் பெருமான்,

"உங்கள் நாயகனர் முன்னம் உரைத்தஆ கமநூல் மண்மேல்
எங்குமில் லாததொன்று கொடுவந்தேன் இயம்ப"

என்று கூறியதை ஆராய்வோம்.

இங்கே, 'உங்கள் நாயகனர்' என்று கபடமாக வந்தவன் கூறியதிலிருந்தே, தான் வேறொரு கடவுளை வணங்கும் பிற சமயத்தைச் சார்ந்தவன் என்ற பொருளையுடைத்து என்ப. ஆனல், கள்ளமாக வருவோன் தன் கள்ளத்தை வெளிப்படுத்தாதிருப்பதில் மிக விழிப்புடையவனக இருந்து மெதுவாகப் பேச்சினை அளந்து பேசித் தப்பிப்பான் அல்லனே? அவ்வாறிருக்க, களவு நுணுக்கமறிந்த இவன் ஐயத்திற் கிடமான 'உங்கள்' என்ற சொல்லை மொழியான். ஆகவே சேக்கிழார் பெருமான் திருவுள்ளம் மேற்கூறிய பொருளை இன்றி வேறொரு பொருளைக் கொண்டிருக்க வேண்டும். உலகத்திலே ஒருவனுக்குத் தன் மனைவியிடம் தன் தம்பிக்கிருக்கும் உரிமையைக் காட்

டினும் மிகுந்த உரிமை இருப்பினும், அவன் தன் தம்பியை நோக்கித் 'தம்பி! உன் அண்ணி உணவருந்த உன்னை அழைக்கின்றாள்' என்று கூறுகின்றான். அப்போது 'உன் அண்ணி' என்று தம்பியிடம் கூறியதால் அவனுக்கு இருப்பது அண்ணி முறை ஒன்றே எனவும் அண்ணன் எல்லா உரிமையும் உடையவன் எனவும், அவன் தம்பியினும் நெருங்கிய உறவினன் எனவும் உண்மையாக விளங்குகின்றன.

மூன்றாண்டிலேயே சிவஞானப் பாலுண்ட கலைஞானக் கன்றாகிய திருஞான சம்பந்தப் பெருமான் தம்மை இறைவர் தம் "மைந்தன்" "தலைமகன்" (கொடிமா-கக). எனத் திருப்பாசுரங்களால் கூறியருளினமையாலும், தம்பெற்றோர் தம்மைப் பன்முறை வணங்கியிருத்தலை மறுக்காது விட்டமையாலும் எல்லாம் வல்ல சிவபிரானுக்குரிய பிள்ளையார் என்பது நன்கு துணியப்படும். உலகுக் கெல்லாம் அன்புசெறி கடலாகிய திருநாவுக்கரசடிகள் புகலி வேந்தரைக் காணும் வேட்கை மீதூரக் காழி யடைந்து ஆளுடைய பிள்ளையாரோடு அளவளாவி யிருந்து பின் தோணியப்பரைத் தொழுதற்குச் சென்ற போது, காழிவேந்தர், தாண்டக வேந்தரை நோக்கி,

" அப்பர்! உங்கள் தம்பிரானரை நீர் பாடீர் " (திருநா-புரா. கஅசு.) என்றருளினர். ஆளுடைய பிள்ளையாரும், ஆளுடைய அரசுகளும் இறைவனடியார் எனினும், பிள்ளையார் தோணியப்பரிடம் அடிகளினும் உரிமைமிக்கவர் என்னும் கருத்தமையச் சேக்கிழார் பெருமான் கூறியிருக்க வேண்டுமெனவே எண்ணுதற் கிடமுண்டு.

மேலும் திருஞானசம்பந்தப் பெருமான் தம்மை வணங்கயாழோடு வந்த திருநீலகண்டத்துப் பெரும்பாணனாரைத் திருக்கோயிலுக் கழைத்துச் சென்று அங்கே பெரிய நாயகியாரையும் தோணியப்பரையும் வணங்கச் செய்து,

"ஏயும் இசையாழ் உங்கள் இறைவருக்கிங் கியற்றும்" என மொழிந்தருளினர். ஈண்டும் 'உங்கள்'—(திருஞா-134) என்பது அப்பொருட்டேயாதல் தேறப்படுமன்றோ?

ஆகவே, இங்கு 'உங்கள்' என்னும் சொல் சிவனடியார் வேடங்கொண்டு வந்தவன் நாயனாரினும் நெருங்கிய அன்பைச் சிவபிரானிடம் உடையவன் என்னும் குறிப்புத் தோன்றவே அவன் கூறியதாகக்கொள்ள வேண்டுமன்றோ?

இனி, " மண்மேல் எங்குமிலாததொன்று கொடுவந்தேன் இயம்ப" என்றதில் 'இதுவரை வெளிவராத நூல்' என்பதோடு "இதுவரையும் நூல் வழக்கிலேனும் உலக

வழக்கிலேனும் இம்மண்ணுலகில் நடந்திராத வஞ்சனைச் செயலையுடைய பொருளைக் கொண்டுவந்துளேன்" என்னும் உட்பொருளும் கிடப்பதைக் காணலாம்.

பின்பு, நாயனார் அந்நூலை வாசித்துப் பொருள் கூறுமாறு கேட்க, முத்தநாதன், "நாறு பூங்கோதை மாது தவிரவே நானும் நீயும் வேறிடத்திருத்தல் வேண்டும்" என்று விளம்பினன். 'உன் நாயகியை நீக்கி நானும் நீயும் மட்டும் தனியிடத் திருத்தல் வேண்டும்' என்பது பொதுப்பொருள். "நாறு பூங்கோதையாகிய பூமாலையை உன் மனைவி அணிய முடியாதவளாகும்படி நீ இவ் வுலகம் விட்டு வேறுலகம் சேர்தல்வேண்டும் நானும் உன்னைவிட்டு வேறிருக்கவேண்டும்" என்றும், "நாறுகின்ற பூமாலையை அணிந்த உன் மனையாட்டியை நீ தவிர்த்து, நீயும் வேறிருக்கவேண்டும்" என்றும் உட்பொருள்கள் புலனாகின்றன. எனவே, வேறிடத் திருத்தல் வேண்டும் என்பதை நானும் நீயும் என்னுமீரிடத்தும் கூட்டல்வேண்டும்.

அங்ஙனங் கூறிய வுடனே திருமகள்போல் நின்ற நாயகியாரை, 'பரிவுடன் விரைய அந்தப்புரத்திடைப் போக ஏவி' னார் நாயனார். 'புதிதாக வந்தவர் எந்நற் செய்தி கூறப் போகிறாரோ ! கேட்போம்' என ஆவலோடு எதிர்பார்த்து நிற்றல் மகளிர்க்கு இயல்பு என்பதையுணர்ந்த நாயனார், நாயகியாரைச் சரேலென வெடுவெடுப்பாக அப்புறம் போகுமாறு சொல்வார்போலின்றி, விரைய அந்தப்புரம்போகுமாறு அன்போடும் மொழிந்தார். என்னே ! நாயனார்தம் அன்பிருந்தவாறு!

பின்னர் நாயனார் வாசிக்குமாறு கேட்க, முத்தநாதன் தான் வஞ்சக் கவளியாகிய புத்தகக் கவளியை அவிழ்ப்பான்போல் அவிழ்த்து அதனின்றும் ஒரு கத்தியை எடுத்துத் தான் வந்த செயலை முடித்துக்கொண்டான். உடனே நாயனார் 'சிவவேடமே மெய்ப்பொருள்' என்று கூறினார்.

இங்கே, சேக்கிழார் பெருமான், 'நாயனாரைக் குத்தினன்' என்று கூறுவதற்கஞ்சி, 'தான் முன் நினைத்த அப்பரிசே செய்ய' என்று மட்டும் குறிப்பிட்டனர். இவ்வாறு, மொழிதல் சேக்கிழார் பெருமானது இயல்பு. ஏனாதிநாயனார் புராணத்தினும், ஏனாதி நாயனார்க்குப் பகைவனாகிய அதிசூரனென்பான் வஞ்சமாகப் போர்க்களத்திலே நாயனாரை வாளால் வெட்டிய செய்தியைக் கூறும்போதும்,

"முன்னின்ற பாதகனும் தன் கருத்தே முற்றுவித்தான்"

எனக் குறிப்பாகவே மொழிந்தனர். நாயனார் தாம் கொண்ட கொள்கையை உயிரினும் மேலதாக் கொண்டார். பல தடவைகளில் வென்ற நாயனார் கடைசியிலும், தாம் கொண்ட

கொள்கையை 'மெய்த்தவ வேடமே மெய்ப்பொருள்' என்று கூறி வெற்றி பெற்றமைக்காக மகிழ்ந்தார். நடந்ததை உற்று நோக்கியிருந்த தத்தன் சரேலெனக் கபடனை வாளால் ஓச்ச, நாயனார் விழும்போதே "தத்தா! நம்மவர்" என்று தடுக்க, தத்தனும் 'செய்வதென்?' எனக் கேட்க, நாயனார் "இடையூறு இவர்க்கு நிகழாவண்ணம் கொண்டுபோய் விடுக" என்றனர். தத்தனும் அவ்வாறு செய்தான். அவன் திரும்பி வரும் வரையும் நாயனார் செய்தியை யறியும் ஆவலோடு இன்னுயிர் தாங்கியிருந்தார்.

'இடையூறின்றிக் கொண்டுபோய்விடு' என்று நாயனார் கூறினரேயன்றி 'வந்து விடைசொல்' எனப் பணித்தனரல்லர். ஆயினும் 'அறிவுள்ள தத்தன் வந்து கூறுவான்' என்று எதிர்நோக்கியிருந்தனர். தத்தனும், முதலாணை அவ்வாறிருப்பினும் இடையூறின்றி விட்ட செய்தியை அறிய ஆவலோடு நாயனார் இருப்பார் என்று குறிப்பாலுணர்ந்து விரைவிலே நாயனாரை யடைந்து செய்தியை மொழிந்தான். அதுகேட்டு மகிழ்ந்த நாயனார் தத்தனைநோக்கி,'இன்றெனக் கையன் செய்ததார் செயவல்லார்?' என்று அவன்மீது கருணைமழை பொழிந்தார். 'ஐயன்' என்று தத்தனை விதந்து நன்றிகூறியது அவன் நாயனார்தம் குறிப்பின் வழி நடந்து அவர் பெற்ற வெற்றிக்குக் காரணமாயிருந்த அருஞ் செயலுக்காக என்க.

பின்னர், அரசியலாயத்தார்க்கும், மனைவியார்க்கும், 'விதியினாலே பரவிய திருநீற்றன்பு பாதுகாத்துய்ப்பீர்' என்று கட்டளையிட்டு அம்பலவாணன் பூங்கழலை நினைந்தார் நாயனார்!, உடனே மாதொருபாகனார் நாயனாருக்குக் காட்சி தந்து தம் திருவடியிற் சேர்த்து இடையறாமற் கும்பிடும் பெருவாழ்வை ஈந்தருளினர்.

மெய்யடியார்கள் இறைவன் திருவடியை இடையறாது வணங்கி மனம் உருகி வாழ்த்துதலை விரும்புவரேயன்றி வீடு பேறு கொடுப்பினும் வேண்டார். இதையே, சேக்கிழார் பெருமான்,

"கேடும் ஆக்கமும் கெட்ட திருவினர்
ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்
கூடும் அன்பினிற் கும்பிடலே யன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினர்"

என்று திருக்கூட்டச் சிறப்பில் மொழிந்தருளினர்.

இன்னுயிர் செகுக்கக் கண்டும் எம்பிரான் அன்பர் என்றே நன்னெறி காத்த சேதி நாதனார் பெருமை எங்கும் நிலவுக!

வடமொழித் தென்சொற்கள்

[பண்டித திரு. ஞா. தேவநேயப் பாவாணர்]

(சஉக-ம் பக்கத் தொடர்ச்சி)

அவலட்சணம் அவம்+லக்ஷணம்.

இலக்கணம்=லக்ஷணம். இலக்கு பகுதி.
இலக்கணம்=இலக்கியத்தின் ஒழுங்கு அல்லது அழகு.

இதன் விரிவை இவ்வாட்டைத் தமிழ்ப்பொழிலில் கண்டு கொள்க.

அவி. அவி=உணவு, நெய் (அவிக்கப்படுவது.)

அவிநயசாலை. அபி+நயம்+சாலை.

அபி மிகுதிப் பொருளுணர்த்தும் ஒரு வடமொழி உபசர்க்கம்.

நயம்=நேர்த்தி. (தென்சொல்) நயம்—Nicety: ய—ச போலி.

அபிநயம்=மிக நேர்த்தியான ஆட்டம் அல்லது ஆட்டத்தின் உறுப்பு.

அபிநயம் ஓர் இருமொழித் தொடர் (Hybrid).
நை+அம்=(நையம்)—நயம், தொழிற்பெயர்.
c. f. வை+உ=வயவு.
நைதல்=நுட்பமாக நொறுக்கப் படுதல்.
நயம்=நுட்பம். அபிநயம்=நுட்பமான ஆட்டம்.

சாலை. சால்+ஐ=சாலை.

சாலுதல்=நிறைதல், பருத்தல், விசாலித்தல்.

சால (நிகழ்கால வினையெச்சம்) மிகுதிப் பொருளுணர்த்தும் உரிச்சொல்.

சாலை=அகன்ற பாதை, அகன்ற கூடம்.
பாடசாலை=பாடம் படிப்பிக்கப்படும் கூடம்.
சாலை—Saloon, Hall
சால்+பு=சால்பு=நிறைவு, பெருந்தன்மை.

சால்+வை=சால்வை (Shawl), உடம்பு நிறையப் போர்ப்பது.

சான்றோர்=அறிவு நிறைந்தோர், வீரம் நிறைந்தோர்,
சாலு—நிறையும், போதும் (தெலுங்கு).

அவிவேகம். அ+வி+வேகம்.

அ, எதிர்மறை உபசர்க்கம்.
வி மிகுதிப்பொருள் உபசர்க்கம்.
வேகு+அம்=வேகம்=நெருப்பு, எரிதல்.
வேகம்=அறிவு, நெருப்பின் தன்மையுள்ளது.

நெருப்பு எங்ஙனம் ஒரு பொருளை விரைந்து பற்றுமோ அங்ஙனமே அறிவும் ஒரு பொருளை விரைந்து பற்றும். அறிவும் விரைவுமுள்ளவனைச் சூட்டிக்கையுள்ளவன் என்பது உலக வழக்கம்.

ஆகாயம். ஆ+காயம். ஆ முதல்விரி (Prothesis) 'காயப் பெயர்வயின்' என்றார் தொல்காப்பியர்.

கயம்=பள்ளம், குளம், கறுப்பு.

ஆழமான நீர் கறுப்பதியல்பு.

கயம்—காயம், (நீட்டல்). கயம்—கசம், போலி. இருண்ட இருட்டை இருட்டுக் கசமென்பர் தென்னாட்டார். காயா - ஓர் கருநிறமான பூ.

காயம்=வானம், (கரியது)

ஆ+காயம்=ஆகாயம்—ஆகாசம். ய—ச போலி.

ஆசயம். அகம்(Tamil)—Eikos (Greek)—ஆசயம்(Sans)—House (Eng)

அகம்=வீடு. ஆசயம்=இருப்பிடம்: உ - ம் இரத்தாசயம். ஆஞ்ஞை. ஆள்—ஆண்—ஆணை—ஆஜ்ஞா.

'ஆவிறையும்' என்று பவணந்தியார் தமிழுக்குக்கூறிய முறையே ஐயிருவும் என்று வடமொழிக்கு மாற்றிக்கூறுக.

ஆத்துமம். ஆன்+மா=ஆன்மா.

ஆ=பசு, ன் சாரியை.
ஆன்மா—ஆமா=பசு, காட்டுப்பசு.
மா என்பது விலங்குப் பொதுப் பெயர்.
ஆமா ஒரு சொல்.
உயிர்களைப் பசுக்கள் என்பது சைவசித்தாந்த வழக்கு.
ஆன்மா=உயிர்,animos (Lat)=life. animal=பிராணி.
ஆத்மா—Sans. ஆத்மி (Hind.)

ஆதாம்=முதல் மனிதன் (Hebrew). உயிர் என்பது தமிழில் ஒரு பிராணியைக் குறித்தாற்போல ஆத்மா என்பது வடமொழி, உருது முதலிய மொழிகளில் ஒரு மனிதனைக் குறிக்கும்.

ஆத்மா—ஆத்துமம்.

ஆலாபனம். ஆலாபி + அனம் = ஆலாபனம்.

ஆல்—ஆலாபி.

ஆலுதல் = வட்டமாக ஆடுதல். 'மயிலால'-கலித்தொகை.

ஆலாபித்தல் = ஓர் இராகத்தை வட்டமாகச் சுற்றிச் சுற்றிப் பாடுதல்.

ஆலாபி + அனே = ஆலாபனே.

ஆலத்தி—ஆளத்தி = விளக்கை அல்லது இராகத்தை வட்டமாகச் சுற்றுவித்தல்.

ரிஷபம்—இடபம்.

விடை—விடபம்—இடபம். விடை—விடலே.

விலங்குகளிலும், சிறப்பாய்ப் பறவைகளிலும் இளமையாய்ப் பருத்திருப்பவற்றை விடை என்பது வழக்கு. விடை—விடைத்திருப்பது. முதனிலேத் தொழிலாகுபெயர்.

விடைத்தல்—பருத்தல்.

விடை என்பது விடபம் என்று திரியும். பம் ஓர் விகுதி.

C. f. வாலம்—வாலிபம்.

விடபம் என்பது முதன்மெய் நீங்கி இடபம் என்று நிற்கும்.

C, f. சமை-அமை. வளே—அளே

விடை என்பது விடலே என்றும் திரியும். விடை என்னும் பெயரும் அதன் திரிபுகளும், பல விலங்கிற்கும் பொதுவேனும், சிறப்பாக மாட்டிற் காளங்கன்றையே குறிப்பது நான்மரபு. தோடுடையசெவியன் விடையேறி. காளே என்னும் பெயர் உவமையாகு பெயராய் ஓர் இளேஞனே அல்லது வீரனே உணர்த்தினற்போல, அதன் பரியாயப் பெயராகிய விடை என்பதும் அதன் திரிபுகளும் இளேஞரை அல்லது வீரரை உணர்த்தும்.

பாலேமக்களான மறவரின் தலேவன் விடலே எனப்படுவது காண்க.

ஓர் இளேஞனே விடலேப்பையன் என்பதும், இளங்கோழிகளேச் சேவல்விடை கோழிவிடை என்பதும் இன்றும் தென்னுட்டு வழக்கு.

விடலே என்னும் கன்றப்பெயர் லத்தின் மொழியில் Vitula என்று திரியும்.

இதி } இகரச்சுட்டு பகுதி.
இத்தியாதி } வடமொழிக்குச் சுட்டுச் சொல்லேயன்றிச் சுட்டெழுத்தில்லை.

இரத்தம்.—அரத்தம் = சிவப்பு

அரத்தம்--அரத்தகம்--அலத்தகம் = செம்பஞ்சுக்குழம்பு.
அரத்தம் என்னும் சொல்லுக்குப் பகுதி வழக்கற்றது.

இதற்கும் இதற்கினமான பிறசொற்கட்கும் அர் அல்லது அரம் என்பது மூலமாயிருக்கின்றது.

அரக்கு—சிவந்திருப்பது.
அரத்தம்—இரத்தம். அ—இ போலி.

இரத்தி = இலந்தை சிவந்த கனியையுடைய செடி. அலத்தகம், இலந்தை என்னும்சொற்களில் லகரம்போலி.
இரத்தி—இலத்தி—இலந்தை. அரத்தம்—ரத்தம் Sans. Red, Eng.

இரம்பம். அர் ஓர் ஒலிக்குறிப்பு.
அர் அர் என்னும் ஒலிபடத் தேய்த்தல்.
அராவுதல். அராவுவது அரம்.
அரம்போல அறுக்கும் ஆயுதம் அரம்பம்.
அரங்குதல் = தேய்தல், அழிதல் (தன்வினை)
அரக்குதல் = தேய்த்தல், அழித்தல் (பிறவினை.)
அரந்தை = துன்பம்,அறுப்பதுபோல் துன்பம் செய்வது.
அரித்தல் = தேய்த்தல், அறுத்தல், அழித்தல்.
அரம்பம்—இரம்பம் . அ—இ போலி.

இராக்கதன். இரா + கதம் + அன் = இராக்கதன்.

இரா = இரவு. கதம் = செலவு, கதி பகுதி.கதித்தல் = செல்லுதல். அன்—விகுதி.

இரவில் சென்று உணவு தேடுபவன் இராக்கதன்.
இராக்கதன்—ராக்ஷஸன். Sans. க்க—க்ஷ.

இராக்கதன் என்பதன் மொழிபெயர்ப்பே நிசாசரன் என்னும் வடசொற்பெயர். நிசி = இரவு, சரன் = செல்பவன்.

இராக்கதன் என்பது முறையே இராக்கன், அரக்கன் என்று திரியும்.

அரக்கன் என்பதற்கு அழிப்பவன் என்று பொருள் கூறினும் அமையும்.

அறிவியற் பகுதி - Science

காட்சி யுலகின் கழிபெரும் பரப்பு

[திரு. அ. சீனிவாசாச்சாரியாரவர்கள் B. A., L. T.]

(ஆர்தர் தாம்சன் என்பாரது கட்டுரையினைத் தழுவியும் மொழி பெயர்த்தும் எழுதியது.)

இயற்கை யன்னையின் எழில்வயப்பட்டபின், அந்தமில் இன்பத் தந்தையின் முன்னிலையிலோ, வரம்பிலோ, ஆற்றல் வடிவாம் பேரன்னையின் முன்னிலையிலோ இறைப் பொழுதேனும் அமராதார் எவரே இந்நானிலத்துள்ளார்! கண்ணகன்ற ஞாலத்தின் கவின்மிகு பரப்பையும், அணிநெடும் பரவையின் மணிபுனை ஆழத்தையும், எண்ணிலா மீன்கணம் இமிரும் வான்வெளியையும், கண்ணிக் கண்ணிக் கருத்திடு பட்ட நம் தமிழ்மொழிப் பாவலர், வரையறையின்றி விரிந்த ஒன்றிற்கு உவமைகூற நினையுந்தோறும், 'ஞாலத்தின் மாணப் பெரிது', 'கடலினும் பெரிது', 'வானினும் பெரிது' என்று கூறி விளக்குவார். 'மெய்ஞ்ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச் சுடரே' கருணையாற் காட்டக் கண்டுணர்ந்த காட்சியராகிய மணிவாசகப் பெருமான், அண்டப்பகுதியின் உண்டைப் பிறக் கத்தின் அளப்பருந் தன்மையையும் வளப்பெருங் காட்சியை யும் சிந்தித்து, 'நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்த' எல்லையற்ற அதன் எழிலை வியந்தருளினர். பாவக உணர் வினில் அழுந்தி யின்புறும் வண்கவிஞரது உள்ளப்பண்போ, செம்பொருட் காட்சி பெற்றோரது புரைதீர்ந்த ஞானப்பொலன் விழியோ பெறுதாரும் இயற்கையினைத் துருவித் துருவி யாரா யும் கூர்மதி நோக்கினராய இயற்கைநூற் புலவோரது ஆராய்ச்சி வாயிலாகவும், அவ்அறிவின் பயனாய்ப் படைக்கப் பட்டுள்ள நுண்மாண் வினைத்திறமமைந்த வியத்தகுங் கருவிகள் வாயிலாகவும், ஐயமுதலாம் வழுவின் நீங்கிய அறி வுக் கண்ணாலோ ஊன் கண்ணாலோ ஐம்புல உலகின் அளப் பருந் தன்மையை முறையே அறியக்கூடும். இற்றை ஞான் றைய இயற்கைக் கலைஞர்தம் காட்சியினையும் ஆற்றலினையும் என்னென்றியம்புவது! அவை ஞாலத்தையும் கடலையும் வானை யும் ஊடுருவிச் சென்று, அப்பானின்ற அண்டபகிரண்டங் களையும் அளாவி நிற்கின்றன. இடத்தையும் காலத்தையும் இலையென்னலாம்படி அடக்கியாள்கின்றன. இயற்கையின் இறுதியிலா வல்லமையைத் துணைக்கொண்டு எண்ணிய

எண்ணியாங்கு எய்தும் இருந்தவப் பயனையும் ஒருவாறு பெற்று மகிழ்கின்றனர். வெருவந்தம் விளக்கும் நீடாழியுல கினை ஓரிரு திங்களில் வலம்வரும் பெருமையும், எண்ணருந் தொலையினில் எழும் ஒலியனைத்தையும் கண்ணிமைப் பொழு தினிற் கடுகச் செவிமடுக்கும் மாண்பும், சேய்மைக் காட்சியும், சேய்மையில் வாழும் மக்களோடு அளவளாவும் சீர்மையும், விண்ணூரும் பறவையேமான அதனினும் மேம்பட விரை வொடியங்கும் வானூர்திகளி லிவர்ந்து காலினைப் பொருட் படுத்தாது திரியும் மிடுக்கும், மற்றும் இவையன்ன பிறவும் அதற்கு மெய்க்கரி புகலுகின்றன. இயற்கைநூல் இம்மை யின்பங்களை மன்னுயிர்க்கு வாரியிறைத்தலு மன்றி, மலர்தலை வையமும் சிற்றணுப் புரையக் கருதலளவைக்குத் திகழும் அண்டத்தின் அளப்பருங் காட்சியை ஊட்டி, அதனால் எழும் மாபெரும் வியப்பில் நம்மை மூழ்கவும் செய்கின்றது. இயற் கையே இவ்வண்ணம் எல்லை மருவாத தன்மைத்தாயின், அதனை விளையாட்டாக உளதாக்கியும் நிலைபெறுத்தியும் நீக்கி யும் போதரும் ஆதியம் பகவனது எண்ணிறந்த எல்லையிலாத பெருஞ்சீர் எத்தன்மையதாதல் வேண்டும் என இடை யிடையே உன்னவும் ஒருவாறு தூண்டுகிறது. இயற்கை நூலின் பண்பையும் பயனையும் எவரே எள்ளி யுரைப்பார்!

இயற்கைநூல்வாயிலாக உலகப் பரப்பின் பெற்றியை ஓர்ந்து மகிழ நினைப்பார் ஏனைய நூல்களினும் வானநூலையே முனைந்து கற்கத் தலைப்படல் வேண்டும். இந்நூலின்கண் அமைந்த ஒரு சிறப்பு யாதெனில், இந்நூலோர் எடுத்தாளும் பெருந்தொலைகள் உள்ளக் கிழியின்கண் வரைந்த ஓவியம் போல அறிவுக்குத் தெளிவாக மிளிராமையே. உன்னருந் தொலைகளை வானநூலறிஞர் கோடி மைல்களெனினும் இலக் கங் கோடி மைல்களெனினும், மாணப் பெரிதாகிய ஒன்றை நாம் கருதுவதன்றி, அவ்விரண்டின் வேறுபாட்டை யறியப் புகுவதில்லை. ஆதலின் அவைகளை மனப்படம் வரைந்து அளவிட்டுக் காணுதற்குச் சாலவும் துணைபுரியும் ஒரு சில விரகுகளை நாடமுயலுதல் நன்மைபயத்தற்பாலதேயாம்.

காரிருள் பருகிக் கவினொளி காலும் பல்கதிர்ப் பருதி, தன்னைச் சுற்றி வட்டமிட்டோடும் இவ்வைய உண்டையினின் றும் ஒன்பது கோடியே முப்பத்து மூன்று இலக்கம் மைல் களுக்கப்பால் உள்ளதெனவும், வானத்துலவும் கோள்கள் அனைத்திலும் மிக அண்மையதான திங்கள் இந்நிலவுலகினின் றும் ஈரிலக்கத்து நாற்பதினாயிரம் (240,000) மைல் தொலைவில் உள்ளதெனவும் வானநூலறிஞர் வகுத்துரைக்குங்கால், ஒரு

வாறு அவ்விரு தொலைகளின் ஏற்றத்தாழ்ச்சிகளை நாம் உணருவது உண்மையே. ஆயினும் செங்கதிரினின்றும் புறப்படும் ஒளிக்கதிர் ஒன்று இந்நிலத்தினைச் சார்தற்கு எட்டு நிமிடங்கள் செல்லுமெனின், அவ்வொளி தண்மதியிற்பட்டு மீளுங்கால் அதனின்று புறப்படும் கதிர் ஒன்றரை விநாடிக்குள் நம்மைச் சாரும் என நவிலுதல் அறிவிற்கு முன்னினும் தெளிவினை அளிக்கின்றது என்பதில் எட்டுணையும் ஐயமில்லை.

ஒரு விநாடிக்கு இலக்கத்து எண்பத்தாறாயிரத்து முந்நூறு (186,300) மைல் விசையொடு ஒளிக்கதிர் இயங்குகின்றது; அதனினும் மிக்க விரைவொடு பாய்வதொன்றை இதுகாறும் எவரும் கண்டிலர். அங்ஙனமாயின், ஒளிக்கதிர் ஓராண்டிற் செல்லக்கூடிய தொலை ஆறிலக்கங் கோடியாகும்; இத்தொலையினை 'ஒளியாண்' டென்னல் வானநூலாரது மரபாகும். இம்மரபின்படி, நம்மனோர்க்கு மிக்க அண்மையிலுள்ள விண்மீன் சற்றேறத் தாழ நான்கு ஒளியாண்டுத் தொலையில் அமர்ந்துள்ளதாகும். அதற்கு அடுத்த தொலையிலுள்ள விண்மீன் சற்று அப்பாலுள்ளது. இதனல் அறியக் கிடப்பது யாதெனின், நாம் இவ்விண் மீன்கள் இரண்டினையும் நோக்கும் அக்கணத்தில் அம்மீன்களினின்றும் நான்கு ஆண்டுகட்கு முன்பு புறப்பட்டு வந்த ஒளிக்கதிரினையே காண்கின்றோம் என்பதே.

'வீக' என்னும் மீனினின்றும் இன்று வருவதாகத்தோன்றும் ஒளி இருபத்தேழு ஆண்டுகட்கு முன்னர் அதனினின்றும் புறப்பட்ட ஒன்றே. துணைக்கருவிகளின்றி நேர்கொடு நாம் காணும் விண்மீன்களிற் பெரும்பாலன, பண்டொருகால் பதினேழாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கலீலீயோ காலிலி என்னும் புகழ்சான்ற நூலறிஞர் அவற்றை உற்றுநோக்கியாராய்ந்தபோதும், அன்று தாம் புதிதாக இயற்றிய தொலையாடியின் துணையால் வியாழன் என்னும் கோளினைச் சுற்றிவரும் மதிகளைக் கண்டபோதும், நீலவானில் 'பால்வீதி' யெனப் பகரப்படுவது வெவ்வேறான பலப்பல உடுக்களின் தொகுதியாய் அமைந்ததுவே என அறிந்துரைத்தபோதும் அவற்றினின்றும் வெளிப்போந்த ஒளியினலேயே அவைபுலனுயினவேயாம். தொலையாடிவாயிலாக நமக்குப் புலப்படும் சுந்தரத்தாரகைக் கணங்கள் பலவற்றை, இயேசுநாதரது திருவவதாரத்திற்குப் பல்லாண்டுகட்குமுன்னர் அவற்றைவிட்டெழுந்த ஒளிக்கதிர்களின் உதவியாலேயே நாம் காண்கிறோம். வான்முகட்டின்மீது வெகு தொலையில் மிளிரும் திருகுப் புகைமீன்கள் (Spiral nebulae) கோடி ஒளியாண்டுத் தொலைக் கப்பா

லும் உள்ளன. எண்ணில் அடங்கா இத்தகைய தொலைகளை அளவிடுமாறு யாங்ஙனம் என்பதை அறிய விழைவார் வேறு சில நூல்களைக் கற்றல் வேண்டும்.

உலகப் பரப்பு அளப்பருந் தன்மையினதாகலின், அருகாமையிலுள்ள பொருள்களையே உள்ளவாறு நாம் திட்டமாக அறிதல் இயலும் என்பது பெறப்படுகின்றது. ஒரு கடிகாரத்தில் 'டக்' என்னும் ஒலி எழும்போது நம் உள்ளத்தைப் பூவுலகின்கண் நிலைநிறுத்திக் கொண்டு இரவியை நோக்குவோமாயின், "அக்கணம் இரவியின் தோற்றம் இன்னவாறிருந்ததெனக் கூறுதற்கு எட்டரை நிமிடங்கள் காத்திருத்தல் இன்றியமையாததாகும்; என்னெனின். இரவியின் ஒளி நமது கட்புலனைச் சார அத்துணைக் காலம் பிடிக்குமன்றோ?" என்று எடுத்துக் காட்டுகிறார் ஓர் அறிஞர். ஆக, 'உலகத்தை உள்ளவாறு அறிதல்' என்னுங்கால், 'தோன்றும் வண்ணமே உலகினை அறிதல்' என்பதே அதன் பொருளாகின்றது. வானக் கோள்களின் பொது வடிவையும் இருப்பிடத்தையும் பற்றியவரை, இவ்வேறுபாடு தினைத்துணையளவேயாகும். ஏனெனின், ஒளி விசையினோடு ஒப்பிட்டு நோக்கின், அவையிரண்டும் அடையும் மாற்றம் மிகமந்தமாகவே நிகழ்கின்றது. ஆனல், அண்மையிலுள்ள ஒன்றின் நிலையோடும் துளக்கத்தோடும் ஒப்பிடும்போது, அவ்வேறுபாடு நினைவுறுத்தற் குரியதாகும். என்னெனின், இருகோள்களையும் ஓரமயத்துக் கண்டு ஒப்பிடும்போது, அவையிரண்டும் ஒரே வேளையில் அடையும் நிலைகளை நாம் கருதாது, வெவ்வேறு பொழுதுகளில் அடையும் நிலைகளையே காண நேரிடுகின்றது. அண்மையிலுள்ள கோளின் 1935-ம் ஆண்டின் நிலையைக் காணுங்கால், அதே கணத்துத் தோன்றும் சேய்மைக்கோளின் நிலை பல நூற்றாண்டுகட்கு முன்னிருந்த அதன் நிலையாகக் கூடும்.

ஆனல், நமது தற்போதைய ஆராய்ச்சிக்குரிய பொருளாவது, உலகப்படம் வரையப்பட்டுள்ள எழினி கழிபெரும் விரிவுடையதொன்று என்பதே. பேரறிஞர் ஹப்பிள் என்பாரது ஆராய்ச்சியின்படி, பத்துக்கோடி ஒளியாண்டுத் தொலையிலுள்ள புகைமீன்களும் உளவாகின்றன. பண்டொருகால் உலகிடையே பரக்கச் சிதறுண்டு கிடந்த சடப்பொருள் ஒருங்கியைந்து, நாளடைவில் ஒளிவிடும் உடுக்கணங்களாகவோ இரவிகளாகவோ, இறுக்க மடைந்து நிற்கும் மண்டலங்களை அவை குறிப்பன போலும்.

வானநூலார் என்னருந் தொலைகளைக் குறிக்க நேருங்கால், மற்றோர் அளவு கோலையும் கையாளுவதுண்டு. அது

ஒளியாண்டைப்போல அத்துணை எளிதாக உணரப்படுவதன் ருகலின், அதனைச் சற்று விரித்துரைத்தல் இன்றியமையாதது தாகும். ஒரு வெட்ட வெளியில் நின்றுகொண்டு சிறிது தொலையிலுள்ள ஒரு மரத்தை நோக்குவோமாயின், அதுவும் வெகு தொலையிலுள்ள மற்றொரு மரமும் ஒரே நேர்கோட்டின்கண் அமர்ந்திருப்பதாகவும், சேயதை அண்மையது மறைப்பதாகவும் தோன்றும். இந்நிலையில் யாம் சற்று நகருவோமாயின், அணித்தான மரம் தொலையிலுள்ள வேறொரு மரத்தினோடு ஒரு நேர்கோட்டில் அமர்ந்திருப்பதாகவும் வேறொரு மரத்தை மறைப்பதாகவும் தோன்றும். காண்போன் நிலையாக இராது நகரும்போது, அண்மையிலுள்ள ஒரு மரம், தொலையிலுள்ள மரங்களின் நிலைகளோடு ஒப்பிட்டு நோக்குங்கால், நிலைபெயர்ந்து செல்வதாகத் தோன்றுவதுபோல, நானிலம் நகர்ந்து செல்லும்போது, அணித்தான ஒரு விண்மீனது நிலை அதனினும் வெகு தொலையிலுள்ள விண்மீன்களின் நிலைகளை வைத்து நோக்கும்போது, வேறுபட்டு வருவதாகத் தோன்ற வேண்டுமல்லவா ? இந்நில உண்டை இரவியைச் சுற்றி வருங்கால், ஒரு நேர்வட்டமான வீதிவழியே சுழலாது ஒரு வழி நீண்டு மற்றொரு வழி குறுகிய நீளவட்டமான (Elliptical) வீதி வழியே செல்கின்றது. இத்தகைய நிலச்சுழற்சியால் ஒவ்வொரு விண்மீனும் ஒரு நீள் வட்டத்தின் (Longest Diameter) வழியே சுழன்று வருவதாகப் பார்வைக்குத் தோன்றுகிறது. இந்நீள் வட்டத்தின் நெடுவிட்டத்தின் பாதியாகிய ஆரம் (Radius) நமது விழியின்கட் கொள்ளும் கோணம் (அதாவது அவ் ஆரத்தின் இருநுனிகளினின்றும் விழிக்கு இழுக்கும் இருகோடுகளுக்கும் இடையிலுள்ள கோணம்) ஒரு விண்மீனினது நிலைப்பிறழ்ச்சி யெனப்படுகின்றது. ஒரு புள்ளியைச் சுற்றி யமையும் நான்கு நேர்கோணங்களுள் ஒவ்வொன்றையும் 90 பாகைகளாகவும் ஒவ்வொரு பாகையையும் (Degree) 60 கலைகளாகவும் (minutes), ஒவ்வொரு கலையையும் 60 விகலைகளாகவும் பகுத்தல் மரபாகலின், ஒரு விகலை ஒரு பாகையின் 3600 கூற்றில் ஒன்றாகும். ஒரு விண்மீனது நிலைப் பிறழ்ச்சி ஒரு விகலையாமாயின், அதனை ஒரு நிலைவிகல் தொலையினது எனல் வானநூலாரது வழக்கு. ('நிலை' 'விகலை' என்னும் இரண்டு சொற்களையும் புணர்த்திக் குறுக்குங்கால் வரும் சொல் 'நிலைவிகல்' Parsec). ஒரு நிலைவிகல் என்பது சுமார் மூன்று ஒளியாண்டுத் தொலையாகும். வானத்தின்கட்டோன்றும் பால்வீதி மட்டத்தின் (The plane of the milky way) இருமருங்கினும் இரு நேர்கூறாக அமர்ந்திருக்கும் முதன்மையான உடுத்தொகுதி வட்

டத்தின் மிக நீண்ட விட்டம் இம்முறைப்படி ஓரிலக்கம் நிலை விகல் தொலையி லுள்ளதென்ப.

1609-ம் ஆண்டில் கலிலியோ என்னும் வானநூலறிஞர் தொலையாடியைத் தாமாக இயற்றி வானை நோக்கித் திருப்பி அதன் வழியாக வானை ஆராய்ந்தபோது அவர் பலப்பல புத்துண்மைகளை யெல்லாம் கண்டு மகிழ்ந்து பிறர்க்கெடுத்தோதினர். அவற்றில் ஓரிரண்டு முன்னரே கூறப்பட்டுள்ளன; அவையாவன :—வியாழன் என்னும் கோளை நான்கு துணைக் கோள்கள் (satellites) சூழ்ந்து சுற்றி வருகின்றன என்பதும், பால்வீதி யென்பது பற்பல வெவ்வேறான விண்மீன்களின் தொகுதியே என்பதுமே. அப்பேரறிவாளரது ஆராய்ச்சியின் பயனாய், அஞ்ஞான்றைய நூலோரது மனப்பான்மையே மாறுபடுவதாயிற்று. நிலவுலகையும் இரவியையும் கோள்களையும் உடுக்களையும் தன்னகத் தடக்கிய பேரண்டம் தாம் அதுகாறும் கருதி வந்ததினும் பன்மடங்கு விரிவானது என்னும் உணர்ச்சி அப்புலவோரது உள்ளத்து ஓங்கத் தலைப்பட்டது. அப்பேரண்டம் எல்லையுள்ளதாக அதுவரை கருதப்பட்டது போக, அன்று தொட்டு எல்லையிலாத தொன்றாகத் தோன்றத் தொடங்கிற்று. ஒன்றின்மே லொன்றாக அடுக்கடுக்காகப் புதிய உண்மைகள் மேலும் மேலும் புலப்படலும், இப்பேரண்டம் அளவுபடாது பரந்திருக்குங்கொல் என்ற நினைவு வான நூற்புலவோரது உள்ளத்து வேரூன்றலாயிற்று. சில ஆண்டுகட்கு முன்னர் ஐன்ஸ்டீன் என்னும் பெருமைசால் அறிஞர் நிகழ்த்திய பேராராய்ச்சியின் பயனாய் அறிவுடையாரது உள்ளம் மீண்டும் இக்கோடியை விட்டுப் பண்டைய கோடிக்கே ஊசலாடிச் சென்றுள்ளது. இப்பேரண்டமாகிய உலகம் எல்லையற்றதாதல் ஒன்றென்று இந்நாளைய இயற்கைக் கலைஞர் வற்புறுத்தி வருவதுமன்றி, அதன் பருமனை அளவிட்டறியவும் முயன்று வந்துள்ளனர். ஆலந்திய (Holland) நாட்டு வானநூலறிஞரான டிசிட்டர் என்பார் அதன் பருமனைத் தசகோடி ஒளியாண்டாக (அதாவது அறுபது இலக்கம் கோடாகோடி மைல்களாக)ப் பரும்படியாகக் கணக்கிட்டுள்ளனர். இத்தொலை இப்புவியினின்றும் உயர்வற உயர்ந்த தொலையிலுள்ள திருகுப்புகையினது தொலைக்கும் பத்து மடங்காகிறது. நாற்பாலளவை யுலகாகிய (Four-dimensional world) இவ்வுலகம் ஐன்ஸ்டீனது ஆராய்ச்சியின் படி 10^{54} (பத்தின் 54 அடுக்காகும் எண்)கிராம் நிறையுள்ளதாகவும், அதாவது இரவியின் நிறைக்குப் பத்திலக்கங் கோடாகோடி மடங்காவதாகவும் தென்படுகின்றது.

கருதரிய வகையில் நனியகன்ற இவ்வுலகப் பெரும்பரப் பிடை சடப்பொருள் வெகு நொய்தாக விரிக்கப்பட்டுள்ள தென்பது நாம் நினைவுறுத்தத் தகும் ஓர் உண்மை. இதன் நொய்ம்மையை எடுத்துரைக்கப்புகின், மீனொளி இங்நிலவுல கத்திற்கு வரும் வழியில் இடைப்பட்டுள்ள உடுமண்டலப் பாழடவிக்குள் ஒரு கன அங்குலத்திற்கு ஓரணுவீதமே பொருள் காணப்படுகின்றது என்னலாம். ஒரு சிறு நீர்த்துளி யின்கண் பல இலக்கங் கோடாகோடி அணுக்கள் உள வெனின், உடுத்தொகுதியூடுள்ள பெருவெளியிடை சடப் பொருள் எத்துணை வறிதாகும் என்பதை ஒருவாறு உணர லாகும். (தொடரும்)

ஞாலநூல் (Geology)

[திரு. S. நடராஜன், அவர்கள் B. A.]

(முன் ௩-அ௨-ம் பக்கத்தொடர்ச்சி)

(௬) ஞாலத்தின் மேற்பகுதியின் (outer crest) வெளிப் பாகத்தைய பற்றி ஆசிரியர் டாலி (Professor Daly) என் பார் கூறுங்கால், ஒவ்வொரு கண்டமும் (continent) ஒரு தனிப்பாறைக் கட்டி எனவும், அவை பளிங்குபோன்ற முகில்நிறக் கற்களால் ஆன அடுக்கின் மேல் நிற்கின்றன எனவும், இவ்வடுக்கு முறையே வழுவழுப்பான கற்களில் நிற்கின்றன எனவும், இக்கண்ணாடிபோன்ற அடுக்கானது ஞாலத்தின் மேற்புறத்தில் அழுத்தப்படும் பொழுது இளகக் கூடிய தாயும் ஆனால் மேற்கனத்தால் இறுக்கப்பட்டிருப்ப தாயும் கூறுகின்றார். போவன் (Bowen) என்னும் மற்றொரு ஆசிரியர் வெளிப்பாகத்தை அடுத்த படையில் நல்ல கெட்டியாயுள்ள கருங்கற் படையாய் இருத்தல் வேண்டும் எனக்கூறுகின்றார். ஜெர்மானிய ஆசிரியர்கள் வெளிப்பகுதி யின்கீழ் கொதித்துக்கொண்டிருக்கும் அனற் குழம்புகள் காணப்படும் என்கின்றனர். இவ்வாறு கருத்து வேறுபாடு களை எடுத்துக்கூறுவது சுருங்கிய இடத்தில் கூடாத காரியமா கையால் ஈண்டு ஒரு பகுதியில் காணப்படும் வேற்றுமைகளில் சிலவற்றை மட்டும் எடுத்துக்காட்டி ஆசிரியர் ஹாப்ஸ் (Hobbs) என்பார் கட்டன்பெர்க் (Gutenberg) என்பவரின் கருத்தைத் தழுவிக் கூறும் ஞாலத்தின் அடுக்குவகையை மட்டும் கூறி நிறுத்துவாம்.

இவர் கருத்துப்படி உட்பகுதி இரும்பாலும் கல்லாலும் ஆக்கப்பட்டுள்ளது; இதன் திண்மை 6·93. இடைப்பகுதி நிக்கலாலும் இரும்பாலும் ஆயது; திண்மை 7·6. மேற்பகுதி கல்லால் ஆனது; திண்மை 3·6. மேற்றோடு கலவைப்பொருளாலும் நெருப்புப்பாறையாலும் ஆனது.

9. ஞால உற்பத்தியைப்பற்றிப் பல்வேறு சமயத்தினர் பல்வேறு கருத்துக்கொண்டுள்ளனர். சமயத் தலைவர்கள் கூறியுள்ள கருத்துக்களை ஆராய்வது மிகையாகையால், ஈண்டு ஞாலநூல் அறிஞர்கள் (geologists) கொண்டுள்ள கற்பனைக் கருத்துக்களையும், முடிவாக அவர்கள் கொண்டுள்ள கோட்பாடுகளையும், நந்தமிழ் நாட்டில் பல சமயங்கள் தோன்று முன்னர் நிலவி வந்த கருத்தையும் ஒருவாறு ஆராய்வாம்.

(உ) நாகரிக வளர்ச்சி நிரம்பப் பெறாத பண்டைமக்கள் பயங்கரமான எரிமலைத் தோற்றங்களைக் காணவும் ஞாலத்தின் வயிற்றில் நெருப்புக் குழம்புகள் கொதித்துக் கொண்டிருப்பதாகக் கருதினர். இக்குழம்புகள் மேல் தோட்டின் மெல்லிய பாகங்களை இடித்துக்கொண்டு மேல் வருவதாக முடிவுகட்டினர். இஃது ஆதியில் எரிந்துகொண்டிருந்து இதுகாலை அணைந்து ஆறிக் குளிர்ந்து வரவேண்டும் என எண்ணினர். மண் கம்பத்தின் காரணமாக ஞாலத்தின் அடியில் இருந்து வரும் நீரைக்கண்ட பாபிலோனியர் இஞ்ஞாலம் நீரில் மிதக்கும் ஒரு கப்பல் போன்றது எனக் கூறினர். யூதரும் இதை ஒருவாறு ஒப்புக்கொண்டனர். கி. பி. 611-ல் அனக்சிமாண்டர் (Anaximander) ஞாலமும், விண் மீன்களும் நீர்ப்பிண்டங்கள் எனக் கூறினர். இவருக்கு ஒரு நூற்றாண்டிற்குப் பின்னர் வாழ்ந்த ஹெராக்லீட்டஸ் (Heraclitus) நெருப்புப்பிண்டத்தால் இஞ்ஞாலம் ஆக்கப்பட்டுளது என்றார். இவர் காலத்தில் பெரும்புலவராய் விளங்கிய பிதாகோரஸ் (Pythagoras) அண்டப்பரப்பின் நடுவிலுள்ள ஊழித்தியை 24 மணிநேரத்திற்கு ஒரு தரம் சுற்றும் ஓர் கோளம் ஞாலம் என்று முடிவு கட்டினர். நிலநூலாசிரியரான ஸ்ட்ராபோ (The Glographer Strabo) மத்திய தரைக் கடலில் அடிக்கடி புதிது புதிதாகத் தோன்றும் தீவுகளுக்குக் காரணம் ஞாலத்தின் அடிவயிற்றிலுள்ள நெருப்பு எனக் கருதினர். செனெக்கா (Seneca) என்பார் எரிமலைகள் ஞாலத்தின் வயிற்றில் இருக்கும் நெருப்பை வெளியில் கொண்டு வரும் வாய்க்கால்கள் என்றார். மேற்றிசை நாட்டினர் புது நாடுகள் கண்டுபிடிக்கும் ஆர்வத்தோடு நாற்றிசையும் சென்ற காலத்து அவர்கள் கண்ட புது எரிமலைகளின் காட்சியும்

ஞாலத்தின் மத்தி நெருப்பாய் இருத்தல் வேண்டும் என்ற எண்ணத்தை வற்புறுத்தியது.

(ங) கி. பி. 1596—1650-ல் திகழ்ந்த டெஸ்கார்டிஸ் (Descartes) என்பார் சூரியனையும், விண்மீன்களையும் சுற்றி மங்கலான மேகத்தைப் போன்ற ஒரு திட்டமான வடிவற்ற பல்கோடி ஆவியாயுள்ள சிறுமீன் கூட்டங்கள் தவழ்ந்து திரிகின்றன எனவும்; இவைகள் ஒவ்வொன்றும் தந்தமக்கென்று ஏற்பட்டுள்ள ஒவ்வொரு வட்டத்தில் சுழன்றுகொண்டிருக்கின்றன எனவும்; இவைகள் ஆதியில் எரிந்துகொண்டு பளபளவென இருந்தன எனவும்; நாட்செல்லச் செல்ல இவற்றின் மேற்புறம் சுழலுவதால் ஒளிமழுங்கிக் குளிர ஞாயிற்றின் பேரொளியால் அதன் வட்டத்தினுள் இழுக்கப்பட்டன எனவும்; இவ்வாறு எரிந்துகொண்டிருந்து பின்னர் ஒளி மழுங்கிக் குளிர்ந்து ஞாயிற்றால் இழுத்துக்கொள்ளப்பட்ட கோள்களுள் ஞாலமும் ஒன்று எனவும் கூறினர். இதற்கு கார்டீசியன் கோட்பாடு (The Cartesian Philosophy) எனப் பெயர். பிற்காலத்து ஆராய்ச்சியில் இக்கோட்பாடு நிலைக்கவில்லை எனினும் இக்கோட்பாட்டின் கொள்கைகளிற் சில தற்காலக் கோட்பாடுகளுக்கு மூலாதாரமாயின.

(ச) கி. பி. 1646-1716-ல் எண்ணளவை நூற் பெரும்புலவரான லீப்நிட்ஸ் (The great Mathematician Leibnitz) என்பவரின் கூற்றுப்படி இஞ்ஞாலமானது ஆதியில் எரிந்துகொண்டிருந்த ஒரு பிண்டமாம். பின்னர் எரியக்கூடிய பொருள்கள் குறைந்துவிட்டபடியால் குளிர்ந்து கண்ணாடி போல் பளபளவென விளங்கியதாம். இதன் பின்னர் இதைச் சுற்றிக்கொண்டிருந்த ஆவிகள் குளிர்ந்து ஒன்றுசேர்ந்து ஒரு மாகடலாய்க் கண்ணாடி போன்ற மேற்பரப்பைச் சுற்றி அமைய, நீரும் நிலமும் உண்டாயதாம்.

(ரு) இன்னுஞ் சிலர் இஞ்ஞாலமானது சுழலும் ஞாயிற்றினின்றும் சிதறி வந்த ஒரு திவலை எனவும், எவ்வாறு எரிகின்ற விளக்கினின்றும் உதிர்கின்ற பொறியானது சிறிதுபோழ்து எரிந்துகொண்டிருந்து பின்னர் குளிர்ந்து விடுகிறதோ அதே போன்று ஞாயிற்றினின்றும் சிதறிவந்த பொறியாகிய இம் மண்ணுலகமும் ஆதியில் எரிந்து கொண்டிருந்து இதுபோழ்து குளிர்ந்து வருகிறதெனவும் எண்ணுகின்றனர்.

(சா) பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில், ஞால உற்பத்தியைப் பற்றிக் கிளம்பிய பல கோட்பாடுகளை (Theories) நுணுக்கமாக ஆராயலானார்கள். இக்காலத்தில்

ஆவிமேகக் கற்பனை (Nebular Hypothesis) என்னும் கற்பனையானது உருப்பெற்று கான்ட் (Kant) லாப்லேஸ் (Laplace) ஹெர்ஷல் (Herschel) ஆகிய பண்டிதர்களால் கையாளப்பட்டு இக்காலம் வரை உண்மையென நம்பப்பட்டு வந்தது. இம்மூன்று அறிஞர்களும் இக் கற்பனையைப் பின் வருமாறு விவரித்தனர்:—

(எ) கான்ட் என்பார் ஓர் அரிய கலைஞானி. எண்ணளவைப்பொருளியல் நூலில் (Mathematical Physics) வல்லுநராய்விளங்கினர். இவரும் நியூடனும் (Newton) ஒரே காலத்தவர்கள். இவருடைய கருத்துக்கள் நியூடனின் முடிவுகளைப் பெரும்பாலும் தழுவியே இருந்தன. இவருக்குக் கிரேக்கக் கலைஞானிகளாய டேமோகிரிட்டஸ் (Democritus) லுக்கிரீஸியஸ் (Lucretius) என்பவர்களின் நூல்களில் விருப்பம் அதிகம். அவர்களுடைய அணுதத்துவத்தைப் பெரும்பாலும் இவர் தன்னுடைய கற்பனையில் புகுத்தினர். அகண்டாகாரப்பெருவெளியில், அந்தரத்தே தனித்தனியே, குளிர்ந்த கெட்டியான திண்மையற்ற பல்கோடி அணுக்கூட்டங்கள் ஒரே தன்மையாய்ச் சிதறிக் கிடந்தன எனவும்; இவைகள் ஒன்றை ஒன்று இழுக்கும் சக்தியால் (Law of gravitation) ஒன்று சேர்ந்து சுழன்று கோள வடிவங்கள் அடைந்தன எனவும்; இவ்வாறு சுழலும் வேகத்தால் வடகோடும் தென் கோடும் சற்றுத் தட்டையாக, மத்திய பாகம் பெருத்துத் தற்கால உரு எய்தியதெனவும்; இக்கோள்களுக்குச் சனிக்கு இருப்பது போன்ற ஒரே மையமுள்ள இரு வட்டங்கள் தோன்றி அவை தெறித்து திங்கள்போன்ற சிறுகோளங்கள் உண்டாயதெனவும்; பல சிறு ஆவி மேகங்கள் ஒரு மையத்தில் நெருங்கிச் சேர்ந்தமையால் ஞாயிறு வெப்பத்துடன் உண்டாயதென்றும்; இஞ்ஞாயிற்றைப் பிற கோள்கள் கோழி முட்டை வட்டத்தை ஒத்த பாதையில் சுற்றி வருகின்றன எனவும் இவர்கூறினர்.

(அ) இவர் கொள்கையை லாப்லேஸ் மேலும் விவரித்தார். இவர் ஒரு பிரஞ்சு ஒளிநூல் அறிஞர். இப்பேரறிஞர் ஞால உற்பத்தியைப்பற்றி மேலெழுந்தவாரியாய்க் கூறிப் போந்தார். இவர் கருத்துக்களை வில்லியம் ஹெர்ஷல் (William Herschel) என்பார் விவரமாக விளக்கியுள்ளார். இவ் இருவரும் கையாண்ட லாப்லேசியன் கோட்பாடு ஆவி மேகக்கற்பனையேயாம். கான்ட் கூறியதற்கும் இதற்கும் சிற்சில வேறுபாடுகள் காணப்படினும் மூலாதாரக் கொள்கைகளில் இரண்டும் ஒன்றேயாம். இவர்களின் கூற்று பின்வருமாறு:—அகண்டாகாரப் பெருவெளியானது அதிக சூடாய்

உள்ளதும், மிகவும் மெல்லியதாயும், ஆவிவடிவாயுள்ளதாயும் ஆய சிறு விண்மீன்கூட்டங்களால் நிரம்பியிருந்தது. மட்ட கன்ற பலகோடி கற்பங்களாக விண்ணகமும், அதில் திகழ்ந்த ஊராத வான்மீன்களும் அணுக்களும் கோளவடிவாய்த் தங்களைத்தாமே சுற்றிக்கொண்டிருந்தன. இவைகளின் சூடு கணக்கிடுவதற் கரிதாய் இருந்ததுடன் இவைகளின் திண்மையும் குறைவாகவே இருந்தது. இவைகள் சுழன்று கொண்டே பிரகாசித்துக்கொண்டிருந்தன. வெட்ட வெளியில் சுழல்வதால் இவைகளின் ஒளிமங்க சூடு குளிரத் தொடங்கியது. இவ்வாறு குளிர்ந்தவை நெருங்கிக்குறைந்து இறுகவும் வேகமாய்ச் சுற்ற ஆரம்பித்தன. ஒன்றோடு ஒன்று நெருங்கி வேகமாய்ச் சுழன்றும் வரவர, விரிமையத் (centrifugal force) தன்மை ஏற்பட்டு விலகி வடகோட்டு தென்கோட்டு முனைகள் தட்டையாகத் தொடங்கின. இவ்வாறு வட தென் முனைகள் தட்டையாகவும், நடுப்பகுதி பெரியதாகி ஞாயிறு செல்லும் நிரக்ஷ ரேகை (equator) யும் உஷ்ண மண்டலமும் எழுந்தன. காலப்போக்கில் குவிமையத் தன்மையானது மத்தியை நாடுகிற (Centri petal force) தன்மைக்குச் சரியாக, மத்திக்கு வெகு தூரத்திலுள்ள, ஆவி வடிவாய்ச் செறிவற்றிருந்த பிண்டங்களை ஞாயிறு இழுத்து, உஷ்ணமண்டலத்துப் பகுதிகளை, இறுகச் செய்து பெரிதாகிக் கிச்சிலிப்பழ வடிவமாக்கிற்று. அந்தரத்தே நிலவிய பல கோடி அணுக்களும் இம்மாதிரியே நெருங்கி பிண்டம், அண்டம் பிண்டாண்டம் பேரண்டம் ஆயவையாகி வெட்ட வெளியில் நிலவலாயின. இவ்வாறு நெருங்கிச் சேர்ந்துள்ள ஓர் அண்டத்தில் அல்லது ஞாயிற்றின் விண்வட்டத்தில் ஒரு பிண்டமாகத்தோன்றிய ஞாலத்திற்கு சனிக்குத் தற்காலம் இருக்கின்ற ஒரே மையமுள்ள இருவட்டங்கள் போன்றவை இருந்தன. பின்னரும் சுழலும் வேகத்தால் ஞாலத்தின் திண்மை (Density) அதிகப்பட இவ் வட்டங்கள் தெறித்து சிறு கோளமாகிய சந்திரன் ஆயிற்று. இவ்வாறு குளிர்ந்து இறுகி மாறிய காலங்களில் முதலில் ஞாலமானது நீர்க்கோளமாயும் அதைச்சுற்றி நீராவி கவிந்து இருந்ததாயும், பின்னர் குளிரக் குளிர நீரிலிருந்து நிலந் தோன்றியதாயும், நெருப்பாக இருந்து குளிர்ந்த காலத்தே கற்பாறைகளும் மலைகளும் தோன்றியதாயும் இவர்கள் கூறினர். ஆவிமேகக் கற்பனையை சர்வில்லியம் ஹேர்ஷல், சர் ஜியார்ஜ் டார்வின், சர் நார்மன் லிக்யர் பின்பற்றினர்கள். இவர்கள் அனேகமாய் கான்ட் கூற்றைத் தழுவியே வந்தனர். இவர்கள் எல்லாரும் ஞாலத்தின் நடுவில் நெருப்புக் குழம்பு இருப்பதாகவே தவறுகக் கருதினர்.

(தொடரும்)

வடிவுதிருந்த அறிவு வளர்ந்த வகை

[திரு க. ப. சந்தோஷம் அவர்கள், B.A., L.T.]

(முன் ௪0௬-ம் பக்கத் தொடர்ச்சி)

இப்பொழுது வையகத்தின் வடமுனையில் (North Pole) நானிருக்கின்றேன் என்றும், இப்பொழுது தென்முனையில் (South Pole) இருக்கின்றேன் என்றும், விண்ணிலுள்ள உடுக்களுக்குச் சென்றிருக்கின்றேன் என்றும் உங்கட்கு நான் சொல்கின்றேன். நீங்கள் அதை நம்பமாட்டீர்கள்; ஆதலின், மற்றொரு வகையில் என் கருத்தை உங்கட்கு விளக்குகின்றேன். நீங்கள் எல்லீரும் இப்பொழுது இங்கிருக்கின்றீர்கள். இப்பொழுது உங்கள் வீடுகளைப்பற்றி நினையுங்கள். யாது நிகழ்கின்றது? உங்கள் உடல்கள் இங்கிருக்கின்றன. உங்கள் நினைவோ வேறோரிடத்திலுள்ளது. இந்த வகையில் நினைவின் துணைகொண்டு இடம்பெயர்தலைப்பற்றிப் பேசப் போகின்றேன். ஒரு கழுதையின் நினைவு யாண்டிருந்து யாண்டுச் செல்லும்? வண்ணான் வீடும், அது வழக்கமாய் மேயுமிடமுமாகிய இவ்விரண்டிற்கும் இடையிலேயே அதன் நினைவுகள் ஓடுதல் கூடும். இவ்வெல்லைகளைக் கடந்து நினைவிற் செல்லுமாற்றல் கழுதைக்கில்லை. நினைவென்பது மூளையின் ஆற்றல். வெவ்வேறு மூளைகளின் உயர்ச்சியையுந் தாழ்ச்சியையுந் துணிய வேண்டுமாயின் குறித்த ஒரு மூளையினின்றுந் தோன்றும் எண்ணங்கள் எவ்வளவு விரிந்து செல்லக்கூடுமென்பது அளவுகோலாகும். கடவுளது மூளையின் ஆற்றலையும் நாம் இது கொண்டே துணியவேண்டும். கீழ்நிலையில் உள்ள உயிர்களுக்கு நினைவால் இடம் பெயரும் ஆற்றல் இல்லை. மக்களோ பேரளவில் இவ்வாற்றலை உடையவர்களாயிருப்பதால் மற்றெவ்வுயிரையும்விடச் சிறந்து விளங்குகின்றார். ஆயினும், நினைவின் வலி இத்துணையே என்று மக்கள் கரைகண்டாரல்லர். இவ்வாற்றலை முயற்சியாலும் பழக்கத்தாலும் வளர்க்க வளர்க்க அது பெருகிக்கொண்டே போகும். நினைவின் ஆற்றல் பல்லாயிரம் வகையில் நம்முடைய வாழ்க்கையில் வெளிப்படுகிறது. இவற்றிற் சில எங்ஙனம் நிகழ்கின்றன வென்பதை நாம் இன்னும் அறியவில்லை. அறியமாட்டாமையால் இவை அறிவின்பாற்படாவென்று அறிவியலார் விலக்குகின்றனர். நினைவின் ஆற்றலாற் பிறக்கின்ற வியத்தகு நிகழ்ச்சிகள் காலத்தானும், இடத்தானும் ஒன்றிற்கொன்று பெரிதும் சேய்மைப் பட்டனவாயிருத்தலின், அவற்றை ஆராய்ந்து ஒழுங்கு செய்வது அரிதாகின்றது. இவற்றிற் சில அடிக்கடி நிகழ்கின்றன.

அறிவியலின் உதவிகொண்டு இவற்றை நாம் விளக்க முடியாது. இதுபற்றி இவை, அறிவியலார் கூறுமாறு, இயற்கைக்கு முரண்பட்டனவென்று நாம் நினைத்துவிடுதல் சாலுமோ? ஒன்றும் இயற்கைக்கு முரண்பட்டது அன்று என்று நான் நினைக்கின்றேன். கடவுளைப்பற்றிய கருத்தும் இயற்கைக்கு முரண்பட்டதாயிருத்தல் கூடாது. கடவுளைப்பற்றிய கருத்துத் திருத்தமான தாயிருப்பின் அஃது இயற்கைக்கு எவ்வகையிலும் ஒத்ததாகவே யிருக்கும். நினைவின் பயனாக நிகழும் அரிய நிகழ்ச்சிகளை ஏற்றவாறு நாம் உணர்ந்து கொள்ளாதது இயற்கையின் குற்றமன்று. அறிவியலின் நிரம்பாமையே இதற்குக் காரணமாகும். நினைவின் பெரிய ஆற்றலைக் காட்டும் பெற்றிய வாய, எனது வாழ்க்கையில் நேர்ந்த சிலவற்றை ஈண்டுக் கூறுமுன் முகவுரையாக இவற்றைச் சொல்கின்றேன். இப்பொழுது யான் நவிலப்போவதை நீங்கள் நம்ப மறுப்பீர்கள் என்று நினைக்கின்றேன்.

நினைவின் தன்மையைக் குறித்துப் பேசுங்கால் மின்சார ஆற்றலைக் கருதநேர்கின்றது. மின்சாரம் பலப்பல வகைகளில் நமக்கு முன் வெளிப்படுகின்றது ஆயினும், அஃது இதுதான் என்று வரையறுத்துக் கூறவல்லார் ஒருவருமிலர். இதைப் பற்றி எவ்வளவோ ஆராய்ச்சி நிகழ்த்தப்பட்டிருக்கிறது. என்றாலும், அறிவியலார் மின்சாரத்தைப் பகுத்துப் பகுத்துப் பார்த்துக்கொண்டே செல்லச்செல்ல இறுதியில் அஃது இன்மையில் (ஒன்று மில்லாமையில்) முடிந்து விடுமென்பது திண்ணம். ஒன்றுமில்லாமையிலிருந்தே அது தொடக்கம் பெறவேண்டும். அறிவியலார், பருப்பொருள்(Matter) அணுக்களாலாயது (Atoms) என்ற முடிபிற்கு வந்தபின் அணுவிலுஞ் சிறிய கூறுகள் உண்டென்று கண்டுபிடித்திருக்கின்றார்கள். பண்டைத் தமிழரோ பன்னெடுங்காலத்திற்கு முன்னரே அணுவைப்பற்றிய அறிவுடையவர்களா யிருந்தார்கள். Atoms என்று அறிவியலார் கூறுவதைத் தமிழர்கள் அணுவென்றும், அணுவில் ஆயிரத்தில் ஒரு கூற்றைப் பரமாணு வென்றும் மொழிந்திருக்கின்றனர். இத்துடன் எல்லா உயிரிலும் அணு உட்கலந்திருக்கின்றதென்று அவர்கள் நவின்றனர். மின்சார ஆற்றல் நாடோறும் நம்மால் வழங்கப்படுகின்றது. அது யாது என்பதைப்பற்றி நாம் பலவாறு நினைத்தல் கூடும். (மின்சாரம் யாதென்பதற்கு விடையளித்தல் அரிது. மின்சாரத்தைக்கொண்டு மற்றவற்றை விளக்கலாம். மற்றவற்றைக் கொண்டு மின்சாரத்தை அறிய வியலாது.) மின்சாரம் யாது என்று நாமறியோமாயினும், அதன் உண்மைபற்றி ஒருவருப்


ஐயப்படுவதில்லை. இஃதிவ்வாறாயின் நினைவைப்பற்றி யாம் என்ன சொல்வது? மின்சாரத்திலும் நினைவு நுண்ணிய தன்றோ?

யாம் பள்ளியிற் பயின்ற நாளில் 63 தனிப் பருப்பொருள்கள் (Elements) உண்டென்று மொழிந்தனர். இவ் அறுபத்து மூன்று தனிப் பருப்பொருள்களும் ஒன்றோடொன்று இணைவதால் வையகத்தில் நாம் காணும் யாவுந் தோன்றினவென்று சொல்லப்பட்டது. யான் பொறியியல் (Engineering) கற்க வந்தபொழுது 77 தனிப்பருப்பொருள்கள் உண்டென்று கூறினர். 3½ ஆண்டில் 14 புதுத் தனிப்பருப்பொருள்கள் வெளிக்கிளம்பின. இதன் பிறகு, யான் கல்லூரியை விட்டு வேலை ஏற்றுக்கொண்டேன். இப்பொழுது செய்தித் தாட்களில் ஒரே ஒரு தனிப்பொருள்தான் உண்டென்று யான் படிக்கின்றேன். [ஈண்டு ஆசிரியர் கதிரி (Radium) யைப்பற்றிப் பல கூறுகின்றார். இச்சொற்பொழிவு நிகழ்ந்த காலத்திற்கும் இற்றைக்கும் இடையில் அறிவியற்றுறையில் கண்டு பிடிக்கப்பட்டிருக்கும் பல உண்மைகளை நோக்கி, ஆசிரியர் கூறிய யாவற்றையும் ஈண்டெழுதாது, பொருந்தியவற்றை மாத்திரம் எடுத்துக்கொள்வோம். கதிரியின் ஒரு வியத்தகு தன்மை என்னவெனின், அது தானாகவே ஒளிவிடும் ஆற்றல் உடையது. அன்றியும், அஃதெவ்விடத்திலிருப்பினும் அவ்விடத்திலுள்ள வெப்பத்தைப் பார்க்கிலும் அதிக வெப்பத்தைத் தன்பாலுடையதா யிருக்கின்றது. யாண்டிருந்து இதன் ஒளியும் வெப்பமும் தோன்றுகின்றன? நாமறிந்தவளவில் ஓராற்றல் (Energy) மற்றொரு ஆற்றலிலிருந்துதான் வெளிப்பட வேண்டும். ஞாயிற்றின் வெளிச்சத்திற்கும் இஃதொக்கும். கதிரியின் ஒளியும் வெப்பமும் யாண்டிருந்து தோன்றுகின்றன. என்ற ஆராய்ச்சி நிகழ்ந்தபோது மிக அரிய உண்மை ஒன்று புலப்பட்டது. கதிரி தன் நிலையிலிருந்து வேறுபட்டு மற்றொன்றாக மாறுதலே அதன் ஒளிக்கும் வெப்பத்திற்கும் பிறப்பிடம் என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இம்மாறுதல் கடிதில் நிகழ்வதில்லை. பன்னூறு ஆண்டுகளில் ஒரு சிறு கதிரித்திரளின் மிகச்சிறுபாகமே நிலைமாறும். ஒளி காலுகின்ற கதிரி, காலங்கழியக்கழிய வெவ்வேறு தனிப்பருப்பொருள்களாக மாறி, இறுதியில் ஒளியற்ற ஈயமாக நிற்கின்றது. கதிரி என்ற ஒரு தனிப்பருப்பொருளே வெவ்வேறு தனிப்பருப் பொருள்களாக மாறுமாயின், தனிப்பருப்பொருள்கள் பலவென்று எங்ஙனங் கூறுதல் கூடும்? அறிவியலார் இதை நுணுகி ஆராய்ந்து, இறுக்கம், இளக்கம், வளி

எனும் மூன்று நிலையிலும் உள்ள பருப்பொருள்கள் எல்லாம் ஒரே தனிப் பருப்பொருளிலிருந்து கிளம்பினவென்று முடிவு கட்டியிருக்கின்றனர்.]

இந்த ஒரு தனிப்பருப்பொருளும் கடைசியில் ஒன்று மின்மையில் முடியும். (பருப்பொருள் அணுக்களாலாயதென்று கண்டோம். அணுக்களிலும் கூறுகள் உளவென்றும் பார்த்தோம். இக்கூறுகள் மின்சாரத் தன்மையுடையன. மின்சாரம் என்பது ஒரு ஆற்றல் ஆதலின், அதைப் பருப்பொருள் என்று கூறவொல்லாது. ஆற்றலே பருப்பொருளாகப் பாரிக்கின்றது. ஆசிரியர் ஈண்டுக் கூறியதனுண்மையை இதனுல் அறிக.) மேலை நாட்டு அறிஞர்கள் பருப்பொருள் இயலை முற்றும் உணர்ந்துவிட்டதாக நினைக்கின்றனர். இது பெருந்தவருகும். இவருட் சிலர் இதையறிந்திருக்கின்றனர். நமது நாட்டுப் பண்டை அறிஞர்கள் பருப்பொருள்களுக்கும் நினைவிற்கும் (மனத்திற்கும்) உள்ள தொடர்பை வரையறுத்து விளம்பியுளர். அவர்கள் கண்ட முடிபை விலக்கலரிது. பருப்பொருளும் நினைவும் ஒன்றே என்பது அவர்கள் முடிபு. இதை ஒரு மேலைநாட்டு அறிவியல் வல்லானுக்குக் கூறினுல் அவன் அதற்கிணங்க மாட்டான். நினைவும் பருப்பொருளும் ஒன்ருயின், பருப்பொருளுக்கு இறுக்கம் உள்ளவாறு, நினைவிற்கும் இறுக்கம் உளதாங்கொல்? என்ற கேள்விதோன்றும். இதற்கு விடை, நினைவிற்கு இறுக்கம் இல்லை என்பதே. இறுக்கம் சற்றுமில்லாப் பருப்பொருளைப்பற்றி நமது மூதறிஞர் கூறியிருக்கின்றனர். அதன் தன்மை இன்னதென்று இப்பொழுது உற்று நோக்குவோம். (தொடரும்)

நாடகத்திற்கு இசை நஞ்சை யொத்தது; குறிப்பிட்ட சிறு அளவிற்கு அது நலனளிக்கும்; அதற்கு மேற்படின் அது நலங்கொன்று சுவை கெடுக்கும். —ஒரு நடிகர்.



சிவஞானபோதக் கருத்து

[திரு. மா. வே. நெல்லையப்ப பிள்ளை அவர்கள், B. A.]

நான்காவது சூத்திரம்

முதலாவது அதிகரணம்

9. ஒரு பொருளுக்குரிய பெயரை அதனோடு நெருங்கிய இயைபுடைய பிறிதொரு பொருளுக்கும் ஒரோவழி மக்கள் வழங்குதல்பற்றி அந்தக்கரணான்மவாதி மயங்காதிருக்கும் பொருட்டு ஆசிரியர் ஆன்மாவை அதற்கு எப்பொழுதும் இலக்கணமாகவுடைய அறிவுடைமையால் அறிந்துகொள்ளல் வேண்டும் என்று அவனுக்கு வற்புறுத்திக் கூறுகின்றார். தத்துவக் கருவிகள் அறிவில்லாதனவாயினும், அறியும்பொருளாகிய ஆன்மா உலக விடயங்களை அறிதற்கு அவை ஆன்மாவுக்கு எதிர்முகமாம்பொழுது கண்ணாடியின் நிழல்போல அவைகளிடத்து எதிர்விம்பமாய் அறிவு உண்டாகின்றது. தத்துவக் கருவிகள் பிரகாசமுடையனவாய் விளங்குதற்குக் காரணம் அவற்றைக் கலந்து ஊடுருவிநிற்கின்ற நிவிர்த்திகலை முதலிய சுத்தமாயாகலைகளின் ஒளியாம். தத்துவக் கருவிகளுடைய பிரகாசமானது அவற்றில் விளங்கும் சுத்தமாயாகலை வேறுபாடுகளுக்குத் தக்கவாறு உள்ளது. ஆன்மாவுக்குக் கருவிகளின் பிரகாசமானது அண்மை சேய்மைகளுக்குத் தக்கபடி வேறுபடுகின்றது. ஆன்மாவுக்குச் சேய்மையிலுள்ள ஐம்பொறிகளின் பிரகாசத்தைப் பார்க்கிலும் அண்மையிலிருக்கிற புற அந்தக்கரணங்களின் பிரகாசம் ஏற்றமாயும், புற அந்தக்கரணங்களின் பிரகாசத்தைப்பார்க்கிலும் ஆன்மாவுக்கு இன்னும் அண்மையிலிருக்கிற உள் அந்தக்கரணங்களின் பிரகாசம் ஏற்றமாயுமுள்ளன. இந்தக் கருவிகள் எல்லாம் உடலின்கண் ஒன்றுசேர்ந்து விரவியிருத்தலால் உள் அந்தக்கரணங்கள் புற அந்தக்கரணங்களுக்குப் பிரகாசங் கொடுப்பனவாயும், புற அந்தக்கரணங்கள் ஐம்பொறிகளுக்குப் பிரகாசங் கொடுப்பனவாயுமுள்ளன. இந்தக்கருத்தை ஆசிரியர் தத்துவக் கருவிகள்

பிரகாசமாய் நின்றே அப்பிரகாசமாய் நிற்கின்றன என்று கூறுகின்றார். அஃதாவது, தத்துவக் கருவிகள் தமக்குக்கீழுள்ள தத்துவக் கருவிகளைநோக்க அவற்றை விளக்குதலாயிருத்தலின் பிரகாசமாயும், (சித்தாயும்) அவை தாமே அறியும் வலியில்லாதன ஆதலின் தம்மை நோக்க அப்பிரகாசமாயும், (அசித்தாயும்) தமக்கு மேலுள்ள தத்துவக் கருவிகளை நோக்க அவற்றால் விளக்கப்படாம லிருத்தலால் அப்பிரகாசமாயும் (அசித்தாயும்) உள்ளன. ஆன்மா அறிவுப்பொருளாதலின் அதற்குத் தத்துவக் கருவிகளுக்கு மேற்கூறப்பட்டவாறுபோலல்லாமல் தன்னை நோக்கியும், தனக்கு அண்மையிலும் சேய்மையிலுமுள்ள தத்துவக் கருவிகளை நோக்கியும் பிரகாசத்தை (அறிவு விளக்கத்தை) உடையது. இங்ஙனம் அறியும் பொருளாகிய ஆன்மாவுக்கும், ஆன்மா அறிதற்குக் கருவிகளாயிருக்கிற தத்துவங்களுக்கும் உள்ள வேறுபாட்டை ஆசிரியர் அந்தக்கரண ஆன்மவாதி நன்கு அறியும்படி விளக்கிக் கூறியருளினர்.

10. ஆன்மாவுக்கு எவ்வாறு தனக்கு வேறாயுள்ள புத்தி தத்துவத்தில் உலகபோகம் வந்து விடயமாகின்றது என்று ஆசிரியர் கூறுகின்றார். முதலாவது, ஆன்மா அந்தக்கரணங்களோடு இயைபின்றித் தன்னோடு எப்பொழுதும் உடனாய் நிற்கும் காலம், நியதி, கலை, வித்தை, அராகம் என்னும் உள்ளந்தக் கரணங்களில், வித்தையை மாத்திரம் கருவியாகக்கொண்டு ஐம்பொறிகளை அதிட்டித்தவழி, எதிரே தோன்றும் சந்தனம், பூமாலை முதலிய விடயப் பொருள்களைப் பெயர், சாதி முதலிய விவரங்களின்றி நிருவிகற்பக் காட்சியாக அறிகிறது. அதன்பின் ஆன்மா மனம், சித்தம், அகங்காரங்களை அதிட்டிப்ப, மேலே 4-வது பந்தியிற் கூறப்பட்டபடி அவற்றின் றொழிற்பாடுபற்றிப் பகுத்தறிவுகள் நிகழ்கின்றன. பின்னர், ஆன்மா புத்தியை அதிட்டித்துப் பகுத்தறிந்த சந்தனம், பூமாலை முதலிய விடயப் பொருள்களைப் பெயர், சாதி முதலிய விவரங்களோடுகூடிய சவிகற்பக் காட்சியினால் இன்னவை என நிச்சயித்துத் துணிகின்றது. இங்ஙனம் நிச்சயித்துத் துணியப்பட்ட சந்தனம், பூமாலை முதலிய விடயப் பொருள்களைப்பற்றி நின்று அவையவையாய்ப் பரிணமித்த போதமாகிய புத்தி தத்துவமே ஆன்மாவினது தன்வேதனைக் காட்சி உணர்விற்கு இன்ப துன்ப மோக வடிவிற்றாய் விடயமாகிறது. புத்தி தத்துவத்தில் சத்துவகுண மிகுதிப்பட்டும் ஏனைய இராசத தாமத குணங்கள் குறைந்தும் விளங்குதலால், புத்திதத்துவம் ஆன்மாவுக்குப் போக்கியமாகின்றது. அங்ஙனம் இராசத

தாமத குணங்கள் குறைந்து விளங்குதலினும் இராசதகுணம் மிக்குக்குறைந்த பொழுது துன்பம் குறைந்தும், தாமதகுணம் மிக்குக் குறைந்த பொழுது மோகம் குறைந்தும் புத்திதத்துவத்தில் ஆன்மாவுக்குப் போதமாம். (அறிவாம்).

11. சந்தனம், பூமாலை முதலிய உலக விடயப்பொருள்கள் ஆன்மாவினது போக்கியத்துக்கு ஏதுவாதலன்றி போக்கியமாகா. ஆன்மாவுக்குப் போக்கியமாவது புறத்திலுள்ள சந்தனம், பூமாலை முதலிய பொருள்கள் மேலே கூறப்பட்டபடி புத்திதத்துவத்தில் பரிணமித்து நின்ற போதமே ஆகும். முதலாவது, விடயப் பொருள்களை ஐம்பொறிகளாற் காணும் நிருவிகற்பக் காட்சி உணர்வும், அதன்பின், பிண்டமாய்க் கண்ட பொருளை அந்தக்கரணங்களால் பகுத்து இன்னவெனக் காணும் மானதக்காட்சி யுணர்வும், பகுத்துக்கண்ட பொருள்களை புத்திதத்துவத்தில் இன்பதுன்ப மோக வடிவமாய்க் காணும் தன்வேதனைக்காட்சி யுணர்வும் ஆகிய இவைகள் முறையே ஒன்றனையொன்று தள்ள, நடுக் கடலிலிருந்து அலைகள் ஒன்றனை யொன்று தள்ளக் கடற்கரையை வந்து சாருதல் போல, ஆன்மாவின்மாட்டு வந்துசேர்ந்து விடயமாகின்றன. இங்ஙனம் ஐம் பொறிகள் ஆன்மாவுக்கு வேறாயினாற் போல புற அந்தக்கரணங்களாகிய மனம், சித்தம், அகங்காரம், புத்திகளும் அவற்றின் றொழிற்பாடுகளால் நிகழும் மானதக்காட்சி உணர்வுபற்றி ஆன்மாவுக்கு வேறாகும் என்பது கூறப்பட்டது.


12. இனி, ஆசிரியர்மேலே பொதுவகையாற்கூறிப்போந்த புற அந்தக்கரணங்களின் இயல்பு சிறப்புவகையாற் கூறுமுகத்தான் நிகழும் மானதக் காட்சியினுள்ளும் உணர்வுகள் கடல் அலைகள் போல வேறு வேறாய் நிகழும் என்பதும், அவ்வாறு உணர்வுகள் நிகழ்தலினால் ஆன்மா புற அந்தக்கரணங்களுக்கு வேறாகு மென்பதும் வலியுறுத்திக் கூறுகின்றார். ஆன்மா மானதக் காட்சியினுள்ளும் ஒருதன்மையாதல் இன்றிச் சித்தத்தைக் கருவியாகக்கொண்டு, காட்சிப்பட்டபொருள்யாது ஆகற்பாலது என்று சிந்தித்தும், அதன்பின் மனதைக் கருவியாகக் கொண்டு அப்பொருள் இன்னது ஆகற்பாலது என்று அதனைப்பற்றி நின்றும், அதன்பின் அகங்காரத்தைக் கருவியாகக் கொண்டு அப்பொருள் இன்னது ஆகுமோ? அன்றோ, அதனை "இன்னதெனத் தெளிவேன் யான்" எனத்தெளியாது எழுந்தும், அதன்பின் புத்தியைக் கருவியாகக்கொண்டு அப்பொருள் இன்னது எனத் தெளிந்தும் உணர்கின்றது. இவ்வாறு, ஆன்மாவுக்கு வேறு வேறாக உணர்வுகள்நிகழ்கின்றன. ஞாயிறு

முதலிய கோள்களோடு கூடிநின்று நாழிகை, நாள், பக்கம், திங்கள், யாண்டு முதலியனவாகப் பாகுபாடுசெய்யும் கால தத்துவமானது அக் கோள்களுக்கு வேருயினுற்போல, சித்தம் மனம் அகங்காரம் புத்திகளாகிய புற அந்தக்கரணங்களோடு கூடிநின்று வேறு வேறு மானதக்காட்சி உணர்வுகளை யடையும் புருடதத்துவமாகிய ஆன்மா அப் புறஅந்தக்கரணங்களுக்கு வேரும்.

மதிப்புரை

ஸ்ரீ அருணசல மான்மியம்:—யாழ்ப்பாணம் வித்துவான் சாவகச்சேரி ச. பொன்னம்பல பிள்ளை அவர்கள் இயற்றியது. கிடைக்குமிடம்—திரு. ஏ. மகாதேவா எம். ஏ., எம். எஸ். சி, பொன்கிளார், ஹார்ட்டன் பிளேஸ், கொழும்பு.

செந்தமிழ்ப் புரவலராயும் ஆங்கிலத்திலும் தமிழிலும் நிறைந்த தேர்ச்சி யுடையவராயுமிருந்து காலஞ் சென்ற யாழ்ப்பாணத்து ஸர். பொன் அருணசலம் என்பாரது வாழ்க்கை வரலாறு இந் நூலில் செய்யுணடையில் மிக அழகாக எழுதப்பட்டுள்ளது. இத்தகைய ஒரு பொருளை எடுத்துக்கொண்டு 1346 செய்யுள்கள் இயற்றியமைத்தல் இக்காலத்தில் எத்துணை அரிதாகும் என்பது யாவருமறிந்ததே. இவ்வாசிரியர் இதற்கு முன் "ஸ்ரீ இராமநாத மான்மியம்" என்று சர். பொன். அருணசலத்தின் தமையனுரான ஸர். பொன். இராமநாதனின் வரலாற்றையும் இவ்வாறே செய்யுணூலாகப் பாடிப் பெரும்புகழ் எய்தியுள்ளார். நூலாசிரியர் முயற்சியைப் பெரிதும் பாராட்டுகிறேம்.



[MR. T. B. KRISHNASWAMY MUDALIAR, M.A., B.L]

மதுரைக் கண்ணங்கூத்தனார் இயற்றிய

களவழி நாற்பது

(௪௨௮-ம் பக்கத் தொடர்ச்சி)

கடிகாவிற் காற்றுற் றெறிய வெடிபட்டு
விற்றுவிற் றேடு மயிலினம்போ-லாற்றிசையுங்
கேளி ரிழந்தா ரலறுபவே செங்கட்
சினமால் பொருத களத்து. (௨௯)

Where the angry Lord of the beautiful eyes fought the widowed women weeping seemed like flocks of howling pea-cocks flying away from a forest where a high wind strikes down the trees. (29)

மடங்க வெறிந்து மலையுருட்டு நீர்போற்
றடங்கொண்ட வொண்குருதி கொல்களி றீர்க்கு
மடங்கா மறமொய்ம்பிற் செங்கட் சினமா
லடங்காரை யட்ட களத்து. (௩0)

Where the angry Lord of the beautiful eyes slew his disobedient enemies with unfailing strength the wide floods of blood drew the slain elephants along like mountain torrents rolling down crags. (30)

ஓடா மறவ ரெறிய நுதல்பிளந்த
கோடேந்து கொல்களிற்றுக் கும்பத் தெழிலோடை
மின்னுக் கொடியின் மிளிரும் புனனாடன்
றென்னாரை யட்ட களத்து. (௩௧)

Where the Lord of the fertile land slew his enemies the brave soldiers broke open with their weapons the foreheads of the tusk-bearing terrific elephants making the frontlet gleam like lightning. (31)

மைபின்மா மேனி நிலமென்னு நல்லவள் [தீர்ந்த
செய்யது போர்த்தாள்போற் செவ்வந்தாள் - பொய்
பூந்தார் முரசிற் பொருபுன னீர்நாடன்
காய்ந்தாரை யட்ட களத்து. (௩உ)

In the field of battle where King Chola with a big drum and beautiful garland and land fertile with waters that dash against the shores, the innocent and beautiful lady called Earth became so red as if she were wrapped in a red shawl. (32)

பொய்கை யுடைந்து புனல்பாய்ந்த வாயெல்லா
நெய்த லிடையிடை வாளை பிறழ்வனபோ
லெதிலங் கெஃகி னவிரொளிவா டாயினவே
கொய்சுவன் மாவிற் கொடித்திண்டேர்ச் செம்பியன்
றெவ்வரை யட்ட களத்து. (௩௩)

In the field of battle where Chola of the beautiful eyes, Lord of the glorius chariot drawn by horses with cropped manes slew his enemies, the tanks bursting their bounds flowed rolling the shining spears like salmon rolling between water-lilies. (33)

இணரிய ஞாட்பினு ளேற்றெழுந்த மைந்தர்
சுடரிலங் கெஃக மெறியச் சோர்ந் துக்க
குடர்கொண்டு வாங்குங் குறுநரி கந்திற்
றொடரொடு கோணாய் புரையு மடர்பைம்பூட்
சேய்பொரு தட்ட களத்து. (௩௪)

In the field of battle where King Chola wearer of the golden disc slew his enemies the jackals pulling at the guts of those slain in a close hand-to-hand fight seemed like hounds chained to pillars. (34)

செவ்வரைச் சென்னி யரிமானே டவ்வரை
யொல்கி யுருமிற் குடைந்தற்றுன்-மல்கித்

கரைகொன் றிழிதரூஉங் காவிரி நாட
னுரைசா னுடம்பிடி மூழ்க வரசோ
டரசுவா விழ்ந்த களத்து. (௩௫)

In the field of battle where the Lord of the rushing and over-flowing Cauveri land sheathed the spears in blood, making kings and elephants fall the ruin looked as if of a mountain and the lion thereon. (35)

ஓஒ உவம னுறழ்வின்றி யொத்ததே
காவிரி நாடன் கழுமலங் கொண்டநாள்
மாவுதைப்ப மாற்றார் குடையெலாங் கீழ்மேலா
யாவுதை காளாம்பி போன்ற புனனாடன்
மேவாரை யட்ட களத்து. (௩௬)

In the field of battle where the Lord of the fertile land slew his enemies the day, when Lord of the Cauveri seized on the city of Kalumalam, the umbrellas of the enemies kicked about by the horses seemed like toad-stools uprooted by grazing cows. Indeed the simile was exact. (36)

அரசர் பிணங்கான்ற நெய்த்தோர் முரசொடு
முத்துடைக் கோட்ட களிறீர்ப்ப-வெத்திசையும்
பௌவம் புணரம்பி போன்ற புனனாடன்
றெவ்வரை யட்ட களத்து. (௩௭)

Where the Lord of the fertile land slew his enemies the stream of blood from corpses of Kings floated away drums and elephants making the whole scene look like the sea with ships thereon. (37)

பருமப் பணையெருத்திற் பல்யானை புண்கூர்ந்
தருமெறி பாம்பிற் புரளுஞ்—செருமொய்ம்பிற்
பொன்னார மார்பிற் புனைகழற்காற் செம்பியன்
றுன்னாரை யட்ட களத்து. (௩௮)

Where the Lord of the beautiful eyes, valorous in battle, wearer of the garland of gold and anklets, slew his enemies, many elephants with big howdahs and

strong men suffering from painful wounds rolled about like snakes scorched by lightning. (38)

மைந்துகால் யாத்து மயங்கிய ஞாட்பினுட்
புய்ந்துகால் போகிப் புலான்முகுந்த வெண்குடை
பஞ்சிபெய் தாலமே போன்ற புனனாடன்
வஞ்சிக்கோ வட்ட களத்து. (௩௯)

Where the Lord of the fertile land slew Lord Chera of the Vanji land the umbrellas losing their handles and collecting the floating flesh and blood seemed like basins filled with red ornamental paste. (39)

வெள்ளிவெண் ணாஞ்சிலான் ஞால முழுவனபோ
லெல்லாக் களிறு நிலஞ்சேர்ந்த— பல்வேற்
பணைமுழங்கு போர்த்தானைச் செங்கட் சினமால்
கணைமாரி பெய்த களத்து. (௪௰)

In the field of battle where the angry Lord of the beautiful eyes, Lord of many weapons sounding drums and warrior hosts with shower of arrows slew his enemies, the elephants falling down with their face to the ground seemed ploughing the earth with ploughs of silver. 40

வேனிறத் திங்க வயவரா லேறுண்டு
கானிலங் கொள்ளாக் கலங்கிச் செவிசாய்த்து
மாநிலங் கூறு மறைகேட்ப போன்றவே
பாடா ரிடிமுரசிற் பாய்புன னீர்நாடன்
கூடாரை யட்ட களத்து. ௪௧

In the field of battle where the Lord of the fertile land fed by rushing waters, Lord too of the full sounding thundrous drum slew his enemies the spear piercing their chest and feet unable to stand fallen and lying on the ground seemed as if listening to the secret initiation of the earth. 41

திருக்குறளின் தனிப்பெருமை

[வித்துவான் மணி. திருஞானசம்பந்த முதலியார் அவர்கள்.]

இவ்வுலகில் மக்களாகப் பிறந்தவர்கள் அனைவர்க்கும் இறைவன் அளவிடற்கரிய ஆற்றல்கள் அருளிச்செய்துள்ளான். ஆனால், அவைகள் ஒளிவீசி மாண்பயன் அளிக்க வேண்டுமானால், அறிவாகிய கருவி அவசியம் வேண்டும். அறிவு நலஞ்சிறந்து ஒளிருமானால், மக்கள் உலகில் அளவில்லா அற்புதங்களையும், அமைப்புக்களையும் நன்குணர்வதோடு, தம்மையுமுணர்ந்து, பிறவியாகிய இச்சிறையினின்றும் நீங்கி, அழியா மாலைத்தாகிய பேரின்ப வீட்டையும் எய்துவார்கள். அங்ஙனம் நலஞ்சிறந்த அறிவு பொலியப் பெற்றவர்களே ஞானிகளெனவும் கூறப்படுவர். அத்தகைய நலஞ்சிறந்த அறிவைப் பெற்று, உலகின் அற்புதங்களை யுணர்ந்து, மக்கள் வாழ்க்கையின் தன்மைகளையும், திட்பநுட்பங்களையும் அறிந்து, மக்கட்பிறவி எடுத்ததின் மாண்பயனை எய்த உலக வாழ்வை எங்ஙனம் வாழவேண்டுமெனவும், எத்தகையை நெறிகளைக் கைப்பற்ற வேண்டும் எனவும் கண்ணாடிபோல் மக்கட்குத் தமது ஒப்பரிய நூலாகிய திருக்குறள் மூலமாக இனிது காட்டியவர் திருவள்ளுவர் ஒருவரே யாவார்.

திருவள்ளுவர் விரிந்த அறிவும், பரந்த நோக்கும், ஆழ்ந்த சிந்தனையும், நுட்ப உணர்வும், தூய சிந்தையும், தெய்வ அருளும் ஒருங்கே வாய்க்கப் பெற்றவர் என்று முதற்கண் அறிதல் வேண்டும். அங்ஙனம் நலஞ்சிறந்த செம்பொருள்கள் பலவற்றையும் உணர்ந்து உலகியல் அறிவையும் செவ்வனம் பெற்று, மக்கட்கு, உறுதிபயக்கவல்ல இன்பக் கருவியாக அருளியுள்ள அறிவுச்சுடர் வீசும் நூல் திருக்குறள் ஒன்றேயாகும்.

அறிவாகிய பெருஞ் செல்வத்தை இனிது பெற்றவர்களே இவ்வுலகில் எல்லாப் பேறுகளையும் பெற்ற புண்ணியர்களாவார்கள். எல்லாச் செல்வங்களையும் பெற்று, அறிவாகிய செல்வம் ஒன்றினைப் பெறாதவர்களே உலகில் ஒன்றும் பெறாத புல்லிய மக்களாவார்கள். ஆகையால், அறிவாகிய செல்வத்தை

வளமாகப் பெற்றுத் திகழ்தல் மக்களாகப் பிறந்த ஒவ்வொருவருக்கும் இன்றியமையாத் தலைசிறந்த கடமையாகும். இக்கடமையை மறப்பார் எய்தும் கேடு மாபெரிதெனக் கூறவேண்டிய அவசியமின்று. ஒப்பிலா விழுச்செல்வமாகிய அறிவைச் செம்மையுறப் பெறவேண்டின், தலைசிறந்த அறிஞர்களியற்றிய அறிவொளி நூல்களை ஓதி, அவற்றின் நன்பொருள்களைப் பருகுதல் வேண்டும். அதைக்காட்டினும் விழுமிய இன்பம் மக்கட்கு வேறில்லை என உறுதியாகக் கூறலாம். அத்தகைய தலைசிறந்த அறிவையும், இணையில்லா இன்பையும், திருவள்ளுவர் இயற்றிய திருக்குறளின் பொருள்களை உள்ளவாறு உணர்ந்து அவற்றை நுகரவல்லார் அடைதல் திண்ணம். ஆனால், அநேக மக்கள் அழியும்மாலைத்தாகிய பொருள் ஒன்றையே நாடி, அழியாச் செல்வமாகிய அறிவை நாடாது, உண்மையின்பம் எது என்பதையும் உணராது, அரும்பெறல் வாழ்க்கை நலத்தின் சுவையையும் உணராது, புன்மையையே மருவி, தங்கள் அரிய இனிய தவநாட்களை அவநாட்களாகக் கழிக்கின்றனர். அந்தோ! இது பெரிதும் வருந்தற்பாலதே! அறிவுக்குத் தலைநாயகராகத் துலங்கியவர்கள் தமிழ்ப் புலவர்களாக இருந்த போதிலும், தமிழர்களிலேயே பலர் ஒப்புயர்வில்லாத் திருவாகிய அறிவை அணியுறப்பெறாமல், பொருளில்லாத்துறைகளில் இறங்கி, அரிய தமிழ் நூல்களினுள்ள செம்பொருள்களை உணராமல், தங்கள் அரிய காலத்தை வறிதே கழிக்கின்றனர். அந்தோ! அந்தோ இது மிகப்பெரிதும் வருந்தற்பாலதே! அவர்கள் ஏனைய நூல்களுள் ஒன்றையும் ஓதியுணர வசதியும், அவகாசமும் இல்லையெனக் கூறுவாரேனும், எல்லாப் பொருள்களும் அடங்கியுள்ள எளிதிலும் கற்கக்கூடிய ஒப்பிலாத் திருக்குறள் ஒன்றையேனும் முற்றிலும் கற்று விழுப்பயன் அடைதல் அவசியமெனக்கருதியே பற்பல கிளர்ச்சிகள் ஆங்காங்குத் திருக்குறள் சம்பந்தமாகப் பொதுவாகத் தென்னாட்டிலும், சிறப்பாகத் தலைநகராகிய சென்னையிலும் இவ்வாண்டில் செய்யப்பட்டன. இக்கிளர்ச்சிகளின் முக்கிய நோக்கம் யாதெனில், எல்லா மக்களும் திருக்குறள் என்னும் ஒப்பிலா மாணிக்கத்தைப் பெற்று, உண்மைப் பொருள்களின் சாரத்தைப் பருகி,

எல்லா மக்களிடத்தும் அன்பும், அருளும் செலுத்திச் சகோதரபாவனையுடன் உலக வாழ்வின் மாட்சியில் திளைத்துப் பின்னர் உறுதிப் பொருளையும் எய்துதல் வேண்டும் என்பதேயாகும்.

அறிவே இணையில்லாப் பெருஞ்செல்வம் எனச் செவ்வனம் அறிந்தவர்கள் தமிழ் மக்கள். அவர்கள் வண்மையையும், உண்மையையும், அன்பையும், அருளையும் அருங்கலன்களாகவும் பூண்டவர்கள். நம் சிந்தையில் எண்ணிப்பார்ப்பதற்கும் அருமையாகத் தோன்றுகின்ற சுமார் பதினாயிரம் ஆண்டுகட்கு முன்னரே தமிழர்கள் பொருவில்லா நாகரிகமும், பெருந்தன்மையும், வள்ளன்மையும், வாய்மையும் பெற்றுப் பொலிந்தனர். ஆதலால், அவர்கள் அநேக அரும் பெறல் நூல்களைப் பல்லாயிர ஆண்டுகட்கு முன்னரே எந் நாட்டவரும் இயற்றாத் தன்மையில் இயற்றி, இவ்விந்திய நாட்டை அணிசெய்தனர். ஆனால், தமிழர்கள் பற்பல இடையூறுகளாலும், எதிர்பாராத இன்னல்களாலும் அத்துணை அரும்பெறல் நூல்களில் பலவற்றை இழந்தனர். அவ்வாறு யினும், நம் தமிழகத்து இதுபோழ்துள்ள அரிய நூல்கள் பலவும் இப்பூவுலகிலுள்ள பற்பல நாட்டு மக்கட்கும் பேரறிவு கொளுத்தும் மாட்சிமை பெற்று இலங்குகின்றன. அவை தொல்காப்பியம், சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, பத்துப்பாட்டு, அகநானூறு, புறநானூறு, பெரியபுராணம், கம்ப ராமாயணம், திருக்கோவையார், திருவாசகம், தேவாரம் முதலியனவாகும். அவைபலைத்தும் ஒவ்வொரு துறையில் மாத்திரம் ஒப்புயர்வற்று ஒளிர்ந்து, மக்கட்கு உறுதி அளிக்க வல்லனவாகவும், தமிழ்மொழியின் அழகுகளையும், நயங்களையும், சிறப்பினையும் விளக்குவனவாகவும் திகழ்கின்றன. மேலும், அவையிற்றைக் கற்பதற்கும், அவற்றின் நுண்பொருள்களை உள்ளவாறு உணர்தற்கும் மக்கள் தமிழ் ஞானம் வளமுறப் பெறுவதோடு, பொறுமையும், காலமும் மிகுதியாக உடையவர்களாவும் இருத்தல் வேண்டும்.

ஆதலால், மேற்கூறிய நூல்களைத் தேகமும், சிந்தையும் வருந்தக் கற்று, அவற்றின் செம்பொருள்களைச் செவ்வனம்

ஆய்ந்து அறிதல் எல்லா மக்கட்கும் எளிதான செயலன்று. ஆனல், எல்லாத்துறைகளையும் ஒருங்கு எளிதில் கற்பிப்பதாகவும் எல்லாப் பொருள்களையும் எளிதில் உணர்த்துவதாகவும், எல்லா அழகுகளையும், நயங்களையும் இனிது காட்டுவதாகவும், பேரறிவையும், பெருநலத்தையும் அளிக்க வல்லதாகவும் திகழ்கின்ற நூல் திருக்குறள் ஒன்றேயாகும். அதைக்காட்டினும் விழுமிய நூலும், அதற்கு ஒப்பான நூலும் நமது தமிழ்மொழியிலும், ஏனைய எம்மொழியிலும் இல்லை. அத்தகைய ஒப்பரிய நூலின் செம்பொருள்களை உலகத்துள்ள பற்பல நாட்டு மக்களும் அறிந்து, மாண்பயன் எய்துதல் வேண்டுமெனத் தமிழறிஞர்கள் பெரிதும் விழைகின்றனர். அக்கருத்துப் பற்றியே அவர்கள் பற்பல முயற்சிகளும் கிளர்ச்சிகளும் புரியாநிற்கின்றனர்.

திருக்குறள் என்னும் திவ்விய நூலின் திண்ணிய பொருள்களையும், நுண்ணிய பொருள்களையும் செவ்வனம் அறிய வல்லார் அதனைவிட்டு அகன்று ஒரு நாளும் இலர். ஏனெனில், ஒருவர் அதன்கண் அமைந்துள்ள நுண் பொருள்களின் சாரங்களைப் பருகப்பருக மேலும் மேலும் புதிய சாரங்கள் ஊற்றெடுத்துப் பெருகும். ஒரு குறளின் நுண்பொருளையும், ஆழத்தையும் அழகையும், அருமையையும் முற்றிலும் உள்ளவாறு உணர்வதற்கே பேரறிவும், பெரும்புலமையும், பெருஞ் சிந்தனையும் வேண்டுமென்றால், அதன் ஒப்பிலாப் பெருமையை எடுத்து ஏட்டில் எழுதிக்காட்ட இயலுமோ? அத்துணைய ஆற்றல்களும், அருமைகளும் அழகுகளும் ஒவ்வொரு திருக்குறளுக்கும் அமைந்திருந்த போதிலும், எல்லாமக்களும் அப்பொருள்களின் சாரங்களை மேற்போக்காகவேனும் உணர்ந்து, இன்பம் துய்க்க இயலும். அந்த அளவில் திருக்குறளை ஓதியுணர்ந்தாலும், பிறர் சொல்லக் கேட்டாலும் ஒருவர்க்குப் போதும் என்று திடமாகக் கூறலாம்.

ஆனல், திருக்குறளில் இல்லாதபொருள் ஒன்றுமேயில்லை. ஆனல் அதிலுள்ள பொருள்களோ ஏனைய நூல்களில் இல்லை. செப்பரிய வண்புலமை பெற்ற புலவர் திலகங்களும் திருக்குறளில் உள்ள மாண்பொருள்களின் சாரத்தைப் பருகித்

தமது அறிவைப் பெருக்கித் தாங்கள் எழுதிய நூல்களில் அதன் பொருள்களை ஆங்காங்குப் பொதிந்து அவற்றை அணி செய்வார்களென்றால், இன்னும் திருக்குறளின் மாட்சியை எடுத்து இயம்புதல் வேண்டுமோ? இந்நூல் எல்லா மதத்தினர்க்கும், எல்லாச் சாதியாருக்கும் பொருத்த முடையதாகவும், சிறு பாடல்களையே உடையதாகவும் இருக்கின்றது. இதைப்போல் வேறு நூல் இல்லை.

மேனாட்டார் மாத்திரம் இத்தகைய ஓர் ஒப்பரிய நூலைப் பெற்றிருப்பார்களானால், அதனை இயற்றிய புலவர் சிகாமணியை எத்துணை அதிகமாகப் போற்றுவார்களென்றும், அந்நூலின் பொருள்களை எங்ஙனம் உலக முழுவதும் பரப்புவார்களென்றும் நாம் இயம்பவும் வேண்டுமோ? அவர்கள் நாட்டில் பிறந்த புலவர் பெருந்தகையாகிய கோல்ட்சிமித் (Gold Smith) என்னும் பெரியார் இயற்றிய ஒரு அரிய நூலை (Vicar of Wakefield) எங்ஙனம் போற்றுகின்றார்கள் என்றும், எங்ஙனம் பற்பலவாறு அழகிய புத்தகங்களாகச் செய்து எளியோருக்கும், சிறியோர்க்கும், குழந்தைகளுக்கும் அவரவர்கள் ஆற்றல்களுக்கும் தன்மைகளுக்கும் ஏற்ப அந்நூலின் பொருளைப் பரப்பி வருகின்றார்கள் என்றும், நாம் சொல்லவும் வேண்டுமோ? அதைக்காட்டிலும் எத்துணையோ பங்கு சிறப்புடைய அரும்பெரும் நூலாகிய திருக்குறளைப் போற்றி அதன் செவ்விய பொருள்களைப் பரப்புதல் வேண்டும் என்றும் நாம் இன்னமும் பகர்தல் வேண்டுமோ? ஆகையால் திருக்குறளின் மாட்சி யாண்டும் மணமுற்றுப் பொலிவடைய முயற்சி எடுப்பார்க்கு எனது நன்றியை மனமாரச் செலுத்துவதோடு, அவர்கள் நன்முயற்சிகள் இன்னும் மேலும் சிறந்து, இன்பக்கனியை எல்லோர்க்கும் நல்குமாறும் எல்லாம்வல்ல இறைவன் பொற்கழல்களைப் போற்றுகின்றேன்.

காலஞ்சென்ற
திருக்குறள் விளக்க ஆசிரியர்
கி. குப்புசாமி முதலியார்

[திரு. சே. வே. ஜம்புலிங்கம் பிள்ளை அவர்கள்]



கி. குப்புசாமி முதலியார் திருமயிலையை யடுத்த கிருஷ்ணாம்பேட்டையிற் பிறந்து வளர்ந்தவர்; தருமசிவ முதலியார் என்பவருக்கு மூத்தகுமாரர்; இளமையிலே தமது மைத்துனரான ஆனூர் சிங்காரவேலு முதலியாரிடம் தமிழ்க்கல்வி பயின்றவர்; 14-ம் வயதிலேயே பிரசங்கஞ்செய்யும் ஆற்றல் கைவரப் பெற்றவர். இராயப்பேட்டை வெஸ்லி கல்லூரியில் சில மாதங்கள் தமிழ்ப் பண்டிதராக விளங்கினர். அப்போதுதான் எல்பின்ஸ்டன் கம்பெனி சொந்தக்காரரான ஐயாவு முதலியார் முதலானவர்கள் இவரது மாணவரானது. பிறகு தமிழ்ப்பண்டிதர் தொழிலைவிட்டு பி.ஆர் அண்டு ஸன்ஸில் Customs Clerk வேலையில் அமர்ந்து அவ்வேலையைப் பல வருடங்கள் நடாத்தி வந்தார். சுரங்கச்சாவடியில் தம் ஒழிவு' நேரங்களில் ஊதியங் கருதாது தமிழ்க் கல்வியைப் பலருக்கும் புகட்டி வந்தார். அருணகிரி அந்தாதி, சோணசைலமாலை, அஷ்டபிரபந்தம் முதலிய நூல்களே இவர் தம்முடைய மாணவர்களுக்குப் போதிப்பது. இதனால், இவருக்குத் தமது உத்தியோகசாலையினும் உபாத்தியாயர் என்னும் பெயர் உண்டாயிற்று. செங்கற்பட்டு, திருக்கழுக்குன்றம், சென்னை முதலிய இடங்களில் சிறு சைவசபைகளின் ஸ்தாபனத்திற்கு மூலபுருடராக இருந்து அச்சபைகளைச் செவ்வனே நடாத்திவந்தார். திருமயிலை சங்கீதசபையை ஆரம்பித்தவர்களில் இவரும் ஒருவர். 1912-ம் வருடம் காஞ்சிபுரத்திற் கூடிய சைவசித்தாந்த மகாசமாஜத்திற்கு இவர் ஓர் பிரசங்

சியாராகச் சென்றபோது இவரையே அச்சமாஜ அமைச்சராக இருக்கும்படி வேண்ட அப்பொறுப்பை ஏற்று 1913 முதல் 1917 வரை நன்கு நடாத்திவந்தார். இவருடைய முயற்சியாலேயே திருமயிலையில் 1916-ம் வருடம் நடந்தேறிய சமாஜக் கூட்டம் அதிக மேம்பாடுற்று விளங்கியது. 1918-ம் வருடம் முதல் 1920-ம் வருடம் வரை 'சித்தாந்தம்' பத்திரிகாசிரியராக விளங்கினர். இவருடைய ஆசிரியத் தலைமையில் திருவாரூர் நான்மணிமாலையுரை, தேவார தசபுராண விளக்கவுரை முதலிய நூதனமாக எழுதப்பட்டன. 35 வருடங்களுக்கு முன்னே மெய்கண்டசாத்திர மூலபாடத்தை முதன்முதல் அச்சிட்டுப் பலருக்கும் இலவசமாகவே உதவினர்.

1922-ம் வருடம் முதல் பல இடங்களில் திருக்குறள் பாடஞ் சொல்லி வந்தார். திருவள்ளுவநாயனர் திருக்கோயில், கஸ்டம்ஸ் ஹவுஸ், பி. எம். ஜி. ஆபீஸ் முதலிய இடங்களில் ஊதியங்கருதாது திருக்குறளை முதலிலிருந்து கடைசிவரை பல வருடங்கள் போதித்து வந்தார். பரிமேலழகர் உரையை விளக்கித் திருக்குறள் விளக்கவுரையொன்று எழுதி சஞ்சிகை ரூபமாக வெளியிட்டார். சென்னை வளர்ச்சி நெறியமைச்சராயிருந்த திரு. டி. என். சிவஞானம்பிள்ளை, திபதியாயிருந்த சுப்பையா முதலியார் முதலியவர்களுக்குத் தமிழ்ப்பாடமும் சைவசாத்திர போதனையும் அவ்வப்போது செய்து வந்தார். அவர் வீட்டின்கண்ணே பல மாணவர்கள் எப்போதும் வந்து பாடங்கேட்டுப் போவது வழக்கம். இவருடைய சொற்பொழிவுகள் உள்ளக்கவர்ச்சி யுள்ளனவாகவும் பத்தி விளைப்பனவாகவும் சைவசித்தாந்த வரம்பிற்கு உட்பட்டனவாகவும், காலவரை யறையைக் கடவாதனவாகவும் விளங்கும். இவர் கூர்ந்த மதியினர். சிவஞானபோதம், திருவிளையாடல், பெரிய புராணம் முதலிய நூல்களைத் தாமாகவே மதிநுட்பத்தால் கற்றறிந்து அவற்றைப் பிறருக்குப் புகட்டும் ஆற்றலுடையவர். பழைய வழக்கங்களிலும், ஆசார ஒழுக்கங்களிலும் பற்றுள்ளவர். காலத்திற்கியைய அவற்றை மாற்றுபவர்களை வெறுப்பவர். திருக்குறள் பரிமேலழகருரையை மனப்பாடமாக ஒப்பிக்கும் வன்மைபடைத்தவர். பலராலும் நன்கு மதிக்கப்பெற்றவர். கம்பராமாயண நயங்களையும் நன்கு அறிந்தவர். நண்பர்களிடம் பேரன்பு பூண்டவர். பரந்தநோக்கமுடையவர். சாதி குலம் பிறப்பு என்னும் சுழித்தலைப் படாதவர். கடைசிக் காலத்தில் கடற்கரையோரத்தில் மகமதியர், தாழ்ந்த வகுப்பினர் முதலானவர்களுக்கு மாலைக் காலங்களில் அவர்களுக்கு ஏற்ற சமரச போதனையைச் செய்துவந்தவர். இவருடைய பிரிவால் யாம் ஓர் தமிழ் நல்லாசிரியரை இழக்கலானேம்.

செய்திகளும் குறிப்புகளும்:
News and Notes

நம் மாகாணத்திலுள்ள மடங்களின் சீர்திருத்தத்தைக் கருதிக் கொண்டுவரப்பட்ட மசோதா இறுதியில் கைவிடப் பட்டது மிகவும் வருந்துதற் குரியதாம். மசோதா கொண்டு வரப்பட்ட வடிவத்தில் சிற்சில பகுதிகளில் நன்மை பயக்கக் கூடாததாக இருந்தாலும், அப்பகுதிகளைத் திருத்தஞ் செய்து அதனை நிறைவேற்றியிருந்தால் நலமாக இருக்கும். அறநிலையப் பாதுகாப்புக் கழகத்தாரே இத்துறையில் முயன்று ஒரு சீர்திருத்தத் திட்டத்தைக் கொண்டுவருவார்களாயின் அது பெரும் நலனளிப்பதாகும்.

* * *

எத்தனை நில நடுக்கம்! எத்தனைப் பெருந்தீ!! எத்தனைப் பெருவெள்ளங்கள்!!! அடுத்தடுத்து ஒவ்வொன்றாகத் தோன்றி ஆயிரக் கணக்கான மக்களை உயிரிழக்கச் செய்வது நிலப் பொறையைக் குறைக்கவோ!!!

* * *

காசிமாநகரில் இருநூறாயிரம் வெண்பொற் காசுகளைச் செலவிட்டு இந்தியாவிலேயே மிகப் பெரியதான ஒரு கோயிலைக் கட்டி முடிக்க வடநாட்டுப் பெரியாரான பண்டித மதன மோகன மாளவ்யா முன்வந்திருப்பது மாபெருஞ் செய்கையாகும். அக்கோயிலின் கோபுரம் தஞ்சைப் பெருங்கோயிலின் கோபுரத்தைவிட உயர்ந்ததாய் 220 அடி உயரமுள்ளதாயிருக்குமாம். இக்கோயில் கட்டடவேலை இந்தியச் சிற்ப வல்லுநரான சந்திர சாட்டர்ஜியின் மேற்பார்வையில் நடைபெறும்.

* * *

“ இருக்குவேதம் இந்திய நூலன்று ” என்று தேர்ந்த ஆராய்ச்சியாளரான டாக்டர் பிரான்நாத் என்பவர் “தி இல்லஸ்ட்ரேட்டெட் வீக்லி ஆஃப் இந்தியா” என்றவார வெளியீட்டில் எழுதியுள்ளார். சுமேரு, அக்காடு, ஹிட், பினிசியா, ஸிரியா போன்ற மேனாட்டு மக்களுக்குரியதாகும் அவ் வேதம் என்று அவர் கருதுகிறார். அவ்வேதத்தில் சுமேரிய நாட்டிலுள்ள பெரு நகரங்களாகிய துதுலி, ஊர், இஷின், சிப்பர், உமா, பாரா, சிர்ப்பூர், சாலடியா, அவான் முதலிய நகரப்பெயர்கள் காணப்படுவது அவர்தங் கூற்றை வலியுறுத்துவதாகும்.


தபால் தொழில்நிலையங்கள் முதன்முதல் பிரான்சு நாட்டின் தலைநகரில் 1462-ம் ஆண்டிலும், இங்கிலாந்தில், 1581-ம் ஆண்டிலும், அமெரிக்காவில் 1710-ம்ஆண்டிலும் திறக்கப்பட்டனவாம்.

* * *

இங்கிலாந்தில் முதன்முதல் புகைவண்டி தோற்றுவிக்சப்பட்ட காலத்தில் வண்டியோட்டுவோனுக்கு ஓர் ஊதுகுழல் கொடுக்கப்பட்டிருந்தது. அதை அவன் ஊதும் ஓசையைக் கேட்டு மக்கள் வண்டியிற் சிக்காமல் விலகிக்கொண்டனராம். 1832-ம் ஆண்டில் கடைச் சரக்கேற்றப்பட்ட தன் குதிரை வண்டியை ஒருவன் ஓட்டிச் செல்கையில் ஒரு புகைவண்டியிற் சிக்கிக்கொண்டான். ஊதுகுழலின்ஓசை சரியாகக்காதில்விழாததேஅவன் அவ்வாறு சிக்க ஏதுவாயிற்று. இந்நிகழ்ச்சியையொட்டி மக்கள் கிளர்ச்சி செய்ததன் பயனாக ஆவியியக்கத்தால் அடிக்கப்படும் ஒரு தம்பட்டம் கண்டுபிடிக்கப்பட்டுப் பயன்படுத்தப்பட்டுவந்தது. அதன்பின் 1835-ம் ஆண்டில் வாறிங்டன் என்னும் ஊரிலுள்ள டெய்லர் கம்பெனியார் புகைவண்டிகளில் இப்பொழுது பயன்படுத்தப்படும் ஆவி ஊதுகுழலை முதன் முதலாகச் செய்துதவினர். எனவே இவ் வூதுகுழல் கண்டுபிடிக்கப்பட்டுச் சரியாக இப்பொழுது ஒரு நூற்றுண்டாகிறது.

* * *

தமிழ்ச்சோலை அல்லது கட்டுரைத் திரட்டு: (இரண்டாம் பகுதி) திரு. வி. கலியாணசுந்தர முதலியாரவர்கள் எழுதித் தொகுத்தது. விலை ரூ. 1-8-0. கிடைக்குமிடம்: முருகவேள் புத்தகசாலை, 12, கணபதி முதலி தெரு, இராயப்பேட்டை, சென்னை. திருவாளர் கலியாணசுந்தர முதலியாரவர்கள் தேசபக்தன், நவசக்தி முதலிய செய்தித்தாள்களில் சுவை மலிய எழுதிய கட்டுரைகளைத் தொகுத்து இரண்டாம் பகுதியாக வெளியிட்டுள்ளார்கள். தமிழ் மணம் வீசும் இவ் வரும்பெரும் நூலைத் தமிழ்மக்கள் வாங்கிப் படித்து இன்புறுவாராக.



சோழவந்தான் அரசஞ்-சண்முகனர்.

ஸ்ரீ
செந்தமிழ்ச் செல்வி
திங்கள் வெளியீடு

சிலம்பு-க௫] யுவ—ஆடி [பரல்-க௨

திருவாசகம்

பத்திமையும் பரிசுமிலாப்
பசுபாச மறுத்தருளி
பித்தனிவ னெனவென்னை
யாக்குவித்துப் பேராமே
சித்தமெனுந் திண்கயிற்றாற்
றிருப்பாதங் கட்டுவித்த
வித்தகனார்விளையாடல்
விளங்குதில்லை கண்டேனே.

பதவுரை:—

பத்திமையும் பரிசுமிலாப் பசுபாசம்—(உயிரினுக்கு இயல்பாய்ச் சிவனிடத்துள்ள) மெய் அன்புடைமையும், (அச்சிவனிடத்தில் வித்துப்போல் அடங்கியுள்ள காரண நிலை உலகத்தின்) மெய்த்தன்மையும் முறையே விளங்காம லிருக்கும்படி செய்கிற பசுத்தன்மையையும் பாசத் தன்மையையும்

அறுத்தருளி—(என்னிடம்) சிறிதும் தோன்றாமலிருக்கும்படி முற்றிலும் நீக்கி அருளி

பித்தன் இவன் என்னை ஆக்குவித்து—"இவன் சிவனிடத்தில் முழுப்பற்றுடைய பித்தன் (பைத்தியக்காரன்)" என்று என்னைக் கண்ட ஊரார் கூறி எள்ளி நகையாடும்படி செய்வித்தும்

பேராமே - பெயராது

சித்தம் எனும் திண் கயிற்றால் திருப்பாதம் கட்டுவித்த—எனது உள்ளமாகிய வலிய கயிற்றினாலே என்னைத் தன்னுடைய இரண்டு திருவடிகளோடு என்றும் நீங்காதபடி கட்டித் தன்னையேபற்றும்படி செய்வித்த

வித்தகனார்—பேரறிவாற்றலோடு கூடிய சிவபெருமானுடைய

விளையாடல்—கரணத்தாலன்றிச் சங்கற்ப மாத்திரையானே எளிதாகச் செய்யவல்ல ஐம்பெரும் அருட்செயல்களையும்

விளங்கு தில்லை கண்டேன்—அருள் விளங்குகின்ற தில்லைத் திருப்பதியின் கண்ணே நான் (அகக்கண்ணால் நேரே) பார்த்தேன்.

விளக்க உரை:—

பத்திமையும் பரிசும் இலாப் பசுபாசம்—'பத்திமை' என்பது 'அன்புடைமை'. அஃது இங்கே உயிருக்குச் சிவனிடத்திலே இயல்பாயுள்ள மெய்யன்புடைமையைக் குறிக்கிறது. 'பரிசு' என்பது 'தன்மை' அல்லது 'பண்பு.' அஃது இங்கே மாயா தத்துவங்களாலாகிய காரிய உலகிற்குக் காரண நிலையிலுளதாகிய சத்தாந் தன்மை (மெய்த்தன்மை) யைக் குறிக்கிறது. 'பாசம்' என்பது 'பாசத்தன்மை'; அதாவது உயிர், மாயா தத்துவங்களாலாகிய உலகின்மேல் பற்று வைக்கும்படி செய்கிற பாசக் கட்டுடையதாம் தன்மை. உயிரானது மாயா தத்துவக் கூட்டங்களாலாகிய உடலைத் தானாகவும் தானே உடலாகவும், அத்தத்துவக் கூட்டங்களுடைய குணங்களைத் தன்னுடைய குணங்களாகவும் வேற்றுமையின்றி நினைத்தும், உடலையும் உடல் தங்கும் உலகினையும் உலகிலுள்ள நுகர்வுப் பொருள்களையும் நிலையுள்ளவைகளாக மதித்தும் மயங்கி அறிதல் உயிர்க்குப் பாசத்தன்மையாகும் (Personality). பசுத்தன்மை என்பது உயிர்த்தன்மை (சிவத்தன்மை). அதாவது உயிரானது அறிவுடைய தான் அறிவில்லாத உயிரில்பொருள்களாகிய உடல், உலகம், நுகர்வுப் பொருள்களினின்று வேறு என்றும், தனக்குக் கீழாயுள்ள அவற்றை அறிவுடைய தான் அறிந்து மேற்கொண்டு வருவதாகவும் அறிந்தாலும், இறைவன் அருளினது துணையின்றித் தன் அறிவாலே தத்துவங்களையும் தன்னையும் அறிந்து பயனருந்தி வருவதாக நினைக்கும் தன்முனைப்புமயக்கஅறிவு (Individuality) பாசக்கட்டுடைய மயக்க அறிவானது உயிருக்கு மாயையினாலாகிய உடலையும், உலகையும், நுகர்வுப்பொருள்களையும் அவற்றின் காரியநிலையில் கணந்தேறும் தோன்றியும், மறைந்தும், அழிந்தும் வரும் நிலையில்லாத தன்மையில் அறியாமையை உண்டு பண்ணி அவற்றில் முழுப்பற்று வைக்கும்படி செய்தும் அவற்றின் சத்தாந்தன்மையான காரண நிலையை அறியவொட்டாமலுமிருக்கும்படி செய்கிறது. அதனால் 'பரிசு இலாதபாசம்' என்றார். பசுத்தன்மையாலாகிய உயிரின் தன் முனைப்பு அறிவினால் உயிரானது உண்மையில் தனக்கு எப்பொழுதும் துணையாய் உபகரித்துவரும் அருளினை அறியாதிருத்தல் காரணமாக இறைவனை அறிந்து அவனிடத்து அன்பு செய்யவொட்டாமலிருக்கச் செய்தலினால் அடிகள் 'பத்திமையில்லாப்பசு' என்றார். பசுபாசம் என்பது உம்மைத்தொகை. பத்திமையும் பரிசுமிலாப் பசுவையும் பாசத்தையும் என விரித்துரைக்க. பத்திமை யிலாப்

பசு என்றும், பரிசு இலாப் பாசம் என்றும் நிரனிறையாக இயைத்துப் பொருள்கொள்க.

அறுத்தருளி—'அறுத்தருளல்' என்பது உயிரினுடன் இதுவரை பற்றியிருந்த மலத்தொடர்பைச் சிறிது மில்லாதபடி முற்றிலும் நீக்கி அருளுதல் ஆகும். இவ்வாறு உயிரினுடைய பசுபாசங்களை அறுத்தல் உயிரினது மல நீக்கம் ஆகும். மல நீக்கம் பெறுதல் உயிருக்கு எதிர் மறைப்பயன் (Negative result). காரிய உலகமானது என்றும் அழியாத காரண நிலையில் தன் அருட் பேரொளியில் அடங்கி யிருத்தலையும், உயிரின் அறிவுச்சுடர் தனது பேரறிவுச் சுடரில் அடங்கி யிருத்தலையும் இறைவன் உயிருக்கு, 'இன்றெனக்கருளி' என்ற பாட்டுரையில் விளக்கப்பட்டபடி காட்டுதலால் மல நீக்கம் உண்டாகின்றது. இவ்வாறு இறைவன் உயிருக்குக் காட்டுதலால் உயிரில்உலகம் உயிருலகம் எல்லாம் இறைவனிடத்தில் அடங்கி நின்று இறைவன் தனியே நின்று விளங்குதலை உயிர் அறிகின்றது. இந்த நிலையை அடிகள், 'இன்றெனக்கருளி' என்ற முதற் குறிப்புத் திருவாசகப் பாட்டில் 'இருள் கடிந்து உள்ளத்தெழுகின்ற ஞாயிறே போன்று நின்ற நின் தன்மை' என்று கூறியருளினர். அடிகள் இந்தப் பாட்டில் 'பசுபாச மறுத்தருளி' என்று கூறிய கருத்தை அச்சோப் பதிகம் முதலாவது பாட்டில் 'சித்தமல மறுவித்து' என்று கூறியருளினர்.

பித்தன் இவன் என என்னை ஆக்குவித்து—இது மல நீக்கம் பெற்ற உயிருக்கு இறைவன் அருள் விளக்கம் உண்டாகும்படி செய்தல். இஃது உயிருக்கு உடன்பாட்டுப் பயன் (Positive result). மல நீக்கத்தால் உயிருக்கு இறைவன் ஆகிய பேரின்பப் பொருள் விளங்கித் தோன்றுமேயன்றி அவ்வின்பப் பொருளைப் பற்றும் முயற்சி உண்டாகாது. இந்தப் பற்றும் முயற்சியானது, 'இன்றெனக்கருளி' என்ற பாட்டுரையில் விளக்கப்பட்டபடி, இறைவன் உயிரோடு உடன் நின்று இன்பப் பொருளாகிய தன்னைக் காணச் செய்யும் காணும் உதவியால் உண்டாகின்றது. இதனால் உயிர் அருள் விளக்கம் உடையதாகி இறைவனைப் பற்றுகின்றது. 'பித்தன் இவன் என என்னை ஆக்குவித்து' என்று இப்பாட்டில், கூறியதை அச்சோப்பதிகம் முதலாவது பாட்டில் 'சித்தமலம் அறுவித்து' என்றதற்குப்பின் 'சிவமாக்கி' என்று கூறியருளினர். திருமந்திரம் 1820 வது பாட்டில் நின்மலன் (சிவன்) ஆக்கி என்றும் கூறப்பட்டதும் இதனையே. ஒருவன் யாதா மொரு பொருளைச் சார்ந்து அதன் மயமாய் அதனிடத்திலே முழுப் பற்று உடையவனுயின் அதில் அவன் பித்தன் என்று கூறப்படுகின்றான். இங்கே அடிகள் தமக்கு உயிர்ப்பற்றிலாவது, பொருட் பற்றிலாவது சிறிதும் தொடர்பு இன்றி இறைவனையே நோக்கி நின்று அவனிடத்திலேயே முழுப்பற்றுடையவரா யிருத்தலை 'பித்தன் இவன் என என்னை ஆக்குவித்து' என்றார். உலகிலுள்ளவர்கள் உயிர்ப்பற்றும், பொருட்பற்றும் உடையவர்களாதலின்

அப்பற்றுக்கள் சிறிது மில்லாத அடிகளைத் தங்கள் பார்வையில் பித்தன் எனக் கூறுதல் இயல்பு. "வைத்த நீதி பெண்டிர் மக்கள் குலங் கல்வி என்னும் பித்த உலகில்" என்று அடிகள் திருக் கோத்தும்பி 6வது பாட்டிற் கூறியதை நோக்குக.

சித்தம் எனும் திண்கயிற்றால் பெயராமே திருப்பாதம் கட்டுவித்த— இறைவனுடைய இரண்டு திருவடிகளும் உயிர்களுக்கு வீடு அளிக்கும் இடம் ஆதலின் திருப்பாதம் கட்டுவித்த என்றும், பசு கரணமாகிய சித்தமே சிவகரணமாக மாறிக் கருவி கரணங் களில் சிறிதும் தாக்கின்றிச் சாக்கிராதீதத்தில் எக்காலமும் இறைவனுடைய திருவடிகளைப்பற்றி நிற்றலால் 'சித்தம் என் னும் திண்கயிற்றால்' என்றும், அத்திருவடிகளைவிட்டு இனிச் சித்தம் பெயர்ந்து உலகத்தை நோக்கிப் பற்றுதலின்மையால் 'திண்கயிற்றால் பெயராமே கட்டுவித்த' என்றும், இவ்வாறு தம் மை இறைவன் திருவடிகளைப் பற்றுவித்துப் பேரின்பம் நுகரும் படி செய்தது இறைவன் செயல் ஆதலின் கட்டுவித்து என்று பிற வினையிலும் கூறி அருளினர். 'சித்தம் சிவமாக்கிச் செய்தனவே தவமாக்கும் அத்தன் கருணை' என்று திருத்தோணேக்கம் 6வது பாட்டிற் கூறியருளினமை காண்க.

வித்தகனார் விளையாடல்—'வித்தகன்'என்பது 'அறிவுடையவன்'. ஒன் றில் அறிவுடையவனே அதனைச் செய்யும் திறன் உடையவனாயு மிருத்தலின் அந்த வடமொழிச் சொல் திறமுடையவன் என்ற பொருளிலும் வழங்கப் படுகின்றது. இறைவன் ஐந்தொழில் செய்தற்குப் பேரறிவும், பேராற்றலும் உடையவனாயிருத்தலின் வித்தகன் என்பதற்குப் பேரறிவாற்றலுடையவன் என்பது பொருளாகக் கொள்ளப்பட்டது. 'விளையாடல்' என்பது இங்கே 'அருள்விளையாடல்'. ஐந்தொழில்களும் உயிருக்கு இறைவனால் சங்கற்பத்தால் மாத்திரம் எளிதாகச் செய்யப்படுதலின் வித்தக னார் விளையாடல் என்றார்.

விளங்கு தில்லை கண்டேனே—தில்லைத்தலமானது இறைவன் சிறப் பாக ஐந்தொழிலைக் குறிக்கிற திருநடம் செய்கிற தலமாதலால் 'விளங்குதில்லை கண்டேன்' என்றார்.

மூவகைச்சிறப்பு அத்துவித நிலைகள், 'இன்றெனக்கருளி' என்ற முதற்குறிப்புப் பாட்டு முன் இரண்டு வரிகளிலும் கூறப்பட்டிருத்தல் போலவே, இந்தப் பாட்டிலும் கூறப்பட்டிருக்கின்றன. ஆனால் 'இன் றெனக்கருளி' என்ற பாட்டில் இறைவனுடைய அருட் செயல்களின் பயனாகத் தம்முடைய அறிவு இச்சை செயல்க ளெல்லாம் இறைவ னுடைய அறிவு இச்சை செயல்களில் அடங்கித் தமது உள்ளத்தில் விளங்கினதைக் கூறி யருளினர். இந்தப்பாட்டில் அவர் இறைவன் தமக்குச்செய்த அருட் செயல்களையே வியந்து துதித்துக் கூறு கின்றார்.

—மா. வே. நெல்லையப்ப பிள்ளை.

"இன்றெனக் கருளி"

[திரு. மா. வே. நெல்லையப்ப பிள்ளை, பி.ஏ.]

(சகுO-ம் பக்கத் தொடர்ச்சி)

'இன்றெனக்கருளி' என்ற முதற்குறிப்புத் திருவாசகப் பாட்டின் நாலாவது வரியின் உரைவிளக்கம்.

நான்காவது வரியானது மேலே இறைவனது இலய நிலையை (ஒடுக்க நிலையைக்) கூறுகின்றது என்று மாத்திரம் கூறப்பட்டது. இன்னும் இயன்றவாறு சிறிது விளக்குவாம்.

ஒடுக்க நிலையில் காரிய உலகமானது தூவெளி அருட்பே ரொளியில் அடங்கிய காரண நிலையில் சத்தாந்தன்மையில் என்றும் அழியாது உள்ளது. அறிவு உலகமாகிய உயிர்கள் எல்லாம் இறைவனுடைய பேரறிவுச் சுடரில் அடங்கியுள்ளன. இவ்வாறு உயிரில் உலகும் உயிருலகும் விளங்காமல் இறை வனிடம் அடங்கி நிற்றலை இறைவன் அடிகளுக்குக் காட்ட, அடிகள் அகக்கண்ணுற் கண்டபொழுது (இந்த உயிரில் உலகம் உயிருலகம் ஆகிய) "ஒன்றும் நீ அல்லை" என்று கூறியருளினர். இஃது இறைவனிடத்தில் எல்லாப் பொருள் களும் அடங்கியுள்ளன என்பதைக் கூறுகின்றது. இறைவன் தனது பேரருளினல் உயிர்கள் உய்யும்படி ஐந்தொழில் செய்தற்கு உயிரில்உலகம் உயிருலகம் முழுவதும் தோய் வின்றிக் கலந்து நிற்றலை அடிகளோடு உடனுய் நின்று கண்டு அடிகளையுங் காணும்படி செய்தபொழுது அடிகள், 'உன்னை யன்றி இவ்விரு உலகங்களும் சீவியா' என்று 'அன்றி ஒன் றில்லை' என்று கூறியருளினர். இஃது இறைவன் எல்லாப் பொருள்களிலும் நிறைந்து உளன் என்பதைக் கூறுகின்றது. இறைவனிடத்தில் எல்லாப்பொருள்களும் அடங்கி யிருத்தலை யும், இறைவன் எல்லாப் பொருள்களிலும் நிறைந்திருப்பதை யும் அறிதல் உயிரினது யானெனதற்ற துரியநிலை அறிவாகும். இந்தத் துரியநிலைக்கு மேலுள்ள துரியாதீத நிலையில் உயிர் இறைவனை அணைய இறைவன் உயிரைத் தன்னேடு வேறற அணைத்துக்கொண்டு பேரின்பம் அருளுதல் பேரின்ப நிலை யாகும். இந்தப் பேரின்ப நிலையை எய்தியபொழுது அடி கள் மேலே கூறியவாறன்றி 'ஆருன்னை அறியகிற்பாரே' என்று கூறியருளினர்.

இந்தத் துரிய நிலை அறிவைப்பற்றித் திருமூலர் திருமந் திரம் (சமாஜப்பதிப்பு) 2308 வது பாட்டில் 'எல்லாந் தன் னுட் புக யாவுளுந் தானுகி, நல்லாந்துரியம் புரிந்தக்கால் நல் லுயிர், பொல்லாதவாறுறுட் போகாது போதமாயச், செல் லாச்சிவகதி சென்றெய்து மன்றே,' என்று கூறியருளினர்.

ஆராய்ச்சிப் பகுதி-Research

கம்பன் புளுகும், வால்மீகி வாய்மையும்

[திரு. பா. வே. மாணிக்க நாயக்கரவர்கள் எழுதியது]

"கம்பன் புளுகும், வால்மீகி வாய்மையும்" என்னும் துணிபை முன்னிடாக இட்டு, யான், இக்கல்வி கேள்வி முற்றிய பெருங்குழுவில் பேசவந்த துணிவே எனது புல்லறிவாண்மை யைச் சுட்டிக்காட்டும் குறிக்கொம்பாகும். எனினும், இத்தகைய வெறுஞ் சொல்லையும் பெருஞ் சொல்லாகக் கொண்டு சிரியோராகிய நீவிர் கேட்பிரேல் நுங்கள் பெரு மிதத்தை நிலை நாட்டினீர் ஆவிர்கள்.

'இறையு ஞானமிலாத வென்புன் (சொலை)
முறையினா லுணர்ந்திரு முனிவரோ'

முனியவே மாட்டீர். அன்றியும், நான் பேசவந்தது புளு கென்று உங்களுக்குத் தெரியுமானாலும், என் புளுகிற்கு முன் புளுகாக, இளம்புளுகனார் திருநாவிற் புளுகர் முதலிய அறிக்கைவிடுத்த மாணவர்கள், என் தாளாண்மையை, (Executive Engineer) ஒடு முடித்தவனென்று புளுகிபிருக்கிறபடி யால் என் புளுகு பின்புளுகாக ஏற்பீர்களாக.

ஆராய்ச்சியின் தோற்றுவாய்

நாரணன்விளை யாட்டெல்லா நாரத முனிவன் கூற
ஆரணக் கவிதை செய்தான் அறிந்த வான்மீகி யென்பான்
சீரணிசோழ நாட்டுத் திருவழுந்தூருள் வாழ்வோன்
காரணக் கொடையான் கம்பன் தமிழினாற் கவி செய்தானே.

என்று வான்மீகத்திருந்து கம்பன் கவி செய்தானெனப் பிறர் சொல்லியிருத்தலாலும் ;

தேவ பாடையினிக் கதை செய்தவர்
மூவரானவர் தம்முளு முந்திய
நாவினா னுரையின்படி நான்றமிழ்ப்
பாவினா லிதுணர்த்திய பண்பரோ.

என்று அவ்வாறு வான்மீகத் திருந்து கம்பன் 'நொய்தின் நொய்ய சொல் நூற்ற' தாகக் கவிக்கூற்றே இருத்தலாலும்;

"அபிநவ கவிநாதன்
விழுந்தஞாயிறு எழுவதன்முன் மறைவேதிய ருடனாய்ந்
தெழுந்த ஞாயிறு விழுவதன்முன் கவி பாடின தெழுநூறே.

என்று பிறர் சொல்லியிருத்தலானும் நமது கம்பன், தனக்கே—ஆரிய மொழிப்பயிற்சி இல்லாமலோ, அன்றி இருந் திருப்பினும், வேதியர் சொல்லை வேதச் சொல்லாகத்தன் தலையிற்றாங்கித், தனது நூலை ஆக்க எண்ணிய நோக்கத் தாலோ, மற்று அவ்வேதியருடன் ஆராய்ந்தே, தனது இரா மாயணத்தை யாத்தன னென்றிருத்தலினாலும்;

"தேவபாடை யினிக் கதை செய்தவர்
மூவரானவர் தம்முளு முந்திய
நாவினா ருரையின்படி"

தான் "தமிழ்ப் பாவினால்" மொழி பெயர்த்ததென்று கம்பன் கூற்றாகவே இருத்தலானும்,

கம்பன் நூலிடையே அறியக் கிடக்கும் மக்கள் ஒழுக லாற்றிற்கும், வடநாட்டு ஆரியமக்கள் ஒழுகலாற்றிற்கும், பலவகைகளில் மாறுபட்டதாகப் புலப்பட்டமையினாலும், நீலகிரிமலைமேல் ஆனந்தாஸ்ரமத்தமர்ந்திருந்த - மஹரிஷி சிவத்யானானந்தர் வால்மீகத்திருந்து கம்பன் பிறழ்ந்ததை வற்புறுத்தி 1-3-1919-ல் ஒரு * திருமுகம் எனக்குக் கடைக் கணித்த படியாலும் கம்பனுக்கு முதனூலாகிய வான்மீகத் துடன் ஒத்திட்டுப் பார்க்கும், அக்கரையும் ஊக்கமும் அடி யேனுக்குத் தோன்றின.

புளுகுக்குச் சக்கரவர்த்தி யார் என்பது.

2. ஒத்திட்டுப் படிக்க எனக்குக் கிடைத்த சுவடிகள், இப்போது கம்பராமாயண மென்றும், வால்மீகி ராமாயண மென்றும், பெயரிட்டுப் பதிப்பிக்கப் பெற்று உலவிவரும், கடைச் சுவடிகளேயாம். இவைகளைக் கொண்டுதான் கம்பன் பேரில் புளுகை யேற்றினேனாகையால், இக்கடைச் சுவடிகளே மூலபாடங்களுக்கு வேறுபடப்பதிப்பிக்கப் பெற்றிருக்குமேல், கம்பன் புளுகு என்பது கடைச்சுவடிப் புளுகாக முடியும்.

அல்லது தமிழனாகிய கம்பன் "ஆரியம்" என்றால் கேழ் வரகு என்கிறவரையில் மாத்திரம் தெரிந்திருந்தானானால் அவ னுக்கு வால்மீகி நூலை எடுத்தோதிய வேதியர்கள் புளுகியிருத்

(மஹரிஷி சிவத்யானானந்தருடைய 1-3-1919 தேதிய திரு வாங்கிலமுகம் பின் சேர்க்கப்பட்டிருக்கிறது.)

தல் வேண்டும். ஆனல் அக்காலத்து வேதியர்கள் புளுகர்களல்லவென்று யான் முழுதும் நம்பியிருத்தலினலே புளுகென்று தோன்றிய முழுமையினையும் நம்மவன் கம்பன் புளுகென்றே யான் தீர்மானித்தேன். அவ்வளவு திறமையுடன் புளுகும் வன்மையும் புளுகுச் சக்கரவர்த்தியாகிய கம்பனையன்றி வேறு யார்க்கும் கிட்டக் கூடியதென்றும் யான் நம்பவில்லை.

இருநூல்களின் வேற்றுமை

3. புலமையுடையோர் சங்கநூற்களை மிகவும் பாராட்டுதல் அவைகளுள் பொதிந்து பொலியும் இயற்கை நவிற்சியணிகளை வியந்தன்றோ? அவ்வாறாயின் உலக இயற்கை நிகழ்ச்சிகள் அன்றெத் தகையனவோ இன்றத்தகையனவாக நம் இருவிழிகள் காண நிகழ்வதெனத் தோன்றும் அழகுடன் நவின்று செல்வது வால்மீகம். அதற்கு முற்றிலும் மாருக, செயல் கடந்த செயற்கைக் கட்டென்றும் கம்பன் கனவென்றும் இயற்கை யுணர்வினர் எவரும் எண்ணும்படி நவின்று செல்வது கம்பன் நூற்ற நூல்.

வால்மீகத்தில் உறுதிமொழி

4 மற்றைய புலவர்களைப் போன்று காலத்தால், சொல் வழக்கால், செவி வழக்கால், மாறிமாறிப் பிறழ் வடைந்து பின்வந்தெய்திய பாட்டிக் கதைகளைத் தங்கள் புலமை கொண்டு புனைந்தெழுதுபவர்கள் போன்றவரல்லர் வால்மீகி.

அவரோ கதைத் தலைவனகிய இராமன் காலத்தவர். கதைத் தலைவியாகிய சிதைக்குப் பிள்ளைப் பேறு பார்த்தவர். அவ்வாறு ஒரு காலத்தவராக நேர்ந்தமை போதாமலும், தனக்குநேராகத் தெரிந்த நிகழ்ச்சிகளையும், மறதியால் மாறுபட வரைய இடமுண்டென்று அஞ்சி, நான்முகன் அருளாலும் நாரத மகாமுனிவர் நெறிப்படுத்திய படியும் நிகழ்ந்த நிகழ்ச்சிகளை, இருந்த இருப்புகளை, அழுத அழுகைகளை, சிரித்த சிரிப்புகளை அவ்வவ்வாறே வரைந்து வைத்தனராக வால்மீகமே கூறுகின்றது.

வால்மீகம்-பாலகாண்டம்-3-வது சர்க்கத்தில்

இராமன் இலக்குவன் சிதை தசரதர் நாட்டார், நகரத்தார்களும் அவரவர்கள் சிரித்தது, பேசியது, செய்தது, வனவாசத்தில் நடந்தது முதலான எல்லாவற்றையும் அருள் வலுவினலே உண்மையாக அறிந்து வால்மீகி எழுதினரென்று கூறப்படுகின்றது.

கம்பன் புளுகின்மேற் புளுகனேன்பது

5. கம்பனே "எண்ணியசகாப்தம் எண்ணூற்றேழின் மேல்" அதாவது இங்கிலீஷ் 885-ல் வாழ்ந்த முந்தா நாளைய மனிதன். இற்றையோர் கம்பனைப் பதின்மூன்றுவது ஆழ்வாராக்கினாராயினும் தன் காலத்தில்

"நெற்கொண்டு போமளவும்
நில்லாய் நெடுஞ்சுவரே"

என்று சோற்றிற்கு மண்சுவரெடுத்த வெறும் மனிதனேயன்றி வால்மீகியைப்போலவோ சிவத்யானுனந்தரைப்போலவோ மகரிஷியன்று.

ஆகலின் உடனிருந்து கண்டும் கேட்டும் அருள் பெற்றும் ஆய்ந்தும் வால்மீகி எழுதிய கதையை முதலிலிருந்து இறுதிகாறும் கம்பன் தந்நூலில் திரித்தும், கூட்டியும், குறைத்தும் புளுகிச் சென்றதையேனும் புளுகினேனென்று சொல்லிவிட்டிருப்பானுனல், அந்தக் கூற்றுவரையிலேனும் கம்பன் புளுகனல்லனய்ப் போய்விடுதற்கு அஞ்சியேதான் புளுகவேயில்லை.

"மூவரானவர் தம்முளும் முந்திய
நாவினு ருரையின்படி"

தான் செய்ததாகவும் உறுதிமொழி கூறிப் புளுகின் மேற் புளுகினனந்தோ!

இரண்டு நூல்களிலும் பொதுப்பட உள்ளவை பேயரளவே யேன்பது

6. இராமன், சீதை, இலக்குவன், தாரை, இராவணன் முதலிய பெயர்களைப் பெயரளவினும்; இராமன் சீதை இலக்குவன் மூவரும் காட்டிற்குப் போனர்கள், இராமன் மனைவியாகிய சீதையை இராவணன் கொண்டோடிப் போனன். இராமன் குரங்குக் கூட்டத்தோடு கடல் கடந்து சென்று இராவணனைக் கொன்று சீதையை மீட்டுவந்தான் என்பன போன்ற நிகழ்ச்சிகளை நிகழ்ச்சியளவினும், வால்மீகி நூலிற்கும் கம்பன் நூலிற்கும் பொதுப்படக் காணக்கிடக்கின்றனவேயன்றி, சிறிது உற்று நோக்குங்கால் வால்மீக ராமன் வேறு, கம்ப ராமன் வேறு, வால்மீகர் சீதை வேறு, கம்பர் சீதை வேறு,வால்மீகர் தாரைவேறு,கம்பர் தாரை வேறு என்பதும், கம்பமண்டோதரியோ கம்பன் மண்டையோட்டிற்குள்ளிருந்து பிறந்தவள் என்பதும், நன்கு விளங்கும்.

கதை நிகழ்ச்சிகளினும் வால்மீக நிகழ்ச்சிகளே இயற்கைக்குமாறுத வாய்மையெனத் தோன்று நிகழ்ச்சிகள். கம்ப நிகழ்ச்சிகளோ, இயற்கைக்குவேறுய பெரும் பெரும் புளுகுகளென்று ஓரமில்லா உள்ளப் பாங்கினருக்கு வெட்ட வெளியாகப் புலப்படக்கூடியனவும், கம்பன் கவித்திற நறவம் மாந்தி மயங்கியோருக்குப்

"பொய்யுடை யொருவன் சொல்வன் மையினுற்
மெய்போ லும்மே மெய்போ லும்மே"

என்ற ஆன்றேர் சொற்படி கம்பனைப் பதின்மூன்ருவது ஆழ்வாராகத் தோற்றச் செய்யக்கூடியனவும் ஆகிய நிகழ்ச்சிகளாக இருக்கின்றன. (தொடரும்)

சங்ககிரி துர்க்கம்

[ராவ்சாஹிப் C. M. இராமச்சந்திரஞ் செட்டியாரவர்கள்.]

இக்கோட்டை திருச்செங்கோடு தாலூகாவில் சங்ககிரி துர்க்கம் புகைவண்டி நிலயத்திற்கு 2 கல் தொலைவிலுள்ள ஓர் உயர்ந்த மலையின்மேற் கட்டப்பட்டிருக்கிறது. அம்மலையானது சுற்றுப் பக்கத்து நில மட்டத்தின்மேல் 1500 அடி உயரம் எழும்பி யிருக்கிற ஒரு பெரிய கருங்கற் பாறை. இம்மலையின் மேற்பாகம் செங்குத்தாயுள்ளது. தெற்கு, மேற்கு, வடக்குப் பாகங்களில் இம்மலையின்மேல் ஏறவே முடியாது. கீழ்ப்புறத்தில் மட்டும் ஏறுவதற்கு வசதி உண்டு. ஆனல், அத்திசையில் ஒன்றின்பின் ஒன்ருக 10 மதில் அரண்கள் உண்டு. இம்மலையின் அடிவாரத்திற் பெரிய பாறைகளும் குண்டுக்கற்களும் நிறைந்திருக்கின்றன. அகழிக்கு நடுவிலும் சுற்றிலும் முள்செடிகளும் கள்ளிகளும் நிறைந்து கிடக்கின்றன. ஆகவே இக்கோட்டைக்கு அருகிற் செல்வது எளிதன்று.

இக் கோட்டையின் மதில்கள் மிகவும் உரமாகக் கட்டுப்பட்டுள்ளன. அடிவாரத்திலுள்ள முதல் சுற்று மதில் இடிந்து போயிருக்கிறது. ஆனல் கருங்கல்லாற் கட்டப்பட்ட சிறு வாயில்கள் இன்னும் அப்படியே யிருக்கின்றன. அவற்றிற்கு, அடுத்தாற்போல் திரை போன்ற மறைசுவர்கள் இன்னும் கெடாமல் இருக்கின்றன. மற்றைக் காப்பு அரண்களும் அழியாமல் முன்போலவே இருக்கின்றன. மூன்ருவது தலைவாசல் தாண்டினதும் ஒரு குளத்தைக் காணலாம். அதற்கு அருகில் ஒரு பெரிய கோயில் இருக்கிறது. அது வரதராஜப் பெருமான்கோயில். அக்கோயிலின் சிற்ப வேலைத்திறம் சிறந்த தன்று. இக்காலத்திலும் அக்கோயிலில் நித்திய பூசை ஒழுங்காக நடைபெற்று வருகிறது.

மூன்ருவது வாயிலைத் தாண்டினதும் செங்குத்தான கற்படிகள் வழியாக ஏற வேண்டும். அவற்றில் ஏறினுல் நான்காவது ஐந்தாவது தலைவாயில்களுக்குச் செல்ல முடியும். ஐந்தாவது தலைவாயிலின் இரு புறங்களிலும் இரண்டு அரண்கள் இருக்கின்றன. ஒரு அரண் சதுரமாகவும் மற்ருென்று வட்டமாகவும் இருக்கின்றன. அவற்றிற் போர் வீரர்கள் மறைந்து கொண்டு எதிரிகளைத் தாக்குவார்கள். அவ்விடத்தில் மதிற்சுவர்களும் கைப்பிடிகளும் கருங்கல்லினுற் கட்டப்பட்டுள்ளன. அவற்றின் உச்சியில் செங்கல்லினுல் கைப்பிடிகள் கட்டப்பட்டு அதில் பீரங்கிகள் வைப்பதற்குத் தொளைகள் விடப்பட்டுள்ளன. எல்லா மதில்களைக் காட்டிலும் இம்மதில் அரண் தான் மிகவும் திண்மையாகக் கட்டப்பட்டுள்ளது. இதனைத் திப்பு சுல்தான் கட்டினதாகச் சொல்லுவார்கள். தலைவாயிலுக்குத் தென்புறத்திலுள்ள மதிலானது மலையின்மேல் ஏற்றமாகச் செல்கிறது. அச்சுவர் குடைபோல் கவிழ்ந்திருக்கும் ஒரு பெரும் பாறைவரையிற் செல்கிறது. அப்பாறையின் கீழ் ஒரு குகை இருக்கிறது. அக்குகைக்கு முன்னுல் ஒரு சிறு பள்ளி வாசல் கட்டப்பட்டிருக்கிறது. இப்பள்ளிவாசலுக்குக் கபீர் மசீது என்று பெயர். இதனை ஒரு புனிதக் கோயிலாக இவ்விடத்து முகம்மதியர்கள் கொண்டாடுவார்கள். இம் மசீதியில் சிற்ப வேலைத் திறம் இல்லை. இவ்விடத்து முகம்மதியர்கள் இம்மசீதியினை நல்ல நிலைமையில் வைத்திருக்கிருர்கள்.

ஐந்தாவது வாயிலிலிருந்து மலையின்மேல் நேர்முகமாகப் படிகள் செல்கின்றன. அவற்றின்மேல் ஏறிச்சென்ருல் ஆருவது ஏழாவது வாயில்களைக் காணலாம். ஏழாவது வாயிலுக்கருகில் செங்கல்லினுல் வலிமையாகக் கட்டப்பெற்ற வெடி மருந்துச்சாலை இருக்கிறது. அக் கட்டிடம் நல்ல நிலைமையில் இப்பொழுதும் இருக்கிறது. இதை விட்டு மேலே ஏறினுல் எட்டாவது வாயிலை அடையலாம். அந்த வாயில் வன்மையற்றிருந்தமையாற் பல ஆண்டுகளுக்கு முந்தி அதனை எடுத்து விட்டார்கள். அதை விட்டு உச்சிக்கு ஏறினுல் அங்கே ஒன்பதாவது வாயில் இருக்கிறது. அந்தத் தலைவாயில் ஆங்கிலரால் கட்டப்பட்டது. அதன் வளைவின் முகட்டில் 1799 என்ற இலக்கம் எழுதப் பட்டுள்ளது. இக்கோட்டையை ஆங்கிலர்கள் வசப்படுத்திய பிறகு அது கட்டப்பட்டதுபோலும். கடைசியானதும் பத்தாவதுமான வாயில் 'மைசூர் தலைவாசல்' என்றபெயரோடு வழங்குகிறது. அத்தலைவாயிலை முற்காலத்து மைசூர் அரசர்களில் ஒருவன் கட்டினதாகச் சொல்லுகிருர்கள். இவ்வகையான பலம் பொருந்திய 10 மதில்களையும் வாயில்களையும் தாண்டிச்சென்று கோட்டையைப் பிடிப்பதென்ருல் எவ்வளவு கடினம் பாருங்கள்!

மேற் சொல்லிய 10 வாயில்களையும் தாண்டி மலையின் உச்சியை அடைந்தால் அங்கே ஒரு சிறு கோயிலைக் காணலாம். அது திருமால் கோயில். அப்பெருமாளுக்குச் சென்ன கேசவப் பெருமாள் என்று பெயர். சிற்பச் சிறப்பு ஒன்றுமில்லை. இக்கோயிலில் இப்பொழுதும் நித்திய பூசனை சரியாக நடந்து வருகிறது. மலையின் உச்சியில்

உள்ள மதிலின் நடுவில் கொடி பறக்கவிடும் திட்டு ஒன்றிருக்கிறது. தவிர, சில இடிந்து போன கட்டிடங்களும் இருக்கின்றன. முற்காலத்தில் அவற்றைத் தானியக் களஞ்சியங்களாகவும் பொருட் சாலைகளாகவும் பயன் படுத்தி வந்தார்கள். இப்போது ஆங்கில அரசாங்கத்தார் இக்கோட்டை கொத்தளங்களை எல்லாம் சட்டப்படி பாதுகாத்து வருகின்றனர்.

இம்மலை கடல் மட்டத்தின்மேல் 2345 அடி உயரமுள்ளது. இம்மலை ஒரு பெரிய வெண்மையானபாறை. ஆகையால் இதனை, சங்கைப் போன்ற பாறை என்ற பொருள்பட சங்ககிரி துர்க்கம் என்ற பெயரினால் வழங்கி வருகிறார்கள். அப்பெயர் பின்னால் குறுகிச் சங்கிரி துர்க்கம் என ஆயிற்று. ஒருநூறு ஆண்டுகளுக்கு முந்தி இதனைச் சங்கிலித் துர்க்கம் என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள். அது தப்பு என்று தெரிகிறது. நாம் முன்னே விவரித்த கோட்டை மதில்களைப் பற்றி இனிச் சிறிது அதிகமாகக் கூறுவோம். முதல் வாயிலின் பெயர் உலிமுகம் வாயில் என்பது. அதனைக் குன்னிவேட்டுவ ராஜன் கட்டினானாம். உலிமுகம் என்றால் புலிமுகம் என்று பொருள். அவ்வாயிலில் புலிமுகத்தை வைத்திருக்கலாம். இரண்டாவது வாயில் திட்டிவாசல், கல் கோம்பை வாசல், கள்ளவாசல் என்ற பெயர்களால் அழைக்கப்படுகிறது. மூன்றாவது 'வாயில் கெடியார வாசல்' என்று பெயர். இதற்கு அருகில் தான் வரதராஜப் பெருமாள் கோயில் இருக்கிறது. நாலாவது வாயில் இரண மண்டல வாசல் என்று பெயர் பெறும். ஐந்தாவது வாயில் புதுக்கோட்டை என்பது. இதற்கு இருபுறம் தான் இரண்டு கொத்தளங்கள் உள்ளன. இதன் மதில் மிகப் பெரியது. இதிலே பீரங்கித் துளைகள் இருக்கின்றன. இதனைத் திப்பு சுல்தான் கட்டினதாகச் சொல்லுவார்கள். இங்கே இருக்கும் குகை 35 அடி உயரமுள்ளது. ஷா மர்தான் காஜி என்ற முகமதிய பக்கிரி இக்குகைக்குள் புகுந்தவன் வெளியில் வரவில்லையாம். ஆனால் அதே நாள் அப்பக்கிரி சிவசமுத்திரத்தில் ஒரு குகையிலிருந்து வெளியே வந்தார் என்று சொல்லப்படுகிறது. அவருடைய சமாதியும் அங்கே இருக்கிறது. இங்கே அவரைப் புலி முதலிய கொடு விலங்கினங்கள் வழிபடுமாம்.

ஆறாவது வாயிலுக்கு ரோக்கல் திட்டி வாசல் என்று பெயர். 7-வது வாயில் பூவல் திட்டிவாயில். இது மலையின் பாதித்தொலைவில் இருக்கிறது இங்கே வெடிகுண்டு வெடிக்கக்கூடாத சாலை ஒன்று இருக்கிறது. எட்டாவது வாயில் இடிவிழுந்தான் குண்டு வாசல் என்பது. 40 அடி உயரமுள்ள ஒரு பாறையின் மேல் இடி விழுந்ததாம். எட்டாவது வாயில் அபாயமாய்ப் போய் கி. பி. 1880ல் இடித்து விட்டார்கள். 6,7,8 வாயில்கள் மைசூர் அரச மரபினரைச் சேர்ந்த இலட்மிகாந்த ராஜன் கட்டினவையாம். ஒன்பதாவது வாயில் வெள்ளைக்காரன் வாசல் என்றும் கம்பெனி வாசல் என்றும் சொல்லுவார்கள். இதில் தான் 1799 என்று எழுதப்பட்டிருக்கிறது. இங்கிருந்து மேலே 30 படி ஏறவேண்டும்; என்றாலும், இதனை அறுபதாம்

படி என்பார்கள். கடைசிவாயில் மைசூர் வாசல் என்று பெயர். அஃது அதிக சிறந்த வேலைப்பாடு கொண்டது. மலைமேலுள்ள ஒரு சுனைக்கு மான் சுனை என்று சொல்லுவார்கள். இதன் நீர்த்தம் பல நோய்களைத் தீர்க்குமாம்.

செங்குத்தான பாறையின் மீது தஸ்தகீர் துர்க்கா என்ற ஒரு சிறு பள்ளி வாசல் இருக்கிறது. தஸ்தகீரினுடைய மறு பெயர் சையத் அப்துல்காதர் ஜைலம் என்பது. இப்பெரியார் இங்குவந்த செய்தி தெரியவில்லை. வடக்கே சமாதியைப் போன்ற ஒரு கட்டிடமுண்டு. இங்கேதான் ஹைதர், திப்பு நாள்களில் கொலைக்குற்றம் விதிக்கப் பட்டதாம். மைசூர் வாசல் மதிலில் சிறிய கதவு ஒன்றிருக்கிறது. இதனை மோர் திட்டி வாசல் என்பார்கள். இதனை ஒரு பாற்காரி ஆங்கிலேயருக்குக் காட்டிக் கொடுத்தாளாம்.

இக்கோட்டை மிகவும் வன்மையுள்ளதா யிருந்த போதிலும் மைசூர் யுத்தங்களில் இதைப்பற்றி ஒன்றும் தெரியவில்லை. இவ்விடத்தில்75 இரும்புக்குண்டுகளும் பல நாணயங்களும் அகப்பட்டன.

இம்மலையின் அடிவாரத்தில் 30 அடி உயரமுள்ள ஒரு பாறை இருக்கிறது. அதனை முதலியார் குண்டு என்பார்கள். தாரமங்கலம் கோயில் கட்டின போது அதில் வேலை செய்யாமல் சோம்பேறித் தனமாய்த் திரிந்தவர்களை இக்குண்டின்மேல் நிறுத்தி ஒறுத்தனராம். முடிவில் கெட்டி முதலியாரைத் திப்புசுல்தான் இக்குன்றின் மேல் ஊணு முறக்கமுமின்றி 21 நாள் நிறுத்தினனும். அதனல் அவர் உயிர் துறந்ததாகச் சொல்லுவார்கள். இக்கதை உண்மையாக இருக்காது.

சங்ககிரிதுர்க்கம் முற்காலத்தில் குன்னத்தூர்த் துர்க்கம் என்ற பெயரால் வழங்கி வந்தது. 1522, 1544 என்னும் ஆண்டுகளில் விஜய நகரத்துக் கல்வெட்டுகளில் குன்னத்தூர்த் துர்க்கம் என்றே கண்டிருக்கிறது. 1538ல் கும்மடண்ணனும் 1540ல் ராமப்ப நாயகனும் 1544ல் தண்டு பாவப் பையனும் அரசனுடைய பிரதிநிதிகளா யிருந்தார்கள். இக்கோட்டையை 1588ல் சிக்க தேவராயன் பிடித்து மைசூரோடு சேர்த்துக்கொண்டான். 1717ல் தொட்டகிருஷ்ண ராஜன் தான் மணம் செய்துகொண்ட காலத்தில் கன்னட பிராமணர்களை இங்கே குடியேற்றி ஈகை புரிந்திருக்கிறன். அதைப் பற்றிய செப்புப்பட்டயம் ஒன்றிருக்கிறது. அதனைச் சேலம் ஜில்லா கெஜட்டியரில் பதிப்பித்திருக்கிறர்கள். 1792-ல் சங்ககிரி துர்க்கத்தில் ஒரு பட்டாளம் நிறுவப்பட்டுப் பின்னல் அது நீக்கப் பட்டது.

இலக்கணமும் இலக்கியமும்:
LANGUAGE AND LITERATURE

திருவள்ளுவர்

[ஆசிரியர் மறைமலையடிகளார்]

செந்தமிழ் மொழிக்கொரு நந்தாமணி விளக்காய்த் தோன்றித், தன்கட் சுடர்ந்தொளிரும் அறிவுப்பேரொளியைக், தான்பிறந்த தமிழ் நாட்டவர்க்கு மட்டுமேயன்றி, இந்நிலவுலகின் பிறபகுதிகளிலுள்ள பிறநாட்டு மாந்தர்க்கும் வேற்றுமையின்றி வீசி, எல்லாரையும் ஒரே முழுமுதற்கடவுளாம் ஒப்பற்றதந்தைக்கு உரிமை மகாராய்வைத்து, அவரறிய வேண்டும் அரும்பொருள் முற்றும் ஒருங்கே அறிவுறுத்துந் தெய்வத் திருக்குறள் என்னும் நூலை அருளிச்செய்த பெரியாரையும் அவரது வரலாற்றையும் அறிய விரும்பாதார் யார்? எவரும் இராரன்றோ? ஆதலால், அவரைப் பற்றிய குறிப்புகள் சிலவற்றை இங்கு வரைவாம்.

திருவள்ளுவ நாயனார், கிறித்துசமய முதல்வரான ஏசுமுனிவர் பிறப்பதற்கு முப்பதாண்டுகள் முன்னரே பிறந்தருளினாரென்பதை மாணிக்கவாசகர் வரலாறுங் காலமும் என்னும் எமது பெருநூலிலே பலநூற்சான்றுகள் கொண்டு விளக்கிக்காட்டி யிருக்கின்றோம். அதன் விரிவை அங்கே கண்டுகொள்க.

இவர்தந் தந்தையார் பெயர் 'பகவன்' எனப்படுமென்றும், இப்பகவன் தமிழ்நாட்டுத் தாபத வொழுக்கத்தினரான ஓர் அந்தணராவரென்றும், இவர்தம் அன்னையார் கருவூரிற் புலையர் குலத்திற் பிறந்து 'ஆதி' எனப் பெயர் பெற்றவரென்றுங் கபிலரகவல் கூறுகின்றது. இனி, ஞானமிர்தம் என்னும் வட்டுநூல் திருவள்ளுவரின் தந்தையார் பெயர் 'யாளிதத்த முனிவர்' எனக் கூறுமேனும், இவர்தம் அன்னையார் ஒரு புலைச்சி யென்றே மேலைவரலாற்றோடு ஒருப்பட்டுரைக்கின்றது. யாளிதத்தமுனிவரென்பது இயற்பெயராகவும், பகவன் என்பது சிறப்புப்பெயராகவுந் திருவள்ளுவரின் தந்தையார் ஒருவர்க்கே வழங்கிவந்தமை இவ்விருநூல்களாலும் அறியப்படும். தமிழ்நாட்டிலுள்ளவர்கள் தம்மின் மூத்தாரையுங் கல்வியறிவின் மிக்காரையும் பிறசிறப்புகள் உடையாரையும் அவர்க்குரிய இயற்பெயரான் வழங்குவது குற்றமாமெனக் கருதி, அவர்பிறந்த ஊர்ப்பெயரானுதல் அன்றி வேறு சிறப்

புப்பெயர்களானுதல் அவரைக் குறித்து உரையாடுதல் தொன்றுதொட்ட வழக்கமாய்ப் போதருகின்றது. ஆதலாற், திருவள்ளுவரின் தந்தையார்க்கு இரண்டு நூல்களில் இருவேறு பெயர்கள் ஓதப்பட்டதில் ஏதும் மாறுபாடில்லையென்க. திருவள்ளுவர் தந்தையாரின் பெயரளவிற் சிறிதுமாறுபாடு காணப்படினும், அவர் தவவொழுக்கத்திற் சிறந்த முனிவரென்பதும், அவர்தம் அன்னையார் ஒருபுலைச்சியேயென்பதுங் கபிலரகவற்கும் ஞானமிர்தத்திற்கும் ஒத்தமுடிபாயிருத்தலே கருத்திற்பதிக்கற்பாலதாகும். அம்முனிவர்பிரான் விழுமிய அந்தணர் மணியா யிருந்தும், பிறப்பளவில் இழிந்தாளாகக் கருதப்படும் ஒரு புலைச்சியை விழைந்து அவளை அவர் மணந்துகொண்ட பான்மையினை நினைத்துப் பார்க்குங்கால், அத்துணைச்சிறந்த பெரியாருள்ளத்தைக் கவரத்தக்க மனநலமுங் கற்பொழுக்கமும் வனப்பும் அவ்வம்மையார் உடையராயிருந்தா ராதல் வேண்டுமென்பது இனிது விளங்காநிற்கும். தாம்ஈன்ற குழவிகளை ஈன்றஇடங்களில் உள்ளார்க்கே தந்து பற்றின்றிச் சென்ற பகவனாரின் கருத்துக்கு, மாறின்றி யொழுகி, அவருடன் நிழல்போற்சென்ற ஆதியம்மையாரின் பற்றற்ற உள்ளமுங் காதற்கற்பொழுக்கமும் மிகவும் பாராட்டற் பாலனவாகும்.

இனித், தம் தந்தையார் பெயர் 'பகவன்' என்றிருத்தலையுந், தம் தாயார் பெயர் 'ஆதி' என்றிருத்தலையுங் கருதித், தம்மைப்பெற்ற அவ்விருவர்செய்த நன்றியையும் அன்பினுல் அகங்குழைந்துருகி நினைந்தமையாற்முன், ஆசிரியர் திருவள்ளுவர் தாம் இயற்றியருளிய திருக்குறள் என்னும் ஒப்புயர்வில்லாத் தனிச்செந்தமிழ் நூலின் முகத்தே கடவுள் வழிபாடு செய்கின்றுழி அம் முழுமுதற்கடவுள் பெயராக ஆதிபகவன் என்னும் அவ்விரு வடசொற்றொடர்ந்த தொடரை முதற்செய்யுளிலேயே அமைத்தருளினர். 'திருக்குறள்' நூன்முழுதுந் தனிச்செந்தமிழ்ச் சொற்களினுலேயே யாத்திட்ட அப்பேராசிரியர், அந்நூன்முகத்திற் கடவுளைக் குறித்தற்கு எத்தனையோ பல தனித்தமிழ்ச்சொற்க ளிருப்பவும் அவற்றையெல்லாம் விடுத்து, 'ஆதிபகவன்' என்னும் வடசொற்றொடரைத் தெரிந்தமைத்ததற்குக் கழிபெருங் காரணம் ஒன்றிருத்தல் வேண்டுமன்றோ? அக்காரணந்தான் யாதோவெனிற், றம் தாய்தந்தையர் தமக்குச்செய்த நன்றியை அதனுல் நினைவுகூர்தற்கு அவர் விழைந்தமையே உறுபெருங் காரணமாமென்க. இங்ஙனமே, நூலியற்றும் பேராசிரியர், தம் தாய் தந்தையர் உடன்பிறந்தார் சுற்றத்தாரைப் பற்றிய குறிப்பு

களையுந், தம்முடைய வாழ்க்கைக் குறிப்புகளையுந் தாமியற்றும் நூல்களிலே ஆங்காங்குக் குறிப்பாலும் வெளிப்படையாலும் நுவன்றுசெல்லுதல் இயல்பு. சைவசமயாசிரியர்களான திருஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் என்னும் நால்வருந் தாம் அருளிச்செய்த தேவார திருவாசகங்களில் தம்முடைய வரலாற்றுக் குறிப்புகளைப் பெரும்பாலும் வெளிப்படையாகவுஞ் சிறுபான்மை உய்த்துணரவைப்பாகவும் அமைத்துரைத்தல் காண்க. ஏனை நூலாசிரியர் அவர்போற் றம்முடைய குற்றங் குறைகளை இறைவனிடத்தே முறையிட்டுச் சொல்லிப் பாடுதலிலராய், அறம் பொருள் இன்பங்களையும், ஒரு கதை தழுவிவருந் தொடர்நிலைச் செய்யுட்களையும் இயற்றினார்களாகலின் அவைதம்மிற் றம்முடைய வாழ்க்கைக் குறிப்புகளை வெளிப்படையாய்ச் சொல்ல இடம் பெறாது, அவைதம்மிற் சிலவற்றை ஆங்காங்குக் குறிப்பாகவே நுவலலாயினர். நூலாசிரியர்க் குரிய இவ்வழக்காறு, தமிழ் நூலாசிரியர் பாலேயன்றி, ஆங்கிலம் ஆரியம் முதலான ஏனை மொழி நூலாசிரியர் பாலுங் காணப்படுதலும், அவருடைய நூல்களை ஆராய்ந்து நுட்பங்கள் வரையும் உரைவல்லார்கள் அதனைத் தெரிந்தெடுத் தெழுதலும் அவ்வந் நூல்வல்லார் வாய்க் கேட்டுணரப்படும். ஆகவே, இங்குத் தெய்வப் புலமைத் திருவள்ளுவநாயனார், தமது தெய்வச் செந்தமிழ் மொழிமேல் வைத்தபற்றினையுஞ், செந்தமிழாக்கங் கண்ணுங் கருத்துமாய்ப் பேணுந் தம் காலத்து நல்லிசைப் புலவர் மேற்கொண்ட தனிச்செந்தமிழ் வழக்கினையும் மீறி, "ஆதிபகவன்" என்னும் வடசொற்றொடரால் முழுமுதற்கடவுளுக்குத் தமது நூலின் முதலிலேயே பெயர் கூறுவாரானது, அத்தொடரின் முன்நின்ற 'ஆதி' என்பது தம் அன்னையார்க்கும், பின்நின்ற 'பகவன்' என்பது தந்தையார்க்கும் பெயராயமைந்து, அவ்விருவரையுந் தமது நினைவிற் கொணர்தல் பற்றியேயாமென்பது திண்ணம். திருவள்ளுவனாரோடு உடன் பிறந்தவரான ஔவையாரும்,

"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்"

என்று கூறியிருத்தலை உய்த்துணருங்கால் அவருந் தவநலத்திற்சிறந்த தம் தாய் தந்தையரை நினைந்தே அங்ஙனங் கூறினர் என்பது புலனாம்.

(தொடரும்)

உரிச்சொல் விளக்கம்

[பண்டித ஞா. தேவநேயப் பாவாணன் எழுதியது]

‘ உரிச்சொற் கிளவி விரிக்குங் காலை
இசையினும் குறிப்பினும் பண்பினும் தோன்றிப்
பெயரினும் வினையினும் மெய்தடுமாறி
ஒருசொற் பலபொருட் குரிமை தோன்றினும்
பலசொல் ஒருபொருட் குரிமை தோன்றினும்
பயிலா தவற்றைப் பயின்றவை சார்த்தித்
தத்தம் மரபிற் சென்றுநிலை மருங்கின்
எச்சொல் லாயினும் பொருள்வேறு கிளத்தல் ’

என்பது தோல்காப்பிய உரிச்சொல் இலக்கணச் சூத்திரம்.

இதற்கு, ‘ இசை குறிப்புப் பண்பென்னும் பொருட்குத் தாமே யுரியவாதலின் உரிச்சொல்லாயிற்று. பெரும்பான்மையுஞ் செய்யுட்குரியவாய் வருதலின் உரிச்சொல்லாயிற் றென்பாருமுளர் ’ என்று சேனாவரையர் உரை கூறியுள்ளார். இதனால் சேனாவரையர் காலத்திலேயே உரிச்சொல் செய்யுட் குரிய சொல் என்று ஒருவரோ பலரோ உரை கூறியுள்ள தாகத் தெரிகின்றது.

நால்வகைச் சொற்களில் பெயர், வினை, இடை என்ற மூன்றே இலக்கண வகைச் சொற்களாகும். உரிச்சொல் லென்பது ஓர் இலக்கியவகைச் சொல்லே யன்றி இலக்கண வகைச் சொல்லன்று. அது பெயராகவு மிருக்கும், வினை யாகவு மிருக்கும், இடையாகவு மிருக்கும்.

உதாரணம்

பெயர்	வினை	இடை
மாலை (இயல்பு)	வார்தல் (நீடல்)	பே அச்சக்குறிப்பு
எறுழ் (வலி)	இரங்கல் (வருந்தல்)	ஐ வியப்புக்குறிப்பு
பண்ணை (விளையாட்டு)	பாய்தல் (பரத்தல்)	

சேனாவரையரும் ‘கறுப்பு, தவவென்பன பெயர் வினைப் போலி. துவைத்தல், துவைக்குமென்பன பெயர் வினைக்கு முதனிலையாயின’ என்று கூறியுள்ளார்.

சூத்திரத்தில், இசையினும் குறிப்பினும் பண்பினும் தோன்றல், பெயரினும் வினையினும் மெய்தடுமாறல், ஒரு சொற் பலபொருட் குரிமையும் பலசொல் ஒருபொருட் குரிமையும் தோன்றல், பயிலாதவற்றைப் பயின்றவை சார்த்திப் பொருள் வேறு கிளத்தல் என உரிச்சொற்குக் கூறிய நான்

இலக்கணங்களுள், முதல் மூன்றும் எல்லாச் சொற்கும் பொது வாம், இறுதி யொன்றே உரிச்சொற்குச் சிறப்பாம்.

பெயரும் வினையும் இடையும் பெரும்பாலும் இசை குறிப் புப் பண்பிற் றோன்றியவையே.

உ-ம்.	இசை	குறிப்பு	பண்பு
பெயர்	ஒலி	துணி	வெள்ளை
வினை	ஒலித்தல்	துணித்தல்	வெளுத்தல்
இடை	ஒல்	துண்	வெள்

'பெயரினும் வினையினும் மெய்தடுமாறி' என்னும் பகுதிக்கு,

'பெயரினும் வினையினும் மெய்தடுமாறி என்பது உரிச் சொல்லாகிய உருபு பெயரின் கண்ணும் வினையின் கண்ணும் தடுமாறி எ-று. அவை தடுமாறுங்கால் பெயர் வினைகளைச் சார்ந்தும், அவற்றிற்கு அங்கமாகியும் வரும். 'உறுவலி' என்பது பெயரைச் சார்ந்து வந்தது. 'உறக்கொண்டான்' என்பது வினையைச் சார்ந்து வந்தது. 'உறுவன்' என்ற வழிப் பெயர்க்கு அங்கமாயிற்று. 'உற்றான்' என்றவழி வினைக்கு அங்கமாயிற்று' என்று உரை வரைந்தார் தெய்வச் சிலையார். இதனின்றும் பெயர் வினை இடைகள் மெய் தடுமாறுவதும் எளிதா யுணரப்படும். மெய்தடுமாறல் வடிவந் திரிதல்.

சேவடி என்பதிற் பெயர் பெயரைச் சார்ந்து மெய் தடுமாறிற்று.

ஒருப்பட்டான் என்பதிற் பெயர் வினையைச் சார்ந்து மெய் தடுமாறிற்று.

கண்ணன் என்பதிற் பெயர் பெயருக்கு அங்கமாயிற்று.

(கடைக்) கணித்தான் என்பதிற் பெயர் வினைக்கு அங்க மாயிற்று என்பதில் வினை பெயரைச் சார்ந்து மெய் தடு மாறிற்று.

சாக்குத்தினான் என்பதில் வினை வினையைச் சார்ந்து மெய் தடுமாறிற்று.

பாடகன் என்பதில் வினை பெயருக்கு அங்கமாயிற்று.

வந்தான் என்பதில் வினை வினைக்கு அங்கமாயிற்று.

தில்லைச்சொல் என்பதில் இடை பெயரைச் சார்ந்து மெய் தடுமாறிற்று.

ஒல்ல ஒலித்தது என்பதில் இடை வினையைச் சார்ந்து மெய் தடுமாறிற்று.

மற்றவன் என்பதில் இடை பெயருக்கு அங்கமாயிற்று.

என்றான் என்பதில் இடை வினைக்கு அங்கமாயிற்று.

இனி, ஒருசொற் பலபொருட் குரிமையும் பல சொல் ஒருபொருட் குரிமையும் ஒவ்வோர் சொல்லினுமுள்ள பல பொருளொரு சொல்லும் ஒருபொருட் பல சொல்லுமாகும்.

வேழம் என்பது கரும்பு, மூங்கில், யானை என்று பல பொருள்படும் பலபொருளொருசொற் பெயர்.

வரைந்தான் என்பது எழுதினான், மணந்தான், நீக்கினான் என்று பலபொருள்படும் பலபொருளொரு சொல் வினை.

கொன் என்பது அச்சம், பயனின்மை, காலம், பெருமை எனப் பல பொருள்படும் பல பொருளொரு சொல் இடை.

தாவு என்பது வலி, வருத்தம் எனப் பல பொருள்படும் பல பொருளொரு சொல் உரி.

வேழம், கைம்மலை, ஒங்கல் என்பன யானையைக் குறிக்கும் ஒருபொருட் பல சொற் பெயர்.

நீக்கினான், அகற்றினான், விலக்கினான் என்பன ஒரு பொருட் பலசொல் வினை.

ஆ, ஏ, ஓ என்பன வினாப்பொருளில் வரும் ஒருபொருட் பல சொல் இடை.

சால, உறு, தவ, நனி, என்பன மிகுதிப் பொருளை யுணர்த்தும் ஒருபொருட் பலசொல் உரி.

ஒருபொருட் பலசொல், பலபொரு ளொருசொல் என்பன திரிசொற் பாகுபாடுமாகும்.

> ‘ ஒருபொருள் குறித்த வேறுசொல் லாகியும்
> வேறுபொருள் குறித்த ஒருசொல் லாகியும்
> இருபாற் றென்ப திரிசொற் கிளவி.’

என்பது தொல்காப்பியம். ஆகவே மேற்கூறிய மூன்றும் உரிச்சொல் லிலக்கண மன்மை பெறப்படும்.

இனி உரிச்சொல் இலக்கணம் யாதெனின்,

‘பயிலாதவற்றை....................பொருள் வேறு கிளத்தல், என்பதே யாம். இதற்கு,

'கேட்பானாற் பயிலப்படாத சொல்லைப் பயின்றவற்றோடு சார்த்திப் பெயரும் வினையுமாகிய தத்தமக்குரிய நிலைக்களத் தின்கண் யாதானுமொரு சொல்லாயினும் வேறுவேறு பொரு ளுணர்த்தப்படும் என்றவாறு' என்று சேனாவரையரும்,

'பயிலாதவற்றைப் பயின்றவை சார்த்தித்—தத்தம் மர பிற் சென்று நிலைமருங்கின்' என்பது உரிச்சொற்கள் தத்தம் மரபினாற் சென்று நிற்குமிடத்து, வழக்கின்கட் பயின்று நட வாத சொற்களைப் பயின்ற சொற்களோடு சேர்த்தி எ-று. பயிலாத சொல்லாவன :—உறு, தவ, நனி. பயின்ற சொல் லாவன மிகுதல், உட்கு, உயர்வு என்பன. சேர்த்தலாவது இச்சொற்கள் இச்சொல்லின் பொருள்படும் எனக் கூட்டுதல். 'எச்சொல்லாயினும் பொருள் வேறு கிளத்தல்' என்பது யாதானும் ஒரு சொல்லாயினும் பொருள் வேறுபடுத்திக் காட்டுக எ-று. என்று தெய்வச்சிலையாரும் உரை கூறி யுள்ளனர்.

இதனால் உரிச்சொற்கள் வழக்கிற் பயிலாத சொற்க ளென்றும், அவை செய்யுட்கே யுரியவென்றும், அவற்றிற்கு இடம் நோக்கிப் பொருள் கொள்ளவேண்டு மென்றும், அவற் றுட் சில பகுதிப்பொருள் தராமற் பிறபொருள் தருமென்றும் அறிந்துகொள்க.

உரிச்சொல் செய்யுட் சொல் என்பது, உறு, கெழு, மல்லல், அலமரல், மழவு, கதழ்வு, கெடவரல், தட, நிழத்தல், துவன்று, முரஞ்சல், பொற்பு, பணைத்தல், பையுள், தெவ், சும்மை, கழும், விழுமம், கமம், கவவு, இலம்பாடு, வியல், நாம் (அச்சம்) வய, துய, உசா, வயா, நொசிவு, புனிறு, யாணர், யாணு, வை, (கூர்மை), எறுழ் முதலிய உரிச்சொற்களைக் கண்ட வளவானே அல்லது கேட்ட வளவானே அறியப்படும்.

உரிச் சொற்கள் செய்யுட் சொற்கள் ஆனமை பற்றியே ஒவ்வோர் உரிச்சொல்லையும் தனித்தனி எடுத்துக் கூறிப் பொருள் கூறினர் ஆசிரியர். பெயர் வினை இடையென்ற மற்ற மூன்று சொற்கட்கும் இலக்கணம் மட்டுங் கூறியவர், உரிச்சொற்குத் தனித்தனிப் பொருள் கூறிச் செல்கின்றனர். அக்காலத்து அகராதி யின்மையால், செய்யுளில் வரும் அருஞ் சொற்கட்கெல்லாம் ஆசிரியரே பொருள் கூறவேண்டிய தாயிற்று. நிகண்டுகளெல்லாம் நெடுங்காலத்திற்குப் பிற் பட்டவையே. முதன்முதலெழுந்த நிகண்டு திவாகரம். பின்பு பிங்கலந்தை, சூடாமணி முதலிய நிகண்டுகள் தோன்றின. திவாகரத்தின் காலம் கி. பி. ஆறும் நூற்றாண்டு. தொல்

காப்பியத்தின் காலமோ கிறிஸ்துவுக்குப் பன்னூற்றூண்டு முந்தியதாகும். தொல்காப்பியக் காலத்தைக் கி. மு. பத்தாம் நூற்றூண்டென்றும், நான்காம் நூற்றூண்டென்றும் பலரும் பலவாறுகக் கூறுவர். ஆயினும் கிறிஸ்துவுக்கு முற்பட்டதென்பது மட்டும் தேற்றமாகும்.

உரிச்சொல் செய்யுட் சொல் என்பதை அறிந்தே,

'பல்வகைப் பண்பும் பகர்பெய ராகி
ஒருகுணம் பலகுணந் தழுவிப் பெயர்வினை
ஒருவா செய்யுட் குரியன வுரிச்சொல்.'

என விளங்கக் கூறினர் பவணந்தியார்.

உரி என்பது உரிமை. உரிச்சொல் என்பது ஒன்றற்குரிய சொல். எதற்குரிய சொல் என்பது மட்டும் குறிப்பிற் கூறினரே யன்றி வெளிப்படையாய்க் கூறிற்றிலர் தொல்காப்பியர். அதோடு 'ஒருசொற் பலபொருட் குரிமை' 'பலசொல் ஒருபொருட் குரிமை' என உரிச்சொல் இலக்கணச் சூத்திரத்தில் பிறசொற் ருெடர்களோடு உரி என்னும் சொல்லைப் புணர்த்து, அதன் சிறப்புப் பொருள் குன்றிச் சிலர்க்குக் கவர்படு பொருள் நிலையாகத் தோன்றற்குக் காரணமாயிற்று. நன்னூலில் 'செய்யுட்குரியன' என்னும் ஒரே சொற்ருெடரில் உரி என்னும் சொல்லைப் புணர்த்து அதன் சிறப்புப் பொருள் தோன்றச் செய்தார் பவணந்தியார்.

'இசையினும் குறிப்பினும் பண்பினும் தோன்றி' என்று தொல்காப்பியத்திலும்,

'பல்வகைப் பண்பும் பகர்பெயராகி' என்று நன்னூலிலும் உரியென்னும் சொல்லைப் புணர்த்தாது உரிச்சொற் பொருட் பாகுபாடே அல்லது உரிச்சொல் நிலைக்களப் பாகுபாடே கூறியிருப்பதால், 'இசைகுறிப்புப் பண்பென்னும் பொருட்கு உரிய சொல் உரிச்சொல் என்று சேனவரையர் கூறுவது பொருந்தாது, 'ஒருசொற் பலபொருட் குரிமை' 'பலசொல் ஒருபொருட் குரிமை' என்று தொல்காப்பியர் உரியென்ற சொல்லைப் புணர்த்துக் கூறிய சொற்ருெடர்களையும், 'ஒருகுணம் பல்குணந் தழுவி' என மாற்றிக் கூறினர் பவணந்தியார். இதனுல் உரிச்சொல் செய்யுட் சொல்லேயென்பதை வெள்ளிடை மலைபோல் விளங்க வைத்தனர்.

தொல்காப்பியம் போன்ற இலக்கண நூல்களிற் கூறப்பட்ட உரியியலே செய்யு ளகராதிகளான நிகண்டுகட்குத் தோற்றுவாயாகும். செய்யுளிற் சிறப்பாக வழங்கிப் பொருள்

விளங்காத அருஞ்சொற்களையெல்லாம் தனித்தனி யெடுத்துப் பொருள் கூறினர் முன்னையாசிரியர். மக்கட்கு அறிவாற்றலும் நினைவாற்றலும் குறைந்த பிற்காலத்தில் மிகப்பல செய்யுட் சொற்கட்குப் பொருள் கூறவேண்டி யிருந்ததினும், அவை யெல்லாவற்றையும் கூற ஓர் இலக்கண நூல் இடந்தராமையானும், அவற்றைக் கூறுதற்கென்றே நிகண்டு என்னும் சிறப்பு நூல் எழுந்தது. ஒரு மாணுக்கன் செய்யுள் வழக்கான சிறப்புச் சொற்களை யெல்லாம் முன்னமே யறிந்தானுயின், பின்பு செய்யுள் நூல்களைக் கற்கும்போது பொருளுணர்ச்சி எளிதா யிருக்கும். இதனல் செய்யுட் சொற்களிற் பெரும்பாலானவற்றை மாணுக்கர் மனப்பாடம் செய்ய வைத்தனர் பண்டைக் கணக்காயர். இதே நோக்கத்துடன்தான் நிகண்டுகளும் எழுதப்பட்டன. மக்கட்கு இளமையில் நினைவாற்றல் மிக்கிருப்பதால் அதைப் பயன்படுத்தக் கருதியே மாணுக்கர்க்கு நிகண்டுகளை மனப்பாடஞ் செய்வித்தனர். நிகண்டுகள் நிறைவும் விளக்கமும் பற்ற வரவர நீண்டு வந்தன. திவாகரத்தினும் பிங்கலமும், பிங்கலத்தினும் சூடாமணியும் நீண்டிருத்தல் காண்க. நிகண்டுகள் செய்யுட் சொற்களைக் கூறுவனவே யன்றி உலக வழக்குச் சொற்களைக் கூறுவனவல்ல. இற்றைய அகராதிகளே இருவகை வழக்குச் சொற்களையும் எடுத்துக் கூறும். நிகண்டுகள் உரிச்சொல் லகராதிகள் அல்லது செய்யுட் சொல்லகராதிகள் என்பதை,

> 'இன்ன தின்னுழி யின்னண மியலும்
> என்றிசை நூலுட் குணகுணிப் பெயர்கள்
> சொல்லாம் பரத்தலிற் பிங்கல முதலாம்
> நல்லோ ருரிச்சொலி னயந்தனர் கொளலே'

என்னும் நன்னூல் உரியியற் புறனடைச் சூத்திரத்தானு முணர்க. உரிச்சொல் நிகண்டு என்றே ஓர் நிகண்டுமுள்ளது. அகராதி என்பது அகரமுதற் சொற்களைக் கூறுவதென்றே பொருள்படினும், இனவிலக்கணமாக நிகண்டிற்கும் பெயராகக் கொள்ளப்படும்.

இங்ஙனம் உரிச்சொல் செய்யுட் சொல்லா யிருக்கவும், 'உரிச்சொல் என்பது யாதோ எனின், ஒரு வாய்பாட்டாற் சொல்லப்படும் பொருட்குத் தானும் உரித்தாகி வருவது. அதனனே யன்றே ஒருசொற் பலபொருட் குரிமை தோன்றினும், பலசொல் ஒருபொருட் குரிமை தோன்றினும் என ஓதுவாராயினர். எழுத்ததிகாரத்துள் இதனைக் குறைச்சொற் கிளவி என்று ஓதினமையால், வடநூலாசிரியர் தாது

என்று குறியிட்ட சொற்களே இவை யென்று கொள்ளப் படும். அவையும் குறைச்சொல் லாதலான். அஃதேல், தொழிற் பொருண்மை உணர்த்துவன எல்லாம் இதனுள் ஓதினரோ எனின்,'வெளிப்படு சொல்லே கிளத்தல் வேண்டா, வெளிப்பட வாரா உரிச்சொல் மேன' (சூ-உ) என்றாராகலின், வழக்கின்கட் பயிற்சி இல்லாத சொற்கள் ஈண்டு எடுத்து ஓதப் படுகின்றன என்க.

தொழிலாவது வினையுங் குறிப்புமாதலின், அவ்விரு சொற்கும் அங்கமா...........ண்டுக் கூறப்படுகின்றன' என்றார் தெய்வச்சிலையார். இதையே சிவஞான முனிவருந் தழுவினர்.

உரிச்சொல் தாது (வினைப்பகுதி) வாயின் தாதுவைக் குறியாது அலமரல், தெருமரல், கூர்ப்பு, வார்தல் என்று தொழிற்பெயர்களை ஏன் குறித்தல் வேண்டும்?

தொழிற்பெயர் தமிழில் தாதுவைக் குறிக்கும் வகை களில் ஒன்றென்று கூறின்,

குரு, மல்லல், மழவு, பண்ணை, வம்பு, தெவ், நாம், வாள், எறும் முதலிய பெயர்ச் சொற்கள் ஏன் காட்டப்படுகின்றன? பெயர்ச்சொற்கட்குப் பிரதி பதிகமே யன்றித் தாதுவின்றே!

இனி வினைச்சொற்களுள்ளும் பகுதிப்பொருள் ஒன்றும், உரிச்சொற் பொருளொன்றுமா யிருத்தலின், பகுதியைக் கூறி என்ன பயன்?

செல்லல் என்னும் தொழிற்பெயர் உரிச்சொல்லாகி இன்னாமையை உணர்த்தும்; செல் என்னும் பகுதி போதலையே உணர்த்தும்.

கருவி என்னும் தொழிற்பெயர் உரிச்சொல்லாகித் தொகுதியை யுணர்த்தும்; கரு என்னும் பகுதி கருத்தலையே உணர்த்தும்.

எய்யாமை என்னும் எதிர்மறைத் தொழிற்பெயர் உரிச் சொல்லாகி அறியாமையை உணர்த்தும்; எய்தல் என்னும் உடன்பாட்டு வினை அம்பு விடுத்தலையே உணர்த்தும். இதை,

'அறிதற் பொருட்டாய் எய்தலென்றானும், எய்த்தலென் றானும் சான்றோர் செய்யுட்கண் வாராமையின், எய்யாமை எதிர்மறை யன்மை யறிக' என்னும் சேனாவரைய ருரையானு மறிக.

உலக வழக்கினுள்ளும் உடன்பாட்டி லொன்றும் எதிர் மறையி லொன்றுமாக வெவ்வேறு பொருள்படும் வினைகளுள,

உ-ம். உடன்பாடு எதிர்மறை

பொறுமை (patience) பொருமை (jealousy)

தொல்காப்பிய எழுத்ததிகார ஈற்றயற் சூத்திரத்தில்,

'குறிப்பினும் பண்பினு மிசையினுந் தோன்றி
நெறிப்பட வாராக் குறைச்சொற் கிளவி'

என்றதனை வினைப்பகுதி யென்றும் உரிச்சொல்லென்றும் கூறினார் தெய்வச்சிலையார். நச்சினார்க்கினியரும் தம் உரையில் 'குறிப்பினானும் பண்பினானும் இசையினானும் பிறந்து, ஒரு வழிப்பட வாராத சொற்றன்மை குறைந்த சொற்களாகிய உரிச்சொற்களும்' என்றே முற்கூறினாரேனும்,

'கன் விண்ணை வினைத்தது, விண் விணைத்தது இவை குறிப்புரிச் சொல் ; ஆடை வெள்ள விளர்த்தது; வெள்விளர்த்தது, இவை பண்புரிச் சொல்; கடல் ஒல்ல ஒலித்தது, ஒல்லொலித்தது, இவை இசையுரிச் சொல். 'ஒல்லொலி நீர் பாய்வதே போலுந் துறைவன்' என்றார் செய்யுட் கண்ணும். இவை உயிரீறும் புள்ளியிறும் நிற்றலின் ஒன்றன்கண் அடக்கலாகாமையின் நெறிப்பட வாரா என்றார். விண்ணை வினைத்தது தெறிப்புத் தோன்றத் தெறித்ததென்றும், விண்வினைத்தது தெறிப்புத் தெறித்ததென்றும் ஆம். ஏனையவற்றிற்கும் இவ்வாறே உணர்க. இங்ஙனம் நிற்றலிற் றன்மை குறைந்த சொல்லாயிற்று. 'வினையே குறிப்பே' (சொல்—உநஅ) என்னுஞ் சூத்திரத்திற் கூறிய என என்பதனை இவற்றோடு கூட்டிய வழி இடைச் சொல்லாதலின் விண்ணென வினைத்தது எனப் புணர்க்கப்படுமாறு உணர்க' என்று பிற்கூறியதிலிருந்து, சூத்திரத்திற் குறைச்சொற் கிளவியெனக் குறித்தது இடைச் சொல்லே யென்றும், விண்ண, வெள்ள என்று குறையாய் நிற்றலின் குறைச்சொற் கிளவியெனப் பட்டதென்றும் அறிந்து கொள்ளலாம்.

தோல்காப்பியர் குறைச் சொற்கிளவி என்னும் பெயரால் வினைப் பகுதியையே குறித்திருப்பாராயின், எச்சவியலில், முதற்குறை, இடைக்குறை, கடைக்குறை என்னும் மூவகைக் குறைகளைக் குறிக்குமிடத்து,

'குறைச் சொற்கிளவி குறைக்கும் வழியறிதல்' எனச் சூத்திரம் செய்திரார்.

'குறைத்தனவாயினு நிறைப்பெயரியல' என்னும் அடுத்த சூத்திரத்தினால் மூவகைக் குறைகளும் பெயர்ச்சொற்களே

யென்பது பெறப்படும். ஆகையால் குறைச்சொல் என்பது குறைந்த சொற்கட்கெல்லாம் பொதுப் பெயரேயன்றி வினைப் பகுதிக்கே யுரிய சிறப்புக் குறியீடு, அன்றென்பது தெரிந்து கொள்க.

உரிச்சொல் லென்பது வினைப்பகுதியே யாயின், வேற்றுமை மயங்கியலுள்,

'வினையே செய்வது' என்னும் சூத்திரத்தில் 'வினை' என்பதனானும், எச்சவியலுள்,

'செய்யா யென்னு முன்னிலை வினைச்சொற்
செய்யென் கிளவி யாகிட னுடைத்தே'

என்னுஞ் சூத்திரத்தானும் வினைப்பகுதியைத் தோல்காப்பியர் குறித்திருத்தலின், அதை மீண்டும் உரியியல் என்றோரிய லிற் கூறுவது கூறியது கூறலாமென்க. இனி,

'வெளிப்படு சொல்லே கிளத்தல் வேண்டா
வெளிப்பட வாரா வுரிச்சொன் மேன'

என்று தொல்காப்பியர் உரிச்சொல்லை வெளிப்படு சொல், வெளிப்படாச் சொல்என இருவகைப் படுத்தியிருப்பதால், உரிச்சொல் வெளிப்படாச் சொல்லாகவே யிருக்கின்ற செய்யுட் சொல்லன்று எனக் கூறுவர் சிலர்.

உலகத்திற் பல வகுப்பாருக்குள்ளும் பல குழூஉக் குறிகள் வழங்கி வருகின்றன. ஒரு குழுவினைப் பிறர்க்குத் தெரியா வண்ணம் மறை பொருளனவாகத் தமக்குள் வழங்கிக்சொள்ளும் குறிகளே குழூஉக்குறியாகும். ஆயினும் நாளடைவில் சில குழூஉக் குறிகளின் பொருள்கள் பிறர்க்கு வெளியாகி விடுகின்றன. அங்ஙனம் பொருள் வெளியான குழூஉக் குறிகள் உண்மையில் குழூஉக் குறியல்லவேனும் அவை முன்னிருந்த நிலைமைபற்றிக் குழூஉக் குறியென்றே கூறப்படுகின்றன. கள்ளைக் குறிக்கும் குதிரையென்னுஞ் சொல்லும், பொன்னைக் குறிக்கும் பறியென்னுஞ் சொல்லும் எல்லாரானும் பொருளறியப்படினும் இன்னும் குழூஉக் குறியாகவே கூறப்படும். அதுபோலச் செய்யுட் சொற்களான உரிச்சொற்களும் பொருளறியப்பட்ட பின்னும் உரிச்சொல்லெனவே படும். ஆனல் உலக வழக்கிற்கு வந்தவை மட்டும் உரிச்சொல்லாகா.

சொற்கள் வழக்கு மிகுதிபற்றிப் பொருளறியப் படுவதும், வழக்கின்மை பற்றிப் பொருளறியப்படாமையுமுண்டு. வழக்குக் காலந்தோறும் மாறிக்கொண்டே யிருக்கும்.

தொல்காப்பியர் தம் காலத்தில் உலகவழக்கில் வழங்காதனவாகக் குறிக்கின்ற, பசப்பு, அதிர்வு, தீர்தல், பழுது,

முழுது, செழுமை, சேர் முதலிய சொற்கள் இக்காலத்துப் பெருவழக்காக வழங்குகின்றன. தொல்காப்பியர் காலத்தில் இவை வழங்கியிருப்பின் இவற்றுக்குப் பொருள் கூறியிரார். இனித் தம் காலத்தில் புதிதாய் வழங்கினவாக அவர் கூறும், கடுவன், கோட்டான், தத்தை, பூசை முதலிய ஏழுசொற்களில், கோட்டான், பூசை என்னுமிரண்டே இக்காலத்து வழங்கு கின்றன; ஏனைய வழக்கிறந்தன. பூசை என்பது இக்காலத்துப் பூனை என வழங்குகின்றது.

ஆகையால் தொல்காப்பியர் கூறிய உரிச்சொற்க ளெல் லாம் அக்காலத்துச் செய்யுட் சொற்களா யிருந்தன வென் றும், அவற்றுட் சில இக்காலத்து உலக வழக்கில் வழங்கு கின்றன வென்றும், அவை இக்காலத்து உரிச்சொல்லாகா வென்றும் அறிந்துகொள்க.

இனி உரிச்சொல்லென்பது எல்லோர்க்கும் பொருள் விளங்காத செய்யுட் சொல்லாயின், திரிசொல் என்பதும் எல் லோர்க்கும் பொருள் விளங்காத செய்யுட் சொல்லாயிருத்த லின் உரிச்சொல்லாமோ வெனின், கூறுதும்:—

இயற்சொல், திரிசொல் என்பன இயல்பாய்ப் பொரு ளுணர்த்தும் சொல், இயற்சொற் றன்மையினின்றுந் திரிந்து அரிதாய்ப் பொருளுணர்த்தும் சொல் எனப் பொதுவாய்க் கூறப்படினும், சொற்பொருள் நோக்கின் இயல்பான சொல் (Primitive Word), இயல்பான சொல்லினின்றும் திரிந்த சொல் (Derivative) என்றே கூறற்கேற்றன. இது திரிசொற் சூத்திரத்திற்கு,

1. திரிசொல்லாவது உறுப்புத்திரிதலும் முழுவதும் திரிதலுமென இருவகைத்து. கிள்ளை, மஞ்ஞை என்பன உறுப்புத்திரிந்தன. விலங்கல், விண்டு என்பன முழுவதுந் திரிந்தன....................திரிபுடைமையே திரிசொற்கிலக்கண மாதல் 'சொல்லின் முடிவினப் பொருண் முடித்தல் என் பதனாற் பெற வைத்தார்' என்று சேனாவரையர் கூறிய உரை யானும், இதையொட்டி நச்சினார்க்கினியர் கூறிய உரையானும் உணரப்படும்.

உரிச்சொல் செய்யுட் சொல்லாகவே யிருத்தலானும், ஓர் இலக்கணவகைச் சொல்லன்மையானும், பெயர், வினை, இடை என்னும் முச்சொல்லாயு மிருத்தலானும், பிரயோகம் பற்றியே இன்ன சொல்லெனக் கூறப்படுவதாகும். தொல்காப்பியர் எச்சவியலுள்,

இடைச்சொல்லெல்லாம் பிறிதோர் சொல்லை விசேடிக் கும் சொல்லே என்னும் பொருளில்,

'இடைச்சொல் லெல்லாம், வேற்றுமைச் சொல்லே' என்று சூத்திரித்து, இப்பொருளை உரிச்சொல்லும் ஒருபுடை தழுவும்படி அதையடுத்து,

'உரிச்சொன் மருங்கினு முரியவையுரிய' என்று கூறினர். இதற்குச் சேனவரையர்,

'உரிச்சொல்லிடத்தும் வேறு படுக்குஞ்சொல்லாதற்கும் உரியன உரியவாம்; எல்லாம் உரியவாகா, என்றவாறு. எனவே, உரிச்சொல்லுள் வேறுபடுத்தும் வேறு படுக்கப் பட்டும் இருநிலைமையு முடையவாய் வருவனவே பெரும்பான் மை யென்பதாம்.

'வேறுபடுக்குஞ் சொல்லேயாவன உறு, தவ, நனி என்னுந் தொடக்கத்தன. இருநிலைமையு முடையன குரு, கெழு, செல்லல், இன்னல் என்னுந் தொடக்கத்தன. உறு பொருள், தவப்பல, நனி சேய்த்து, ஏகல்லடுக்கம் என இவை ஒன்றை விசேடித்தல்லது வாராமையும், குருமணி, விளங்கு குரு, கேழ்கிளரகலம், செங்கேழ்; செல்லனோய், அருஞ் செல்லல்; இன்னற் குறிப்பு, பெயரின்னல் என இவை ஒன்றனை விசேடித்தும் விசேடிக்கப்பட்டும் இருநிலைமையு முடையவாய் வருமாறும், வழக்குஞ்செய்யுளு நோக்கிக் கண்டு கொள்க. குருவிளங்கிற்று; செல்லறீர எனத் தாமே நின்று வினை கொள்வன, விசேடிக்கப்படுந்தன்மை யுடையவாதலின், விசேடிக்கப்படுஞ்சொல்லாம். பிறவும் விசேடித்தல்லது வாரா தனவும், விசேடித்தும் விசேடியாதும் வருவனவும், வழக்குஞ் செய்யுளு நோக்கியுணர்க.' என்று உரை கூறினர்.

இதனல் உரிச்சொல் என்பது பெயராகவும், வினையாக வும், அவற்றிற்கு அடையாகவும் வருமென்றும், பெயருக்கு அடையாங்கால் குறிப்புப்பெயரெச்சம் போல்வதென்றும், வினைக்கு அடையாங்கால் குறிப்புவினையெச்சம் போல்வ தென்றும், பெயருரிச்சொல் வினையுரிச்சொல் என்னும் இரு வகையுள் எல்லாவுரிச்சொல்லும் அடங்காவென்றும் அறிந்து கொள்க.

இதுகாறுங் கூறியவாற்றல் உரிச்சொல் என்பது செய்யுட் சொல்லே யென்றும், அதற்குப் பிறவாறு கூறுவதெல்லாம் போலியுரை யென்றும், உரிச்சொல் ஓர் இலக்கணவகைத் தனிச்சொல்லன்றென்றும், அது பிரயோகத்திற்கேற்ப இன்ன சொல்லென்று கூறப்படுமென்றும் தெற்றெனத் தெரிந்து கொள்க.

வரலாற்றுப் பகுதி: History & Biography

வரதுங்க அதிவீர பாண்டியர்

[மூலத்துறை பே. குமாரநாயகம் பிள்ளை]

(உரிமை ஆக்கியோருக்கு)

கண்ணுதற் கடவுள் கழகமோ டமர்ந்து ஆய்ந்த பைந் தமிழின் பிறப்பிடமான பொதியமலையை யுடைத்தாய கன்னி நாட்டின் காவலர் சந்திரகுலத்தோராவர். அப்பாண்டிய அரசர் வழியில் அவர் குலதிலகமாய முழுமதியை நிகர்க்கும் வரதுங்கரென்பவர் தோன்றினர். சின்னாட்களில் வில்வே ளென வனப்பு வாய்ந்த ஒருமகவும் வரதுங்கருக்குத் தம்பி யாய் வாய்த்தது. இச்சேயை அதிவீரரென்று பெற்றோர் அழைக்கலாயினர்.

இவ்விரு மகார்களும் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வாலிப பருவமெய்துதலும் பெரி யோன் திருக்கருவைப் பதிக்கும், சிறியோன் தென்காசிக்கும் சிற்றரசர்க ளாக்கப்பட்டார்கள். அரசெய்தினும் அண்ணன், "அருட்செல்வம் செல்வத்துட்செல்வம், பொருட்செல்வம் பூரி யார் கண்ணுமுள", என்ற திருக்குறளும், "கொள்ளேன் புரந் தரன் மாலயன் வாழ்வு குடிகெடினும், நள்ளேனினதடியா ரொடல்லால் நரகம்புகினும், எள்ளேன் திருவருளாலே யிருக் கப்பெறின் இறைவா, உள்ளேன் பிறதெய்வம் உன்னையல்லால் எங்களுத்தமனே," என்ற திருவாசகமும், "பச்சைமா மலை போன் மேனிப் பவளவாய்க் கமலச்செங்கண், அச்சுதா! அமர ரேறே ஆயர்தங் கொழுந்தேமற் றிச்சுவை தவிரயான்போய் இந்திர லோகமாளும், அச்சுவை பெறினும் வேண்டேன்" என்ற ஆழ்வார் மொழிகளையும் செவ்விதி னுய்ந்து பெயரள வில் அரசனுகி, கடமையாய ஆறில் ஒரு பகுதியையும் குடிகள் பால் இரந்து பெற்று, தான் செலுத்தவேண்டிய திறையையும் வழங்கி, அரசியலையும் நடத்தி வந்தான். அரசசின்னங்களை யும் அணிகளையும் வெஃகாது, கண்மணி, திருநீறு, கல்லாடை, சடைமுடி முதலியவைகளைத் தாங்கியும்,

> அறத்தாற்றி னில்வாழ்க்கை யாற்றிற் புறத்தாற்றிற்
> போஒய்ப் பெறுவ தெவன்.

"பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னுந்
திண்மை யுண்டாகப் பெறின்."

என்ற வள்ளுவர் வாய்மைகளைத் தழுவி மனைத்தக்க மாண்புடையாளாய ஒரு மங்கைநல்லாளை மணந்து, ஐம்புலத்தார் ஓம்பலை அதிமகிழ்வோடு ஆற்றிவரலாயினன்.

தம்பி அதிவீரனோ, அரச சின்னங்களையும் ஆடை அணிகளையும் மிகுதியாய் விரும்பி, அணிமாணருள்ளுருக அலங்களும் ஒரோவழி செய்யவும் அஞ்சானாயினன். இவனிங்ஙனமாகவும், தாயானவள் தான் பெற்ற இருமக்களும் இருவகைப் பண்புடையராயினும் அவ்விருவோரையும் ஒருபடித்தாய் நேசிப்பதை மான நாவின் கிழத்தியும் வரதுங்கர் அதிவீரர் என்ற சோதரர் இருவர் நாவிலும் இருந்து அருள்புரிதலால் இருவரும் புலவர்களாய்த் திகழ்ந்தனர். ஆயினும், அண்ணன் அரனன்பரகமுருக்கும் அருட்பாடல்களையும், தம்பி புலவர் போற்றும் அகப்பொருட் செறிந்த நைடதம் என்ற நளன் வரலாற்றையும் வெளியிட்டார்கள். வாணித்தாய் வரம்பெற்றும் அதிவீரன் அருள்வழி செல்லாமையும், அண்ணன் மருள் வழிச் செல்லாமையும் நோக்கின் "நிதியும் கணவனும் நேர்படினும் தந்தம் விதியின் பயனேபயன்," "வகுத்தான் வகுத்த வகையல்லாற் கோடி தொகுத்தார்க்கும் துய்த்தலரிது" என்ற ஆன்றோர் வாக்கியங்களுக்குச் சிறந்த எடுத்துக்காட்டாயிலங்காநிற்கும், நிற்க.

திருநந்திதேவர் திருவாய் மலர்ந்தருளிய பிரமோத்தர காண்டத்தைத் தமிழில் மொழிபெயர்த்ததோடு, திருக்கருவைப் பால்வண்ணர்மீது வெண்பா, அந்தாதி, கலித்துறை முதலிய அருட்பாடல்களையும் ஆக்கி அண்ணன் மகிழ்ந்திருக்குநாள், தம்பி நளன் வரலாற்றை நறுந்தமிழாற் புனைந்து, அஃது முற்று முன்னமே தம்பிமுகத்தனைநேர் துணைவன் வியப்பனென நம்பி யதைக்கொடுபோய் நாணிலாது அவன் முன் நவிலலுற்றான். செவியுற்ற மூத்தோன் இறைவனையேத்தாது, நம்போன் றழிந்துபடு மண்ணல் ஒருவனைத் துதித்துக் கனியிருக்கக் காய்கவர்ந்தாவா றென்னை என்று பின்னோனைக் கடாவுதலும், அதனால் மனச்சோர்வுற்று எஞ்சிய வரலாற்றை எளிதின் முடித்தான் இளையோன். பின்னர், அவ்வாறு முற்றுறச் செய்த நூலை அவ்வண்ணன் துணைவியே கண்ணுறின் ஒருவேளை நன்மதிப்பளித்தலும் கூடும்; அவ்வாறு அவ்வம்மையார் நற்சான்று தரின் அஃது வரதுங்கர் உரையைத் தாழ்த்து மெனவும், அப்பொழுது அண்ணனும் இந்நூலைச்

சிறப்பிக்கவும் முற்படலாமெனவும் எண்ணிய அதிவீரர் அவர் பால் நூலை எடுத்தோதி அவர் திருவுள்ளமறிய அவாவுடையவ னென்பதையும் விண்ணப்பித்தான். அம்முயற்சியும் விளக் கிருக்க மின்மினித் தீக்காய்ந்த தொத்தது. அம்மாதரசி, உண் மையை ஒளியாது, "சென்று தேய்ந்திறுதல்" என்னும் குற் றம் உள்ளதாய் ஓதினர். அச்சொற்கள் எஃகுருக்கி இரு செவிகளினும் வார்த்ததுபோல் தொனிக்க, இருகண்களும் கனல்பொறி காலவும், இருதோள்களும் தினவெடுக்கவும் சினந்து "கணவனே நன்கு பாடிடாவகை செய்தான். மனைவியோ இன்னுங்கொடியள். இன்றேல் இதன் மாட்சியை யுணர்ந்தும் உணராதவள்போல் என்னுள்ளம் சுடும் இச் சொற்களை மொழிவளோ? அதுவும் வேட்டை நாய்களை உவ மித்துத் துவக்கத்தில் முன்னீர்த்துச் செல்கின்றனவாம். பின் னர் வேட்டையில் களைத்துப்போய் மீள்கையில் பின்னீர்த்து நிற்குமாம். அவைபோன்றோ என் செய்யுட்கள் நடக்கின் றன? இவை யெல்லாம் கருதின் கடும்போரினாலேனும் அப் பழியை நீக்கிக்கொள்ள முயலாது வாளாவிருத்தல் செய் யேன்" என்றெண்ண மிட்டவனாய்த் தன்னூர் அடைந்தான். ஆங்கு நால்வகைப் படைகளையும் திரட்டிக்கொண்டு திருக்கரு வைப்பதி யணுகி,

"செயிர்செய் தின்னுயிர் குடித்துநின் மனைவிதன் செருக்கழித்திட [வேண்டி
அயில்கொள் வேலுடன் வந்துளே னமர்க்கெழுந் தருளென."

ஒருமுடங்கல் தீட்டி அனுப்புதலும், கண்ணுற்ற பெரியோன் கடுகடுப்புச் சற்றும் கொள்ளாது, தானும் தம்பிக்கு ஒரு வெண்பா வெழுதி அதில் ஞாயிற்றின் குமாரனை சுக்ரீவன் அருளில் சிறந்த அண்ணனாகிய வாலி கொலைக்குக் காரணனாகி யும், இறக்கும் தருவாயினும் அவ்வாலி தம்பியின் செய்கை யைக் கடியாது "வெற்றரவெய்தி எம்பி வீட்டரசெனக்குத் தந்தான்" என்றதோடு நில்லாது "ஒவிய உருவறியேன் உள தொன்று பெறுவதுன்பால், பூவியல் நறவமாந் திழந்து வேறுற்றபோது................யெம்பிமேல் என்மேல் ஏவிய பகழி யென்னும் கூற்றினை யேவல்கண்டாய்! என்று இரக்கும் சகோ தர வாஞ்சையின் உயர்வையும்; போர்முறை துவக்கப்பட்ட தென்பதற் கறிகுறியாக எதிரியினுடைய பொருள்களைக் கவர்தல்போல இராவணன், இராமரின் மனைவியான சீதை யைக் கவர்ந்துசென்று சிறைவைத்திடவும் அது முறையன் றெனக்கருதிய அவ்விராவணனின் இளவலான (உண்மையாய்ச்

சொல்வதானல் கூற்றுவனுன) விபீஷணனது துரோகசிந்தனை யையும், தன் வில்லைக் குறைகூறியதற்காக அறத்தில் சிறந்த யுதிட்டிரனைக் கொலை செய்யவும் துணிந்த பார்த்தனது செய் கையையும் சீர்தூக்கிப் பார்க்குமாறும் குறித்தனுப்பினுன். இதனல் மெய்யுணர்வெய்திய இளவல் 'நீர்கிழிய வெய்த வடுப் போல மாறுமே சீரொழுகு சான்ருேர் சினம்' என்ற இயல்பிற் கேற்க தான் செயற்பாலவல்ல செய்தமைக்கு மிக்க வருந்தி, அதிவீரர் அண்ணனடிகளில் அடியற்ற மரம்போல் வீழ்ந்து தன் பிழை பொறுத்துத் தானுய்யுவகையு மருளிச் செய்ய வேண்டுமெனவும் பணிந்தான்.

பணிந்த தம்பியினை வாரித்தூக்கிப் பாசமிகையாற் றழு விப் பழுதில் வெண்ணீறணிந்த அரனைத் துதிசெய் காசி காண் டத்தைக் கலித்தமிழுருவாகப் பேசின்நீங்கு நின்பிழையெலா மென ஆசிகூறினன்; அண்ணியாரும் தம்மடிகளில் வீழ்ந்த அண்ணலை நோக்கி, "கோப முதலிய தீக்குணங்கள் முழுமை யும் உடையவருடைய சொந்தப் பொறுப்பாகாமல் ஊழின் வழியும் நடைபெறுமெனவும், அன்று தோன்றிய சினம், சனகனில் மேம்பட்ட அண்ணனை வெட்டி வீழ்த்தி அதன் பயனுய் மீளாநரகினுக் காளாக்காமலும், உம்முடைய தீய குணங்களெல்லாம் உம்மைவிட் டிரிந்தோடவும் நீர் தமிழ்த் தொண்டாற்றவும் தூண்டுகோலாயதால் அதுவும் நல்லதே யாயிற்று" என்று தேறுதல் புகன்ருள். பின்னர் அதிவீரன் தமதிடம் சென்று காசிகாண்டத்தை மொழிபெயர்த்ததோடு வெற்றிவேற்கை என்ற நீதி நூலொன்று மியற்றி என்று மழியாப் பெரும்புகழ் கொண்டான். இப்புகழ் சீரிய ஒழுக் கம் படைத்த உடன்பிறப்பாளனுலன்றி அதிவீரர் அடைந் திருக்க முடியாத தொன்றல்லவா? சிற்றினம் சேராமையை யும், பெரியாரைத் துணைக்கோள்ளுதலையும் நம் திருவள்ளுவ னுயனர்,

"சிற்றின மஞ்சும் பெருமை சிறுமைதான்
சுற்றமாச் சூழ்ந்து விடும்."
"நல்லினத்தி னூங்குந் துணையில்லை தீயினத்தி
னல்லற் படுப்பதூஉ மில்."
"தக்கா ரினத்தானுய்த் தானெழுக வல்லானைச்
செற்ருர் செயக்கிடந்த தில்."
"பல்லார் பகைகொளலிற் பத்தடுத்த தீமைத்தே
நல்லார் தொடர்கை விடல்."

என்று வற்புறுத்தலின் காரணம் இப்பொழுது நன்கு விளங்குகின்றதல்லவா?

இனி, முன்னவரான வரதுங்கரோ பால்வண்ணநாதர் மேல் கொன்றை மலர்த் தொடை வேய்ந்தாற்போல் ஒரு பதிற்றுப்பத்தந்தாதி அருளிச்செய்து சின்னாட் கழித்து, "யானேதும் பிறப்பஞ்சேன் இறப்பதனுக் கென்கடவேன்", என்று மாணிக்கவாசகர் புலம்பியதுபோல் உயிர் நீங்கும் நிலையில் சிறிது தடுமாற்ற மடைந்தனர். கண்ட காதலியார் காரணம்கேட்க விடையாகச் சிவபெருமான் அரவங்களை அங்கமெலாம் அணியெனப் பூண்டு எனதுள்ளத்தில் குடியேறினமையே சிறிது துணுக்குறச் செய்கின்றதென்றான். துணைவனின் துன்பங்கள் துலங்கியதும் துணைவியார் இறைவனின் அகண்ட பூரண சச்சிதானந்த நிலையை, ஆசிரியன் மாணக்கனுக் கருளுவதுபோல் அறிவுறுத்தலும் அவன்றனாருயிர் அமைதியாய் அகன்று பிறவிப் பெருங்கடலை நீத்தேகியது. வாழ்க்கைத் துணைவனைப் பிரிந்து வாழமாட்டா மனைவியாரும் விரைவில் மண்ணுலகை நீத்து விண்ணுலகெய்தினர்.

அந்தப் பாண்டியனும் வரதுங்கனை யனைய சீரடைந் தார்மற்
றெந்தப் பாண்டியர்களு மிலரேயென வியம்பிடத்தகுங் கண்டீர்
முந்தப் பாண்டியனுத் தடாதகை மூலமுயங்கிய சிவன்றானுஞ்
சொந்தப் பாண்டி நாடாள்பவர் முறைப்படி துலங்குருச்
[சமைந்தானே.


சிவன்றன்மாமதிக் குலத்திலோர் பெண்கொளச் செம்பொனாபரணதி
யுவந்து பூண்டமை கருதியே வரதுங்கனெனும் பெயருறுமன்ன
னவன்றனுதருள் பெறும்பொருட் டக்கமா தியவணியணிந்துற்ற
னிவன் கொண்டுற்றது மேதகை யவன்கொள விழிதகையெனலாமே.

—புலவர் புராணம்.

தமிழ் மொழி

இன்ன காலத்திலேதான் தோன்றிய தென்று எவராலுங் கட்டுரைத்துச் சொல்ல முடியாத பழமையுடையதாய், இத்தனை காலமாகியுந் தனது இளமை சிறிதுங் குன்றாதாய் உலாவி வருகின்றது நமது தமிழ் மொழி.

—மறை மலையடிகள்



சிவஞானபோதக் கருத்து

[திரு மா. வே. நெல்லையப்ப பிள்ளை அவர்கள், B. A.]

நான்காவது சூத்திரம்

முதலாவது அதிகரணம்

13. இனி ஆசிரியர் புறஅந்தக்கரணங்களால், நிகழும் மானதக் காட்சியின்கண், ஆன்மாவுக்கு அறிவு நிகழ்தலினும், நினைப்பும் மறப்பும் மாறிமாறி உண்டாதலைக் கூறி ஆன்மா, அந்தக்கரணங்களினின்றும் வேறு என்ற உண்மையை வலியுறுத்துகின்றார்.

14. பிரணவம் சமட்டிப் பிரணவம், வியட்டிப் பிரணவம் என இருவகைப்படும். சமட்டிப் பிரணவமாவது நாதவிந்துக்கள் சேர்ந்து ஒரெழுத்தோசையா யிருப்பது. இந்த ஒரெழுத்தோசையானது மந்திரம் பதம் வன்னம் என்னும் சொல்லுலகம் பிறத்தற்கு (சத்தப் பிரபஞ்சத்துக்கு) இடமா யிருப்பது. இந்தச் சொல்லுலகம் பொருளுலகத்தை (அத்தப் பிரபஞ்சத்தை)ப் பற்றி அன்றித் தனித்து நில்லாமையானும், அதனால் வியாபிக்கப்பட்டமையானும் பிரணவமே சொல்லுலகம் பொருளுலகம் என்ற இரண்டு உலகங்களுக்கும் காரணமா யிருக்கிறது. பிரணவம், ஒரெழுத்தோசையா யிருத்தலால் ஒருமொழி என்றும் தனிமொழி என்றும் மூலமொழி என்றும் கூறப்படுகின்றது. இந்தப் பிரணவத்திலே வேதாகம முதலிய எல்லாக் கலைகளும் அடங்கி யிருக்கின்றன. அஃது எல்லா மொழிகளுக்கும் காரணமாயுள்ளது. இந்த ஒரெழுத்தோசைப் பிரணவம் விரித்துக் கூறப்படும்பொழுது அகரம், உகரம், மகரவொற்று, விந்து, நாதம் என்னும் ஐந்தெழுத்துக்களாகும். இந்த ஐந்தெழுத்துக்களாலாகிய பிரணவம் சமட்டிப் பிரணவம் ஆகும். இந்தப் பிரணவம் அஞ்செழுத்து (பஞ்சாக்ஷரம்) என்று கூறப்படும். இந்த ஐந்தெழுத்தோசைகளில் அகரம் உகரத்திலும், உகரம் மகரஒற்றிலும், மகரவொற்று விந்துவிலும், விந்து நாதத்திலும் அடங்குவனவாகும். ஐந்தெழுத்தோசைகளும் சுத்த மாயையிற் பிறப்பனவாகும்.

ஐந்தெழுத்தோசைகளும் சிவசத்தி வடிவங்கள். சுத்தமாயை யிற் பிறக்கிற நிவிர்த்திகலை, பிரதிட்டாகலை, வித்தியாகலை, சாந்திகலை, சாந்தியாதிதகலை என்னும் ஐந்துகலைகளும் ஐந்தொழில் செய்யும்பொருட்டு சிவ்னது கிரியாசத்தி இயங்கும் இடவேறு பாடுகளாம். கிரியாசத்தி நான்முகனை அதிட்டித்து நின்று நிவிர்த்திகலையை இயக்கும்பொழுது நிவிர்த்திகலாசத்தி என்றும், திருமாலை அதிட்டித்து நின்று பிரதிட்டாகலையை இயக்கும்பொழுது பிரதிட்டாகலாசத்தி என்றும், உருத்திரனை அதிட்டித்து நின்று வித்தியாகலையை இயக்கும்பொழுது வித்தியாகலாசத்தி என்றும், மகேசனுகி நின்று சாந்திகலையை இயக்கும்பொழுது சாந்திகலாசத்தி என்றும், சதாசிவனுய் நின்று சாந்தியாதிதகலையை இயக்கும்பொழுது சாந்தியாதீத கலாசத்தி என்றும் பெயர் பெறுவள். தூலவைகரி, சூக்கும வைகரி, மத்திமை, பைசந்தி, சூக்குமை என்னும் ஐந்து வாக்குக்களும் முறையே நிவிர்த்திகலை, பிரதிட்டாகலை, வித்தியாகலை, சாந்திகலை, சாந்தியாதிதகலை ஆகிய ஐந்து கலைகளையும் பற்றுக்கோடாய்ச் சார்ந்து சுத்தவித்தை, ஈசுரம், சாதாக்கியம், சத்தி, சிவம் என்னும் ஐந்து சுத்தமாயா தத்துவங்களையும் முறையே இருப்பிடங்களாகக் கொண்டு சுத்தமாயையிலிருந்து பிறப்பனவாகும்.

15. புருடன் உடலில் சுழுமுனை நாடிக்கு அடியிலுள்ள மூலாதாரத்தின்கண் சுத்தமாயையில் சோதியாய் உள்ளடங்கி வெளிப்படாமலிருக்கிற சூக்குமை வாக்கானது பிராணவாயுவின் தொழிற்பாட்டினுல் முறையே பைசந்தியாயும் மத்திமையாயும் சூக்குமவைகரியாயும் தூலவைகரியாயும் பரிணமித்து பிரகிருதி மாயையிலுள்ள உபாதிகளின் வயப்பட்டு வாய்வழியாய் ஒலியாக நம்மனேர் செவிக்குப் புலப்படுகின்றது. சூக்குமை வாக்கில் ஒளியாயிருப்பதுதான் பின் ஓசையாயும் ஒலியாயும் பரிணமித்து வெளிப்படுகின்றது. தூலவைகரி வாக்கானது நிவிர்த்திகலாசத்தி வடிவமாயுள்ள அகரமாகிய பிரணவ எழுத்தோசையாய் அகங்காரத்தைச் செலுத்தித் தொழிற்படுத்துகின்றது. சூக்குமவைகரி வாக்கானது பிரதிட்டாகலாசத்தி வடிவமாயுள்ள உகரமாகிய பிரணவ எழுத்தோசையாய்ப் புத்தியைச் செலுத்தித் தொழிற்படுத்துகின்றது. மத்திமை வாக்கானது வித்தியாகலாசத்தி வடிவமாயுள்ள மகரவொற்று ஆகிய பிரணவ எழுத்தோசையாய் மனதைச் செலுத்தித் தொழிற்படுத்துகின்றது. பைசந்தி வாக்கானது சாந்தியாகலாசத்தி வடிவாயுள்ள விந்து ஆகிய பிரணவ எழுத்தோசையாய்ச் சித்தத்தைச் செலுத்தித் தொழிற்படுத்துகின்றது. சூக்குமை வாக்கானது சாந்தியாதித

கலாசத்தி வடிவமாயுள்ள நாதம் ஆகிய எழுத்தோசையாய் புருடனைச் செலுத்தித் தொழிற்படுத்துகின்றது. இவ்வைந் தெழுத்தோசைகளுக்கும் அதிட்டான தேவர்கள் முறையே நான்முகன் திருமால் உருத்திரன் மகேஸ்வரன் சதாசிவன் என்பவர்கள். இங்கே கூறப்பட்ட நான்முகன் திருமால் உருத்திரன் பிரகிருதி மாயையில் வைகும் காரியேசுவரர்கள் அல்லர்; சுத்தமாயைக்குச் சேர்ந்த சுத்தவித்தியா தத்துவத் தின்கண் வைகும் காரணேசுவரர்.

16. அந்தக்கரணங்களைக் கூறுமிடத்துப் புருடனைச் செலுத்தும் நாத எழுத்தோசையைக்கூறுதல் நுதலிய பொரு ளுக்குப் புறம்பாயினும் ஒப்புமைபற்றி அதனையும் சேர்த்து ஆசிரியர் கூறினர்.

17. ஐந்து கலைகளின் வடிவங்களாயுள்ள அகரம் முத லிய சூக்குமப் பிரணவ எழுத்தோசைகள் ஐந்தும் தூலமாய்ப் பரிணமித்துப் பிராணவாயுவை அடக்கியும் விட்டும் நின்று முறையே அகங்காரம் புத்தி மனம் சித்தம் ஆகிய அந்தக் கரணங்களையும் புருடனையும் செலுத்தித் தொழிற்படுத்தல் பற்றி கணந்தோறும் நினைப்பும் மறப்புமாகிய சகல கேவலங் கள் மிக நுட்பமாய்க் கறங்கோலைபோல் எல்லாக் கருவிகளும் தொழிற்படும் மகாசகலமாகிய மத்தியாலவத்தையில் நிகழ் கின்றன. இவ்வாறு நினைப்பும் மறப்பும் நிகழ்தலினால் உணர்வுகள் கணந்தோறும் ஒடுங்கியும் உதித்தும் முடிவில் ஆன்மாவை வந்து சாருதல் கடலின்கண் அலைகள் புதிது புதிதாய்த் தோன்றியும் ஒடுங்கியும் வந்து முடிவில் கரை சாருதல் போலாகும். இங்கே ஆசிரியர் கூறுகிற கடற்றிரை உவமை, மேலே வாயிற்காட்சி, மானதக்காட்சி, தன்வேதனைக் காட்சி ஆகிய இவை பரம்பரையில் ஒன்றன்பின் ஒன்று நிகழ் தற்குக் கூறிய உவமைபோலாகாமல் மானதக் காட்சியின் கண் மட்டும் மாறிமாறிப் புதிதுபுதிதாய் நிகழும் உணர்வுக்குக் கூறப்பட்டதாதலின் கூறியது கூறலன்மை என்பதறிக.

18. மேலே கூறப்பட்டவாறு அந்தக்கரணங்கள் நான் கும் தத்தமக்குரிய தொழில்களைச் செய்யுமே அன்றி ஐம் பொறிகளைப் போலவே ஓர் அந்தக்கரணத்தின் தொழிலைப் பிறிதொரு அந்தக்கரணம் செய்யாது. அதுவுமல்லாமல் ஒவ்வொரு அந்தக்கரணத்தின் தொழிலும் பிற அந்தக்கரணங் களின் தொழில்களுடன் ஒழுங்கு பட்ட தொடர்புடைய தாய் விளங்கி நான்கு அந்தக்கரணங்களின் தொழில்களும் நிரம்பி முடிவு பெற்றதன்பயனாக ஆன்மாவுக்கு முடிவான அறிவு விளங்குகின்றது. இவ்வாறு ஆன்மாவுக்கு அறிவு

விளங்குதலினும் ஒவ்வொரு அந்தக்கரணங்களின் தொழிற் பாட்டினும் நினைப்பானது நினைந்தபடியே தொடர்ந்து நிகழாமல் நினைப்பும் மறப்பும் மாறி மாறி நிகழ்தலால் அறிவு தோன்றியும் மறைந்தும் நிகழ்கின்றது. ஆன்மாவுக்கு அறிவு தோன்றியும் மறைந்தும் நிகழும் குறைபாட்டைப்பற்றி ஆசிரியர் முன் மூன்றாவது சூத்திரத்தில் பிரம ஆன்மவாதியினது கொள்கையை மறுத்தற்கண் கூறி அருளினார். இப்படி ஆன்மாவுக்கு அறிவு ஒருவகையாய் நிகழாமல் தோன்றியும் மறைந்தும் நினைப்பு மறப்புமுடன் நிகழ்தல் ஆணவமலமறைப்பினால் உண்டாகிறது. பாசிபடு குட்டத்தில் கல்லெறிந்த பொழுது பாசி அகன்று நன்னீர் தோன்றுதலும், பின் பாசி நன்னீரை மூடுதலும் காணப்படுதல்போல ஆன்மா ஒரு பொருளை உற்று நோக்கும்பொழுது நினைப்பு நிகழ்தலும் உற்றுநோக்குதல் சிறிது நீங்கினபொழுது மறப்பு நிகழ்தலுமுண்டாகின்றன. ஆசிரியர் இதனை இந்த அதிகரணத்தின் முடிவினிற் கூறுதலானது பின் வருகிற இரண்டாவது அதிகரணத்துக்குத் தோற்றுவாய் குறிப்பாகக் கூறியவாறாயிற்று.

19. இங்ஙனம் அந்தக்கரணங்களின் வாயிலாக ஆன்மாவின் அறிவு நிகழ்தலினாலே ஆன்மா, அந்தக்கரணங்களினின்றும் வேறு என்ற உண்மையை அந்தக்கரணான்ம வாதிக்குத் தெளிவு படுத்திக் கூறியருளினர். (தொடரும்)

பிழை திருத்தம் : செ. செல்வி சிலம்பு 13, பரல் 8.

பக்கம்	பந்தி	வரி	பிழை	திருத்தம்
௬௯௬	31	1	யோகாசுரர்-	யோகாசாரர்-
,,	,,	5	திரள்,	திரள்.
,,	,,	,,	புறச்சமுதாயம்-	அகச்சமுதாயம் புறச்சமுதாயம்-
௬௯௮	38	12	பாத்து-	பார்த்து-
௬௯௯	39	1	ஏழுவாதிகள்-	ஏழு அதிகரணங்களால் சூனிய ஆன்மவாதிமுதலிய ஏழு வாதிகள்-
,,	40	8	கூறப்படும்.	கூறப்படும்
,,	,,	9	கூறப்படும்	கூறப்படும்.
,,	,,	9	அவத்தை-	அவத்தை வேறுபாடுகளால் அறிவு நிலை-
௬௪0	41	11	நிமித்த-	நிமித்த காரணனும் முதற் காரணந் துணைக்-

அறிவியற் பகுதி - Science

உளநூல் (Psychology)

[திரு. மா. பாலசுப்பிரமணியம், எம். ஏ.]

(௩௨௪-ம் பக்கத் தொடர்ச்சி)

தன்மையியல் (Personality)

முன்னர்த் தன்மையின் அமைவின்மைகளை உள ஆராய்வு முறைகளால் (Psycho-analytical Methods) நேர்மைப் படுத்துந்துறையில் ஆசிரியர் ஃப்ரூஃட் என்பார் கையாண்டது பிணையிலா இன நினைவு முறை (Free Association Method) எனவும், ஆசிரியர் ஜங் என்பார் கையாண்டது சோல் இன நினைவுமுறை (Word Association Method) எனவும் கூறப் பட்டன. ஈண்டு, அம்முறைகளின் விரிவு சுருங்கக் கூறப்படும். அமைவில்லாத தன்மையையுடையானது பழைய நினைவுகளைத், தொடர்புடைய தகுந்த கேள்விகளுக்கு விடை கூறுவிக்கும் முகத்தான், மீண்டும் நிகழ்கால உணர்வுவட்டத்திற்குக் கொணர்ந்து, அந்நினைவுகளை ஆராய்ந்து, அத்தன்மையமை வின்மைக்குரிய காரணங்களை யறிதல் பிணையிலா இன நினைவு முறையின்பாற் படும். தன்மைச் சிதைவினன் முன்னரே தன்னை அணுகிக் கூறியிருந்த குறிகளை யெல்லாம் நன்கு தெரிந்த உள ஆராய்வாளன் (Psycho-analyst), ஒன்றற் கொன்று நெருங்கிய இயைபும் தொடர்பும் உடைய ஒரு நீண்ட கேள்விக்கோவையைத் தன் மனத்தகத்தில் அமைத் துக்கொண்டு பின்னர், அத்தன்மைச் சிதைவினனை ஓரிடத்தே ஒய்வுபெற இருத்தி, கேள்வியைக் கேட்குங்கால் அவனுக்குத் தோன்றும் எண்ணங்களை மறைக்காமல் கூறுமாறு அவனுக்கு அறிவுறுத்திப் பிறகு ஒன்றன்பின் ஒன்ருய்ப் பல கேள்விகளைக் கேட்கின்ருன். தன்மைச் சிதைவினன் எப்பொழுதேனும் தயங்குவதாக அவனுக்குப் புலப்படின், அவனது தயக்கத் திற்குரிய காரணத்தைக் கேட்டறிகின்ருன். இன்னவகையில் அத்தன்மைச் சிதைவினனது பண்டை நினைவுகளையெல்லாம் நன்கு அறிந்து அவனது தன்மை அமைவின்மைக்குரிய கார ணம் யாதாக விருக்கலாம் என உள ஆராய்வாளன் கருது கின்ருன். பலமுறை ஆராய்ந்து இஃதே இதற்குக் காரணம் என ஒன்றைத் தெளிகின்ருன். இனப்பட்ட பண்டை நினைவு கள் யாதொரு பிணைப்புமின்றி வெளிப்படுமாறு ஏற்றகேள்வி

களைக் கேட்கும் காரணத்தால் இம்முறை பிணையிலா இன நினைவு முறை எனப்படும். பல முறை உள ஆராய்வாளன் வினவும் வினாக்களுக்குத் தான் விடைகூறுமுகத்தானும், அவ்வப்போது அவ்வுள ஆராய்வாளன் 'இன்ன முந்திய நினை வால் இன்ன பிந்திய நினைவு நீ யறியாமலே உன் உளத்தே தோன்றி வளர்ந்தது.' என்பதுபோன்ற பல காரணங்களைக் கூறித் தன் தன்மைச் சிதைவினைத் தனக்கு விளக்கு முகத் தானும், ஒரு தன்மைச் சிதைவினன் தன் தன்மைச் சிதை வினுக்குரிய காரணங்களை அறிவதன்றியும், அவ்வறியு முகத் தான் சிதைவு ஒழிந்து தன்மை நல்லாக்கப் பேறும் எய்து கின்றான்.

இனிச் சோல் இன நினைவு முறையைச் சற்று விளக்கு வாம். பொதுப்பட்ட வழக்காற்றிலுள்ள நூறு சொற்களை உள ஆராய்வாளன் தன் மனத்தகத்தே அமைத்துக் கொள் கின்றான். பின்னர், தன்மைச் சிதைவினனை ஒய்வுபெற ஓரிடத்து இருத்துகின்றான். பிறகு தான் கூறும் ஒவ்வொரு சொல்லிற்கும் தன் உளத்தே முதற்கண் எழும் இயைபுடைய ஒரு சொல்லைத் தயங்காமல் கூறுமாறு அச்சிதைவினனுக்கு அறிவுறுத்திப் பின்றை தான் முன்னரே கருதியிருந்த சொற் களை ஒவ்வொன்றாகக் கூறி அதனதனுக்கு மற்றவன் கூறும் இயைபுடைய சொல்லைக் குறித்துக் கொள்ளுகின்றான். அன்றி யும் ஒவ்வொரு வினவிடைக்கு இடைப்பட்ட கால இடை யீட் டையும் குறித்துக் கொள்ளுகின்றான். இவ்வாறு ஒரு முறை நூறு சொற்களையும் கூறி விடை பெற்ற பிறகு, மீண்டும் அவையிற்றை ஒன்றன்பின் ஒன்றாகக் கூறி அதனதனுக்கு மற்றவன் முன்னர்க் கூறிய விடைச் சொல்லையே கூறுமாறு கேட்டுக் குறித்துக் கொள்ளுகின்றான். பின்னர், தன் குறிப் புக்களை ஆராய்கின்றான். ஆராய்ந்து சில உண்மைகளை அவன் அறிகின்றான்.

1. சில வினாச் சொற்களுக்கு விரைவில் இயைபுடைய விடைச் சொல்லைக் கூறும் தன்மைச் சிதைவினன் சிற்சில வினாச் சொற்களுக்குச் சிறிது காலம் தாழ்த்து இயைபுடைய விடைச் சொல்லைக் கூறுகின்றான். ஒரு வினாச் சொல்லை இருமுறையாதல் மும்முறையாதல் கூறிய பின்னரே, அவன் தன் விடைச்சொல்லை மொழிகின்றான்.

2. சில சமயங்களில் நான்கு அல்லது ஐந்து வேறு வினாச் சொற்களுக்கு ஒரு குறிப்பிட்ட சொல்லையே விடைச் சொல்லாக இயம்புகின்றான்.

3. சில சமயங்களில் அவன் முதன்முறை ஒரு வினைச் சொல்லுக்கு இயைபுடையதாகக் கூறிய ஒரு விடைச் சொல்லை மறுமுறை அதே வினைச் சொல்லைக் கூறும்போது உரிய விடைச் சொல்லாகக் கூறுது ஒழிகின்றான்.

மேற்கூறிய உண்மைகளையும் அன்ன பிற உண்மைகளையும் உள ஆராய்வாளன் ஆய்ந்தறிந்து தன்மைச் சிதைவினனது, அச் சிதைவுக்குரிய காரணங்களைத் தேர்கின்றான். தேர்ந்து அவையிற்றை விளக்கமாக அவனுக்கு எடுத்துமொழிகின்றான். தன் தன்மைச் சிதைவுக்குரிய காரணங்களை அதுகாறும் அறியாதிருந்த அவன் அவையிற்றை அறிந்த பின்னர் அச்சிதைவு அக்காரணத்தானேயே நீங்கப்பெற்றுத் தன்மை நல்லாக்கப்பேறு எய்துகின்றான்.

தன்மையின் பிளவு
(Disintegration of Personality)

எக்காலத்தும் எவ்விடத்தும் தம் தன்மையாக்கம் பிறழாது ஒருபடித்தாக விளங்க நிற்பார் தன்மைக்கட்டு (Integrated Personality) உடையார் எனப்படுவர். அஃதிலார் தன்மைப் பிளவு உடையார் (Disintegrated Personality) எனப்படுவர். இதனை ஈண்டு விளக்குவாம். ஒருவன் தன் அலுவற்சாலையில் ஒரு தன்மை விளக்கத்துடன் இருப்பன், தன் நண்பர்களிடை வேறொரு தன்மை விளக்கத்துடன் இருப்பன், தன் மனைவி மக்கள் சுற்றத்தாரிடைப் பிறிதொரு தன்மை விளக்கத்துடன் இருப்பன். அலுவற்சாலையில் தன் வேலையாட்களிடை உண்மையிலேயே மிகுந்த கொடுந்தன்மை இயல்பாகவே தோன்ற நிற்பானுய அவன், தன் னகத்தில் தன் மனைவி மக்களிடை இயல்பாகவே மிகுந்த இனியதன்மை விளங்க நிற்பன். எனவே அவனது தன்மையாக்கம் பிளவுடைத்தாகின்றது. இஃது உலகில் நாம் பல்லாரிடத்தும் காண்பதொரு நிகழ்ச்சியே. நிற்க, ஒருசிலர் தம் உணர்வு இன்றியே இருவகைத் தன்மையினராக இருப்பவும் காண்கின்றோம். இவ்விருவகைத் தன்மைகளுள் முதலதாகிய வழக்குத் தன்மையில் (Usual Personality) மிகவும் பொறுமையாதி நற் பண்புகளுடன் கூடியிருந்த ஒருவன், இரண்டாவதாகிய முரண்தன்மை (Morbid Personality) மேற்படுங்கால் குறும்பாதிய தீப் பண்புகளுடன் கூடியிருக்கக் காண்கின்றோம். மேற்பட்ட இம் முரண்தன்மை நீங்கி மீண்டும் வழக்குத் தன்மை மீறுகின்ற காலத்து அவன் முன் தன்மை நிலையில் செய்த குறும்புச்செயலை முற்றும் மறந்தவனுகின்றான். அவ

னுடைய உளத்தில் இருவகைத் தன்மைகளும் உடனுறைகின்றன என்பதும், ஒரோருகால் முரண்தன்மை மேற்படுகின்றது என்பதும், அஞ்ஞான்று அவன் செய்த வினைகளை மீண்டு வழக்குத் தன்மை தோன்றின காலத்து அவன் மறந்துவிடுகின்றான் என்பதும் ஈண்டு அறியத்தக்கன.

கீழுள்ளம் (The Unconscious)

தன்னைச் சூழ்ந்து உள்ளார் யாவராலும் நற்றன்மையாளன் என மதிக்கப்பட்ட ஒருவன் ஒரோருகால், தன்னையறியாமலே, சில தாழ்ந்த செயல்களைச் செய்ய விழைகின்றான். இவ்விழைவு மற்ற காலங்களில் யாண்டு உறைந்திருந்தது? ஒருவன் சில திங்கள்களுக்கு முன்னர் ஒரு நீண்ட பாச்செய்யுளைப் பாடம் போற்றியிருந்தான்: இன்று அவன் அச்செய்யுளை யாதொரு தவறும் இன்றி மீண்டுமொழிகின்றான், இச்செய்யுள் நினைவு நினைவுக்குக் கொணர முயன்றும் அப்பெயர் இச்சில திங்கள்களாக யாண்டுறைந்திருந்தது? ஒரு நண்பன் பெயரை நாம் முன்னர் அறிந்திருந்தோம்; இப்பொழுது அப்பெயரை நினைவுக்குக் கொணரமுயன்றும் அப்பெயர் நினைவுக்கு வரவில்லை; சில நாழிகை கழித்து, நாம் வேறு அலுவலுடன் இருக்குங்கால் அப்பெயர் நினைவு வட்டத்தில் மின்னெனத் தோன்றுகின்றது: அப்பெயர் நினைவு இதுகாறும் யாண்டுறைந்திருந்தது? நம்முடைய பெயரை ஒரு தாளில் எழுத நாம் எழுதுகோலை ஊன்றுகின்றோம்; நம்பெயர் இத்தனை எழுத்துக்களால் ஆயது என்பதாதல், ஒவ்வொரு எழுத்தின் வடிவம் இஃது என்பதாதல் நம் நினைவு வட்டத்தில் தோன்றவில்லை; எனினும் கண்ணிமைப் பொழுதுள் பெயரை எழுதி முடிக்கின்றோம். ஆயின் எழுத்துக்களின் செவ்வெண்ணும், எழுத்துக்களின் வடிவமும் யாண்டுறைந்திருந்தன? ஈருருளை (Bicycle) ஏற்றம் முதற்கண் பழகினவன் ஒருவன் பின்னர் அவ்விருருளை ஊர்ந்து செல்லுங்கால் தொடக்கத்தில் கையாண்ட சிறுசிறு முறைகளை யெல்லாம் நினைவுடன் கூடிச் செய்கின்றானில்லை; இருக்கையின் மீது குதித்து அமர்கின்றான், எதிர்வரும் பொருள்களை யெல்லாம் காணுமற்கண்டு விலகி ஊர்ந்து செல்கின்றான்; கைப்பிடியை அசைத்தல் மணியை ஒலித்தல், உருளையைக் காலாற் சுழற்றல் ஆதிய தொழில்களை யெல்லாம் அவன் நினைவின்றியே செய்கின்றான்: ஆயின் அத்தொழில்களின் நினைவு அக்கால் யாண்டுறைந்திருந்தது?

மேற்சென்ற வினாக்களுக்கு எல்லாம் ஒரே விடை கீழுள்ளம் என்பதே. இஃது ஆங்கிலத்தில் தி அன்கான்ஷியஸ்

(The Unconscious) எனவும் தி சப் கான்ஷியஸ் மைண்டு (The Sub conscious Mind) எனவும் கூறப்படும். ஒருவனுடைய விழைவுகளும், நினைவுகளும், வினைசெய்முறைப் பதிவுகளும்அவனது கீழுள்ளத்தே உறைகின்றன என்பது உளநூற் புலவர்தங்கொள்கை. இக்கீழுள்ளம் என்பது உள்ளத்துக்கு வேறுபட்ட ஒரு தனிப் பொருளன்று: ஒரு மனையின் அடித்தளம் போன்று உளத்தின் அடி நிலைக்குக் கீழுள்ளம் என்பது குறியீடு. கீழாலவத்தை எனச் சித்தாந்த நூல்களிற் கூறப்படுமதற்கும் இக்கீழுள்ளம் என்பதற்கும் நெருங்கிய இயைபுண்டு. அது காலம் நேர்ந்துழிப் பின்னர்க் கூறப்படும்.

வடிவுதிருந்த அறிவு வளர்ந்த வகை

[திரு. க. ப. சந்தோஷம் அவர்கள், B.A.,L.T.]

(முன் ௩௬௬-ம் பக்கத் தொடர்ச்சி)

நினைவின் வியத்தகு ஆற்றலை எடுத்துக்காட்டும் பொருட்டு எனது வாழ்க்கையில் நேர்ந்த ஒன்றிரண்டைக் கூறுவேனென்று சொன்னேன். ஈண்டவற்றைக் கூறுகின்றேன். கணக்கியலில் கால்குலோகிராஃப் (calculograph) என்றொரு புதிய துறை இருக்கின்றது. இதில் ஒரு பகுதியே இங்கிலாந்தில் வெளியிடப்பட்டுளது. இப்பகுதியைக் கண்ணுற்ற ஐரோப்பிய அறிவியலார் பலர், இது பயன்படுமாற்றையறிந்து புகழ்ந்து பேசியிருக்கின்றனர். இப்புதியதுறை முதன் முதற் கனவுநிலையில் எனக்குத் தோன்றிற்று. கட்டிடங்கள் அமைப்பதில் சாந்து, சரல் முதலியவற்றைக் கலப்பதில் ஏற்படுஞ் சிக்கலான கணக்குகளைப்பற்றிக் கருதத் தொடங்கி, இவற்றை எளிதாக்க ஒரு முறை காணுதல் கூடாதோ என்ற நினைவில் யான் ஆழ்ந்திருந்தேன். கனவு போன்ற இந்நிலையிலிருந்து யான் விழித்தபோது மேற்குறித்த சிக்கல்களையகற்று முறை வெளிப்பட்டது. பிறகு நனவு நிலையில் அம்முறை எனதுள்ளத்தில் வளர்ச்சி பெற்றது. இதிலொரு பகுதி முற்றுப்பெற்று இங்கிலாந்தில் வெளியிடப்பட்டுளது. எல்லோர்க்குங் கிடைக்குமாறு இது வெளியிடப்படாமையின் சிற்சிலரே இதைக் கையாள்கின்றனர். இஃதெங்ஙனமாயினும் ஆகுக. பெரிதுஞ் சிக்கலான கணக்குகளை ஒழுங்குபடுத்தி, மிக எளியனவாய் அவற்றைக் காட்டக் கூடிய இம்முறை, ஒரு நாழிகைக்குட்பட்ட கால அளவில்

ஒருவருடைய மூளையில் தோன்றிற்றென்பதே ஈண்டுக் கருதற்பாலது. நினைவின் ஆற்றலை என்னென்று சொல்வது!

பலப்பல ஆண்டுகள் வருந்தியுழைப்பினும் பெறுதற்கரிய உண்மைகளைக் கணப்பொழுதில் வெளிப்படச் செய்யும் நினைவாகிய ஆற்றலின் ஒரு பகுதி இஃதாம். மற்றொன்றை இப்பொழுது உங்களுக் கெடுத்துச் சொல்வேன். இது முற்கூறியதிலிருந்து வேறுபட்டது. 1911-ம் ஆண்டில் நடந்த தர்பாரின் பொருட்டு (ஜியார்ஜ் மன்னர் இந்தியாவிற்கு வந்து முடி சூடிய நிகழ்ச்சி) யான் டெல்லி நகரிலிருந்தேன். அக்காலை, யான் இடம்விட்டு இடம் பெயர்ந்த பொழுதெல்லாம் அதை என் வீட்டிலுளோர்க்குத் தெரிவித்தேன். ஏனெனின் ஒவ்வொரு நாளும் தந்திவாயிலாய் என்னுடைவர்கள் பேசவேண்டுமென்பது எனது நோக்கமாயிருந்தது. ஒருநாள், இன்னதென்றெடுத்துரைக்கலாகா ஓர் உணர்ச்சி மேலீட்டால், யான் எனது அலுவலை நிறைவேற்ற முடியாமற் போயிற்று. சோர்வுற்றவனாய் யான் அடிக்கடி என் வீட்டிலுள்ளவர்களை நினைந்து கவலை கொள்ளலானேன். இதன் பயனாக, "வீட்டில் யாது நேர்ந்தது?" என்று பொருள்படும் ஒரு தந்திச் செய்தியை அனுப்பினேன். கவலைக்கிடமான ஒன்று நேர்ந்திருக்க வேண்டுமென்று என் உளத்திற் பட்டது. இத்தந்திச் செய்தி டெல்லியிலிருந்து புறப்படும் நேரத்தில், என் வீட்டிலுள்ளோர், 'என் மைத்துனர் இறந்து போயினர்' என்று தந்தி கொடுத்திருந்தனர். டெல்லியிலிருந்து புறப்பட்ட எனது செய்தி போய்ச் சேருமுன்னரே, என் வீட்டிலுள்ளோர் தங்கள் செய்தியை அனுப்பியிருந்தனர். இத்தகைய நிகழ்ச்சிகளை அறிவியலின் துணைகொண்டு நாம் விளக்க முடியாது. வீட்டை விட்டு யான் மிகத்தொலையிலிருந்த காலத்தில் நிகழ்ந்த இத்துன்பச் செய்தி என் இல்லத்தினரை மிகுதியுங் கலக்க மடையச் செய்திருக்க வேண்டும். அவர்களெல்லோரும் ஒன்று சேர்ந்து என்னைப் பற்றியடைந்த கவற்சி விசும்பின்வழியாகப் பரவி, நாமறியாத ஒரு வகையில் எனது உள்ளத்தில் வந்து தாக்கி, ஒருணர்ச்சியை உண்டாக்கியது உண்மையன்றோ? எனது வாழ்க்கையில் நிகழ்ந்த இத்தகைய செய்திகள் இன்னும் பல.

தொழி லியற்றுவதிலும், விசும்பில் நெடுந்தொலை செல்வதிலும், வேறு துறைகளிலும் நினைவின் ஆற்றல் நாம் கருதொணுப் பயனளிக்கவல்ல தென்பதும், அதுபற்றி நாம் இதுகாறும் அறியாத உண்மைக ளுண்டென்பதும், மேற்காட்டியவற்றால் விளங்கும். விசும்பின் தன்மைத்தாய் எங்கும்

பரவியுள்ள மூளேயே கடவுளென்று முன்கூறப்பட்டது. மூளே யும் அறிவும் ஒன்றி நிற்பனவாதலின், அக்கடவுள் அறிவைத் தவிர்த்து வேருென்ருயிருத்தல் கூடாது. நமது உண்மை இயலிற், "கடவுள் அறிவு மயம்," என்று சொல்வதன் கருத்து இதுவே.

"கடவுளேப்பற்றி உனக்கென்ன தெரியும்?" என்று என் தமிழாசிரியர் கேட்ட கேள்விக்கு விடையாக யான் எழுதிய கட்டுரையில், "கடவுள் அறிவுமயம்," என்பதையே எனது முடிபாகக் காட்டினேன். என் ஆசிரியர், இக்கட் டுரையின் முற்பகுதியில் யான் எழுதிய சில சொற்களேக் கண்டு திடுக்கிட்டாராயினும், எனது முடிபைப் பார்த்தபின் பெரிதும் உளமுவந்து யான் எழுதிய ஏடுகளேத் தம் வாழ் நாளளவும் பேணிவைத்திருந்தார். இவ்வெனது கட்டுரையை என் ஆசிரியர், மூளேயிலிருந்து எதிர்பாராத வகையில் விளே யாட்டாக வெளிப்படும் ஆற்றலுக்கு ஓர் எடுத்துக் காட் டாகத் தமது வகுப்புகளிற் படித்துக்காட்டுவார். நிற்க.

முந்திய சொற்பொழிவில், உடலுந் தலேயும் பொருந்தும் முடக்கி (Angle) யின் துணே கொண்டு அறிவின் அளவைத் துணியும் முறைபற்றிக் கூறினேன். இவண், மூளேயின் எடை கொண்டு அறிவை அளக்கும் வகை பற்றிப் பேசுவேன். மூளேத்திரளின் எடையை உடலின் எடையைக் கொண்டு வகுப்பதாற் பிறக்கும் கூற்றெண் (Fraction), மூளேயின் ஆற்ற லுக்கோர் அளவுகோலாகும். இக்கூற்றெண் உயிரின் நிலேக் கேற்ற வண்ணம் வேறுபடுமென்பது விளம்பாதே விளங்கும். ஆயின், மக்களெல்லோருக்கும் மூளேயின் எடை ஒன்ருயிருக் குமோ எனின் இல்லே. வெவ்வேறு மக்கட்டொகுதிகளே எடுத் துக்கொள்வோமாயின், ஒரு தொகுதியில் நாம்காண்கின்றமூளே எடை மற்ருெரு தொகுதியிற் காணப்படுவதில்லே. ஒரு தொகு திக்குட்பட்டமக்களிடையும்வேறுபாடுண்டு. ஆனுல், இவ்வேறு பாடு மிக விரிந்து செல்லாது சில வரம்புகட்கடங்கி நிற்கும். ஜப்பானியர், சீனர், அராபியர் என்று பிரிக்கப்படும் மக்கட் டொகுதிகளிற் காணப்படும் மேற்குறித்த எடைக்கணக்கைப் பார்ப்போம். இத்துறையில் ஆராய்ச்சி செய்திருக்கும் அறி ஞர்கள் வெளியிட்டிருக்கும் கணக்குகளே நோக்கிடின், மேற் குறித்த மக்கட்டொகுதிகளின் மூளே எடையை உடல் எடையால் வகுப்பதாற் பிறக்கின்ற கூற்றெண்கள் வேறு, வேறு என்று பார்க்கிருேம். கிடைத்திருக்குங் கணக்கு களேக் கொண்டு துணியப் புகின், ஜப்பானியருக்குஞ் சீன ருக்கும் மூளேயின் எடை பெரிதென்று நாம் ஏற்றுக்கொளல்

வேண்டும். அறிவாற்றல்களில் இவர்களது நிலை யாது? மூளையின் எடை பெரிதாயின், அறிவினும் ஆற்றலினும் இவர்கள் மற்ற மக்களைவிடச் சிறந்து விளங்கவேண்டுமன்றோ? இக்கேள்விக்கு விடை காணுமுன், ஒன்றை நாம் ஈண்டுக் கருதவேண்டும். மூளையின் ஆற்றல, நினைதல், கருதல், புனைதல் என்பவற்றில் மாத்திரம் வெளிப்படுமென்றெண்ணுதல் தவறு. உடலினுள்ள உறுப்புக்கள் மூளையோடு இணைக்கப் பட்டிருக்கின்றன. மூளையின் எடை மாத்திரம் அம்மூளையை யுடைய உயிரின் தன்மையைக் காட்டுவதாகாது. மூளையின் ஒரு பகுதியிலிருந்து உணர்வு நரம்புகள் (Nerves) கால்களுக்குச் செல்கின்றன; மற்றொரு பகுதியிலிருந்து புணர்ச்சிக் கருவிகளுக்குச் செல்கின்றன. வேறொரு பகுதியிலிருந்து வயிற்றுக்குச் செல்கின்றன. இத்தகைய பகுதிகள் இன்னும் பலவுள. இவைகளிலெல்லாம் மூளையின் ஆற்றல் வெளிப் படும். ஆதலின். ஒரு மகனின் மூளை எடை மாத்திரம் அவனுடைய அறிவிற்கு அளவுகோலாகாது. ஒருவனுக்குத் தலையின் பிற்பகுதி பெரிதாகவும், முற்பகுதி சிறிதாகவு மிருப்பின், அவனுடைய ஆற்றல் பெரும்பாலும் வினை (கர்மம்) இயற்றுவனவாகிய புணர்ச்சிக் கருவிகளினும், செரிப்பு நிகழும் வயிற்றினும், வேறு அகப்புறக் கருவிகளினும் வெளிப்படுதல் வேண்டும். தலையின் முற்பகுதி பெருத்திருந்தால், அத்தலையினுள்ள மூளையின் ஆற்றல் கண், காது முதலிய உறுப்புகளுக்குச் செல்லும் நுண் நரம்புகளிற் பெரிதும் வெளிப்படுமென்பது பெறப்படும். தலையின் பிற்பகுதி பெருத்திருக்குமாயின், அத்தலையை யுடைய மகன் கர்மேந்திரிய ஆற்றல் நிறைந்தவனு யிருப்பா னென்று எதிர்பார்க்கலாம்: முற்பகுதி பெருத்திருந்தால், அவன் நினைவாற்றலுடையன் என்பதை யறியலாம். இக்காரணங்களால், வெறும் மூளையின் எடையைக் கொண்டே ஒரு மகன் அல்லது ஒரு மக்கட்டொகுதியின் உயர்வு தாழ்வைத் துணியலாகாதென்பது தெளிவாகின்றது. ஜப்பானியருஞ் சீனரும் பெரிய மூளை எடையுடையவர்களா யிருக்கின்றார்களென்பது கொண்டு, மக்களுள் அவர்களே மேலானவர்களென்று தீர்மானிக்க முடியாது. மூளையின் வெவ்வேறு பகுதிகளை ஒவ்வொன்றாக ஆராய்ந்து, எப்பகுதியில் இவர்கள் மற்றோரினும் ஓங்கியவரென்று காணல்வேண்டும். வடிவும் அறிவும் ஒன்றிற்கொன்று இசைந்து வளர்தல் என்ற பொருளில் இஃதொரு பிரிவாகும். இந்திய உண்மை இயலில் நுண்மையாக வரையறுக்கப்பட்டவற்றுள் இஃதொன்றாம். இதுபற்றி அடுத்த சொற்பொழிவில் விரிவாய்க் கூறுவேன். சாமுத்திரிகால

க்ஷண மென்ற மற்றொரு பகுதியும் இதனோடு இயை புடையது. ஈண்டு அதுபற்றிப் பேச யான் விரும்பவில்லை. ஆனால், அறிவும் வடிவும் ஒன்றிற்கொன்று இசைந்து வளர்ந்த வகையையே யன்றி, எல்லாவற்றிலும் அகமும் புறமும் எப்படி வந்தன என்பது குறித்து இந்தியர்கள் கண்ட உண்மையை ஒட்டிய சில குறிப்புக்களை எடுத்துக் காட்டுவேன். பன்னெடுங்காலத்திற்கு முன்னரே இந்தியர் இதைக் கண்டறிந்து எழுதிவைத்தனர். ஐரோப்பியர்களோ இது பற்றி டார்வின் (Darwin) வருமளவும் ஒன்றுமறிந்திலர். டார்வின் கண்ட உண்மைகள் நூறுண்டுப்பழமையுமுடையன வல்ல. இந்தியர் கண்ட உண்மையோ தமிழகத்தின் தென் பகுதியைக் கடல் கொண்டதற்கு முற்பட்டது.

(தொடரும்)

ஞாலநூல் (Geology)

[திரு. S. நடராஜன் அவர்கள் B. A.]

(முன் ருகஙு-ம் பக்கத்தொடர்ச்சி)

(கூ) இது போழ்து யாவராலும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள கோட்பாடு (Theory) சிறு கோள்கள் கற்பனை (Planetesimal Theory) எனப்படும். இஃது சேம்பர்லின் (Chamberlin), மோல்டன் (Moulton) என்பவர்களால் விவரிக்கப்பட்டது. இவர்களின் கோட்பாடு பின் வருமாறு: இஞ்ஞான்று ஞாயிற்றை நடுவே வைத்துப் பிற கோள்கள் சுற்றுவது போல் அநாதி காலத்தில் ஒரு மத்திய ஆவி வடிவாய் உள்ள ஒரு பிண்டத்தை,மணல், கல், தூசி ஆய கணக்கற்ற பல பொருள்கள் சிறு கோளங்களாகச் சுற்றிவந்தன. இவைகள் சுழலுங்கால் மத்திக்கு விலகுகின்ற தன்மையால் துரிதமாய் விலக்கப்பட்டுச் சிதறுண்டன. காலப்போக்கில், ஒன்றை ஒன்று இழுக்கும் தன்மையாலும், மத்தியை நாடுகிற தன்மையாலும் ஒன்று சேர்ந்து ஞாயிற்றின் விண்வட்டம் (Solar System) ஆயிற்று. இக்கோட்பாடு சரியான தென்று இது காலை நம்பப்பட்டு வருகின்றது. இன்னும் மதிவல்லார் ஆராய்ச்சி நடத்தி வருகின்றனர். ஆராய்ச்சியாளரின் மதி நுட்பத்திற்கு ஏற்றவாறு புதுச் சான்றுகள் தோன்றத் தோன்ற இக்கோட்பாடுகள் கற்பனையாய் மாற, புதியவைகள் இதன் இடத்தைப் பெறும். நாகரிக மக்களின் வேட்கை ஆதிகள் அண்டப் பரப்பை அறிய விரும்புவதேயாம்.

அண்டப் பரப்போ நூற்றெருரு கோடியின் மேற்பட விரிந்து கிடக்கின்றது. * எனினும் ஆராய்ச்சி நடந்துகொண்டே செல்லும்.

(ம) ஞால உற்பத்தியைப் பற்றிய பலவித கோட்பாடு களையும் கற்பனைகளையும் ஒளிநூலில் (astronomy) பரக்கக் காணலாம். இங்கு இதன் எல்லை குறிகளை மட்டும் கூறினேம். விரிவு ஞாலநூலிற் படுவதில்லை.

(மக) இனி பண்டைத்தமிழ்ப் பெருமக்கள் கொண்டுள்ள கருத்து என்னவெனக் காண்போம். இவர்கள் கருத்திற்கும் மேனாட்டுப் பண்டைப்பெரியோர்களின் கருத்திற்கும் வேற்றுமை அதிகம் இல்லை. இவர்கள் கருத்தைப் பின்வரும் பழஞ் செய்யுள் விளக்கும்.

" விசும்பி னூழி யூழூழ் செல்லக்
கருவளர் வானத் திசையிற் றோன்றி
உருவறி வாரா வொன்ற னூழியும்
முந்துவளி கிளர்ந்த வூழூ ழூழியும்
செந்தீச் சுடரிய வூழியும் பனியொடு
தண்பெய றலைஇய வூழியு மவையிற்
றுண்முறை வெள்ள மூழ்கியார் தருபு
மீண்டும் பீடுயர் பீண்டிய வற்றிற்கு
முள்ளீ டாகிய இருநிலத் தூழியும் "

—பரிபாடல் 2-ம்பாட்டு

†"வான் முதலாவதாகவும், பின் காற்றும், அதற்குப் பின் தியும் அதற்குப் பின் நீரும் இறுதியாக நிலனும் உண்டாயின" என்பர் பண்டைத் தமிழர்.

(மஉ) ஞாலந்தோன்றி இன்றைக்கு எத்தனை ஆண்டு களாயின என்னும் கேள்வி மக்கள் கவனத்தைப் பெரும்பாலும் இழுக்கின்றது. இதில் கொண்டுள்ள முடிவுகள் மாறியது

---

*We are yet far from a complete solution of this grandest of all undiscovered secrets, the origin of the universe; but the efforts to penetrate beyond the veil will go on unceasingly. Galileo said truly "There are such profound secrets and such lofty conceptions that the night labors and researches of hundreds and yet hundreds of the keenest minds, in investigations extending over thousands of years would not penetrate them, and the delight of searching and finding endures for ever.

W. H. Hobbs.

† தமிழ் இலக்கிய வரலாறு —கா. சுப்பிரமணிய பிள்ளை.

போல் வேறெந்த நூல் முடிவுகளும் சமீபகாலத்தில் மாறுதலடைய வில்லை. 13, 14, 15, 16-ம் நூற்றுண்டுகளில் ஞாலத்தின் வயது 6000 ஆண்டுகளாய் இருக்கலாம் என்றனர். அக்காலத்தார் கொள்கையைப் பின்பற்றிய நம் நாட்டில் மேனுட்டுக்கலை கற்றவர்கள், நம் புராணங்களிலும் கணித நூல்களிலும் கூறப்படும் யுக முடிவுகளையும், ஒவ்வொரு யுகங்களுக்குக் கூறும் ஆண்டுகளின் தொகையையும் கண்டு எள்ளி நகையாடினர். 18-ம் நூற்றுண்டில், பிரான்சு தேயத்து இயற்கை நூல் அறிஞராய பஃபன் (French Naturalist, Buffon) என்பார் ஞாலத்தின் வயது (80,000) எண்பதினுயிரம் ஆண்டு எனக் கணக்கிட்டார். இது ஞாலநூல் ஓர் தனி நூலாகக் கருதப்படுவதற்கு முன்னராம். இவர் கூறியதன் பின்னர் ஞாலநூற் சான்றுகள்கொண்டு ஞாலத்தின் வயதைக் கணக்கிடும் போழ்து இதன்வயது அநேக நூறுயிரங்கள் (millions) ஆண்டுகளாகும் என எண்ண வேண்டியிருக்கிறது. இதைப் பற்றிக் கணக்கு எடுக்கும் பொழுதெல்லாம் இதன் வயது அதிகரித்துக்கொண்டே வருகிறது.* இதுகாலை ஞாலம் தோன்றி வெகுகாலமாயிற்று எனக் கூறமுடிகின்றதே ஒழிய சரியாக வயது கணக்கிடக்கூட வில்லை.

(யரு) ஞாலத்தின் வயதை இருவழிகளில் கணக்கிடுமுர்கள் ஒன்று ரேடியோ பரவும் தன்மையிலிருந்து கணக்கிடுதல். மற்றொன்று வடபனி மண்டலங்களில் பனிக்கட்டிகள் இளகி, அவைகள் உறைந்து கிடந்த நிலப்பரப்பு மேல் உயரும்போது ஏற்படும் படைகளைக்கொண்டு கணக்கிடல். முதல் முறையாகக் கணக்கிடும்போது ஞாலத்தின் வயது ஆயிரங்கோடி ஆண்டுகளுக்குமேல் ஆகலாம் (1,000,000,000) எனக் கருதுகின்றனர். இரண்டாவது முறை பனி மண்டலத்திலும் அதற்கு அருகில் உள்ள நாடுகளில் மட்டும்தான் கையாளக்கூடியதாகையால் இதை யாரும் வெகுவாகப் பின்பற்றவில்லை.

(யச) நம் பண்டை நூற்படி ஞாலத்தின் வயது 1,955,885,036 ஆண்டுகள் எனக் கணக்கிடப் பட்டுளது. பிரமதேவனின் ஒரு பகல் ஒரு கல்பம். இக்கல்பம் 1000 மகாயுகங்கள் கொண்டது. இவ்வாயிரம் மகாயுகங்கள் 4,320,000,000 ஆண்டுகளுக்குச் சரி. இவ்வாயிரம் மகாயுகங்களும் 14 மன்வந்திரங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு மன்

---

* The antiquity of the earth was very great, much greater than the Physicists and astronomers were inclined to admit.

—W. B. Scot.

வந்திரத்திற்கும் 308,448,000 ஆண்டுகளாகின்றன. நாம் இப்பொழுது 6 மன்வந்திரங்கள் கழித்து ஏழாம் மன்வந்திரத்தில் கலியுகத்தில் 5,036-ம் ஆண்டில் இருக்கிறோம். ஒரு கல்பம் முடிந்து மற்றொரு கல்பம் தொடங்குமுன் சந்திக் காலம் என ஒரு இரேதயுக காலம் அதாவது 1,728,000 ஆண்டுகள் ஏற்படும். பிரமதேவன் விழித்து இவ்வுலகத்தைப் படைக்க 17,064,000 ஆண்டுகளாயுள்ளன. ஒவ்வொரு மன்வந்திரத்திற்கு 4 யுகங்களும் ஒரு யுகமும் சந்திக்கும்போது ஒரு சிறு யுகமும் ஏற்படுவதாகப் பிரித்துள்ளனர். எனவே இவ்வுலகின் வயது பின்வருமாறு கணக்கிடப்பட்டுளது.

	ஆண்டுகள்
கல்பசந்தி	17,28,000
6 மன்வந்திரங்கள்	185,06,88,000
மகாயுக சந்திகள் 27-க்கும் (6 மன் வந்திரத்திற்கும் 6×4=24 சந்தி யுகங்கள் நடப்பு மன்வந்திரத்தில் 3 ஆக 27-க்கும்)	11,66,40,000
7-ம் மன்வந்திரத்தில் அதாவது வைவச்சுத மன்வந்திரத்தில்	
கிரேதாயுகம்	17,28,000
திரேதாயுகம்	12,96,000
துவாபரயுகம்	8,64,000
கலியுகம் (நடப்பு)	5,036
ஆகமொத்தம் ஆண்டுகள்	195,29,49,036
ல் பிரமதேவன் விழித்துப் படைப்புக்குச் செலவிட	170,64,000
ஆண்டுகளைக் கழிக்க	194,58,85,036

ஆண்டுகள் ஞாலத்தின் வயது ஆகிறது. இத்துடன் ஞால நூல் அறிஞர்கள் ரேடியோ பரவும் தன்மையைக்கொண்டு கணக்கிடும் வயதை ஒப்பிட்டுப் பார்த்தால் நம் சாத்திரக் கணக்குகள் வெறுங்குப்பை அன்றெனத் தெளியலாம்.

(தொடரும்)

தமிழ் அளவைநூற் சொற்கள்

[திரு. மா. பாலசுப்பிரமணியம், M. A.]

முன்னுரை

வட மொழியினும் ஆங்கில மொழியினும் உள்ள அளவை நூற் சொற்களைத் தமிழ்ப்படுத்த ஈண்டு முனைகின்றேம். பெரியார்கள் கீழ் வருவனவற்றுள் குற்றங்களைக் காணில் அவைகளைத் திருத்துமாற்றால் எமக்கு அறிவுறுத்துவார்கள் எனத் துணிகின்றேம். இம் முயற்சி முடிவு பெற்ற பின்னர் வடமொழி அளவை நூலையும் (தருக்கம்) ஆங்கில மொழி அளவை நூலையும் (லாஜிக்: Logic) தழுவித் தனித்தமிழ் அளவை நூல் இயற்ற விழைந்துள்ளேம். எம் முழுமுதற் கடவுளாம் முருகப் பெருமான் எம் கருத்தினை நிறைவேற்று விப்பான் எனத் துணிகின்றேம்.

1. தருக்கம்—Logic (லாஜிக்)—அளவை நூல்
2. மங்கலம்—காப்பு—Prayer, Invocation
3. ஆசிர்வாத ரூப மங்கலம்—வாழ்த்தியற் காப்பு
4. நமஸ்கார ரூப மங்கலம்—வணக்கவியற் காப்பு
5. வஸ்து நிர்த்தேச ரூப மங்கலம்—பொருளியல்புரை காப்பு.
6. அனுபந்த சதுஷ்டயம்— நூற்சார் நாற்பொருள்
7. விஷயம்—உரைபடு பொருள்; மொழிபடு பொருள் Subject
8. பிரயோஜனம்— நூற்பயன்—Aim
9. சம்பந்தம்—இயைபு
10. அதிகாரி—தகுமாணக்கன்.
11. பிரதி பாத்திய பிரதிபாதக பாவ சம்பந்தம்—மொழி படு பொருள் மொழியுநூல் இயைபு.
12. ஜன்னிய ஜனக பாவ சம்பந்தம்—எழூஉம்றிவு எழு விக்கு நூல் இயைபு.
13. பிரயோஜ்ஜிய பிரயோஜக பாவ சம்பந்தம்—பயன் பயன்றருபொருள் இயைபு.
14. விஷய விஷயீபாவ சம்பந்தம்—பெறு பொருள் தரு பொருள் இயைபு.
15. பிராப்பிய பிராபக பாவ சம்பந்தம்—பயன் பயன் பெறுவான் இயைபு.

16. கர்த்துரு கர்த்தவிய பாவ சம்பந்தம்—ஆராய்வான் ஆராய்ச்சி இயைபு.
17. உத்தேசம்—பெயர்—Name
18. இலக்ஷணம்—சிறப்பியல்பு—Definition
19. பரீக்ஷை—ஆராய்ச்சி—Investigation
20. அவ்வியாப்தி—குறு நிறைவு.
21. அதிவியாப்தி—மீ நிறைவு.
22. அசம்பவம்—நிகழாமை.
23. அசாதாரண தர்மம்—சிறப்பியல்பு.
24. முக்கியப் பிரயோஜனம்—சிறப்புப் பயன்.
25. கௌணப் பிரயோஜனம்—பொதுப் பயன்.
26. பதார்த்தம்—Category—சொற் பொருள்.
27. பாவ பதார்த்தம்—உட்சொற் பொருள்.
28. ஞேயம்— அறிபடு பொருள்; அறியப்படுபொருள்
29. பிரமேயம்—அளக்கப்படு பொருள்; அளவுபடு பொருள்
30. அபிதேயம்—பெயர்படு பொருள்
31. அர்த்தம்—பொருள்
32. திரவியம்—பொருள்—Substance
33. குணம்—பண்பு—Quality
34. கர்மம்—தொழில்—Activity
35. சாமான்யம்—பொதுமை—Generality
36. விசேஷம்—சிறப்பு—Particularity
37. சமவாயம்—ஒற்றுமை—Inherence
38. அபாவம்—இன்மை—Non-existence.
39. பிரமாணம்—அளவைக்கருவி
40. சம்ஸயம் —ஐயம்—Doubt
41. பிரயோஜனம்—பயன்—Purpose
42. திருஷ்டாந்தம்—எடுத்துக்காட்டு—Instance
43. சித்தாந்தம்—உடன்பாட்டுமுடிபு—Established Conclusion
44. அவயவம்—உறுப்பு
45. தர்க்கம்—கழித்தறிதல் —Reductio ad absurdum.
56. நிர்ணயம்—அளந்தறிந்த முடிபு—Decisive knowledge.
47. வாதம்—உண்மைபெறச் சொற்போரிடல்
48. ஜல்பம்—வெற்றிபெறச் சொற்போரிடல்
49. விதண்டம்—பிறன் கொள்கை தூற்றல்

50. ஹேதுவாபாசம்—சார்புப் போலி — Fallacious Reason
51. சலம்—பொருள் பிழைத்தறிந்து தூற்றல்—Quibble
52. ஜாதி—போலி உவமை—False Analogy
53. நிக்ரஹஸ்தானம்—தோல்விச் சார்பு — Vulnerable point.

(தொடரும்)

மதிப்புரை

வானரவீர மதுரைப் புராணம்:—மானமதுரை என வழங்கும் திருத்தலத்தின் புராணம்; 106 பக்கங்கள்கொண்டது. பென்ஷன் ரிஜிஸ்ட்ரார் மணப்பாக்கம் திரு. தங்கவேல் முதலியாரவர்கள் பதிப்பித்தது. விலை குறிக்கவில்லை. வேண்டுவோர் திரு ம. தங்கவேல் முதலியார், குமார நிலையம், பூவிருந்தவல்லி என்ற முகவரிக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

பாண்டிநாட்டிலுள்ள மானமதுரை என்று வழங்கும் வானரவீர மதுரை என்னும் பண்டைய சிவஸ்தலத்திற்கு வடமொழியில் ஒரு புராணமுண்டு. தமிழில் அதனை மதுரை தெய்வசிகாமணிப் பிள்ளை குமாரர் சுப்பிரமணிய பிள்ளை என்பார் பாடினர். இவ்வாசிரியர் காளையார்கோயிற் கோபுரம் கட்டிவைத்த மருத பாண்டியன் காலத்தில் திகழ்ந்தவர் என்றும், இவரே மயூரகிரிப் புராணம் பாடியருளிய சிவகங்கைவாசி வேதாந்த சுப்பிரமணிய பிள்ளை யாவார் என்றும், இப்புராணத்தை அவர் பாடியது ஏறக்குறைய 160 ஆண்டுகட்குமுன் என்றும் அறியக்கிடக்கின்றன. இப்புராணத்தின் செய்யுள் நடை மிக அழகாகவும், எளிதாகவும் இருக்கிறது. இவ்வரிய புராணத்தை மிகவும் வருந்தி முயன்று பதிப்பித்த திரு. தங்கவேல் முதலியார் அவர்களின் சைவப்பற்றும், தமிழ்ப்பற்றும் பெரிதும் போற்றற்குரியனவாம். அன்னார் இன்னும் இத்தகைய பல அருந்தமிழ் நூல்களை வெளியிட்டுதவும் வகையில் அவரை ஊக்குவிக்குமாறு இறைவனை வழுத்துகின்றோம்.

செய்திகளும் குறிப்புகளும்

பல்லாவரம் பொதுமறைக்கழக ஆசிரியர் மறைத்திரு. மறைமலையடிகளாற் றெகுக்கப்பட்ட "அறிவுரைக்கொத்து" என்ற நூலை இவ்வாண்டு 'இன்டர் மீடியேட்' வகுப்பிற்குப் பாடமாகத் தமிழ்ப்பாட புத்தகக் குழுவினர் தேர்ந்தமைத் துள்ளார். இவ்வாறு தேர்ந்தமைத்தது சென்ற ஆண்டி லாகும். தேர்ந்தமைத்தவர்களில் மகாமகோபாத்யாய தாக்ஷிணாத்ய கலாநிதி டாக்டர் உ. வே. சுவாமிநாத ஐயர் அவர்கள், திரு. எஸ். அனவரத விநாயகம் பிள்ளையவர்கள் முதலிய பலபேரறிஞர்களும் இருந்தனர். அத்தகைய பெரி. யோர்களால் தேர்ந்தமைக்கப்பட்ட "அறிவுரைக் கொத்து" என்ற நூலிலுள்ள "தமிழ்நாட்டவரும் மேல்நாட்டவரும்" என்ற கட்டுரையில் சிற்சில பகுதிகள் சில குறிப்பிட்ட வகுப் பினர்க்குப் பெருமை யளிப்பதாயில்லை என்ற ஒரு காரணங் கொண்டு அந் நூலைப்பாட புத்தகத்தொகுப்பிலிருந்து நீக்கிவிட வேண்டும் என்று சிலர் முயல்கின்றனர். இவ்வாறு செய்வ தைவிடப் பல்கலைக் கழகத்தார் விரும்பத்தகாததாகக் குறிக் கப்பட்டுள்ள "தமிழ் நாட்டவரும் மேல் நாட்டவரும்" என்ற கட்டுரையை மட்டும் முதல் 52 பக்கங்களைப்போல், நீக்கிவிட்டு எஞ்சிய பகுதிகளைப் பாடமாக வைப்பது சால்புடைத்தாகும்.

திருவனந்தபுரம் இசைத் தமிழ்ப்புலவர் திரு. T. இலக்குமண பிள்ளை, B.A., யவர்களின் படத்திறப்பு விழா

1935 ஆகஸ்டு திங்கள் 3-ஆம் நாள் பிற்பகல் திருவனந்த புரம் சட்ட கலாசாலையில் ஒரு பொதுக்கூட்டம் சென்னை உயர்தர நிதிமன்றத்தில் நீதிபதியாயிருந்து ஒய்வு பெற்ற டாக்டர் R. கிருஷ்ண பாண்டலே அவர்கள் தலைமை யில் நடைபெற்றது. பொருட்காட்சிச் சாலையில் அமைக்கத் திட்டப்படுத்திய திரு. இலக்குமண பிள்ளையவர்கள் பெரிய உருவப்படம் ஒன்று தலைவரால் திறந்து வைக்கப்பெற்றது. டாக்டர் H. சுப்பிரமணிய அய்யர் அவர்கள் புலவர் பெரியார்க்கு வாழ்த்துத் தாள் ஒன்று படித்தளித்தனர். வண்ணார் பேட்டை வக்கீல் திருவாளர் V. M. கலியாண சுந்தரம் பிள்ளை யவர்கள் இசைத் தமிழ்ப் புலவரது இயல்பினை யும் அரியபெரிய செயல்களையும் பற்றிச் சிறிதுநேரம் சிறந் தெடுத்துப் பேசியதும் தலைவர் முடிவுரையுடன் கூட்டம் கலைந்தது.